முதல் தொகுதி

எஸ்.ராமகிருஷ்ணன் கதைகள்

உயிர்மை பதிப்பகம்

மின்னூலாக்கம் - சீயான்

எஸ். ராமகிருஷ்ணன் கதைகள்

(முதல் தொகுதி)

எஸ். ராமகிருஷ்ணன்

உயிர்மை
பதிப்பகம்

விலை ரூ. 630

உயிர்மை பதிப்பக வெளியீடு 170

எஸ். ராமகிருஷ்ணன் கதைகள் / சிறுகதைகள் / ஆசிரியர் : எஸ். ராமகிருஷ்ணன் / © எஸ். ராமகிருஷ்ணன் / முதல் பதிப்பு : ஏப்ரல் 2005 / இரண்டாம் பதிப்பு: டிசம்பர் 2008 / மூன்றாம் பதிப்பு: செப்டம்பர் 2014 / வெளியீடு : உயிர்மை பதிப்பகம், 11/29 சுப்பிரமணியம் தெரு, அபிராமபுரம், சென்னை –600 018 தொலைபேசி : 91 – 44 – 24993448, மின்னஞ்சல் : uyirmmai@ mail.com, இணையதளம்: www.uyirmmai.com / அச்சாக்கம் : மணி ஆஃப்செட், சென்னை 600 079

S.Ramakirhsnan Kathaikal / Short Stories / Author : S. Ramakrishnan / © S. Ramakrishnan / Language: Tamil / First Edition : Apr. 2005 / Second Edition: Dec.2008 / Third Edition: Sep.2014 / Demy 1x8 / Paper : 18.6 kg maplitho / Pages : 688 / Published by Uyirmmai Pathippagam, 11/29 Subramaniam Street, Abiramapuram, Chennai - 600 018, India. Tele/Fax 91-44 -24993448, e-mail : uyirmmai@gmail.com, Website: www.uyirmmai.com / Printed at Mani Offset, Chennai 600 079 / Price : Rs. 630

ISBN : 978-81-89912-69-7

எஸ். ராமகிருஷ்ணன்

எஸ். ராமகிருஷ்ணன், விருதுநகர் மாவட்டம் மல்லாங்கிணறு கிராமத்தில் 1966இல் பிறந்தார். முழுநேர எழுத்தாளரான இவர் தற்போது சென்னையில் வசிக்கிறார்.

சிறுதைத் தொகுப்புகள்: *எஸ். ராமகிருஷ்ணன் கதைகள், நடந்துசெல்லும் நீரூற்று, பதினெட்டாம் நூற்றாண்டின் மழை, அப்போதும் கடல் பார்த்துக்கொண்டிருந்தது, நகுலன் வீட்டில் யாருமில்லை, புத்தனாவது சுலபம், வெளியில் ஒருவன், காட்டின் உருவம், தாவரங்களின் உரையாடல், வெயிலை கொண்டு வாருங்கள், பால்ய நதி, மழைமான், குதிரைகள் பேச மறுக்கின்றன, காந்தியோடு பேசுவேன், நீரிலும் நடக்கலாம்*

நாவல்: *உபபாண்டவம், நெடுங்குருதி, உறுபசி, யாமம், துயில், நிமித்தம்*

கட்டுரைத் தொகுப்புகள்: *விழித்திருப்பவனின் இரவு, இலைகளை வியக்கும் மரம், என்றார் போர்ஹே, கதாவிலாசம், தேசாந்திரி, கேள்விக்குறி, துணையெழுத்து, ஆதலினால், வாக்கியங்களின் சாலை, சித்திரங்களின் விசித்திரங்கள், நம் காலத்து நாவல்கள், காற்றில் யாரோ நடக்கிறார்கள், கோடுகள் இல்லாத வரைபடம், மலைகள் சப்தமிடுவதில்லை, வாசகபர்வம், சிறிது வெளிச்சம், காண் என்றது இயற்கை, செகாவின் மீது பனி பெய்கிறது, குறத்தி முடுக்கின் கனவுகள், என்றும் சுஜாதா, கலிலியோ மண்டியிடவில்லை, சாப்ளினுடன் பேசுங்கள், கூழாங்கற்கள் பாடுகின்றன, எனதருமை டால்ஸ்டாய், ரயிலேறிய கிராமம், பிகாசோவின் கோடுகள், இலக்கற்ற பயணி, காஃப்கா எழுதாத கடிதம்*

திரைப்பட நூல்கள்: *பதேர் பாஞ்சாலி - நிதர்சனத்தின் பதிவுகள், அயல் சினிமா, உலக சினிமா, பேசத்தெரிந்த நிழல்கள், இருள் இனிது ஒளி இனிது, பறவைக் கோணம், சாமுராய்கள் காத்திருக்கிறார்கள்*

குழந்தைகள் நூல்கள்: *கால் முளைத்த கதைகள், ஏழு தலை நகரம், கிறுகிறு வானம், லாலிபாலே, நீளநாக்கு, தலையில்லாத பையன், எனக்கு ஏன் கனவு வருது, காசுகள்ளன், பம்பழாபம், சிரிக்கும் வகுப்பறை, அக்கடா*

உலக இலக்கிய பேருரைகள்: *ஆயிரத்தொரு அரேபிய இரவுகள், ஹோமரின் இலியட், ஷேக்ஸ்பியரின் மெக்பத், ஹேமிங்வேயின் கடலும் கிழவனும், தஸ்தாயெவ்ஸ்கியின் குற்றமும் தண்டனையும், லியோ டால்ஸ்டாயின் அன்னா கரீனினா, பாஷோவின் ஜென் கவிதைகள்*

வரலாறு: *எனது இந்தியா,மறைக்கப்பட்ட இந்தியா*

நாடகத் தொகுப்பு: *அரவான், சிந்துபாத்தின் மனைவி, சூரியனை சுற்றும் பூமி*

நேர்காணல் தொகுப்பு: *எப்போதுமிருக்கும் கதை, பேசிக்கடந்த தூரம்*

மொழிபெயர்ப்புகள்: *நம்பிக்கையின் பரிமாணங்கள், ஆலீஸின் அற்புத உலகம், பயணப்படாத பாதைகள்.*

தொகை நூல்: *அதே இரவு, அதே வரிகள்* (அட்சரம் இதழ்களின் தொகுப்பு).*வானெங்கும் பறவைகள்*

ஆங்கிலத்தில் வெளிவந்துள்ள நூல்: *Nothing but water, Whirling swirling sky*

இணையதளம்: www.sramakrishnan.com

மின்னஞ்சல்: writerramki@gmail.com

முன்னுரை

வாழ்க்கை பலரையும் அவரவர் இருப்பிடங்களில் இருந்து பிடுங்கி எங்கெங்கோ நட்டிருக்கிறது. நினைவில் ஒரு ஊரும், நிகழ்வில் ஒரு ஊரிலுமாக வசித்துக்கொண்டிருக்கிறோம். நிலம் நம் மீது கொள்ளும் ஆளுமையை நாம் விரும்பினாலும் அழிக்க முடியாது. அது மேலோட்டமாக நம்முடைய பேச்சில், தோற்றத்திலிருந்து மறைந்திருக்கக்கூடும். ஆனால் நம் இருப்பில், நம் நினைவில், நம் கனவுகளில் எப்போதும் இருந்துகொண்டேயிருக்கிறது.

எழுத்தாளனின் நிரந்தரத் தோழன் தனிமைதான் போலும். பதின்வயதில் உணரத் துவங்கிய தனிமை இன்றைக்கும் கூடவேதானிருக்கிறது. தனிமை என்பது வேறு, தனித்திருத்தல் என்பது வேறு. தனித்து இருப்பது சந்தர்ப்பங்களால் உருவாகிறது. தனிமை தன்னை அறிவதன் வழி தோன்றுகிறது. குடும்பம் வீடு தெரிந்தவர் நண்பர்கள் என்று எவருடன் இருந்த போதும் அந்தத் தனிமை கூடவேதானிருக்கிறது. அதை வேறுபடுத்திக் காட்ட வேண்டும் என்பதற்காக அகத் தனிமை என்று சொல்லிக்கொள்ளலாம்.

அகத்தனிமை விலக்கப்பட வேண்டியதில்லை. மாறாக அது ஒரு ஏகாந்தம். அது ஒரு தனிச்சுவை. பலராலும் அறிந்துகொள்ளப் படாத நெருக்கம். விளக்கின் ஒளியிலிருந்தே நிழலும் தோன்றுவது போல நமக்குள்ளே அது உருவாகிறது.

எழுத வேண்டும் என்ற வேட்கையை உருவாக்கிய புத்தகங்களும், அடங்காமல் வெயில் அலையும் நிலப்பரப்பும், கசப்பேறி முதிர்ந்த வேம்பும், நீண்ட பகல் பொழுதுகளும், காற்று ஒடுங்கிப் போன உறக்கம் கொள்ள முடியாத இரவும், என் வீதியில், வீட்டில், என் நிலப்பரப்பில் வாழ்ந்தும் மறைந்தும் போன எண்ணிக்கையற்ற மனிதர்களின் வாழ்க்கை விசித்திரங்களும் நினைவுகளுமே என்னை எழுத்தாளன் ஆக்கியது.

கோடையில் கிணறுகள் உலர்ந்து குடிநீருக்காக மக்கள் ஊர் விட்டு ஊர் நடந்து அலையும் நாட்களில் கொக்குகள்கூட ஊரில் தரையிறங்காது. அவை வானில் கூட்டமாக வடக்கு நோக்கிப் போவதை வேடிக்கை பார்த்தபடியே வெம்பரப்பில் நின்றிருப்பேன். அடைமழை போல வெயில் பொழிந்து கொண்டிருக்கும்.

எங்கள் ஊரில் இரவிலும் சூரியன் அடங்கிவிடுவதில்லை. எங்கோ மறைந்திருந்து ஊரை வெறித்துப் பார்த்துக்கொண்டிருப்பதாகவே

தோன்றும். எல்லோரது பேச்சிலும் வெயிலின் சுள்ளல் மீறிடும். இந்தச் சூழல் தந்த அழுத்தம் தான் எழுத்தாக உருக் கொள்ளத் துவங்கியது. இன்று அந்தச் சூழலைக் கடந்து வெளியேறி மாநகருக்கு வந்த பிறகும் அடிமனதில் அதே உக்கிரம் நிலை கொள்ளாமல்தானிருக் கிறது.

எல்லா நெருக்கடிக்குள்ளும் எனக்காக அலாதியான மனநிலையை உருவாக்கிக்கொள்ள புத்தகங்களே துணையாக இருந்தன. எதை என்று தேர்வு செய்யாமல் கையில் கிடைத்ததை எல்லாம் வாசித்தேன். பாடப்புத்தங்களால் உருவாக்க முடியாத கற்பனையை, சந்தோஷத்தை இலக்கிய புத்தகங்கள் உருவாக்கின. எழுது எழுது என்று சில்வண்டுகள் போல அவை என்னை நோக்கி சப்தமிட்டபடியே இருந்தன. படிப்பு ஒரு பக்கம் என்னை எழுதத் தூண்டியது. அதுவே பயத்தையும் உருவாக்கியது. எதை எழுதுவது. எழுதுவது அவ்வளவு எளிமையானதா என்ன ?

யாருக்காகவும் இன்றி எனக்காக மட்டுமே எழுதத் துவங்கினேன். கோடு போட்ட நாற்பது பக்க நோட்டுகளில், கட்டுரை நோட்டு பேப்பர்களில் என்று மனம் விரும்பியதை எல்லாம் எழுதி வைத்தேன். யாரும் படித்துவிடக்கூடாதே என்று படபடப்பாக இருக்கும். சில நாட்களில் நானே படித்துவிட்டு கிழித்துவிடுவேன்.

தேசாந்திரியாக அலைந்து திரியத் துவங்கி பெயர் புரியாத நகரங்கள், மனிதர்கள் என்று இந்தியாவின் நீண்ட நிலப்பரப்பில் சுற்றிவந்த போதுதான் எழுத வேண்டியதை விடவும் காண வேண்டி யது அதிகமிருக்கிறது என்பதை உணர்ந்தேன்.

இதுவரை என் பயணங்களில் நான் பார்த்து வியந்த அதிசயங்கள் எதுவும் சிற்பங்களோ, ஓவியங்களோ, கட்டடக் கலையின் சான்றுகளோ இல்லை. மாறாக மனிதர்கள். அவர்களது இரவுபகலற்ற அலைச்சல்கள், புரிந்துகொள்ள முடியாத மன அமைப்புகள், இவையே என்னைப் பெரிதும் வசீகரித்தன.

தாஜ்மகாலைப் பார்த்து வியப்பது எளிதானது. அதற்கு நம்முடைய முயற்சிகள் அதிகம் தேவையில்லை. ஆனால் தாஜ்மகாலின் பின்புறம் உள்ள கிராமத்திலிருந்து அதிகாலையில் பால் விற்க வருகின்ற வயசாளியைப் புரிந்து கொள்வது எளிதானதில்லை.

அவன் குளிரைப் போர்த்தியபடியே தனி ஆளாக யமுனையைக் கடந்து வந்துகொண்டிருக்கிறான். உரையாடலுக்கான மொழியும் அவனிடம் இல்லை. அவன் தாஜ்மகாலைப் பொருட்டாகக் கருதுவதும் இல்லை. அவன் உலகில் அதைவிடவும் வேறு ஏதோவொன்று முக்கியமாக உள்ளது. என்ன அது என்று யாருக்கு தெரியும். அவனைப் போன்று ஓராயிரம் மனிதர்கள் யமுனையின் கரைகளில் வசிக்கிறார் கள். அவர்களை எப்படிப் புரிந்துகொள்வது. அவர்களுக்கும் எனக்கும் உறவில்லையா என்ன ?

ஒரு பயணத்தில் புதையுண்டு காலில் தட்டி எகிறிய குதிரையின் கால் எலும்பு ஒன்றைக் கண்டு எடுத்தேன். அதைக் கையில் வைத்துப் பார்த்துக்கொண்டேயிருந்தேன். எந்தக் குதிரையின் கால் எலும்பு அது. எந்த நூற்றாண்டைச் சேர்ந்தது. யார் அதில் பயணம் செய்திருப் பார்கள்? எங்கெல்லாம் அந்தக் கால்கள் சுற்றியலைந்திருக்கும்? எந்த மனிதன் அதன் உரிமையாளன்? எப்படி இறந்து போயிருக்கும்? ஏன் சாவிற்குப் பிறகும் குதிரை மனிதர்களோடு உறவுகொள்ளத் துடிக்கிறது? மனது எதை எதையோ கற்பனை பண்ணிக்கொண்டே யிருந்தது.

இல்லாத குதிரையொன்று மனதில் உருக்கொள்ளத் துவங்கியது. குதிரையின் வால் அசைவது கண்ணில் தெரிய ஆரம்பித்தது. அதன் ஈரமான அறுபட்ட மூக்கில் வெளியேறும் சுவாசம் என் முன்னே சீறியது. அதன் உடல் துடிப்பைக் கைகள் உணர்ந்தன. ஏதோவொரு நூற்றாண்டில் மறைந்துபோன குதிரை மனதில் குளம்போசை அதிர ஓடத் துவங்கியது. கதைகளும் இப்படித்தான் உருவாகின்றன.

என் முதல் கதையிலிருந்து 2005 ஆம் ஆண்டுவரை வெளியான எனது சிறுகதைகளை உள்ளடக்கிய முழுத்தொகுப்பு இது. இதன் முதற்பதிப்பை கிழக்கு பதிப்பகம் வெளியிட்டது. இப்போது அதன் புதிய மறுபதிப்பை *உயிர்மை* வெளியிடுகிறது.

கதைகளை எழுதுவதற்கும் சுற்றியலைந்து திரியும் என் பயணங் களுக்கும் எத்தனையோ நண்பர்கள் உதவியிருக்கிறார்கள். முகம் தெரியாத என்னை அங்கீகரித்துப் பல சிற்றிதழ்கள் என் கதைகளை வெளியிட்டிருக்கின்றன. அவர்கள் யாவருக்கும் என் நன்றிகள்.

எழுத வேண்டும் என்று திரும்பத் திரும்ப என்னை வலியுறுத்தி எழுத்தாளன் ஆக்கிய அன்பு அண்ணன் டாக்டர் வெங்கடாசலம், தோழர் எஸ்ஏ. பெருமாள் இருவருக்கும் என்றைக்கும் நன்றியுடையவன். கவிஞர் தேவதச்சன், கோணங்கி, தமிழ்செல்வன், நண்பர்கள் விவேகானந்தன், சண்முகவேல், ராதாகிருஷ்ணன், சேது, கார்த்திகேயன், சத்யா, கிறிஸ்தோபர் ஆகியோரின் தொடர்ந்த சந்திப்பும் உரையாடல் களும் இல்லாமல் எதையும் என்னால் எழுதியிருக்க முடியாது. அவர்களுக்கும் மனம் நிறைந்த நன்றி.

வீட்டுச் சுமைகளின் நிழல்கூட என்மீது படாமல் என்னை வளர்த்த அப்பா அம்மாவிற்கும், என்னையும் எழுத்தையும் புரிந்து கொண்டு எழுத்தை மட்டுமே வாழ்க்கையாகக் கொள்ள, துணை நிற்கும் மனைவி சந்திரபிரபாவிற்கும் என்றைக்குமான அன்பும் நன்றியும்.

மிக்க அன்புடன்

21.11.08

எஸ். ராமகிருஷ்ணன்

குழந்தைகள்

ஹரி

மற்றும்

ஆகாஷிற்கு

உள்ளே . . .

1. பழைய தண்டவாளம் 15

2. இடம்பெயர்தல் 19

3. உறவும் பிரிவும் இன்றி 23

4. காற்று மரங்கள் 28

5. வெளியில் ஒருவன் 32

6. ஆறு யானைகள் 38

7. கல்யாணி இருந்த வீடு 45

8. தெரிந்தவர்கள் 49

9. தொவந்து போதல் 55

10. வீடு-வெளி 59

11. போய்க் கொண்டிருப்பவள் 67

12. அம்மா 72

13. வேறு பகல் 77

14. உடல் 83

15. கண்ணாடிப் பாதை 91

16. கடவுள் குரலில் பேசி 97

17. காலாட்படை பற்றிய குற்றபத்திரம் 106

18. நகர் நீங்கிய காலம் 115

19. நிழலாய் இருந்தவர்கள் 123

20. அவரவர் ஆகாசம் 143

21. காட்டின் உருவம் 157

22. மேற்கு வீடு 164

23. மற்றவர் வெயில் 171

24. கறுப்பு இசைத் தட்டுகள் 178

25. இரண்டு வளையல்கள் 185

26. தெருவின் சுபாவம் 190

27. விரும்பித் தோற்றவை 194

28. பரிவானது வீடு 198

29. நிலை 204

30. இருப்பிடம் விட்டுப் போனவர்கள் 211

31. புலிக்கட்டம் 221
32. வேனல் தெரு 229
33. தாவரங்களின் உரையாடல் 237
34. பெயரில்லாத ஊரின் பகல்வேளை 249
35. நாயனம் 270
36. ரகசிய ஆண்கள் 274
37. ஜல சதுரங்கம் 282
38. கடற்கரை ரயில் நிலையம் 285
39. பாதம் 292
40. மழை சார்ந்த வீடு 296
41. வழி 303
42. எதிர்பார்த்த முகம் 307
43. சேவற்குரலோன் 314
44. உப்பு வயல் 317
45. புத்தரின் கார்ட்டூன் மொழி 327
46. அலகில் விருட்சம் முளைத்த செம்பறவை 336
47. நட்சத்திரங்களோடு சூதாடுபவர்கள் 341
48. ராமசாமிகள் வ்ம்ச சரித்திரம்
மறைக்கப்பட்ட உண்மைகள் 356
49. பறவைகளின் சாலை 366
50. ஏழு இறகுகள் 372
51. அந்தரம் 377
52. வடு 383
53. பத்ம விகாரை 387
54. அரூப மிருகம் 391
55. வெயிலைக் கொண்டு வாருங்கள் 398
56. ஆதாமின் பாஷை 409
57. புலனி 413
58. சாக்கியனின் பல் 420
59. சயன விடுதி 425
60. பகல் விளையாட்டு 430
61. சோர் பஜார் 433
62. நாளங்காடி பூதம் 438
63. கடுகினை யாசிப்பவள் 445

64. சிக்கி முக்கிக் கல் 448
65. அ-கதையாளன் சொன்ன கதைகள் 455
66. துன்பவியலில் மூன்று காட்சிகள் 464
67. விருஷி 469
68. மூன்று வான சாஸ்திரிகள் 472
69. பவதாரம் 478
70. பச்சை நடனம் 483
71. சப்த தாரா 485
72. நத்தைகளின் புன்னகை 499
73. நுனிக் கதைகள் 506
74. கானகப் புலியின் மனைவி 512
75. ஒளியை வாசிக்கின்றவன் 522
76. பகலைச் சூடியவள் 535
77. பால்ய நதி 540
78. கழுவேற்றம் 555
79. நேற்றிரவு நிம்மதியான தூக்கமிருந்ததா? 564
80. பிட்சாடனரின் கேசம் 571
81. மினர்வா சலூன் 580
82. காட்சிப் பிழை 584
83. ஒரு தலைகீழ்க் கதை 598
84. பாடினி 602
85. இரு குரல் 605
86. வயதின் படித்துறை 619
87. உலகம் ஒரு பெரிய எழுத்து கதை 627
88. நாபி 637
89. நூறு கழிப்பறைகள் 663
90. கற்குகை 680

பழைய தண்டவாளம்

பழைய தண்டவாளத்தில் ஆள்கள் தெரிந்தார்கள். சைக்கிளைத் தூக்கிக்கொண்டு தாண்டும்போது நடராஜன் பார்த்தான். நாள்பட்டு நின்றுபோயிருந்த கூட்ஸ் வண்டியின் ஒற்றைப் பெட்டியைப் பிரித்துக் கொண்டிருந்தார்கள். ரொம்ப நாள்களாகப் புழக்கம் இல்லாத அந்தத் தண்டவாளத்தில், அந்தப் பெட்டியும் ரொம்ப நாளாகவே கூட இருந்தது.

பேக்டரி ரோட்டில் சைக்கிளை மிதித்தான் கே.எஸ். முக்கு வரும்போது ஆள்கள் முழுமையாகத் தெரிந்தார்கள். நாலைந்து பேருக்கு மேலிருக்கும். தலையில் ஃபைலைத் தூக்கிப் பிடித்தபடி பக்கத்தில் ஒரு ஆள் வேறு நின்றிருந்தான்.

அந்த கூட்ஸ் பெட்டி, அந்தப் புது வீட்டுக்கு வரும்போதே இருந்ததுதான் நடராஜன் ஏழாவது படித்துக்கொண்டிருந்தான். அப்போது ஆள் அரவமற்று, சாக்பீஸ் கோடுகளுடனும் நெம்பரோடும் நின்றுகொண்டிருந்தது அந்திப் பெட்டி.

அந்தப் புது வீடு அப்பா ஒத்திக்கு வாங்கியது. ராத்திரியில் தெப்பத்து ரோட்டு வீட்டைக் காலி பண்ணிவிட்டு இங்கே மாறி வந்தார்கள். நடராஜன் ஒரு சைக்கிளும் அப்பா ஒரு சைக்கிளுமாக பாத்திர மூட்டை ஏற்றி வந்தார்கள். அப்பா தண்டவாளம் வந்ததும் லைட் அடித்தார். வட்டமாய் மஞ்சள் வெளிச்சம் அந்தப் பெட்டி வரை போய்த் திரும்பியது. சைக்கிளை உருட்டி அந்த வீட்டுக்கு வந்தார்கள்.

சின்ன வீடுதான். ஆனால் ஆளுயரச் செங்கல் சுவரிருந்தது. கோட்டைச் சுவர் மாதிரி கம்பி போட்ட

கதவுகள். பெரிய இரும்புச் சாவி போட்ட வாசல் கதவு. கோயில் கதவில் இருப்பதைப் போல அடக்கமாயிருந்தது. லைட்டைப் போட்டு ஜன்னலைத் திறந்துவிட்டால் தண்டவாளம் தெரிந்தது. தூரத்தில் – பக்கத்தில் வேறு வீடுகளேயில்லை.

காலையில் கல்யாணியக்கா கூடப் பள்ளிக்கூடம் போகையில் அந்த கூட்ஸ் பெட்டியைக் கிட்டத்தில் பார்த்தான். திறந்து கிடந்தது. உள்ளே பகலிலும் மாறாத இருட்டு, கல்யாணியக்கா அப்போது பத்து படித்துக்கொண்டிருந்தாள். கொஞ்ச நாளைக்குப் பின்னால் காலனி வீட்டில் இருந்து கல்யாணியக்கா கூட ஒரு பெண் பள்ளிக் கூடத்துக்கு வந்தாள்.

அவள் பெயர் கூட ராணிதான். லேசாகப் பல் ஒத்திப் போயிருக்கும். கோணச் சிரிப்பு சிரிப்பாள். ஆனாலும் அழகாயிருக்கும். அவள் தண்டவாளத்தைத் தாண்டும்போது ஓரக்கம்பியில் காலை அழுத்திச் சப்தம் வர வைப்பாள். ட்யுஸ்.. டிங் எனச் சப்தம் எதிரொலிக்கும்.

அன்றைக்குச் சாயங்காலம் கல்யாணியக்கா வரவில்லை. ஸ்பெஷல் கிளாஸ். ராணி மட்டும் கூட வந்தாள். தண்டவாளத்தைத் தாண்டும் போது லேசாக மஞ்சள் வெயில் அடித்துக்கொண்டிருந்தது. தாண்டா மல் அவள் நின்றுகொண்டேயிருந்தாள்.

“டேய் நடராஜா அந்தப் பெட்டிக்குள்ள என்ன இருக்குன்னு பாப்பமா ”

அவள் கூடைப் பைக்கட்டைக் கொடுத்தாள். பயங்கரக் கனமா யிருந்தது. ஜாமெட்ரி பாக்ஸில் சில நெல்லிக்காய்கள் துருத்திக்கொண்டு இருந்தன. வாயில் வேறு ஒதுக்கியிருந்தாள். அவள் அந்தப் பெட்டிக்குள் ஏறினாள். சின்ன இரும்புப் படியிருந்தது. உள் பக்கமாகப் போனாள். கீழேயிருந்து பார்க்கும்போது ஒண்ணும் தெரியாமல் இருந்தது. தண்டவாளத்தில் பைக்கட்டை வைத்துவிட்டுப் பின்னாடியே ஏறினான்.

அந்த கூட்ஸ் பெட்டி, மச்சு வீட்டைப் போல இருட்டாயிருந்தது. ஜன்னல் இல்லை. புழுங்கல் வாசம் அடித்தது. இருட்டுக்குள் ராணி நின்றிருந்தாள். ஒரு ஓரத்தில் சில மூட்டைகள் கிடந்தன. காலில் பழைய இரும்புச் சாமான்கள் தென்பட்டன.

“டேய் அந்த ஜாமெட்ரி பாக்ஸில் கவராயம் இருக்கு எடேன்.”

கீழேயிறங்கி எடுத்து வந்தான். அந்த சாக்கை ஓட்டை போட்டாள். வெள்ளைக் கோதுமை பொலபொலவெனச் சிந்தியது. கையைக் குவித்துப் பிடித்தாள் சிந்திக்கொண்டே இருந்தது.

போகும்போது வழியில் தின்றுகொண்டே போனார்கள் கோதுமைப்பால் இனிப்பாயிருந்தது. மறுநாள் கல்யாணியக்காகூட வாங்கித் தின்றாள் அரட்டவேயில்லை. கொஞ்ச நாளில் ராணி வேறு வீடு மாறிப் போய்விட்டாள். கல்யாணியக்கா அந்தப் பக்கமே போகவிடாமல் அரட்டினாள்.

சனிக்கிழமை மதியம் ஏறி உள்ளே போய்ப் பார்த்தான். சுத்தமாயிருந்தது. சில கசக்கி எறிந்த வாழை இலைகளும், சீட்டுக் கட்டுகளும் கிடந்தன. அப்பாகூடச் சொன்னார்.

"கண்ட கழிசடை நாய்களெல்லாம் அந்தப் பெட்டி பக்கமா போகுது. பள்ளிக்கூடத்துக்குப் பார்த்துப் போகணும் தாயி."

அதுக்கு அப்புறமாக கல்யாணியக்கா படிப்பை முடித்துவிட்டாள். கல்யாணம் உடனே ஆனது. மறுவீட்டுக்கு வந்திருந்தப்ப சினிமாவுக்குப் போகையில் அக்காதான் சொன்னாள். அந்த இடத்தில் அந்த கூட்ஸ் பெட்டி இருந்தது.

"இங்கே நாங்க முன்னாடி கோதுமை எடுப்போம் வெள்ளை கோதுமை, இனிப்பாயிருக்கும்."

"உள்ளே போயா எடுப்பே. பயமாயிருக்காதா?"

"எதுக்குப் பயப்படணும்?"

"பின்ன அப்ப மட்டும். அங்க எதுக்குப் பயந்தே?"

அக்கா கோணினாள். லேசாகச் சிவந்து போயிருந்தது முகம்.

"சீ... போப்பா இதுக்குத்தான் எதையும் சொல்லக் கூடாது."

மாமா சிரித்துக்கொண்டே வந்தார் நடராஜனுக்கு எதுவும் புரியாமல் அந்தப் பெட்டியைப் பார்த்துக்கொண்டே வந்தான். ரெண்டு வருஷத்துக்குப் பின்னாடிகூட அதே இடத்தில் பெட்டி அப்படியே இருந்தது.

மழை நாளில் ஜன்னலைத் திறந்து பார்க்கும்போது அந்தத் தண்டவாளமும் பெட்டியும் அழகாயிருக்கும். மழைத் தண்ணீரில் கருத்துப் போய். வரிசையாகச் சில நாள்களில் புறாக்களோடு, இரவெல்லாம் தனியாக நின்றிருக்கும்.

பேக்டரிக்கு வேலையில் சேர்ந்தப்பக்கூட யாரோ சொன்னார்கள். 'போகவர இடைஞ்சலா இந்தச் சின்னப் பாதை இருக்கு. அந்த கூட்ஸ் பெட்டியை எடுத்துட்டா வசதியாயிருக்குமென்று. நடராஜனுக்கு அது இடைஞ்சலாகவே தோன்றவில்லை. லேசாக அடையாளம் காட்டுகிற மாதிரிப் பிரியமான வஸ்து மாதிரியிருந்தது.

'அந்த கூட்ஸ் பெட்டி நிக்குமே. அது தாண்டின வீடுதானே' என்று கேட்பவர்களுக்கு லேசாக அடையாளம் சொல்லிக் கொள்ளும் வண்ணமிருந்தது. ரொம்ப நாளாகவே எடுக்காமல் இருந்தார்கள். இரண்டு அடிக்குச் செடி முளைத்துப் போயிருந்தது. ராத்திரியில் சிள்வண்டுகளும் சப்தம் போட்டுக் கொண்டேயிருந்தன, அதற்கு அடியில் இருந்து.

ராத்திரியில் மட்டும் ஆள்கள் பயப்பட்டார்கள். புதுசாக முளைச்ச என்.ஜி.ஓ.காலனிக்காரப் பொண்ணு சொன்னதாக அம்மா சொல்லிக் கொண்டிருந்தாள்.

"அந்தப் பெட்டிக்குள்ள சாராயம் விக்காங்க. பொம்பளையப்

பார்த்தா கத்துவாங்க."

ஒருநாள் நடராஜன் கூடப் பார்த்தான். கருப்பு கேன் வைத்துக் கொண்டு படிக்கட்டில் ஒருவன் உட்கார்ந்திருந்தான். பெட்டிக்கு உள்ளே சிரிப்புச் சத்தம் கேட்டது. கொஞ்ச நாளில் அந்த இயக்கம் கூடக் குறைந்துபோனது. பாம்பு நடமாடுவதாகச் சொன்னார்கள்.

நடராஜனுக்கு அந்தப் பெட்டி ஒரு மாறாத வீட்டைப் போலவே தோன்றியது. சில நேரம் உதிர்ந்து, மூளியாகிப் போன கிராமத்து வீட்டைப் போலக்கூடத் தோன்றியது. ராமச்சந்திரன் சார் மகள் சைக்கிளில் வைத்து உருட்டி வரும்போதுகூடக் கேட்டாள்.

"மாமா. எதுக்கு இந்த ரயில் போவே மாட்டேங்குது. எப்பப் போகும்?"

"இது ஓடாத ரயிலுடா குட்டி வீடு மாதிரி இருக்கில்ல?"

புரிந்ததுபோலத் தலையை ஆட்டிக்கொண்டாள். சில நாளைக்கு முன்னால் அம்மா சொல்லிக்கொண்டிருந்தாள்.

"கூட்ஸ் பெட்டியை எடுக்கப் போறாங்க. புதுக் காலனி திறப்பு விழா வருதுல்ல.

சொன்னது மாதிரியே எடுத்துவிட்டிருந்தார்கள். சாயங்காலம் வரும்போது அந்த இடம் வெறிச்சென்றிருந்தது. புதுசாக எந்த மறைப்பும் இல்லாமல் வீடு வெட்டவெளியில் தெரிந்தது. அந்தப் பெட்டி இருந்த இடத்தில் போய்ப் பார்த்தான்.

தண்டவாள மரக்கட்டைகளுக்குக் கீழே சில நெல்லிக் கொட்டை கள் காய்ந்து சுருண்டு கிடந்தன. சில உடைந்த வளையல் துண்டுகள், வெளுத்துப்போன ஒரு கம்பி வளையல் எல்லாம் கிடந்தன.

வீட்டுக்குப் போன பின்பு ஜன்னலைத் திறந்து பார்த்தான். வெறுமையாயிருந்தது. பிரியமான பொருளை இழந்ததுபோல இருந்தது. பார்த்துக்கொண்டேயிருந்தான். லேசாக இருட்ட ஆரம்பித்து, தண்ட வாளம் இருட்டில் தெரியாமல் போனது.

இடம் பெயர்தல்

வீடு திரும்ப வேண்டும் என்றே தோன்றவில்லை.

பனியடித்தது லேசாக. ரயில்வே ஸ்டேஷன் பெஞ்சுகளில் பனி இறங்கிப் போயிருந்தது. ஸ்டேஷனை விட்டு வெளியே கிடக்கும் பெஞ்சுகளில் அலாதியான தனிமை நிறைந்து கிடந்தது. ஸ்டேஷன் மாஸ்டர் அறைக்குள் விளக்கு எரிந்துகொண்டிருந்தது. இந்த நேரத்துக்கு மேல் ரயில் கிடையாது.

அவன் சிகரெட்டை கடைசி வரை இழுத்து விட்டுத் தூர எறிந்தான். பூட்ஸ் சத்தம் ஒலிக்க ரயில்வே போலீஸார் கடந்து போனார்கள். கண்டு கொள்ளவே இல்லை. முன்பு – முதல் தடவையாக வந்த அன்று அவனை விசாரித்தனர்.

“எந்த ஊரு. வீட்டுக்குப் போகலயா?”

“போகணும் சார்!” அவன் கிட்டத்தில் கொஞ்ச நேரம் உட்கார்ந் திருந்தார்கள். உயரமாக இருந்த ஒருவருக்குத் தூக்கம் முகமெங்கும் அப்பிப் போயிருந்தது. இன்றும் அதே நபர்கள் தனியாகக் கடந்து போனார்கள்.

ரயில்வே ஸ்டேஷனும், தனியான பிளாட்பார வெளிகளும் அவனோடு பிரிக்க முடியாதபடி ஆகி விட்டன. அசப்பில் எல்லா ரயில்வே ஸ்டேஷன்களும் ஒரே குணமாகவே இருக்கின்றன. சிவப்பு ஓடு வேய்ந்த ஸ்டேஷன்கள், தூங்குமூஞ்சி மரங்கள் நிறைந்து போயிருக்கும். ரயில் கடக்கும்போது எங்கும் சருகுகள் பறந்து செல்லும். ஸ்கூல் விட்டு ஓடி வரும் பிள்ளைகள் ரயிலில் போவோருக்கு ‘டாட்டா’ காட்டுவார்கள். பாலத்தில் ரயில் மெல்லக் கடகடத்தபடியே நகர்ந்து

போகும். விருதுநகருக்குள் வரும்போது எதிர்ப்படும் வீடுகளில் அவனுடைய வீடு அடையாளம் தெரிய ஜன்னலுக்கு வெளியே முகத்தைக் காட்டுவான்.

அப்போதெல்லாம் அவர்கள் ஆறு மணி வாக்கில் வீட்டிலிருந்து கிளம்புவார்கள். கணேசன் வருவான் அவன் வீட்டுக்கு. வெளியே தெரியும் தெருவைப் பார்த்தபடி இருக்கும் அவனுக்கு கணேசன் தூரத்தில் வரும்போதே படர்ந்த தலை தெரியும்.

சைக்கிளை நிறுத்திவிட்டு உள்ளே வருவான். கலைந்து கிடக்கும் புத்தகங்களுக்கும் பேப்பர்களுக்கும் நடுவில் தூசி தட்டிச் சுவரில் சாய்ந்துகொள்வான். நீண்ட மவுனத்துக்குப் பிறகு அவன் கிளம்பும் போது ஏதாவது புத்தகத்தை எடுத்துக்கொள்வான்.

அவனும் கணேசனும் மெல்லக் கடந்து ஊரைவிட்டு வெளியே வருவார்கள். ஊருக்கு வெளியே நிதானமிருந்தது எங்கும். கடையில் நிறுத்தி சிகரெட் பிடிப்பார்கள். லேசான இருட்டுக்குப் பின்பு ரயில்வே காலனியின் இடிந்த சுவருக்கு அவர்கள் வரும்போது மற்ற சிலரும் அங்கே உட்கார்ந்திருப்பார்கள்.

பேசிக்கொள்வார்கள். கடந்து போகும் பெண்ணைப் பற்றி. ஸ்டேஷனைப் பற்றி. திடீரென்று அமைதியாகிவிடுவார்கள். ஸ்டேஷனை விட்டு வெளியே வரும் ரோட்டில் இருக்கும் தியேட்டரில் செகண்ட் ஷோ போவார்கள். அநேகமாக எல்லா இரவுகளிலும் அவர்கள் பிரியும்போது ரோடுகள் ஆள் அரவமற்று எங்கும் நிசப்த மாயிருக்கும். சிரித்தபடியே அல்லது கத்தியபடியே நடந்து போவார்கள்.

முனிசிபல் டாங்க்கை ஒட்டி வந்ததும் மற்றவர்கள் பிரிந்து போவார்கள். கணேசனும் அவனும் மட்டும் வருவார்கள் கடைசி வரை. சைக்கிளை நிறுத்திவிட்டு அவன் உள்ளே போன கொஞ்ச நேரத்துக்குப் பிறகு கணேசன், பக்கத்துத் தெருவில் கதவைத் தட்டிக் கொண்டிருப்பது கேட்கும்.

கணேசனுக்காகக் கதவைத் திறந்துவிட அவனது பெரியக்கா ஹாலிலே படுத்துக் கிடப்பார்கள். அந்த இரவில் அவன் அக்காவைக் கூப்பிடுவது ஒற்றையான – அலாதியான – குரலாயிருக்கும்.

அவன் இருட்டும் முன்பே மாமாவின் கடையைவிட்டுக் கிளம்பி விட்டான். அன்றைக்குக் காலையிலேயே கணேசனின் கடிதம் கடைக்கு வந்திருந்தது. மறுநாள் அவன் வருவதற்கு முன்பு மாமா அதைப் பிரித்துப் படித்துவிட்டிருந்தார். மாமா அவனிடம் கடிதம் வந்தவுடனேயே காட்டவில்லை. கல்லாப் பெட்டியின் ரசீதுகளுக்குள் மடித்துக் கடிதத்தைப் போட்டிருந்தார். அவன் எதற்கோ திறக்கும் போதுதான் பார்த்தான்.

“இது எப்போ வந்தது?”

“நேத்து காலைல.

“எங்கிட்ட சொல்லவேயில்லை...

“பெரிசா என்னடா எழுதியிருக்கான்...? கண்டபடி திரியறானாம். இப்படித் திரிஞ்சா உருப்படியாகாம போக வேண்டியதுதான் அதான் நீ இருக்கேல்ல. .?”

அவன் பதில் சொல்லவில்லை. கணேசனின் கடிதத்தை எடுத்துக் கொண்டு கடைக்கு உள்புறமாகப் போனான். கடைப்பையன்கள் ஸ்டூலில் உட்கார்ந்திருந்தார்கள். கணேசன் ரொம்பவும் சின்னதாக எழுதியிருந்தான்.

‘எந்த சுபாவமும் இன்றித் திரியும் மற்றவர்களோடு கழிய வேண்டியிருக்கிறது. யார் எவ்வளவு பிரியமாக இருந்தாலும், ஒரே இடத்தில் இருக்க முடியாமல்தான் போகிறது. இடம்பெயர்ந்து போவது விதிக்கப் பட்டிருக்கிறது எல்லோருக்கும். ஏதேனும் ஒருவிதத்தில் ஒருவர் பொருட்டு ஒருவர் துக்கப்பட்டு அழிய வேண்டியதாக உள்ளது,

கணேசன் கண் காணாமல் எங்காவது வேறு ஊருக்குப் போகக் கூடும். இனிமேல் அவனுக்கு வரும் கடிதங்களும் நின்றுவிடும் என்றுகூடத் தோன்றியது.

வீட்டுக்குச் சாப்பிடப் போகும்போது அக்காவிடம் சொன்னான், “நான் ஊருக்குப் போகலாம்னு இருக்கேன்.”

“எதுக்கு?”

“இங்கே இருக்கப் பிடிக்கலே.

“மாமா ஏதாவது சொன்னாரா.

பேசாமல் இருந்தான். அவளே சொன்னாள்,

“கணேசன் லெட்டர் போட்டிருக்கான்லே.

“எப்படித் தெரியும்?”

“அவர்தான் சொன்னாரு... நிறைய சிகரெட் குடிக்கிறயாமில்லே... ஏண்டா?” எழுந்து வெளியே வரும்போது மாமாவின் குரல் உள்ளே கேட்டது.

“ஊருக்கெல்லாம் போக வேண்டாம். கடைக்கு ஆள் இல்லை... போனா அப்படியே இருந்துக்க வேண்டியதுதான். நினைச்சா வர, நினைச்சா போக இந்த வேலைக்கு முடியாது. போக வர சும்மாவா இருக்கு ரூவா. ”

அவனுக்கு அப்பாவின் மேல் கோபமாய் வந்தது. அவரின் இயலாமையின் மேல், அவர்கள் எல்லோர் மேலும். அவர்தான் அவனை இங்கே அனுப்பினார் அக்கா ஊருக்கு வந்திருந்தபோது அப்பா அவளிடம் சொல்லியிருக்கவே, போனதும் அவள் லெட்டர் போட்டாள்.

அன்றைக்கு அவனை ரயில்வே ஸ்டேஷனில் ஏற்றிவிட அப்பா வந்தார்.

“கொஞ்ச நாளைக்குப் பொறுத்துக்க. இங்கே ஒரு இடத்துல சொல்லியிருக்கேன். அதுவரைக்கும் எப்படியாவது அக்கா வீட்ல

தங்கி சமாளிச்சுக்க...”

வந்த இரண்டு நாட்களிலே தெரிந்து போனது அவனுக்கு. வீடும் அதன் மனிதர்களும் அவனை வித்தியாசமாகவே நடத்தினார்கள். பத்து மணிக்கு மேல் வீட்டுக்கு வந்ததற்குத் தெருவில் நிற்க வைத்து மாமா கேட்டார்,

“ஏழு மணிக்கு வந்து சாப்பிட்டுட்டு. ஒன்பது மணிக்குத் தூங்கிடணும். எல்லாருக்கும் வேலை வெட்டி இருக்கு... உனக்காக யாரும் கதவைத் திறந்து வெச்சுக்கிட்டு உட்கார்ந்திருக்க முடியாது.”

அக்காவும் இதையே வேறு மாதிரியாகச் சற்று மென்மையாகச் சொன்னாள். பலசரக்குக் கடையும் அதன் பழமையேறிய நாற்காலியும் அவனோடு சேர்ந்து படர்ந்துகொண்டன. அவனால் இருக்க முடியாமல் போனது.

அவன் எழுந்து நடக்க ஆரம்பித்தான். விடிய ஆரம்பித்திருந்தது. வெளியே காற்று குறைந்திருந்தது. கோயில் கதவைத் திறந்து விட்டிருக் கிறார்கள். தெருக் குழாயில் யாரோ குளிப்பது தெரிந்தது. கடந்து தெருவுக்கு வந்தான். அக்கா வீடு மூடிக் கிடந்தது. உள்கட்டில் வேலை செய்துகொண்டிருந்தார்கள் கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே போனான். அவன் புத்தகமெல்லாம் அறைக்குள் சிதறியபடி கிடந்தன. பெட்டி மூலையில் கிடந்தது. ஜன்னலில் இரண்டு பத்துக் காசுகள் கிடந்தன,

காசை எடுத்துப் பார்த்தான். திரும்பவும் அதே இடத்தில் வைத்து விட்டுச் சுவரோரமாகச் சாய்ந்து கொண்டான். கொஞ்ச நேரத்தில் அக்கா வந்து கேட்டாள்,

“இப்பத்தான் வர்றியா...

தலையாட்டினான்.

“அப்பா வந்திருக்காரு. மாடியில படுத்திருக்கார். எங்கே போன ராத்திரி...?”

“ரயில்வே ஸ்டேஷன்ல இருந்தேன்.”

“அப்பாட்ட சொல்லிட்டேன். அவர் போகும்போது நீயும் போயிரு... என்னால உங்க ரெண்டு பேரையும் சமாளிக்க முடியலே. ”

அவள் போன ரொம்ப நேரத்துக்குச் சாய்ந்து உட்கார்ந்தே இருந்தான். படிக்காமலே போன புத்தகங்கள் கிடந்தன. கண்ணெல்லாம் எரிந்தது. அப்பா மாடியிலிருந்து இறங்கி வந்து கொண்டிருந்தார்.

அவனுக்கு எப்போதோ வீட்டில் ஸ்கூல் லீவில் எல்லோரும் சேர்ந்து விளையாடிய ரயில் விளையாட்டு ஞாபகம் வந்தது. அவரவர் ஸ்டேஷனில் அவரவரை இறக்கிவிட்டுப் போய்க்கொண்டே இருந்தது ரயில் – விளையாட்டிலும்!

உறவும் பிரிவும் இன்றி. . .

சைக்கிளை மரத்தை ஒட்டித் தள்ளிக் கொண்டு போனான். முன் வீல் வளைந்து போயிருந்தது. ரோடெங்கும் இரைச்சலற்று ஓய்ந்துபோனது போல பஸ் ஸ்டாண்ட் பஸ்களில்கூட முகங்களைக் காணோம். எங்கும் வெயில் நிறைந்திருந்தது.

சைக்கிளை ஸ்டாண்ட் போட்டு நிறுத்தினான். மரத்தடியில் லாட்டரி டிக்கெட்காரரன் சேரில் தூங்கிக்கொண்டிருந்தான். சீட்டுகள் காற்றில் பறந்து கொண்டிருந்தன. தயாளனுக்கு உதடு வலித்தது. சட்டைப் பை கிழிந்து தொங்கிக்கொண்டிருந்தது. இரண்டு பித்தான்கள் தெறித்துப் போயிருந்தன. உதட்டை லேசாகச் சுழற்றிப் பார்த்தான். பெரிசாய் ஒன்றுமில்லை, பல் பட்ட காயம்தான், வெட்டுப் பட்டு ரத்தம் வந்து கொண்டிருந்தது.

சட்டை நுனியை வைத்துத் துடைத்துக்கொண்டான். எரிச்சல் இருந்தது. சைக்கிள் சீட் மேல் சாய்ந்துகொண்டான். கன்னம் கூட லேசாக வலித்தது.

கதிரேசன் மச்சானை அடித்திருக்கக் கூடாது என்றுதான் தோன்றியது. அவர்தான் முதலில் அடித்தார் என்றாலும், அவன் அடித்ததுபோல் அவர் அடிக்கவில்லை. அப்போது அவனுக்கு ஏக கோபமாயிருந்தது. அவர் சட்டையைப் பிடித்து இழுத்ததும் பின் வாங்கத்தான் செய்தான். அவர்தான் கன்னத்தில் அறைந்தார்.

மரத்துக்குப் பின்னால் இருக்கும் டீக்கடையில் பெஞ்சு காலியாகக் கிடந்தது. பாய்லரில் இருப்பவன் அவனையே பார்த்துக்கொண்டிருந்தான். சண்டை நடக்கும்போது பார்த்துக் கொண்டிருந்த அந்த

நீலநிறச் சேலை அணிந்த பெண் இப்போது பஸ் ஸ்டாண்ட் பக்கம் வந்துகொண்டிருந்தாள். அவனைப் பார்த்தவாறேதான் வந்து கொண்டிருந்தாள். தலையைத் திருப்பிக்கொண்டான்.

இப்படித்தான் நிறைய பெண்கள் அப்போது பார்த்துக்கொண்டிருந் தார்கள். வெறித்தார்கள்.

கதிரேச மச்சான்தான் எவ்வளவு நல்லவர் என்று தோணியதும் மனதுக்குள் ஏதோ செய்தது. கல்யாணத்தின்போதுதான் அவரை முதலில் பார்த்தான். மதுரையில் இருந்து வந்திருந்தார். ஒல்லியாக, சிவப்பாக, சீப்பு சீப்பாக முன்விழும் முடிகளோடு, உள்போன கண்ணும், சிரிப்புமாக இருந்தார். கல்யாணமாகி ரெண்டு குழந்தை இருந்தவரைப் போலவே தெரியவில்லை.

அவர் தம்பிக்குத்தான் தயாளன் தங்கச்சியைப் பெண் கொடுத்தார் கள். கல்யாணம் முடிந்த இராத்திரி மொட்டை மாடியில் இவனோடு சாவகாசமாகப் பேசிக்கொண்டிருந்தார். அவர் குழந்தைகளைப் பற்றி, மனைவியைப் பற்றி, வானத்தை, மனிதர்களை, நிறைய இப்படி. அவனையும், அவன் மனைவியையும்கூட ஒருநாள் விருந்துக்கு ஊருக்குக் கூட்டிப் போனான்.

சின்ன வீடு, முன்னால் கம்பி போட்டிருந்தது. மனைவி அழகானவ ளாக இருந்தாள். குள்ளம். பேச்சில் வார்த்தைகளில் பிரியம். சாப்பாடு போடும்போது விரல்களில் நளினம். சாப்பிட்டு விட்டுப் பின்னாடி கட்டில் போட்டு ராத்திரியெல்லாம் பேசிக்கொண்டிருந்தார்கள். பின் கதவில் சாய்ந்துகொண்டு, காலை மடக்கி அவளும், எதிரே அவன் மனைவியும் இருந்தார்கள். பத்து வார்த்தைக்கு ஒரு "அண்ணே" போட்டுக் கூப்பிட்டாள்.

குழந்தைகள் ஒட்டிக்கொண்டார்கள். நாலைந்து நாள் இருந்து வருவதற்குள் காலம் பழகியது போல் ஆனது. ரொம்ப சிலரிடம் மட்டும்தான் இப்படி ஆகிறது. அடுத்த தடவை அவர்கள் தயாளன் வீட்டுக்கு வந்தார்கள்.

குழந்தைகளோடு கோயிலுக்குப் போய், செகண்ட் ஷோ சினிமா பார்த்து வந்தார்கள். இடையில் ஒரு தரம் வந்து அவசரமாக நானூறு ரூபாய் வாங்கிப் போனார். ரெண்டு மாசம் கழித்துத் திருப்பிக் கொடுத்தார்.

அன்றைக்குக்கூட அப்படித்தான். மதியம் சாப்பிட்டுக்கொண்டி ருந்த நேரம்தான் வந்தார். கதவு ஒருக்களித்து சாய்ந்து இருந்தது. தள்ளி உள்ளே வந்தார். வெயிலில் வியர்த்து வழிந்தது. கழுத்து, பின்னால் என வேர்வை எங்கும் இறங்கியிருந்தது. சட்டையின் பின்பக்கம் முதுகோடு ஒட்டிப் போயிருந்தது. பார்த்ததும் சிரித்தார்.

"வாங்க உட்காருங்க

சட்டையைக் கழற்றி ஆணியில் மாட்டினார். ஏற்கெனவே அதில் காலண்டர் தொங்கியது. சின்னதாகக் கையில் மஞ்சள் பை வைத்திருந்

தார். நாலாக மடித்திருந்தது அது. சுவரில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டார். நெஞ்சில் பூனை முடிகள் மாதிரி முடி இருந்தது. ஆசுவாசப்படுத்திக்கொண்டு கதிரேசன் பேசினார்

"தண்ணி குடும்மா... வெயில் கடும் வெயிலா இருக்கு." தண்ணீர் கொண்டுவந்தாள். செம்பைத் தூக்கிக் குடித்தார். தண்ணீர் மார்பு வழியே இறங்கி ஓடியது.

"சாப்பிடறது... வெயிலோட எதுக்கு இப்படி இவ்வளவு தண்ணீர்."

"சாப்பாடு ஆச்சு... தங்கச்சி சாப்பாடு போட்டுத்தான் அனுப்புனா... தலகாணி குடு. செத்த நேரம் சாயுறேன். ."

தலகாணியை எடுத்துப் போட்டான். காலை நீட்டிப் படுத்துக் கொண்டார். கொஞ்ச நேரத்தில் சீரான குறட்டை கேட்டது. அசந்து தூங்கிக்கொண்டிருந்தார். நெற்றியில் வியர்த்து முத்து முத்தாக நின்றிருந்தது.

சாயங்காலமாக எழுந்து கோயில் பக்கம் போனார்கள். ஆள் இல்லாத கோயில் பிரகார வெளி தனிமையில் இருந்தது. வரிசையாக இருந்தன தூண்கள், கறுப்புக் கறுப்பாகச் சின்னச் சிலைகள், பெண்கள், கல்சிரிப்பு, தூணில் சாய்ந்து உட்கார்ந்துகொண்டு அவர்தான் பேச ஆரம்பித்தார்:

"சின்னதா இங்க ஒரு கடை போடலாம் அப்பிடினு எண்ணம். உங்களுக்குத் தெரிஞ்ச இடத்தில எடம் இருக்கு சொல்லி நீங்க முடிச்சுவிடலாம். அதான், உங்ககூட வேலை பார்க்கிறார்ல மார்டின், அவர் கடை சும்மா இருக்கு. அட்வான்ஸ் ஆயிரம் தாரேன். எப்படியாவது முடிச்சுறணும்..."

மஞ்சள் பைக்கட்டில் இருந்து ரூபாயை எடுத்தார். பாதிக்கு மேல் பழைய தாள்கள். அஞ்சும் பத்துமாக எண்ணி நூல் போட்டுக் கட்டியிருந்தார். வாங்கிக்கொண்டு தலையாட்டினான். மறுநாள் ஊருக்குக் கிளம்பிப் போனார்.

போய் மார்டினைப் பார்த்தபோதே மார்டின் சொன்னான்:

"நானே கடை போடப்போறேன். சம்சாரம் சும்மாதான் இருக்கா. பகல்ல அவ இருக்கட்டுமேனுதான்.

ரூபாயை வைத்துக்கொண்டு அவருக்காகக் காத்திருந்தான். வரக் காணோம். அவளுக்கு ஆஸ்பத்திரி போக வேண்டியிருந்ததால் நானூறு ரூபாய் போனது. மிச்சம் மெல்லக் கரைந்துபோன ஒரு நாளின் மதிய வேளையில் அவர் வீட்டுக்கு வந்து போனதாக சாந்தி சொன்னாள்.

அதற்குப் பின்னால் நாலைந்து தடவை வந்தார். ஒரு தடவையும் அவன் வீட்டில் இல்லை. அவரைப் பார்ப்பதே ஒரு மாதிரியாக இருந்தது. நாளாக நாளாக அது அதிகமாகிக்கொண்டே போனது. கதிரேச மச்சானைப் பற்றி நினைக்கும்போதே, எரிச்சல் வர ஆரம்பித்தது. அவரும் தொடர்ந்து வந்துகொண்டிருந்தார்

ஒரு நாளில், பைலை நிமிர்த்திவிட்டு எதிரே பார்த்தபோது ஆபீஸில் கதிரேசன் எதிரே நின்றிருந்தார். முகம் முன்புபோல இல்லை. அதிகப் பேச்சில்லை. ஆபீசில் வைத்தே கேட்டார்:

“ரூவா எப்ப வரும். அவசரமா வேண்டியிருக்கு.”

“தாரேன். இப்ப இல்ல, 7ம் தேதி ஒருத்தர்கிட்ட வாங்கித் தாரேன்.”

கேண்டீனுக்குக் கூட்டிப் போய் காப்பி வாங்கிக் கொடுத்தான். ஒரே மடக்கில் குடித்துப் போனார். அதற்குப் பின்னால் மதுரை போகும் நேரமெல்லாம் அவர் எங்காவது தென்படுவாரோ என்ற பயத்தில்தான் போனான். பஸ்ஸில் அவரைப் போல ஒருத்தருக்காக பயந்து பேப்பரை வைத்து முகம் மூடிக்கொண்டான். சீரான எழுத்தில் எறும்பு ஊர்ந்தது மாதிரி கடிதம் எழுதியிருந்தார். நாலைந்து தரம். இவன் பதில் போடவேயில்லை.

சொந்தக்காரர் கல்யாண வீட்டுக்கு ராத்திரிதான் போனான்.

வாசலில் வாழைமரம் கட்டிக்கொண்டு இருந்தார்கள். ரிக்கார்டு போடும் பையன் ரிக்கார்டு வட்டத்தின் நடிகரைப் பார்த்துக் கொண்டிருந்தான். நிறைய பெண்கள் சிரிப்பும் சத்தமும் கேட்டது.

கதிரேச மச்சான் அந்தக் கல்யாணத்துக்கு வரவில்லை. ராத்திரி சினிமா பார்த்துவிட்டுக் கல்யாண வீட்டு மாடியில் தூங்கி, காலையில் கல்யாணத்தில் கலந்துகொண்டான். மனைவி, குழந்தைகளோடு கூட்டத்தில் கதிரேசன் இருந்தான்.

அவனைப் பார்த்ததும் சிரித்தாள். எந்தக் களங்கமும் இல்லாத சிரிப்பு, பூப்பூக்கிற மென்மை போலச் சிரிப்பு. அவனுக்குத் தாங்க முடியவில்லை. லேசாக உதட்டைப் பிதுக்கிச் சிரித்தான். கதிரேசன் குழந்தைகள் பந்தியில் கிட்டத்தில் உட்கார்ந்துகொண்டு அவன் அப்பளத்தையும் சேர்த்துத் தின்றார்கள். பரிமாறும்போதும் பார்த்தான். அவள்தான். அதே விரலின் நளினம். நூல் சுற்றின மோதிரம்.

அவனைப் பார்க்காமலே கதிரேச மச்சான் போனார். பல தடவை முயன்றும் அவர் கடன் அடைக்க மாட்டாமல் போனது. மேலும் பணம் கரைந்துகொண்டே போனது.

இன்றைக்குத் தேரடி திருப்பத்தில் வைத்துப் பார்த்தும் பேசாமல் நின்றுவிட்டான். அவனைப் பார்ப்பதற்காகவே வந்திருக்கிறார். அவன் ஆபீஸ் பக்கம் நடந்து வந்துகொண்டிருக்கிறார். எதிரே அவனைப் பார்த்ததும் நின்றுகொண்டார். சைக்கிளை நிறுத்தி எதிரே நின்றார். அவர்தான் பேசினார்

“ரூவா தர முடியுமா முடியாதா இப்ப..

“எதுக்குக் கத்தறீங்க. வாங்க காபி சாப்பிடலாம்.” பக்கத்தில் இருந்த காபி கடைக்குள் சைக்கிளை நிறுத்திச் சொன்னான். அவர் கிட்டத்தில் வந்தார்.

“எப்ப தருவே?”

“இப்ப இல்ல, அடுத்த மாசம் தாரேன்.”

“ஒரு மயிரும் வேணாம். எனக்கு இப்ப வேணும்.”

பேசாமல் இருந்தான். அவரே பேசினார்.

“சொந்தக்காரன் மயிருன்னுகிட்டு... உத்தியோகம் வேற இதுல... திடீரென்று குரலை உயர்த்தினார்

“இப்பக்குடுத்தாகணும். நீ எங்க போவியோ தெரியாது. எனக்குப் பணம் வேணும்.”

“உடனே கேட்டா எங்க போறது

“பின்னே எதுக்குடா மயிரு செலவழிச்சே.” எதிரே நாலைந்து பெண்கள் நின்று அவர்களையே பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவன் சொன்னான்.

“மரியாதையா பேசுங்க. அதான் தாரேன்னு சொல்றேன்லே.”

எதிர்பாராமல் சட்டென அவன் சட்டையைப் பிடித்து இழுத்து கதிரேசன் ஓங்கி ஒரு அறை விட்டார். பின்னாடி சாய்ந்து சைக்கிளில் விழுந்தான். சைக்கிள் சரிந்து, முன் வீல் திரும்பியது. பின்பக்கம், முதுகு என வலித்தது. எழுந்த வேகத்தில் அவரை ஓங்கி அறைந்தான். எதிர்பார்க்கவில்லை. கதிரேசன் பின்னாடி சாய்ந்து தரையில் விழுந்தார். சட்டென்று மேலேறி, முகத்தில் மாறி மாறி அறைந்தான். யாரோ அவனை விடுவித்தார்கள்.

பலத்த சத்தத்தோடு அழும் குரல் கேட்டது. அவர்தான் அது. குரல் உறைந்துபோய்க் கத்தினார். முகத்தை மூடிக்கொண்டு அழுதார். நிறைய கூட்டம் சுற்றிக்கொண்டது.

சைக்கிளைத் தள்ளிக்கொண்டு அவன்தான் முதலில் வெளியேறி நடக்கத் தொடங்கினான். அவன் புறப்படுவதைப் பார்த்துச் சப்தமாய் அழுதார். வேஷ்டி, சட்டையெல்லாம் மண் அப்பியிருந்தது அவருக்கு.

வெயில் நெற்றியில் பட, சைக்கிளை சரி செய்துகொண்டு வீட்டுக்குப் போனான். வீடு திறந்தே கிடந்தது. தூங்கிக் கொண்டிருந்தாள் சாந்தி. சைக்கிளை நிறுத்திவிட்டுப் போனான். முகம் எரிந்தது. பின்னாடி போய் தொட்டியில் இருந்து தண்ணீரை வாரி முகத்தில் அடித்துக்கொண்டான். எந்தக் குளிர்ச்சியும் இல்லை.

எதற்கோ அழ வேண்டும் போல் இருந்தது. கன்னம் வலித்தது. எப்படியும் பணம் திரும்பக் கொடுக்க வேண்டும் என்ற நினைப்பு வேறு வந்தது. முகத்தில் திரும்பவும் தண்ணீரை அடித்துக்கொண்டு கவிழ்ந்து உட்கார்ந்து அழுதான். சப்தம் அதிகமில்லாமல், உடல் மட்டும் குலுங்க, முகத்தில் கைமூடிக்கொண்டு.

திண்டில் இருந்து ஒரு காகம் பார்த்துக்கொண்டேயிருந்தது.

காற்று மரங்கள்

எப்போதாவது இப்படியொரு தன்மை ஏற்படுகிறது. எதிர்க் காற்றில் கலைந்து பறக்கும் தலை, நிழல் சரியும் வீடுகள், நீண்ட தெருக்கள் என. மணி பத்தைத் தாண்டியிருக்கும். பஸ் வந்து திரும்பும்போது மணிக்கூண்டைப் பார்க்கவில்லை இன்று. மற்ற நாள்களில் காலையில் ஒரு தரமும் மாலையில் பஸ் கடந்து வரும்போது ஒரு தரமும் மணிக் கூண்டைப் பார்ப்பாள்.

அவள் பார்க்கும் நாளிலிருந்தே இந்த நகரம்கூடப் பெரிதாக மாறிவிடவில்லை. புதிய கட்டடங்களும் கடைகளும் வந்தாலும் பழைய சுபாவம் அப்படியே இருக்கிறது. அன்றைக்குச் சாலை பழுதடைந்துள்ளது என்று பஸ்ஸைக் குறுக்குப் பாதை வழியாகச் செலுத்தும்போது பார்த்தாள்.

சிவப்பு வீடுகள், தட்டியடித்த மரக்கதவுகள். மரங்கள் அடர்ந்த தெரு. குழந்தைகள் விளையாடும் தெரு. பஸ்ஸைக் கண்டதும் பையன்கள் பின்னாலே கத்திக்கொண்டு ஓடி வருவார்கள். அன்று கூட அவள் வெளியே கைகளை ஆட்டினாள். நெருக்க நெருக்கமான வீடுகளும், குறுகிய இருள்படர்ந்த சந்துகளும்கூடத் தெரிந்தன.

இங்கெல்லாம்கூட நடக்க வேண்டும் எனத் தோன்றியது. அவள் வீட்டிலிருந்து கிளம்பும் பாதையிலிருந்து மாறி ஒரு நாளும் போனதில்லை. ஸ்கூலில் படிக்கும் நாளில் சாரதி அண்ணனோடு தான் நடை. அவன் தெருவில் எங்காவது நுழைந்து எதிலிருந்தாவது வெளிப்படுவான். அவனுடைய புத்தகங்களைக்கூட அவளே சுமந்து வருவாள். வீடுகள் போன்ற மூடிக் கொள்ளும் அமைப்புகூடச் சில தெருக்களுக்கு உண்டு.

ஸ்கூலை ஒட்டி இருக்கும் தெருமுனையில் பெரிய சுவர் இருக்கும். மறைந்துகொள்ளலாம்.

சாரதி ஒரு நாளில் மறைந்துகொண்டு கூப்பிட்டான். அவள் போய்ப் பார்த்தபோது அவனில்லை. சின்ன சந்து இருந்தது. இல்லையென்று திரும்பும்போது கட்டைச் சுவரையொட்டிக் குதித்தான்

"மது. ஏய்.

அலறினாள். எதிரே வந்து நின்றான். தெருவில் யாருமில்லை. முசுமுசுவென்று சத்தம் வந்தது அவளிடமிருந்து.

"அழுகுணி. என்கூட ஏண்டி வரே.. நான் போறேன்"

தெரு அதிர ஓடினான். அவனை அப்படியே அமுக்கி, அடிக்க வேண்டும் எனத் தோன்றியது. வீட்டுக்குப் போனபோதுகூட அம்மா அவளைத்தான் திட்டினாள்.

"அவன்கூட எதுக்குடி போறே... தனியா போக வேண்டியதுதானே?"

"பயமாயிருக்கும்."

"என்ன பயம்... பேயா தூக்கிட்டுப் போயிரும்." அவள் எதுவும் சொல்ல மாட்டாள். சுவரை ஒட்டினாற்போல் படுத்துக்கொள்வாள். அம்மாவின் கிட்டத்தில் அவன் படுத்துக்கொள்வான். அவன் இல்லாவிட்டால் சின்னவன், காலை அம்மாவின் மேல் போட்டுக்கொண்டு விரல்களைப் பிடித்தபடியே.

அவளுக்கு ஆசையாயிருக்கும். அவன் இல்லாதவேளையில் மதியம் அம்மா உறங்கும்போது பக்கத்தில் படுத்துக்கொண்டு விரல்களைப் பிடித்துக் கொள்வாள். விரல்கள் மெத்து மெத்தென இருக்கும். அவள் விரல்களைக் கோத்துக்கொள்வாள். அல்லது அம்மா போட்டிருக்கும் நூல் சுற்றிய மோதிரத்தைப் பிடித்துக் கழற்றுவாள். அம்மா தூங்கியபடியே கேட்பாள்,

"என்னடி வேணும்?"

"விரல்.

"ஏண்டி. தூங்கவிடாம. போ விளையாடு...

சாரதியைப் போலவே அம்மாவின் மேல் காலைத் தூக்கிப் போடுவாள். அம்மா உறக்கத்தோட அவளை விலக்கித் தள்ளுவாள். திரும்பவும் விரல்களைப் பிடிக்கும்போது கோபம் வரும் அம்மாவுக்கு.

"இம்சைப்படுத்தாம எழுந்து போ."

சிணுங்குவாள். அம்மா, அவள் தலையைப் பிடித்துத் தள்ளி முதுகில் அடி கொடுப்பாள்.

எங்கிருந்தாவது வரும் சாரதி ஓடிவந்து அம்மாவின் மேல் விழுவான். அம்மா அவனை அணைத்துக்கொள்வாள். அவள் விரல்கள் அவனிடமிருக்கும்.

அவனைப் பிடிக்காமலே போனது அவளுக்கு. பல தடவை

அவன் புத்தகங்களை யாருமறியாமல் கிழித்திருக்கிறாள். மையை ஊற்றி நோட்டைக் கெடுத்திருக்கிறாள். அவள் ஸ்கூலில் விளையாடும் போது விழுந்த அன்றுகூட அம்மா அவள் தலையைத் தடவிவிட்டுப் பின்பு அதட்டினாள்.

"பையன்களோடு என்ன விளையாட்டு.

இப்போதும் அம்மாவுக்கும் அவளுக்கும் ஆகாமலே இருந்தது. இன்று அவன் வந்தபோது இதையெல்லாம் அவனிடம் சொன்னாள். அவள்தான் அவனை வரச் சொல்லியிருந்தாள். முதல் நாள் பஸ்ஸில் வரும்போதே சொன்னாள்.

"நாளைக்கு ஆபீஸ் முடியற நேரம் வாங்களேன்.

"எங்கே?"

"ஆபீஸுக்கே... மரத்தடியில் நில்லுங்க, வர்றேன்."

சொன்னது போலவே வந்திருந்தான். கையில் சின்னதாகப் பை. தலை கலைந்துபோயிருந்தது அவனுக்கு.

அவள் அவனெதிரே வந்து நின்றபடியே கேட்டாள்.

"எப்போ வந்தீங்க?"

"இப்போதான்

அவள் எதுவும் சொல்லவில்லை. நடந்து பஸ்டாப்பை நோக்கிப் போனார்கள். எதிர்த் திசையில் ஏதோ ஒரு கிராமத்தின் பெயரில் பஸ் வந்தது.

"எங்கே போகிறோம்?" என்றான்.

"பாதி வழி போய்ட்டுத் திரும்பி வந்துருவோம்." இறங்கிய இடம் மலையை ஒட்டிய சரிவாக இருந்தது. கொஞ்சம் மரங்களும் கோயிலும் இருந்தன. அதிகக் கூட்டமில்லை. அவள், அவன் விரல்களைப் பிடித்துக்கொண்டாள். அவனுக்குப் பெரிய விரல்கள்.

"முன்னெல்லாம் எனக்குப் பயமா இருக்கும்."

"எதுக்கு?"

"எல்லாத்துக்குமே யாராவது கையைப் பிடிச்சுக்கிடணும் போல் தோணும் அம்மா விரட்டுவா

அவன் பதில் பேசவில்லை. அவள் நிறைய பேசிக்கொண்டே வந்தாள். இடையில் அவனிடம் கேட்டாள்:

"கிறுக்குத்தனமாயிருக்கா பேசறது எனக்கும் பேச யாருமே கிடையாது. சுவரோடதான் பேசுவேன்."

"உங்க வீட்டிலதான் ஆள் இருக்காங்கல்லே?"

"படுத்துக்கிடக்க இடத்துல உள்ள சுவர்தான் என் ஃப்ரெண்டு அதுக்கெல்லாம் தெரியும். அது மேல என் கை விரல்களைக்கூட வரைஞ்சு வெச்சிருக்கேன். வெள்ளையடிச்சப்ப மறைஞ்சு போச்சு. லேசா சுவடு தெரியும் இப்பவும் "

பேச்சை நிறுத்திவிட்டு அவன் மேல் சாய்ந்துகொண்டாள். காரண

மில்லாமல் அழுதாள். அவன் ரொம்ப நேரத்துக்குப் பிறகு எழுந்து கொண்டான். இருட்டியிருந்தது எங்கும். ரோட்டுக்கு வரும்போது அடர்ந்த இருள்

பஸ்ஸில் வரும்போது வீடுகள் தெரியவில்லை. அவன் தெப்பக் குளம் ஸ்டாப்பில் இறங்கிக்கொள்வதாகச் சொன்னான். அவளும் முந்திய ஸ்டாப்பில் இறங்கிக் குறுக்கு வழிகளில் நடந்தாள்.

ஏதோ இன்று அபூர்வமாயிருந்தது போல் தோன்றியது அவளுக்கு. அவளுக்கான ஒரு நபர்கூட இருக்க முடியும் எனும் நினைப்பு அழுத்தியது. இரவில் எல்லாத் தெருக்களுக்கும் ஒரே சுபாவம் வந்துவிடுகிறது என்றே தோன்றியது.

வீட்டை நெருங்கியபோது கதவு திறந்து கிடந்தது. யாரையும் வெளியே காணோம். அம்மா உள் அறையில் படுத்து உறங்கியிருக்கக் கூடும். உள்ளே போனாள் அம்மா உறங்கிப் போயிருந்தாள்.

பின்கட்டுக்கு லைட்டைப் போட்டு சேலை மாற்றினாள். குளிக்கலாம் என்று தோன்றியது. அவள் பாத்ரூம் கதவுகளை மூடும்போது அம்மாவின் குரல் கேட்டது.

“மணி என்னாகுது தெரியுமில்லே.

“எல்லாம் தெரியுது

அம்மா முனகுவது கேட்டது. குளித்து ஈரத்தலையோடு பின் கதவைத் திறந்து வைத்து உட்கார்ந்துகொண்டாள். எங்கும் காற்றடித்தது. மலையடிவாரமும், விரல்களும், உடனிருந்தவனும் ஞாபகம் வந்தன அவளுக்கு. இந்த இருள் பழகிப் போயிருந்தது. பயமற்றுப் போய் விட்டது. கூந்தலைத் தொய்வாக முடிந்துவிட்டுப் பின் கதவைச் சாத்திவிட்டுப் படுக்கும் இடத்துக்குப் போனாள். நேற்றுப் படித்த புத்தகத்தின் மீதி மடித்துக் கிடந்தது.

அம்மா தனியாக உறங்கிக்கொண்டிருந்தாள். பக்கத்தில் யாருமில்லை. பையன்கள் அவளைவிட்டுப் போய்விட்டார்கள். எதன் பொருட்டோ அம்மாவின் மேல் வருத்தமாக வந்தது. நேற்று யாரிடமோ அம்மா சொன்னது கேட்டது.

“விரலைப் பிடிச்சுக்கிட்டே திரிவாங்க. இப்போ பையன்கள் ஒருத்தரும் உதவிக்கு இல்லே. அவளா வேலைக்குப் போயி ஆம்பளையில்லாத குடும்பமாப் போச்சு

லைட்டை அணைத்துவிட்டு உறங்கப் போகும்போது பார்த்தாள். சுவரில் இருந்த விரல் தடம் லேசாகத் தெரிந்தது. சின்ன விரல்களாக இருந்தது அப்போது. அவள் உறங்கப் போகும்போது திரும்பவும் அந்த நினைவு வந்தது.

தெருமுனையில் இருந்து குதிக்கும் சாரதி அண்ணன். அவன் குரல். மது யேய் !

அவள் பயப்படவில்லை.

வெளியில் ஒருவன்

அவன் சாப்பிட உட்கார்ந்ததும் அவள் போய் ஸ்டாண்டில் பவுடர் டின்னுக்கு அடியில் இருந்த கடிதத்தை எடுத்துக்கொண்டு வந்தாள். அவன் சாப்பாட்டைப் பிசைந்தவாறே இடது கையால் கடிதத்தைப் பிரித்தான். ஏற்கெனவே அவள் பிரித்துப் படித்திருந்தாள். எறும்பு ஊர்வதைப் போல இருந்தன வரிகள். சந்திரா அக்காதான் எழுதியிருந்தாள்.

அவள் அவனுக்கு நேராக உட்கார்ந்து கொண்டாள். வெளிச்சம் ரொம்பவும் குறைவாகவே இருந்ததால் கடிதத்தைத் தூக்கிப் பிடித்துக்கொண்டான். எதிரே இருந்த அவளின் நிழல் சின்னதாகப் பதுங்கியிருந்தது. பாதி வரை படித்துவிட்டு அவளைப் பார்த்துக் கேட்டான்,

"என்னவாம்?"

"உங்கம்மா இன்னும் ஆஸ்பத்திரியில்தான் இருக்காங்களாம். உங்க பெரியண்ணன் வந்து பார்த்திட்டுப் போனாங்களாம்."

அவன் பேசாமல் சாதத்தைக் கையில் வைத்துப் பிசைந்துகொண்டிருந்தான். கடிதம் பக்கத்தில் கிடந்தது. அவள் எழுந்து போய் மோர் எடுத்து வந்தாள். அவன் கிட்டத்தில் வந்தபோது கேட்டாள்,

"போகணுமா பாக்க. அவன் பதில் சொல்லவில்லை. மவுனமாகச் சாப்பிட்டான். வெயில் காலமாதலால் புழுங்கியது. தட்டில் கையைக் கழுவிவிட்டு எழுந்துகொண்டான். பின் வாசலுக்கு வெளியே பாயில் குழந்தைகள் படுத்துக் கிடந்தார்கள் தென்னை ஓலை அசையவில்லை. வானம் வெளுத்துப்

போயிருந்தது. அவன் படியில் போய் உட்கார்ந்துகொண்டான்.

பாயில் சேலை நாலாக மடித்து விரிப்பாகக் கிடந்தது. ரமணி மட்டும் சேலைக்குள் காலை விட்டுத் தூங்கிக்கொண்டிருந்தாள். அவன் சாப்பிட்ட இடத்திலே கடிதம் இன்னமும் கிடந்தது. அவள் சாப்பிட்ட இடத்தைக் கூட்டிக்கொண்டு இருந்தாள். குப்பையைக் கதவோரத்தில் ஒதுக்க வரும்போது சொன்னான்,

“போகலாம்னு நெனைக்கேன்.” அவள் குப்பையை ஒதுக்கிவிட்டுக் கதவைத் திறந்துகொண்டு வெளியில் வந்தாள். வேர்வை கழுத்தோரம் இறங்கியிருந்தது. கைகளை விரித்துக்கொண்டு சேலைத் தலைப்பால் விசிறிக்கொண்டாள். வீடு பூராவும் இல்லாமையின் இறுக்கம்.

“ஒரே புழுக்கமா இருக்குல்ல . . .”

அவன் எதுவும் அதன்பின் பேசவில்லை. விரித்திருந்த பாயில் படுத்துக்கொண்டாள். அவள் ஜடை தனியாக வளைந்து கிடந்தது. அவன் ரொம்ப நேரம் உட்கார்ந்தபடியே இருந்தான். நிறைய நட்சத்திரங்கள் தெரிந்தன. ரயில் போகும் சப்தம் துல்லியமாகக் கேட்டது. வெற்று மார்பில் லேசாகக் காற்று அடித்தது.

ஏற்கெனவே அம்மாவை ஆஸ்பத்திரியில் சேர்த்தபோதே அவன் போயிருந்தான். கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரியின் மஞ்சள் சுவர்களுக்குள் எங்கும் மருந்து நெடி. அம்மாவின் தீராத சளி அவளை ஒடுக்கியிருந்தது. வரிசையாக நிறைய கட்டில்கள் இருந்தன. அந்த வார்டில் அநேகமாக எல்லாப் ‘பெட்’டிலும் ஆட்கள் இருந்தார்கள்.

அம்மாவிடம் கொடுப்பதற்கு இவனிடம் பெரிதாக ஒன்றுமில்லை. ஒரு சின்ன மஞ்சள் பைதான். மனசு கூசியது. மனசுக்குள் இருக்கிற பாசம் யாருக்குத் தெரியும்?

அம்மா ஜன்னலை ஒட்டிய பெட்டில் இருந்தாள். பெரிய ஜன்னல். கண்ணாடிக் கதவுகள் போட்டது. ஜன்னலில், பாதி பிரிக்கப்பட்ட பொட்டலத்தில் இருந்து வாழை இலை தெரிந்தன. ஜன்னலில் இருந்த மஞ்சள் பையில் சேலை துருத்திக்கொண்டு இருந்தது. அவன் போனபோது அம்மா தூங்கிக்கொண்டிருந்தாள். சந்திரா அக்காவும் அவள் குழந்தைகளும்தான் இருந்தார்கள். அவனைப் பார்த்ததும் பக்கத்து பெட்டில் இருந்தவர்கள் தலையைத் தூக்கிக் கொண்டார்கள்.

அம்மாவின் கிட்டத்தில் போய்ப் பார்த்தான். சுருண்டு படுத்திருந் தாள். நெஞ்சு எலும்பெல்லாம் தெரிந்தது. அதுவும் சமயத்தில் மூச்சுவிட சிரமப்பட்டு எக்கிப் பிடித்துக்கொள்ளும் போது அவள் கண்களில் ஈரம் வழிந்து போயிருக்கும். முகத்தில் கோடு கோடாக வயது ஏறியிருந்தது. காதில் கம்மல் போட்டிருந்த இடம் மட்டும் அதிக வெள்ளையாக இருந்தது. அவன் கொண்டுபோன பையை ஓரத்தில் வைத்துவிட்டு எழுந்துகொண்டான்.

சந்திரா வார்டின் வெளியே நின்றுகொண்டிருந்தாள். கூடவே

அவள் மகள் லலிதாவும் தெரிந்தாள். அவன் போனவுடன் சந்திரா லலிதாவோடு பேசுவதை நிறுத்திவிட்டு அவனிடம் வந்தாள்.

"முன்னைவிட ரொம்ப மோசமா இருக்கு அன்னைக்குக் காலையில அப்படியே மூச்சு இழுத்துக்கிட்டு, மயங்கி, ரொம்பக் கஷ்டப்பட்டா. அவர்தான் இங்க கொண்டுவந்து சேர்த்தார்."

தனது இயலாமையைக் குத்திக் காட்டுகிறாளோ ஆனாலும் மவுனமாக அவன் கேட்டுக்கொண்டேயிருந்தான். உள்ளேயிருந்து அம்மாவின் இருமல் சப்தம் கேட்டதும் சந்திரா திரும்பிப் பார்த்தாள்.

"முழிச்சுக்கிட்டா.. வா போவோம்

அவனைப் பார்த்ததும் அம்மா எழுந்து உட்கார்ந்துகொண்டாள். அவன் பெட்டின் ஓரத்தில் உட்கார்ந்துகொண்டான்.

"எப்படியிருக்கு இப்ப...

தலையாட்டினாள். எழுந்து ஜன்னலில் வைத்த பைக்கட்டை எடுத்துக் கொடுத்தான். உள்ளே பிஸ்கட் பாக்கெட், நாலைந்து வாழைப்பழம் எல்லாம் இருந்தன. அம்மா பார்த்துவிட்டுக் கீழே வைத்துக்கொண்டாள். அவள் முகத்தில் நிழலாக ஒரு ஏமாற்றம். சந்திரா பெட்டுக்குக் கீழே இருந்த தூக்குவாளியை எடுத்து ஆட்டிப் பார்த்தாள்.

"வெந்நீ இல்லையா..

"இல்ல, அது ஆறிப் போயிருது. கொஞ்சம் இருந்ததை அப்பவே குடிச்சிட்டேன்."

"சூடே தாங்கறதில்ல. நம்ம பிளாஸ்க்கூடப் போயிருச்சு. புதுசு வாங்கணும். தெனம்தான் தேவை இருக்கில்ல.

அவள் அடியிலிருந்த பழைய பிளாஸ்கை எடுத்தாள். வரிவரியாகக் கோடு போட்ட பிளாஸ்க் அது. அம்மா ரொம்ப காலமாக வைத்திருக்கிறாள் அதை. மேல் மூடிகூடப் பிய்ந்து போயிருந்தது. சந்திரா அதைத் திறந்து இருந்த காபியை டம்ளரில் ஊற்றி அம்மாவிடம் கொடுத்தாள். பாதி டம்ளருக்குக் குறைவாகத்தான் இருந்தது. அம்மா காபிக்கு நடுவில் கேட்டாள்,

"சுசிலா எப்படியிருக்கா? பிள்ளைக.

"இருக்காங்க" என்றான். அம்மா திரும்பவும் படுத்துக்கொண்டாள். அவன் எழுந்துகொண்டான். லலிதா பிளாஸ்கை எடுத்துக்கொண்டு நின்றாள். சந்திரா அவனைப் பார்த்துக் கேட்டாள்,

"ரெண்டு ரூவா குடு. சில்லறை இல்ல. காபி வாங்கணும்" அவள் பிளாஸ்கை எடுத்துக்கொண்டு போனபோது சந்திரா சொன்னாள்,

"புது பிளாஸ்க் ஒண்ணு வாங்கித் தந்தா என்னடா அம்மா பாவம். கஷ்டப்படுறா ."

அவன் மவுனமாக சரியெனத் தலையாட்டினான் இருட்டும் வரை அவன் ஆஸ்பத்திரியில் இருந்தான். லலிதா மட்டும் துணைக்கு இருந்தாள். அம்மாவிடம் சொல்லிவிட்டு பஜார் வழியாக பஸ் ஸ்டாண்ட் வந்தான். நிறைய கடைகளில் வெளியே தெரியும்படி ஷோகேஸில் பிளாஸ்க் வைத்திருந்தார்கள். பையில் பணமில்லாமல் வெறுமனே விலை விசாரித்து என்ன செய்ய, அவன் வீட்டுக்குத் திரும்பும்போது நன்றாக இருட்டியிருந்தது.

வழக்கம் போலச் சாப்பிட்டுவிட்டுப் படுக்கைக்குப் போகும் முன்பு கேட்டான்,

“பிளாஸ்க் நல்லது என்ன விலை இருக்கும்.”

“சின்னது நாப்பது ரூவா இருக்கும். பெரிசின்னா எழுபத்தைஞ்சு ரூபா வரும்.”

அவள் பதில் சொல்லிவிட்டுப் படுத்துக்கொண்டாள். எதற்கு என்றே கேட்கவேயில்லை.

மெக்கானிக் ஷாப்பில் சொல்லிவிட்டுத் திரும்பும்போது மணி பத்தாகியிருந்தது. வீட்டில் சமையலில் இருந்தாள். அவனைப் பார்த்ததும் கேட்டாள்,

“இப்பவே போகவா?”

அவன் கண்ணாடியில் தலைசீவிக்கொண்டே தலையாட்டினான். இந்நேரத்தில் ரயில் உண்டு என்பதால் ரயில்வே ஸ்டேஷனுக்குப் போனான். ஆள் அரவமற்ற பிளாட்பார பெஞ்சுகள். காலைப் பேப்பரின் உதிரிகள் ஆங்காங்கே கிடந்தன. கேண்டீனில் யாரையும் காணோம். கவுண்டர் பூட்டியிருந்தது. புத்தகக் கடையை ஒட்டிய பெஞ்சில் உட்கார்ந்துகொண்டான். ரயில் வர நேரமிருந்தது.

கடிதத்தைப் பையிலிருந்து எடுத்து இன்னொரு முறை படித்துப் பார்த்தான். பெரியண்ணன் வந்துபோன விபரம் பாதியை நிறைத்து இருந்தது. அவன் போஸ்டாபீஸில் கிளார்க்காக இருந்தான். பக்கம் என்பதால் அடிக்கடி அவனால் வர முடிந்தது. கையில் கொஞ்சம் பணப் புழக்கம் இருப்பதால் அம்மாவுக்குப் பிரியமாக அவனால் நடந்துகொள்ள முடிகிறது.

ரயில் வந்து நிற்கும்போது சிலர் மட்டும் இறங்கினார்கள். கூட்டமில்லாத பெட்டியில் ஏறி உட்கார்ந்துகொண்டான். அவன் இருந்த பெட்டியில் எதிரே ஒரே ஒரு ஆள் மட்டும் இருந்தான். ரயில் கிளம்பியதும் ஜன்னலை ஒட்டி உட்கார்ந்துகொண்டான். காற்று தலையைக் கலைத்தது. மெல்ல நகர்ந்து மறைந்தன கட்டடங்கள். எதிர்த் திசையில் ஓடின மரங்கள். கொஞ்ச நேரத்தில் எங்கும் வெக்கைக் காற்று.

இறங்கி ஆஸ்பத்திரிக்கு நடந்தே போனான். அம்மா ஜன்னலில் எதையோ தேடிக்கொண்டிருந்தாள். சந்திராவைக் காணோம். அவன் சப்தம் கேட்டதும் திரும்பிப் பார்த்தாள். திரும்பவும் பழையபடி

எதையோ தேடினாள். அவன் மவுனமாகக் கம்பியைப் பார்த்தபடி நின்று கொண்டிருந்தான். பையிலிருந்து தேடி சின்ன விக்ஸ் டப்பாவை எடுத்துக்கொண்டு கட்டிலில் உட்கார்ந்துகொண்டாள்.

அவனாகவே கேட்டான்,

"பெரியண்ணன் வந்திருந்தாரா? இப்ப உடம்புக்கு எப்படியிருக்கு?"

வெறுமனே தலையாட்டினாள். வார்டில் டாக்டர் வருவதற்கான பரபரப்பு ஏற்பட்டது. நகர்ந்து வாசலுக்கு வந்தான். காபி குடித்தால் தேவலாம் போல இருந்தது. கேண்டீனை நோக்கிப் போனான்.

அவன் காபி குடித்துக்கொண்டிருக்கும்போது சந்திரா கையில் பையோடு உள்ளே வந்து கொண்டிருந்தாள். அவனைப் பார்த்ததும் கிட்டத்தில் வந்தாள்.

"எப்ப வந்தே அம்மாவைப் பார்த்தியா

"பார்த்தேன்."

"என்ன சொன்னா?"

"ஒண்ணும் சொல்லல."

"அவளுக்கு உம் மேல வருத்தம்தான். அன்னைக்கு பெரிய அண்ணன் குடும்பத்தோட வந்தப்பக்கூட சொன்னாள்."

"என்னவாம்?"

"ஏதோ கடனுக்கு வாரயாம். எல்லாம் அவ செய்யறதுன்னா. அவன் வந்தப்ப மூணு சேலை எடுத்துக் குடுத்தான் தெரியுமில்ல. நூறு ரூவா வேற தனியா.

தலையாட்டினான்.

"அதான், வேறென்ன... என்னையக்கூட சொல்றா... நீ அவளுக்கு பிளாஸ்க் வாங்கித் தாரேன்னு சொல்லிட்டு ஏமாத்திட்டேன்னா."

அவனுக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை.

சந்திரா பேசிக்கொண்டேயிருந்தாள். அவர்கள் மேலே போகும் போது டாக்டர்கள் போயிருந்தார்கள். அம்மாவுடன் பக்கத்து பெட்டிலிருந்தவரின் உறவுக்காரப் பெண் இருந்தாள். அவர்களைப் பார்த்ததும் எழுந்துகொண்டாள். சந்திரா பையிலிருந்து கொண்டு வந்த சாதத்தை எடுத்துக் கட்டிலுக்குக் கீழேயிருந்த தட்டில் வைத்தாள். நூல் போட்டுக் கட்டியிருந்தாள் பொட்டலத்தை.

அந்தப் பெண் அம்மாவிடம் ஏதோ பேசிக்கொண்டிருந்தாள். அவனைக் காண்பித்து அந்தப் பெண் கேட்டாள்,

"இரண்டாவது மகனா. என்ன செய்றாரு.

"இருக்காரு. என்றாள்.

அவன் பேசாமல் கேட்டுக்கொண்டு இருந்தான். பழைய பிளாஸ்க் மூடாமல் காலடியில் திறந்தபடியே கிடந்தது. சாயங்காலமாகக் கிளம்பி வரும் வரை அம்மா எதுவும் பேசவில்லை.

ரயிலில்தான் திரும்பினான். காற்று ஏகமாக அடித்தது. அவனுக்குக் கொஞ்சம் வருத்தமாக இருந்தது. மெதுவாக நடந்து வீடு போய்ச் சேர்ந்தான். இருள் சுவரோரங்களில் குழந்தைகள் வெளியே உறங்கியிருந் தார்கள். சாப்பிட்டுவிட்டு ரமணிக்கு இடையில் இருந்த இடத்தில் அவள் காலை நகர்த்திவிட்டுப் படுத்துக்கொண்டான்.

அங்கொன்றும் இங்கொன்றுமாக நட்சத்திரங்கள் தெரிந்தன. அவன் கதவைப் பூட்டிவிட்டு ரமணி ஓரத்தில் படுத்துக்கொண்டான். அவள் கை அவன் வரை வந்தது. விரல்களை எடுத்துக்கொண்டான். மெத்தென்று இருந்தன. அவள் தூங்கும் முன்பு கேட்டாள்,

"அம்மா எதுவும் கேட்டாங்களா?"

அவன் பதில் சொல்லவில்லை. வானத்தைப் பார்த்துக் கொண்டி ருந்தான். மழை வருவதற்கான புழுக்கமிருந்தது வெளியெங்கும்.

ஆறு யானைகள்...

அவன் போகும்போதே பார்த்துக்கொண்டு போனான்.

யாரோ முக்கியப் பிரமுகர் வரக்கூடும் போலத் தோன்றியது. எங்கும் வளைவுகள், விதவிதமான அலங்காரங்கள். ஸ்கூல் பிள்ளைகள் வரிசையாக. காலையிலேயே வெயில் அதிகமாயிருந்தது. யாராக இருக்கக்கூடும் எனத் தெரியவில்லை. அவனுக்கு சுவாரஸ்யமின்றி இருந்தது அது. நிறைய ஆட்கள் வேறு இருந்தார்கள். போலீஸ், அரசாங்க ஜீப் வேறு.

அவன் ரோட்டின் வளைவுக்கு வருவதற்குள் பார்த்தான். ஆறு யானைகள் ஒன்றன் பின் ஒன்றாக வரிசையாக வந்துகொண்டிருந்தன. அசைந்தபடியான நடை. பூப்பூவாகப் போட்ட துணி தொங்கிக் கொண்டிருந்தது வயிற்றில். காது படர்ந்து போயி ருந்தது. காதின் நுனி கிளை கிளையாகப் பிரிந்தது போலக் கிழிந்து கிடந்தது யானைகளுக்கு.

நெற்றியில் செம்மண் புழுதி அப்பியது போன்ற நிறம். ஈரம் வழிந்துபோன கண்கள். காதின் வளைவு களில்கூடப் படம் வரைநதிருப்பார்கள். நெற்றியில், துதிக்கை பக்கம் எனப் பூக்களின் படங்கள். கடந்து போகும் வாகனங்களை வெறித்தபடியே வந்தன யானைகள். அம்பாரியின் மேலிருந்த யானைப் பாகன் ஏதோ யோசனையில் வந்து கொண்டிருந்தான்.

கூட்டமாகத் தெருப்பிள்ளைகள் யானையை வேடிக்கை பார்க்க ஓடி வந்தார்கள். சைக்கிளில் போகும் சிலரும்கூட நிறுத்திப் பார்த்துப் போனார்கள். ஆறு யானைகளில் இரண்டு மட்டும் ரொம்பவும்

வயதானவை போலத் தெரிந்தன. பருத்த யானையின் கால்களில் சிக்கிய வைக்கோல் மீதியிருந்தது இன்னும். வால் சிக்குப் பிடித்திருந்தது.

வரும் நபரை வரவேற்க யானையைக் கூட்டிப் போனார்கள் எனத் தோன்றியது. அப்படியானால் வரும் நபர் முக்கியமானவராகத் தான் இருக்கக்கூடும். அவன் யானைகளைக் கடந்தபோது பார்த்தான். வரி வரியான அதன் முதுகு. கோடு கோடான துதிக்கைக் கட்டுகள். மேலே தூங்கிக்கொண்டிருந்தான் பாகன்.

யாரோ யானை மேலேற்றி விடச் சொல்லி, அழுது கொண்டிருந்தார் கள். கூட்டத்தில் தெரியவில்லை. சிறு பையனாகவோ, பெண்ணாகவோ இருக்கக்கூடும். எங்கிருந்து இந்த யானைகளைக் கூட்டி வந்தார்கள் எனத் தெரியவில்லை. ஒருவேளை தூரத்தில் இருந்து கூட்டி வந்திருக்கலாம். எல்லா யானைகளும் கோயிலுக்குச் சொந்தமானவை யாகத்தான் இருக்கக்கூடும். அந்த யானைக் கூட்டத்தில் அவர்கள் ஊர்க் கோயில் யானையைக் காணவில்லை.

அந்தக் கோயில் யானைக்கு உடல் நலம் கெட்டுப் போயிருந்தது. எப்போவாவது திருவிழாவின்போது அலங்கரித்துக் கூட்டி வருவார்கள். மற்ற நாட்களில் தகரக் கொட்டகைக்குள் கல்தரை முதுகு பதியக் கிடக்கும். அது அசைந்துகொண்டேயிருக்கும். நான்கு பக்கமும் பெரும் விலங்கு போட்டிருப்பார்கள். விலங்குகள் அழுத்த வீழ்ந்து கிடக்கும்.

அந்தத் தகரக் கொட்டகைக்குப் போவதற்குச் சின்னதாகக் கதவு உண்டு. தீப்பெட்டிக்குள் இருக்கும் உள்பெட்டியைப் போன்ற அமைப் பில். பாகனை அவனுக்குத் தெரியும். கதவைத் தள்ளிக்கொண்டு பாகன் போகும்போது எழுந்துகொள்ள முயற்சி பண்ணும். மற்றபடி வீழ்ந்துவிடும்.

முன்பெல்லாம் அதைத் தெருத் தெருவாகக் கூட்டி வருவான் பாகன். அப்போது ஸ்கூல் போய்க்கொண்டிருந்தான் அவன். யானை அப்போதெல்லாம் மிதப்பாக வரும். வீடுகளுக்கு முன் நின்றுகொண்டு தண்ணீரை உறிஞ்சி முகத்தில் அடிக்கும். சின்னப் பிள்ளைகளின் மூஞ்சியில் பட்டுத் தெறிக்கும்போது சிரிப்பார்கள். யானை காசு வாங்கி, பாகனிடம் கொடுக்கும்.

அம்மா, யானை வரும் நாளில் எல்லாம் சொல்லுவாள்,

"கணேசர் வந்துட்டாரு...

அப்போதெல்லாம் அவனுக்குத் தெரியாது கணேசர் யார் என்று. யானையின் பெயராகத்தான் இருக்கும் என நினைத்திருந்தான்.

அவனே ஸ்கூல் போகும்போது யானை இருக்கும் இடம் பக்கமாகப் போவான். உள்ளே அதன் அசைவு தெரியும். மெல்லிசான குரலில் கூப்பிடுவான்,

"கணேசர். கணேசர்.

சப்தம் வராது. மெல்லிய வெயில் கீற்று போகும் ஓட்டை வழியாகப் பார்ப்பான். யானையின் பின்பாகம் தெரியும்.

அவனுக்கு யானையிடம் பயமே கிடையாது. தங்கை சித்ராவுக்கு ஏக பயமாயிருக்கும். அம்மாவை ஒட்டிக்கொள்வாள். அவள் அழும் போதெல்லாம் வீட்டில் யாராவது சொல்லுவார்கள். அவனே கூடச் சொல்லியிருக்கிறான்.

"அழுகையை நிறுத்தறயாடி... யானையைக் கூப்பிடவா..

விசும்பியபடி நிறுத்துவாள். அவன் சாயங்கால வேளைகளில் சில நாள்கள் யானையின் பின்பே நடந்து போயிருக்கிறான். யானை எல்லாத் தெருவும் சுற்றும். கடைகளுக்கு முன் வந்ததும் வாழைப்பழம் சாப்பிடும். தேங்காய் மூடி கொடுத்தால் பாகனிடம் கொடுக்கும். பாகனின் அங்குசம் வெள்ளியால் ஆனது.

நிறைய வாழைப்பழம் கொடுக்கும் நேரத்தில் பாகன் அங்குசத்தைக் காதோரமாகக் குத்துவான். அகன்ற வாயிலிருந்து எடுத்து அவனிடம் கொடுக்கும். வாங்கி மேலே வைத்துக்கொள்வான். வாய் திறக்கும்போது பார்ப்பான். எவ்வளவு பெரியது. எப்போதாவது காசை வாங்க மறுக்கும். அப்போது அங்குசத்தால் குத்துவான். உடலைக் குலுக்கிய படி திரும்பும். நீர் கசியும் கண்ணோரமாக.

அவன் ஸ்கூலில் செம்பகம் டீச்சர் யானை பற்றி ஏதோ சொல்லிய போது அவனே பதில் சொன்னான்,

"இல்ல டீச்சர், யானை காட்டுல இருக்காது. கோவில்ல இருக்கும்."

"கிடையாது. காட்லதான் இருக்கும். பிடிச்சுட்டு வந்து கோயிலுக்குக் கொடுப்பாங்க.

"நம்ம கோயில் யானை கூடவா டீச்சர்?"

டீச்சர் தலையாட்டினாள். அவன் அன்று திரும்பும்போது, யானைக் கொட்டாரத்துக்கு வந்தபோது உள்ளே எட்டிப் பார்த்தான். பாகன் யானையிடம் நின்றிருந்தான். அவன் எட்டிப் பார்த்ததைப் பார்த்ததும் பாகன் உள்ளே கூப்பிட்டான்.

"சார்வா மகன்தானலே நீ..."

தலையாட்டினான்.

யானை அவனைத் திரும்பிப் பார்த்தது. திரும்பவும் கரும்பு தின்றது. அவன் பாகனிடம் கேட்டான்,

"இது காட்லயா இருந்தது.

"எது, காமாட்சியா.

காமாட்சியா. யானை பெண்ணோ... அம்மா கணேசர் என்பாளே.. தலையாட்டினான்.

"கேரளா காட்ல இருந்து பிடிச்சுக்கிட்டு வந்தாங்க. இது குட்டியக் கூட வேற கோயிலுக்குக் கொடுத்தாச்சு."

அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. இருட்டும் வரை அங்கேயே இருந்தான். எங்கும் இருள் படர்ந்த பின்பு வெளியே வந்தான். வீட்டில் அம்மா உள்ளே இருந்தாள் போலிருந்தது. நேரடியாக உள்ளே போய்ச் சொன்னான்,

“யானை பேரு காமாட்சி... கணேசர் இல்ல

“யாரு சொன்னா.”

“பாகன்.”

“அங்க போனயா...

தலையாட்டினான். அம்மா சொன்னாள்.

“போகக் கூடாது. சின்னப் பையன்க தனியாப் போனா மிதிச்சுடும். அப்புறம் கூழாகிருவே...

மறுநாள் அங்கு போனபோது யானை வெளியே கிளம்பத் தயாரானது. அவன் புத்தகங்கள் நிரம்பிய பைக்கட்டோடு கூடவே போனான். மேலேயிருந்து பாகன் சிரித்தான்.

“வர்றயா மேல..

அவனுக்கு சந்தோஷமாயிருந்தது. யானை குனிந்து மண்டியிட்டது. மேலேறினான். பாகனுக்கு முன்னால் உட்கார்ந்துகொண்டான். யானை அசைந்தபடியே போனது.

அதிசயமாக இருந்தது உலகம். மனிதர்கள் சிறிதாகத் தெரிந்தார்கள். காற்று முகத்தில் அடித்தது. அவனுக்கு ஏக சந்தோஷமாயிருந்தது. அவனுக்குத் தெரிந்த பையன்கள் அவனைப் பார்த்துச் சிரித்தார்கள். அவன் அவர்களைவிட, திடீரெனப் பெரியாளாக ஆனதுபோல் தோணியது.

பஜார் பக்கமாக வந்ததும் பாகன் இறங்கிக்கொண்டான். அவன் மட்டும் மேலேயிருந்தான். யானை காசை வாங்கி அவனிடம் தந்தது. துதிக்கையின் ஈரம், மூச்சு கையில் பட வாங்கினான். உட்கார்ந்து இருந்த துணியின் அடியில் வைத்தான்.

ஊரே அழகாகத் தெரிந்தது அவனுக்கு. சித்ராவும் அம்மாவும் மார்க்கெட் பக்கம் போய்க்கொண்டிருப்பது தெரிந்தது. கூப்பிட்டான். கேட்கவில்லை. யானை அவனை ஏற்றுக்கொண்டதுபோலத் தலை யாட்டியது.

இருட்டியபோது அப்பாவைப் பார்த்தான். யானைக்குக் கிட்டத்தில் போனார் கூப்பிட்டான். திரும்பிப் பார்த்துவிட்டு முறைத்தார்.

“கீழே இறங்குடா

“மாட்டேன். போ

பாகன் சிரித்தபடியே அப்பாவிடம் ஏதோ சொன்னான். அப்பா போய்விட்டார் திரும்பவும் கோயில் பாதைக்குப் போனபோது அவன் இறங்கி பாகனோடு நடந்து வந்தான். பாகன் கேட்டான்,

“எத்தனை படிக்கே?”

“ஆறு..

“என்ன செய்வே படிச்சு?”

“இப்படி யானை ஓட்டுவேன்” அவன் சிரித்தபடியே சொன்னான்.

“இதெல்லாம் வேணாம். கஷ்டஜீவனம். பெரிய ஆபீஸரா வா. நானே யானைய வச்சுக்கிட்டு மாலையோட நிக்கேன்.”

பாகன் அவனையும் தன் வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு போனான்.

அவன் வீடு, நிறைய தெருக்களைத் தாண்டியிருந்தது. சின்ன வீடு. அவன் உள்ளே போகும்போது கூடவே போனான். சேகரித்த சில்லறை முழுவதையும் கொட்டினான். ஒரு பெண் உள்ளேயிருந்தாள்.

அவள் காசை எண்ணினாள். அவன் மனைவியாக இருக்கக்கூடும். பதில் சொல்லாமல் உள்ளே போனாள். இரண்டு பெண் பிள்ளைகள் சுருண்டு தூங்கிக்கொண்டிருந்தார்கள். பாகன் சாப்பிடப் போகும்போது அவனிடம் சொன்னான்,

“சாப்பிடுறயா..

அவனுக்கும் சாப்பாடு போட்டார்கள். வெறும் சாதம். அவனால் சாப்பிட முடியவில்லை. அந்தப் பெண் கேட்டாள்,

“எதுக்கு இப்படி ஊரார் பையன கெடுக்கேங்க.

“அவனா வந்தான். ஒரு ஆசை.

அவன் பாதியிலே எழுந்துகொண்டான். போகும்போது பாகன் சொன்னான்,

“நாளைக்கு எல்லாம் வீட்டுக்குப் போயிரணும்... யானைகிட்ட வரக் கூடாது...” அவன் வீடு திரும்பியபோது அம்மா படிக்கட்டில் தலை வைத்து உள்வாகாகப் படுத்திருந்தாள். வெளியே அப்பா இருந்தார். அவனைப் பார்த்ததும் சொன்னார்,

“எங்கடா போயிட்டு வாரே.

“யானைகிட்ட...

“நாயே. படிக்காம, தெருவா சுத்துறே?” அவனுக்கு அறை விழுந்தது. அப்பா தொடர்ந்து அடித்தார், முகம், முதுகு என. அழுதான். அன்று உறங்கும்போதுகூட வலித்தது. ஆனால் கனவில் யானை வந்தது. நிறைய ஜனக்கூட்டம் நிறைந்த தெருவில் அவன் மட்டும் யானையில் அசைந்தாடியபடி போய்க்கொண்டிருந்தான். எல்லோரும் அவனைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

கடையிலிருந்து திரும்பி வரும்போது யானைகள் நின்றிருந்தன. கூட்டத்தின் முகப்பில் வரிசையாக, மாலைகள் கிட்டத்தில் இருந்தன. அவன் சைக்கிளை நிறுத்திவிட்டு யானைகள் இருக்கும் பக்கமாகப் போனான்.

பாகன்களைக் காணோம். ஒரு யானை மூச்சுத் திணறிக் கொண்டி

ருந்தது. வெயில் படர்ந்து போயிருந்தது. எண்ணெய்ப் பிசுக்கைப் போன்ற யானையின் வயிற்றுப் பாகம் வெயிலில் மினுமினுத்தது. குழந்தைகளும் வாடிப்போய் நின்றிருந்தன. அந்த நபர் இன்னமும் வரவில்லை. மதியமாகத்தான் வரக்கூடும் போல் தோணியது. பூக்கள் வாடிப் போயிருந்தன. அப்போதுதான் பார்த்தான். பெரிய சுவரொட்டி அந்த மனிதரைப் பற்றி, வாழ்த்துக் கூறி..

யானைகளைச் சுற்றி இப்போதும் சிறுவர் கூட்டமிருந்தது. யானை வாலில் இருந்து ஒரு மயிரைப் பிடுங்க சிறுவன் முயன்று கொண்டிருந் தான். யானை வாலாட்டியபடி இருந்தது. யாரோ திடீரென வந்தார்கள். பாகன்கள் யானை மேலேறி பத்தடி தூரம் யானையை ஒட்டிப் போனார்கள்.

ஒவ்வொரு யானைக்கும் சுண்ணாம்பிட்ட கோடு போட்ட இடம் தயாராயிருந்தது. பாகன்களிடம் விளக்கினார்கள்.

“வந்ததும் வரிசையா மாலை போடணும். ரிகர்சல் வேணுமா?”

“வேணாங்க, போட்ரும்... எதுவும் யானைக்குப் போடல இன்னும். அதான். நடந்து வந்தது.”

“வந்துட்டுப் போகட்டும். போடலாம்...

கிழட்டு யானை நின்ற இடத்தில் தள்ளாடியது. அதன் கண்களில் ஈரம் வழிந்து துதிக்கை வரை ஈரமேறிப் போயிருந்தது. புழுதி அப்பிப் போயிருந்தது, கண் இடுக்கில். அந்த மனிதர் வரக் காணோம். அவன் போய்விட்டான். வீட்டில் இருந்தபோது வெளியே குழந்தைகள் வானத்தைப் பார்த்தபடியே திரிந்தார்கள்.

உச்சி வெயிலுக்குப் பின் அவன் திரும்பவும் கிளம்பி வெளியே வந்தான். அப்போதும் யானைகள் அங்கேயே நின்றிருந்தன. வெயில் தாங்காமல் உடலை அசைத்தபடி. ஆள்கள் நிழல் தேடிப் போயிருந்தார் கள். அவன் நின்று பார்த்துக்கொண்டிருந்தபோது கிழட்டு யானை கால் தாங்கியது.

லேசாக முனங்குவது போலக் கேட்டது. சில நிமிடங்களில் ஈன சுரத்தில் பிளிறியது. பாகன் அருகில் வந்து தட்டினான். ஜனங்கள் வேடிக்கை பார்த்தார்கள்.

பாகன் விலகியபோது பெரும் சப்தத்தோடு கிழட்டு யானை விழுந்தது. மரம் முறிந்ததுபோல இருந்தது. பெருமூச்சு விட்டபடி யான அதன் நிலை. மற்ற யானைகள் தங்கள் இடம் விட்டு விலகிவிட்டன. அகன்ற பிரிவு கொண்ட யானையின் பாதம் தெரிந்தது. உடல் ஏறி இறங்கியது.

ஜனங்கள் கூடிப் போனார்கள். நிறைய போட்டோக்கள். யானைப் பாகன் கிட்டத்தில் நெருங்கி ஏதோ செய்துகொண்டிருந்தான். நிறைய அதிகாரிகள் ஒருவருக்கொருவர் வைதபடி திரிந்தார்கள். கூட்டம் சுற்றியபடி கத்தியது.

“தூக்கி வேற பக்கம் விடுங்க, அவரு வர்ற நேரம்...

யானை அசைவற்றுக் கிடந்தது. அவன் எதிரே நின்றிருந்தான். கூட்டம் பலவாறாகப் பேசிக்கொண்டிருந்தது. அவன் கூட்டத்தை விலக்கி வெளியே வந்தான். மற்ற யானைகள் நின்றிருந்தன, அதே இடத்தில்.

வெளி எங்கும் வெயில் நிறைந்து போயிருந்தது.

கல்யாணி இருந்த வீடு

பயனற்றது என்று முடிவாகிப் போனது. வெடிப்பு களும் வானமும் தெரியும் அந்த வீட்டின் பின்புறச் சுவர் இடிந்து விழுந்தே போனது.

பல தடவை பேசிய அந்த விஷயம் நொடியில் முடிவாகிப் போனது. இன்னமும் மழைக்காலம்கூட வரவில்லை. காற்று சுழல்வதைப் பார்க்க முடிகிறது அவளால்.

நேற்றிரவே அப்பா சொல்லிவிட்டார்.

“வீட்டை வித்துட்டேன். ரொம்பவும் கொறஞ்ச விலைக்குத்தான். பழசு பாரு பேசாம பாண்டியன் நகர் பக்கமா போயிருவோம். வெள்ளிக்கிழமை இடிக்க வருவாங்க. அதுக்கு முன்னே காலி பண்ண ணும்.”

அம்மா சத்தமில்லாமல் எப்போதும் போலவே வேலையில் இருந்தாள். சமையல் அறையில் அலை யும் குருவியைப் போல அவள் அந்த இருட்டோடு பழகிப் போய்விட்டாள். அப்பா இரவில் வெளியே படுத்துக்கொண்டார். அவருக்குக் கட்டிலை எடுத்துப் போட்டுவிட்டு வரும்போது பார்த்தாள். அப்பாவின் முகம் மாறிப் போய்விட்டது.

“கல்யாணி, தீப்பெட்டி எடுத்துட்டு வாம்மா” அவர் கையில் பீடி இருந்தது. குச்சியைக் கொளுத்தும் போது முகத்தில் மஞ்சள் படர்ந்து மறைந்தது. அவர் பீடி குடிப்பதைப் பார்த்துக்கொண்டேயிருந்தாள்.

அப்பாவின் கல்யாண போட்டோ இன்னும் தொங்குகிறது வீட்டில். மஞ்சள்நிறச் சட்டையும், கலைந்துபோன விபூதி குங்குமத்துடன், புதுசான மனைவியுடன் நிற்கும் போட்டோ. அம்மா, சாந்தி

அக்காவைப் போன்ற அதேவிதமாக சுருளான தலை முடியுடன் சாந்தமாக நிற்கிறாள்.

முன்பெல்லாம் அந்த போட்டோவை வைத்து விளையாடுவார்கள். வீடெங்கும் பெண்கள் அப்போது. அப்பாவுக்கு ஏன் ஆண் குழந்தைகளே இல்லை எனத் தெரியவில்லை. அவளைத் தவிரவும் மற்ற நான்குமே பெண்கள்தான். சந்திரா, ராணி இரண்டு பேரும் அப்பாவின் பிம்பங்கள். அம்மாவைப் போல் சாந்தி, பிரபா கல்யாணிக்கு தான் யாரைப் போல என்று தெரியவில்லை.

அம்மாவின் ஜாடையைப் பற்றி அவர்கள் பேசிக்கொள்வார்கள். எப்பவாவது அப்பாவை அந்த போட்டோவோடு ஒப்பிட்டுச் சிரிப்பார்கள். வீட்டின் சுவர்களோடு சேர்ந்துபோகும் அந்தச் சிரிப்பு.

வீடு ரொம்பவும் சின்னதாயிருந்தது. சமையல்கட்டைத் தவிர ஓர் அறையும் ஒரு ஹாலும் மட்டுமே உண்டு. வீட்டின் முன்னால் அப்பா சைக்கிள் நிறுத்த ஓர் இடம். அந்த அறைக்குள் எப்போதும் மாறாத மணம் இருக்கும். அது திறந்து வைத்திருந்த பவுடர் டின்னில் இருந்தா அல்லது சோப்பைப் பிரித்துவிட்டு வைத்திருக்கும் டப்பாவில் இருந்தா எனத் தெரியவில்லை.

எப்போதுமே அந்த வீடு ஒழுகிக்கொண்டுதான் இருக்கும். மழை பெய்தால் ஒரு வழியாக அடுப்படியில் தண்ணீர் இறங்கும். யாராவது பாத்திரத்தை எடுத்து வைப்பார்கள். பாத்திரத்தில் தண்ணீர் விழும் சத்தம் கேட்டுக்கொண்டேயிருக்கும். தண்ணீர் நிறைந்து பாத்திரத்தில் வழியும்போது பின் கதவைத் திறந்து, வெளியே ஊற்றுவார்கள்.

கதவில் சாய்ந்திருக்கும் அவளுக்குப் பின்னால் எப்போதாவது அம்மாவின் கை இருக்கும். அம்மாவின் கையை எடுத்து வைத்துக் கொள்வாள். ஈரத்தில் உழன்றதால் குளிர்ந்து போயிருக்கும் விரல்களைப் பிடித்துச் சொடுக்குவாள். அம்மாவிடம் இருந்து சிரிப்பு வரும்.

கார்த்திகையின்போது, வீட்டில் நிறைய விளக்குகள்.. பள்ளியில் இருந்து வரும்போது சங்கில் செய்த விளக்கு வாங்கி வந்திருந்தாள் சந்திரா.

அந்த விளக்கை வாசலுக்கு எதிரில் சந்திராவே பொருத்தி வைத்தாள். அன்றைக்குத்தான் மாமா வந்திருந்தார் அவரைப் பார்த்ததும் பிரபா அறைக்குள் போய்விட்டாள்.

மாமா ரொம்பவும் ஒல்லியாக இருந்தார். அம்மாவின் அதே சாயல் முகத்தில். சிரிக்கும்போது அது முழுவதும் தெரியும். வேஷ்டியும் முழுக்கைச் சட்டையும் போட்டிருப்பார்.

மாமாவோடு வீட்டின் பின்புறம் அவர்கள் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். சந்திரா, பிரபா இரண்டு பேரும் அடுப்படியில் உட்கார்ந்து பார்த்துக்கொண்டிருந்தார்கள். அன்றைக்கு வானம் ரொம்பவும் அழகானதாக இருந்தது.

சாப்பிடப் போகும்போது மாமா அம்மாவிடம் சொன்னார்,

"அம்மா உன்னை வீட்டுக்கு வரச் சொன்னா."

"எதுக்கு?"

மாமா பேசாமல் இருந்தார். கல்யாணியைத் தவிர அந்த இடத்தில் யாருமில்லை. மாமா தலையை உசும்பிக்கொண்டு சொன்னார்,

"கல்யாணம் பத்திப் பேச.

"அதுக்கு அவர் இல்ல வரணும். நான் எதுக்கு?"

"அது இல்லேக்கா. நான் வேற பொண்ணு பார்த்திருக்கேன். அம்மாவும் சரின்னு சொல்லிட்டா"

அம்மா பேசாமல் இருந்தாள். பிறகு கேட்டாள்,

"அப்போ பிரபா?"

இரண்டு பேரும் பேசாமல் இருந்தார்கள். பிரபா அறைக்குள் சுவரை ஒட்டினாற்போல் சாய்ந்து அழுதுகொண்டிருந்தாள். கல்யாணியும் அவளை ஒட்டினாற்போல் உட்கார்ந்துகொண்டாள். கல்யாணியின் மேல் சாய்ந்து அழுதாள்.

அவள் அழுவதைக் கல்யாணியால் தாங்க முடியவில்லை. அவள் தலையைத் தடவினாள். பிரபா அழுத இடம் சுவரில் தெரிந்தது. பிரபா உடல் குலுங்க அழுதுகொண்டிருந்தாள். மாமாவின் முகம் கதவைத் தள்ளிக்கொண்டு தெரிந்தது. மாமா ஏதாவது சொல்ல வேண்டும் என நினைத்தார். ஆனால், அவரால் முடியவில்லை. மவுனமாக நின்றுகொண்டிருந்தார் சந்திரா பக்கெட்டை ஒட்டி உட்கார்ந்து இருந்தாள். மாமா அந்த அறையை விட்டுப் போகும் போது பிரபா சத்தமாக அழுதாள்.

அவள் பிரியத்தின் விடாத மூச்சு இன்னமும் ஏங்கி விம்மியது. மாமா சாப்பிடாமலே போய்விட்டார். எல்லோரும் அப்படியே இருந்தார்கள். எல்லா விளக்குகளையும் எடுத்து வைத்துவிட்டுத்தான் கல்யாணி படுக்க வந்தாள். அன்றைக்கு வீடு புது ரூபத்தில் இருந்தது. எல்லா அறைகளிலும் மவுனம் நிறைந்து போயிருந்தது. அந்த அறையே ஆள்களற்றுப் போய் இருந்தது.

அந்த இரவில் வீட்டில் எல்லோரும் தூங்கியதுபோல இருந்தார்கள். நடு இரவுக்குப் பிறகுதான் அப்பா வந்தார். அம்மா கோபப்படாமல் இருந்தாள். அதற்குப் பின் பிரபாவுக்கு ரொம்ப நாட்கள் ஆன பின்பே கல்யாணமானது.

அம்மா சாமான்களை எடுத்து வைக்க ஆரம்பித்திருந்தாள். பரணில் துணி போட்டு மூடியிருந்த சாமான்களைத் தரையில் எடுத்துப் பரப்பியிருந்தார்கள். பித்தளைக் குடங்கள், பானை, சின்னப் பாத்திரங்கள் என நிறைய இருந்தன. கல்யாணி பின்கட்டில் இருந்த வற்றை எடுத்து வைத்துக்கொண்டிருந்தாள். பின்கட்டில் சமையல் கூடத்துக்குள் இதுவரை அணையாமல் எரிந்துகொண்டிருந்த அந்த விளக்கை அணைத்தாள்.

எப்போதும் அடுப்புக்குள் ஒட்டிய ஆணியில் அந்த விளக்கு

எரிந்துகொண்டிருக்கும். அடுப்பை ஒட்டிய அலமாரியில் நிறைய டப்பாக்கள் இருந்தன. எல்லாம் பெரிய அக்காவின் குழந்தைக்குப் பால் பவுடர் வாங்கிய டப்பாக்கள். பல டப்பாக்களில் ஒன்றுமே யில்லை. பெரிய குழந்தைப் படம் போட்ட டப்பா ஒன்று மட்டும் அவளுக்குத் தெரிந்ததிலிருந்து இன்னமும் இருக்கிறது. அநேகமாக அந்த டப்பாவைத்தான் எல்லோரும் தேடுவார்கள். அதில் ஏதாவது தின்பண்டம் நிச்சயம் இருக்கும். எப்பவாவது யாருக்காவது வாங்கியதில் உதிர்ந்துபோன திராட்சைத் துண்டுகள் டப்பாவின் அடியில் ஒட்டிப் போயிருக்கும். அவளுக்கு மட்டும் ஒரு தரம் நிறைய திராட்சைகள் வாங்கித் தந்தார்கள்.

அவளுக்குப் புருவத்தை ஒட்டி அடிபட்டிருந்தது அப்போது. சேகர் என்னும் அந்தப் பையன் தள்ளியதில் ஏற்பட்டது. பள்ளிக் கூடத்தின் விரிந்த பிரேயர் ஹால், போர்டு எல்லாம் அன்றைக்குப் போலவே இப்போதும் நினைவிருந்தது.

“கல்யாணி. பேரை அம்மா வெச்சா..

“நன்னாத்தான் இருக்கு.”

அந்தப் பையன் சில தடவை அருகில் வரும்போது துளசி வாடையடிக்கும். அவனைக் கிள்ளினால்கூட எதுவும் சொல்ல மாட்டான். கோயிலை ஒட்டிய தெப்பத்தில் விளையாடுவார்கள். அன்றைக்கும் விளையாடும்போது அவன் தள்ளியதால்தான் காயம் ஏற்பட்டது. பாசி படர்ந்துபோயிருந்தது. சில தண்ணீர்க் கொடிகள் சுற்றிக்கொண்டன காலை. தள்ளிவிட்டு அவன் ஓடிப் போய்விட்டான்.

படுத்திருந்த அவளுக்குத் திராட்சை வாங்கித் தந்தார்கள். இரண்டு நாள்களுக்குப் பிறகு அவள் வீட்டுக்கு அவன் வந்தான்.

“கல்யாணி. கல்யாணி” மெதுவாகக் கூப்பிட்டான்.

அவள் சிரித்தாள். அவன் அருகில் வந்து அவள் கன்னத்தை, நெற்றியைத் தொட்டான்.

“காய்ச்சலா?” அம்மா உள்ளே வந்து எட்டிப் பார்த்துப் போனாள். அவன் உட்கார்ந்தவாறே பேசிக்கொண்டிருந்தான். அவள் டப்பாவில் இருந்து திராட்சையை எடுத்துக் கொடுத்தாள். வாயில் ஒதுக்கிக் கொண்டான். கன்னத்தில் மேடு. அவன் போன பின்பும் அந்த இடத்தைப் பார்க்கும்போது அவன் ஞாபகம் வந்தது. அவனைத் திரும்பப் பார்க்கவேயில்லை அவள்.

சாமான்களை மூட்டை கட்டி வைத்துவிட்டு ஓரமாக விரித்து அந்த இரவில் எல்லோரும் படுத்தார்கள். கல்யாணி சுவரை ஒட்டிப் படுத்துக்கொண்டாள். தரை சில்லென்று இருந்தது. ஜன்னலுக்கு வெளியே வானம் தெரிந்தது. அவள் அழ வேண்டும் என விரும்பினாள். முடியாமல் போய் யோசித்தவாறே படுத்துக் கிடந்தாள். ரொம்ப நேரத்துக்குப் பிறகு யாரோ மெதுவாக அழும் சத்தம் கேட்டது. அவள் திரும்பிப் பார்க்காமல் படுத்தே கிடந்தாள் சத்தம் கேட்டுக் கொண்டே இருந்தது.

தெரிந்தவர்கள்

காலையில்தான் வந்திருந்தான். ஸ்டேஷனை விட்டு வெளியே வரும்போது குளிர் அதிகமாக இருந்தது காலையில். இந்தக் குளிர் காற்றுகூட இங்கே அதன் இயல்பில் இருப்பதாகப் பட்டது. அவன் இருந்த இடத்தில் கடுங்குளிர், கடுமையான வெப்பம்.

பெட்டியை இழுத்தபடியே நடந்து வந்தான். வெளியே ரிக்ஷாக் காரர்களைக் காணோம். காலி ரிக்ஷாக்கள், படுதாக்கள் இறக்கி விட்டபடி நின்றிருந்தன. ஏதோ ஒன்றில் மட்டும் சுருண்டு மடங்கிய கால் வெளியே தெரிந்தது. எதிர் டீக்கடையில் அப்போதுதான் பாட்டு போட்டுக்கொண்டிருந்தார்கள். அந்தக் கடைக்காரனை இங்கு இருந்தபோதே தெரியும். அருகில் போனதும் அடையாளம் கண்டு கொண்டான்.

"வாங்கண்ணே.. இப்பத்தான் வர்றீங்களா ?"

தலையாட்டினான்.

"ரெண்டு மூணு வருசமிருக்குமா... வந்து... வேலை எங்க, அரேபியாலதானே ?"

"அங்கதான்" என்றான்.

டீ வந்ததும் குடித்தான். அவ்வளவு சூடாக இல்லை. டீக்கடைப் பந்தலுக்குக் கீழே ஒடுங்கியிருந்த ரிக்ஷாக்காரனைப் பார்த்தான். முகம் தெரியாமல் துண்டால் முக்காடு போட்டுக் கட்டிக்கொண்டு பீடி பிடித்துக்கொண்டிருந்தான். கூப்பிட்டவுடனே எழுந்து வந்தான்.

தெருவில் அப்போதுதான் இயக்கம் ஆரம்பமாகியிருந்தது. கோலம் போடும் பெண்களின் குனிந்த உடலும் கைகளும் பரபரப்பாக, சிலர் அதே நிலையில் தலையை உயர்த்திப் பார்த்தார்கள். தூக்கம் கலையாத முகங்கள். தெரு அப்படியே இருந்தது.

அவன் வீட்டு முன்பு போனபோது அப்போதுதான் கோலம் போட்டுவிட்டு அவள் போயிருப்பது தெரிந்தது. சின்னக் கோலம். வாசல் படியில் காலடித் தடங்கள் ஈரமண்ணோடு. கதவைத் தட்டும்போது ரிக்ஷாக்காரன் திரும்பிப் போய்க்கொண்டிருந்தான்.

கதவைத் திறந்த அவள் சந்தோஷத்தில் சிரித்தாள்.

"வாங்க.. பெட்டிய குடுங்க."

எல்லோரும் எழுந்துகொண்டார்கள். பேச்சரவம் எங்கும் பரவியது. அப்பா அவன் பக்கத்தில் வந்து உட்கார்ந்துகொண்டார். குழந்தைகள் வீடெங்கும் இரைச்சலோடு ஓடின. அம்மாவைக் காணோம். பெரியக்கா வீட்டுக்குப் போயிருக்கக்கூடும். அவளும் இதே ஊரில் வேறு தெருவில் இருந்தாள். அவன் தங்கைகள் உறக்கம் போகாத முகத்தோடு சிரித்தார்கள்.

அவனுக்கு அசதியாக வந்தது. குழந்தைகள் பெட்டியைத் திறக்க முயற்சி செய்துகொண்டிருந்தன. யாரோ அதட்டினார்கள். அவன் உள் ரூமில் போய் கைலியை மாற்றிக்கொண்டு படுக்கையைப் போட்டான். அவள் உள்ளே வந்து சொன்னாள்,

"சாப்பிட்டு தூங்கலாம்ல...

"இல்ல... அசதியா இருக்கு. தூங்கறேன்."

அவள் போகும்போது கணுக்கால் சதை தெரிந்தது. அவனுக்குத் தூக்கம் வந்தது.

பெரிய பெரிய சப்தங்களும் சிரிப்புமாகக் கேட்டது. பலகார வாடையடித்தது. அவன் அறையில் யாரோ எட்டிப் பார்த்துப் போனார்கள். வெயில் ஜன்னல் வழியாகத் தலைப்பக்கம் வரை வந்திருந்தது. எழுந்து கொண்டான். படுக்கையைச் சுருட்டிவிட்டு வெளியே வந்தான்.

வெளியே அம்மா, அக்கா, பெரிய மாமா, மாமா, இன்னும் நிறைய தெரிந்தவர்கள். அவனைப் பார்த்ததும் சிரித்தார்கள். அவனும் பதிலுக்குச் சிரித்தான். அவர்களைக் கடந்து பின்கட்டுக்குப் போனாள். பின்னால் திறந்த வெளி இருந்தது. துவைப்பதற்காகப் பெரிய கல் திண்டு இருந்தது. புதுசாகச் சில செடிகள்

திண்டில் உட்கார்ந்தபடியே பல் தேய்த்தான். அக்கா பின்வாசல் படியில் நிற்பது தெரிந்தது. அவள் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டுக் கிட்டத்தில் வந்தாள்.

"என்னடா இப்படியாயிட்டே. ஆளே கருத்துப் போயி. சாப் பிடுறயா இல்லையா?"

“சாப்பிடாம என்ன செய்றேன். நம்ம சாப்பாடு கிடைக்காதுல்ல.”

“மாமாகூட ரொம்பவும் கேட்டாரு. காலைல யாரோ தேடி வந்துட்டாங்க. சாயங்காலம் வருவாரு இங்க. சுமதிக்குக் காதுகுத்து நடத்தறப்ப உனக்கு லெட்டர் போட்டேன் வரச்சொல்லி. பதிலே இல்லை.”

“லீவு கிடைக்கலை.”

“பாத்தியா அதுகளை, காலைலேயே வந்திருச்சுக.”

அவன் திரும்பிப் பார்க்கும்போது ஜன்னலில் யாரோ பார்ப்பது தெரிந்தது. அக்கா உள்ளே போகும்போது சொன்னாள்,

“நாளைக்கி வீட்டுக்கு வா... நெறையா பேச வேண்டியது இருக்கு”

அவன் உள்ளே திரும்பி வந்து பேசிக் கொண்டிருந்தான். பெட்டியைத் திறந்து சாமான்களை எடுத்து ஒவ்வொருவருக்கும் கொடுத்தான். சாப்பிட அடுப்படிக்குப் போகும்போது அவளிடம் கேட்டான்,

“எப்படியிருக்கே?”

“எனக்கென்ன, நீங்கதான் இப்படியிருக்கீங்க. உங்க அக்கா ஏதோ பேசிக்கிட்டிருந்த மாதிரி தெரிஞ்சது.”

“வீட்டுக்குக் கூப்பிட்டா.”

“நேத்து வரைக்கும் இந்தப் பக்கமே வர மாட்டாங்க. உங்க அம்மாகூட இப்ப அங்கதான்.

“கதிர் வந்தானா. .?”

“யாரு, உங்க பிரெண்டா. நாலு மாசமாச்சு... எட்டிப்பாக்கல. ஏன் ஏதும் அனுப்பிச்சீங்களா. .?”

“இல்லை.”

அவன் யோசித்தபடியே சாப்பிட்டான்.

“ஆறு மாசத்துக்கு முன்னே நீங்க அனுப்பினதா ஆறாயிரம் கொடுத்தாரு. பிறகு ஆளே பாக்க முடியலே.”

அவன் சாப்பாட்டில் இருந்து எழுந்துகொண்டான். கதிருக்கு அனுப்பிய பத்தாயிரம் என்னவாயிற்று? ஒருவேளை அவனே வைத்துக் கொண்டானோ? அப்படியெல்லாம் இருக்காது என்ற நினைப்பே வந்தது. அவன் போனதில் இருந்து பல தடவை ரூபாய் அனுப்பியிருக்கிறான். கதிர் அப்படிச் செய்தது கிடையாது. கதிரைப் பார்க்க வேண்டும் என்று தோணியது.

கதிர் வீடு சர்ச்சுக்குப் பின்புறத்தில் உள்ள தெருவில் இருந்தது. வீடு சின்னதாக இருந்தாலும் மாடி உண்டு. மாடியில் நீண்ட அறையிருந்தது. அவன் அரேபியா போவதற்கு முன்பெல்லாம் அங்கேதான் கிடப்பான். கதிரும் இன்னும் நண்பர்களும் மாடியில் சீட்டு விளையாடுவார்கள். அரட்டையடிப்பார்கள். அந்த வீட்டில் சர்வ சுதந்தரமிருந்தது எல்லோருக்கும்.

அவன் போனபோது உள்ளே கதிரின் குரல் கேட்கவில்லை. எங்காவது வெளியில் போயிருப்பானோ? வெயிலாக இருப்பதால் வீட்டில்தான் இருக்க வேண்டும். கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே போனான். அடுப்படி வாசலில் உட்கார்ந்து கதிரின் அம்மா ஏதோ செய்துகொண்டிருந்தாள். ஹாலில் பூக்களைக் கொட்டிக் கட்டிக் கொண்டிருந்தாள் கதிரின் தங்கை.

அவனைப் பார்த்ததும் எழுந்துகொண்டாள்.

"வாங்கண்ணே... எப்ப வந்தீங்க... எங்களையெல்லாம் நெனைப் பிருக்கா...?"

அவளே உள்ளே குரல் கொடுத்தாள்.

"அம்மா, மணியண்ணே வந்திருக்காங்க."

அம்மா சிரித்தபடியே வெளியே வந்தார்கள். விசாரித்தார்கள். கதிர் மேலேதான் இருப்பான் என நினைத்துக் குரல் கொடுத்தான். பதில் இல்லை. அவனே மேலே ஏறிப் போனான். கதிர் தூங்கிக் கொண்டிருந்தான். ஆள் படுத்துப் போனது போலப் பட்டது – கிட்டத்தில் போய் எழுப்பினான்.

கதிர் விழித்தான்.

"லே. எப்ப வந்தே. ஆச்சரியமா இருக்கு. நிஜம்தானா இது கையைக் கொடு."

கையைப் பிடித்து எழுந்தான். கதிர் குரல், பேச்சு அப்படியே இருந்தது. எழுந்து நின்று சோம்பல் முறித்தான். பின்பு மணியின் தோள் மீது கையைப் போட்டுக்கொண்டான்.

"எப்படியிருக்கே? எப்ப வந்தே?"

"காலைலதான்."

"கீழே அம்மாவப் பாத்தயா. அவதான் கேட்டுக்கிட்டு இருந்தா. பெரிய தங்கச்சிக்குக் கல்யாணமாயிருச்சு. இப்பத்தான் ஒரு மாசம் இருக்கும். இன்னைக்கு வருவா. அவ கல்யாணத்தன்னைக்கு வரைக்கும் கேட்டுக்கிட்டே இருந்தா அவளே லெட்டர் போட்டாளே கெடைச்சதா?"

நிஜமா தெரியவில்லை. அவனுக்கு அப்படிக் கடிதம் வரவில்லை. பேசாமலிருந்தான். கதிர் கீழே இறங்கி வந்து அம்மாவிடம் சொன்னான்,

"சமையல் நடக்கா. இரு. மீன் வாங்கிட்டு வாறேன். சாப்பாட்டை ஒரு கை பாத்துருவோம்."

அவன் சைக்கிளில் வெளியே கிளம்பிப் போனான். மணியோடு கதிரின் அம்மா பேசிக்கொண்டிருந்தாள். மணி, மல்லிகாவை விசாரித் தான். சாப்பாடு முடிந்த பின்பும் கதிர் உள்ளே ஓடியாடிய படியே இருந்தான். அவனுக்குள் ஏதோ அதிகமாக வேலை செய்தது போல இருந்தது.

சாயங்காலம் அவன் கிளம்பும்போது கதிர் சொன்னான்,

"வீட்ல இரு. மல்லிகா வந்தா வரணும்பா. அழைச்சிட்டு வாறேன்."

அவன் வீட்டுக்குப் போகும்போது இருட்டியிருந்தது. அம்மா ஒரு பக்கமாக உட்கார்ந்திருந்தாள். அம்மாவின் கிட்டத்தில் போய் உட்கார்ந்துகொண்டான்.

"இப்ப எதுக்கு அவகூடப் போயி இருக்கே. இங்க என்ன சொல்றாங்க" என்றான்.

"ஒருத்தர் பேசுற மாதிரி எதுக்கு இருக்கணும் அதான்" என்றாள். அவனுக்கும் எதுவும் புரியவில்லை. அம்மா அழுதாள். திடீரென. அவன் அவளையே பார்த்துக்கொண்டிருந்தான். அவள் எழுந்து உள்ளே போனாள். அவனும் எழுந்துகொண்டான். உள்ளே சமையல் வேலை நடப்பது தெரிந்தது. உள்ளே போய்க் கேட்டான்,

"அக்காவ எங்கே...?"

"என்னமோ கோவமாம். போயிட்டாங்க."

"என்னவாம்?"

"யாருக்குத் தெரியும். அவளுக்கும் கோவம் போலும்" அம்மா ராத்திரி அக்கா வீட்டுக்குக் கிளம்பும்போது உள்ளே கூப்பிட்டு நானூறு ரூபாய் கொடுத்தான். வாங்கிக்கொண்டாள்.

மறுநாள் காலையிலேயே கதிர், மல்லிகாவை அழைத்துக்கொண்டு வந்தான். வீட்டில் அவன் பேச்சு சப்தம் தனியாகக் கேட்டது.

"என்ன ஆளே பாக்க முடியல. அவுங்க வந்தாதான் வரணுமா?"

"கல்யாண வேலையா அலைஞ்சதுல நேரமில்ல. இனிமே இங்க தான். என் சாப்பாடு?"

மல்லிகா அவனைத் தேடி அறைக்கே வந்தாள். அவன் எழுந்து உட்கார்ந்துகொண்டான்.

"வாம்மா..."என்றான்.

"எப்படிண்ணே இருக்கீங்க" என்றாள்.

"அதான் இருக்கேன்ல..

"ஏன் கல்யாணத்துக்கு வரலே. கண்டிப்பா அவுங்களையும் கூட்டிக்கிட்டு நீங்க வீட்டுக்கு வரணும். ." பெட்டியில் இருந்து சில செண்ட் பாட்டில்கள், பவுடர், துணியெல்லாம் கொடுத்தான். அவள் வாங்கிக்கொண்டாள். கதிர் தானாகப் பெட்டியைத் திறந்து பார்த்தான். கொஞ்சம் செண்ட் போட்டுக்கொண்டான். உள்ளே கிடந்த சாக்லெட்டைத் தின்றான்.

பிறகு கேட்கலாம் எனத் தோணியது மணிக்கு. சாயங்காலமாக இருவரும் கிளம்பி வெளியே வந்தார்கள். செம்பகவல்லிம்மன் மேட்டுக்கு வந்து உட்கார்ந்துகொண்டார்கள். கதிர் எதையோ பேசிக்கொண்டிருந்தான் பேச்சின் நடுவில் மணி கேட்டான்,

"நான் அனுப்பின ரூவா என்னாச்சு?"

பதில் சொல்லவில்லை.

"வரலையா?"

"வந்துச்சு."

"என்ன செஞ்சே?"

"திடீர்னு கல்யாணம் பண்ண வேண்டியிருந்ததால செலவு ஆகிப்போச்சு. அப்பாவுக்கு வர வேண்டிய இடத்தில பணம் வரலே..."

"அதை எனக்கு எழுதியிருக்கலாம்ல. இல்ல வீட்ல பணத்தைக் கொடுத்திட்டு கேட்டு வாங்கி இருக்கலாம்ல.

அவன் ரோட்டைப் பார்த்தபடியே இருந்தான்.

"அது கூட இருந்த லெட்டரை என்ன செஞ்சே?"

"இருக்கு.

மணிக்குக் கோபம் வந்தது.

"கேட்டா பதில் சொல்ல முடியலையா?" என்றான்.

கதிர், மணி முகத்தைப் பார்க்காமலே சொன்னான்.

"என்ன, தூக்கிட்டா ஓடிட்டாங்க? ரூபா வந்ததும் தந்திரலாம்னு நெனைச்சேன்."

"நான் அப்படிச் சொன்னனா...நீ ஓடிட்டேன்னு."

"பிறகு எப்படிச் சொன்னே. இவ்வளவு காலமா இருந்ததுக்கு நீ என்ன பேசினாலும் கேட்டுக்கிட வேண்டியதுதான்."

மணிக்குக் கோபம் அதிகமானது.

"நான் என்னடா சொன்னேன். பணத்தை எடுத்துச் செலவழிச்சுட்டு சொல்லாமலும் இருந்தா கேக்க மாட்டாங்களா.

கதிர் ஏதோ வைதான்.

"உன் ரூவாதான, வரும்... பொல்லாத ரூவா. துட்டு சேத்தவுடனே இப்படியெல்லாம் வந்துரும்டா. நான் மடையன். உன் ரூவாயச் செலவழிச்சேன் பாரு. ." இன்னும் ஏதோ வைதான்.

மணிக்குக் கோபம் வந்தது.

"நீ திருப்பியே தர வேண்டாம். வச்சிட்டுப் போ.

"உன் பிச்சைக்காசு ஒண்ணும் வேணா. நான் வரேன்" அவன் இறங்கிக் கீழே போனான். புழுதி கலைந்து பறந்தது. மணி எழுந்து நின்று பார்த்தான். கதிர் வேகமாகப் போய்க்கொண்டிருந்தான்.

தொலைந்து போதல்

இப்படிச் செருப்பு போட்டுச் சத்தம் வர ரோட்டில் நடப்பவர்கள் சிலர்தான் இருக்கக்கூடும். அப்பா வாகத்தான் இருக்கும் என அவளுக்குத் தோன்றியது. தெரு இருளில் நிறைந்து போயிருந்தது. பின்னிரவு நீண்டு போய்க்கொண்டிருந்தது.

அப்பா இதுவரை வராமல் இருந்ததில்லை. எப் போதாவது சில நாள்களில் ஆபீஸிலேயே இருந்து விடும்பட்சத்தில் யாராவது வந்து சொல்லிவிட்டுப் போவார்கள். அல்லது அவரே வந்து சொல்லிவிட்டுப் போவார்.

இன்றைக்கு அப்பா எங்கே போயிருப்பார் எனத் தெரியவில்லை. செகண்ட் ஷோ விட்டு மெயின் ரோட்டில் ஆட்கள் போகும் சத்தம் கேட்டது. விட்டு விட்டுக் கேட்கும் சைக்கிள் மணிச் சத்தமும் கேட்டது. சினிமாவுக்குப் போயிருப்பாரோ? அப்பா சினிமாவுக்குப் போவதே கிடையாதுதான்.

அவர்கள் தெருவுக்குள் மணிச் சத்தம் கேட்க சைக்கிள் ஒன்று வந்தது. யாரோ சிகரெட் பிடித்த படியே சைக்கிளில் வந்துகொண்டிருப்பது தெரிந்தது. அவர்கள் வீட்டுக்கு வரும் முன்பே சைக்கிளின் பின்னாடி இருந்தவன் குதித்துக்கொண்டான். அவன் பேசும் சத்தம் கேட்டது.

"கதவு திறந்திருக்கு, அக்கா இருக்கா, மூர்த்தி காலையில அங்கே வந்துரு. பாக்கு வெச்சிருக்கியா, கொடு."

சைக்கிள் திரும்பிப் போன பின்பு அவன் வாச லுக்கு வந்தான். தலைமுடி தாறுமாறாகக் கலைந்து

கிடந்தது. முழுக்கைச் சட்டையை மடக்கிவிட்டிருந்தான். உயரமாக இருந்தான்.

"மணி, எங்கேடா போயிருந்தே?"

"சினிமாவுக்கு.

"அப்பா ஆபீஸ் வழியா வந்தியா. அவரை இன்னும் காணோம். போய்ப் பார்த்துட்டு வாயேன்."

"வருவாரு. எங்கே ஓடியா போகப் போறாரு. அந்த வக்கீல் ஒரு முசுடு. இந்நேரம் போய்க் கதவைத் தட்டினா வைவாரு."

சட்டையைக் கழற்றிக் கொடியில் போட்டுவிட்டு உள் விளக்கைப் போட்டான். ஆளுக்கொரு பக்கமாகப் படுத்துக் கிடந்தார்கள். அம்மா சமையற்கட்டு வாசல் நிலையில் தலையை வைத்துப் படுத்துக் கிடந்தாள். ரமணி, பிரபா இரண்டு பேரும் ஒருவர் மேல் ஒருவர் காலைப் போட்டபடி உறங்கிப் போயிருந்தார்கள்.

"சாப்பிட்டியா, சாப்பாடு வைக்கவா?" என்றாள்.

"மூர்த்தி வீட்டுல சாப்பிட்டேன்."

அவன் படுக்கையைத் தூக்கிக்கொண்டு மொட்டை மாடிக்குப் போனான். அவளுக்குத் தூக்கம் வரவில்லை. முன் கதவைச் சாத்தி விட்டு உள்ளே வந்து படுத்தாள். அப்பாவுடைய கல்யாணப் போட்டோ எதிர்ச்சுவரில் இருந்தது. அப்பா ரொம்பவும் சிதைந்து போய்விட்டார் எனத் தோன்றியது.

இந்த வீட்டுக்கு வருவதற்கு முன்பு வக்கீல் வீட்டையொட்டிய ஒரு வீட்டிலே இருந்தார்கள். அப்பா வக்கீல் ரூமையொட்டிய சின்ன அறையில் உட்கார்ந்து இருப்பார். மைக்கூடு, பேனா, பெரிய வால்யூம் புத்தகங்கள் சூழ்ந்துகொண்டிருக்கும். எப்பவாவது உள்ளே போனால் மேஜையையொட்டிய நாற்காலியை இழுத்துப் போட்டு உட்காரச் சொல்வார். எப்பவாவது அப்பா சிரிப்பார். அந்தச் சிரிப்பு ரொம்பவும் அபூர்வமாக இருக்கும். இப்போதெல்லாம் அவர் சிரிப்பதேயில்லை.

சில நாள்களுக்கு முன்புகூடப் பார்த்தாள். தூக்கம் பிடிக்காமல் புரண்டு படுத்தபோது, சுவரில் சாய்ந்து உட்கார்ந்தபடியே இருளில் உறைந்துபோயிருந்தார். அவராகவே பேசிக்கொண்டதுபோல் தோன்றியது. விரல்களில் எதையோ கூட்டிக் கணக்குப் போட்டுக் கொண்டிருந்தார்.

அவள் எழுந்து உட்கார்ந்ததும் அவரே கேட்டார்.

"என்னம்மா... தூக்கம் வரலையா.

"நீங்க தூங்கலையாப்பா.

அப்பா சிரித்தார் அவள் கிட்டத்தில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

"உன் வேலைய நிரந்தரமாக்கிடுவாங்களா?"

“தெரியலேப்பா

“ரமணி எப்படிப் படிக்கிறா?”

அப்பா எப்போதும் அவளோடு பேசியதில்லை. அவள் அப்பாவைப் பார்த்துக்கொண்டிருந்தாள். அவரே பேசினார்.

“உங்க அம்மாவுக்கு எம்மேல கோவம்மா. என்னால இயலலேன்னு. அவ நிறைய எதிர்பார்த்தா. உங்க யாருக்குமே நான் எதுவும் செய்ய முடியலேம்மா. பார்க்கலாம்.”

அப்பாவின் குரல் உடைந்துபோனது.

தெரு ஏக இரைச்சலாக இருந்தது. யாரோ வாசலில் நின்று கூப்பிட்டதுபோல் இருந்தது. காலையின் வேகம் தெருவெங்கும் விரிந்து கிடந்தது. அப்பா ஆபீஸிலிருந்து யாரோ வந்திருந்தார். அவளே வெளியே வந்தாள்.

“உங்க அப்பா சம்பளம் வாங்காமப் போயிட்டாரு. வக்கீல் ஐயா கொடுத்து அனுப்பினாரு. எங்கே உங்க அப்பா? நேத்து சாயங்காலமே புறப்பட்டுப் போய்ட்டாரே. உடம்புக்குச் சரியில்லையா?”

அப்பாவுக்கு என்னவாகியிருக்கும்? அவளுக்குள் நூல் பிரிந்தது போல் இருந்தது. அப்பா எங்கேனும் உடம்பு சரியில்லாமல் விழுந்திருப்பாரோ அல்லது வேறு ஏதாவது?

அம்மாவிடம் சொன்னதும் அம்மா அழ ஆரம்பித்தாள். அவள் அழுவதைப் பார்த்ததும் ரமணியும் பிரபாவும் அழுதார்கள். எதிர் பாராத இறுக்கம் அறையெங்கும் இறுகிப்போனது. மணியைக் கூப்பிட்டாள்.

“மணி, ராமசாமி சார் வீட்டுல கேட்டுட்டு வாயேன். நான் சித்தப்பா வீட்டுக்குப் போய்க் கேட்டுட்டு வரேன்.”

மணி கிளம்பி வெளியே போனதும், தலையைச் சரிசெய்துகொண்டு தெருவில் இறங்கிப் போனாள். தெருவில் காலை வெயில் நிறைந்து உறைந்து போயிருந்தது. சித்தப்பா வீடு நிறைய சந்துகளைத் தாண்டி இருந்தது. அவள் போனபோது வாசலில் கலா நின்று கொண்டிருந்தாள்.

“வாங்க அக்கா, உள்ளே வாங்க...” என்றாள்.

அவள் உள்ளே போனபோது சித்தப்பா குளித்துவிட்டு நின்றிருந்தார். அவளைப் பார்த்ததும் கிட்டத்தில் வந்தார்.

“என்னம்மா கோமதி. என்ன இந்நேரத்தில.

“அப்பாவைக் காணோம்.

“எப்போ இருந்து?”

“ராத்திரி வரலே. ஆபீஸ்லேருந்து நேத்து சாயங்காலமே கிளம்பிட்டாராம்.”

சித்தப்பா பேசாமல் இருந்தார்.

பின்னர் பேசினார், "பயப்படாதே, எங்கே போகப் போறார். போன வாரம் வந்தார். நிறைய கடன் இருக்குன்னாரு. அவசரமா ரூபா வேணும்னாரு. என்ன விஷயம்? வீட்டைக்கூட ஒத்தி வெச்சுட்டதா கேள்விப்பட்டேன்."

அவள் பேசாமல் இருந்தாள். சித்தப்பா மூலையிலிருந்த போனை எடுத்துச் சுழற்றினார். யாருடனோ பேசிவிட்டு வைத்தார்.

"சாயங்காலம். ரயில்வே ஸ்டேஷன் பக்கம் பாத்தாங்களாம். ஒருவேளை மதுரைக்குப் போயிருப்பார். நீ வீட்டுக்குப் போம்மா.. பயப்படாதே."

அவள் போவதற்குள் வீட்டில் மணி இருந்தான். "அப்பாவை வடக்கே போகும் ரயிலில் பார்த்ததாக ராமசாமி சாரிடம் யாரோ சொன்னாங்களாம். சார் தனக்குத் தெரியலேன்னு சொல்லிட்டாராம்" என்றான்.

அப்பா எங்கே எனத் தெரியாமல் நாட்கள் போனபோது, ஒரு நாளின் மதியத்தில் அவளுக்கு ஒரு கார்டு வந்தது அப்பாவின் கையெழுத்தில் சில வரிகள் எழுதியிருந்தார்:

"எல்லாவற்றுக்கும் பிறகு விடுபட்டுவிட்டேன். ரொம்பவும் துயர மானதுதான். என்னுடைய இருப்பு எந்தப் பலனும் இல்லாமல்தான் போனது கடன்களைத் தவிர. ஒரு கோழையைப் போல் ஓடிவிட்டேன்... அடையாளம் தெரியாத சுவர்களுக்குள் அலைகிறேன் திரும்புதலின்றி. இது உனக்காக மட்டும். அவர்களைப் பொறுத்தமட்டில் நான் திரும்பி வரக்கூடும். நீ என்னுடைய பெண். ."

மடித்துத் தகரப் பெட்டியில் போட்டாள். அப்பாவின் ஸ்தூலமான உருவம், சிரிப்பு எதுவும் இல்லாதது பெரும் துக்கமாக அடைத்தது. அவள் அழுதாள். அம்மா வேலையைப் போட்டுவிட்டு எட்டிப் பார்த்தாள். யாரோ அப்பாவின் பெயரைச் சொல்லி வெளியே விசாரித்துக்கொண்டிருந்தார்கள். பயமாக இருந்தது. அவளுக்கு. அம்மா வெளியே போய் எதையோ சொல்லிக்கொண்டிருந்தாள். ஓரிரு வார்த்தைகள் மட்டும் அவளுக்குக் கேட்டன:

"அவர் வரட்டும். மொத்தமா கொடுத்துடச் சொல்றேன்."

வீடு - வெளி

வீடு ஏகமாக வெறிச்சோடுவதாகப் பட்டது. சிவா எப்போதும் போலவே சுவரில் சாய்ந்தவாறே பின்வாசலைப் பார்த்துக்கொண்டிருந்தான். காற்று மரங்களின் ஊடே பரவியிருந்தது. விளக்கைப் போட வேண்டும் என்றுகூடத் தோணவில்லை. பின் வாசலுக்கு எதிர் வீட்டிலிருந்து வெளிச்சம் வர ஆரம்பித்திருந்தது. இரண்டு மூன்று செடிகள் இருந்தன. யாரோ வாசலில் வந்து எட்டிப் பார்த்தார்கள். அவன் வெளியே பார்த்துக் கேட்டான்:

"யாரு வேணும்?"

"செல்வியக்கா இல்லையா?"

"பஜார் போயிருக்கா. என்ன வேணும்?"

"சட்டைத் துணி கொடுக்கணும்.

அவன் பதிலை எதிர்பார்க்காமல் வெளியே குரல் மறைந்து போனது. போயிருக்கக்கூடும். அவன் மடங்கிப் போயிருந்த போர்வையைக்கூட சரிப்படுத்தாமல் அப்படியே உட்கார்ந்திருந்தான். அவன் தலைக்கு மேலே ஆணியில் சட்டை தொங்கிக்கொண்டிருந்தது. ஒரு பக்கம் மடித்துவிட்டிருந்த கையை யாரோ எடுத்துவிட்டிருந்தார்கள்.

சுவரில் இருந்த கல்யாணப் போட்டோக்களும், வாழ்த்து மடல்களும் வெளிறிப்போயிருந்தன. போட்டோவுக்குள் ஏதோ பாச்சான் மாட்டிக்கொண்டு இறந்து போயிருப்பதாகப் பட்டது. அதன் நீண்ட மீசை அப்படியே உறைந்து போயிருந்தது. அந்த போட்டோவில் இருந்ததை விடவும் இப்போது அவள் ரொம்பவும் ஒடுங்கிப்போய் விட்டாள்.

அவன் எங்கும் போவதே கிடையாது. காலையில் அவள் கிளம்பிப் போகும் வரை படுத்தபடியே இருப்பான். சில நேரம் பின் வாசலில் உள்ள முருங்கை மரத்தினடியில் உள்ள திண்டில் உட்கார்ந்து பீடி குடிப்பான். குழந்தைகள் யாராவது எட்டிப் பார்ப்பார்கள். அவள் ரெடிமேட் துணி தைக்கும் கம்பெனியில் வேலை பார்த்தாள்.

அவள் வேலைக்குப் போக ஆரம்பித்த கொஞ்ச நாளில் ஒரு தரம் அவளைப் பார்க்க அந்த கம்பெனிக்குப் போயிருக்கிறான். பெரிய குடோன் போல இருக்கும். எங்கும் தையல் மிஷின் சப்தம். பெண்கள்... அவன் வெளியே நின்றிருந்த வாட்ச்மேனிடம் சொல்லி அவளை வரச் சொன்னான். அவள் உள்ளிருந்து வந்தாள். தலை கலைந்துபோய், எண்ணெய் வழியும் முகத்தோடு. அவன் வாசலைப் பார்த்தபடியே இருந்தான். யாரோ உள்ளிருந்து அவனை எட்டிப் பார்த்துப் போனார்கள். அவள் வாசலுக்கு வந்து கேட்டாள்,

"என்ன. இங்க.. என்ன வேணும்?"

"சங்கரன்கோயில் போகலாம்னு இருக்கேன். புதுசா ஹோட்டல் ஆரம்பிக்காங்களாம். தேவராஜ் கூப்பிட்டான்."

"எவ்வளவு வேணும்?"

"முப்பது ரூவா...

அவள் அவனை இருக்கச் சொல்லிவிட்டு உள்ளே போனாள். அவன் வாசலைப் பார்த்தவாறே இருந்தான். கலர் கலராக வெட்டுத் துணிகள் வெளியே சிதறிக் கிடந்தன. நாலைந்து மரங்கள் தெரிந்தன. ஒரு பெண் மிஷினை வெளியே வைத்துத் துடைத்துக்கொண்டிருந் தாள். அவள் வந்தபோது இருபத்தைந்து ரூவாதான் கொண்டுவந்தாள். அவனிடம் கொடுத்து விட்டுக் கேட்டாள்,

"எப்ப வருவீங்க?"

"ராத்திரியாகும்."

அவள் உள்ளே போவதைப் பார்த்தபடியே இருந்தான். வருத்தமாக இருந்தது. திரும்பவும் அவன் வீட்டுக்கு வந்தபோது வெயில் ஏறிக் கொண்டிருந்தது. தேவராஜ் சைக்கிள் கடையில் நிற்பான் எனப் பார்த்தான். தேவராஜைக் காணவில்லை. நின்று சிகரெட் பிடித்தான்.

தேவராஜ் எங்கிருந்தோ சைக்கிளில் வந்தான். அவன் நிற்பதைப் பார்த்ததும் பக்கத்தில் வந்து கேட்டான்,

"அப்பமே வந்துட்டியா?"

"இப்பத்தான். போவமா?"

"இரு, வாரேன்."

அவன் எதிரேயிருந்த லாண்டரிக்குள் போனான். வெளியே வரும்போது தேய்த்த வேஷ்டி சட்டையில் வெளியே வந்தான். சட்டைக் கை முடமுடப்பாக இருந்தது. பஸ்–ஸ்டாப்புக்குப் போவ தற்குள் பஸ் வெளியே வந்துகொண்டிருந்தது. தேவராஜ் தாவி

ஏறிக்கொண்டு அவனையும் இழுத்தான். மூச்சு வாங்கியது. தேவராஜ் அவனுக்கும் சேர்த்து டிக்கெட் எடுத்தான்.

பஸ் ஊரைவிட்டு வெளியே போய்க்கொண்டிருந்தது. மரங்கள் எதிர்த் திசையில் ஓடிக்கொண்டிருந்தன. ஏறுவெயில். வீடுகள். பஸ் மரங்களடர்ந்த ரோட்டைத் தாண்டியதும் குற்றி மலையின் அருகாமைக்கு வந்தது. மலைதான் எவ்வளவு பிரமாண்டமானதாக இருக்கிறது. எத்தனை தரம் மலையின் ஓரமாகப் பிரயாணம் செய்தாலும் இந்தப் பிரமாண்டம் தன் சொரூபம் குறையாமலே இருப்பதாகப் பட்டது.

மலையடிவாரத்தில் காட்டுப் புற்கள் முளைத்துப்போயிருந்தன. பெரிய பாறையில் 'இவ்வுலகை ரட்சிக்க இயேசு வருவதாக' இருந்தது. கடந்துபோகும் கிராமங்களைப் பார்த்தான்.

அவனுக்கு ஞாபகம் தெரிந்ததில் இருந்து அவர்கள் டவுனில்தான் இருந்தார்கள். எப்போவாவது தாத்தா காலத்தில் இதைப் போன்ற கிராமத்தில் இருந்து விடுபட்டு வந்திருக்கக்கூடும். இப்போதும் சில நேரம் அது அவனுக்குத் தோன்றும். அவனுக்கு வேலைபோன புதிதில் அவளிடம்கூடச் சொன்னான்,

"செல்வி. பேசாம உங்க ஊருக்குப் போயிட்டா.

"போய் என்ன செய்றதாம்?"

அவன் பதில் சொல்லவில்லை. அவளே பேசினாள்,

"அங்க எந்த வேலை தெரியும். இங்கதான் ஏதாவது வேலைக்கு முயற்சி பண்ணுங்க.

ஒவ்வொரு நாளும் கிராமத்திலிருந்து எவ்வளவோ பேர் நகரத்துக்கு வந்துகொண்டேயிருக்கிறார்கள். அவன் வேலை பார்த்த ஹோட்டலில் கூட அதைப் பார்க்கலாம். கிராமத்து முகம் கல்லாவில் வேலை கேட்டுக்கொண்டிருப்பார்கள். அல்லது சில நாள் ரயில்வே ஸ்டேஷன் ஓரம் இருந்த இடத்தில் சமையல் செய்துகொண்டிருப்பார்கள். சில நாள்களில் காணாமல் போய்விடுவார்கள். அவர்கள் என்ன ஆனார்கள் என எவருக்கும் தெரியாது. ஒருவேளை இந்த ஜனக் கூட்டத்துக்குள் அவர்களும் இருந்திருக்கக்கூடும். அல்லது வேறு இடம் போயிருக்கக்கூடும். இல்லையேல் எங்காவது வேலையைத் தேடியிருக்கக்கூடும். மழையற்றுப்போன வருடங்களில் அவர்கள் வருவதை நிறைய பார்க்க முடிகிறது.

திரும்பி வந்த எவரும் திரும்பவும் தன் சொந்த ஊருக்குத் திரும்பிப் போயிருக்க மாட்டார்கள்.

பஸ் பெரும் புழுதியைக் கிளப்பியவாறு நின்றது. ஏதோ மூட்டை மூட்டையாக ஏற்றிக்கொண்டிருந்தார்கள். தேவராஜ் அவனிடத்தில் சொன்னான்,

"அடுத்த ஸ்டாப்பில் இறங்கி எங்க மாமாவைப் பார்த்துட்டுப் போயிருவோம். பின்னாலேயே பஸ் இருக்கு. அவரு சொன்னா

கொஞ்சம் எடுக்கும்!"

அவர்கள் இறங்கிய இடத்தில் இருந்து தொலைவில் ஊர் தெரிந்தது. இருவரும் நடந்து போனார்கள். வெயில் உச்சிக்கு ஏறிப் போயிருந்தது. தண்ணீர்த் தாகமெடுத்தது. ஊர் ரொம்பவும் சின்னதாக இருந்தது. நிறைய தென்னை மரங்கள் தெரிந்தன. அவர்கள் போன தெரு பெரிதாக இருந்தது. சிவப்புக் காவியடித்த கல்வீடுகள், கூண்டு வண்டிகள் அச்சு முறிந்துபோய் ஆதிகாலத்து வீடுகளைப் போலத் தோணியது. பெரிய வீடுகள். தெருவில் ஏக நிசப்தமாக இருந்தது. காக்கைகள் மரத்தில் நின்று வெறித்தன.

தேவராஜ் உள்ளே போய் ஏதோ தெலுங்கில் கேட்டான். பெண் குரல் கேட்டது. அவன் வாசலிலே இருந்தான். இவ்வளவு பூதாகரமான நிசப்தம் பயமுறுத்தியது.

தேவராஜ் வெளியே வந்து சொன்னான்,

"தோட்டத்திலே இருக்காங்க போல. பார்த்துட்டு வந்துருவோம்" பெரிய களத்தைக் கடந்து போனவுடன் தோட்டம் தெரிந்தது. நிறைய தென்னை மரங்கள். மோட்டார் அறை சின்ன வீடு போலத் தோன்றியது. நிழல் எங்கும். உள்ளே அவர்கள் போனபோது பேச்சரவம் கேட்டது. கதவை ஒருச்சாய்த்து வைத்து இருப்பதுபோலத் தோணியது. யாரோ ஒருவர் வெளியே வந்து நின்று பார்த்தார்கள். தேவராஜ் போனதும் அடையாளம் கண்டுகொண்டார்கள். தேவராஜின் மாமா, கருப்பாக, உயரமாக இருந்தார். ஏறின நெற்றி, வெற்றிலையில் கரையேறியிருந்த பற்கள். ஒடுக்கமான முகம். தேவராஜ் அவனைக் காட்டி ஏதோ சொன்னான். உள்ளேயிருந்த கயிற்றுக் கட்டிலைத் தூக்கி வெளியே போட்டார்கள்.

"உக்காருங்க, நல்லா உக்காரு.

தேவராஜ் ரூமை எட்டிப் பார்த்துக் கேட்டான்,

"ஆட்டம் வேகமா போறாப்ல இருக்கு.

"யாரு தேவராஜா? எப்ப வந்தாப்ல?"

"இப்பதான்.

"வர்றியா, ரெண்டாட்டம் போடலாம். கூட ஆள் தெரியுதே, யாரு. "

"தெரிந்தவர்தான்..

உள்ளிருந்து இன்னொரு குரல் கேட்டது.

"மாமாவுக்கு எப்பவும் போலீஸ் பயம்.

"பயம் என்ன பயம்? வந்தா அவனையுமில்ல கவனிக்கணும்."

"இல்லேன்னாலும் மாமா தைரியசாலிதான். அன்னைக்கு வேலிக் குள்ள இருந்து ஓடுனப்ப பார்த்தம்ல."

யாரோ கேட்டார்கள்,

“அதெப்ப?”

“அன்னைக்கு... மேட்டுப்பட்டிக்காரங்க கூடி ஸ்கூலுக்குப் பக்கத்து வேலியில் விளையாண்டுகிட்டு இருக்கப்ப, எவனோ போலீஸ் விசில் குடுத்ததும், துட்டைப் போட்டுட்டு ஓட்டம்னா எப்படி. .?”

அவன் சிரித்தான். அந்த இடத்தைச் சிரிப்பு பிடித்துக் கொண்டது. யாரோ சொன்னார்கள்,

“பாத்து சீட்ட போடு மாப்ளே.”

தேவராஜ் மாமாவிடம் ஏதோ சொன்னான். மாமா தேவராஜைப் பார்த்துச் சொன்னார்,

“வெயில்ல எதுக்கு... சாயங்காலமா போகலாம்... இருங்க இங்க.

மாமா யாரோ ஒரு பையனைக் கூப்பிட்டுப் பேசினார். அவன் மரங்களின் ஊடே போவது தெரிந்தது. ரூமிலிருந்து எல்லோரும் வெளியே வந்தார்கள். தேவராஜ் அவர்களைப் பார்த்துச் சிரித்தான். அவர்கள் தென்னை மரத்தைச் சுற்றி ஒரு பெரிய துணியை விரித்து உட்கார்ந்தார்கள். அவர்களையும் விளையாடக் கூப்பிட்டார்கள். தேவராஜ் அவனிடம் சொன்னான்,

“சிவா. சும்மா ரெண்டு ஆட்டம் போடலாம்.”

சீட்டைப் போட்டுக்கொண்டே வந்தார்கள். யாரோ திடீரென தேவராஜிடம் சொன்னார்கள்,

“மாமா டவுன்ல இருந்து இங்க வந்து ஓசிக்கு விளையாடலாம்னு பாக்காங்க. ஆட்டைக்கு நாலு ரூவா வேணாமா?”

மற்றவர்களும் சரியென்றார்கள். தேவராஜ் அவனிடமிருந்து ரூபாய் கேட்டான்.

“எங்கிட்ட சில்லறையில்ல. நீ கொடு. ஜெயிச்சதும் தாரேன்.”

ஆட்டம் போய்க்கொண்டேயிருந்தது. மாமா எங்கிருந்தோ திரும்பிக்கொண்டிருந்தார். உடன் பையன் எதையோ கொண்டு வந்திருக்கான்.

“நம்ம ஊர்க் கள்ளு... அப்படியே சொகமா இருக்கு... வெயிலுக்கு நல்லது, குடிங்க.”

குடித்தார்கள். சிவாவுக்குப் புளிச்ச வாடை முகத்தில் அடிப்பது போலப் பட்டது. குடித்தான். எங்கிருந்தோ முறுக்கு சேவு வாங்கி வந்திருந்தார்கள். கள் குடித்தவுடனே அவனுக்குத் தலை சுற்றுவது போலத் தோன்றியது. ஏப்பம் வந்தது. வயிற்றை ஏதோ செய்தது. அவர்கள் சிரித்தபடியே விளையாண்டார்கள். வெயில் தென்னைக் கீற்றுக்குள் இறங்கி வளைய, வளையமாக விழுந்தது. அவனுக்கு வாந்தி வரும்போலத் தோணியது.

விளையாடிக்கொண்டிருந்தவர்களில் ஒருவர் மட்டுமே ஜெயித்துக் கொண்டிருந்தார். அவனிடமிருந்து ரூபாய் போய்க்கொண்டிருந்தது.

ஒரே சிரிப்புச் சத்தம் கேட்டது. அவனுக்கு நிதானம் இழந்து கொண்டிருந்தது. தேவராஜ் சொன்னான்,

"மாமா, இவ்வளவு ஜெயிச்சுட்டு சும்மா போகலாம்னு நினைக்கக் கூடாது. அது வந்திரணும்.

"அதுவும் உண்டா..

"எப்பவாச்சும்."

"வாங்கிட்டு வரச் சொல்லவா?"

"உண்டா... காச்சுறாங்களா?"

அவன் பாதி விளையாட்டில் சீட்டைக் கவிழ்த்துவிட்டு எழுந்து மறைவாகப் போனான். வாந்தி வந்தது. குனிந்து ஏகமாய் வாந்தியெடுத்தான். குடலைப் புரட்டியது போல இருந்தது. முகத்தில் ஏதோ அப்பிக்கொண்டதுபோல இருந்தது. திரும்பி வந்து கட்டிலில் உட்கார்ந்துகொண்டான். அவர்கள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவனுக்கு உறங்க வேண்டும் போல் தோணியது.

ஆட்டத்தை முடித்துக்கொண்டு சாப்பிடப் போனார்கள். அவனும் தேவராஜும் மாமாவோடு வீட்டுக்குப் போனார்கள். சாப்பிட்ட பின்பு மாமாவைத் தேடி யாரோ வந்தார்கள். தேவராஜ் அவனைக் கூட்டிக்கொண்டு திரும்பவும் தோப்புக்கு வந்தான்.

"சிவா, நாலு மணி பஸ்ஸுக்குப் போகலாம். பாத்து முடிஞ்சா, கடைசி பஸ்ஸுக்குள்ள திரும்பிரலாம்" என்றான்.

அவர்கள் திரும்பி வந்து விளையாட ஆரம்பித்தார்கள். அவன் எங்கிருந்தோ வாங்கி வந்திருந்த பாட்டிலை உடைத்து டம்ளரில் ஊற்றிக் கொடுத்தார்கள். அவன் வாங்க வேண்டாம் என நினைத்தான். பின்பு குடித்தான். அடுத்த டம்ளரில் ஒரு வாய் குடிக்கும்போது தலைக்கேறியது. டம்ளரைப் போட்டுவிட்டு அப்படியே வாந்தியெடுத்தான் சட்டையெல்லாம் வாந்தியாகியது. சாப்பாட்டுக் காரம் மண்டையெங்கும் ஏறியது.

அவனைத் தாங்கிப் பிடித்துக் கட்டிலில் உட்கார வைத்தார்கள். அவன் எதையோ புலம்ப ஆரம்பித்தான். அவனைப் படுக்க வைத்து விட்டு அவர்கள் விளையாடப் போனார்கள்.

எங்கும் பூச்சிகளின் இரைச்சல் சப்தம் கேட்டுக்கொண்டிருந்தது. அடர்த்தியான இருள் எங்கும். கவிழ்ந்து கிடந்தது வானம். தலையைத் தூக்க முடியவில்லை. புரண்டு படுத்தான். மஞ்சள்நிற வெளிச்சம் கொஞ்சம் வந்துகொண்டிருந்தது. யாரோ மோட்டார் ஓட்டிக் கொண்டிருந்தார்கள் போலத் தோணியது. எழுந்துகொண்டான். உடலெங்கும் அசதி படர்ந்துபோயிருந்தது.

தண்ணீரை முகத்தில் வாரி அடித்தான். கண் எரிந்தது. போதை இன்னமும் குறையவில்லை. கனம் குறையாத தலையில் சுழற்சி. எழுந்து நடந்து தெருவுக்கு வந்தான். எதிரே தேவராஜ் வந்துகொண்டி-

ருந்தான். அவன் வருவதைப் பார்த்ததும் கிட்டத்தில் வந்து கேட்டான்,

"தலை சுத்துதா   சரியாயிருச்சா?"

தலையாட்டினான்.

"ஊருக்கே திரும்பிப் போயிருவமா?"

அவன் ஏதும் சொல்லவில்லை. சட்டையில் மஞ்சளாகக் கறை பட்டுப் போயிருந்தது. பஸ் ஸ்டாப் எங்கும் இருட்டு. அவன் சட்டைப் பையைப் பார்த்தான். காசில்லை. இருந்த சில்லறையும் கட்டில் கீழே விழுந்ததாக ஞாபகம். பஸ்ஸில் ஏறியதும் ஜன்னலோர மாகச் சாய்ந்துகொண்டான். மலையின் பிரமாண்டம் தெரியவில்லை. இருள் மறைத்திருந்தது. அவர்கள் டவுனுக்கு வந்தபோது செகண்ட் ஷோவுக்குப் போகும் சிலர் போய்க்கொண்டிருந்தார்கள். தேவராஜ் பஸ் ஸ்டாப்பில் கேட்டான்,

"வீட்டுக்கு வரவா, போயிருவியா?"

"போயிருவேன்."

"நான் போயி நாளைக்குக் கேட்டிட்டு வாரேன். நீ இரு, சாயங் காலமா பாக்கேன்."

வீட்டுக்குக் போக வேண்டாம் எனத் தோணியது. வயிறு பசித்தது. நடந்து பார்க் பக்கமாக வந்தபோது பழைய கடையில் வேலை பார்த்த பாண்டி எதிர்ப்பட்டான். அவனைப் பார்த்ததும் கேட்டான்,

"என்னண்ணே, உடம்புக்குச் சரியில்லையா?"

"இல்ல, சும்மாதான்."

"டீ சாப்பிட வர்றீங்களா?"

"வேணா, இப்ப என்ன செய்றே?"

"மேட்டுல இருக்க கடைல சேர்ந்துட்டேன். மிச்ச பையன்க கூட ஸ்டேசன் எதிர்க்க இருக்க கடைக்குப் போயிட்டாங்க."

இரண்டு பேரும் பேசாமல் இருந்தார்கள். அவனே கேட்டான்.

"இப்ப என்னண்ணே செய்றீங்க.

"வேலைக்குத்தான் போக்கில்லே... சங்கரன்கோயில் போயிட்டு வந்தேன்."

"வாங்கண்ணே டீ சாப்பிடலாம். சும்மா வாங்க..

டீக்கடையில் கூட்டமில்லை. பாய்லர் கொதித்துக் கொண்டிருந்தது. டீ சாப்பிட்டதும் அவனே இரண்டு சிகரெட் வாங்கி ஒன்றை இவனிடம் கொடுத்துவிட்டுச் சொன்னான்,

"சினிமாவுக்குப் போறேன். நீங்க வீட்டுக்காண்ணே."

தலையாட்டினான்.

"வர்றேன். வந்தா கடைப் பக்கம் வாங்க" அவன் போன பின்பு ரொம்ப நேரம் நின்றுகொண்டிருந்தான். பின்பு சிகரெட்டைப்

பற்ற வைத்தபடியே செம்பகவல்லியம்மன் மேட்டுக்குப் போகலாம் எனத் தோணியது அவனுக்கு.

மேட்டின் ஒரு பக்கம் சிலர் உட்கார்ந்திருந்தார்கள். மைதானத்தில் ஆட்களில்லை. தண்ணீர் இல்லாத பாசிக்குளம் இருண்டு போயிருந்தது. என்ன செய்வது என யோசித்தபடியே இருந்தான். பெரும் சுமை அழுத்துவது போலத் தோணியது.

காற்றில் குளிர் சேர்ந்துபோயிருந்தது. திண்டில் படுத்துக்கொண் டான். இன்னும் நகரம் இயங்கிக்கொண்டிருந்தது. இன்னும் வீட்டுக் கதவை மூடிக்கொண்டிருக்க மாட்டார்கள் என்ற ஞாபகம் வந்தது. படுத்து வானத்தை வெறித்தபடியே கிடந்தான். நட்சத்திரம் எரிந்து மலைக்குப் பின்னால் விழுந்தது.

காற்று ஏகமாக அடித்தது. நல்ல உறக்கம் வந்தது. உறங்கிப் போனான். இயங்கியபடியே இருந்தது நகரம்.

அவனுக்கு விழிப்பு வந்தபோது விடியத் தொடங்கியிருந்தது. மேட்டை விட்டு இறங்கி வந்தான். குளிர் எங்கும். வேஷ்டியால் மறைத்த படியே உடம்பைக் குறுக்கித் தூங்கும் மனிதர்கள். வெறிச்சோடும் கடைத்தெரு. பெரும் அமைதி நகரத்தில் வந்தது போல இருந்தது.

அவன் வீட்டுக்குப் போனபோது வெளிச்சம் பரவ ஆரம்பித்திருந்தது. அவன் கதவைத் தட்டிய உடனே திறந்தாள். அவளும் உறங்கவில்லை எனத் தெரிந்தது. அருகில் வந்ததும் வாடையில் விலகிக்கொண்டான்.

"இப்பத்தான் வரீங்களா?" என்றாள்.

அவன் உள்ளே பார்த்தான். குழந்தைகள் தூங்கிக் கொண்டிருந் தார்கள். அவள் அவன் சட்டையைக் கவனித்தாள்.

"குடிச்சிட்டு வந்தீங்களா? எங்க விழுந்துட்டு வந்தீங்க... ஊருக்குப் போகலயா அப்ப. .?"

அவன் குழந்தைகளின் ஓரம் இருந்த இடத்தில் படுக்கச் சட்டையைக் கழற்றினான். அவள் அவன் எதிரே வந்து கேட்டாள்,

"போகலயா அப்ப.

"போகலை" என்றான்.

அவன் குழந்தையை ஒட்டிப் படுத்துக்கொண்டான். அவள் அந்த அதிகாலையில் அழ ஆரம்பித்தாள். உடம்பெங்கும் குலுங்கியது. அழுதபடியே சுவரில் சாய்ந்துகொண்டாள். அவன் சுவரைப் பார்த்த படியே இருந்தான். அவள் அழுகைச் சத்தத்தில் குழந்தை முழித்துக் கொண்டது.

அவள் அழுகைச் சப்தம் குறைந்து போய் விம்மிக்கொண்டிருந்தாள். அதன்பின்பு அவன் உறங்கிப்போனான். முதல் நாள் இரவும் தனிமை யும் – அமைதியும் நிரம்பிய அந்தத் தெருக்களும் கனவில் நடந்தது போல இருந்தது. ஏதோ புலம்பியபடியே அன்று உறங்கிப் போனான்.

போய்க்கொண்டிருப்பவள்

"மாமா இல்லையா?"

அவள் குரல் கேட்டது. கீழே அம்மா அவளுக்குப் பதில் சொல்லிக்கொண்டிருந்தாள் என்பதும் அவனுக்குக் கேட்டது. மாடியிலிருந்த அறையில் பாதிக்கு மேல் வெயில் வந்துவிட்டது. அவன் படுத்திருந்த இடத்தில்கூட லேசாக வெயில் கீற்று.

"அவுங்களும் வந்திருக்காங்க. வெளியே நிக்காங்க...

"உள்ளே கூப்பிடு..."

கூடவே அவளுடைய புதுக் கணவனும் வந்திருக்கிறான் என்று தோணியது. உள்ளே ஆள் நடந்து வரும் சப்தம் கேட்டது. அம்மாவின் குரலில் ஒரு நெளிவு.

"உக்காருங்க. மேலதான் இருக்கான்... கூப்பிடுறேன்."

அம்மா படிக்கட்டுப் பக்கம் வந்து கூப்பிட்டாள்.

"சிவா மல்லிகா வந்திருக்கா. உன்னையப் பாக்கணுமாம்."

அவன் புரண்டு படுத்துக்கொண்டான். அம்மா அவனிடமிருந்து ஏதாவது பதில் வரும் என நின்றாள். கொஞ்ச நேரத்துக்குப் பின்பு திரும்பவும் குரல் கொடுத்தாள். கீழேயிருந்து ஆண் குரல் கேட்டது,

"தூங்குறாரோ என்னமோ.

"இல்ல, உடம்புக்கு சொகமில்லைன்னு படுத்துக் கிடக்கான்." அம்மா, படிக்கட்டை விட்டு உள் அறைக்குள் போன சப்தம் கேட்டது. போய்ப் பார்க்க வேண்டும் என்றே தோணவில்லை. ஜன்னலுக்கு

வெளியே இருந்த வெயிலைப் பார்த்தபடியே இருந்தாள்.

நாலு நாளாகவே அவன் கீழே வருவதே கிடையாது. அம்மா சாப்பாட்டைக்கூட மேலே கொண்டுவந்தாள். கீழே பேச்சரவம் கேட்டபடியே இருக்கும். நிறைய மனிதக் குரல்கள். பேச்சு, சிரிப்பு. எப்பவாவது சிறுவர்கள் மாடிக்கு ஏறி வருவார்கள். அவனைப் பார்த்துக் கத்தியபடியே இறங்கி ஓடுவார்கள். எல்லாம் மல்லிகாவின் கல்யாணத்துக்கு வந்தவர்கள். கல்யாணம் கோயிலில் நடந்தது. கல்யாணத்தன்று காலையில் அம்மா மேலே வந்து கூப்பிட்டாள்

"குளிச்சுட்டுக் கிளம்பி வா. நான் கோயிலுக்குப் போறேன்."

"எதுக்கு?"

"மல்லிகா கல்யாணத்துக்கு."

"நான் வரலே, நீ போ."

"மனசு வருத்தப்படுவாடா உனக்கு இப்ப என்ன செய்யுது. வர வேண்டியதுதானே?"

"வரலேன்னா போக வேண்டியதுதான். ஏன் உயிரை எடுக்கே?"

அம்மா முனங்கிக்கொண்டே கீழே இறங்கிப் போனாள். அன்று காலை அவன் சாப்பிடவில்லை. மதியம்கூடக் கல்யாண வீட்டுச் சாப்பாடு வந்தது. அதையும் சாப்பிடவில்லை. சுவரோரமாக ஒண்டிய படியே படுத்துக் கிடந்தான்.

நினைத்தாற்போலத் தொண்டை அடைத்துக்கொள்ளும். அன்று அவனைத் தேடி யாராவது வரக்கூடும் என நினைத்துப் போர்வையால் முழுக்க மூடிக்கொண்டான். கல்யாணத்தன்றே மதியம் மல்லிகாவின் தங்கை மாடிக்கு வந்தாள். அவள் பக்கத்தில் வந்து நின்று கூப்பிட்டாள்.

"மாமா, மாமா."

அவன் கண்களை இறுக மூடிக்கொண்டான். அவள் நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள். பின்பு கீழே இறங்கிப்போய் அம்மாவிடம் பேசிக்கொண்டிருந்தாள்.

"மாமாவுக்குக் காச்சல் இல்லயே... அக்கா, மாமா ஏன் கல்யாணத் துக்கு வரலேன்னு கேட்டுட்டு வரச் சொன்னா. "

அம்மா எதுவும் பதில் சொல்லவில்லை.

"எந்திரிச்ச பிறகு வீட்டுக்கு வரச் சொல்லுங்க அத்தை..

அவள் போய்விட்ட பின்பும் படுத்தபடியே கிடந்தான்.

முன்பெல்லாம் மல்லிகா வீட்டிலேதான் கிடப்பான். அதுவும் அவள் லீவில் வந்திருந்தால் அவள் வீட்டு மாடியில்தான் அரட்டை நடக்கும். அந்த மாடி பெரியது. பெரிய அறை இருக்கும். இரண்டு அலமாரிகள் இருக்கும். இரண்டிலும் மல்லிகா புத்தகங்கள், வளையல் கள், ஹேர்பின்கள், சின்னப் பொம்மைகள் கிடக்கும். பெரிய ஜன்னல் உண்டு. அறையில் அதன் அருகில் சாய்ந்தபடியேதான் மல்லிகா

படித்துக்கொண்டிருப்பாள்.

சுருண்டு விரல்களுள் அகப்பட்ட புஸ்தகம், ஒரு விரல் தனித்து பின் அட்டையின் முதுகில். அவளைப் பார்த்துக்கொண்டே இருப்பான். சில நேரம் அவள் பேசும்போதுகூட பேச்சில் இல்லாது அவள் முகத்தில் அவன் லயித்துப்போயிருப்பான். எவ்வளவு அழகாக இருக்கிறாள் எனத் தோணும்.

மாமா வீட்டில் மல்லிகாவைத் தவிர மற்ற இருவரும் பெண்கள். மூத்தவளுக்குக் கல்யாணமாகி மதுரையில் இருந்தாள். மல்லிகா டீச்சர் டிரெயினிங் படித்துக்கொண்டிருந்தாள். அவளைப் பார்த்துத் தேவையான சாமான்களைக் கொடுத்துவிட்டு வர எப்போதும் சிவாதான் போவான்.

நிறைய மரங்கள் அடர்ந்த ஸ்கூல் அது. பெரிய கம்பி கேட் வாசல். ஞாயிற்றுக்கிழமை அது திறந்தபடியே கிடக்கும். உள்ளே பெண்கள்கூட்டம். திடீர்திடீர் எனத் திசையறியாத இடத்திலிருந்து சிரிப்புச் சத்தம் கேட்கும்.

மல்லிகாவும் அவள் சிநேகிதியும் எப்பவும் ஒரு மரத்தடியில்தான் இருப்பார்கள். அவனைத் தூரத்தில் பார்க்கும்போதே மல்லிகாவிடம் சிநேகிதி சொல்வாள்,

“உங்க மாமா வந்துட்டாரு.”

மல்லிகாவை நோக்கிப் போவான். கிட்டத்தில் போனதும் சிரிப்பார்கள். மல்லிகாவோடு இருப்பவள்தான் கேட்பாள்.

“இப்ப எந்த வேலை? ஒர்க்ஷாப் வேலையா, விட்டாச்சா?”

“ஒர்க்ஷாப்தான்.”

“ரொம்ப நாளா ஒரே வேலைல இருக்கீங்க. ரெண்டு பேரும் சிரிப்பார்கள், ஜடை புரண்டு முன்னால் விழ.

அவன் எஸ்.எஸ்.எல்.சி. முடித்தவுடனே படிப்பை முடித்துக்கொண் டான். பின்பு கொஞ்ச நாள் டிராக்டர் ஓட்டினான். மருந்துக் கடையில் வேலை செய்தான். தியேட்டரில் டிக்கெட் கொடுத்தான். லாரியில் ஓடினான். கடைசியாகத்தான் இந்த ஒர்க்ஷாப் வேலை.

மல்லிகா அவன் கொண்டுவந்த பொருள்களை உள்ளே எடுத்து வரச் சொல்லி அறைக்குக் கூப்பிட்டுப் போவாள். வழியெங்கும் பெண் துணிமணிகள். உலர்ந்துபோன பாவாடை, தாவணிகள், ஈரம் சொட்டும் சேலை, துண்டு. அறையில் நாலைந்து சிவப்பு பிளாஸ்டிக் வாளிகள். முகம் பார்க்கும் கண்ணாடி இருக்கும்.

கண்ணாடி இருக்கும் ஜன்னலின் புறத்தே சுருள், சுருளாகச் சுருட்டிப் பந்து போன்ற அளவில் தலைமயிர் கிடக்கும். எப்பவாவது தலை சீவும்போது பார்ப்பான். அறையில் இரண்டு பேர்தான் இருந்தார்கள். அவன் வந்த கொஞ்ச நேரத்துக்குப் பிறகு இருவரும் கிளம்பி டவுனுக்குள் போவார்கள்.

அவளுக்கு ஏதாவது நோட்டு, படம் வரையும் பேப்பர் வாங்க வேண்டியிருக்கும். அவள் உடன் நடப்பது மிகவும் அற்புதமாக இருக்கும். அவன் உயரம்தானிருப்பாள் அவளும். சீராக அலையும் சேலை கட்டி, நெருக்கத்தில் படும்போது பவுடர் வாசனையோடு ஏதாவது பேசிக்கொண்டே வருவாள். கடந்து போகும் உடன் படிப்பவர்கள் சிரித்தபடியே போவார்கள். இருவரும் கடைத் தெருவில் எல்லாம் வாங்கிய பின்பு ஹோட்டலுக்குப் போவார்கள்.

ஒரே மேஜையில் உட்கார்ந்து சாப்பிடுவார்கள். ஸ்வீட், பஜ்ஜி, காப்பி, எப்போதும் இதே. வெளியே வரும்போது வெயில் இறங்கிப் போயிருக்கும். ஸ்கூல் மரத்தடியில் நின்று பேசிக்கொண்டிருந்துவிட்டு அவள் இருட்டும்போது உள்ளே போவாள்.

இரவு அவன் வீடு திரும்பும்போது எங்கும் இருள் கவிழ்ந்து போயிருக்கும். நேராக மாமா வீட்டுக்குத்தான் போவான். வெளியே யாராவது உட்கார்ந்திருப்பார்கள். அத்தையிருந்தால் பேசிக்கொண்டிருந்துவிட்டு நெடுநேரம் கழித்துத் தனியே தெருவில் நடந்தபடி வீட்டுக்கு வருவான்.

தெரு முழு அமைதியில் இருக்கும். சில நேரம் விசிலடித்தபடி தெருவில் வருவான்.

படிக்கட்டுப் பக்கம் சப்தம் கேட்டது. மல்லிகாவின் சப்தம்தான் அது. அம்மாவிடம் சொல்லிக்கொண்டிருந்தாள்.

"மேல நான் போயி கூட்டிட்டு வாறேன் அத்தை. சாயங்காலம் ஊருக்குப் போறோம்."

மேலே அவள் வரும் சப்தம் கேட்டது. கொலுசுச் சப்தம். புது சாகப் போட்டிருக்கிறாள். படிகளில் ஒருவிதமான லயத்தோடு நடை. கண்களை இறுகிக்கொண்டான். அவன்கிட்டத்தில் பூவாடை பட்டதும் அரைக் கண்ணால் பார்த்தான்.

நின்றுகொண்டிருந்தாள், ஊதாவும் இளம் மஞ்சளுமான பட்டில் பூரணமான அலங்காரத்தோடு. மல்லிகாதானா எனத் தோன்றியது. இந்த ஆடையும் பூவும் அவள் முகத்துக்குப் புது ஜொலிப்பு கொடுத் திருந்தது. பெரிய பெண்ணைப் போலத் தெரிந்தாள். புரண்டபோது வெளிறிய பாதம் கொலுசு படரத் தெரிந்தது.

அவள் கிட்டத்தில் உட்கார்ந்து நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள்.

"மாமா.. மாமா காச்சலா.."

விழித்துக்கொண்டு சுவரோரமாகச் சாய்ந்து உட்கார்ந்துகொண் டான். அவளை நேராகப் பார்க்க முடியவில்லை.

"ஏன், கல்யாணத்துக்கு வரலே. என்ன கோவம் எம்மேல?"

பதில் சொல்லவில்லை அவன்.

"நான் என்ன செய்ய?" என்றாள்.

இரண்டு பேரும் பேசாமல் இருந்தார்கள். அவள் சப்தம் வராமல்

குலுங்கி அழுதாள். அவனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. படிக்கட்டில் சப்தம் கேட்டது. அவள் கண்ணைத் துடைத்துக் கொண்டாள். அவனே கேட்டான்,

"எப்பப் போறீங்க?"

"சாயங்காலம்."

மேலே வந்தது அவள் கணவன். அவனைப் பார்த்ததும் எழுந்தான் சிவா. அவன் சிரித்தபடியே பக்கத்திலிருந்த பாயில் உட்கார்ந்து கொண்டான்.

"என்ன காச்சலா? சரியாயிருச்சா?"

சிவா தலையாட்டினான்.

"நீங்க கல்யாணத்துக்கு வரலேன்னு ரொம்ப வருத்தப்பட்டா" அவன் பேசியபடியே அறையைப் பார்த்தான். அவள் வெளியே பார்த்துக்கொண்டிருந்தாள்.

"சாயங்காலம் கிளம்புறோம். அவசியம் நீங்க ஊருக்கு வரணும். எனக்கில்லேன்னாலும் உங்க சிஸ்டருக்காக... எப்ப வரீங்க."

வெயில் தகித்துக்கொண்டிருந்தது வெளியே. இருவரும் எழுந்து கொண்டார்கள். அவனும் எழுந்துகொண்டான்.

"எந்த பஸ்ல போறீங்க?" என்றான் சிவா.

"கே.வி.வி.ல"

அவர்கள் இறங்கிப்போன பின்பு கண்ணாடியில் அவனைப் பார்த்தான். முகம் இறுகிப்போயிருந்தது. சாயங்காலமாகப் பெட்டியி லிருந்த சட்டையை எடுத்துப் போட்டுக்கொண்டு பஸ் ஸ்டாப்புக்குப் போனான்.

நிறைய கூட்டம் அவர்களை வழியனுப்ப, ஒரு ஓரமாக நின்று கொண்டான். அவன் நிற்பதைப் பார்த்துக் கிட்டத்தில் மல்லிகாவின் தங்கை வந்து நின்றுகொண்டாள். பஸ் வந்து திரும்பியது. அவர்கள் ஏறி உட்கார்ந்துகொண்டார்கள். மல்லிகா ஜன்னல் பக்கமாக உட்கார்ந்து கொண்டாள்.

பஸ் கிளம்பும்போது கையசைத்தாள். உள்ளேயிருந்து தலையை எட்டிப் பார்த்தாள். உள்ளிருந்த அவன் ஏதோ சொல்வது கேட்டது. அவர்கள் போன பின்பு வீட்டுக்குப் போனான்.

இரவெல்லாம் வெளியைப் பார்த்தபடியே கிடந்தான்.

காலையில் மாடிக்கு வந்த மல்லிகாவின் தங்கை மேலிருந்து கீழே சப்தமிட்டாள்,

"அத்தை, மாமாவுக்குக் காச்சல் நெருப்பா கொதிக்கு..

அம்மா

திரும்பவும் அது கிடைத்தேவிட்டது. கையிலிருந்த மற்றப் புத்தகங்களைக் கீழே வைத்துவிட்டு அந்தப் புத்தகத்தை மட்டும் கையில் எடுத்தான். நல்ல ஊதா நிறமான துணியால் பைண்ட் செய்யப்பட்ட புத்தகம் அது. பக்கங்கள் பழுத்துப்போயின. மஞ்சள் நிறத்தில் தொட்டால் உதிர்ந்து போகும் வண்ண மிருந்தன பக்கங்கள்.

நிறைய புத்தகங்கள் அவனைச் சுற்றிக் கிடந்தன. பாதிக்கு மேல் மாத நாவல்கள். சில மூலிகை மருந்து, ஜோசியம் பற்றிய புத்தகங்கள். அவன் வந்தபோது சில சரித்திர நாவல்கள்தான் எதிரில் கிடந்தன. கவனிப்பாரராற்றுக் கிடந்த ஒரு 'சிரான் மலைக்கோவை' என்னும் புத்தகத்தைப் புரட்டிப் பார்த்துக்கொண்டிருந்தான். ஸ்தல புராணம் போல இருந்தது.

அந்தக் கடையில் சில வேளைகளில் நல்ல பழைய புத்தகங்கள் கிடைக்கக்கூடும். எப்பவாவது வாங்க வருவான். கடை கோயிலை ஒட்டிப் போகும் தெரு வில் இருந்தது. வெளியே நிறைய மாதப் பத்திரிகை களைத் தொங்கவிட்டிருப்பான். அவன் பார்த்துக் கொண்டிருந்த புத்தகத்தைக் கீழே வைத்துவிட்டு நிமிரும்போது கடைக்காரன் கேட்டான்,

"தமிழ்ப் பாட்டெல்லாம் பிடிக்குமா? புதுசா வந்திருக்கு." அவன் பேசாமலே இருந்தான். உள்ளே யிருந்த சின்னக் கட்டை எடுத்துக்கொண்டு வந்தான். ரொம்பவும் பழைய புத்தகங்கள் போல அவனுக்குத் தோணியது. கட்டை அவிழ்த்து வைத்துப் பிரித்தான். மற்றப் புத்தகங்களைத் தள்ளிவிட்டு அவற்றைப் பரப்பினான்.

அவன் எடுத்த புத்தகம் முதல் பக்கம் பிரிக்கப் போவதற்கு முன்பே தெரிந்தது, அது அவர்கள் புத்தகம் என்று. அட்டையை அடுத்த பக்கத்திலே எழுதியிருந்தது: "ஸ்ரீமான் நாராயணசுவாமி பிள்ளை குமாரத்தி கனகாவுக்கு அன்பளிப்பு". கீழே கறுப்பு மையில் கிறுக்கினாற் போன்றதொரு கையெழுத்து. அவன் வைத்திருந்த கட்டில் இருந்த புத்தகங்கள் எல்லாம் அம்மாவின் புத்தகங்கள். தாத்தாவிடமிருந்து வாங்கியவை. இதைப் போன்ற புத்தகங்கள் பதினாலு இருக்கும். வரிசையாக அலமாரியில் அடுக்கி வைத்திருப்பாள். அதற்கு மேல்தட்டில் சின்ன வெண்கல யானையும் விநாயகரும் இருப்பார்கள். திருநீற்றுக் கிண்ணமிருக்கும். சரஸ்வதி பூஜைக்கு வைத்த சந்தனப் பொட்டு புத்தகத்தின் முகப்பிலிருக்கும்.

அந்தப் புத்தகங்களைத் திரும்பவும் புரட்டிப் பார்த்தான். உள்ளே அம்மாவின் கையெழுத்து, உருட்டு உருட்டாக இருந்தது. சில பக்கங்களைத் காணவில்லை. ராமாயணப் புத்தகத்தில் இருந்த படம் காணவில்லை. சில படங்கள் காணப்பட்டன. உள்ளே திரும்பி வரும்போது பார்த்தான். ஜடாயுவின் சிறகுகள் முறிந்து கிடக்கும் காட்சி. ராம–லட்சுமணர் எதிரே நிற்கிறார்கள். வானம் தலைக்கு மேல். முறிந்து கிடக்கும் சிறகுகளின் ரோமங்கள் ஒட்டிக்கொண்டிருக்கின்றன. ஜடாயுவின் மரணம் தோய்ந்த முகம் அப்படியே இருந்தது.

இந்தப் படத்தை நிறைய தடவைகள் பார்த்திருக்கிறான். அம்மா எப்பவாவது அவளே கதை சொல்லும் ஆர்வத்தில் இருந்ததால் அந்தப் படத்தைக் காட்டிக் கதை சொல்வாள். அவன், ரமணி, முத்து எல்லாம் கதை கேட்பார்கள். மெல்லிசான விளக்கு எரிந்து கொண்டிருக்கும் வீட்டில். அம்மாவின் முகம் மஞ்சளில் தோய்ந்து மிளிரும். கற்றை மயிர்கள் அம்மாவுக்கு. எடுத்துப்போட்டாலும் இடுப்பை விட்டு இறங்கும்.

அடர்த்தியாக இருக்கும் மயிர். விளக்கு வெளிச்சத்தில் அவை நிழலில் நாணல் புதர் போலத் தெரியும். பாடல்கள் மெல்லிசான தொனியில் பாடுவாள். குரல் மென்மையானது. ஜடாயுவின் கதை அவளுக்கும் பிடிக்கும். அந்தப் படத்தில் இருப்பதை விவரிக்கும் போது முகம் பெருந்துக்கத்தின் தாக்கம் சேர்ந்ததாக இருக்கும்.

"ஜடாயுவைப் போல அம்மா"– நினைவில் இப்போது.

நான்கு புத்தகங்களையும் எடுத்து அவனிடம் கொடுத்து விலை கேட்டான். அவன் புத்தகங்களைப் பிரித்துப் பார்த்தான். ஒரு கையில் வைத்து எடை பார்த்தான். திரும்பவும் திருப்பி உள்ளே பார்த்துவிட்டுச் சொன்னான்,

"இருபத்தைந்து ரூவா குடுங்க."

கையிலிருந்த காசை எண்ணினான். இருபது ரூபாய்க்கும் உள்ளே தான் இருந்தது. புத்தகங்களைத் திரும்பவும் எடுத்துப் பார்த்தான்.

"கொறச்சுப் போடுங்க" என்றான்.

கடைசியில் பத்தொன்பது ரூபாய்க்கு வாங்கினான். சில பக்கங்கள் உதிர்ந்துபோய் அந்த இடத்திலே கிடந்தன.

இருட்டத் தொடங்கியிருந்தது. கோயிலைத் தாண்டி கிழக்கில் பிரிந்தான். வீடு தள்ளியிருந்தது. யாரோ சிலர் சப்தமாகப் பேசிக் கொண்டு முன்னால் போனார்கள். வீடுகளில் விளக்கு பொருத்தியிருந்தார்கள். ஸ்கூல் மைதானத்தில் ஆட்களே இல்லை. கருப்படித்த கல் சுவர்கள் நின்றிருந்தன. வானம் நீலத்தில் இருந்தது. காற்றில் லேசாகக் குளிர் இருந்தது.

புத்தகத்தை மார்புக்கு நேராகப் பிடித்துக்கொண்டான். அம்மா பெரும்பாலும் குளிர்காலத்தில் சீக்கிரமே விழித்துக்கொள்வாள் விரல்கள் நடுங்க ஈரம் சொட்ட நடந்துபோன காலடித் தடங்கள் சிவப்புச் செங்கல்லில் பதிந்திருக்கும். அநேகமாக ஆற்றில் யாரும் இருக்க மாட்டார்கள் அந்த நேரத்தில்.

படித்துறைகளில் முழு நிசப்தமிருக்கும். சிறு அசைவோடு ஆறு ஓடிக்கொண்டிருக்கும். அவன் சில நாட்களில் அம்மாவோடு போயிருக்கிறான். தெருவில் காலை படர்ந்திருக்கும். பறவைகளின் சப்தம் விட்டு விட்டுக் கேட்கும். ஆற்றுக்குப் போகும் பாதையில் இருள். அம்மாவின் விரல்களோடு கடந்து போவான்.

சுண்டு விரல்கள் தடிப்பாயிருக்கும் அம்மாவுக்கு. படிக்கட்டு ஈரம் உறைந்துபோயிருந்தது. மரத்தில் இருந்து உதிர்ந்த இலைகள் நிறைய படிக்கட்டில். தூரத்தில் மதகு தெரியும். படிக்கட்டில் உட்கார்ந்துகொள்வான். எதிரே ஆண்கள் படித்துறையில் பஜனைக்குப் போகும் சிலர் குளித்துக்கொண்டிருப்பார்கள். ஆள் தெரியாவிட்டாலும் பேச்சு கேட்கும்.

அம்மா ஆற்றுக்குள் இறங்கிக் குளிப்பாள். மார்பளவில் நின்றுகொண்டு அவனைப் பார்ப்பாள். தூக்கம் நிறைந்த கண்களோடு சிரிப்பான். அம்மா முகம் தண்ணீருக்குள் மறையும். சில நிமிஷங்களுக்குப் பின் தண்ணீரை விலக்கித் தெரியும் முகம். ஈரம் சொட்ட நடந்து வருவாள்.

“கீசுகீ சென்றெங்கும் ஆனைச் சாத்தன் கலந்து பேசின பேச்சரவம் கேட்டிலையோ?”

ஈரத்தில் நடுங்கின குரல். அவன் மேல் படும் விரல்களில் குளிர்ச்சி இருக்கும். அவன் வீட்டை நெருங்கும்போது வாசலில் குழந்தைகள் விளையாடிக்கொண்டிருந்தன. நிழலில் யார் கள்ளன், யார் போலீஸ் எனத் தெரியவில்லை. அவன் செருப்புச் சத்தத்தில் திரும்பின குழந்தைகள்.

அவன் கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே போனான். உள்ளே வித்யா படுத்துக் கிடந்தாள். அவனைப் பார்த்ததும் எழுந்துகொண்டாள். அவன் மேஜை மேல் அந்தப் புத்தகங்களை வைத்துவிட்டு முகம் கழுவப் போனான்.

தண்ணீர் சில்லென்றது. திரும்பும்போது பார்த்தான். குழந்தைகள் புத்தகத்தைப் பிரித்துப் பார்த்துக்கொண்டிருந்தன. அவளிடம் படத்தைக் காட்டிக்கொண்டிருந்தன. அவனைப் பார்த்ததும் புத்தகத்தோடு ஓடிவந்தன குழந்தைகள்.

"அப்பா, இது மான் படம்தானா?"

தலையாட்டினான். நாலு புத்தகங்களையும் ஒருசேர எடுத்து அவளிடம் காட்டினான்.

"எல்லாம் எங்க அம்மாவோட புத்தகம். பழைய புத்தகக் கடையில் வாங்கினேன்."

"எப்படி அங்க போச்சு?" என்றாள். குழந்தைகள் திரும்பவும் படம் பார்க்கப் புத்தகத்தை எடுத்துக்கொண்டன. அவன் சுவரில் சாய்ந்து உட்கார்ந்துகொண்டு ஒரு புத்தகத்தைப் பிரித்தான்.

அம்மா அந்தப் புத்தகங்களை எல்லாம் எப்போது படித்தாள் எனத் தெரியவில்லை. அவள் எல்லா நேரமும் அடுப்படிதான். காலையில் சாமி கும்பிட்டு அடுப்பில் பானையைத் தூக்கி வைப்பதில் இருந்து அங்கேயேதான் இருப்பாள்.

வீட்டில் நிறைய ஆட்கள் இருந்தார்கள். அப்பாவுடைய தம்பி, அவர் குடும்பம், பெரிய அக்கா எல்லோரும் ஒரே வீட்டில் இருந்தார்கள். இருந்தாலும் பெண்கள் கம்மி. வீடு நிறைய ஆண்கள். அம்மா அவர்களுக்கு மத்தியில், எல்லோருக்கும் அம்மா, 'கனகவல்லி அத்தை', 'மதினி', 'பெரிய மதினி', இப்படி.

கடையை மூடிவிட்டு அவர்கள் இரவில் வரும்வரைக்கும் அம்மா முழித்திருப்பாள். கடைச் சாவிகளை அலமாரியில் வைத்துவிட்டு அவர்கள் வரும்வரை அவளுக்குச் சமையலறையின் வாசல்படிதான் தலைகாணி.

அம்மா ரமணி கல்யாணத்தை ஒட்டி ஊருக்குப்போன ஒரு வாரத்தில் வீடு வெரீரென்றிருந்தது. பெரிய தூண்கள் மட்டும் இருந்தன வீட்டில். யாருக்கும் சமைத்த மாதிரியோ சாப்பிட்ட மாதிரியோ தெரியவில்லை. அம்மா திரும்பி வரும்போது இரவானது. வந்ததும் குளித்துவிட்டு அடுப்படிக்குள் போனாள். கொஞ்ச நேரத்துக்குப் பின்பு பொரித்த குழம்பின் வாசம். வெறும் அப்பளமும் குழம்பு சாதமும் மட்டும். எல்லோரும் சாப்பிட உட்கார்ந்தார்கள்.

அம்மா பரிமாறினாள். இலையில் சாதம் விழுந்து ஆவி பறந்தது. இரண்டு வாய் சாப்பிடுவதற்குள் சித்தப்பாவுக்குப் பொரை ஏறி, கண்ணில் நீர் வந்தது. அம்மா தலையில் தட்டினாள். சித்தப்பா சாப்பாட்டை நிறுத்திவிட்டு உடைந்துபோன குரலில் சொன்னார்,

"மதினி.. உங்க கைக்குக் காப்பு போடணும்."

ஆண்களைப் போலவே பெண்களுக்கும் அம்மாதான். சித்திக்கு உடம்புக்கு சொகமில்லாமல் போய்க் கிடந்த நாளில் அம்மாதான் உடனிருந்தாள் அவள் பிள்ளைப் பேற்றுக்காகப் போனபோது அம்மாதான் எல்லாமும். ஆனாலும் முதலில் பிரிந்துபோனது

சித்தப்பாதான் அந்த வீட்டை விட்டு.

அன்றைய இரவில் கடைச் சாவியைக் கொண்டுவந்து வைத்து விட்டு அப்பா மட்டும் சாப்பிட வந்தார். சித்தப்பா வரவில்லை. அப்பா சாப்பிட்டுக்கொண்டே சொன்னார்,

"கடையில கணக்கு முடிச்சோம். அவன் தனியாப் போகப் பிரியப்படுறான். இந்த வியாபாரம் வேணாமாம். டவுனுக்குப் போறானாம்."

அம்மா பதில் சொல்லவில்லை. அந்த மாதத்துக்குள் கணக்கைப் பிரித்துக் கொடுத்தார்கள். சித்தப்பா வீட்டைக் காலி பண்ணி விட்டுச் சென்றார். அப்பாவும் கடையை விற்றுவிட்டு வேறு வியாபாரம் செய்யலாம் என்றார்.

அம்மா அன்றிரவு எல்லோருக்கும் பிடித்தமான பொரித்த குழம்பு வைத்திருந்தாள். ஆனால் அன்றைக்கு யாரும் சாப்பிடவேயில்லை. அப்பா இருந்த பணத்தைப் பிரித்து மற்றவர்களுக்குக் கொடுத்து அனுப்பினார். அவர்கள் வீட்டை விட்டுக் காலி பண்ணிப் புறப்பட்ட போது இதுபோன்ற இரவாகத்தான் இருந்தது.

ரயிலில் நகரத்துக்கு வந்தார்கள். அம்மா அவள் புத்தகங்கள், சாமி படங்களைக் கொண்டுவந்த பை ரயிலோடு போனது. பெஞ்சுக்கு அடியில் வைத்துவிட்டு இறங்கிப் போய்விட்டார்கள். கொஞ்ச நாள்களுக்குப் பின் அம்மா ஒடுங்கிவிட்டாள். கடைசியில் அவளிடம் இருந்து பேச்சே வரவில்லை. ஜடாயுவின் சிறகு முறிந்து கிடக்கும் காட்சி அவனுக்கு ஞாபகம் வரும் அப்போதும்.

அவன் ரொம்ப நேரம் கழித்துத்தான் அன்றைக்குச் சாப்பிடப் போனான். சாப்பிட்டுவிட்டுத் திரும்பும்போது குழந்தைகள் தூங்கி யிருந்தன. அவள் பாயை விரித்துப் போட்டிருந்தாள். அதில் சாய்ந்து கொண்டான். அவள் புஸ்தகங்களைப் பிரித்துப் படித்தாள். பின் கேட்டாள்,

"உங்க அம்மா பேரு கனகவல்லியா?"

அவன் தலையாட்டினான். அவள் அந்தப் புத்தகங்களை வைத்து விட்டுச் சுவரோரத்தில் கிடந்த மாத நாவலைப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தாள். நாலைந்து பக்கம் படித்து முடித்தபின் கேட்டாள்,

"இந்தப் புத்தகம் எவ்வளவு வெலை?"

"இருபது ரூபாய்."

"நாளைக்குச் செலவுக்கு என்ன செய்றது?"

அவன் பதில் சொல்லவில்லை. அவள் புத்தகத்தில் மூழ்க ஆரம்பித்துவிட்டாள். ரொம்ப நேரம் உட்கார்ந்தே இருந்தான். பின் குழந்தைகளை ஒட்டி, தலைகாணியைப் போட்டுப் படுத்துக் கொண்டான். அவனுக்குத் திடீரென ஒரு யோசனை வந்தது, 'நாளைக்கு அவசியம் அந்தக் கதைகளைக் குழந்தைகளுக்குச் சொல்ல வேண்டும்' என்று. அவள் சாய்ந்து படித்துக்கொண்டிருந்தாள் இன்னமும்.

வேறு பகல்

வெளித் திண்ணையில் தீப்பெட்டிகள் காய்ந்து கொண்டிருந்தன. பசை உலர்ந்துபோன பலகையும் நீலத் தாள்களும் அப்படியே இருந்தன. அவள் உட்கார்ந்து ஒட்டிய இடத்தில் ஓரச்சுவரில் சாய்ந்த எண்ணெய்த் தலைப் பிசுக்கிருந்தது. முருங்கை மரத்தடியில் பூக்கள் உதிர்ந்து கிடந்தன. பகலின் உஷ்ணம் விரிந்திருந்தது.

அவள் பாத்திரங்களைப் பொறுக்கிக்கொண்டு மரத்தடிக்குப் போனாள். மரத்தடியில் பெரிய சிமெண்ட் தொட்டி இருந்தது. கறுப்புக்கல் ஒன்று ஒரு பக்கம் தூக்கியதாக இருந்தது. கோழி நடந்து, கிண்டிய தடம் மண்புழுவென நெளிந்து கிடந்தது. இரும்பு வாளி துருவேறியிருந்தது.

பாத்திரங்களைப் போட்டுவிட்டு சேலையை ஏற்றிச் சொருகிக் கொண்டு உக்கார்ந்தபோது பார்த்தாள். நாய் படுத்திருந்தது. சாக்கடையின் ஓரம், மரத்தின் நிழல் விழுந்திருந்த இடத்தில் கால்களை அகட்டியபடி கிடந்தது. நாயின் முகம் தரையோடு பதிந்து கிடந்தது.

நாயின் வயிறு பெருத்துச் சரிந்திருந்தது. பொட்டை நாய். கால்களின் சீரான துடிப்பு இருந்தது. கண்ணை அரை மூடி ஈரம் வழியக் கிடந்தது நாய். அவள் பார்த்துக்கொண்டே இருந்தாள். கொஞ்ச நாள் நாய் தெருவில் அலைந்தபடியே இருக்கும். பின் எப்போதும் இப்படி நித்திய கர்ப்பமாக வீழ்ந்து கிடக்கும். குட்டிகள் என்றாலும் எட்டு, பத்துதான்.

போன தரம் அவர்கள் வீட்டின் பின்புறமிருந்த குட்டிச் சுவரில் ஒதுங்கி குட்டி போட்டிருந்தது. கண் திறக்காத குட்டிகள் கண்டபடி

முட்டிக்கொண்டிருந்தன. குட்டிகளின் நிறங்கள்தான் எத்தனை விநோதமாக இருந்தன. நெற்றியில் மட்டும் கறுப்பு விழுந்த குட்டி, வால் நீண்ட குட்டி, சிவப்பும் பளுப்புமாக. இரண்டு நாள்களுக்கு நாய் இங்குமங்கும் அலைந்தபடியிருந்தது.

அவளை விடவும் அவன் குட்டிகள் கிடந்த இடத்தைத் தினமும் போய்ப் பார்த்து வந்தான். ஒரு குட்டியைத் தூக்கிக்கொண்டு வந்து வீட்டில் வளர்ப்பதற்காக வைத்துக்கொண்டான். அவளுக்கு அந்தக் குட்டியை அடியோடு பிடிக்கவில்லை. புசுபுசுவென இருந்தது குட்டி. அதன் சப்தம் குழந்தைகளின் கீச்சுக் குரல் போல இருந்தது. அசூயையாக இருந்தது அது.

இடம் தெரியாமல் எதன் மேலாவது முட்டிக் கீச்சிட்டது நாய்க் குட்டி. அவள் அதைத் தொடவேயில்லை. பாத்திர மூடியில் பால் ஊற்றி வைத்தார்கள் அதற்கு. அவன் வேலை விட்டு வந்ததும் குட்டியைக் கையோடு தூக்கிக்கொண்டு திண்ணைக்கு வருவான். அவன் கழுத்தைப் பிடித்துத் தூக்கும்போது கழுத்துக்குக் கீழே தொங்கும். காதைப் பிடித்து தூக்குவான். கத்தும். சிரித்தபடியே அவளிடம் சொல்வான்.

“ரோசம் ஜாஸ்தியா இருக்கு.”

நாய்க் குட்டிகள் இருக்கும் இடம் ஜனங்களுக்கு எப்படித் தெரியும் எனத் தெரிவதில்லை. தெரிந்து விடுகிறது. பெரும்பாலும் குட்டிகளை ஆள் பார்க்காத நேரத்தில் தூக்கிக்கொண்டு போய்விடுவார்கள்.

பொட்டைக் குட்டிகளையெல்லாம் நாய் இல்லாத நேரம் தோட்டி தூக்கிக்கொண்டு போய் கிணற்றில் போட்டுவிட்டு வருவான். நாய் அலையும். இரவெல்லாம் நாயின் சப்தம் கேட்டபடியிருக்கும். வாயெல்லாம் நீர் வடிய, கண்கள் ஈரம் பரிய நாய் பரண்டும் சப்தம் கேட்கும். விக்கும் தொனியில் அது சப்தமிடும்.

சில நேரம் குட்டிகள் எவர் வீட்டிலிருந்தாவது வெளிப்பட்டு தெருவில் அலையும். அவள் மார்க்கெட் போகும்போது பார்த்திருக்கிறாள். குட்டி நாய் ஓரத்தில் திரியும். மார்க்கெட்டில் இருக்கும் பையன்கள் தூக்கிப் போட்டு விளையாடுவார்கள். அழுகிய பழக் கூடைகளின் மேல் விழும். சப்தமிடும். வாலைச் சுருட்டியபடி ஓடி எதனடியிலாவது பதுங்கும். தேடுவார்கள்.

அவளுக்கு நாய் பிடிப்பதேயில்லை. அவர்கள் வீட்டில் வளரும் ‘நாய்க் குட்டி’ எப்போதும் தங்குவதேயில்லை. எப்படியாவது இறந்துவிடும். அவன் அப்போதெல்லாம் சொல்வான்.

“சனியன், நம்ம வீட்டுக்குன்னு வருது பாரு.. எதுதான் நிக்குது வீட்ல.”

அவள் பதில் சொல்ல மாட்டாள், எதைச் சொல்கிறான் என அவளுக்குத் தெரியும். அவனே பேசுவான்,

“எதப் போட்டாலும் தின்னுட்டு வளர்ற நாய்க இருக்கு. நம்ம வீட்ல பால் ஊத்தி வளத்தாலும் நிக்க மாட்டேங்குது. எதுக்கும் கொடுப்பினை வேணும்பாங்க.”

அவளுக்குப் பிடிக்காவிட்டாலும்கூட நாய்க்குட்டி இறந்துபோன இரவில் அவள் அழுவாள். அவன் பக்கத்தில் படுத்தபடி கேட்பான்,

“யேய் சுப்பு, எதுக்கு அழுகே.”

அவன் இப்படிக் கேட்டதும் அவள் கேவல் சப்தம் அதிகமாகும். அவனே சொல்வான்,

“பிள்ளைக இல்லேனா என்ன. அதுக்குப் போயி அழுதா” அவள் விம்மும் வரை பார்த்தபடியே இருப்பான். நினைத்துக் கொண்டாற் போலத் தொண்டை அடைத்துக்கொள்ளும் அவளுக்கு. எல்லாம் ஞாபகம் வரும்.

அவள் கல்யாணமாகி வந்து உண்டானபோது ஆளே மாறியிருந்தாள். ஆளற்ற வீட்டில் வெயில் இறங்கியபடியிருக்கும். கண்ணாடியை எடுத்துக் கையில் வைத்துக்கொண்டு முகம் பார்த்த படியிருப்பாள். முகம் பெரிதாக விரிந்து போயிருக்கும். மஞ்சள் படர்ந்துபோன முகம். வயிறு உப்பிப் போய் உடம்பே வேறு வடிவம் கொண்டது போல இருக்கும். இரவில் அவன் அவள் கிட்டத்தில் புரளும்போது அவன் முகத்தை அள்ளி வயிற்றோடு அமுக்கிக்கொள்வாள். உள்ளே அசையும்.

அவன் மூச்சுக்காற்று உடம்பெங்கும் பரவும். மூணாவது மாதத்துக்குப் பிறகு மாந்தோப்பு சாமி கும்பிடப் போய் வந்தார்கள். நடக்க சிரமமாக இருந்தது. மாமரங்கள் படர்ந்து போன இடத்தில் அவள் படுத்துக்கொண்டாள் பகலில். இரவில் வீடு திரும்பும்போது கால் வலி எடுத்தது.

தொடைகள் பிளப்பது போல இருந்தது. வலி தாங்க முடியாது இருந்தது. வீட்டில் தலையணையைக் கடித்தபடி அழுதாள். இரவில் குழந்தை கருவிலே சிதைந்து போனது. நாலைந்த நாள்கள் ஆஸ்பத்திரியில் இருந்தாள் திரும்பும்போது வயிறு ஒட்டிப் போயிருந்தது.

வெளுத்துப் போயிருந்தாள். முகம் இறுகிப்போய், நெற்றியெல்லாம் மேடேறியதாக அவள் படுத்தபடியே இருந்தாள் பகலெல்லாம். இது போன்று அதன் பின்பு நாலைந்து தரம் நடந்து போனது. கரு நிற்காமல் நழுவிப்போனது. டாக்டர் அவளிடமே சொல்லி விட்டார். இனிமேல் கருத்தரித்தால் அவள் இறக்கக்கூடும் என்று.

எப்போதாவது சில நாள் அவனுக்கு ஏக கோபம் வரும். அவளைக் கண்டபடி வைவான். சில நேரம் அவள் வயிற்றைப் பார்க்க முடியாதபடி பெரும் துக்கம் கவ்வும் அவனுக்கு.

பகலில் நாய் எங்கும் போவது கிடையாது. எப்போதாவது சில

நேரம் பின் கட்டில் நுழைந்து இருப்பதைத் தின்றுவிட்டு போய்விடும். இல்லாவிட்டால் நாக்கைத் தள்ளியபடி படுத்துக் கிடக்கும். நேற்று தானோ என்னவோ அவள் பெட்டி வாங்க தீப்பெட்டி ஆபீஸுக்குப் போயிருந்தாள்.

காலையிலே அவன் மீன் வாங்கி வந்தான். பெரிய மீன்கள். உயிருடன் இருந்தது கொண்டு வரும்போது. கையில் எடுத்தவுடன் நழுவி எகிறியது. அவனுக்கு மீன் ரொம்பவும் பிடிக்கும். கொஞ்சம் துண்டுகளை எடுத்துப் பொறித்துவிட்டு மீதம் உள்ளவற்றைக் குழம்பு வைத்தாள். நல்ல காரத்தோடு குழம்பு சிவந்து மணத்தது.

அவன் வெற்று உடம்போடு வெளியே படுத்துக் கிடந்தான். அவள் கேட்டாள் புறப்படும்போது,

“தீப்பெட்டி ஆபீஸ் போயிட்டு வந்து சோறு போடவா, சாப்பிடுறீங் களா இப்ப.”

“போயிட்டு வா.”

கதவை ஒருச்சாய்த்து சாத்திவிட்டுப் போனாள். அவன் வெளியே படுத்துக் கிடந்தான். அவள் பெட்டி வாங்கிக்கொண்டு வரும்போது வீடு திறந்து கிடந்தது. அவனைக் காணோம். உள்ளே நுழையும்போதே மீன் குழம்பு வாசம் தூக்கியது. அவனாக சாப்பிட்டிருக்கக் கூடுமோ என நினைத்தாள். அடுப்படிக்குள் போனபோது பார்த்தாள்.

மீன் குழம்பு வைத்திருந்த சட்டி உடைந்து கிடந்தது. தரையெங்கும் குழம்பு. மீன் துண்டுகள் பாதி பாதியாகக் கிடந்தன. கிண்ணத்தில் இருந்த பொறியலைக் காணோம். பானை உருண்டு சோறு சிதறியிருந் தது. அவளுக்கு ஆத்திர ஆத்திரமாக வந்தது.

வெளியே பார்த்தாள். நாய் நடந்து போன இடமெங்கும் மீன் குழம்பு ஒட்டிய தடமிருந்தது. மரத்தின் அந்தப் பக்கமிருந்த சுவரோரம் நாய் கிண்ணத்தைக் கவ்வியபடி போய்க்கொண்டிருந்தது. அவள் வெளியே கிடந்த விறகுக் கட்டையை எடுத்துக்கொண்டு ஓடினாள்.

நாய் கொஞ்ச தூரம் ஓடியது. மூச்சிறைக்க நின்று முறைத்தது. அவள் விறகுக் கட்டையைத் தூக்கி எறிந்தாள். நாயின் மேல் பட வில்லை. இன்னும் ஆத்திரம் அதிகமானது அவளுக்கு. குனிந்து கீழே கிடந்த கல்லால் அடித்தாள். கத்தியபடி ஓடியது.

தூரத்துக்குப் போன பின்பு உள்ளே வந்தாள். கிண்ணம் நாய் போட்ட இடத்திலே கிடந்தது. தரையைத் துடைத்துவிட்டு, புளியை பாத்திரத்தில் ஊறப்போட்டாள், பானையை நிமிர்த்தி வைத்து விட்டு அடுப்பைப் பற்ற வைத்தாள்.

அவன் வரும்போது கண்டுகொண்டிருந்தான். சப்தமாகக் கத்தியபடி வந்தான்.

“என்னடி ஆச்சு.”

“உங்களை வீட்ல இருக்கச் சொல்விட்டுத்தானே போனேன்.

எங்க போய்த் தொலைஞ்சீங்க.”

“முடிவெட்டப் போனேன். நீ பூட்டிட்டுப் போகலயா.” அவள் பேசவில்லை. அவன் வெளியே எட்டி நாய் தென்படுகிறதா எனப் பார்த்தான். தெரியவில்லை. அவளிடம் கேட்டான்.

“எல்லாத்தையும் தின்னுருச்சா.”

“சட்டி உடைஞ்சுபோச்சு.”

நாய் திரும்பியிருந்தது. அவனுக்குப் பசி ஏகமாக இருந்தது. மீன் குழம்புக்காக நாக்கு ஏங்கியது. அவளிடம் கோபமாகக் கேட்டான்,

“என்ன செய்யப் போற.”

“ரசம் வைக்கணும்.”

“ஒரு மயிரும் வேணாம்.”

அவன் வெளியே வந்தபோது நாய் மரத்தடியில் எப்போதும் போல விழுந்து கிடந்தது. சப்தமில்லாமல் பின்புறம் போய் விறகுக் கட்டையால் ஒரு போடு போட்டான். நாய் ஏகமாகக் கத்தியது. வாலைச் சுருட்டிக்கொண்டு ஓடியது. தெருவில் போகும் சிலர் பார்த்துப் போனார்கள். தூரம் போன பின்பு நின்று குரைத்தது. அவன் சாப்பிடப் போனான்.

அன்று முழுவதும் நாய் வரவில்லை. இன்னும் அவளுக்கு நாயின் மேல் கோபம் தீரவில்லை.

அவள் பாத்திரங்களைக் கழுவி எடுத்துப் போய் அடுப்படியில் வைத்தாள். எப்போதோ விட்டத்தில் சொருகியிருந்த கருவாட்டுப் பையை எடுத்து மண்டை பிய்த்துத் தூரப் போட்டாள். நாய் மோப்பம் கண்டது. கதவுகளைத் திறந்து வைத்துவிட்டுப் பதுங்கிக் கொண்டாள்.

நாய் கொஞ்ச நேரத்துக்குப் பின்பு அசைய முடியாமல் லொங்கிய படி வந்தது. கதவின் பக்கம் வந்தபோது பார்த்துக்கொண்டது. வீடு ஏக அமைதியில் இருந்தது. அது அடுப்படியின் உள்ளே போனது. அவள் ஓடி வந்து வெளியே நின்றுகொண்டு கதவை அடைத்துச் சாத்தினாள்.

நாய் மிரண்டுபோய் கதவின் பக்கம் வந்து முகத்தை மோதியது. கால்களைத் தூக்கிக் கதவைத் திறக்கப் பார்த்து உறுமியது. அவள் வெளியே நின்றபடி கதவிடுக்கில் தெரியும் நாயின் கண்களை, கால்களைப் பார்த்தாள். நிலை கொள்ளாது தவித்தது நாய்.

நாய் உள்ளே அலைந்தது. பாத்திரங்களை உருட்டியது. ஜன்னல் வழியாகப் பெரிய குத்தியை நுழைத்து நாயை நோக்கி இடித்தாள். விலகிச் சுற்றியது. பெரிதாகக் குரைத்தபடி கதவோடு முட்டியது. இடுக்கில் முகத்தைக் கொடுத்தபடி நின்றது.

குத்தியை வாகாக நுழைத்து நாயை அடித்தாள். வலியில் பெரிதாகக் குரைத்தது, இரைத்தது நாய். கண்கள் ஈரம் ததும்பிப் போயிருந்தது.

அவள் வயிற்றோடு அடித்தாள். நாய் கீழே விழுந்து கால்களை அகட்டிக்கொண்டது. கால்கள் நடுங்கின. கொஞ்ச நேரத்துக்குப் பின்பு கதவை ஒருச்சாய்த்துத் திறந்துவிட்டு விறகைக் கையில் வைத்துக்கொண்டாள். நாய் பதுங்கி வெளிப்பட்டதும் வயிற்றோடு போட்டாள்.

அன்று இரவெங்கும் நாயின் சப்தம் கேட்டபடி இருந்தது. காலை நாய் பிரசவித்திருந்தது. தோட்டி பார்த்துவிட்டு வந்து சொன்னான்.

"நமக்கு வேலையில்ல. குட்டி செத்தே பிறந்திருக்கு. பளுப்பு கலர்ல இருக்கு பாருங்க ஆச்சி."

அவள் பார்க்க விரும்பவில்லை. அவனும்கூட நாயைப் பார்க்க வில்லை. ஒரு பகலில் நாய் திரும்பவும் வாசலுக்கு வந்தபோது பார்த்தாள். வயிறு உள்போய் ஒட்டியிருந்தது. அவள் தன் வயிற்றில் கை வைத்துக்கொண்டாள். நாய் அவளை முறைத்தபடி போனது. தெரு ஏக இரைச்சலாக இருந்தது. அவன் இரவு திரும்பும்போது குட்டி நாய் கொண்டுவந்திருந்தான். கேட்டதற்கு அடுத்த தெருவில் கிடைத்தது என்றான். வெள்ளைக் குட்டி கண் திறக்கவில்லை. அவள் குட்டியைத் தூக்கிக்கொண்டு போனாள். புசுபுசுவென இருந்தது. அசூயை தெரியவில்லை அவளுக்கு அப்போது.

உடல்

மழை பெய்ததால்தானோ என்னவோ, ரயிலில் கூட்டம். நிற்கக்கூட இடமில்லை.

மதியம் இருந்த வெயில் அப்படி. ஸ்டேஷனுக்கு வரும்போதே கூட்டம் அலைந்தபடி இருந்தது. கசகசப்பும் வியர்வையுமாக அவன் நின்றுகொண்டிருந்தான். இருட்டிவிட்டதால் விளக்குகள் அசைய, தண்டவாளங்களைக் கடந்துபோகும் ரயில்வேக்காரன் தூரம் போகும்வரை பார்த்துக்கொண்டிருந்தான். பெண்கள் அவன் ஏறிய பெட்டியில் நிறைய நின்றிருந்தார்கள். வாசல் பக்கமே நின்றுகொண்டான். லெட்ரீன் கதவு திறந்து வீசியது. ஆட்கள் அப்படியும் இடித்துக்கொண்டு நின்றிருந்தார்கள்.

மழை நகரமெங்கும் காற்றோடு வீசிக் கொண்டிருப்பதை ரயிலில் போகும்போது பார்க்க முடிந்தது. கட்டடங்கள் நிமிடத்தில் மறைந்தன. அவன் தலைமயிர், சட்டை எல்லாம் கூட நனைந்து போயிருந்தன. அவன் இறுகப் பிடித்திருந்த கம்பி வழுக்கியது. வரப்போகும் ரயில்வே ஸ்டேஷன் தூரத்தில் மங்கலான ஓவியம் போல இருந்தது. வெளிச்சம் மட்டும் விட்டு விட்டு அடித்தது. யாரோ பீடி பற்ற வைத்துப் புகைத்தார்கள் அவனருகில். புகை அவன் காதில் முட்டியது உஷ்ணமாக. பீடிப் புகையைச் சகிக்க முடியவில்லை. பின்புறம் திரும்பி யார் எனப் பார்க்க நினைத்தான். பார்க்க முடியவில்லை.

வெற்று நிலங்கள் ஓடிக்கொண்டிருந்தன. மரங்களும் எதிர்த் திசை நோக்கிப் போயின. கருவேல மரங்கள் நிறைந்த கம்மாய் வறண்டு கிடந்தது தெரிந்தது. அவன் எல்லாவற்றையும் பார்த்தபடியிருந்தான்.

எதுவும் அவனுக்குள் பதியாமல் விலகி ஓடின. யாரோ அவன் தோளில் ஒரு கையைப் பிடித்தபடி நின்றுகொண்டிருந்தார்கள் பெட்டிக்குள் தலையைக் குனிந்து பார்த்தான். இரண்டு பெண்கள் ஓரமாக உட்கார்ந்து புத்தகம் படித்தபடி வந்தார்கள். படிக்கும் பெண்கள். வாயில் அவள் தலைமயிர் ஒட்டிக்கொண்டிருந்தது அருவருப்பாக இருந்தது அவனுக்கு.

அடுத்த ஸ்டேஷன் வந்தபோது நன்றாக இருட்டிப் போயிருந்தது. வேம்பு தெரியாவிடினும் காற்று அடித்தது. இறங்கி நின்றுகொண்டான். சட்டையில் முதுகு ஒட்டிக்கொண்டிருந்தது. பையில் பேனா கசிந்திருந் தது. ரயில் கிளம்பும்போது தண்டவாளத்தில் கொஞ்ச தூரம் ஓடிவந்து ஏறிக்கொண்டான். சருகுகள் அவன் ஓடியதில் கலைந்து பரவின. பழைய இடத்தில் இன்னமும் கூட்டம். நிறைய பொட்டு வெளிச்சம் தெரிந்தது. எல்லாப் பக்கங்களிலும் சிதறிய நெருப்பு தூண்டுவது போல வெளிச்சம் இருந்த நகரத்தில், பேச்சுக் குரல்கள் அவனைச் சுற்றிக்கொண்டன. அவனும் விரும்பாமல் எதற்கோ பதில் அளித்தான்.

அவன் இறங்க வேண்டிய ஸ்டேஷன் தூரம் வரும்போதே தெரிந்தது. சாம்பல் படிந்த பழைய ரயில்வே ஸ்டேஷன் அது. ஒரு கட்டடம் அன்றி வேறு எதுவுமில்லை. ரயில் ஸ்டேஷன் முகப்பில் நுழையும் போதே அவன் இறங்கிக்கொண்டான். பெண்களும் நிறைய இறங் கினார்கள். அவன் வேலிப்பாதை கடந்து மெயின் ரோட்டுக்கு வந்தபோது சட்டையை சரிசெய்து கொண்டான். டீக்கடைகளில் மஞ்சளும், பச்சையுமான டியூப் லைட்கள் போட்டிருந்தார்கள் நிறைய புதுப்பட போஸ்டர் ஒட்டியிருந்தார்கள். நேற்று இரவு பரசுராம் கூட டீ சாப்பிட வந்தபோது பார்த்தான். சின்னப் பையன்கள், பதிமூன்று வயது இருக்கும், மங்களம் மெஸ் சந்தில் ஒட்டியிருந்த மலையாளப் பட போஸ்டர் மீது கன்னத்தை வைத்து ஒத்திக்கொண்டிருந்தார்கள். அகன்ற முகம் கொண்ட பெண் படுத்துக் கிடந்தாள்.

அவர்களைப் பார்த்ததும் சந்தில் ஓடினார்கள். அவர்கள் ஓடிய சப்தம் கேட்டது. ஐந்து நிமிடத்தில் திருகி நின்றது போல் இருந்தது. அவன் எதுவோ சொல்ல நினைத்தான். பரசுராம் அதற்குள் போய் விட்டான்.

அவன் நடந்துபோன வாக்கிலே பார்த்தான். இங்கே மழை பெய்யவில்லை. செம்மண் புழுதி படர்ந்து போயிருந்தது. ஜவுளிக் கடைகளில் உயரமான பெஞ்சு போட்டு ஆட்கள் உட்கார்ந்திருந்தார்கள். நிதானமாக நடந்து போனான். கென்னடி கடை வந்தபோது பரசுராம் நிற்கிறானா எனப் பார்க்க உள்ளே போனான். கென்னடி கடிதம் எழுதிக்கொண்டிருந்தார். அவனைப் பார்த்தார், கேட்டார்,

“அங்க மழையா

“தூறல்.”

பரசுராம் காணவில்லை. மாலைப் பேப்பர் கிடந்தது. கடையின் உள்ளே பெரிய கண்ணாடி இருந்தது. தென்னை மரக் கீற்றுகளுக்கு ஊடே எடுத்த கென்னடியின் இளவயது போட்டோ இருந்தது. கென்னடியின் நீண்ட முகம் அப்படியே பதிவாகி இருந்தது. இன்னொரு கென்னடியின் கூட விளையாடிய பேஸ்கட் பால் பிளேயர்கள் படம் இருந்தது. எப்போதும் கென்னடி அதைப் பார்த்தபடிதான் இருப்பார். அதில் எட்டாம் நம்பர் பனியன் போட்ட பையன் இறந்துபோனதற்காக ஓர் இரவு குடித்துவிட்டு உறக்கம் வராமல் கென்னடி அழுதபடி கிடந்தார். பின்னிரவில் அவர்கள் அறைக்கு வந்து படுத்துக் கிடந்தார். அதைப் பற்றி கென்னடி மறுநாள் எதுவும் பேசவில்லை.

அவன் கென்னடி கடையைத் தாண்டும்போது ரவி சைக்கிளில் வந்தான். அவனைப் பார்த்ததும் கேட்டான்.

“சீனியர் எக்ஸாம். அப்ளை பண்ணிட்டியா

“விட்டுட்டேன்.”

“நேத்துப் படமா ரெண்டு பேரும்

பேசாமல் கடந்து வந்தான் அவன்.

அறையில் பரசுராம் இருப்பான் என்றே தோணியது. மணி எட்டரைக்குப் பக்கமாகிவிட்டது. மெஸ் மூடியிருக்கும். வெளியேதான் போக வேண்டும். வீடுகள் இப்போதே அடைத்திருந்தன. சில வீடு களில் முன் விளக்கு எரிந்தது. அறை இருந்த காம்பவுண்டில் மேலே இரண்டு அறைகள், கீழே நாலு வீடு. மேலே அறைக்குப் பக்கமாகச் சின்ன பாத்ரூம். கீழ்க் கதவை மூடிவிடும் முன்பு போக வேண்டும். அடுத்த அறையில் இருந்த நபர் மாதம் இரண்டு மூணு நாள்தான் வருவார்.

அறை மூடியிருந்தது. மாடிப் படிகளில் யாரோ பாத்திரங்களை அடுக்கி வைத்திருந்தார்கள். அவற்றை விலக்கி மேலே ஏறி வந்தான். கொடியில் துணிகள் விறைத்துக்கொண்டு நின்றன. சாவியைச் சட்டைப் பையில் தேடினான். சில்லறைகளே தென்பட்டன. ஏதோ ஒரு சாவி கைக்கு வந்தது. எடுத்துப் பார்த்தான். மேஜை சாவி அது. எல்லாச் சில்லறைகளையும் கையில் கொட்டி சாவியை எடுத்தான். பூட்டு சரியாகப் பூட்டாமல் இருந்தது. அவன் சாவியை நுழைத்ததும் திறந்தது. கதவைத் தள்ளினான். எல்லாக் கதவும் போல உள்முகமாகத் திறந்தது.

யாரோ ஆள் இருப்பது போல் தெரிந்தது அவனுக்கு. லைட்டைப் போட்டான். அலமாரியின் கீழ் இருந்த ஸ்டூலில் ஒரு பெண் உட்கார்ந்து இருந்தாள். கருப்பாக, மெலிந்த திரேகம் கொண்டவள். தலைமயிர் கொட்டிப் போய் நெற்றி ஏறியிருந்தது. அவள் இருட்டில் தலையைக் குனிந்தபடி உட்கார்ந்திருக்க வேண்டும். அவனைப் பார்த்ததும் எழுந்துகொள்ள முயற்சித்தவள் பின் அப்படியே

உட்கார்ந்து கொண்டாள்.

கசகசப்பும் வியர்வையும் எரிச்சலைத் தந்தன அவனுக்கு. அவள் எதிரேயிருந்த ஸ்டவ், பாத்திரங்களைப் பார்த்தபடி இருந்தாள். அவள் எப்படி உள்ளே வந்தாள் எனக் கேட்க நினைத்தான். அவளை எங்கோ பார்த்தது போல இருந்தது. எங்கே என யோசித்தபடி இன்னொரு தரம் அவளைப் பார்த்தான். அவள் சேலை கட்டியிருக்க வில்லை. பாவாடை, தாவணி போட்டியிருந்தாள். அவனுக்குப் பிசுபிசுவென இருந்தது உடம்பெங்கும். அவளாகவே திரும்பிக் கேட்டாள்.

"நீங்களுமா?"

அவன் பதில் எதுவும் பேசவில்லை. சட்டை, பனியனைக் கழட்டி விட்டு வெற்று உடம்போடு குளிக்க வேண்டும் என்பது மட்டுமே தோன்றியபடியிருந்தது. அவன் நின்றுகொண்டிருந்தான். அவள் தணிவான குரலில் பேசினாள்.

"அவர் எங்கே... வரலயா?"

காலண்டர் தாள் பறந்தபடி இருந்தது. அவள் ஸ்டூலை விட்டு எழுந்துகொண்டு சுவரில் சாய்ந்து உட்கார்ந்துகொண்டாள். ஸ்டூலைத் தள்ளினாள் அவன் பக்கம். அவளைப் பார்த்த இடம் தெரிந்து போனது. அச்சாபீஸில் வேலை பார்ப்பவள். பார்த்திருக்கிறான். பரசுராமின் பிரண்டு ஒருத்தன் அங்கேயிருந்தான். அந்தப் பெண் அங்கேதான் வேலை பார்த்துக்கொண்டு இருந்தாள். அவனுக்குச் சட்டையைக் கழட்ட வேண்டும் என்ற உணர்வு அதிகமாகிக்கொண்டே வந்தது. எப்படி அவள் முன்பு கழற்றுவது என யோசித்தான். பரசுராம் எங்கே போயிருக்கக்கூடும் எனத் தெரியவில்லை. கொடியில் அவன் துவைத்துப் போட்ட கைலியைக் கூடக் காணோம். பழைய கைலி மட்டுமே கிடந்தது. அவள் அவனையே பார்த்துக் கொண்டி ருப்பது தெரிந்தது. அவன் நிற்பதைக் கீழே யாரோ பார்ப்பதுபோல உணர்ந்ததால் உட்கார்ந்து கொண்டான்.

அவள் அறையில் இருந்த பொருள்களைப் பார்த்தபடி இருந்தாள். அறையில் கறுப்பு படிந்துபோயிருந்தது. பழைய செய்தித் தாள்கள் கிடந்தன. நிறைய சுவர்ப் படங்கள். குழந்தைப் படங்கள், சுவரில் ஒட்டியிருந்தன. அலமாரியில் ரேடியோ இருந்தது. அவள் அவனிடம் கேட்டாள்.

"படிக்கக் கதை புக் இருக்கா எதுவும்.

அதெல்லாம் பரசுராம்தான் வாங்கி வருவான். அவன் பெட்டிக்கு அடியில் சுவர் ஓரம் கிடக்கக்கூடும். பெட்டிக்கு அடியில் தேடக் குனிந்தபோது அவள் மிக அருகில் இருந்தாள். சின்ன முகம். தோல் உலர்ந்துபோயிருந்தது. உதடுகளை எச்சிலால் ஈரப்படுத்திக் கொண்டிருந்தாள். காதில் சிவப்பு நிறத் தோடு போட்டிருந்தாள். பாதிப் பக்கங்கள் இல்லாத புக்கை எடுத்துக் கொடுத்துவிட்டு

நிலைப்படிக்கருகே போய் நின்றுகொண்டான்.

காற்று இல்லை. இலைகள் அசையாத அமைதி. கீழே ஆட்கள் உறங்கிப்போயிருந்தார்கள். அவனுக்குப் பசித்தது. பாத்ரூம் கதவைத் தள்ளிப் பார்த்தான். இரும்பு வாளி நிறைய தண்ணீர் இருந்தது. துண்டு, சோப் எப்படி எடுப்பது, குளிப்பது? யோசித்துக் கொண்டிருந்தான். அந்தப் பெண் குனிந்து கதைப் புத்தகம் படித்துக் கொண்டிருந்தாள். உள்ளே போக முடியாமல் இருந்தது. பரசுராம் வந்துகொண்டிருப்பது தெரிந்தது. யார் சைக்கிள் எனத் தெரியவில்லை. கைலியில் தான் வந்தான். மஞ்சள் பை எடுத்துக்கொண்டு வந்தான். அவன் மாடியேறும் போது கீழே சப்தம் கொடுத்தான்.

“நான் வந்து பூட்டிக்கிறேன்.. கீழ்க் கதவ.

மேலே வந்தபோது அவன் நின்றுகொண்டிருப்பதைப் பரசுராம் பார்த்தான். பையைத் திண்டின் மேல் வைத்துவிட்டுக் கேட்டான்.

“மழையாம்ல. நனைஞ்சுட்டயா

அவன் எதுவும் கேட்கவில்லை. பரசுராம் உள்ளே எட்டிப் பார்த்துவிட்டுக் கேட்டான்.

“பேசினாளா எதுவும் உங்கிட்ட...

“என்னடா... இது..

“படுக்கறதுக்கு வர்றயானு கேட்டேன் அவகிட்ட... சரின்னா... பார்த்திருப்பே... அச்சாபீஸ்... அப்பவே கூட்டிக்கிட்டு வந்து பூட்டிட்டுப் போயிட்டேன்” பரசுராம் சிரித்தான்.

துவைத்துப் போட்டிருந்த கைலியைப் பரசுராம் கட்டியிருந்தான். இருவரும் சில நிமிஷம் பேசாமல் இருந்தார்கள். பின் பரசுராம் கேட்டான்.

“சாப்பிட்டயா.

“இல்லை.”

“சாப்பிடுறயா. தோசையிருக்கு பீர் இருக்கு.”

“எனக்குக் குளிக்கணும்.”

“தண்ணி இல்லைடா. அவ வேற குளிக்கணும். காலைல குளியேன்.”

“கசகசன்னு இருக்கு.”

“உள்ள வா முதல்ல.”

அவன் அறைக்குள் போனதும், பரசுராம் கதவைச் சாத்தி வைத்தான். அந்தப் பெண் நிமிர்ந்து பரசுராமைப் பார்த்தாள். அவன் பையிலிருந்த சாப்பாட்டுப் பொட்டலத்தை எடுத்து வைத்தான். இலை மடங்காது நின்றது. பீர் பாட்டிலை வெளியே எடுத்து உடைத்தான். அவள் சம்மணம் போட்டு உட்கார்ந்துகொண்டாள். அவன் அவளைப் பார்க்காமல் இருக்க முயற்சித்தான். பரசுராம் பாதி குடித்துவிட்டு

அவளிடம் கேட்டான்.

"குடிக்கயா.

"சுருசுருன்னா இருக்கும்."

"பாரு" என்றான். அவள் வாயில் வைத்துவிட்டுச் சொன்னாள்,

"கசப்பு.. குமட்டுது..

எங்காவது தண்ணியில் போய் விழுந்து குளிக்க வேண்டும்போல் இருந்தது அவனுக்கு. ஊராக இருந்தால் கிணற்றுக்காவது போகலாம். இங்கே குளிக்க இடம் கிடையாது. அவள் சாப்பிடும் போது பரசுராமும் அவனும் வெளியே வந்து நின்றுகொண்டார்கள். அவன் கீழே பார்த்தான். யாரோ ஒரு பெண் பரீட்சைக்குப் படித்துக் கொண்டிருப்பது கேட்டது. அவனுக்குப் பிசுபிசுப்பு எரிச்சலைத் தந்தது. பரசுராமிடம் கேட்டான்.

"நான் என்ன செய்ய..

"கென்னடி கடையில இரு. செகண்ட் ஷோ விடுற நேரத்துக்குள்ளே அவ வீட்டுக்குப் போகணும்."

அவனுக்குக் கைலி மாற்ற வேண்டும் போல இருந்தது. பழைய கைலி அழுக்கு. படியில் அவன் இறங்குவதற்குள் பரசுராம் கதவை அடைத்துவிட்டான். அறை விளக்கு அணைக்கப்பட்டு பேச்சரவம் நின்றது. கீழே வந்து கதவைத் திறந்தபோது தெரு ஒடுங்கி நின்று கொண்டிருந்தது.

பசிக்கவில்லை இப்போது. எல்லாவற்றையும் அவிழ்த்துப் போட்டு விட வேண்டும் என்று மட்டுமே தோணிக்கொண்டிருந்தது. தெருவில் ஆள் நடமாட்டம் அருகிக்கொண்டு வந்தது. பஜாருக்கு வந்தான். பையில் சில்லறைகளும், ரெண்டு ரூபாய்த் தாளும் மட்டுமே இருந்தன. கென்னடி கடைக்குப் போனபோது ரேடியோவில் ஹிந்தியில் ஏதோ சொல்லிக்கொண்டிருந்தார்கள். கென்னடி உறங்கிவிட்டாரா எனப் பார்த்தான். வெளியே கிடந்த பெஞ்சில் உட்கார்ந்துகொண்டான். கென்னடி அசிரத்தையாக ரேடியோவை அணைத்துவிட்டு கடையை விட்டுக் கீழே இறங்கி நின்று, கை கால்களை உதறிக்கொண்டார். கடைக்குக் கீழே மண்பானையில் இருந்த தண்ணீரை எடுத்து முகத்தில் அடித்துக்கொண்டு, ரோட்டில் நடந்துகொண்டிருந்தார்

மண்பானையில் தண்ணி இருக்கிறதா எனப் பார்த்தான். ஏதோ வேர்களாகக் கிடந்தன. தண்ணீர் சில்லென்றிருந்தது. கடைக்குள் இருந்த செம்பை எடுத்து தண்ணீர் மோந்துகொண்டு கடைக்குப் பின்பக்கம் போனான். கடைக்குப் பின்னாடி பழைய சைக்கிள் டயர்கள், காலி சோடா பாட்டில்கள் இருந்தன. சிகரெட் அட்டைகள் குமிந்து கிடந்தன. யாரும் தெரிகிறார்களா எனப் பார்த்தான் தெரியவில்லை.

சட்டையைக் கழட்டி டயர் மீது போட்டுவிட்டு, பனியனைக்

கழட்டினான். மயிர் அடர்ந்துபோயிருந்த உடம்பு திடீரென ஏதோ ஒரு மிருகத்தை ஞாபகப்படுத்தியது. தண்ணீரை முகத்தில் ஊற்றினான். உடம்பெல்லாம் வழிந்தது. ஈரம் பட்டு எரிந்தது கண். பனியன் வியர்வையில் பழுப்பேறியிருந்தது. அதைக் கையில் வைத்திருக்கவே முடியாமல் இருந்தது. இன்னொரு செம்பு தண்ணீர் எடுக்க வந்த போது கென்னடி கேட்டார்,

"ரூம்ல தண்ணியில்லையா?"

"தண்ணியில்லை."

சட்டையைப் போட்டுக்கொண்டு திரும்பி வந்தான். பனியனைச் சுருட்டி வைத்திருந்தான் கையில். கென்னடி ஒரு பழைய பேப்பரைக் கொடுத்தார். சுற்றிக்கொண்டான். கடையில் காலி பாட்டில்கள் கிடந்த இடத்துக்குள் அதைத் திணித்து வைத்துவிட்டு வந்தான். போகும்போது எடுத்துக்கொள்ள வேண்டும். சாப்பிடுவதற்காக வடக்குப் பக்கமாகப் போனான். குறுகலான சந்தில் இருள் ஆள் பார்த்துக்கொண்டிருந்தது.

தெரு முக்கில் இருந்த இட்லிக் கடையில் சாப்பிட்டான். சாப்பிட முடியாமல் நெஞ்சை ஒருக்களித்தது. திரும்பவும் கென்னடி கடைக்கு வரவே நேர்ந்தது. அவர் வெளியே ஸ்டூலைப் போட்டு உட்கார்ந்திருந் தார். அவன் பழைய இடத்தில் உட்கார்ந்துகொண்டான்.

கென்னடிக்குக் கண்கள் பருத்துப்போயிருந்தன. கண்ணின் கீழ் பை தொங்கிக்கொண்டிருந்து. அவராகவே கேட்டார்,

"டவுன்ல. பேஸ்கட் பால் டோர்ணமெண்ட் நடக்கோ...

எங்கோ பார்த்த ஞாபகம் இருந்தது. தலையாட்டினான். கென்னடி விளையாட்டினைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். கண்ணாடிக் கூண்டுக்குள் எல்லாமும் பதிவாகியிருந்தன. கால வித்தியாசம் இன்றி என்பது போல இருந்தது அவர் பேச்சு. மண்பானைத் தண்ணீரில் கிடந்த வேர்களின் சல்லிகள் மயிரோடு சேர்ந்து உறுத்திக் கொண்டிருந்தன. உடம்பு அரித்தது. அவன் வானத்தைப் பார்த்தான். மழை வரும் அறிகுறி இல்லை. செகண்ட் ஷோ படம் விட நேரம் இருந்தது.

கென்னடி தானாகவே பேச்சை நிறுத்திக்கொண்டார். கடைக்குள் ஏறி சாய்வாகப் படுத்துக்கொண்டார். அவனுக்கும் உட்கார முடியாமல் இருந்தது. ஆள் நடமாட்டமில்லாத பெரிய ரோடு வெறிச்செனஇருந்தது. ரயில் சப்தம் கேட்டது இரவின் ஊடே. அவனுக்கு எல்லாமும் எரிச்சலை, தாங்க முடியாத ஒரு நசநசப்பைத் தருவதாக இருந்தன.

எதிரேயிருந்த மரம் அசைவற்று ஜடப்பொருள் போல் நின்றிருந்தது. எப்போதாவது சைக்கிள்காரர்கள் கடந்து போனார்கள். பரசுராம் செகண்ட் ஷோ விடும் நேரம் முன்பே வந்தான். அறைக்குப் போனபோது பாய் போட்டபடியே கிடந்தது. தலையணை கிடந்தது.

மட்ட ரகமான பவுடர் வாடை. இன்னும் அருவருப்பான வாடை அறைச் சுவரெங்கும் நிறைந்து போயிருந்தது. பாத்திரங்கள் எல்லாம் ஒரு ஓரமாக அடுக்கப்பட்டிருந்தன. அந்தப் பெண் படித்த புத்தகம் விரிந்தபடியே நசுங்கிக் கிடந்தது.

பரசுராம் வெற்று உடம்போடு படுத்துக்கொண்டான். அவன் உடம்பும் கூசியது. சாப்பிட்ட இலைச் சுருள் கிடந்தது மூலையில். அந்தப் பெண் கழட்டி வைத்த வளையல்கள் ஓரமாக இருந்தன. மறந்துபோயிருந்தாள். பரசுராம் ஜன்னல் பார்த்தபடியே சொன்னான்,

"உன் பெட்டியில இருந்து இருபது ரூவா எடுத்திருக்கேன்."

"எதுக்கு."

பரசுராம் பதில் சொல்லவில்லை. அவனால் இந்த அறைக்குள் படுக்க முடியாது என்று பட்டது. எல்லாவற்றையும் அவிழ்த்துவிட்டு கைலி மாற்றிக்கொண்டான். பனியன் ஞாபகம் வந்தது. பரசுராம் சிகரெட் பற்ற வைத்துக்கொண்டு சொன்னான்,

"மத்தியானம் எங்கப்பா வந்திருந்தாரு...

"என்ன சொன்னாரு?"

"அவர் சொன்ன பொண்ணை எங்க அண்ணன் வேண்டாம்னு சொல்லிட்டானாம்..."

சிகரெட் புகை வேறு அறையெங்கும் பரவியது. பரசுராம் பேசாமல் சிகரெட் பிடித்தான். பின் சிகரெட்டை அணைத்துவிட்டுப் புரண்டு படுத்துக்கொண்டான். அறைக் கதவைத் திறந்து வெளியே வந்து தரையில் படுத்துக்கொண்டான் அவன். சிவப்புக் கல் பதித்த தரை. பரசுராம் தலையைத் தூக்கிச் சொன்னான்.

"மேஸ்திரி சந்தில் அவளை விட்டுட்டு வந்தேன். வீடு கிட்ட தானாம்."

பரசுராம் அறைக் கதவைச் சாத்திக்கொண்டான். இருட்டில் கதவு பெரிதாகத் தெரிந்தது. சாப்பிட்டது நெஞ்சில் இருந்தது அப்படியே. அவன் புரண்டு படுத்தான். அந்தப் பவுடர் வாடை இன்னும் அடிப்பது போலவே தோன்றியது. அவன் உறங்கிப் போனான்.

விடிவதற்குக் கொஞ்சம் முன்பு திடீரென மழை வந்தது. கல்மழை. சடசடவென முதுகில் அடித்தது மழை. தண்ணீர் அவனைச் சுற்றி ஓடியது. படுத்துக் கிடந்தான். தரை தண்ணீரை சர்ரென உள்ளே இழுப்பது தெரிந்தது. ஆகாசத்தில் எதையும் பார்க்க முடியவில்லை. கன்னத்தில் ஒரு மழைத்துளி விழுந்தது. வலித்தது. சிறு பனிக்கட்டி போல இருந்தது ஒருதுளி. அறையில் இருந்து வாடை கரைந்து வந்தது மழைத் தண்ணீரில். கறுப்புத் தண்ணீர்.

உடம்பு வலித்தது. மழை விடாமல் இருந்தது. கதவை ஆள் தட்டுவது போல் வந்து அடித்தது மழை. அவன் மழைத் தண்ணீரில் உடம்பை நெளித்தான் அங்கும் இங்குமாக.

கண்ணாடிப் பாதை

இரவானதும் அடுப்படி மாடங்களில் இருந்து சப்தம் வரத் தொடங்கிவிடுகின்றது. தீப்பெட்டி லேபிளில் இருந்து சட்டென ஆந்தைகள் வெளிப்படு கின்றன. ஆந்தைகள் தங்களுக்குள் சிரித்தபடி தெரு வில் அலைகின்றன. உறங்கும் குழந்தைகளின் கனவு களைத் திருடும் ஆந்தைகள் வெகு தூரத்திற்கப்பால் இருந்த இரண்டு மலையின் ஊடே கொண்டு சென்றன. குழந்தைகளின் கனவுகளைத் திருடும் ஆந்தைகள் விடியும் தருவாயில் வேற்று உருக்கொண்டு ஆட்கள் போலாகி வேனில் கிராமம் கிராமமாக அலைந்து திரிந்தன. உறக்கத்தின்போது, வேன் சப்தம் கேட்டு பிள்ளைகள் பயந்து அரற்றினார்கள். குழந்தை களுக்கு இயல்பான குரல் மறைந்துபோய் சலிப்பேறிய கிழட்டுக் குரல் வந்தது. அவர்கள் தொட்டதற்கெல் லாம் அலுத்துக்கொண்டார்கள். ஒவ்வொரு நாளும் வயதாகிக்கொண்டு போய் சுருக்கங்கள் வளர்ந்து, தலைமயிர் கொட்டத் தொடங்கியது. குழந்தைகள் வளர்ச்சி கொள்ளவில்லை. உயரம் சுருங்கிக் காய்ந்த பனங்கொட்டைகள் போலானார்கள். அவர்களால் நடக்கவும் சிரமமானது. பல நேரம் அவர்கள் தங் களால் அர்த்தம் புரிந்துகொள்ள முடியாத வார்த்தை களை இயல்பாக உபயோகித்தார்கள். இரவில் வீடு திரும்பும் அவர்கள் உடல் நலிந்து நோவு கொண்டார் கள். குச்சிக்கால், குச்சிக்கை, குச்சித்தலை, குச்சிமூக்கு, குச்சிக் காது, குச்சிவிரல். ஆந்தைகள் வீட்டில் உறங்கும் ஆட்களின் ஊடே கால் பாவாமல் நடந்து கனவு களைத் திருடின. வேண்டாம் வேண்டாம் என விரல் அசைத்த குழந்தைகளின் முகம் பார்த்துச்

சிரித்தன. எந்த வார்த்தையாலும், குழந்தைகளின் கதையாலும் மீட்பு பெற முடியாத பழைய உரு நினைத்து அவன் நாளெல்லாம் கரைந்துகொண்டிருந்தான். ஆந்தைகள் திடீரென மறைந்தன. புதிய உருக் கொண்டன. பறக்கும் பருந்து போலாயின. சில நேரம் அவை மலையை நோக்கிப் பறந்து அலைந்தன. காற்று வீசும் திசையெங்கும் அவன் கனவுகளை மீட்கும் வழியைத் தேடினான். காற்று அவனிடம் ஏசிச் சென்றது. இரவில் அவனிருந்த வீட்டின் கதவின் வழியே எட்டிப் பார்த்துக் 'கோட்டிக்கார' மூதி, 'மூதி' என்றது. அது காற்றுதானா இல்லை ஆந்தைகளின் வேலையா – தெரியவில்லை.

இரவில் அவன் சூ, சூ எனக் கைகளை உயரே தூக்கி வெற்று வெளியில் எதையோ விரட்டி அலைந்தான். தூர ஊர்களுக்கு வேலைக்குப் போய்த் திரும்பும் ஆண்கள் வெகு சீக்கிரம் உறங்கிப் போகிறார்கள். பிள்ளைகள் உறக்கத்தில் எழுப்பப்படுகின்றன. இரவில் புறப்படும் வேனின் உள்ளே சாய்ந்து சாய்ந்து அலைந்தன உறங்கும் குழந்தைகளின் தலைகள். வைக்கோல் பிரியில் மூத்திரம் பெய்தன, உறக்கத்திலே. கருப்புக் கோட்டைக்குள் பிள்ளைகள் மத்தாப்பூ செய்தார்கள். குருவி வெடிக்குத் திரி பொருத்தினார்கள். ரப்பர் கொட்டை உடைத்தார்கள். நிப் அடுக்கினார்கள். பேப்பர் வெட்டி னார்கள், பசை காய்ச்சினார்கள். அடுப்பின் முன் தலை கவிழ்ந்து இரும்புக் குழாயில் புகை ஊதினார்கள். உப்பிய கன்னம் சுருங்கி நெளிந்தது. நகரின் மூலை மூலையில் டி.வி. ஆண்டெனாக்கள் தானாக முளைத்தன. அவை பகல் இரவெல்லாம் பிம்பங்களைப் பெருக்கின. ஓடும் குழந்தைகள் பந்து விளையாடினார்கள். டீ குடித்தார்கள், டீ சர்ட் போட்டார்கள், வயலின் வாசித்தார்கள், சாக்லெட் தின்றார்கள். வாசனை சோப் போட்டார்கள். டூமினிட்ஸ் நூடுல்ஸ் டூமினிட்ஸ் நூடுல்ஸ்... அம்மா எனக்குத் தா... எனக்குப் பிடிச்சது ரஸ்னா. நான் காம்ப்ளான் பாய் – பிம்பங்களின் உருக்கள் தெருக்களில் அலைந்தன. வீடு திரும்பும் பிள்ளைகள் வேனில் இருந்தபடியே பாதரச விளக்கு எரியும் கடைகளைக் கண்டு வெறித்துப் பார்வை நிலைகுத்தினார்கள். கிராமத் தெருக்களில் சினிமா போஸ்டர் கள் தானாக எழுந்து நடமாடிக்கொண்டிருந்தன. பெண் உடல்கள் கொண்ட போஸ்டரின் முன் பிள்ளைகள் குழுமி நின்று கத்தினார்கள். கனவுகள் அற்ற அவர்கள் உலகில் சிறு நத்தைக்குக்கூட இடமற்றுப் போனது. வானவெளி பார்த்து சுற்றிய கை விளையாட்டுகள் ஓய்ந்தன. கிட்டக் கிட்ட வந்தா முற்றி முற்றி வைப்பேன். வானம் சுழற்றி மங்கியது. திரிதிரி பொம்மக்கா... பொம்மக்கா திரிதிரி.

அவன் கனவுகளைத் திருடும் ஆந்தைகளை விரட்டிப்போனான் ஒரு நாளில். ஏய் ஏய் எனக் குரல் கொடுத்தான். அவை வெகு வேகமாகக் கனவுகளை மணல் துகளாக்கி மறைவிடத்தில் ஒளிந்தன. அவன் இரண்டு மலைகளின் ஊடே இருந்த இடத்தினை அடைந்தான். ஆந்தைகள் இப்போது வேஷ்டி சரசரக்க அவன் முன் தோன்றின.

அவன் தரையைப் பார்த்துப் பேசினான்.

"சுட்டுவிடுங்கள். குழந்தைகளின் குரல் இயல்பற்றுப் போய் விட்டது. சலிப்பின் பூதத்தால் அவர்களை அமுக்காதீர்கள்" மண்டி யிடுகிறான்.

என்ன நாடகம் இது என்றன ஆந்தைகள். அவனை விட்டுத் திரும்பி நடக்கத் தொடங்கின. அவன் போகாதீர்கள் என்று புலம் பினான். ஆந்தைகளில் ஒன்று அவனிடம் திருப்பிக் கேட்டது.

"கனவுகளுக்கு ஈடாக உன் நிழலைத் தருவாயா?"

"தருகிறேன்."

"உன் நிழலை இரண்டு மலையின் ஊடே கட்டித் தொங்க விடுவோம். சிதைப்போம்."

"நடக்கட்டும்."

"விரலை அறுத்து சத்தியம் செய்து நிழலைத் தா."

விரல் நுனியை வெட்டி சத்தியம் செய்தான். அவன் நிழல் அவனை விட்டுப் பிரிந்து எதிரே வந்தது. ஆந்தைகள் அதை இழுத்தன. இரண்டு மலையின் ஊடாக இழுத்துச் செல்லப்படும் தன் நிழலை அவன் பார்த்தபடி நின்றான். ஆந்தைகள் வேகமாக நிழலை இழுத்துக்கொண்டு ஓடின. அவன் உரு எடையற்றுப் போனது போலானது. வெள்ளைச் சோகை போல உடம்பானது. நடக்கச் சிரமப்பட்டான். அவன் நிழல் மறைந்துபோனதும் அவன் ஊர் திரும்பினான். வீடு திரும்பும்போது அவன் புலம்பினான்; நிழல். நிழல். நிழல். நிழல்.

சாம்பலோடையில் அலைந்தபோது மணல்கள் பரிதாபம் கொண்டு அவனை அழைத்தன.

'நிழலற்றவனே எங்களைக் கனவுகளாக்கித் தூவு. நாங்கள் கனவுகள்தான்.'

'சாம்பல் நிற மணல்களே. குழந்தைகளின் தலைமயிரைப் பொன்னிற மாக்கி இலைக் குரலில் பேசிக் கனவுகளை உருவாக்குங்கள்.' அதைக் கேட்டு ஆயிரம் மணல்கள் சிரித்தன. அவனுக்கு மணல்கள் தங்கள் விநோத நுட்பங்களைக் காட்டின. மணல் தொகுதி போலாகிச் சுருண்டு சிறு வீடானது. வீட்டின் உள்ளே விரல் அளவில் அறைகள் தோன்றின. மணல் அறைக்கும் ஜன்னல்கள் இருந்தன. பொட்டு போல நிலா அலைந்தது. அதன் பின்புறத்தே கடல் போல சிறு ஈரம் தெரிந்தது. சிப்பிப் பூச்சிகள் உடலோடு மணலில் எழுந்து தன் வாய் திறந்து அதிசயம் காட்டின. அவன் மணல்களின் விநோத ரூபம் கண்டான். மணல் துகள்களைக் கொண்டுபோய் உறங்கும் குழந்தைகள் உள்ள வீடுகளின் கூரைகளில் தூவினான்

மழைத் துளியைப் போலக் கனவு நேராக வழிந்து முகத்தில்பட்டது. கனவுகளின் ஈரம் படர பிள்ளைகளின் முகம் சிலிர்ப்பு கொண்டது.

எல்லாக் குழந்தைகளும் ஒரே கனவைக் கண்டன. நூறு குருவிகள் சேர்ந்து இசைத்த இசைப் பாடலைக் கனவில் கேட்டன. வளைந்த பறவையின் மூக்கில் ஏறிப் பிள்ளைகள் பல கடல் கடந்தார்கள். மீன்களின் செதில்களைக் கொஞ்சி வந்தார்கள். கைகளை ஆட்டி விளையாடினார்கள். அவனும் அந்தக் கனவினையே கண்டான்.

விடியும்போது குழந்தைகளின் உடலில் சுருக்கம் கொஞ்சம் மறைந்தன. குரல் மாறிப் பேசின. இருந்தும் பகலில் ஊர் வெறிச்சோடி யது. ஆள் எங்கே எனத் தேடி அலைந்தது வெயில். மலையின் ஊடே வேலைக்குப் போன குழந்தைகள் தொங்கும் அவன் நிழலைக் கண்டன. துயருற்ற அந்த நிழல் இருபுறமும் காட்டுக் கொடிகளால் கட்டப்பட்டு நடு ஆகாசத்தில் தொங்கியது. கருத்த அந்த அரூப வடிவம் கண்டு பிள்ளைகள் பயந்தார்கள் முதலில். பின்னும் அந்த முகம் தெரிந்து அதில் இருந்த கண்கள் உள் கிறங்கிப்போய் பாதை பார்த்தன. மலையின் ஊடாக சூரியன் வந்தபோது நிழல் அலைபடத் தொடங்கியது. தலையைத் தொங்கவிட்டது. பிள்ளைகள் நிழல் பொருட்டு பாடிப்போனார்கள். துயரப் பாடலின் வரிகள் மலைகளின் ஊடே சென்று எதிரொலித்தபோது காவல் காத்து மலையிடுக்கில் ஒளித்த ஆந்தைகள் கோபமுற்றன. நிழல் மீது எரிந்து விழுந்து கொத்தி ரணமாக்கின.

அவன் தன் நிழலைப் பார்க்க வேண்டிய பகலில் நடந்து மலை களுக்கு ஊடே வந்தான். நிழல் அவனைப் பார்க்கவேயில்லை. அவன் நாள் எல்லாம் அதைப் பார்த்துக்கொண்டிருந்தான். பாதங் களின் அடியில் இத்தனை நாளும் ஒளிந்து வாழ்ந்த தன் நிழலைப் பற்றி அவன் நினைத்து வேதனை கண்டான். வானைப் பார்த்தபடி கழிந்த அவன் பகல் வேளையில் பறவைகள்கூட அவன் நிழலைக் கண்டு கலங்கியே பறந்தன. ஒவ்வொரு இரவும் அவன் மணல் துகள்களால் கனவுகளை உருவாக்கினான். விடியும் போது கனவு மறைந்து குறுமணலானது. நடமாடும் போஸ்டர்கள் பிள்ளைகளை நெருங்கி உறவு கொண்டன. பிம்பங்களைப் போலாக முயன்ற குழந்தைகள். அவன் நிழல் வதையுற்றது. அந்த நிழல் சில நேரம் ஆந்தைகள் பேசிக்கொள்வதைக் கேட்டது. ஆந்தைகள் ஆட்கள் போலத்தான் பேசின.

'இப்படி நிழலை விற்று வருபவர்கள் பெருகிப்போனார்கள்' என்றது ஒரு ஆந்தை.

யார் அவர்கள்?

யார் அவர்கள்? என நிழல் தலையை அசைத்தது.

ஆந்தைகள் பதில் சொல்லின. 'வேறு நிழல்கள்.' குழந்தைகளுக்கு வேண்டி அலைந்த அம்மாக்கள். அதிசய வார்த்தைகளுக்கு ஏங்கிய எழுத்தாளன். பூச்சிகளின் இசையை வேண்டிய இசை நிபுணன். எங்கே தொங்குகின்றன என்றதற்கு அவை எல்லாப் பக்கமும் சுற்றிக் காட்டின. நாள் வளர வளர கடந்து போகும் நிலப்பரப்பெங்கும்

நிழல்கள் கட்டுண்டு கிடப்பதையோ, தொங்குவதையோ பிள்ளைகள் கண்டன.

நூறு பெண் நிழல்கள் தொங்கிய மரத்தைக் கடந்தபோது பிள்ளைகள் அரற்றின. அம்மா. அம்மா. வார்த்தைகள் மறந்து போன நிழல்கள் தன் முகம் காட்டாது முடங்கின.

விந்தையான வார்த்தை தேடியவனின் நிழல் உடை மரத்தின் கிளையில் தொங்கியது. குழந்தைகள் பொருட்டு நிழலை விற்றவன் தன் நிழலைக் கண்டு திரும்பும்போது வார்த்தை நிழலைக் கண்டு கேட்டான்,

'விந்தையான கதை இருக்கிறதா... குழந்தைகள் கேட்க' நிழல் சொன்னது,

'நத்தையிடம் கேள். சொல்லும்.'

நத்தையின் சுழன்ற ஓட்டிற்குள் எட்டாயிரம் கதை கொண்ட பிரதி சுருண்டு கிடந்தது. அந்தப் பிரதியின் பக்கங்கள் எல்லா நாளும் எழுதப்பட்டன. நத்தைகள் அதை எச்சில் கொண்டு எழுதின. ஈர வார்த்தைகள் உலர்ந்து ஓடாயின. அவனைக் கண்ட நத்தை தன் கதைப் பிரதியைச் சுருட்டி மரத்தில் ஒண்டியது.

அவன் விண்ணப்பித்தான். உன் கண்களின் தயை வேண்டும். கழற்றிக்கொண்ட உன் பிரதியிலிருந்து இரண்டு வரிகள் போதும். ஓடு அசையாமல் நின்றது. பின் நத்தையின் தொடு கொம்பு வெளிவந்து அவன் முன் தோன்றியது. அவனைக் கண்டு நத்தை சொன்னது, 'உன் இடத்தின் கதை வேண்டுமா'

'சொல்.'

'என்னால் அளக்கப்பெற்ற உன் ஊரின் சதுரம் மிகப் பெரியது. என் எட்டு தலைமுறையினர் ஊர்ந்து மடிந்தே உன் ஊரை அளந்தோம். உன் ஊரின் மரங்களின் உச்சியைத் தொட எங்களுக்கு ஏழு வருடம் வேண்டியிருந்தது. ஒரு இலையைக் கடக்க நாலு மணி ஆகிறது. என் கண் கொண்டு சொன்னால் உன் கதை விந்தையாகி விடும்.'

அவன் விந்தை அறிந்தான். நத்தை தன் பக்கங்களை எச்சிலாக்கிக் கொண்டு சுருண்டது. விந்தையான கதையைச் சொல்ல எவரும் கிடைக்கவில்லை அவனுக்கு. ஆந்தைகள் அவனைக் கண்டு கேலி செய்தன. அவன் நிழல் ஒரு நாளில் சிதைவுற்றது. அவன் அதன்பின் தன் உருவம் மெலிந்து வரக் கண்டான்.

ஊரில் ஆந்தைகளோடு பல பிம்பங்களும் சேர்ந்து அலைந்தன. ஒரு நாளில் மிகப்பெரிய இரும்புத் துண்டுகள் ஊரெங்கும் இறக்கப் பட்டன. அவன் அதிர்ச்சிகொண்டு என்ன என்ன என்றான்.

'ஒளி – ஒலி' எனப் பதில் வந்தது.

கோட்டையின் வழியே மாலையில் வந்த பிள்ளைகள் சம்மணமிட்டு

அதன் முன் அமர்ந்தன. வார்த்தைகள் அவர்களை உறிஞ்சத் தொடங்கின. பொய்ப் பரவசம் கொண்டு முயங்கிய பிள்ளைகள் மீண்டும் கிழ உரு அடைந்தார்கள்.

தீப்பெட்டிச் சக்கைகளில் பிள்ளைகளின் விரல்கள் இரவு பகலாக அசைந்தன. வற்றிய மண்டைகள் திருகிக்கொண்டன. பத்து வயதுப் பெண் பிள்ளை நிறை ஆவியாக நடந்து போனாள்.

அவன் உரு அறுபட்டது. காற்றில் மணல் அலைந்தது. பழக்கப் பட்ட பாதையில் கிழ உருக்கள் தள்ளாடிப்போயின. நிழல் பற்றிக்கூடப் பாட்டு கேட்டது நத்தை. தன் காலத்தைச் செலவு செய்து முடிக்க முடியாத அந்த நிலப்பரப்பில் மின்சாரம் பாய்ந்து இறந்து போனது நத்தை.

வெற்றுக் கூடுகளை ஆட்கள் பொறுக்கி விற்றார்கள். இரவில் மணல் கனவாக மாறி ஆள் இல்லாத தனிமையில் அலைந்தது. செடிகள், மலைகள், பூக்கள், எறும்புகள், பாம்புகள், வெட்டுக் கிளிகள், குருவிகள், மரங்கள் அந்தக் கனவில் இணைந்து கனவு கொண்டன.

மாறாத ஆந்தைகளின் கள்ளத்தனம் முழியில் தத்தளிக்கிறது.

கிழட்டுக் குரல்கள் நடுங்கிப் பேசுகின்றன. துயரம் பொறுக்காத பறவைகள் நெடுந்தூரம் பறந்து பாறையில் மோதித் துறந்தன உயிரை.

அறுபட்ட சிறகுகள் வீழ்ந்துகொண்டேயிருந்தன. ஆந்தைகள் தீப்பெட்டியில் உள்ள குச்சிகளைப் போல மாற்றி அடைத்தன குழந்தைகளை.

மெழுகுத் தலைக் குச்சிகள் எரிந்தன. சுவர்கள் கருக வெடிப்புற்றது இடம். தொங்கும் நூறு பெண் நிழல்கள் துடிக்கின்றன. எங்கே எங்கே எனப் பறிக்கப்பட்ட நிழல்கள் தொங்கும் மரங்களின் ஊடே விரைகிறது. நவீன மின்சார ரயில்.

கடவுள் குரலில் பேசி

ஜான் வீடு திரும்பும் வழியில் விசாரணைக்காரர்களால் விசாரிக்கப்பட்டான். அவர்கள் கேள்விகள் எல்லாவற்றிற்கும் ஜானிடம் பதிலிருந்தது. அவர்கள் அந்த நாடகத்தைப் பற்றியே திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு மாலையும் அந்த நாடகம் சதுக்கத்தில் நடைபெறுகிறது. தினமும் அதில் நடிக்கும் நடிகர்களின் எண்ணிக்கை அதிகமாகிக்கொண்டே போகிறது. முதல் நாள் அன்று ஜான் ஒருவன் மட்டும் அந்தச் சதுக்கத்தில் சிறு மேஜையைப் போட்டு, ஏராளமான காகிதங்களை வைத்து எழுதிக்கொண்டிருந்தான். பொது இடத்தில் உட்கார்ந்து எழுதும் அவனை மக்கள் வேடிக்கை பார்த்துப் போனார்கள். கேட்கும் சிலரிடம் இது தனிநபர் நடிக்கும் நாடகம் என்றான். நாடகத்தின் ஒரே பாத்திரம் ஜான். நாடக ஆசிரியன் பல காலமாக முயன்று நாடகம் எழுத முடியாமல் தோற்றுக்கொண்டிருக்கிறான். நாடகம் எழுதுவதற்கான காகிதங்கள், குரோட்டோவெஸ்கி நாடக அரங்கு பற்றிய புத்தகம், வில்ஸ் பாக்கெட், மை பேனாக்கள், சிவப்பு நிற சிகரெட் லைட்டர். அவன் லைட்டரைக் கொளுத்துவதும், சிகரெட்டை எடுக்க முனைவதும், பின் விட்டுவிடுவதும் கண்டு மாபெரும் அபத்த நாடகம் என மக்கள் சிரித்தார்கள். ஜான் நாடகம் எழுத பேப்பர்களை வேகமாக எடுப்பான். மக்கள் கூட்டம் சிரிக்கும். பின் அவன் நாடகப் பாத்திரங்கள் பெயரை வரிசையாக எழுதுவான். அவற்றை வாய்விட்டுப் படிப்பான். இப்படியாகத் தனி ஆளாக நடந்த ஜானின் நாடகத்தின் இரண்டாம் பாத்திரம் இரண்டாம் நாள் கிடைத்தது. இரண்டாவது பாத்திரமாக ஒருவன் மாலை பேப்பரை வாங்கிக் கொண்டு வந்து ஜானுக்குப் பக்கமாக உட்கார்ந்து தினமும் படித்தான். சுவாரஸ்யமான அரசியல் தலைப்புச் செய்திகள். நடிகைகளின் ரகசிய உறவுகள், குரங்கு குசலா, சிந்துபாத்தின் கன்னித் தீவு இப்படி. ஜான்

நாடகம் எழுவதை நிறுத்திவிட்டு பேப்பர் படிப்பவனோடு சிறிது நேரம் சேர்ந்து படிப்பான். அவர்கள் அரசியல் சர்ச்சை செய்து கொள்வார்கள். இப்படியாக ஜானின் நாடகத்தில் இப்போது நாற்பது பாத்திரங்கள் சேர்ந்துவிட்டன. அவர்கள் வருவார்கள். பேசிக்கொள்வார்கள். ஜான் சொல்வது போலக் கேட்பார்கள், அல்லது தங்கள் வேலைகளைச் செய்வார்கள். ஜான் பாத்திரங்களை ஒழுங்குபடுத்துவதில்லை. பாத்திரங்கள் தங்கள் வசனங்களைத் தாங்களே பேசினார்கள். ஒருவர் டைப் அடிப்பது போல அடித்துக்கொண்டிருப்பார். ஒருவர் கணக்கிட்டபடி இருந்தார். இன்னும் சிலர் பாடம் நடத்தினார்கள். தினமும் புதுப் புதுப் பாத்திரங்கள் வந்து சேர்ந்துகொண்டிருந்தன. பாத்திரங்கள் அதிகமான ஒரு நாளில் இரண்டு காவலர்கள் வந்து ஜானிடம் விசாரித்தார்கள்.

'என்ன நடக்கிறது இங்கே?'

'நாடகம்.'

'யார் எழுதியது?'

'யாரும் எழுதவில்லை.'

'பின்னே?'

'அவர்களாக வருகிறார்கள், நடிக்கிறார்கள்... சொல்லப்போனால் நீங்கள் இருவரும்கூட இரண்டு பாத்திரங்கள்தான்.'

'நாங்கள் விசாரிக்க வந்திருக்கிறோம்.'

'விசாரிக்கும் இரண்டு பாத்திரங்கள்.'

'நாங்கள் நினைத்தால் உன்னை எப்படி வேண்டுமானாலும் நடத்தலாம், கைது செய்யக் கூட முடியும்.'

'நாடகம் எப்படி வேண்டுமானாலும் மாறலாம்.'

அவர்கள் அவர்களுக்குள்ளாகப் பேசிக்கொண்டார்கள். சில பாத்திரங்கள் தங்கள் வேலைகளை விட்டு இதை வேடிக்கை பார்த்தன. காவலர்கள் பேசாமல் திரும்பிப் போய்விட்டார்கள். மறுநாள் மாலையிலும் வந்தார்கள். வந்து நடப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். நாடகத்தில் புதிதாக வந்து சேர்ந்திருந்த ஒரு பாத்திரம் ஓடியபடி இருந்தது. இரண்டு அரசியல்வாதிகள் பேசிக் கொண்டார்கள். ஜானிடம் காவலர்கள் வந்து நின்றார்கள். அவர்கள் முகம் வெளுத்துப் போயிருந்தது.

'இது நாடகமில்லை. நீங்கள் எதிர்ப்பாளர்கள்.'

'தெரியவில்லை எனக்கு.'

'நீ என்ன செய்கிறாய்?'

'நாடகம் எழுதுபவன்.'

'இதன் முன்பு என்ன நாடகம் எழுதியிருக்கிறாய்?'

'சவரக் குறிப்புகள்'

அவர்கள் சிரித்துவிட்டார்கள். ஜான் திரும்பிப் பார்த்தபோது சதுக்கம் எங்கும் ஆட்கள் ஏதாவது ஒன்றைச் செய்து கொண்டிருந்தார்கள். சிலர் குடைகளை விரித்தபடி முன்னும் பின்னும் நடந்தார்கள். ஜான் காவலர்களிடம் திரும்பினான். அவனுக்கு அவர்கள் நாடகப் பாத்திரங்கள் போலவே தோன்றினார்கள். நாடகப் பாத்திரங்கள் சொல்லும் வசனத்தைத் தான் குறித்துக்கொள்ள வேண்டுமென முயற்சி செய்தான். காவலர்கள் விசாரித்ததை அவன் பேப்பரில் குறித்துக்கொண்டதைக் காவலர்கள் கண்டார்கள். காவலர்கள் அந்தப் பேப்பரைப் பிடுங்கிக் கொண்டார்கள். பின் அவனிடம் கேட்டார்கள்.

'எங்கே அந்த நாடகப் பிரதி?'

'வீட்டில் இருக்கிறது.'

"வா, போகலாம்...

'நாடகம் இன்னமும் முடியவில்லை.'

காவலர்கள் சதுக்கத்தில் இருந்த சிமெண்ட் பெஞ்சில் உட்கார்ந்து கொண்டார்கள். சதுக்கம் எங்கும் வெளிச்சம் பரவியது. நேரமாகிக் கொண்டே போனது. சோடியம் விளக்கு எரிந்தது. அவரவர்களாகக் கலைந்து போகத் தொடங்கினார்கள். வெகுநேரம் வரை பேப்பர் வாசிப்பவர்களும் ஜானும் மட்டுமே இருந்தார்கள். கடைசியாக அவன் பேப்பரைச் சுருட்டிக் கையிடுக்கில் வைத்துக் கொண்டு ஜானிடம் சொன்னான்.

'எவ்வளவோ நடக்கிறது வெளியே.'

ஜான் அவனுக்கு பதில் சொல்லவில்லை. காவலர்களைக் கடந்து போகும்போது அவன் மாலை பேப்பரை ஆட்டி வணக்கம் வைத்துப் போனான். ஜான் மேஜையைத் திருப்பி ஒரு பழைய கட்டடத்தின் உள் கொண்டு போய்ப் போட்டு வைத்தான். காவலர்கள் அவனோடு வெளியே வந்தார்கள். ஜான் சிகரெட் பிடித்தான். அவர்கள் ஜானிடமிருந்து சிகரெட் வாங்கிக்கொண்டார்கள். பின் அவர்களில் ஒருவன் கேட்டான்,

'நாங்களும் இந்த நாடகத்தில் நடிப்பவர்கள் என்கிறாயா?'

'இருக்கலாம்.'

'எனக்கு அப்படித்தான் படுகிறது.'

மற்றொரு காவலர் முறைத்தார். உடனடியாகப் பதில் சொன்னார்.

'நாம் எல்லா விவரங்களையும் சேகரித்து அனுப்ப வந்திருக்கிறோம். பாத்திரங்கள் அல்ல.'

'அப்படியானால் அங்கே நடந்தது நாடகமல்ல.'

'பின் என்ன அது?'

'அவரவர் காரியங்களை அவரவர் செய்கிறார்கள். அதைப் பார்க்கும் போது நமக்கு அலுப்பும் எரிச்சலும் வருகிறது. குறிப்பாக அந்த

டைப்பிஸ்ட், கணக்குப் பார்ப்பவன், வாத்தியார், கேஷியர். சே...

'நீ அவர்களோடு சேர்ந்து பேசுகிறாய்.'

'காவலர் என்பதும் பாத்திரம்தான்..

'உளறாதே, நீ அரசாங்கத்தால் அனுப்பப்பட்ட ஆள். ஊழியன்.'

ஜான் அவர்கள் பேசுவதைக் கேட்டபடி வந்தான். பின் அவர்களிடம் திரும்பிச் சொன்னான்,

'பாத்திரங்கள் பேசிக்கொள்வது போல நிஜ வாழ்க்கையில்கூட எவரும் பேசிக்கொள்வதில்லை. அற்புதம். மிக அற்புதம்.'

'உளறாதே. இது நிஜ வாழ்க்கை. உன் நாடகம் அல்ல. அத்தோடு நாங்கள் நடிகருமல்ல.'

'நடிகர்கள் எப்போதும் நடிகர்களாகவே இருப்பதில்லை. அவர்களும் வீடு திரும்பி விடுகிறார்களே.'

'எங்களைக் குழப்பி. நீ எங்களை உன் நாடகத்தில் நடிக்க வைக்கப் பார்க்கிறாய். அப்படித்தானே, உன் வீடு எங்கே?'

ஜான் அவர்களிடம் பேசவேயில்லை. மூவரும் நடந்தார்கள். இருட்டடைந்த சந்துகள், வெங்காய வாடை வீசும் தெருக்கள். நிழல்கள் சரிகின்றன. வெளிச்சம் மங்கி நிற்கும் வீடுகள். காரைகள் பெயர்ந்த குடியிருப்புகள். மரங்கள்கூட இலைகள் உதிர்ந்து நின்றன. நாய்கள் குரைக்காது பின்தொடர்கின்றன. தெருவை அடைத்தபடி கிடக்கும் கோவில் மாடுகள். யார் வீட்டிலோ கேட்கும் பாட்டுச் சத்தம். பிள்ளைகள் பாடம் வாசிக்கும் சப்தம். காவலர்கள் மீண்டும் பேசிக்கொள்ளத் தொடங்கினார்கள்.

'நாம் வீடு திரும்ப வெகு நேரமாகிவிடும்.'

அவர்களின் சலிப்பு தாங்க முடியாததாகியிருந்தது. ஜான் சிறிய ஓட்டு வீட்டில் இருந்தான். ஜானின் மனைவி உறங்கியிருந்தாள். கதவைத் தட்டியதும் திறந்து வந்தாள். அவள் காவலர்களைப் பார்த்துவிட்டு உள்ளே வந்து லைட்டைப் போட்டுக் கேட்டாள்,

'இப்போதுதான் நாடகம் முடிந்ததா

'இன்னும் முடியவில்லை.'

'இவர்கள் யார் நடிப்பவர்களா

'நாடகப் பிரதி வேண்டி வந்திருக்கிறார்கள்.'

அவள் மூலையிலிருந்த பானையிலிருந்து தண்ணீர் குடித்து வந்தாள். பின் அவனைப் பார்த்துச் சொன்னாள்.

'உறக்கம் வருகிறது எனக்கு. சீக்கிரம் அவர்களை அனுப்பு.'

அவர்கள் வீட்டைச் சுற்றிப் பார்த்தார்கள். மரமேஜை கிடந்தது. பெரிய கிதார் ஒன்று. சில நாடகப் பொருள்கள், பேப்பர்கள், பூ ஜாடி, மீன் தொட்டி, காலி சிகரெட் பெட்டிகள், வர்ணக்காகிதங்கள். அவர்கள் இருவரும் ஸ்டூலில் உட்கார்ந்தார்கள். ஜான் பழைய

பெட்டியில் தேடி நாடகப் பிரதியை எடுத்து வந்தான். பழுத்துப் போன காகிதத்தில் கறுப்பு மசியில் எழுதப்பட்ட நாடகம். அவர்கள் அந்தக் காகிதத்தை எடுத்துப் படித்துப் பார்த்தார்கள். பின் சுருட்டிக் கொண்டார்கள் ஜான் அவர்களுக்கு அந்த நாடகத்தைப் பற்றி விளக்கிப் பேசினான்.

'மூன்று பாத்திரம் மட்டும்தான். ஒன்று கடவுள். மற்ற ஒன்று சவரக்காரன். மூன்றாவது நபர் காத்திருப்பவன்... நாடகம் கடவுளுக்கும் சவரம் செய்பவனுக்கும் நடக்கும் உரையாடல். உங்களுக்கே தெரியும் தானே.. முகத்தில் மயிர் இருப்பது எந்தக் கடவுளுக்குத்தான் பிடிக்கும், சொல்லுங்கள். மழிக்கப்பட்ட கடவுள் முகம்தான் எல்லோருக்கும் வேண்டும். இங்கே கூட அப்படித்தான். உங்களுக்குத் தெரியும்தான்.'

அவர்கள் அவனிடம் உரக்கப் பேசினார்கள்.

'நாங்கள் இதை நாடகம் போடக் கேட்கவில்லை.. விசாரணைக் காகக் கேட்கிறோம்... இதன் பிரதிகள் பல இடங்களுக்கும் அனுப்பப் படும். நிச்சயம் உனக்குத் தண்டனை கிடைக்கும்.'

'இதை நானாக எழுதவில்லை. சவரம் செய்யும் இடத்தில் பேசிக்கொண்டவை. இவை நாவிதனின் வசனங்கள். நான் அவற்றைக் குறித்து வந்தேன்... அவ்வளவுதான்.'

அவர்கள் திரும்ப ஒரு முறை பிரதியைச் சரிபார்த்துக்கொண்டார்கள். பின் அவர்கள் கிளம்பிப் போனார்கள். நள்ளிரவாதலால் தெருவில் ஜன நடமாட்டமில்லை. வெறிச்சோடிய தெரு. காவலர்களில் ஒருவன் பேசினான்.

'அந்த ஆளை என்ன செய்யப் போகிறது அரசாங்கம்?'

'நமக்குச் சம்பந்தமில்லாதது.'

'நாளையும் நாம் சதுக்கத்துக்கு வர வேண்டுமா?'

'தினமும் நம் வேலை அதுதான்.

ஞாயிற்றுக்கிழமையன்று ஜானின் நாடகத்தில் நூறு பேர்கள் நடித்தார்கள். இடைவிடாத சப்தம், கூக்குரல், நிறைய பெண்கள். பெண் பாத்திரங்களில் சில ஜானிடம் வந்து நின்று ஏங்கிக்கேட்டன.

'காதல் நாடகம் எழுதேன் ஜான்.'

'எனக்குத் தெரியாதது அது.'

'ஜான் காதல் இல்லாத நாடகம் வேண்டாம்... இளம் உள்ளங்களை வதைக்கும் காதல் நாடகம் போடு ஜான்.'

'மிகச் சிறந்த நடிகையாக இருக்கிறாய் நீ..

அந்தப் பெண் வெட்கப்பட்டாள். ஜானிடம் ஒரு வயதான நபர் வந்து நின்று பேசினார்.

'ஜான் என் கண்ணே. நான்தான் அப்பா

‘யாருடைய அப்பா...

‘நாடகத்தில் வரும் அப்பா... நான். நீ நாடகங்களே பாத்த தில்லையா...

‘இருக்கலாம்.

அப்பா பாத்திரம் ஜானை விட்டு விலகிப் போனதும் ஜான் காகிதங்களைப் புரட்டினான். கோழி மயிர் சொருகி, வைக்கோல் தொப்பி வைத்த பாத்திரம் ஒன்று மஞ்சள் சட்டையிட்டு, கறுப்பு பேண்ட்டைக் கால் வரை மடித்துவிட்டு, பழைய கால பூட்ஸ் போட்டு, கிடாரோடு வந்து நின்று சிரித்தது. அவன் கிடாரிலிருந்து சப்தம் விநோதமாக வந்தது. அவன் ஜானிடம் மண்டியிட்டுக் கேட்டான். ‘ஜான் என் பிரிய நண்பனே... நான்தான் சாகசக்காரன். கோமாளி. என் பாத்திரம் என்ன சொல் ஜான்.’ அவனைப் பார்த்ததும் ஜானுக்குச் சிரிப்பு வந்தது. ‘உனக்கு எதற்குப் பாத்திரம். உன் சாகசங்களை நீ காட்டுவதுதானே உன் இயல்பு. உன்னை நான் பழைய நாடகங்களில் பார்த்திருக்கிறேனே’ என்றான். கிடாரிலிருந்து இனிய சப்தம் வர அவன் பேசினான். என் தாத்தாவின் தாத்தாவின் தாத்தா கப்பலில் நாடகம் நடித்தவர். ஷேக்ஸ்பியர் நாடகங்கள் எல்லாம் அவர்தான் நடித்தார். அவரிடம் ஹாம்லெட்டின் கத்தி இருந்தது. ஒத்தல்லோவின் கர்சீப் இருக்கிறது. நீண்ட கால் கொண்ட மதுக் கோப்பைகள் இருந்தன. ஒத்தல்லோவின் கர்சீப்பைத்தான் என் தாத்தா தலையில் கட்டிக்கொண்டு வருவார். ஒத்தல்லோ என்ற கறுப்பனின் இசைப் பாடல் இதோ. படுவேகமாக வாசித்தான். கூட்டம் சிரித்தது. அவன் தன் வைக்கோல் தொப்பியை எடுத்துச் சுழற்றி வீசினான்.

ஜானின் பேனா பலவாறாக முயன்று புதிய நாடகம் எழுதப் பார்த்தது. யாருடைய கதையை நாடகமாக்குவது என யோசித்தான். சிறையில் இறந்துபோன நாடகக்காரனைப் பற்றிய நாடகத்தை எழுதலாம் என நினைத்தான். அவனுக்கு நாடகத்தில் கோரஸ் பாடுவது பிடித்திருந்தது. ஜானுக்கு கோரஸ் பாடல்கள் பிடித்திருந்தன. கோரஸ்காரர்கள் சுழன்று சுழன்று பாடும் நாடகம் எழுத விரும்பினான். சதுக்கத்தில் வெயில் மிஞ்சியிருந்தது. இன்றைக்கு நிறைய பாத்திரங்கள் நடிக்கிறார்கள் என நினைத்துக்கொண்டான். கடற்கரையில் உலவும் யானை என ஒருவன் அவனாக நினைத்துக்கொண்டு கைகளை உயரே தூக்கிப் பிளிறிக் காட்டி நடித்துக்கொண்டிருந்தான். அன்றைக்கு வேடிக்கை பார்க்கக் குழந்தைகள் நிறைய வந்திருந்தன. அவை ஜான், ஜான் எனக் கூச்சலிட்டன. சிறு கண்ணாடி கொண்டு ஜான் மீது வெயிலைப் பாய்ச்சி கண்களைக் கூச வைத்தன.

ஜான் சதுக்கமெங்கும் அலைந்தான். அவ்வளவு பெரிய நகரத்தில் மக்கள் கூட்டம் நிறையவேயிருந்தது. எல்லாவற்றையும் ஆட்கள் விசாரித்தார்கள். ஜானிடம் அப்பா பாத்திரம் வந்தது.

“ஜான்... ஆசிர்வதிக்கப்பட்ட மகனே... என்னை என்ன செய்யப்

போகிறது. வயதான அப்பாவுக்கு எப்போதும் தனிமை தானா.'

'நீங்கள் பேசுவது எனக்குப் புரியவில்லை.'

'நீ நாடகம் எழுதுபவன், ஜான். நான் பாத்திரம். பலரின் நாடகத்திலும் வந்த பாத்திரம்.

'நீங்கள் மட்டுமா.

'நான் மட்டுமில்லை. அம்மா, அக்கா, காதலி, காதலன், நீதிபதி, அச்சுகா, பாலி எல்லாம் பாத்திரங்கள். என் ஜானே... எனக்கு மூன்று பெண்கள் உண்டு.'

'நான் என்ன செய்ய வேண்டும்.'

'அப்பாவை எதிர்க்கும் மகன் நாடகம் எழுதாதே, ஜான். அப்பா வயதானவர், நோயாளி, சிடுசிடுப்பானவர். இப்படி வசனம் எழுதாதே ஜான்...அப்பா நல்லவர், சிரிப்பாளி, ஜான்.'

'போய்விடுங்கள். இப்போது நான் நாடகம் எழுதவில்லை.'

ஜான் என்னை மறக்காதே... ஜான். .ஜான். பல குரல்கள் கேட்டன. ஜான் மேஜை மீது அமர்ந்துகொண்டு வேடிக்கை பார்க்கும் கூட்டத்தின் பக்கம் திரும்பிப் பார்த்தான். அவனைப் பார்த்ததும் சிலர் சிரித்தார்கள். ஜான் சிகரெட் பற்ற வைத்துக் கொண்டான். நாயை வைத்துக்கொண்டு உலவும் ஒரு வயதானவன்கூட இன்றைய நாடகத்தில் இருந்தான். ஜானிடம் ஒருவன் கேட்டான்,

'இந்த நாடகத்தின் பெயரென்ன...

'கூட்டம்.'

பேப்பர் வாசிக்கும் அவன் ஜான் பக்கம் திரும்பிக் கேட்டான்,

'எங்கே நடக்கிறது கூட்டம்.. யார் பேசுகிறார்கள்.'

'தெரியவில்லை.'

'மாலை பேப்பரில் செய்தி வரவில்லையே... இரண்டு காணாமல் போன பையன்கள் படம்தான் வந்திருக்கிறது.'

ஜான் காவலர்கள் வந்து கொண்டிருப்பதைப் பார்த்தான். உடன் வேறு ஒரு ஆள் வேறு வந்தான். அவன் உயரமானவனாக இருந்தான். அவர்கள் சதுக்கத்தின் பக்கம் வந்து நின்று கேட்டார்கள்,

'ஜான் உன் நாடகத்தை நிறுத்து.'

'நான் எந்த நாடகமும் நடத்தவில்லை.'

'உன் கூட்டத்தை நிறுத்து.'

'அது என் வேலையில்லை. உங்களுடையது.'

காவலர்கள் உரக்கக் கத்தினார்கள். சதுக்கம் விரைவில் காலியானது. உயரமான நபரின் கையில் நாடகப் பிரதி இருப்பதை ஜான் பார்த்தான். உயரமான நபர் மீசை மழிக்கப்பட்டு பெரிய கண்களோடு இருந்தார். அவர் ஜானைப் பார்த்துக் கேட்டார்,

'இது உன்னுடைய நாடகம்தானே?'

'இல்லை. குறிப்பு.

'சவரக் குறிப்பு... இதை நிகழ்த்திக் காட்டு... எதுவுமே புரியவில்லை வாசிக்க.'

'என்னிடம் நடிகர்கள் இல்லை.'

'எங்கே போனார்கள்?'

'நான் நடிகர்களைத் தேடுவதுமில்லை... அவர்கள் என்னுடன் நடிப்பதுமில்லை.'

'இப்போது என்ன செய்வது?'

'நீங்கள் நினைத்தால் நாம் மூவரும் நடிக்கலாம்... மூன்று பாத்திரங் கள்... நீங்கள் கடவுள். நான் நாவிதன்... மூன்றாம் ஆள் காத்திருப்பவன்.'

சதுக்கத்தில் பலர் பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஜான் தன்னுடைய சட்டையைக் கழட்டி வைத்துவிட்டுத் தரையில் உட்கார்ந்தான். அவன் எதிரில் இரண்டு கல்லைத் தூக்கிப் போட்டு அதிகாரியை உட்காரச் சொன்னான். மற்றொரு ஆள் தள்ளி நின்றான்.

ஜான் பாக்கெட்டிலிருந்து சிறிய கத்தியை எடுத்து வைத்துக்கொண் டான். அதிகாரியின் சட்டையும் கழட்டப்பட்டது. ஜான் அவருடைய முகத்தைக் கைகளால் தடவிவிட்டுக் கேட்டான்,

'கடவுளே உங்கள் முகம்தான் எவ்வளவு வழவழப்பானது. நீங்கள்தானே எல்லாவற்றிற்கும் அதிகாரி.' ஜானின் நாடகத்தில் கடவுளுக்கு வசனம் இல்லை. கடவுளின் மொழி பற்றி யோசிக்க யோசிக்க ஜானுக்குக் குழப்பமே மிஞ்சியது. அதனால் கடவுள் தலையை மட்டும் ஆட்டினார். காத்திருப்பவன்தான் அதிகம் பேசினான். காத்திருப்பவன் ஒரு கைதியைப் போல, குடும்பஸ்தனைப் போல, கல்லூரி மாணவனைப் போல பல குரலிலும் பேசினான். ஜானின் கத்தி கடவுளின் கன்னங்களில் உரசியது. ஜான் இப்போது நாவிதனாகவே மாறிப் போயிருந்தான். அவன் குரல் உயர்ந்து கேட்டது.

'நீசத்தனமானவனே... உன் பெயர் கடவுளா. முட்டாள். சவரக்கத்தியின் முனையால் எந்தச் சரித்திரத்தையும் மாற்ற முடியும் தெரியுமா உன் பெயர் என்ன? கர்னலா சக்கரவர்த்தியா, எண்ணெய் வயலுக்குச் சொந்தக்காரனா, உளவாளியா யாராயிருந்தா லும் சவரக் கத்தியின் நுனியில் உன் தலை எப்போதும் இருக்கிறது தெரியுமா. '

காத்திருப்பவன் அவசரப்படுத்தினான்.

'இன்னுமா சவரம் செய்கிறாய்... நேரமாகிறது. சினிமா போக வேண்டும். காதலியைச் சந்திக்க வேண்டும். தப்பிக்க வேண்டும். வேகம்.

கடவுளாக இருந்த அதிகாரியின் முகம் வெளுத்துக்கொண்டு

வந்தது. சதுக்கத்தில் ஆட்கள் குறைந்து கொண்டிருந்தார்கள். சோடியம் விளக்கு வெளிச்சத்தில் ஜானின் கண்கள் மின்னின. அதில் இனம் புரியாத குரூரம் தோன்றுவதைக் கண்ட அதிகாரி சப்தமிட்டான், 'ஜான்.. நாடகம் போதும்... நிறுத்து.'

'கடவுளுக்குப் பேச உரிமையில்லை... இன்னமும் சவரம் பாக்கியிருக்கிறது' காத்திருப்பவன் ஜானின் முதுகில் அறைந்து பேசினான்.

'கிழப் பிணமே... அவசரமாகச் சிரைத்துவிடு... அவசரம்.' ஜானின் கத்தி அதிகாரியின் தொண்டையின் கீழே போனது. ஜானின் கண்களை அவர் பார்த்தபடியிருந்தார். ஜான் சரால் என ஒரு இழு இழுத்தான். ரத்தம் பெருகியது. காவலர்கள் தன்னிலை பெற்றார்கள்.

'ஜான். டேய்... என்ன செய்கிறாய்?'

அதிகாரி ஜானை எட்டி உதைத்தார். ஜான் தள்ளிப்போய் விழுந்தான். அவர்கள் ஜானைப் பிடித்துக்கொண்டார்கள். அதிகாரி கர்சீப்பால் கழுத்தை ஒத்திக்கொண்டார். ஜான் முகத்தை உலுக்கிக் கேட்டார். ஜான் தலையைத் திருப்பாது சொன்னான்,

'நாடகம் அது.'

'என்ன நாடகம்... மடையனே... உன் விரல் நகங்களைப் பிடுங்கினால்தான் உனக்குச் சொரணை வரும்.'

அவர்கள் ஜானைத் தள்ளிக்கொண்டு போனார்கள். ஜானின் மேஜை, பேப்பர் அப்படியே கிடந்தது. ஜான் தெருவில் நடக்கும்போது நாடகத்தில் நடிப்பது போலவே அவனுக்குத் தோன்றியது. உடன் வரும் மூன்று பாத்திரங்களுடன் தான் போவது போலவே இருந்தது. ஒருவன் கையில் நாடகப் பிரதி இருந்தது. ஜான் முடிவடையாத தன் நாடகத்தை நினைத்துக்கொண்டே போனான். ரத்தம் வழிந்த இடத்தில் எரிந்தது அதிகாரிக்கு. ஜான் நாடகப் பாத்திரம் போலவே மெதுவாக உடன் நடந்துபோனான்.

காலாட்படை பற்றிய குற்றப்பத்திரம்

நெடு நாள்களுக்கு முன்பு நான் இந்த வேலையை ஏற்றுக்கொண்டபோது, இது போன்ற ஒரு குற்றப் பத்திரத்தைப் பின்னாளில் நான் எழுத வேண்டியது வரும் என ஒருபோதும் நினைத்ததில்லை. இந்த இருபது வருடங்களாக எனக்கு ஏற்பட்ட நிகழ்ச்சி களையும் தொல்லைகளையும் மனதில் கொண்டே நான் இந்தக் குற்றப் பத்திரத்தைத் தயாரித்து உள்ளேன். இதை நான் யாரிடம் சமர்ப்பிப்பது என இன்னமும் முடிவு செய்யவில்லை. எனக்குத் தெரிந்த சிலரிடம் நேரிலும், கடிதத்திலும் இதைப் பற்றி எழுதியபோதெல்லாம் அவர்கள் இதை என் கற்பனையின் குழந்தை எனக் கிண்டல் செய்தார்கள். ஒருமுறை நான் இதைப் பற்றி நம் நாட்டின் முதல் பிரஜையானவருக்கே கடிதம் எழுதி உள்ளேன். அவரிடமிருந்து கையெழுத்திட்ட புகைப்படம்தான் எனக்குப் பதிலாக வந்தது. இந்தப் புகைப்படத்தைக் கூடப் பத்திரப்படுத்தி வைக்க முடியவில்லை. அலுவலக மேஜையில் வைத்த இதுவும் காணாமல் போய்விட்டது.

நான் 1956ஆம் ஆண்டு என் இருபதாம் வயதில் அரசாங்க ஆவணக் காப்பகத்தின் சேமிப்பு அறைக்கு உதவியாளனாக வர நேர்ந்தது. அந்த அலுவலகம் சிவப்பு நிறச் செங்கல் கட்டடத்தின் பின் பகுதி. வலையிடப்பட்ட ஜன்னல்கள். புழுக்கமும் புத்தகக் கட்டுகளிலிருந்து வரும் ஒரு வித வாடையும் நிரம்பிய அறைகள். பழைய ஓலைச் சுவடிகள். நீட்டெழுத்துக் கடிதங்கள். பாதி பாதியாய் உதிர்ந்துபோன கடிதங்கள். இந்தக் கட்டடம் முழுமையுமே எட்டுக் கால் பூச்சிகள்

நிறைந்துபோய் உள்ளன. சில எட்டுக் கால் பூச்சிகள் அசாதாரணமான சைஸில் இருந்தன. அவற்றின் எட்டுக் கண்களும் சுழன்று திரும்பிக் கொண்டிருந்தன. கட்டடத்தின் தரைகளில் பிசுபிசுப்பும் கறுப்பும் எப்போதும் ஒழுகிக்கொண்டே இருந்தன. ஆட்கள் எவரும் இந்த ஆவணங்களைப் பார்க்க வருவதில்லை. எப்போதாவது சிலர் கடிதம் மூலம் விவரங்கள் கேட்டு எழுதுவார்கள். சாவகாசமாகத் தேடி பதில் அனுப்பலாம். என்னைத் தவிர ஒரு பெண்ணும் அந்த அலுவலகத்தில் வேலை பார்த்தாள் எனக் கேள்வி. அவள் மேஜை கட்டடத்தின் பின் அறையில் கிடக்கும். அந்தப் பகுதியில் பகலில் நல்ல வெயில் வரும். நிழல் போல அவள் அலைந்து கொண்டிருப்பாள். அவள் எந்த விதத்திலும் என்னோடு பேசியதில்லை. ஜன்னல்கள் இல்லாத அறைகளாக நான்கு அறைகள் இருந்தன. அதற்குள் நிறைய ஆவணங்கள் குவிக்கப்பட்டிருந்தன. நான்கு அறைகளையும் இணைக்கும் பெரிய ஹால் ஒன்றில் எருதுத் தலைகள் மாட்டி வைக்கப்பட்டிருந்தன. நான் அலுவலகத்தில் சேர்ந்த சில மாதங்களிலே மணம் செய்துகொண்டேன். அழகான பெண். பகலில் படிக்க அவள் ஏதாவது புஸ்தகங்கள் வேண்டுமெனக் கேட்டபோது, அலுவலக ஆவணங்களில் சிலவற்றை வீட்டுக்கு எடுத்து வந்து படிக்கக் கொடுத்தேன். அவள் அதையெல்லாம் பகலில் படித்திருக்கக்கூடும். அவள் கொஞ்சம் கொஞ்சமாக மாறிக் கொண்டு வந்தாள். அந்த ஆவணங்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென நான் கேட்டபோது எரித்துவிட்டதாகச் சொன்னாள். அவள் அதன்பின் என்னைப் பார்க்கும்போதும் பேசும்போதும் அலட்சியமாக நடந்து கொள்ளத் தொடங்கினாள்.

ஒரு நாள் இரவில் படுக்கையில் சண்டையிட்டபோது அவள் என்னை எதிர்த்துக் கூச்சலிட்டுச் சொன்னாள்,

‘உன் மூதாதையர்கள் ராணிக்கு வெந்நீர் போட்டுக் கொடுத்த அற்பர்கள்’

‘எப்படித் தெரியும் உனக்கு?’

‘எல்லாவற்றிற்கும் ஆவணங்கள் இருக்கின்றன’

நான் திடுக்கிட்டுப் போனேன். என் மூதாதையர்கள் பற்றிய விவரங்கள் எதுவும் தெரியாத எனக்கு அவர்கள் அரண்மனை அந்தப்புரங்களுக்கு வெந்நீர் போடுபவர்களாக இருந்திருக்க இயலாது எனத் திட்டமாகச் சொல்ல முடியவில்லை. நான் ஆவண அறையிலே அதன் பின்நாள்களில் தங்க நேர்ந்தது. நிறைய ஆவணங்கள் இருந்தன. பகலில் படித்தபடியிருந்தேன். இப்ராஹிம் லோடி, முகம்மது கோரியின் கடிதங்கள், ராபர்ட் கிளைவின் வளைந்த கையெழுத்துகள், வியாபார சம்பந்தமான எழுத்துகள், குதிரைப் படையின் வரவு செலவுக் கணக்குகள், ராணிக்குப் பன்னீர் வாங்க ஆள் அனுப்பிய விவரங்கள், தொப்பி வாங்க அலைந்தவர்கள் சமர்ப்பித்த விவரங்கள். எனக்குத் தலை சுற்றத் தொடங்கியது. நிசப்தத்தில் வரிகள் மெல்ல அமிழ்ந்து

ஆட்கள் வெளிவரத் தொடங்கினார்கள். கடிதங்களில் சண்டையிட்டுக் கொள்ளத் தொடங்கினார்கள். லோடியின் உருது மொழி திருகித் திருகிச் சுழன்றது. முகம்மது கோரி சதாவும் சண்டைக்காகக் கத்தியைச் சாணை தீட்டிக்கொண்டிருந்தான். கத்திமுனை என் கழுத்து வரை வந்துபோனது.

அந்த அரச ரூபங்களின் சாயைகள் அறைகளில் நிரம்பத் தொடங்கின. நான் வீடு திரும்பும்போதுகூட அந்தச் சாயைகள் சில என்னோடே வந்தன. நான் அவற்றைக் கண்டு பயந்து தப்பி அலைந்தேன். நிச்சயமாகச் சொல்ல முடியும். நான் சாப்பிடும்போது இப்ராஹிம் லோடி பார்த்துக்கொண்டேயிருக்கிறான். என் தண்ணீர் டம்ளரின் விளிம்பு வரை அவன் விரல் படிந்து வருவதைப் பார்க்க முடிகிறது. பளபளப்பான உடை. கள்ளம் நிரம்பிய கண்கள். என் மனைவி என்னைப் பார்த்தபடியே அழுகிறாள். நான் சில நாள்கள் படித்த ஆவணங்களில் என் மூதாதையரில் சிலர் பல்லக்கு தூக்கினார்கள். சிலர் குதிரைக்குக் கொள்ளு வாங்கக் கையில் ஈட்டியோடு ஊர் ஊராகப் போய்க்கொண்டிருந்தார்கள். சிலர் அரண்மனையில். இருவர் அரண்மனைத் தோட்டத்தின் மூலையில் நின்று ரகசியமாகப் பேசிக் கொண்டார்கள். அது ஏதாவது ஒரு சதித் திட்டத்தின் ஆதாரமாகத்தான் இருக்கக்கூடும். அவர்கள் சுற்றும் முற்றும் பார்த்து விட்டுச் சொன்னார்கள். ஒருவன் வேகமாகப் போய் அரசர் போகும் பல்லக்கின் அடியில் கருந்தேளைப் போட்டுவிட்டு வந்தான்.

துரோகம்.

சக துரோகி.

மற்ற விவரங்கள் ஆவணத்தில் கிடைக்கவில்லை. சக துரோகிகளான என் முன்னோர்கள் கருப்பாகவும், உயரமாகவும் இருந்தார்கள். கண்கள் பெரியதாகவும், கட்டை மீசைகளோடும் அலைந்தார்கள். ஆவணக் காப்பகங்களுக்கு இரவில் திக்காக இருட்டு வருகிறது. கரைக்க முடியாத இருட்டு, ஜன்னல்கள் அற்ற அறைகளில் விளக்கு மில்லை. மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் நான் மூதாதையரைத் தேடிப் படித்துக்கொண்டிருந்தேன். பல தலைமுறையாக ராணிகளுக்கு வெந்நீர் போட்டுக் குளிக்க ரெடி பண்ணிக்கொண்டிருந்தார்கள். ராணிகள் உப்பரிகைகளில் ஈரத் தலையை உலர்த்துகிறார்கள். சாம்பிராணிப் புகை பரவுகிறது. ராணிகளுக்கு மிதமான சூட்டில் வெந்நீர் போடும் ஆட்கள் அடுத்த அண்டாக்களில் தண்ணீர் ஊற்றி அடுப்புப் பற்ற வைக்கிறார்கள். மித வெந்நீரில் குளித்துக் குளித்து வெளுத்துப் போனது பெண்ணின் உடல். ராணிகள் கழித்துப் போடும் மயிரைப் பார்த்தபடி உட்கார்ந்திருக்கிறார்கள்.

என்னால் இதையெல்லாம் தாங்க முடியவில்லை. இதில் எதுவுமே உண்மையாக இருக்க முடியாது என்றே முடிவு கொண்டேன். நான் என் மூதாதையர் பற்றித் தெரிந்துகொண்டு திரும்பும்போது இன்னொரு அறையிலும் ஆள் இருப்பது போலச் சாயை ஊர்ந்தது.

நான் அந்த அறை வாசலுக்குப் போனேன். என் அலுவலகத்தில் வேலை பார்க்கும் பெண் எனக்கு முதுகைக் காட்டியபடி உட்கார்ந் திருக்கிறாள். அவள் முன் ஏராளமான ஆவணங்கள். தட்டை வரிகள், கறுப்பும் பச்சையும் கலந்த மசியில் எழுதப்பட்ட கடிதங்கள். அவள் பின்னிருந்து பார்த்தேன், அவள் காலாட்படைகள் பற்றிய ஆவணங்களை ஒழித்துக்கொண்டிருந்தாள்.

நான் பார்த்தது நிஜம். சிறு புல் அளவில் காலாட்படை வீரர்கள் அந்த ஆவண எழுத்துகளிலிருந்து குதித்துக் கீழே இறங்கிக் கொண்டிருந் தார்கள். சாய்வு எழுத்துகளில் இருக்கும் கோடு போன்ற உடல், அநேகமாக ஆயிரக்கணக்கான காலாட்படை வீரர்கள் கறுப்பு மழை எறும்புகளையும் விட சிறிய உருவம். வார்த்தைகளிலிருந்து உதிர்கின்றன. அவளைச் சுற்றி நின்று கொண்டுள்ளன. சில உருக்கள் கோடுகளை உடைத்து வெளியே வருகின்றன. கொம்பு எழுத்துகளின் அடிப்பகுதியைக் கிழித்து சில உருக்கள் விழுந்தன. பல ஆயிரம் வருடங்களாக நடந்து நடந்து ஓய்ந்து, சண்டையிட்டுச் செத்தவர்கள். அந்த உருக்களை எல்லாம் அந்தப் பெண் கரையான்கள் என நினைக்கிறாளோ எனச் சந்தேகமாக வந்தது. நான் அந்தப் பெண் அருகில் உட்கார்ந்து பார்த்தேன். சிறு சிறு உருக்கள், கவச உடைகள். தலைக்கவசம், சிறு ஈட்டிகள், லட்சியமற்று இங்கும் அங்கும் ஓடித் திரிந்தன.

அந்தப் பெண் என்னைப் பார்த்ததும் திடுக்கிட்டுப்போனாள். என்ன? என்ன? என்பது போலப் பார்த்தாள் நான் அவளிடம் சொன்னேன்.

'காலாட்படைகள்.

அவள் சொன்னாள்.

'தெரியும். இவர்களை நான்தான் விழிக்கச் செய்தேன்.'

'எதற்கு?'

'சிலரைப் பற்றி எனக்குத் தெரிய வேண்டும்.'

'யார் அவர்கள்?'

'உன்னிடம் விளக்கப் போவதில்லை... இந்தக் காலாட் படைகளிடம் கேட்கப் போகிறேன் அதை.'

காலாட்படைகளை அவள் அதட்டி நிறுத்தினாள். சில முன்னும் பின்னும் ஓடிக்கொண்டிருந்தன. அவள் அவர்களின் முகத்தைப் பார்த்தாள். சிறு புள்ளி போல முகம். அவள் அரட்டிக் கேட்டாள்.

'நீங்கள் தூக்கிப் போன பெண்கள் எங்கே?'

'எப்போது?'

'எல்லாக் காலத்திலும்தான்.

'அரசர்களிடம் இருக்கக்கூடும்.'

'எங்கே உன் முட்டாள் ராஜாக்கள். கூப்பிடு?'

காலாட்படைகள் உள்ளே ஓடின. அவள் முன்யோசிக்காத உருவில் ராஜாக்கள் தோன்றினார்கள். பாவாடை போன்ற ஆடைகளும், கொழுத்த கன்னங்களும், பெரிய மூக்கும் அசிங்கம் ததும்புகிறது. கையசைத்துக் காதல் கீதம் பாடுகிறார்கள்.

அவள் அவர்களைச் சொல்லிச் சப்தமிடுகிறாள். என்னால் இதைப் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. நான் ராஜாக்களை விரட்டி அடித்தேன். அந்தப் பெண் விசும்பியபடி சுருண்டு கொண்டாள். நான் காலாட்படையிடம் கேட்டேன்.

'எங்கிருந்து வருகிறீர்கள் ?'

'பக்கங்களிலிருந்து, வாயிலிருந்து. . .

இதை நம்ப முடியாதபடி நின்றேன். காலாட்படைகள் அறை சுற்றி வந்தன. அறைச் சுவரில் இருந்த ராட்சசச் சிலந்தியை எதிர்த்து ஈட்டி விட்டுக்கொண்டிருந்தார்கள் பல வீரர்கள். நடக்க நடக்க அவர்களுக்கு அறை பெரியதாகியபடியே இருந்தது. நடக்க முடியாமல் சுருண்டார்கள், அறையில் கிடக்கும் காலியான நாற்காலியில் திரிகிறார்கள்.

எனைத் தாண்டிப் போய்த் தேடுவது போலப் போனார்கள். மங்கிய ஆவண அறையில் அவர்கள் நடப்பது விந்தையாக இருந்தது. அவர்கள் எல்லாக் காலத்தைப் பற்றியும் தெரிந்து வைத்துக்கொண்டு சாவகாசமாக உலவும் ஆட்கள் போல நடந்துகொண்டார்கள்.

சில மணி நேரத்துக்குள் ஆயிரக்கணக்கான உருக்கள் அலையத் தொடங்கின. எல்லா ஆவணங்களையும் புரட்டித் தள்ளுகிறார்கள். எனைச் சுற்றித் திரிகிறார்கள். நான் அவர்களில் சிலரை அள்ளி காலியாக இருந்த மை பாட்டிலில் போட்டு எடுத்துக்கொண்டு என் மேஜைக்கு வந்தேன். இரவு விடியும் தறுவாயில் இருந்தது. கண்ணாடியை அவர்கள் இடித்துக்கொண்டிருந்தார்கள். மற்ற உருக்கள் வெளியே வருவதற்கு முன் நான் அந்தப் பெண்ணை வெளியே இழுத்து அறைக் கதவைப் பூட்டினேன்.

என் மேஜையிலிருந்த காலாட்படை வீரர்களை வெளியே எடுத்து விட்டு எப்போதோ படித்த திப்புவின் குரலில் கத்தினேன். அவசரமாக அவர்கள் வரிசைக்கு வந்தார்கள். அவர்களைச் சுற்றிச் சுற்றிப் பார்த்தேன். சிறு அசைவுகூட அவர்களிடம் இல்லை. விரலை உயர்த்தியதும் அவர்கள் சப்தமிட்டார்கள்.

'திப்பு மஹாராஜா. ஜே.

காலாட்படையினைத் தனித் தனியாகப் பிரித்ததும் அவை தானாக மேஜை விளிம்புகளில் போய் காவல் நின்றுகொண்டன. சில தனியாக நின்றன. தனியாக நின்றவை எனை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. நான் அவைகளைக் கூர்மையாகப் பார்த்தேன். எனக்குத் தலை வணங்காத அந்த உருவைப் பார்த்துக் கேட்டேன்.

'எத்தனை தலைகளை வீழ்த்தினாய் நீ.

அவை பதில் பேசவில்லை.

'எங்கேயிருக்கின்றன அறுபட்ட தலைகள்?'

சிரிக்கும் சப்தம் கேட்டது. மேஜை விளிம்பிலிருந்து வந்திருக்க வேண்டும். நான் சிரிக்கும் பக்கமாகத் திரும்பிக் கேட்டேன்.

'எதற்குச் சிரிப்பு?'

'நாங்கள் சமையற்கட்டைக் காவல் காத்த படைகள்.'

வேறு யாரோ சிரிப்பது கேட்டது.

'என்ன. .?'

'உன் தாத்தா... ராணிக்கு வெந்நீர் போட்டவர்.'

'நீ பார்த்தாயா..

'பின்னே...

காலாட்படைகள் என்னை ஏளனம் செய்யத் தொடங்கின. அருகில் வந்து குதித்தன. நான் திப்புவின் குரலில் விரட்டினேன். அவை குதித்துக் கூச்சலிட்டன. என் ஆத்திரத்தில் அவைகளை நசுக்க ஓடினேன். அவை சப்தமிட்டுச் சிரித்தன.

'நாங்கள் ஏற்கெனவே இறந்தவர்கள்...

எனக்கு எதுவுமே புரியவில்லை. குழப்பத்தின் சூழலில் சிக்கிக் கொண்டிருந்தபோது அந்த வீரர்கள் என் முன்னே இரைந்து கத்தினார்கள்.

'உயிருள்ளவர்கள் இறந்தவர்களைக் கொல்ல முடியாது' நான் அவர்களைப் பார்த்துச் சொன்னேன்.

'நீங்களெல்லாம் யாராம்... வரலாற்றில் காலாட்படைகள் என்பது எல்லாம். ராணிக்கு வெந்நீர் போட்டவர்கள்தாம்.'

அவர்கள் இதை எதிர்பார்க்கவில்லை. இதில் அவர்கள் உண்மையின் ஏதாவது ஒரு முகத்திருப்பத்தைக் கண்டிருக்கக்கூடும். மவுனமுற்றார் கள். அதன் பிறகு பல நாள்கள், வருடங்கள் அவர்கள் என்னோடு அதே ஆவணக் காப்பகத்தில் இருந்தார்கள். பொருள்களைத் திருடிக் கொண்டு போனார்கள். சாப்பாட்டுக் கேரியரில் ஒட்டிக்கொண்டு வந்து வீட்டின் அலமாரி, புத்தகங்களுக்குள் ஒளிந்துகொண்டார்கள். எனைப் பார்க்கும்போது எல்லாம் கிண்டலடித்தார்கள்.

என்னால் அவர்களின் கிண்டலைப் பொறுத்துக்கொள்ள இயல வில்லை. வயதும் அதிகமாகிக்கொண்டே போனது. கோபம் எடுத்ததற் கெல்லாம் வருகிறது. அலுவலக அறையின் டைப் ரைட்டர் எழுத்தில் ஏறி நின்றுகொண்டு பல வீரர்கள் குதித்தார்கள். எழுத்துகள் பேப்பரில் பதிவாகின. டைப்ரைட்டர் ரிப்பனில் ஏறிப் போனார்கள். அவர்கள் அந்த ஆவணக் காப்பகத்திலிருந்து பல ரகசிய விவரங்களை இழுத்து வந்து என்னிடம் போட்டார்கள். ராபர்ட் கிளைவ் கப்பலில் வரும் போது எழுதிய குறிப்புகள். பல நகரங்களைப் பற்றிய குறிப்புகள்.

மன்னர்களுக்கு நடந்த கல்யாண விவரங்கள். பிளேக்கால் இறந்துபோன ஆட்கள் பற்றிய விவரங்கள். கிறிஸ்துவப் பாதிரிகளின் பிரசங்க நோட்டுகள். சுவிசேஷப் பாடல்கள். காலாட்படைகள் எனைப் பார்த்துக் கிண்டல் அடித்தன.

ஒரு இரவில் காலாட்படைகள் எனை இதுவரை திறக்காமலே கிடந்த மூலை அறைக்கு இழுத்துக்கொண்டு போயின. அந்த அறையில் வெள்ளையாக ஒரு உரு தொங்கிக்கொண்டிருந்தது. அதன் முன்னே பல்லாயிரம் கட்டம் கொண்ட பலகை. காவல் வீரர்கள் எனை அந்த அறைக்குள் தள்ளிப் பூட்டி ஓடினார்கள். வெள்ளை உரு திரும்பிக் கேட்டது,

'விளையாடத்தானே வந்தாய்?'

எனக்குப் புரியவில்லை. நான் அந்த அறையைப் பார்த்தேன். ஆவணங்கள் நொறுங்கி செதில் செதிலாகப் போயிருந்தன. எழுத்துகள் தூசிகள் போலாகிச் சுவரில் ஒட்டிக்கொண்டிருந்தன. என் குரல் வெளிவந்தது.

'யார். நீ. நீ.

'அரசாங்கக் காப்பகங்களில் இருக்கும் வெள்ளை வேதாளம்.'

'என்ன விளையாட்டு....

'உன் மூதாதையரை விடுவிக்கும் விளையாட்டு. வா. அது ஒரு சுழலும் பலகை. வரிசை வரிசையாகக் கட்டங்கள். ஒவ்வொரு கட்டத்திலும் ஒரு கூட்டம். ஆண் பெண் உருக்கள். என் முன் சுழன்ற பலகையில் என் மூதாதையர் கட்டம் கட்டமாக நின்றார்கள். எனைப் போலவே உருக் கொண்டவர்கள். பெரிய பெரிய ஆகிருதிகள். முகச்சாயல், கண்கள் எனைப் போலவே. எனைப் பார்த்துக் கெஞ்சி அழுகிறார்கள். நான் பல தலை முறைகளைப் பார்த்தேன். என் எதிரேயிருந்த சுழல் பலகை சுற்றத் தொடங்கியது. வெள்ளை வேதாளம் எனை ஒரு கேள்வி கேட்டது.

'சரியான எண்ணைச் சொன்னால்... அவர்கள் விடுதலை. தவறினால், நீயும் மாட்டிக்கொள்வாய்.' சுழலும் பலகையிலிருந்து குரல்கள் சுழன்றன. எண்கள் ஓடின. சுழலும் எண்கள். பலகை முடியும் முன்பே எண்களைச் சொன்னேன். சுழல் குறி, நான் சொன்ன எண்ணில் நின்றது. அடுத்த ஆட்டத்தின் முன் ஓடி வெளியேறினேன். வெள்ளை வேதாளம் எனை விரட்டி அடுத்த அறை வந்தது. அலுவலகம் விட்டே விரைந்து ஓடினேன்.

காலாட்படை வீரர்கள் சிரித்தார்கள். அரசர்கள் வாங்கிய கடன் பட்டியல் பத்திரத்தில் என் அலுவலகக் கணக்கை இந்த வீரர்கள் எழுதிவிட்டார்கள். தூக்கு விதிக்கப்பட்ட கைதியின் கடைசி ஆசை ஓலையில் என் பெயர் உள்ள முத்திரையைப் பதிக்கிறார்கள். அவர் களின் வார்த்தை, குரல் எதுவும் எனக்குப் பிடிப்பதில்லை. இரண்டு, மூன்று தினம் நான் அலுவலகம் வராமலே இருந்தேன். என்

அறையிலே பகல் எல்லாம் கிடந்தேன். சிகரெட் புகைக்கக் கூட முடியவில்லை என் வெளுத்த உரு கண்டு பிள்ளைகள் பயந்தன. இரவில் மனைவிகூடக் கேட்கிறாள்.

"தூக்கத்திலே ஏதேதோ உளர்றீங்க...

நான் அலுவலகம் போனதும் காலாட்படைகள் வந்து கண்ணடிக்கின்றன. ஒன்று இரண்டல்ல... ஏராளம். அந்த அலுவலகப் பெண் இப்போது வரவில்லை. பிரசவிக்க லீவு கேட்டுப் போய்விட்டாள். காலாட்படை வீரர்கள் என் முன் கேள்விகள், பதில்கள் என விளையாடுகிறார்கள்.

சம்பங்கி ராணியின் எட்டுக் குழந்தைகளுக்குக் கால் கழுவிவிடும் ஆட்கள் யாரு?

இவன் முன்னோர்கள்.

திப்புவின் தொப்பிக்குக் கோழி இறகு வைப்பது யாரு?

இவன் முன்னோர்கள்.

ராஜா பல்லக்கில் தேளைப் போடடது யாரு?

இவன் முன்னோர்கள்.

சக துரோகி யாரு?

இவன் முன்னோர்கள்.

என் முன்னோர்களைக் கண்டு நான் ஓட வேண்டியதாகியது. காலாட்படை வீரர்கள் எனை மிரட்டி வருகிறார்கள். என் தலையைப் பிடுங்கிப் போகப் போவதாக பயமுறுத்துகிறார்கள். நான் காலாட்படை வீரர்கள் சென்ற பாதைகள், வீர சாகசம் பற்றிப் பேசிப் பேசி நைச்சியம் செய்ய முயன்று தோல்வி கண்டேன்.

வரவர அவர்கள் எதைக் கொண்டுபோனாலும் திருடிப் போய் விடுகிறார்கள். பேனாக்கள், சில்லறைகள், தண்ணீர்ப் புட்டிகள் எல்லாம் திருடு போய்விடுகின்றன. இவர்கள் தொல்லை போதாதென்று பழைய ராஜாக்கள் வேறு கத்தித் தொலைக்கிறார்கள். ஆங்கிலத்தில் பிரபுக்கள் அரட்டுகிறார்கள். என் புத்தி கழன்று பல பக்கங்களிலும் தானாகச் சுழல்கிறது. வீட்டில்கூட நான் காலாட்படை என உளறினேன். மழைக்காலம் வந்தால் அவர்கள் பெருகிவிடுகிறார்கள். என்னால் எதுவுமே செய்ய முடிவதில்லை. என் மேஜை நிறைய அவர்கள் உடகார்ந்திருக்கிறார்கள். கவசங்களைக் காய வைக்கிறார்கள். பாசி படர்ந்த கவசங்களைக் காட்டிக்கொண்டு நிற்கிறார்கள். எனக்கு வந்த கடிதங்களைச் சிதைத்துவிட்டார்கள். எந்தக் கட்டளைக்கும் கட்டுப்படாமல் திரிகிறார்கள். நான் இதைப் பலரிடம் சொல்லியாகி விட்டது. சக அதிகாரிகள். நண்பர்கள் சிரிக்கிறார்கள். காலாட்படைகள் என்னிடம் சொல்கின்றன.

'வெளியாளைக் கூட்டி வந்தால். உன் பூர்வீக வரலாற்றைச் சொல்லிவிடுவோம். வெந்நீர் அடுப்புக் கதை வெளியே வரும்.

நான் என்ன செய்வது. மனைவியிடம் பல முறை சொல்லிவிட்டேன். அவள் அலுக்காமல் சொல்கிறாள்.

'கொஞ்ச பேரை இங்க எங்கிட்ட கொண்டு வந்து விடுங்க. வேலைக்கு ஆகும்.'

காலாட்படைகள் காலையில் அணிவகுத்து அலைகின்றன. லெப்ட் ரைட், லெப்ட் ரைட், லெப்ட் ரைட். மெழுகுத் தலை கொண்ட பொம்மை போல என் உடல் கரைகிறது. நேற்று என் கண்ணாடியைத் திருடிப் போய் ஒளரங்கசீப்புக்குக் கொடுத்துவிட்டார்கள். நான் அவரிடமிருந்தது எப்படி வாங்க முடியும் அதை. அதைக் காலாட் படையை ஏவி அவன் என்னைக் கொல்லச் செய்தால்... என்னால் எதுவும் இயலவில்லை. குற்றங்கள் பெருகத் தொடங்கிவிட்டன. இந்தக் காலாட்படைகளை என்னால் சகிக்க முடியாது.

யாராவது இவற்றை விசாரித்துத் தண்டனை வழங்குங்களேன்.

இதை நான் இந்திய உயர்நீதிமன்றம், ஆறாம் லூயி, வில்லியம்II மன்னர் சூயி, ஜார்ஜ் IV இவற்றில் யாருக்காவது அனுப்பலாமா?

சொல்லுங்கள்...

இந்தக் குற்றப்பத்திரிகையை எங்கே நான் தாக்கல் செய்வது.

இதை எழுதும் பேனா முனையில்கூட இரண்டு வீரர்கள் நின்று எழுத்தை எட்டிப் பார்க்கிறார்கள். நிஜம்.

என்னை விட்டுவிடச் சொல்லுங்கள். எனக்கு ஆவணங்கள் வேண்டாம்...

நகர் நீங்கிய காலம்

வெறும் மேலோடு படுத்துக் கிடந்தான். காரை பெயர்ந்துபோன மாடியெங்கும் பாளம் பாளமாகப் பிளவுண்டிருந்தது. அறை. மாடிப்படிகள் சப்தமிட நான் ஏறி வந்தது தெரியாமல் உறங்கிக்கொண்டிருந் தான். சுவரோரமாக ஒண்டியபடி தூம்பு வாய்க்குக் கிட்டத்தில் முகம் புதையப் படுத்துக் கிடந்தபோது வெயில் ஏறி காலெல்லாம் அடித்துக்கொண்டிருந் தது.

வேம்பின் சருகுகள் நிறைந்த மாடி. தழைத்து வந்திருந்தது வேம்பு. காயப்போட்டு அள்ளிய வத்தல் களின் மீதம். அங்கொன்றும் இங்கொன்றுமாக வத்தல்கள் கிடந்தன. சோடை வத்தல்கள் பழுப்பேறி, வேப்பிலைகளோடு சேர்ந்து போயிருந்தன. சட்டை சுருட்டிக் கிடந்தது அருகில். அவனோடு வந்த சின்னப் பெண் எழுப்பினாள்.

“அண்ணே... உன்னப் பார்க்க யாரோ வந்திருக் காங்க... எந்திரி” அவன் தூக்கத்திலே ‘உம்’ கொட்டிக் கொண்டு முகத்தைச் சுருட்டிக்கொண்டான். அவள் உடம்பை அசைத்து எழுப்பினாள். அவன் முனங்கிய படியே எழுந்துகொண்டான். அவன் வயிற்றில், முதுகில் என வேப்பிலைகள் ஒட்டிப் போயிருந்தன. அவனை எழுப்பிய பெண் கீழே இறங்கிப் போன பின்பு, சுவரின் பக்கம் யாரும் இருக்கிறார்களா எனப் பார்த்துவிட்டு, தூம்புவாய் அருகில் உட்கார்ந்து ஒண்ணுக்கிருந்தான்.

வெயில் மூஞ்சியில் பட்டுக் கூச்சமாக்கியது அவனுக்கு...

எருமை மாடுகள் வெயில் தாங்காமல் கத்திக்கொண்டிருந்தன

அவன் உள்ளே வந்தபோது நான் மரச்சேரில் உட்கார்ந்து புத்தகங்களைப் புரட்டிக்கொண்டிருந்தேன். எட்டாம் வகுப்புப் பாடப் புத்தகங்கள். எப்பவோ வாங்கிய சில பத்திரிகைகள் கிடந்தன. பழைய கால மேஜை கிடந்தது. அவன் நிச்சயமாக நான் வருவதை எதிர்பார்த்திருக்க முடியாது. கண்களை இடுக்கிக்கொண்டு பார்த்தான். ஆள் ரொம்பவும் கறுத்து மெலிந்து போயிருந்தான்.

கிட்டத்தில் வந்து முதுகில் அடித்தான்.

“எப்படா வந்தே?”

புத்தகத்தை வைத்துவிட்டுப் பதில் பேசாமலிந்தேன். அவன் ஜன்னல் வழியாகக் கீழே பார்த்தான். தெருவில் இரண்டு பையன்கள் விளையாண்டு கொண்டிருந்தார்கள். இங்கிருந்தே கத்திக் கேட்டேன்,

“டீக்கடை இருக்குதானு பாருடா சிதம்பரம்.”

ஒரு பையன் டயரை உருட்டியபடி வளைந்து வளைந்து ஓடினான். பின் அவன் சப்தம் கேட்டது.

“இல்லைண்ணே.

அவன் என்னைப் பார்த்துவிட்டுச் சொன்னான்,

“இரு. கீழே போயி வீட்ல டீ போடச் சொல்றேன்.” அவன் அறையிலிருந்து வெளிப்பட்டு கீழே போன பின்பு நான் மொட்டை மாடிக்கு வந்து நின்று பார்த்தேன். ஊர் சுற்றுப்புறமெல்லாம் விரிந்து கிடந்தது. தூரத்தில் மஞ்சனத்தி மரங்களும், வயர் கம்பங்களும் தெரிந்தன. தெருவில் ஆட்கள் அதிகம் தெரியவில்லை. சில வயதானவர்களே தென்பட்டார்கள். அவன் திரும்பியபோது வெண்கல டம்ளரில் டீ கொண்டுவந்தான். கனமான வளைவு கொண்ட டம்ளர். டம்ளரைக் கொடுத்துவிட்டு சுவரில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டான். டம்ளர் நிறைய டீ இருந்தது. டீ குடித்தபடியே கேட்டான்,

“எப்பிடி வந்தே. நடந்தா?”

“ரோட்ல இருந்து கொஞ்ச தூரம் நடந்து வந்தேன். அப்புறம் ஒருத்தர் சைக்கிளில் வந்தேன்.”

“ஆள் எப்படியிருந்தாரு?”

“மீசைக்காரரு. உயரமா.

“சொந்தக்காரருதான்.. உங்கிட்ட விசாரிப்பாரே..

“ம்.

“டீயைக் குடி..

திகட்டியது டீ. பாதிக்கு மேல் குடிக்க முடியவில்லை. அவன் குடித்துவிட்டு மேஜையில் சிகரெட் தேடினான் இல்லாததால் கீழேயிறங்கிப் போனான். வீட்டுக்கு வெளியே ஒரு பெண் குரலும்

அவன் சப்தமும் கேட்டன.

"என்ன செஞ்சு வச்சிருக்கே. அப்ப. காலைல சோத்தையா திங்கிறது?"

"எனக்கு என்னடா தெரியும், யாரு வருவாங்கன்னு?"

"முட்டை வாங்கிப் பொரி அப்ப."

"அய்யா இல்லேல.

"கடைல சொல்லி வாங்கிட்டு வரச் சொல்லு... பிறகு காசு குடுக்கலாம்."

அவன் சப்தம் ஓய்ந்துபோனது. மேலேறி வந்தான். உடம்பெல்லாம் வியர்த்து வழிந்தது அவனுக்கு. துண்டைக் கழுத்தைச் சுற்றிப் போட்டிருந்தான். சுருண்டு கிடந்த சட்டையை உதறிப் போட்டுக் கொண்டு சொன்னான்,

"கைலி மாத்திக்க. அப்பிடியே போயிட்டு வருவோம்." கைலியை மாற்றிய பின்பு, இருவரும் கீழே இறங்கி வரும்போது, ஒரு வயதான பெண் சின்னப் பெண்ணுக்குப் படியில் உட்கார்ந்து தலை சீவிவிட்டுக் கொண்டிருந்தாள். ஓரமாக சைக்கிள் நிறுத்தியிருந்தார்கள். சைக்கிள் மேல் பாவாடை காய்ந்துகொண்டிருந்தது. அவன் செருப்பைத் தேடி எடுத்தபோது அந்தப் பெண் ஒதுங்கி வழிவிட்டாள்.

தெருவில் நடந்தபோது சில வீடுகளில் பெண்கள் தீப்பெட்டி ஒட்டிக்கொண்டிருந்தார்கள். வீடுகள் பழைய வீடுகளாக இருந்தன. சந்து சந்துகளாகப் பிரிந்தது தெரு. ஒரு சந்தின் ஊடே போனபோது காலை நீட்டி உட்கார்ந்து பெட்டி ஒட்டிக்கொண்டிருந்த பெண் சேலையை இழுத்து விட்டுக்கொண்டாள். கருங்கற்கள் பதிந்துபோன சந்து. வீடு போல இருந்த பெட்டிக் கடையில் வயதானவர் இருந்தார்.

உள்ளே காலி சிகரெட் பாக்கெட்கள் கடை கொள்ளாமல் அடுக்கப்பட்டிருந்தன. பாண்டி மார்க் கலர் பாட்டில்கள் வெயில் பட்டுக் காய்ந்துகொண்டிருந்தன. மிட்டாய்ப் பொட்டலங்கள் தொங்கிக் கொண்டிருந்தன. கம்பி வளையம் நிறைய முறுக்குகள் அவன் என்னைப் பார்த்துக் கேட்டான்,

"சிசர்ஸ்தான் இருக்கும்."

"ரெண்டு வாங்கு."

ரெண்டு சிகரெட், பீடி வாங்கிக்கொண்டு, ஒரு சைடும் நாலைந்து தீக்குச்சிகளும் பொறுக்கி சட்டைப் பையில் போட்டுக் கொண்டான். ஊரில் நிறைய வேம்பு படர்ந்து போயிருந்தது. வேம்பு பூக்கும் காலமிது. வீடு முற்றமெல்லாம் உதிர்ந்து போயிருந்தன பூக்கள்.

ஊர் தாண்டிய பின்பு அவன் சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டான். எங்கும் கரிசல்வெளி பரந்திருந்தது. வேலிப் புதர்களுக்குள் பூனைகள் அலைந்தபடி இருந்தன. கடக்கக் கடக்க வெயில் ஏறியபடி யிருந்தது. கருவேல மரங்கள் தெரிந்தன. மொட்டை, மொட்டையாகக்

கிணறுகள். பழைய கோவில் சரிந்துபோயிருந்தது.

எல்லாப் பக்கங்களிலும் ஆள் அரவமற்றுப் போய் ஒரு நிசப்தம் கவிழ்ந்துகொண்டது போல ஆனது. நான் அவனிடம் கேட்டேன்,

"அந்தப் பக்கமெல்லாம் வந்தா என்னடா?"

"வரணும்.. இன்னும் காலேஜில இருந்து சர்டிபிகேட்கூட வாங்கல..."

"வந்து வாங்க வேண்டியதுதானே...

"எங்கயும் போகப் பிடிக்கலை.. என்ன செய்றே நீ?"

"டூடோரியல்ல இருக்கேன்."

"கலா ரெண்டு லெட்டர் போட்டிருந்தா... பதில் போடல... ஒரு வருஷமிருக்கும்."

அருகருகே பேசிக்கொள்வதுகூட ஏதோ பாதாளத்துக்குள் பேசுவது போலக் கேட்டது. வறண்டுபோன காடுகளில் எந்த உயிர்ப்பும் இல்லை. பறவைகள் இல்லாத வெளி... வெயில் காய்ந்தது. கண்மாய்க் கரைக்கு வந்து நின்றபோது ஊர் தூரத்தில் வெயில் எல்லாப் பக்கங்களிலும் அலைவதை நன்றாகப் பார்க்க முடிந்தது. கம்மாயில் தண்ணீரில்லை. உள்ளே இறங்கி அவன் போய்க் கொண்டிருந்தான். நான் கரையிலே இருந்தேன். கண்மாயின் ஓரத்தில் பெரிய கிணறு தெரிந்தது.

எல்லாமும் முங்கிப் போய்விட்டது போலத் தோன்றியது. காற்றின் சப்தம் மிகத் துல்லியமாகக் கேட்டது. அவன் திரும்பி வந்தபோது வெயில் ஏறிக்கொண்டிருந்தது. தூரத்தில் எருமைகளை ஓட்டியபடி யாரோ போய்க் கொண்டிருந்தார்கள். மேக்கரை வழியாக நடந்து இறங்கியவுடன் தென்னந்தோப்பு தெரிந்தது.

பெரிய தோப்பு. தென்னை நிறைந்து போயிருந்தது. வெயில் படாத இடம். அற்ப ஜீவராசிகள் மரத்தோடு ஒண்டிக்கொண்டிருந்தன. பம்ப் செட் பூட்டியிருந்தது. பாசி படர்ந்த தொட்டியில் தண்ணீர் இருந்தது. அவன் பம்ப் செட் முன்னாலிருந்த சிமெண்ட் தளத்தில் படுத்துக்கொண்டான். நான் படிக்கட்டில் உட்கார்ந்து கொண்டேன்.

அவன் பீடியைப் பற்ற வைத்தவாறே பேசினான்.

"இங்க இருக்கவே முடியாம போயிருச்சுடா... தாங்க முடியாம இருக்கு..."

"என்ன சொல்றாங்க...

"தெரியலே... எல்லாப் பக்கமும் அரூபமான ஆட்கள் கழுத்தை அறுப்பதுபோல இருக்கு... யாரோடையும் சுமுகமாகப் பேச முடியல."

"ம்."

"ரெண்டு வருஷமா... தினம் இன்னைக்கு எவனோட சண்டை போடப் போறேன்னு நெனைச்சுகிட்டு இருக்க வேண்டியிருக்கு."

பீடியை அணைத்துவிட்டுச் சொன்னான்,

"படிச்சது ரொம்ப தப்பாப் போச்சுடா. பேசாம படிக்காம மில்லுக்குப் போயிருக்கலாம்."

கண்ணை மூடிக்கொண்டான். தென்னை மரத்துக்குப் பக்கத்திலிருந்த வளையிலிருந்து ஒரு எலி வெளியே வருவதும், தண்ணீரை நோக்கி ஓடி, பின் திரும்புவதுமாயிருந்தது. அவன் பேசினான் தொடர்ந்து,

"அய்யாவோட சண்டை... ஒரு தடவை அடிச்சு வேற போட்டேன். தெரிஞ்ச ஆட்கள் முகத்தைப் பார்க்கவே முடியலே... பிரேதத்தைப் பார்க்கிறதப் போலவே பாக்கிறாங்களோன்னு தோணுது."

"அப்ப வீட்ல என்ன செய்றே...

"தோட்டத்துக்குப் போவேன்... இல்லேன்னா வீட்ல இருப்பேன். எப்பவாவது இங்க வருவேன்."

"பயங்கர நிசப்தமால்ல இருக்கு."

"இப்படிப் படுத்துக் கிடந்தா மெல்ல சப்தம் விநோதமான இடத்துக்குப் போயிரும். கடல் சப்தம் கேட்க ஆரம்பிச்சிரும்.. வெயில் இறங்கி வரும் பேரிரைச்சல், மண் முக்கி முனங்குவது கூடக் கேட்கும்."

அவன் முகத்தைப் பார்த்தபடியே இருந்தேன். காட்டுவாக்கில் அலைந்த நாய் ஒன்று லொங்கியபடியே நிழலில் ஒதுங்கிக்கொண்டது. அதன் மூச்சிரைப்பு தாங்க முடியாமலிருந்தது.

"இங்க படுத்துக் கிடக்கும்போது வெயில் பட்டு ஊரே தலைகீழா போற மாதிரி இருக்கும். சுபாவம் பிடிபடாத ஆட்கள் திரிவார்கள்."

பசியெடுக்க ஆரம்பித்தது. அவன் மிச்சமிருந்த பீடியைப் பற்ற வைத்துக்கொண்டான்.

"எப்பவாவது புத்தகத்தை எடுத்துக்கிட்டு இங்க படிக்க வந்தா தெரியும். நிசப்தம் தன் ஊற்றைத் திறந்து காட்ற மாதிரி இருக்கும். சில தடவை ராத்திரிகூட இங்கேயே படுத்துக் கிடந்திருக்கேன். தாங்க முடியாத உணர்ச்சிகள். வானம் விலகுவதும், பிரிவதுமாக... எழுந்து ராத்திரில கத்தியபடியே காட்டு வெளியே ஓடினேன்.

தனியாக இருக்கும் மதியங்களில் ஆடு மேய்க்கும் பொம்பளைய ஏதாவது செய்திருவேனோன்னு தோணும்... அந்தப் பொம்பளை கிட்ட வந்து பளீர்னு சிரிக்கும்போதும். கறுத்த உடம்போடு எதிர் நிக்கும்போதும் தாங்க முடியலே.

யாரோ வருவது போலத் தெரிந்தது சைக்கிளில். வரும் நபர் அவர்களை நோக்கித்தான் வருவது போலப் பட்டது. வந்த நபர் அவனிடம் சொன்னான்,

"அய்யா வந்துட்டாரு. சாப்பிட வரச் சொன்னாரு.

"போ. வாரேன்."

இருவரும் எழுந்து திரும்பிப் பனை தாண்டியபோது எதிர்ப்பட்ட காட்டைக் காட்டிச் சொன்னான்,

"இந்தக் காட்டில எங்க தாத்தாவைப் புதைச்சிருக்கோம்... கறுப்பு மண் பிளவுண்டு அவர் உடம்பாக ஆகிப் போனதாயிருக்கும். சோளம் போட்டா கதிர் அசைவு மூச்சு சப்தம் போலக் கேட்கும்."

வெயில் ஏறியிருந்தது. நடக்க நடக்க தூரத்தில் கடல் சப்தம் போலக் கேட்க ஆரம்பித்தது. காற்று சுழலும் சப்தம். நிச்சயமாக அது கடல் சப்தம் போலவே இருந்தது. வீடு வந்து சேரும்வரை எதுவும் பேசிக்கொள்ளவில்லை இருவரும்.

வீட்டின் உள்ளே பருத்திச் சாக்குகள் அடங்கிக் கிடந்தன. புழுக்கமாக இருந்தது. சமையற்கட்டு உள் ஒடுங்கிப் போயிருந்தது. உயரமான திண்டில் தண்ணீர்ப் பானைகள் இருந்தன. தட்டு நிறைய சோறு போட்டுக் குழம்பு ஊத்தினார்கள். முட்டையை மஞ்சள் போட்டுப் பொரித்திருந்தார்கள். எதிரே உட்கார்ந்துகொண்டு அவன் அம்மா கேட்டாள்,

"எங்க வேல பாக்குறீங்க தம்பி."

"டுடோரியல் காலேஜ்.

"இவன்தான் இங்கய கிடக்கான்... யாரு சொல்றதையும் கேட்க மாட்டேங்கான்... வர வர சகவாசமும் சரியில்லே. நாள் தவறாம சண்டைதான் மிஞ்சுது. அங்க ஏதாவது வேலையிருந்தா சொல்றது தான. ."

"சொல்றேங்க."

"பெத்தவங்க கிட்டயே இப்பிடி சண்டை போடுறான் தம்பி. நினைச்சா உசிரோட இருக்க முடியலே. பொம்பளைப் பிள்ளைகளுக்காக இருக்க வேண்டிக் கிடக்கு... அதுக போயி சம்பாரிச்சுட்டு வருதுக. படிக்க வச்ச பின்னாடி நாங்க என்ன செய்றது சொல்லு."

"சும்மா புலம்பாதே. பேசாம சாப்பிட விடு" என்றான். அவள் அவனைப் பார்த்துவிட்டுச் சொன்னாள்,

"நான் உங்கிட்ட எதுவும் பேசலைப்பா.

"அப்ப சும்மா இருக்க வேண்டியதுதானே.

உள்ளேயிருந்து வேறு ஒரு பெண் குரல் கேட்டது.

"அய்யோ. சும்மா ஏம்மா அதையே பேசுற. வந்தவங்கள சாப்பிட விடம்மா

"நான் எதுவும் பேசலை. உசிரோட இருந்தாதான... பேச. நான் எதுக்கு இருக்க. உக்கார்ந்த இடத்திலே அழுதாள். அவன் பாதிச் சாப்பாட்டிலே எழுந்துகொண்டான். அழுதபடியே அந்தப் பெண் உள்ளே போய்விட்டாள். சாப்பிட்டு எழுந்தபோது அவனைக் காணோம். அவனுடைய அய்யா தெரிந்தார். நாற்காலியை இழுத்துப்

போட்டு உக்காரச் சொன்னார்.

"யாரும் எதுவும் பேச முடியலை தம்பி. இங்க இருந்தா அதுக்குன்னு சில விஷயங்கள் இருக்கு. அவன் இஷ்டத்துக்கு இருந்தா எப்பிடி. எங்கயாவது போயி தொலைக்கலாம்ல. இங்க இருந்து என்ன செய்யப் போறானாம். .?"

அவன் திரும்பியபோது சிகரெட் வாடையடித்தது. அவன் யாரையும் பார்க்காமல் மேலேறிப் போனான். மேலே போனபோது ஏதோ புத்தகத்தைப் படித்துக்கொண்டிருந்தான். என்னைப் பார்த்துச் சொன்னான்,

"யாராவது வந்துட்டா இப்பிடி பொலம்ப ஆரம்பிச்சுருறாங்க... இப்ப.

"அது அவங்க தப்புன்னு சொல்றயா?"

"இல்லை. அதுக்காக என்ன செய்யறது. டவுனுக்கு வந்து மட்டும் என்ன செய்றது?"

"அதுக்காக?"

"வேற தெரியலே.

சாயங்காலம் வரை அவன் புத்தகம் படித்தபடி இருந்தான். இருட்டியதும் இருவரும் கிளம்பி ரோட்டுக்கு வர நடந்தோம். தூக்குவாளிகள் அலைபட தீப்பெட்டி ஆபீஸ் விட்டுப் பெண்கள் வந்துகொண்டிருந்தார்கள். ஆடுகளின் சப்தம் புதைந்த காற்று. இரவுப் பூச்சிகள் சப்தம். ரோட்டுக்கு வரும்போது நன்றாக இருட்டி யிருந்தது. ரோட்டில் இரண்டு பெட்டிக் கடைகள் இருந்தன.

இறக்கத்தில் சாராயக் கடை இருந்தது. இருட்டில் கிடந்த கல்லில் உட்கார்ந்துகொண்டு பேசினான். உருவமற்றுப் போய் அவன் குரல் மட்டும் கேட்டது.

"பயமா இருக்குடா. பிடிச்சமானவங்ககிட்டதான் இப்ப பேச முடியாமப் போகுது. யாரும் தேடி வந்தாக்கூடப் பேசாம அனுப்பிரு வோம்னு தோணுது. வீட்ல அக்காகூட மட்டும்தான் பேசுறது. அவள முழுசா பாத்துப் பேச முடியாது. வயது இருபத்தெட்டு ஆச்சுடா. எல்லாரையும் விட்டுட்டு எங்கயும் போக முடியாதுன்னே படுது. இப்பிடி சாப்பிட்டுக்கிட்டு பயத்தை மறைக்க சண்டை போட்டுக்கிட்டு இருக்க வேண்டியிருக்கு. ரெண்டு பக்கமும் போக முடியாம அலைய வேண்டிக்கிடக்கு."

இருள் பூச்சிகள் விட்டு விட்டுக் கத்தின.

"எவனுக்கும் லெட்டர் போடக்கூட முடியலே... எல்லா லெட்டருக் கும் ஏண்டா பதில் எதிர்பாக்குறீங்க..."

பேசாமலிருந்துவிட்டு பின் திடீரெனக் கேட்டான்,

"நீ எதுக்கு என்னய பார்க்க வந்தே.

"சும்மாதான்.

“எனக்குத் தெரியும்டா. நீ சொல்ல மாட்டே... உனக்கும் எங்கிட்ட இருக்க அதே பிரச்சினைதான். மறைக்க நீ... இப்ப வீட்ல இல்லையா நீ...”

நான் எதுவும் பேசவில்லை.

“ஏண்டா எல்லோரும் இப்படியாயிட்டோம். இப்ப எங்க இருக்கே?”

பஸ் வரும்வரை எதுவும் பேசவில்லை. பஸ் வந்து திரும்பி நிற்கும்போது அவன் இரண்டு சிகரெட் வாங்கிக் கொடுத்துவிட்டு நின்றுகொண்டான்.

கூட்டமேயில்லாத பஸ். டிக்கெட் கேட்டு வாங்கும்போது மணியைப் பார்த்தேன். ஒன்பதைத் தாண்டியிருந்தது. மதியம் சரியாகச் சாப்பிடாத தால் பசியெடுத்தது. போக எப்படியும் மணி பதினொன்றைத் தாண்டிவிடும். வீட்டுக்குத்தான் போக வேண்டுமா எனத் தெரியாம லிருந்தது.

உறங்குவதற்கு இடமற்றுப்போன நகரவெளி. காவலர்கள் சந்தேகங் கள். யோசிக்கவே முடியவில்லை.

எங்காவது படுத்து நன்றாக உறங்க வேண்டும் போல் இருந்தது. வரும்போது நகரம் தாண்டியதும் எதிர்ப்பட்ட அய்யனார் கோவில் ஞாபகத்தில் முட்டியது.

பஸ் காட்டு வெளியில் போனபடியிருந்தது. இரண்டு சிகரெட்டு களும் தீப்பெட்டியுமிருந்தன என்னிடம்.

நகரம் வரும்முன் உள்ள விலக்கில் இறங்கிக்கொண்டேன். பருத்த அய்யனார் சிலை உறைந்து போயிருந்தது. பொறி பறக்கும் அருவா ளோடு உறைந்த சாமி. கல்குதிரைகள்.

உள்ளே போக முடியாமல் நெடி. திண்டு போலக் கிடந்ததில் படுத்துக்கொண்டேன். கையைப் பிடித்தபடி அப்பா ஸ்கூலில் சேர்க்கக் கூட்டிப்போன நாளின் நினைவு வந்தது.

சிகரெட் பற்றவைத்துக்கொண்டேன். உறங்குவதற்கு முன்பு ஈரத்துக்கும் வெக்கைக்கும் இடையில் ஓடியபடியிருந்த எலி ஞாபகத்தில் வந்தபடியேயிருந்தது பல முறை.

நிழலாய் இருந்தவர்கள்

தெருவில் கொட்டுக்காரர்கள் போய்க்கொண்டிருந் தார்கள். செல்லையா அவர்களுக்கு முன்பாகவே சென்னப்ப ரெட்டியார் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்து விட்டான். பெண்கள் உள்ளே ஒப்பாரி வைத்து அழுதுகொண்டிருந்தார்கள். பித்தளைக் குமிழ் போட்ட பெஞ்சை வெளி வாசலுக்குப் பக்கத்தில் தூக்கிப் போட்டிருந்தார்கள். அதில் ரெண்டு, மூணு பேர் உக்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள் சென்னப்ப ரெட்டியார் வீட்டுக்கு முன்பாகப் பெரிய வேப்பமரம் இருந்தது. வேப்பமரத்தடியில் கல் உரல் கிடந்தது. அதன் பக்கத்திலே பெரிய பட்டியக்கல் போட்டிருந்தார்கள்.

வேம்பு வீட்டைப் பார்த்தபடியிருந்தது. வேம்பின் அடிப்பகுதியைச் சுற்றிக் கல் வைத்துக் கட்டிய வளைவு இருந்தது. அதில் இருந்த சிமெண்ட் பெயர்ந்துபோயிருந்தது. சென்னப்ப ரெட்டியார் இருந்த வரைக்கும் அதில் படுத்தபடிதான் இருப்பார். சென்னப்ப ரெட்டியார் மகன் பட்டியக்கல்லில் உட்கார்ந்திருந்தான். பின்வாசலில் புகை எழுந்தபடியே இருந்தது. செல்லையாவைப் பார்த்ததும் கூப்பிட்டான்.

“குடிமகன் இருக்கானா... வீட்ல... இல்லையா”

“வாண்டு லேது மாமா.”

“எங்க போயி தொலைஞ்சானாம்.”

“அவன் இன்னும் வரலையாம்... கோவிச்சுகிட்டு போனவன்.”

“குடிமகனுக்கு என்ன பெரிய கோவம். மயிரு... முனிப்பகடை வீட்ல போயி அவனை வரச்

சொல்லு. மாத்தி நாயக்கன்பட்டி, செவப்பட்டிக்கெல்லாம் சொல்லிவுடணும்... அப்பிடி போற வழியில பொட்டல்பட்டியில விலகி குடிமகன் இனிமே வருவானா இல்லையான்னு கேக்கச் சொல்லீர வேண்டியதுதான்."

அவன் பேசிக்கொண்டிருக்கும்போதே ராசு ரெட்டியாரும் அவர் சகலைகளும் வருவதைப் பார்த்தான் செல்லையா செல்லையா கிளம்பிப் போகும்போது அவர்கள் முன் திண்ணைக்கு வந்திருந்தார்கள். கொட்டு சப்தம் ஊர் முழுவதும் தொற்றிப் படர்ந்தது. மேலத்தெரு வழியாகப் போனான். ஆட்கள் அதிகமில்லை. வீடுகளின் முன்னால் சாக்கடை உடைந்து ஓடிக்கொண்டிருந்தது. ஆட்டுக் குட்டிகள் கழுத்து காரை வீடு அப்படியே கிடந்தது. காரை வீட்டுக்காரர்கள் ஊரைவிட்டுப் போய்ப் பல காலம் ஆகிப்போனது. அஞ்சு பொம் பளைப் பிள்ளைகளோடு அவர்கள் பிழைப்புக்காகக் கம்மாப் பாதையில் போய்க்கொண்டிருந்தபோது செல்லையா கம்மாய்க்குள் மீன் பிடித்துக் கொண்டிருந்தான் சின்னப் பையனாய்.

கறுப்பு கறுப்பாக அந்தப் பெண்கள். உயரமும் தாட்டியுமான விஜயா அக்கா மட்டும் சாவகாசமாக நடந்து போனாள். அப்போதும் அவர்களின் நிழல் கம்மாயில் நீண்டு விழுந்தது. புளியஞ்செடிகள் கருகிப்போன மதிய வெயிலில் அவர்கள் கடந்து போனார்கள் ஊரைவிட்டு. செல்லையா, சுப்பையா தேவர் வீட்டின் முன் போகும் போது நாலைந்து பெண்கள் வாசலில் உட்கார்ந்திருந்தார்கள். காது வளர்த்த பெண்களின் பாம்படம் குண்டு குண்டாகத் தொங்கியது. ஊதா சேலையில் இருந்தார்கள். அவன் கடந்து போகும்போது நிமிர்ந்து பார்த்துக்கொண்டார்கள். மேலத்தெரு முடியும் இடத்தில் வேலிப்புதர்கள் ஆரம்பமாகிவிடும். வேலிப்புதருக்குள் ஒடுங்கிய பாதையில் வண்ணான் வெள்ளாவி இருந்தது. அதன் பின்பு கழுதைகள் நின்றபடியிருக்கும்.

முனிப்பகடை வீடு வேலிப்புதரின் ஊடேதான் இருந்தது.

அவன் ஆள் குள்ளமாக இருப்பான். அவனின் ஏறின நெற்றியில் நாலைந்து வெட்டுத் தழும்புகள் இருக்கும். பெரிய வயிறு புடைத்துப் போயிருக்கும்.

செல்லையா போனபோது வேலிப்புதரின் உள்ளே பூனை அலைந்த படியிருந்தது. உடைந்த கோலிக் குண்டுகள் வெயிலில் மினுங்கின அவன் தலை தெரிந்ததும் முனிப்பகடை எழுந்து கொண்டு நின்றான்.

"என்ன சாமீ.

"ரெட்டியார் வீட்ல வரச் சொன்னாரு.

"இந்தா வரேன் சாமீ.

பனையோலை விடைத்துக்கொண்டிருந்தது கூரையில். புகையேறி பனையோலை கருமை படர்ந்து போயிருந்தது. மேலே சொருகியிருந்த கட்டைச் செருப்பை எடுத்துப் போட்டுக்கொண்டு கூடவே வந்தான்

முனிப்பகடை. செல்லையா ரெட்டியார் வீட்டுக்குப் போனபோது அவர்கள் குடிமகனைப் பற்றித்தான் பேசிக்கொண்டிருந்தார்கள்.

"அந்தக் கழுதய. ஊருக்கு, கூட்டிட்டு வந்தது நாம. இப்ப கோவிச்சுகிட்டு போனா. வேற ஆளா கிடைக்கல.

அதுக்காக.. அவன் தோதுக்கு வேலை செய்ய என்ன ஆபீஸ் உத்தியோகமா பாக்கான். போயி கடைசியா கேட்டுட்டு வரச் சொல்லுங்க.. மேட்டுப்பட்டி குடிமகன்கூட இங்க வர்றதுக்கு குதி போட்டுகிட்டு இருக்கான்."

சென்னப்ப ரெட்டியார் மகன் இடையிட்டுச் சொன்னான்.

"இப்பிடி இழவு... காரியம்னு ஆகிப்போச்சுன்னா... இவன தேடிக்கிட்டா திரிய முடியும். அத்துவிட்ற வேண்டியதுதான்..."

முனிப்பகடை எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டுதான் இருந்தான். சென்னப்ப ரெட்டியார் செத்த விசயத்தைச் சொல்வதற்காக அவன் செவல்பட்டிக்குப் புறப்பட்டபோது வெயில் ஏறி அடித்தது. ஊரைத் தாண்டும் வரையில் கொட்டுச் சத்தம் கேட்டபடியிருந்தது.

கம்மாயைக் கடந்ததும் எங்கும் கரிசல் வெளி பரந்து கிடந்தது. கருவேல மரங்களையும் பனைகளையும் தவிர்த்து எதுவுமற்றுப் போயிருந்தது பூமி. காரைப்பட்டுப் போயிருந்தது கொஞ்சம் நிலம். தொலைவில் போன பின்பு ஊர் மூழ்கிப்போனது போலத் தெரிந்தது. ஊரைச் சுற்றி வெக்கையலைந்தது. பனங்காடைகள் விட்டு விட்டுச் சப்தம் கொடுத்தன. அவன் உதடுகளைக் குவித்துக் குரல் கொடுத்தான். பனங்காடை பதில் சொன்னது.

கருவேல மரங்கள் வெறித்துக்கொண்டு நின்றன. மொட்டைக் கிணறுகளுக்குள் பதுங்கிய பறவைகள் வெளித் தெரியாமல் விம்மிக் கொண்டிருந்தன. காட்டுக் கோவிலின் வெளியே கல்குதிரை நின்று கொண்டிருந்தது. பதினெட்டுப்படியான் கையில் அருவாளோடு காடு காத்துக்கொண்டிருந்தார். அந்தப் பக்கம் போகும்போது செருப்பை எடுத்துக் கக்கத்தில் வைத்துக்கொண்டான்.

கருப்பசாமியின் பெரிய முளிகள் தனித்துத் தெரிந்தன. சாமி கும்பிட்டுப் போட்டுப் போன வாழை இலையின் சருகுகள் சுருண்டு கிடந்தன. தேங்காய்ச் சிரட்டைகள் கிடந்தன. குதிரை காலை வானத்துக்குத் தூக்கி நின்றது. அதன் குறி விடைத்துப் போயிருந்தது.

செவல்பட்டிக்கு எட்டு மைல் நடக்க வேண்டியிருந்தது. சென்னப்ப ரெட்டியாரைப் பற்றி நினைத்துக் கொண்டு போனான். சென்னப்ப ரெட்டியாருக்குப் பெண்டாட்டி தங்குறதில்லை. அவர் காலத்துக்குள் நாலு கல்யாணம் பண்ணிக் கொண்டார். எல்லா ஆச்சிமார்களும் அல்ப ஆயுசில் போய்ச் சேர்ந்து போனார்கள். அவர் வீட்டில் பிறந்த பொம்பளைகள்கூட ஆண் ஜாடையாகவே இருந்தனர். அந்தப் பெண்களின் முகவாகு செய்து வைத்ததுபோல இருக்கும். வட்டமான முகம். கோயிலுக்கு விளக்குப் போட வரும்போது

பார்த்திருக்கிறான்.

ஒரே பையன்தான் இருந்தான் ரெட்டியாருக்கு. ரெட்டியார் காசை எங்கே வைத்திருப்பார் என எவருக்கும் தெரியாது. கூலியாள் களுக்கு அவர் சம்பளம் ஒரு நாளும் சரியாகத் தந்ததேயில்லை.

செவல்பட்டிப் பாதை மங்கிக்கொண்டே வருவதாகப்பட்டது. அதிகமாக யாரும் காட்டுப் பாதையில் வருவது நின்றே போனது. எப்பவாவது ராத்திரியில் செவல்பட்டியில் நல்லதங்காள் பாவைக் கூத்துப் பார்க்க நடந்துவரும் கூட்டம் தவிர அதிகப் பேர் வருவதே யில்லை. இரவில் பாதை மறைந்துவிடும். காடு தன் வாய் திறந்து புலம்பத் தொடங்கும். ஆம்பளைகளும் பெண்களுமாக நடந்து வரும் இரவில் ஒருத்தர் முகம் அடுத்தவருக்குத் தெரியாது. தெலுங்கில் பேசியபடியே வருவார்கள். கூத்துக்காரர்கள் பஞ்சாயத்து ஆபிஸ் முன்னாடியிருந்த களத்தில்தான் கூத்து போடுவார்கள். அந்த இடத் தைச் சுற்றிப் புளிய மரங்கள் நிறைந்து போயிருந்தன. இரவில் புளியம்பூ வாடையடிக்கும் பூ தெரியாமல். பெட்ரோமாக்ஸ் லைட் வெளிச்சம் மனித நிழல்களைப் பெருசு பண்ணும். கூத்து முடிந்து தூக்கம் கலையாது நடந்து போகும்போது எங்கும் விடியத் தொடங்கி யிருக்கும். நாய்கள் ஆளுக்கு முந்திப் போய்க்கொண்டிருக்கும்.

முனிப்பகடை அப்படியான நாள்களில்கூட ரொம்பவும் நேரம் கழித்தே கூத்துப் பார்க்க வருவான். தனியாகக் காட்டில் வரும்போது இரவு அவனுக்குத் தன் தீனமான வெப்பத்தைக் காட்டிக் கொடுக்கும். இருட்டு சடசடவென விடைத்துக்கொண்டு நிற்கும். ஆர்மோனியத் தோடு பாடுங்குரல் கேட்கும். காட்டுப் பாதையில் நடந்துபோனவர் களின் காலடித் தடங்கள் மங்கிப் போய்விட்டன. இரண்டு தடவை பஸ் வந்து திரும்பிய பின் அந்தப் பாதையில் யாராவது ஆடு மேய்க்கப் போவதோடு சரி.

செவல்பட்டியில் ரெட்டிமார்களின் குடும்பம் சுருக்கமாக இருந்தது. ஆறு வீடுகள்தான். தெக்கு வளைவில் இருந்தார்கள். அவன் போன போது வீடுகளில் ஆட்கள் இருந்தார்கள். பின் வாசல் வழியாக வந்து சொன்னான். அவனுக்கு எட்டணாக் காசு கொடுத்தார்கள். தாட்டியமான வீடுகளில் இருந்தார்கள்.

செவல்பட்டியிலிருந்து தெற்கே பிரிந்த பாதையில் அவன் பொட்டல் பட்டிக்குப் புறப்பட்டான். சாயங்காலத்துக்குள் போய்ச் சேர்ந்தால் மக வீட்டில் கொஞ்ச நேரம் இருக்கலாம் எனப்பட்டது.

பொட்டல்பட்டி போகும் பாதை வண்டிப் பாதை. வழியெங்கும் தோட்டமிருந்தது. செம்புழுதி பறக்கும் நடக்க நடக்க. மேகாடு கடந்த பின்பு வெற்றுவெளியாகிவிடும். அதில் மயில்கள் அலைந்தபடி யிருக்கும். மயில்களின் சப்தம் விநோதமாகக் கேட்கும். தூரத்தில் உடம்பை ஆட்டியபடி நடந்துகொண்டிருக்கும் மயில்கள். கடந்து போகவும் வெயில் மங்கிக்கொண்டிருந்தது.

சென்னப்ப ரெட்டியாரின் ரெண்டாவது சம்சாரம் அவ்வளவு நல்ல பொம்பளை இல்லை எனப் பேசிக்கொள்வார்கள் ஊரில். ஆள் ஆறு அடியிருப்பாள். அவளைப் பார்க்கும்போதெல்லாம் சென்னப்ப ரெட்டியாருக்கு மஞ்சள் சீனிக்கிழங்கு ஞாபகம் வரும். ஒத்த மூக்குத்தி போட்டிருந்தாள்.

அவளை தெக்கே போய் கல்யாணம் பண்ணிக்கொண்டு வந்தார். அவள் வந்ததில் இருந்து வீட்டு வேலைகள் பார்க்கவேமாட்டாள். முனிப்பகடை காலையில் மாட்டுக்குப் புண்ணாக்கு அரைத்துக் கொண்டிருக்கும்போது பார்ப்பான். பின் வாசலில் உட்கார்ந்தபடி தலையை அவிழ்த்துச் சாம்பிராணி போட்டுக் கொண்டிருப்பாள். அதிகாலையிலே குளித்திருக்கக்கூடும். வெயில் பட்டு உடம்பு மினு மினுக்கும். பகலில் அவள் அரவமேயிருக்காது. அவளைப் பார்ப்பதற் காகப் பத்து நாளைக்கு ஒரு தரம் ஜவுளிக் கடையிலிருந்து கேசவன் வந்து போவான். சென்னப்ப ரெட்டியாருக்கும் அதுவெல்லாம் பிடிக்காது. அவனை அவள் அண்ணன் என்பாள்.

அவனும்கூட அதிகம் பேசிக்கொண்டது கிடையாது, அவளிடம். துணி மூட்டைகளை முன்னால் வைத்தபடி உக்கார்ந்தேயிருப்பான். அவள் எப்பவாவது அவன் கண்களை நேராகப் பார்க்கும்போது மட்டும் குனிந்துகொள்வான்.

அவள் வந்து ஒரு வருஷம் இருக்கும். அவன் அடிக்கடி வந்து போனான். சென்னப்ப ரெட்டியார் கூப்பிட்டுச் சொல்லிவிட்டார் அவனிடம். அவன் அன்று போகும்போது தலையைக் கவிழ்த்தபடியே போனான். அது நடந்த மூணு வாரத்துக்குப் பின் உள் மச்சுவீட்டில் அவள் இறந்துபோயிருந்தாள். பார்த்தது குருவன் பொண்டாட்டிதான். கேப்பை எடுப்பதற்காக உள்ளே போனவள் பார்த்தாள். அன்றிரவு சென்னப்ப ரெட்டியாரால் தூங்க முடியாமல் போனது. அவரைக் கூட்டிப் போய் படப்புக்குப் பின்னே வைத்து வீரலட்சுமியம்மாதான் சொன்னாள்,

“மூணு மாசமா முழுகாம இருக்கா...

“ம்.”

“தெரியுமா உனக்கு முன்னாடியே.

அவர் பேசாமலிருந்தார் வீரலட்சுமியம்மா கொண்டையை இறுக்கிக் கட்டிக்கொண்டாள். பின் அவரே கேட்டார்,

“இப்ப என்ன செய்யணுங்கிற...

“உன் தோது போல செய்யு... எழவு சொல்லிவிடாம... இங்கேயே முடிச்சுக்கிறலாம்ல.

அவர் எதுவுமே பேசவில்லை. உள்ளே பொம்பளைகள் அழுது கொண்டிருந்தார்கள். ஒரு வாரத்தின் முன்பு விடாது மழை பெய்த நாள்களாக இருந்தன. மாடுகள் ஓரத்தில் நிற்க வழியில்லாமல் கால் தாங்கின. அந்த இரவு மழை விடாது பெய்துகொண்டிருந்தது.

உள்ளே சிம்னி விளக்கைத் துடைத்துப் பொருத்துவதற்காக முன்னாடி போட்டு உக்கார்ந்திருந்தாள். முகத்துக்கு எதிராகச் சிம்னியைத் தூக்கித் துடைத்தபோது முகம் தெரிந்தது. விளக்கைப் பற்ற வைத்து விட்டு நிலையை ஒட்டி நின்றுகொண்டு மழை பெய்யும் தெருவைப் பார்த்தாள்.

கல் உரலில் தண்ணீர் நிரம்பி வழிந்துகொண்டிருந்தது. வேம்பின் மீதும் மழை உதிர்த்துப்போன இலைகள் மிதந்துபோயிருந்தன. பட்டியக்கல் ஆள் முதுகு போலத் தெரிந்தது. அவளைப் பார்த்தபடியே இருந்தார். அவள் ரெண்டு தடவை அவரைப் பார்த்தவள் கண்டு கொண்டாள்.

மழை இருட்டு ஈசல் புற்றிலிருந்து சிறகுகள் முளைத்துக் கிளம்பியது. ஈசல்கள் பிறந்து இருட்டில் சருகுகள் போன்ற சிறகுகளாகப் பறந்தன. மழை நின்றதும் பூச்சிகள் சப்தமிடத் தொடங்கின. படப்புக்குப் பக்கமிருந்து பெரிய எலி ஒன்று மயிர்கள் நனைய ஓடியது. ஆட்களின் அரவம் புதைந்த பின்பு அவள் உள்ளே போய்ப் பாயைப் போட்டுச் சுவரோரமாகப் படுத்துக்கொண்டாள்.

வெளியே மாடுகளை அவிழ்த்து ரெட்டியார் வேறு இடத்துக்குக் கட்டிக்கொண்டிருக்கும் சப்தம் கேட்டது. கதவை அடைத்து ரெட்டைத் தாப்பாள் போடும் சப்தம் வந்தது. விட்டங்களின் பதுங்கிய இருளில் மரப்பல்லி இருந்தது. விளக்கைக் கையில் எடுத்துக்கொண்டு உள்ளே வந்தார். அவள் ஒருச்சாய்த்துப் படுத்துக்கொண்டாள். விளக்கைத் தூக்கிப் பிடித்தார். அவள் உறங்கவில்லை இன்னும். பாயை உதறிப் போட்டுக்கொண்டார். அவள் சுவரையே பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் தோளை அசைத்தார். அவள் திரும்பாமலே சொன்னாள்,

"ஒண்ணும் வேணா..

"என்ன...

அவள் பேசவில்லை. பூச்சிகள் வெளியே கத்திக்கொண்டிருந்தன. கொஞ்ச நேரத்தில் அவள் அழத் தொடங்கினாள் அவருக்கு எதுவும் புரியவில்லை. அவளைக் கேட்டபடியிருந்தார். அவள் திரும்பிப் படுத்தபோது பார்த்தார். வயிறு மேடாகியிருந்தது. இடுப்பு விட்டிருந்தது. அவள் உண்டாகியிருக்கிறாளோ என்று தோணியது. அவளை இதுவரை நாலு தடவைக்கு மேல் அவர் தொட்டதேயில்லை. அவள் விடுவதே இல்லை. எரிச்சலாக வந்தது அவருக்கு. அவள் அழுது முடித்துவிட்ட பின்பு எழுந்து வெளியே போனாள். ரொம்ப நேரம் அப்படியே கிடந்தார். அவள் அறைக்கே திரும்பவில்லை. பின்வாசலைத் திறந்து வைத்து அந்தப் படியில் தலையை வைத்து உறங்கியிருந்தாள். எழுந்து வந்த அவர் பார்த்தபோது ஈரக்காற்று வீசிக்கொண்டிருந்தது. மறுநாள் காலையில் அவர் கிளம்பிக் காட்டுக்குப் போனார். மதியம் திரும்பும்போது பசு அலைவதுபோலக் கேட்டது. தொழுவத்துக்குள் போனபோது ஜவுளிக் கடைக்காரன் மேல் சாய்ந்து அழுதுகொண்டிருந்தாள். அவரைப் பார்த்ததும் எழுந்து உள்ளே

போனாள்.

அவனைக் கொஞ்ச நேரம் பார்த்தபடியே இருந்தார் அவன் பசுவையே பார்த்துக்கொண்டிருந்தான். எச்சில் ஒழுக வாய் அசைந்து கொண்டிருந்தது பசுவுக்கு. அவர் தொழுவத்தை விட்டு வந்த பின்பு அவன் எப்போது போனான் எனத் தெரியவில்லை. வீட்டில் அவள் அரவமற்றுப் போனது. வேம்படிக்குப் போய்ப் படுத்துக் கொண்டார். அன்றைக்கும் மழை வந்தது. வேகமாக அடித்து நின்றது மழை. மழையோடு உள்ளே போகும்போது ஒரு தடவை அவளைப் பார்த்தார். பச்சைக் கட்டம் போட்ட சேலை கட்டி யிருந்தாள். கண்ணாடியில் தலைவாரிக்கொண்டிருந்தாள். அவர் வெளியே படுத்துக்கொண்டார். விடிந்ததும் எழுந்து காட்டுக்குப் போய்விட்டார். காட்டிலிருக்கும்போது குருவன் வந்துதான் சொன் னான். அவளைப் புதைத்த இடத்தில் நிறைய தும்பைச் செடிகள் பூத்திருப்பதைப் பின்னாடி ஒரு நாளில் அவர் பார்த்தார்.

பொட்டல்பட்டிக்குள் நுழைந்ததுமே எதிர்ப்படும் ஆலமரத்தடியில் ஆசாரி துருத்தியை ஊதிக்கொண்டிருப்பான். நிறைய வீடுகள் இருந்தன. ரெட்டிமார் தெருவேயிருந்தது. போய் துஷ்டி சொல்லித் திரும்பினான். காளியம்மன் கோவில் இறுக்கத்திலிருந்த தெருவில்தான் குடிமகன் இருக்கக் கூடும் எனப்பட்டது. முனிப்பகடை போனபோது குடிமகன் கருப்பையா பேரனைத் தூக்கி வைத்துக்கொண்டு வெளியே நின்றிருந் தான். பிள்ளைக்கு வங்கு வத்திப்போயிருந்தது. முனிப்பகடை சொன்ன எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்துவிட்டு கருப்பையா சொன்னான்,

“அதுக்காக சாமீமாருக செய்யறது கேக்கிறதுக்கு நாதியத்துப் போன ஊர்ல எப்பிடி இருக்கிறது. ”

பதில் ஏதும் பேசவில்லை. முனிப்பகடை மக வீட்டுக்குக் கிளம்பிப் போன பின்பு கருப்பையா வீட்டுக்குள் போனான். மகள் எல்லாவற்றை யும் கேட்டுக்கொண்டுதான் இருந்தாள். ஆள் போய்விட்டதா எனப் பார்த்த பிறகு கேட்டாள்,

“என்னவாம்...?”

“சென்னப்ப ரெட்டியாரு செத்துப் போயிட்டாராம்..

மேற்கொண்டு எதுவுமே பேசவில்லை. இரவு மருமகன் வந்து கேட்டான்.

“அப்ப ஊருக்குப் போக வேண்டியதுதான். சாமீமாருக இறங்கி வர்றதே பெருசுல்ல.

கேட்டுக்கொண்டே இருந்துவிட்டுத் தூங்கிப் போனான்.

ஆதியில் ஊரில் நாற்பது வீடுகள்தான் இருந்தன. பெரிய குருவா ரெட்டியார்தான் குடிமகனை ஊருக்குக் கூட்டி வந்தார். அவனுக்கு வீடு போட இடம் கொடுத்தார் கருப்பையா அந்த ஊருக்கு வந்த பின்பே பிள்ளைகள் ஆனது. மூணும் பொம்பளைப் பிள்ளைகள்.

கெசவால்களாகப் பிறந்தன. ஊரில் இருந்த ஒவ்வொருத்தர் முகவாகும் அவனுக்குள் பதிந்து போயிருந்தது. கிட்டத்தில் பார்க்கும்போது முகங்கள் விகாரமானது போலத் தெரியும். மூக்கும் கண்களும் பெரிது பெரிதாகத் தோணும்.

அவன் சின்னப் பெட்டி வைத்திருந்தான். அதில் இரண்டு கத்துரிப்பான்கள், இரும்புச் சீப்பு, வட்டச் சீப்பு, அலுமினியக் கிண்ணம், கட்டிங் மிஷின் எல்லாமிருந்தன. இடுப்பில் கறுப்பு பெல்ட் கட்டியிருப்பான். பெல்ட்டில் சவரக் கத்தியைச் சொருகி வைத்துக் கொள்வான். பிள்ளைகள் அவனைக் கண்டதும் ஓடுவார்கள். சின்னப் பையன்களிலிருந்து எல்லோரும் அவனைப் பேர் சொல்லித் தான் கூப்பிடுவார்கள். அவன் எல்லோரையும் அப்பச்சி என்பான்.

சின்னப்பிள்ளைக்கு முடிவெட்டி விடுகிறதென்பதே அவனுக்கு ரொம்பவும் பிடிக்கும். கால்களுக்குள் இடுக்கிவைத்துக்கொண்டு வெட்டுவான். அவனிடம் முடிவெட்டிக்கொண்ட பையன்கள் பெரிய ஆட்களாக மாறியும் அவனை முறைத்தபடி போவார்கள். அவன் படப்புக்குப் பக்கம் போய் உட்கார்ந்ததும் பிள்ளைகள் ஓட்டம் ஓடத் தொடங்குவார்கள். பிடித்துத் தரதரவென இழுத்து வருவார்கள் சின்னப்பிள்ளைகளை. புழுதி கிளம்ப காலை இழுத்தபடி வருவார்கள். பாதி தூரம் வருவதற்குள் கூப்பிடுவார்கள்.

"கருப்பையா வந்து பிடிச்சுக்கோ.

அவன் எழுந்ததுமே பிள்ளைகள் திரும்பவும் அழுவார்கள். கண் ணீரில் தலைமயிர்கள் ஒட்டிக்கொள்ள வெட்டிவிடுவான். விம்மி விம்மி அழுவார்கள். அவன் அலுமினியக் கிண்ணத்தில் இருந்த தண்ணீரில் தலைமயிர் மிதக்கும்.

கருப்பையா தெக்குத் தெருப் பக்கம் போகும்போது மட்டும் சுதாரித்துக்கொண்டு போவான். வேலுத் தேவர் வகையறாக்கள் இருந்தார்கள். எல்லோருக்கும் பெரிய மீசை, கிருதா பட்டையாக இருக்கும். 'L' கிருதாக்கள் வைக்கச் சொல்லுவார்கள். அதிலும் தலைமயிர் பின்னாடி கிடக்கும். வேலுத் தேவர் மகன் மிலிட்டரிக்குப் போவதற்கு முன்பு அவனுக்குக் கூட அவரே வெட்டிவிட்டார். அவன் மிலிட்டரியிலிருந்து வந்தபிறகு ஒரு நாள் அவனே சவரம் பண்றதைப் பார்த்து கருப்பையா சிரித்தான்.

"என்ன அப்பச்சி. இந்த வேலைய எல்லாம் செய்றீங்க. சொன்னா வந்துருப்பன்ல. ."

"மிலிட்டிரியிலே எல்லாருமே செஞ்சுகிறதுதான்.

"ஏன் அங்கிட்டு குடிமகன் கிடையாதா

அவனுக்குச் சிரிப்பாக வந்தது. கருப்பையா அதைப் பலரிடமும் சொல்லிக்கொண்டிருந்தான் அதன் பின்பு. சுப்பா ரெட்டியார் மகன் மட்டும் எப்பவாவது வீட்டுப் பக்கம் தென்படுவான். ஆளைப் பார்த்ததும் சொல்வான்.

“கருப்பையா... உன்ன வடக்குத் தெருவுல வரச் சொன்னாங்க”

“போயிட்டுதான் வர்றேன் அப்பச்சி.

கருப்பையா சாப்பிடுவதைப் பார்த்தபடி இருப்பான் அவன் எப்பாவாவது கருப்பையா கேட்பான்,

“சாப்பிடுங்க அப்பச்சி.

ஓடிப் போய்விடுவான். பத்து வருஷத்துக்குள் ஊரில் நிறைய வீடுகள் முளைத்திருந்தன. புதுசாகக் கட்டிக்கொண்டு வந்த பொம்பளை கள் தெரிந்தார்கள். ஊர் பெரிதாகிக்கொண்டே வருவதாகத் தெரிந்தது. சுப்பா ரெட்டியார் வீட்டுக்கு அவர் கோர்ட்டுக்குப் போற அன்னைக்கு மட்டும் விடிகாலையிலே போய் சவரம் பண்ணி விடுவான்.

அந்த நாள்களில் அவர் எழுந்து முன் திண்ணையில் உட்கார்ந்து இருப்பார். கருப்பையா தெருவில் வரும்போது பார்ப்பான். விடியாத மங்கல் படர்ந்து போயிருக்கும் எங்கும்.

அவனைக் கண்டதும் உள்ளே போய்விடுவார். அவன் பின்னாடி போவான். இடிந்த சுவரும் வாகரிசி மரமுமிருக்கும். அதற்குக் கீழே உட்கார வைத்து சவரம் பண்ணுவான். அவர் முகம் நீண்டது. மயிர் கோரையாக இருக்கும். லேசில் கத்திக்கு வராது. கத்தியைத் தீட்டிக்கொள்வான். அவன் தீட்டும் சப்தம் துல்லியமாகக் கேட்கும். மரத்திலிருந்து மைனாக்கள் கத்தும்.

சுப்பா ரெட்டியாருக்கும் அவர் தம்பிக்கும் சொத்துத் தகராறு இருந்தது. பல வருஷமாக கேஸ் நடந்தபடி இருந்தது. மதுரை கோர்ட்டுக்குப் போக அவர் டவுன் பஸ்ஸில் போய் இறங்கி ரயில் மாறிக்கொள்வார். அவன் சவரம் பண்ணி முடித்த பின்பு எழுந்து உதறிக்கொள்வார். அதன் பின்பு அவன் கிளம்புவான்.

ஊருக்குப் பள்ளிக்கூடம் வந்தது. களத்தை ஒட்டுன இடத்தில் தான் பள்ளிக்கூடம் கட்டினார்கள். அஞ்சாப்பு வரைக்கும் உள்ள பள்ளிக்கூடம் என்றார்கள். கருப்பையாகூட பொம்பளப் பிள்ளை களைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பினான். மூணு வாத்தியார்களும் ஒரு டீச்சரும் இருந்தார்கள். வாத்தியார்களுக்கு வீடு கொடுத்தார்கள். அவர்களுக்கு சவரம் பண்ணப் போகும் போது கேட்பான் பிள்ளைகள் பற்றி. அவர்கள் எதுவும் சொல்வது கிடையாது.

கருப்பையா மகள் சரோஜாவுக்கு மட்டும் பள்ளிக்கூடத்துக்குப் போவதென்றால் பிடிக்கும். பள்ளிக்கூடத்தில் இருந்த பெரிய உலக உருண்டைதான் அவளுக்கு ரொம்பவும் பிடித்தது. அது டீச்சர் மேஜை மேலேயிருக்கும். டீச்சர் அதைச் சுற்றிக் கொண்டேயிருப்பாள். அதில் உலகத்திலுள்ள எல்லா ஊர்களின் பேர்களும் இருந்தன. அவளுக்கே ஆறுகளின் பெயர்கள் எல்லாம்கூட மனப்பாடமாகி விட்டன. மத்தியமான நேரத்தில் டீச்சர் தூங்கும்போது சில சமயம் நைசாகப் போய் அந்த உருண்டையைச் சுற்ற விட்டுப் பார்ப்பாள். அவள் ஊரைத் தேடிப் பார்ப்பாள். அது இருக்காது.

எப்படியாவது அதைப் போல வாங்கிவிட வேண்டும் என்று தோணும். ஒண்ணாப்பு வாத்தியாருக்கு ஈசல் வாத்தியார் என்று பெயர் வைத்ததே அவள்தான். ஈசல் வாத்தியார் மகன்கூட அவர்கள் பள்ளிக்கூடத்தில்தான் படித்தான். ஆள் அவனும் ஈசல் போலத்தான் இருப்பான். இருந்தும் அவன் கடலை நேராகப் பார்த்திருக்கிறான். டீச்சர் கேட்டபோது கையைத் தூக்கின ஒரே ஆள் அவன்தான். அவனை, கடலைப் பத்திச் சொல்லச் சொன்னாள் டீச்சர். அவனும் சொன்னான். அவன் கடலுக்கு முன்னாடி தனியே நின்றதாகச் சொன்னான். அது அவளுக்கு ரொம்பவும் பிடித்திருந்தது. அன்றைக்குச் சாயங்காலம் களத்தில் வைத்தே கேட்டாள்,

"கடல் எம்புட்டு அகலம்.. இம்புட்டு?" கைகளை விரித்துக் காட்டினாள். அவன் இல்லை எனத் தலையாட்டினான். பின் கேட்டாள்,

"பத்துப் பனை ஆழம் இருக்குமா..

தெரியாது என்றான். பின் அவளே கேட்டாள்,

"வானத்தளவு இருக்குமா. .?"

இருக்கும் என்றான்.

அவள் வானத்தைப் பார்த்தபடியே போனாள். அது கடலைப் போலச் சுழன்றது. ரெண்டு நாளைக்குப் பின்பு சரோஜா, தங்கச்சிகளைக் கூட்டிக்கொண்டு ரெட்டியார் படிக்கிணத்துக்குப் போனாள். தண்ணீர் இறைத்துக்கொண்டிருந்தார்கள். வாய்க்காலில் ஓடிக்கொண்டிருந்தது. அவள் போனவுடனே பார்த்துவிட்டாள். இருந்தும் பேசாமல் வந்தாள். ரத்னம்தான் அவளை முழங்கையால் இடித்துச் சொன்னாள்,

"அங்க பாரு ஈசல் வாத்தியார் மகன். அவுங்க அம்மா"

"சும்மா வாடி குட்டச்சி" என்றாள்.

அவர்கள் சிரித்தபடியே வந்தார்கள். ஈசல் வாத்தியார் மகன் தலை கவிழ்ந்து போயிருந்தான். அவனுடைய அம்மா முதுகைத் தேய்த்துக்கொண்டிருந்தாள். அவனுக்குப் பின் அவனிடம் சொன்னாள் அவனுடைய அம்மா.

"டவுசரக் கழட்டுறா.

"போ. மாட்டேன்.. என்றான். பிள்ளைகள் சிரித்தார்கள். அவன் இறுக்கிப் பிடித்துக்கொண்டிருந்தபோதும் டவுசரைக் கழட்டி விட்டாள். சரோஜா பார்த்தபடியிருந்தாள். மறுநாள் ஸ்கூலுக்கு வந்த பின்பு அவளைப் பார்த்ததும் அவன் வேறு இடத்துக்குப் போய் உட்கார்ந்துகொண்டான். சரோஜாவுக்குச் சிரிப்பாக வந்தது.

ரத்னம் வந்து சரோஜா வகுப்புப் பிள்ளைகளிடம்கூடச் சொல்லி விட்டாள். எல்லாப் பிள்ளைகளும் எலிக் குஞ்சுகள் போலக் கத்திச் சிரித்தன. அடுத்த வருசம் ஈசல் வாத்தியார் மாறிப் போய்விட்டார். சரோஜாவைப் பள்ளிக்கூடத்தில் இருந்து நிறுத்திவிட்டாள்

அவளுடைய அம்மா. சரோஜா சடங்கான மறு வருடமே அவளுக்குக் கல்யாணமானது. மாப்பிள்ளை ஊரில் கடல் இருந்தது அவளுக்கு ரொம்பவும் பிடித்திருந்தது. கடல் பார்க்கப் பார்க்க அலுக்காததாக இருந்தது அவளுக்கு.

முனிப்பகடை மக வீட்டுக்குப் போனபோது இருட்டிவிட்டது. வீட்டில் புகை மண்டியிருந்தது. பன்றிகள் தண்ணீர் குடித்துக்கொண்டி ருந்தன வெளியே. மருமகன் கடலைக் காட்டுக்குக் காவலுக்குப் போயிருந்தான். சாப்பிட்டுவிட்டு மருமகனைப் போய்ப் பார்த்து வந்தான். இருவருமாகத் திரும்பியது விடிகாலையில்தான். விடிகாலை யில் கருப்பையாவுக்கு முழிப்பு தட்டியது. ரத்னம் தூங்கிக் கொண்டிருந் தாள். அவளை எழுப்பிச் சொல்லிவிட்டுக் கிளம்பலாம் என்றே தோன்றியது. கருப்பையா ஊருக்குக் கிளம்பியபோதுதான் சூரியன் வந்திருந்தது.

சென்னப்ப ரெட்டியார் மூன்றாவது கல்யாணமாக உள்ளூரில் இருந்த பெண்ணையே முடித்துக்கொண்டார். அவளுக்கும் வயது முப்பது இருக்கும். ஆள் குள்ளமாயிருப்பாள். துடுப்பு போன்ற உடம்பு. சதா வீட்டு வேலைகள் செய்தபடியிருப்பாள். அவள் வந்தபிறகு அவருக்குச் சொத்துகள் நிறைய சேர்ந்தன. அவளுக்கு முகத்தில் பெரிய பரு இருக்கும். கறுத்த உதடுகள். அவளுக்கு மூன்று பிள்ளைகளாயின. தொழுவத்தில் மாடுகள் நிறைந்தன.

பசுக்களின் ஊடே திரியும்போது அவள் இருக்கும் இடமே தெரியாது. அவள் எப்போது எழுந்துபோவாள் எனத் தெரியாது. சென்னப்ப ரெட்டியார் அவள் சிரித்தே பார்த்ததில்லை. அவளுக்குக் கோபமே வருவதில்லை. மாடு தள்ளி, காய்ச்சல் வந்து படுத்தவள் இறந்தே போனாள். அதற்குத்தான் அவர் ரொம்பவும் அழுதார். அதுபோன்ற பொம்பளைகள் இருப்பது அபூர்வம் என்று பட்டது. அதன் பிறகு கல்யாணம் பண்ணிக் கொள்ளாமலேயிருந்தார். பிள்ளை களுக்காகப் பிறகு பக்கத்து ஊரில் இருந்த சின்னத்தாயியை முடித்துக் கொண்டார். பிள்ளைகள் வளர்ந்தன. அதன் பிறகு அவருக்கு ஏற்றம்தான். நிறைய நிலம் வாங்கிப் போட்டார்.

கருப்பையா பார்த்துக்கொண்டிருக்கும்போதே ஊரில் எவ்வளவோ மாறிப் போய்விட்டது. பெரிய குடும்பங்கள் சரிந்து இடம் தெரியாமல் போய்விட்டன. சுப்பா ரெட்டியார் கேஸ் தோத்துப் போன பின்பு ஊரைவிட்டுப் போய்விட்டார் பெரிய குருவா ரெட்டியார் குடும்பம் இருந்த இடமே தெரியவில்லை. அந்த வீட்டை இடித்துப் புது வீடு கட்டிவிட்டார்கள் அதற்குள்.

பழைய ஆட்களைப் போல இல்லை புதியவர்கள். தலையெடுத்து வந்த இளவட்டங்கள் கைக்குப் போனது ஊர். டீக்கடை மூணு ஆனது. காளியம்மன் கோவில் பொங்கலின்போது சண்டை வந்து அடித்துக்கொண்டார்கள். போலீஸில் தேடிக்கொண்டிருந்த ஆறுமுகத் தேவரை யாரோ வெட்டிப் போட்டிருந்தார்கள் காட்டுப் பாதையில்.

முன்பெல்லாம் போலீஸ்காரர்கள் திருவிழா அன்றைக்கு வருவார்கள். பெரிய குடும்பத்துக்காரர்கள் அவர்களுக்குக் கலர் வாங்கிக் குடுத்து, சாப்பாடு போட்டு அனுப்புவார்கள். இப்போதெல்லாம் வாரத்துக்கு ஒரு தரம் போலீஸ் யாரையாவது தேடி வரத் தொடங்கினார்கள்.

தெருவுக்கு இரண்டு இளவட்டப் பயல்களை போலீஸ் பிடித்துப் போவதும் திரும்புவதுமாக இருந்தது காலம். இரண்டு சமைஞ்ச பிள்ளைகளும் வீட்டில் இருந்தபோது கருப்பையாகூடப் பயந்தான். ரத்னத்துக்கு மட்டும் மாப்பிள்ளை பார்த்துக் கட்டிக் கொடுத்துவிட்டுக் கடைசிப் பெண் சிவகாமியை சரோஜா ஊருக்கு அனுப்பிவிட்டான்.

சிவகாமிக்கு அந்த ஊர் ரொம்பவும் பிடித்துப் போயிருந்தது. அவள் போயிருந்தபோது மூணு மாதத்துக்குப் பிறகு ஒரு தடவை ஊருக்கு வந்து திரும்பினாள். பிறகு வரவேயில்லை.

கருப்பையாவுக்கு அவளைப் பற்றி இப்போது நினைத்தபோதும் கூடக் கோபம் தாங்காமல் வரும். சரோஜா வீட்டிலிருந்து அவள் யாரோ ஒரு மலையாளத்துப் பையன் கூட ஓடிப்போய்விட்டாள். அந்தப் பையன் ரப்பர் மில்லில் வேலை செய்கிறவன் என்றாள் சரோஜா. கருப்பையாவுக்கு அதைத் தாங்க முடியாமல் இருந்தது. சிவகாமி அதற்குப் பிறகு வீட்டுக்கு வரவேயில்லை.

சரோஜாவும் அவள் புருஷனும் அவனுக்குக் காய்ச்சல் கண்டு கிடந்த நாள்களில் பார்க்கப் போயிருந்தார்கள். கருப்பையா காய்ச்சலாகிக் கிடந்தான். ராமசாமி ரெட்டியாரின் தாய் இறந்து போனார். கருப்பையா வீட்டுக்கு ஆள் விட்டார்கள். சரோஜாவின் புருஷன் போனான். அவனுக்கு இந்த ஊரின் அமைப்பே பிடிப்ப தில்லை. எந்த வரிசையுமற்ற வீடுகள். வீடுகளின் முன்பே பெரிய திண்ணைகள் இருக்கும். வேப்ப மரங்கள் பெருத்த ஊராயிருந்தது.

இதுபோன்ற ஊர்களையும், அதன் ஊர்க்காரர்களையும் அவனுக்குப் பிடிக்காமலே போனது. அவனுடைய அய்யாவும் கரிசல் காட்டில் இருந்தவர்தான். பிழைப்புக்காகத்தான் அந்தப் பக்கம் போனார்கள். அவன் சின்னப் பையனாக இருந்தபோதே இந்தத் தொழில் பிடிக்காமல் போய்விட்டது. அதுவும் ஆட்கள் கையை உயர்த்திக் கம்புக்கூட்டுக்குள் சிரைக்கச் சொல்லும்போது குமட்டும். அவனுடைய அய்யா இதை யெல்லாம் கண்டு கொண்டதேயில்லை.

பன்னிரண்டு வயசில் அவன் ரயிலேறி ஓடிப்போனான். அந்த நாள் இன்னும் ஞாபகத்தில் புதுசாக இருந்தது. வீட்டில் அய்யா வைத்திருந்த நூற்றி அறுபது ரூபாயைத் தூக்கிக்கொண்டு திருவனந்த புரத்துக்கு ஓடிப்போனான். அவன் போனபோது இரவாகிப் போனது. ஊரில் எங்கு பார்த்தாலும் வெளிச்சம் படர்ந்திருந்தது.

ரயில்வே ஸ்டேஷனில் இருந்து வெளியே வந்து நீண்ட ரோட்டில் போய்க்கொண்டிருந்தான். தென்னை மரங்கள் தெரிந்தன. சின்னக் குடிசைகள் போலத் தெரிந்தன. பாலம் வந்தது கொஞ்ச தூரத்தில்.

அதன் ஓரமிருந்த தென்னந்தோப்பில் லைட் எரிந்துகொண்டிருந்தது. உள்ளே சின்னக் கடையிருந்தது. பெரிய வாழைப்பழம் சாப்பிட்டான். பக்கத்தில் கள்ளுக்கடையிருந்தது. குடித்துக் கொண்டிருந்தார்கள். இரவு நெடுநேரம் தங்கியிருந்தான். பின் வெளியே கிளம்பி வந்து மூடிக் கிடந்த கடையின் வெளியே படுத்துக்கொண்டான். காற்றில் ஈரமிருந்தது. விடியும்போது சாரல் அடித்தது.

விடிந்த பின்பு அலைந்த தெருக்களில் ஈரம் படர்ந்திருந்தது. பழுத்துப்போன தெருக்கள். தெருக்களுக்கே தனி வாடையிருந்தது. அரண்மனையின் பெரிய சுவர்கள் உயர்ந்திருந்தன. அன்றைய பகலெல்லாம் அங்கேயே சுற்றினான். மாலையில் லாரியில் ஏறி வேறு ஊருக்குப் போனான். லாரியில்தான் பிலிப்பைப் பார்த்தான். பிலிப்தான் அவனை லாரி வேலையில் சேர்த்துவிட்டான். கொஞ்ச நாளைக்குள் அது பிடிக்காமலே போனது. திரும்பவும் ஓடிவந்தான். வந்த பிறகு வீட்டில் அய்யா எதுவுமே பேசவில்லை. அவனாகவே தொழில் செய்யப் போனான்.

ரெண்டு வருசத்துக்குள் தானாக சலூன் போட்டுக்கொண்டான். ராமசாமி ரெட்டியார் வீட்டின் முன்னே நின்றுகொண்டிருந்தார். சுற்றிலும் நாலைந்து பேர் இருந்தார்கள். மயிர் அடர்ந்த உடம்பு ரெட்டியாருக்கு. அவனை வெறித்துப் பார்த்தார்கள். அவன் மரத்தடிக் குப் போய் நின்றுகொண்டான். ராமசாமி ரெட்டியார் வந்து உட் கார்ந்தார். கூடவே ஒரு பெரியவர் நின்று கொண்டிருந்தார். பெட்டி யைத் திறந்து சவரக் கத்தியை எடுத்துத் தீட்டினான். கிண்ணத்தில் தண்ணீர் நிரப்பிக்கொண்டு குத்துக் காலிட்டு உட்கார்ந்துகொண்டான். கத்தியை மண்டையில் வைக்கும்போது பெரியவர் கேட்டார்,

“எந்த ஊரு குடிமகன் நீ..

அவன் பேசாமலிருந்தான்.

“புறங்கையை சிரைக்காம.. தலைக்கு வரே... எவன் தொழில் சொல்லிக் குடுத்தான்.”

ராமசாமி ரெட்டியார் தலையைக் கவிழ்ந்தபடியே அவனைப் பார்த்தார்.

“சிரைக்கத் தெரியுமா இல்லையா?. கருப்பையா எங்க போனான். .?”

அவன் பேசாமலிருந்தான். அந்தப் பெரியவருக்குக் கோபம் வந்தது. கத்தினார்,

“போயி அவன வரச் சொல்லு. அவனுக்கு என்ன கேடு வந்தது.”

அவனுக்குக் கோபம் வந்தது. அவரை முறைத்தபடியே எழுந்து போனான். அவன் வீட்டுக்குப் போன நேரத்தின் பின் ஒருத்தன் வந்து கேட்டான்,

“கருப்பையா இல்லையா. கூட்டிட்டுவரச் சொன்னாங்க”

கருப்பையா எழுந்து போனான். அன்றைய இரவில் கருப்பையா வுக்குக் காய்ச்சல் அதிகமாகிப்போனது. தான் செத்துவிடுவோம் என்ற பயம் ரயில் பூச்சியைப் போல அவனுக்குள் சுருண்டுபோனது. இரவில் உடம்பு தூக்கித் தூக்கிப் போட்டது. காலையில் மருமகனும் மகளும் கிளம்பிப் போனார்கள் கோபமாக. கருப்பையாவுக்குக் காய்ச்சல் அப்படியே இருந்தது அன்றும். அதன் பிறகு அந்த மகள் வீட்டுக்கே வர மறுத்துப் போனாள்.

சென்னப்ப ரெட்டியார் சாவுக்கு அதிக ஆட்கள் வரவில்லை. வந்திருந்தவர்களும்கூடத் தொழுவத்தின் பின் பக்கமிருந்த இடத்தில் சீட்டு விளையாடிக்கொண்டிருந்தார்கள். சீட்டுகள் இறங்குவதும் ஏறுவதுமாயிருந்தது. முனிப்பகடை சமையல் இடத்துக்கு அந்தப் பக்கம் உட்கார்ந்துகொண்டான். மாடுகள் முகத்தை அலைந்தபடி யிருந்தன. இரண்டு தடவை பீடி வாங்குவதற்காக அவனைக் கூப்பிட் டார்கள். அவனும் போய் பீடி வாங்கி வந்தான். திரும்பி வரும்போது வாயைக் கட்டி மர நாற்காலியில் உட்கார வைத்திருந்தார்கள் சவத்தை.

முகம் உப்பிப் போயிருந்தது. அகன்ற முகம் இன்னும் விரிந்து போயிருந்தது. கட்டையான புருவம் அவருக்கு. அவர் முகத்தைப் பார்க்கும்போது அவனுக்கு அவர் செத்தது போலவே தெரியவில்லை. ஒரு கட்டுப் பத்தி கொளுத்தி வைத்திருந்தார்கள். புகை எழும்பி அறையெங்கும் அலைந்தது.

பெரிய குருவா ரெட்டியார் வீட்டிலே கடைசியா அவர் பெரியப்பா மகள் மட்டும்தான் அந்த ஊரில் இருந்தாள். வாத்தியார் வேலை பார்த்துக்கொண்டிருந்தாள். சென்னப்ப ரெட்டியாருக்கு அவரைக் கண்டாலே பிடிக்காது. வாத்தியாருக்கும் பிடிக்காது. வாத்தியார்தான் நித்தியகல்யாணியை ஊரில் முதலில் விதைத்தவர். நிலமெல்லாம் பிளந்துபோயிருந்தன மழையற்று. ரெண்டு வருஷமாக மழையில்லாமல் போயிருந்தது. ஆட்கள் தண்ணீருக்காகத் தட்டளிந்தார்கள். ஊரிலே ரெண்டு கிணறு இருந்தது. மடத்துக்குப் பக்கத்தில் இருந்த கிணறு மற்ற ஜாதிகளுக்கு. ஒரு கிணறு முனிப்பகடை வீட்டின் பக்கமிருந்தது அவர்கள் ஜாதிக்கு.

கிணறு தண்ணீர் வற்றிப்போய் ஒரு மூலையில் சின்ன ஊத்து போலக் கிடந்தது. தகர டப்பாவை விட்டுத்தான் இறைக்க வேண்டி யிருந்தது. கிணற்றில் எப்பவோ விழுந்துபோன சாமான்கள் தெரிந்தன. ஒவ்வொருத்தராக இறைக்க வேண்டியிருந்தது.

இரவெல்லாம் பெண்கள் தண்ணீர் எடுத்துக்கொண்டு போனார்கள். இரண்டு பேர் தண்ணீர் எடுத்ததும் தண்ணீர் கலங்கிப் போய்விடும். துணி வைத்து வடிகட்டி எடுத்தார்கள்.

முனிப்பகடை வீட்டுப் பக்கமிருந்த கிணறு சுத்தமாகவே வறண்டு

போனது. அந்தப் பெண்கள் மண்பானைகளோடு காட்டு வெளியில் அலைந்தார்கள். அதிலும் சின்ன இருளன் மகளும் அவளோடு சேர்ந்த மற்றப் பிள்ளைகளும் காட்டுவாக்கில் அலைந்தார்கள். மொட்டைக் கிணற்றில் பதுங்கிய பறவைகள் அவர்களைக் கண்டதும் பயந்து விடுபட்டன.

கிணறு கிணறாகத் தேடினார்கள். சின்ன இருளன் மகள் தண்ணீர் தேடித் தலையில் பெரிய மண்பானையோடு அலைந்த காட்டு வெளியில் மிதக்குங் கொடிகள் படர்ந்து கிடந்தது சருகாகிப் போயிருந்தன. காட்டுப் பறவையைப் போலத் திரிந்தாள். அவளோடு கூடவே இரண்டு சின்னப் பிள்ளைகள் போயின.

கோரைக்கிழங்குகளும் அற்றுப்போயிருந்தன. அவளுக்கு எச்சில் உலர்ந்துபோய் உதடு ஒட்டிக்கொண்டது. சுடுகாட்டுப் பாதையிலிருந்த கிணற்றில் தண்ணீர் இருந்தது. உள்ளே இறங்கிப் போய் எடுக்கப் படியில்லை. கலங்கலாகப் பாசி படர்ந்துபோன தண்ணீர் அது. அவள் பாவாடையைத் தூக்கிச் சொருகிக்கொண்டு உள்ளே இறங்கிப் போனாள். கால் வைத்த இடம் சரிந்தது. சின்னப் பொந்திருந்தது பெருவிரல் வைக்குமளவு, உள்ளே இறங்கிக்கொண்டு நின்றாள். பிள்ளைகள் கொண்டுவந்திருந்த ஒரு அடிக் கயிற்றில் பானையைக் கட்டி அவளிடம் இறக்கிவிட்டார்கள். பெரிய பானையையும் சின்னப் பானைகளையும் அவள் வாங்கிக்கெண்டாள். ஒரு மூலையில் தண்ணீர் கட்டிக் கிடந்தது.

மஞ்சனத்திச் செடி வளர்ந்துபோயிருந்தது. கலங்கிப்போன தண்ணீர். கல்லை மிதித்துப் போய்க் கைகளால் விலக்கினாள். பானை முங்கு மளவு தண்ணீர் இல்லை. கைகளால் கோரிக் கோரி ஊற்றினாள். சின்னப் பானைகளை ஏறித் தூக்கிக் கொடுத்தாள். பிள்ளைகள் தலையைக் குனிந்து உள்ளே பார்த்தபடியிருந்தன. பெரிய பானையைத் தூக்கிக்கொண்டு மேலேறி வர முயன்றாள். வயிறு பிடித்துக்கொண்டது. கையைக் கல்லில் வைத்துப் பலமாய் ஊன்றி எழுந்தாள். மேலே வந்தபோது மூச்சு வாங்கியது.

அவர்கள் திரும்பும்போது பானைக்குள் தண்ணீர் அலையும் சப்தம் கேட்டபடியே இருந்தது. மாடுகள் தீவனமில்லாமல் கிடந்தன. சின்ன இருளன் வீட்டில் ஒற்றை மாடேயிருந்தது. எலும்புகள் தெரியும்படி அதுவும் மெலிந்து நின்றது. அதன் கண்கள் பிதுங்கிக் கொண்டிருந்தன. எச்சில் ஒழுக அதன் வாயில் நுரை தள்ளியது. குழிந்த அதன் வயிறுகள் அது சப்தமிடும்போது ஏற்படும் நிலைகுலைவு காற்றில் ஏறி எங்கும் போனது.

சென்னப்ப ரெட்டியார் வீட்டில் மட்டும் மூணு படப்புகள் இருந்தன. அவர் வெளித் திண்ணையில் உட்கார்ந்தே கிடந்தார் அந்தக் காலமெல்லாம். வெயில் தாங்காத ஒரு இரவில் சின்ன இருளன் கொஞ்சம் தீவனம் கேட்கப் போனான் அவரிடம். அவர் இல்லையெனத் திருப்பி அனுப்பினார்.

அவனுக்குத் தாங்க முடியாத கோபம் வந்தது. மறுநாள் இரவு கொடூரமான தன் பற்களோடு திறந்து கிடந்தது. பின்னாடிக் கூடிவந்து படப்பிலிருந்து கொஞ்சம் உருவிக்கொண்டிருந்தான். ஆள் அரவம் கேட்டுப் பதுங்கிக்கொண்டான். வாத்தியாரும் இரண்டு பேரும் உடனிருந்தார்கள். வாத்தியார் போன மறு நிமிஷம் மற்றவர்கள் சென்னப்ப ரெட்டியார் படப்புக்குத் தீ வைத்தார்கள். சின்ன இருளன் பயந்து ஓடினான். படப்பு கொழுந்துவிட்டு எரிந்தது. அதன் புகை ஊரைப் பெரிய வளையமாகப் படர்ந்தது. ஆட்கள் ஓடி வந்தார்கள். எங்கும் தண்ணீர் அற்றுப்போன காலத்தில் மண்ணை வாரித் தீயின் மேல் எறிந்தார்கள்.

மூன்று படப்புகளும் எரிந்து சாம்பலாகிப் போயின. சின்ன இருளனையும் இன்னும் இரண்டு பேரையும் பிடித்துக்கொண்டு போனது போலீஸ். பன்னீர் வீட்டில் அழுதபடி கிடந்தாள். இரண்டு நாளைக்குப் பின்னால் விடியும் நேரத்துக்கு முன்பே பன்னீர் கிளம்பி, தனி ஆளாகப் போனாள் தண்ணீர் எடுக்க. அவளின் கருத்த உடம்பு பிசுபிசுத்துப்போயிருந்தது.

லேசான இருட்டு எங்குமிருந்தது. பானையைக் கையில் ஆட்டிய படியே நடந்து போனாள். அரவமேயில்லாத வெளி – வேலிப் புதர்கள் மட்டுமே பார்த்துக்கொண்டிருந்தன. கிணற்றுக்குப் போனபோது தண்ணீர் ஊறிப்போயிருந்தது. தண்ணீரைப் பார்த்ததும் உடம்பு நசநசத்தது. கிணற்றுக்குள் இறங்கி நின்று உயரே பார்த்தாள். வானம் வெளி வாங்கியிருந்தது. சுற்றிப் பார்த்துவிட்டு சேலையை அவிழ்த்துப் போட்டுவிட்டுப் பிறந்த மேனியாக நின்றாள்.

தண்ணீரில் அவள் கருத்த மார்பு அலைந்தது. மங்கிய நிழல் போல, மோந்து மோந்து குளித்தாள். பிறந்த உடம்பாக அவள் குளித்தபோது வெயில் எழும்பத் தொடங்கியது. தண்ணீர் பட்ட வுடனே உடம்பு சிலிர்த்துக்கொண்டது. ஈரத் தலையில் இருந்து தண்ணீர் சொட்டி முதுகில் வழிந்தது. அவள் அண்ணாந்து பார்க்கும் போது வாத்தியார் மேலேயிருந்து பார்த்துக்கொண்டிருந்தார்.

அவர் எப்போது வந்தார் எனத் தெரியவில்லை. அவள் விருட் டெனப் போய் சேலை எடுத்துச் சுற்றிக்கொண்டாள். வாத்தியார் மெதுவாகக் கிணற்றுக்குள் இறங்கினார். அவள் நின்று கொண்டேயிருந் தாள். வெளி அரவமற்று முயங்கிக் கிடந்தது. காடைகள் சப்தம் எங்கோ கேட்டது. சூரியன் உக்கிரத்தோடு வந்திருந்தது. மதியத்துக்குப் பின்னாடிதான் சின்னப் பிள்ளைகள் அவளைக் கண்டுகொண்டன. காட்டு வெளியில் அலறியபடி அவர்கள் ஓடி வந்தார்கள். பன்னீரின் உடம்பைக் குளிப்பாட்டின பெண்களுக்குத் தெரிந்துபோயிருந்தது. ஆண் வாடை. அழுதார்கள். யாரிடமும் சொல்லாது புதைத்து விட்டார்கள். அவளைப் புதைத்த பின்பு யாரும் அந்தக் கிணற்றுப் பக்கமே போகவில்லை. கோடை விடாது நீண்டேயிருந்தது.

வாத்தியார் தன் தோட்டத்துக்கெல்லாம் நித்திய கல்யாணி

போட்டார். கொஞ்ச நாளில் அது முளைத்துக்கொண்டது. ஊதாக்கலர் பூக்கள் காடெங்கும் பூத்தன. விஷச்செடி எனப் பயந்தார்கள் ஆள்கள். நித்திய கல்யாணிச் செடிகள் தன் பூக்களோடு ஆடிக்கொண்டிருந்தன எங்கும்.

யாரும் எதிர்பார்க்காத ஒரு நாளில் வாத்தியாரின் தோட்டத்து வீட்டுக்கு யாரோ தீ வைத்துப் போனார்கள். யார் எனத் தெரியாது போன போதும் எல்லோருக்கும் அது ஒத்தேயிருந்தது. கோடை முடியும் நாளில் திடீரென இரவில் மழை வந்து இடித்தது. மழை விடாது தொடர்ந்தது இரவில். வீட்டின் கூரைகள் நனைந்தன. கோழிகள் ஈரத்தோடு சப்தமிட்டன. காலையில் தெருவில் குழந்தைகளின் காலடித் தடங்கள் முளைத்திருந்தன.

குடிமகன் கருப்பையா இரண்டு மாசமாகவே நேரம் சரியில்லை என்றே நினைத்துக்கொண்டான். இரண்டு மாதத்திற்குள் எவ்வளவோ நடந்து முடிந்து போய்விட்டது. குலதெய்வம் சாமி கும்பிடுவதற்காக மகளைக் கூப்பிடப் போனபோது சரோஜாவுக்கும் அவள் புருஷனுக்கும் சண்டை வந்து இருவரும் வராமல் போனார்கள். பிள்ளைகளும் வராமல் போயின. ரத்னா மட்டும் வந்தாள். இரண்டு பேர் மட்டும் போனார்கள்.

மாந்தோப்புக்குள் அந்தக் கோவில் இருந்தது. பக்கத்தில் பெரிய மலையிருந்தது. அவர்கள் பகலில் போய்ச் சேர்ந்தபோது அவர்களின் முன்னால் கொஞ்சம் பேர் இறங்கிக் கூடவே வந்தார்கள். யார் எனத் தெரியவில்லை. முன்பெல்லாம் அந்தக் கோவிலுக்கு வரும் நாளில் பிள்ளைகள் கடந்து ஓடும் மரங்களைப் பார்த்தபடியே வரும். ரயில்வே ஸ்டேஷனில் ரயிலுக்காக வேண்டி நிற்பார்கள்.

ரயில்வே ஸ்டேஷன் போகவே டவுன் பஸ்ஸில் போக வேண்டியிருந்தது. நடந்து போய் பஸ் ஏறி ரயில்வே ஸ்டேஷன் போவார்கள். சின்ன ரயில்வே ஸ்டேஷன். தூங்குமூஞ்சி மரங்கள் நிறைந்த ஸ்டேஷன். சிவப்பு ஓடு போட்ட வீடுகள் பக்கமிருந்தன. ரயில் வளைந்து வளைந்து வரும். ரயிலில் கூட்டமிருக்காது. ஏறி உட்கார்ந்துகொள்வார்கள். பாலத்தில் ரயில் போகும்போது ஏற்படும் சப்தம் விநோதமாக இருக்கும்.

மாந்தோப்பின் ஊடேயிருந்த கோவிலுக்கு வரும் கூட்டம் அங்கேயே உறங்கும். கறி வேகும் வாடை எங்கும் அடிக்கும். மலை ஓரத்தில் சாராயக் கடை இருந்தது. சாராயம் குடித்துவிட்டு வந்து கறிச் சோறு சாப்பிட்டார்கள். கோயில் என்றால் வெறும் பீடம் மட்டுமே இருக்கும். கறிவாடைக்கு எங்கிருந்தோ நாய்கள் வந்து படுத்துக் கிடந்தன. சாப்பிட்ட எலும்புத் துண்டுகளை இழுத்துக்கொண்டு ஓடின. ரத்னம் பொம்மைகளோடு உக்கார்ந்திருந்தாள். வேற்று ஆள் போல தெரிந்தது அவளைப் பார்க்க.

அது நடந்த பத்து நாளைக்குப் பின்னால் ரத்னாவின் புருஷன் சாயங்காலத்தில் வீட்டுக்கு வந்தான். கருப்பையா அவனைப்

பார்த்ததுமே கேட்டான்,

"என்ன மாப்பிள்ளை....

"ஒரு சமாச்சாரமாகிப் போச்சு"

"என்னது?"

கிட்டத்தில் வந்து காதுக்குள் சொல்வது போலச் சொன்னான். கருப்பையாவால் நம்பவே முடியவில்லை. கேட்டுக் கொண்டிருந்து விட்டுக் கேட்டான்,

"யாரு சொன்னா.

"நேத்து நம்ம ஊருப் பய போயிருந்தான். அவன்தான் வந்து சொன்னான்."

சரோஜாவும் அவள் புருஷனும் வேதத்தில் சேர்ந்து கிறிஸ்தவர்களாக மாறிவிட்டார்கள் என்பதை அவனால் தாங்க முடியவில்லை. ரொம்ப நேரம் ரத்னாவின் புருஷன் பேசாமலிருந்தான். பிறகு சொன்னான்,

"ஒரு எட்டுப் போயி பாத்துட்டு வந்திர வேண்டியதுதான் மாமா...

அதுவும் சரிதான் என்று பட்டது. மறுநாள் காலையில் கிளம்பிப் போனான். பஸ்ஸில் போகும்போதெல்லாம் ஞாபகம் வந்தபடியே இருந்தது. கருப்பையா சின்னப் பையனாக இருந்த போதே ஊருக்கு இரண்டு வேதக்கார பாதிரிமார்கள் வந்தார்கள்.

ரொம்ப தூரம் அவர்கள் நடந்து வந்திருக்க வேண்டும் போல் இருந்தது. வெள்ளை உடுப்பு போட்டிருந்தார்கள். அமைதியான முகம். கையில் பெரிய புத்தகம் வைத்திருந்தார்கள்.

சின்னப் பிள்ளைகள் அவர்கள் கூடவே ஓடி வந்தார்கள். வெள்ளை யுடுப்பு மினுங்கிக்கொண்டிருந்தது. களத்தில் நின்றுகொண்டு பேசினார்கள். ஊரே கூடி நின்று கேட்டது. பேச்சு முடிந்ததும் அந்த ஆட்கள் மட்டுமே இருந்தார்கள். அதன் பிறகு அவர்கள் பல தடவை ஊருக்கு வந்து பேசினார்கள். மே வீட்டுக்காரன்தான் முதலில் மாறினான் வேதத்துக்கு. அவர்களுக்கெல்லாம் வேறு பெயர் வைத்தார்கள் அவர்கள் மே வீட்டுக்காரனைக் குடும்பத்தோடு பாளையங்கோட்டைக்குக் கூட்டிப் போய் வந்தார்கள். பொம்பளைப் பிள்ளைகளை அவர்கள் கண்ணில் படாமல் மறைத்துக்கொண்டார்கள் ஊர்க்காரர்கள்.

எல்லாம் நினைவில் அப்படியே இருந்தது கருப்பையாவுக்கு. கருப்பையா சரோஜா வீட்டுக்குப் போனபோது மருமகனும் வீட்டில் இருந்தான். புதுசாகச் சின்னச் சிலுவையிடப்பட்ட ஏசு படம் மாட்டியிருந்தான். கருப்பையா எதுவும் பேசவில்லை. பிள்ளைகளுக்குக் கூடப் பெயரை மாற்றி வைத்துவிட்டான். எஸ்தர், பிலிப் எனப் பெயரிட்டிருந்தான். சரோஜா சாராள் மேரியாக இருந்தாள். இது வெல்லாம் என்னவென்று அவருக்குப் புரியவே இல்லை. மறுநாள்

காலையில் அவர் பார்த்துக்கொண்டிருந்தபோதே பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு வேதக் கோவிலுக்குப் புறப்பட்டுப் போனார்கள். கருப்பையா வெயிலோடு கிளம்பி ஊருக்கு வந்து சேர்ந்தான், யாரிடமும் சொல்லிக்கொள்ளாது.

வீட்டுக்கு வந்து நினைக்கும்போது நெஞ்சை அமுக்கியது. குதுகுது வென வந்தது. எல்லாரும் அவனை விட்டுவிட்டுப் போய்க் கொண்டி ருப்பதாகப் பட்டது. இத்தனை வருஷக்காலத்துக்குப் பின்பு தான் தனியாக இருப்பதை உணர்ந்தான். அவன் பெட்டி அவனையே முறைத்துக்கொண்டிருப்பது போலத் தெரிந்தது. அவனுக்குத் தெரிந்த எல்லா ரகசியங்களின் ஞாபகமும் முட்டியது. தனக்கும் ஏதாவது ஆகிவிடும் என்றே யோசித்துக்கொண்டிருந்தான்.

பகலெல்லாம் படுத்தே கிடந்தான். கூரை வழியாக வெளிச்சம் இறங்குவது தெரிந்தது. ஒரு தடவை கம்மாயில் குளித்தபோது சேற்றில் கால் சிக்கிக்கொண்டு மூக்குக்குள் தண்ணீர் ஏறி கண்மங்கி உள்ளே இழுக்கப்பட்டது ஏனோ ஞாபகத்தில் வந்தது. இரண்டு நாள்களுக்குப் பின் தானாக எழுந்துகொண்டான். எதிலும் ஒரு பிடிப்பு இல்லாதது போல ஆனது.

சென்னப்ப ரெட்டியார் அப்போது உடம்பு முடியாமல் கிடந்து தேறியிருந்தார். அவருக்குத் தலைமயிர் சிவப்படித்துப் போயிருந்தது. தாடி வளர்ந்து போயிருந்தது. அவர் வீட்டைக் கடந்து போய்க் கொண்டிருந்த கருப்பையாவை அவரேதான் கூப்பிட்டார். அவன் போனதும் சிரைக்க வேண்டும் என்றார்.

கருப்பையா வீட்டில் போய் சவரப் பெட்டியைத் தூக்கிக்கொண்டு வந்தான். அவன் வருவதற்கு முன்பே சின்னப் பலகை போட்டு உட்கார்ந்திருந்தார். வெளியே வெந்நீர்ப் பானை தெரிந்தது. முடி வெட்டும்போது முகத்தைப் பார்த்தான். பிரேதத்தின் முகம் போலவே இருந்தது. துர்நாற்றம் அடித்தது.

அவனால் எதுவும் சொல்ல இயலவில்லை. முகம் தொங்கிப் போய்விட்டது. கண்பை இறங்கியிருந்தது. மயிர்கள் பூதாகரமாகத் தெரிந்தன. சவரம் பண்ணும்போது பார்த்தான். எண்ணெய்ப் பசையில்லாத முகம். அவர் விடும் மூச்சு அவன் கையில் பட்டது. முகத்தை இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் அசைத்தபடியிருந்தார். இரண்டு தரம் தலையைச் சரிசெய்தான். அவர் முகத்துக்கு முன்னால் ஈ ரீங்காரமிட்டுக் கெண்டிருந்தது. தலையை அசைக்கும்போது சொன்னான்,

"தலையை அசைக்காதீங்க அப்பச்சீ.

அவர் முறைப்பது தெரிந்தது. வைக்கோல் போரிலிருந்த கொசுக்கள் பறந்து இறங்கின முகத்துக்கு எதிராக. அவர் முகத்தை அசைத்ததும் காதோரத்தில் வெட்டிவிட்டான். அவருக்கு வந்த கோபத்தில் ஓங்கி அறைந்தார் கருப்பையாவை.

“என்னடா சிரைக்க. நாயி. உரிச்சிடுவேன் உரிச்சி.

காதைத் தொட்டுப் பார்த்தார். ரத்தம் வழிந்தது. காய்ந்தது காயம். பின்னாடி விழுந்தவன் எழுந்து நின்றான். அவனால் பேச முடியவில்லை. பேசாமல் கவிழ்ந்த சாமான்களை எடுத்துப் பெட்டியில் போட்டான். பேசினால் அழுதுவிடுவது போல இருந்தது. எழுந்து போக முயற்சித்தான். அதைக் கண்டதும் கேட்டார்,

“எங்கடா போற... சிரைக்காம.

அவன் நின்றுகொண்டேயிருந்தான்.

“என்ன. முறைக்கே...

“தெரியாமதான அப்பச்சி பட்டது. அதுக்கு ஏன் அடிச்சீங்க...

அவர் பேசாமலிருந்தார். அவன் நின்றுகொண்டே இருந்தான். அவர் கேட்டார்,

“இப்ப அதுக்கு என்னடா செய்யணுங்கிற.

கொசு ரீங்காரமிட்டபடி அலைந்தது. அவன் கிளம்பியதும் அவர் வேகமாக எழ முயற்சிக்கும்போது கால் தடுக்கிக் கீழே விழுந்தார் அவர் போட்ட சப்தத்தில் பெண்கள் வெளியே வந்தார்கள். கருப்பையா நின்றுகொண்டே இருந்தான். காதோரம் ரத்தம் வடிந்துகொண்டே இருந்தது. சென்னப்ப ரெட்டியாரைத் தூக்க வந்த இளவட்டப் பயல்கள் காதோரம் வடியும் ரத்தத்தைப் பார்த்துவிட்டுக் கேட்டார்கள்.

“என்னடா. ஆச்சி?”

“கத்தி பட்டிருச்சு அப்பச்சி.

“எப்ப ஒழுங்கா சிரைச்ச... சிரைக்காம எங்க போற... அவ்வளவு பெரியாளா ஆயிட்டயா..

ரெட்டியார் ஏதோ சொன்னதும் கருப்பையாவுக்குக் கழுத்தோடு ஒரு அடி விழுந்தது. நாலைந்து அடிகளுக்குப் பின்பு விட்டு விட்டார்கள். தரையில் கிடந்த ரோமம் அவன் முகத்தில் ஒட்டிக் கொண்டது. அன்றைக்குக் கிளம்பி ஊருக்குப் போனவன் அங்கேயே இருந்துகொண்டான். சென்னப்ப ரெட்டியாரை எரித்துவிட்டுத் திரும்பிய கூட்டம் பேசியபடியே வந்தது. கருப்பையா சுடுகாட்டில் எரிவதைத் தூரத்திலே பார்த்தான். புகை எழுந்தது உயரமாக.. சென்னப்பரெட்டியார் வீட்டுக்குப் போன போது வெறும் நாற்காலியை வெளியே போட்டிருந்தார்கள். ஆள் இருப்பது போலவே தெரிந்தது. கருப்பையா வந்துவிட்டான் என ஆட்கள் பார்த்துக்கொண்டார்கள். வீட்டின் பின்பக்கம் வழியாகப் போனான் கருப்பையா.

படப்புக்குப் பக்கம் கத்தரித்த தலைமயிர் அப்படியே கிடந்தது. ஒண்ணுக்கிருப்பது போல உட்கார்ந்து அழுதான். கொசுக்கள் அவன் முகத்தைச் சுற்றியும் ரீங்காரமிட்டன. புறங்கையால் முகத்தைத் துடைத்துக்கொண்டு எழுந்தபோது குருவிகள் படை படையாக மேற்கே போய்க்கொண்டிருந்தன.

அவரவர் ஆகாசம்

தோள் வலித்தது.

துண்டு நழுவியிருக்க வேண்டும். புஜங்களில் மிஷினின் அடிப்பாகம் அழுத்தியது. துண்டை நாலாக மடித்துப் போட்டிருந்தான். எங்கேயாவது தையல் மிஷினை இறக்கி வைத்துவிட்டுத் துண்டைச் சரி செய்துகொள்ள வேண்டும் போல் இருந்தது. பஸ் ஸ்டாண்டுக்குப் போய் சரிசெய்து கொள்ளலாம் என்று நடந்தான்.

வெயில் ததும்பி இருந்தது எங்கும். ரோட்டில் ஜன நடமாட்டம் குறையவில்லை. இன்னமும் மீத மிருந்த ஒன்றிரண்டு குதிரை வண்டிகள் கடந்து போயின. குதிரைகள் கால் தாங்கியபடி போயின. பஸ் ஸ்டாண்டு பழைமை மாறாமல் அப்படியே இருந்தது. அதே புத்தகக் கடைகள், டீ ஸ்டால், மிட்டாய்க் கடைகள், பெண்கள் உட்காரும் இடம், சில சிமெண்ட் பெஞ்சுகள். சிமெண்ட் பெஞ்சில் நாலைந்து சாக்கு மூட்டைகள் கிடந்தன. மிஷினை இறக்கி வைத்தான். துண்டு சுருண்டு போய் இருந்தது.

தோளில் தொங்கிக்கொண்டிருந்த மஞ்சள் பையில் கத்தரிக்கோல், நூல் கண்டு கிடந்தது. புதுப்பட்டி பஸ் வர நேரம் இருந்தது. டீ சாப்பிடலாம் என வெளியே வந்தான். அவன் கிளம்பி வரும் வரைக்கும் அவள் எதுவும் சமையல் செய்யவில்லை. அவன் உட்கார்ந்தபடியே இருந்தான் காலை முழுவதும்.

எந்த ஊருக்குப் போவது என யோசனையாக இருந்தது. இரண்டு நாள்களாக அவன் எங்கும் போகவில்லை. வீட்டில் இருந்தான். வெயில் காலம்.

தெருக்களில் அலைய முடியாமல் இருந்தது. முன்பு தினம் ஒரு ஊருக்குப் போவான் தையல் மிஷினைச் சுமந்தபடி.

இதற்கு முன்பு, போன வாரம் போன ஊர் எல்லாம் வேலையே இல்லை. தெருக்களில் நிழல் இல்லை. கானல் பறந்து கிடந்தது. பருந்துகள் ஊர் எல்லைக் கோயிலில் அலைந்தபடி இருந்தன. வீடுகள் கிராமத்திலும் அடைத்து சாத்தப்பட்டு இருந்தன.

எங்கும் வெக்கை. ரவுத்திரம் பரந்துபோயிருந்தது. அவன் குரல் தெருவில் மிதந்தபடியிருக்கும். யாரும் அவனைக் கூப்பிடுகிறார்களா எனப் பார்ப்பான். எந்தத் தடயமும் இருக்காது. வெயில் முகத்தை அறையும். நீண்ட தெருக்களில் எங்காவது வயதானவர்கள் வெளியே தென்படுவார்கள். ஆடுகள் சுவரோர நிழலில் பம்மிப் போயிருக்கும். மழை இல்லாத காலம். எல்லாத் தெருவையும் சுற்றி வந்தால் யாராவது பழைய துணி தைக்கக் கொடுப்பார்கள். நிச்சயம் ஒரு ரூபாய்க்கு மேல் வராது அவர்களிடமிருந்து.

இதை விட்டுவிடலாம் எனத் தோணும். எங்காவது வேறு வேலைக்குப் போகலாம் எனத்தான் நினைத்தான். இரண்டு நாள்களாக இதை யோசித்தபடியே படுத்துக் கிடந்தான். அவள் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பிவிட்டு வேலைக்குப் போய்விடுவாள். பகலெல்லாம் வீட்டின் பின்புறத்தில் உட்கார்ந்தபடியே இருப்பான்.

முருங்கை மரத்தில் கட்டெறும்புகள் ஏறுவதும் இறங்குவதுமாக இருக்கும். சில சமயம் அணில் பாத்திரங்களின் ஊடே விளையாடும். அடுப்படியின் கரித்தடம் சுவரெங்கும் வரி வரியாகப் படிந்து போயிருக்கும். சமையல் செய்து பாத்திரங்களை மூடி வைத்துவிட்டுப் போய்விடுவாள்.

சில நாள்கள் வேகமாக, பின் மதியத்தில் வீடு திரும்பினால் அவனாக சாப்பாடு போட்டுச் சாப்பிட்டுக்கொள்வான். இப்போது இரண்டு நாளாகச் சாப்பிடவும் பிடிக்காமல் போனது. யாரோடும் பேசுவதும் இல்லை.

நேற்றெல்லாம் மேட்டுக் கடையைப் பற்றி யோசித்தபடியே இருந்தான். அய்யாவோடு பட்டறை வேலை செய்து பிடிக்காமல் போய் மேட்டுக் கடைக்குப் போன ஞாபகம் இன்னும் இருந்தது.

மில்லில் இருந்து வரும் ரோடு முடியும் இடத்தில் அந்த மேடு இருக்கும். தரையைவிடவும் நாலைந்து அடி உயரமான இடம். அதில்தான் முத்துமணி டெய்லர் இருந்தான். இவன் போய்ச் சேர்ந்தபோது அவருக்கு ஏகக் கிராக்கி. மில்லில் வேலை பார்ப்பவர்கள் எல்லோரும் அவரிடம்தான் தைக்கக் கொடுப்பார்கள்.

அப்போதெல்லாம் டெரிலின்தான் ரொம்பவும் பிரசித்தமானது. வெள்ளையில் டெரிலின் துணி மினுங்கும். டெய்லர் வெட்டிப் போட்ட மீதத் துணிகளை எடுத்துக் கன்னத்தில் ஒத்திக் கொள்வான். மிஷினுக்குக் கீழே எப்போதும் விதவிதமான கலர் வெட்டுத் துணிகள்

கிடக்கும். டெய்லர் அளவெடுப்பதே அபூர்வமாக இருக்கும்.

பேசியபடி அளவெடுப்பார். சிலர் கையில் ஏதாவது பத்திரிகையில் வந்த படத்தைக் காட்டி அதைப் போல வேண்டும் என்பார்கள். அவர் சிரிப்பார். சிரித்தபடியே சொல்வார்.

“ஜமாய்ச்சிடுவோம்... சட்டைய போட்டுட்டுப் போன அப்பிடி மில் பூரா யாரு, பாத்த நடிகராட்டம் தோணுதேன்னு பேசுவாங்க பாரேன்.”

“அண்ணாச்சி, தையலைவிடப் பேச்சு எப்பவும் பிரசித்தம்தான்”

“தையலும் மோசமின்னு சொல்ல முடியாதுல்ல. இங்க பாரு துணி குமிஞ்சு கிடக்கறத...”

“எல்லாம் பேசியே முடிச்சிற மட்டீர்ல...

அண்ணாச்சி அவரைத் தவிர வேறு யாரையும் மிஷினில் ஏற விட்டது கிடையாது. எடுபிடிக்கு மட்டும் அவனும் இன்னொரு பையனும் இருப்பார்கள். அவன் பெரும்பாலும் சைக்கிளில் போய் நூல் வாங்கி வருவான். விதவிதமான பித்தான்கள் வாங்கி வருவான்.

அண்ணாச்சியின் கத்தரி துணியில் லாவகமாகப் பாயும். தினுசு தினுசாக காலர் வரும். பெரிய பாக்கெட்டுகள் வைப்பார். மில்காரர்கள் என்று இல்லை. சில உத்தியோகஸ்தர்கள்கூடத் தையல்கடைக்கு வருவார்கள். அப்போது அண்ணாச்சியின் பவ்யம் பையன்களுக்குச் சிரிப்பாக வரும்.

கடையில் பெரிய கண்ணாடி பதித்த மரமேஜையிருக்கும். உள்ளே காலண்டர். ஒரு தையல் மிஷின், சில சாமி படங்கள் இருக்கும். இப்படியான ஆட்களைப் பார்த்ததும் அண்ணாச்சி வெளியே வந்து கும்பிடுவார்

“வரணும்... வாங்க.

பையன்கள் யாராவது கலர் வாங்கப் போவார்கள். எப்போதும் கலர் வாங்கிவிடுவதில்லை. அண்ணாச்சி சொன்னதும் இறங்கி ரோட்டைப் பார்த்து ஓடுவார்கள். அண்ணாச்சி துணியை வாங்கி மேஜையில் போட்டு அளவு பார்ப்பார். பின்பு சிரித்தபடியே கேட்பார்,

“எப்படித் தைக்கணும்... சிலோன் மாடல் ஷர்ட்டா... சிங்கப்பூர் மாடலா. ”

“அதெல்லாம் வேணா.. புல் சிலாக் தை போதும். எப்ப கிடைக்கும்?”

“போயிட்டு காபி சாப்பிட்டு வந்தா கிடைக்கும்... எதுக்கும் வெள்ளிக்கிழமை வாங்க...”

ஆள் போனபின்பு கலர் வாங்கப்போன பையனை மற்றவரை விட்டுக் கூப்பிட்டு வருவார். சில நேரம் பையன்கள் எங்காவது ஓடிவிடுவார்கள். வந்தபோது வைவார்.

"மூதி... ஆள் போயாச்சுன்னா வர வேண்டியதுதானே... அங்க நின்னு என்ன செய்ற... எல்லாருக்கும் கலர் வாங்கித் தரணுமின்னா... நான் ஜிம் விலாஸ் முதலாளியா இருக்கணும்" என்பார்.

அண்ணாச்சி சொன்ன தேதியில் எவருக்கும் துணி தைத்துக் கொடுத்தது கிடையாது. சில நேரம் ஆட்கள் இருந்து வாங்கிப் போவார்கள். கல்யாண வீடுகளில் மாப்பிள்ளையோ அல்லது வேறு நபரோ கல்யாணத்தின் முதல் நாள் இரவில் அவர் கடை வாசல் ஸ்டூலில் இருக்கக்கூடும். சப்தம் போடுவார்கள். அண்ணாச்சி சிரிப்பார்.

"இப்பிடி கல்யாணத்தன்னைக்கு நிறுத்தி வச்சா எப்பிடி அண்ணாச்சி. வேலை கிடக்குல்ல. "

"யாரு வேலைய செய்ய வேணாம்னா... மண்டபத்துக்குப் போற நேரத்துக்குள்ள முடிச்சு பையன்கிட்ட குடுத்துவிட்ற மாட்டேன்."

"எதுக்கு. இருந்து வாங்கிட்டே போறேன்.

இருவரும் சிரிப்பார்கள். அப்படியான நாள்களில் அவன் இரவெல்லாம் அண்ணாச்சியுடன் இருப்பான் தைத்து முடித்த பின்பு அண்ணாச்சி கடையை விட்டு இறங்குவார். மேடு எங்கும் இருள் நிறைந்து போயிருக்கும். கடைக்குப் பின்னால் நிறுத்தியிருந்த சைக்கிளை அவன் எடுத்து வெளியே வைப்பான். சில நேரம் அவனே தள்ளிக் கொண்டு வருவான்.

தெருவில் ஆள் இருக்காது. இருள் படிந்துபோன தெருக்கள் எங்காவது கல்யாண வீட்டில் பாட்டு கேட்கும். அண்ணாச்சி அவனோடு பேசியபடி வருவார்.

"ஊர்ல இவன் மட்டும்தான் கல்யாணம் பண்ணுற மாதிரில சட்டைக்குப் பறக்கான். என்னலே சொல்ற. ."

இருவரும் ரவுண்டானாவுக்கு வரும்போது ஆட்கள் தெரிவார்கள். இரவுக் கடைகளில் லைட் எரிந்துகொண்டிருக்கும். அப்போதெல்லாம் அண்ணாச்சிக்குக் கல்யாணம் ஆகவில்லை. அப்போதே முப்பதைத் தாண்டியிருந்தது வயது. ரயில்வே கிராஸ் பக்கம் ரூம் எடுத்துத் தங்கியிருந்தார்.

அண்ணாச்சியும் அவனும் சாப்பிட உட்காருவார்கள். அண்ணாச்சி எப்போதும் நிறைய சாப்பிடுவார். இட்லியை இலை நிறைய வைப்பார் கள். சாப்பிடும்போது அண்ணாச்சியின் கவனம் முழுவதும் இலையில் இருக்கும். இடையில் பேசமாட்டார் அடுத்து திரும்பிக் கூடப் பார்க்க மாட்டார். எப்படியும் இருபது இட்லிக்கு மேலே சாப்பிடுவார்.

சாப்பிட்டுப் போகும்போது யானை மார்க் சிகரெட் வாங்கிப் பற்ற வைப்பார். முகமெங்கும் சிரிப்பு படர்ந்து போயிருக்கும். அவர் ஜிப்பாவில் சில்லறை குலுங்கும். சில சமயம் அவரோடு சேர்ந்து அவர் அறையில் படுத்துக்கொள்வான். அறை என்றாலும் பெரியது. ஒரு தட்டி அடித்து அந்தப் பக்கம் அடுப்படி போன்றிருக்கும்.

சின்னஜன்னல் அறைக்கு பெரிய அலமாரி உண்டு. அதில் சில படங்கள், பாட்டில்கள் இருக்கும். ஒரேயொரு மண்பானை இருந்தது அறையில்.

அறைக்குப் போனதும் ஜிப்பாவைக் கழட்டிவிட்டு வெறும் மேலோடு தரையில் படுத்துக்கொள்வார். அவரைப் பார்த்தபடியே இருப்பான். காலையில் அவனுக்கு முன்பே எழுந்திருப்பார். அவனை, சைக்கிளைக் கொடுத்து டீ வாங்கி வரச் சொல்வார்.

டீ சாப்பிட்ட பின்பு அவன் மட்டும் முன்னதாகக் கடையைத் திறக்கப் போவான்.

அப்போதுதான் விடிந்திருந்த காலை எங்குமிருக்கும். ஆட்கள் முகங்களே பார்க்கப் பிடித்திருக்கும். வீடுகளின் முன்பு கோலம் போட்டிருப்பார்கள். சில வீடுகளில் கோலத்தைச் சுற்றி காவி கட்டியிருப்பார்கள். மேட்டிற்குப் போனால் இறக்கத்தில் கடைகள் உயிர் பெறுவது தெரியும்.

கடையைத் திறந்ததும் வெட்டுத் துணிகள்தான் கண்ணில் படும். நிறைய கிடக்கும். அவற்றைக் கூட்டி அள்ளிப் பையில் போட்டுக் கொள்வான். சில சமயம் மிஷினில் ஏறி உட்கார்ந்து ஓட்டிப்பார்ப்பான். கால் எட்டாது. கையால் சுற்றிவிட்டுத் தைப்பான். குளித்துத் திரு நீறு பூசி, மஞ்சள் நிற ஜிப்பாவும் வேஷ்டியுமாக அண்ணாச்சி நடந்து வரும்போது வெயில் ஏறிக் கொண்டிருக்கும்.

புதுப்பட்டி பஸ் வந்து நின்றவுடனே புறப்பட்டது. அவ்வளவு கூட்டமில்லை பஸ்ஸில். மெஷினை சீட்டின் ஓரத்தில் வைத்துவிட்டு உட்கார்ந்துகொண்டான். அகன்று, பரந்திருந்த கரிசலின் ஊடே பஸ் போனது. எங்கும் வெடிப்புகள் நிறைந்து போயிருந்தது. உடை மரங்கள் இருந்தன. ரோட்டின் இரண்டு பக்கமும் கண்ணைக் குத்தும் வெக்கை.

கவனிப்பாரற்றுப் போன பழைய கோயில்கள் இடிந்து கிடந்தன. கறுத்த அதன் சுவர்கள் பிளவுண்டிருந்தன. காட்டுப் புறாக்கள் சில அவற்றில் தெரிந்தன. எங்கும் விரிந்து கிடந்த கண்மாயில் தண்ணீரில்லை. பஸ் வடக்கன் குளத்தைத் தொடும்போது ஊரின் உள்ளே உறுமிச் சப்தம் கேட்டுக்கொண்டிருந்தது. அமுத்தலாக அதன் சப்தம்.

பஸ்ஸில் சிலர் ஏறினார்கள். அவனைப் பார்த்ததும் பூ விற்கும் பெண் சிரித்தாள். அவன் கேட்டான்,

"என்ன இங்க வந்திருக்கிங்க.

"ஒரு துஷ்டி வீடு... அதான்... எங்க நம்ம ஊருக்கா..." தலை யாட்டினான்.

"பெரிய தெருவிலகூடக் கேட்டாக வந்தாப்லயான்னு... போயிருப் பாங்க.. ஜாக்கெட் தைக்கணுமாம்..."

தலையாட்டிக்கொண்டான் இதற்கும்.

புதுப்பட்டிக்குள் பஸ் போனபோது பையன்கள் கூடவே ஓடி வந்தார்கள். எங்கும் புழுதி பறந்தது. வேப்ப மரங்கள் நிறைந்து போன ஊர் இது. இறங்கி, தோளில் மிஷினைத் தூக்கிக்கொண்டு பெரிய தெருப்பக்கம் போனான்.

பெரிய தெரு பெயருக்கேற்றவாறு அகன்றது. மொத்தம் பத்து வீடுகள்தானிருக்கும். அவற்றை வீடுகள் என்றே சொல்ல முடியாது. பெரிய மாடங்கள் போன்றவை. அடுக்கடுக்காகப் போய்க்கொண்டிருக் கும். வாசலில் பெரிய திருணையிருக்கும் நாலைந்து கல் தூண்கள் அமைந்த திருணை. உள்ளே அகன்ற அறைகள்.

எப்போதோ ஊஞ்சல் போட்டு ஆடிய அகன்ற அறை. சின்னச் சின்ன அறைகள். பெரிய தெருவில் ஆண்கள் சொற்பம். இருக்கும் சிலரும் எந்தத் தொழிலும் செய்ய மாட்டார்கள். பெரும்பாலும் நிலத்தை விற்றுச் செலவழிப்பார்கள். தீர்ந்ததும் மற்றொரு நிலத்தை விற்பார்கள்.

பெரிய தெரு பெண்களால் ஆனது. நிறைய பெண்கள். ஒவ்வொரு வீட்டுக்கும் ஆறு அல்லது மேற்பட்ட பெண்கள் எல்லோரும் வயதுக்கு வந்தவர்கள். வீட்டில் எந்த மூலையில் அவர்கள் இருக்கிறார் கள் என்றே தெரியாது.

எப்போதும் வீடு திறந்தே கிடக்கும். வெளியாள்களில் வியாபாரிகள் தவிர மற்றவர்கள் அங்கே வருவதில்லை. வியாபாரிகளிடம்கூட அவர்கள் எதையும் வாங்குவதில்லை. எங்காவது இடம் தெரியாத ஒரு இடத்திலிருந்து பெண் குரல் வரும்.

அந்தப் பெண்களின் குரல் சொல்ல வொண்ணாத துயரம் படிந்ததுபோல இருக்கும். பொதுமிய குரல்கள். மனசை அமுக்கும். அநேகமாக இப்போதிருக்கும் பெரிய தெருக்காரர்களுக்கு வீட்டைத் தவிர நிலம் இல்லைதான்.

அவன் பெரிய தெருவில் போய்க் குரல் கொடுத்தான்.

“தையல்... தையல் தைக்கணுமா... அவ்வளவு அகன்ற தெருவில் அவன் குரல் போன இடம் தெரியவில்லை. திரும்பவும் குரல் கொடுத்தான்.

கிழக்குப் பார்த்த வீட்டில் இருந்து குரல் வெளியே வந்தது. வீட்டு வாசலைப் பார்த்து நின்றான். உள்ளே கடைசிக் கட்டிலிருந்து ஒரு பெண் கூப்பிட்டாள். அவள் நிற்பதே நிழல் போல இருந்தது. ஒரு கட்டுக்குள் நுழைந்து நின்றான். அவள் மேலும் கூப்பிட்டாள்,

“உள்ளே வா..

உள்ளே நடந்து போனான். பெரிய கோலம் படர்ந்துபோன தரைகள். என்ன அழகான கோலங்கள் அவை. போட்டவளின் கை லாவகம் கொடிகளைப் போல எங்கும் படர்ந்திருந்தது. ஒரு புள்ளி பிசகவில்லை. உள்ளே நடந்துபோனவுடன் திறந்த வெளி வந்தது. சதுரமாக வெளி. நடுவில் சின்ன முற்றம் போல கல்பாவிய

தளம். சுற்றிலும் பெரிய கல்தூண்கள். பக்கத்தில் மரப்பலகை கிடந்தது. மிஷினை இறக்கி வைத்துவிட்டு உட்கார்ந்துகொண்டார்கள். உள்ளே அறைக்குள் பெண் குரல் கேட்டது.

"உனக்கு ஜாக்கெட் தைக்கணுமில்ல.

"கை பிரிஞ்சிருக்கு. இன்னொன்று பிடிச்சு தைக்கணும்.

"எங்க. பத்மாவதிய. "

"உள்ளே இருக்கா."

கொஞ்ச நேரத்துக்குப் பிறகு இரண்டு பெண்கள் வெளிப்பட்டார்கள். ஒரே சாயலில் இருந்தார்கள். வெயிலையே பார்த்திராதது போல வெளிச்சத்தைக் கண்டதும் சுருங்கிக்கொண்டன கண்கள். நல்ல ரூபவதிகள். முகம் நீண்டு, செதுக்கியது போல இருந்தது. நிறைய தலைமயிர். முகத்தில் எப்போதுமான தவிப்பு இறுகியிருந்தது.

நகை, கழுத்தில், கையில் எதுவுமில்லை. இரண்டு பெண்களும் சில சட்டைகளை எடுத்து வந்து தந்தார்கள். அவன் வாங்கி வைத்துக் கொண்டான். ஒரு பெண் மட்டும் பேசினாள்.

"சிவப்பு நூல் போடு..."

அவர்கள் போனபின்பு ஒரு வயதான பெண்ணும் இளம் பெண்ணும் வந்தார்கள். இளம் பெண்ணுக்கு வயது இருபத்தைந்தைத் தாண்டியிருக்கும். முகமெங்கும் பெரும் ஜொலிப்பு இருந்தது. உடலெங்கும்கூட ஒரு மினுமினுப்பு இருந்தது. வெளி உலகத்தோடு தொடர்பில்லாத முகம் அவளுக்கு. அவள் கையில் மஞ்சள் நிறத்தில் துணி வைத்திருந்தாள். அவனிடம் கொடுத்துவிட்டுச் சொன்னாள்.

"இதே அளவுல தையுங்க.

அவர்கள் போய்விட்ட பின்பும் அந்த வயதான பெண் கல்தூணில் சாய்ந்து உட்கார்ந்துகொண்டாள். அவன் முதலில் அந்த மஞ்சள் துணியை எடுத்து ஜாக்கெட் தைக்க அளவு எடுத்தான்.

துணியை வெட்டித் தைக்கும்போது அந்த வயதானவள் பேசினாள்.

"நல்லா தை தம்பி. கல்யாணத்துக்குப் போடுறது..

"யாருக்கு. வந்தவங்களுக்கா..

தலையாட்டினாள். அவன் மிஷினைச் சுற்றினான். துணி நழுவி ஓடியது. கொஞ்ச நேரத்துக்குப் பிறகு அந்தப் பெண் அவளாகவே பேசினாள் அவனிடம்.

"பெண்ணுங்கள இப்படி வீட்ல எவ்வளவு நாள் வச்சிருக்க முடியும்... சொல்லு... அப்பிடி கட்டிக் குடுத்தாலும் வச்சுக் காப்பாத்தத் தெரியல ஆம்பளைக்கு. விரட்டி விடுறான்... பொண்ணாப் பிறந்தாலே கஷ்டம்தான்"

இதைச் சொல்லும்போது பெரும் சலிப்பாக இருந்தாள் அவள். அவன் மஞ்சள் ஜாக்கெட் தைத்து முடித்தவுடன் அவள் வாங்கிக்

கொண்டு உள்ளே போனாள். கொஞ்ச நேரத்துக்குப் பிறகு இளம் பெண் மஞ்சள் ஜாக்கெட்டில் வெளிப்பட்டாள்.

மற்றொரு அறையில் இருந்து வேறு பெண்ணின் குரல் கேட்டது.

"பத்மாவதி. உள்ளே வா...

மஞ்சள் ஜாக்கெட் அவளுக்கு ரொம்பவும் பொருந்தியிருந்தது. மதியம் போய்க்கொண்டிருந்தது. உள்ளே போன அவள் கொஞ்ச நேரத்தில் அழுதபடியே வெளிப்பட்டாள். உள்ளே பெண்களுக்குள் சண்டையின் சப்தம் கேட்டது.

அவனுக்கு அண்ணாச்சியின் கல்யாணம் ஞாபகத்துக்குள் ஓடியது. அப்போது மழைக்காலம் தொடங்கியிருந்தது. தினம் சாரல் விழும். ஒரு கடை லீவு அன்று அண்ணாச்சி மில்லில் வேலை பார்க்கும் திருமலையோடு கிளம்பி சங்கரன்கோயில் போனார். அன்று இரவு அவர் ஊர் திரும்பவில்லை. மறுநாள்கூட மேட்டுக்குப் போனபோது கடை திறக்கக் காணோம். அவன் திரும்பி வந்துவிட்டான். இரண்டு நாள்களுக்குப் பின்பு அண்ணாச்சி வந்து கடை திறந்தார்.

முடிவெட்டிக்கொண்டிருந்தார். முன்னால் பந்தென உயரும் கிராப். சுத்தமாக சேவிங் செய்யப்பட்ட முகம். எப்போதும் போலச் சிரிப்பு. கடைக்கு வந்த மந்தரம் பிள்ளையிடம் பேசிக் கொண்டிருக்கும் போது கேட்டான். மந்தரம் பிள்ளை வெளியே ஸ்டூலில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்.

"அப்ப பொண்ண பாத்து முடிச்சாச்சுன்னு சொல்லு.

"ஒரு வழியாக முடிஞ்சது... கல்யாணம்தான் எங்க வைக்கிறதுன்னு யோசனையா இருக்கு. எதுக்கு கூட்டம்னு பாக்கேன்."

"அப்ப கோயில்ல வச்சிர வேண்டியதுதான். பொண்ணு வீடு வசதியா..

"அதெல்லாமில்ல. மூணு பொண்ணுக... இவதான் மூத்தவ. அப்பா ரிடயர்டு போலீஸ்காரர்."

ஒரு வாரம் கல்யாண வேலையாக அலைந்தார். ஒரு நாள் அவரை ரவுண்டானாவில் வழிமறித்து மில்காரர்கள் கேட்டார்கள்.

"என்ன அண்ணாச்சிக்கு கல்யாணம்னு கேள்விப்பட்டேன். துணியெல்லாம் எங்க தைக்கக் குடுத்தாப்ல..."

"எல்லாம் நல்ல டெய்லரா பாத்து மதுரையில் குடுத்தாச்சு...

ரோட்டில் எல்லோரும் சிரித்தார்கள். பெண்ணுக்கு ஜாக்கெட் அவரே தைத்துக் கொடுத்தார். கல்யாணம் கோயிலில் நடந்தது. பிரகார வெளியெங்கும் திரிந்தான். கம்பி போட்ட அறைக்குள் பெரிய தொட்டியிருந்தது. சுவரில் நிறைய படங்கள். உள் சுவரில் கறுப்பு வடிந்தது. கல்யாணத்தின்போது பெண்ணைப் பார்த்தான்.

ஆச்சரியமாக இருந்தது அவனுக்கு. ரொம்பவும் சின்னப் பெண்ணாக இருந்தாள். எப்படியும் அண்ணாச்சியை விடப் பத்து வருடத்

துக்கு மேலாகக் கம்மியிருக்கும் வயது அவளுக்கு. பச்சைக் கலரில் பட்டு கட்டியிருந்தாள். சின்ன முகம். பெரிய கண்கள். ஏறிய நெற்றி. அண்ணாச்சியோட நடந்து வரும்போது குறுகிய அவர் நிழல் அளவுகூட இல்லை அவள். அண்ணாச்சியின் கையோடு அவள் கை சேர்ந்திருந்தது. புறாக்குஞ்சு அடங்கியது போல இருந்தது அவள் கை. பிரகார வெளியில் அவர் வேகத்துக்கு நடக்க முடியாமல் ஓடினாள்.

கல்யாணத்துக்குப் பிறகு அண்ணாச்சி மாறிப்போனார். ஒரு தடவை அவன் வீட்டுக்கு வந்தபோது கோபமாகக் கேட்டார்,

"என்னலே வேணும். வந்து கடையத் திறக்க மாட்டனா... உயிர எடுக்காத..."

அவனுக்கு எதுவும் புரியவில்லை. ராமசாமி தியேட்டருக்கு செகண்டு ஷோ போனபோது இடைவேளையில் ரத்தினத்தைப் பார்த்தான். அப்போது ரத்தினம் சொன்னான்.

"உங்க அண்ணாச்சி எப்படியிருக்காரு. சுகம்தான...

"இருக்காரு..

"அவருக்கும் அவர் பொண்டாட்டிக்கும் சண்டை தெரியும்ல...

"எதுக்கு..."

"யாருக்குத் தெரியும்... தியேட்டர்ல வச்சுக்கூட ஒரு தரம் அடிச்சுட்டாராம். பாவம் அந்தப் பொண்ணு.

அண்ணாச்சி அவன் சொன்னபடியேதான் இருந்தார். சிலசமயம் மதியம் அவனைக் கடையைப் பார்த்துக்கொள்ளச் சொல்லிவிட்டு வீட்டுக்குப் போய்விடுவார். நிறைய துணிகளைத் தைக்காமல் திருப்பிக் கொடுத்தார். ஒரு மாலையில் கடைக்கே அவர் மனைவியின் அண்ணன் வந்து சப்தம் போட்டான்.

"நீர் செய்றது சரியில்ல. சின்னப் பொண்ண அடிச்சா அது எங்க போகும், சொல்லும்.

"அவ பெரிய யோக்கியம். சொல்ல வந்துட்டான்.

"யோக்கியமில்லாம... உம்ம மாதிரி ஊர் ஊராக அலையல...

"தெரியுதுல்ல... உங்க மாமா மகன்னு ஒருத்தன் வந்து பேசிட்டுப் போறது தெரியாம இல்ல..

அவன் அதற்குமேல் பேசவில்லை. கடைக்குள் புகுந்து அவரை அடிக்க வந்தான். மிஷின் மேல் விழுந்தார். துணி சிதறியது. பெருங்குரல் எடுத்துக் கத்தினார். இது நடந்த ஒரு வாரத்துக்குப் பின்பு காலையில் அண்ணாச்சி கவர்மெண்ட் ஆஸ்பத்திரியிலிருந்து வெளிப்பட்டார். அவன் எதிரே வந்தபோது பேசவில்லை. கடை திறக்கவில்லை. எதிரேயிருந்த கடைக்காரர்கள் பேசிக்கொண்டார்கள்.

"அண்ணாச்சி அடித்ததில் அந்தப் பெண் கர்ப்பம் கலைந்து

போய்விட்டது" என்று. அண்ணாச்சிதான் இப்படியெல்லாம் நடந்து கொண்டார் எனும்போது ஆச்சரியமாக இருந்தது. ஆஸ்பத்திரிக்குப் போனான். வெளுத்துப்போய், தலை மட்டும் வெளியே தெரியுமாறு துணியால் மூடி உறங்கிக்கொண்டிருந்தாள் அவள். தலை கலைந்து போயிருந்தது. உடம்பு நாராகக் கிடந்தது.

முகத்தில் ரத்த ஓட்டமில்லை. அவளுக்குப் பக்கத்தில் காகிதத்தில் மடிக்கப்பட்ட ரொட்டித் துண்டிருந்தது. அவள் முகத்தைப் பார்க்க முடியவில்லை. வெளியே வந்தான். அண்ணாச்சி ஆஸ்பத்திரியின் உள்ளேயிருந்த வேப்ப மரத்தடியில் நின்றுகொண்டிருந்தார்.

அவன் கிட்டத்தில் போய் நின்றுகொண்டான். அவர் கேட்டார்,

"முழிச்சுக்கிட்டாளா. டே..."

"இல்ல.

"இங்ஙன இரு... ஒரு இடம் வரைக்குப் போயிட்ட வரேன்."

ரொம்ப நேரம் அங்கு நின்றுகொண்டிருந்தான். யார் சொன்னார்கள் எனத் தெரியவில்லை. டவுன் பஸ் ஆஸ்பத்திரி முன் நின்ற போது அண்ணாச்சி மனைவியின் அண்ணன், அவர் மாமனார், இன்னும் சில பெண்கள் கூட்டமாக அழுதபடியே வந்தார்கள்.

அவர்கள் வரும்போதே அண்ணாச்சியைத் தேடியபடியே வந்தார் கள். நேரடியாக வார்டுக்குள் போனார்கள். அவன் கூடவே போய் வெளியே நின்றுகொண்டான். படுத்துக் கிடக்கும் அவள் முன்பு பெண்கள் சூழ்ந்துகொண்டு குரலெடுத்து அழுதார்கள். விம்மினார்கள். ஒரு நர்ஸ் வந்து சப்தம் போட்டுவிட்டுப் போனாள்.

உறக்கம் விழித்த அவள் வேதனையில் முனங்கும்போதெல்லாம் பெண்கள் அழுதார்கள். அண்ணாச்சியைச் சபித்தார்கள். வயதான நபர் ஒருவரும், கடையில் அன்று சண்டையிட்டவரும் வெளியே வந்து நின்றுகொண்டார்கள். வயதானவர் நடுங்கும் குரலில் சொன்னார்,

"அவன. ஒரு பொழுதாவது புடிச்சு...கம்பி எண்ண வைக்க ணும்டா... ஸ்டேஷன்ல சொல்லி தட்டச் சொல்லணும்... திருட்டு நாயி. அவன் நிற்பதைப் பார்த்ததும் அவரிடமிருந்து விலகி எதிரே வந்து கேட்டான்,

"எங்கேடா டெய்லர்...

"எங்கேயோ போனாரு.

"எப்பம்.

"மதியம்.

அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கும்போதே அண்ணாச்சி சைக்கிளில் வந்தார். அவரைப் பார்த்ததும் வயதானவர் கையில் செருப்பைத் தூக்கிக்கொண்டு ஓடினார்.

"மனுசப் பிறவியாடா.. நீ... பச்ச மண்ணப் போட்டு இந்த அடி அடிச்சிருக்கே. புள்ளத்தாச்சிப் பொம்பளையக் கூடவா

அடிக்கணும். பாருடா.. அவள. ஜன்னி கண்டு நடுங்கிறா உன்ன செருப்பால அடிக்கணும்டா. நாயே.

அவர் குரல் தழுதழுத்தது. பேச முடியவில்லை. கண்களில் ரௌத்திரம் பொங்கியது. அண்ணாச்சி எதுவும் பேசவில்லை. நின்று கொண்டிருந்தார். வயதானவரை உடனிருந்தவன் சமாதானப் படுத்தினான்.

“பேசாதீங்கப்பா ஸ்டேஷன்ல சொல்லி... இவனுக்கு இருக்கு.”

இருவரும் வெளியே கிளம்பிப் போன பிறகு பெண்கள் அண் ணாச்சியின் எதிரே வந்து புலம்பினார்கள். சபித்தார்கள். அன்றிரவு அவன் வீடு திரும்பினான். காலையில் ஆஸ்பத்திரிக்குப் போனபோது கேள்விப்பட்டான். இரவோடு இரவா அண்ணாச்சியைப் போலீஸ் பிடித்துப் போய்விட்டது என்று. அடித்து, இழுத்துக்கொண்டு போனார் கள் என்று. இரண்டு நாள்களுக்குப் பிறகு அந்தப் பெண்ணை அழைத்துக்கொண்டு போய்விட்டார்கள் சங்கரன்கோவிலுக்கே.

பத்து நாள்களுக்குப் பிறகு இரவில் அண்ணாச்சியை மேட்டில் பார்த்தான். நம்ப முடியவில்லை. முகம் கறுத்துப்போயிருந்தது. உடம்பே கட்டுவிட்டுப் போய்விட்டது. பழைய கிராப் இல்லை. சிலநாள் தாடி. ஆள் உடைந்துபோயிருந்தார். மந்தரம் பிள்ளை அவரைப் பார்த்ததும் வாய்விட்டு அழுதார்

“என்னடே. இப்பிடியாயிட்ட. கோட்டிக்காரனாட்டம்.

அண்ணாச்சி பேசவில்லை. நெற்றியைக் கையால் தடவியபடி இருந்தார். அவர் பேசினால் அழுதுவிடும் நிலையில் இருந்தார் என்று தோன்றியது. இரவோடு இரவாகக் கடையைக் காலி செய்தார். மிஷினை கணேசனுக்கு விற்றுவிட்டார் என்று தெரிந்தது. போகும்போது அவனைக் கூப்பிட்டார். கூடவே ரயில்வே லைன் வரை நடந்து வந்தான். வரும்போது பேசினார்,

“என்னடே செய்யப்போற. இனிமே.

“வேற கடை பாக்கணும் அண்ணாச்சி.

“இந்தத் தொழில் வேண்டாம்டே... பேசாம வேற பொழப்பப் பாரு...” இரவு அவன் வீடு திரும்பும்போது புதுத் தாளாக நூறு ரூபாய் கொடுத்தார். அதன் பிறகு அவன் அண்ணாச்சியைப் பார்க்கவேயில்லை. கொஞ்ச நாளில் அந்த மேட்டை இடித்து சமப்படுத்திவிட்டார்கள். அங்கே டெய்லர் கடை இருந்த அடையாள மற்றுப் போய்விட்டது.

நூறு ரூபாயை ரொம்ப நாள் செலவழிக்காமல் வைத்திருந்தான். பின்பு எப்படி செலவானது எனத் தெரியவில்லை. ஆனால் அவன் அண்ணாச்சி சொல்லியதைக் கேட்காமல் டெய்லர் வேலைக்கே பழகினான். ரொம்ப நாள் கழிச்சு மந்தரம் பிள்ளையைப் பார்க்கும் போது அவர் சொன்னார்,

“நல்ல பய. தன் பயம். ஜாஸ்தி. மில்லுல வேலை பாத்த

மணி சம்சாரத்துக்கும் அவனுக்கும் பழக்கமிருந்தது... அந்தப் பயம்தான் தன் பெண்டாட்டியையும் சந்தேகப்பட்டு மனுசன் அடையாளமில்லா மப் போயிட்டான்."

அதைக் கேட்ட இரவு அவன் அண்ணாச்சியை நினைத்தபடியே திரிந்தான். அவர் இருந்ததற்கான எந்த அடையாளமும் இல்லாமல் போயிருந்தது. எப்போதாவது டெர்லின் துணி சிதறிக் கிடக்கும்போது அண்ணாச்சியின் ஞாபகம் முட்டும். மனசு பொங்கும் அவனுக்கு.

பெரியதொரு வீட்டில் சாயங்காலம் வரை வேலை இருந்தது. அவன் முடிக்கும் தருவாயில் இருக்கும்போது ஒரு நடுத்தர வயதுக் காரன் குரல் உள்ளே கேட்டது. அவன் எந்த வழியாக வந்தான் என்று தெரியவில்லை. ஒரு பெண்ணின் குரலும் அவன் குரலும் எதிர் எதிராகக் கேட்டன. அந்தப் பெண் குரல் வயதானவள் குரல் போன்றே இருந்தது. முரட்டுத் தொனி.

"அப்ப என்னதான் சொல்றான்."

"பத்மாவதி கல்யாணத்தில் வந்து கலாட்டா பண்ணுவேங்கிறான். இல்லேன்னா ருக்மணிய அவன் கூட அனுப்பணுமாம்."

"எதுக்கு அவன் கொல்றதுக்காகவா."

"விவரமில்லாம பேசாதக்கா... அவன் பொண்டாட்டிய அவன் கூட அனுப்ப வேண்டியதுதானே.

"இத்தனை நாள் அந்த புத்தி எங்க போச்சாம்."

எதிரேயிருந்து குரல் வரவில்லை. வேறு ஒரு பெண் குரல் கேட்டது இப்போது.

"நான் அங்கேயெல்லாம் போக மாட்டேன்... யார் அடி வாங்கிச் சாவா. ."

"அப்ப இங்கய அடஞ்சு கிடந்து சாகப் போறயா?"

"அதில உங்களுக்கு என்ன வந்தது...

"இப்ப பத்மா கல்யாணம் நின்னுரும்.. ரெண்டு பேரும் சேர்ந்து சாகுங்க. ."

வயதான பெண் அழுதாள். அவளால் சரியாக அழ முடியவில்லை. பேச்சு இடையில் வந்து முட்டியது. திடீரென அந்தப் பெண் குரல் கேட்டது.

"நான் இருக்கறது புடிக்கலேன்னா... கிணத்துல விழுந்து செத்துடு றேன்... நீங்க நிம்மதியா இருங்க... அவளும் அழுதபடியே பின்பக்கம் ஓடினாள்.

எங்கே ஓடுகிறாள் எனப் பார்ப்பதற்குள் பின்புறமிருந்து குரல் வந்தது.

“ருக்மணியக்கா கிணத்துல விழுந்துட்டா.

எல்லாப் பெண்களும் வெளிப்பட்டார்கள் அந்த வீட்டின் உள்ளேயே ஒரு ஓரத்தில் கிணறு இருந்தது. பெண்கள் கூச்சலிட்டார்கள். அவன் கிணற்றுப் பக்கம் போவதற்குள் வயதான பெண்ணுடன் பேசிக்கொண்டிருந்த நபர் கிணற்றில் குதித்திருந்தார். வெளியே கயிறு போட்டு இழுத்தார்கள்.

துர்வாடை அடித்தது. அவள் வெளியே வந்தபோது உடம்பெல்லாம் பச்சையாக ஏதோ படர்ந்துபோயிருந்தது. அவன் மிஷினில் வந்து உட்கார்ந்துகொண்டான். நிமிடங்களுக்குப் பிறகு சப்தமே வரவில்லை. அந்த நபர் சொல்வது கேட்டது.

“தையக்காரன வேற கூட்டிட்டு வந்து வச்சுகிட்டு நிக்கே. துட்டக் குடுத்து அனுப்பு... ஊர் பூரா தெரியட்டும் இல்லேன்னா...

அவன் வெட்டுத் துணிகளை எடுத்துப் பையில் போட்டுக்கொண் டான். உள்ளிருந்து வயதான பெண் வெளிப்பட்டு காசு கொடுத்தாள். அவன் வெளியே வரும்வரை எந்தப் பெண்ணையும் பார்க்கவில்லை.

தெரு எப்போதும் போல இருந்தது.

திரும்பி வரும்போது பஸ்ஸில் யோசித்தபடியே வந்தான். அந்தப் பெண்ணுக்குக் கல்யாணம் நடக்குமா எனத் தெரியவில்லை. இதுவரை ஒரு தரம்கூட அவன் மனைவியோடு சண்டை போட்டதில்லை. அவளும் அப்படித்தான் இருந்தாள். அவன் வேலையற்று இருந்த நாள்களில்கூட அவள் கோபப்பட்டது கிடையாது.

பரிவாயிருந்தாள் எப்போதும். இப்படி ஊர் ஊராக அலையாமல் வீட்டுத் திருணையிலே டெய்லர் கடை போடலாம் எனச் சொல்லிக் கொண்டிருந்தாள். அவளோடு சரிவரப் பேசிக்கூட நாளாகிப் போனது பட்டது. இப்போதெல்லாம் குழந்தைகளிடம்கூடப் பேசப் பிடிக்காமல் இருந்தது.

இன்று எல்லாம் லேசானது போலத் தெரிந்தது. அண்ணாச்சியின் வாழ்வைப் போலவும், பெரிய தெருவைப் போலவும் இல்லை அவன் வாழ்க்கை. அதிகம் சிக்கலாகத் தெரிந்தது நிஜமில்லை. எல்லாம் சிறு பிரச்சினைகள், ப்ணம் தவிர. பணமும் எங்கிருந்தாவது தானாக வந்துவிடும் என்றே எண்ணிக் கொண்டான். சந்தோஷமாக இருந்தது.

ஊர் வந்து சேர்ந்தபோது இரவாகியிருந்தது. ரவுண்டானாவில் இறங்கி, பூ மிட்டாய் வாங்கிக்கொண்டான். வீட்டுக்குப் போனபோது குழந்தைகள் உறங்கிப்போயிருந்தார்கள். அவளிடம் பையைக் கொடுத்து விட்டு, மிஷினை ஓரமாக வைத்துவிட்டுக் குளிக்கப் போனான். அவள் சாப்பாட்டைச் சூடாக்கினாள். ஈரத் தலையோடு சாப்பிட உட்கார்ந்துகொண்டான்.

அவள் கையில் வெட்டுத் துணி மஞ்சள் இருந்தது. அவனுக்கு எதிராகக் காட்டிக் கேட்டாள்,

“நல்லாயிருக்குல்ல இந்தத் துணி.

“கல்யாணப் பொண்ணுக்கு ஜாக்கெட்.

அவள் சிரித்தாள். எதற்கெனத் தெரியாது அவனும் சிரித்தான். சாப்பாட்டின்போதே கேட்டான்,

“ரப்பர் மில் வேலை கஷ்டமா இருக்கா உனக்கு.

“புதுசா என்ன கஷ்டம். நாள் பூரா நிக்கணும்.. பழகிப் போச்சு” என்றாள்.

சாப்பிட்டு எழுந்த பின்பு தட்டுகளை ஒதுக்கிப் போட்டாள். அவன் கதவோரம் போய் உட்கார்ந்துகொண்டான். அவள் தீப் பெட்டியை எடுத்துப் போட்டாள். சாப்பிட்ட பின்பு எப்போதும் அவன் சிகரெட் பிடிப்பான்.

சிகரெட் பற்ற வைத்துப் புகையை ஆழமாக இழுத்துவிட்டான். எல்லாம் எளிமையானது போல இருந்தது. பாதி சிகரெட்டில் கேட்டான்,

“பொம்பளையா இருக்கிறதுன்னா ரொம்பக் கஷ்டம்தானா.

அவள் இதை அவன் ஏன் கேட்கிறான் என்பது போலப் பார்த்து விட்டுச் சொன்னாள்,

“கஷ்டமும் இருக்கத்தான் செய்யும்.”

இந்தப் பதிலில் அவளையும் அவள் சேர்த்துக்கொண்டு சொன்னாளா என யோசித்தபடியே கிடந்தான். ஆகாசம் விரிந்து கிடந்தது எங்கும்.

காட்டின் உருவம்

எந்தப் பக்கமும் ஊர் தெரியவில்லை. வெட்டவெளி. அத்துவானப் பரப்பு பழுப்பு நிறங்கொண்டு மங்கி யிருந்தது. மாடு தலையைக் கூட அசைக்காமல் நடந்துகொண்டிருந்தது. அவன் தலையைச் சுற்றிக் காற்று போகா வண்ணம் துண்டைக் கட்டிக் கொண்டிருந்தான். ரயில்வே தண்டவாளம் வளைந்து, உடம்பைத் திமிறிக் கிடந்தது. காற்று பனியோடு அடித்தது. தண்டவாளப் பாதை வழியாக நடந்தான். செடிகள் தலையைக் கவிழ்த்துக்கொண்டு கிடந்தன. கருவ மரங்கள் வெறிச்சிக் கொண்டு நின்றன. மாடு பெருமுச்சு விட்டுப் போனதில் தண்டவாளத்தின் அடியில் பதுங்கிய பூச்சிகள் மேலே ஏறின. திக்கில்லா மல் நிலா அலைந்தது. கால் மயிர்கள் பனியில் குத்திக்கொண்டு நின்றன. அவன் சிவப்பு மினுக்கட் டாம் பூச்சிகளைப் பார்த்தவாறே நடந்து வந்தான். மினுக்மினுக் என அவை வெளிச்சம் வெட்டின.

மதியமே அந்த ஊருக்குப் போய்ச் சேர்ந்திருந்தான். அந்த மாட்டைப் பற்றிய நாள் துப்பு போட்டு ஆள் இருப்பிடம் அறிந்து வைத்திருந்தான். மாடுகளே அற்றுப்போய்க் கொண்டிருந்தன. பல தொழுவங்கள் அழிந்து கல் தரைகள் விரிவு கொண்டன. நாள்பட்ட மூத்திரக் கவுச்சியும் மஞ்சளும் கொண்ட இடிந்த தொழுவங்களில் காற்று அலைந்து திரிந்தது.

வீடுகள் புகை படிந்துபோன பனையோலையிடப் பட்டிருந்தன. காரை வீடுகள் பல காலம் கண்டு பொதுமி நின்றன. நீண்ட பத்திகளாக விரியும் கம்பி அழிபாய்ச்சிய வீட்டில் புறாக்கள் தெரிந்தன. காவி அடித்த சுவர் கொண்ட வீடுகளில் வயதான ஆட்கள்

தெரிந்தார்கள். அந்தப் பக்கத் தரை செம்மண்தரை. ஊரே புழுதி பறந்துகொண்டிருந்தது.

அவன் மாடு இருக்கும் இடம் போய்ப் பார்த்து வந்தான். காளை மாடுதான். கொம்பு சிறுத்த மாடு. நீண்ட நாள்களாகவே ரெட்டியாரிடம் இருக்கிறது. ரெட்டியார் வீட்டுப் பின்வாசல் மூடிக் கிடந்தது. தொழுவம் நிறைய வைக்கோல் அடைந்திருந்தது. உள்ளே எட்டிப் பார்த்தான். யாரோ ஒரு பெண் படப்பின் மறைவிலிருந்து வெளிப்பட்டு அவனை முறைத்துப் போனாள்.

ஊர் வெகு சீக்கிரமாகவே அடங்கிவிடுகிறது. ஆட்கள் அதிகமற்றுப் போனதாலும், பல பக்கம் வேலைக்குப் போய் வந்ததாலும் ஆட்கள் சீக்கிரமே உறங்கிவிடுவார்கள். கிணற்றில் வாளி விழும் சப்தம் துல்லியமாகக் கேட்டது. யாரோ ஆம்பளை இறைக்கக்கூடும். வளையம் சுத்தும் சப்தம் கடூரமாயிருந்தது. அவன் இரவில்கூட தெருவில் அலைந்தான். மேலக்குடிப் பெண்கள் இரவில் குளித்துக்கொண்டு இருந்தார்கள். பெட்டிக் கடையில் போய் பீடி, தீப்பெட்டி வாங்கிக் கொண்டான். அவனுக்குப் பிடித்தமான, குதிரைப் படம் போட்ட தீப்பெட்டி கிடைத்தது. ஊர் விளக்குகள் எரிவதும், அமர்வதுமாக இருந்தன.

ஊர் தாண்டிப்போய் மாடன் கோவில் திண்டில் படுத்துக் கொண்டான். நட்சத்திரங்கள் வானம் தெரியாமல் அப்பிக் கிடந்தன. அவன் சிறு பிராயமாக இருந்தபோது தாத்தாவோடு திருட்டுக்குப் போவான். அடங்கிய கிராமங்கள் நிதானமாக அலையும் பின்னிரவு. வீட்டின் சிவப்பு ஓடுகள் பொதபொதவென இருக்கும். நாள்பட்ட மௌனம் கால் வைத்ததும் கலைந்து சப்தமிடும். நிதானமாக அவன் உள்ளே இறங்குவான். அவன் உடம்பு பூனை போலாகிவிடும். ஆட்கள் உறங்கும்போது அறைகள் வேறு தினுசு கொண்டுவிடுவதை அவன் பார்த்தான். சப்தமின்றிக் கதவைத் திறந்து நகை, ஜாமான்களை எடுத்து வருவான்.

ஊர் தாண்டும்போது காடைகள் காட்டில் கத்தும். போலீஸ்காரர் கள் காடெங்கும் தேடி அலைவார்கள். யாரும் அறியாத பாதை யொன்று எப்போதும் அவனுக்கும் தாத்தாவுக்கும் திறந்து கிடக்கும். கரி மூட்டம் போடும் இடப்பக்கம் போய்ப் படுத்துக் கொள்வார்கள்.

தாத்தாவுக்கு எந்த வீட்டிலும் கதவைவிட சாவித் துவாரம்தான் கண்ணில் முதலில் படும். அவருக்கும் துவாரத்துக்கும் உள்ள இடைவெளிதான் அவருக்கு முக்கியமாகும். பகலும் இரவும் அறியாத ஊரின் முகம் அவர்களுக்குத் தெரியும். நட்சத்திரங்கள் விழித்துக் கொண்டு எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருக்கும். நிலா வெளிச்சத்தில் அலையும் இரண்டு நிழல்களைக் காடு அடையாளம் கண்டுகொள்ளும்.

திருட்டுக்குப் பல காலம் ஒளிந்து வாழ வீடுகள் இருந்தன. ரெட்டிமார் பெண்ணான சுப்பக்கா வீட்டில் தாத்தா உறங்கிக்

கிடப்பார். அவனை சுப்பக்கா உட்கார வைத்து எண்ணெய் தேய்த்து விடுவாள். வெற்று உடம்பில் அவள் விரல்கள் ஊரும். சுப்பு. சுப்பு. என்பான். அவள் முகம் மஞ்சள் படர்ந்தேயிருக்கும்.

சுப்பக்காவைக் கட்டிக்கொள்ள எவரும் வரவில்லை. தனி ஆளாகவே இருந்தாள். அவள் வீட்டில் பிராயமெல்லாம் கிடந்தான். சுப்பக்காவின் மேல் காலைப் போட்டு உறங்கினான். சுப்பக்காதான் அவனைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்துவிட்டாள். தாத்தாவை வைதாள். தாத்தா மட்டும் தனியே திருடப் போனார்.

சிவப்புத் தொப்பி போட்ட போலீஸ்காரர்கள் வீடுகளை அறிந்தேயிருந்தார்கள். சேப்பக்குளத்தில் திருடி வரும்போது அவரைப் பிடித்துக் கட்டிப்போட்டுவிட்டார்கள். அது வேம்பு பூத்திருந்த காலம். பகலெல்லாம் தாத்தா வேம்பில் கட்டுண்டு நின்றார். வேப்பம் பூக்கள் சுற்றிலும் உதிர்ந்து கிடந்தன. கள்ளனைப் பார்த்தறியாத பிள்ளைகள் மறைவாக நின்று சப்தமிட்டன.

“கள்ளப்பய. கள்ளப்பய.

புறங்கையைக் கட்டித் தெருவில் கூட்டிப் போனபோது பெண்கள் கதவுமேல் சாய்ந்து பார்த்துக்கொண்டிருந்தார்கள். சுப்பக்கா வழியெல்லாம் ஓடினாள். தாத்தா தாத்தா தாத்தா.

தெருப்புழுதி உயர்ந்தது. ஸ்டேஷனில் கிடந்தார் தாத்தா. எட்டுப் பொய் கேஸ்கள் முடிந்து அவர் வரும்போது க்ஷயரோகம் கண்டு இருமினார்.

சுப்பக்கா கட்டிக்கொடுத்துப் போனாள், முப்பது வயசான பிறகு. தாத்தாவின் சாவுக்குப் பின் அவன் வீட்டிலே கிடந்தான். காட்டு வேலைகளுக்குப் போனான். தாத்தாவின் சமாதியில் வெருகுப் பூனை அலைவதை ஒரு நாள் பார்த்தான்.

அதன்பின்பு சில தடவை மாடு திருடினான். துப்புத் தெரிந்து ஆள் வந்ததும் மாட்டுக்காரனுக்கே மாட்டைத் திருப்பிவிட்டு காசு வாங்கிக்கொண்டான்.

யோசிக்க யோசிக்கப் பல தூரம் வந்துகொண்டேயிருந்தது. ஊர் சுத்தமாக முழுகிவிட்டது போல ஆனது. தெரு அழகு கூடி நிற்பது தெரிந்தது. ஊருக்குள் வந்தான். ஆடுகள் கொட்டகைக்குள் முனங்கின. திண்ணைகளில் பனி இறங்கி ஈரமாக்கிக் கொண்டிருந்தது.

காற்று சிறு சுழலாகச் சுழன்றது. மரங்கள் தூக்கத்திலே அசைந்தன. மாடு நின்ற இடத்தின் பக்கம் போனான். அவன் நிழல் நீண்டு விழுந்தது. சுற்றிலும் பார்த்தான். ஆள் தெரியவில்லை. படலை விலக்கிக்கொண்டு உள்ளே போனான். மாடு நின்றுகொண்டிருந்தது. குனிந்து கவுத்தை அவிழ்த்தான். தலையைத் திருப்பி அவனைப் பார்த்தது மாடு. சங்கு போன்ற மாட்டின் கண்கள் வெறித்தன. சப்தமில்லாமல் மாட்டை இறக்கி நடத்தினான்.

ஊர் தாண்டும்வரை நடை சப்தமேயில்லை. ஊரில் பனிபெய்து

கொண்டிருந்தது. நட்சத்திரங்கள் கலைந்து போய்விட்டன. பாலம் தாண்டியதும் மெதுவாக நடந்தான். காற்று பைத்தியம் போல உளறிக்கொண்டிருந்தது.

மழையற்றுப்போனதால் எங்கும் வெடிப்பு கண்டது நிலம். காட்டுக் கொடிகள்கூடக் கருகிவிட்டன. காடெங்கும் வேலி முளைத்தது. காற்றில் மணம் பறந்துபோனது நாள் எல்லாம். தண்ணீருக்காக அலைந்து ஆட்கள் நாலா பக்கமும் பாதை உண்டாக்கினார்கள். பல நாளாக அவன் வீட்டிலே கிடந்தான்.

வெயில் ஓட்டு வழியாக வீடு முழுவதும் நிரம்பியது. வெயிலின் உக்கிரம் தாங்க முடியாமல் பிள்ளைகள் அம்மை கண்டன. அம்மை கண்ட பிள்ளைகள் குளிர்ச்சி வேண்டிப் பிதற்றின. மழை வேண்டி மழைக் கஞ்சி எடுத்தார்கள் வேப்பங்கொழையும் கஞ்சியுமாக சாமியாடிய பெண்கள் மாரில் இரண்டு கைகளாலும் அறைந்து கொண்டார்கள். கஞ்சி வாடை கண்டு நாய்கள் அலைந்தன.

அவன் பெண்டாட்டி எடுத்ததற்கெல்லாம் எரிந்து விழுந்தாள். பிள்ளைகள் கண்கள் அமுங்கக் கிடந்தார்கள் அவள் இரவில் உறங்காமலே கிடந்தாள். பல நாள் அதைப் பார்த்து வந்தாள். அவள் உடம்பில் இருந்து நெடி வரத் தொடங்கியிருந்தது. அவள் உடம்பில் தோல் நிறம் மாறிப் பத்து வரத் தொடங்கியிருந்தது.

அவளைப் பார்த்தபடியே கிடந்தான் இரவில் பல நாளும்.

மாடு தண்டவாளப் பாதை விட்டு இறங்கியது. அவனும் இறங்கிக் குறுக்கே நடந்தான். கம்மாய் வந்துவிட்டது. கம்மாய்க் கரையின் கிழக்கே அவன் ஊர் இருந்தது. கம்மாயின் ஊடே இறங்கி நடந்தான். கருவேல மரங்கள் நின்றன. தண்ணீர் நிரம்பியிருந்த காலத்தில் கொக்குகள் நிற்கும். கொக்கின் முகம் தண்ணீர் பட்டுக் கலைபடும். மரத்தின் நிழல் கவை கவையாகத் தெரியும். விடியும்போது கருவ மரத்தின் ஊடே சூரியன் சிக்கி, முள்ளால் கிழிபட்டு வெளிவரும்.

வறண்ட கம்மாயில் புதையுண்டு செத்த மீன்களின் செதில்கள் இன்னமும் இருந்தன. கம்மாயின் பாதி தூரம் வரை நடந்து போனான். ஏற்கெனவே கொஞ்சம் தீவனம் கொண்டுவந்து கட்டியிருந்த மரத்தடியில் மாட்டைக் கொண்டுவந்து கட்டினான். அந்த இடத்தில் மரங்கள் கம்மென்றிருந்தன.

இன்னொரு மரத்தடியில் தூத்துவிட்டு படுத்துக்கொண்டான் மேகம் தெரியவில்லை. குளிர் அடித்தது. விடியும் வரை உறக்கம் கொள்ளவில்லை அவனுக்கு. விடியக் கிளம்பி ஊருக்குள் போனான். வீரசின்னு வீட்டின் கதவைத் தட்டி அவனிடம் எதையோ சொல்லி விட்டு அவன் வீட்டுக்குப் போனான்.

அவன் போனபோது வீடு முழுவதும் புகை நிரம்பியிருந்தது. அவள் அடுப்பருகே உட்கார்ந்திருந்தாள். சுவரருகே போய்க் கொடியில் கிடந்த சேலையை மடித்துப் போட்டுப் படுத்தான். அவள் திரும்பிப்

பார்த்துக் கேட்டாள்.

"இன்னேரம் என்ன உறக்கம்?"

"ராத்திரி உறங்கலை."

"எங்க போயிருந்தே. நீ?"

"தெக்கே.

"யார் மாடு.

அவன் பதில் சொல்லாமல் கிடந்தான். புகை வெளியேறியது. அவள் எழுந்து நின்று அவன் முன்னால் சேலையை அவிழ்த்து மாற்றிக் கட்டினாள். இடுப்பைப் பார்த்தான். அவள் கண்கள் அவன்மேல் பட்டன. அவள் வெளியே கிளம்பிப் போனாள். வெளிச்சம் வரத் தொடங்கியது.

மதியம் வரை உறங்கினான் அவன். மதிய வெயில் அவன் முகத்தில் அடித்தபோது அவள் எழுப்பினாள். புரண்டபடி கேட்டான்,

"என்ன?"

"மேலத் தெருவுல ஒரு ஆள் வந்து விசாரிச்சுகிட்டு இருக்கான்."

"யாராம்?"

"தெக்க உள்ளவனாம்."

"எப்படியிருக்கான்?"

"குட்டையான ஆளு."

அவன் எழுந்து முகம் கழுவினான். கருவாட்டுத் துண்டுகள் பொரித்து மூடியில் இருப்பதைப் பார்த்தான். அவள் சொன்னாள்,

"சாப்பிட்டுப் போறயா

வீட்டின் பின் வழியாகப்போய் வீரசின்னு வீட்டுக்குப் போனான். வீரசின்னு அவனைத் தனியே கூட்டிப் போய்ச் சொன்னான்,

"ஆள் அந்த ஊர்க்காரன்தான். ஏட்டு சுப்பையாவோட வந்திருக்கான்."

"போலீஸ் வந்தா நமக்கென்ன?"

"சுப்பையா பெரிய அகராதி புடிச்சவன். மாடு எங்க நிக்குது?"

"கெடக்கான். மாட்ட சந்தைக்குக் கொண்டு போய் வித்திட்டுப் போறேன்."

"இரு. பேசிப் பாப்போம்"

வீரசின்னு வெளியே கிளம்பிப் போனான். அவன் திரும்பும்போது அந்த ஆளையும் உடன் கூட்டிக்கொண்டு வந்து சந்தில் வைத்துப் பேசிவிட்டு அவனிடம் வந்து சொன்னான்,

"ஆள் பெரிய இவனால இருக்கான். நூறு ரூவாய்க்கு மேல தேறாது."

“என்ன சொல்றான்”

“ரெட்டியாருக்கு போலீஸ்ல பலரையும் தெரியுமாம். சொல்லி ஆள் பிடிக்கப் போறாராம்.”

“கிழிச்சாரு. அவன மட்டும் நாளைக்கு வரச் சொல்லு மாடு வேணுமின்னா.”

வீரசின்னு திரும்பவும் அந்த ஆளோடு பேசிக்கிட்டு இருந்தபோது சுப்பையா திரும்பி வந்து கேட்டார்.

“என்னடா. குசுகுசுப்பு?”

வீரசின்னு எதுவும் பேசவில்லை. அவர்கள் போன பின்னாடி வீரசின்னுவும் அவனும் கம்மாய்க்குப் போனார்கள். நிலா இல்லை. மங்கின இருட்டு. அரிக்கேன் விளக்கு கொண்டு போனார்கள். கம்மாய் விளக்கொளியில் அமானுஷ்ய ரூபம் காட்டியது. சீட்டு விளையாண்டார்கள். வெளிச்சம் கண்டு மாடு தலையை நீட்டிக் கொண்டு இருந்தது. வீரசின்னு பாதியில் ஆட்டத்தை முடித்துக் கொண்டான். அவனே பேசினான்,

“எங்க வாரேன்னான்?”

“ரெட்டைப் பனைப் பக்கம்”

“நீ போயிட்டு வந்திடு. நான் மேற்குக் கரை மடையிலே நிக்கேன். துட்ட வாங்கிட்டு மாடு இருக்க இடத்தச் சொல்லு.”

“சரி”

பகல் வந்தது. அவன் கிளம்பிப் போனான். மேற்கு மடையில் போய் உட்கார்ந்துகொண்டான். வீரசின்னு வர மதியமானது. எல்லாம் பழைய ரூபாய்த் தாள்கள். பத்து ரூபாய்த் தாள்கள். இருவரும் நடந்துபோனார்கள். செவல்பட்டிக்குப் போய் டீக்கடையில் காரசேவு, டீ சாப்பிட்டார்கள். வீரசின்னு முப்பது ரூபாய் வாங்கிக் கொண்டான். வண்டிப்பாதை வழியாக நடந்து வந்தார்கள். வீரசின்னு புளியந்தோப்பில் சீட்டு விளையாடுவதைப் பார்த்து அவனையும் கூப்பிட்டான்.

ஏற்கெனவே ஆட்கள் ஆடிக்கொண்டிருந்தார்கள். புளிய நிழல் விழுந்து தரை வெளுத்துப் போய் இருந்தது. புளிய ஓடுகள் கிடந்தன. அவனும் சின்னுவும் உட்கார்ந்து விளையாண்டார்கள். நாலு ஆட்டை அவன் ஜெயித்தான். பின் தொடர்ந்து தோற்றான். வீரசின்னுதான் ஜெயித்தவன். வீரசின்னுவிடம் ஐம்பது ரூபாய் கடன் கேட்டான் வீரசின்னு சிரித்தான்.

“சீட்டு விளையாட்டுல கடன் இல்லேல.

“குடு.. வந்து தர்றேன்.”

“தர்றது என்ன இருக்கு. இன்னி எவன் மாட்டையாவது. தள்ளிட்டு வரணும் அதுக்கு.”

“ஒழுங்காப் பேசு.”

“உள்ளதத்தான் பேசுறேன்.”

அவனுக்கு வெறியாக வந்தது. புளியமரத்தின் காய்ந்த கொம்பை ஒடித்து வீரசின்னுவை அடித்தான். அடி சுரீர் என்றது. வீரசின்னு நிமிரும் முன்பு ஒரு மிதி மிதித்தான். அவனிடம் இருந்த காசு சிதறியது. அவன் வேகமாகக் காசைப் பொறுக்கினான். வீரசின்னு எழுந்த வேகத்தில் மேலே விழுந்தான். அவன் கீழே புரண்டபோது கல்லில் பட்டு உதடு வெட்டுப்பட்டது. வீரசின்னுவைத் தள்ளிவிட்டு எழுந்தான். வீரசின்னு எழுவதற்குள் அவன் எழுந்து ஓடினான். வீரசின்னுவின் குரல் கேட்டது.

அவன் வீடு வந்து சேர்ந்தபோது உதட்டில் இருந்து ரத்தம் வழிந்தது. அவன் வீட்டுக்குள் போனான். யாருமற்று இருந்தது வீடு. காசைத் தரையில் போட்டு எண்ணிக்கொண்டிருந்தான். முப்பத்து நாலு ரூவாய்தான் கிடைத்தது. அவள் கதவைத் தள்ளிக் கொண்டு நின்றாள். காசை அப்படியே பார்த்துக்கொண்டிருந்தான். அவனைக் கேட்காமலே அவள் குனிந்து காசை எடுத்து அடுப்படிக்குள் போனாள்.

அவன் உதடு எரிந்தது. வீரசின்னு இன்னமும் ஊர் வந்திருக்க மாட்டான். எப்படியும் சண்டை வரும் போலத் தெரிந்தது.

அவன் வாகான விறகுக் கட்டை எடுத்து வீட்டுக்குள் கொண்டு வந்தான். அவள் திரும்பிப் பார்த்துக் கேட்டாள்,

“உதட்டுல என்ன?”

“ரத்தம்.”

அவள் விறகுக் கட்டைகளையும் அவனையும் பார்த்தாள். அவன் முகம் சிவந்துபோய் இருந்தான். உப்பரித்தது உதடு.

அவள் தெருவையே பார்த்துக்கொண்டிருந்தாள். தெருவில் காற்று ஒடுங்கிச் சப்தமற்று இருந்தது.

அவள் வெளியே போய் நின்றாள். தெருவில் வீரசின்னு வந்து கொண்டிருந்தான். அவன் சட்டை கிழிந்துபோயிருந்தது. அவன் கத்துவது போலத் தெரிந்தது. கிட்டத்தில் வந்தபோது பார்த்தாள். அவன் கையில் கத்தி மின்னியது. அவள் கேட்கும் முன்பே அவர்கள் சண்டை துவங்கிவிட்டது.

மேற்கு வீடு

மேற்குப் பார்த்த வீடுகளுக்கு மாலையில்தான் வெளிச்சம் அதிகம் வருகின்றது. சூரியன் மறைவதை வீட்டிலிருந்து நன்றாகப் பார்க்க முடியும். காரை உதிர்ந்த சுவர்களைப் பிடித்தபடி பத்மா பல நாள் சூரியன் மறைவதைப் பார்த்தபடி இருக்கிறாள். இப்போது நெடுநேரம் வரை வெயிலடிக்கிறது. சூரியன் மெல்லத் தணிந்து தணிந்து மேற்கில் முங்கி மறைகிறது. இவ்வளவு பெரிய வீட்டைக் கட்டிய தாத்தாக்களை பத்மா பார்த்ததில்லை. கட்டுக் கட்டாகப் பிரிந்து போய்க்கொண்டிருக்கும் மேற்கு வீட்டில் பதினெட்டு அறைகள் இருந்தன. அறைகளில் விளக்கு வைப்பது கூட இல்லை. பகலில்கூட அதில் இருட்டு ஒழுகிக் கொண்டேயிருக்கிறது. சுவர்களில்கூட இருட்டின் பிசுபிசுப்பு அப்பிப்போயிருக்கிறது. ஆள் கதவைத் திறக்கும் சப்தம் கேட்டு இருள் திரும்பும். குமிழ்ப்பிடி போட்ட கதவுகள். கனவின் ஊடே நடந்து போவது போல அறைகளுக்குள் நடப்பாள் பத்மா. ஒற்றை ஜன்னல்கள் கொண்ட அறை. எல்லா அறைகளும் காலியாக இருந்தன. உடைந்த மரஜாமான்கள், சாக்கு கள் கிடக்கும் அறை. பெண்கள் உபயோகித்து வந்த கீழ்ப்பக்க அறைகளில் பிரசவித்த பெண்ணின் உடல் வாடை எப்போதுமிருக்கும்.

அந்த வீட்டில் நிறைய பெண்கள் இருந்தார்கள் முன்பு. அறைகளில் அவர்கள் ஓடுவதும் சிரிப்பதும், கீழ்ப்பகுதியெங்கும் கேட்கும். பெரியக்கா, அவளின் பிள்ளைகள், சின்னக்கா எல்லோரும் இருந்து புழங்கிய அறைகளில் ஆள்தடம் இல்லாது போய் உத்தரத்தில் இருந்து மரத்தூசிகள் விழுகின்றன. வண்டுகள்

உத்தரங்களைத் துளைக்கின்றன. வண்டின் இடைவிடாத ரீங்காரம் கேட்டுக்கொண்டேயிருக்கிறது. எல்லாப் பெண்களும் பிரிந்துபோனார் கள் குட்டையாக, பெரிய உதடுகளோடு உள் அறையிலே சுற்றிச் சுற்றி வந்த சின்னக்காகூடப் பிரிந்துபோனாள். அவளின் பழைய தாவணிகள் வெளுத்துப் போய் இப்போதும் கொடியில் கிடக்கின்றன. சின்னக்கா இருந்த அறையெங்கும் மருதாணி உதிர்ந்து கிடக்கிறது. மருதாணி பூசிய விரல்கள் கொண்ட சின்னக்காவை ஹோட்டலில் வேலை செய்யும் சுப்பையாவுக்குக் கட்டிக் கொடுத்துப் போனார்கள். கல்யாண நாளில் அவள் விரல்களுக்கு மருதாணி வைக்கவில்லை. மேற்கு வீட்டின் தனி அறையில் பெத்தையா பெத்தையா என அய்யாவை நினைத்து அழுதாள். நாற்பது மாடுகள் நின்ற தொழுவம் வெறிச் சோடிப் போனது. கல் தரைகளில் மூத்திரக் கறை மாறவில்லை. மாடுகள் கழுத்து திருப்பி அசைபோட்டபடி அப்படியே கூளம் அள்ளாமல் கிடக்கிறது. பெத்தையாவோடு எல்லாமும் போய் விட்டது. வேலையாட்கள் வருவதில்லை. தொழுவத்தில் மிஞ்சிய வைக்கோல் பறக்கத் தொடங்குகிறது. சுழல் காற்று தினமும் வருகிறது. சிறு புள்ளியில் சுழன்று சுழன்று பெரிதாகிக் காற்றின் கைகள் வைக்கோல், சருகு, தட்டைகள் எல்லாவற்றையும் சுருட்டி வீட்டு உயரத்துக்குத் தூக்கி எறிகின்றது. காற்றின் சப்தம் நாளெல்லாம் கேட்கிறது.

மேற்கு வீட்டில் நாச்சியாரம்மாவும் அவள் மகள் பத்மாவும் மட்டுமே இருந்தார்கள். அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துப் பேசிக்கொள்வதுகூட இல்லை. நாச்சியார் கிழக்குப் பார்த்த சமையல் அறைவாசலில் தலை வைத்துப் படுத்தே கிடக்கிறாள். வீட்டில் நிழல் போல அலையும் பத்மாவைப் பார்க்கும்போது நாச்சியார் அழுவாள். மாலையில் வீட்டின் அறைகள் வெளிச்சம் கொள்ளத் தொடங்கும். அறை வாசல்களைத் திறந்து வைப்பாள் பத்மா யாரும் வருவதில்லை வீட்டுக்கு. அழிந்துபோன வீடுகளுக்கு யார் வருவார்கள். பத்மா மாலையில் தொழுவத்தில் போய் நின்று கொள்வாள். குருவிகள் வரத் தொடங்கும். எண்ணிக்கையற்ற குருவிக் கூட்டம். விரல் அளவில் சிறகு கொண்ட குருவிகள் சப்தமிடுகின்றன. தொழுவமெங்கும் சுற்றித் திரிகின்றன. புடலைப் பந்தலில் நின்று பாடுகின்றன. அவள் குருவிகள் முன் போய் நிற்பாள். அவளைச் சட்டை செய்யாது பறக்கும் குருவிகள். அச்சு ஒடிந்த கூண்டு வண்டி மேலேறி குருவிகள் ஏன் கத்துகின்றன. பூனைக் குட்டிகள் வண்டியினுள் பதுங்கி வெறிக்கின்றன. வெயில் தொழுவம் நிறைய வருகிறது. எண்பத்தி எட்டு வயதாகிய பெரிய அவ்வா நேற்று செத்துப் போனாள். நாச்சியார் ஆண்கள் போன பின்பு இருட்டும்போது துக்கம் கேட்கப் போனாள். பெரிய அவ்வா இருந்த வீட்டில்கூட ஆட்கள் இல்லை. ஆண் பிள்ளைகள் வெளியூர்கள் போய்விட்டார்கள். வீடெங்கும் சாம்பல் வாடையடிக்கிறது. நாச்சியார் போனபோது வள்ளியம்மாள் இருந்தாள். நாச்சியாரைக் கண்டதும் அவள் சப்தமிட்டு

அழுதாள். பெரிய அவ்வா, பெத்தையா இருந்தவரை மேற்கு வீட்டின் அறைகளில் தன் இஷ்டம் போலத் திரிந்தாள். நாச்சியார் ஆண்கள் வரும் சப்தம் கேட்டுத் தலை நிமிர்ந்தாள். வந்தவர்கள் நாச்சியாரிடம் எதுவும் கேட்கவில்லை. ஈரத்தலையோடு வந்தவர்கள் மேற்கு வீட்டை வெறித்துப் பார்த்தார்கள்.

நாச்சியாருக்கு நினைவிலிருந்து எதுவும் மறையவில்லை. நடமாட்டம் குறைந்துபோன இப்போதும் தெரு பழைய சாயலில்தான் இருக்கிறது. வேப்ப மரங்களுக்கு அழிவில்லை. நாலு பெண்கள் நின்று ஆட்டும் ஆட்டு உரல், வேப்பம் பூக்கள் உதிரக் கிடக்கின்றது இன்றும். காவி பூசிய வீடுகள். கல் திண்ணைகளுக்கு அழிவில்லை. யானை முகம் கொண்ட வளைவுகள். கம்பி போட்ட முகப்பு. மேற்கு வீட்டின் முன்னால் இரண்டு கல் திண்ணைகள் இருந்தன. பெரிய திண்ணைகள். எப்போதும் அதில் ஆள் கிடப்பார்கள். மாடு வாங்க வந்தவர்கள், வியாபாரிகள், தரகர்கள், வேலையாட்கள். சிலர் உறங்கு வார்கள். கல்திண்ணையில் உறக்கம் ஊற்றைப் போலப் பெருகிவரும். சுண்ணாம்பால் வரையப்பட்ட ஆடு புலி ஆட்டக் கட்டத்தில் ஆடுகள் புலியை மறைக்கும். வீட்டின் உள்ளேயிருந்து வெல்லமும் தண்ணீரும் திண்ணைக்குப் போய்க்கொண்டிருக்கும். அடைபடாத ஆடு, புலிகளின் ஆட்டம் இரவெல்லாம் நடக்கும். நாச்சியார் திண்ணையில் எட்டிக் கூப்பிடுவாள்.

‘வந்து சாப்பிட்டுப் போயி விளையாடுறது. பொம்பளைகளுக்கு வேற ஜோலிக இருக்குல்ல.’

இந்தப் பொய்க் கோபத்தைக் கேட்டுச் சிரித்தபடி ஆண்கள் உள்ளே போவார்கள். பித்தளை அண்டாக்களில் தண்ணீர் நிறைந்திருக் கும். நீண்ட பந்திகளில் உட்காருவார்கள். சாப்பாட்டைப் போட்டபடி நகரும் நாச்சியாரின் கைகள். பேச்சரவமற்ற அமைதியில் சாப்பாடு நடக்கும். தண்ணீர் குடிக்கும் சப்தம் கேட்கும் அமைதி. கடைசி ஆளாக பெத்தையா வருவார். பச்சைக்கட்டம் போட்ட சட்டையும் தலைப்பாகையோடு. ஆட்கள் எழுந்து நிற்பார்கள். பெத்தையாவின் சிரிப்பில் அவர்கள் உட்கார்ந்துகொள்வார்கள்.

பெண்கள் பின் அறைகளில் எதற்கெடுத்தாலும் சிரித்தார்கள் அப்போது. மொட்டை மாடியில் ஏறி ஊரின் புறவெளியைப் பார்த்தார்கள். காற்று ஊரைச் சுற்றும் பானைகள் நிற்கும். பிரசவத்துக்கு வரும் மகளைக் கைத்தாங்கலாகத் தெருவில் கூட்டி வருவாள் நாச்சியார். மாலையிலும் அவர்கள் கோவிலுக்குப் போவார்கள். கரையில் இருந்த கோவிலில் பேச்சியம்மன் இருந்தாள். பருத்த வயிறும், வீங்கின கால்களுமாக நடக்கும் மகள் நாச்சியாரின் தோளைப் பிடித்துப் போவாள். ஆட்கள் பலரும் பார்ப்பார்கள் அதை. மாமரங்கள் அடர்ந்த பாதை. பூவாடையடிக்கும். அசைந்து அசைந்து கோவிலுக்குப் போவார்கள். கரைமேல் நிற்கும்போது மூச்சு வாங்கும். விறகுக் கட்டைகளை இழுத்துவரும் கீழத்தெருப் பெண்கள் விலகிப் போவார்

கள். நாச்சியார் அவர்களிடமும் ஸ்நேகமாகவே நடந்தாள். வீடு திரும்பிய இரவில் மகளின் கால் நாச்சியார் மடியில் இருக்கும். விரல்களுக்குச் சொடக்கு எடுத்து, தைலம் தேய்த்துவிடுவாள்.

பிரசவித்த பெண், அறையின் ஒற்றை ஜன்னல் வழியாக வரும் வெயிலைப் பார்த்தபடியிருப்பாள். பிள்ளை வெயிலைக் கண்டு சிணுங்கி முழிக்கும். அறை எங்கும் எப்போதும் சாம்பிராணிப் புகை போட்டு வாடை நிரப்புவாள் நாச்சியார். நாச்சியாரை எதிர்த்துச் சண்டையிட்டு முதலில் பிரிந்துபோனது அவளின் பெரிய மகள்தான். பெத்தையா இறந்த வீட்டிலே அது நடந்து போனது. தெக்குக் காட்டை விற்று ஊரோடு இருந்த உறவை அறுத்துப் போனாள் பெரிய மகள்.

ஆழிகள் ஆடி வரும் காலம் வரும். ஆழிப் பொம்மைகள் ஆடி வருவார்கள். ஆண் பெண் பொம்மைகள். வைக்கோல் தலை கொண்ட பொம்மைகள். உலை மூடியால் தொப்பி அணிந்த பொம்மைகள். இருட்டில் வீட்டின் முன் வந்து ஆடும். ஆடும் ஆழிகளின் உள்ளே இருப்பவனின் கண் வீட்டின் உள்புறமெங்கும் அலையும். ஆழிகள் தெரு சுற்றி வருவார்கள். ஆழிகள் போனதும் ஓலைப் பெட்டியில் விளக்கு எடுத்து வரும் கீழத்தெருப் பெண்கள் வருவார்கள். ஓலைப் பெட்டியில் நெல் நிரப்பி விளக்கு எடுத்து வருவார்கள். கூட்டமாக விளக்கு அசைந்து வருவதை பத்மா பார்ப்பாள். வீட்டின் முன் வரும்போது எண்ணெய் ஊற்றுவார்கள் நாச்சியாரும் அவளும். ஆழியாடிகள் காலையில் பின் வாசலுக்கு வருவார்கள். மீசை மழித்த சின்னப் பையனும், வயதான ஆளும் இரண்டு ஆழிகள்.

அவர்கள் கையில் நார்ப்பெட்டியிருக்கும். வாசலுக்கு வந்து சப்தமிடுவார்கள். ‘ஆழியாடிகள் சாமியோவ்...’ பெண்கள் பின்கட்டில் நிறைந்து போவார்கள். மீசை மழித்து நின்ற பையன் அவர்களைக் கண்டு சிரிப்பான். பெண் ஆழி போல ஆடுபவன் அவன். அவன் மேல் பெண்களுக்குப் பிரியம் உண்டு. அவன் பெட்டிக்கு நிறைய தானியம் குவியும், அவனுக்கு மட்டும் பண்டங்கள், ரூவாய்கள் கிடைக்கும், ஆழியாடிகள் மேற்கு வீட்டில் தானியம் வாங்கிப் போவார்கள். அவர்கள் நடக்கும்போதுகூட அடி தப்பாமல் ஆடிப் போவது போலவே தெரியும்.

மேற்கு வீட்டுக்கு லைட் கிடையாது. பெத்தையா இருந்த வரையிலும் எண்ணெய் விளக்குகள்தான். விளக்கு மாடங்கள் இருந்தன. சின்ன அகல் விளக்குகளில் எண்ணெய் விட்டு விளக்கு வைப்பார்கள். பாதி இருளும் வெளிச்சமும் கலந்து தெரியும் மஞ்சளும் இருட்டுமாக அறை இருக்கும். அதன் ஊடே கடந்து வரும் ஆட்கள் விநோதத் தோற்றம் கொள்வார்கள். வீட்டில் கிடந்த ஏழெட்டுப் பூனைகள் வாலைச் சுருட்டி மடக்கிச் சுவரோரமாக அலையும். பெத்தையாவின் சாவுக்கு ஏராளமான கூட்டம் வந்தது. கறுப்புக் குடைகளோடு வெயிலில் வந்திறங்கும் ஜனங்கள். தெரு கொள்ளவில்லை. பெத்தை

யாவோடு வீட்டின் நிலை சரிந்து போய்விட்டது. பூனைகள்கூட வெருகுகள் ஆகிப்போய்விட்டன என நாச்சியாருக்குத் தோன்றும்.

அந்த வீட்டில் வளர்ந்த பூனைகளுக்கு உடம்பில் சாம்பல் நிற மிருக்கும். பச்சை நிறக் கண்கள். பெத்தையா போன பின்பு அறைகள் காலியாயின. பொட்டைப் பூனை நிறைய குட்டி போட்டது. பூனைகள் அறை அறையாக அலைந்தன. இரவில் சில பூனைகள் விட்டிலைப் பிடித்துத் தின்பதை நாச்சியார் பார்த்தாள். பொட்டைப் பூனை குட்டிகளைக் கவ்வி ஓரிடம் விட்டு மற்றோர் இடம் எனத் தூக்கி அலைவதைப் பார்த்த நாச்சியார் மாட சாமியிடம் சொல்லிக் குட்டிகளைத் தூக்கிப் போய்க் கிணற்றில் போடச் சொன்னாள்

அவன் பூனைக்குட்டிகளைச் சாக்குப்பையில் அள்ளிப்போனான். பூனை இரவில் தட்டளிந்தது. சப்தமிட்டது. ஆள் இல்லாத வீட்டில் பூனை சப்தமிடுவது அகோரமாக இருந்தது. பாத்திரங்களை உருட்டியது. நெடுநாள்களுக்குப் பின்பு கரைப் பக்கம் போனபோது சாம்பல் நிற வெருகுப் பூனைகள் அலைவதை நாச்சியார் கண்டாள். மேற்கு வீட்டின் பூனைக் குட்டிகள் வெருகுகளாகிப் போயின.

பெத்தையாவின் சாவுக்கு நாச்சியாரின் அய்யாவும் வந்திருந்தார். பல காலமாகப் பேச்சுவார்த்தை அற்றுப்போன அய்யாவின் முகத்தை நாச்சியார் பார்த்தாள். சுருக்கங்கள் எல்லாம் துக்கம் உறைந்து நின்றன. கண்ணின் கீழ் நீர்கட்டிப்போயிருந்தது. யார் சொல்லி விட்டார்கள் எனத் தெரியவில்லை. அவர் நாச்சியார் பக்கத்தில் வந்து நின்றார் அவள் எதுவும் பேசவில்லை. பெத்தையாவைத் தூக்கும்போது அவர் அழுதது மட்டும் நாச்சியாரால் தாங்க முடிய வில்லை. உள் அறைக்குள் போய் அய்யா... அய்யா... என அழுதாள்.

மேற்கு வீட்டுக்கு வருபவர்கள் குறைந்துபோனார்கள். சின்னக்காவும் சண்டையிட்டுப் போனாள். போலீஸ்காரனைக் கட்டிய பத்மா உருக்குலைந்து வந்தாள் நாச்சியாரின் மேற்கு வீடு பாழ்பட்டது. பத்மா புருஷனை விட்டுப் பிரிந்து வந்தாள். பதினெட்டு வயசுக்குள் முடிந்துபோன பத்மாவின் கல்யாண கதியை நினைத்து நாச்சியார் புலம்புவாள். வெயில் காலத்தில் வீட்டின் காரைகள் உதிரத் தொடங் கின. பத்மா அம்மை கண்டு படுத்தாள். உடல் எங்கும் முளைத்தது வேனல் கொப்பளங்கள். அரற்றினாள். அறைகளில் பத்மாவின் முனங்கல் கேட்டபடியிருந்தது. தாங்க முடியாத வெக்கை புகுந்தது எங்கும். மழையேயில்லை. பத்மாவின் உடம்பில் அம்மைத் தழும்புகள் மிஞ்சின. யாராவது தன்னைப் பார்க்க வர மாட்டார்களா என பத்மா நினைத்துப் புரளுவாள். வெக்கை தாங்காது உத்தரத்தில் பதுங்கிய பூரான்கள் செத்து விழுந்தன. வெயிலின் வெறிச்சி கொண்ட நாய்கள் இரவில்கூடக் குலைத்து உறக்கம் கலைத்தன.

நீண்ட நாள்கள் வராதுபோன ஆழியாடிகள் பகலில் ஒரு நாள் வந்தார்கள். ஆழியாடும் ஆள்கள், அவர்கள் குடும்பம் எல்லாமே வந்தன. ஆழியாடியின் பெண், சிறு பிள்ளையைக் கையில் வைத்து

நின்றுகொண்டிருந்தாள். நாச்சியார் பின்வாசலுக்குப் போய் பத்து ரூவாயும் சேலையும் கொடுத்து வந்தாள். ஆழியாடிகள் அந்த ஊரைப் பிரிந்துபோனார்கள். ஆழியாடிகளும் கலைந்துபோன பின்பு ஊர் மீள்வது முடியாது என நாச்சியார் நினைத்தாள். ஆழியாடிகள் அற்ற ஊரில் வெயில் உக்கிரம் கொண்டு வீசியது. சுவர்கள் பற்றி எரிந்தன. மரங்கள் உயிர்பற்றி நின்றன.

மேற்கு வீட்டின் தானிய அறை காலியானது. பொருள்கள் ஒவ் வொன்றாக விலைபோய்க்கொண்டிருந்தன. வீட்டில் இருந்த ஆள் உயரக் கண்ணாடியைத் துணி விற்கும் ராவுத்தர் வாங்கிப் போனார். அவருக்குப் பல காலமாகவே அந்தக் கண்ணாடியின் மேல் பிரிய மி'ருந்தது. பெத்தையா அதை வாங்கிவந்த நாளில் பெண்கள் தங்கள் முழு உருக் கண்டு சந்தோஷித்தார்கள். சடங்காகியிருந்த பெண் அதன் முன்னால் நின்று சடை அலங்காரம் செய்துகொள்வாள். ராவுத்தர் அதைக் கேட்டதும் நாச்சியார் மறுக்காமல் கொடுத்தாள். ராவுத்தர் அதை ஒரு துணியில் சுற்றி சைக்கிளில் கொண்டு போனார். வீடு போய்ச் சேரும்வரை ராவுத்தர் கொண்ட சந்தோஷம் அள வில்லாமல் இருந்தது.

பத்மாவின் உடலில் இருந்த தழும்புகள் மறையவில்லை. இருட்டி வெகு நேரம் ஆனபின்பும் அவள் பின் வாசலில் உட்கார்ந்து இருந்தாள். லாந்தர் விளக்கில் நடக்கும் ஆள் உருவம் பார்த்துக் காத்திருந்தாள். பெத்தையா லாந்தர் விளக்கோடுதான் வருவார். இரவில் நிலா வந்தது. எண்ணிக்கையற்ற நட்சத்திரங்கள். காற்று வந்தது. நிலாவைப் பார்த்துக் கொண்டிருந்தாள். பெத்தையாவின் ஞாபகம் முட்டியது.

பெத்தையா பத்மாவுக்கு அதிசயமான பண்டங்களாகக் கொண்டு வருவார் சில நேரம் பனம்பழம் கொண்டுவருவார். அதனை நாரை உரித்து கருப்பட்டி போட்டு பத்மா திங்கும்போது பெத்தையா மாடுகளின் ஊடே அலைவார். மாடுகள் அவரைக் கண்டு குதியாள மிடும். மழைக்காலத்தில் காளான் பறித்து வருவார். காளான்களை மடியிலிருந்து உதிர்ப்பார். அவரின் டயர் செருப்பு பதிந்த பாதையில் பெரிய சுவடுகள் இருந்தன. நாச்சியார் பகல் எல்லாம் யோசித்தபடி யிருந்தாள் மேற்கு வீடு மட்டும்தான் மிஞ்சி நின்றது அவளிடம். அதையும் கேட்டு ஆள் வந்துகொண்டிருந்தார்கள். நாச்சியார் சின்ன மகளைப் போய்ப் பார்த்து வந்தாள் ஒரு நாள். வந்த இரண்டு நாள்களுக்குள் தரகர் வீட்டைச் சுற்றிப் பார்த்துப் போனார். பத்மாவுக்குத் தெரிந்தது எல்லாமும்.

அடுத்த நாள் இருட்டும் சமயம் நாச்சியாரைத் தேடி பத்மாவின் புருஷனும், இன்னும் சிலரும் வந்தார்கள். பத்மா உள்ளிருந்து கேடடுக்கொண்டிருந்தாள். பலத்த சப்தம் கேட்டது. நாச்சியார் மகளை அனுப்ப முடியாது என்றாள். வீட்டை விற்கக் கூடாது என அவர்கள் தடுத்தார்கள். மகளை அனுப்ப ஒரு வாரக் கெடு

கொடுத்துப் போனார்கள்.

நாச்சியாருக்கு இரவில் தூக்கமேயில்லை. காற்று அறைகளை உருட்டியது. பத்மாவும் அறையில் படுத்தே கிடந்தாள். நடுச்சாமத்தில் நாச்சியார் எழுந்து பத்மா படுத்துக் கிடந்த இடத்துக்கு வந்து எழுப்பினாள். இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தபடி விடியும் வரை இருந்தார்கள். விடியும்போது வீட்டில் சாமான்கள் உருளும் சப்தம் கேட்டது. அவர்கள் போகும்போது காற்று தெருவில் தனியாக வீசியது. அதன் சப்தம் அவர்களைத் துன்புறுத்தியது. யாருமில்லை. யாருமில்லை என்பது போல காற்று சப்தமிட்டது. அவர்கள் விடியும் முன்பு போய்விட்டார்கள்.

மறுநாள் காலையில் மேற்கு வீடு பூட்டப்பட்டிருந்தது. அவர்கள் இல்லை. யாருமில்லாத போதும் வீடெங்கும் வெளிச்சம் அடித்துக் கொண்டிருந்தது. குருவிகள் படை படையாக வந்து அலைந்தன. நெடுநேரம் வரை சூரியன் மூடிய கதவுகளைப் பார்த்தபடியிருந்து மறைந்தது. மேற்கு வீட்டில் நின்று சூரியனைப் பார்க்க எவருமில்லை. ஆள் இல்லாத வீட்டில் வெருகுகள் அலைகின்றன. குருவிக்கூட்டம் எப்போதும் போல வருகின்றது. பந்தலில் நிற்கின்றது. சுழிக்காற்று வைக்கோலை அள்ளி இறைக்கின்றது. வெற்று வீட்டின் கதவை இரவெல்லாம் தட்டி ஓய்கிறது காற்று தன்னிஷ்டம் போல.

மற்றவர் வெயில்

செத்த மிருகம் ஒன்றை ஞாபகப்படுத்துவது போல வழியில் கிடந்தது அந்தப் பாறை. பாறைக்கூட்டங்கள் அதன் பின்புறத்தில் நிறைய தெரிந்தன. மஞ்சளும் சிவப்புமான அந்தப் பாறைமுகம் நசுங்கிக் கிடப்பது போலத்தான் தெரிகிறது. நெடுநாள்களாகவே அந்தப் பகுதியில் பயணம் செய்யும்போதெல்லாம் அந்தப் பாறைக் கூட்டம் நிரம்பிய மலைத் தொடரையும் நிலப்பகுதியையும் பார்த்தபடியே போயிருக்கிறான். பாறைகள் பல்வேறு உருவம் கொண்டு திரியும் அரக்க நிறப் பாறைகள்தான் அந்தப் பகுதியில் அதிகம். மலையின் உச்சியில் இடிந்துபோன குதிரை லாயம் ஒன்றும், நீண்ட தூண் வரிசைகளும் இருப்ப தாகத் தகவல் அறிந்திருந்தான். அந்த மலைத் தொட ரில் நிறைய குகைகள் இருந்தன. ஏதோ ஒரு குகை ஒன்றின் உள்ளே புணர்ச்சியின் பல்வேறு நிலைகள் கொண்ட கல் உருக்கள் செதுக்கப்பட்டிருப்பதாகப் படித்திருக்கிறான். குகையின் ஊடே நடமாடித் திரிந்த ஏதோ ஒருவனின் சிலையாக இருக்கக்கூடும். அவன் வந்து இறங்கியபோதே வெயில் ஏறத் தொடங் கியிருந்தது. வெயிலில் பாறைகளின் முகம் குரூரமும் கசப்பும் நிரம்பி வழிவதைப் போல மாறிவிடுகிறது. பாறைக் கூட்டத்தின் ஊடே காற்று அலைந்தபடி யிருந்தது. உய்லான் குருவிகள் பாறைகளைத் தட்டிக் கடக்கின்றன. பஸ்ஸில் வரும்போது கொள்ளும் பிரமாண்டமான தோற்றம் அழிந்து தரையில் படுத் திருக்கிறது மலை. புற்கள் காய்ந்து சருகாக அசைகின்றன.

அவன் பாறைக் கூட்டத்தின் ஊடே நடந்து

போய்க்கொண்டிருந்தான். முதுகைக் காட்டியபடி நிற்கும் ஒற்றைப் பாறை நோக்கி அவன் கண்கள் அசைந்து சென்றன. யார் நடமாட்டமும் இல்லை. வெட்டவெளியில் இரவிலே சூழ்ந்து நிற்கும் படைகளின் அசைவற்ற தன்மையை ஞாபகப்படுத்துகின்றன கறுப்புப் பாறைகள். எல்லாமும் அடங்கி உள்போய்க் கொண்டிருந்தது. சப்தம் திரும்பவும் தன் ஊற்றினுள் சென்று அடங்குவது போல ஏதோ ஒரு இடத்தில் கிளம்பி மற்ற இடத்தில் தேய்ந்து ஒடுங்குகிறது. அவன் தன் தலையைச் சரிசெய்துகொண்டான். அவன் படிப்பதற்காக எடுத்து வந்த புத்தகத்தைப் பாறை ஒன்றின் மேலே விரித்து வைத்தான். காற்றில் பக்கங்கள் அலையத் தொடங்கின. அதன் சப்தம் விநோதமாகக் கேட்கத் தொடங்கியது. சடசடப்பு காற்றுக்கும் தொற்றிக்கொண்டது போல சப்தம் எழுந்துகொண்டேயிருந்தது. அந்தப் பகுதியில் அதிகம் மரங்களேயில்லை என அப்போதுதான் தெரிந்தது. எட்டியவரை வெட்டவெளிதான். காய்ந்துபோன செடிகள் ஒருமித்து நிற்கின்றன. பாதைத் தடங்கள் நிறைய அழிந்து போயுள்ளன. அவன் பாறைகளின் நடுவில் நடந்து நின்று வானத்தைப் பார்த்தான். எதிர்கொள்ள முடியாத வெக்கை ஒளிச்சிதறல், வெளுத்துப்போன வானம். இந்த இடம் தன் ஞாபகங்களின் எல்லாப் புறங்களையும் துளையிடுவதாக உணர்ந்தான். பாறைகள் தன் பிராயத்தின் ஒரு பொருளைப் போல நினைவில் கசியத் தொடங்கியதாக உணர்ந்தான்.

நடக்க நடக்க வெளியின் சப்தம் ஓய்ந்துபோனது. சப்தமற்ற இடம். இதன் எழில் ஒரு புள்ளியில் அசைவு கொண்டிருப்பதாகத் தோன்றியது. திரும்பிப் பார்த்தான். வெகு தூரம் வரை பாறைகள் மட்டுமே. அதன் வெகு தூரத்துக்குப் பின்பு பயணிகள் போகும் பாதை. இரண்டாகப் பிளவுற்ற பாறையின் மீது நின்று பார்த்தான். கிராமம் ஒன்றின் தலை தெரிந்தது. மரங்களின் உயரம் குறைந்த தோற்றம். மூழ்கிய கிராமத்தின் வெளிமுகம் போலத் தெரிந்தது அந்தக் காட்சி. மலையின் பல பக்கங்களிலும் வாய் திறந்த குகைகளைப் பார்த்தான். இருட்டு பிறக்கும் குகை உட்புறங்களில் வௌவால்கள் சப்தமிடுகின்றன. குகைவாயிலை அடைத்த நாணல்கள் சலனம் கொண்டபடியே இருந்தன.

அவன் பாறையில் வைத்துவிட்டு வந்த புத்தகத்தை நினைத்தான். அதன் புரளும் சப்தம் கேட்கிறதா. காற்றில் எந்தச் சப்தமுமில்லை. பக்கங்கள் எழுந்து அடங்கும் சப்தம் காற்றில் கரைந்திருக்கக்கூடும். எலிகளைப் புல்லாங்குழல் வாசித்து இழுத்துக் கொண்டு போன பைப்பரைப் பற்றிய புத்தகம் அது. கிளம்பும் போதுதான் வாங்கினான். பழைய புத்தகக் கடையின் ஓரத்தில் கிடந்தது. புத்தக அட்டை முழுவதும் எலிக் கூட்டம். மஞ்சள் உடையணிந்த எலிகள். அவற்றைக் கூட்டிச் செல்லும் வயசாளியின் அரக்கு அங்கி. அங்கியின் விளிம்பில் ஊர்கின்றன எலிகள். பஸ்ஸில் அதை அவனால் படிக்க முடியவில்லை. ஏதாவது ஒரு பாறை ஒன்றில் படுத்தபடியே படிக்கலாம் என்றுதான் முதலில் தோன்றியது. அதுவும் சாத்தியமற்றது என இங்கே வந்தபின்பு

தான் உணர்ந்துகொண்டான். புத்தகத்தின் சப்தமற்ற அகண்ட வெளி. குட்டையாக நிற்கும் இரண்டு மரங்களைப் பார்த்தான். எதிர்த்து எதிர்த்து நின்றன இரண்டும். வாதாமரம் போலத் தெரிந்தன. அகன்ற இலைகள். நகரின் எந்தப் பக்கமிருந்து வேண்டுமானாலும் வரும்படியாகப் பாதைகள் திறந்து கிடக்கின்றன. மலை எல்லாம் பாதைகள் வழியாகவும் வந்து அடையும்படியிருந்தது.

அந்த மலைத் தொடர் வழியெங்கும் பாறைகள்தான் சிதறிக் கிடந்தன. பாறைகளின் மீதேறி நடந்தபடியே சென்றான். வெயில் கூடுவதும் மங்குவதுமாகவே இருந்தது. காற்று வலுத்து அடிப்பது போலத் தெரிந்தது. ஒரு பாறை கூட மற்றொரு பாறையின் உருவத்தை ஒத்திருக்கவில்லை. சிறு பள்ளங்கள் நிரம்பிய பாறைகளில் மினுக்கம் தெரிந்தது. இரண்டாகப் பிரிந்த பாதை வழியில் நடந்தான். அவன் குட்டி குட்டிப் பாறைகளைக் கடக்கும்போது எதிர்பார்ப்பற்றுப் பார்த்தான். வெயில் எல்லாப் பக்கமும் இறங்கிக்கொண்டிருந்தது.

உயரம் அதிகமில்லை. நல்ல திரேகமும் சதைப்பிடிப்புமான பெண். கறுப்பு. நிறைய அடர்ந்த தலைமயிர். மஞ்சள் கறுப்புப் பொட்டுப் பொட்டாகச் சேலை. அவள் எப்படி அந்த இடத்துக்கு வந்தாள் என்று தெரியவில்லை. பாறையின் மேலே காலைத் தூக்கி வைத்தபடி நின்று எதிர்ப் பாதையைப் பார்த்துக்கொண்டிருந்தாள். காற்றில் ஆடி விலகும் பாவாடையை மீறித் தெரியும் கறுப்புச் சதை. அவன் பார்த்தபடியேயிருந்தான். அரக்குப் பாறை வெடித்து முளைத்த மரத்தைப் போல இருந்தாள். அவன் நடந்து தொடும் தூரத்தில் நின்றுகொண்டிருந்தாள். காற்றின் சப்தம் உரத்தேயிருந்தது. வெயில் ஏறிவிட்டது. அவள் திரும்பி அவனைப் பார்க்கவேயில்லை. அவன் பாறையை விட்டு இறங்கி நின்றான் அவளின் முதுகு தெரிந்தது. பெரிய பாறை அவன் முன்புறத்தில் இடப்புறமாகத் தெரிகிறது. அந்தப் பக்கம் எவரும் வருவதாவும் தெரியவில்லை. தூரத்துப் பாதை வரை பார்த்தான். அரவமில்லை. அவன் அவளையே பார்த்துக்கொண்டிருந்தான். அவள் திரும்பிப் பார்த்திருக்கக் கூடும் என்பது போல அவனுக்குப் பட்டது. ஒரு கணம் அவள் தலை திரும்பி அலைந்தது. வெற்றிலைச் சிவப்பு. பாறைகளின் மேல் வெற்றிலை எச்சிலைச் துப்பிவிட்டு காலை, பாறையிலிருந்து எடுத்து அடுத்த பாறை மீதேறி நின்று கொண்டாள். அவனுக்கு நன்றாகத் தெரியும்படி அவள் முகம். காற்று மெல்ல ஓய்ந்து முனங்குகிறது சடசடப்புச் சப்தம் கேட்பது போல இருந்தது. அவன் அவளைத் தொட்டுவிடலாமா என நினைத்தான். பாறைகள் மூர்க்கம் கொண்டு பதுங்கிய மிருகம் போலாயின. ஒரு பாறையைக்கூடப் பார்க்க இயலவில்லை, அவனால்.

அவள் காற்றின் நிசப்தத்தைக் கேட்டபடியே நின்றிருந்தாள். வெற்றிலைச் சாற்றைத் திரும்பவும் துப்பினாள் பாறையில் அது வழிந்தது. அவளுக்கு இந்தப் பாறைக் கூட்டங்களைப் பார்க்க வேடிக்கையாக இருக்கின்றது. பாறை ஒன்றைத் தொட்டுப் பார்த்தாள்.

உஷ்ணமாக இருந்தது. வீட்டிலிருந்து கிளம்பும்போது சாப்பிடாமல்தான் வந்தாள். தோப்புத் தெருவில் ராசைய்யாவைப் பார்க்காமலிருந்தால் சாப்பிட்டிருக்க மாட்டாள். அவன் அவளைப் பார்த்ததும் மடக்கி விட்டான். சலூன் கண்ணாடியில் அவள் வருவதைப் பார்த்திருப்பான். அவளை மூக்கபிள்ளைச் சந்துக்குக் கூட்டி வந்தான். சாப்பாடு சாப்பிட்டு அவள் வெளியே வரும்வரை நின்றிருந்தான். அவள் தோள் மீது கையை வைத்து அழுத்திக் கேட்டான்,

"வேறு என்ன?"

"எங்க போறது இந்த மத்தியானத்திலே?"

"இப்பிடி நடந்து பாறைமடத்துக்குப் போ, வரேன்."

"வெயிலா இருக்கு."

"வேற என்ன வீட்டுக்கா கூட்டிட்டுப் போக முடியும்?"

அவள் சந்தைவிட்டு விலகி வெளியே வந்தாள்.

"அங்க வந்துருவியா?"

"கடைய சாத்திட்டு வாரேன். நடந்துக்கிட்டு இரு."

அவன் போனபின்பு கடையில் வெற்றிலை வாங்கிப் போட்டுக் கொண்டு நடந்தாள். பலரோடும் இந்தப் பாறைக் கூட்டத்துக்கு இடையில் வந்திருக்கிறாள். இரவில் வரும்போது எதுவும் தெரிவதில்லை. எல்லாமும் இருட்டில் மூழ்கித் தெரியும். குகைகளில் கேட்கும் விநோத ஒலிகள் அந்தப் பிரதேசமெங்கும் கேட்கும். அவள் யாரோ ஒரு நடுத்தர வயசுக்காரனோடு வந்து பாறை மீது இரவில் படுத்துக் கிடந்தாள். நடு இரவுக்குப் பின்பு குளிர் எழுந்து உறக்கம் கலைந்தது. தலைகீழாக உறங்கிக்கொண்டிருந்தார் அந்த ஆள். அவள் சேலை கசங்கிக் கிடந்தது. மங்கிய நிலா வெளிச்சம். பாறைகள் ஒவ்வொன்றாகத் தெரியத் தொடங்கின. அந்த நபரின் வேஷ்டி பாறையின் மீது உரிந்து கிடந்தது. அவள் எழுந்து நடந்தாள். பாதையின் மங்கிய வெளிச்சத்தில் குளிர் அடங்கியிருந்தது. எல்லோரையும் விட்டு, தான் உலகத்தின் வெளியில் வந்துவிட்டது போல இருந்தது.

பாறைகள் அசூயை கொள்ளும் பல பொருள்களாக மாறின. நசநசப்பும் விகாரமும் கொண்ட புதுத் தோற்றமானது வெளி. அவள் அந்த இடத்திலிருந்த படுத்திருந்த பாறைக்கே வந்தாள். அந்த நபர் எழுந்து உட்கார்ந்திருந்தான். அவள் எதிரில் போய் உட்கார்ந்துகொண்டாள். அவளின் கறுத்த உடல் அவனைக் கிளர்ச்சி யூட்டியிருக்க வேண்டும். தலையை அழுத்திப் படுக்க வைத்தான். அவன் தலை அவள் மேல் பாதி புதைந்தபோது நட்சத்திரம் எரிந்து சரிவதைப் பார்த்தபடியிருந்தாள். ஒவ்வொன்றாக சரிந்தபடி யிருந்தன. கறுப்பு பிளந்து வரும் நட்சத்திர ஒளியைத் தொடர்ந்து பார்க்க இயலவில்லை. விடிவதற்கு முன்பே அந்த நபர் கிளம்பிப் போய்விட்டார். பாறைகள் பகலில் தன்னியல்பு திரும்பின. சென்ற நாள்கள் எரிந்து ஞாபகத்தின் விகாசத்தில் வீழ்ந்துவிடுகின்றன.

அது என்ன புத்தகம் எனப் பார்த்தான் ராசைய்யா. வெறும் எலிகளாகப் படம் நிரம்பியிருந்தது. அரக்கு அங்கியணிந்த ஒருவனின் முதுகுத் தோற்றம். எலிகள் பின்தொடருகின்றன. புரட்டிப் பார்த்தான். எதுவும் பார்க்கும்படியாக இல்லை. யாராவது காலேஜ் பையன்கள் மறந்துவிட்டுப் போயிருக்கலாம். அல்லது யாராவது ஒருவன் பெண்ணை அழைத்துக்கொண்டு இந்தப் பாறைகளுக்கு நடுவில் மறைந்திருக்கலாம். எலிகளைப் பார்த்தான். மனித முகங்கள் கொண்ட எலிகள். மஞ்சள் சட்டை போட்டிருந்தன. எலிக் கூட்டம் போலத்தான் இந்தப் பகுதியில் சிதறிய குட்டிப் பாறைகளும். புத்தகத்தை எடுத்துக் கொண்டு வேகமாக நடந்தான். கண்ணுக்கு எட்டியவரை அவள் தெரியவில்லை. புத்தகத்தை என்ன செய்வது என யோசனையற்று வேறு ஒரு கல் மீது திறந்து கிடக்கும்படி போட்டுப் போனான். எல்லாப் பக்கங்களும் பிரிந்து காற்றில் பறந்தன. அவன் பார்க்கும்போது அவள் நடந்து போவது போலத் தெரிந்தது. அவளுக்குப் பின்னே இன்னொரு நபரும் போய்க்கொண்டிருந்தான்.

ராசைய்யா வரக் காணோம். என்ன செய்யலாம் என நினைத்தாள் அவள். திரும்பியபோது பின்னாடி நிற்கும் ஆளைப் பார்த்தாள். அவளையே பார்த்துக்கொண்டிருந்தான் அவன். வெளியூர்க்காரனாகத் தான் இருப்பான். வெற்றிலையை அவன் பக்கம் பார்த்துத் திரும்பித் துப்பிவிட்டு திரும்பிக்கொண்டாள். அவளையே வெறித்துக் கொண்டி ருந்தான். அவனைப் பார்த்துச் சிரிக்கலாமா என யோசித்தபடியே பாதையைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

அவள் திரும்பியது தன்னைப் பார்க்கத்தான் என அவனுக்குப் பட்டது. வீழ்த்திவிடலாமா என்றபடி நடந்தான். உடம்பின் எல்லா சிறு புள்ளிகளிலும் வெறி பற்றிக்கொண்டது போலாகியது. ஏதாவது ஒரு ஆயுதத்தால் அவளைத் தாக்கி விழச் செய்யலாமா எனத் திரும்பினான். திரும்பவும் அவள் அவன் பக்கம் திரும்பிப் பார்த்து விட்டுக் கடந்தாள். நிதானமாக நடந்து சென்றாள். குகை வாயில்கள் திறந்து கிடந்தன. பாய்ந்து அவளைத் தூக்கிக் குகைக்குக் கொண்டு சென்றால் அவள் எழுப்பும் சப்தம் எழுந்து இங்கேயே அடங்கிவிடும், பாறை இடைவெளியில் இருந்த வெற்றிடம் அகன்று தெரிந்தது. அவள் நடக்கவில்லை. அவன் ஏதாவது கேட்கலாமா என்பதுபோலப் பார்த்தான்.

தூரத்தில் நிற்கும் இருவரின் உருவத்தையும் ராசைய்யா பார்த்தான். அவனுக்குக் கோபம் வந்தது. எப்படி அவளைப் பிடித்தான் எனத் தெரியவில்லை. அவள் மட்டும் அவனோடு மறைந்துவிட்டால், இதைப் பற்றி நினைக்கவே முடியவில்லை. பாறையைத் தூக்கி அவன்மேல் எறிந்துவிடலாம் என்ற அளவு ஆத்திரம் வந்தது. வேக வேகமாக நடந்தான். கல் தட்டி விரலில் நகம் பிய்ந்தது. புத்தகச் சலசலப்பு கேட்டபடியேயிருந்தது.

அவள் திரும்பிப் பார்த்தபோது பின்னால் வருபவனைத் தவிர

வேறு எவரையும் காணவில்லை. பின்தொடர்ந்து வரும் இந்த விளையாட்டு ஸ்கூலில் துரத்தி மறைந்த நிழல் விளையாட்டைப் போலவே மாறியது. அவன் மிக வேகமாக வந்ததும் அவளும் வேகமானாள். பாறைகள் பயணத்தில் கடந்து போகும் மரங்களைப் போலப் பின்னோக்கிப் போய்க்கொண்டேயிருந்தன. சட்டெனப் பாறைகள் முடிவுற்று மலையாகியது. அவள் வெறித்துப் போய் நின்றாள்.

ராசைய்யா உரக்க சப்தமிட்டான். எட்டுமா எனப் பார்த்தான். குரல் மலையில் சென்று மோதிச் சிதறியது. அவள் பெயரைத் திரும்பவும் கத்தினான். ஏதோ ஒரு சப்தம் கேட்பது போல அவளுக்குப் பட்டது. பின்னாடி வருபவன் கண்கள் வெறியில் மினுங்கின. அவன் சில அடிகளுக்குப் பின்னேதான் இருந்தான். நன்றாக அவன் முகத்தைப் பார்த்தான். புள்ளி புள்ளியாகத் தோலில் குத்து விழுந்த முகம். கட்டையான புருவ மயிர்கள். அவள் பார்ப்பதையே பார்த்துக் கொண்டிருந்தான். யாரோ அவள் பெயரைச் சொல்லிக் கூப்பிடுவது அவனுக்கும் கேட்டது. யாராவது அவளோடு வந்தவர்களாக இருக்கலாம். அவர்கள் வந்துவிட்டால் என்னவாகும் என நினைத்தான். அந்தப் பெண் மலையடிவாரத்துக்கே வந்தவிட்டாள். புற்கள் அழிந்த நிலப்பரப்பு. அவன் வேட்டையில் பின்தங்கிய மிருகத்தைப் போலப் பார்த்துக்கொண்டிருந்தான். பாதையை விட்டு விலகிப் பாறை பாறையாகத் தாவிக் கடந்தாள். ராசைய்யா வருவது அவளுக்குத் தெரிந்தது. அவன் நின்றுகொண்டே இருந்தான். ஏதாவது ஒரு ஆயுதத்தால் உடலைக் கிழிக்க வேண்டும் என்பது போல ஆகியது. சுற்றும் முற்றும் பார்த்தான். அவள் போய்க் கொண்டேயிருந்தாள்.

ராசைய்யா அவள் தன்னை நோக்கி வருவதைப் பார்த்தான். பின்னாடி வந்தவனைக் காணவில்லை. அவனும் பாறை பாறையாகத் தாவிக் கடந்து போனான். ராசைய்யாவின் பக்கம் வந்து நின்று சிரித்தாள். ராசைய்யா அவளிடம் கேட்டான்,

“அந்த ஆளு யாரு....

“யாருக்குத் தெரியும். நானா கூட்டிட்டு வந்தேன்?”

இருவரும் இறங்கி நடந்தார்கள். பின்னாடி வந்தவனைக் காண வில்லை. அவள் ராசைய்யாவின் தோள் மீது கையைப் போட்டுக் கொண்டு நடந்தாள் குத்துச்செடிகள் காற்றில் அலைந்து கொண்டிருந்தன.

எங்கே போனாள் அவள் என அவனுக்குத் தெரியவில்லை. எந்தப் பக்கம் மறைந்திருக்கக்கூடும். யாரோ ஒருவனின் குரல் கேட்டதே அவன் பின் சென்றுவிட்டாளா வேகமாகப் பெரிய பாறை மேலேறி நின்று பார்த்தான். நகரம் பல வளைவாகவும் நெறிந்தும் கிடப்பது தெரிந்தது. தப்பிய மாடுகளைப் போல சில மேய்ந்துகொண்டிருந்தன. அந்தப் பெண்ணைக் காணவில்லை. எங்கும் பாறை உருக்களே தெரிந்தன.

உருண்ட கல்லாகப் பார்த்து ஒன்றை எடுத்து எறிந்தான். காற்றைக் கிழித்து விழுந்தது. ராசைய்யா புல்லை விலக்கி உள்ளே நுழைந்தான். அதைக் குகையின் உள்வாசல் என்பார்கள். கல்குளம் இருந்த இடம். படிகள் தூர்ந்துபோயிருந்தன. கல் அழியும் காலம். குளம் மூடி ஆழம் மறைந்துபோயிருந்தது. படுக்கைகள் போலக் கல்லாலாகிய திண்டுகள் இருந்தன. சாமியார் உடல் படர்ந்த கல்படுக்கைகள் செதில் செதிலாகப் பெயர்ந்திருந்தன. அவள் அதன்மேல் படுத்துக் கொண்டாள். ராசைய்யா குகைச் சுவரைப் பார்த்தான். பச்சை உதிரும் சுவர்கள். அவள் உடைகளைக் களைந்துகொண்டிருந்தாள். வௌவாலின் சிறகடிப்பு ஏதோ ஒரு மூலையில் கேட்டு மங்குகிறது. வெளிச்சம் படராத தரைகள். ராசைய்யா குகையெங்கும் உடல் வாடை நிறைவதை உணர்ந்தான்.

எந்தப் பாறையின் பின்னால் ஒளிந்திருப்பாள் என்ற வேட்கை அதிகமானது அவனுக்கு. பாறைகளைத் தாவித் தாவி எட்டிப் பார்த்தான். அவள் ஒளிந்துகொண்டிருக்கிறாள் என்ற உண்மை கசப்பாக அடைத்தது அவனை. பிறழ்வு கொண்டவன் போலக் குதித்துத் தேடினான். காற்றைத் தவிர எதுவுமில்லை. குரூரமும் வெறியும் கொண்ட உடல் விறைத்தது. பாறைகள் வெறிக்கின்றன எனத் தெரிந்தது. மங்கிய வெயில். பாறைகள் எல்லாம் மாறிவிட்டன. அவன் இடைவெளி இடைவெளியாக நடந்தான். புணர்ச்சியின் ரூபநிலை கொண்ட சிலைகள் அடங்கிய குகையின் வழி எந்தப் பக்கம் எனத் தெரியவில்லை. இரண்டு மரங்களும் கூட இப்போது தன்னைப் பார்க்கின்றன என அவன் உணர்ந்தான். மேல் குகை வாசல் வழியாக உள்ளே நுழைந்தான். சருகுகள் நிறைந்த குகைப் பாதையின் அகலம் குறைந்துகொண்டே உள் போனது.

குகையின் உட்புறத்தில் சுவாசத்தின் சப்தம். வரிசை வரிசையாகக் கல் படுக்கைகள் உட்புறத்திலும் அகன்ற கல் கூட்டம். அதன் பின்னாடி ஏறிப் பார்த்தான். குனிந்து உட்கார்ந்திருக்கும் சிறுவனின் முகம் தெரிந்தது. எட்டி உள்ளே பார்த்தான். ஆடைகளற்ற சிறுவன். சிவப்பு உடல். அவன் முகம் மங்கியிருந்தது. நன்றாகப் பார்த்தான். அந்தச் சிறுவன் முகம் அவனுடையதாகியது. அவன்தான் சிறு வயதில் இருந்த சரியும் மயிர்களோடான முகம். வியர்க்கத் தொடங்கியது. அந்தச் சிறுவனின் அசைக்காத கண்கள் அவனையே பார்க்கின்றன. குகைக்குள் திரும்பிக் குதித்தான். அந்தப் பெண் கல் படுக்கையில் கால்கள் விரியப் படுத்திருந்தாள். வேகத்தோடு அவள் மேல் பாய்ந்தான். உதட்டை வெட்டியது கல். எந்த உருவமுமற்ற பாறைப்படுக்கை. விழுந்ததில் அதிர்வடைந்தது குகை. கல் தேய விழுந்து கிடந்தான்.

காற்று புத்தகத்தின் பக்கத்தை அறுத்தது. அறுபட்ட பக்கங்களின் ஊடே சென்று ஒடுங்கியது புத்தகச் சப்தம். வெற்று வெளியில் புத்தகத்தின் அறுபட்ட பக்கங்கள் சப்தமிட்டுக்கொண்டிருந்ததைக் கேட்க எவருமில்லை நெடுநேரம் வரை.

கறுப்பு இசைத்தட்டுகள்

அந்த மனிதன் தனக்குக் கடல் வியாதி கண்டிருப்ப தாகவும் கடலிலிருந்து இந்த ஊர் மிகத் தொலைவில் இருக்கிறதென்றும், தான் வந்த வழி முழுவதும் பாழ்பட்ட நிலங்களும் வெடிப்புகளுமாக இருக்கிறது – அதில் வெயில் அலைகிறதைத் தான் கண்டதாகவும் கூறினான். அப்போது சாமியடியானுக்கு ஏழு வயது நடந்துகொண்டிருந்தது. அந்த மனிதன் வருவதற்கு முந்தைய காலத்தில் அவர்கள் ஊரிலிருந்து தெற்கே போக மிகவும் பயப்பட்டார்கள். போய்க்கொண்டே இருக்கும் கரிசல் வெளி முடிந்ததும் கடல் இருக்கிற தென்றே அறிந்து வந்திருந்தார்கள். கடல் பற்றி அந்த ஊரிலே நெடும் தூரம் பயணம் போய் வந்த மூன்று பேர் மட்டுமே அறிந்திருந்தார்கள். அதுவும் அவர்கள் தங்கள் பயணத்தில் திசை தப்பிப் போயே கடலை அடைந்தார்கள். கடலைச் சந்தித்த காலத்தில் எங்கும் மழை பெய்துகொண்டேயிருந்தது. கடல் சீற்றம் கண்டு பாறைகளை உடைத்தது. மணல் பிராந்தியம் விரிந்து கிடந்தது. எங்கும் மழை. நசநசப்பு கொண்ட கரும்பாறைகள். கடல் நிறம் கருநீலத்தில் இருந்தது. சுழன்று சுழன்று நுரையாகத் தள்ளிய கடல், அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கும்போதே உயர்ந்து ஆள் உயரமாக எழும்பி அடங்கியது. கடற்கரையில் ஓடினார்கள். எல்லாப் பக்கத்திலும் கடல். தப்ப முடியாத கடல் வழியின் பயத்தில் மீண்டும் திசை தப்பினார்கள். அவர்கள் கடக்கும் போது மஞ்சள் நிறக் கடற்பறவைகளைப் பார்த்தார் கள். ஊர் திரும்பிய பின் மூவரும் கடல் வியாதி கண்டு இறந்துபோனார்கள். அவர்கள் உடம்பு முழுவ தும் உப்பரித்துப்போயிருப்பதைப் பலரும் கண்டார்

கள். கடல் வியாதியின் பயம் ஒவ்வொருவருக்கும் விவரிக்க முடியாத பீதியோடு அடைந்து கிடந்தது.

கடல் வியாதி கண்டு வந்திருந்தவன் குள்ளமாக இருந்தான். பெரிய நெற்றி, பருத்த உதடுகள், நெற்றியில் இரண்டு தழும்புகள். கையில் ஒரு இரும்பு வளையம் போல ஒன்றை அணிந்திருந்தான் கண்கள் பழுத்துப் போய் சிவப்பு ஓடியிருந்தன. அவன் தொடர்ச்சியாகப் பேச முடியாமல் சங்கடப்பட்டான். பகல் முழுவதும் உறங்கினான். மாலையில் விழித்துக்கொண்டவுடன் அந்த ஊரின் தெருக்களில் சுற்றுவான். சுற்றிலும் பொட்டல் நிலம் கொண்ட ஊர். நாலைந்து தெருக்களே இருந்தன. சாணம் மெழுகிய சுவர் கொண்ட வீடுகள். இடிந்த மண் சுவர்களின் உள்ளே பறவையின் அமுங்கிய குரல் கேட்கும். இரவில் பலத்த குரலில் வாந்தி எடுக்கத் தொடங்குவான். அவன் குரல் கேட்டுப் பயந்து சுவர்களில் ஊரும் பூச்சிகள் அசையாமல் நின்றன. இரண்டு விரல்களை வாயில் வைத்து வாந்தி எடுப்பான். நீலநிறத் திரவமாக வெளிவரும். தலையைக் கவிழ்த்துக்கொண்டு உட்காருவான்.

எண்ணெய் விளக்குகள் அணைக்கப்படும்போது எழும் வாடை அவனுக்குப் பிடித்திருந்தது. நாளுக்கு நாள் மெலிந்துகொண்டே போனான். அவன் தங்குவதற்காக ஊரின் கடைசியாக இருந்த வீட்டைக் கொடுத்தார்கள். அந்த வீட்டில் இருந்தவன் பெயர் தெரியாத காட்டுக் காயை, அது மஞ்சள் பழம் என நினைத்துக் காட்டிலே தின்று இறந்துபோயிருந்தான். யாரும் பார்க்காமல் கிடந்த அவன் சவம் பறவைகள் சுற்றிச் சுழல இரண்டு நாள் கிடந்தது. அந்த வீட்டின் பின்புறத்தைக் கடல் வியாதி கண்டவன் இடித்துப் போட்டான். வீடெங்கும் வெளிச்சம் வந்தது.

உறங்காத பகல் வேளையில் அவன் மூங்கில் குச்சிகளைத் தரையில் நட்டு அதன் நிழல் அலையும் தூரத்தைக் கணக்கிட்டுக் கொண்டிருப்பான். அவன் வீட்டில் இருந்து மோர்சிங் இசை போல ஒன்றுகூட அடிக்கடி கேட்கும். அவன் திடீரெனக் கிளம்பி பகலில் எங்காவது வெளியே போய் வருவான். வரும்போது பல விதமான மணல்களை அள்ளிக்கொண்டு வருவான்.

அவன் பகலில் தெருவில் சுற்றுவது எந்தப் பெண்ணுக்கும் பிடிக்கவில்லை. பெண்கள் அவனைப் பார்ப்பதைத் தவிர்த்து வந்தார்கள். ஊரில் ஆண்களைவிட அதிகம் பெண்களே இருந்தார்கள். அவன் தெருவில் போகும்போது நாய்கள் இச்சை கொண்டு ஒன்றை ஒன்று விரட்டிப்போவதைப் பல முறை பார்த்தான். அந்த ஊரிலிருந்த பெண்கள் உயரமாகவும் கறுத்த ஸ்தனங்களோடும் இருந்தார்கள். வீட்டுக்கு விலக்கு கண்டு தனித்திருந்த ஒரு பெண்ணை அவன் பார்த்தான். அவள் சிறிய குச்சின் உள்ளே சுருண்டு கிடந்தாள்.

ஒரு நாளின் மதியத்தில் நிலையற்றுப்போனவன் போல நிர்வாணம் கொண்டு அங்கு போனான். அவள் இதுபோன்று பிறந்த நிலையில்

எதிர்ப்பட்ட ஆணைக் கண்டதில்லை. அவள் கத்தினாள். அதன்முன் அவளை அடைந்து உறவுகொண்டு போனான்.

இரண்டு நாள்களுக்குப் பின் அவளுக்கும் கடல் வியாதி வந்தது. அவளும் அவனைப் போலவே வாந்தியெடுத்தாள். அவள் சப்தம் கூட மாறிப்போனது. அவனைப் பிடித்து ஊரில் கட்டி வைத்தார்கள். அவன் தனது செயலுக்குப் பதிலீடாகத் தண்ணீர் கண்டுபிடித்துத் தருவதாகச் சொல்லி அவர்களை உடன் கூட்டிப் போனான். பல மணல் தரைகளைக் கடந்தார்கள். அவன் சாமியடியான் கையில் மூங்கில் குச்சி போல ஒன்றைக் கொடுத்து உடன் கூட்டிப்போனான். ஒரு தரையில் குச்சி ஆடியது. அந்த இடத்தில் தோண்டியபோது ஏழு நீர் ஊற்றுகள் ஒருசேர வந்தன. சாமியடியானுக்கு அவன் தண்ணீர் கண்டுபிடிக்கும் விதத்தைச் சொல்லித் தந்தான்.

சாமியடியான் பகல் ஒன்றில் அவன் வீட்டுக்குப் போனபோது அவன் இசை வாசித்துக்கொண்டிருந்தான். எதிரில் சிறு செடியிருந்தது. அது அவன் இசையைக் கேட்பது போல சாய்வு கொண்டிருந்தது. வாசித்து முடிந்ததும் அந்தச் செடியை மூடி, இருட்டில் வைத்தான். சிறிய மரக்குழலில் போய் வாயால் மூன்று முறை ஊதி வந்தான். உள்ளே இரையும் சப்தம் கேட்டது.

கடல் வியாதி கண்ட பெண் சில நாள்களில் காணாமல் போனாள். அதன் பின்பு கடல் வியாதி கண்டவன் இறந்துபோனான். அவன் இறப்பதற்கு முன் சிறு செடியையும் மூங்கில் குழலையும் சாமியடியா னுக்கே கொடுத்தான். இறப்பின் இரவில் அவன் கண்கள் வெளிவர வாந்தியெடுத்தான். அவனை ஊர் தள்ளிக் கொண்டு போய்ப் புதைத்து வந்தார்கள்.

இசை கேட்கும் செடியைக் கடல் வியாதி கண்டவன் ஒரு தோட்டத்திலிருந்து திருடி வந்திருந்தான். அங்கிருந்தவனுக்குத்தான் இசை கேட்கும் செடிகளை உருவாக்கத் தெரிந்திருந்தது. சாமியடியான் இசைத்தபோது செடி கவனம் கொள்ளவில்லை. அந்தச் செடியை மூடி வைத்து, மரக்குழலைப் பார்த்தான். மரக்குழலில் இரண்டு கறுப்புப் பூச்சிகள் இருந்தன. அதன் சிறகுகளில் வெள்ளைக் கண்கள் அமைந்திருந்தன. அந்தப் பூச்சிகளை சதுப்பு நிலத்தில் பிடித்துக் கொண்டு வந்திருந்தான். அதன் சிறகுகள் மெதுவாகவும் தொட்டவுடன் விரலில் நிறம் ஒட்டிக்கொள்வதாகவும் இருந்தன. இந்தப் பூச்சியினம் கொஞ்ச நாளில் பல்கிப் பெருகிவிடும் என அவன் ஏற்கெனவே சொல்லியிருந்தான்.

சாமியடியான் அவற்றைப் பறக்கவிட்டான். வீட்டின் பின்புறம் வழியாக அவை பறந்து வானில் புள்ளியாக மறைந்தன. சாமியடியான் அதன் பின் வந்த காலத்தில் ஆடு மேய்த்துக் கொண்டு அலைந்தான். காட்டுவெளியில் எங்காவது கறுப்புப் பூச்சி தென்படுகிறதா எனப் பார்த்து வந்தான். ஒரு நாளில் கடற்பறவை பறக்க முடியாமல் ஊரின் நடுவே விழுந்தது. அதைக் கூண்டில் அடைத்துச் சில

நாள் வளர்த்து வந்தான். அந்தப் பறவை தினமும் காலையில் எங்கோ பறந்து போய் மீனோடு திரும்பி வந்தது. சிவப்பு நிற அலகு கொண்ட பறவை அது. ஏழு நீரூற்றுகள் இருந்த இடம் குளம் போலானது. ஆட்கள் அதில் குளித்தார்கள். ஆடுகள் முகம் பார்த்தபடி தண்ணீர் குடித்தன. ஆட்டுதாடி தண்ணீரில் ஆடியது. சாமியடியானிடம் இருந்த செடி நாள்பட சுருங்கிக்கொண்டே போய் விரல் அளவில் ஆனது. அதை வீட்டின் மாடத்திலே வைத்திருந் தான். அந்தச் செடியின் இலைகள் சிறு நுண்துளை கொண்ட கண்களோடிருந்தன. அதில் இருந்த இலைகள் உதிரவேயில்லை. சாமியடியானுக்கு முப்பது வயதானபோது வீட்டின் பின்புறம் பல்வேறு நிறங்களும் வாசனைகளும் கொண்ட பூச்சிகள் வருவதைக் கண்டான்.

கணக்கில்லாத பூச்சிகள். எங்கும் நிறங்களின் மிதப்பு. ஊதா, சிவப்பு, மஞ்சள் நிறக் கண்கள் கொண்ட இறக்கைகள். நீண்டு சுருண்ட மயிர் போன்ற கொம்புகளை விரிப்பதும் மடிப்பதுமாக அலையும் பூச்சிகள். ஊரெங்கும் அதுபோல பூச்சிகள் வந்திருந்தன. எங்கிருந்து வந்தன எனத் தெரியவில்லை. பெண்கள் அந்தப் பூச்சிகளின் நிறத்தில் ஆசை கொண்டார்கள். நீலநிறப் பூச்சிகள்தான் அதிகம் இருந்தன. சாமியடியானின் மாடத்தில் இருந்த செடி பூச்சிகளின் சப்தம் கேட்டுத் திரும்பியது. பூச்சிகள் அதைச் சுற்றிச் சுற்றி இசைத்தன. மாடம் இடிபட்டது. சாமியடியானின் பெரிய மகள் செடியை எடுத்து வீட்டின் முன்புறமிருந்த காலி இடத்தில் வைத்தாள். பூச்சிகள் மொத்தமும் அதைச் சுற்றின. செடி விடுவிடுவென வளர்ந்த பெரிதா னது. பன்னீர்ப் பூ போல வெள்ளைப் பூக்கள் பூக்கத் தொடங்கின. அந்தப் பூக்களில் இருந்து வரும் சுகந்தம் ஊரெங்கும் பரவியது. உதிராத பூக்கள். எவரும் பறிக்கவும் வரவில்லை அவற்றை.

சாமியடியானின் மூன்று பெண்களும் பூச்சிகளின் மேல் பிரியம் கொண்டார்கள். அந்தப் பூச்சிகள் விரல் தொடும் தூரத்தில் அலைந்தன. பூச்சியின் மேல் இருந்த பொடி போன்ற நிறத்தினைத் தொட்டு நெற்றியில் வைத்துக்கொண்டார்கள். அந்தப் பூக்களின் ஊடே இரண்டு கறுப்புப் பூச்சிகளையும் சாமியடியான் கண்டான்.

நாளெல்லாம் இசைச் செடியின் பக்கமே பூச்சிகள் அலைந்தன. குழந்தைகள் பூச்சிகளை விரட்டியபடி அலைந்தார்கள். அந்தப் பூச்சிக்கு வண்ணத்துப்பூச்சி எனப் பெயர் வைத்தார்கள் அது பெயர் பற்றிய கவலையின்றி சுவர்களில் கூட ஒட்டிக்கொண்டது. சாமியடியான் வீட்டின் மூத்த பெண்ணான தன் மகளை அழைத்து அவளிடம் மட்டும் கடல் வியாதி கண்டு வந்தவன் பற்றிய கதைகளைச் சொன்னான். நாக்கு போன்ற இசைக் கருவியை அவளிடம் கொடுத் தான்.

அவள் அதன் பிந்தைய நாள்களில் கடல் பற்றி நிறைய கனவு கண்டாள். கனவில் கடல் நீலநிறத்தோடும் எங்கும் வண்ணத்துப்

பூச்சிகள் நிறைந்தும் காணப்பட்டது. ஆள் அரவமற்ற கடற்கரையில் அவள் ஆடையின்றிக் கிடப்பது போலவும் எங்கும் வண்ணத்துப் பூச்சிகள் பறப்பதாகவும் கனவு கண்டாள். இதே கனவு பல நாளும் வந்தது. அந்தக் கனவில் அவள் உடல் முழுவதும் பல நிறங்கள் வந்து சேர்ந்தன. உடம்பிலிருந்து வண்ணத்துப் பூச்சிகள் வெளிப்படத் தொடங்கின. அவள் பயந்து கத்தினாள். வண்ணத்துப் பூச்சிகள் கனவைத் தின்றுவிடுகின்றன என அவளுடைய பாட்டி சொன்னாள்.

பாட்டியோடு சாமியடியானின் பெண் பேசிக்கொண்டிருந்த போது கனவில் தோன்றும் நிறங்களைத்தான் வண்ணத்துப்பூச்சிகள் தின்று வாழ்கின்றன என்றும் கடல் வியாதி கண்டவன் வண்ணத்துப் பூச்சியினைத் தின்றுதான் உயிர் வாழ்ந்தான் என்றும் சொல்லி, மதியம் சுவரில் ஒட்டிய வண்ணத்துப் பூச்சியினைப் பிடித்து அதன் சிறகுகளை எடுத்துவிட்டு சிவப்பு வரி வரியான அதன் வயிற்றைப் பிதுக்கி உள்ளிருந்த சிறு குழல் போன்ற ஒன்றை எடுத்துச் சுவைக்கத் தந்தாள். அது இனித்தது.

அன்றிலிருந்து சாமியடியானின் மூத்த பெண் பூச்சிகளைப் பிடித்து இனிப்பு திங்கத் தொடங்கினாள். சிறகுகளை நெற்றியில் ஒட்டிக் கொண்டாள். உடலெங்கும் சிவப்பு நிற மினுமினுப்பு வந்தது. பலரும் ஊரில் வண்ணத்துப் பூச்சியின் கனவால் தொல்லையுற்றார்கள். வண்ணத்துப் பூச்சிகள் அதிக இச்சையைத் தூண்டுவதை சாமியடி யானே உணர்ந்தான். இருந்தும் அழிக்க முடியாத பூச்சியினம் பல்கிப் பெருகி எங்கும் நிறைந்தது.

தன் பெரிய மகள் வண்ணத்துப் பூச்சி உண்பதை அறிந்த அவன், உடனடியாக அவளுக்குக் கல்யாணம் செய்து வைத்தான். அதன் பின்பு பூச்சியின் நிறத்தில் அவள் லயிப்பு கொள்ளவில்லை.

விடியப்போகும் சமயம், வீட்டின் சுவர் ஒன்றில் ஆயிரக்கணக்கான கறுப்புப் பூச்சிகள் இடைவெளியின்றி ஒட்டிக்கொண்டு அப்பியிருந் ததைக் கண்டு சாமியடியான் இறந்து போனான். அவனைக் குளக்கரை யின் புறத்தே புதைத்தார்கள்.

தன் வாழ்நாளில் சாமியடியான் ஏழு இடங்களில் நீரூற்றைக் கண்டுபிடித்தான். அவன் இறந்த பின்பு அவனின் இரண்டு மகள்களை யும் முதல் பெண்ணின் கணவனே கட்டிக்கொண்டான். பதினாறு பிள்ளைகள் பிறந்தன. அவர்களுக்கு மூத்த பெண் காலத்திலே வண்ணத்துப் பூச்சிகள், தட்டான்கள், நீர்த் தட்டான்கள் நிறைய வரத் தொடங்கின. நீர்த் தட்டான்கள் தண்ணீரில் அலைந்தன. கண்ணாடி போன்ற அதன் சிறகுகள் தண்ணீர் போலவே தெரிந்தன. தட்டானின் நீண்ட வால் ஆடிக்கொண்டே இருந்தது.

குழந்தைகளற்ற மூத்த பெண் கடல் வியாதி கண்டவன் பற்றித் தன் கணவனிடம் ஒரு நாளில் சொன்னபோது அவனால் நம்ப முடியவில்லை.

உறுதி செய்யும் பொருட்டு புதைக்கப்பட்டிருந்த கடல் வியாதி

கண்டவனின் புதைகுழியைத் தோண்டி உள்ளே பார்த்தான். எலும்புகள்கூட இல்லை. இரும்புத் தகடு போன்ற ஒன்று மட்டுமிருந்தது. அதில் குறிகள் போன்ற எழுத்துகள் இருந்தன. அவன் வீட்டில் கடல் பற்றியே யோசித்துக்கொண்டிருந்தான். கடல் மிகத் தொலைவில் இல்லை என்பதை நிரூபிக்கத் தன் நாயுடன் பயணம் புறப்பட்டான்.

சாமியடியானின் மூத்த பெண் அழுதாள். உப்புப் படிந்த பிணம் அவளுக்கு ஞாபகம் வந்தது. நாயும் அவனும் நடந்தபடியிருந்தார்கள். நாய் சில தரையில் மோப்பம் கண்டு எதையாவது எடுத்து வந்தது. காட்டுக் கொடிகளில் பழங்கள் பழுத்துக் கிடந்தன. சிறு சிறு செடிகள்கூட இல்லாத வெற்று வெளிகளைக் கடந்து வந்தான். எதிர்ப்பட்ட கிராமங்களில் இருந்த ஆள்கள் அவனை விரோதமாகப் பார்த்தார்கள். பலருக்கும் கடல் இருக்கும் திசையே அறியவில்லை. பல நாள்களுக்குப் பின் ஆள் கூட்டம் போகும் பாதையைக் கண்டான். வண்டிகள் போய்க்கொண்டிருந்தன. நாய் வண்டியின் அடி நிழலிலே ஓடி வந்தது. புளிய மரங்கள் அடர்ந்த ரோட்டில் போனது வண்டி.

பல நிலக் காட்சிகளைப் பார்த்தான். பைத்தியக்காரர்கள் சங்கிலியிடப்பட்டுக் கம்பங்களில் கட்டிப்போடப்பட்ட இடம்கூடக் கடந்தான். நாக்கில் காற்று பட்டபோது வேறு சுவை வந்தவுடன் அவர்கள் சொன்னார்கள்,

“அதுதான் கடலில் திசை.”

விடியும்போது கடலை அடைந்தான். பறவைகள் மிதந்துகொண்டிருந்தன. சூரியன் பிறந்து வரும் கடல். எங்கும் ஒரே நிறமாக இருந்தது. அதைக் கண்டு அழுதான். எவ்வளவு பெரிய கடல் எவ்வளவு தண்ணீர். ஓடிக் கடலில் விழுந்தான். கடல் உப்பு தாங்க முடியவில்லை. நாய் ஓடியது. காலடியில் இருக்கும் மணல் கரைந்து போவது கண்டு நாய் மிரண்டு ஓடியது.

கடும் வெக்கையான பிரதேசம். கடல் நீங்கி வந்த வழியில் மீன் செத்துக் கிடந்தது. பெரிய கப்பல் நிற்கும் இடத்தைப் பார்த்தான். அதிசயப் பொருள்கள் நிறைந்த சந்தையில் முகம் பார்க்கும் கண்ணாடி வாங்கினான். அதன் அதிசயம் தாங்க முடியாததாக இருந்தது. ஊர் வரை எவரிடமும் பேசவில்லை. காட்டும் எந்தப் பொருளும் தெரியும் கண்ணாடியோடு ஊர் வந்தான். அவன் மனைவி, சாமியடியானின் மூத்த மகள் இந்த அதிசயம் தாங்காது மூச்சு அடங்கி மயங்கி விழுந்தார்கள். பலரும் கேள்விப்பட்ட கண்ணாடியை அவன் வாங்கிவந்தான். சாமியடியானின் மூத்த மகள் கண்ணாடி பார்த்தவாறுதான் இறந்துபோனாள். அந்தக் கண்ணாடி வட்ட வடிவில் இருந்தது. இசைச்செடி மரமாகியிருந்தது. கடல் பார்த்து வந்த அவன் தினமும் இருமத் தொடங்கினான். அவனுக்கும் கடல் வியாதி வந்தது. அவன் இறந்த நாளில் வண்ணத்துப் பூச்சிகள் மரத்திலிருந்து உதிர்ந்தன.

சாமியடியானின் இரண்டு பெண்களும் வேறு ஒருவனைக் கல்யாணம் செய்தார்கள். குழந்தைகள் வளர்ந்து பெருகின. ஊரில் புதுத் தெருக்கள் முளைத்தன. புதிய ஆட்கள் நடந்து வந்து ஊரில் இடம் தேடிக்கொண்டார்கள். ஆச்சிகளிடம் எவருக்கும் லயிப்பு அற்றுப்போனது. சாமியடியானின் இரண்டாவது பெண் தனது மகனின் கல்யாணத்துக்காக அந்த ஊர் விட்டு வெகுதூரம் போய் வந்தாள். அவள் திரும்பும்போது ஒரு மோட்டார் காரைச் சந்தித்ததைப் பலரிடமும் சொன்னாள். அவளின் மகள் கர்ப்பமுற்று ஊர் திரும்பும் போது மோட்டார் கார் கதை நிறைய சொன்னாள். அவளுக்குக் குழந்தை பிறந்தபோது அந்த ஊருக்கே ஒரு மோட்டார் கார் வந்தது. அதில் வந்தவன் ஊர் நிலஅளவைக் குறித்துப் போக வந்திருப்பதாகச் சொன்னான். தினமும் ஊர் முழுவதும் சுற்றி அளந்து குறித்துக்கொண்டான். அவன் கோமாளி போலத் தொப்பியை ஒரு பக்கமாக அணிந்திருந்தான். அவன் தங்கியிருந்த நாள்களில் கறுப்பு வட்டமான தட்டு ஒன்றை, இயந்திரத்தில் போட்டுச் சுற்றிச் சுழல வைத்தான். அதிலிருந்து விநோத இசை வந்தது. சாமியடியானின் மூத்த மகள் மூலம் கடல் பற்றியும், இசைச் செடி பற்றியும் அறிந்த பெண், தன் குழந்தைக்கு இந்த இசையைக் கேட்கச் செய்தாள்.

தண்ணீர் ஓடும் சப்தம், வனத்தின் இரைச்சல், பூச்சிகளின் சப்தம் எல்லாமும் இசையில் இருந்தது. அவனைச் சந்திக்கப் போனாள், அவள். அருகில் நின்று அந்த சப்தங்களைக் கேட்டாள். அவன் அவளை முத்தமிட்டு அந்த இயந்திரத்தினை அவளுக்கே கொடுத்துப் போனான்.

அவள் இயக்கத் தெரியாத இசை இயந்திரத்தினைப் பார்த்தபடி நாள்களைக் கழித்தாள். அவளின் மகள் பெரியவளானபோது அதை இயக்கக் கற்றுக்கொண்டாள். அந்த இசைத்தட்டிலிருந்து தண்ணீர் சப்தம் வழிந்தது. அவள் கிராமம் நீங்கி நெடும் தொலைவிலிருந்த நகரம் போனாள். அவள் கணவன் சிப்பாயாக இருந்தான். அவனோடு கடல் பார்த்தாள். அதில் குளித்தாள். தனியான இரவுகளில் இசைத் தட்டுகளைச் சுழலவிட்டாள். இசை, மரித்தவர்களின் பாடலைத் திரும்பச் சொன்னது. அவளுடைய நாற்பதாவது வயதில் அந்த இசைத் தட்டு உடைந்தது. பூர்வீக இசையும் கடலின் தன்மைகளும் இசைத்தட்டின் துணுக்குகளில்கூட இருப்பதாகவே அவள் உணர்ந்தாள்.

அவள் மோட்டார் காரை மிக அருகில் பார்த்தாள். உடைந்த இசைத்தட்டின் துகள் நிறம் கொண்ட வண்ணத்துப் பூச்சிகள் தன் முற்றத்தில் அலைவதைக் கண்டாள். அவளுக்கு அந்தப் பூச்சியைப் பிடித்திருந்தது. தன் மகனின் குழந்தைகளைக் காண அவள் நெடும் தூரம் போய் வந்தாள். அந்தக் குழந்தைகளுக்குப் பல கதைகள் சொன்னாள். கடல் வியாதி வந்த ஒருவன் பற்றிக்கூட ஒரு கதை சொன்னாள். அது 'கடல் வியாதி வந்த ஒருவன் ஒரு கிராமம் நோக்கி வந்துகொண்டிருந்தான்' எனத் தொடங்கியது.

இரண்டு வளையல்கள்

ஒவ்வொரு முறை அதைக் கழட்டி வாங்கும்போதும் அவனுக்குத் துக்கமாகவே இருந்தது. பெரும்பாலும் அவன் கேட்பதுகூட இல்லை. அவளே வளையல் களைக் கழட்டிக் கொடுத்துவிடுவாள். முன்பாவது சமையல் அறையில் போய்க் கழட்டி எடுத்து வரு வாள். இப்போது அதுவுமில்லை. முகத்துக்கு எதிரா கவே கைகளை நீட்டியபடி கழற்றிக் கொடுத்துவிடு கிறாள்.

மெலிந்து நீண்டு போயிருந்த அந்தக் கை வளையல் களைக் கழட்டியதும் பார்க்க இயலாததாக உள்ளது. ரத்தம் வெளிறியபடி இருக்கும் அந்த விரல்கள் பாம்பைப் போல நீண்டு சுருண்டது போல இருந்தன.

பல இடங்களில் அந்த வளையல்கள் அடமானம் போயிருக்கின்றன. அந்த வளையல்கள் ராசியோ என்னவோ. உண்மையில் அது அம்மாவிடமிருந்தது. அம்மாவிடம் அதைப் போன்று நான்கு வளையல்கள் இருந்ததாகச் சொல்லுவாள். பட்டையான வளையல்.

அவன் கல்யாணம் செய்துகொண்ட பின்பு அம்மா அந்த இரண்டு வளையல்களையும் மருமகளுக் குக் கொடுத்தாள். திருநீறு போட்டுத் தேய்த்து அதைப் பளபளவெனக் கைக்குப் போட்டுக் கொண்டி ருந்தாள். அவன் வளையல்களை வாங்கிக்கொண்டு நேரத்துக்குத் தகுந்தாற்போல யாரிடமாவது அட மானம் வைப்பான்.

இரண்டு தடவைக்கு முன்பு கூட கணேசனின் சித்தியிடம் வைத்தான். கணேசனும்கூட வந்தான். சித்தி பெரும் உயரத்தில் இருந்தாள். பெரும் உடம்பு.

கைகளில் நிறைய வளையல் போட்டிருந்தாள். கணேசன் விஷயத்தைச் சொன்னதும் கேட்டாள்.

“எடுங்க பார்ப்போம்...

சட்டைப் பையிலிருந்து எடுத்துக் கொடுத்தான். வாங்கிக் கையில் பார்த்தாள். பின்பு கேட்டாள்.

“எவ்வளவு வேணும்?”

“ஆயிரம் ரூபா.

“பழைய வளையல் போல இருக்கு. எங்க வாங்கினது?”

“அம்மாவுடையது, செஞ்சது.”

அவள் அந்த வளையல்களைக் கைக்குள் போட்டுப் பார்த்தாள். போகவில்லை மணிக்கட்டு பெரிதாக இருந்தது. உள்ளே திணித்தாள். உள்ளே எட்டிப் பார்த்துக் குரல் கொடுத்தாள்,

“அமுதா. சோப் டப்பா கொண்டா.”

உள்ளிருந்து சின்னப் பெண் சோப் டப்பா கொண்டு வந்தாள். கையில் சோப்பைத் தடவியபடியே போட முயற்சித்தாள். உள்ளே போக மறுத்தது. அவனே சொன்னான்,

“சின்ன சைஸ், போகாதுங்க.”

“வளையல் அப்படித்தானுங்க இருக்கும், போடலாம்” அவன் சோப்பை வெறித்தபடியே இருந்தான். ஒரு கையில் போட்டுவிட்டாள். மறு கையில் போட கணேசனைக் கூப்பிட்டாள். இழுத்து வளை யலைப் போட்டுவிட்டான். கையை இறுக்கியது போலத் தெரிந்தது. சிரித்தபடியே உள்ளே போய் பணம் கொண்டு வந்தாள். அன்றைக்கெல் லாம் அவனுக்கு அதே ஓடிக்கொண்டிருந்தது. நாய்களுக்குக் கழுத்தை இறுக்கிப் பட்டை போட்டது போல இருந்ததாகத் தோணியது. சாப்பிட இரவில் வரும்போது அவளிடம் சொன்னான். அவள் பதில் பேசாமலிருந்தாள்.

அதை மீட்பதற்கு ஆறு மாதத்துக்கு மேலாக ஆனது. மீட்கப் போகும்போது அவள் போகவில்லை. அடுத்த வாரமே திரும்பவும் வளையல்களை வாங்கிப் போனான். அப்போது அம்மா வந்திருந்தாள். அவனிடமே கேட்டாள்,

“என்னடா வெறுங்கையா இருக்கா.”

“வேலை நடக்கலை, அதான் வளையலை அடமானம் வைச்சுட் டேன்.”

“கவரிங் வேறு வாங்கித் தரலாம்ல.”

“வாங்கிட்டு வரேன்.”

இரண்டு நாள்களுக்கு முன்பு தெப்பம் பக்கம் போனபோது ஞாபகம் வந்தது. நிறைய வளையல்கள் குமித்துப் போட்டிருந்தார்கள். கண்ணாடி வளையல்கள், சிவப்பு, வெள்ளை, நீலம் என. பட்டி,

பட்டியான கண்ணாடி வளையல்கள் இருந்தது. அவனுக்கு சைஸ் தெரியவில்லை. வெள்ளையும் நீலமும் வாங்கிக்கொண்டு போனான்.

அவள் போட்டுக்கொண்டபோது பெரிதாக இருந்தது. இரவில் படுக்கும்போது அவள் தலையணையை ஒட்டி எல்லாவற்றையும் கழட்டி வைத்தாள். அவன் பார்த்தபடியே இருந்தான்.

“ஏன் கழட்டிட்டே.”

“லூசா இருக்கு. தூங்கும்போது உடைஞ்சிடும்.”

“சும்மா போட்டுக்கோ. உடைஞ்சா என்ன.”

போட்டுக்கொண்டாள். கண்ணாடி வளையல்கள் மோதும் சப்தம் அபூர்வமாக இருந்தது. அவள் உறங்கிய பின்புகூட அவன் விழித்துக் கொண்டிருந்தான். பின்னிரவில் அவள் புரண்டு படுத்தபோது கை அவன் மாரில் விழுந்தது.

கையை எடுத்து வைத்துக்கொண்டு வளையல்களைப் பிரித்து விட்டான். பின்பு விரல்களைச் சொடுக்கினான். வளையல்களைச் சப்தமிடச் செய்தான். அவளுக்கு விழிப்பு வந்தது. படுத்தபடியே கேட்டாள்,

“என்னங்க?”

“ஒண்ணுமில்லை. தூங்கு.”

அவள் கைகளைச் சேர்த்தவாறே உறங்கினான். விடியும்போது படுக்கையில் வளையல் உடைந்து கிடந்தது. குளிக்கும் இடத்தில் மாடத்தில், அலமாரியின் டப்பாக்களின் ஊடே கழற்றி வைக்கப்பட்ட வளையல்கள் இருந்தன. ஒரு வாரத்துக்குப் பின்பு வெறுங்கையோடு திரிந்தாள்.

ஒரு நாள் இரவில் அம்மாவே அவளுடைய இரண்டு வளையல்கள் பற்றிச் சொன்னாள்.

அப்போது பார்க் பக்கம் கூட்டம் நடந்ததாம். காந்திதான் கூட்டத்தில் பேசுவதற்கு வந்தாராம். கூட்டம் கணக்கிலடங்காமல் இருந்ததாம். கலவரத்தில் உயிர் நீத்த குடும்பத்துக்கு நிதி திரட்ட, பெண்கள் நகையைத் தர வேண்டும் என்று காந்தி பேசிவிட்டு நகைக்காக பெண்கள் பகுதிக்குத் துண்டை ஏந்திக் கொண்டு வந்தாராம். வளையல்கள், கம்மல்கள், காசுமாலைகள், வடசெயின்கள் என விழுந்தபடியே இருந்ததாம். அம்மா யோசிக்காமல் போட்டிருந்த இரண்டு வளையல்களைக் கழட்டிப் போட்டுவிட்டுப் பார்த்தாள்.

காந்தியின் சிரிப்பு அப்படியே மனசை அமுக்கியதாம். வீடு திரும்பும் வரைக்கும் அவளுக்கும் எதுவும் தோணவில்லையாம். இரவில் அப்பாவோடு பெருகும் சண்டை. அழுதபடியே சொன்னாளாம்,

“எப்படி நகைகள் அடமானத்தில் இருந்து முழுகிப் போயிடும். அதுக்கு இப்படிப் போறது பரவாயில்லை.”

உண்மையில் காந்தி சுட்டுக் கொல்லப்பட்டபோது அவள் ஸ்கூல் போய்க்கொண்டிருந்தாள். நகரமே வெறிச்சோடியது அன்று. நிசப்தம் பரவிய தெருக்கள். சில பறவைகள் தெருவில் நிதானம் தெரியாது அலைந்தன. அம்மா அன்று சமையல் செய்யவில்லை அழுதாள். குடும்பத்து நபர் இறந்தது போல இருந்தது, அவள்கூட காரணம் தெரியாமல் அழுதாள். எங்கோ பஜனை நடப்பது போலக் கூடக் கேட்டது.

அம்மா மீதமிருந்த இரண்டு வளையல்களைத்தான் மருமகளுக்குக் கொடுத்தாள்.

இந்த முறை வளையல்களைக் கழட்டி வாங்கும்போது அவளே சொன்னாள்,

"பேசாம வித்திட்டீங்கன்னா, எல்லாக் கடனையும் அடைச்சிடலாம்ல."

"எதுக்கு, வேணா "

"எதுக்கு இருந்து, வித்துரலாம். வேற வேணும்னா பின்னாடி வாங்கிறலாம்."

"அப்ப சாயங்காலம் வர்றயா கடைக்கு." அவள் மறுக்கவில்லை. மாலை தெருவெங்கும் விழித்திருந்தது. அவள் ஓர்க்ஷாப்புக்கு வந்த போது வேலை பார்த்துக்கொண்டிருந்தான். மரத்தடியில் நின்று கொண்டிருந்தாள். சேர்ந்து போனார்கள்.

அந்த வரிசையெங்கும் நகைக் கடைகளாக இருந்தன. முன்பு எப்போதோ குழந்தைக்கு செயின் வாங்க வந்த கடையின் ஞாபக மிருந்தது. அந்த செயின் எப்போதோ இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது.

சின்னக் கண்ணாடி அறைகளில் நகைகள். எத்தனை விதம் எனத் தெரியாது. உள்ளே உட்காரத் திண்டு போட்டிருந்தார்கள். அவன் நகையை எடுத்துக் கொடுத்தான். வாங்கி உரசிப் பார்த்து விட்டுச் சொன்னார்

"வேற நகை வாங்கிறீங்களா, பணமா."

"பணம் வேணும்."

"சின்னதா ஏதோவது வாங்கலாம்ல."

பேசாமலிருந்தான். கடைக்காரர் சின்னப் பெட்டியை எடுத்து அவள் முன்பு வைத்துச் சொன்னார்.

"மோதிரம் பாருங்க, புது டிசைன் நிறைய இருக்கு."

அவள் எதிர்ச் சுவரில் இருந்த நகைகளைப் பார்த்தபடியே இருந்தாள். அவனே வேண்டாமென்று தலையாட்டினான். எடை போட்டு சின்ன சிலேட்டில் கணக்குப் போட்டுக் காட்டினார். அவனுக்கு எதுவும் புரியவில்லை, தலையாட்டினான். உள்ளிருந்து பணத்தை எண்ணிக் கொடுத்தார். வாங்கி எண்ணும்போது அவளே

கேட்டாள்.

"கொலுசு இருக்கா."

"இருக்குமா, எப்படி வேணும்." உள்ளிருந்து நிறைய மாடல்களை எடுத்துப் போட்டார். அவள் மாங்காய், மாங்காயாக இருந்த கொலுசை எடுத்துக்கொண்டாள்.

வரும்போது தெப்பம் பக்கம் வந்து சில வளையல்கள்கூட வாங்கிக் கொண்டாள். கொலுசை அடர்நீலமான காகிதத்தில் கட்டிக் கொடுத்தார்கள்.

இரவில் அவள் அணிந்து கொண்டாள். அவள் நடந்துவரும்போது இந்தச் சப்தம் கேட்டபடியே இருந்தது. அப்போதுதான் அவனுக்குப் பட்டது. அவன் வளையலை விற்றதற்கு நினைவு படுத்தத்தான் இந்தக் கொலுசை வாங்கினாளோ. அதன் சப்தத்தில் இந்த ஞாபகம் மோதிச் சிதறுதே எனப் பட்டது. இருந்தும் அவனுக்கு ஆறுதலாக இருந்தது. கொலுசைக் கண்டிப்பாகக் கழட்டி அடமானம் வைக்க முடியாது என்பது.

இரண்டு நாள்களுக்குப் பின் குழந்தை அந்தக் கொலுசைப் போட்டுக்கொண்டு வந்தது. அவள் எப்போதும் போல் வெறுமனாக வந்தாள். பெரிய கொலுசு சின்னக் காலில் இருந்தது.

அவளிடம் கேட்டான்,

"ஏன் கழட்டிட்டே?"

"கடிக்குது, கொஞ்ச நாள் போனால் சரியாயிடும்." அவன் எதுவும் பேசவில்லை. குழந்தை கையில் கொலுசை எடுத்துச் சுற்றிக் கொண்டு வந்து கேட்டது.

"புது வளையல்பா. நல்லாருக்கா." தலையாட்டினான்.

தெருவின் சுபாவம்

இந்தத் தெருவுக்கே அப்படியொரு சுபாவம் இருந்தது.

யாரும் மெதுவாகப் பேசிக்கொள்வதிலோ அல்லது சுமுகமாக நடந்துகொள்வதிலோ நம்பிக்கையற்றவர்களைப் போல்தான் இருந்தார்கள். தெரு என்றாலும் அதிகம் வீடுகள் இல்லை. ஒரே வீடு உள்ளே பெரும் காம்பவுண்டாக விரியும். அப்படிப் பார்த்தால் அந்த ஒரு தெருவில் மட்டும் நான்கு காம்பவுண்டு வீடுகள் இருந்தன.

வைத்தியலிங்க மாமா அந்தத் தெருவில்தான் இருந்தார் மாமா அந்தத் தெருவுக்கு வரும்போது நிச்சயமாக இவ்வளவு கூட்டம் இருந்திருக்க முடியாது. இருந்திருந்தால் நிச்சயமாக அவர் வந்திருக்க மாட்டார். ஊரில் மாமாவின் வீடு ஆற்றைப் பார்த்த வீடு. சதா ஆற்று நீரின் சத்தம் கேட்டுக்கொண்டே இருக்கும். ஜன்னலைத் திறந்தால் படித்துறையும் கல் படிக்கட்டுகளும் தெரியும்.

மாமா இருந்ததும் காம்பவுண்டு வீட்டுக்குள்தான். அந்தக் காம்பவுண்டுக்குள் எட்டு வீடுகள் இருந்தன. எதிர் எதிராக வீடுகள். ஆள் குனிந்து வருமாறு வாசல், உள்ளே சின்ன ரூம், அடுப்படி, பின் திறந்த வெளி.

அந்தத் தெருவில் எப்போதும் எதற்காகவும் சண்டை நடந்து கொண்டிருக்கும். மாமாவோடு அவன் முதல் தடவையாக அந்த வீட்டுக்கு வரும் போது தெருவில் சண்டை நடந்து கொண்டிருந்தது. சண்டை போட்டுக்கொண்டிருந்தவர்களில் ஒருவருக்கு வயது அதிகம். மற்றவருக்கு வயது அவ்வளவு அதிகம் தெரியவில்லை.

தெருவை மறைத்தவாறே சைக்கிளை நிறுத்திக்கொண்டு மாறி மாறித் திட்டிக்கொண்டிருந்தார்கள். சண்டையின் விவரம் புரிய வில்லை என்றாலும், யாரும் அதைக் கவனித்துக் கொண்டதுபோல் தோன்றவில்லை. ஆட்கள் வருவதும் போவதுமாக இருந்தார்கள்.

அவர்களைக் கடந்து வரும்போது மாமா மிகவும் நிதானமாக வந்தார். காம்பவுண்டு வாசலில் யாரோ ஒரு பெண் உட்கார்ந்திருந்தாள். மாமாவைக் கண்டதும் நகர்ந்துகொண்டாள்.

மாமா வீட்டில் மூன்று பெண்கள் இருந்தார்கள். அவன் போன போது பெரிய பெண் இருந்தாள். நுழைந்ததும் எதிர்ப்படும் ஈஸி சேரில் படுத்துக்கொண்டிருந்தாள். உள்ளே வேறு பேச்சரவம் இல்லை.

மாமா உள்ளே நேராகப் போய் மறைந்தார். அந்தப் பெண் அவனை ஒரு முறை பார்த்துவிட்டுத் திரும்பிக்கொண்டாள். மாமா வெளியே வரும்போது சட்டையில்லாமல் வந்தார்.

"பிரபா, எந்திரி. அவர் உட்காரட்டும்."

அவள் சலிப்போடு எழுந்துகொண்டாள். அவள் மாமாவின் ஜாடை. நல்ல உயரமாக இருந்தாள். தலைமுடியைப் பின்னி முன்னால் எடுத்துப் போட்டிருந்தாள்.

அவள் உள்ளே போன பின்பு கேட்டார்,

"அம்மா எங்கே?"

"ரமணியைக் கடைசி வீட்டுப் பய கிண்டல் பண்ணினான். அதான் அம்மா அவளைக் கூட்டிக்கிட்டுப் போயிருக்கா அந்த வீட்டுக்கு."

அவர் ஒன்றும் சொல்லாமல் உட்கார்ந்திருந்தார். எதிர் வீட்டிலிருந்து அவனை யாரோ பார்த்துக்கொண்டிருந்தார்கள். மாமா கொஞ்ச நேரத்துக்குப் பின்பு அவனையும் கூப்பிட்டார்,

"மாப்பிள்ளை.. வாங்க பார்த்திட்டு வந்திடுவோம்."

அவர்கள் காம்பவுண்டை விட்டு வரும்போது தெருவில் அவர்கள் எதிர்ப்பட்டார்கள். அத்தைக்குத் தலை கலைந்து போயிருந்தது. காதோரமாக ஈரம் ஓடியிருந்தது. கூடவே, ரமணி வந்துகொண்டிருந் தாள். சின்னப் பெண்ணைப் போலத்தான் இருந்தாள் என்றாலும், சேலை கட்டியிருந்தாள். பச்சைப் பூப் பூவாகப் போட்ட சேலை.

அவர்களைப் பார்த்ததும் மாமா வாசலிலே நின்றுகொண்டார். அத்தை, அவன் இருப்பதைப் பார்த்ததும் தலையைச் சரிசெய்து கொண்டாள்.

"என்ன சண்டை?"

"என்னன்னா... அந்தக் கடைசி வீட்டு நாய் இன்ஸ்டியூட்டுக்கு ரமணி போயிட்டு வரும்போது தினம் கிண்டல் பண்றான். அதான் அவன் வீட்ல போய்க் கேட்டுட்டு வந்தேன்!"

ரமணியைப் பார்த்தான். அவள் எதைப் பற்றியும் சட்டை செய்யாமல் இருந்தாள். மாமா எதுவும் விசாரித்துக் கொள்ளவில்லை.

அவர்கள் வீட்டில் இருந்தபோது மாமாவின் மூன்று பெண்களும் உள்ளே பேசுவதும் சிரிப்பதும் கேட்டது.

ரமணியின் குரல்தான் ஓங்கியிருந்தது.

"கண்ணாடி போட்டுட்டு ஒருத்தன் நிப்பான் பாருடி, அதான் ப்ளூ சர்ட் போட்டுட்டு. அவனைக்கூடச் சும்மா விடலை. பாவம், முழிச்சான் தெரியுமா. அந்தக் கணேசனுக்குத்தான்டி மொத்த வசவும். அம்மா தாளிச்சுட்டா."

அவர்கள் சிரித்தார்கள். ரொம்ப நேரம் வரை சிரிப்புச் சத்தம் கேட்டது.

காலையில் அவன் எழுந்திருக்கும் முன்பே அவர்கள் எழுந்திருந் தார்கள். அவனுக்கு காபி வந்தது. சாப்பிடப் போகும்போது பிரபா விடம் ரமணி கிசுகிசுத்தாள்.

"போகும்போது இவரோட சேர்ந்து போனா அந்தப் பசங்க என்னடி பண்ணுவாங்க"

பிரபா சொன்னாள், "நான் வரலே, முன்னாடியே போறேன்."

மாமா கிளம்பிப் போன பின்பு அவன் வெளியே கிளம்பினான். அவன் கிளம்பியதுமே ரமணி கூடவே கிளம்பினாள். ரமணி சாம்பல் நிறச் சேலையில் இருந்தாள். ஈரத் தலை பிசுக்கென்று தெரிந்தது. காம்பவுண்டு வாசலில் வரும்போது சொன்னாள்,

"என்னோட இன்ஸ்டிடியூட் வரைக்கும் வரீங்களா?"

தலையாட்டினான்.

அவர்கள் தெருவில் வரும்போது வெயில் நிறைந்து போயிருந்தது. இஸ்திரி போடும் பையன் வண்டியைத் தள்ளிக்கொண்டு வந்து கொண்டிருந்தான்.

தெருவில் அவர்கள் போனபோது சிலர் திரும்பிப் பார்த்துப் போனார்கள். வீட்டு மாடியிலிருந்து யாரோ பார்ப்பது தெரிந்தது. அவர்கள் தெருமுனைக்கு வந்தபோது அந்தப் பையன்கள் தென் பட்டார்கள். பெட்டிக் கடையை ஒட்டிய டீக்கடையில் நின்றிருந்தார் கள். ரமணி அவர்களைக் கண்டதும் அவன் பக்கம் திரும்பிச் சொன்னாள்,

"இந்தப் பசங்கதான் கிண்டல் பண்றது!"

அவர்கள் நின்று சிகரெட் குடித்துக்கொண்டிருந்தார்கள். கடையை அவர்கள் கடக்கும்போது கூட்டத்திலிருந்து ஒரு சத்தம் வந்தது.

"கணேசா, உன் ஆள் எப்படி சைடு வாங்குது பாத்தியா?"

கணேசன் என்ற பையனைப் பார்த்தான். அவன் வெறித்துப் போயிருந்தான். இன்ஸ்டிடியூட் மாடியில் இருந்தது. ரமணி மாடிக்கு ஏறும்போது சொன்னாள்,

"நீங்க போயிருங்க. நான் வரும்போது வாரேன்."

அவன் திரும்பும்போது அவர்கள் இல்லை. சாயங்காலமாக

அவர்களில் இருவரை சைக்கிளில் வீட்டுப் பக்கம் பார்த்தான்.

மறுநாள் அவன் ஊருக்குக் கிளம்பினான் பஸ் ஸ்டாப்புக்கு அவன் வந்தபோது தெருவில் சண்டை போட்டுக்கொண்டிருந்த இரண்டு பேரையும் பார்த்தான். ரொம்பவும் அன்னியோன்யமாக இருந்தார்கள்.

மாமா அவனைப் பார்த்துச் சொன்னார்,

"ரெண்டு பேரும் அப்பாவும் பிள்ளையும்."

அவன் ஊருக்குப் போன பின்பு ஒரு தரம் ரமணி அவனுக்குக் கடிதம் எழுதினாள். பின் எப்பவோ அவள் பெயர் போட்ட வாழ்த்து மடல் வந்தது. அவன் வேலையாக அந்த ஊருக்கு வந்து திரும்பும்போது திரும்பவும் அந்தத் தெருவுக்குப் போனான்.

அவன் போகும்போது தெரு ஏகமாக இருட்டாகியிருந்தது. தெருவில் எதிர்ப்பட்டதும் இருக்கும் மாடி வீட்டுக்குக் கீழே மாமாவும், அத்தையும் நின்று சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். மாமாவின் குரல் உடைந்துபோயிருந்தது.

தெருவில் சிலர் ஆங்காங்கே கூட்டமாகத் தெரிந்தார்கள். அவன் அவர்களை அடைந்தபோது மாமா மாடியைப் பார்த்துக் கத்திக் கொண்டிருந்தார். மாடியில் ரமணியின் முகம் தெரிந்தது.

அவனைப் பார்த்ததும் மாமாவின் சத்தம் இன்னும் அதிகமானது.

"மாப்பிளே... அந்த நாய் நம்ம ரமணியை ரெஜிஸ்தர் கல்யாணம் பண்ணிக்கிட்டானாம். இவளும் சேர்ந்து தலையாட்டினாளாம். போலீஸ்ல புகார் கொடுத்து முட்டிய உடைக்கணும்."

ரமணி மாடியிலிருந்து அவனைப் பார்த்தாள். கூடவே, அந்த கணேசன் என்ற பையனின் முகம் தெரிந்தது. ரமணியிடம் சிரிப்பு என்பது துளிக்கூட இல்லை. அவன் ரமணியைப் பார்த்து லேசாகச் சிரித்தான். மாமா ரொம்ப நேரம் வரை தெருவில் கத்திக் கொண்டிருந்தார்.

அன்றைக்கும் காம்பவுண்டு கதவு சாத்தப்படாமல் கிடந்தது. மாமா வீட்டில் தெருக்காரர்கள் நிறைய கூடியிருந்தார்கள். சண்டை போட்ட வயசான மனுசன்கூட அதில் இருந்தார். மாமா ரமணியை ஒயர் கூடையை எடுத்து எறிந்தார் வெளியே. நிறைய கடிதங்கள், வளையல் துண்டுகள், பாசி, சின்ன மணி பர்ஸ் எனச் சிதறின. பெரிய எழுத்தில் எழுதப்பட்ட கடிதங்கள்.

வயதான மனிதர்தான் மாமாவிடம் சொன்னார்: "நடந்தது நடந்துபோச்சு, என்ன செய்ய. வீட்டுக்குக் கூட்டிட்டு வந்து முறைப்படி அனுப்புங்க."

யாரும் எதுவும் பேசவில்லை. இரவு நீண்டுகொண்டிருந்தது. காலையில் அவன் கிளம்பும்போது தெருவில் யாரோ சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள். மாடி வீட்டுக்கு முன் மாமாவின் சைக்கிள் நின்றது.

விரும்பித் தோற்றவை

ஆளற்றுப்போன கடற்கரை மணல்வெளி விரிந்து கிடந்தது. தூரத்திலிருந்தது கடல். சத்தம் கேட்டது. இருள் கலையாது இறுகிப்போயிருந்தது எங்கும். விடிவதற்கு இன்னும் நேரமிருந்தது. பஸ் ஸ்டாண்டுக் குப் போகும் நேர் ரோடு எதிரே போய்க்கொண்டிருந் தது. இந்த நேரம் அக்கா ஊர் போய்ச் சேர்ந்திருக்கக் கூடும். விடியற்காலையில் அவள் வீட்டில் இருப்பாள். நேற்று ஸ்டேஷனுக்கு வரும்வரை அவனோடு பேசவே யில்லை அவள். அவள் ஊரிலிருந்து வந்த அன்று அவனோடு பேசியதுதான். மற்றபடி அவள் பேசு வதைக் குறைத்துக்கொண்டாள். சில நாள்கள் அவன் அக்காவின் குழந்தையை எடுத்துக்கொண்டு இரவில், தெருவில் நடந்துகொண்டிருப்பான்.

வீட்டின் நிலையைப் பிடித்தபடியே பார்த்துக் கொண்டிருப்பாள் அக்கா சில தடவை அவன் பாதித் தெருவில் நின்றபடியே இருப்பான். அக்கா நடந்து வருவாள். மங்கிப்போன வெளிச்சத்தின் ஊடேயும் அவள் கண்கள் அலையும். குழந்தையை வாங்கிக் கொள்வாள். ஏதாவது கேட்பாள்.

“இப்பிடியே எத்தனை நாள் இருக்கப் போறே?”

“என்ன செய்யச் சொல்றே?”

“உருப்படியான வேலை ஏதாவது பாக்கக் கூடாதா?”

“என்ன வேலை அப்பிடி.

“மாமா கூட பட்டறையில வந்து இருக்கலாம்ல.. அங்க கூட வேலை பாக்க ஆள் இல்லை. நீ வந்தா நல்லா இருக்கும்னு மாமாவே சொன்னாங்க.”

“என்னால முடியாது அதெல்லாம்.”

அவள் குழந்தையை வாங்கிக்கொண்டு வீட்டுக்குப் போனாள் மறுநாள் அம்மாகூட இதையே வேறு விதமாகச் சொன்னாள். அந்த வாரம் திருச்சியில் ஒரு கம்பெனியில் வேலை செய்யும் அவனின் தம்பி வந்திருந்தான். குழந்தைக்கு நிறைய பொருள்கள், கொலுசு எல்லாம் வாங்கி வந்தான். அக்காவும் அவனுமாகச் சிரித்தபடியே தெருவில் போனபோது, எதிரே இவன் கடந்து போனான். அவர்களின் சிரிப்பு தெருவில் சிதறிக் கிடந்தது.

அன்றிரவு அவர்கள் திரும்பி வந்தபோது அக்கா நிறைய புதுத் துணிகள் வைத்திருந்தாள். வீட்டில் இரவெல்லாம் பேச்சரவம் கேட்டபடியே இருந்தது. அவன் உறக்கம் வராமல் மாடியில் கிடந்தான் அன்று.

இப்போது கடலின் அருகாமையில் வந்துவிட்டது போலத் தோன்றியது. இருளில் அந்தப் பிரமாண்டம் தெரியவில்லை. கரும்பாறைகளும் குருவிகளின் சத்தமும் ஒடுங்கிப் போயிருந்தன. ஹோவென்ற அலைச் சத்தம் மட்டுமே எங்கும். மனமும் அலை மாதிரியே ஓசை எழுப்பி அலைபாய்ந்தது.

அப்போது அக்கா ஸ்கூலில் படித்துக்கொண்டிருந்தாள். அவளோடு ஒரு போலீஸ்காரரின் பெண்ணும் படித்தாள். இரண்டு பேரும் எப்போதும் தோள் மீது கை போட்டபடியே அலைவார்கள். அவர்களோடுதான் அவன் முதன்முதலாகக் கடற்கரைக்குப் போனான்.

இதே போன்ற இரவுதான் அப்போதும்.

விவேகானந்தர் மண்டபத்தை ஒட்டிய விடுதியில் தங்கியிருந்தார்கள். அவன் உறக்கத்திலே இருந்தான். உறக்கம் கலைந்து பார்த்தபோது கடலின் பிரமாண்டம் ஏகமாக விரிந்து கிடந்தது.

நீலம். எங்கும் நீலம் பரவிய வெளி! கடலின் மேல் பறந்தபடியே பறவைகள். எங்கும் குறு மணல். ஈரக்காலில் மணல் அப்பிக்கொள்ள நடை. கடற்கரையெங்கும் காலையிலே கூட்டம் நிறைந்து போயிருந்தது. அவன் அக்காவின் கையைப் பிடித்துக் கொண்டிருந்தான். அக்கா தூரத்தில் காட்டினாள்.

“கடலுக்குள்ளே இருந்து சூரியன் வரும் பாரு.”

“அது எங்கே இருந்தது ராத்திரியெல்லாம். கடல்லயா?”

அவள் காட்டிய இடத்தில் படகுகள் அலைந்தபடியே இருந்தன. கடல் சிவந்துபோயிருந்தது. அலைகள் சீறி எழும்பி அடங்கின. அக்கா நின்றிருந்த இடத்தில் கடல்குச்சி கிடந்தது.

அக்காவின் முகத்தைப் பார்த்தான். கடல் காற்றில் தலை கலைந்து போயிருந்தது. மண் ஒட்டிப்போன முகம்.

அன்று பகலெல்லாம் கடற்கரையில் சுற்றினார்கள். நிறைய பாசிகள், வளையல் எல்லாம் வாங்கினாள் அக்கா அவனுக்குச்

சிப்பி மோதிரம் வாங்கித் தந்தாள்.

கடலில் குளித்துவிட்டு ஈரத்துடன் கோயிலுக்குப் போனார்கள். அக்காவும் அவள் சிநேகிதியும் அடுத்து அடுத்து நின்றிருந்தார்கள். ஈரம் சொட்டும் முகம். கோயிலெங்கும் இருட்டு. அக்காவின் விரல்களோடு அவன்.

அன்று மாலை மூவரும் நடந்தே கடற்கரையில் திரிந்தார்கள். கடலை ஒட்டியபடியே பேசிக்கொண்டு நடந்தார்கள்.

அக்கா நிறைய பேசினாள் அன்று. திரும்பும்போது அவன் கடற்கரையில் நொண்டியடித்தபடி வந்தான். இருட்டத் தொடங்கி யிருந்தது. பாதித் தூரத்துக்குப் பின்பு வந்து பார்த்தான். பின்னாடி வந்து கொண்டிருந்தவர்களைக் காணவில்லை. கூப்பிட்டான். சத்தம் போய்க்கொண்டிருந்தது.

கடல் பெரிதாகத் தெரிந்தது. வந்த வழியிலே ஓடினான். எங்கும் மணல் பரப்பு. ஆளில்லை. அவனால் கூப்பிட முடியவில்லை. தொண்டை அடைத்தது. விக்கியபடியே கத்தினான். மணல் வெளி யெங்கும் நடந்துபோன தடம் தெரிந்தது.

அவன் அழுதான். பெரும் கடற்கரையில் தனியாக விழுந்து அழுதான். கை, கால், தலை எல்லாம் மண்ணாகியது. குனிந்தபடியே அழுதான்.

அக்காவின் கை முதுகில் பட்டதும் அவள் கால்களைக் கட்டிக் கொண்டு அழுதான். இரண்டு பேரும் சிரித்தார்கள். அவர்கள் திரும்பும்வரை அவன் விரல்கள் நடுங்கிக்கொண்டிருந்தன.

மறுநாள் கிளம்பும்போது அக்கா சிறுமணல் துகள்கள் அடைத்த பாக்கெட்டை வாங்கிக் கொடுத்தாள்.

"பத்திரமா வெச்சிருக்கணும். மணல் எப்படி தங்கம் மாதிரி மினுமினுக்குது தெரியுமா!"

அந்த பாக்கெட்டை இப்போது வரை வைத்திருந்தான். பல தடவை அது வீட்டின் குப்பைக்குப் போய் அவனிடமே திரும்பியது. அக்கா ஊருக்குக் கிளம்பும்போதுகூட அம்மா சொன்னாள்.

"உனக்குச் சின்னவன் அவன்கூட எப்படி வேலை பாத்து அக்காவுக்கு எத்தனை வாங்கித் தாரான். நீ அவ கூப்பிட்டுக் கூட முடியாதுன்னா எப்படிடா"

"என்ன செய்யச் சொல்றே?"

"இப்பிடிப் படம் வரையவும் போர்டு எழுதவுமா இருக்கப் போறயா?"

"எனக்கு இது போதும்."

அம்மாவும் அவளும் ஸ்டேஷனுக்கு முன்னே நடந்து போனார்கள். அவன் குழந்தையைத் தூக்கிக்கொண்டு பின்னால் வந்தான். ஸ்டேஷ னில் கூட்டமில்லை. அவனோடு அக்கா எதுவும் பேசவில்லை.

அவன் குழந்தை கையில் மணல் இருந்த பாக்கெட்டைக் கொடுத்தான். அது சிரித்தபடியே கன்னத்தில் வைத்துக்கொண்டது.

அக்கா, அம்மாவிடம் ஏதோ காட்டிச் சொன்னாள். அம்மா அவனிடம் வந்து கேட்டாள்.

"என்னடா இது. சீ. மணல். சின்னப்பிள்ளை கிட்ட எதைக் குடுக்கிறதுன்னு தெரிய வேண்டாம்? மணலைத் தின்னா என்ன ஆகிறது. வயசாகிடுச்சே தவிர, ஏண்டா இப்படிப் புத்தியில்லாம..."

அம்மா கோபப்பட்டாள். குழந்தை விடாமல் இறுக்கிப் பிடித்துக் கொண்டிருந்தது மணலை. குழந்தையை வாங்கிக்கொண்டு போய் அக்காவிடம் கொடுத்தாள் அம்மா. அக்கா, அம்மாவிடம் சொன்னாள்,

"வேற எதுவும் வாங்கித் தர முடியலைன்னாலும் ரோஷத்துக்குக் குறைவில்லை..

மணலைப் பிடுங்கித் தண்டவாளத்தில் எறிந்தாள். மணல் சிதறியது. கறுத்துப்போன மணல். தங்க நிறமெல்லாம் போயிருந்தது. அவன் வெளியே வந்துவிட்டான் அப்போதே.

கடல் பிரமாண்டமாக இருந்தது இப்போது. பறவைகள் அலைந்து கொண்டிருந்தன. பாறைகளில் உறைந்துபோன குரல் அப்படியே இருந்தது. இப்போது நீலம் வெளிறியிருந்தது. மணல்வெளி வெயிலில் மினுங்கிக்கொண்டிருந்தது.

மணலில் உட்கார்ந்து கொண்டான். பெரும் பிரமாண்டம் எதிரே யிருந்தது. யாரோ சிரித்தபடியே கடந்து போனார்கள். பிரமாண்டமான அலைச் சத்தத்தின் ஊடே சிரிப்பு அமுங்கிப் போனது. சிறிது சிறிதாக வெளிச்சம் பரவ, கடல் நீலமாக மாறிக்கொண்டே இருந்தது. கடல் மட்டும், அக்காவும் அவனும் நடந்து போன அன்றிருந்தது போல எந்த மாற்றமும் இல்லாமலிருந்தது.

பரிவானது வீடு

குழந்தைகளின் பேச்சரவம்கூட இல்லை. நிசப்தம்... கடிகாரம் ஓடும் சப்தம் மட்டும் கேட்டுக்கொண்டிருந் தது. இன்னும் படுக்கையில் இருந்தான். கதவு ஒரு பக்கமாகத் திறந்து கிடந்தது. அப்படியெங்கும் வெளிச் சம்... வெயில் கொஞ்சம் ஏறியிருந்தது.

இப்போதெல்லாம் அவன் கதவை ஒட்டிய இடத் தில்தான் படுத்துக் கொள்கிறான். தூக்கம் கலையாது போனபடியே இருக்க அருகே நடந்துபோகும் சப்தங் கள் கேட்டபடியே இருக்கும். தண்ணீர் கொண்டு போகும்போது பானையிலிருந்த சில துளிகள் சிதறித் தெறிக்கும். உள்ளேயிருந்து அவன் மனைவியின் குரல் வரும்.

“அப்பா மேல சிந்தாம தண்ணி கொண்டு வாடி...

கடந்து போகும் மகள் திரும்பிப் பார்த்துப் போவாள். இன்னும் சில நாள்களில் உறக்கம் விடு பட்ட பின்பும் படுக்கையிலே கிடப்பான். அரைக்கண் வெளிச்சம். கடந்து போகும் பாதம் தெரியும். வளைந்து விரலோடு இறுகிப்போன மெட்டியும் முண்டுகள் போல வெடித்த விரல்களும் தெரியும். கண்ணை மூடிக்கொள்வான்.

முன்பு குழந்தைகளோடுதான் உறங்கிக் கொண்டி ருந்தான். காலையில் அவள் எழுப்பிவிடுவாள்.

“எழுந்து அப்பிடிப் படுங்க. தண்ணி எடுக்கணும்.”

சுவரோரமாக ஒண்டியபடி படுத்துக்கொள்வான். எப்போதும் முதலில் கிளம்புவது அவளாகத்தான் இருக்கும். சமையலை முடித்துவிட்டு எல்லாவற்றை யும் எடுத்து வைத்துவிட்டு அவள் கிளம்புவாள்.

குழந்தைகள் தானாகச் சாப்பிட்டுவிட்டுப் பள்ளிக்கூடம் போய் விடுவார்கள். போகும்போது கதவைச் சாத்திவிட்டுப் போவார்கள்.

அவன் எழுந்துகொள்ளும்போது யாருமற்று இருக்கும் வீடு. பின் கதவைத் திறந்து மரத்தடியில் கிடக்கும் கல்லில் உட்கார்ந்து கொள்வான். சாப்பிட வேண்டும் என்றே தோணாது. முருங்கை மரத்தில் நிறைய பூக்கள். உதிர்ந்துபோன சருகுகள்.

பாத்ரூமின் சிமெண்ட் தொட்டியில் குருவி அமர்ந்திருக்கும்.

வெயில் ஏறிய பின்பு குளிக்கப் போவான். அடுத்த வீடுகளின் பின்புறத்தில் பெண்கள் நிதானமாகப் பேசியபடியோ, துவைத்தபடியோ இருப்பார்கள். அவன் பாத்ரூமுக்குள் போனதுமே கொடியில் துண்டு கிடக்கும். தினமும் அது சின்னவனின் வேலை. காலை ஸ்கூலுக்குக் கிளம்பும் முன்பு கொடியில் துண்டை எடுத்துப் போட்டுவிட்டு, சோப் வைத்துவிட்டு வருவான்.

தண்ணீர் சில்லென்று இருக்கும். குளித்தபடியே ஆகாசத்தைப் பார்ப்பான். வெளுத்துப் போயிருக்கும் கண்ணாடியில் தலைசீவ வரும்போது வீடெங்கும் ஈரத்தில் பதிந்த அவன் பாதச்சுவடு இருக்கும். கண்ணாடியைப் பார்த்தபடியே இருப்பான்.

நெற்றி ரொம்பவும் மேலேறிவிட்டது. கண்கள் கூட உள்ளே போய்தான் இருக்கின்றன. ஒரு வாரத்துக்கு முன்பு அவன் மனைவியே சொன்னாள்.

“ஏன் இப்பிடியிருக்கீங்க.

“எப்படி!”

“கண்ணாடில முகத்தைப் பாருங்க தெரியும். வேலைக்குப் போகலைன்னா இப்பிடித்தான் இருக்கணுமா.”

இருவரும் பேசாமல் இருப்பார்கள். அவனுக்கு வேலை போய், ஆறு மாதத்துக்குள்தான் இருக்கும். எப்போதும் அவன் நிரந்தரமாக வேலை பார்த்தது இல்லை. எல்லா வேலைகளும் அவன் மெலிந்த திரேகத்துக்கு ஒத்து வருவதில்லை. ஹோட்டலில் பில் போடும் வேலையைத்தான் பெரும்பாலும் பார்த்து வந்தான். இப்போது அதுவும் போய்விட்டது. ஹோட்டலையே மூடிவிட்டார்கள். அவன் கேட்ட இடத்தில் கூப்பிடுவதாகச் சொன்னார்கள்.

அவள், கல்யாணமான போதிருந்தே வேலைக்குச் செல்கிறாள். கலர் கலராக வெட்டுத் துணிகள் நிறைந்து கிடக்கும் நீண்ட தாழ் வாரத்தின் கீழ் தையல் மிஷின் ஓடியபடியிருக்கும். நிறைய பெண்கள் அங்கே வேலை பார்த்தார்கள்.

மதியம்கூடக் குழந்தைகள் சாப்பிட வருவது கிடையாது. அவன் பெரும்பாலும் காலைச் சாப்பாட்டை மதியம் சாப்பிடுவான். சாம்பார் பாத்திரமும் மேலே மூடிவைத்த வடையுமிருக்கும். வடையின் ஏதாவது ஒரு பகுதி கொறிக்கப்பட்டிருக்கும். சரியாகப் போகும்போது

வடையின் ஓரத்தைக் கிள்ளித் தின்று விட்டுப் போவாள் பெரியவள். சில சமயம் அவன் பார்த்துக்கொண்டிருப்பான்.

மதியம் உறக்கம் வராது. பின் கதவோரம் உட்கார்ந்துகொள்வான். எதிர் சுவரில் அணில் ஓடிக்கொண்டிருக்கும் அல்லது ஓட்டில் காகம் எதையாவது காலில் வைத்துத் தின்றபடியிருக்கும்.

குழந்தைகள் வருவதற்கு முன்பே வெளியே கிளம்பிவிடுவான். கொடியில் தொங்கும் சட்டையில் கை எடுத்துவிடப்பட்டிருக்கும். பையில் இரண்டு ரூபா இருக்கும். அவளுக்கு எப்போதும் சட்டைக் கையை மடக்கிப் போட்டுக்கொண்டால் பிடிப்பதில்லை.

அவன் சட்டையை எடுத்தவுடனே இயல்பிலே கை மடித்துவிடும். அவள் பையில் காசு வைப்பதுதான் அவனுக்கு ரொம்பவும் கஷ்டமாக இருந்தது. சில தடவைகள் அடுப்படி அலமாரியில் இருந்த பிளாஸ்டிக் டப்பாவில் அந்த ரூபாயைப் போட்டு விடுவான். நிறைய நாள்கள் அப்படியே செய்தான். ஒரு தரம் பெரிய பெண்தான் பார்த்து அம்மாவிடம் சொன்னாள்,

"இந்த டப்பாவில நிறைய ரூவா இருக்கும்மா..

"ஏது..

"தெரியலே, பாரேன்."

ரெண்டு ரூபாய், ஒரு ரூபாய்த் தாள்கள் கிடந்தன. எல்லாவற்றையும் மடியில் கொட்டி எண்ணி முப்பது ரூபாய் என்று சொன்னாள். அப்போதும் அவன் உள்ளே உட்கார்ந்து கொண்டுதானிருந்தான். உள்ளிருந்து அவள் பேசுவது கேட்டது,

"உங்க அப்பா போட்டாரான்னு கேளு."

அவள் கிட்டத்தில் வந்து கேட்டாள்,

"அப்பா. இது உன் ரூபாயா?"

"இல்லை."

அவன் மறுப்பதற்குள் உள்ளிருந்து அவளே வந்து கேட்டாள்,

"எதுக்கு இப்படிச் செய்றீங்க?"

அவன் பேசாமல் இருந்தான். பெரிய பெண் அம்மாவிடம் சொன்னாள்,

"அம்மா நான் வச்சுக்கிடவா. வளையல் பாசி வாங்கலாம்" அவன் அவளையே பார்த்தான். அவள் பெண்ணிடம் சொன்னாள்,

"எல்லாத்தையும் அப்பாகிட்ட கொடு."

அவன் மறுத்தான்.

"வேணா சுசி, நீயே வச்சுக்க." அவன் பதில் சொன்னவுடன் அவள் அழ ஆரம்பித்தாள். எதற்கு எனத் தெரியாத அழுகை. கேவிக் கேவி அழுதாள். சுசி பார்த்துக்கொண்டேயிருந்தாள். அவள் அழுதபடியே அடுப்படியில் போய்ச் சுருண்டுகொண்டாள். குழந்தை

கள் பயந்து மிரண்டுபோயிருந்தன. சுசி அம்மாவின் பக்கம் போய்ப் படுத்துக்கொண்டாள். இது அவனுக்கு இன்னும் கஷ்டமாயிருந்தது.

அன்று வெளியே கிளம்பினான். மாலையிலும் வெயில் இருந்தது. நடந்து ஸ்டேஷன் தாண்டி வந்தான். ஊரின் வெளி வரை வந்தது போல் இருந்தது. அவன் எப்போதும் பார்ப்பது போல ஊரைப் பார்த்தான். வெளியிலிருந்து பார்க்கும்போது ரொம்பவும் அழகாக இருந்தது. வருத்தமாக இருந்தது.

முன்பெல்லாம்கூட அவன் வேலை பார்க்கும் இடத்திலே தங்கிக் கொள்வான். குழந்தைகளும் அவளும் எப்போதும் இங்கே வருவதும் போவதுமாகவே இருப்பான்.

இருட்டும்வரை அன்று பாலத்தில் உட்கார்ந்து இருந்தான். ஊரெங் கும் வெளிச்சம் படர்ந்த பின்பு வந்தான். நகரம் இன்னும் சந்தடியோடி ருந்தது. கிருஷ்ணன் கோவில் பக்கம் வரும்போது நாராயணனைப் பார்த்தான். அவனே சொன்னான்.

“பழைய முதலாளி புதுசா கடை போடப்போறாராம். உங்களைப் பாத்தாக்கூடச் சொல்லச் சொன்னாரு.”

“எங்க?”

“மேட்டில, கோவில் பக்கம்.”

“எப்ப?”

“மூணு மாசமாகும்.”

“பார்த்தா வரேன்னு சொல்லு முதலாளிகிட்டே.

“இப்ப எங்க போறீங்க, வீட்டுக்கா.”

அவன் பதில் சொல்லவில்லை. நாராயணன் அவனை செகண்ட் – ஷோ கூட்டிட்டுப் போனான். பாதிப் படத்திலே அவன் எழுந்து வெளியே வந்தான் வீட்டுக்கு வரும்போது நடு இரவாகியிருந்தது. விளக்கு எரிந்துகொண்டிருந்தது. கதவு தட்டும் முன்பு திறந்து கொண்டது. அவள் விழித்துக்கொண்டிருந்தாள். அவன் உள்ளே போனதும் கேட்டாள்,

“சாப்பிடலையா..

“வேணாம். சாப்பிட்டாச்சு.”

“பொய் சொல்றீங்க. ஏன் இப்படியிருக்கீங்க.”

அவன் சட்டையைக் கழட்டிக் கொடியில் போட்டுவிட்டுக் கதவில் சாய்ந்து உட்கார்ந்தான். குழந்தைகள் உறங்கிக் கொண்டிருந் தார்கள்.

“நாளையிலே இருந்து நான் வேலைக்குப் போகலே.. என்றாள்.

“ஏன்?”

“என் ரூவா யாருக்கும் வேண்டான்னு ஆகிப்போச்சுல்ல.

அவன் பேசவில்லை. அவள் திரும்பவும் அழுதாள். விம்மியபடியே

அவன் மேல் சாய்ந்துகொண்டாள். அவன் அப்படியேயிருந்தான். அவன் மேல் படும்படியாக அவள் முகத்தை வைத்தாள். விம்மியது. அழுதபடியே அவனை முத்தமிட்டாள். அவனிடம் எந்த உயிர்ப்பும் இல்லை.

மறுநாளும் அவன் பையில் பணம் இருந்தது. அவன் எடுத்து வைக்கவில்லை. பின்பு பெரும்பாலும், மாலை கிளம்பிய பின்பு மலைக்குப் போகும் ரோட்டில் போவான். இரண்டு சிகரெட் குடிப்பான். சில சமயம் இரவு வீடு திரும்பும்போது இன்னொரு சிகரெட். மீதிச் சில்லறை பையில் கிடக்கும்.

மறுநாளில் வீடு தனித்து இருக்கும். எப்பவாவது அவனைத் தேடி யாராவது வருவார்கள். ஒரு தரம் சங்கரன்கோவிலில் அவனோடு வேலை பார்த்த சாரதி வந்தான். பகலெல்லாம் இருவரும் பேசிக் கொண்டிருந்தார்கள். அன்று மாலை சாரதி சொன்னான்,

“இப்படியிருக்கறது கஷ்டமா இல்லையா.

“இருக்கு. .

“உண்மையில சண்டை போட்டாக்கூடப் பரவாயில்லை. இப்படி இருக்கறதுதான் என்னமோ செய்யும். எங்க மாமாகிட்ட நூறு ரூவா வாங்கிட்டு தெரிஞ்சே இல்லேன்னேன். அவரும் அப்பிடியா... மறந்திருப்பேன்னாரு சிரிச்சுக்கிட்டு. ரொம்ப சங்கடமாகப் போச்சு. அவரு வைய மாட்டாரான்னு தோணிச்சு.”

சாரதி கிளம்பும்போது அவனையும் கூப்பிட்டான். அவள்தான் பணம் கொடுத்தாள். சாரதியோடு கிளம்பி பஸ் ஸ்டாண்டுக்குப் போனான். பஸ் இல்லை. பஸ் வந்தபோது சாரதி யாரோ ஒரு பெண்ணோடு பேசிக்கொண்டிருந்துவிட்டு வந்து அவனிடம் சொன்னான்,

“எங்க அக்கா ஊருக்குப் போறேன் அவசரம்...

அவன் எதுவும் சொல்லவில்லை. வீட்டுக்குத் திரும்பிவந்து அவளிடம் ரூபாயைக் கொடுத்தான். அவள் சொன்னாள்,

“வைங்க. சாயங்காலம் சினிமாக்குப் போகலாம்.”

எல்லோரும் கிளம்பிப் போனரர்கள். தியேட்டரின் முன்பு உள்ள கிருஷ்ணன் சிலையைச் சுற்றிக் குழந்தைகள் விளையாண்டார்கள். பழைய படம் அது. கூட்டமில்லை. மாடி டிக்கெட் எடுத்துப் போனார்கள். அவள் அவனருகே உட்கார்ந்துகொண்டாள். அவனுக்குப் பிடித்தமான பாடல் இருந்தது படத்தில்.

இடைவேளையில் குழந்தைகளோடு கீழே போய் கலர் சாப்பிட்டான். சுசிதான் சொன்னாள்,

“நீயே சினிமாவுக்குக் கூட்டிட்டு வாப்பா அம்மா கூட வந்தா இது எல்லாம் வாங்கித் தர மாட்டா. .”

தலையாட்டினான்.

இரவு திரும்பும்போது குழந்தைகள் தெருவில் முன்னாடி ஓடின. அவனும் அவளும் மட்டும் வந்தார்கள். அவள் சொன்னாள்,

“எங்க பிளாக்ல வேலை இருக்காம், சொல்லவா.”

தலையாட்டினான்.

“பிள்ளைக உங்ககிட்டதான் ரொம்பவும் ஒட்டுதுக. நீங்கதான் கவனிக்க மாட்டேங்கிறீங்க” என்றாள்.

கதவைத் திறந்து உள்ளே போனதும் பிள்ளைகள் சாப்பிட ஓடினார்கள். அவள் அப்போதுதான் கவனித்தது போலச் சொன்னாள்,

“ஏன் இப்பிடி கையை மடக்குறீங்க.”

“பழகிப்போச்சு”

“எனக்குப் பிடிக்கலே, சொன்னா எத செய்றீங்க.”

அவள் இதைச் சொன்னதும் அவனுக்குச் சிரிப்பு வந்தது. கையை எடுத்துகிட்டு கண்ணாடியில் பார்த்தான். அதுகூட நன்றாகவே இருந்தது. அவள் சேலையின் நுனியை வாயில் பிடித்தவாறே திரும்பி அவனைப் பார்த்துவிட்டுச் சொன்னாள்.

“இது நல்லா இருக்கு...

மடித்துவிடப்பட்ட இடங்கள் சுருள் சுருளாக இருந்தன. அவன் எப்போதும் போலவே படுத்துக்கொண்டான். அடுத்த நாளின் பகல் ஞாபகம் வந்தது. தனித்திருக்கும் வீடும் துக்கத்தின் சாயையான வெயிலோடும் வரும் பகல் பற்றியும் யோசித்தபடியே படுத்துக் கொண்டான்.

அவனுக்கு, எப்போதும் போலவே நீண்ட நேரம் வரை உறக்கம் வரவில்லை.

நிலை

எத்தனை முறை அந்தப் பக்கம் பஸ்ஸில் கடந்து போனாலும் ஊரில் இறங்க வேண்டும் என்றே தோன்றவில்லை. ஊரைப் பற்றி நினைக்கும்போதெல் லாம் பெரும் ஆயாசம் கவிழ்ந்து கொள்ளும். யார் இருக்கிறார்கள் பார்ப்பதற்கு எனப் படும். போனதரம் விடுமுறையில் மற்ற அண்ணன்கள் வந்திருந்தபோது கூடக் கேட்டான்,

“போய் ஊரப் பாத்துட்டு வருவமா?”

“அங்கென்னடா இருக்கு... வேலை மெனக்கெட் டுப் போக.”

“வீடு இருக்கும்ல.

“அது எப்படியிருக்கோ. இருந்தாலும் யாருக்கும் அவசியமில்லாதது. ஊரா அது”

பஸ் கடந்துபோகும்போது ஊரின் வெளி தெரியும். அமைப்பில் எந்த மாற்றமும் இல்லை. மரங்களற்றுப் போனதால் வெளீரென ஊரே தெரிகிறது. எப்போதா வது சிலர் அவனை அடையாளம் கண்டுகொண்டு பஸ்ஸில் சிரிப்பார்கள்.

சில நாள்களுக்கு முன்பு பஸ்ஸில் கிருஷ்ணசாமி நாயக்கரைப் பார்த்தபின்பு ஊருக்குப் போக வேண் டும் என்று தோணியது. பஸ் கிளம்பும்போது ஓடி வந்து ஏறினார். நல்ல உயரம் அவர். உட்கார இடம் தேடினார். இவன் பக்கத்தில் சீட் காலியாக இருந்தது.

உட்கார்ந்துகொண்டு, அலுப்பை முறித்த பின்பு தான் அவனைப் பார்த்தார் அவன் சிரித்தான். அவருக்கு அடையாளமாகிப் போனது.

“குருக்கள் மகன்தானவே நீ.

தலையாட்டினான்.

“எங்க இருக்கே.. ஊர்ப் பக்கமே வர்றதில்லை.”

அவன் பதில் பேசவில்லை. அவரே கேட்டார்.

“வீட்ட என்ன செய்யப் போறீங்க. அது பாட்டுக்கு நாதியில்லாத தெருவா இருக்கு.”

“என்ன செய்றது?”

“இப்பிடி விட்டா அந்த இடத்தில நாலு சுவர்தான் மிஞ்சும். ஊர் பக்கிக ஆம்புட்டத எடுத்துட்டு போய்க்கிட்டு இருக்காக. இப்பவே வீட்ல நிலை கிடையாது தெரியுமா.

“விழுந்துருச்சா.”

“நீ ஒண்ணு. தெக்குத் தெரு முக்கில ஒரு வீடு கட்டிருக்கான். அங்க இருக்கு. பேசாம வீட்ட வித்திற வேண்டியதுதானே.”

“யாரு வாங்கப் போறா. போனாலும் சொற்ப விலைக்குப் போகும். எதுக்குன்னுதான்.”

“அதும் சரிதான். எதுக்கும் ஊருக்கும் வந்து தலையக் காட்டிட்டு போனா மிச்சம் மீதி மிஞ்சும்.”

அவர் சொல்லிவிட்டுப் போன பின்பு ஒரு மாலையில் ஊருக்குப் போனான். ஊரின் அமைப்பே மாறியிருந்தது. நிறைய புது வீடுகள். தெக்குத் தெரு முக்கைக் கடக்கும்போது பார்த்தான். புது வீடு அது. இவர்கள் வீட்டின் நிலை, கதவு இரண்டுமிருந்தன.

வீட்டில் யாரோ ஒரு பெண் இவனை வெறித்தபடியிருந்தாள் எவ்வளவு பெரிய நிலைக் கதவு அது. அந்தப் பூட்டு, அதன் அமைப்பே விநோதமானது. பெரிய கைப்பிடி. வெண்கலத்தால் ஆனது. கை போன்ற அமைப்பு. ஏறி ஆடுவதற்கு ஏற்ற கதவின் கட்டைகள்.

புதுசாக இப்போது பச்சைப் பெயிண்ட் அடித்திருந்தார்கள். அதன் ஊடேயும் பழைய அரக்கு நிறம் அப்படியே இருந்தது. பெரிய பெரிய விரல் தடங்கள் இன்னும் கறையாக அழியாது போயிருந்தன. பெண்களின் விரல்கள். இடையில் சின்னதாக அவன் விரல் தடம்கூட மறைந்திருந்தது.

கோவில் ஊரின் கோடியில் இருந்தது. அதிலிருந்து நேராக எதிர்ப்படும் தெருவே ஒரு காலத்தில் அக்ரஹாரமாக இருந்தது. இப்போது கோவிலே பராமரிப்பற்று இருந்தது. அக்ரஹாரத்தின் அகன்ற தெரு வழி நிசப்தம் நிரம்பிக் கிடந்தது.

பஜனை மடத்தின் பெரிய திண்ணைகளில் ஆட்கள் படுத்து உறங்கிப்போன முதுகுத் தடம். எங்கும் தாயக் கட்டம், ஆடு புலி ஆட்டமாடிய கரிக்கோடுகள். சுவரில் காரை பேர்ந்துபோன இடங்கள்.

கொஞ்ச காலம் ஆடு கட்டியிருந்திருக்க வேண்டும் போலத் தோன்றியது.

திண்ணையில் இருந்த தூணில் ஆட்டின் அறுந்துபோன கயிறு குலைகள் தெரிந்தன. மூத்திரக் கறுப்பு படர்ந்து போயிருந்தது தரையெங்கும். திண்ணையில் கீழ் இருந்த காவிக் கோடுகள் அழிந்து போய்விட்டன. பஜனை மடம் பெருங்கொண்ட கதவோடு இறுகியிருந்தது. மார்கழி மாதக் குளிரோடும் நடுங்கும் குரலோடும் பாடிப்போன பஜனைப் பாடல்கள் போன இடம் தெரியாது போனது.

ஒரு வரிசையில் எட்டும், இன்னொரு வரிசையில் எட்டுமாக எதிரெதிராகப் பதினாறு வீடுகள் நிறைந்தது அக்ரஹாரம்.

இப்போது பாதி வீடுகள் இடிந்து, கட்டைச் சுவர்களாக நின்றிருந்தன. அவன் தெரு வழியாக நடந்து வந்தான். தேர் போய் வலம் வரும் தெரு இன்று மூளியாக இருந்தது.

தெருவில் இரண்டாவது வீடு அவர்களுடையது. இரண்டு பக்கமும் பெரிய திண்ணைகள். கல்லிலே தலை வைக்கும் அமைப்போடு சாய்ந்திருக்கும் திண்ணை. உள்ளே அடுத்தடுத்து விரியும் கட்டுகள். ஊஞ்சல் போட்டு ஆடும் இடம். பின்கட்டில் கொல்லை. துளசிமாடம். சின்னத் தோட்டம். சுற்றிலும் வேலி அடைத்த பின்புறம். கிணறு.

இப்போது வீட்டின் எதிர் நின்றதும் வீடு பயம் கொள்ளச் செய்தது. நிலையைப் பெயர்த்து எடுத்துப் போயிருக்கிறார்கள். நிலையற்ற வீடு சிதிலத்தின் வடிவமாக இருந்தது. ஜன்னல் கம்பிகள் துருவேறிப் போயிருந்தன. ஜன்னல் கதவைக்கூடக் காணவில்லை.

ஓ!வெனப் பிளந்து கிடந்தது வீடு. தூசிகளும் குப்பையுமாக எங்கோ பதுங்கிக் கிடக்கும் பறவையின் விம்மலோடுமடித்தது. திண்ணை, உள்ளே என அசிங்கமாக இருந்தது வீடு. வீட்டைச் சுற்றிப் பின் வாசலுக்கு வந்தான்.

கிணறு வானம் பார்த்திருந்தது. சின்னக் கிணறு. முன்பு எப்போதும் தண்ணீர் நிரம்பி வழியும். ஊற்று சுரந்து கொண்டே இருக்கும். வாதாமரத்தின் இலைகளைப் பிடுங்கிச் சுருட்டி கிணற்றில் போட்டு விளையாடுவார்கள். அக்கா கிணற்றின் சுவர்களில்கூடக் காவி அடிப்பாள்.

எப்போதும் அம்மா பின் வாசலில் உட்கார்ந்தபடியே இருப்பாள். நிறைய பூச்செடிகள் பூக்கும். இருட்டில் பூ தெரியாது. வாடையடிக்கும். வேலியின் நிழல் வரி வரியாக விழும். அம்மா கதவோரம் சாய்ந்திருப்பாள். எப்போதும் அந்தக் கதவு பூட்டியதாக ஞாபகமே இல்லை.

சின்னப் பாத்திகளில் கீரை முளைக்கும். கீரை தரையை முண்டும் காலத்தில் தினமும் அவனும் அக்காவும் பாத்திகளின் முன்னே உட்கார்ந்துகொண்டபடியே கையை நீட்டாமல், விரலை மடக்கி பாத்திகளைக் காட்டுவார்கள். பசேலெனக் கீரை விரியும் நாளின் காலை பாத்திகளின் முன்னே அக்கா சிரிப்பாள்.

அக்காதான் தோட்டத்தை உருவாக்கினாள். கேந்திப் பூக்களை நட்டாள். மஞ்சள் குடை போன்ற பூக்கள்கூட அவள் தோட்டத்தில் இருந்தன. பூக்களைப் போலவே நிறம் அவளுக்கும்.

அவள் அதிகம் வேலை செய்ய மாட்டாள். தோட்டத்தில் உட்கார்ந்து கிணற்றைப் பார்ப்பாள். பாத்தி வெட்டுவாள். சாயங்கால மானதும் மாடங்களில் விளக்கு வைப்பாள். அவள் கைக்குள் அடங்கும் விளக்கு. பின் மதியமெங்கும் திரி போடும் வேலை நடக்கும்.

அப்போதே அண்ணன்கள் டவுனில் படித்துக்கொண்டிருந்தார்கள். அக்காவும் அவனும் மட்டும் வீட்டில். அக்ரஹாரத்தில் பெண்கள் அதிகம். சிவப்பு சிவப்பாக, பெரிய இலைகளின் நடு நரம்பைப் போல முறுக்கிக்கொண்ட பெண்கள். அகன்ற பாதங்கள், ஈரம் கசியும் முகத்தோடு ஜன்னலின் இடைவெளியில் அவர்கள்.

அதிகாலை பெண்களோடே விடியும். எந்தப் பெண்களையும் வெளியே பார்க்க முடியாது. சப்தம் கேட்கும். வசீகரமான பாடல்களும் கேட்கும் சில காலைகளில். குறைவாகப் பையன்கள்.

கோயிலுக்கும் தெருவுக்கும் ஓடுவார்கள். தெரு எப்போதும் பார்த்திருக்கும் ஓடுபவர்களை.

சில சமயம் அக்கா திரி போடும்போது கூடவே உட்கார்ந்து கொள்வான். ஒரு மாயத்தைப் போலப் பஞ்சு நிமிடத்தில் திரியாகும். வரிசையாகத் திரிகள் சேர்ந்தபின்பு எழுந்துகொண்டு அவனைப் பார்த்துச் சிரிப்பாள். எதற்கென்ற கேள்வி எழாது சிரிக்கும் நிலை அது.

கோவில் பிரகாரங்களில் விளக்கு ஏற்றுவதும் அவள்தான். கூடவே அவனும் வருவான். கறுப்பாக மசி வழியும் விளக்குகள் தூண்களில். எத்தனை இருக்கும் எனத் தெரியாது. சில மூலை முடுக்குகளில் கல் விளக்குகள். அக்கா திரி போட்டு எண்ணெய் ஊற்றுவாள்.

சின்ன விளக்குகள் எரியும்போது கண்களில் மினுக்கம் போலத் தெரியும். எல்லாவற்றையும் பார்த்தபடியே பிரகாரம் கடப்பாள். உள்ளே வில்வ மரத்தில் காய்கள் தொங்கும். கறுத்த உயர்ந்த கோவில் சுவர் விரிவுண்டு செடிமுளைத்திருக்கும்.

புற்கள் முளைத்த அதன் ஊடே நடந்து போகும்போது காற்று விரிந்திருக்கும். எண்ணெய் வாளியை அவனிடம் கொடுத்துவிட்டு அக்கா வருவாள். அப்பா வந்து ஒரு இரவில் வீட்டில் சொன்னபோது அக்கா கலங்கிப்போனாள். அப்பா சொல்வதற்கே கஷ்டப்பட்டுச் சொன்னார்,

“விளக்கு போட வேணாம்ன்னு சொல்லியாச்சு. எண்ணெய் தர மாட்டாங்க. அவள நின்னுகிடச் சொல்லு.”

அக்காவே சில விசேஷ நாள்களில் எண்ணெய் வாங்கி ஊற்றினாள். அவள் கல்யாணமாகிப் போனபோது அவன் ஸ்கூல் முடித்தான்.

போன வேகத்தில் அக்கா இரண்டு குழந்தைகளும் வாழாவெட்டியுமாக வந்தாள். தெருவின் சுபாவமது. இவளைப் போன்ற சிலர் எப்போது மிருந்தார்கள்.

முதல் வீட்டைக் காலி பண்ணி சுந்தரராமையர் போனது அப்போதுதான் நடந்தது. அவர் போன சில நாள்களில் சில வீடுகள் காலியாயின.

மழையற்றுப்போன கோடையில் கோவில் உலர்ந்து கிடந்தது. பூட்டப்படாத கோவிலின் பெரிய வாசல் கதவு இரவெல்லாம் தனித்திருந்தது. அப்பாவும் இன்னொரு குருக்களும் கோவில் வெளித் திண்ணையில் பகலெங்கும் படுத்து வானம் பார்த்தார்கள்.

கிணறு வற்றிப்போனது. பூக்கள் அரிதாகிப் போனது. துளசி இருந்தது. துளசி இலைகளைச் சிறிது சிறிதாக்கி சரம் கட்டினாள் அக்கா. வாடையெங்கும் அமுக்கியது. கடைசி வீட்டிலிருந்த இரண்டு பெண்களும் ஹோட்டலில் சமையல் வேலை செய்யும் பையன்களை மணந்துகொண்டு கோவில் பிரகாரம் சுற்றி வந்தார்கள். பெண்கள் இறுகிப்போயிருந்தார்கள். பிணைத்துக்கொண்ட விரல்களில் மஞ்சள் தொங்கியது.

பையன்கள் நல்ல கறுப்பு. பெண் வெயில் பட்டால் கருகிவிடும் சிவப்பு. நூல் புடவையும், ஈரம் உலராத தலையுமாகப் பெண்கள். சம்பவம் போல நடந்துபோனது கல்யாணம். அவர்களும் கிளம்பிப் போனார்கள்.

பெரிய அண்ணன் கல்யாணம் செய்துகொண்டு சென்னைக்குப் போனான். சின்னவர்களும் அப்படியே ஆனார்கள். அக்காவும் குழந்தைகளும் அம்மா ஊரைவிட்டுப் போய்விட்டாள்.

ஒரு இரவில் பெரிய அக்காவுக்கும் அப்பாவுக்கும் சண்டை வந்தது. எதற்கென எல்லோருக்கும் தெரிந்தபோதும் யாரும் அதைப் பற்றிப் பேசிக்கொள்ளவில்லை. அக்கா வேலைக்குப் போய் வந்தாள். ஹோட்டலில் சமையல் வேலை.

விடியாத கருக்கு இருட்டோடு கோவில் உண்டியல் திருட்டுப் போனது. கோவில் கதவு மூடப்பட்டது. அப்பா ஒடிந்து போனார். அக்காவும் குழந்தைகளும் இரவில் யாரிடமும் சொல்லாமல் எங்கோ போனார்கள். அப்பா அழுதார் அன்றெல்லாம்.

கோவில் நிலம் தரிசாகிக் கிடந்தது. வீட்டை விட்டுவிட்டு அவர் களும் கிளம்பிப் போனார்கள். அக்ரஹாரத்தின் காவி மங்கிப்போய் ஒரு நாளில் வெறிச்சோடியது.

இன்று வீட்டை விட்டு வெளியே வந்தான். அநேகமான வீடு விரிவுண்டே கிடந்தது. எவருக்கும் பிரயோசனமின்றிப் போனது வீடு. எப்போதும் மக்கள் அலையும் அக்ரஹாரத்தின் வீடுகள் வெறுமையாகிப் போயிருந்தன.

பிழைப்பு தேடிப் போனவர்கள் நகரங்களில் அலைந்தார்கள்

தெருமுனைக்கு வந்தபோது பார்த்தான். கடைசி வீட்டில் இருந்து புகை வந்துகொண்டிருந்தது. கடக்கும்போது எட்டிப் பார்த்தான். ஒரு வயதானவரும் இரண்டு பெண்களும் தெரிந்தார்கள். அவனைக் கண்டதும் வயதானவர் வெளியே வந்து எட்டிப் பார்த்துவிட்டுக் கேட்டார்,

"யார் வீட்டுக்கு வந்தீங்க?"

"எங்க வீட்டுக்குத்தான். ரெண்டாவது வீடு. அங்க.

"நிலையில்லாத வீடா?"

தலையாட்டினான்.

"நாங்க இங்க புதுசா வந்திருக்கோம். யாரும் எதும் சொல்லலை. அதான் இங்கயே இருக்கோம்."

அவர் அவனோடு வெளியே நடந்து வந்தார். வரும்போது கேட்டார்,

"யாருமில்லையோ இங்க. முன்னாடி ஒரு தரம் வந்தப்ப தெருவே ஜோதி மாதிரி இருந்ததே. கார்த்திகைனு நினைக்கேன். எல்லாம் டவுனுக்குப் போயிட்டாங்களோ... பிழைக்கணுமில்ல."

அவனுக்கு ஞாபகம் இருந்தது. அவன் காய்ச்சலாகக் கிடந்தான். ஜுரத்தில் மெலிந்துபோயிருந்தான். அன்று கார்த்திகை. தெருவெங்கும் பெண்கள் விளக்கு வைத்தார்கள். வாசல், நிலை, முற்றம், பின்கட்டு தெருவெங்கும்.. கோவிலில் ஆயிரத்து எட்டுச் சின்ன விளக்குகள்.

தெருவே பிரகாசத்தில் மிதந்தது. மஞ்சள் வெளிச்சம் எங்கும் இருந்தது. பெண்கள் உள்ளே கிறங்கி நடப்பது விநோதமாக இருந்தது. அவர்களின் பேச்சு, நடை எல்லாம் விளக்கின் சுபாவத்தோடு ஒன்றிப்போயிருந்தது.

அந்த நாள் இரவில் திரி கருகும்வரை விளக்கெரிந்தது. ஜீவராசிகள் இருட்டைத் தேடிப் போக முடியாது விழி பிதுங்கின. படியில் ஓரம் ஒடுங்கிய தவளை கண்களை உருட்டிய நாள் அது.

அவன் திரும்பவும் தெருவுக்கே போனான். தெக்குத் தெரு முக்கில் இருந்த வீட்டுக்காரன் இவனை முறைத்தான். இவன் நிலையைக் கேட்டு வந்திருப்பதாக அவன் நினைத்திருப்பான் போலும் இருந்தது.

திரும்பும்போது இரவானது. பஸ் ஸ்டாப்பில் சிவசாமியைப் பார்த்தான். அவன் கேட்டான்,

"என்ன ஊர்ப் பக்கம் வந்திருக்காப்ல இருக்கு... வீட்டை விக்கவா"

"என்ன இருக்கு விக்க."

"நீங்க ஊரவிட்டுப் போய் இருபது வருசமிருக்குமா.

"இருக்கும்."

“அக்காவ பாக்கிறதுண்டா நீங்க. மேலூர்ல பார்த்தேன். அவர் சைக்கிள் கடைல வேலை பாக்கிறா போல. ஆள் இப்படியாயிட்டாங்க. உங்க வீட்டுக்கு வர்றதுண்டா. அவரும் வேற சாதின்னு கேள்விப் பட்டேன்.”

“வருவா எப்பவாவது”

“மழை பெஞ்சா வீடு விழுந்திரும்.

அவன் பதில் பேசவில்லை. வீடு திரும்பிய பின்பு இரவில் உறக்கம் வரவில்லை. அன்று இரண்டு நாள்களுக்குப் பின்பு அக்காவின் ஞாபகம் வந்தது. போய்ப் பார்த்து வந்தான். அவள் வீட்டில் இருந்த இரவில் கேட்டாள்,

“வீடு இடிந்துபோச்சா.

“போயிரும்.”

அவன் அந்த வீட்டிலிருந்து வரும்போது பார்த்தான். அக்கா வீட்டின் மாடக் குழிக்குள் சில திரிகளும், பழைய அகல் விளக்குகளும் எடுத்து வந்திருந்தாள் போல இருந்தது. மசி வடியும் விளக்குகள் வீடு திரும்பும்போது ஒரு விளக்கையும், சில திரிகளையும் எடுத்து வந்தான். எதற்கு உதவும் எனத் தெரியவில்லை.

மசிபடிய கைகளில் அவன் கொண்டு வந்தபோது தெருவெங்கும் எண்ணெய் விளக்கெரிந்த நாளின் ஞாபகம் வந்தது. மசி என்றும் கறுப்பாகவே இருந்தது.

இருப்பிடம் விட்டுப் போனவர்கள்

இரவு விரிந்து கிடந்தது எங்கும். தலைக்கு மேலிருந்து வானம் பார்த்துக்கொண்டேயிருந்தான். இன்று நிறைய நட்சத்திரங்கள். அவன் நினைத்தபடியே அவனுக்கு வேண்டிய எல்லோரும் தெரிந்தார்கள். அவன் நட்சத்திரங்களுக்குப் பெயர் வைத்திருந்தான். எல்லாம் அவனுக்குப் பிடித்தமான பெயர்களாக. எப்பவாவது தான் இப்படி எல்லோரும் ஒன்றாகத் தெரிகிறார்கள். நெருங்குவதும் விலகுவதுமாகச் சில நட்சத்திரங்கள் இருந்தன. அவன் தனியாக அடர்ந்த இருள் போன்ற மேகத்தின் ஊடே தெரிந்த நட்சத்திரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

இரவு எங்கும் படர்ந்துபோயிருந்தது. ஹோட்டலின் திறந்த வெளியில் அவன் படுத்திருந்தான். கீழே மஞ்சளாக வெளிச்சமிருந்தது. குளித்துக்கொண்டிருந் தார்கள் பையன்கள். அடிபம்பு அடிபடும் சப்தமும் எண்ணெய்யற்ற அதன் உராய்வும் துல்லியமாகக் கேட்டன.

சிரித்தபடி குளித்துக்கொண்டிருந்தார்கள். வெளியே கடைக் கதவை ஒடுக்கச் சார்த்தியபடி முதலாளி நின்றிருந்தார். அந்தத் தெருவெங்கும் இருள் நிறைந்துபோயிருந்தது. அந்த ஹோட்டல் மெயின் பஜாரில் இருந்து உள்தள்ளி இருந்தது.

சின்னதாக விலகும் சந்தின் உள்ளே கணேச பிள்ளை சுத்த சைவ ஹோட்டல் என்னும் போர்டு துருவேறிப்போயிருந்தது. அதன் மேல் இருந்த பல்பு எரிவதில்லை. மாதக் கணக்கு வைத்து சாப்பிடும் சிலரைத் தவிர மற்றவர்கள் இரவில் வருவது

அபூர்வம். எப்பவாவது வெளியூர்க்காரர்களின் முகம் தென்படும்.

அவன் பார்த்துக்கொண்டிருக்கும் போதே அவர்கள் குளித்து விட்டு மாடியேறி வந்தார்கள். மாடி கொஞ்சம் பெரியது.

ஆளுக்கொரு தகரப்பெட்டி வைத்திருந்தார்கள். விரித்தபடி கிடக்கும் பாயும், படக் கதைகளும், கொடியில் உலரும் சிவப்புத் துண்டும் எப்போதும் அங்கு கிடக்கும்.

மாடியில் இருந்து பார்த்தால் மெயின் பஜார் தெரியும். இரவில் பையன்கள் பார்த்துக்கொண்டிருப்பார்கள். ரோட்டில் போகும் லாரியை எண்ணியபடி. எப்பவாவது செகண்ட் ஷோ விட்டுப் போகும் பெண்களில் ஒன்று மாடியைப் பார்த்துவிட்டுச் செல்லாதா எனத் தயக்கத்தோடு, சிலவேளைகளில் கடந்து போகும் பெண்கள் மேலே பார்த்தது பற்றிப் பேசிக் கொண்டபடி ஜன்னல் பக்கமாக உட்கார்ந்து இருப்பார்கள்.

அன்று அவர்கள் மாடியைப் பார்த்தபோது ரோட்டில் யாரோ ஒரு பெண் போய்க்கொண்டிருந்தாள் போலும். மேலே அவனுக்குச் சப்தம் கேட்டது.

“போறது டெய்லர் பொண்ணு... நடராசா தியேட்டர்தான் போவா போகலாம். மேல மூர்த்தி அண்ணனே கூப்பிடு.

யாரோ மேலேறி வந்தார்கள். அவன் நட்சத்திரங்களில் இருந்து விலகினான்.

“படத்துக்கு வாரீங்களா...”

“எங்க...

“நடராசா தியேட்டருக்கு..

அவனுக்குப் போகலாம் என்றே தோணியது. அவனுக்குத் தெரிந்த எல்லா ஹோட்டல்களிலும் வேலை பார்க்கும் பையன்கள் செகண்ட் ஷோ வருவார்கள். பெஞ்ச் டிக்கெட்டில் உட்கார்ந்தபடி கத்துவார்கள். அவனே கத்தியிருக்கிறான்.

அவன் எழுந்து பார்த்தான். கீழே சைக்கிளைத் தள்ளிக்கொண்டு கணேச பிள்ளை போய்க்கொண்டிருந்தார். முன் வாசல் பூட்டியிருந்தது. பின் வழி வாசல் அவர்களுக்கு உண்டு. எல்லோரும் இறங்கி கீழே வரும்போது மாஸ்டர் எதிர்ப்பட்டார். அவர் எங்கும் வருவது கிடையாது, அவன் கிட்டத்தில் வந்ததும் கேட்டார்.

“சினிமாவுக்கா...

தலையாட்டினார்கள் அவர்கள் ரோட்டில் இறங்கும்போது எதிரில் லாரி கடந்துபோனது.

படத்துக்கு நேரமிருந்தது. மெல்ல நடந்தார்கள். அவன் தெருக்களைப் பார்த்தபடியே வந்தான். இரவில் இந்தத் தெருக்களுக்கு இப்படியொரு அசாத்தியமான சுபாவம் வந்துவிடுகிறது. பாதித் தெருவை இருள் பிடித்திருக்க ஆங்காங்கே வெளிச்சம் தெரிந்தது. வீடுகளில் ஜன்னல்

அடைத்திருந்தார்கள். மூடிய கடைகளுக்குள் பேச்சரவம் கேட்டது.

கழுதைகள் சுவரோரமாக ஒண்டிப்போயிருந்தன. அசையாத மவுனம் கழுதைகளிடையே. குட்டிக் கழுதையொன்று அசைந்தபடியே திரிந்தது. நிழல் ஓடிக்கொண்டிருந்தது அருகில்.

செகண்ட் ஷோ போகும் சிலர் போய்க்கொண்டிருந்தார்கள். பையன்கள் படத்தைப் பற்றிப் பேசிக்கொண்டு வந்தார்கள். முக்கு ரோட்டுக்கு வரும்போது நிறைய கடைகளிருந்தன. பாட்டு போட்டுக் கொண்டிருந்தார்கள். கடந்து தியேட்டரை நெருங்கும் தூரத்தில் போகும்போது குமார் அவனிடம் சொன்னான்,

"அண்ணே. அத்தை... வீட்ல எல்லாம்..

அவர்கள் அத்தை என்றது பெரிய மாஸ்டரின் மனைவியை. அவரை எல்லோரும் மாமா என்றுதான் கூப்பிடுவார்கள். எல்லாப் பையன்களும் அவர் வீட்டில் சாப்பிட்டிருக்கிறார்கள். அவர்கள் அடித்துக்கொண்டு மண்டையை உடைத்தபோது, முதலாளியிடம் அடி வாங்கியபோது அவர் வீட்டுக்குத்தான் போவார்கள். அதிலும் புதுப் பையன்கள் உடன் ஒட்டிக்கொள்வார்கள்.

அவர் குள்ளமாயிருப்பார். கொஞ்சம் பருமனாகக்கூடத் தோன்றும். முகம் வெளுத்துத் தெரியும். வெகு ஆழத்தில் இருக்கும் கண்கள்.

அவர்கள் தியேட்டரை அடைந்தபோது டிக்கெட் கொடுக்கவில்லை. வெளியே சைக்கிளில் உட்கார்ந்தபடியே சிலர் பேசிக்கொண்டிருந் தார்கள். பெண்கள் கவுண்டர் திறந்தே கிடந்தது யாருமில்லை.

அவனை அத்தை பார்த்தது போலத் தெரிந்தது. சிரித்தான். அவர்கள் கிட்டத்தில் வந்தார்கள். அத்தைதான் கேட்டாள்,

"வீட்டுப் பக்கமே காணோம்.

சிரித்தான்.

அத்தையின் பெண்கள் உடன் நின்றுகொண்டிருந்தார்கள். கலா தான் கேட்டாள்,

"வழி ஞாபகமிருக்கும்ல.

அவனுக்கு வழி ஞாபகமிருந்தது. அவன் வீட்டில் இருந்து ஓடிவந்த இரண்டாம் நாளில் அவர் பிடித்துக்கொண்டார். அவனுக்கு ஞாபகமிருந்தது.

அப்போது மழைக்காலம். ஸ்கூலில் படித்துக்கொண்டிருந்தான். ஸ்கூல் காம்பவுண்ட் சுவரை ஒட்டியபடி நிறைய புற்கள் அடர்ந்து கிடந்தன. மழையில் புற்கள் புது நிறத்தில் இருந்தன. தினமும் மழை பெய்யும் அப்போதெல்லாம்.

அவன் வீடு ஸ்கூலில் இருந்து நான்கு தெரு தள்ளியிருந்தது.

அவன் வீட்டுக்கு எதிர் வீட்டில் வாத்தியார் இருந்தார். வாத்தியார் மகள் அவனோடுதான் படித்தாள். அவன் ஸ்கூலுக்குப் போகும்

வழியெங்கும் பார்த்தபடியே போவான்.

மண் புழு ஊர்ந்த தடம் நெளிவு நெளிவாக இருக்கும். சில சமயங்களில் நினைத்துக்கொண்டது போல மண் புழுவைப் போல நெளிந்தபடியே ஓடுவான். ஈரமணல் எங்கும் கால் தடம் பதிந்து போயிருக்கும். அல்லது யாராவது நடந்த காலடித் தடத்தின் மேல் நடந்து பள்ளிக்கூடம் போவான்.

வகுப்பின் போர்டு ஈரம் இறங்கி வரி வரியாக வழிந்திருக்கும். திருத்தி மடித்து வைத்த பேப்பரில் தண்ணீர் இறங்கியிருக்கும். அவன் நிறைய மண் புழுக்களைப் பிடித்து பாட்டிலில் போட்டுக் கொண்டு வருவான். பார்க்காத நேரங்களில் சிலர் சிலேட்டுகளில் விடுவான்.

கதறியபடி அலறி ஓடும் பெண் பிள்ளைகளுடன் விரட்டுவார்கள். தெருவில் மழையோடு அவர்கள் சப்தமும் கேட்கும். கோவில் குளம் நிறைந்துபோயிருக்கும். படிகள் தண்ணீருக்குள் மூழ்கிப் போயிருக்கும். உள்ளே படியில் நின்றபடியே ஆழம் காட்டுவார்கள்.

“முங்கல பாத்தியா. எட்டுப் பனை உயரம் ஆழம் மொத்தம்.”

அன்று அவன் வீட்டில் இருந்து கிளம்பும்போதே மழை பெய்யத் தொடங்கியது. தலைக்குக் கோணிப்பை போட்டபடியே சைக்கிளில் ஒருவர் போய்க்கொண்டிருந்தார். அவன் சைக்கிளைப் பிடித்தபடியே உடன் ஓடினான். தெரு முக்கில் சைக்கிள் பிரியும்போது வாத்தியார் மகள் போய்க்கொண்டிருந்தாள்.

அவளை எல்லோரும் கண்ணாடி என்பார்கள். அவனும் அப்படியே கூப்பிட்டான்,

“கண்ணாடிக்காரி.. கரிக்கட்டை.

அவள் சிணுங்கினாள். அவள் பின்னால் சென்று தோளைப் பிடித்துத் தள்ளினான். அவள் தண்ணீரில் விழுந்தாள். முகமெல்லாம் சேறாகியது. அவன் பஸ் ஓட்டுவதைப் போல வேகமாகக் கைகளை அசைத்தபடியே ஸ்கூலுக்குப் போனான்.

அவள் வரவில்லை. வீட்டுக்குப் போனபோது அம்மா சொன்னாள்,

“வாத்தியார் வீட்ல தேடினாங்க. எதுக்கு.

“யாருக்குத் தெரியும்.

“போய்க் கேட்டுட்டு வா..

அவன் வெளியே வருவது போலப் பாசாங்கு செய்தபடியே தெருவை விட்டு ஓடினான். தெப்பத்தின் வடக்கே மண்டபம் உண்டு. அங்கே போய் உட்கார்ந்துகொண்டான். பையன்கள் தண்ணீரில் குதித்துக்கொண்டிருந்தார்கள்.

அவன் பார்த்துக்கொண்டேயிருந்தான். மெல்ல மழை பெய்ய ஆரம்பித்தது. சுற்றிலும் மண்டபத்தின் சுவர்களில் தண்ணீர் இறங்கியது. தெப்பத்துத் தண்ணீரில் மழை விழுவதும், ஆட்களற்ற தெப்பத்துப்

படிக்கட்டும் புதிதாக இருந்தன.

இருட்டிய பிறகும் மழை பெய்துகொண்டிருந்தது. அவன் மண்டபத்துத் தூணில் சாய்ந்துகொண்டான். மழை வெறித்தபோது தவளைகளின் சப்தமும், சில்வண்டுகளின் சப்தமும் கேட்டுக்கொண்டிருந்தன.

இருளில் ஒடுங்கிப்போயிருந்தான். குளத்துப் படிக்கட்டுகளில் உருவம் கையில் விளக்கோடு தெரிந்தது. அவன் அய்யாவாகத்தான் இருக்கக்கூடும்.

விளக்கை உயர்த்திப் பிடித்தார். மழை ஈரத்தில் சரியாகத் தெரியவில்லை. அவர் குரல் கொடுத்தார்.

"மூர்த்தி. லேய் அடிக்க மாட்டேன் வெளியே வா..

அவனுக்கு பயமாக இருந்தது. வெளியே வந்தான். கிட்டத்தில் அய்யாவின் விளக்கு வெளிச்சத்தில் படிக்கட்டுகள் மினுமினுத்தன. அய்யா கூப்பிட்டார்,

"வீட்டுக்கு வா.

நடந்து போனபோது தெருவில் யாருமில்லை. வீட்டுக்கு அருகாமையில் வந்ததும் காதைப் பிடித்தார். வலித்தது. விளக்கை, கதவைத் தள்ளி உள்ளே வைத்துவிட்டுச் செவுளோடு அறைந்தார்.

"வெளியே கெட.. அப்பத்தான் அறிவு வரும்."

அம்மா எதுவும் பேசவில்லை. திண்ணையில் உட்கார்ந்து இருந்தான். வாத்தியார் வீட்டில் லைட் எரிந்தது. அவனுக்கு அய்யாவின் மேல் கோபம் கோபமாக வந்தது. பேசாமல் எங்காவது ஓடிவிடலாம் எனத் தோணியது.

காலையில் அவன் கிளம்பியபோது அம்மா உண்டியலை உடைத்துக் காசை எடுத்தான். நிறைய சில்லறை இருந்தது. அவன் ஊரைக் கடந்து வரும்போது எதிர்ப்பட்ட சித்தப்பாவிடம் சொன்னான்,

"வாத்தியார் லீவு லெட்டர் கொடுக்கப் போறேன்."

அவன் ரயிலில்தான் வந்தான். நிறைய கூட்டமிருந்தது. கோவில்பட்டி ரயில்வே ஸ்டேஷன் அனாதியாக இருந்தது. அவன் வந்து இறங்கும்போது அங்கே மழையில்லை. வெளியே சுற்றினான். படம் பார்த்தான். இரவில் சர்ச்சின் வெளியே தூங்கினான்.

மறுநாள் இரவில் மழை பெய்தது. பசித்தது. சுருண்டு படுத்தான். குளிரடித்தது. படம் விட்டுப் போகும் ரோட்டில் நின்றபோது பெரிய மாஸ்டர் அவனைக் கூப்பிட்டார்,

"இங்க வா.. வே. எந்த ஊரு."

அவன் பதில் சொல்லவில்லை.

"ஓடி வந்துட்டியா வீட்லேயிருந்து."

நின்றுகொண்டேயிருந்தான். அவனைக் கூட்டிக்கொண்டு தெரு வழியாகப் போனார். மழைக்குப் பிந்திய தெரு பிய்ந்து, சிதறியபடி

இருந்தது. அவர் உடனே நடந்தான். நிறைய தெருக்களைத் தாண்டி, அவன் நின்ற வீட்டில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. கதவைத் தட்டினார்.

“மீனாட்சி. மீனாட்சி”

கதவு திறந்ததும் அந்தப் பெண் எதிர்ப்பட்டாள், அவனைப் பார்த்தாள். உள்ளே பிள்ளைகள் தூங்கிக்கொண்டிருந்தன. அவள் எதுவும் கேட்கவில்லை. அவன் சாப்பிட்டுத் தூங்கினான்.

காலையில் அவர்தான் அவனைக் கடைக்கு அழைத்துப்போனார்.

கடையில் நாலைந்து பெரிய பையன்கள் இருந்தார்கள். முதலாளியிடம் ஏதோ சொன்னார். அவன் கூடவே நின்றுகொண்டான். எல்லோரும் மாஸ்டரை மாமா என்றார்கள்.

பகலெல்லாம் கடையில் வேலை செய்தான். எப்போதும் கூட்டம் வந்துகொண்டே இருந்தது. பையன்கள் அவனிடம் ஒரு வாளியும், வாழை இலையின் தண்டும் கொடுத்தார்கள். அன்றிரவு போகும்போது மாஸ்டர் சொன்னார்.

“மேலயே தங்கிக்க... முருகா, இவனையும் கூட்டிக்கிட்டு மேல போ.”

அவன் மேலே போனபோது இரண்டு பையன்கள் ஏதோ படித்துக் கொண்டிருந்தார்கள். இவனைப் பார்த்ததும் சிரித்தார்கள். பீடி குடித்துக்கொண்டிருந்த ஒருவன் கிட்டத்தில் வந்து நின்றான்.

“எந்த ஊருடா உனக்கு?”

“மாமாதான் சேத்தாரு.

“மருமகனா.. யாருக்கு.

அவர்கள் சிரித்தார்கள். அவன் ஜன்னலோரமாக ஒண்டிக்கொண்டான். அவர்கள் சிரிப்பும், பேச்சும் புரியவில்லை. அவன் இருந்த நாலு நாளில் ஒருவன் மட்டுமே அவனிடம் அதிகம் கிண்டல் பண்ணினான். அவன் கருப்பாக, உயரமாக இருந்தான். அவன் கிட்டத்தில் வந்து கிள்ளுவான்.

சினிமாக்களில் வருவது போல அவனைத் தூக்கிச் சுற்றுவான். அவனுக்கு அழுகையாக வரும். அதை மாமாவிடம் சொன்னபோது அவனைக் கூப்பிட்டார். எதுவும் கேட்கவில்லை. கிட்டத்தில் இழுத்து அறைந்தார்.

“வேற கடைக்குப் போடா. முதலாளி, கணக்குத் தீத்துடுங்க... அவன் ஏற்கெனவே சினிமாவுக்குப் போகக் காசு வாங்கியிருப்பான் போல இருந்தது. போகச் சொன்னதும் கடையை விட்டுப் போய் விட்டான்.

மாமா அவனிடம் மெதுவான குரலில் சொன்னார்.

“நீ வேண்ணா ஊருக்குப் போயிறேன்.

அவன் ஊருக்குப் போனபோது ஸ்கூல் முடிந்துபோயிருந்தது. சில நாள்கள் வீட்டில் இருந்தான். அவன் சொல்லிக்கொண்டு திரும்பக் கிளம்பியபோது வெயில் காலம் ஏகமாக நிறைந்திருந்தது.

அவள் கேட்டதற்கு அவன் பதில் சொல்லியபோது மாமா சைக்கிளில் வந்தார். டிக்கெட் கொடுக்க ஆரம்பித்திருந்தார்கள். அவனிடம் சைக்கிளை நிறுத்திவிட்டுக் கேட்டார்.

"மாப்பிள்ளை, படத்துக்கா..."

பையன்கள் வரிசையில் நின்றார்கள். அவர் சிகரெட் வாங்கி பற்ற வைத்துக்கொண்டார்.

"பிள்ளை கடைய மூடிடுவார் போலத் தெரியுது."

"எப்படித் தெரியுது."

"வசூல் இல்லை. கல்லாப் பெட்டி காலி. இதிலே புதுசா மெயின் பஜார்ல மெட்ரோன்னு ஒண்ணு திறக்கப்போறான் மதுரைக்காரன்."

"என்ன சொன்னாரு."

"என்ன சொல்வாரு. கடையை இடிச்சு ரோட்டைப் பாத்து வைக்கச் சொன்னேன். அவரு கடைய மூடி மொத்தமாகப் போக லாம்னு நெனைக்காரு பாப்போம்.

படம் பார்த்தார்கள். ஏராளமான குதிரைகளைத் தொடர்ந்து விரட்டிக்கொண்டிருந்தார்கள். திரும்பி வரும்போது பின்னிரவாகிப் போயிருந்தது. மாமா பாதியிலே கழண்டு கொண்டார். அந்தப் பெண்கள் தூக்கக் கலக்கத்தோடு சிரித்தார்கள்.

"வீட்டுக்கு வாங்க..."என்றார்கள்.

அவர்கள் போன பின்பு பையன்கள் ரோட்டில் பாடியபடி வந்தார்கள். அவர்கள் முன்னால் மணிசங்கரில் வேலை பார்க்கும் பையன்கள் போய்க்கொண்டிருந்தார்கள். அவனைப் பார்த்ததும் ஒரு பையன் மட்டும் வந்து கேட்டான்.

"உங்க கடைக்கு வரட்டா.. அங்க மாஸ்டர் மண்டைய ஒடைக் காரு."

"வேணாம். இதையே, பிள்ளை மூடப்போறாராம்."

கிளை பிரிந்து போனார்கள். அவனுக்கு அன்றிரவு நல்ல தூக்கம் வந்தது. எப்போதும் போலவே பையன்கள் கீழே பாத்திரத்தை உருட்டும் சப்தத்தில் முழிக்கும்போது எதிர் ரோட்டில் வெயில் விழுந்துகொண்டிருந்தது. புதிதாக ஹோட்டல் திறக்கப் போவதற்கு நோட்டீஸ் ஒட்டியிருந்தார்கள்.

அவன் குளித்து வேறு வேஷ்டியைக் கட்டிக்கொண்டு டேபிளுக்கு வந்தபோது இரண்டொருவர் காப்பி குடித்துக்கொண்டிருந்தார்கள். மாஸ்டர் உள்ளே தெரிந்தார்

மாமா வெளியே முதலாளியிடம் சரக்கு பற்றிப் பேசிக்கொண்டிருப்பது கேட்டது.

"எல்லாம் குறைச்சுப் போடு... புது ஹோட்டல் தெறக்கான்ல. நிறைய அயிட்டம் வேணாம்.

அன்று அவ்வளவு கூட்டமில்லை. மதிய வேளையில் கடைப் பையன் வந்து சொன்னான்.

"ஹோட்டல் நிரம்பி வழியுது. நால் ரூவா சாப்பாடு.

அவர்கள் சாப்பிடும்போது மணி மூன்றாகியது. ரெகுலராக வரும் சிலர்கூட இன்று காணவில்லை. காலி மேஜையும் நாற்காலியுமாயிருந்தது ஹோட்டல். எதிரில் தெரியும் நிலைக் கண்ணாடியும் காந்தி படமும் சலனமற்று அப்படியே இருந்தன. சாயங்காலமாகக் கொஞ்சம் கூட்டம் வந்தது. அவன் வேலையில் ஆழ்ந்து போனான். இருட்டும்போது கடை காலியாகிவிட்டது. பையன்கள் போய்விட்டார்கள். பிள்ளை மாமாவிடம் பேசிக் கொண்டிருந்தார்.

"பேசாம ஹோட்டலை மூடிட்டு. எடத்தை வித்தறலாம்னு இருக்கேன்."

"என்ன அவசரம்."

"அவசரமென்ன. தாங்க முடியலே. எழுபது ரூவாய்க்கு ஓடியிருக்கு இன்னைக்கு. இடத்தை ஒரு லட்சத்துக்குக் கேக்கான். இடிச்சு லாட்ஜ் கட்டப்போறேங்கா. வித்திற வேண்டியதுதான்."

"யாருக்கு?"

"மதுரை பார்ட்டிதான்."

"பிறகு என்ன செய்யறதாம்."

"பிள்ளையைக் கட்டிக் குடுத்திட்டு சொந்த ஊர்ப் பக்கம் போக வேண்டியதுதான்."

மாமாவுக்கு ஏக வருத்தமாக இருந்தது. அந்த ஊரில் பெரிய ஹோட்டல் என இருந்தது அவர் கடைதான். மாமா வேலைக்கு வரும்போது ஹோட்டல் ஏக தடபுடலாக இருந்தது. இங்கிலீஸ்காரன் காலத்திலே ஆரம்பித்ததாக இருக்கும். பெரிய மர மேஜைகள், நாற்காலிகள் கிடக்கும்.

ஓரத்தில் கிராமபோன் பெட்டிகூட உண்டு. அங்கு காபி சாப்பிட வராதவர்களே இருக்க மாட்டார்கள். பிள்ளையிடம் அப்போது ஒரு மினுமினுப்பு இருந்தது. வெள்ளை வேஷ்டி, சட்டையில் கல்லாவில் இருப்பார். பின்னால் நிறைய பெரிய மனிதர்களோடு எடுத்துக்கொண்ட படங்கள்.

பிள்ளைக்குப் பூர்வீகம் திருநெல்வேலிப் பக்கம் என்றாலும், இங்கு வந்து தங்கி ரொம்ப நாள்களானவர். நிறைய அயிட்டங்கள் போடும் லிஸ்ட் அவரிடம் இருந்து உள்ளே வந்து கொண்டேயிருக்கும். ரோட்டில் நாலைந்து ஹோட்டல்கள் வைத்த பிறகுகூட கூட்டம்

குறையவில்லை.

வெளிப் பார்ட்டிகள் போட்ட கடைகளின் ஜோரில்தான் கூட்டம் குறைந்துகொண்டே இருந்தது.

மாமா கேட்டார்.

“பேசி முடிச்சாச்சா.

“நாளைக்கு முடிஞ்சிரும்... வெள்ளிக்கிழமையில இருந்து நிறுத்திக்கு வம். கணக்குப் பாத்து வாங்கிக்கோங்க.”

மாமா பதில் சொல்லவில்லை. அன்றிரவு மாமாவும், பிள்ளையும் பேசிக்கொண்டபடிதான் போனார்கள். சைக்கிள் மாமாவிடமிருந்தது. பிள்ளை பாதியிலேயே பிரிந்து போனார் வழியெங்கும் இருள் நிறைந்துபோயிருந்தது. கடையை மூடிவிடலாம் என்ற முடிவுக்கு அவர் வருவதற்கே நிறைய நாள்கள் ஆயின.

அவர் ஹோட்டலுக்கு எத்தனை பேர் வந்திருக்கிறார்கள். அவருக்கு ஞாபகமிருக்கிறது. வெள்ளைக்காரர்கள்கூட வந்திருக்கிறார்கள். ஒரு கட்டத்தில் சுதேசிக்காரர்களான காந்தி தியாகிகள் வந்து பேசியபடியே சாப்பிட்டுப் போயிருக்கிறார்கள்.

ஒரு கட்டத்தில் அவர்களுக்குக்காகத் தனி மேஜை இருந்தது. அவர் கடையிருந்த தெரு வழியாக ஒரு நாள் சத்தியாகிரகிகள் ஊர்வலம் போய்க்கொண்டிருந்தார்கள். ஊர்வலம் கடையைத் தாண்டிப் போனபோது ஊர்வலத்தினை நோக்கி அடிதடி தொடங் கியது.

எங்கிருந்து தொடங்கியது எனத் தெரியாதபோதும் கூட்டம் திசைக்கொன்றாகக் கலைந்து ஓடியது. போலீஸாரின் தாக்குதல் தொடர்ந்து பிள்ளையின் கடைக்குள் ஓடி வந்தார்கள் பிள்ளை அதை ஏன் செய்தார் என இன்னும் பிடிபடவில்லை.

உள்ளே அனைவரையும் வரச் சொல்லி கதவைச் சாத்திவிட்டு மேலேறிக் கத்தினார்.

ஹோட்டல் முழுவதும் சுதேசிகள் நிறைந்தார்கள். காந்தியைப் பற்றிப் பேசிக்கொண்டார்கள். அதன்பிறகு அவர் கடைக்கு நிறைய தலைவர்கள் வந்தார்கள்.

அவர் காந்தி இறந்துபோன அன்றிலிருந்து பத்து நாள்கள் கடையை மூடினார். சுதந்தரத்துக்குப் பின்பு அவருக்கு மக்களிடையே உள்ள மாற்றங்களும் தேவைகளும் புரியாமலே போனது. அதன்பின்பு நிறையவே நடந்துபோனது. ஒரு நாள் உள்ளூர் சங்கக் கூட்டத்தில் அவரை கௌரவித்தபோது யாரோ இதை “சுதேசி ஹோட்டல்” என்றார்கள். ஏதோ பத்திரிகையில் கூட அவர் படம் போட்டு எழுதியிருந்தார்கள்.

அன்றிரவு அவன் மேலே படுத்திருக்கும்போது பையன்கள் சொன்னார்கள்.

"மெட்ரோவுக்கு ஆள் வேணுமாம். போவமா "

அவன் பதில் சொல்லவில்லை. அன்றிரவு நட்சத்திரங்களற்ற வானம் இருண்டுபோயிருந்தது. அவனுக்கு என்ன செய்வது எனத் தெரியவில்லை. யோசித்துக்கொண்டிருந்தான்.

மறுநாள் மத்தியானமே கடையை முடித்துக்கொண்டார்கள் காலியான சேர்களில் பையன்கள் உட்கார்ந்திருந்தார்கள். பிள்ளை கணக்கு நோட்டை எடுத்துக்கொண்டு வந்தார். அவனைத் தவிர மற்றப் பையன்களுக்கு அம்பது ரூவாய்தான் சம்பளம். அவனுக்கு மட்டும் நூற்றுப் பத்து ரூபாய். யாருக்கும் மாதத்தில் கிடையாது. தேவையானபோது வாங்கிக் கொள்வார்கள். எப்பவாவதுதான் கணக்குத் தீர்ப்பார்கள் மாஸ்டருக்கு நானூறு ரூபாய்.

வரிசையாகப் பையன்கள் வாங்கியிருந்த பணம் எழுதப்பட்டிருந்தது. நல்ல கையெழுத்து பிள்ளைக்கு. பையன்களைப் பார்த்துப் பிள்ளை சொன்னார்,

"வேற கடைய பாத்து சேர்ந்து பிழைச்சுக்கோங்கப்பா... எங்கயிருந்தாலும் நல்லாயிருங்க."

சாயங்காலமே பையன்கள் ஊருக்குப் புறப்பட்டுப் போனார்கள். அவன் மட்டும் இருந்தான். மாமா வீட்டுக்குப் போகலாம் என நினைத்தான்.

தெரு விரிந்துபோயிருந்தது. போய்க்கொண்டிருந்தான். மாமா வீட்டில் இருந்தார். அவன் போனதும் எழுந்துகொண்டார். இருவரும் கிளம்பி நந்தவனத்து ரோட்டில் போனார்கள். காற்று வெளி சூழ்ந்திருந்தது எங்கும்.

மாமா ஏக வருத்தத்தில் இருந்தார் போல இருந்தது. நீண்ட நேரத்துக்குப் பிறகு சொன்னார்.

"நானும் வேற ஹோட்டலுக்கு வேலைக்குப் போகணும்... வர்றயா...

"இல்ல. ஊருக்குப் போறேன்."

"பின்ன.. வேலை.

அவன் பதில் சொல்லவில்லை.

அவன் ஊருக்குக் கிளம்பியபோது மழை பெய்யும் போல இருந்தது. லேசாகக் காற்றடித்தது. ரயிலில் கிளம்பிப் போனான். ஊரைக் கடந்து போன பின்பு தூறத் தொடங்கியது. மழையில் நனைந்தபடி சில பையன்கள் கை காட்டிக்கொண்டு ஓடினார்கள். அவனும் பதிலுக்குக் கை காட்டினான். மழை மூஞ்சியில் அடித்தது.

புலிக்கட்டம்

அவன் கைகள் பின்புறமாகக் கட்டப்பட்டிருந்தன. தன்னைச் சுற்றிலும் உள்ள புறவெளியில் பனி இறங்கிக்கொண்டிருப்பதைப் பார்த்துக்கொண்டிருந்தான். திரட்சி திரட்சியாக வெண்மை படர்ந்து நிரம்புகின்றது. குளிரின் குணத்தால் வீடுகள்கூட உருமாறத் தொடங்குகின்றன. சிவப்பு நாழி ஓட்டு வீடுகள் வளைவுகளில் இறங்கும் வெம்பா வீட்டின் செங்கற்களை ஈரமாக்கி வெறிக்கச் செய்கின்றன. மூன்று தெருக்களும் பிரியும் முனையில் இருந்தது அந்த மைதானம். அவனைத் தவிர அந்த மைதானத்தில் இப்போது நின்றுகொண்டிருப்பவை இரண்டு மரங்கள் தான். அவன் கைகள் புங்கை மரத்தில் கட்டப்பட்டிருந்தன. உதடு வெடிக்க அவனையும் குளிர் பற்றிக் கொண்டிருந்தது. உறக்கமற்ற வான்கோழியொன்று கவக்! கவக்! என்றபடி தெருவில் அலைந்து கொண்டிருப்பதைப் பார்த்துக்கொண்டிருந்தான். வான்கோழியின் அசைவு தெருவையே சலனம் கொள்ளச் செய்கிறது.

நீளும் பின்னிரவில்தான் நிலா வெளிப்பட்டிருக்கின்றது. முகத்தில் சரியும் தலைமயிரை நீக்கக்கூடக் கைகளை அசைக்க முடியாது. வெகு வலுவாகவே கட்டியிருந்தார்கள். புங்கை மரத்தில் காய்கள் சடை சடையாகத் தொங்குகின்றன. பூக்களின் வாடை வேறு. மூன்று தெருவினுள்ளும் தன் போக்கில் அலைகிறது காற்று. எல்லா ஜன்னல்களும் அடைக்கப்பட்டிருந்தன. வானம் நீலம் இருண்டு கறுத்து வெடித்தபடியே நகர்கின்றது. புங்கை மரத்தின் பட்டையைப் போல அவனும் மரத்தோடு சேர்ந்து

போயிருந்தான். மரத்தின் இலைகள் விரலை அசைத்தபடியிருந்தன. உடம்பின் அடிபட்ட காயங்களில் ஈரக்காற்று புகுந்து வேதனை கொள்ள வைக்கின்றது. தன் கால்களைப் பார்த்தபடியே நின்று கொண்டிருந்தான். காற்று தூக்கி எறியப்பட்ட ஓலைப்பெட்டியை அறுக்கும் சப்தம் கேட்டபடியே இருந்தது. வயசாளியின் இருமலும், தொடர்ந்து புலம்பலும் கேட்கின்றன. அவன் உடம்பில் இரண்டு எறும்புகள் இறங்கத் தொடங்கி இருந்தன. புங்கை மரத்தின் பூக்களின் அடியில் உறங்கிக்கொண்டிருந்த ஜோடி எறும்புகளாக இருக்கக் கூடும். கறுத்த, கட்டுகட்டான வயிற்றோடு எறும்புகள் அவன் நெற்றியில் வந்து நின்று மரத்தின் உருவம் திடீரென மாறிவிட்டது போலத் திகைப்படைந்து, கீழே இறங்க வழியின்றி அலையத் தொடங் கின. வெகுவேகமாக முகத்தின் பரப்பில் எறும்புகள் ஊர்ந்து காது வழியே தோளில் இறங்கி, திரும்பவும் முகத்துக்கே வந்தன. எறும்பினை ஒருபோதும் இத்தனை அருகில் கண்டதேயில்லை. நுட்ப வசீகரமும், உருண்ட கண்களுமாக அவற்றின் அலைச்சல் தீவிரமாகின்றது. உடல் முழுவதும் எறும்பின் பிடியில் சிக்கிச் சிலிர்த்தது போலாகியது. அவன் இச்சையின்றியே முகம் சுருங்கி விரிகின்றது. இரண்டு எறும்புகளும் நுண்ணிய கால்களால் முகத்தைப் பற்றிக்கொண்டு நகர்கின்றன. வழியின்றி மீண்டும் மரத்தின் கிளைகளை நோக்கி நகர்ந்தன எறும்புகள்.

இந்த இரவின் சில மணி நேரங்களுக்கு முன்பு அவன்கூட ஈர ஓடுகளைப் பற்றி இப்படித்தான் நகர்ந்துகொண்டிருந்தான். அப்போதே காற்றில் குளிர் இருந்தது. சுவர் சுவராகக் கடந்து மேற்கு வளைசலில் அவன் இரவில் போய்க்கொண்டிருக்கும் போது பூசணிக் கொடிகளில் பூக்கள் இரவில் பூத்துவிடுவதைப் பார்த்தான். பின்பனிக் காலத்தில் கேட்பாரற்ற பூசணிக் காய்களின் மீது இலைகள் படர்ந்து மறைக் கின்றன. நாய்களும்கூட அடங்கி மண்ணில் முகத்தைப் புதைத்து உறங்குகின்றன. அவன் இடுப்பில் இருந்த சூரிக் கத்தியை உருவி சுவரில் படர்ந்த கொடிகளை வெட்டியபடியே நடந்தான். சுவர்கள் பொதுமியிருந்தன. பின்கட்டில் உலர வைத்த தானியங்கள், கொத்தக் கோழிகள் அற்றுக் காய்கின்றன. நீர்த்தொட்டிகளின் சலனமற்ற நீர், நட்சத்திரங்களைக் காட்டிக்கொண்டிருந்தது. தன் முகத்தையும் அதில் பார்த்துக்கொண்டான். சாக்குப் படுதாக்கள் தொங்கும் தொழுவத்தில் இறங்கும்போது மாடுகள் விழித்துக்கொண்டுதான் இருந்தன. தாங்கு கல் வழியே ஏறி ஓட்டின் மீது உட்கார்ந்து கொண்டான். மெல்ல நகர்ந்து ஏறியதும், மைதானத்தின் புங்கை மரங்களும், வேதக் கோயிலின் மணிக்கூண்டும், கண்ணாடி ஜன்னல் களும் தெரிந்தன. இரண்டடுக்கு ஓட்டுச் சரிவினுள் புறாக்கள் இருக்கின்றதா எனப் பார்த்தான். ஓட்டை மிதித்து நடந்தால் புறாக்கள் விம்மி குரல் எழுப்பிவிடும். மரத்தூசுகள் அடர்ந்த அந்தப் பொந்தில் புறாக்கள் இல்லை. குருவி முட்டை தென்பட்டது. வெகு அலட்சியமாகவும் தைரியத்துடனும் ஓட்டின் மீது உட்கார்ந்

திருந்தான்.

அவன் ஏறியிருந்த வீட்டில் பெண்கள் மட்டுமே இருந்தார்கள். அந்த வீட்டில் கொடுக்கல் – வாங்கல் ரொக்கம் எப்போதும் உண்டு. ஆண்கள் மாதம் ஒரு நாள் வசூலுக்குப் போய்விடுவார்கள். இன்று அது தெரிந்துதான் வந்திருந்தான்.

குனிந்து கண்ணாடி ஓடு வழியாக உள்ளே பார்த்தான். கறுப்பேறிய தரை தெரிந்தது. அறையின் ஒரு மூலையில் விளக்கு எரிந்து கொண்டிருப்பது போலும் வெளிச்சம் தரைக்கு வருவதும் போவதுமாக இருந்தது. கிழக்கு ஓடு ஒன்றை எடுத்துவிட்டால் உள்ளே இறங்கிவிடலாம். ஓடு சரியாகச் சொருகப்பட்டிருந்தது. கத்தியைக் கொடுத்து நெம்பினான். ஓடு உடைபட்டது. பாதி ஓட்டைக் கையில் எடுக்கும் போது எதிர் மாடியிலிருந்து பூனை தாவி அடுத்த ஓட்டில் நடந்தது. வாலைச் சுருட்டியபடியே அவனைப் பார்த்தபடியே போனது. உடைபட்ட ஓட்டின் வழியே காற்று குபுகுபுவெனப் புகுந்து வீடெங்கும் நிறைகிறது. விளக்கின் வெளிச்சமில்லை. அவன் ஈர ஓடுகளைப் பற்றி உள்ளே இறங்க வழி செய்துகொண்டிருந்தபோது, எதிர்பாராமல் கை வைத்திருந்த ஓடு உடைந்தது. எழும் முன்பு வரிசையாக ஓடுகள் உடையும் சப்தத்துடன் உயரத்திலிருந்து வீட்டினுள் விழுந்தான்.

பெண்கள் சப்தத்துடன் எழுந்துகொண்டார்கள். மூத்தவள் கதவைத் திறந்து தெருவில் கத்தியபடி ஓடினாள். தெருவில் அரவம் கேட்கும் முன்பு எழுந்து ஓட முயன்றான். யாரோ அவன் கால்களைக் குறி வைத்து ஊனு கம்பை வீசினார்கள். கால்கள் மடங்கத் தெருவில் விழுந்தான். நாய்களின் தூக்கம் கலைந்த கரைப்பும், குழந்தைகளின் அழுகையொலியும் கேட்கத் தொடங்கின.

அவன் தலைமயிரைப் பற்றியிருந்த கரம் ஒரு வயசாளியினுடையதாக இருந்தது. அரிக்கேன் விளக்குகளுடன் வந்த சிலர் தூரத்தில் வெறித்துக்கொண்டிருந்தார்கள். பெரியவள் ஓடும் போது தள்ளிய கோழிக்கூட்டிலிருந்த குஞ்சுகள் எதையும் அறியாது மேயத் தொடங்கியிருந்தன. முகத்துக்கு எதிராகத் தீக்குச்சியைக் கிழித்துக் காட்டியதும் அவன் கண்களை மூடிக் கொண்டான். ஓங்கி அறை விழுந்தது. ஆள் அடையாளம் சுலபமாகக் கண்டுவிட்டார்கள். பெண்கள் கலையாத உறக்கத்துடன் அவிழ்ந்த சேலைகளைக் கட்டிக்கொண்டிருந்தார்கள். பிடரியைப் பிடித்துத் தள்ளியபடி அவனை மைதானத்திலிருக்கும் புங்கை மரத்தில் கட்டி வைக்கக் கூட்டிப் போனபோது, எப்போதுமே உறங்கிக்கொண்டிருக்கும் குருடன் எழுந்து எதையோ விசாரித்தபடி அருகில் வந்து கொண்டிருந்தான். அவன் குரல் இரவுப் பூச்சிகளின் அறுபட்ட சப்தத்தை ஞாபகப்படுத்தின. உறங்கிய நாய்களைத் திட்டியபடியே வந்தான் குருடன்.

நிறைய பணமும் தங்கமும் வைத்திருப்பதாக எல்லோரும் நம்பிக்கை கொண்டிருந்த அந்தக் குருடன், தன் படுக்கையிலேதான் எல்லாவற்றையும் வைத்திருந்தான். எப்போதும் உறங்கியபடி கிடக்கும் அவன்

குரல் கசப்பும் பிசுபிசுப்பும் கொண்டிருந்தது. அருகில் வந்து அவன் முகத்தில் விரல்களைப் பதித்து அலையும் குருடனின் விரல்கள் மண்புழுவின் நெறிவைப் போல இருந்தன. அசூயையாக இருந்தது. பெருமூச்சு விட்டபடியே திட்டினான் குருடன். தனியே வீட்டுக்குப் போகும்வரை பேசியபடியே நடந்த குருடனுக்குப் பின்னால் அவனைத் தள்ளிக் கொண்டு வந்து புங்கை மரத்தில் கட்டினார்கள்

அம்மாவின் பின் ஒளிந்து பார்த்துக்கொண்டிருந்த சிறுமிகளில் ஒருத்தியை அவன் பார்த்தபடியே இருந்தான். அவள், அம்மாவிடம் “கள்ளப்பய, என்னயவே பாக்கான்” எனச் சிணுங்கினாள். சிறுமியின் முகத்தைச் சேலை மறைத்துக்கொண்டது. உறக்கம் கலைந்த இரண்டு சிறுவர்கள் மரத்தின் எதிரேயிருந்த கல்லில் உட்கார்ந்து அவனைப் பார்த்தபடியே இருந்தார்கள். ஒடிசலான, கன்னம் ஒட்டிய உருவத்தை, கள்ளன் என அவர்கள் ஒருபோதும் நினைவு கொண்டதில்லை. அவன் தலைமயிர் சரியக் குனிந்திருந்தான். காலையில் போலீஸ் ஸ்டேஷனுக்கு அவனைக் கூட்டிப்போகும்போது உடன் போக வேணுமென சிறுவர்கள் பேசிக்கொண்டார்கள். கூட்டம் கலைந் திருந்தது. அந்தச் சிறுவர்களை வீட்டுக்குள் விரட்டிவிட்டுப் பெரியவர் கல்லில் உட்கார்ந்து சிகரெட் பிடித்துக்கொண்டிருந்தார். வீட்டுப் பெண்கள் அலுத்தபடியே கலைந்து போகும்போது அவன் மனைவியின் சாயல் கொண்ட ஒருத்திகூட அந்தக் கூட்டத்தில் கலைந்துபோனாள். வீட்டில் விளக்கைப் பெரிதாகத் தூண்டிவிட்டு உறக்கம் வரும்வரை அவர்கள் இனிப் பேசிக்கொண்டிருப்பார்கள் எனத் தோணியது.

சிகரெட் புகை அவன் முகத்தைச் சுற்றியது. நாக்கில் சிகரெட் சுவை தானே ஊறியது. காற்றைக் கிழித்துக்கொண்டான். வீட்டில் இந்நேரம் மனைவி உறங்கியிருப்பாள். அவளுக்குக் குழந்தைகள் மேல் எப்போதும் ஆசைதான். எட்டு வருசமாகியும் குழந்தையில்லை. இப்போதும் சிறு பெண்ணைப் போல யார் வீட்டிலாவது திருகைச் சுற்றிக்கொண்டிருப்பாள். அவளுக்கு மிகச் சிறிய கண்கள். அவள் பெட்டியில், உலர்ந்த தாழம்பூ மடல் கிடப்பதுகூட ஏனோ ஞாபகம் வருகிறது.

திடீரென ஏற்பட்ட அதிர்வென்று ஊர் அடங்காமலேதான் இருந்தது. அந்த இரண்டு எறும்புகள் அவன் தலைக்கு வருவதும், மேலேறுவதுமாகவே அலைந்தன. பனி கால்களின் அடியில் இறங்கு வதை உணர்ந்தான். பறவைகள் எதுவும் அடையாத மரமாக இருந்தது.

கட்டி வைக்கப்பட்ட அவனுக்குக் காவலாக யாராவது ஒருவர் மட்டும் மைதானத்தில் இருக்கலாம் எனப் பேசிக்கொண்டார்கள். எப்போதோ பல வருடங்களுக்கு முன்பு பிடிபட்டு கட்டி வைக்கப்பட்ட கள்ளன் ஒருவன் உதடுகள் வெடித்து, குளிர் தாங்காது செத்துக் கிடந்ததை யாரும் இன்னும் மறக்கவே இல்லை. அந்த மரம் இப்போ தில்லை. பெண்களின் பயத்தால் வெட்டுப்பட்டுப் போனது.

ஆனால் இறந்துபோன கள்ளன் இரவெல்லாம் கடுமையாக

முனங்கினான். திடீரென வெறி வந்தது போலக் கத்துவான். மரத்தையே சாய்த்துக்கொண்டு ஓடுபவன் போல மூர்க்கம் கொள்வான். சமயங் களில் தானே பலருடன் பேசிக்கொண்டது போலப் பேசிக்கொண்டிருந் தான். அப்போதும் நல்ல பனிக்காலம். நடமாட்டம் அற்ற தெருக்கள். அவன் குளிரை, பேயை விரட்டுவது போல இரவெல்லாம் திட்டியபடி இருந்தான். அவன் சப்தம் ஒய்ந்து இறந்துபோனபோது ஊரில் வெம்பா அடர்ந்துபோயிருந்தது. மூன்று நாள்களுக்கு அவன் உடல் ஊரிலே கிடந்தது. ஆள் அடையாளம் தேடித் தெற்குப்பக்கம் போனவர்களும் திரும்பிவிட்டார்கள். அவன் முதுகில் தேளின் உருவத்தைப் பச்சை குத்தியிருந்தான். அந்தக் கள்ளன் யாரென்று தெரியவே இல்லை. அவனை அந்த ஊர்க்காரர்களே சேர்ந்து எரித்து வந்தார்கள். அதற்குப் பிறகு அந்த வருடம் ஊரில் கடுமையான தண்ணீர்ப் பஞ்சம் வந்ததையும், ஊரின் பல வீடுகளில் தேள் உதிர்ந்ததையும் கண்டார்கள். அந்த மடங்கிய கால்கள் பெண்களின் ஞாபகத்தினுள் புதையுண்டிருந்தது நெடுங்காலமாய்.

அதன்பிறகு இப்போதுதான் அவர்கள் இன்னொருவனைப் பிடித் திருக்கிறார்கள். காவலுக்காயிருந்தவன் ஓர் இடத்தில் நிற்காமல் நடப்பதும், கைகளைச் சொடுக்கிக்கொள்வதுமாக இருந்தான். அவன் விரல்களில் பாம்பு மோதிரமிட்டிருப்பது அவனுக்குத் தெரிந்தது. காவலுக்கு இருந்தவன் சமயங்களில் அவன் அருகில் வந்து தலை மயிரைப் பற்றித் தூக்கி மூச்சு வருகிறதா எனப் பார்த்துக்கொண்டான். பனி அதிகமானதும் காவல்காரனும் போய்விட்ட பின்பு அவன் மட்டும் நின்றிருந்தான்.

விழித்திருக்க இருக்க பசியும் தாகமும் அதிகமாகிக்கொண்டே போனது. அந்தச் சிறுவர்கள் இன்று இரவு உறங்க மாட்டார்கள் என்றே தோணியது.

அவன் சிறுவனாகயிருந்தபோது உறங்குவதைவிடவும் ஊர் சுற்றுவதி லேதான் விருப்பப்பட்டான். உறங்குவதாயினும் காட்டு வெளியின் கோயில் படிகளிலோ, வைக்கோல் போரில் புரண்டோ உறங்க விரும்பினான். அய்யாவின் பழக்கமும் அப்படியே இருந்தது. ஊரில் கிடைபோடும் கீதாரிகள் வரும் காலத்தில் அய்யா அவர்களோடு காட்டில்தான் தங்குவார். அவனும் உடன் போவான். கீதாரிகளுடன் காட்டில் உறங்கும் போது அதிசயக் கனவுகளின் ஊற்று கசிந்து பெருகத் தொடங்கும். கீதாரிகள் அய்யாவுக்குப் பயந்தார்கள்.

காட்டில் சாப்பாட்டு ருசி மாறிவிடும். நிலா வெளிச்சத்தில் மணலில் அய்யா பதினெட்டாம் புலி கட்டம் வரைவார். மணல் கோடுகள் கட்டமாகும். கீதாரிகள் அவரோடு விளையாடப் பயந்தார் கள். சிவக்குளம் கீதாரி அய்யாவோடு விளையாடினான். அய்யாவுக்குப் புலிகள். கீதாரிக்கு ஆடு. புலியாட்டம் தொடங்கியது. அய்யாவின் புலிகளால் ஒரு ஆட்டைக்கூடத் தொட முடியவில்லை. ஆடுகள் புலியை அடைத்துவிட்டன. ஏழு ஆட்டம் தொடர்ந்து புலிகளே

அடைபட்டன. கீதாரி ஜெயித்துக் கொண்டே இருந்தான். எட்டாவது ஆட்டத்தில் கீதாரி தற்செயலாக அய்யாவின் கண்களைப் பார்த்தான். கோபமும் குரோதமும் கொண்ட அந்தக் கண்கள் புலியை ஞாபகப் படுத்தின. எட்டாவது ஆட்டத்தில் வேண்டுமென்றே புலி, ஆடுகளை வெட்ட வழி பண்ணி ஆடினான் கீதாரி. அய்யாவுக்குக் கோபம் அதிகமானது. "விட்டுக் கொடுத்து விளையாட வேண்டியதில்லை" என அதட்டினார். அடைபட்ட ஒரு புலி மட்டுமே மிஞ்சியபோது கீதாரி ஆட்டத்தை நிறுத்திவிட்டு மல்லிக் காப்பி போடத் தொடங் கினாள்.

தூரத்தில் கிடை ஆடுகள் தரை பார்த்து அசைவற்று நின்றன. அய்யா அடைபட்ட புலிகளைப் பார்த்தபடியே இருந்தார். நெருப்பு கல்லி உரசி வெடித்து செத்தைகளில் தாவியது. பூதாகரமான நிழல்கள் தோன்றி மறைந்தன. மல்லி வாடை கொதித்தது. சூடாக மல்லிக் காப்பியைக் குடித்துவிட்டும் அய்யா தோற்றுத்தான் போனார். கீதாரி ஆடுகளுக்கு நடுவில் உறங்கப் போனான். அவனும் அய்யாவும் புலிக்கட்டத்தின் பக்கமே படுத்துக் கிடந்தார்கள். விளையாட்டில் புலியாக மாறியிருந்த கற்கள், இப்போது வெறும் கற்களாக இருந்தன. அய்யாவுக்கு உறக்கம் கொள்ளவே இல்லை. புரண்டுகொண்டே இருந்தார்.

கீதாரி ஆடுகளுக்குள் பதுங்கி வரும் உருவத்தைப் பார்த்தபடியே படுத்துக் கிடந்தான். அய்யாதான் கையில் கத்தியோடு ஆடுகளுக்குள் பதுங்கி கீதாரி படுத்துக் கிடந்த இடத்துக்குப் போய்க் கொண்டிருந்தார். ஆடுகள் உடம்பை நெளித்துக் கொண்டன. கோழை ஒழுகும் மூக்கை அய்யா மேல் உரசி நின்றன ஆடுகள் அய்யா அருகில் வந்து எழும்போது, கீதாரி ஆடுகளை விரட்டுவது போல எதிர்ப் பக்கம் சூ! சூ! எனக் குரல் கொடுத்தான். கத்தியை இடுப்பில் சொருகிக் கொண்டு அய்யா, தீப்பெட்டி கேட்டபடியே, இன்னொரு ஆட்டம் போடலாமா எனக் கேட்டார். அவன் அந்த இடத்திலே அய்யா காலில் விழுந்து, "எதும் தப்பா நடந்திருந்தா. மன்னிச்சிருங்க. பிழைக்க வந்தவன்" எனக் கும்பிட்டு எழுந்தான். அய்யா அவனோடு உட்கார்ந்துகொண்டார். விடியும்வரை கீதாரி தன் குடும்பத்தைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தான். அன்றிரவு ஆற்று மணலில் படுத்துக் கிடந்தபோது அடித்த ஆட்டுக் குட்டிகளின் பால் வாடை அவனுக்குப் பிடித்திருந்தது.

சிகரெட் புகையும் அடங்கிவிட்டது. அவன் மரத்தோடு சரிந்து நின்றுகொண்டிருந்தான். வெம்பா படர ஆரம்பித்து, அடுத்திருக்கும் மரம், வீடுகள், வேதக் கோயில், வான்கோழி எதுவும் தெரியவில்லை. எல்லாமும் வெம்பாவினுள் போய்விட்டன. மரத்தின் இலை இலையாக வெம்பா படிகிறது. குளிர்ச்சி கொண்ட மரம் அசைவற்று நின்றது. அவன் எதையும் பார்க்காமலிருக்கக் கண்களை மூடிக்கொண்டான். பட்டை உதிர்ந்த மரத்தில் ஈரம் குபுகுபுவென ஊருகின்றது.

அடைக்காமல் விட்டுப்போன கோழிக் குஞ்சுகள் வெம்பாயில மாட்டிக்கொண்டு சப்தமடைகின்றன. அவன் தளர்ந்து போயிருந்தான். மெல்ல தான் மரத்தினுள் புகுந்துவிட்டது போலவும், எல்லாக் கிளைகளும் தன்னிடமிருந்தே கிளைக்கின்றன எனவும் உணர்வு கொண்டான். இப்போது மரத்தின் முண்டுகளும் வெடிப்பும் அசைவற்ற தன்மையும் அவனுக்கு துக்கத்தையே தந்தன. தன் கைகள் கட்டப் படாமல் உயரே அசைத்துக்கொண்டிருப்பதாகத் தோணியது.

மரத்தின் வயிறு திறந்து அதனுள் புகுந்துகொண்டது போன்றும், பசுமைச் சாறுகள் தன் உடலெங்கும் ஓடுவதாகவும், வெகு பாதுகாப் பான இடத்தினுள் தான் பதுங்கியுள்ளதாகவும் உணர்ந்தான். உடல் பருமன் அழிந்து மரமெங்கும் நீண்டது. ஊரின் உயரத்துக்கு வியாபகம் கொண்டிருந்தது மரம். அண்ணாந்து பார்த்தபோது ஆயிரக்கணக்கான இலைகளும் காய்களும் விநோதமாகத் தோன்றின. புங்கை இலைகளைச் சொருகிக்கொண்டு வேட்டைக்குப் போனதன் ஞாபகம் திரும்பியது.

வேட்டைக்குச் செல்லும் அய்யாவின் பின்பு உடம்பில், தலையில் இலைகளைக் குத்திக்கொண்டு துணை வேட்டையாடி, தெருச் சுற்றி வரும்போது அறுபட்ட கோழியின் ரத்தம் தெருவெங்கும் திட்டுதிட்டாகப் படியும்.

ஆகாசம்கூட இப்போது கலங்கிய ரத்தத் திட்டைப் போலச் சிதறிக்கொண்டிருந்தது. ஈரம் நிரம்பத் தொடங்க, உடல் துவண்டு உறக்கத்தினுள் இழுத்துக்கொண்டிருந்தது. ஏதோ ஒரு புள்ளியில் பனி சில்லிட அவன் உறக்கம் கொண்டான். எதுவும் அப்போது நினைவில் இல்லை. வெயில் பட்டபோதே நினைவு வந்தது.

அந்தச் சிறுவர்கள் இருவரும் எதிரில் உட்கார்ந்திருந்தனர். சிறுவர் களில் ஒருவனிடம் அவனின் சூரிக் கத்தி இருந்தது. அதைக் காட்டி மற்றவர்களை மிரட்டிக்கொண்டிருந்தான். மைதானம் பிரகாசமாகி, மரம் அவனை வெளியேற்றியது போல் திமிறி நின்றது. ஊரின் அமைப்பே மாறியிருந்தது. அவனைக் கூட்டிப்போக வந்திருந்த ஆட்கள் குளித்து, படியத் தலை வாரியிருந்தார்கள். மரத்தில் சரிந்திருந்த அவன் தலையை நிமிர்ந்து பார்த்தபடி பேசிக் கொண்டார்கள்.

“கிறங்கிப் போயி கிடக்கான். கஞ்சித் தண்ணி கொடுத்துதான் கூட்டிட்டுப் போகணும்.”

சிறுவர்களில் ஒருவன் வேகமாக ஓடி தண்ணீர் செம்பும், கஞ்சியுமாக வந்தான். எதையும் குடிக்க முடியவில்லை. வயிற்றைப் புரட்டியது. பெண்கள் சிறு குழந்தைகளுக்குக் கள்ளப் பயல் காட்டிக் கொண்டிருந் தார்கள். வெயில் ஏறியிருந்தது. இரவில் பார்த்த முகங்கள் எல்லாம் மாறியிருந்தன. அவனைத் தெரு வழியாக நடத்திக் கூட்டிப் போகும் போது நாய்கள் குலைத்தபடி பின்தொடர்ந்தன அவன் தெரு தாண்டும்போது திரும்பி வந்த மைதானத்தைப் பார்த்தான்

மரம் வெயிலில் நின்றிருந்தது. இரவிலிருந்து கீழே இறங்க வழியற்றுத் திரிந்த இரண்டு எறும்புகள் வேகமாக மரத்தில் இறங்கத் தொடங்கின. அவன் தலை இருந்த இடம் வந்ததும் திகைப்படைந்து நின்று மெல்லக் கால்களை நகர்த்தி ஊர்ந்தன. மரம் தன் உருவில் இருப்பதாக உணர்ந்ததும் வேகமாக இறங்கித் தரையில் போய்க்கொண்டிருந்த போது அவர்கள் ஊரைக் கடந்து போயிருந்தார்கள். சூரியன் உச்சிக்கு வந்திருந்தது.

வேனல் தெரு

பதினாலாம் நூற்றாண்டு யுத்தத்தில் தப்பிய குதிரை போல வேனல் தெரு வசீகரமாக வாலை ஆட்டி அழைத்துக்கொண்டிருந்தது. நீண்ட உருவங்களாகவும் தோற்றம் கலைவுற்றவர்களாகவும் குடிகாரர்கள் கடந்துகொண்டிருந்தனர். வேனல் தெருவின் இரு பக்கமும் நீண்ட வரிசையாக மதுக் கடைகளே நிறைந்திருந்தன. கண்ணாடிக் குடுவைகளில் தேங்கிய மது தன் நீள் தொடு கொம்புகளால் பார்ப்பவரின் கண்களைச் சுருட்டி அழைத்துக் கொண்டிருந்தது. நகரின் தொல்பழமையான இந்தத் தெருவின் இமைகள் இரவுபகல் பேதமின்றி சிமிட்டிக்கொண்டிருந்தன. வயதை மறந்த குடிகாரர்கள் தங்களை மீறி சிநேகித்துக் கொண்டும், பரஸ்பர அன்பில் கட்டுப்பட்டவர்களாக நேசம் மட்டுமே வழியும் மதுக் குடுவையுடன் விடாது பேசியபடியிருக்க எரிந்துகொண்டிருக்கும் ஒன்றிரண்டு குண்டு பல்புகளுக்கு ஊடே பெண்களும்கூடக் கபடின்றிச் சிரித்தபடி முக்காடு விலக்கிக் குடித்துப் போகின்றனர். போதை ததும்பி மாயக் கனவிலே உருக்கொண்டது போல வியாபித்திருக்கிறது வேனல் தெரு. மனிதர்கள் மதுவுடன் தங்கள் ஆகிருதிகளைக் கரைத்துவிட்டு திரவம் போலாகி மதுப் புட்டியினுள் சேகரமாகிவிட முயன்று கொண்டிருந்தனர்.

நீண்ட தாடியும் கருத்த ரம் புட்டியுமாக நிற்கிறாரே, அதோ கூட்டத்தின் கடைசியில், அவரிடம் கேளுங்கள். தனது விநோதக் கனவுகளில் நூறு நடிகைகளைக் காதலித்துத் தோற்ற கதை அவரிடம் ஒரு சுருள் பூச்சியாக ஆயிரம் கால் கொண்டு ஊர்ந்துகொண்டிருக்கிறது. என்றோ இறந்துபோய்

விட்ட எல்.பி. வனமோகினிக்காகத்தான் அவர் இப்போது மது அருந்திக்கொண்டிருக்கிறார். இருபது வயதுக்குள் எண்ணற்ற நடிகர்களால் காதலிக்கப்பட்டு, எவரையும் வெறுக்கத் தெரியாமல் சுயமரணம் செய்துகொண்ட அந்த நடிகையின் சுருள் கூந்தல் இழையொன்று மதுவின் வழியே தன் மீது படர்வதாகவே அவர் நினைத்துக்கொள்கிறார். எல்.பி. வனமோகினியை அவர் நேரில் கண்டவரில்லை. யாரோ தந்த சினிமா புகைப்படத் தாளில் சுழித்த உதட்டுடன் இருந்த அவள், நரி ஒன்றைத் தன்னோடு அணைத்துக்கொண்டிருந்தாள். நரியே அவளைக் காதலிக்கச் செய்தது. இந்த நூற்றாண்டின் இரண்டாம் பத்தில் இறந்துபோனாள் வனமோகினி. என்றாலும் என்ன? அவளை உயிருடன் எழுப்பும் மதுப் புட்டிகள் அவரிடம் இருந்தனவே. அவரின் மனத்தில் அன்பின் சிறு துவாரங்களின் வழியே தீர்க்க முடியாத துக்கம் சுரந்து கொண்டிருக்கிறது. அன்பே துக்கத்தின் துளிதானோ? உலகில் வனமோகினியின் காலம் இன்னும் எத்தனை நூற்றாண்டுகளுக்கு இருக்கும்? அவரிடமிருந்து தேவைப்படுமாயின் மதுவை நீங்களும் பெற்றுக்கொள்ளலாம்.

இன்று அவரிடமிருந்த மதுப் புட்டியைப் பிடுங்கிக்கொண்டு அவரை மிதித்துத் தள்ளியபடி நகர்கிறானே அந்த இளைஞன், அவன் பெயர் என்னவாயிருக்கும்? வேனல் தெருவுக்குள் வருபவர்கள் எவராக இருப்பினும் பெயர் ஒன்றுதானே? இளைஞன் தன்னிடமிருந்த சில்லறைகளைத் தெருவெங்கும் வீசி இறைக்கிறான். எவனோ ஒரு கடைக்காரன் தன்னிடம் சில்லறையில்லை என எந்த ஊரிலோ மறுதலித்ததின் பதிலாக இங்கே சில்லறைகள் வீசுகிறான். பின்பு மெதுவாகத் தன்னிடமிருந்த நூறு ரூபாய்த் தாளைச் சுருட்டிச் சுருட்டி அதன் முனையில் நெருப்பிட்டுப் புகைக்கிறான். அவனைப் பார்த்து யாரோ சிரிக்கிறார்கள். ஏழாம் நம்பர் கடை மூலையில் இருக்கும் இருவர்தானே சிரித்தது. அவர்களில் ஒருவனுக்குப் பணத்தைப் புகைப்பவனிடமிருந்து ஒரேயொரு தம் அடிக்க ஆசை எழ, கால் பின்னிய நிலையில் எழுந்து வந்து அவனிடம் தம் கேட்கிறான். வந்தவன் உதட்டிலும் பணத்தின் நீலநிறம் ஒட்டிக் கொள்கிறது. இருவரும் புகைக்கிறார்கள். அவர்களுக்குள் ஏற்பட்ட புதிய நட்புக்காக இருவரும் ஒரே மதுக் கோப்பையைப் பகிர்ந்து கொள்கிறார்கள். கோப்பை காலியானதும் இருவருக்குள் விரோதம் தொடங்குகிறது.

தனது பணத்தைப் பிடுங்கிச் சுருட்டிப் புகைத்துவிட்டான் என வந்தவனுக்கு எதிராகக் கூச்சலிடுகிறான் இளைஞன். ஏழாம் கடையில் இருந்தவனோ தன்னுடன் இருந்த நண்பன் எவன் என அறியாது மற்றொருவன் தோளில் சாய்ந்துகொண்டு உறவை விளித்து மாப்ளே... மாப்ளே எனச் செல்லமிடுகிறான். இத்தனை குடிகாரர்களுக்கும் நடுவில் சிதறிய நாணயங்களைக் குனிந்து அவசரமும் ஒடுக்கமுமாகப் பொறுக்கிக்கொண்டிருக்கிறாளே அந்த செங்கிழவி, அவளைவிடவும் திருடக் கூடியவர் இந்த வேனல் தெருவில் எவரும் கிடையாது.

நாணயங்களைக் குனிந்து சேகரித்தபடியே அவள் கால் செருப்புகளைத் திருடி ஒளிக்கிறாள் பாருங்கள். அவள் உடைந்த குப்பிகளுக்குள் நாணயங்கள் சிதறுகின்றன. அவள் தன் வாய் அகன்ற மதுப் புட்டியில் நாணயங்கள் போட்டுக் குலுக்குகிறாள். அதுதான் எத்தனை இனிமையாகச் சப்தமிடுகின்றன. நாணயங்கள் நிரம்பிய மதுப்புட்டியுடன் வேனல் தெருவில் இருந்த இருள் சந்தில் போகிறாள். அங்கும் சிலர் குடித்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். அவர்கள் நிலத்தோடு உரையாடிக்கொண்டிருப்பது போல முணுமுணுக்கின்றனர். விலை மலிந்த சாராய வீதி அந்த இருள் சந்து. தகரக் குவளைகளில் மஞ்சள் சாராயம் மினுக்குகிறது. செங்கிழவி தன் மதுப்புட்டியை ஒரு தகரக் குவளையில் கொட்டுகிறாள். மிச்சமான சாராயத்தில் ஊறுகின்றன நாணயங்கள். தங்கத்தைப் போன்ற வசீகரமான அத் திரவத்தை அவள் உதடு தீண்ட விரிகின்றது. ஒரு வான்கோழியைப் போலச் சப்தமிட்டபடி அவள் குடித்துவிட்டுத் தகரக் குவளையைத் தருகிறாள். அவளுடைய வயது மெல்லக் கரைந்து மீண்டும் பால்யம் கண்டவள் போலத் தனது மார்புகளை சாராயக்காரனிடம் காட்டி இச்சை மொழியில் பேசுகிறாள். அவனோ கிழட்டு நாயே என ஏசியபடி மீண்டும் தகரக் குவளையில் சாராயம் தருகிறான்.

இனி இரவு முழுவதற்கும் வேறு கிடைக்காது என்பது தெரியும். நீண்ட கயிற்றால் காலி மதுப்புட்டியை இடுப்பில் சுற்றி நாணயம் தேடி அலையத் தொடங்குவாள். வேனல் தெருவுக்கு எல்லா இரவும் மது வாங்க வரும் பக்கீர் வந்திருக்கக்கூடும். அவரது மிகப்பெரிய மோட்டார் சைக்கிள் ஓசையைக் கேட்டதும் கிழவி ஓடுகிறாள். பக்கீர் என்றைக்கும் போலவே இரண்டாம் கடை முன் நிற்கிறார். அவருக்கு உரியதைப் பெற்றுக்கொள்கிறார். இளம் பெண்ணைப் போல அவரை உரசிச் சிரிக்கிறாள் செங்கிழவி. அவர் வண்டியில் அமர்ந்தபடி எல்லா நாளையும் போலவே தனது இடது காலால் அவளை உதைத்துத் தள்ளிவிட்டு ஐந்து ரூபாயை எறிந்து புறப்படுகிறார். அதை எடுக்க மனம் அற்றவளாக அவரின் மனைவிகளைப் பற்றிய வசைகளைப் பெருக்கியபடி நிற்கிறாள். அந்தப் பணம் இரவெல்லாம் எவராலும் எடுக்கப்படாமல் அந்த இடத்தில் கிடக்கும். விடிந்த பின்பு அதை அவளே எடுத்துக் கொள்ளக்கூடும். ஆயினும் இரவில் அவள் அதன் மீது மூத்திரம் பெய்வதையோ, காறி உமிழ்வதையோ எவர் தடுக்க முடியும்? வழியற்ற ஒருவன் அப்பணத்தை எடுத்த நாள் ஒன்றில் கிழவி அவன் உடைகளை அவிழ்த்துவிட்டு ஆடையற்ற அவன் உறுப்பில் புட்டியால் அடித்திருக்கிறாள் என்கிறார்கள். எனினும் புறக்கணிக்கப் பட்ட பணம் வெறும் காகிதமாக இருளில் வீழ்ந்து கிடக்கும்.

வேனல் தெருவுக்குப் புதிதாக வந்த அந்தப் பையனைப் பாருங்கள். இப்போதே மீசை அரும்பத் தொடங்கியிருந்த அவன், எதிர் வீட்டில் குடியிருந்து வேறு ஊருக்கு மாற்றலாகிப்போன மாணவிக்காகவும் தன் முதற்காதலுக்காகவும் மதுப் புட்டியைத் திறக்கிறான். அவனிடம்

சொல்லவொண்ணாத காதல் இருக்கிறது. தோற்றுப்போன தன் முதல் காதல் பற்றி யாரிடமும் பேச முடியாத தவிப்பில் அவன் கடைசியில் தன்னிடமே பேச முயலுகிறான். தன்னிடம் பேசுவதை விடவும் வேறு எவர் கிடைக்கக் கூடும் நல்துணை. அவனுக்குக் குடிக்கத் தெரியாமல் இருக்கக் கூடும் ஒருவேளை மது அவனை வீட்டுக்குத் திரும்பவிடாமல் ஏதோ ஒரு தெரு இருளில் விழச் செய்யக்கூடும். ஆனாலும் அவனுடன் பேசுவதற்கு வேறு வழிதான் என்ன இருக்கிறது? குடிப்பதன் மூலம் தவிரத் தன்னை நேசித்துக் கொள்ள வேறு பாதைகளை யார் அவனுக்குக் கற்றுத்தரக் கூடும். அவன் கறுப்புத் திரவம் ஒன்றை வாங்கியிருக்கிறான். அத்திரவம் அவன் உடலில் கண்ணாடி இதழ்போல நீர்த்தட்டானின் சிறகை விடவும் மெல்லியதாக இரு சிறகுகளைக் கிளைவிடச் செய்யும். இதை நினைத்தபடியே குடிக்கிறான். பனை விசிறியைப் போல வடிவம் கொண்ட அந்தச் சிறகு அருகில் குடித்துக்கொண்டிருப்பவன் கண்ணுக்குக்கூடத் தெரிகிறது. அவனுள் மிதந்து கொண்டிருந்த திரவம் மாற்றலாகிப் போன பெண்ணின் சுவடுகளைப் பற்றிச் சென்று தெரியாத ஊரில் உறங்கும் அவள் வெண் பாதங்களை முத்துகின்றன. அவன் இப்போது அந்தப் பெண்ணையே குடித்துக் கொண்டிருக்கிறான். புட்டியில் ஒரு துளி திரவமும் இல்லாமல் தீர்த்துவிட்டான். நீர்மை படர்ந்த கண்களுடன் தன் முதல் காதலைப் பற்றி தன்னிடமே பேசிக்கொள்கிறான். விசும்பலும் ஏக்கமும் ஊர் கின்றன உடலெங்கும். சக குடிகாரன் ஒருவன் அவனை நோக்கித் தன் கைகளை விரிக்கிறான். கரங்களின் ஊடே நுழைந்த மாணவனை முத்தமிடுகின்றன பெரும் உதடுகள். மாறி மாறி முத்தமிட்டுக் கொள்கிறார்கள். பின் இருவரும் தோளில் கை போட்டபடி அடுத்த மதுக் கடைக்குப் போகிறார்கள். அவர்களை இடித்துக் கொண்டு போகும் நபர் பையனின் நல்லாசிரியராக இருக்கிறார். எனினும் என்ன? இரவின் ரகசியப் படிக்கட்டுகளின் வழியே உலவும் குடிகாரர் அவரும்தானே. காலி மதுப்புட்டிகளில் விரல் நுழைத்துத் துழாவும் குருடன் செபாஸ்டியன் புட்டிகளில் மிஞ்சிய மதுவைத் துளித்துளி யாகத் தன் சிரட்டையில் சேகரிக்கிறான் பாருங்கள். எவனோ குடித்து மீதம் வைத்துப் போன பாதி புட்டி ஒன்றால் சிரட்டையே நிரம்பிவிடுகிறது. இனி அவனைவிடவும் யோகமும் சந்தோஷமும் கொள்ளக் கூடிய மனிதன் எவனிருக்கிறான். வேனல் தெரு இடிந்த மூத்திரப் பிறையின் படிக்கட்டில் அமர்ந்தபடி அவன் இரவு உணவை யும் சிரட்டை மதுவையும் ருசித்துக் குடிக்கிறான் பகல் முழுவதும் கூவிப் பெற்ற நாணயங்களையும் மனிதர்களையும் மறந்துவிட்டு, தான் கண் பார்த்து அறியாத வேனல் தெருவின் வாசனையை முகர்ந்தபடி களிப்புறுகிறான். சந்தோஷம் ஒரு சல்லாத் துணி போல உடல் மீது படர்கிறது. தன்னிடமிருந்த பீடியைப் புகைக்கத் தொடங்கியதும் உலகம் ஏன் இத்தனை சந்தோஷமாகவும் இடைவிடாத களிப்பையும் கொண்டிருக்கிறது என எண்ணிக் கொண்டான்

ஸ்திரிகளையும் வீட்டையும் மறந்த வேனல் தெரு மதுக்குடியர்களுக்குள் மட்டும் எப்படி வற்றாமல் களிப்பு பீறிடுகிறதோ எனப் புரியவேயில்லை. கசப்பு முளைத்த நாவுடன் அவர்கள் உலகின் மொத்தக் களிப்பையும் திருடி வந்துவிட்டார்களா என்ன? வேடிக்கையும் உல்லாசமும் நிரம்பிய அத்தெருவுக்குள் குற்றம் என எதைச் சொல்லிக்கொள்ளக் கூடும். திறந்த இரவினுள் குற்றங்கள் நிழலைப் போலச் சப்த மிடாதபடியே உலவுகின்றன.

பண்டிகை நாள் தவிர வேறு காலங்களில் ஒப்பனையற்றுப்போன ஸ்திரிபார்ட்காரன் ஒருவன் மட்டும் குடியில் குரல் உயர்த்திப் பாடாமல் இருந்திருந்தால் உல்லாசத்தில் இந்த லயம் இருந்திருக்கக் கூடுமா? அவனுக்குப் பெண்களைவிடவும் அடர்ந்த கூந்தல். ஸ்திரி முகம் கொண்ட அவன் வேனல் தெருவுக்குக் குடிப்பதற்கு ஒருபோதும் தனியே வருவதேயில்லை. ஒரு ஆட்டுக்குட்டியை மார்போடு அணைத்து எடுத்துக்கொண்டு வருவான். கற்பனையான உபவனத்தில் தோழியோடு அலையும் ராணியைப் போல நடக்கிறான். அவனுடைய தோளில் சரசரக்கும் தலைமயிர் குடிப்பவர்களுக்குள் சரசத்தின் மூச்சைக் கிளப்பிச் செல்கிறது. வேஷமிடாதபோதும் அவனால் ஸ்திரிபார்ட்டினின்று தப்பிக்க முடியவில்லை. பொய் மார்பகமும் உயர் கொண்டையும் அணியவில்லையே தவிர, அவன் முகத்தில் மஞ்சள் திட்டுகளும், கைகளில் வளையும் சப்தமிட வருகிறான். அவனுடைய ஆட்டுக்குட்டி துள்ளி குடிகாரர்களின் ஊடே அலை கிறது. ஆட்டின் கழுத்தில் புரளும் ஒற்றை மணிச் சப்தம் கேட்ட குடிகாரன் எவனோ தங்களுக்குக் குடிப்பதற்காக வாங்கிய புட்டியுடன் இருளில் மறைகிறான். ஆட்டின் கண்களில் பழகிய போதையில் சுகிப்பு தெரிகிறது. அவனும் ஆடுமாகக் குடிக்கிறார்கள். இருவரும் இரவெல்லாம் குடிக்கக்கூடும். குடித்த ஆடுகள் எப்போதும் இயல்பிலே புணர்ச்சிக்கு ஏங்குகின்றன. அவை மனித பேதமறியாது கால்தூக்கி நிற்கின்றன. நள்ளிரவு வரை அவர்கள் பேசிக்கொண்டே இருக்கிறார்கள். ஆடு வேனல் தெருவினின்று கிளம்பி அவர்கள் மஞ்சள் அழியும் உலர்ந்த வீதிகளில் காகிதத்தை மென்றபடி அலையத் தொடங்குகிறது. மூடிய வீடுகளுக்கு வெளியே முரட்டுக் குடிகாரனைப் போல ஆடு மணியசைத்துச் சுழல்கிறது. தடுக்க யார் இருக்கிறார்கள். உல்லாசம் தெருவில் தனியே நடனமிடுகிறது என்பதைத் தவிர.

வேனல் தெரு மதுக் கடைகள் மூடப்படுவதேயில்லை. கடைகளுக்குக் குடிக்க வருபவர்கள் மட்டுமல்ல, கடையில் இருக்கும் விற்பனை செய்யும் நபர்களேகூட ஒரே முகச் சாயலில் தானிருக்கிறார்கள். அவர்களுள் நான்காம் கடைச் சிப்பந்தியின் கண்கள், புட்டிகளை வாங்கும் எல்லா மனித முகத்தையும் துளையிட்டு அறிந்துவிடுகின்றன. மதுக்கடைச் சிப்பந்திகள் சில்லறை தராமல் ஏமாற்றும்போதோ, கள்ள மதுவை விற்கும்போதோகூட குடியர்கள் ஏன் எதிர்பார்ப்ப தில்லை. வேனல் தெரு இரவு எப்போதும் அரை மயக்க நிலையிலேயே இருக்கிறது. பொருள் வழி அலையும் வியாபாரிகளும், பயணிகளும்

இதனுள் நுழையாமல் செல்ல முடிவதேயில்லை. தனது குறிப்பேட்டில் யாரோ பயணியின் கைகள் தெருவின் ஞாபகத்தினை எழுத் தாக்கு கின்றன. பின் அவனும் களைத்துவிடுகிறான். நேற்றாக இருக்கலாம், குடிக்க வந்தவர் இருவர் நெடும் காலத்தின் பின் சந்திப்பு கொண்டு நினைவைப் பரிமாறியபடி குடித்தனர். அவர்கள் பர்மாவிலிருந்து நடந்து வந்தவர்கள் எனத் தெரிகிறது.

மதுப் புட்டிகள் காலியாகியபடி இருந்தன. பின் இருவரில் மூத்தவன் மதுப் புட்டியை உயர்த்தி அதனுள் பர்மா மூழ்கியிருப்ப தாகக் கூறுகிறான். திரவம் மெல்ல வடிய பர்மா நகரம் கண்ணாடி மீறி விரிகிறது. இருவரும் யுத்தத்தின் முந்திய மர வீடுகளின் சாலையில் நடக்கின்றனர். ஜப்பானிய விமானங்களின் குண்டு நகர் மீது சிதறுகிறது. தெருக்களுக்குள் ஓடுகிறார்கள். துப்பாக்கி ரவை எட்டாத வெளியில் பயணித்து நடந்தபோது ஒருவன் மற்றவனை நோக்கித் துப்பாக்கியை நீட்ட, தோட்டா பீறிட்டு முதுகில் பாய்கிறது. விழித்துக்கொண்ட வனைப் போல குடிப்பவன் கண்ணாடி புட்டியைத் தூக்கி உடைக் கிறான். பர்மா சிதறுகிறது. சுட்டுக்கொண்டது யார் யாரை எனப் புதிர் விலகாமல் சொந்தத் துயரத்துக்காக மீண்டுமொரு மதுப் புட்டி வாங்க நடக்கின்றனர்.

இரவு நீள நீள மயங்கிச் சரிந்த சாயைகளின் நடமாட்டம் ஓய்ந்த பின்பும் வேனல் தெரு விழித்தபடிதானிருக்கிறது. என்றோ இந்த நகரையாண்ட வெள்ளைப் பிரபுவின் குள்ளமான சிலையைப் பாருங்கள். அதன் கண்கள்கூட இந்தத் தெருவைப் பார்த்தபடி தானிருக்கின்றன. பிறந்த தேசகம் விட்டுக் கனவுக் கப்பலில் மிதந்தபடி அந்த துரை இந்நகரை நன்றாக அறிந்திருந்தான். அந்தச் சிலையின் கீழே உளறுகிறானே ஒருவன், அவன் எதைத்தான் பேசுகிறான். காதில் விழுகிறதா? என்றோ மழை வெறித்த நாள் ஒன்றில் சிவப்புக் குடையுடன் வந்த இரண்டு சட்டைக்காரப் பெண்கள் கண்ணீர் மல்க, அந்தச் சிலையின் முன்பாக மவுனித்துவிட்டு ரோஜா மலர்களை அங்கு விட்டுச் சென்றனரே அன்றும் அவன் அங்கு குடித்துக்கொண்டி ருந்தான். ரோஜா மலர்கள் வேனல் தெரு மதுக்குடியர்களைப் பேச்சற்றுப் போகச் செய்தது. மதுக் கடைக்காரர்களுக்கு அந்த ரோஜாக்களைப் போலக் குற்ற உணர்வை ஏற்படுத்தும் எந்தப் பொருளும் இதுவரை உலகில் இருந்ததாக நினைவில்லை. இருபத்தி எட்டு மதுக் கடைச் சிப்பந்திகளும் ரோஜாக்களை எவராவது எடுத்துப் போய்விட வேண்டும் என ஆசைப்பட்டார்களே அன்றி எவனும் கீழ் இறங்கி அந்த ரோஜாக்களை எடுத்து எறிய இயலவில்லை. பதினாலாம் கடைச் சிப்பந்தி ஒருவன் தன் ஆறு வயது மகள் ஞாபகம் பெருகி வர, மைல்களுக்கு அப்பால் உள்ள கிராமத்து வீட்டின் கதவுகளைத் தட்டி முகம் பார்க்க ஆசையுற்றுப் புலம்பினான். அவனாலும் இந்த ரோஜாக்களை எடுத்துவிட முடியவில்லைதானே. மூன்று நாட்கள் வரை அதே இடத்தில் காய்ந்து, சருகாகிய நிலையில் ரோஜாக்கள் இருந்தன. பின் காற்று அதைத் தன்னோடு கூட்டிப்

போனது. காற்றில் மறைந்துவிட்ட ரோஜா ஏற்படுத்திய வெறுமை கடைச் சிப்பந்தி ஒருவனுக்குத் தாளாமல், அவன் வீதியினின்று சுழித்து ஓடி, நகரை விட்டுப் புலம்பி ஓடுகிறானே அது எதற்காம்? விசித்திரம்தான் மனிதர்களாக உருக்கொண்டு இங்கு வருகின்றதா என்ன?

மழிக்கப்படாத மயிர் படர்ந்த முகத்துடன் ஒருவன் எல்லா மதுக்கடைகளிலும் இரைஞ்சும் குரலில் பணத்தை வைத்துக்கொண்டு கேட்கும், எவரும் இல்லையெனத் தலையாட்டுகிறார்களே தெரிகிறதா? அவனுக்கான மதுப் புட்டிகள் உலகில் இல்லாமல் தீர்ந்துவிட்டனவா? அவன் குடிப்பதற்காக எதையும் கேட்பதாகத் தெரியவில்லை. அருகில் வந்து அவன் குரலைக் கேளுங்கள். வேறு ஏதோ ஒரு பொருளுக்காக மன்றாடுகிறான். படர்ந்த மீசையில் கண்ணீர் துளிர்த்து நிற்க அவன் வேதனையுடன் எதைத்தான் கேட்கிறான்? நேற்றுதானோ இல்லை வருடத்தின் முன்பாகவோ ஏதோ ஒரு மதுக்கடையில் அவன் இறந்துபோன மனைவியின் கல்யாணப் பட்டுப் புடைவையொன்றை விற்றுக் குடித்துப் போயிருக்கிறான். அந்தப் புடைவையின் ஒரு முனை தீயில் எரிந்துபோயிருக்கும் என்பதும் அதைச் செய்தவன் அவன் என்பதையும் யார் அறிவர்? எல்லா மதுக்கடைக்காரர்களும் அவனையறிவர். புடைவை என்றில்லை, கடிகாரங்கள், நிலைக் கண்ணாடி என எத்தனையோ விற்றுக் குடித்துப் போயிருக்கிறான். அந்தப் புடைவையை அடைந்தவன் எக்கடையின் சிப்பந்தி எனத்தான் தெரியவில்லை. அவனது பரிதாபம் தாங்காது சக குடிகாரன் ஒருவன் விடாது பேசுகிறான். ஒரு சிப்பந்தி அவனைக் கூப்பிட்டு குடிகாரர்கள் விற்றுப்போன பொருட்களின் சேகர அறையைத் திறந்து காட்டுவதாகக் கூறுகிறான். அந்த அறையினுள் புடைவைகள், மரக்கண்ணாடிகள், கடிகாரங்கள், மணல் குடுவைகள், பழம் துப்பாக்கி, இசைத்தட்டுகள், புகை பிடிக்கும் குழல், கோப்பைகள், தைல ஓவியம் எனக் குவிந்து கிடக்கின்றன. தன் மனைவியின் புடைவையைத் தேடிச் சலிக்கிறான். என்றோ அடமானத்தில் வைக்கப்பட்டுப் போன சித்திரக்காரனின் இதயம் ஒன்று மிக மெதுவாகத் துடித்துக் கொண்டிருந்தது அறையில். அந்த அறையை விட்டு அகலாது ஆறு நாள்கள் புடைவையைத் தேடிக்கொண்டிருந்தான். பின்னொரு நாள் வெளிறிய முகத்துடன் மனைவியின் புடைவையை நெருப்பிட்டு எரித்துச் சாம்பலாக்கிக் குடித்தவன் நானே எனக் கூறி, தெரு கடந்து சென்றான். கடைச் சிப்பந்திகள் அறிந்திருக்கிறார்கள். குடிகாரர் கள் எதையும் நினைவில் வைத்துக்கொள்வதேயில்லை என்பதை.

வேனல் தெரு என்பதே ஒரு கண்ணாடிக் கூண்டுதான் போலும். இங்கே வருபவர்கள் மதுவால் மட்டும் போதையாடுகிறார்கள் என எவராலும் தீர்க்கமாகச் சொல்ல முடியாது. விசித்திரம் ஒரு மோதிரமென இவர்கள் விரல் சுற்றிக்கொள்ள உறக்கமற்று அழித்து விடக் குடிக்கிறார்கள். வாகனங்கள் ஊர்ந்து அலையும் நகர வீதியில் கூக்குரலிட்டு வெறியுடன் ஒருவன் நீட்டுகிற கத்தியின் பரப்பில்

வேனல் தெரு உருக்கொண்டு விடுவதைப் பல கண்களும் அறிந்தே கிடக்கின்றன. என்றாலும் நண்பர்களே, மதுக் கடைகள் மூடப்படுவதே யில்லை. மீன்கறிகளையும் மிஞ்சிய மதுவையும் குடித்துப் பெருத்த எலிகளின் கூட்டமொன்று தெருவைக் கருமி பூமியினுள் இழுத்துச் சென்றுவிட முயல்கின்றன. தன் தலைமயிர் நிலத்தில் வேர் விட நூற்றாண்டுகளாக ஒருவன் இத்தெரு நடுவில் வீழ்ந்து உறங்கிக் கொண்டேயிருக்கிறான். அந்த மனிதன் விடுபட்டுப்போன சீன யாத்திரிகர்களில் ஒருவன் எனச் சொன்னால் நம்புவீர்களா நீங்கள்?

தாவரங்களின் உரையாடல்

'தி கிரேட் கோஸ்ட்' கப்பல் மூலம் இங்கிலாந்திலிருந்து இந்தியா வந்துகொண்டிருந்த ராபர்ட்ஸன், உடன் வந்த எந்த ஒரு கிழக்கிந்திய கம்பெனி அதிகாரியுடனும் உரையாடுவதையோ, மது அருந்துவதையோ தவிர்த்து, தன் அறைக்குள் நாள் எல்லாம் நிலவியல் வரைபடத்தை ஆராய்ந்தவாறே, பதினோரு நாள்கள் பயணம் செய்தபோது இந்திய மலைச்சரிவுகளிலும், குறிப்பிட்ட குடும்பங்களாலும் வளர்க்கப்பட்டு வரும் விசித்திரத் தாவரங்கள் பற்றியும் சங்கேதச் சித்திரங்களால் உருவான தாவர வளர்முறை குறிப்புகளையும், கிரகண தினத்தன்று தாவரங்கள் தங்களுக்குள் நடத்தும் உரையாடலை அறியும் சூட்சும சமிக்ஞைகள் குறித்தும் வியப்பும் பயமுமாக அறிந்தபோது, மீட்பரின் பண்டிகையான கிறிஸ்துமஸ் பிறந்த கம்பெனி அதிகாரிகள் உல்லாசிகளாகக் குரல் எழுப்பிக் கொண்டிருந்தனர்.

அதிகாரிகள் பலரும் இந்தியாவுக்குப் பலமுறை வந்து போனவர் களாக இருந்ததால், போதையின் சுழற்சியில் ஸ்தனங்கள் பருத்த கருத்த பெண்களையும், வேட்டையாடும் வனங்களைப் பற்றியும் துப்பாக்கி அறியாத மக்களின் முட்டாள்தனம்பற்றியும் உளறிக் கொண்டிருந்தனர்.

திரிகூட மலை தாண்டவராய சுவாமிகளின் 'தாவரங்களின் ரகசிய வாழ்க்கை' என்ற நூலைப் பற்றி அறிந்திருந்த ராபர்ட்ஸன் அதன் மூலப்பிரதி எங்கும் கிடைக்காததைப் பற்றி யோசித்தபடியே உல்லாசிகளின் குரல் கேட்காத தன் அறையில் திரிகூட மலை குறித்த மனப் பதிவுகளை எழுதிக்

கொண்டிருந்தான். இதுவரை மேற்கு உலகம் அறிந்திருந்த தாவரவியல் அறிவு எல்லாவற்றையும் துகளாக்கச் செய்யும் தாண்டவராய சுவாமி களின் மூலப்பிரதியைத் தேடுவதற்கான வழிமுறைகளைத் தயாரித் திருந்தான். அத்தோடு கிரகணத்தன்று நடக்கும் தாவரங்களின் உரையாடலைப் பதிவு செய்வது இந்தப் பயணத்தின் சாராம்சம் எனக் கொண்டிருந்தான். தாவரவியல் பற்றிய இந்திய நூல்கள் யாவும் கற்பனையின் உதிர்ந்த சிறகுகளான கதை போல இருந்தது ஆச்சரியமாகவே இருந்தது.

கிறிஸ்துமஸுக்கு அடுத்த நாள் இரவு கப்பலின் மேல் தளத்தில் வந்து நின்றபோது அவன் முகம் வெளிறியும், கடற்பறவைகளின் விடாத அலையைப் போல அதிர்வு கொண்டதாகவுமிருந்தது. தன்னுடைய சாம்பல் நிறத் தொப்பியை ஒரு கையில் பிடித்தபடி கடலின் அலைகளை அவன் பார்த்துக் கொண்டிருந்தபோதும் கூடத் தாண்டவராய சுவாமியின் நினைவிலிருந்து மீள முடியாமலே இருந்தது. இந்திய வாழ்வின் புதிர்ப் பாதைகளில் எல்லாக் குடும்பத்தின் உள்ளும் ஒளிந்திருக்கும் ரகசியக் குறியீடுகள், அவர்களின் மாய விநோதக் கற்பனைகள் குறித்தும் அவன் நினைத்துக் கொண்டிருந்தான். கப்பலில் பயணம் செய்த ஒரேயொரு பெண் ராபர்ட்ஸன் அறையில் விளக்கு எரிவதைப் பார்த்துப் போனாள். உறக்கமற்றுப் போன அவன் பிதற்றல் சப்தம் அவள் அறையில் தினமும் கேட்டபடியே இருந்தது. யாருடனோ பேசுவது போல தனக்குள்ளாகவே அவன் பேசிக்கொண்டிருந்தான். இரவு உணவு கொண்டுவரும் ஸ்பானியச் சிறுவன் பார்த்தபோது கண்கள் வீங்க, காகிதங்களுக்கிடையில் வீழ்ந்து கிடந்தான் ராபர்ட்ஸன். அவனது பூனை துப்பாக்கியின் மீது உறங்கிக்கொண்டிருந்தது. மருத்துவர் வந்து அவனுக்குச் சிகிச்சை தந்த நான்காம் நாளின் பகலில் அவன் ஒரு கையில் பூனையும், மறு கையில் கறுப்புத் தொப்பியுமாக மேல் தளத்துக்கு வந்தான். அவனது பூனை கடலையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தது. மீன்குஞ்சுகள் பூனையின் நிழலைத் தண்ணீரில் கண்டு விலகி உள் பாய்ந்தன. அன்றிரவு அவன் கனவில், சிறு வயதில் அவன் கேட்ட இந்தியக் கதைகளில் இருந்த சாப்பாட்டு பூதங்கள் வயிறு பருத்து வீங்க, கப்பலை விழுங்கி ஏப்பமிட்டன.

கப்பல் கரையை அடையவிருந்த மாலையில் அவன் பூனையுடன் தன் பெட்டிகளைத் தயாரித்துக்கொண்டு நிலப்பகுதிகளைப் பார்த்தபடி வந்தான். கப்பலை விட்டு இறங்கும் முன்பு ஒரு பாட்டில் மது அருந்திவிட்டு புட்டியைக் கடலில் தூக்கி எறிந்தான். கடலில் சூரியன் வீழ்ந்தது. மீன் படகுகள் தெரியும் துறைமுகம் புலப்படலானது. இதுவரை அறிந்திராத நிலப் பகுதியின் காற்று பூனையின் முதுகினை வருடிச் சென்றது. அது கண்கள் கிறங்க, கவிந்த மாலைப் பொழுதைப் பார்த்தபடியே ராபர்ஸனுடன் குதிரை வண்டியில் பயணம் செய்தது.

ஏழு நாள்களுக்குப் பிறகு அவன் மதராஸ் வந்து சேர்ந்தான்.

அன்று விடுமுறை நாளாக இருந்ததால் நகரில் மக்கள் கூட்டம் அதிகமில்லை. கடற்கரையெங்கும் பறவைகளே அமர்ந்திருந்தன. ஒன்றிரண்டு குழந்தைகள் மீன் வலைகளை இழுத்தபடியே தூரத்தில் அலைந்தனர். கடற்கரை வேதக் கோயிலுக்கு ஜெபம் செய்ய நடந்து கொண்டிருக்கும்போது வழியில் ஆறு விரல் கொண்ட பெண் ஒருத்தி கையில் நார்க் கூடையுடன் வெற்றிலை ஏறிச் சிவந்த பல்லுடன் ராபர்ட்ஸனைப் பார்த்துச் சிரித்தாள். சிவப்புக் கட்டடங் களும், நாணல் வளர்ந்த பாதையோர மரங்களும், தென்னை சரிந்த குடில்களும் கொண்ட அந்தப் பிராந்தியம் கனவிலிருந்து உயிர் பெற்றது போல இருந்தது. பிரார்த்தனையை முடித்துவிட்டு வரும் போது வெல்சி மாளிகையிலிருந்து வந்து தனக்காகக் காத்துக் கொண்டிருந்த கோமதிநாயகம் பிள்ளையைச் சந்தித்தான் ராபர்ட்ஸன். அப்போது பிள்ளைக்கு ஐம்பத்திரண்டு வயதாகிக் கொண்டிருந்தது. அவரது மனைவி எட்டாவது குழந்தையைக் கர்ப்பம் கொண்டிருந்தாள்.

ஆறு விரல் கொண்டவளைத் திரும்பும் வழியில் சந்தித்தபோது அவளிடம் விலக்க முடியாத கவர்ச்சியும் வசீகரமும் இருப்பதை அறிந்து நின்றான் ராபர்ட்ஸன் அவன் முகத்துக்கு எதிராகவே அவள் சொன்னாள், "அருவி, பெண்கள், விருட்சங்கள், இவற்றின் மூல ரகசியங்களைத் தேடாதே, போய்விடு" அவள் சட்டென விலகிப் போகும்போது அவன் கையில் ஒரு மரப்பொம்மையைக் கொடுத்துப் போனாள். அந்த மரப்பொம்மைக்கு ஆண், பெண் இரண்டு பால் குறிகளுமேயிருந்தன. அதன் உடலில் ஏராளமான சங்கேத மொழிகள் செதுக்கப்பட்டிருந்தன. கையளவில் இருந்த அந்தப் பொம்மையை மறைத்தபடியே அவளைப் பற்றி கோமதிநாயகம் பிள்ளையிடம் கேட்டுக்கொண்டு வந்தான் ராபர்ட்ஸன். அவள் குறி சொல்லும் கம்பளத்துக்காரி எனவும், அவர்கள் வாக்கு பலிக்கக் கூடியது எனவும் சொல்லியதும் அவளது கறை படிந்த பல்லின் வசீகரத்தில் சாவு ஒளிந்திருந்ததை அவனால் உணர முடிந்தது.

பிள்ளையுடன் அடுத்த நாள் திரிகூடமலையைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தான். எல்லா துரைகளையும் பிடித்து ஆட்டும் வேட்டை யின் தீராத ஆசை ராபர்ட்ஸனையும் பிடித்திருக்கும் என நினைத்துக் கொண்டார். என்றாலும் அவன் ஏதோ சுவாமிகள், சுவாமிகள் என அடிக்கடி புலம்புவதையும் விசித்திர தாவரங்களைப் பற்றிக் கேட்பதையும் கண்டபோது 'எதுக்கு இப்பிடிக் கோட்டி பிடிச்சு அலையுதான்' என அவராகவே சொல்லிக் கொண்டார். ராபர்ட்ஸன் மதராஸில் தனியே சுற்றி பழைய மொகலாயக் காலகட்டத்தில் ஒளிந்திருந்த புத்தகக் கடைகளில் தேடி, தாவர சாஸ்திர நூல்களையும் அரண்ய கதாசரித பிரதியையும் வாங்கி வந்தான். குடும்பங்களில் பரம்பரையாக இருந்து வரும் சில தாவரங்கள் காலத்தின் நீள் கிளைகளாக உயிர் வாழ்ந்து சில அதீத சக்திகள் பெற்றுவிடுவதையும், ஆண் பெண் உறவின் எல்லா ரகசியங்களையும் அவர்களுக்குக் கற்றுத் தருவது அந்தத் தாவரங்களே எனவும், அத்தாவரங்கள்

குடும்பத்தின் பூர்வீக ஞாபகங்களைச் சுமந்தபடியே இருப்பதால் அவை ஒளிரும் தன்மை அடைகின்றன என்பதையும் அறிந்தான். இன்னமும் போதை வஸ்துகளாகும் செடிகளைப் பற்றியும் ரகசியங் களைத் தூண்டும் கொடிகள், கன்னிப் பெண்களின் நிர்வாணம் கண்டு கனவில் பூக்கும் குளியலறைப் பூச்செடிகளையும், குரோதத்தின் வாசனையை வீசி நிற்கும் ஒற்றை மரம் ஆவிகள் ஒளிந்திருக்கும் மரக்கிளைகளின் கதைகளை அறிந்தபோது அவன் வேட்கை அதிக மாகிக்கொண்டே போனது. ராபர்ட்ஸனின் பூனை சுற்றுப் புறங்களில் அலைந்து பழகிக்கொண்டிருந்தது. பச்சை நிறக் கண்களும், கறுப்பு உருவும் கொண்ட இந்தப் பூனை நடக்கும் வெளியைக் கடந்துவிடாமல் விலகி, சிறு பாதைகளில் பதுங்கிச் சென்றனர் பெண்கள்.

கோமதிநாயகம் பிள்ளை திரிகூட மலைக்குப் போவதற்கான பயண ஏற்பாடுகளைச் செய்திருந்தார். ராபர்ட்ஸன் மனைவிக்குக் கடிதம் எழுதிக்கொண்டிருந்தான். கடிதத்தின் கடைசி வரியை முடிக்கும் முன்பு யாரோ கதவைத் தட்டும் சப்தம் கேட்டு வெளியே வந்தபோது, ஆறு விரல் கொண்ட பெண் தொலைவில் போய்க் கொண்டிருந்தாள். அவன் வாசல் படியில் சேவலின் அறுபட்ட தலை ரத்தம் கசிய வெறித்துக் கிடந்தது.

திரிகூட மலையில் எண்ணற்ற அருவிகள் வீழ்ந்து கொண்டிருந்தன. கல் யாளிகளும், சிங்கமும், நீர்வாய் கொண்ட கல் மண்டபங்களும், பெயர் தெரியா மரங்களும், குரங்குகளும் நிறைந்த திரிகூட மலையின் குகைகளுக்குள் துறவிகளும் சித்தர்களின் படுகைகளும் ஏன் நீர்ச் சுனைகளும் வால் நீண்ட தட்டான்களும் இதய வடிவ இலை நிரம்பிய புதர்ச் செடியும். பாறைகளும், கருத்த பாறைகளும், உறங்கும் மரங்களும், நீலியின் ஒற்றை வீடும், மர அட்டைகளும், காட்டு அணில்களும் இறந்துபோன வேட்டையாள்களின் கபாலங்களும், யானைகளின் சாணக்குவியலும், படை ஈக்களும் சொறியன் பூக்களும், தேன் வட்டுகளும் நீர்ச்சுனையில் தவறி வீழ்ந்து இறந்து போனவர்களின் வெளிறிய ஆடைகளும், புணர்ச்சி வேட்கையில் அலையும் குடியர் களும், கள்ளச் சூதாடிகளும், முலை அறுந்த அம்மன் சிலையும், பன்றி ரத்தம் உறைந்த பலிக் கல்லும், ஸ்தனங்களை நினைவுபடுத்தும் கூழாங்கற்களும், சாம்பல் வாத்துகளுமிருந்தன. ராபர்ட்ஸன் வந்து சேர்ந்தபோது மழைக்காலம் மீதமிருந்தது. பின்பனிக் காலமென்றாலும் மழை பெய்தது. மலையின் ஒரு புறத்தில் வெயிலும், மறு பக்கம் மழையுமாகப் பெய்த காலை ஒன்றில் திரிகூட மலை முகப்பில் வந்து சேர்ந்திருந்தான். மரங்களை வெறித்தபடி வந்த அவனுடைய பூனை, மாமிச வாடையைக் காற்றில் முகர்ந்தபடியே தலையை வெளியே தூக்கியது.

திரிகூட மலையின் பச்சை, உடலெங்கும் பரவி ஆளையே பச்சை மனிதனாக்கியது. நெடுங்காலமாகத் தான் வரைபடங்களிலும் கற்பனை யிலும் கண்டிருந்த திரிகூட மலையின் முன்னே நேரிடையாக

நின்று தனக்குள்ளே புலம்பிக்கொண்டு ஒடுங்கிநின்றது. மனிதப் பேச்சுக் குரல் அடங்கிய பெரு வெளியொன்று மலையின் கீழே வீழ்ந்திருந்தது. வெயில் நகர்வதும், மழை மறைவதுமான ஓட்டம் தொடர்ந்துகொண்டிருந்தது. எல்லாப் பாறைகளும் அரவம் கண்டு திமிறி நின்றன. கையிலிருந்த பூனையைக் கீழே இறக்கிவிட்டபடி இரட்டை அருவியின் வழியில் நடந்தான் ராபர்ட்ஸன். பாதை எங்கும் சிவப்புப் பூக்கள் வீழ்ந்திருந்தன. எண்ணற்ற பாசி படர உறைந்து கிடந்தனர். பகல் நீண்டுகொண்டிருந்தது. வேட்டையாள் களின் தடங்கள் மிஞ்சியிருந்தன. அருவியின் இரைச்சலைக் காற்று மலை மீது வாரி இறைத்துக் கொண்டிருந்தது. வழிகளை அடைத்து விட்ட பாறைகளில் கால் தடங்கள் அழிந்திருந்தன. வழியெங்கும் சிறு குகைகள் தென்படலாயின. அவன் சிறு குகைகளாயிருந்ததால் துர்வாடையும் மண் கலயங்கள் உடைந்து கிடப்பதையும், எல்லாக் குகையும் பெண்ணின் வாடையே கொண்டிருந்தது எனவும் அறிந்தான். குகையின் உள்புறத்தின் வெக்கையில் வௌவால்கள் உறங்கிக் கொண்டிருந்தன. ஒன்றிரண்டு குகைகளில் நீர்ச்சுனைகள் இருப்பதையும் அவற்றின் மீது கண் வடிவப் பாறைகள் அடைக்கப்பட்டிருப்பதையும் கண்டான். இரட்டையருவியின் பின் வழியெங்கும் மரங்கள் அடர்ந் திருந்தன. இலைகள் உதிர்ந்த ஒன்றிரண்டு மரங்கள் மட்டும் வனத் தையே வெறித்தபடியிருந்தன. ஆள் நடமாட்டம் குறைந்த வனப்பகுதி போல இருந்தது. பூனை எங்கோ சுற்றி உடலெங்கும் காட்டு ஈக்கள் அப்பிக்கொள்ள தலையைச் சிலுப்பி வந்தது. ராபர்ட் ஸன் ஈக்களை விரட்டுவதற்காக நெருப்பைப் பற்ற வைத்தான். பூனை நெருப்பின் சுடர்களை நோக்கித் தன் நாக்கைச் சுழற்றியது. முதல் நாளின் மாலை வரை இரட்டை அருவியின் பின் வழியெங்கும் அலைந்து திரும்பினான் ராபர்ட்ஸன். அவனது எல்லா வரைபடங் களும் விளையாட்டுப் பலகை போலாகிவிட்டன. எல்லா வழிகளும் அடைபட்டு இருந்தன. அல்லது பாதி வழிகள் அறுந்து போயிருந்தன.

கோமதிநாயகம் பிள்ளை இரவு ராபர்ட்ஸனைச் சந்தித்தபோது அவன் மிகுந்த ஏமாற்றம் கொண்டவனாகவும், கசப்பின் சுனைகள் ஊறிப் பீறிடுபவனாகவும் இருந்தான். அவனால் எந்த ஒரு வழியையும் காண இயலவில்லை. அடுத்த நாள் கோமதி நாயகம் பிள்ளை ராபர்ட்ஸனைக் கூட்டிக்கொண்டு கூடங்காவு கிராமத்துக்குப் போனார். ஓட்டு வீடுகள் நிறைந்த ஊரின் மீது வெயில் இறங்கிக் கொண்டிருந்தது. பசுக்களும் குழந்தைகளும் நிறைந்த அந்த ஊரில் தான்தோன்றியா பிள்ளையின் வீட்டுக்குள் இருவரும் சென்றனர். நீர் உடம்பும், கருத்த பாதங்களும் கொண்ட தான்தோன்றியா பிள்ளை ராபர்ட்ஸனைக் கண்டதும் வரவேற்று இருக்கச் சொன்னார். அன்றெல்லாம் தொடர்ந்த பேச்சின் பின்பு பிள்ளைவாள் உள் அடுக்கில் வைத்திருந்த சாஸ்திரப் புத்தகங்களையும் ஏடுகளையும் கொண்டுவந்து காட்டிய பின்பு ராபர்ட்ஸன் அவரிடம் கேட்டான்.

“தாவரங்கள் பேசக்கூடிய தா, விசித்திர தாவரங்கள் இங்கேயும்

இருக்கிறதா?"

உள்கட்டு வரை நடந்துபோய்த் திரும்பிய தான்தோன்றியா பிள்ளை பெண்கள் எவரும் இல்லையென்பதை ஊர்ஜிதம் செய்து கொண்ட பின்பு மெதுவாகச் சொன்னார்.

"பேசக் கூடியதுதான், வீட்டுப் பெண்கள் இதைக் கேட்டிறக் கூடாதுன்னுதான் ரகசியமா சொல்றேன். தாவரங்கள் பேசக்கூடியது. ரகசியம் தெரிஞ்சது, மனுசாளைப் போல தசைகளும் கூட உண்டுன்னு தாண்டவராய சுவாமிகள் சொல்லியிருக்காரு."

தாண்டவராய சுவாமிகள் பேரைக் கேட்டதும் ராபர்ட்ஸன் விழிப்புற்று, அவரைப் பற்றிய தகவல்களைக் கேட்கத் தொடங்கினான். தனக்கு அந்தப் பற்றி எதுவும் தெரியாதென்றும், வனத்தில் அவர் நிர்வாணியாக இருந்தவர் என்றும், அவர் ஊருக்குள் வரும் நாட்களில் வீடுகளை எல்லோரும் அடைத்துக்கொள்வார்கள், பெண்கள் எவரும் குறுக்கே வர மாட்டார்கள் என்றும் அவருக்காகத் தானியங்கள் தரப்பட்டன என்றும் சொல்லிய பின்பு கடைசியாக சுவாமி பால்வினை நோய் வந்து மரித்துப் போனார் என்பதையும் சொன்னபோது ராபர்ட்ஸனால் இவை புனைவு என்பதாகவே புரிந்துகொள்ள முடிந்தது.

மழைக்காலம் முழுவதும் ராபர்ட்ஸன் பலரையும் சந்தித்துத் திரும்பினான். தாண்டவராய சுவாமிகளைப் பற்றி அறிந்திருந்த பலரும் கூட அவரைப் பற்றிய கதைகளையே எடுத்துக் கூறினர். கதைகளில் அவர் மலை விட்டு கீழ் வரும்போது மரங்களை உடன் கூட்டி வரச் செய்யக்கூடியவர் என்றும், மரங்களின் விசித்திர ஆசைகளைப் பூர்த்தி செய்ய இளம் பெண்களின் உடலை அறியச் செய்தவர் என்றும், அவர் ஒரு தந்திரவாதி என்றும், பாலியல் போக முறைகளைக் கண்டறிந்தவர் என்றும் கதை வழி பிரிந்து கொண்டே போனது. எவரிடமும் 'தாவரங்களின் ரகசிய வாழ்க்கை' நூலின் மூலப்பிரதி கிடைக்கவேயில்லை. பதிலாக ஆறு விரல் கொண்டவராக, நீண்ட ஜடை முடியும் மெலிந்த உடலுமான தாண்டவராய சுவாமிகளின் உருவப்படத்தையே அவர்கள் காட்டினர்.

மழைக்காலம் நின்ற பின்பு திரிகூட மலையின் வழிகள் திறந்து கொண்டன. பின்னிரவு முடியும் முன்பு மலையின் உள்புறத்தில் புகுந்து நடக்கத் தொடங்கிய ராபர்ட்ஸன், ஒருவார காலத்துக்குத் தேவையான உணவைத் தன்னுடனே எடுத்துச் சென்றான். வனத்தின் இருண்ட பாதைகள் வெயில் வரவால் விலகத் தொடங்கின. பாறை களில் இருந்த மஞ்சள் பூச்சிகள் உதிரத் தொடங்கி இருந்தன. தூர் பெருத்த மரங்கள் பெருமூச்சிட்டவாறே இருந்தன. பாறை வழிகளில் உள்ளே இறங்கிப் போன பின்பு வனத்தின் உள் அடுக்கு களுக்கு வந்து சேர்ந்தான் ராபர்ட்ஸன். வனம் ஒரு பசுமையான கோப்பை போலிருந்தது. எல்லாப் பொருள்களும் வடிவம் சிதறிப் போயிருந்தன. பாறைகளும், விருட்சங்களும் இன்றி வேறு எவற்றையும்

காணவில்லை அவன். பகலைவிட இரவில் அவன் மிகுந்த குளிர்ச்சியையும் பசுமையையும் உணர்ந்தான். எங்கோ கிசுகிசுக்கும் சப்தங்களும், சிறகு ஒலிகளும் கேட்பதும் அடங்குவதுமாக இருந்தன. பிணைந்து கிடந்த இரட்டை மரங்களின் உடல்கள் நெளிவுற்றன. சர்ப்பங்கள் ஒளிந்த உயர் மரங்களின் மீது இருள் இறங்கியிருந்தது. பாதி ஒடிந்த அம்புகள் பாய்ந்த மரங்களைக் கண்டபடியே அடுத்த நாளில் அவன் இன்னமும் அடி ஆழத்தில் நடந்து சென்றான். இப்போது மரங்கள் தனித்தனியாகவும் மூர்க்கம் கொண்டுமிருந்தன. கல் உருபெற்ற மரங்கள் ஈரம் உறிஞ்சிக்கொண்டிருந்தன.

மூன்றாம் நாள் காலை அவன் பூனை மிகுந்த கலக்கமுற்று எல்லாச் செடிகளுக்கும் பயந்து அலைந்தது. பூனை விரல்கள் பட்டதும் சில இலைகள் மூடிக் கொண்டன. தனியே பறக்கும் வண்ணத்துப்பூச்சிகள் பூனையின் மேலே பறந்து பார்த்துச் சென்றன. பாறையிலிருந்து தாவ முயன்று வீழ்ந்த பூனையின் சப்தம் கேட்டு, அதன்பின் இறங்கிய ராபர்ட்ஸன் இதுவரை எவரும் கண்டறியாத அருவியைப் பார்த்தான்.

மிகுந்த உயரத்திலிருந்து வீழ்ந்துகொண்டிருந்த அருவியது. பாறையின் விளிம்பில் இருந்து எழுந்து வீழ்ந்துகொண்டிருக்கும் அருவியின் பிரமாண்டம் இதுவரை அறியாததாக இருந்தது. அதை விடப் பெரிய விநோதமாக இருந்தது அந்த அருவி சப்தமிடாதது. இத்தனை உயரத்தில் இருந்து வீழ்ந்தபோதும் அருவியில் துளி சப்தம்கூட இல்லை. பிரமாண்டமாக மவுனம் வீழ்ந்து கொண்டிருப்பது போல இருந்தது. சப்தமில்லாத அருவியை அவன் முதல் முறையாக இப்போதுதான் பார்க்கிறான். நீரின் அசைவு கூடக் கேட்கவில்லை. நீர் வீழ்ந்து ஓடும் ஈரப் பாறைகளுக்குள் ஒரு விலங்கைப் போல வீழ்ந்தபடி அருவியின் தோற்றத்தினைப் பார்த்தபடியே இரண்டு நாள்கள் கிடந்தான். எங்கும் சப்தமில்லை. அருவியின் சப்தம் எங்கு சென்று பதுங்கிக்கொண்டது எனப் புரியவில்லை. பூக்கள் படர்ந்த பாறையில் படுத்துக் கிடந்த பூனையும் இந்த விசித்திரக் காட்சியின் வியப்பில் தன்னை விடுவிக்க முடியாமல் கிடந்தது. அவன் மூன்றாம் நாள் எழுந்து அருவியின் ஊடே சென்று நின்றான். வேகமும் குளிர்ச்சியும் நறுமணமும் கொண்ட அருவி, அவனைப் புரட்டித் தள்ளியது. அருவியின் வலப்புறம் எங்கும் பூத்துக் கிடந்த வெள்ளைப் பூச்செடிகளைப் பார்த்தபடியே கிடந்தான். அந்தப் பூக்கள் எட்டு இதழ் அமைப்பு கொண்டதாகவும் குழல் போன்றும் இருந்தன. ஒரேயொரு வெள்ளைப் பூச்செடியை மண்ணோடு பேர்த்துக் கொண்டான். அருவியின் வரைபடத்தைப் பகல் முழுவதும் வரைந்து முடித்துவிட்டான். சப்தமில்லாத அருவியின் சிலிர்ப்பு தாங்காது, அவன் தப்பி பாறைகளின் மீது ஊர்ந்து ஆறு நாள்களுக்குப் பின்பு ஊர் வந்து சேர்ந்தபோது அவனுக்கு நீர் ஜுரமும் பிதற்றலும் கண்டிருந்தன. கோமதிநாயகம் பிள்ளை வைத்தியம் செய்த பின்பு, அவன் குணமாகினான் என்றாலும், சப்தமில்லாத அருவியைப்

பற்றிய சிந்தனை அவனை மிகுந்த மனவேதனைக்கு உட்படுத்தியது. வனத்தில் இருந்து திரும்பிய பின்னாட்களில் அவன் நடவடிக்கையிலும் மாற்றம் கண்டது.

ஒரு இரவில் அவன் கண்ட கனவில் உடலே பெரிய மலையாகி உடல் உறுப்புகள் விருட்சங்களாகியிருந்தன. இதயத்திலிருந்து உடல் எங்கும் ரத்தம் சப்தமில்லாத அருவியைப் போலப் பொங்கி தலை முதல் கால் வரை ஓடிக்கொண்டிருந்தது. சப்தமில்லாத அருவி ஓடும் வனம் உடல்தான் என்றும், தாவரங்களின் ரகசிய வாழ்க்கையில் குறிப்பிடப்படும் தாவரம் மனிதன்தான் எனவும், மனித உடலினுள் புதைந்திருக்கும் விருட்சங்கள்தான் பேசக்கூடியவை, ரகசிய இச்சைகள் கொண்டவை என்றும் புரிந்துகொண்ட பின்பு அவன் ஆடைகளை எல்லாம் துறந்துவிட்டு, தனது கறுப்புப் பூனையுடன் திரிகூட மலையில் துறவியாக அலைந்து திரியத் தொடங்கினான்.

பளியப் பெண்கள் பல முறை சருகுகளுக்குள் வீழ்ந்தபடி கிடக்கும் பூனைச் சாமியாரைப் பார்த்துப் போயிருக்கிறார்கள். அவன் உடலில் அட்டைகள் கடித்த வடுக்களும், தோல் வெடிப்புகளும் கண்டிருக் கிறார்கள். அவனது பூனை குணம் மாறி எப்போதும் கத்தி அலைந்தது. மரங்களைப் பிறாண்டியபடி அலைவதையும் காற்றில் தெரியும் ஏதோ உருவத்தை அது துரத்திக் கொண்டு போவதையும் பார்த்திருக் கிறார்கள். பூனைச் சாமியாரின் முகம் முழுவதும் கோரை மயிர்கள் பெருத்துவிட்டன. அவர் பளிய கிராமங்களுக்கு வந்து சில நாள்கள் இருப்பதும் உண்டு என்றாலும் யாருடனும் பேசுவதைத் தவிர்த்துப் போன அவரை உடலில் ஒளிந்திருந்த விருட்சங்கள் தூண்டிக் கொண்டேயிருந்தன. கிரகணத்தன்று எல்லோரும் வீட்டினுள் சென்று பதுங்கிக்கொண்டனர். அன்று பூனைச் சாமியார் மலை கிராமத்துக்குப் போனபோது ஊரே வெறித்துக் கிடந்தது. பளியர்கள் தாவரங்கள் பேசிக்கொள்ளும் நாள் இது என அவருக்குச் சொன்னார்கள். அவர் மலையின் இடப்புறமிருந்து கீழே இறங்கினார். கிரகணம் படரத் தொடங்கியது. பகல் கறுத்து வனத்தின் மீது இரவு வீழ்ந்தது. ஈக்களும் நுழைந்துவிடாத இருள். மரங்கள் தலையைத் தாழ்த்திக் கொண்டன. கிளைகள் நீண்டு ஒன்றின் மீது ஒன்று புரண்டன. சிறு செடிகள் துடிக்கத் தொடங்கின. இலைகளின் ஸ்பரிசமும், மெல்லிய வாசமும் ஏதோ ஒரு வித மயக்க நிலையை உருவாக்கின. ஒன்றிரண்டு பூக்களின் இதழ்கள் விரிந்து எதிர்ச்செடியின் இலைகளைக் கவ்விக்கொண்டன. பூமியெங்கும் நீரோட்டம் போல வேர்கள் அதிரத் தொடங்கின. மரங்களின் மூச்சுக் காற்று சப்தமிட்டது. உடலை நெகிழ்த்தி மரங்கள் வேட்கை கொண்டன. கல் மரங்கள் மெல்ல ஒளிரத் தொடங்கி பின் தங்கள் கிளைகளை நீட்டின. உறங்கிக்கொண்டிருந்த ஒன்றிரண்டு மரங்கள்கூட விழிப்புற்று இச்சையைப் பகிர்ந்துகொண்டன. வனமெங்கும் மெல்லிய பச்சை நிற ஒளியொன்று படர்வதும் மறைவதுமாகவிருந்தது. தாவரங்களின் உரையாடல் அதுதான் எனப்பட்டது பூனைச் சாமியாருக்கு.

ஒன்றையொன்று கவ்விக்கொண்ட இலைகளின் நரம்புகளில் இருந்து ஒளி கசிந்துகொண்டிருந்தது. சர்ப்பங்களைப் போல மூர்க்கமற்று மரங்கள் பிணைந்துகொண்டன. மலைப் பாறைகளில் இருந்த தனி மரங்கள் இடம் பெயர்ந்து இறங்கி வருவது போல உடலை விரித்துப் பாறை விளிம்பில் நின்ற பூமரங்களின் கனிகளைச் சுவைக்கத் தொடங் கியது. எண்ணற்ற விதைகள் உதிரத் தொடங்கின. கிரகணம் விலகத் தொடங்கி மெல்ல வெயில் கீறி வெளிப்படத் தொடங்கியதும் இலைகள் சுருள்பிரிந்து மீண்டன. மரங்கள் உடலை நேர்செய்து கொண்டன. பாதி தின்ற பழங்கள் துடித்தன. பூக்களின் மீது விடு பட முடியாத இலைகள் அறுபட்டன. வெயில் ததும்பியதும் மரங்கள் விழிப்புற்று நின்றன. புணர்ச்சிக்குப் பிந்திய பெரிய அமைதியும், ஆசுவாசமும், இச்சையின் துடிப்பும் வனமெங்கும் நிரம்பின. காற்று லாஹரி போன்ற வாடையைப் பரப்பியது. வனம் தன் இயல்பு கொண்டு ஒடுங்கிற்று. இதுவரை தான் கண்டவை எல்லாம் நடந்ததா, அல்லது ஏதும் உருவெளித் தோற்றமா எனத் தெரியாமல் விழித்தான் ராபர்ட்ஸன். இது உண்மை எனில் தாவரங்களின் ரகசிய வாழ்க்கை மனித வாழ்வை ஒத்ததுதானா, இதன் ஞாபக அடுக்கில் எண்ணற்ற செய்திகள் ஒளிந்துகொண்டிருக்குமா, பூனைச் சாமியாரின் உள்ளே ஒடுங்கியிருந்த தாவரவியல் ஆராய்ச்சியாளர் ராபர்ட்ஸன் உயிர்பெற்று வெளிவந்தான். தான் கண் முன்னே கண்டதெல்லாம் நிஜம், தான் கண்டது இதுவரை எந்த ஒரு தாவரவியலாளனும் கண்டறியாத மாபெரும் விந்தை. இனிமேல் தான் மனிதர்களைப் பற்றி அறியும் எல்லா சோதனை முறைகள் வழியேதான் தாவரங்களையும் அறிய வேண்டியதிருக்கும். மனித நுட்பங்கள், கனவுகள் எல்லாமும் கொண்டதாக இருப்பதால்தான் விருட்சங்கள் மனிதனோடு எளிதாக உறவு கொண்டுவிடுகின்றன. இனித் தான் கண்டவற்றைப் பதிவு செய்ய வேண்டி கீழே போகலாம் என அவன் முடிவு கொண்ட பின்பு பளிய கிராமத்துக்குப் போனான் ராபர்ட்ஸன்.

கிராமத்தின் பின்பு பளியப் பெண்கள் குளித்து ஈர உடலுடன் எதிரில் நடந்து சென்றனர். அப்போதுதான் அவன் கவனித்தான். எல்லாப் பெண்களின் வயிற்றிலும், இலைகளும் பூக்களும் விரிந்த கொடியொன்று பச்சை குத்தப்பட்டிருந்தது. அந்தப் பச்சை குத்தப்பட்ட செடி போன்றே ஸ்தனங்களின் மேலும் பச்சை இலைகள் போர்த்தப் பட்டிருப்பது போல் சித்திரம் இருந்தது. இந்திய வாழ்வில் தாவரங்கள் எதை எதையோ உணர்த்தும் அபூர்வக் குறியீடாக இருப்பதை உணர்ந்துகொண்டு அவன் தன் பூனையை விடுத்து அவசரமாக மலையை விட்டு இறங்கிக் கீழே வந்தான். ஏற்கனவே தன்னால் மூடப்பட்ட தன் அறைக் கதவு அப்படியே சாத்தப்பட்டிருந்தது. ராபர்ட்ஸன் இறந்து போனதாக கோமதிநாயகம் பிள்ளை கொடுத்த தகவலும், இங்கிலாந்து போயிருந்தது. அறையின் பின் வழியே நுழைந்து, தன் மேஜையைத் திறந்தபோது பல்லிகள் உறங்கிக்கொண்டி ருந்தன. தாண்டவராய சுவாமியின் மூலப்பிரதி ஒன்று கிடையாது

எனவும், வனமே அந்த மாபெரும் மூலப்பிரதி எனவும் அவன் குறிப்பதற்காகத் தனது டயரியைத் தேடி எடுத்தான். அறை எங்கும் தூசிகளும் சிலந்தி வலைகளும் இறைந்திருந்தன. அவசரமாகத் தன்னுடைய ஆடைகளை அணிந்து கொண்டு அறைக் கண்ணாடியில் தன்னைக் கண்டபோது அவனுக்கு வெற்றியின் மிதப்பும், சிரிப்பும் பெருகியது. முன் கதவைத் தள்ளித் திறந்து வெளியே யாரும் வருகிறார்களா எனப் பார்த்தான். நடமாட்டமேயில்லை. அறை அலமாரியில் இருந்த மதுப்புட்டியை வெளியே எடுத்தான். மதுப் புட்டியின் அருகிலிருந்த கண்ணாடிக் குவளைகள் சரிந்து வீழ்ந்தன. அலமாரியின் உயரத்தில் இருந்து உடைந்து சிதறிய கண்ணாடிகளைக் குனிந்து பெருக்கும்போது சட்டென உறைத்தது. 'கண்ணாடி உடையும் சப்தம் எங்கே போனது?' சப்தம் ஏன் வரவில்லை? ஒரு நிமிட நேரத்தில் பின் அறையின் மூலையில் அவன் கொண்டுவந்த வெள்ளைப் பூச்செடியைக் கண்டான். அது உயரமாக வளர்ந்து கிளை எங்கும் பூக்களாக மலர்ந்திருந்தது. அப்படியானால் சப்தம் எங்கே போகிறது? கையிலிருந்து மதுப்புட்டியை உயரத்துக்குத் தூக்கி எறிந்தான். அது சுழன்று வீழ்ந்தது சப்தமின்றி. அவன் உடனடியாக அந்தப் பூச்செடியைத் தூக்கிக்கொண்டு போய்ப் பின் வெளியில் வைத்துவிட்டு வந்து இன்னொரு மதுப்புட்டியைத் தூக்கி எறிந்தான். அது சப்தமாக உடைந்து வீழ்ந்தது. எனில் அந்தப் பூச்செடிதான் சப்தத்தை உறிஞ்சிவிடுகிறதா? சப்தத்தை உறிஞ்சும் பூச்செடி ஒன்று இருக்க முடியுமா? அவனால் நம்பவே முடியவில்லை. பூச்செடியைத் தன் அறைக்குத் தூக்கி வந்து நாள் முழுவதும் அதைச் சோதித்துக்கொண்டிருந்தான்.

அந்தச் செடிதான் சப்தத்தை உறிஞ்சிவிடுகிறது எனத் தெரிந்தது. எனில் சப்தமில்லாமல் அருவி வீழ்வதற்குக் காரணம் அந்தப் பூச்செடிகள்தான் என அறிந்துகொண்டான். அந்தச் செடியைப் பதனப்படுத்திக்கொண்டான். மூன்று நாள்கள் உட்கார்ந்து குறிப்புகள் எழுதிக்கொண்டு, கோமதிநாயகம் பிள்ளையைப் பார்க்கப் புறப்பட்டான்.

அவர் வீட்டில் குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தன. கோமதிநாயகம் பிள்ளையின் மனைவி அவனைக் கண்டு பயந்து போனாள். அவன் வீட்டின் உள் அறைக்கு வந்தபோது கோமதிநாயகம் எதிர்ப்பட்டு, அவனை எதிர்பாராது கலங்கி வரச் சொன்னார். அவன் இங்கிலாந்து புறப்படுவதாகவும், திரிகூட மலைக்குத் திரும்பவும் வருவதாகவும் சொல்லிப் போனான். ராபர்ட்ஸனைக் கண்ட பயத்தால் கர்ப்பத்தில் உள்ள குழந்தை முகம் புரண்டு கொண்டது. அவன் கப்பலில் இங்கிலாந்து புறப்படும்போது குறி சொல்பவள் தந்த மரச் செதுக்கு பொம்மையும், சப்தம் உறிஞ்சும் தாவரமும், குறிப்புகளும் கொண்டு சென்றான். கப்பல் மிக மெதுவாகவே சென்றது. அவன் கப்பலில் உடன் வரும் எல்லோருடனும் எதையாவது பேசினான்.

தினமும் அளவுக்கு அதிகமாக மது அருந்தியும் ஆடிக் கூச்சலிட்டும் பொழுதைப் போக்கினான்.

அவன் புறப்பட்ட ஒன்பதாம் நாளில் கடலில் உள் ஒளிந்திருந்த புயல் வெளியேறி கப்பலை அலைக்கழிக்கத் தொடங்கியது. காற்று நீரை வாரி இறைத்தது. கடலின் நிறம் மாறியது. எல்லோரையும் பிடித்துக்கொண்ட மரண சகுனங்கள் பேச்சைத் துண்டித்தன. நிலம் தெரியாத கடல் வெளியில் நின்றது கப்பல். எப்போது கப்பல் நொறுங்கியது என எவரும் அறியவில்லை. ஒரு அலையின் உயரத்தில் அவன் கடைசியாகக் கண் விழித்தபோது எங்கும் பசுமை பொங்கி வழிந்தது. பின் அவன் உடல் பல நாள்கள் கடல் அலைகளின் மீது மிதந்தது. கரையில் அவன் உடல் ஒதுங்கிய போது நீண்ட முதுகில் சூரியன் ஊர்ந்து சென்றது.

நுரை ததும்பும் நீரின் ஆழத்தில் புதைந்துபோன அவனது தோல் பையிலிருந்த குறிப்புகளைப் பின்னாட்களில் தினமும் கொஞ்சம் கொஞ்சமாக மீன்கள் தின்று போயின. அவனது ரகசியங்கள் மீனின் உடலில் மிகப் பாதுகாப்பாகச் சென்று சேகரமாயின. மரப்பொம்மை மட்டும் வெடித்துத் துண்டுகளாகியது.

தன்னோடு ஒரே அறையைப் பகிர்ந்துகொண்ட ராபர்ட்ஸனின் புதிய கண்டுபிடிப்பான தாவரங்களின் ரகசிய வாழ்க்கை பற்றிய கருத்துகளை சப்தமில்லாத அருவி பற்றி உலகுக்குத் தெரியப்படுத்திய ரிச்சர்ட் பர்டன் என்ற புலிவேட்டைக்கார ராணுவ அதிகாரி பின்னாட்களில் ஒருமுறை திரிகூட மலை வந்தபோது அந்த இடம் எதையும் பார்க்க முடியவில்லை. அதற்குப் பதிலாக அவருக்குக் கிடைத்ததெல்லாம் ராபர்ட்ஸனின் குறிப்புகளே. அவர் அதைத் தொகுத்து 1864—ல் வெளியிட்டார். அது பலருடைய கவனத்தையும் பெறாமல் போனதற்குப் பெரிய காரணமாக இருந்தது. இது புலி வேட்டைக்காரனின் கற்பனை என்பதாகத் தாவரவியல் அறிஞர்கள் கருதியதே.

1946—ல் இந்தியா வந்த தாவரவியல் ஆராய்ச்சி மாணவரான ஜான் பார்க்கர், திரிகூட மலை முழுவதையும் அறிந்துகொண்டு ராபர்ட்ஸன் குறித்த இடத்துக்குச் சென்றபோது அங்கே அருவி சப்தத்தோடு வீழ்ந்துகொண்டிருந்தது. வெள்ளைப் பூச்செடிகள் ஏதுமில்லை. தாவரங்களின் நுட்ப உணர்வுகளுக்குக் காரணம் எலக்ட்ரோமாக்னட் அலைகள் உள் வாங்குவதனால்தான் என்று விளக்கியதோடு, தாவரங்கள் பற்றிய பல இந்தியக் கதைகள் சுவாரசிய மானவை. அவற்றில் ஒன்றுதான் ராபர்ட்ஸனின் குறிப்பும் என எழுதி முடித்தான். அங்கிருந்த ஒரு நாளின் இரவில் அவனோடு உறங்க அழைத்து வரப்பட்ட பளியப் பெண்ணின் உடலில் இருந்த பச்சை குத்தப்பட்ட இலைகள், [illegible]வின்போது தன் உடம்பில் ஊர்வதாகத் தோன்றியது போதை என சுய சமாதானம் கொண்ட போது உடலில் பச்சையான திட்டுகள் படர்ந்திருந்ததையும், அதைப்

பற்றி ஆராய முடியாத போதெல்லாம் ராபர்ட்ஸனின் நினைவிலிருந்து தப்ப முடியாமல் போனதையும் ஜான் பார்க்கர் உணர்ந்து கொண்டு தான் இருந்தான். கோமதிநாயகம் பிள்ளையின் எட்டாவது குழந்தை யாகப் பிறந்த பெண்ணுக்கு ஆறு விரல்கள் இருந்ததற்கும் அது கர்ப்பத்தில் ராபர்ட்ஸனைப் பார்த்ததற்கும் தொடர்பிருக்கிறதா என எவருக்கும் தெரியாமலே போனது தனி விஷயம்.

பெயரில்லாத ஊரின் பகல்வேளை

இருட்டு தாரை தாரையாக இறங்கிக் கொண்டிருந்தது. ஆகாசத் துக்கும் நிலத்துக்குமான இடைவெளியை மூடி நிரப்ப முயன்று கொண்டிருந் தது இருள். வழியும் மரங்களும் வீடுகளும் கூட தலை மாற்றி வைக்கப்பட்டுவிட்டனவா? ஆகாசத்தின் துகள்களாக மிதக்கும் நட்சத்திரங்கள் சரிந்து தரையிலிருந்து முளைத்திருக்கின்றனவா? பாதை புலப்படாத இருட்டு. எல்லாப் பக்கத்திலும் நட மாட்டமற்ற வெளி இறுகிக்கொண்டு வந்தது. புதையுண்டிருந்த மரங்களில் நாடி ஒடுங்கி நின்றது காற்று. இருளின் எல்லாச் சுனைகளும் திறந்து கொண்டு இடைவிடாது சுரந்துகொண்டிருந்தன. முனங்கல்களும் பேச்சரவமுமில்லை. பறவையொன் றின் றெக்கையொலி மட்டுமே சடசடக்கிறது. மண்புழு ஊர்ந்த தடம் போல நிலமெங்கும் பாதை களைப் பிரிக்கின்றது. பூச்சிகள் இருளைக் குடித்தபடி மயங்கிக் கிடந்தன. தீர்க்கமுடியாத வருடங்களின் தனிமை இருளாக நின்று ஊர் பார்த்துக்கொண்டிருந்தது. நடமாட்டத்தின் பேரில் அக்கறையற்று உருவாகியிருந் தது எங்கும் இருட்டு.

பஸ்ஸிலிருந்து இறங்கி வழிப்பாதையில் நடக்கத் தொடங்கிய இருவருக்குமே இருளின் பிசுபிசுப்பு பயத்தையும் தனிமையையும் பெருக்கியது. நடக்க நடக்க காடு விரியத் தொடங்கியது. உடன் நடந்த போது அடுத்தவரின் முகம் தெரியவில்லை. வீசி நடக்கும் கைகளின் தீவிரத்தில் விலகிச் சரிகின்றது இருள். வானம் சரிந்து பூமியோடிருந்தது. இருவரும்

பெருமூச்சு விட்டபடியே நடந்தார்கள். வெகு நெருக்கத்தில் ஆகாசம் தணிந்திருந்தது. வெக்கை உறைந்த நிலத்தில் நடை ஆயாசமாகவும் தன்மை புரியாமலுமிருந்தது. எங்கோ ஒடுங்கிய காற்று சீறத் துடிப்பது போல ஒரு சுழல் மூச்சின் சப்தம் கேட்டது. இருவரில் எவரும் பேச வேண்டும் என்றோ, புகை பிடிக்கவோ கூட நாட்டமில்லை. நடக்க நடக்க கரடு தட்டிய நிலமும், கரம்பை மணலுமான நிலப்பரப்பு விரிந்திருந்தது. பாறைகள் சில பூமியுள் புதையுண்டிருந்தன. நடந்து விலகும்போது காலில் எத்திய ஏதோ ஒரு பொருள் சிதறி ஓடியது. முன்னால் செல்பவன் அவனை விட்டு விலகிச் சென்ற பிறகும் பின்னாடி வந்தவன் விரல்களைக் கொஞ்ச நேரம் பார்த்தபடி நின்றான். காலில் எதுவும் தெரியவில்லை. பிரமாண்டத்தின் மீது வெளிச்சத்தைப் பரப்பத் தீப்பெட்டியிலிருந்து குச்சியொன்றைக் கிழித்தான். நெருப்பு ஓசை துல்லியமாகக் கேட்டது. ஒரு நிமிடம் எல்லாமும் பிரகாசமாகி ஒளிர்ந்து நின்றது. மரங்களின் மூர்க்க ரூபமும், பாறைகளின் திமிறிய முகங்களும், கருத்த நிலமுமாக ஒளியில் தோன்றின. அடுத்த குச்சியைக் கிழித்துப் பார்த்தான். அவன் காலைப் பற்றியிருந்தது மாட்டின் தலை. எப்போதோ புதையுண்டு போன மாட்டின் திறந்த வாய் எலும்புகள் சிதையத் தெரிந்தது. கண்கள் வெற்றிடமும் பலத்த கபாலமுமாக மாட்டின் தலை எலும்பு அரித்துக் கிடந்தது முன்னால் போனவன் போய்க் கொண்டேயிருந்தான்.

எந்த நாளிலோ செத்துப் போன மாட்டுத் தலையின் தீவிரம் புதையுண்ட மண் எங்கும் நிறைந்திருந்தது. ஈரம் கசியும் மாட்டின் கண்களை ஞாபகப்படுத்தியது இருள். கபாலத்தைத் தூக்கி எறிந்தான். வழிப்பாதைகளில் மாடுகள் செத்துக் கிடப்பதைக் கண்டிருக்கிறான். சில உடைமரங்களில் மாட்டின் தொப்புள் கொடிகள் ஓலையில் சுற்றப்பட்டு நெடுங்காலம் இருப்பதைக்கூடக் கண்டிருக்கிறான். இறந்த மாட்டின் விலா எலும்புகள் நிலத்தினின்று மீறி வலையெனப் படர்ந்திருப்பதைப் பார்த்திருக்கிறான். மாட்டின் வெறுமையுற்ற கண்களே நிலப்பரப்பின் வாழ்வு.

முன்னால் நடந்து போனவனுக்கும் பின்னவனுக்குமான தொடர்பு அறுந்துபோனது. வேகமாக நடக்கத் தொடங்கினான். மணல் பழுத்துப் போன வெளி நடக்க நடக்கப் புதையுண்டது. அருகில் நடைச் சப்தம் கேட்கத் தொடங்கிய பின்பே முன்னால் சென்றவன் நிதான மானவன். இருவரும் கடந்து போனார்கள். இருட்டிலிருந்து அவன் குரல் கேட்டது.

“உனக்கு ஊர் ஏதாவது தெரியுதா?”

“கிழக்கே பாரு. வெளிச்சம் சரிந்து கிடக்குது.”

குரல் அடங்கி இருவரும் அவரவர் இயல்புப் போக்கின் வழியே மீண்டும் நடக்கத் தொடங்கினர். முன்னால் நடந்தவன் தனிமை தாங்காது அவனாகவே பேசிக்கொள்ளத் தொடங்கிவிட்டான். அவன்

ஒருவனின் பேச்சே பலரது குரல் போல திசை குழம்பிக் கேடகத் தொடங்கியது. பின்னால் வந்தவன் எதையும் சட்டை செய்யவில்லை. ஆளற்ற இடத்தில் நடந்து கொண்டிருக்கிறோம் என்பதே அவனுடைய ஒரே நினைவாக இருந்தது. வழி சில நேரம் அகன்றும், பல நேரம் மறைந்து வளைவதுமாகவே இருந்தது. தானாகப் புலம்பிக் கொண்டு வந்தவனின் குரல் அசட்டையாகவும், பல சமயம் எரிச்சலூட்டுவதாக வும் இருந்தது. குரல் கடந்துகொண்டே இருந்தது. உடை மரங்கள் தென்படத் தொடங்கின. பூவாடை. முன்னால் சென்றவன் பயத்தில் முனங்கினான். திடீரென அவன் குரல் உயர்ந்து கேட்டது.

"தீக்குச்சியைக் கொளுத்தேன்."

தீக்குச்சியின் வெளிச்சம் பரவியபோதும் பிரகாசமான இடை வெளியை ஊதி அணைத்தது இருட்டு. திரும்பவும் அவனருகில் போய்த் தீக்குச்சியை உரசிக் காட்டியதும் அவன் முகத்தில் ரத்தக் கோடுகள் தெரிந்தன. நகத்தின் பிறாண்டல். அவன் விரல்களால் கன்னத்தை மூடிக்கொண்டான். முகம் இந்த வெளிச்சத்தில் விகார மாகிறது. ரத்தத் துளிகள் தெரிந்தன. இன்னொரு குச்சியை உரசிப் பெற்று வெளியில் காட்டினான். சடசடப்பு ஒலியுடன் பறந்து கொண்டிருந்தது ஒரு பறவை. வௌவாலாகத்தான் இருக்க வேண்டும். அதுதான் முகத்தில் அடிக்கக் கூடியது. முனங்கியபடி நடந்தவன் கேட்டான்.

"ஊர் அருகில்தானிருக்க வேண்டும். வௌவால் அலைகின்றதே...

"சொல்ல முடியாது. காட்டு வௌவாலாகவும் இருக்கக்கூடும்."

வழி தன் போக்கில் ஊர்ந்து போனது. இருவரும் அருகருகே நடந்து போனார்கள். முதுகிலிருந்த பை கனக்கத் தொடங்கியது. முடிவற்ற கனவில் செல்வது போலவே இருவருக்கும் தோன்றியது பின்னால் வந்தவன் கேட்டான்.

"அவர் வீட்டில் இருப்பார்தானே?"

"எங்கேயும் போக மாட்டார். எப்படியும் ஊரில்தான் இருக்க வேண்டும்."

ஊர் வழி புலப்படத் தொடங்கியது. நாய்களின் ஓசை விட்டு விட்டுக் கேட்கத் தொடங்கியது. ஊர் மயங்கிக் கிடந்தது. உறக்கத்தின் ஊடே ஊரின் சொல்லவொண்ணா அழகும் வசீகரமும் வெளியெங் கும் ததும்பிக்கொண்டிருந்தன. எல்லா ஊரும் இரவில் வசீகரம் கொண்டு விடவே செய்கின்றன. நீரில் மூழ்கிக் கிடப்பது போலிருந்தது ஊர். சரிந்து பிரியும் பாதை வழியாக ஊர் முகப்பினுள் நடந்தனர். ஊரை வட்டமிட்டு இருந்தது சாம்பல் நிற வெளிச்சம். மனிதர்களின் நடமாட்டம் உள்ள ஊர்களுக்கு மட்டுமே அந்த வெளிச்சம் வருவதாகச் சொல்வார்கள். இரவில் எல்லோரும் உறங்கிவிடுவதால் எல்லோரின் கண்களிலும் பதுங்கிய வெளிச்சம் இரவில் பிரிந்து ஊரைச் சுற்றிக் கொண்டிருக்கும். அந்த வெளிச்சம் அகன்ற ஊர்கள் வெகு சமீபத்தில்

அழிந்து போய்விடும் என்பார்கள்.

ஊர் எல்லாப்புறமும் திறந்து கிடந்தது. மங்கிய கூரைகள் தெளிவற்ற நாய்க் குரைப்பும், சிதறிய நட்சத்திரவொளியும் அடங்கிய வெம்மையுமாக இருந்த ஊரினுள் நடந்தனர். தெருவில் உறங்கிக் கொண்டிருந்தனர் ஜனங்கள். எல்லாமும் உறைந்து போனது போல் இருந்தன. கல் திண்ணைகளில் படுத்துக்கிடந்த உருவங்கள் எல்லாமே ஒன்றைப் போலவே இருந்தன. தெருக்களில் நீண்ட சப்தமின்மை நிறைந்திருந்தது. கூரைகளின் கருத்த வைக்கோல்கள் காற்றல் அகப்பட்டு அலைக்கழிக்கப் பட்டுக்கொண்டிருந்தன. கயிற்றுக் கட்டில்களில் புதைந்த முகங்கள். சாம்பல்நிற வெளிச்சத்தில் வீடுகள் விநோதத் தோற்றம் கொள்கின்றன. ஈரப்பசையற்ற ஊர். புழுதி அடைந்த தெருக்கள். பெரிய பாறையொன்று ஊரின் நடுவில் கிடந்தது. அசையாத வேப்ப மரங்கள் வருபவர்களைப் பார்த்தபடியிருந்தன. மடத்தைக் கடந்தபோது யார் குரலோ கேட்டது.

"யார் வீட்டுக்குப் போகணும்...

"ரெங்கசாமி..."

"சிவப்புத் துண்டு ரெங்கசாமியா?"

அவர்கள் தலையாட்டினார்கள். மடத்தின் தூணில் சாய்ந்தவாறு கேள்வி கேட்ட நபர் அவர்களிடம் சொன்னான்.

"இப்படி. கிழக்கு வழியாப் போங்க. அடுத்த ஊர். .பக்கம் தான். நேரம் என்ன இருக்கும்?"

"ரெண்டு மணிக்கும் மேலாயிருச்சு.

பேச்சுக்குரல்கள் அடங்கிவிட்டன. அவர்கள் கிழக்கு வழியில் நடந்தனர். கட்டை கட்டையாக நின்ற வீட்டுச் சுவர்களைப் பார்த்தபடியே நடந்தனர். வெருகுப் பூனையொன்று எங்கோ அலைந்துவிட்டுத்திரும்பிக் கொண்டிருந்தது. இருவரும் நடந்த வழியைத் திரும்பிப் பார்த்தனர் பின்னாடி எதுவுமில்லை. அடுத்த ஊரை அவர்கள் வந்து அடைந்தபோது மணி மூன்றாகிவிட்டது. பழங்கிராமம். எதுவும் சரிவரப் புலப்படாத தெருக்கள். வீடுகள் அதிகமில்லை. திசைக்கொன்றாகச் சிதறப்பட்டது போலக் கிடந்தன. நிசப்தம் தன் பூஜ்ய அளவைவிடவும் கீழே போயிருந்தது. தெருவில் அவர்கள் இந்த இரவிலும் ஒரு பெண்ணின் நடமாட்டத்தைக் கண்டனர் அவள் இவர்கள் வருவதைப் பார்த்து நின்றுகொண்டிருந்தாள். கிட்டத்தில் வந்ததும் கேட்டாள்.

"யாரு..

"ரெங்கசாமி வீடு எங்க இருக்கு?"

"அந்த ரெட்டைக் கதவு போட்ட வீடுதான். .தட்டுங்க."

இருவரும் ஆசுவாசமுற்றார்கள். பெரிய கதவு. குமிழைப் பிடித்தபடி தட்டினார்கள்.

“ரெங்கசாமி. . .தோழர். . .

எழுந்துகொள்ளும் சப்தம் கேட்டது. கதவு திறந்து கொண்டது. ஒற்றைச் சேலையில் இடுங்கிய கண்களுடன் கர்ப்ப ஸ்திரி ஒருத்தி கதவைப் பிடித்தபடி கேட்டாள்.

“யாரு வேணும்?”

“ரெங்கசாமி.”

“பின்னாடி படுத்திருக்காக. . . அப்பிடி வாங்க. . .

அவர்கள் பின் வாசலுக்குப் போவதற்குள் ஆள் எழுந்து கொள்ளும் சப்தம் கேட்டது. கயிற்றுக் கட்டிலினின்று எழுந்து ரங்கசாமி வந்தார். அவர்களின் முன்னே வந்த பின்புதான் ஆள் அடையாளம் தெரிந்தது. அந்தப் பெண் பின் கதவைத் திறந்து கொண்டு நின்றாள். ரங்கசாமி அவர்களை உட்காரச் சொன்னார். வாசல்படியில் உட்கார்ந்து கொண்டனர். அவள் உள்ளே போய்க் கதவைப் பூட்டிவிட்டாள். ரெங்கசாமி ஒரு பீடியைப் பற்ற வைத்துக்கொண்டார். அவர் தலையணைக்கு அடியில் சூரிக்கத்தி தெரிந்தது. பீடிப் புகை சுழன்றது. அவர் பீடியை அணைத்துவிட்டுக் கேட்டார்.

“வழி கண்டுபிடிக்கக் கஷ்டமாயிருந்ததா

“இருட்டு. வழியே தெரியல. பாதையில இருந்து ரொம்ப உள்ளே இருக்கே.”

“வெளியே படுக்குறீங்களா, இல்ல வீட்டுக்குள்ள.

“உள்ள வாணாம்.”

“இருங்க. வாரேன்” – ரெங்கசாமி எழுந்து தெருவின் உள்ளே போனார். அவர்கள் பேசாமல் தலை கவிழ்ந்து உட்கார்ந்து கொண் டார்கள். ரங்கசாமி திரும்பி வந்து கூப்பிட்டார்.

“வாங்க. மாடியில படுக்கலாம்.”

அவர்கள் தெருவைக் கடந்து போனார்கள். பெரிய வீடு அது. கதவு திறந்தே கிடந்தது. இப்போதுதான் பெருக்கப்பட்ட தரையில் புழுதி அடங்கவில்லை. பெரிய மரப்படிகள்.

“எங்க வேணும்னாலும் படுத்துக்கோங்க. வீட்டில யாருமில்லை. காலியான வீடு. மேல போயி வேணும்னாலும் படுக்கலாம்” என்றார் ரெங்கசாமி.

இருவரும் கைலியைக் கட்டிக் கொண்டு மாடிக்குப் போனார்கள். குட்டையான மாடிச்சுவர். காரை பெயர்ந்த தளம். இருட்டு அங்கும் அலைந்து கொண்டிருந்தது. படுத்தபடியே அவர்களுடன் ரெங்கசாமி பேசிக்கொண்டிருந்தார். அவர் உறங்கத் தொடங்கிவிட்டனர். நிசப்தம் மெல்லப் பேச்சை வெகு ஆழத்தினுள் கொண்டு ஒளித்து வைத்தது. உறக்கமும் பிசுபிசுப்பாக அப்பிக்கொண்டது.

இருவர் முதுகிலும் வெயில் ஊர்ந்துகொண்டிருந்தது. காரைக் குவியலின் ஊடே படுத்து உறங்கிக்கொண்டிருந்தனர். வெயில்

ஏறியிருந்தது. எங்கும் பேச்சரவம். நடமாட்ட ஒலி. புழுதி பறக்கும் தெருவில் காற்று சுழன்றுகொண்டிருந்தது. ரங்கசாமி மாடியில் ஏறி அவர்களை எழுப்பினார். மரங்களின் மீது ஏறிய வெயில் வெற்றுக் கிளைகளைத் தடவிச் சென்று கொண்டிருந்தது.

“அப்பு... சங்கரு.. எந்திரிங்க.. வெயில் வந்துருச்சே.

புரண்டு படுத்தனர். சமையல் புகை பரவத் தொடங்கியிருந்தது. கடுகின் வாசம். கண்ணைத் திறக்க முடியவில்லை. முகத்துக்கு எதிராகச் சூரியன். வெக்கை, வெடித்துச் சிதறியது போல வெளிச்சம். சங்கர், காரைகள் அப்பிய முதுகைத் தட்டிவிட்டான். அப்புவுக்கு உடலெங்கும் அசதியாக இருந்தது. தலை சிலுப்பிக் கொண்டிருந்தது. எழுந்து நின்றனர். ஊரே வெளிச்சமாக இருந்தது. கூரை வீடுகளும் காரை வீடுகளுமாகச் சொற்ப வீடுகளே இருந்தன. ஊரின் புதிர்த்தன்மை எல்லாவற்றின் மீதும் படர்ந்துபோயிருந்தது. ரெங்கசாமி தோளில் சிவப்புத் துண்டு போட்டிருந்தார். அவரோடு கீழே இறங்கி வந்த பிறகுதான் அந்த வீட்டைப் பார்த்தார்கள். யாருமற்ற வீடு, நிறைய ஜன்னல்கள், சுவர் பிளவுண்டு போயிருந்தது. சுவரில் கண்ணாடி பதித்திருந்தார்கள். ரெங்கசாமி அவர்களிடம் சொன்னார்.

“ஊரக் காலி பண்ணப் போகும்போது விட்டுட்டுப் போயிட்டாங்க. பெரிய்ய வீடு.”

பின்கட்டு சரிந்துபோய் செடி கொடிகள் முளைத்துப் போயிருந்தன. ஆள் வசித்த அடையாளம் அழிந்துபோயிருந்தது.

மூவரும் தெருவுக்கு வந்தபோது நாய்கள் வெறித்துக் குரைத்தன. அயல் ஆட்களைக் கண்டறியாத நாய்கள் அவை. தெருவில் புழுதி சுழன்று கொண்டிருந்தது. ஆடு, மாடுகளின் சப்தமும் அமுங்கிப் போயிருந்தது. வழியெங்கும் நிசப்தம். சிறுவர்களின் முகங்கள் கூடத் தென்படவில்லை. கல் உரல் பழுத்துக் கிடந்தது. மங்கிய வெளிச்சம் பதுங்கிய வீடுகள். மரங்கள் அசைவற்று நின்றிருந்தன. நாள்பட்ட மரங்களாயிருக்க வேண்டும். பட்டைகள் வெடித்துப் பிளந்திருந்தன. அதிகம் ஆள் முகமே தெரியாத ஊராக இருந்தது.

ரெங்கசாமியின் வீடு பகலில் உருமாறியிருந்தது. உள்ளே நல்ல வெளிச்சம். அகன்ற ஜன்னல் கதவுகள். உள்ளே போய் உட்கார்ந்து கொண்டார்கள். நெல் குலுக்கைகள் அடைந்த அறையில் நெல் மணம் கசிந்துகொண்டிருந்தது. நாள்பட்ட நெல்லின் வாடை. வீட்டின் குணாம்சத்துக்குப் பொருந்தாது தொங்கிக்கொண்டிருந்தது, பிடல் காஸ்ட்ரோவின் படம். அதனருகில் இளம் வயதில் செத்துப் போன தமிழ் எழுத்தாளனின் புகைப்படம். செம்படை அணிவகுப்பு ஓவியம். பரண், அலமாரியெங்கும் மாஸ்கோ வெளியிட்ட புத்தகங்கள்.

அந்த அறை இரண்டாக, கண்ணுக்குப் புலப்படாத நூலால் பிரிக்கப்பட்டிருந்தது போல இருந்தது. அலமாரியின் அருகிலிருந்து சமையலறை வரை ஒரு பகுதியாகவும், மற்றவை இன்னொரு புறமாக

வும் தெரிந்தது. அலமாரியில் சம்பந்தமற்ற காகிதங்கள். பத்திரிகைகள் கிடந்தன. சமையலறையில் இருந்து பெண்ணின் உலகம் தன் வஸ்துகளான சேலைகள், துணிகள், பாத்திரங்கள் எனத் தனித்துப் பிரிந்திருந்தது. காஸ்ட்ரோ இரண்டு உலகுக்கும் நடுவில் இருந்தார். சங்கர் வீட்டின் சுவர்களைப் பார்த்தபடியே இருந்தான். அப்புவும், ரெங்கசாமியும் வெளியே எழுந்து போய் விட்டார்கள். புகை வீடெங்கும் சுழன்றுகொண்டிருந்தது. இரவில் பார்த்த அந்தக் கர்ப்ப ஸ்திரி ரங்கசாமியின் மனைவியாக இருக்கக்கூடும். அவள் புகையின் ஊடேயிருந்தாள். வயிறு முன் சரிந்து போயிருந்தது. முகம் பருத்து பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தாள். அவளால் நேராக உட்கார முடியவில்லை. காலை மடக்கியபடி சாய்ந்து உட்கார்ந்து கொண்டாள். வெளிறிய பாதங்கள். புகை நின்றதும் அவள் முகம் தெரிந்தது. களைத்து ஓய்ந்த முகம். அசதியும் பலவீனமுமான கண்களை அவனால் நேராகப் பார்க்க இயலவில்லை. அடிபட்ட பறவையின் மூடிய இமைகளை ஞாபகமூட்டும் கண்கள். ஈரம் கசிந்து ததும்புகின்றன. அவள் எழுந்து பின் வாசலுக்குப் போய் உட்கார்ந்துகொண்டாள். உள்ளே வேறு யாரோ ஒரு பெண் வந்தாள். சங்கரிடம் கேட்டாள்.

"எங்க அவுக. "

"வெளியே... உட்கார்ந்து இருக்காங்க."

பின் வழியில் கடந்த போன பின்பு அந்த அறையில் யாருமற்றுப் போய் சங்கர் மட்டுமே மிஞ்சினான். எழுந்து அலமாரியில் பீடித் துண்டுகளைத் தேடினான். அடுப்பில் குனிந்து பற்ற வைக்கும்போது சாம்பல் பறந்தது. மாஸ்கோ புத்தக வரிசைகளைப் பார்த்தபடி பீடி குடித்தான். எல்லாப் புத்தகத்தின் முகப்பிலும் அடையாளமிருந்தது.

அப்புவும், ரெங்கசாமியும் மடைக்கரைக்கு வந்தார்கள். இலைகள் உதிர்ந்த மேடொன்றில் ரெங்கசாமி படுத்துக் கொண்டார். வறண்ட கிணறு குருவியின் அலைக்கழிப்பிலிருந்தது. அப்பு எதிரில் உட்கார்ந்து கொண்டான். மரங்களின் பழுத்த இலைகளின் ஊடே முணுமுணுத்தன பறவைகள். ரெங்கசாமி அப்புவிடம் கேட்டார்.

"என்னஆச்சு? இப்பிடி ராத்திரியில கிளம்பி வந்திட்டீங்க?"

"நேத்து மறியல்ல, அடிதடி...ஒரு காக்கிக்குல்லா காலி... யாருன்னு தெரியல. என் காலடியில கிடந்தது உடம்பு. வயசாளி. எல்லா இடத்திலேயும் தேடுறாங்க. நம்ம ஆள்கதான் யாரோ செஞ்சுட்டாங்க. தப்ப வேற இடமில்ல...அதான்..

"வந்தது யாரு?"

"பாதுகாப்புத் துறை அமைச்சர்... கறுப்புக் கொடி காட்டினோம்."

அவர்கள் பேசாமலிருந்தார்கள். ஒரு இலை காற்றில் மிதந்து மிதந்து போய்க்கொண்டிருந்தது. அப்பு ரெங்கசாமியிடம் கேட்டான்.

"ஊர் ஏன் இப்படியிருக்கு?"

“அழியிற ஊரு அதான்... ஆள் எண்ணிக்கை குறைஞ்சுபோச்சு. இப்ப நாற்பத்தியேழு பேர்தான் ஊர்ல இருக்கோம்.”

“மத்தவங்க. .

“எல்லாத்தையும் விட்டுட்டுப் போயாச்சு. இங்க என்ன இருக்கு சொல்லு.”

“இப்ப இருக்கறவங்களும் போயிருவாங்களா?”

“வேற வழி. வீடுகள் காலியான ஊரிது. வெக்கை ஜனிக்கும் பூமி. எங்காவது பூனைக்குட்டி இருக்கறத பாத்தியா. அதுகள்கூட கலைஞ்சுபோக ஆரம்பிச்சிருச்சு. ஆட்களோட பழகின நாய்களும் ஒன்றிரண்டு ஆடு மாடுகளும் தானிருக்கு.”

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது கழுதையொன்றின் கொடூரச் சப்தம் கேட்டது. அது நெடுநேரம் காற்றில் அதிர்வை ஏற்படுத்திவிட்டது. துயரம் படிந்த அந்தக் குரலை அவர்கள் கேட்டபடி இருந்தனர். சப்தம் அடங்கி ஓய்ந்த பின்பு ரெங்கசாமி சொன்னார்.

“வண்ணாப் பயக விட்டுப் போன கழுதை. .தானா கிடந்து சாகப் போகுது.”

காற்று இலைகளை வாரிச் சுழன்றது. கால் மணலைப் பறித்தது காற்று. அப்பு அவரிடம் கேட்டான்.

“நீங்க குடும்பத்தோட வந்திரப் போறீங்களா?”

“நகரம்தான் வேலைகளுக்கு வசதிப்படும். இங்க தகவல் எதுவும் தெரியமாட்டேங்குது. உலக அரசியல் நிலைமை தெரியலே. என் கேஸ் என்னாச்சு?”

“இன்னும் விசாரணையிருக்கு. இப்பக்கூட ரெண்டு பேரைப் பிடிச்சுட்டுப் போயிட்டாங்க.”

“உங்களையும் தேடுறாங்களா?”

“தேடுறாங்க.”

அவர்கள் பேச்சு நின்றுபோனது. கொக்குக் கூட்டமொன்று கடந்து போனது. ரெங்கசாமி அவர்களிடம் கேட்டார்.

“புஸ்தகம் எதுவும் கொண்டு வந்தீங்களா?”

“இருக்கு. சமீபமா நாம் போட்ட நோட்டீஸ், அறிக்கைகள் இருக்கு. இந்தப் பக்கம் நம்ம ஆட்கள்உண்டா?”

“ரெண்டு பேர் உண்டு. நாளைக்குப் போகலாம். இங்கிட்டும் தொப்பிக்காரன் தொல்லை உண்டுதான்.”

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது ஒற்றைக் கொக்கு ஒன்று பறந்து வந்து கரையில் அமர்ந்தது. இருவரும் அதைப் பார்த்தபடி யிருந்தனர். கொக்கு இருவரையும் சட்டை செய்யாது நின்றது. கொக்கின் மீதும் புழுதி படர்ந்தே இருந்தது. ரெங்கசாமி அதிசயம் போல அவனிடம் சொன்னார்.

“ரொம்ப நாள் ஆச்சு. கொக்கு பாத்து. இந்தப் பக்கம் வரவே வராது. தெக்க போற கொக்கு மாதிரியிருக்கு. மூச்சு வாங்குது பாரு.”

கழுத்தைச் சிலுப்பிக் கொண்டிருந்தது கொக்கு. சங்கர் அவர்களைப் பார்த்து வந்துகொண்டிருந்தான். அவன் வந்தபோதும் அவர்கள் கொக்கிலிருந்து பார்வையை விலக்கவில்லை. சட்டென ஒரு கணத்தில் பறக்கத் தொடங்கியது. மிதப்பது போலப் பறந்தது. அவர்கள் மறையும் வரைகொக்கினைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். காலை மெல்ல மறைந்துகொண்டிருந்தது. இயக்கமின்மை கொண்டிருந்தது. இயக்கமின்மை எல்லாப் பொருள்களையும் தொற்றிக்கொண்டு நிறைந்தது.

ஊரிலிருந்து பிரிந்தே போக முடியாத ஒருவன் அந்த ஊரிலிருந்து வந்தான். அவன் பகல் முழுவதும் வாசலை ஒட்டிய திண்ணையில் உட்கார்ந்தபடி வெயிலின் நகர்வைப் பார்த்தபடி இருப்பான். வயது அதிகம் என்றபோதும் அவன் உயரம் கொள்ளவில்லை. சுருங்கிய முகம். பகலெல்லாம் அவனுடைய பாதங்களை வெறித்துப் பார்த்தபடி இருப்பான். மிகப்பெரிய பாதங்கள். விநோதத் தோற்றத்துடன் யானையின் பாதங்களை ஞாபகமூட்டும் பெரிய பாதங்கள். அகன்று படர்ந்த விரல்கள். காட்டுக் கிழங்கைப் போலத் தோன்றின. உடலோடு பொருந்தாத பாதங்கள் அவை. அவன் வெளியில் நடப்பதில்லை. சில அடி தூரம் தவிர அவனால் நடக்கவே முடியாது. எப்போதாவது அவன் தெருவில் நடக்கும்போது அவனுடைய பாதச்சுவடு படர்ந்து விரிந்திருப்பதை குழந்தைகள் பயத்தோடும் ஆர்வத்தோடும் பார்த்துப் போவார்கள். அகன்ற பாதம் தனக்கு ஏன் வந்தது என யோசித்தபடியே இருப்பான். இரவிலும் அவன் உறக்கம் கொள்வதில்லை.

தொடர்பற்ற எதையாவது யோசித்தபடி இருப்பான். பெண்களைப் பார்த்துக்கொண்டிருப்பதென்றால் அவனுக்கு விருப்பமுண்டு. உடலின் பல இடங்களிலும் அவன் பச்சை குத்தியிருப்பான். கைகளில், தொடைகளில் பெண் உரு அழியாமல் பச்சை குத்தப்பட்டிருக்கும். பெண்களைப் பார்ப்பது அவனுக்கு வேதனை தருவதாகவும் இருந்தது. இரவில் அவன் உரக்கக் கத்தி அழும்போது நாய்கள்கூட மௌனித்துக் கேட்டபடியிருக்கும். நெடுநேரம் வரை அவன் அழுதுகொண்டே இருப்பான். சில நாட்கள் தெருவின் நடுவில் கைகளை மார்பின் குறுக்கே கட்டிக்கொண்டு மிரட்சியோடிய கண்களுடன் நட்சத்திரங் களை எண்ணிக்கொண்டிருப்பான். தான் செத்துவிட்டதாகக் கூக் குரலிடுகிறான். கண்களை மூடி, தெருவில் கிடக்கும் அவனை யாரும் சட்டை செய்வதில்லை. அவனுக்கு விந்தையான கனவுகள் வரும். அதைப் பற்றி அவனே அவனுடன் சுவாரஸ்யமாகப் பேசிக் கொண்டிருப்பான். வெகு சமீபமாக அவனையறியாது ஒரு பயம் அவனை அழுத்திக்கொண்டிருந்தது. ஊரில் ஆட்கள் குறைந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை உணரத் தொடங்கினான். எல்லோரும்

போய்விட்டால் ஊர் என்னவாகும்? பட்டினியில் சாக நேருமா? உடல் வெடித்துவிடுமா? அவன் குழம்பிப் போயிருந்தான். உலகத்திலேயே மனிதர்கள் குறைந்துகொண்டு வருகிறார்கள் என யோசிக்கத் தொடங்கினான். விந்தையான கனவால் அலைக்கழிக்கப் பட்டான்.

மிகப்பெரிய கறுப்பு மூடியிட்ட கப்பல் ஒன்றின், ஒளி புகா உள்புறத்தில் மனிதர்கள் எல்லோரும் ஏற்றப்பட்டு அடைக்கப்பட்டிருந்தனர். கடலில் கப்பல் மிதக்கின்றது. எங்கும் மனித முகங்கள். பெண்களும் குழந்தைகளும் கண்களைத் திறக்கவேயில்லை. ஒவ்வொரு நாளும் மனிதர்களின் உடலிலிருந்து செடி கொடிகள் முளைக்கத் தொடங்குகின்றன. எல்லோரின் காது மடல்களும் இலைகளாக மாறி அசைகின்றன. விருட்சம் போலப் பிளவுபடுகின்றன உடல்கள். கப்பலின் வெளிப்புறத்தில் வெக்கை மஞ்சள் பாகைப் போல் உருகி, கடலின் பரப்பை நிறைக்கின்றது. கடலே மஞ்சள் அலைகளை வீசுகின்றது. பறவையின் முகம் கொண்ட ஒருவன் கப்பலின் திரையைக் கிழித்துக் கடலில் குதிக்கின்றான். கடலில் இலைகள் அசைகின்றன. தாங்க முடியாத துயரமான கனவுகள் இதுபோல் அவனைப் பிடித்துள்ளன.

எல்லாமே நிஜம் என நம்பத் தொடங்கினான். தன்னுடைய காது மடல்கள்கூட இலைகளாகத் தோன்றிவிடுமோ என்றுகூடப் பயந்தான். அவனை யாரும் முகம்கொண்டு பார்ப்பதுகூட இல்லை. எப்படியாயினும் அவனோடு ஏழு மாதங்களுக்கு மேல் ஒரு சமயம் ஒரு பெண் உடன் வசித்திருக்கிறாள். அவள் யாரையும் உடன் அழைத்து வராமல் தானாகவே இந்த ஊருக்கு வந்தவள். பெரிய பாதக்காரனின் வீட்டில் தங்கிக்கொண்டாள். அவள் உயரமாகவும், நிறமாகவுமிருப்பாள். அவள் சதா ஓரிடத்தில் நிற்காது அலைந்து கொண்டிருப்பாள். பெரிய பாதகக்காரனுடன் பேசும்போது மட்டும் எரிந்து விழுவாள்.

அவள் ஊரிலிருந்த பலரோடு உறவு கொள்கிறாள் என அவன் தினமும் ஏசுவான். அவள் எதையும் கேட்டுக் கொள்வதில்லை. அவள் இரவில் தன் உடலைக் காட்டியபடி கிடக்கும்போது அவன் மூர்க்கம் கொள்வான். அவள் எப்போதாவது அவனுக்காக எதையாவது திங்கக் கொண்டுவருவாள். அந்தப் பெண் மழைக்காலத்தின் இரவில் சில சமயம் அவனை அணைத்துக் கொண்டு படுத்துக் கொள்வாள். மழையின் இடைவிடாத சத்தத்தால் அவன் சந்தோஷம் கொள்வான். மழைக்காலம் முடிந்த பின்பு அவள் சொல்லிக் கொள்ளாமலே போய்விட்டாள். அவள் போன அன்று தன் பாதங்களை இழுத்துக் கொண்டு அவன் தெருவிலிட்ட கூச்சல் எல்லோருக்கும் துக்கத்தைத் தந்தது. அதன் பிறகு எந்தப் பெண்ணும் அவனுடன் பேசுவதுமில்லை. மழைக்காலமும் அதன் பிந்திய காலங்களில் அருகிப்போனது.

சமீபமாக அவனைத் துன்புறுத்திக்கொண்டிருப்பது கழுதையின் குரல். அது அவனின் தனிமையை ஞாபகப்படுத்திக்கொண்டே

இருந்தது. வர வர அது கத்தும் போது அவனால் சகித்துக்கொள்ளவே முடியவில்லை. ஊரில் திரியும் அயல் முகங்களையும் அவனால் சகிக்க முடியவில்லை. நேற்று பகலில் வண்ணானின் இடிந்த வீடுகளைக் கடந்து கழுதை தெருவுக்கே வந்துவிட்டது. அறுபட்ட மூக்கோடு செம்மை படர்ந்திருந்தது கழுதையின் முகம். பெட்டைக் கழுதையது. விலா எலும்புகள் துருத்திக்கொண்டிருந்தன.

அது குட்டியாக இருந்து துள்ளி அலைந்த காலம் அவனுடைய ஞாபகத்திலிருந்தது. செம்பட்டை முடியோடு சுவர்களை உரசித் திரிந்த கழுதைக் குட்டியது. சிறுவர்களுக்குப் போக்குக் காட்டி ஓடும். பின் காலத்தில் அது பருத்த வயிற்றோடு தெருவில் நிழல் தேடி அலைந்து வீட்டின் முகப்புச் சுவரில் ஒண்டிக்கொண்டிருப்பதையும் கண்டிருக்கிறான். கேட்பார் அற்ற கழுதைகள் ஊரின் அழிவைச் சொல்லித் திரியக்கூடியவை. வண்ணாக்குடி அழிந்த ஊரில் ஜனங்கள் வசிக்க முடியாது எனப் பெண்கள் அழுதார்கள்.

இரண்டு நாள்களாகப் பெரிய பாதக்காரன் வீட்டை விட்டே வராமலிருந்தான். அவன் வீட்டினுள் தவளை ஒன்று சுற்றித் திரிந்தபடி இருந்ததைப் பார்த்தபடியிருந்தான். மூடிய கதவுகளின் வழியாகவும் வெயில் உள்ளே வந்துகொண்டிருந்தது. அவன் வீடு ரெங்கசாமியின் வீட்டின் எதிரில் இருந்தது. ரெங்கசாமியும் அப்புவும் சங்கரும் வெளியில் புறப்பட்டபோது மூடிய கதவினைக் கடந்து போனார்கள். ரெங்கசாமி சுவரோரமாக இருந்த பெரிய பாதச்சுவட்டைப் பார்த்தபடி கடந்து போனார்.

மூவரும் ஊரின் வெளியில் நடந்து போகத் தொடங்கினர். பகல் மங்கியிருந்தது. காட்டுப் பாதைகள் வளைந்து கிடந்தன. வெம்பரப்பின் மீது தாழப் பறந்துகொண்டிருந்தது பருந்து. தாயும் மகளுமாக இரண்டு பெண்கள் அவர்கள் முன்னால் சென்று கொண்டிருந்தார்கள். வீசி நடக்கும் கைகள். பாதையின் நீட்சி முடிவு கொள்ளவில்லை. தெற்கில் நீண்ட பாதையில் அவர்கள் போய்க் கொண்டிருந்தார்கள். தூரத்தில் விளிம்பு தெரிய அடங்கியிருந்தது மலைப்பட்டி. சர்ச் கோபுரம் தவிர வேறு உயரம் அதிகம் தெரியாத ஊரது. காட்டு வழியில் ஆள்தடம் நிறைந்து போயிருந்தது. உடைந்த கோயிலில் மூளிக் கைகளும் அறுபட்ட முலைகளுமாகத் தேவதைகள் காடு பார்த்துக்கொண்டிருந்தன. வெறிச்சோடிய நிலம். பாம்புகள் ஊர்ந்து சட்டையைக் கழற்றிக்கொண்ட புதர்கள் சலனமின்றி உள்ளன. ரெட்டைக் கண் பூச்சிகள் புதர்ச்செடி நிழலில் ஒதுங்கி நின்று கண்களை உருட்டுகின்றன. மலைப்பட்டிக்கு அவர்கள் வந்து சேர்ந்த போது வெயில் ஏறியிருந்தது.

சிவப்பு ஓட்டு வீடுகள் நிறைந்த ஊர். மூங்கில் தட்டி அடித்த வீடுகளுமிருந்தன. கிறிஸ்துவப் பாதிரி வீட்டின் முன்பு கல்வாழை மரம் தெரிந்தது. அவர்கள் தெருவினுள் நடந்து போயினர். பெரிய குன்றி முத்து மரம், இலைகள் சலசலக்க நின்றிருந்தது. வீட்டின்

அபூர்வ நிறங்கள் காலம் மாறாமலிருந்தன. வரிசை வரிசையாக ஜன்னல்களைக் கடந்து போயினர். மங்கிய நிழலில் மனிதர்கள். மரப்படிகள் தெரிந்த வீடுகள். பாதி மூடிய கதவை விலக்கி உள்ளே போயினர். திறந்த உள் முற்றத்தில் வெயில் பிரகாசித்துக்கொண்டிருந்தது. வேப்பம் பூவின் வாடை நிறைந்த வீடு. ஆள் நடமாட்டம் தெரிந்தது. ரெங்கசாமி கூப்பிட்டார்.

"தாஸ் அண்ணே.

நிழல் நீண்டு வெளியே வந்தது. தாஸ் மேல்சட்டையில்லாமல் கறுத்த உடலுடன் வெளியே வந்தார். பார்த்தவுடன் சிரிப்பு. அப்பு வீட்டின் உள்ளே தெரியும் முகங்களைப் பார்த்துக்கொண்டிருந்தான். இரண்டு சிறுமிகள் வெறித்துக்கொண்டிருந்தார்கள். ரெங்கசாமி தாஸிடம் சொன்னார்.

"டவுன்ல இருந்து வந்திருக்காங்க. உங்களைப் பார்க்கணுனாங்க. கூட்டிட்டு வந்தேன்."

"வாங்க மேல போவம்."

பெரிய படிக்கட்டுகள். பாத்திரங்கள் கவிழ்த்தி வைக்கப்பட்டிருப்பதை விலக்கி மேலே ஏறிப் போனார்கள். கூரையிட்ட மாடி. மூவரும் சுவரில் சாய்ந்து உட்கார்ந்துகொண்டார்கள். தாஸ் எதிரில் உட்கார்ந்துகொண்டார். தானியங்கள் உலரப் போட்ட தரை. கீழிருந்து பேச்சுக் குரல் கேட்டது. தாஸிடம் ரெங்கசாமி சொன்னார்.

"ராத்திரிதான் வந்தாங்க. சின்ன கேஸ் ஒண்ணு. அதான் இங்கயிருக்கலாம்னு.

அப்பு பதில் சொன்னான்.

"கஷ்டம்தான். எதுவும் செய்ய முடியாது."

அவர்கள் உலக அரசியல் நிலைமைகள் பற்றிப் பேசத் தொடங்கினார்கள். சங்கர் ஆட்டுக்குட்டிகள் கத்துவதிலே கவனம் கொள்ளத் தொடங்கினான். பல நாடுகளைக் கடந்து போய்க்கொண்டிருந்தது அவர்களின் பேச்சு. சம்பந்தமின்றி சங்கர் கல்லூரியின் விடுதியில் இருந்ததைப் பற்றி யோசித்துக்கொண்டிருந்தான். விடாத மழை நாள் ஒன்றின் ஞாபகம் எழுந்தது. மைதானமெங்கும் மழை பெய்து கொண்டிருந்தது. விளையாடும் பையன்கள் போய்விட்டார்கள். பரந்த மைதானத்தில் பெய்து கொண்டிருந்த மழையை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்கள் பையன்கள். ஈரம் இறங்கிய கட்டடங்கள். அவன் அறையிலிருந்து பார்த்தபடியே இருந்தான். மழையின் வாடை எங்கும் நிரம்பியது. அறையெங்கும் புத்தகங்கள் கவிழ்ந்து கிடந்தன. காலி சிகரெட் பெட்டிகள். சிகரெட் பிடித்தபடி மழையைப் பார்த்துக் கொண்டிருந்தான். புகை மழையில் கரைந்தது. சிகரெட்டை ஓடும் தண்ணீரில் தூக்கிப் போட்டான். மிதந்து போய்க்கொண்டிருந்த சிகரெட் துண்டு வசீகரத்தைத் தந்தது. மழைவெறித்த மைதானத்தில் இரண்டு காவலர்கள் வந்துகொண்டிருந்தார்கள். அவர்களின் நிதான

மும், சாவகாசமும் மழையை ஒத்தேயிருந்தன. யாரிடமோ விசாரித்தபடி வந்தார்கள். அவர்கள் சங்கரின் அறைக்கு வந்து சேர்ந்தபோது நனைந்திருந்தார்கள். கரகரத்த குரலில் அவனோடு பேசினார்கள். அறை முழுவதையும் அவர்கள் பார்த்தனர். அவர்களுக்குள் பேசியபடி சிகரெட் பற்ற வைத்துக்கொண்டனர். போகும்போது அவனிடம் சொன்னார்கள்.

"காலைல பத்து மணிக்கு ஸ்டேஷனுக்கு வா."

முதல் தடவையாக அவன் சிவப்புக் காவல் அறைக்கு அப்போது தான் போனான்.

மூவரும் பேச்சை நிறுத்திவிட்டார்கள். அப்பு உணர்ச்சிவசப்பட்டுச் சொன்னான்,

"நான் நிச்சயம் காஸ்ட்ரோவை நம்பறேன். அது தோற்காது எவரிடமிருந்தும் பதில் வரவில்லை. நிசப்தம் நிறைந்தது. தாஸ் குறுக்கிட்டுச் சொன்னார்.

"டீ குடிக்கலாமா?"

அப்பு சங்கரையே பார்த்துக்கொண்டிருந்தான். சங்கர்கண்களை மூடியபடி சரிந்து உட்கார்ந்திருந்தான். அப்பு அவன் தோளில் கைகளை வைத்துக்கொண்டான். தாஸ் கீழே இறங்கிப் போனார். அவர் வரும்போது துணியில் பிடித்த சொம்பில் டீ வந்தது. வெயில் நன்றாக முற்றியிருந்தது. சேவல் எங்கோ கொக்கரித்துக் கொண்டிருந்தது. டீயின் உஷ்ணம் கதகதப்பாக இறங்கியது. காற்று குறைந்த தெரு. அவர்கள் பேச்சுக் குரல். ஆளுக்கொரு பக்கமாகப் படுத்துக்கொண் டார்கள். அப்பு நிறைய நோட்டீஸ்களை எடுத்து தாஸிடம் கொடுத் தான். அதன்பின்பு அவர்கள் பேசிக்கொள்ளவில்லை. தாஸ் ரெங்க சாமியிடம் சொன்னான்.

"இருங்க, சாப்பிட்டுப் போகலாம். நானும் வர்றேன்." மதிய வெயிலைப் பார்த்து காகங்கள் கரைந்துகொண்டிருந்தன.

வெளியிலிருந்து பெண் குரல் கேட்டது. உள்ளிருந்து பூவண்ணம் எழுந்துகொள்ள முயன்றாள். கால் சூகை கண்டிருந்தது. உள்ளே வரும்படி சப்தமிட்டாள். உள்ளே வந்த பெண் அடுப்படிச் சுவரைப் பிடித்தபடியே கேட்டாள்.

"ரெங்கசாமி மாமா இல்லையா?"

"மலைப்பட்டிக்குப் போயிருக்காரு."

"கூடப் போறவங்க யாரு, உங்க சொந்தமா?"

"அவுக கட்சிக்காரங்க. டவுன்ல இருந்து வந்திருக்காங்க."

அவர்கள் போனபிறகு பூவண்ணம் படுத்துக்கொண்டு விட்டாள். உதடு உலர்ந்து போயிருந்தது. தலை மயிர் கலைய வியர்ந்திருந்தாள். அவளுக்கு எதுவுமே பிடிப்பதில்லை. வீட்டிலிருந்த புஸ்தகங்கள், தாடி வைத்த படங்கள், காகிதங்கள். ஏன் மைக்கூடைக்கூட அவளுக்குப்

பிடிக்கவில்லை. அதிலும் பச்சைநிறக் கண்கள் கொண்ட அந்தத் தாடி முகமும் உள்ள ஃபோட்டோ, அவளால் தாங்க முடியாததாக இருந்தது. எந்த நேரமும் அந்தக் கண்கள் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதாகப் பட்டது. சதா இந்தத் தாடி வைத்த முகங்களின் புஸ்தகங்களைப் படிப்பதால் என்னவாகிவிடப் போகிறது? ஊரே காலியாகிப் போகும் நாளில் நாம் எங்கே செல்வது? யோசனைகள் வலைகளாகப் பிரிந்து சுழன்றன. ஒரே ஒரு தடவை அவளை நகரத்துக்கு அழைத்துக்கொண்டு போயிருக்கிறார் ரெங்கசாமி.

அதுவும் கட்சி அலுவலகத்தின் அறையில் தங்க வேண்டியதாகியது. எங்கும் தட்டி, பேனர்கள், சிவப்பு மசியால் எழுதப்பட்ட வாசகங்கள். பாயில் உறங்கிக்கொண்டிருந்தார்கள் இளவட்டப் பையன்கள். அழுக்கடைந்த ஜிப்பாக்கள் தொங்கிக்கொண்டிருந்தன. கழுவப்படாத சமையல் பாத்திரங்கள் நிறைந்து கிடந்தன. சிதறிய பிரஷ் கட்டைகள். பகல் முழுவதும் அங்கேயே உட்கார்ந்து இருந்தாள். பேசியபடியே இருந்தார்கள். காகிதங்களைப் பரப்பிக்கொண்டு பேசிக்கொண்டிருந்தார்கள். பார்த்த முகம் போலத் தோன்றும் உருவப் படங்கள் சுவரில் தொங்கிக்கொண்டிருந்தன. கசப்பான டீயை அவளும் குடிக்க வேண்டியிருந்தது. அந்த அறை, அவர்கள் காகிதங்கள் எதுவும் பிடிக்கவில்லை. மெல்லிய குரலில் பின்பு பேசிக் கொள்ளத் தொடங்கி, பின்பு வெளியேறிப் போய்விட்டனர். அவள் மட்டுமே தனித்து இருந்தாள். கோபமும் அழுகையுமாக வந்தது.

மாலையில் வெளியிலிருந்து ரெங்கசாமியும் இன்னொருவனும் வந்தார்கள். வந்தவன் பதற்றமாக ரெங்கசாமியிடம் சொன்னான்.

“எல்லோரையும் பிடிச்சுட்டுப் போயிட்டாங்க.”

“அப்ப இங்கயும் வருவாங்களா?”

“நிச்சயம் வருவாங்க.”

அவளைக் கூட்டிக்கொண்டு அறையிலிருந்து வெளியேறினார்கள். எங்கே போகிறார்கள் என்றே புரியவில்லை. பரபரப்பும் சந்தடியுமான தெருக்கள். வாகனங்களின் இரைச்சல். குப்பைகள் நிறைந்த வீதி. எல்லாப் பக்கமும் சப்தம் விரட்டுகின்றது. அழுக்கடைந்த பிச்சைக்காரர்கள் இலைக் குப்பைகளின் ஊடே பழங்களைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். நடக்கவே அசூயையாக மாறிய வீதி. வளைந்த தெருமுனைகள். புறாக்களின் கோயில் பொந்துகளைப் போல வீடுகள். ஜன்னல்களற்ற அறைகள். நீர்க் குழாய்கள். கூரை வீடுகள், சாக்கடை உடைந்த முன்வாசல். மரங்களற்ற நகரம். கருத்த தண்டவாளங்களைக் கடந்து போனார்கள். பரபரப்பான வியாபார ஸ்தலத்தின் முக்கிய தெரு வந்தது. வீடுகள் எனச் சொல்லமுடியாத, சரிவான இருப்பிடங்கள். புகை படிந்த தகரங்கள். வெறித்த சிறுவர்கள். விலகிக் கடந்து குறுகலான வழியினுள் போய் முடிந்த மாடிப்படி ஒன்றின் கீழே பூட்டியிருந்த கதவைத் தட்டினார்கள். கண்ணாடி அணிந்த ஆள் ஒருவன் கதவைத் திறந்தான். அவனோடு ரெங்கசாமி

எதுவோ பேசினார். அவன் அறையைவிட்டு வெளியேறிப் போனான். மாடிப் படியின் கீழ்ப்பகுதி அது. அதை அறையாக மாற்றியிருக் கிறார்கள். தாழ்ந்த ஜன்னல். இரண்டு பேர் படுத்துக் கொள்ளும் இடம். நெருக்கமான சுவர்கள். அவளை உள்ளே இருக்கச் சொல்லி விட்டு ரெங்கசாமி வெளியே போனார். திரும்பி உள்ளே வந்து கதவைப் பூட்டிக்கொள்ளச் சொல்லிவிட்டு அவர் போன பின்பும் அவள் உட்கார்ந்தே இருந்தாள். கதவைச் சாத்தியதும் அறை சுருங்கிக் கொண்டது. எந்தப் பக்கமும் வழியற்ற சதுரச்சுவர்கள் இறுக்கின. அவள் கவிழ்ந்து ஜன்னல் வழியாக, கடந்து போகும் கால்கள் தெரிந்தபடி இருந்தன. வேகமாகக் கடக்கும் கால்களைப் பார்த்தபடியே இருந்தாள்.

விதவிதமான கால்களின் நகர்வு. வெளியே பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. பசிக்கத் தொடங்கியது. அறையில் தண்ணீர் இருக்கிறதா எனத் தேடினாள். பழுப்படைந்த வேஷ்டிகள் தொங்கிக் கொண்டி ருந்தன. மாலை ஓய்ந்து இரவு வந்தது. உடல் ஆயாசம் எடுத்தது. அப்படியே படுத்து உறங்கிப் போனாள். விழித்தபோது இருட்டினுள் தான் மிதந்துகொண்டிருப்பது போலிருந்தது. விளக்கு எங்கிருக்கின்றது எனத் தெரியவில்லை. சுவர்கள் இறுகி எழுந்திருந்தன. வழி தெரிய வில்லை. கைகளால் சுவரைத் தடவினாள். விளக்கைப் போட்டதும் வெளிறிய மஞ்சள் வெளிச்சம் அறையெங்கும் நிரம்பியது. எல்லாப் பொருட்களும் வேறு நிறம் கொண்டன. சுவர்களில் பதுங்கிய இரவுப் பூச்சிகள் சப்தமிடத் தொடங்கின. நெடுநேரம் உட்கார்ந்தே இருந்தாள். கால்களின் நடமாட்டம் அற்ற இரவு. பின்னிரவுக்குப் பிறகு வெளியே தட்டும் குரல் கேட்டது. ரெங்கசாமி சாப்பாட்டுப் பொட்டலங்களோடு வந்திருந்தான். இவ்வளவு வேகமாகவும், பர பரப்பாகவும் எப்போதும் சாப்பிட்டதில்லை. அவள் கண்ணாடி பாட்டிலில் அவன் கொண்டுவந்திருந்த தண்ணீரைக் குடித்தாள். அவன் புகை பிடித்துக்கொண்டிருந்தான்.

“நாளைக்கும் இங்க வேலையிருக்கு. இங்கேதானிருக்கணும்”என்றான். அவள் சாப்பிட்டுவிட்டு சுவரில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டாள். அவன் எதுவும் பேசாமல் படுத்துக்கொண்டிருந்தான். நெடு நேரத்துக்குப் பிறகு அவளும் படுத்துக்கொண்டாள். அவளின் மூச்சுக் காற்று அவன் மீது படர்ந்தது. அவளைக் கட்டிக்கொண்டான். உடல்கள் இயங்கிச் சரிந்தன. அறையெங்கும் உடல் வாடை நிறைந்தது. விடிந்து நீண்ட நேரமாகியும் மறுநாள் அவள் உறங்கியபடியே இருந்தாள். இரண்டு நாளின் இரவும் பகலும் அப்படியே கழிந்தன. மூன்றாம் நாளின் பகலில் அவளின் அறைக் கதவைத் தட்டிய இருவர் அவளிடம் சொன்னார்கள்.

“ஊருக்குக் கிளம்புங்க. அவசரம்.”

“அவுக எங்க.”

“நாளைக்கு வருவாங்க. நாங்க கூட வந்து விட்டுட்டு வாறோம்.”

அவளுக்கு எதுவும் புரியவில்லை. வெளியே புறப்பட்ட பின்பு அவளைத் தனியே நடக்கவிட்டு பின்னாடியே வந்தார்கள். அவர்கள் எதையும் பேசிக் கொள்ளவில்லை. பஸ் புறப்பட்ட பின்பு அவளே கேட்டாள்.

"அவரையும் பிடிச்சுட்டாங்களா?"

அவர்கள் வெளியே பார்த்தபடி வந்தார்கள். ஊர்ப்பாதையில் அவளை இறக்கிவிட்டுத் திரும்பிப் போனார்கள். மூன்று மாதங்களுக்குப் பிறகு, அவன் வீடு வந்து சேர்ந்தான். உருக்குலைந்த முகமும் உடலுமாக அவன் வீட்டிலே இருந்தான். இப்போது யோசிக்கும்போதும், கால்கள் கடந்தபடியிருக்கும் தனி அறையின் பயத்தை மறக்கவே முடியவில்லை அவளால்.

வீட்டினுள் நடமாடுவது போலச் சப்தம் கேட்டது. பின் வாசலில் இருந்து எட்டிப் பார்த்தாள். அணில்கள் வீட்டினுள் அலைந்து கொண்டிருந்தன. அவள் எழுந்து வந்தாள். தாடிக்காரக் கிழவனின் கண்கள் அவளையே பார்த்துக்கொண்டிருந்தன. வெளியே யாரோ கத்தினார்கள் வாசலுககு வந்தபோது கேட்டாள்.

"கழுதைய யாரோ கொன்னு போட்டாங்க."

செத்துக் கிடந்த கழுதையைச் சுற்றிப் பெண்களும், ஒன்றிரண்டு சிறுமிகளும் நின்றிருந்தார்கள். வயசாளி ஒருவர் சிதைந்த அதன் மூக்கைப் பார்த்தபடி நின்றார். அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போது வெடித்து அழும் ஆணின் குரல் கேட்டது. எல்லோரும் சப்தம் வந்த வீட்டைத் திரும்பிப் பார்த்தனர். பெரிய பாதக்காரனின் வீட்டிலிருந்து அந்தக் குரல் வந்தது. துயரமான அந்தக் குரலை அவளால் கேட்டுக்கொண்டிருக்க முடியவில்லை. தொண்டையை அடைத்தது. வெளியில் ஆட்கள் கலைந்து போகத் தொடங்கினார்கள். வயசாளி யாரிடமோ சொன்னார்.

"கிறுக்குப் பய இதுக்குப் போயி அழறான் பாரு" அவனின் விசும்பும் குரல் அடங்க அன்று மாலையானது.

சாப்பிட்ட பின்பு தாஸும் மற்றவர்களும் படுத்து உறங்கத் தொடங்கினர். சங்கருக்கு மதியத்தில் உறக்கம் கொள்வதில்லை. சிகரெட் பிடிக்கலாமா என நினைத்தான். கீழே இறங்கி வந்தபோது வெறிச்சோடி இருந்தன தெருக்கள். தெருவின் அலாதியில் நடந்து சென்றான். கோழிகள் நிழலில் அலைந்துகொண்டிருந்தன. சாத்திய வீடுகளின் உள்ளே பேச்சரவம். மாட்டுத் தொழுவங்கள் காலியாகி இருந்தன. மேற்கில் ஒடுங்கிய தெருவில் கடை இருந்தது. வீட்டின் ஒரு பகுதியைக் கடையாக்கி இருந்தார்கள். கடையில் ஒரு சிறுமி உட்கார்ந்திருந்தாள். சிகரெட் காலிப் பெட்டிகள் அடுக்கப் பட்டிருந்தன. சிகரெட் வாங்கிக்கொண்டு கடையின் விளிம்பில் உட்கார்ந்து கொண்டு நிதானமாகப் புகைபிடிக்கத் தொடங்கினான். அந்தச் சிறுமி அவனையே பார்த்துக்கொண்டிருந்தாள். இயேசு நாதரைச் சிலுவையில் அறையக்

கூட்டிப்போவது போல் ஒரு படம் தொங்கிக்கொண்டிருந்தது கடையின் உள்புறத்தில். அந்தச் சிறுமி உள்ளே எழுந்து போய்விட்டாள்.

இரண்டு நாளின் முந்திய மதியத்துக்கும், இன்றைக்கும் உள்ள இடைவெளியை, நிதானத்தைப் பற்றி யோசிக்கத் தொடங்கினான். நிதானத்தின் வெகு ஆழத்தில் இப்போது புதையுண்டு நிற்பது போலிருந்தது. இரண்டு நாளின் முந்தைய மதியமோ, பரபரப்பும் வேகமுமானதாக இருந்தது. பாதுகாப்பு அமைச்சர் வருவதற்கான வரவேற்பு வளைவுகள் நிறைய எழுந்திருந்தன. அவர்களும் கூட்டத் தோடு நின்றிருந்தார்கள். கார் தூரத்தில் நின்றுவிட்டது. சந்தேகிக்கும் கண்களைக் கடந்தவாறே சென்ற காவலர்களுக்குப் பின்பு திடீரென அவர்கள் சப்தமிட்டனர். எல்லாமும் சில நிமிடங்கள் தொடர்ந்தது. பின்பு யார் மீது முதலடி விழுந்தது எனத் தெரியவில்லை. சிதறி ஓடத் தொடங்கினார்கள்.

இதுவரை ஒழுங்கில் இருந்த தெரு முறுக்கிக் கொண்டது போலாகி யது. ஓட ஓட, தெரு வெட்டுப்பட்டுச் சரிவது போலவும் எழுந்து அடைத்துக்கொள்வது போலவுமாகியது. வீடுகள் தலைகீழாக மாறின. வெற்றிடங்கள் மட்டுமே தொடர்ந்து கண்ணுக்குத் தெரிந்து வந்தன. எதன் மீதோ மோதி ஓடுவதாக இருந்தான். சந்துகள் திடீரென நீட்சி கொண்டுவிட்டது போலாகியது. எல்லாப் பொருள் களுமே அமானுஷ்ய அளவில்ஆகிப்போயின. அவன் ஓட்டம் திடீரென் நின்றது. பின்னால் எந்தச் சப்தமும் கேட்கவில்லை. எல்லாமும் ஒழுங்குக்கு வந்தன. இயல்பாகக் கடந்து போனார்கள் ஜனங்கள். சுவர்கள் நேராக நின்றன. யாரை இடித்துத் தள்ளி வந்தோம் என ஞாபகம் வந்தது. காய்கறிகளுடன் வந்த நடுத்தர வயது முகம். அவன் அப்பாவை ஞாபகப்படுத்திய முகம். எதிரிலிருந்த டீக்கடையில் கேட்ட பழைய பாடல் இப்போதுதான் முதல் தடவையாகக் கேட்பது போல ஆசுவாசப்படுத்தியது. டீக்கடையினுள் போய் உட்கார்ந்துகொண்டான். கால் தசைகள் இன்னமும் ஆடிக் கொண்டி ருந்தன. நடுக்கம் உடல் முழுவதும் தொற்றிக்கொண்டது. டீக் கோப்பைகளிலிருந்து, எல்லாப் பொருள்களையும் முதல் முறையாகப் பார்ப்பது போலவே இருந்தது. என்ன பேச வேண்டும் என்பதுகூட மறந்தது போலிருந்தது. அவனைப் பார்த்ததுமே டீக்கடைக் காரன் டீ போட்டுத் தந்தான்.

எங்கே போவது என நினைத்தபடியே டீ குடித்தான். அக்கா வீட்டுக்குப் போகலாம். எப்போதோ போனது. புறநகர் செல்லும் பஸ்ஸில் ஏறி அவள் வீட்டுக்குப் போனபோது உற்சாகமாக சிறுவர்கள் பந்து விளையாடிக்கொண்டிருந்தார்கள். அவன் நின்று சிறிது நேரம் அதைப் பார்த்தபடியே இருந்தான். அக்கா வீடு தனித்திருந்தது. அவன் வீட்டினுள் போனபோது அவள் படித்துக் கொண்டிருந்தாள். அவன் வந்ததைக் கண்டுகொள்ளவே இல்லை. பிள்ளைகள் விளை யாண்டு கொண்டு இருந்தன. அவளின் முகச்சாடை அப்பாவைப்

போலவே இருந்தது. அவனைப் பார்க்காமலே சொன்னாள்.

"உன்னை இங்க வரக்கூடாதுன்னு சொன்னேனே."

அவன் கேட்டுக்கொண்டிருந்தான் அவளே தொடர்ந்து சொன்னாள்.

"நீ வர்றது அவருக்குப் பிடிக்கலே. உன்னைத் தேடிக்கிட்டு வர்றவங்க அவரப் பிடிச்சுட்டுப் போகப்போறங்க. பின்ன நாங்க தெருவில நிப்போம். உனக்கு நிம்மதிதானே. முன்ன கூட அவர் ஆபிஸ்ல வந்து ரெண்டு பேர் உன் பேரைச் சொல்லி விசாரிச்சிட்டுப் போனாங்களாம். ஏண்டா இப்படிச் செய்றே?"

படிப்பதை நிறுத்திவிட்டு அவள் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்துப் பிள்ளைகள் உள்ளே வந்து நின்றன. அவனுடைய மாமா வந்தபோது அவன் படிக்கட்டில் உட்கார்ந்து இருந்தான். அவர் வந்ததும் மாலை பேப்பரை அவளிடத்தில் தூக்கி எறிந்துவிட்டு உள்ளே போனார். அதைப் பார்த்ததும் அவள் உரக்க அழத் தொடங்கினாள். அவன் பேப்பரை வாங்கிப் பார்த்தான். தொப்பி விலகிக்கிடக்க இறந்து கிடக்கும் போலீஸ் உடல். அவன் யாரையும் திரும்பிப் பார்க்காமல் படித்து முடித்தான். அக்கா எழுந்து உள்ளே போய்விட்டாள். அவர்களின் இடைவிடாத பேச்சு உள்ளே தொடங்கியது. எழுந்து அவன் நடக்கத் தொடங்கினான். எவ்வளவு நேரம் நடந்தான் எனத் தெரியாது நடந்தான். கட்சி அலுவலகத்துக்கு வந்தபோது அது காலியாக இருந்தது. பெரிய பேனரைச் சுருட்டிப் போட்டுப் படுத்துக்கொண்டான். படுத்த உடனே உறக்கம் வந்துவிட்டது. காலையில் அப்புவின் குரல்தான் அவனை எழுப்பியது.

சிகரெட் அணைந்துவிடவே ஞாபகத்திலிருந்து மீண்டு, வேறு ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக்கொண்டான். இந்த நிதானம் இனிமேல் கிடைக்குமா என்பது தெரியாமலிருந்தது. அவன் புகை பிடித்தபடியே தாஸ் வீட்டுக்குத் திரும்பியபோது அவர்கள் உறங்கிக் கொண்டுதான் இருந்தார்கள்.

எல்லோரும் போன பின்பு, பகலில் பெரிய பாதக்காரன் விசும்புவதைக் கொஞ்சம் நிறுத்தினான். தன்னை வேடிக்கை பார்க்க நினைக்கும் சிறுமிகளை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அதை விடவும் கர்ப்ப ஸ்திரிகளைப் பார்க்க முடியவில்லை. எதற்கு இந்த ஊருக்குப் புதிய உயிர்? அதுவும் அந்தப் பெண்களின் சோகை படர்ந்த முகங்களும் பலவீனமும். அவன் யாரையும் பார்க்காமல் வெளியே எங்காவது போய் விடலாமா என நினைக்கவும் செய்தான்.

வீட்டில் அலைந்துகொண்டிருந்த தவளை சுவரினுள் போய்ப் பதுங்கிய அன்று அவனும் தவளையாவதாகக் கனவு கண்டான். தவளையைப் போல மாறிய பின்பும் தவளைகளின் உலகம் அவனைச் சேர்த்துக்கொள்ளவில்லை. தவளைகளுக்குள் ஏராளமான போட்டிகளும், சூதும், ரகசியமுமிருந்தன. அவனை அவை துரத்தி வீழ்த்தின.

அவன் பருத்த தவளைக் கண்களால் அழுதான். கனவு கலைந்தது. தவளையைப் போலத் தாவியாவது ஊரைக் கடந்து போய்விட வேண்டும் போல் இருந்தது. ஊரின் வெளிப்புறம் எப்படியிருக்கும்? வர வர பகலின் தனிமையை அவனால் தாங்கவே முடியவில்லை. கழுதையின் சப்தம் அடங்கியதால் பெரும் நிசப்தம் எங்கும் கவிழ்ந் திருந்தது.

பெரியபாதக்காரன் சிறுவனாக இருந்தபோது வீட்டில் அலைந்த கோழிக் குஞ்சுகளை நினைவு கொண்டான். அந்தக் குஞ்சுகள் என்னவாகி இருக்கும் பெரிய கோழியாகி, செத்து, மறைந்திருக்கும். கோழிக் குஞ்சுகள் இரையெடுத்தபடி அலைந்த சப்தம் இப்போதும் சுழலைப் போல எழுகின்றது. வீட்டில் அந்த நாளில் இருந்த பெண்களின் பேச்சுக்கூட கோழிக் குஞ்சின் குரலைப் போலவே இருந்தது. முருங்கை பூக்கும் காலங்களில் அவர்கள் பனியில் அலை வார்கள். எல்லோரின் நிழல்களும் ஊரைவிட்டுப் பிரிந்துவிட்டன.

யாரும் தன்னை விட்டுப் போய்விடாததாக அவன் யோசித்தான். அங்கேயே அவனுக்குத் தெரியாமல் அவர்கள் பேசிக்கொண்டும், உறங்கிக்கொண்டும் இருப்பதாக உணர்ந்தான். பல்லிகளைப் போல வீட்டின் உத்திரங்களில் அவர்களும் ஒளிந்திருக்கக்கூடும்.

என்ன சுயசமாதானம் செய்தபோதும் வேதனையும், துக்கமும் அவனிடமிருந்து பெருகியபடியே இருந்தன. திடீரெனயாருமற்றுப்போன தனிமையில் மழைக்காலத்தை எப்படிச் சந்திப்பது எனத்தோன்றும். பயங்கரக் கனவின் நிஜ உருபோல அந்தக் காட்சியை நினைக்கவே முடியவில்லை. காரைகள் உதிரஅவன் விசும்பியபடி இருந்தான். மாலையில் அவன் விசும்பல் சப்தம் நின்றது. காற்று பலமாகச் சுழன்று அடித்தது. இலைகள் எங்கும் பறந்தன. அவன் திரும்பவும் வீட்டைப் பூட்டிக்கொண்டான். முடிச்சுகளாக வீங்கிப் பருத்த தன் பாதங்களைப் பார்த்தபடியிருந்தான். மாலை முடியும் நேரமாகிய போது பெரிய பாதக்காரன் வீட்டு ஜன்னலைக் கண்ட சிறுமி ஒருத்தி பயந்து கத்திப் போனாள். நிர்வாணித்த உடலோடு பாதங்கள் அகன்று தொங்கிக்கொண்டிருந்தான். ஆட்கள் சுலபமாகக் கதவைத் திறந்துவிட்டார்கள். வடிவமற்ற உடலுடன் அந்த முகத்தை நிர் வாணத்தை எவராலும் தாங்க முடியவில்லை. குமட்டிக்கொண்டு வந்தது. மரணத்தின் கறையோடு மாலை நீண்டுகொண்டிருந்தது.

தாஸும் சங்கரும் முன்னால் நடந்து வந்தார்கள். அப்பு ரெங்க சாமியிடம் பேசிக்கொண்டு வந்தான். மலைப்பட்டியை விட்டு விலகி அவர்கள் ரெங்கசாமியின் ஊர்ப்பாதையில் நடந்தனர். கரம்பை மணல் படர்ந்த மேடொன்றின் மீது உட்கார்ந்துகொண்டார்கள். சூரியன் மறைந்த பின்பும் வெக்கையும் வெளிச்சமும் நீடித்தன. தாஸிடம் அப்புதான் டைரியிலிருந்த புகைப்படமொன்றைக் காட்டி னான். வயதான முகம். அப்பு அந்தப் புகைப்படத்தைக் காட்டிவிட்டு அச்சிடப்பட்ட காகிதம் ஒன்றை எடுத்துத் தந்தான். தாஸ் படித்து

விட்டுக் கேட்டார்,

"கான்சலோதானே. விடுதலை பண்ணிட்டாங்களா?"

"இல்லை... அதிகாரம் அவருக்குத் தந்தது தூக்கு. நல்ல கவிஞர். நாம அவர் கவிதையை வெளியிட்டு இருக்கோம். சங்கர்தான் மொழிபெயர்த்தான். ஞாபகமிருந்தா ஒரு கவிதை சொல்லேன் சங்கர்."

அவன் பேசாமலிருந்தான். காற்று மணலை வாரிக்கொண்டு சுழன்றது. அப்புவே தொடர்ந்து பேசினான்.

"கான்சலோவை விடுதலை பண்ணச் சொல்லிப் பெரிய போராட்டம் நடத்தினோம்."

சங்கர் காற்றில் அடித்துச் செல்லும் மணலைப் பார்த்துக்கொண்டே இருந்தான். அவர்களின் இரண்டு புறத்திலும் ஊர் சரிந்திருந்தது. காற்று சப்தமிடத் தொடங்கியது. சங்கர் ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக்கொண்டான். சிகரெட் புகையோடு அவன் கவிதையைச் சொல்லத் தொடங்கினான். மூவரும் கேட்டுக் கொண்டு இருந்தனர். சின்னக் கவிதையது. அவன் சொல்லி முடித்ததும் தாஸ் அவனிடம் சொன்னார்.

"காற்றில் கரைந்த கவிதை"

நீண்ட மௌனம் படர்ந்தது. அவர்கள் பேசிக் கொள்ளாமல் இருந்தார்கள். காற்று புலம்புவது போல அலைந்தது. ஊரின் தோற்றம் மங்கித் தெரியத் தொடங்கியதும் அவர்கள் ரெங்கசாமியின் வீட்டை நோக்கி நடக்கத் தொடங்கினர். அவர்கள் ஊரினுள் நுழையும்போதே விபரம் தெரிந்துவிட்டது. தாஸும், ரெங்கசாமியும் பெரிய பாதக்காரனின் தொங்கும் உடலைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். பச்சை குத்தப்பட்ட உடலில் இருந்த பெண் உருக்கள் மங்கியிருந்தன. அவ்வளவு பெரிய பாதம் பயத்தைப் பெருக்கியது. உடலைக் கீழே இறக்கினார்கள். முகத்தின் விகாரமும், உடல் அமைப்பும் எவராலும் அருகில் நிற்க முடியாமல் செய்தது.

தரையில் உடலைக் கிடத்தினார்கள். தரையெங்கும் மூத்திர வாடை படிந்து போயிருந்தது. சிறுமிகள் பலர் பயந்த கண்களோடு உடலைப் பார்த்தபடி நின்றனர். உடலைக் கிடத்திவிட்டு வெளியே வந்து நின்றுகொண்டனர். யாரும் அழவில்லை. எல்லோரும் வீடுகளுக்குள் அடங்கி, பேச்சற்று இருந்தனர்.

பெரிய பாதக்காரனின் வீட்டினுள் சிம்னி விளக்கைப் பொருத்தி வைத்தார்கள். அந்த ஒளியில் வீடு வேறு தோற்றம் கொண்டது. இரவில் அந்த வீட்டின் வெளியே அவர்கள் நால்வரும் கட்டில் போட்டு உட்கார்ந்திருந்தனர். அத்தனை கறுப்பான இருட்டு. அன்று நள்ளிரவில் சங்கர் அந்த உடலை நெருக்கமாகப் பார்த்தான். வெடித்த பாறை போல முகம். சில நிமிடங்களுக்கு மேல் பார்க்க முடியவில்லை. அவன் திரும்பும்போது வீட்டிலிருந்து ஒரு தவளை

தான் தெருவில் குதித்தது.

அடுத்த நாளின் பகல், சாம்பல் படர்ந்தது போல வந்தது. வெயில் வராத நாள். மூடிய மேகத்தோடு காற்று அடங்கியிருந்தது. அந்த உடலைப் புதைப்பதற்காக ஊரைவிட்டு வெளியே எடுத்துச் சென்றனர். சாம்பல் படர்ந்த காலையில் ஊரின் புறவெளி இதுவரை யாரும் பார்த்தறியாத வசீகரத்துடன் இருந்தது. எல்லாப்புறமும் வெற்று நிலப்பரப்பு. இத்தனை வசீகரத்தையும் காணாது அந்த உடல் கடந்து போனது. அவனை வெகு தள்ளிப் புதைத்து வந்தார்கள். அன்றெல்லாம் வெயில் வரவில்லை. ஊரே பயத்தின் பிடியில் அகப்பட்டது போலாகியது. சங்கர் அன்று முழுவதும் சாப்பிடவில்லை. தாஸ் புறப்பட்டுப் போய்விட்டார்.

ஊரின் வீதிகளில் அலைந்தான். ஒரு ஆட்டுக்குட்டியைக்கூடச் சந்திக்க முடியவில்லை. மாலையானபோது இனிமேலும் இந்த ஊரில் இருக்க முடியாது என அவனுக்குப் பட்டது. அலைக்கழிப்பின் தீவிரக் கோடுகள் எல்லாச் சுவர்களிலும் கீறப்பட்டிருப்பதாக உணர்ந் தான். ரெங்கசாமியும் அப்புவும் திரும்பவும் எதையோ பேசிக் கொண்டிருந்தார்கள். சங்கர் அவர்கள் எதிரில் வந்து சொன்னான்,

“நான் கிளம்புறேன்...

“எங்க போற. திடீர்னு என்ன?”

“இல்லை, கிளம்புறேன்.”

அப்பு அவனிடம் எதுவோ கேட்க நினைத்தான். சங்கர் தனது பையை எடுத்துக்கொண்டு வந்தான். ரெங்கசாமி அவனிடம் எதுவும் கேட்கவில்லை. அப்பு அவனிடம் சொன்னான்,

“நான் அடுத்த வாரம் வர்றேன்.”

கிளம்பி அவன் நடக்கத் தொடங்கியபோது காற்று எழுந்திருந்தது. மணலை வாரிச் சுழற்றியது. பூதாகரமான நிலப்பரப்பில் புதையுண்டி ருந்தது பெரிய பாதக்காரனின் உடல். மணலை வாரியவாறே காற்று சங்கர் பஸ் ஏறும் பாதை வரை சுழன்று வந்தது. அவன் பஸ்ஸில் ஏறியபோது மழையின் முதல் தூறல் பட்டது. கண்களை மூடிக்கொண்டான். ஆள் அற்ற பரப்பில் நீரில் மிதந்து கொண்டிருந்தது உடல். மூழ்கிப் போயிருந்தது கிராமம். கண்களைத் திறந்தான். எதுவும் இல்லை. வேகமும் சப்தமும் ஆன நகர் உலகம் இடைவிடாது இயங்கியபடியே இருந்தது. அவன் முகத்தில் புகைக்கரி வந்து படியத் தொடங்கியது.

நயனம்

ஜெர்மனியைச் சேர்ந்த ரெய்னர் வில்கம் 1863ல் மொழிபெயர்த்த அரிய இந்திய இசை நூலான 'கானலயசாகரா' என்னும் புத்தகத்தில் காணப்பட்ட சிறு குறிப்பே செளகத் அலிக்கு முதலில் அந்த இசைக்கருவியைப் பற்றிய அறிமுகமாக இருந்தது. அப்போது செளகத் பதினான்கு வயதுச் சிறுவனாக உஸ்தாத் குலாம் அலி கானிடம் தானேயில் இசை பயின்றுகொண்டிருந்தான். ரத்தன்பூர் நெசவாளிக் குடும்பமான நெளசாத் வீட்டின் பூர்வ இசை மரபில் வந்த செளகத் அலியை நாலு வயது முடியும் முன்னமே இசை கற்க அனுப்பியிருந்தனர். அவன் குரல் சுகந்தமுடையது என அறிந்த உஸ்தாத், தனது பேரனைப் போல அவனிடம் ப்ரியம் கொண்டு இசையை அறியச் செய்து வந்தார். ரெய்னரின் புத்தகத்தை உஸ்தாத் குலாம் அலி கானின் மரப் படுக்கையடியில் கண்டு எடுத்தபோது, அதன் முகப்பே செளகத்தை வாசிக்க அழைத்தது.

பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த உமையொருபாக தம்பிரான் அறிந்திருந்த அந்த அரிய இசைக்கருவியின் பெயர் 'நயனம்' என்றும், அது ஒரு தலைமுறைக்கு ஒருவனுக்குக் கற்றுக் கொடுக்கப்பட்டதென்றும், தொல்தலைமுறையாக அதை வாசித்து வருபவர்கள் தெற்கில் இருந்தார்கள் என்றும் வில்கம் தனது நூலில் குறிப்பிட்டிருந்தார். இசைக் கலைஞனின் மனத்தின் சுனையில் துளிர்க்கும் இசையை எல்லா இசைக் கருவிகளும் உலகின் இசையாக வெளிப்படுத்தும்போது, 'நயனம்' மட்டும் உலகின் இசையை ஒருவனுக்குள் கொண்டு வரச்

செய்யும். இசைக் கருவிகளின் இசைக்கருவி எனக் கூறப்பட்ட நயனம் வாசிப்பவனுக்குள் மட்டுமே கேட்கக்கூடியதாகவும், பிறருக்கு இந்த இசை கேட்க முடியாதது எனவும் படித்தபோது சௌகத் அலிக்கு விசித்திரமாக இருந்தது. இதுபோன்ற விநோதக் கருவிகளின் இசையைக் கற்றுவிட வேண்டும் என்ற முனைப்பு அவனுள் சுடரைப் போல அலைவு கொள்ளத் தொடங்கியது. இசை நூலகங்களின், பாடகர்களின் தனிமைப் பேச்சுகளிலும் அவன் நயனத்தைப் பற்றி அறியத் தேடித் திரிந்தான். அது அழிந்துவிட்டதென்றே பலரும் சொல்லிப் போயினர். ஹரி பஜனையில் அலையும் பண்டா ஒருவன் மூலம் லக்னோவில் மூலிகை வைத்தியம் செய்யும் ஒருவனுக்கு இதைப் பற்றித் தெரியும் என்பதைக் கேட்டு அவனைத் தேடிக் கண்டடைந்தான். குறுக்குச் சந்துகளும் மரத் தடுப்புகளும் கொண்ட வீதியொன்றின் உள் ஒடுங்கிய வீட்டின் ஒற்றைக் கதவு அறையில் இருந்த வைத்தியன் பிறவி ஊமையாகவும், மெலிந்த திரேகியாகவும் இருந்தான். தன்னிடம் அந்த இசைக் கருவி இல்லையென்றும், அதை அறிவதோ, கற்றுக் கொள்வதோ எளிதானதல்ல. அது புலன்களின் இசையென்றும் எழுதித் தந்தான்.

வேட்கையின் தீவிரம் நயனம் தேடி ஊர் ஊராகப் பயணிக்கச் செய்தது. நீண்டகால தூரப் பயணத்தின் பின்பு தென் ஈஸ்வரக் கோயிலில் ஓதுவாராக இருக்கும் மெய்கண்டம் பிள்ளையைச் சந்தித்த போது, அவர் அந்த இசையை அறிந்த எண் இசை வேளாளர் குடும்பமொன்று ஆப்தநாதர் கோயிலுக்குச் சேவை செய்து வருவதாக வும், அது தாமிரபரணிக் கரையில் இருக்கிறதென்றும் சொல்லி, அந்தக் குடும்பத்தில் தலைமுறையாக எட்டு ஆண்மக்கள் பிறக் கிறார்கள். ஒவ்வொருவரும் ஒரு இசை அறிந்தவர். அதன் மூத்தப் பிள்ளைக்கு நயனம் அறியும் திறன் உண்டு என்றார். ஆப்தநாதர் கோயிலுக்கு இருபத்தி ஏழு தலைமுறையாக இசை வாசித்து வரும் அவர்களைத் தேடி சௌகத் அலி பயணமானான்.

சிவப்பு நாழி ஓடுகளும் தனித்த மனைகளுக்கும் நடுவே வீழ்ந்து கிடக்கும் கிராமங்களைக் கண்டபடி ரயிலில் வந்து சேர்ந்தான். இரவில் மழை பெய்திருக்கக்கூடும். அவன் இறங்கிய காலையில் சுவர்களில் ஈரவாடை ததும்பியது. நூற்றாண்டுப் பழைமையான எண் இசை வேளாளர் வளைவுக்கு அவன் வந்து சேர்ந்தபோது, கோயில் கதவு போல பெருத்த ஒற்றைக் கதவு கல்சுவரில் சாத்தப் பட்டிருந்ததைக் கண்டான். எட்டு வீடுகளிருந்தன. ஒரே மர வளைவுகள் கொண்ட, இரட்டை ஓடு வேய்ந்த எட்டு வீடுகள். மெலிந்த பசுவொன் றும், அகன்ற ஆட்டு உரலில் மாவைத் தள்ளியபடி திரும்பிய பெண்ணும், கோபமேறிய குரல்களும், தேய்ந்த பதிகம் பாடும் குரலும் வெண்கல மணிச் சப்தமுமுள்ள அந்த வளைவு கரும்பச்சை வடிய இருந்தது. அவன் மூத்த பிள்ளையின் வீட்டை விசாரிக்க முதல் கதவைத் தட்டினான். எதிர்ப்பட்ட ஆண் ஒருவனின் குத்திட்ட தலைமயிர் கண்பட, பதில் வராத வீட்டினின்று திரும்பிச் சிரித்தான்

சௌகத். அப்படி எந்த இசைக்கருவியும் இல்லையென்றும், அதெல்லாம் அழிந்துவிட்டதாகவும் கோபக் குரலில் பேசியவன், பதிலுக்குக் காத்திராமல் வீடு போனான்.

அவனிடம் பேசக்கூட எவரும் தயாராக இல்லை. மாலை வரை ஆற்றின் இடிந்த படித்துறையில் அமர்ந்தபடி நினைவின் குமிழ்களைக் கிளறியபடி இருந்தான். ஆற்றில் தண்ணீர் அதிகமில்லை. ஒற்றை வாத்து மட்டும் சப்தமிட்டபடி நாணல் புதர்ப் பக்கம் அலைந்துகொண்டிருந்தது. கோயில் மணி ஓய்ந்து இரவு கவிழ்ந்தது. சௌகத் அலியை மூத்த பிள்ளை கூட்டிவரச் சொன்னதாக இரண்டு சிறுமிகளும் ஒரு சிறுவனும் வந்து சொன்னார்கள். மூத்த பிள்ளைக்கு எழுபது வயதைத் தாண்டியிருக்கக்கூடும். கருகருவென இருந்தார். பார்வை மங்கத் தொடங்கியிருந்தது. விரல் தொட்டுப் பேசினார். அவன் தன் அலைக்கழிப்பான பயணத்தைப் பற்றி மெதுவான குரலில் சொல்லி முடித்தான்.

அவர் முகத்தில் சலனமேயில்லை. பின் அவர் நயனம் தன்னிடம் உள்ளதென்றும், அதைக் கற்றுக்கொள்ளக் கடும் பயிற்சி வேண்டுமென்றும் கூறி அவன் தன் வாழ்நாளுக்குள் அதைக் கற்றுக்கொள்ளவும் நேரலாம், அல்லது கற்றுக் கொள்ளாமலே ஆயுள் முடிந்துவிடக்கூட முடியுமென்பதால், அதற்கு அவன் உடன்படுகிறானா எனக் கேட்டார். சௌகத் அலி ஒப்புக் கொண்டு விட்டான். தான் அவனுக்குச் சொல்லும் எதையும் மறுபதில் பேசாது செய்துவரச் சம்மதம் வாங்கிய பின்பே மூத்த பிள்ளை அவனைத் தன் சிஷ்யனாகச் சேர்த்துக்கொண்டார். அவரது வீட்டின் மாடியறையில் தங்கிக் கொண்ட சௌகத்துக்கு அவர் இசை பற்றிய பாடம் எதையும் கற்றுத்தரவே இல்லை. பதிலாகப் புலனறிவு, மெய், போகம், சூட்சுமம் என்ற பாடங்களைச் சொல்லி வந்தார். கரடு நிரம்பிய மலை மீது நடப்பதும், சுடுவெயிலில் பனைவிடலிகள் நடுவே திரிவதுமாக அவனும் அவருமிருந்தனர். தன் வாழ்வின் பெருங்கனவான நயனம் என்ற அந்த இசைக்கருவியை ஒரு முறையாவது பார்த்துவிட முடியாதா என்ற ஏக்கம் ததும்பக் காத்திருந்தான். காலம், வீட்டு மரங்களைப் பூக்கவும், இலை உதிர்க்கவும், வெயிலேறி அலையவும் செய்தபடி சுழன்றுகொண்டிருந்தது.

பன்னிரண்டு வருஷங்கள் அங்கேயிருந்த சௌகத், வீட்டு மனிதனைப் போலாகிவிட்டான். எப்போதாவது அவன் பாடுவதும் வீட்டுப் பெண்கள் கேட்பதும்கூட நடந்தேறின. நிலா அழிந்த இரவொன்றில் மூத்த பிள்ளை உறங்கப்போன சௌகத் அலியை வரச் சொன்னார். அவன் மாடி விட்டு அவர் அறை வந்தபோது ஆற்றுக்குக் குளிக்கப் போகலாம் வா! என அழைத்தபடி சாய வேஷ்டியைச் சுருட்டி நின்றார். பனிக்காலத்தின் இரவில் ஆறு இருளோடியிருக்கும். அதுவும் நிலாவுமற்ற வான் கொண்ட இரவு என்பதால் அவன் தயங்கினான். அவர் சௌகத் கைகளைப் பற்றியபடி

நடக்கத் தொடங்கினார். வீதியில் மூடப்பட்ட கதவுகளும், துளை விழ முடியாத இருளுமிருந்தன. நீரோட்டத்தின் சப்தமும் அற்ற ஆறு இருவரையும் எதிர்கொண்டது. ஆற்று நீரில் இருவரும் இறங்கிக் குளித்தனர். மூத்த பிள்ளையின் முகம்கூடத் தெரியவில்லை. இடுப்பளவு ஓடிய தண்ணீரில் நின்றபடி செளகத் அலி அவரைத் தேடினான். அவரது விரல்களை தன்னைத் தேடுவதையும் உணர்ந்தான். தனது கைகளை முன் நீட்டியபோது அவர் விரல் அகப்படும் முன்பே அந்த ஸ்பரிச உணர்வு பற்றிக் கொண்டது. நிமிஷ நேரம், அவர் தெரியவில்லை. படித்துறையின் கல்தேவதைகள், ஆகாசம், தண்ணீர், நட்சத்திரங்கள் எல்லாம் சிதறி உருகி ஏதோ ஓர் இசை தன் உடலெங்கும் ஓடி நிரம்புவதை உணர்ந்தான். மணல் துகளின் பெருமழை போல இசை தன் உடலெங்கும் ஓடி நிரம்புவது தெரிந்தது.

இரவு கலையவில்லை. இயக்கத்தின் கதி குறைந்து மெதுவாகி, கண்ணைத் தாழ்த்தியபோது நீரினடியில் மீன்கள் ஒளியைப் பீச்சியபடி அலைவதையும், தவளைகளின் கண்களில் பச்சை மினுக்கடிப்பதையும் காண முடிந்தது. நீரோட்டத்தில் துழாவிய மூத்த பிள்ளையின் விரல்கள் அவன் விரலைப் பற்றிக் கொண்டன. தலையைக்கூடத் துவட்ட மனமின்றி அவன் பிடியினின்று தன் விரல்களை எடுக்காமல் மூத்த பிள்ளை படித்துறையில் நின்று விம்மினார். அவனுக்குப் பாடம் முடிந்துவிட்டதாகக் கூறி, விடியும் முன்பு அவன் ரயிலேறி சொந்த ஊர் போகலாம் என்றபடி அவன் பிடியை உதறித் தனியே நடந்து வீடு திரும்பினார். செளகத் அலி அவர் சொன்னபடியே புறப்பட்டுப் போனான். அந்த நாளின் பின்பு அவனது வாழ்வே திசைமாறிப் போனது. இசைக் கலைஞனாக வர வேண்டும் என்ற ஆசை புதையுண்டு போக ஊர் ஊராக அலையும் பக்கீர் போலானான. இரவு படுத்துக் கிடந்தபோது கரப்பான் பூச்சிகளின் கூட்டமொன்று தன்னருகில் பயமின்றி அலைந்து திரிவதையும், அதன் சிரிப்பையும் கேட்டான். நயனம் என்ற இசைக்கருவி தனது உடல்தான் என்றும், இமைகளை மூடித் திறப்பதன் மூலம் அது உலகின் பரவச இசையை தனக்குள் இடைவிடாது நிரப்பிக்கொண்டிருக்கிறது என்ற ரகசியத்தையும் கரப்பான் பூச்சிகளுக்கு எடுத்துச் சொன்னபோது, அவை ஏற்கெனவே புலன்களின் இசையைப் பாடியபடி எங்கும் அலைந்து கொண்டிருந்தன.

ரகசிய ஆண்கள்

வெயிலின் அலைகளை உறிஞ்சியபடியே வெட்ட வெளியில் மேய்ந்து கொண்டிருந்த நாற்பது ஆடுகள் மெல்ல தன் நிறம் மாறி செந்நிறம் கொண்டதையும், அவை வெக்கைத் திரட்சி தாங்காது பூமியை முட்டிப் பிளந்து தலை மண்ணில் புதைய வானை நோக்கி உயர்த்திய பின் கால்களுடன் குரூர மரணம் கொண்டதையும் தன் கனவில் ஏழு முறை கண்ட தாசி வனமாலை இதன் பலனை அறிந்துகொள்ள தெற்கே ஆள் அனுப்பி தாதங்குளம் சுப்பையா பிள்ளையைக் கூட்டி வரச் சொன்னாள். நெடுங்காலமாகவே மணல் கோட்டை கிராமத்தில் தங்கிவிட்ட இரண்டு பிச்சைக் காரர்கள் தாதங்குளத்துக்கு வனமாலையின் பொருட்டு சென்றனர். அப்போது தாது வருஷம் நடந்துகொண்டிருந்தது.

நாற்பது வயதைக் கடந்துபோன வனமாலையைத் தேடி ஆண்கள் எவரும் வருவது நின்றுபோனது. அவளும் உடல் பருத்து சுரக்குடுவை போலாகி வெடித்த உதடுகளும் மயிர் கொட்டிப்போன தலையும், செம்பட்டைப் புருவமுமாக இருந்தாள். ஆண்கள் வராத பத்து வருடங்களாக அவள் வீட்டு முன் கதவு பூட்டப்பட்டுக் கிடக்கின்றது. முன்பு வந்துபோன ஆண்களின் வசீகரமும் ஸ்பரிசமும் இப்போது சிறு துகள்களாக வீட்டு அறைகளில் மிதந்துகொண்டிருந்தன அவள் வளர்த்து வந்த கிளிகள் எல்லாம் பூனைக்கு இரையாகிப்போயின.

என்றாலும் அவள் வீட்டின் மூன்று முக ஜன்னல்களும், உயர்ந்த படிக்கட்டுகள் கொண்ட மாடி அறைகளும் ஊர்வாசிகளுக்கு பிரமிப்பை இப்போதும்

தந்தபடிதானிருந்தன. மணல் கோட்டையில் வசிக்கும் எந்தப் பெண்ணும் வனமாலையின் வீட்டுக்கு வந்ததேயில்லை. அவளை துர்நடத்தை கொண்டவள் எனவும், பார்த்த நிமிடத்திலே ஆண்களை வசியப்படுத்தி விடும் வசியக்காரி எனவும் பெண்கள் ஏசினர். ஆனாலும் ஊர்ப் பெண்கள் எல்லோர் மனத்திலும் சிறிய ஆசையொன்று பாம்மைப் போலச் சுருண்டு கிடந்ததை அவர்கள் அறியாமலிருந்தனர். மனத்தின் விசித்திரப் போக்கில் அந்த ஆசை வளரவும் செய்தது. எல்லாப் பெண்களும் ஒரு முறையாவது வனமாலையின் வீட்டினுள் போய்ப் பார்த்து வரவே விரும்பினர். ஆனால் வனமாலையோ எந்தப் பெண்ணையும் தன் வீட்டில் அனுமதித்ததே இல்லை.

உடல் பருத்துப்போன பின்பு அவள் வெளியில் எங்கும் போவது கிடையாது என ஆனது. மூன்று படுக்கையறைகள் கொண்ட அந்த மாடியறையில் கிடந்த கறுப்புக் கட்டில்களில் மரக் காளான்கள் முளைத்துப்போயிருந்தன. வனமாலை ஜன்னலை ஒட்டிய படுக்கை கொண்ட அறையில்தான் இருந்தாள். அந்த அறையில் அவளது உருவப் படம் ஒன்று சுவரில் தொங்கிக் கொண்டிருக்கும். குழந்தைகள் எவரும் அவள் வீட்டின் முற்றத்தில் வந்து விளையாடப் பயந்தனர். அவளது கடந்தகால வசீகரத்தையும் நிர்வாணத்தையும் கண்டிருந்த மரப்பல்லிகள் அந்த அறையின் உத்திரத்தை விட்டுப் போகவே இல்லை. இரவில் அவை விடாமல் சப்தமிட்டு அவளின் தனிமையைப் போக்கின.

சிறு வயது முதலே வனமாலை கனவுகளால் அலைக்கழிக்கப்பட்டாள். கனவுகள் மெல்லிய சிறகை அசைத்தபடியே அவளைச் சுற்றிப் பறந்துகொண்டிருந்தன. வயதான தாத்தாவால் வளர்க்கப்பட்ட அவள் நிறைய பகல் கனவுகள் காணுபவளாக வளர்ந்தாள். இந்த உலகில் உள்ளவற்றையும், இல்லாதவை பற்றியுமான அவளது கனவுகள் பல்கிப் பெருகின. கனவுகள் எதிர்காலத்தைச் சொல்லக் கூடியவை என்பதைப் பற்றியும், ஆண்களுக்கு வரும் கனவுகள் பெண்களுக்கு வருவதில்லை என்பதைப் பற்றியும் சிறு வயதிலேயே அவள் அறிந்திருந்தாள். வயசாளிகள் அனைவரும் கனவுகளால் துரத்தப்படுவதாக அவளது தாத்தா தினமும் புலம்புவார். அவளுக்குப் பதினோரு வயதானபோது இதுபோல தீய கனவு ஒன்றைக் கண்ட தாத்தா அவளையும் கூட்டிக்கொண்டு மணல் கோட்டையிலிருந்து விலகி வடக்கே புறப்பட்டுப் போனார். அவர்கள் பயணமாகிக்கொண்டிருந்த கரிசல் பூமியில் இரவு வெகு சீக்கிரமாகவே வந்துவிடுகிறது. வெட்ட வெளியில் இருவரும் உறங்கினர். அன்று தாத்தா ஒற்றைக் கண் உள்ள நாய்க் கூட்டம் தன்னை விரட்டுவதாகக் கனவு கண்டு திடுக்கிட்டு விழித்து, கையில் கத்தியுடன் வெட்ட வெளியில் அலைந்து காற்றை வெட்டியபடி திசையில்லாமல் இரவெல்லாம் ஓடினார். வனமாலை கனவு கொண்டாள். மான்குட்டியொன்று நீரில் நீந்திக் கொண்டிருந்தது. நீரில் மெல்ல மானின் நிறம் கரைந்துபோக நுரை போன்ற வெண்மையுடன் மான் துள்ளிக் கரையேறியது. வெண்ணிற

மானின் பாய்ச்சலால் உடல் விழிப்புற்றபோது மண்ணில் ரத்தத் துளிகள் சிதறியிருப்பதை அறிந்தாள். உடல் அசதி கொண்டது.

வெட்டவெளியில் ருதுவாகும் பெண்கள் நட்சத்திரங்கள் போல அலைக்கழிக்கப்படுவார்கள் எனத் தாத்தா சொன்னபோது அவள் பயந்து மணல் கோட்டைக்குத் திரும்பிவிட்டாள். அது முதல் அவளது கனவுகளே அவள் நாட்களை உருவாக்கின. மணற்கோட்டையின் பூர்வீகவாசிகள் எல்லோரும் கனவின் விசித்திர அறைகளில் வாழ்ந்துகொண்டிருந்தனர். ஊரே தன் முந்தைய உருவத்தின் கனவில் தானிருந்தது.

பின்நாள்களில் வனமாலையின் வீட்டில் கனவுகளுக்குப் பலன் சொல்வதற்காகவே பதிமூன்று ஆண்டுகள் இருந்தனர். அவர்கள் பகல் நேரத்தில் கீழ்க்கூடத்தில் சீட்டாட்டம் ஆடியபடியே இருப்பார்கள். இரவில் சமையல்கட்டில் உறங்குவார்கள். அவர்கள் தன் முகம் காட்டாது பலன் சொல்லுவார்கள். அவர்களும்கூடச் சென்ற கோடைக்காலத்தில் அவளைப் பிரிந்து போய்விட்டனர். பதிமூன்று பேர்களில் இளையவனான ஒருவன் மட்டும் பெண்களின் விபரீதக் கனவுகளுக்குப் பயந்து வழிப் பாதையில் இருந்த தாழஞ்சுனையில் மூழ்கி இறந்துபோய்விட்டான் எனத் தகவல் அவளுக்குக் கிடைத்தது. அவனுடைய மயில்கரை வேஷ்டியொன்று சமையல்கூட்டில் கொடியில் நீண்ட நாளாக உலர்ந்துகொண்டே இருந்தது.

வனமாலையின் வீட்டுக் கதவினைத் தட்டும் ஆண்கள் எவரும் தன் உரு மறைத்தே வந்தனர். அந்நாட்களில் வீட்டில் அவளது சௌந்தரியம் பெரிய வலை போல எங்கும் விரிந்து கிடந்தது. எப்போதும் ரகஸிய ஆண்களின் நிழல் நடமாட்டம் அந்த வீட்டில் இருந்தபடியே இருந்தது. மணல் கோட்டையில் வருடத்துக்கு நான்கு நாள்கள் மட்டுமே மழை பெய்யும். அங்கிருந்த நூறு வீடுகளும் அந்த மழையை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்.

திடீரென ஒரு மதியம் உறைந்துபோய் வெயிலின் திரை கிழிந்து மழை ஊரில் வெளிப்படும். அந்நாள்களில் ஆண்களும் பெண்களும் உறங்குவதில்லை. மழையின்போது உறங்க முடியுமா என்ன? ஓட்டு வீடுகள் மழைச் சப்தத்தைப் பெருக்கின. ஈரம் காணாது நடுங்கிக் கொண்டிருந்த தெருச்சுவர்கள் மழையால் ஈர்ப்பு கொண்டன. சரியாக நாலே நாள் பெய்த பின்பு மழை அடையாளம் மறைந்து ஊர் தன்வசப்படும். அந்த மறையும்கூட தாது வருசத்தில் வராது போனது.

இதுபோன்ற கோடை இரவுகளில் வீடுகளில் உறங்கும் ஆண்களைப் பெண்கள் வெறித்துக்கொண்டிருப்பார்கள். உறக்கத்தின் போது பிறக்கும் அழகு தனியே மிளிர்ந்துகொண்டிருக்க, வீட்டுப் பெண்கள் சப்தம் செய்யாது விழித்திருப்பார்கள். எப்போதாவது அசந்து உறங்கிக் கொண்டிருக்கும் பெண்ணைப் பார்த்த ஆண், பயமும் துக்கமும் கொள்வது தவிர்க்க முடியாதது.

கோடைக்காலம் முடிவற்றுப் போய்க்கொண்டேயிருந்தது. துர் சகுனங்களின் காற்று ஊரைச் சுற்றி வீசிக்கொண்டே இருந்தது. புழுதியை வாரி இறைக்கும் காற்றால் வீட்டுக் கதவுகள் அரிபட்டன. எல்லோரும் சோகை கொண்டது போல இருந்தார்கள். தூக்கத்தில் நடப்பவர்கள் போல இயங்கிக் கொண்டிருந்தனர். தினமும் ஊரைச் சுற்றி நட்சத்திரங்கள் அறுந்து வீழ்வதைக் கண்டு ஆண்களும் பெண் களும் துயரடைந்தனர்.

அந்நாள்களில்தான் வனமாலைக்குக் கனவு வந்தபடியிருந்தது. கனவுகளுக்குப் பலன் சொல்லும் சுப்பையா பிள்ளையைக் கூட்டிக் கொண்டு ஊர் வந்து கொண்டிருந்தவர்கள்கூட தீவினையின் வளையங் கள் ஊரைப் பற்றிக்கொண்டதை தொலைவிலே கண்டனர். பசு ஒன்று கர்ப்பம் கலங்கி மஞ்சள் பாரித்த உடலும் சூரியனை வெறித்த கண்களுடனும் இறந்து கிடந்தது. சுப்பையா பிள்ளை ஊரில் நுழையும் போதே மரண வாடையை நுகர்ந்தபடியே வந்தார். பசுவின் மரணத் தால் பயங்கொண்ட சிறுமிகள் வீட்டின் உள் அடுக்குகளில் பதுங்கிக் கொண்டு பெருமூச்சு விடுவதும் முணுமுணுப்பதும் துல்லியமாகக் கேட்டன.

இப்போதும் தானியங்கள் மீந்திருந்த வீடாக இருந்தது வன மாலையிடம் மட்டுமே. தெருவில் படிந்த கறுப்பின் ஊடே விளை யாடிக்கொண்டிருந்தார்கள் சிறுவர்கள். இரட்டைப் பெண்களான பெரிய பாண்டியம்மாவும் சின்னப் பாண்டியம்மாவும் உடல் நலிவுற்றுச் சோர்ந்து கிடந்தனர். மூத்தவள் சின்னப் பாண்டியம்மாளின் வற்றிய மார்புகளைப் பார்த்தபடியே 'நான் செத்துப் போகப் போறன்டி உன்னைய விட்டுட்டு' எனச் சப்தமிட்டுக் கொண்டிருந்தாள். சின்ன வளுக்குப் பேச்சு கொள்ளவில்லை. இருவருமே சூடான சோளக் கஞ்சிக்கு ஆசை கொண்டிருந்தனர். சின்னப் பாண்டியம்மாள் அக்காளிடம் தோன்றிய முகவிகாரங்களைக் கண்டு அஞ்சியபடியே உறங்கினாள்.

கவலை கண்டிருந்த சிறுவர்கள் சாணம் உலர்ந்த திண்ணையை விட்டு அகலாது தெரு பார்த்தபடி இருந்தனர். மரங்களை விட்டுக் காற்று பிரிந்துபோயிருந்தது.

வனமாலையின் வீட்டுக்கு சுப்பையா பிள்ளை வந்தபோது மாலையாகியிருந்தது. ஊரைச் சுற்றிலுமான திறந்தவெளியில் இன்ன மும் வெளிச்சம் அடங்கவேயில்லை. மாடி அறைகளில் அவர் நுழைந்து அவளைக் கண்டபோது அவள் முதுகு நீண்ட நாற்காலியைப் போட்டு ஜன்னலை வெறித்தபடியே உட்கார்ந்திருந்தாள். பருத்த அந்த உடலைப் பார்க்க அசூயையாக இருந்தது. தரையெங்கும் உலர்ந்து கிடந்த தாம்பூலச் சக்கைகளை வெறித்தபடியே அவர் சொன்னார்.

"இனிவரும் நாற்பது நாள்களுக்குள் இவ்வூர் அழிந்துவிடும். ஆடுகளைப் போல நாள்களும் செந்நிறம் கொண்டுவிடும்."

ஓலைப்பெட்டி நிறைய தானியமும் இரண்டு நாணயமும் வைத்து அவள் மரப்பலகையில் வைத்திருந்ததை எடுத்துக்கொண்டு வீடு விலகி ஊர் வழி வரும்போது மடத்தில் இருந்த பிச்சைக்காரர்கள் இருவரும் அவரை அன்றிரவு அங்கேயே தங்கச் செய்தனர்.

அன்றிரவு சுப்பையா பிள்ளையும் கனவு கண்டார். காது நீண்ட குதிரையொன்று குமிழ்ப் பிடி கொண்ட கதவைத் தட்டிக்கொண்டே இருந்தது. குதிரையின் உடல் நீண்டு தெருவெங்கும் வளைந்திருந்தது. இடைவிடாது தட்டுதலால் கதவு திறந்து கொள்ள குதிரை படியேறி உமிழ்ப்படுக்கையொன்றில் படுத்துக்கொண்டது. கனவின் கதியினின்று நழுவி விழிப்புற்ற சுப்பையா பிள்ளை எழுந்துகொண்டார். குதிரை தட்டிய கதவு யாருடைய வீடு எனப் புரிந்தது. பொழுது விடிந்ததும் அவர் வனமாலையின் வீட்டுக்குள் சென்றார்.

சிறு படிக்கட்டுகள் கொண்ட மரக்கட்டிலில் அவள் மட்டுமே உடைகளற்று உறங்கிக்கொண்டிருந்தாள். வெயில் அவள் கால் விரல்களைத் தொட்டுக்கொண்டிருந்தது. சுப்பையா பிள்ளையின் காலடி சப்தத்தால் விழித்த அவள் எழுந்துகொள்ளாமல் புரண்டபோது வீங்கிய ஸ்தனங்கள் சரிந்தன.

அவள் முகத்துக்கு எதிராக சுப்பையா பிள்ளை சொன்னார்,

“இந்த முழு நிலவின் நாளுக்கு முன் உன்னைத் தேடி ஒருவன் வருவான், அவனே நீ சந்திக்கும் கடைசி ஆண்.”

அவர் போன நாளின் மறு தினம் பகல் நீண்டு சென்றுகொண்டே இருந்தது. ஊற வைத்த தானியங்களைத் தின்றபடியே ஜன்னலின் அருகே உட்கார்ந்திருந்தாள் வனமாலை. தெருவில் சப்தத்தைக் கொட்டியபடியே மேய்ந்துகொண்டிருந்த கோழிகள் உணவாகிப் போனதால் சப்தம் மட்டுமே நிரம்பியிருந்தது.

மேலத்தெருவின் கடைசி வீட்டுப் பெண்கள் நால்வர் ஒன்றுகூடி தானியக் குதிரைக் கவிழ்த்தனர். தூசிகளும் கல்துகள்களும் நிரம்பிய தானியங்கள் கொஞ்சம் மீதமிருந்தன. வாசல் பக்கம் வந்து தானி யத்தைப் புடைத்தனர். தானியங்களின் உரசல் சப்தம் கேட்டு கல் பொந்துகளிலும் கிணற்று உள் அடுக்குகளிலும் மறைந்திருந்த பறவைகள் விழிப்புற்று படைபடையாகக் கடைசி வீட்டு முன் இறங்கின. பறவைக் கூட்டத்தின் வரவால் அந்தப் பகல் துகள் துகளாகி சப்தங்களால் நிரம்பியது.

வீட்டின் முன் விழும் பறவைகள் மண்ணில் தலையைச் சிலுப்பி கல்துகளைக் கொத்துவதும், தானியத்துக்காக வாயைப் பிளப்பதையும் கண்டு, முறத்தை அப்படியே வைத்துவிட்டு அந்தப் பெண்கள் தானிய அறைகளுக்குள் ஓடியபோது பல பறவைகள் அலகில் தானியத்தோடு ஊரைப் பிரிந்து பறக்கத் தொடங்கின. ஊர் மடத்தில் படுத்துக் கிடந்த இரண்டு பிச்சைக்காரர்களும் கூட இதைப் பார்த்தனர். பறவைகள் போன பிறகு வெளிறிய ஆகாசத்தை ஏறிட்டுப் பார்க்க

ஊரில் எவருக்கும் மனம் துணியவில்லை.

தண்ணீர் அருகிப்போனதால் வனமாலையின் உடலில் கசகசப்பும் காளான் வாடையும் பெருகத் தொடங்கியது. கண் இமைகள் ஒட்டிக்கொண்டு பார்வையை மறைத்தன. பெருமூச்சிட்டவாறே அவள் நாற்காலியில் பகல் எல்லாம் உட்கார்ந்திருந்தாள்.

ஊரின் கிழக்கே இருந்த வேதக் கோயில் காற்றால் அழிவுற்றது. உப்பின் வாடை படர்ந்த கோயில் கதவுகள் சக்கைகளாகப் பிரிவுண்டன. உலர் இலைகளும் நத்தைக் கூடுகளும் கோயிலில் நிறைந்தன. மரச்சிலுவையில் அப்பிய நத்தைக் கூடுகளைக் கண்ட பாதிரியும் அவரது மணமாகாத மகளும் உலர் இலைகளுள் மண்டியிட்டுப் பிரார்த்தனை செய்தனர். பாதிரியின் மகளுக்கு ஊரைவிட்டுப் பிரிந்துபோன ஸ்நேகிதிகளின் ஞாபகமும் கிணற்றில் உதிரும் பன்னீர்ப் பூ மரம் அழிந்த நாளும் நினைவில் வர, புழுதிக் காற்றைச் சபித்தபடியே கண்ணீர் சிதறப் பிரார்த்தித்தாள். அவளது கண்ணீரின் சப்தம் வேதக் கோயிலில் சென்று பதுங்கிக்கொண்டது. பாதிரியின் வீட்டில் மட்டுமே உயிரோடிருந்த சேவல் ஒன்று இடைவிடாமல் பகலிலும் கூவி ஓய்ந்தது.

காலி வீடுகள் அதிகமாகிப்போனதால் ஆள்முகமறியா இருட்டு தெருவில் நிரம்பிற்று. மண் சட்டிகளில் வறுபடும் தானியங்களுடன் எறும்புகள் கருகும் வாடை ஊரில் சுழன்று கொண்டிருந்தது. எறும்புப் புற்றிலிருந்த தானியம் தேடிக் கரிசல் வெளியைத் தோண்டிக் கலைந்தனர் ஆண்கள்.

நிலா வளர்ந்த நாள்களில் வனமாலையின் உடலில் வெடிப்புகள் தொடங்கின. வேதனையாலும் இருட்டாலும் அவள் படுத்தே கிடந்தாள். ஜன்னி கண்டவள் போலப் பிதற்றினாள். ஊரின் தனி வெளியில் நின்றிருந்த மரத்தின் கிளைகளில் இறந்துபோன குழந்தைகள் தொங்கிக்கொண்டு அவளை அழைத்துச் சிரிப்பதாகக் கற்பனை கொண்டாள்.

வியாழன் அன்று ஊர் அறிந்திராத வெக்கைக் காற்று கிளம்பியது. வீட்டின் கூரைகள் பறந்துபோயின. கோழிக் கூண்டுகள் வானளவு உயர்ந்து சுழன்றன. வைக்கோலை வாரி இறைத்தது காற்று. பெரிய பாண்டியம்மாள் இறந்துபோனாள். பிணத்தின் பின்னே போன இரண்டு பிச்சைக்காரர்களும் ஊரே பயம் கொள்ளும்படி அழுதனர். அந்த நாளில் பல வருடத்தின் பின்பு மாடியிலிருந்து கீழே இறங்கி வந்து தெருவில் நடமாடினாள் வனமாலை.

நடப்பது வேதனை தருவதாகவிருந்தது. ஊரின் புறவெளி வரை நடந்து திரும்பியபோது பார்வை மங்கி எதுவும் புலப்படாமல் போனது அவளுக்கு. எப்பக்கம் வீடு உள்ளது என அறியாது காற்றில் எதையோ தேடுபவள் போல அலைவுற்றாள். பின் அந்தப் பிச்சைக்காரர்களே அவளை வீடு அழைத்து வந்தனர்.

அதன்பின் அவளுக்கு நாள்கள் மறந்துபோயின. முடிவற்ற ஒரே நாளில் தான் இருப்பதாகவே உணர்ந்தாள். பின் வீட்டின் மண் கலயம் ஒன்று உருண்டு உடைவதையும் யாருடைய காலடிச் சப்தமோ வீட்டில் அலைவதையும் ஒரு முறை கேட்டாள். அந்தச் சப்தம் ஆணின் காலடியாகவே இருந்தது. சுப்பையா பிள்ளை சொன்னதன் ஞாபகம் வந்தது.

காலடிச் சப்தம் மிக அருகில் வந்து அவள் முன் நின்றது. அவள் தலையைத் திருப்பினாள்.

"சாவிய எங்க வச்சிருக்கே?"

அந்தக் குரல் மிகக் கடினமானதாக இருந்தது. என்றாலும் அதை அவள் விரும்பினாள். அது அவளுக்குள் வேட்கையை அதிகப்படுத்தியது. அவளது தலையணைக்குள் முரட்டுக் கையொன்று எதையோ தேடி அவளைப் புரட்டியது. அவள் மயிர் நிறைந்த அந்தப் புறங் கையைப் பற்றிக்கொண்டாள். பிசுபிசுப்பான தன் உதட்டோடு அந்தக் கைகளைப் பதித்தபோது அந்த மனிதன் அசைவில்லாமல் நின்றான்.

"கட்டிலில் உட்கார்" — என்ற அவள் குரலுக்கும் அடிபணிந்தான். அவள் உஷ்ணமூச்சை எறிந்தபடியே கேட்டாள்,

"வெளியே இப்போது பகலா, இரவா?"

"பகல் முடியப்போகிறது."

அவன் உள்ளங்கையிலிருந்து அவனுக்கு இருபது வயதுக்குள் தானிருக்கும் என அறிந்துகொண்டாள். அவன் உடல் கூழாங்கற்கள் போல இறுகிச் சில்லிட்டிருந்தது. நீண்ட நாள்களுக்குப் பின் தன் படுக்கையில் அமர்ந்திருக்கும் மனிதனின் தலைமயிரை அவள் விரல்கள் கோதின. சுருள் சுருளாகத் தலைமயிர். புரண்டு படுக்கையின் கீழ் இருந்த நாணயங்கள் சிலவற்றை எடுத்து அவன் உள்ளங்கைகளில் வைத்துக் கிசுகிசுக்கும் குரலில் சொன்னாள்.

"இன்றிரவு இங்கேயே இருந்துவிடு. எல்லா நாணயமும் உனக்கு உரிமையாகிவிடும்."

அவன் நாணயத்தைத் தன் பல்லால் கடித்துப் பார்த்துவிட்டுக் கைகளில் பொதிந்துகொண்டான். அவனிடமிருந்து மறுப்பு வராததால் அவள் குரலை உயர்த்திச் சொன்னாள்,

"நான் குளிக்க வேண்டும். எங்காவது போயி தண்ணீர் எடுத்து வாயேன்."

அவன் எழுந்து அறையை விட்டுக் கிளம்பும் முன் அறை முகப்பில் இருந்த மர அலமாரிகளைத் திறந்தான். நூற்றுக்கணக்கான ஜோடி செருப்புகள் நிறமிழந்து வாய் பிளந்து சரிந்தன. அவன் தண்ணீர் தேடிச் சென்றான்.

அவன் திரும்பியபோது ஊரின் மீது பூரண நிலா மிதந்து

கொண்டிருந்தது. வீடுகளை, தொழுவங்களை, அறுபட்ட மரங்களை வசீகரமாக்கிக்கொண்டிருந்தது வெண்ணிறம். வீட்டின் பின் கதவு களைத் திறந்தான். தண்ணீர் அலம்பும் சப்தம் கேட்டுவிடாமல் பானையைக் கீழே வைத்தான்.

மரப் படிக்கட்டுகள் வழியாக வனமாலையை அழைத்துக் கொண்டு வந்தான். அவள் ஏதோ ஒரு கனவின் பாதியிலிருந்து அறுபட்டு எழுந்து வந்தாள். துவை கல்லில் உட்காரச் செய்து தண்ணீர் ஊற்றினான். தண்ணீரின் சப்தம் கேட்டு உறங்கிக்கொண்டிருந்த குழந்தைகள் விழித்துக்கொண்டு நாக்கைச் சப்பியபடி கைகளால் எதையோ தேடிப் பிதற்றினர் பல வீடுகளிலும்.

ஈர உடலுடன் அவளை அறைக்குக் கூட்டி வந்தான். நெடு நாள்களாகத் திறக்கப்படாத அந்தப் புட்டிகளை அவன் திறந்தான். அத்தரின் வாடை அறையை நிரப்பியது. காற்றின் வேகத்தில் ஊரெங் கும் பரவியது. நெசவாளியும் குழந்தைகள் அற்றவளுமான சௌந்தர வல்லி இரவில் திடீரெனப் பரவிய அத்தர் வாடை தாங்காது மயங்கி விழுந்தாள்.

ஆண்களை விலக்கி உறங்கிக்கொண்டிருந்த பெண்களும்கூட இவ்வாடையால் நடுக்கமும் வேட்கையும் கொண்டு ஆண் உடல் புகுந்தனர். அவன் அறையிலிருந்த எல்லாப் பொருள்களையும் மூட்டை கட்டினான். சிறு விளக்கு ஒன்று மட்டுமே அந்த அறையில் எரிந்துகொண்டிருந்தது. குருவியெனத் தட்டழியும் விளக்கின் சுடரில் வனமாலையைப் பார்த்தான். அவள் உடல் திறந்து கிடந்தாள். விளக்குடன் நெருங்கி வரும்போது அவள் நிழல் சுவரேறி உயர்ந்து விட்டத்துக்கு வந்தது.

விடிவதற்குள் ஒரேயொரு முறை அவளை முத்தமிட்டான். கசப்பும் உப்பின் வாடையும் கொண்ட முத்தம் அது. நாற்பதாவது நட்சத்திரம் எரிந்து வீழ்ந்த காலையில் புறப்பட்டு ஊர் விட்டுப் போனான். ஊரை அடுத்த நாளும் அத்தரின் வாசனை சுற்றிக் கொண்டிருந்தது. மூன்றாவது நாள் அவள் வீட்டில் நுழைந்த பிச்சைக்காரர்கள் சிதறிய நாணயங்கள் மூன்றைக் கண்டெடுத்தனர். திறந்து கிடந்த படுக்கையறையில் வனமாலையின் ஸ்தனங்களில் நகங்களைப் பதித்தபடி நின்றிருந்த வெருகுப் பூனை ஆள்முகம் கண்டு தாவி ஓடியது. அவர்கள் அருகில் சென்று பார்த்தபோது வனமாலை இறந்து இரண்டு நாளாகிப் போயிருந்தது.

ஜல சதுரங்கம்

சாட்சி விசாரணைக்காக தென்காசி கோர்ட் வரை வந்துவிட்டு அருவியில் குளிக்காமல் போனால் எப்படி எனத் தனக்குத் தானே கேட்டுக்கொண்ட போலீஸ் கான்ஸ்டபிள் குமாரசாமி கடையில் போய் சாம்பிள் சோப்பும், அருவிக்கரைத் துண்டும் வாங்கிக் கொண்டு மலையை நோக்கிப் பயணித்தார். சாரல் காலமாதலால் எங்கும் தூவானமாயிருந்தது. வெயிலும் மழையும் பிணைந்த மதிய வேளையில் அருவியைக் கண்டபோது அது உருவிய வாள் போல வீழ்ந்துகொண்டிருந்தது. அருவியைப் பார்த்ததும் சிரிப்பு வந்தது. சிறுவர்களும், நனைய நடுங்கும் இளம்பெண்களும் அவரைக் கடந்தனர். கேஸ் கட்டு, தொப்பி, காக்கி உடைகளைக் களைந்து மலைப் பொந்தில் திணித்துவிட்டு கரிய தன் வயிற்றைத் தடவியபடி அருவிக்குள் போய் நின்றார். தண்ணீர் பட்டதும் உடம்பு ஒடுங்குகிறதோ எனத் தோணியது. நூற்றுக்கணக்கான வெள்ளை, மஞ்சள் துகள்களாக மிதந்துகொண்டிருந்தது வெயில். அருகில் நின்று குளித்துக்கொண்டிருந்தவரின் உதடு ஏதோ கடவுளின் பெயரை முணுமுணுத்தபடியிருந்தது. தன்னிடமிருந்த சாம்பிள் சோப்பை முகர்ந்துவிட்டு உடலெங்கும் தேய்த்தபடி அருவிக்குள் நகர்ந்தார். ஒரு வினாடி கையிலிருந்த சோப் நழுவி பாறைகளின் ஊடே வீழ்ந்து மறைந்தது. குனிந்து சோப்பைத் தேடினார். அருவியின் பின்புறமாகச் சுழித்தோடும் நீர் வழி எதிலோ சோப் நீந்திக்கொண்டிருக்க வேண்டும் என மிதந்த சோப்புக் குமிழ்கள் கூறின.

நடந்து அருவியின் பின்புறமாகச் சென்றார்.

வெற்றிடமும் பாசியேறிய பாறைகளும் நத்தைகளும் தெரிந்தன. சோப்பு நுரைகள் மிதந்து அலைகின்றன. பாறைப் பிளவுகளுக்குள் பாதையொன்று நீண்டு வளைவு கொண்டது. அதிலிருந்து தண்ணீர் தனது பல ஆயிரம் கால்களால் வெகு வேகமாக ஊர்ந்து வெளியே சென்றுகொண்டிருந்தது. சோப்பின் தடம் தெரியவில்லை. உள்ளே நடந்துகொண்டிருந்தார். குகை போல வழி குறுகி தலை இடித்தது. நடந்து திரும்பியதும் எதிர்பாராத வெற்று வெளியொன்றும் அதன் நடுவே வட்டக்குளம் போல் நீர் தேங்கிய அமைப்பும் தெரிந்தது. அருகில் சென்று பார்த்தபோது அவரது சோப் குளத்தின் நடுவில் மிதந்துகொண்டிருந்தது. எடுப்பதற்காகக் குனிந்தபோது அவர் முகம் பரப்பில் பிரதிபலித்தது. சுய அழகின் லயிப்பில் நிமிஷம் கழிந்து விடுபட, சோப் எப்படி மூழ்காமல் குளத்தின் நடுவில் மிதக்கிறது எனப் புரியாது யோசித்தார். திரும்பவும் குனிந்தபோது சலனமில்லாத அந்தப் பரப்பைக் கண்டார். அது தண்ணீர்தானா இல்லை கண் ணாடியா? பார்க்கப் பார்க்கக் கண்ணாடியாகவே தோன்றியது.

எப்படி இது சாத்தியம்? இத்தனை பெரிய கண்ணாடிகூட உலகில் இருக்க முடியுமா? இங்கே எப்படி வந்திருக்கும். யோசனை தப்பித் தப்பி மாறியது. ஒரு சிறு கல்லைத் தேடி எடுத்து சோப் இருந்த இடத்தருகே எறிந்தார். அக்கல் குபுக் என்ற சப்தத்துடன் குளத்தில் மூழ்கி அலையொன்றைக் குமிழிடச் செய்தது. கண்ணாடி யில்லையா? தண்ணீர்தான் உறைந்துவிட்டதா? குழப்பம் பற்றிக் கொள்ள மறு கல்லை எடுத்து மீண்டும் குளத்தின் வேறு இடத்தை நோக்கி எறிந்தார். அது மூழ்கவில்லை. சில்லென உடையும் சப்தம் உண்டாக்கி மேற்பரப்பில் மிதந்தது கல். குழப்பம் தீவிரமாக நாலைந்து கற்களை எடுத்து ஒருசேர எறிந்தார். மூழ்கவும் மிதக்கவும் செய்தன ஓரிரு கற்கள். திகைப்பின் கொடி சுற்றிய முகத்துடன் இது தண்ணீரா? கண்ணாடியா? என அறியாது நின்றார். எதுவாகவும் இருக்கட்டும். நம் சோப்பை எப்படி எடுப்பது எனக் கவனம் திரும்பினார் மனம் விடுபட மறுத்தது. அந்த வட்டப் பரப்பிலே நின்றது. ஒருவேளை கண்ணாடியும் தண்ணீரும் பாளம் பாளமாகச் சேர்ந்து உருவான நீர்த்தளமோ! குளத்தினைச் சுற்றி வந்தார். அவர் பார்த்துக் கொண்டி ருக்கும்போது தவளைக் குஞ்சு ஒன்று கல் மறைவினின்று தாவி பரப்பில் பிரதிபலித்தது. அலையெழுப்பி சோப் அருகே போய் நின்றது. இருநிலை கொண்ட பரப்பு இது என அவராகவே முடிவு கொண்டார். இனி இதில் எப்படி நடந்து போய் சோப்பை எடுப்பதாம்? கண்ணாடி வழியே சரியாகக் காலடி வைத்துப் போனால் எடுத்துவிட முடியாதா சோப்பை. யோசனையின்றி குளப்பரப்பில் முதல் காலடி எடுத்து வைத்தார். பாதம் பிரதிபலிப்பு கொண்டது. கால் ஊன்றி நின்றபோது மூழ்கவில்லை. அடுத்த அடி எப்பக்கம் வைப்பது என அறியாது மறு காலால் இடம் தேடினார். பாதம் படும் இட மெல்லாம் நீர் ஸ்பரிசம் அறிய முடிந்தது. தவளைக் குஞ்சு அவரைப் பார்த்தபடியே இருந்தது. கண்ணை மூடியபடி காலை ஒரு இடத்தில்

வைத்தார். அது கண்ணாடிப் பரப்பு. அதில் ஒரு காலை ஊன்றும் போது முந்தின கால் ஊன்றிய கண்ணாடிப் பரப்பு நீராகித் ததும்பியது. அவசரமாக காலை உருவிக்கொண்டார். இப்படியாக மூன்று அடிகள் நடந்து விட்டார். இன்னும் சில காலடிகளே மீத மிருந்தன சோப்பை எடுக்க. எதற்கோ திடீரெனத் திரும்பிவிடலாமா என மருட்சி தோன்றியது. இது கண்ணாடியும் தண்ணீரும் இணைந்து உருவான ஜல சதுரங்கம். தான் தவறாக அடி வைத்துவிட்டால் மீள முடியாது என மனம் சொன்னது. அடுத்த அடியை முன் வைக்கக் கால் தொட்ட இடத்தில் விரல்கள் பிரதிபலித்தன. குதி தண்ணீரை உணர்ந்தது. குழப்பத்தின் புகை சுழல நிலைதடுமாறி வீழ்ந்தார். மங்கிய சுழற்சியை அறிந்தார். உணர்வு கொண்டபோது குளம் இப்போது உருண்டையான கண்ணாடிக் கோளம் போலாகி அதனுள் அவர் வீழ்ந்து கிடப்பது தெரிந்தது. எழுந்து நின்றார். சோப் இப்போது கோளத்தின் வெளிப்புறப் பரப்பில் இருந்தது.

உருண்டையான சதுரங்கப் பலகையின் உள்புறம் அலையும் அவரை இப்போதும் தவளைக் குஞ்சு வெளியிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தது. இப்படியும் அப்படியுமாக உள்ளே நடந்தார். இதிலிருந்து எப்படி வெளியேறுவதாம். மனமயக்கம் தீராமல் இருந்தது. வட்டம் மெல்லச் சுருங்குகிறதோ எனத் தோன்றியது. இந்தக் கோளம் மெல்லச் சுருங்கிச் சுருங்கி, புள்ளி போலாகிவிட்டால் நானும் சுருங்கித் தண்ணீர்த் துளியாகி விடுவேனோ. கோபமாகிக் கோளத் தினை பலமாகக் குத்தினார் கையால். அசைவில்லை. கோளத்தில் ஏதோ அசைவு தெரிந்தது. நகர்கிறதா? வெளியேயிருந்த தவளைக் குஞ்சு தாவியது. நகர்வு கொண்டது கோளம். இவ்விளையாட்டின் மீது ருசி கொண்ட தவளை உற்சாகமாகியது. கோளம் எதன் மீதாவது மோதினால் என்னவாகும். பயம், கோபம் அவரிடம் அலைவீசத் தொடங்கின. தவளையின் நாட்டியத்தில் வேகம் கதி கொண்டது. அசைவு கொண்ட கோளம் எதனை நோக்கியோ நகர்ந்து சென்று மோதியது. புலனறியவில்லை. கண்விழித்தபோது தான் குளித்துக்கொண்டிருந்த இடத்தை விட்டுத் தள்ளி நின்றிருந்தார். உதட்டில் கடவுள் நாமம் முணுமுணுக்கும் நபர் இன்னமும் குளித்துக் கொண்டுதானிருந்தார். இது நிஜம்தானா? மாயப் பரப்பில் தான் இயங்கியது வாஸ்தவமா? புரியவில்லை. சுற்றிலும் பார்த்தார். அவர் காலடியிலிருந்து தவளைக் குஞ்சு ஒன்று மிரட்சியுடன் தாவிப் பாறையேறியது. வியப்பில் அருவிக் கரை வந்து நின்றபோது குரங்கு ஒன்று அவரது காக்கி உடைகளைக் கலைத்தபடி அருவியைப் பார்த்துக்கொண்டிருந்தது. விரட்ட மனமற்றவராக குரங்கைப் பார்த்துச் சிரித்து வைத்தார் கான்ஸ்டபிள் குமாரசாமி.

கடற்கரை ரயில் நிலையம்

கடைசிக் குருவியும் பறந்த பிறகு நாங்கள் கடற்கரைக்கு வந்து சேர்ந்தோம். இனிப் பறவைகள் வரப்போவதில்லை. தணிந்த கடலின் மீது ஈர்ப்பு கொள்ளாது மணலை வெறித்தபடியே இருந்தோம். விளையாடும் பிள்ளைகளின் கூட்டம் கலைந்து போன பின்பும் அலைச்சலுற்ற சுவடுகள் மிஞ்சித் தெரிகின்றன. சாலையைப் பார்த்துத் திரும்பி உட்கார்ந்துகொண்டோம். என் பின்புலத்தில் வரம்பற்ற கடல் அலையடித்துக் கொண்டிருந்தது. இயக்கம் ததும்பிய சாலையில் உருவங்கள் கடந்துகொண்டேயிருந்தன. எஞ்சிய சிலர் இப்போதுதான் கடற்கரைக்குள் வரத் தொடங்கியிருக்கிறார்கள். குதிரைகளும் திரும்பிவிட்ட பொழுதில் வீடு திரும்பும் பெண்களின் நடையில் லேசான மிதப்பும் காற்றின் கதியால் கொண்ட அலுப்பும் படர்கிறது. நடக்கிறார்கள்.

எங்களில் எவரும் பேசத் தொடங்கவில்லை. பேச்சுக்கு முந்திய மௌனம் மட்டுமே மெல்லச் சுருண்டு இதழிதழாகப் படிந்து கொண்டிருந்தது. சிறுமிகளும் பறவைகளும் வெளியேறிய கடற்கரை, தன் குணாம்சத்தையே மாற்றிவிடுவதை மூவரும் உணர்ந்துகொண்டோம். தொலைதூர சர்க்கிள் கடிகார முள் மெல்லிய கறுப்புக் கோடாக நகர்கிறது. நின்றுகொண்டிருந்த வாகனங்கள் கலைந்துவிட்டன. தவறி விடப்பட்ட பூ ஒன்று காற்றில் பறந்து எங்கள் முன் ஆடி ஆடித் ததும்பி மணலில் சரிந்தது. இது உருவாக்கிய வார்த்தையொன்று மூவர் மனத்திலும் சுரந்து வெளிப்படும் முன்பு அடங்கியது. ஒருவரை

யொருவர் பார்த்துக்கொண்டோம். நான் மற்றவற்றிலிருந்து கவனம் கொள்ளாது என்னிடமிருந்த புஸ்தகத்தைப் பிரித்துக்கொண்டேன். நாற்பத்தி மூன்றாம் பக்கத்தில் துறவிக்கு வரும் காதல் கடிதத்தைத் திரும்பவும் வாசிக்கத் தொடங்கினேன். கடல் பற்றிய நினைவு மெல்ல அழியத் தொடங்கி மூவரும் பின் புலமற்ற வெற்றிடப் பரப்பில் இருப்பதாகவே உணர்ந்தோம். வேணுவும் சிவசுவும் எழுந்து கொண்டு சிறிது தூரம் நடந்தே போனார்கள். அவர்கள் போன பின்பு நான் புஸ்தகத்தை மூடிவிட்டு சாலையைப் பார்த்தபடியிருந் தேன். வழக்கத்தைவிட வேகம் குறைவாகச் சென்றன வாகனங்கள். நீண்டு, ஒளி சரியும் ரோட்டில் சிலிர்ப்பு பரவுகிறது. வாகனங்கள் வராத நீண்ட கணமொன்றில் நான் சாலையை விட்டுப் புறமிருந்த வில்லியம் சிலையை நோக்கியிருந்தேன். குதிரையின் கனத்த புஜங்கள் மட்டுமே தெரிகின்றன. அவர்கள் பேசிக்கொண்டு வரத் தொடங்கி விட்டார்கள். தங்களைப் பற்றியேதான் பேச்சு. கடற்கரையில் மூவரும் நடக்கத் தொடங்கினோம். உடைந்த படகுகளின் வெளியில் பேச்சு காற்றில் சட்டென மறைந்துவிடுகிறது. சமயங்களில் அது நீளவும் செய்கிறது. ஊருக்குச் சென்றுவிட்ட மனைவியைப் பற்றிப் பேசிக் கொண்டு வந்த வேணு திடீரெனப் பேச்சை நிறுத்திக்கொண்டான். அவரவர் மனைவி பற்றிய சிந்தனையில் சில நிமிடங்கள் பேசாமல் நடந்து கொண்டிருந்தோம். பெரிய அலையொன்று தோன்றி உயர்ந்து சிதறியது. பாறைகள் இல்லாத கடற்கரையில் அலைச் சப்தம் அதிகமிருப்பதில்லை.

என் மனைவியைப் பற்றி எதையோ நான் நினைத்துக் கொள்ளும் படியாயிற்று. அவளைக் கடற்கரைக்குக் கூட்டி வந்தால் கடல் அலைகளின் தெறிப்பைப் பற்றி எதையாவது சொல்வாள். சமயங்களில் அவளும் எதையும் பேசாது மணலில் கோலம் போட்டபடியே கால்களைக் குவிய வைத்து விரலில் மணலைப் பரப்பியபடியே இருப்பாள். கடற்கரையின் ஈரச் சிப்பிகளை வீட்டின் சமையல்கட்டு வரை சமயங்களில் கொண்டுவருவாள். வேணு சிகரெட் பற்ற வைத்துக்கொண்டான். அவன் மனைவியை ஊருக்கு அனுப்பி விட்டதைப் பற்றி நேற்றிரவே என்னுடன் வந்து பேசிவிட்டான். இரவில் இருவரும் மாடியில் தனித்திருந்தோம். அவன் இரண்டு பாட்டில்கள் ஐஸ் வாட்டர் பிரிட்ஜிலிருந்து எடுத்துக்கொண்டு வந்து மாடியில் உட்கார்ந்துகொண்டான். அவன் மனைவியின் பெயரை அடிக்கடி சொல்வதில் அவனுக்குப் புதிரைப் போலச் சின்ன வசீகரமிருந்தது. நாற்காலியில் சாய்ந்தபடி அவன் சுலபமாகச் சொல்லி முடித்துவிட்டான். என் மனைவியும் கேட்டுக் கொண்டிருந் தாள். நாங்கள் நெடுநேரம் மாடியில் பேசாது உட்கார்ந்திருந்தோம். அவன் தண்ணீர் பாட்டில்களைத் தீர்த்த பின்பு சிகரெட் பற்ற வைத்துக்கொண்டான். என் மனைவி கீழ் இறங்கிப் போய்விட்டாள். நானும் புகைக்கத் தொடங்கினேன். அவனும் நானும் பேச வேண்டிய தில்லை என அவன் அறிந்தே இருந்தான். அவள் திரும்பவும்

மேலேறி வந்து படுக்கையினைப் போட்டாள். மூவரும் மாடியின் விஸ்தாரமான பரப்பில் தனித்தனியாகப் பாயைப் போட்டுப் படுத்தபடி வானத்தைப் பார்த்தபடி இருந்தோம்.

எங்கள் இருவரையும் பார்க்காது என் மனைவி வெளிச்சம் வருமிடம் பார்த்துப் படுத்து எதையோ படித்துக்கொண்டிருந்தாள். யாரும் பேசாத நிமிடம் சட்டென உடைய, வேணு படுக்கையிலிருந்து எழுந்து கீழே நிறுத்தி வைத்திருந்த அவனுடைய ஸ்கூட்டரை எடுத்துக்கொண்டு அவன் வீட்டுக்குப் போய்விட்டான். படுக்கை அப்படியே கிடந்தது. காலித் தண்ணீர் பாட்டில்கள் இருந்தன. என் மனைவி வெகு சாவகாசமாக எழுந்து கீழே இறங்கிப் போய்த் தண்ணீர் எடுத்துக்கொண்டு வந்து வைத்துவிட்டுப் பாயை என் அருகில் போட்டபடியே என் தலையணைக்கு வந்துவிட்டாள். தலையணை அடியிலிருந்த சிகரெட் பாக்கெட்டை எடுத்துப் பற்ற வைத்துக்கொண்டேன். சுழலும் புகையை இருவரும் பார்த்தபடி இருந்தோம். வேணு போய்விட்டான்.

மாடியின் விசாலம் இருவருக்கும் மட்டுமேயான சின்ன வெளி போலச் சுருங்கிவிட்டது. அவள் வேணு இருந்த இடத்தை ஒருமுறை பார்த்துக்கொண்டாள். மிக மெதுவாக அவள் முகத்தைப் பற்றி முத்தமிட்டேன். நான்கு முத்தங்கள். அவள் திடீரென மாடியின் விசாலத்தை அறிந்துகொண்டவள் போல வெறித்தாள். பெரும் வெட்டவெளியொன்று அகன்று திறந்து கிடப்பதை உணர்ந்தவளாகக் கண்களைத் தாழ்த்திக்கொண்டு ஆகாசத்தைப் பார்க்காமலிருக்க முயன்றாள். உதட்டில் படிந்த சிறிய பல் அமுங்க என் வலக்கரத்தை எடுத்துக்கொண்டாள். காற்று மெல்லப் பரவத் தொடங்கியது. இருவரும் எதுவும் பேசாது காற்றின் சிறு சப்தத்தைக் கேட்டபடியிருந் தோம். பின் இருவரும் வெவ்வேறு நட்சத்திரங்களைப் பார்க்கத் திரும்பி விட்டோம்.

கடற்கரையை விட்டு வெளியேறி இருந்தோம். அவர்கள் பேசிக் கொண்டே வந்திருக்கக்கூடும்.

“எதை யோசித்துக்கொண்டு வருகிறாய்?” வாகனங்கள் வராத மேற்கு சாலையினைக் கடந்து கீழ் இறங்கும் தெருவினுள் நடந்து கொண்டிருந்தோம். “நேற்றிரவைப் பற்றி” என்றேன். வேணு சிரித்துக் கொண்டான். நானும் வேணுவும் பேசிக்கொண்டு வரும்போது சிவசு தெருவினை வேடிக்கை பார்த்தபடியே வந்தான். அவன் ரோட்டில் போகும் ஆட்களைப் பற்றியே கவனம் கொள்ளக் கூடியவன். எங்களை விட்டு முன்னால் நடந்து போய்க்கொண்டிருந்த நடுத்தர வயதுப் பெண் ஒருத்திக்குச் சமமாகக் கூடவே சிவசுவும் நடந்து கொண்டிருந்தான். கடற்கரைக்குப் போய்த் திரும்பும் ஜோடி போல அவர்கள் முன்னால் போய்க்கொண்டிருந்தார்கள். சிவசும் தன்னை அந்தப் பாத்திரத்தில் பொருத்திக்கொண்டான். அந்தப் பெண் அடிக்கடி அவனைப் பார்த்துக்கொண்டாள் எதிரே வரும்

சைக்கிள்காரன்கூட அவர்களைப் பிரிக்காது விலகியே வருகிறான். தெருவின் திருப்பத்தில் அவள் பிரிந்து போகும்போது சிவசு அவளை விட்டுப் பிரிந்துகொண்டான். துக்கம் சிறு இலையாக உதிர்ந்து கிடந்தது.

வேணு தன் மனைவியைப் பற்றித் திரும்பவும் பேசத் தொடங்கினான். அவளுக்கு இரவில் தூக்கம் வருவதில்லை. எதையாவது படித்துக்கொண்டிருக்கிறாள் என்றான். எங்களைக் கடந்து சென்று கொண்டிருந்த பலூன் வியாபாரியைப் பார்த்ததும் நாங்கள் பேச்சை நிறுத்திக்கொண்டோம். சிவசு எங்களுடன் சேர்ந்துகொண்டான். மதார் சாகிப் தெரு வழியாக நடக்கத் தொடங்கினோம்.

குறுகலான வீடுகளும் வெளியே உறங்கும் மனிதர்களும் வரிசையாக நிறுத்தப்பட்ட சைக்கிள்களும் இரவுக் கடைகளும் தெருவிளக்கு ஒளியும் தெருவினை விநோதமாக்கிக் கொண்டிருந்தன. மாட்டிறைச்சியின் மணம் தெருவில் நிரம்பியிருந்தது. முக்காடிட்ட பெண்கள் கடக்கிறார்கள். வேணு, நான், சிவசு மூவரும் தனியாக நடக்கிறோம். எவரும் எவரையும் தெரியாத மூவர் போலப் பிரிந்து நடந்துகொண்டிருந்தோம். ரோட்டோரக் கடையின் பழைய மாத இதழ்களைக் குனிந்து வேணு புரட்டிக்கொண்டிருந்தான். கறுப்பு வெள்ளையில் நடிகை புகைப்படங்கள். சிவசு தெருவைக் கடந்துவிட்டான். நான் அத்தர் கடையின் முன்பு நின்றுகொண்டேன். மரணத்தை நினைவுபடுத்தும் சுகந்தம் அங்கே கசிந்துகொண்டிருந்தது. தனியாக இளம் பெண் ஒருத்தி பூமாலையை அடுக்கிக் கொண்டிருந்தாள். வேணு என்னுடன் சேர்ந்துகொண்டான். வாசல் படியில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கும் பெண்கள் எங்களைப் பார்த்துக்கொண்டும் பேசியபடியுமிருந்தார்கள்.

நீண்ட மைதானம் போலிருந்த மன்னர் காலக் குதிரை லாயம் நுழைவாசல் பக்கம் வந்துவிட்டோம். வெளியே பூட்டியிருந்தார்கள். சிவசு வேணுவின் அருகாமைக்கு வந்துவிட்டான். மூவருமே பேசிக்கொண்டோம். மிகப் பொதுவான தெருவைப் பற்றிய பேச்சாகக்கூட அது அமைந்தது. அதை அப்பாவைப் பற்றியதாக சிவசு மாற்றிவிட்டான். அப்பாவைப் பற்றிப் பேசத் தொடங்கினோம். சிவசு அப்பாவைப் பற்றிப் பேசுவதைக் கடந்த சில வருடமாக இயல்பாகக் கொண்டிருக்கிறான். அப்பாவைப் பற்றிப் பேசுவதன் மூலம் மட்டுமே தன்னைப் பற்றிப் பேச முடியுமென சிவசு நினைக்கிறான். அதையும் பேசியபடியே நாங்கள் நடந்து காலனி முதல் வளைவுக்குள் வந்துவிட்டோம். ஒன்றிரண்டு சைக்கிள்காரர்கள் நின்று பேசிக்கொண்டிருந்தார்கள். சிறிய பாலம் போன்ற மேடையின் வலப்பக்கத்தில் நாலைந்து ஸ்கூல் பையன்களின் தோற்றம் கொண்டவர்கள் இருட்டில் உட்கார்ந்திருந்தார்கள். இடப் பக்கம் நாங்கள் உட்கார்ந்துகொண்டோம். அந்தப் பையன்கள் கால்களுக்கிடையிலிருந்த பீர் பாட்டில்களை உடைத்துக் குடிக்கத் தொடங்கியிருந்தார்கள்.

மெல்லிய போதையின் ஸ்பரிசம் முன்பே குரல் தாழ்ந்து ரகசியம் போலச் சிரித்துக்கொள்ளத் தொடங்கினார்கள். வேணு அவர்களையே பார்த்தபடி இருந்தான். பீர் பாட்டில்கள் மாறிக்கொண்டே இருந்தன. அந்தப் பையன்கள் மீது வேணுவுக்குக் கோபமும் அர்த்தமற்ற வெறுப்பும் நிரம்பியது. அவன் திட்டியபடியே நடக்கத் தொடங்கி விட்டான்.

நாங்களும் கிளம்பிய பின்பு அந்தப் பையன்கள் ரோட்டில் பீர் பாட்டில்களை உருட்டி விளையாடிக்கொண்டிருந்தனர். முதல் வளைவின் முனை சரிந்து காலனிகளின் உள்புறமாக மடிந்தது. எனக்குப் பசிக்கத் தொடங்கியது. இரும்புக் கிராதியிட்ட வீடுகளைக் கடந்து நடந்துகொண்டிருந்தோம். வேணு தன் மனைவியை எதற்கோ திட்டியபடி தனியே நடந்தான். பதிமூணாவது தெரு முனையில் பெட்ரோமாக்ஸ் வைத்த கடை தெரிந்தது. வேணு சிகரெட் பாக்கெட்டை நசுக்கி எறிந்தான். கடையில் பச்சை வாழைப் பழங்கள் ஒளியில் வெறித்தன. மூவருமே இதுவரை அறியாத புதிய பொருளைப் பார்ப்பது போலப் பல நிமிடங்கள் அந்தப் பழங்களைப் பார்த்தபடி இருந்தோம். அதன் வடிவம், நிறம் எல்லாமே அசாதாரண நிலையில் தோன்றின. சாப்பிட்டு முடித்த வாழைப் பழத் தோலைக் கவனமாகக் கூடையில் வாங்கிக்கொண்டான் கடைக்காரன். சிகரெட் பாக்கெட் வாங்கிக்கொண்டோம். பிளாஸ்டிக் கேனிலிருந்து தண்ணீரை அவன் சரித்து எங்களுக்குக் குடிக்கக் கொடுத்தான். வேணு கடையில் தொங்கிய மாலைப் பேப்பரைப் பிரித்துப் படித்தபடியே சிகரெட் பற்றவைத்தான். டென்னிஸ் விளையாட்டில் தோற்றுப்போன சீன அமெரிக்கனின் முகம் தெரிந்தது. துப்பாக்கியால் டீச்சரைச் சுட்டு வீழ்த்திய சிறுவனைப் பற்றிய செய்திப் படங்கள் பக்கத்தை நிறைத்தன.

அக்காலனியின் கடைசித் தெருவுக்கும் வந்துவிட்டோம். இனிப் பிரிவது தனிச் சாலைதான். நகரம் எங்கள் பின்புறத்தில் சரிந்து கிடந்தது. வேணு தன் கற்பனையிலிருந்த துப்பாக்கியை இயக்கி உடன் வந்த சிவசுவைச் சுடத் தொடங்கினான். இருவருக்குமான விளையாட்டு தொடங்கியது. தப்பி ஓடும் உளவாளியைப் போல பாவனை கொண்டபடி சிவசு ஓடத் தொடங்கினான். பொய்த் துபபாக்கியின் வேட்டை தொடர இருவரும் ஓடுவதும் சுடுவதுமாக ஆள் அற்ற தெருவில் போய்க்கொண்டிருந்தார்கள். நான் மட்டுமே திரும்பிப் பார்க்கத் தொடங்கினேன்.

நகரம் முற்றாக மாறிவிட்டது. எந்தப் புள்ளியில் என் வீடு இருக்கிறது என அடையாளம் கொள்ள முடியவில்லை. வரிசை வரிசையாகச் சுவர்கள் மட்டுமே தெரிகின்றன. நகரம் வீழ்ந்த பாதைகளின் தொகுப்பாக இருந்தது. மாபெரும் கடலின் சுவடேயில்லை. இப்போது நகரில் கடல் இல்லை. மணல் வெளி பரந்த கடற்கரையுமில்லை. குறுக்கிட்டுப் பாவிய கட்டட விளிம்புகள் மட்டுமே நகரமாகின்றன. நகரின் தென் மூலையில் வரும் பயணி எவனுக்கும்

கடற்கரை நகரில் இல்லைதான். ரயில் ஒன்று வேகம் குறையாது நகரின் இடைவெளிப் பாதைகள் வழியாகப் போய்க் கொண்டிருந்தது. ஒரு நகரத்தை யாராலும் பார்க்க முடியாது என்பதாக உணர்ந்தேன். எண்ணற்ற கிளை வழிகளின் தொகுப்பின் மையமே நகரம் போலும். வீட்டிலிருந்த என் மனைவி, ஊரிலில்லாத வேணுவின் மனைவி எதுவும் இந்தக் கணத்தில் இல்லை.

நகரைப் பார்த்தபடி பின் திரும்பியபடியே நடக்கத் தொடங்கினேன். என் புலத்தில் துப்பாக்கியால் சுட்டு விளையாடும் இரண்டு சிறுவர்கள் வரக் கூடும். என் அடுத்த அடியின் பின்புறத்தில் நகரம் விலகிக் கொள்கிறது. மிக மெதுவாகவே நடந்தேன். என்னைக் கடந்து போகின்றன பனை மரங்கள். பொருள்களை விட்டுப் பின் போய்க் கொண்டிருந்தேன். வேணுவும் சிவசுவும் ரோட்டில் படுத்துக் கிடந்தார்கள். இருவருமே சுடப்பட்டிருக்கக் கூடும். என்னைப் பார்த்தபடியே படுத்துக் கிடந்தனர். கடக்கும் என் கைகளைப் பற்றி இழுத்துத் தரையில் கிடத்தினர். மூவருமே ரோட்டில் படுத்துக் கொண்டோம். நெடுநேரம் நாங்கள் பேசிக் கொண்டிருந்தோம். பேச்சு சுழன்று எங்களின் வராத கனவினைப் பற்றியதாகச் சுருண்டு கொண்டது.

விடியும் தருவாயில் நாங்கள் எழுந்துகொண்டோம். இது எந்த ஊரின் வழி எனத் தெரியவில்லை. பாதையை விட்டு விலகி பரந்த பரப்பில் நடந்தோம். வயல்கள் நிரம்பிய வெளி தொடர்ந்தது. இன்னமும் சில நட்சத்திரங்கள் இருந்தன. மேடேறிக் கீழ் இறங்கியதும் ஏரி தெரிந்தது. சலனமே இல்லாத ஏரி. ஏரித் தண்ணீரை விலக்கி நிலா போய்க்கொண்டிருந்தது. எங்கள் ஆடைகளைக் களைந்து விட்டுத் தண்ணீரில் ஓடி வீழ்ந்தோம். இரவு கொஞ்சம் மிஞ்சியிருந்தது. ஏரியில் சிறு அலைகளை உருவாக்கினோம். ஏரியின் நீர் தேவதைகள் விழித்துக்கொண்டு வரக்கூடும் என வேணு சப்தமிட்டான். ஒரு நீர் தேவதையைக் காண எங்களுக்கு ஆசை பெருகியது. நீரில் மிதந்தோம். நீரும் ஆகாசமும் தவிர்த்து எதுவும் இப்போதில்லை. சிவசு ஏரியின் வலக் கரையைக் காட்டினான். ஆட்டுக்குட்டியொன்று மேய்ந்துகொண்டிருந்தது. புல்லில் பதுங்கிய இரவை மேய்ந்த ஆடு தன் கொம்புகளால் பகலைக் கொண்டு வந்து கொண்டிருந்தது. நாங்கள் நீரிலிருந்தபடியே ஆட்டுக்குட்டியைப் பார்த்துக் கொண்டிருந்தோம்.

முதல் பஸ் கடந்த பின்பு நாங்கள் அவசரமாகக் கிளம்பி நகரை நோக்கி நடக்கத் தொடங்கினோம். அலுவலக ஞாபகம் எங்களைப் பற்றிக்கொண்டது. முறிப்பள்ளம் வழியாக வரும் போது கூரை வீடுகள் தென்படத் தொடங்கின. கூரை வீட்டுத் தெருவின் உள்ளே கடந்து போகும்போது இரண்டு பெண்களின் கனத்த குரலும் அழுகையொலியும் கேட்கத் தொடங்கின. "அய்யா, எங்களை விட்டுட்டு இப்பிடிப் போயிறப் பாத்தீகளே அய்யா! உங்களை விட்டா எங்களுக்கு யாருய்யா இருக்கா?" அந்தப் பெண்களின் அழுகையொலி நீண்டு

வேதனையைப் பெருக்கியது.

வாசலில் கிடந்த உரலில் நடுத்தர வயது ஆள் ஒருவன் தலையைக் கவிழ்த்து உட்கார்ந்து கொண்டிருந்தான். அவன் கால்களைப் பற்றியபடி இரண்டு வயசுப் பெண்கள் அழுது கொண்டிருந்தனர். நாங்கள் பார்த்தபடியே நின்றோம். வீட்டின் மஞ்சள் ஒளியில் உத்திரத்திலிருந்து வேட்டி ஒன்று சுருக்கிடப்பட்டுக் காற்றில் ஆடியபடியே தொங்கிக் கொண்டிருந்தது. உரலில் உட்கார்ந்திருந்தவன் விசும்பும் பெண்களை நிமிர்ந்து பார்க்கவில்லை. அந்தப் பெண்களிருவரும் உத்திரத்தைப் பார்ப்பதும் குரலெடுத்து அழுவதுமாக இருந்தார்கள். உரலிலிருந்து அவன் எழும்போது சின்னவள் ஓடிவந்து காலைக் கட்டிக்கொண்டு எங்களை விட்டுட்டுப் போகாதீங்கய்யா என சப்தமிட்டாள்.

படலுக்கு வெளியே நின்ற எங்களைப் பார்த்ததும் அவன் அருகில் வந்து தீப்பெட்டி கேட்டான். பீடியைப் பற்ற வைத்துக்கொண்டு தெருவில் அவன் போன பின்பு நிசப்தம் திரும்பியது. ஓடுகள் வேய்ந்த ரயில்வே ஸ்டேஷனுக்குள் நாங்கள் போன போது காகங்கள் கரைந்துகொண்டிருந்தன. அசதியும் தூக்கமின்மையும் அழுத்த, ரயில் பாதையைப் பார்த்தபடி இருந்தோம். திட்டு திட்டாகப் பவுடர் படிந்த முகத்துடன் கையில் கூடையுடன் அழுது முடித்திருந்த சின்னவள் இரும்புக் கிராதி மீது சாய்ந்து நின்றிருந்தாள். நாங்கள் நால்வரும் நகரத்துக்குத் திரும்பக் காத்திருந்தோம்.

பாதம்

என்றைக்கும் போல் சென்ட்ரல் தியேட்டர் வாசலில் உட்கார்ந்திருந்தான் செருப்பு தைக்கும் மாரி. மழைக் காலத்தின் ஈரம் ததும்பிய சாலைகள் வெறிச்சோடி யிருந்தன. காலையிலே தொடங்கிய மழை இடை விடாது தனது அரூப விரல்களால் நகரமெங்கும் எதையோ தேடுவதுபோல் படர்ந்துகொண்டிருந்தது. நீர்த்துளி தெறிக்கும் தலைகளுடன் ஓடும் மனிதர் களின் வேகம் கண்டபடி பசியுடன் எவரேனும் செருப்பு தைக்க வரக்கூடுமோ எனக் காத்திருந்தான். அவன் அமர்ந்திருந்த மரமும் தலையைக் குனிந்தபடி மழையை உள்வாங்கிக்கொண்டிருந்தது. மழைக்குள் விரையும் மனிதர்கள் நீர்வெளி விலக்கிப் போகிறார் கள். ஒரு டீ குடித்தால்கூடப் பசியடங்கிவிடும். அதற்கும் ஒரு ரூபாய் வேண்டியிருக்கிறதே என்ற யோசனை தோன்றியது. ஈரத்தினை உறிஞ்சிய பழம் செருப்புகள் பிரேதமாக ஊதி, கண் பெருத்து தன் முன் கிடப்பதையும் அதன் வாசனையும் கண்டான்.

வலுத்துப் பெய்யத் தொடங்கியது மழை. தாடியில் முளைத்த நீர்த்துளிகளைச் சொறிந்துவிட்டுக்கொண்டு காறித் துப்பினான். காற்றும் மழையோடு சேர்ந்து கொண்டது. அந்த நீண்ட தெருவில் எவருமில்லை. அவனும் ஒரு மரமும் எட்டுப் பழம் செருப்புகளும் தவிர. சினிமா தியேட்டரின் குறுகிய வலப்புறச் சந்தில் இருந்து குடையில்லாமல் நனைந்தபடி வெளிப் பட்ட சிறுமியொருத்தி ஒரு மீனைப் போலச் சுழன்று அவனருகில் வந்து தனது இடக்கையில் வைத்திருந்த செருப்பு ஒன்றைக் குனிந்து தரையிலிட்டு, தைத்து வைக்கும்படி சொல்லிவிட்டு அவன் நிமிர்ந்து

அவளைப் பார்க்கும் முன்பு தெருவில் ஓடி அடுத்த வளைவின் சுவர்களைக் கடந்து சென்றாள். அந்தச் செருப்பு இளம் சிவப்பு நிறத்தில் இருந்தது. வழக்கமான சிறுமிகளின் செருப்பைப் போல அல்லாது வெல்வெட் தைத்துப் பூ வேலை கொண்ட செருப்பாக இருந்தது. அந்தச் செருப்பில் சிறுமியின் பாத வாசனை படிந்திருந்தது. அது ஏதோ ஒரு பெயரிடப்படாத நறுமணம். எங்கே பிரிந்திருக்கிறது எனச் செருப்பை வலக்கையிலிட்டுத் தூக்கிப் பார்த்தான். விரல்களின் முனையில் சிறிய இடைவெளி. மெழுகிட்ட நூலால் அதைத் தைத்துத் துடைத்துவிட்டு, தனது மடியிலே வைத்துக்கொண்டு காத்திருந்தான். இப்போதே குடிக்கப் போகும் டீயின் ருசி நாக்கில் துளிர் விட்டது. காற்றும் மழையும் தீவிரமாகிச் சுழன்றன. பின் மதியம் அது ஓய்ந்த போது ஒளித் திவலைகள் ஆங்காங்கே தெரியத் தொடங்கின.

அந்தச் சிறுமிக்காகக் காத்துக்கொண்டிருந்தான் மாரி. நிச்சயம் இரண்டு ரூபாய் கிடைக்கும். மாலை வரை அந்தச் சிறுமி வரவில்லை. ஆனால் மீண்டும் மழை வந்துவிட்டது. பின்பு இரவு இரண்டாம் ஆட்டம் சினிமா வரை மரத்தடியில் காத்துக்கொண்டிருந்தான். அவள் வரவில்லை. மழைக்குப் பயந்து வீட்டிலே இருக்கக் கூடும் என நினைத்துக்கொண்டு செருப்பைத் தன்னுடன் எடுத்துக்கொண்டு வீடு போய்ச் சேர்ந்தான். அடுத்த நாள் காலை மழையில்லை. நல்ல வெயில். மரம் சிலிர்த்துக்கொண்டது. சுவர்கள் வெயிலுக்கு முதுகு காட்டி நின்றன. இளம் சிவப்பான அந்தச் செருப்பை எடுத்து மீண்டும் ஒரு முறை நன்றாகத் துடைத்து தனது நீலநிற விரிப்பில் வைத்துவிட்டு மற்ற வேலைகளில் ஈடுபடத் தொடங்கினான். அன்றும் அந்தச் சிறுமி வரவேயில்லை. மறந்துவிட்டாளா? இல்லை யாரிடம் கொடுத்தோம் எனத் தெரியாது அலைகிறாளா, தெரிய வில்லையே என்றபடி இரவில் அதை வீட்டுக்கு எடுத்துப் போனான்.

மறுநாள், மூன்றாம் நாள் என நாள்கள் கடந்தபோதும் அவள் வரவேயில்லை. ஆனால் அவன் அந்தச் செருப்பை தினமும் கொண்டு வந்து காத்துக் கிடந்தான். ஓர் இரவில் மாரியின் மனைவி அந்தச் செருப்பைக் கண்டாள். அதன் வசீகரம் தொற்றிக்கொள்ள கையில் எடுத்துப் பார்த்தாள். சிறுமியின் செருப்பு போலிருந்தது. அதைப் போட்டுப் பார்க்க ஆசையாக இருந்தது. தனது வலது காலில் அந்தச் செருப்பை நுழைத்துப் பார்த்தாள். அது அவளுக்குச் சரியாக இருந்தது. சிறுமியின் செருப்பு அவளுக்குப் பொருந்துகிறதே என்றவள் மற்றொரு செருப்பைத் தேடி, பையைக் கொட்டினாள். மாரி உள்ளே கோபமாக சப்தமறிந்து வந்தபோது மனைவியின் வலது காலில் இருந்த சிவப்புச் செருப்பைக் கண்டான். ஆத்திரத்துடன் திட்டி, அவள் சொல்வதைக் கேட்காமல் கழட்டச் சொல்லிப் பிய்ந்துவிட்டதா எனப் பார்க்க கையில் எடுத்து உயர்த்தினான், கிழியவில்லை சிறுமியின் செருப்பு இவளுக்குத் தைத்தது போலச் சரியாக இருக்கிறதே என்ற வியப்புடன் அது ஒற்றைச் செருப்பு எனப் பிடுங்கி பையில் போட்டுக் கட்டமுயன்றான். அவள் முணுமுணுத்தபடி பின் வாசலுக்

குப் போய்விட்டாள். செருப்பு அவனுக்குள்ளும் ஆசையைத் தூண்டியது, போட்டுப் பார்க்கலாமென. தன் வலது காலைச் சிறிய செருப்பில் நுழைத்தபோது அது தனக்கும் சரியாகப் பொருந்துவதைக் கண்டான். விசித்திரமாக இருந்தது. இரண்டு வேறுபட்ட அளவு கால்களுக்கு எப்படி ஒரே செருப்பு பொருந்துகிறது. அவனால் யோசிக்க முடியவில்லை. எப்படியோ உரியவரிடம் அதை ஒப்புவித்து விட வேண்டியது தனது வேலை என்றபடி பையில் போட்டுக்கொண்டான்.

மறுநாள் பகலில் உடன் தொழில் செய்யும் நபரிடம் இந்தச் செருப்பின் விசித்திரம் பற்றிச் சொல்ல அவன் தன் வலது காலைப் பொருத்திப் பார்த்தான். அவனுக்கும் சரியாக இருந்தது. இச்செய்தி நகரில் பரவியது. நீலநிறத் துணியில் வைக்கப்பட்ட அந்தச் செருப்பைப் போட்டுப் பார்க்க ஆசை கொண்ட பலர் தினமும் வந்து அணிந்து தனக்கும் சரியாக உள்ளதை அதிசயித்துப் போயினர். அந்தச் செருப்பு ஒரு வயதுக் குழந்தை முதல் வயசாளிவரை எல்லோருக்கும் பொருந்துவதாக இருந்தது. அதைக் காலில் அணிந்தவுடன் மேகத் துணுக்குகள் காலடியில் பரவுவது போலவும், பனியின் மிருது படர்வது போலவும், உதடுகளைவிட மிருதுவாகத் தனது பாதத்தினை முத்தமிடுவதாகவும் பலர் கூறினர். அவன் வராதுபோன செருப்புக்குரிய சிறுமியை நினைத்துக்கொண்டான். கோடைக் காலம் பிறந்திருந்தது. எண்ணற்ற சிறுமிகளும் பெண்களும் ஆண்களும் அந்த விந்தைச் செருப்பை அணிந்து பார்த்துப் போயினர். அதை அணிந்து பார்க்க அவர்களே பணம் தரவும் தொடங்கினர். தினசரியாகப் பணம் பெருகிக்கொண்டே போனது.

அவன் மற்ற வேலைகள் எல்லாவற்றையும் விட்டுவிட்டான். தினசரி அந்த ஒற்றைச் செருப்பைச் சுற்றி எடுத்துக்கொண்டு வந்து அதே இடத்தில் காத்துக் கிடப்பான். வருடங்கள் புரண்டன. அவன் பசு இரண்டு வாங்கினான். வீடு கட்டிக்கொண்டான். வாழ்வின் நிலை உயர்ந்துகொண்டே போனது. இப்போதும் அந்தச் சிறுமி வரக் கூடும் என்று பலர் முகத்தின் ஊடேயும் அவளைத் தேடிக் கொண்டிருந்தான். அவள் இப்போது பருவப் பெண்ணாகியிருக்கக் கூடும் என அவனாகச் சொல்லிக் கொள்வான். அவன் வருவதற்கு முன்பாகவே காலையில் பலர் மரத்தடியில் அவனுக்காகக் காத்து நிற்பார்கள். அணிந்து பார்ப்பார்கள். முகத்தில் சந்தோஷம் பீறிடும். கலைந்து போவார்கள். இப்படியாக மாரியின் முப்பது வருஷம் கடந்தது. அவன் வயதாகி இருந்தான். அந்த வருடம் மழைக்காலம் உரத்துப் பெய்தது. ஓர் இரவில் செருப்போடு வீடு திரும்பும்போது அதைத் திருட முனைந்த இருவர் தடியால் தாக்க பலமிழந்து கத்தி விழுந்தான். யாரோ அவனைக் காப்பாற்றினார்கள். செருப்பு திருடு போகவில்லை. ஆனால் தலையில் பட்ட அடி அவனை பலவீனமடையச் செய்தது. வீட்டை விட்டு வெளியேறி நடக்க முடியாதவனாகிப் போனான். அந்தச் சிறுமிக்காக அவன் மனம்

காத்துக்கொண்டே இருந்தது. தனது மரணத்தின் முன்பு ஒரு தரம் அவளைச் சந்திக்க முடியாதோ என்ற ஏக்கம் பற்றிக்கொண்டது. தான் அவளால் உயர்வடைந்ததற்கான கடனைச் சுமந்தபடி மரிக்க வேண்டும் என்பது வேதனை தருவதாக இருந்தது. பார்வையாளர்கள் அவன் வீடு தேடி வந்து அணிந்து பார்த்துப் போயினர்.

ஒரு மழை இரவில் பார்வையாளர் யாவரும் வந்து போய் முடிந்த பின்பு கதவை மூடி மாரி உள்ளே திரும்பும்போது யாரோ கதவைச் தட்டும் சப்தம் கேட்டது. கதவைத் திறந்தபடி காலையில் வாருங்கள் எனச் சொன்னான். மத்திய வயதில் ஒரு பெண் நனைந்தபடி நின்றிருந்தாள். அவள் முகம் சலனமற்று இருந்தது. அவள் தணிவான குரலில் சொன்னாள், "வெகு தாமதமாகி விட்டது... எனது செருப்பைத் தைத்துவிட்டாயா இல்லையா?" அவளை அடையாளம் கண்டு விட்டான் மாரி. அதே சிறுமி. அந்தப் பெண் தன் கையிலிருந்த கூடையிலிருந்து சிவப்புநிற இடதுகால் செருப்பை எடுத்து அவன் முன்னே காட்டிச் சொன்னாள், "இதன் வலது செருப்பு தைக்கக் கொடுத்தது நினைவிருக்கிறதா?" அவன் தலையாட்டியபடி தன்னிட மிருந்த செருப்பை எடுத்து வந்து துடைத்து அவளிடம் காட்டினான். சிரித்துக்கொண்டபடி பார்த்தாள். அவள் கைகளில் தந்தபடி அதன் விந்தையை எடுத்துச் சொன்னான். "இந்தச் செருப்பு உலகின் எல்லாப் பாதங்களுக்கும் பொருந்துகிறது". அவள் ஆச்சரியமின்றி தலையாட்டி னாள். தன்னிடமிருந்த நாணயம் எதையோ அவனிடம் செருப்பு தைத்த கூலியாகக் கொடுத்துவிட்டுக் கூடையில் அந்தச் செருப்பைப் போட்டாள். இந்தச் சொத்து, வாழ்வு யாவும் அவள் தந்ததுதான். அவள் யார் என அறிய ஆவலாகிக் கேட்டான். பதிலற்றுச் சிரித்தபடி மீண்டும் மழையில் வெளியேறிச் சென்றுவிட்டாள். தெருவின் விளக்குக் கம்பம் அருகே வந்து நின்ற அவள் கூடையில் இருந்த இரண்டு செருப்புகளையும் எடுத்துத் தரையிலிட்டுக் காலில் அணிய முயன்றாள். அவள் கொண்டு வந்த இடது செருப்பு சரியாகப் பொருந்தியது. தைத்து வாங்கிய வலதுபாதச் செருப்பை அணிந்தபோது அது பொருந்தவில்லை. சிறியதாக இருந்தது.

மழை சார்ந்த வீடு

சாம்பல் காளானைப் போலாகிவிட்டது உடல். எவரெவர் கரங்களோ என்னைத் தொட்டுப் புரட்டுகின்றன. விரல்களின் நகர்வில் பரும இயல்பு அழிந்த உடல் உணர்வு கொள்கிறது. கண்களை மூடியபடியே படுத்திருக்கிறேன். நடமாட்ட சப்தமும் பேச்சுக் குரல்களும் மட்டுமே கேட்டுக்கொண்டிருக் கின்றன. எந்தக் காட்சியையும் பார்க்க முடியவில்லை. ஆயினும் கண்களின் உள்பரப்பினுள் எப்போதும் காலை வெயிலைப் போல ஒரு வெளிச்சம் இருந்து கொண்டே இருக்கின்றது. மீனின் சுவாசக் குமிழ் போல உடலினின்று வெக்கை வெளியாகிக் கொண் டிருக்கிறது. நெற்றியில் வைக்கப்படும் ஐஸ் கரைந்து முகமெங்கும் வழிகிறது. பனியின் துல்லிய நீர் படர்ந்து முகமெங்கும் சிலிர்ப்பு ஓடுகின்றது. வழியும் ஈரத் தினைத் துடைக்கவும் மறுக்கின்றது விரல்.

எதையும் சரிவர உணர இயலவில்லை. வெளியில் மழை பெய்துகொண்டே இருந்தது. மழைச் சப்தம் இரவும் பகலும் தொடர்ந்து எதிர்பாராத காலங் களுக்குள் என்னை இழுத்துச் செல்கின்றன. பாலை மணலில் மழை பெய்து ஓடுவதாகக் கனவு தொடர்ந்து கொண்டிருக்கின்றது. கிசுகிசுத்த குரலில் வயசாளி களின் அபூர்வ முணுமுணுப்பை ஞாபகப்படுத்தி சுவரில் பெய்கிறது மழை. நீரின் அபூர்வ ரகசியம் வீடெங்கும் நிறைகிறது. நீர்த் தடங்களுடன் வீடெங்கும் பாதச் சுவடுகள். அம்மாவின் குரல். தங்கைகளின் வெளிறிய விரல்கள். என் உடல் மரக் கட்டிலின் உள் ஒடுங்கிப் படுத்திருக்கின்றது. வெக்கையும் குளிர்ச்சியும் ஒரே நேரத்தில் என்மேல் படர்கின்றன.

கடிகாரம் நின்ற பின்பும் சுருள் வளைவில் துடிப்பு ஒன்று இயங்கிக் கொண்டே இருக்கின்றது. பனிக்கட்டியை வைக்கும் கை விரல்கள் மாறிக்கொண்டே இருக்கின்றன. என் உடலின் புறத்தே எப்போதும் யாருடைய உருவோ என்னைப் பார்த்தபடி அமர்ந்திருக்கின்றது.

அம்மாவின் மெல்லிய விரல்கள் என் கண் இமைகளின் மீது படருகின்றன. நகர்ந்து நகர்ந்து விழி, அம்மாவின் விரல்களுடன் தன் துயரத்தைச் சொல்கின்றது. விழியின் அசைவை விரல்களால் உணர்ந்த அம்மா தனக்குள்ளாகவே கரைகிறாள். மழையின் ஊடே ஒடுங்கி நிற்கின்றன காகங்கள். மழையின் தீவிரம் இலைகளைப் பற்றிக்கொள்ள மரம் இலைகளை உதிர்ந்தபடியே மழை கொள்கிறது. கல்மழை பெய்து பனிக்கட்டிகளைப் பொறுக்க ஓடுகிறார்கள் சிறுவர்கள். நான் ஓடிக்கொண்டிருக்கிறேன். என் முதுகில், உடலில் பட்டுத் தெறிக்கும் பனி மீறி அழைக்கிறது அம்மாவின் குரல். தெருவில் சப்தம் பெருகுகின்றது. சாக்குகளை முக்காடிட்ட ஆட்கள் மழையின் ஊடே மறைகிறார்கள். அம்மா வீடெங்கும் புகையிடுகிறாள். அறைகளை நிறைக்கின்றது புகை வாடை. மழை நிற்கவில்லை.

புரண்டு படுக்க வேண்டும் போலிருக்கின்றது. தலையைச் சரிப் படுத்தி வைக்கிறாள் அம்மா. கண்களைத் திறந்து அம்மாவைப் பார்க்க வேண்டுமென்ற ஏக்கம் அதிகமாகிக் கொண்டே இருக்கின்றது. வீட்டின் உள்புறமெங்கும் ஈரம் ததும்பிக்கொண்டே வருகின்றது. என்னை விட்டு விலகி அறைக்குள் போய்விட்ட சப்தம். நடக்கும் சப்தம். நீர் விலகிக் கேட்கும் குரல்.

புது வருடத்தின் மறுநாளில் ஜுரவேகம் அதிகமாக, அறைக்குத் திரும்பிக்கொண்டிருந்தேன். அறைக் கதவுகள் என் உயரத்தினின்று திடீரென அதிவேகமாக வளர்ந்து நின்றது போலாகிவிட்டது. நண்பர்களற்ற தனியறையின் சுவர்களில் காரைகள் உதிர்ந்தபடி இருந்தன. எல்லா வழிகளிலும் சிடுக்குகளான நகரம் அலைக்கழித்துக் கொண்டிருந்தது. உஷ்ணம் உடலெங்கும் வழிய என்னைத் தேடி எவரேனும் வர மாட்டார்களா எனப் பார்த்தபடி அறையில் கிடந்தேன். நீண்ட பகலது. கடல் வெக்கையை மீறி அன்று மழை வந்தது. வாசல் கதவை அறைந்து ஜன்னலில் வந்து நின்றது மழை. யார் வருவார்கள்? தனித்தனி நபர்களாக வாழும் பெருநகரில் எவர் எவரைக் காண வருவார்கள். அறையில் வெப்பத்தின் கோடுகள் குறுக்கும் நெடுக்குமாக நிறைகின்றன. புத்தகங்களின் பழுத்த காகிதங்கள் உதிர்ந்து ஒடிகின்றன. நிறம் போன ஃபேனின் சுற்றலில் என் முகம் சுழன்று சுழன்று திரும்புகிறது. அறையின் தனிமையை வெட்டி வெட்டி இறைத்தபடியே சுழன்றது காற்றாடி. ஊரை நோக்கிப் போகத் தூண்டுவதாக அறையின் எல்லாப் பொருள்களும் மாறிப் போயின. மழையோடு தெருவுக்கு வந்தேன். கைகள் நடுங்குகின்றன. கவிழ்ந்த பல முகங்கள் அசைவற்று உறைந்து போயிருக்கின்றன. நிலக்காட்சிகளில் மாறாது பெய்கிறது மழை. நடுக்கம் உடலில்

தீவிரமாக என் வசமிருந்து பிரிந்து உடல் தன் வசத்தில் இயங்கத் தொடங்க, பயம் அதிகமாகிக்கொண்டிருந்தது. நினைவு மங்கிவிடுமோ? சிவப்புப் பாலமெங்கும் பூத்திருக்கின்றன மஞ்சள் பூக்கள். எல்லாமும் கோடுகளாகிப் புள்ளிபுள்ளியாக நிற வடிவம் கொள்கின்றது. ஒழுங்கற்ற ஆயிரக்கணக்கான கோடுகள்தான் பொருள்களா? மாலையின் வெளுத்த நீல நிறம் பரவ வீட்டின் முகப்பினைப் போய்ச் சேர்ந்திருந் தேன். எல்லாக் கதவுகளும் திறந்திருக்கின்றன. உள் அறையினை நீங்கி வெளித் தெரிகிறாள் அம்மா. வெளுத்த இலை நரம்புகளை ஞாபகமூட்டுகின்றன விரல்கள்.

உறங்கிக்கொண்டிருக்கிறேன் எனத் தெரிகிறது. கட்டிலின் மேல் அமர்ந்து என்னைப் புரட்டிய அம்மாவின் கரங்கள் என் உடலோடு சேர்ந்துவிட்டன. கடைசி முறையாக நான் அம்மாவைப் பார்த்தேன். அவள் தன்னுடைய இளம்பிராயத்தில் சிறுமியாக இருந்ததைப் போலவே எனக்குத் தெரிந்தாள். மூடிக்கொள்ளும் முன்பு அந்த முகத்தை மறுபடியும் பார்த்தேன். தங்கைகள் என்னைச் சுற்றி நிற்கிறார்கள். வாடிய கண்களுடனான சிறுமிகள் தங்கைகள்தானா! அவர்களின் கரங்களும் என்னைத் துடைக்கின்றனவே. பரணிலிருந்த மரக்குதிரைக்குப் போட்டியிட்ட சின்னவள் ஏன் இப்படி என்னைப் பார்த்துக்கொள்கிறாள். எதிர் நாற்காலியில் அமர்ந்து கொண்டிருப்பது யாராம். கைக் குழந்தையும் தாயுமாக என் குரலுக்காகக் காத்துக் கொண்டிருந்த தங்கைகள் வெகு ஆழத்தினின்று என்னை நோக்கிக் கூப்பிடுகிறார்கள். மழை யாரையும் பேச விடுவதில்லையே!

மாறி மாறி போய்க்கொண்டிருந்த அப்பாவின் வேலையில் நதி ஓடிக்கொண்டிருந்த ஊருக்கு அப்பா இடம் மாறினார். அவருடன் குடும்பமே நதி பார்த்த வீட்டில் குடியேறியது. நடந்து பாதை இறங்கினால் நதியின் ஓட்டம். படித்துறைகள் உடைந்த நதி. மருத மரங்கள் அடங்கிய பாதை. மழைக்காலத்தில் நதியின் இயல்பு மாறிவிடும். வாத்துகள் அலையும் மணல்வெளியில் நடந்துவந்த அம்மா அடுத்த வீட்டுப் பெண்ணுடன் பேசிக்கொண்டு வந்தாள். தனக்கு இன்னொரு பையன் வேண்டுமென்ற அவளது பேச்சைக் கேட்டுக் கைப்பிடியிலிருந்து திமிறி மணல் வெளியில் ஓடிப்போனேன்.

தன் விந்தைகளைத் தானே பார்த்தபடி சுருள் சுருளாகிப் பிரிந்து ஓடிக்கொண்டிருந்த நதியது. மீறிய இரவு. நதியினுள் போய் மூழ்கிக் கொண்டேன். என் உடலை மறைத்து ஓடிக்கொண்டிருக்கிறது நதி. அம்மாவும் தங்கைகளும் என்னைக் கூப்பிட்டபடியே நதியெங்கும் ஓடினார்கள். அவர்களின் அழைப்புக் குரல் நதியில் படர்ந்து ஓடியது. கைவிளக்குகளுடன் இரவெல்லாம் நதியில் அலைந்தாள் அம்மா. அவளுடன் ஒவ்வொருவரும் ஒரு சிம்னி விளக்கோடு என்னை அழைத்தபடி படித்துறைகளில் திரிந்தனர். எல்லோர் நிழலும் நீண்டு நதியின் மேலோடியது. தங்கைகளின் சின்னஞ்சிறு கைகளுக்குள்ளிருந்து வெளிச்சம் நதியில் படர்ந்தது. நான் நீரினுள்

ஒளிந்துகொண்டுவிட்டேன். இருட்டு கரையாத நீரின் அடி ஆழத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கிறேன். நீர்ப்பரப்பின் மீது அம்மாவின் விரல்கள் என்னைத் தேடுகின்றன.

வந்துவிட்டேன்! வந்துவிட்டேன்! – அவள் நீரில் தன் விரல்களை மூழ்கச் செய்கிறாள். இருள்படிந்த படித்துறைக் கற்களில் கறுப்பு வளையமிட்ட கண்களோடு என்னை எதிர்பார்த்து நிற்கிறார்கள் தங்கைகள். நதி இவர்களின் துயரம் தாளாது அடங்கி ஓடுகின்றது. கோரைப் புற்களின் ஊடே விளக்கை வைத்து நதி நீரில் இறங்கு கிறார்கள் அவர்கள். வெளுத்த பாதங்கள். தேடும் விரல்களைக் கண்ட மீன் குஞ்சுகள் அடி ஆழத்தில் என் காதருகில் வந்து கிசுகிசுக்கின்றன.

போய்விட்டேன்! போய்விட்டேன்! – என் நகர்வின்மையைக் கண்ட மீன் குஞ்சுகள் பெருகி என்னைச் சுற்றிக்கொள்கின்றன. என் உடலெங்கும் மீன்களின் ஸ்பரிசம். மீன் குஞ்சுகளின் முகத்துக் காகவும் அதுகளின் இரக்கமிகு வார்த்தைகளுக்காகவும் நீரிலிருந்து வெளியேறுவதாக முடிவு செய்தேன். நான் வெளிப்பட்டது எதிர்க் கரையில். நீரிலிருந்து என் தலை உயரும்போது கோரைப் புற்களிலிருந்த விளக்கு உயர்த்தப்படுகிறது. வானும் நதிக்குமிடையில் வெளிச்சம் பரவி என் முகம் நோக்கி வருகின்றது. நான் அம்மாவைப் பார்த்தேன். அவள் நதியின் அடுத்த கரையில் நிற்கிறாள். தங்கைகள் கைவிளக்கு களோடு என்னை அழைக்கிறார்கள். அம்மாவை நோக்கி வர, திரும்பவும் நீரினுள் இறங்கும் என்னைக் கண்டதும் அம்மா திரும்பி வீட்டின் திசையை நோக்கி ஓடுகிறாள்.

அன்றிரவும் எனக்கு ஜுரம் கண்டது. என்னோடு சேர்ந்து படுத்துக்கொண்டாள் அம்மா. எல்லோரும் உறங்கிப் போய்விட்டார் கள். அவளுக்கு என் உடலை விட்டுப் போகும் சக்தியற்றுப் போய் விட்டது. என் கைகால்களை அசைக்க முடியவில்லை. பாதங்களைச் சூடுபடுத்தத் தேய்க்கிறாள். உடல் எங்கும் மெல்லிய கோடு போல வெப்பம் ஏறி கண்களைத் தொடுகின்றது. எண் கண் திறந்தபோது அம்மா என் வயதை ஒத்த சிறுமியைப் போல மாறி, கரைந்து கொண்டிருப்பதை அப்போதுதான் முதல் முறையாகப் பார்த்தேன். அவள் அன்றிலிருந்து என்னோடு பேசுவதைத் தவிர்த்து வந்தாள். நதியைப் பிரிந்து வந்த பின்பும்கூட அவள் என் உடலினை விட்டு விலக சக்தியற்றவளாகவே இருக்கிறாள். ஆயினும் இப்போது என்ன பேசுகிறாள்?

நான் கண்களைத் திறந்து எதையுமே பார்க்கவில்லை. மழை எதைப் பார்க்க அனுமதிக்கிறது. இயல்புகளைக் கரைத்து வடியச் செய்யும் மழையில் பொருள்கள் தலை கவிழ்ந்து நிற்கின்றன. வீட்டில் நடமாட்டம் ஓயவில்லை. அவரவர் வழியில் நடமாட்ட சப்தம் பெருகிக்கொண்டே இருக்கின்றது. என் மீது வழியும் பனியைத் துடைத்துக்கொண்டே இருக்கும் தங்கையின் கண்களையும் கரங்களை

யும் பார்க்காமலே உணர முடிகிறது. பல முறை சண்டையிட்டுப் பிரிந்து விரோதம் கொள்ள நேர்ந்த போதும் ஏன் அவர்கள் எதையும் நினைவில் கொள்ளவில்லை.

அவர்களுக்குப் பிராயத்தில் என் மீது கசிந்த வெறுப்புகள் மங்கிப் போய்விட்டன. எதிர்த்து ஆடிய பரமபத விளையாட்டு ஏணிகளில் அவர்கள் மேலே போய்க்கொண்டிருக்கிறார்கள். என் சோழி பாம்பின் வாலில் இறங்கி அடைய முடியாத தெப்பம் பார்க்கின்றது. தங்கைகள் ஆட்டம் முடிந்து போய்விட்டார்கள். நூறு கட்டங்களின் பரமபதத்தைச் சுருட்டி மறைவிடத்தில் ஒளித்தாள் அம்மா. மழை பெய்துகொண்டே இருக்கின்றது. நீர்த்தவளைகளின் உலகம் நீரால் விழிக்கின்றது.

இன்றைய தினம் எனக்கானதல்ல. இப்போதும் எனக்கான திராட்சைகளை அம்மா மூடிய கண்ணோடு கிண்ணத்தில் எடுத்தே வைத்திருக்கிறாள். அவளுடைய அறையில் எனக்கு மட்டுமேயான இடம் யாருமற்று இருந்துகொண்டே இருக்கின்றது. என்னிடமிருந்து பிரிந்த மண் வாத்துகள்கூட அவள் அறையில்தானிருக்கின்றன. மூடிய கண்ணாடிக் கிண்ணத்தில் கிடக்கும் திராட்சைகள் வெளியில் அலையும் என் கண்களை அவளுக்குத் தினமும் ஞாபகமூட்டியபடியே இருக்கக்கூடும். அவள் தனியே வாழ்ந்துகொண்டிருக்கிறாள். அப்பாவின் காலத்தினுள்ளும்கூட அவள் அறையில் நூல்வலை ஒன்று சுற்றித் தொங்கவிடப்பட்டிருக்கும். அதனுள் கலர் நூல்களுடன் எதையாவது பின்னிக்கொண்டிருப்பாள். ஆள் உயரக் கண்ணாடியொன்று அம்மாவின் பல்வேறு காலங்களை மாறி மாறிக் காட்டியபடி தோன்றி மறைந்துகொண்டிருந்தது.

கடைசித் தங்கையைப் பிறந்த குழந்தையாக எடுத்துவந்து உறங்கிக் கொண்டிருந்த அம்மாவை பள்ளியின் மதியம் விலக்கி வந்து வெயிலின் நகர்வைப் போல நான் கதவை விலக்கிக் கண்டபோது கண்ணாடியினுள் அம்மா எல்லோராலும் கைவிடப்பட்ட இரண்டு வயதுக் குழந்தையைப் போலத் தனியே உட்கார்ந்திருப்பது தெரிந்தது. அவளின் கண்கள் மெல்லிய பச்சை படர்ந்து எதற்கோ இறைஞ்சிக்கொண்டிருந்தன. என்னைப் பக்கத்தில் அழைத்து வைத்துக்கொண்டாள். அவளது வெளிறிய உடலில் பால்மணம் அடித்தபடி இருந்தது. அம்மா குழந்தையின் விரல்களைப் பிடித்து எனக்குத் தந்தாள். அந்த அறைக்கு அபூர்வமான ஒளியிருந்தது. ஒவ்வொரு சிறு பொருளும் அதிசயமாயின. முன் அறியாத எவரோ போல அவள் தோன்றினாள். நெளியும் கூந்தலை முன் இழுத்துவிட்டு சாய்ந்து கொண்டிருந்தாள். மாலை முடியும்வரை நான் அந்த ஒளியைக் கண்டேன். அம்மாவின் வயது கண்ணாடியில் ஒளிந்திருப்பதை அன்றுதான் கண்டுகொண்டேன்.

போசாமல் தூங்கு! எதையும் யோசியாதே! – திரும்பத் திரும்ப தங்கைகளின் குரல்கள் என் மீது மோதுகின்றன. ஜுர வேகத்தில் புலம்பத் தொடங்கியிருப்பேன் போலும். கேட்டுக்கொண்டே இருக்கும் மூன்று குரல்கள் தொடர்கின்றன.

பேசாமல் தூங்கு! எதையும் யோசிக்காதே! – என்னால் இணங்க முடியவில்லை. கண்களுக்குள் வெளிச்சம் ஒளிர்ந்துகொண்டிருக்கிறதே. பிதற்றிக்கொண்டிருக்கும் என் ஞாபகம் எனக்கில்லை. அந்தக் குரல்கள் கவலை கொள்கின்றன. 'அம்மா, நீ வந்து தூங்கச் சொல்லேன். ரொம்ப புலம்புறான்.'

என் நெற்றி, உடலெங்கும் திருநீறு இடுகிறார்கள். காலையின் வெம்பா பெய்யும் வாடை. படிக்கட்டில் உட்கார்ந்திருக்கும் என்னை விட்டு அம்மாவும் தங்கைகளும் நதிக்குச் செல்கிறார்கள். ஒரே விதமான நடை. இரட்டைக் குழந்தைகள் செல்வது போலிருக்கிறது. நதி அவர்களுக்காகக் காத்திருக்கின்றது. இரவெல்லாம் யாரும் ஸ்பரிசிக்காத நீரை, தங்கையின் விரல்கள் தொட நதி சிலிர்ப்புடன் ஓடுகின்றது. கள்ளம் கொண்ட கண்களுடன் அவள் அம்மாவைக் கட்டிக்கொள்கிறாள். எல்லாமும் வேண்டுமென்றே செய்கிறாள். அவளுக்கு அம்மாவை விட முடியாது. நீரினுள் யார் முகமும் தெரியவில்லை. நீரினுள் கண்களைத் திறந்து பார்த்துவிட எவ்வளவோ எத்தனிக்கிறாள் தங்கை. எதுவும் சாத்தியமில்லை. அம்மாவை சுற்றிக்கொண்டது நீர். மிதக்கும் இலைகளை விலக்கி எழுந்து வரும் தங்கை காத்திருக்கிறாள்.

இருவரும் பிரிந்து வருகிறார்கள். தன்னோடு யாருக்கும் உறவில்லை என்பது போல அலாதியாக வரும் அவளுடன் தெரு நிசப்தம் கொண்டிருக்கிறது. சந்தனக் கீற்றை நெற்றியில் இடும் போது கண்ணாடி அம்மாவின் வசீகரத்தைக் கண்டு கொண்டிருந்தது.

குரல்கள் அடங்கிவிட்டன. மழைச் சப்தம் ஓய்ந்த அமைதி. மழை வெறித்த மரங்களைப் போல வெளிறி உஷ்ணமற்றுப்போனது உடல். நதி உருமாறி முதுகெலும்புக்குள் நிசப்தமாக ஓடும் சில்லிடல் மட்டும் மறையவில்லை. போர்வையால் என் உடலை மூடிக் கொள்கிறேன். எழுந்துகொள்ள வேண்டும் போல் இருக்கிறது. அசதியும் பலமுமற்ற கால்கள் உடலோடு ஒத்துழைக்க மறுக்கின்றன. வெகு சிரமத்துக்குப் பிறகு எழுந்துகொள்கிறேன். பச்சை நிற வெளிச்சம் ஒளிர்ந்துகொண்டிருக்கிறது. வீடெங்கும் மழை ஈசல்கள் உதிர்ந்து கிடக்கின்றன. கண்ணாடி இறக்கைகள் சுவரில் ஒட்டிக் கொண்டிருக் கின்றன. மிக மெதுவாக அம்மாவின் அறைக்குப் போய்ச் சேர்ந்தேன்.

அந்த அறையில் எந்தப் பொருளுமில்லை. கண்ணாடி திரைச் சீலையிடப்பட்டிருந்தது. பூக்கள் படர்ந்த தரை. கண்ணாடியை விலக்கிப் பார்த்தேன். வெகு நீண்ட தூரத்தின் பின் நதிக்கரையில் அம்மா இருக்கிறாள். அவளைச் சுற்றிலும் பழுத்த இலைகள் உதிர்ந்து கிடக்கின்றன. அவள் முகம் உள்ளே போய்க்கொண்டே இருக்கிறது. மூச்சு சப்தம் கண்ணாடியைப் படபடக்க வைத்துப் படிகின்றது. புறாக்களின் முனங்கல். கண்ணாடியை மூடிவிட்டேன். அடுத்த அறையில் இருந்து எழுந்து அம்மா வந்திருந்தாள். அவள் அறைக்குள் அவள் போவதில்லை. மெலிந்த திரேகியாக இருந்த அவள் சமீபத்தில்

வந்து நின்றாள். அவளை விடவும் உயரம் அவன். அவனையே உற்றுப் பார்க்கும் அவளைப் பார்த்தபடி இருந்தான். திடீரெனத் திடுக்கிட்டு தன் முகத்தைக் கண்ணாடியில் பார்த்துக்கொண்டான். அப்படியே இருந்தது. வேதனை மிக்க சிறுமியின் கண்களேதான் தனக்கும் இருந்தன. அவனின் பெண்முகம் அம்மாவின் முகமாகவே இருந்தது.

ஒவ்வொரு முறையும் அவளை அவளே பார்த்துக்கொள்வது போலவே அவனைப் பார்த்துக்கொண்டிருக்கிறாள். இருவருக்குமே துயரம் தோய்ந்த முகம். அவனை அந்த அறையை விட்டு வெளியே அழைத்து வந்தாள். படுக்கையில் திரும்பவும் படுத்துக் கொண்டான். எதையோ சொல்ல முயன்று பேச முடியாமல் போய்விட்டாள். மீன்கள் காதருகில் சொல்லின. "எதையும் யோசியாமல் தூங்கேன்."

எந்த நினைவிலிருந்தும் தப்ப முடியவில்லை. மீண்டும் கண்களை மூடிக்கொண்டேன். ஈரக்காற்று அடிக்கின்றது. கண்களின் உள்ளிருந்த வெளிச்சத்தை மெல்ல ஈரம் மூடி இருள் கவியத் தொடங்கியது. அம்மாவின் அழைப்புக் குரல் கேட்டுக் கொண்டிருக்க கண்ணாடியில் எதையும் பேசாது மீன் குஞ்சுகள் நீந்திக்கொண்டே இருந்தன.

வழி

வக்கீல் குமாஸ்தா விருத்தாசலம் பிள்ளை என்றைக்கும் போல விடிகாலை ஐந்து மணிக்கு எழுந்துகொண்டார். நட்சத்திரங்கள் மறையாத வானம் ஜன்னலில் தெரிந்தது. சைக்கிளை அடுப்படிச் சந்தில் இருந்து வெளியே எடுத்துக்கொண்டு வந்தார். சோப் டப்பாவும் வலைத்துண்டுமாக நந்தவனத்துக்குக் குளிக்கப் புறப்பட்டபோது தெரு தூக்கத்தில் மூழ்கியிருந்தது. மூப்பது வருட தினப் பழக்கம் இது. சைக்கிள் அவர் யோசனைக்கு இடம் தந்தபடி தானே போய்க்கொண்டிருந்தது. காலையில் கோர்ட்டுக்கு வரப்போகும் சிங்கிகுளம் கொலை கேஸ் பற்றி யோசித்தார். ஒரு தெரு தாண்டும் முன்பு அது கலைந்து மூத்தவளுக்குப் பார்த்த மாப்பிள்ளை பற்றிய யோசனையாக உருமாறியது.

இருள் பம்மிய வீதியில் சைக்கிள் சென்றபடியிருந்தது. எல்லா வீடுகளும் தெருவும் மனிதர்களும் பார்த்துப் பழகிய தொல் பொருள்களாகவே அவருக்குத் தெரிந்தன. மனது வாயுத் தொல்லைக்குரிய மருந்து, வீட்டு வாடகை, வரப்போகும் அம்மன் கொடை என உருமாறிச் சுழன்றுகொண்டே வந்தது. கல் பரவிய தெருக்களில் சைக்கிள் போகும்போது நாய்கள் விழித்துக்கொண்டன.

கடலைக்காரத் தெருவைக் கடந்து வலது பக்கமாகத் திரும்பினார். நீண்ட தானாக்கார வீதி தெரிந்தது. குளிர்கால இரவென்பதால் ஜன்னல் மூடப்பட்ட வீடுகள் ஈரமேறி இருந்தன. தானாக்காரத் தெருவைக் கடக்கும் முன்பே அடுத்தது வாடியான் தெரு, அடுத்து ஒரே சந்து, பிறகு நந்தவனம் என

மனம் முந்தியது. சைக்கிள் வாடியான் தெருவுக்குள் நுழைந்தது. மிகக் குறுகலான தெரு. அதன் முதல் வீடாக இருந்தது பச்சை பெயிண்ட் அடித்த வியெஸ்வி வீடு. தாண்டினால் வரிசையாக இரு புறமும் வீடுகள். யோசித்தபடியே பரிச்சயமான அத்தெருவினுள் போய்க்கொண்டிருந்தார். தெருவின் கடைசி வீடு காரையார் வீடு. கம்பியிட்ட திண்ணையும் ஆறு படிகளும் கொண்டது. வலப்புறமாகத் திரும்பினால் சுப்பையா கோனார் சந்து. அதன் முடிவில் திலாக்கிணறு உள்ள நந்தவனமிருந்தது. சைக்கிளில் காரையார் வீட்டைக் கடக்கும் போது பார்த்தார். விடிவிளக்கு எரிந்துகொண்டிருந்தது. எதையோ யோசித்தபடி வலது பக்கம் சைக்கிளைத் திருப்பி மிதித்தார். சைக்கிள் வியெஸ்வி வீட்டைக் கடந்து சென்றது. ஒரு நிமிஷ நேரம் திகைத்த வராக சைக்கிளை மெதுவாக ஓட்டினார். சைக்கிள் வாடியான் தெருவுக்குள்தான் போய்க்கொண்டிருந்தது. இப்போதுதான் இதைக் கடந்து போனோம் எனத் தோணியது. ஒருவேளை கடந்து போக வில்லையோ, ஏதோ யோசனைதான் கடந்ததாக நினைக்கச் செய்து விட்டதோ, என சுயசமாதானம் கொண்டவராக காரையார் வீட்டைக் கடந்தபோது அதே விடிவிளக்கு எரிந்துகொண்டிருந்தது.

வலது பக்கம் சைக்கிளைத் திருப்பி ஓட்ட வியெஸ்வி வீட்டு முன்பு திரும்பி ஊர்ந்தது. வாடியாள் தெரு தாண்டினால் சுப்பையா கோனார் சந்தல்லவா வர வேண்டும். இது எப்படி வாடியான் தெருவே திரும்பவும் வருகின்றது. ஒருவேளை தான் இன்னமும் தூக்கத்தில் கனவு கண்டு கொண்டிருக்கிறோமோ? இது கனவில்லை, விழித்துக்கொண்டுதானே இருக்கிறோம் எனப் புரியும்போது பாதித் தெரு வந்துவிட்டது. சைக்கிளை நிறுத்தி இறங்கி பின்னாடி பார்த்தார். வியெஸ்வி வீட்டு வாழை மரம் காற்றில் ஆடிக்கொண்டிருந்தது.

இது ஏதோ மனப்பிரமைதான் என்றபடி திரும்பவும் சைக்கிளை மிதித்தார். கடைசி வீட்டு விடிவிளக்கு வரை வந்துவிட்டு வீட்டு வாசலைக் கடந்தது. விருத்தாசலம் பிள்ளைக்கு எதுவுமே புரியவில்லை. இது எப்படி சாத்தியம்? தெரு மூடிக்கொண்டு விட்டதா என்ன? தெருவின் முதல் வீடும், கடைசி வீடும் எப்படி அடுத்தடுத்த வீடாக இருக்கும். திகைப்பும் பயமும் கவ்வ சைக்கிளை உருட்டிக் கொண்டு நடந்தார். தெரு தன்னைப் பூட்டிக்கொண்டு விட்டதா? அப்படியும் சாத்தியமா? இது நிஜமானால் இதில் இருந்து வெளி யேறவே முடியாதா? யோசிக்க யோசிக்க வேஷ்டியை இறுக்கிக் கட்டிக்கொண்டு மூடிய வீடுகளைப் பார்த்தார். எல்லாக் கதவும் உறைந்திருந்தன. ஒரு வீட்டுக்கும் மறு வீட்டுக்கும் இடைவெளியே இல்லை. தப்பிக்க முடியாத பொறியில் அகப்பட்டுக்கொண்டு விட்டதாகத் தோன்றியது. உடலை நடுக்கமடையச் செய்தது. துருவேறிய ஜன்னல் கம்பிகள், இருண்ட வானம் எல்லாமும் பீதி கொள்ளச் செய்தன. சைக்கிளை உருட்டிக்கொண்டு கரையார் வீடு வரை வந்தார். வலது பக்கம் இருள் படர்ந்திருந்தது. மிக மெதுவாகத் திரும்பினார். அதே வியெஸ்வி வீடு. பயம் முற்றி அவரைப் பற்றிக்

கொண்டது. மனைவி, மகள், கடன், கோர்ட், சிங்கிகுளம் கொலை கேஸ் என எண்ணம் குடை ராட்டினம் போலச் சுழன்று அதிவேகமாகியது. தனக்குத் துளியும் பரிச்சயமற்ற தெரு போலத் தென்பட்டது. யாராவது வீட்டின் கதவைத் திறந்து வெளிப்படமாட்டார்களா எனக் காத்துக்கொண்டிருந்தார். எவரும் கதவு திறக்கவில்லை. தான் ஒருவேளை அதிகாலை என நினைத்துக்கொண்டு நள்ளிரவில் புறப்பட்டு வந்துவிட்டோமா, வீட்டுக் கடிகாரம் காட்டிய நேரம் சரியானதுதானா? யோசிக்க யோசிக்கக் குழம்புகிறது. மனத்தைத் தேற்றிக்கொண்டபடி சைக்கிளை நிறுத்திவிட்டு ஓடிவிடலாமா என எண்ணம் வந்தது. அதுதான் சரியான வழி. சைக்கிளைப் பூட்டி நிறுத்தினார். ஆகாசத்தை ஏறிட்டுப் பார்த்தார். ஒரு நட்சத்திரம் கூட இல்லை. ஒளிந்துகொண்டுவிட்டனவா, கண்ணை மூடிக்கொண்டு ஓடுவதைத் தவிர வேறு மார்க்கமில்லை என்றபடி தெரு அதிர ஓடத் தொடங்கினார். நினைத்தது போல ஓடுவது எளிதாக இருக்கவில்லை. உடம்பு அதிர்ந்து மூச்சு வாங்கியது. காரையார் வீடு திரும்பும்போது கண்ணை மூடிக்கொண்டு இருளில் புகுந்து ஓடினார். பெருமுச்சுடன் நின்று கண் திறந்தபோது அது வாடியான் தெருவாகவே இருந்தது.

ஆத்திரமும் பயமும் கொண்டவராக தனியே உரக்க தெருவின் பிறப்பைக் கொச்சைப்படுத்தி வசையிட்டார். நிசப்தம் தெருவை அடர்ந்து ததும்பியது. செய்வதென்ன எனப் புரியாமல் தரையில் உட்கார்ந்தார். வீடுகளுக்குள் உறங்கும் மனிதர்கள் மீது கோபம் திரும்பியது. அவர்களையும் வசைத்தார். யார் வீட்டுக் கடிகார ஒலியோ கேட்டுக்கொண்டிருந்தது. கதவைத் தட்டி யாரையாவது எழுப்பி உதவி கேட்டால்? நினைத்தவுடனே என்ன சொல்லி உதவி கேட்க என்ற யோசனையும் தோன்ற, மௌனமாகிக் கொண்டார். தன் வாழ்நாள் முடியப்போகிறதோ, ஸர்ப்பம் போல தெரு தன் வாலைத் தானே கவ்விக்கொண்டிருக்கிறதா. எழுந்த நடந்து தெரு முனை வரை சென்றார். அங்கிருந்து திரும்பிப் பார்த்தபோது வியெஸ்வி வீடு தொலைவில் தெரிந்தது. சுப்பையா கோனார் சந்து புலப்படவில்லை. தெருவின் வட்டம் சுருங்கிக்கொண்டே வந்து நத்தைக் கூடு போல ஆகிவிடக் கூடுமோ என்ன இழவு யோசனைகள் என விரல்களை இறுக்கிக் கொண்டார். பள்ளத்தைத் தாண்டிக் குதிப்பது போல இருளைத் தாண்டிக் குதித்தால் அடுத்த தெரு வந்துவிடாதா? உடல் வலியுடன் வேஷ்டியை மடித்துக் கட்டிக்கொண்டார். வேகமாக இருளில் தாவிக் குதித்தார். எதன் மீதோ மோதி அவர் கீழே விழும் சப்தம் அதிர்ந்தது. விழுந்த இடத்தில் ஒரு கை ஊன்றித் தலை தூக்கிப் பார்த்தார். காரையார் வீட்டில் லைட்டைப் போட்டுக்கொண்டு யாரோ கதவு திறக்கும் சப்தம் கேட்டது. ஒரு பெண் கதவைத் திறந்துகொண்டு வாடியான் தெருவில் இறங்கி, கையில் இருந்த குப்பைக் கூடையுடன் வலது பக்கம் மெதுவாகத் திரும்பி இருளில் நடந்து அவர் விழுந்து கிடந்த

இடத்தருகே வந்து குப்பைத் தொட்டியில் கொட்டிவிட்டு அவரைப் பார்க்காது திரும்பிப் போனாள். அவர் உடனே தெருவை ஏறிட்டுப் பார்த்தார். அங்கே சுப்பையா கோனார் சந்து என்னும் பெயர் தெரிந்தது.

எதிர்பார்த்த முகம்

இருவருக்கும் ஒரே சமயத்தில் தோணியது. இருந்தும் யாரும் பேசவில்லை. வியர்வை, நசநசப்பாக வழியும் முகத்தோடு ஏறுவெயிலில் நடந்துபோய்க்கொண்டிருந் தார்கள் அவர்கள். பற்றி எரிவது போல வெக்கை. தந்திக் கம்பங்களில் வெறித்து நிற்கிறது காகம். நகரம் மரங்களற்ற வெளி. எங்கும் புகையின் சுழல் விரிகிறது. பேச்சின் தெறிப்பில் நிறைகிறது தெரு. கல் டயர்கள் தேயச் செல்கிறது மாட்டு வண்டி, சாலையோரத்து மனிதனின் கூண்டில் கிளி வெயில் தாங்காது முகத்தை அலைக்கழித்தபடியிருந்தது. தொப்பி அணிந்த சிறுவர்கள் நிழலை மிதித்து விரைகிறார்கள். யாரும் வராத சலூன் சுழல் நாற்காலி தன்னையே கண்ணாடியில் பார்த்துக்கொண்டிருந்தது. நல்ல புகையிலை வாசம். பட்டை பட்டையாகக் காம்பு கிள்ளும் மணம். கூடைக்காரப் பெண்கள் கழுத் தைத் துடைத்துக் கொள்கிறார்கள். ஒலிபெருக்கிகளின் விடாத இரைச்சலில் ஊர்கின்றன கால்கள். யார் யார் சாயலிலோ மனிதர்கள். தலை பிசுபிசுத்து எரிச்சலாகியது. பச்சைக் குழந்தையோடு ஒரு பெண் கால் தாங்கிப் போகிறாள். மீண்டும் அந்த இருவருக் கும் ஒரே சமயத்தில் தோணியது. இந்த முறை முந்திக்கொண்டு ஏட்டு சுப்பையா பிள்ளை கேட்டே விட்டார்.

"கசகசன்னு... என்ன எளவு இது... தாகம் வறட்டிப் புடுதுல்ல. தண்ணிக்கு எங்க போறது? டீக்கடை தண்ணி குடிச்சாப்பில இருக்குதுல்ல."

நடந்தபடியே போஸ் பதில் சொன்னார்.

"உக்கிரமாதான் இருக்கு. இப்பிடி நடந்து சூரகுத்தி வளைவு வரைக்குப் போனா, என் தங்கச்சிகாரி வீடு இருக்கு. போகலாம்ல. நேரமிருக்குமா?"

"கிடக்கும். கோர்ட் விடியவா திறந்துருவான்."

இருவரும் கடந்து போனார்கள். அவர்களைக் கடந்துபோன யாரோ ஒருவன் இருவர் கைகளையும் பார்த்துப் போனான். அவன் பார்வையின் பின்பே போஸுக்கும் உணர முடிந்தது. அவனும் தன் கைகளைப் பார்த்துக்கொண்டான். அவனது வலது கையையும், ஏட்டு இடது கையையும் இணைத்து வளைத்திருந்தது விலங்கு. இரும்பு வளையம் அழுத்தியது. ஏட்டு தன் கையை வீசி நடக்கச் சிரமப்படுவது போலிருந்தது. வலது கையில் கேஸ் கட்டுகள். கசங்கிச் சுருண்ட வேட்டி. எதிரே பள்ளிப் பிள்ளைகள் கூட்டமாகப் போய்க் கொண்டிருந்தன. அவைகளில் சில இவர்களைத் திரும்பிப் பார்த்து மற்றவர்களிடம் சொல்லின. இலக்கின்றி நடப்பது போல நடந்து போயினர். ஏட்டு அந்தப் பிள்ளைகளைப் பார்த்தார். அவரைக் கண்டதும் திரும்பிக்கொண்டன. அப்போதுதான் புதுசாகப் பார்ப்பது போல அவரும் விலங்கைப் பார்த்தார். பார்த்த வேகத்தில் நிமிர்ந்து போஸையும் பார்த்தார். போஸ், வெயில் வண்ணத்துப் பூச்சியைப் போல வெட்டி வெட்டி அலைவதைப் பார்த்தான். உள்ளங்கை நசநசத்தது ஏட்டுக்கு. அவர் தொப்பியை எடுத்து முகத்தில் வீசிக் கொண்டே கேட்டார்.

"துண்டு வச்சிருக்கியா "

"எடுத்துட்டு வரலே. . .

அவர் தொப்பியை எடுத்து அதனுள்ளிருந்த சின்ன டவலை எடுத்து விலங்கின் மேல் போட்டுக்கொண்டார். இருவரும் வியாபாரம் பேசக் கைகளை மூடிக் கோத்துக்கொண்டது போல் இருந்தது. இப்போதுதான் கூச்சமாகவும் அசூயையாகவும் இருந்தது போஸுக்கு. அவன் கைகளை அசைக்காதபடி நடந்தான். கொஞ்ச தூரம் போன பின்பு கேட்டான்,

"இது எதுக்கு?"

"கிடக்கட்டும்டே, எனக்கு அசிங்கமாயிருக்கு."

அவசரம் எல்லாவற்றிலும் பற்றி ஏறியிருந்தது. தலையற்ற முண்டம் ஒன்றை ஞாபகப்படுத்துவது போலத் தலை சிதறியிருந்த சிலையொன்று நின்றுகொண்டிருந்தது. அவன் கேட்காமலே ஏட்டு சொன்னார்.

"பாத்தியா இந்தக் கோலத்தை. யார் சிலை. ஏ.கே.எஸ்.பி. அவருக்கே இந்த கதி. உடைச்ச பார்ட்டி. வெல்லிட்டாங்குடி சுப்பையா வகையறா. ஒரே போடுல சிலையின் தலைய தூக்கிட்டான். ஆளையே தூக்குறவனுக்கு இது எம்மாத்திரம்?"

கடந்து போய்க்கொண்டே இருந்தார்கள். இரும்புக் கடை மார் வாடிகள் திண்டில் சாய்ந்தபடி வெயிலைப் பார்த்துக் கொண்டிருந்த

னர். விதவிதமான போஸ்டர்கள் நிறைந்த சுவர்கள். வெற்றிலை போட்டபடியே உற்சாகமாக இருவர் எதையோ பேசிக் கொண்டிருந் தனர். ரேடியோ ஒலி வீட்டின் ஜன்னல் வழியாகக் கேட்டபடியிருந்தது. அவன் கைகளை மெதுவாக வீசி நடக்கத் தொடங்கினான். இடையில் ஏட்டு கேட்டுக் கொண்டார்,

"வீடு எங்கன்னே. சூரகுத்தி வளைவா...

அவன் பேசாமல் நடந்து வந்தான். தெரிந்த முகங்கள் அகப்படவே இல்லை. மணிக்கூண்டை நெருங்கும்போது எதிரே வந்த போலீஸ்காரர் ஒருவர் சுப்பையா பிள்ளையைக் கண்டுகொண்டு கேட்டார்,

"எங்க, கோர்ட்டுக்கா?"

"ஆமா, வெயில பார்த்தீகளா?"

"என்ன கேஸ்... ஆள் பாத்த முகமா தெரியுதே...எந்த ஊரு?"

"எல்லாம் நம்ம ஊர்தான். திருட்டு கேஸ்... தெரிஞ்சிருக்கும். சூனாபானா வகையறா."

"பெரியவரு இருக்காரா.

இதை அந்த போலீஸ் போஸிடம்தான் கேட்டார் எனத் தெரியாது. போஸ் தரையைப் பார்த்தபடி இருந்தான். இரண்டாவது தடவை கேட்டபோது சுதாரித்துக் கேட்டான்,

"என்ன கேட்டீக?"

"சூனாபானா இருக்காப்லயா?"

"அவரதான்... போன வருஷம் வெட்டிப் போட்டாங்கல்ல. என்றார் சுப்பையா பிள்ளை. போஸுக்கும் ஞாபகம் வந்தது. அவனுடைய தாத்தாதான் சூனாபானா. அவரை இருட்டில் மறித்து யாரோ வெட்டிப் போட்டுவிட்டார்கள். லாந்தர் விளக்குகளும், வேல் கம்புமாக ஆள்கூட்டம் அன்றிரவெல்லாம் காட்டில் அலைந்தது. வெளிச்சம் தெரிந்திராத பறவைகள் லாந்தர் கண்டு மிரண்டு சிறகடித்தன. ஒப்பாரிச் சத்தம் இருட்டை நிரப்பியது. யார் வெட்டி னார்கள் என்றே தெரியவில்லை.

சுப்பையா பிள்ளை அந்த போலீஸுடன் பேசியபடி நின்றிருந்தார். அவனுக்கு இந்தப் பேச்சு லயிப்பு கொள்ள முடியாத எரிச்சலைத் தந்தது. ஏட்டு அவனிடம் கேட்டார்,

"சூனாபானாவுக்குத் தொடுப்பு ஒண்ணும் இங்க உண்டுல்ல."

இருவரும் எதையோ பேசிச் சிரித்தனர். அவன் எரிச்சல் தாங்காது சொன்னான்,

"தண்ணித் தாகமாயிருக்கு."

ஏட்டு எதுவும் பேசவில்லை. பேசிய போலீஸ்காரன் போய் விட்ட பின்பு இருவரும் சூரகுத்தி வளைவை நோக்கி நடந்தனர். ஓட்டு வீடுகள் நிறைந்த தெரு. நாய்கள் சாவகாசமாக உறங்கிக்

கொண்டிருந்தன. புகை அலைந்துகொண்டிருந்தது. வாய்க்காலை தெருவில் ஒட்டி விட்டிருந்தார்கள் கறுப்பு படர்ந்த தெரு. சூரகுத்தி வளைவினுள் போகும்போது அவன் சுப்பையா பிள்ளையிடம் கேட்டான்,

"வீடு வந்திருச்சு. கொஞ்ச நேரத்துக்கு இதைக் கழட்டிவிட்டா. பெறகு மாட்டிக்கலாம்."

ஏட்டு உடனடியாக எதுவும் பேசவில்லை. பிள்ளைகள் கும்மரிச்ச சப்தம் எழும் வீட்டின் முகப்பில் வந்தபோது அவரே விலங்கைக் கழட்டி கையில் எடுத்துக்கொண்டார். அவன் கைகளை உதறிக் கொண்டான். ஏட்டு வீட்டைப் பார்த்தார். சாம்பல் படர்ந்த ஓட்டு வீடு. உள்ளே புகையும், மங்கிய வெளிச்சமுமாயிருந்தது. ஏதோ தாளிதம் நடந்த வாடை. அவன் உள்ளே நுழையும் முன்னே ஒரு பெண் குழந்தை எட்டிப் பார்த்து உள்ளே சொன்னது. ஒரு பெண் வெளிப்பட்டு அவனை இடுக்கிய கண்களால் பார்த்தாள். அவன் உள்ளே நுழைந்து கூப்பிட்டான்,

"தனம்...

அவளுக்குக் குரல் புரிந்துவிட்டது. வேகமாகக் கிட்டத்தில் வந்து நின்று சொன்னாள்,

"வாங்கண்ணே... இருங்க.

அவன் பின்னே திரும்பி ஏட்டையும் உள்ளே கூப்பிட்டான். அப்போதுதான் அவள் இன்னொருவர் வந்திருப்பதையும் கவனித்தாள். உள்ளே போய் மடக்கு நாற்காலியைக் கொண்டுவந்து போட்டாள். அவற்றைப் பிடித்தபடி போலீஸைப் பார்த்துக்கொண்டிருந்த பெண் குழந்தையை அவன் கூப்பிட்டான்,

"இங்க. வாளா.

"போடி.. உங்க மாமா... ஊர்ல இருக்காரு. போஸ் மாமாடி...

சொன்னதும் கிட்டத்தில் வந்து நின்றுகொண்டது குழந்தை. தனம் பின் வாசலுக்குப் போனாள். அவள் உருவம் மறைந்ததும் மற்றொரு பெண் குரல் கேட்டது,

"யாரு வந்திருக்கறது.

போஸ் திரும்பிப் பார்த்தான். அவனுடைய அம்மா வந்து கொண்டிருந்தாள். கிட்டத்தில் வந்து நின்று கேட்டாள்,

"யாருன்னு சட்னு தெரியலே."

"நான்தான் போசு...

அவளுக்குப் புரிந்தது. சுவரை ஒட்டி உட்கார்ந்துகொண்டாள். முகம் உரிந்து பிரிந்திருந்தது. விரல்கள் நீண்டு தொங்கியிருந்தன. நீண்டு அறுந்த காதுகள். அவள் உட்கார்ந்துகொண்டு பேசினாள்,

"எங்கயிருந்து வாரே. ஊர்லயிருந்தா ?"

“ஆமா.”

“அதாருகூட.

“நம்ம ஊருதான். ஏட்டு சுப்பையா பிள்ளை.”

அவள் குரல் பயமாகவும் மங்கியும் கேட்டது,

“போலீஸ்ஸா...

“தெரிஞ்சவக...

அதற்குள் தனம் செம்பு நிறைய தண்ணீர் கொண்டு வந்தாள். வெட்டிவேர் வாடையுடன் குளிர்ந்த தண்ணீர். ஏட்டு ஒன்றரைச் செம்பு குடித்தார். தனம் அவருக்கு விசிறி எடுத்துக்கொண்டு வந்து கொடுத்தாள். அவர் விசிறிக்கொண்டார். புகை நின்றபாடில்லை. ஓட்டின் இடுக்கல் வழியாக வெயில் இறங்கியபடியிருந்தது. போஸுக்கு மட்டும் கேட்கும்படியாக அம்மா கேட்டாள்,

“என்ன விஷயமா வந்தாப்ல?”

“நிலம் வாங்கிறதுக்காக... ஒரு ஆள பாக்க..

“யாருக்கு?”

“ஏட்டுக்குத்தான்.”

ஏட்டு வீட்டைச் சுற்றிப் பார்த்தார். தீப்பெட்டி ஒட்டி கடையில் சுற்றி வைக்கப்பட்டிருந்தன. வரிசையாக சாமி படங்கள். மூலையில் இரண்டு வேல் கம்பு. எங்கும் சோளம் சிதறிக் கிடந்தது. வெறும் தரையைக் கொத்திக்கொண்டிருந்தது கோழி. பின்வாசலில் நல்ல வெளிச்சம். அம்மா அதற்குள் சுப்பையா பிள்ளையிடமே பேசத் தொடங்கினாள்.

“சொந்த ஊர் எங்கிட்டு?”

“சிவகிரிப் பக்கம்.”

“இங்கேயே வந்துட்டீகளாக்கும்.”

“வாய்க்கிற இடத்தில இருக்க வேண்டியதுதானே?”

“ஊரு மோசமில்ல. பிள்ளைக இருக்கா?”

“மூணு பொம்பளைப் பிள்ளைக. ஒரு பையன். எல்லாம் வயசுப் பிள்ளைகதான்.”

“இங்கேயும் ரெண்டு பிள்ளைக இருக்காக. வயசு ஏறிட்டே போகுது. ரெத்னம் மாதிரி லட்சணம். அதுகளுக்கு துணையாதான் இங்கேயே கிடக்கேன்.”

அதற்குள் பின்வாசல் வழியாக தனம் கலர் கொண்டு வந்தாள். அவள் ஒரு தட்டு நிறைய முறுக்கும் வாழைப்பழமும் கொண்டு வைத்து, கலரை உடைத்துக் கொடுத்தாள். ஏட்டு முறுக்கை ஒடித்தபடியே போஸைப் பார்த்துக்கொண்டிருந்தார். போஸ் எழுந்து உள்கட்டுக்குப் போனான். அவன் பின்னாடியே தனமும் வந்தாள்.

உள்கட்டுக்குள் போனதும் கதவை ஒருச்சாய்ந்தபடி தனம் சாய்ந்து நின்று கேட்டாள்.

“மதினி எப்படியிக்கா?”

“அழுதுகிட்டு கிடக்கா.”

“எப்படிப் புடிச்சாக.”

“ரெண்டு நாளாச்சு. எப்பிடியும் ஒரு வருஷம் கிடைக்கும். உள்ள போகணும். மச்சான் எங்கே?”

“அவுக இப்ப ஜலால் கடையில இருக்காக..

“புரோட்டாக் கடையா?”

“இல்ல, ஹோட்டலு. அங்கையும் அதே வேலைதான்”.

அவன் எட்டிப் பார்த்தான். அம்மாவுடன் எதையோ பேசிக் கொண்டிருந்தார் ஏட்டு. போஸ் தனத்திடம் கேட்டான்,

“பெரியவளுக்கு எதுவும் விசேஷப் பேச்சு உண்டா?”

“யார் அதைப் பேசுறது... கழுதைக்கு வயசு போயிட்டேயிருக்கு. நீயும் வீணா திரியுற. எனக்குன்னு பேச யாரு இருக்கா?”

சட்டென்று தனம் உடைந்து அழத் தொடங்கினாள். அவனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

அவள் அழுகைச் சப்தம் கேட்டுப் பெரியவள் உள்ளே வந்து அம்மையைச் சரிப்படுத்தினாள்.

“இந்தா எதுக்கு அழுகே?”

போஸ் பெரியவளையே பார்த்துக்கொண்டிருந்தான். அடங்குவது போல உள்ளே போன அழுகை மீண்டும் விசும்பி வெடித்தது. அம்மையின் அழுகை தாங்காது பெரியவளும் சேர்ந்து விசும்பினாள். வெளியே வெளிச்சம் ஏறிக் கொண்டிருந்தது. அவன் பெரியவளின் தோளைத் தொட்டு ஆறுதல்படுத்தினான்.

“மீனா, எதுக்கு அழுகே... நான் பேசுறேன்.”

“தனம். நான் கிளம்புறேன்.”

அவன் சொல்லியதும் தனத்தின் அழுகை நின்றது. அவள் முந்தானையால் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு கேட்டாள்,

“சாப்பிட்டுப் போகலாம்ல.

“இல்லை. கோர்ட்டுக்கு நேரமாயிரும்.”

“அப்ப வர்றப்ப. வர்றயா?”

“இல்லை.”

அவன் உள் அறையை விட்டு வெளியேறும்போது தனம் சொன்னாள்,

“ரொம்ப மெலிஞ்சு போயிட்டே. அடிச்சாங்களா?”

"ரொம்ப இல்ல.

அவன் ஏட்டுப் பக்கம் வந்தபோது அவர் தொப்பியை எடுத்து மாட்டிக்கொண்டார். அவர் மடியில் உட்கார்ந்து இருந்தது பெண் குழந்தை. கலரைக் குடித்து முடித்திருந்தார். போஸிடம் அம்மா அடவாகக் கேட்டாள்,

"வர்றவன், ரெண்டு இனிப்பு வடை வாங்கிட்டு வரக் கூடாது. வெறுங்கைய வீசிட்டு வந்துட்டான். அய்யா பழக்கம் பிள்ளைக்கு அப்படியே இருக்கு. என்ன செய்ய?"

போஸ் இதைக் கேட்டது போலவே இல்லை. அவனே ஏட்டிடம் கேட்டான்,

"போவமா?"

இன்னுமொரு செம்பு தண்ணி வாங்கிக் கொண்டார் ஏட்டு. புறப்பட்டு வாசலுக்கு வரும்போது அம்மா ஏட்டிடம் எதுவோ சொன்னாள். பின்பு "வீட்டுக்கு வந்துட்டுப் போங்க போசு. அவளையும் கூட்டிக்கிட்டு வா .." என்றாள்.

இருவரும் இறங்கித் தெருவில் நடந்தார்கள். சுப்பையா பிள்ளை விலங்கை எடுத்து மாட்டி அதன் மேல், துண்டைப் போட்டுக் கொண்டார். கண்ணாடியில் பட்டு எங்கும் சிதறிய வெளிச்சத்தின் கதிர்களோடு நடந்து போய்க்கொண்டிருந்தார்கள். கோர்ட் பரபரப்பாக இருந்தது. சிவப்பு ஜன்னல்கள். உள்ளே நுழையும்போது போஸ் சாதாரணமாகக் கேட்டான்,

"வர்றப்ப எங்கம்மா என்ன சொன்னாக?"

எட்டு தொப்பியைச் சரிசெய்தபடியே படியேறினார். மரப்படி சப்தமிட்டது. மேல் கட்டடம் வந்தபின்பு தொப்பியை எடுத்து விசிறியபடியே அவனைப் பார்க்காமல் சொன்னார்,

"உள்ள வச்சு ரொம்ப அடிச்சிராதீங்கன்னு சொன்னாங்க."

தனக்கு ஏற்கெனவே தெரிந்ததை மீண்டும் கேட்பதுபோலத் தலையைக் கவிழ்ந்தபடி கேட்டுக்கொண்டிருந்தான் போஸ்.

சேவற்குரலோன்

இருநூற்று நாற்பத்தி மூன்று கூட்டங்களில் பேசி முடித்துவிட்டு, தேர்தல் சூறாவளிச் சுற்றுப்பயணத்தின் கடைசி தினங்களுக்கு முந்தைய இரவில் பனைவிடலிகளுக்குள் இருந்த கிராமம் ஒன்றுக்குப் பேச வந்து சேர்ந்தார் எரியீட்டி கோவிந்தன்.

பத்தாம் வகுப்பில் பெயிலான பிறகு மிட்டாய்க் கடையில் சில காலம் வேலை செய்துவிட்டு, தமிழ் வாழ்க எனப் பச்சை குத்திய கையும் திருகு மீசையுமாக அரசியலில் நுழைந்து, பெரியவர் தமிழ்வேந்தனின் நகல் பேச்சாளராக அறிமுகமாகி, எட்டு ஆண்டில் நான்கு மனைவிகளும் இரண்டு குழந்தைகளுமாகக் கழகத் தலைமைப் பேச்சாளரானார். நட்சத்திரம் ஓய்ந்த இரவில் ஆயிரக்கணக்கான மக்கள் கூட்டம் எரியீட்டியின் குரலைக் கேட்கக் காத்துக் கிடந்தனர். அவருக்காக வாங்கி வைக்கப்பட்ட பதினான்கு சோடா புட்டிகளின் கோலி கண் மூடாது திறந்து விழித்தன. ஜாலம் சிந்தும் பேச்சு தொடங்கிய அரை மணிக்குப் பிறகு கைத்தட்டல் நீள, கூட்டத்தில் இருந்த எவனோ ஒருவனுக்குத் தற்செயலாக ஒரு சேவலின் குரல் கேட்டது. சலனமற்றுத் திரும்பி அவன் எதிர்முகம் பார்த்துத் திகைக்க கொக்கரக்கோ சப்தம் இடைவிடாது கேட்கத் தொடங்குவதை ஜனத்திரளே கேட்டது.

எரியீட்டியோ உற்சாகம் ததும்ப வார்த்தைகளை மிதக்கச் செய்தபடி இருந்தார். அப்போது மேடையிலிருந்தவர்களும் கொக்கரக்கோ கொக்கரக்கோ என்ற சப்தத்தினைக் கேட்டனர். எங்கிருந்து வருகிறது இந்தக் குரல்? அதுவரை எரியீட்டி தனது மனத்தில்

பிறக்கும் வார்த்தைகள் வெளியே கொக்கரக்கோவாகக் கேடபதை அறியவே இல்லை. "சேவல் மாதிரியில்லை கத்துறாரு" எனச் சலித்தபடி ஒரு பெண் எழுந்தபோது கூட்டமே அதை ஒப்புக்கொண்டு கலையத் தொடங்கியும்தான் தனக்கு ஏற்பட்ட விபத்தின் குரூரம் அறிந்து பயமும் வியர்வையுமாக நின்றார் கோவிந்தன். தான் பேசுவது வெளியே கொக்கரக்கோவாகக் கேட்கிறதே என்ற பீதி உடலில் படர்ந்தது. மனுசன் சேவல் குரலில் பேசுவதைப் பற்றி முணுமுணுத்த படி மணல் பரப்பு கடந்து போயினர் மக்கள்.

காரில் நகரம் செல்லும்வரை யாரிடமும் எதுவும் பேசவில்லை. இரண்டு நாள்கள் செய்தித்தாளின் முதல் பக்க வரியான அவரை என்ன செய்வது எனத் தெரியாமல் கட்சி விழிக்க, பன்னிரண்டாம் வட்டச் செயலாளர்தான் அந்த யோசனையை முதலில் சொன்னார். "ஒவ்வொரு பொதுக்கூட்ட முடிவிலும் அவரை ஐந்து நிமிஷம் அறியாமை இருள் அகற்றி விழிப்புணர்வு தரும் சேவலாக, குரல் கொடுக்கச் செய்யலாமே." ஒப்புக் கொண்டது தலைமை. அதன்படி நகரம் நகரமாகக் கூட்டத்தின் இறுதியில் அவர் கொக்கரக்கோ விட்டார். மக்கள் அதைக் கேட்க நகரமெங்கும் காத்துக் கிடந்தனர்.

அந்தத் தேர்தலில் கொக்கரக்கோ கட்சி பெருவாரியாக வெற்றி பெற்றது. பதவி ஏற்கும்போது சேவல் குரல் கேட்பது அபசகுனம் எனச் சொன்ன எவர் பதிலிலோ புறக்கணிக்கப்பட்ட கோவிந்தன், தற்காலிக ஓய்வு கொடுத்து வீட்டுக்கு அனுப்பப்பட்டார். "எந்த நேரமும் என்ன எழவு கொக்கரக்கோ" எனச் சலித்த மனைவிகள் அவரைப் படுக்கையில்கூட ஒதுக்கினர். செய்வதென்ன எனத் தெரியா மனக்கசப்பு கொண்ட கொக்கரக்கோ கோவிந்தன் வீட்டில் தனியே நாள்களைப் போக்கினார். சாப்பிடுவதற்குத் தவிர எதற்கும் அவர் வாயைத் திறப்பதேயில்லை. 'கொக்கரக்கோ மகளே' எனக் கேலி செய்த வாலிபர்களை ஏசி வீடு திரும்பினாள் கோவிந்தன் மூத்த மகள். எவருக்கும் பிடிக்காதவராகிப் போனார். சில சமயம் இதுநாள் வரை தான் பேசியது எல்லாம்கூட வெறும் கொக்கரக்கோ தானோ என்ற சந்தேகம் அவருக்கே வரும். புறக்கணிக்கப்பட்ட சேவற் குரலோனாக வீட்டிலிருந்தார்.

நெடுநாள்களுக்குப் பிறகு தன்னைத் தேடி வீட்டு வாசலில் வந்து நின்ற காரைக் கண்டு வியந்து வெளியே வந்தபோது, இறங்கிய நபர் தன்னை வேம்பு ஐயர் என்றும், காமிக் வோல்டு எனும் உல்லாசப் பூங்காவை நிர்வகிப்பதைக் கூறி, நீங்கள்தானே கொக்கரக்கோ எனக் கேட்டார். தலைக்குனிவோடு நின்றவருக்கு மேலும் வருத்தம் ததும்பியது. வந்தவர் "உல்லாசப் பூங்காவுக்கு வரும் ஒவ்வொரு சிறுவர் சிறுமி முன்பும் ஒரு முறை கொக்கரக்கோ விட்டால் மாசம் இரண்டாயிரம் சம்பளம், வர முடியுமா?" எனக் கேட்டார். ஒப்புக்கொண்டு வேலையில் சேர்ந்த எரியீட்டிக்கு நீலமும் மஞ்சளுமான உடையும் ஒரு நாற்காலியும் வண்ணக் குடையொன்றும் கொடுக்கப்

பட்டது. சிறுவர்கள் முன்பு உற்சாகமான சேவலாகக் கூவினார். குழந்தைகள் இந்த வேடிக்கையை வெகுவாக ரசித்தனர். அந்த வேலை அவருக்கே சில வாரங்களில் ரொம்பவும் பிடித்துப் போனது. தன்னைப் பார்க்கத்தானே கூட்டம் வருகிறது என சந்தோஷமாகப் பகலெல்லாம் கூவினார். ஒரே மாதிரி கூவுவதை எத்தனை நாள்தான் கேட்க முடியும் என்று சிறுவர்கள் விலகிப் போகத் தொடங்கியதால் அங்கும் அவரைத் தனிமை சுற்றியது. ஆடு போலவோ, காகம் போலவோ, ஏன் ஒரு தவளை போலக் கூடக் குரலை மாற்றிக் கத்தத் தெரியலையே எனக் கோபமுற்ற வேம்பய்யர் கடைசியில் அவரை வேலையை விட்டு நீக்கினார். இனி தான் இருந்து என்னதான் பயன்? கட்சி, குடும்பம், மனைவிகள், மகள், சிறுமிகள்கூட இந்தச் சேவல் குரலை வெறுத்தப் பின்பு வாழ்வின் விதிவசத்தை மூன்று நாள் தனிமையில் யோசித்துவிட்டு, செத்துவிடலாம் எனக் கடற் கரைக்குப் போனார்.

அங்கு முறுக்கு விற்கும் சிறுவன் ஒருவன் அவரைப் பின் தொடர்ந்து சார் முறுக்கு வேணுமா முறுக்கு! என விரட்ட, வேண்டாம் என மனதில் பட்டபோதும் அது பேசும்போது கொக்கரக்கோவாகத்தானே கேட்கும் என்ற வேதனையோடு சாகப் போகும்போதும்கூட சிறுவனின் கேலிக்கு ஆளாக வேண்டுமா என வாயை மூடியபடி கடலினுள் இறங்கி நடந்தார். கால்கள் நீரினுள் அமிழ்ந்தன. அப்போதும் கரையில் இருந்த சிறுவனின் குரல் கேட்டது. “சார் முறுக்கு வேணுமா?” போய்த் தொலைகிறான் எனத் திரும்பி, கடைசியாக ஒரு முறை கொக்கரக்கோ எனக் கூவுவதால் என்னவாகிவிடப் போகிறது என நினைத்தபடி கையை மறுத்து ஆட்டி வேகமாகக் கொக்கரக்கோ என்றார். கடற்கரையில் இருந்த சிறுவனுக்கு அது “வேண்டாம்” என்ற வார்த்தையாகக் கேட்டது.

உப்பு வயல்

முருங்கைப் பூ உதிர்த்த காலத்தில் பலரோடும் கள்ள உறவு கொண்டிருந்ததாக திருடனின் மனைவி செம்பா ஊரைவிட்டு விலக்கி வைக்கப்பட்டாள். அவளோடு ரகசியக் காதல் கொண்டிருந்த பாதிரியின் மகனும் பிறவி ஊமையுமாகிய தானியேல் பாடசாலையின் பின்புறமிருந்த திலாக் கிணற்றின் உயரத்தில் நிலா பௌர்ணித்த இரவில் உயிரைப் போக்கிக் கொண்டு தொங்கிய மறு தினம் இது நடந்தேறியது.

திருடனின் மனைவி என்றபோதும் செம்பா பயந்த சுபாவமுடையவளாகவும், சிறு பெண்ணாகவுமே இருந்தாள். எப்போதும் நீலநிற உடைகளை விரும்பி அணிந்து வந்த அவள் ஊரைவிட்டு விலக்கி வைக்கப்பட்டபோது முப்பதாவது வயதை அடைய ஆறு நாள்கள் மீதமிருந்தன. கறுத்துச் சுருண்ட கூந்தலும் குள்ளமான ரூபமும் கொண்ட அவளுக்கு இடது கன்னத்தில் சிறிய மரு ஒன்று இருந்தது வசீகரமாக இருந்தது. ஊரில் அயலாருடன் பழகி அறியாத செம்பா பகல் வேளைகளில் கடற்கரையில் உலரும் சிப்பிகளையும் இறந்த நண்டுகளையும் ஆமை ஓடுகளையும் பொறுக்கி வந்து கடல்கிராமத்துக்கு வரும் உப்பு வியாபாரிகளிடம் விற்றுக் கொண்டிருந்தாள்.

அவளுக்குத் திருமணமாகி ஆறு வருடங்கள் கடந்திருந்தன. பனைவிடலிகள் நிரம்பிய ஊரில், விரசக் கனவுகள் பெருகும் பூப்பெய்திய வருடங்கள் கழிய இருந்தவளைக் கட்டிக்கொண்டு இங்கே கூட்டி வந்தான் சொர்ணராசு. இருவரும் நாணல் பூத்த வயல் வழியே நடந்து ஊரைப் பிரிந்து வரும்போது ஆணின் இச்சை அவளுக்குள் சுரந்துகொண்டிருந்தது.

ஆனால் இந்த ஆறு வருடங்களில் அவன் முதல் முத்தத்தைக் கூட அவளுக்குத் தரவில்லை. காமத்தின் எலுமிச்சை நிறம் உடலேற, சிவப்பு, மஞ்சள் பூச்சூடிய தலையுடன் தனித்து வீட்டில் இருந்து வந்தாள் செம்பா. சொர்ணராசு ஊரில் தங்குவதே இல்லை. அதுவும் கலெக்டர் துரையின் குதிரையைத் திருடி வந்துவிட்ட பின்பு எப்போதும் துப்பாக்கி வீரர்களால் தேடப்பட்டுக்கொண்டு இருந்ததால் அவன் ஒளிந்து அலைந்துகொண்டிருந்தான்.

அது ஒரு கறுப்புக் குதிரை. குடிவெறி ஏறிய கண்களுடன், உரக்கச் சிரித்தபடி அந்தக் குதிரையில் ஏறி அமர்ந்தபடி சொர்ணராசு தெருவில் ஓர் இரவெல்லாம் சுற்றிக்கொண்டிருந்தான். சிறுமிகளும் விளையாட்டுப் பையன்களும் பாதி உறக்கத்தில் விழித்து குதிரையின் அழகு கண்டனர். அந்த ஊருக்கு வந்த முதல் குதிரையே அதுதான். அதன் காதுகள் வசீகரமாக இருந்தன. செம்பா கதவைத் திறந்து படல் மீது சாய்ந்தபடி அவனைப் பார்த்தாள். குதிரையை விட்டு இறங்கி மணலில் படுத்துக் கொண்டு, கால் மேல் கால் போட்டபடி அவன் புகைத்துக் கொண்டிருந்தான். அவளுக்குக் குதிரையை ஸ்பரிசிக்கும் ஆசை எழுந்தது. அதை அறிந்துகொண்டவன் போல அவளை அருகில் கூப்பிட்டு, எதிர்பாராத நிமிடம் ஒன்றில் அவளைத் தூக்கிக் குதிரை மீது அமர்த்தினான். பயமும் ஆசையும் கலந்த மிரட்சியில் அவள் குதிரையின் வயிற்றைக் கால் விரல்களால் தொட, அது தலை தூக்கியது. அவளே குதித்துவிட்டாள். இரவெல்லாம் அவனுடைய சிரிப்பு, தெருவில் கேட்டபடியிருந்தது. அன்றிரவு அவன் உறங்கிய பின்பும் நெடுநேரம் குதிரை வீதியில் தனியே அலையும் சப்தத்தைக் கேட்டுக்கொண்டிருந்தாள் செம்பா.

மறுநாள் சிவப்புத் தொப்பி அணிந்த சிப்பாய்கள் குதிரையைத் தேடி ஊர் வந்தபோது, தெருவில் கிடந்த லத்திகளைக் கண்ட தடம் பார்த்துப் போயினர். சொர்ணராசு குதிரையுடன் வட்டத்தில் போய் ஒளிந்துகொண்டான். என்றாலும் காவல் வீரர்கள் அவனை மடக்கிப் பிடித்து, கை கால்களில் விலங்கிட்டு நடத்தியே கூட்டிப் போனார்கள். வழியில் மாட்டுச் சந்தைத் திடலில் இருந்த கிணற்றில் இறங்கி சொர்ணராசு குடித்த தண்ணீரில் இருந்த கரும் பாசி, அவன் உடலில் சேகரமாகி, சிறையில் அடைபட்ட மூணாம் நாள் தலைமயிர், பற்கள், கால் விரல்கள் எங்கும் கரும் பாசி வளர, பச்சை நகங்களும், நடுங்கும் கறை பற்களுமாக உளறிக்கொண்டு உயிர் நீத்தான். அவனை இறந்த நாய்களின் உடலைத் தூக்கி எறியும் காவல் கிணற்றில் எவரும் அறியாது சிப்பாய்கள் தூக்கிப் போட, நீரில் ஊறி மிதந்த நாள்களில் சூரியத் தலைவன் அவன் உதட்டில் முத்தமிட்டு நகர, மிருகங்களின் தாடி வளர்ந்து தனது உடலில் சுருண்டுகொள்ள, அலறி இரவில் எழுந்து முற்றத்தில் வந்து சொர்ணராசு வந்துவிட்டானோ எனத் தேட, உலர்ந்த மீன்களின் கண்களில் அலையிடாமல் உறைந்த கடல் மட்டுமே நீலநிறமாயிருந்தது.

சொர்ணராசுவை சிப்பாய்கள் பிடித்துப் போவதைக் கண்ட உப்பு வியாபாரிகள் செம்பாவிடம் அதைத் தெரிவித்தனர். அவள் பெருமூச்சும் வேதனையுமாக வீட்டில் அடைந்து கிடந்தாள். மனத்தில் காரணமற்ற பயங்கள் எழுந்து பெருகின. முன்னைவிடவும் தனிமை எல்லா இடுக்குகளில் இருந்தும் அவளை எட்டிப் பார்த்தபடி இருந்தது.

பல ஊர்களில் இருந்தும் சொர்ணராசு திருடிவந்த மணல் கடிகாரம், கோமாளிப் பொம்மைகள், தலைக்கவசம், சூதாட்டப் பலகை, மயிலிறகு விசிறி இவற்றோடு அவளும் பயன்படாத பொருள் போல வீட்டிலிருந்தாள். அவளிடம் கிராண்ட் சர்க்கஸில் இருந்து சொர்ணராசு திருடிவந்த செங்கொண்டைக் கிளி ஒன்றிருந்தது. அது செம்பா! செம்பா! என வாய் ஓயாது கத்தி வீட்டின் தனிமையைக் கலைத்தது.

செங்கொண்டைக் கிளிக்குப் பேசக் கற்றுத் தந்தவன் செம்பாவின் கணவன்தான். மற்றக் கிளிகளைவிடப் பருத்தும் கழுத்தில் நீலப் பட்டை நிறம் கொண்டும் அழகிய செங்கொண்டை கொண்டதுமான அக்கிளி சர்க்கஸில் ஒய்யாரமாக இருந்தது. அதைப் பிறர் அறியாது திருடி வந்தபோது இரவெல்லாம் கொச்சையான ஆங்கிலத்தில் கிளி அவனைத் திட்டியது. அவனோ அந்தக் கோபத்தின் மீது காதல் கொண்டவனாக அதைக் கொஞ்சினான். கிளியைப் பழக்குவதற்காக தினமும் அதற்குச் சாராயம் ஊற்றிக் குடிக்கச் செய்தான். போதை பழகிய கிளி அவன் பேச்சைக் கேட்டுப் பயின்றது. கடற்கரையின் உயர்ந்த மணல் திட்டில் கிளியை விரலில் நடக்க விட்டபடி படுத்துக் கிடக்கும் சொர்ணராசு மிக மோசமான கொச்சை வார்த்தைகளை அதற்கும் கற்றுத் தந்தான்.

சில நாட்களில் குடிவெறி ஏற இரவில் இருவரும் பரஸ்பரம் ஏசிக்கொள்வது காற்றேறி மிதக்கும். வீட்டைக் கடக்கும் எவரையும் கிளி வசையிட்டது. அதிலும் குறிப்பாக பாதிரியார் சைக்கிளில் போகும்போது தான் கற்று வைத்த வசையெல்லாம் காட்டி அவரைக் கிளி ஏசுவதும் அவர் சைத்தானின் குஞ்சோ என்றபடி சைக்கிளை வேகமாக ஓட்டிப் போவதும் தினசரிக் காட்சி.

துஷ்டத்தனமாகவும் மூர்க்கத்தனமாகவும் வளர்ந்த கிளி செம்பாவிடம் மட்டும் பயந்தது. தனிமையில் நீண்ட காலம் இருந்த அவள் குரலில் எப்போதும் கசப்பு நெடி வீசியது. அவள் திறந்துவிட்டபோதும் அது அவளை விட்டுவிட்டுப் போகாமல் கூரையிலே நின்றது. மழைக்காலம் வந்த போது கிளிக்கு பயமும் தனிமையும் அதிகமாக அது விடாது உளறத் தொடங்கியது. கடற்கரையில் பெய்யும் மழை எளிதில் நிற்பதில்லை.

விடாது பெய்யும் மழையில் வீட்டில் சப்தங்களின் விநோத இசை நிரம்பியது. பெயர் இல்லாத பூச்சிகள் கதவில் ஏறி இரவெங்கும் விடாது பாடின. கடலின் அலையோசை புரண்டுகொண்டிருந்தது.

செம்பாவோ மழையின் மெல்லிய சலனத்தால் தூண்டப்பட்டவளாக, இல்லாத ஆண் ஸ்பரிசம் தேடி மனத்திற்குள் குமைந்து கொண்டிருந்தாள். காமம் ஒரு வானவில் போல அவளது தலை முதல் கால் வரை பாய்ந்திருந்தது. மழை வெறித்த நாள்களில் வேதக் கோவிலின் பின்புறம் நீலநிறப் பூக்களும் மஞ்சள் பூக்களும் அடர்கின்றன. எப்போதாவது அந்தப் பூக்களைப் பறிக்கப் போகும் போது வேதக் கோவிலின் இடிந்த சுற்றுச் சுவரில் அமர்ந்தபடி தானியேல் நாய்க்குட்டி ஒன்றைக் கையில் வைத்துக்கொண்டு தூரத்துக் கடலை வெறித்துக் கொண்டிருப்பதைப் பார்த்திருக்கிறாள். அவனுக்குப் பாதிரியைப் போலவே முகச்சாயல் இருந்தது. ஆயினும் பாதிரி முகத்தில் உள்ளது போன்ற அம்மைத் தழும்புகள் அவன் முகத்தில் இல்லை. அவன் முகம் கூழாங்கல்லைப் போல மெருகு ஏறி இருந்தது. பாதிரி மழை வெறித்த நாள்களில் கிராம சபைகளுக்குப் பிரசங்கம் செய்ய சைக்கிளில் போவதை செம்பா பல முறை கண்டிருக்கிறாள். உயரமான அந்த மனிதரின் கண்கள் எப்போதும் சிவந்திருக்கும். காற்றில் அலையோடும் அங்கியுடன் வேதப் புத்தகங்களும், சங்கீதம் இசைக்கும் ஜால்ரா கருவி ஒன்றையும் கொண்டபடி அவர் போய்க் கொண்டிருப்பார். மழையோடு திரும்பும் அவர் கறுப்புக் குடையுடன் தெருவில் போவது அழகாக இருக்கும்.

கிறிஸ்துமஸுக்கு முந்திய நாள்களில் மழை விடாமல் பெய்யத் தொடங்கும். கடலின் சீற்றத்தில் எழும் அலைகள் வேதக் கோயிலின் கோபுரமணி வரை எழுந்து அடிக்கும் என்பார்கள். பூட்டிய கதவுகளும் வெறித்த வீதிகளுமாக ஊரே அடங்கிவிடும். கரை மீறிய அலைகள் வீதிகளில் மீன்களையும் நண்டுகளையும் உலவச் செய்யும். கூரையில் உறங்கும் கோழிகள் அலைகளால் இழுத்துச் செல்லப்பட்டு கடல் எங்கும் ரோமங்களை உதிர்த்து மிதக்கும். அலைகளில் பேரிரைச்சல் தாங்காது கிளி பயந்து சப்தமிடும்.

சுழிக்காற்று செம்பாவின் வீட்டுக் கதவில் பாதியைப் பிய்த்து எறிந்து போனது. மழையை மறைக்க அறைக் கதவில் சேலையைக் கட்டியிருந்தாள் செம்பா. ஈரத்தில் மன்னரின் தலைக் கவசத்தில் ஒட்டிய தானியங்கள் முளைத்துக் கிளைவிட்டன. சாரல் ஓயாத நாள் ஒன்றில் நாய்க்குட்டியைத் தொலைத்த தானியேல் தெருவெங்கும் அதைத் தேடி அலைந்துகொண்டிருந்தான். அவனது சுவடுகளை அழித்துப் பெய்தது மழை. சிறு சப்தங்களைக்கூட மிக உன்னிப்பாகக் கேட்டபடி அலைந்த அவன் செம்பாவின் வீட்டின் பின்பாக நாய் கத்துவது போன்ற சப்தம் வர, உடனே சேலைக் கதவை விலக்கி அவள் வீட்டினுள் நுழைந்தான்.

அவள் படுத்துக் கிடந்த அறையில் போதிய வெளிச்சமில்லை. திரிவிளக்கு மங்கலாக எறிந்துகொண்டிருந்தது. சுவர்கள் ஈரத்தில் நீர்த் திவலையிட்டன. அவன் நாய்க்குட்டியைத் தேடுவதற்காக அறையினைச் சுற்றிப் பார்த்தான். அவனை எதிர்பார்க்காத செம்பா

சட்டென எழுந்துகொண்டாள். ஒரு மூலையில் கூண்டில் தொங்கிய கிளி அவனை வசையிட்டது. அவனும் அதை ஏதோ திட்டியது போலச் சப்தமிட்டு அவளருகில் வந்தான். அவனது உடலெங்கும் தண்ணீர் சொட்டியது.

முகத்தில் மணல் அப்ப, அவன் செய்த ஜாடை மொழி அறியாது அவனையே பார்த்துக்கொண்டிருந்தாள் செம்பா. வெளியே சாரல் வலுத்துக்கொண்டிருந்தது. அவன் நாய்க்குட்டியைக் காணாது புறப்படும்போது அவளறியாமலே சொன்னாள், "வெளியே மழை கொட்டுது... கொஞ்சம் இரேன்" அவன் பதில் சொல்லாது உதட்டைச் சுழித்தபடி தரையில் உட்கார்ந்து கொண்டான். நெடுநாள்களாகக் கொடியில் உலர்ந்து கொண்டிருந்த சொர்ணராசுவின் வேட்டியை எடுத்துத் தலை துவட்ட அவனுக்குத் தந்தாள். அவன் தலை துவட்டாது வேஷ்டியின் வாசனையை நுகர்ந்துகொண்டிருந்தான். பிறகு அதைத் தலையைச் சுற்றிப் போர்த்தியபடி அவளைப் பார்த்துச் சிரித்தான். அவனிடமிருந்து ஏதோ ஒரு சுகந்தம் பிறந்தபடியிருந்தது. முதல் முறையாக அவன் ஓர் ஊமை என்ற நிஜம் அவளுக்குள் தோன்றியது போல எண்ணங்கள் ஓடின. அவன் திரும்பவும் சிரித்தான். நிமிட நேர முடிவில் கட்டுப்பட்டவள் போல அவன் எதிர்பாராது அவனைக் கட்டிக்கொண்டு தனது நாவால் அவனது உதடுகளை ருசித்தாள்.

இதுவரை தானறியாத அந்த உப்பு ருசியை அவன் இரவெல்லாம் விரும்பினான். உதட்டில் ரத்தம் சீறிப்பாய, முத்தமிட்டுக் கொண்டனர். அன்றிரவு பெய்த மழையில் உறக்கம் அற்ற இருவர் தண்ணீரின் வாசனையை அறிந்தனர்.

கோழி ரோமங்களும், இறந்துபோன பூனைகளும் ஒதுங்கிய வீதியில் மறுநாளில் தானியேல் நடந்து வீட்டுக்குப் போனபோது கனவில் சுழன்றபடியிருந்தான். அன்று பகலே அவனுக்கு சுரம் கண்டது. பாதிரி அவனருகில் அமர்ந்தபடி வாசகங்களை முணுமுணுத்துக் கொண்டிருந்தார். தானியேல் உப்பள வயலில் வெள்ளை நிறப் பூக்கள் பூப்பது போலவும், தன் உடலே உப்பள வயல்வெளி போல இருப்பதாகவும் கண்டான்.

இரண்டு நாள்கள் செம்பா, தானியேல் நினைவில் இருந்து மீள முடியாமல் கலைந்த படுக்கையினை விட்டு அகலாது கிடந்தாள். பின் ஏனோ தான் மீண்டும் தானியேலை மட்டும் பார்க்கவே கூடாது என முடிவு செய்துகொண்டாள். தானியேலும் அதன் பிந்திய நாள்களில் வரக் காணவில்லை என்பதால் அவள் வேறு ஆண் சகவாசம் அறியத் தொடங்கினாள். உப்பு வியாபாரிதான் அவளது காதலை அறிந்தான். பின் மற்றவர்களும் அவளை அறிந்தனர்.

பதிமூன்று நாள்கள் சுரத்துக்குப் பிறகு உடல் தேறி எழுந்த தானியேல், எவர் சொல்லையும் கேட்காது, வீதியில் இறங்கி செம்பாவின் வீட்டின் முன்பு வந்து நின்றான். அவனைக் கண்டதும் கதவை

அடைத்துக்கொண்ட செம்பா, அவன் பார்வையில் இருந்து விலகவே விரும்பினாள். அவனோ கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே வர முயல, அவள் கடுமையாகப் பேசி அவனை விரட்டி அனுப்பினாள்.

செய்வதறியாது தானியேல் அவளைப் பார்த்துக்கொண்டே இருந்தான். பின்பு தினமும் அவன், வீட்டினைச் சுற்றி அலைவதை அவளால் தடுக்க முடியவே இல்லை. அவனை முகத்துக்கு எதிராகத் திட்ட வேண்டும் என்பதற்காகவே செம்பா குடிக்கப் பழகினாள். குடித்த பின்பு அவள் ஏசும் வார்த்தைகள் கேட்டுத் தனியே அழுதபடி நின்றான் தானியேல்.

சில வாரத்துக்குள் செம்பாவின் குணமே மாறிப்போனது. அதுவும் தானியேல் எவரும் எதிர்பாராது, தனது தலையை மழித்துக்கொண்டு, விகாரரூபம் கொண்டவன் போல அவள் வீட்டினைச் சுற்றி அலைவது கண்டபின்பு வன்மம் கொண்டவள் போலக் கூச்சலிடத் தொடங்கி னாள். சில நேரங்களில் அவனை அடிப்பதற்கு உடைந்த துடுப்பை எடுத்துக்கொண்டு தெருவில் ஓடுவாள்.

பாதிரியாரின் மூத்த மகள் சாரா இதற்காக தினமும் தானியேலைத் திட்டி அழுதபோதும், அவன் கட்டுப்படவில்லை. பிற ஆண்களை நேசிக்கும் செம்பா தன்னை வெறுப்பதன் காரணம் அறியாத அவன் பகல் நேரத்தில் தலையறுந்துபோன தோட்டத்துச் சிலை ஒன்றினைக் கட்டிக்கொண்டு நிர்வாணமாகப் படுத்துக் கிடப்பதையும், சில சமயம் அந்தப் பெண் சிலையை விடாது முத்தமிடுவதையும் கண்டு சாராவிடம் பெண்கள் சொல்லியபோது, அவள் கர்த்தரிடம் சாத்தானை விலக்கச் சொல்லிப் பிரார்த்தனை செய்தாள்.

தானியேல் வீட்டில் இருக்கும் பொருள்களைக் காரணம் இன்றி உடைக்கத் தொடங்கினான். சில இரவுகளில் கண்ணாடியின் முன்பு அமர்ந்தபடி தன்னைத் தானே முத்தமிட்டுக்கொண்டிருப்பான். எப்போதாவது மனம் மாறியவன் போல மண்டியிட்டு விடாது பிரார்த்தனை செய்துகொண்டிருப்பான்.

பாதிரிக்குத் தனது மகனின் செய்கைகள் எதுவும் விளங்கும் படியில்லை. தானியேல் காக்கைகளின் சப்தம் அடங்கிய மதியம் ஒன்றில் செம்பாவின் வீட்டினுள் நுழைந்து பிடிகத்தியால் அவள் உதட்டை இரண்டாகக் கிழித்துவிட்டான் என்று தெரியவந்த அன்றே அவர் செம்பாவின் துர்நடத்தைகளை அறிந்துகொண்டார்.

உதடு துண்டிக்கப்பட்ட செம்பா வேதனையில் அவனை ஏசி, மணலை வாரித் தூற்றினாள். பிற ஆண்களோடு சகவாசம் வைத்திருக் கும் செம்பாவை ஊரை விட்டு விலக்கி வைக்க பாதிரியே முதல் குரல் எழுப்பினார். அன்றிரவு உப்பு வயல்களில் தனியே அலைந்து திரிந்தான் தானியேல். வானத்தில் பூர்ணித்த நிலவால் உப்பளம் எங்கும் அலையோடியது. வீட்டுக்குத் திரும்பி அம்மாவின் பழம் புடைவை ஒன்றைத் திருடிக்கொண்டு பாடசாலைக்கு வந்து படுத்துக் கிடந்தான் தானியேல். இரவு மெல்ல விரிந்து கொண்டிருந்தது.

தெருக்கள், வீடுகள், மரங்கள், செடி கொடிகள் எல்லாமும் வெளிர் ஒளியில் மினுங்கின சொல்ல முடியாத அழகு நிரம்பிக் கொண்டிருந்தது.

வானத்தைப் பார்த்தபடியே கிடந்தவன், விடியும் தருவாயில் அம்மாவின் புடைவையில் சுருக்கிட்டுக்கொண்டு திலாக் கிணற்றில் தொங்கி உயிரை மாய்த்துக்கொண்டான். அடுத்த நாள் பகல் முழுவதும் செம்பா குடித்துக்கொண்டே இருந்தாள். அவளது உதடு எரிந்துகொண்டிருந்தது.

II

கோடையில் மழையற்றுப்போய் நெருப்பை வாரியிறைத்தது போல வீசியது காற்று. ஊரை விட்டு விலக்கப்பட்ட மறு தினமே தனது பதிமூன்று கோழிக்குஞ்சுகளையும் செங்கொண்டைக் கிளியையும் கூட்டிக்கொண்டு ஊரைத் தாண்டிய வெட்ட வெளியில் இருந்த மணல் முகட்டில் கூரையிட்டுத் தங்கினாள் செம்பா. அலையும் கூந்தலை விரித்தபடி கடலின் முன்பாக நின்று கொண்டிருப்பாள் காலையில். கடற்பறவைகள் மிதந்துகொண்டிருக்கும். ஓர் உதட்டில் பாதி பிய்ந்து போய்விடவே முகவே உருமாறிவிட்டது. மேலும் தானியேலின் மரணம் அவளது குணத்தினை அடியோடு மாற்றி விட்டது. தன்னைத் தேடிவரும் ஆண்களை இடைவிடாமல் திட்டவும் அடிக்கவும் செய்தாள் செம்பா.

குணசுபாவம் மாறிய பெண்கள் எளிதில் கோபமுற்றுவிடுவார்கள் என்பது போல இச்சையின் அதீத கணத்தில் தன்னோடு சுகிக்கும் எவனையும் கடித்துவிடவோ, நகங்களால் உடலைக் கீறிவிடவோ அவள் தயங்குவதேயில்லை. நாளுக்கு நாள் அவள் வெளிறிக்கொண்டே வந்தாள். அவளைத் தேடி வரும் ஆண்கள் ஒவ்வொருவரும் உள்ளூர பயந்துகொண்டே வந்தனர். அவளது அணைப்பில் இதமான கணம் மாறிப்போய் வன்மமான பிடி போல இறுகியது. எந்த முரட்டு மனிதனும் அவளது கால்களின் கீழே மண்டியிட்டு முத்தமிடாமல் போவதேயில்லை. அவள் சொல்லை மீற முடியாதபடி ஓர் அதிகாரம் அவளிடமிருந்தது. கொடுவாள் மீசை கொண்ட பழங்குற்றவாளிகள்கூட அவளிடம் பேசவும் பயந்தனர்.

அவள் குடிப்பதற்கு நன்றாகக் கற்றுத் தேர்ந்துவிட்டாள் தன் சக குடிகாரன் எவனையும்விட அவள் நாக்கில் சுவைபடும் சாராயக் கலவை ருசி கண்டு மற்றவர்கள் பயந்தனர். அவளது முகத்தில் ஏன் என அறியாத இறுக்கம் அப்பிக்கொண்டது. தலை மயிரை எண்ணெய் வைக்காது திரிசடையாக்கினாள். செந்நிறத்தில் மாறிய தலையில் பிரி பிரியாகத் தலைமயிர்கள் சடை கொண்டிருந்தன. காவி ஏறிய பற்களும் மீன் வாடையும் அவளை விட்டு அகலவே யில்லை. குடிவெறி மிஞ்சிய நாள்களில் அவள் பாதிரியின் மகனை

வெட்கம் கெட்ட நாயே என ஏசி, தனது உடலை அசைத்து வசையிடுவாள். என்றாலும் அவளால் பாடசாலையிருந்த தெருப் பக்கமே நடக்க முடியவில்லை.

ஊர் அவளை விலக்கியபோதும் அவள் ஊருக்குள் வருவதைத் தடுக்க எவருக்கும் இயலவில்லை. தன்னைத் தேடி வந்த ஆணின் உடுப்புகளை மாட்டிக்கொண்டு, காக்கிநிறப் பேண்ட்டும், வெள்ளைச் சட்டையும் போட்டபடி அவள் தெருவில் வருவதையோ, அல்லது பள்ளிக்கூடச் சிறுமியைப் போலப் பாவாடை தாவணியில் அலை வதையோ எவர் தடுக்க முடியும்.

வெயில் உச்சம் கொண்ட நாள் ஒன்றில் அவள் பாதிரியின் வீட்டை நோக்கி நடந்து போனாள். பாதிரி வீட்டு முகப்பில் நெல்லி மரம் இருந்தது. பாதிரி அதன் அடியில் அமர்ந்தபடி உடைந்த நாற்காலி ஒன்றைச் சரிசெய்துகொண்டிருந்தார். அவள் வந்ததைக் கவனிக்கவேயில்லை. அவள் சப்தமாகப் பாதிரியின் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டாள். நெடு நாள்களுக்குப் பிறகு தன்னைப் பெயர் சொல்லி அழைக்கும் பெண்ணை நிமிர்ந்து பார்த்த பாதிரி செம்பாவைக் கண்ட மாத்திரத்தில் அவரறியாது எழுந்து நின்றார்.

அவள், பாதிரியின் கண்களைப் பார்த்தபடியே சொன்னாள்,

“தானியேலின் மரணத்துக்குக் காரணம் நானில்லை.”

அவளிடம் என்ன பேச வேண்டும் என்பதுகூட அறியாதவர் போல அவளையே பார்த்துக்கொண்டிருந்தார். அவள் மீது ஏன் கோபம் கொள்ள முடியவில்லை என அவருக்கே தெரியவில்லை. பின்பு தணிந்த குரலில் கேட்டார்,

“உனக்கு என்ன வேண்டும்?”

அவள் தலையைக் கவிழ்ந்தபடி நின்றுவிட்டாள். இப்போது அவள் குரலில் இறுக்கமில்லை. ஒரு ரகசியத்தைப் போலச் சொன்னாள்,

“நான் கர்ப்பஸ்திரியாக இருக்கிறேன்.”

அவள் தன்னிடம் இதை ஏன் சொல்லுகிறாள் என்று புரியவில்லை. இருந்தும் கேட்டுக்கொண்டு தலையாட்டினார்.

“என் குழந்தைக்கு எந்த ஆணையும் நான் அப்பாவாகக் காட்ட முடியும்.”

அவர் திரும்பவும் கேட்டார்.

“உனக்கு என்ன வேண்டும்?”

அவள் இப்போது வன்மம் கொண்டவள் போலப் பேசினாள்

“என்னை முதலில் அடைந்தவன் தானியேல்.”

அவர் இயந்திரத்தைப் போல மீண்டும் பேசினார்.

“உனக்கு என்ன வேண்டும்?”

அவள் அவர் கண்களைப் பார்த்தபடி சொன்னாள்,

"என் பிள்ளைக்கு தானியேல் அப்பனில்லை, தெரிந்து கொள்ளும். எனக்கு வேண்டியதெல்லாம் ஒரு மரச்சிலுவை. அதைச் செய்து தர முடியுமா?"

அவர் மறுக்கவில்லை. பதிலுக்கு எதிர்பாராதவள் போல அவள், "செய்து வீட்டுக்குக் கொண்டுவந்து கொடும்" என்றபடி விலகிப் போய்விட்டாள். அவள் போய்விட்ட பின்புகூட அந்த இடத்தில் குரல் சுழன்றபடியே இருந்தது.

அன்றிரவு முழுவதும் பாதிரிக்கு உறக்கம் வரவேயில்லை. நள்ளிரவில் இறந்துபோன தனது மனைவியின் பழம் பெட்டியைத் திறந்து அதனுள் இருந்த பாசி மாலையில் கோக்கப்பட்ட மரச்சிலுவையைக் கையில் எடுத்துக்கொண்டு பெட்டியைப் பூட்டினார்.

தன்து தாயாரின் சிலுவையைச் செம்பாவுக்காகக் கொண்டு போவதாகப் பாதிரி சொல்லியதும், இரண்டு மகளும் அவரைத் திட்டித் தீர்த்தனர். அவரோ சிரிப்பைத் தவிர வேறு பதில் பேச முடியாது தனது சைக்கிளை உருட்டிக்கொண்டு அவளைக் காணச் சென்றார்.

பெருமுச்சு விட்டபடி மீன் துண்டுகளைச் சுவைத்துக் கொண்டிருந்த செம்பா, பாதிரியைக் கண்டதும் நெடுநாள்களுக்குப் பிறகு சிரித்தாள். அவர் தலை தட்டாது குனிந்து வீட்டினுள் வந்தார். அவள் சாப்பிடு வதையே பார்த்துக்கொண்டு இருந்தார். அன்று சிலுவையை அவளிடம் தந்துவிட்டு வீடு திரும்பியபோது அவருக்கு மனம் சாந்தி கொண்டது.

சில மாதங்களுக்குப் பிறகு அவர் பிரசங்கம் முடித்துத் திரும்பும் போது அவள் வயிறு பெருத்தவளாகத் தனியே கடற்கரையில் அலைந்துகொண்டிருந்தாள். முதல் முறையாக அவர், அவள் பெயரைச் சொல்லி அழைத்தார். அவள் நடக்க முடியாமல் நடந்து வந்தாள். தான் வீட்டுக்கு வாங்கிய இனிப்புப் பண்டங்களை அவளிடம் தந்துவிட்டு அவள் கண்களைப் பார்த்தார். அது தாழ்ந்திருந்தது. அவளது முகத்தில், உடலில் வெண் திட்டுகள் விழத் தொடங்கி இருப்பதைக் கண்டார். ஒரு சிறுமியைப் போல அவரிடம் கேட்டாள்,

"சைக்கிளில் நான் ஏறிக்கொள்ளட்டுமா?"

வீடு வரை அவளை சைக்கிளில் கூட்டிப்போய் விட்டார். பாதிரி யைக் கண்டதும் கிளி கத்தியது. அன்று மாலை வரை அவளோடு பேசியபடி செம்பாவின் வீட்டிலே இருந்தார். தன்னைத் தேடி வரும் எந்த ஆணையும் அவள் விரட்டி விடுகிறாள் என அறிந்திருந்தார். அவர் பேசிப்போன இரவில் எப்போதும் போலவே தனித்துக் குடித்துக்கொண்டிருந்த செம்பா விடியும்வரை கூப்பாடு போட்டு அழுதபோது, கிளி கொண்ட பயம் சொல்ல முடியாதது.

பாதிரி அவள் கூப்பிடாமலே செம்பாவின் வீட்டுக்கு வந்து போகத் தொடங்கினார். அவளோ பேசுவதைக் குறைத்துக்கொண்டே

வந்தாள். இமைகள் பெருத்து வீங்கிய கண்களுடன் சதா தரையில் படுத்துக் கிடந்தாள். பாதிரி அவள் வீட்டுக்குப் போகக் கூடாது எனச் சபை தீர்மானித்தபோதும் அவர் வருவதை நிறுத்திக் கொள்ள வில்லை. குடிவெறி மீறிய நாளில் செம்பா மீன் முள்ளை, கிளிக்கு ஊட்டிவிட, அது இரவெல்லாம் கத்தி ஓய்ந்தது. மறுநாள் பகலில் அவள் பார்த்தபோது படலின் வெளியே நூற்றுக்கணக்கான எறும்புகள் மொய்க்க இறந்து கிடந்தது.

கிளியின் சாவுக்குப் பிறகு அவள் நோய் பீடிக்கப்பட்டவள் போல ஆனாள். வெண் திட்டுகள் உடலெங்கும் பரவின. நீர்க் கொப்பளங்களும் தோன்றத் தொடங்கின. பாதிரி பஞ்சை வெந்நீரில் நனைத்து அவள் உடலில் கொப்புளங்களைத் துடைத்து வந்தார்.

வேதனை தாளாத நாள்களில் அவள் விடும் கண்ணீர், பாதிரியின் கரங்களின் மீது துளிர்க்கும். அவளை மருத்துவமனைக்குக் கூட்டிப் போகலாம் என்றபோது வர மறுத்துவிட்டாள். பாதிரியை விசாரிப்ப தற்காக இரண்டு வேதசபை ஊழியர்கள் வர இருந்த மறுநாளில், முந்தைய இரவில் அவர் தானே தனது உடைகளையும் சிலுவையையும் வேதக் கோயிலுக்கு ஒப்புக் கொடுத்துவிட்டு, சாதாரண மனிதனைப் போலக் கறுப்புக் கரை வேஷ்டியும் நீலநிறச் சட்டையுமாக சபையி னின்று வெளியேறிப் போனபோது ஊரே அவரை ஏசியது.

செம்பாவுக்காகப் பாதிரியே உணவு தயாரித்தார். அவள் நடக்கவும் சிரமப்பட்டாள். மயிலிறகு விசிறியால் அவளுக்கு விசிறிவிட்டு இரவில் உறங்கச் செய்தார். தனது காரியங்கள் பற்றிய சிந்தனை இல்லாத மனிதனைப் போலவும், தனது கடமை என்பது போலவும் அந்த வீட்டில் இருந்து வந்தார் பாதிரி.

வேதனை தாளாத நாள் ஒன்றில் அவளை அழைத்துக்கொண்டு மலை நகரமொன்றின் மருத்துவமனைக்குப் புறப்பட்டார். சில மைல் நடந்து வந்ததும், பிரதானச் சாலையில் உப்பு வண்டிகள் போய்க்கொண்டிருந்தன. பாதிரி அவளை ஒரு வண்டியில் ஏற்றி உட்கார வைத்துவிட்டு, தானும் அமர்ந்துகொண்டார். நிலா, பிறை கண்டிருந்தது. உப்பு வயலின் வாசனை எங்கும் நிரம்பியது. தன் மீது உறங்கும் அவளைப் பார்த்துக்கொண்டிருந்தபோது தானியேலின் நினைவு தாளாது அவர் அழுதுவந்தார். நட்சத்திரங்கள் மட்டும் சலனமில்லாமல் வானில் மிதந்து கொண்டிருந்தன.

புத்தரின் கார்ட்டூன் மொழி

பிறகு அவனுக்கு இருபத்தி எட்டு வயதானது. அப்போது அவன் தன்னையே கௌதம புத்தராகவும், தனது எட்டாவது வயதில் வேம்பு படர்ந்த இம்பீரியல் தியேட்டரில் தான் பார்த்த கடற்கன்னி படத்தில் வரும் மீன் உடல் கொண்ட பெண்ணைத் தேடுபவனாகவும், துண்டிக்கப்படாத தனது வலது கரம் பற்றிய துயரத்தோடு இரும்புக் கை மாயாவியாக முடியாமல் போனதற்காக மனம் பிறழ்வுற்றுக் கொஞ்ச காலம் மனநலக் காப்பகம் எனும் இடத்தில் வசித்தவனாகவுமிருந்தது நடந்தேறியது.

மொட்டையடிக்கப்பட்ட தலையோடு அலைந்து கொண்டிருந்த சிறுவன் வீட்டின் பின்புறமெங்கும் அலைந்துகொண்டிருந்தான். அவன் முகம் கருத்து, இறுகியிருந்தது. தன்னைச் சுற்றிய ஒவ்வொன்றுக்கும் அவன் பயந்து பயந்து ஓடினான். பெருமூச்சு படிந்த அவன் அறை அவனின் சப்தங்களை உள்வாங்கி நின்றது. அ.தீ.கொ. கழக உளவாளிகள் நண்பர்கள் போல் உருக் கொண்டார்கள். அவர்கள் சிரித்தபடி மாலையில் சந்தித்துக் கொண்டார்கள். அப்போது இரும்புக் கை மாயாவி கெய்ரோவில் ‘அய்வான் சதிவலை’ திட்டத்தினைக் கண்டுபிடிக்க இழந்த தன் வலது கரத்தோடு மின் இணைப்புகளை நாடி அலைந்து கொண்டிருந்தான். அ.தீ.கொ. கழகம் மனத்தின் நுட்பங்களை வெடி வைத்து உடைக்கவும், நட்பு அறுபடவும், பரஸ்பரம் ஒருவரை மற்றவருக்கு எதிராகவும் மாற்றச் செய்துவரும் நடவடிக்கைகள் மாயாவிக்குத் தெரிய வந்தன. மின்சாரத்தில் இரும்புக் கை மாயாவி கையை வைத்தார். உடல் எங்கும்

பளீர் பளீர் என மின்னலடித்தது. கை மட்டும் மாயாவி ஆனது. கை வெற்று வெளியில் அலைந்தது. காற்றில் மிதக்கும் கை, இரும்புக் கை மாயாவி. ஜானிநீரோ, ரிப் கெர்பி, மார்டின் அ.தீ.கொ.கழகத் தலைவர் குழி எலி, எண்பத்து எட்டுப் பக்கம் கொண்ட காமிக்ஸ் படித்தபடி இருப்பார்கள். காமிக்ஸ் வாசிப்பவர்கள் கவனத்துக்கு எனத் தலைப்பிடப்பட்ட அட்டை தொங்கும் நூலகத்துக்கு அவன் போய் வந்துகொண்டிருந்தான். சில பிரம்பு நாற்காலிகள் போடப் பட்டிருந்த அறை அது. அதில் மூன்று பையன்கள் காலையிலிருந்து காமிக்ஸ் படிக்க அப்போது பத்துப் பைசா. இரும்புக் கை மாயாவி (திரும்பத் திரும்பப் படித்த ஒரு புத்தகம் பற்றிய வார்த்தை) தோற்பதற் காக சூதாடியவன் என்ற புகழ்பெற்ற காமிக்ஸில் அவன் ஒரு பாத்திரமாகிப் போனான்.

காமிக்ஸில் வரும் ஆட்களின் உருவம் மெலிந்து, நீளமும் நிழல்கள் போலவுமிருந்தன. பக்கங்கள் சாணிக்கலரிலும் அதில் வரும் படங்களில் கட்டடங்கள் உயரமாகவும், பெண் கொலைகாரிகள் நீண்ட மார்பு களும், வலையணிந்த கால்களும் கொண்டிருந்தார்கள். படங்கள் ஓடத் தொடங்கின. ஒரு நாளின் பல சம்பவங்கள் இணைந்து உருக்கொண்டன. குழி எலி என்பவன் இரும்பு கவச முகமூடி போட்டிருந்தான். அவனுடைய ஆட்கள் மனிதர்களின் தலையைப் பிளந்து உள்ளே இயந்திரங்களைப் பொருத்தினார்கள். பொம்மைக் காரின் உள்பகுதி போல இருந்த இயந்திரம் பொருத்தப்பட்டவர்கள் இயந்திரம் போலவே நடந்தார்கள். எல்லா இடங்களிலும் இயந்திரத் தலை மனிதர்கள் நடமாடினார்கள். இயந்திரத் தலை மனிதர்கள் ரோட்டில் நடமாடிக்கொண்டிருக்கிறார்கள் என்ற விவரம் அவனுக்குத் தெரிய வந்தது. அப்போது அவன் காமிக்ஸின் பாத்திரமாகவும், இரண்டுமாகவும், இரண்டுமற்றும் இருந்தான். பாத்திரமான அவனைப் பிடித்து அவன் தலையில் இயந்திரத்தினைப் பொருத்திவிடப் பலர் அலைந்துகொண்டே இருந்தார்கள். அவன் அவர்களுக்கு அஞ்சியே ஓடினான். வீட்டின் அறைகளைப் பூட்டிக் கொண்டான். உடன் படிக்கும் ஒரு பெண் எப்படியும் அவனோடு பேச விரும்பி அவன் வீட்டுக்கே வந்தாள். வீட்டில் அவளை அறைக்குக் கூட்டிக்கொண்டு போய் சுவரில் ஒட்டியிருந்த இரும்புக் கை மாயாவியைக் காட்டியதும் அவள் தன் ஆடை களைந்து தான் ஆண் என்றும், பெண் உருக் கொள்ள நேர்ந்தது தன் இயந்திரத் தலையினால் என்றும் சொல்லி தன் நிர்வாணம் காட்டிப் போனாள். அந்த நாளில் அவன் இருந்த மனோநிலையைப் பற்றி நகுலன் எனப்படும் தமிழ் இலக்கிய வாதியின் நாவலில் வரும் ஒரு பாத்திரம் மிகத் தெளிவாகச் சொல்லியிருப்பதாக அவன் நண்பன் சொன்னான்.

தன் தலையில் இயந்திரம் பொருத்தப்பட்டுவிட்டதாகவே அவன் உணர்ந்துகொண்டான். அந்த காமிக்ஸ் முடியவேயில்லை. அவனைக் காப்பாற்றும் பொருட்டு அவனும் தன் கைகளை வெட்டிக்கொண்டு மின்சாரத்தால் தன் உருவை மறைத்துக்கொள்ள முயன்றான். அதற்கு

முன்பு ஸ்கூலில் ஒரு படம் எடுத்துக்கொள்ளச் சொல்லி மாணவர்களுக்கு சர்க்குலர் வந்தது. படம் எடுக்கப்போகும் நாள் ஞாயிறு. பள்ளியின் மைதானத்தில், விளையாட்டுப் பொருள்கள் அற்ற வெறும் மைதானத்தில் கேலரியின் மறைவில் அவன் எல்லோருடனும் புகைப்படம் எடுத்துக்கொண்டான். அந்தப் புகைப்படத்தில் அவன் காலரை உயரே தூக்கி விட்டிருந்தான். அது முகத்தை மறைத்திருக்கும். அது வந்தபின்பு மாணவர்கள் அவனை உளவாளி என்று சந்தேகம் கொண்டார்கள். அதை மாற்ற வேண்டி தன் வலக்கரத்தைத் துண்டித்துக்கொள்ள விரும்பினான். அந்த நாள் ஒரு மதியம் யாருமற்ற அறை. கைகளைத் துண்டிக்க எடுத்துக்கொண்ட முயற்சிகள் தோல்வியுற்றன. அவன் முழு வேகத்தில் மின்சாரத்தைத் தொட்டான். தொட்டவுடன் அவன் மறையவில்லை.

அ.தீ.கொ. கழகம் நகரின் ஒவ்வொரு மூலையிலும் அ.தீ.கொ. கழக உளவாளிகளை அனுப்பியது. அவர்கள் ரகசியக் குறிப்பேடுகளோடு நண்பர்களைச் சந்தித்து அவர்களைப் பற்றிய விவரங்களைக் குறிப்புகளாக மாற்றி எழுதி அனுப்பினார்கள். ஒவ்வொரு நகரத்தின் அளவு உள்பட குறிப்பு அனுப்பப்பட்டது. ஒரு நண்பன் என்னும் நபரோடு பேசிக்கொண்டிருந்தபோது அவன் கை குறிப்புப் புத்தகத்தில் தானாக இயங்கிக்கொண்டிருந்தது. அந்த அறையில் எரியும் மஞ்சள் விளக்கொளியில் கசியும் கசப்பு நபர்களுக்குள் சென்றது. குமட்டியது. செத்தமீன் வாடை.

நபர் குறிப்புப் பட்டியல்: பெயர் தேவையில்லை. பால். ஆண், பெண், தேவைப்படாத விவரங்கள். அதிகம். ஆக விரும்புவது: இரும்புக்கை நபருக்குக் கொடுக்கப்பட வேண்டிய சிகிச்சை, கடற்கன்னி சினிமா, தியான தத்துவ தீட்சை.

காமிக்ஸின் பாத்திரமான அவனை மீட்டு அவர்கள் சினிமாவுக்கு அழைத்துப் போனார்கள். அந்தப் படம் ரொம்பவும் பழைய படம். கடற்கன்னிகள் பற்றியது. படத்துக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. படத்துக்குக் கிளம்புவதற்கு முன்பு அவன் அறையில் வெயிலில் நாளெல்லாம் இருக்க வேண்டியிருந்தது. மாலையில் வந்த நண்பன், பொய் ஸ்தனங்களையும் பெண் ஆடைகளையும் கொண்டுவந்து அவனுக்குப் பொருத்தினான். அவனுடைய மீசை, புருவம் மழிக்கப்பட்டது. மழிக்கப்பட்ட பின்பு பார்த்த முகம் யார் என்றது. அந்த இடங்களில் மை தீட்டப்பட்டது. மிக அழகாக மாற்றப்பட்ட அவன் பெண் உருக்கொண்டான். பதினாறு வயதுப் பெண் அவள். ஸ்தனங்களின் கவர்ச்சி அவனுக்குள்ளும் கிளர்ந்தது. அவன் பின் அவள் என்றாகி, படத்துக்குக் கிளம்பினான். நண்பன் அவள் தோள் மீது கை போட்டுக்கொண்டான். இருவரும் மெதுவாக ரோட்டில் போனார்கள். ரோட்டில் போன அவன் – அவள் மீது பலரின் பார்வை பதிந்துபோனது. பஸ்ஸின் கூட்டத்தில் மையல் கொண்ட ஆணின் மோகித்த கண்கள் அவள் மேல் விழுந்தபோது அவன்,

அவள் என்ற நிலையை அறுத்து எறிந்து நின்றான்.

பெண்கள் சீட்டில் பயணம் செய்தான். பெண்கள் கவுண்டரில் டிக்கெட் எடுத்தான். தியேட்டரில் நண்பன் படம் நடந்து கொண்டிருக்கும்போதே பெண் உரு இது என மறந்து, பெண் என்ற நினைப்பிலே அவசரமாகக் காதல் கடிதம் எழுதி அவனிடம் தந்து பொய் ஸ்தனங்களைத் தடவி மகிழ்ந்தான். படம் மீன் கன்னி பற்றியது? மீன் கன்னிக்குத் தலை மட்டுமே இருந்தது. பெண் தலை கொண்ட மீன் அதை மோகித்த ஒருவனைக் கீழ் உலகுக்குக் கூட்டிப்போனது. அப்பா மீன், அம்மா மீன், தாத்தா மீன் எல்லாமும் இதைக் காணாது தட்டழிந்தன. அம்மா மீனின் வால் பார்க்கும் எவரையும் சிரிக்க வைத்தது. மீன் கன்னி ஆளைக் கூட்டி வந்து தாத்தா மீனிடம் காட்டியதும் தாத்தா மீன் வந்து நிற்கும் ஆளைப் பார்த்து, அவன் வலது காதைக் கடித்துச் சென்றது. அவன் கத்தவில்லை. வலது காதற்ற ஒருவன் பெரும் ஓவியன் ஆவான் என்றது மீன். மீன் கன்னி அவனோடு தரைக்கு வந்தாள். தரைக்கு வந்ததும் அவள் பெண் ஆனாள். அந்தப் பெண்ணுடன் அவன் கலவி கொண்டு மீன் குழந்தைகளைப் பெற்றான். தரையில் மீன் வளர்ந்தது. பாதிப் படம் மேல் பார்க்க முடியாமல் போய் அவன் திரையை நோக்கி ஓடினான். தியேட்டர் இருட்டில் யார் மேலேயோ விழுந்தான். நீலநிறக் கலர்கள் தெரிய அழும் குழந்தைச் சப்தம் தரையில் கேட்டது. அ.தீ.கொ. கழகப் படம் முடிவடையாது தியேட்டரில் நாள் எல்லாம் ஓடுகிறது. பார்ப்பவர்கள் நிறைகிறார்கள்.

அறைக்கு வந்த பின்னும் அவன் பெண் உரு அழியாமல் இருந்தது. தன்னை அவன் நினைத்தபடி இருக்க விரும்பினான். சிகிச்சைக்காக அவனை ஆட்டோவில் உட்கார வைத்து உடன் சித்தப்பா, அத்தை இருவரும் பிடித்துக்கொண்டார்கள்.

ஆட்டோ ஓடிக்கொண்டிருந்தபோது அவன் மூத்திரம் பெய்யும் ஆண்கள் நிற்கும் சந்தைக் கடந்தான். சுவர் அரிந்த இடம் அது. வளைந்து வளைந்து ஆட்டோ போனது. வீடு போன்ற மருத்துவமனை. அவன் போனபோது எதிரே பச்சை பச்சையாக இலைகள் உதிர்ந்து கிடந்தன. சிவப்புக் கட்டடம். அவனை உட்கார வைத்துவிட்டு உள்ளே போய்ப் பேசிக்கொண்டு வந்தபோது அவன் எழுந்து அறைகளைப் பார்த்து வந்தான். சின்னப் படுக்கைகள், கடல் தெரியும் இடம். அலைகள் வந்து பாறையில் சிதறுகின்றன. பெரிய மணல்வெளி. பந்து விளையாடும் பையன்கள். 'சிற்றப்பா போகும்போது அவனிடம் அறை பிடித்திருக்கிறதா எனக் கேட்டார். அவன் ஜன்னல் வழியாகப் பையன்கள் பந்து விளையாடுவதைப் பார்த்ததாகச் சொன்னான். சிற்றப்பா சிரித்துக்கொண்டு எல்லாமே Illusion என்றார். டாக்டர் வந்து பின்னர் பார்த்துப் போனார். அவரும் அறை பிடித்திருக்கிறதா எனக் கேட்டபோது அவன் எல்லாமே இல்யூசன் எனச் சொன்னான். டாக்டர் செல்லமாகக் கன்னத்தில் தட்டி கௌதம புத்தர்தானா

நீ என்றார் அப்படிச் சொல்ல அவர் கையில் இருந்த ஆங்கிலப் புத்தகம் காரணமாக இருந்திருக்க வேண்டும் எனப் பின்னாளில் அவனாக யோசித்துக் குறித்துக்கொண்டான்.

அந்த நாள்களில் டாக்டர் இரண்டு புத்தகங்களை விடாமல் படித்து வந்தார். ‘புத்தனை ரோட்டில் சந்தித்தால் கொன்றுவிடு’ என்னும் அமெரிக்க நாவல். இன்னொன்று ஹெமிங்வே என்னும் அமெரிக்க இலக்கியவாதியின் வாழ்க்கை வரலாறு. டாக்டர் பல நேரம் அறையில் வந்து அவனோடு காமிக்ஸ் பற்றிப் பேசினார். அவர் தன்னைப் பிரபல உளவாளி என்று சொல்லிக்கொண்டார். மாலையில் நிறைய பையன்கள் விளையாட வருகிறார்கள். மணல்வெளி எங்கும் பையன்கள். பந்து உருண்டு உருண்டு உருண்டு கடல் வரை போகிறது. கால்கள் கடலில் நடக்கின்றன. கையில் பெரிய கிளவ்ஸ் அணிந்தவன் தள்ளி நிற்கிறான். டாக்டர் கேட்பதற்காக அவன் சிறு காமிக்ஸ் எழுதத் தொடங்கினான். அதற்கான பேப்பரும் வாட்டர் கலர்களும் கொண்டுவந்து அவர் கொடுத்தார். அந்தப் பேப்பரில் அவன் எழுதத் தொடங்கிய காமிக்ஸில் அவன் அறியாமலே அவன் அ.தீ.கொ. கழக உறுப்பினர் ஆகிப்போனான். கௌதம புத்தர்கூட வந்தார் அதில். அவரை வீட்டில் அடைத்தே வைத்திருந்தார்கள். நிர்வாணமாக அவர் உட்கார்ந்து இருந்தார். அவரை மீட்பதே காமிக்ஸின் கதை.

டாக்டர் அவன் கேட்காமலேயே ஹெமிங்வேயைப் பற்றிச் சொன்னார். ஹெமிங்வே உடம்பு முழுவதும் மீன் செதில்கள் தோன்றிவிட்டதாக நினைத்துக்கொண்டிருந்தான். எழுத்தாளன் என அவன் நினைத்த போர்க்கால நிருபர் தலை உடைய தன்னைச் சுட்டுக் கொன்ற விவரங்கள் அவனுக்குத் தெரிய வந்தபோது அவன் ஆஸ்பத்திரியில் இருந்தான்.

இரண்டு மாதத்துக்குள் மூன்று தடவை அவன் தலை மொட்டை அடிக்கப்பட்டது. அவன் அவனாகப் பொருள்களுக்கு வேறு பெயர் கொடுத்தான். கௌதம புத்தர் என்னும் பெயர் அவனுக்குப் பிடிக்கவில்லை. அவன் மொட்டை அடிக்கப்பட வேண்டிய காலையில் ஆஸ்பத்திரியின் பின்புறக் கிணற்றடிக்குப் போய் உட்கார வைத்து மொட்டை அடிப்பார்கள். தலைமயிர் கீழே, மடியில் விழும். மொட்டைத் தலையோடு திரும்பி வரும்போது அவனைப் பார்க்கும் எல்லோரும் ‘சாமி, சாமி’ என்பார்கள். பல மாதங்கள் அந்த ஆஸ்பத்திரியிலே இருந்தான். இரவில் கடற்கரையில் எழும் சத்தம் விநோதமாக இருந்தது. அவன் மெழுகுவர்த்தி மட்டும் எரிந்த அறையில் உட்கார்ந்து நிழல் பார்த்துப் பழகிப் போனான். மெழுகின் மஞ்சள் நீலம் அவன் அறையில் நிரம்பியது. பின் அவன் வீடு திரும்பியபோது முடிக்கப்படாத காமிக்ஸை வீட்டுக்கு எடுத்து வந்தான்.

மிக ஒல்லியாகவும் தலைமயிர் அற்றும் இருந்த அவன் இருபது

வயது அடைந்தான் எனப் பலரும் பேசிக்கொண்டார்கள். அவன் அறையில் நண்பர்கள் இல்லாத காலத்திலும் நண்பர்கள் இருப்ப தாகவே அவன் நினைத்துக்கொண்டு பேசினான். ஹெமிங்வே பற்றி எழுதியவன் பாப்பா என்ற ஞாபகம் வந்தபோதெல்லாம் சிரிப்பு வந்தது. பாப்பா, பாப்பா, பச்சைப் பாப்பா ஹெமிங்வே. சிகரெட் பிடிக்கும் ஹெமிங்வேயின் படத்தினைத் திருடி வந்து அறையில் ஒட்டிக்கொண்டான். அறையில் அவன் சிகரெட் பிடித்தான். சிகரெட் காம்புகள் தரையில் முளைத்தன. சிகரெட்களாக முளைத்த தரையில் காலை எழுந்ததும் சிகரெட் பறித்துப் புகைத்தான். பாப்பா ஹெமிங்... பாப்பா ஹெ. சிகரெட்.

அ.தீ.கொ. கழகம் அழிக்க முடியாமல் வளர்ந்து வருகிறது. அதில் உறுப்பினர்கள் சேர்ந்து தங்களை உளவாளிகள் எனப் பதிவு செய்துகொண்டார்கள். உளவாளிகள் மிக அழகாக உடை அணிந்தார் கள். காமிக்ஸின் வீரர் ரிப் கெர்பி, தன் குதிரையைத் தொலைத்துவிட் டார். மார்டின் என்னும் புது ஹீரோ சர்க்கஸில் கோமாளியாகப் பணியாற்றினார். வலது கை வெட்டப்படாத அவன் உளவாளி இல்லை. மாயாவி இல்லை. பிளேக் 14 என்னும் ரகசியக் கிருமி அடங்கிய புட்டி களவாடப்பட்டுவிட்டது. புட்டியை நீரில் கலந்து விட்டால் நாடெங்கும் பிளேக் வந்து விடும். மரங்கள் அழிகின்றன. பிளேக் 14 பார்முலா அ.தீ.கொ. கழகம் கையில். மாயாவியின் கை மறைந்துபோனது. அஸ்வான் நதிக்கரையில் தங்க விரல் கிடைக்கிறது. உளவாளிகள் சக உளவாளிகள் எனப் பெருகினார்கள். டவுன் பஸ்ஸில் ஆட்கள் கண்காணிக்கப்பட்டார்கள். பொய் ஸ்தனம் கொண்ட ஆண் – பெண் – பெண். மாய காம உறுப்புகளை மாட்டிக் கொண்டு உரசாதீர்கள் எனப் பயந்த குரல் கேட்கிறது. ‘மீசைக்காரா, மீசைக்காரா’ மீசை எங்கே? மீசை ஆணியில் தொங்குகிறது. எடுத்துக்கோ. பிள்ளைகள் கடற்கரை மணலில் கூச்சலிடுகின்றன.

கடற்கரையில் விளையாடும் ஜோ எனும் பையன் ‘பிளாப்’ எனும் பேய் பற்றிய சித்திரக் கதையைக் கொண்டுவந்து அவனோடு சிநேகம் கொண்டான். பிளாப் எனும் கதையின் பிரதிகள் மஞ்சள் படர்ந்திருந்தன. அலுவலகம் போன்ற அறை ஆஸ்பிட்டலின் முன் இருந்தது. அங்கிருந்த பெண் ஒருத்தி இரவில் அந்தக் கதையைத் திருடிப் போய் தன் பெயர் எழுதிக்கொண்டாள். அவளோடு ஜோ போர் விளையாட்டு எனும் மணல் விளையாட்டு விளையாட விரும்பிக் கடிதம் கொடுத்தான். தன்னைவிடச் சிறியவனிடம் விளை யாடும் இரவில் அவள் அரவமற்றுப்போன கடலில் குளித்து வந்தாள் என ஜோ தினமும் கூறினான். அது எவராலும் நம்பப்பட முடியாததாக இருந்தது. பழைய காமிக்ஸின் அழிந்த பிரதிகள் பற்றி ஜோவிடம் அவன் பேசிக்கொண்டிருந்தான். ஜோ பழைய புத்தகக் கடைக் காரனைப் பிடித்து உலகின் முதல் காமிக்ஸ் கதையினைக் கண்டு எடுத்து வந்தான். அந்தக் கதை முழுக்க சங்கேதக் குறிப்புகள் அடங்கியதும், கடல் மாலுமி ஒருவரால் எழுதப்பட்டதாகவும்

இருந்தது. மாலுமி அதைத் தோல் போன்ற பொருளில் கத்தி வைத்து வரைந்து அதை உருவாக்கியிருந்தான். அந்தக் கதையில் ஒரு கழுதை செத்துக் கிடந்தது நூறு வருடத்துக்கு.

நாள்பட்ட கழுதை அது என்று பலரும் பேசிக்கொண்டார்கள். அதன் வால் அறுபட்டிருந்தது. செத்துக் கிடந்த கழுதையின் திறந்த மூக்கைச் சிறுவனான அவன் மிக அருகில் உட்கார்ந்து பார்த்து வந்தான். கழுதையின் குறி நீண்டு தரையில் கிடந்தது. பெண்கள் அதை மூர்க்கம் கொண்டு பார்த்துப் போனார்கள். கழுதையின் துர்மரணம் எப்படி சம்பவித்தது எனத் தெரியாத போதும் அதன் வாடை அந்தக் கிராமம் முழுவதும் பரவியது. அவன் லீவுக்குத்தான் அந்தக் கிராமத்துக்கு வந்திருந்தான். முதல் நாள் நீச்சல் பழகும்போது உப்புத் தண்ணீரை வேறு நிறைய குடித்து மூக்கில் புரையேறி நீலச் சுழல்கள் வருவதைப் பார்த்திருந்தான். கழுதையின் துர்மரணம் நடந்தேறிப் பல வருடம் ஆனது என நினைத்துக்கொண்டான். ஊர் திரும்பும் நாள் அன்றே. செத்த கழுதையின் மயிர் செம்பட்டையாக இருந்தது.

ஜோவை அதன் பின்பு சந்திக்கவேயில்லை. ஜோ அ.தீ.கொ. கழகத்தில் சேர்ந்திருக்க வேண்டும். சக உளவாளி ஜோ ஒரே நாளில் பெரியவனாகி, குழந்தைகள் பெற்று இரவில் வயதாகி விடியும் முன்பு இறந்து கிடந்தான். சாலமன் கிரண்டி என்பவன் திங்கட்கிழமை பிறந்தான். அவனைச் செவ்வாய்க்கிழமை சர்ச்சில் பெயர் வைத்தார்கள். புதன்கிழமை அவன் பெரிய ஆளானான். வியாழன் அன்று அவனுக்குக் கல்யாணம் ஆனது. வெள்ளிக்கிழமை உடல்நலம் கெட்டது. சனிக்கிழமை அவன் இறந்தான். ஞாயிறு அவனைப் புதைத்தார்கள். திங்கள்கிழமை ஜோ பிறந்தான். திங்கட்கிழமை. சாலமன் கிரண்டி வாழ்நாள் மொத்தம் ஏழு நாள்தான் எனத் தெரியாது. தெரிய வந்தால் சாலமன் கிரண்டி என்ன செய்வான்? "சாலமன் அடுத்த ஞாயிறு அன்று இறந்தே போவோம் என்ற செய்தி தெரியாமல் திங்கட்கிழமையான இன்று பிறந்தான்" என அவன் கதை புனைவு கொள்ளும்.

அவன் வாழ்நாள் சாலமன் வாழ்நாள் போலப் பல மடங்கு பெருகிப் போய்க் கொண்டேயிருந்தது. பின் சாலமன் என்ன செய்வான் பாவம். புதன்கிழமை அவன் பெரிய ஆளாக மாறினான். வியாழன் கல்யாணம் நடந்தது. எல்லாம் ஒரு நாள் இடைவெளி மட்டும். ஒரு நாள் மட்டும்.

அற்ப உயிர்கள் நிறைய இந்த உலகில் இருக்கின்றன. கழுதைக்கு வயது ஏழரை வருடங்கள் மட்டும்தானாம். என்ன செய்ய முடியும்? அவன் பிறப்பதற்கு முன்பே அவனுடைய அம்மா அவன் அண்ணனைப் பெற்றாள். அவன் பிறந்த கணத்திலேயே இறந்து போனான். அவனுடைய ஆயுள் மூன்று நிமிஷம் மட்டும். அவன் நல்ல நிறமாகவும் நெஞ்சில் சிவப்புப் பழம் போல மச்சம்

பதிந்தவனாகவும் பிறந்து இறந்தான். மூன்று நிமிஷ வாழ்வில் அவன் கண் திறக்காது, வாயைப் பிளந்து, வலக்கையை மட்டும் அசைத்தான். பின் இறந்துபோனான். உலகில் கரப்பான் பூச்சிகள்கூட அதிகக் காலம் வசிக்கின்றன. ஒரே கரப்பான் பூச்சியா என்றால் தெரியாது. அதன்பிறகு அவன் பிறந்தான். அவன் பிறந்ததும் எல்லோரும் அவனைப் பார்த்தபடி இருந்தார்கள். அவனுக்கு இப்போது இருபத்தி எட்டு வயதாகிறது. அவன் முகம் அண்ணன் போல இருப்பதாகவே கொண்டார்கள். இறந்த அண்ணனை சிறு வெள்ளைத் துணியில் சுற்றிக் கருவேல மரங்கள் அடர்ந்த வெளியில் புதைந்து வந்தார்கள். அவன் நாள்பட கறுப்பு மண்ணாகியிருப்பான்.

இதனைப் பற்றி அவனுக்குப் பத்து வயதுக்கு மேலாகத்தான் தெரிய வந்தது. அப்போது தாத்தாவோடு கருவேல மரத்தின் ஊடே அலைந்தபோது தாத்தா சொன்னார். தரையில் நிற்க முடியாமல் ஓடினான். ஆள் மீது நடக்க முயல்வதாகக் கனவு கண்டான். தாத்தா அன்றிரவு அவனிடம் சொன்னார். உலகில் உள்ள எல்லா மரங்களும் தரையோடுதான் இணைக்கப்பட்டிருக்கின்றன. எல்லா மரங்களும் ஒரே தரையில்தான் உள்ளது என்று. மரித்தவர்கள் என்ன ஆவார்கள்? ‘பிளாப்’ புத்தகத்தை ஜோவிடமிருந்து திருடிப் போன ஆஸ்பத்திரி சிப்பந்திப் பெண் பேய்க் கதைகள் மேல் எதற்காக ஆர்வம் கொண்டு இருக்கிறாள்? எல்லாமும் காமிக்ஸில்தான் வருகின் றன என அவனுக்குத் தோன்றியது. கழுதைகள் மரித்துப்போவதால் மட்டும் உலகில் என்ன வெறுமை வந்துவிடப் போகிறது.

குழந்தைகள் ஆர்ப்பரித்து விளையாடுகிறார்கள். மீசைக்காரா, ஓ மீசைக்காரா உன் வலக்கை எங்கே? மீன்கடித்துப் போய்விட்டது.

ஆரவாரம் கேட்கிறது. வைக்கோல் பொம்மை யாரும் வராத இடத்தில் நின்றுகொண்டு காவல் காக்கிறது. காகங்கள் தரையிறங்காமல் அலைகின்றன. போதும். போதும். வைக்கோல் பொம்மைகள் அவனுடைய சட்டையை, பேண்டைத்தான் போட்டிருந்தன. அவனைப் போலவே இரண்டு பித்தான் போடாது வயிறு தெரிய, வைக்கோல் பொம்மைகள் காவல் நிற்கின்றன. காற்றில் கருப்பு வாடை அடிக்கிறது. செவ்வாய்க்கிழமை இரவு பன்னிரண்டு மணிக்கு கருப்பசாமி வேட்டைக்கு வரும். வெளியே படுத்துக் கிடந்த அவனுக்கு முழிப்பு தட்டியது.

நாய்கள் கூட்டம் முன்வர கருப்பசாமி தெரு சுற்றுகிறார். அவனுக்கு வியர்த்தது. கருப்பசாமி வரும் முன் கறி வாடை எங்கும் அடிக்கிறது. மறுநாள் காய்ச்சல் வந்து திருநீறு வாங்கிப் போட்டார் தாத்தா.

பிள்ளைகள் கூச்சலிடுகிறார்கள்.

“ஓ மீசைக்காரா, மீசைக்காரா வைக்கோல் பொம்மையின் உயிர் எங்கேயிருக்கிறது?”

மீசைக்காரனிடம் பதில் இல்லை. பிள்ளைகள் கத்தி ஓய்கிறார்கள்.

பொம்மைகள் ஒவ்வொன்றாகச் சரிகின்றன. எட்டாவது அபேஜி திருடன் என்ற சித்திரக் கதையில் கூட இப்படித்தான். அ.தீ.கொ. கழகம்தான் பொம்மைகள் திருடுகின்றது.

சில தீக்குச்சிகள் கிடைத்தன. தீப்பெட்டியில் மீதமாயிருந்தவை. அதை எரித்ததும் தலை எரிந்து முண்டம் மிஞ்சியது. தலையற்ற தீக்குச்சிகளுக்கு வாழ்நாள் நிமிடத்துக்குள் போதும்.

வெள்ளைக்காரப் பெண்கள் கடல்நுரை ஆடையணிந்திருந்தார்கள். நாலு ஜடை போட்ட பெண், அவளை விட்டு வெகுதூரம் விலகிச் சென்று மீண்டும் திரும்பிக்கொண்டிருந்தாள். ஆஸ்பத்திரி ஜன்னல் வழியாகத் தெரிகிறது. இந்தக் கட்டடத்தில் பலரும் இருக்கிறார்கள். சூனியக்காரக் கிழவி உள்பட. சிலர் வெளியே போயிருக்கலாம். சிலர் விரட்டப்பட்டிருக்கலாம். மேலும் அவன் அங்கு வந்த பின்பு எந்த மாற்றத்தையும் காணவில்லை.

தினமும் குழந்தைகள் விளையாடுகின்றன. மீ.. மீ.. மீசைக்காரன்... மீ. மீ. தெருவில் நாய்கள் விளையாடுகின்றன.

அ.தீ.கொ. கழக நண்பர்கள் சிரிக்கிறார்கள். சாப்பிடக் கூப்பிடு கிறார்கள். ரிப் கெர்பி தோற்பதற்காக சூதாடுகிறான்.

பயமாயிருக்கிறது. எவருமற்ற இடத்தில் என்ன நடக்கிறது? எல்லாம், எதுவுமில்லை.

ஹெமிங்வே தன்னைச் சுட்டுக்கொண்டபோது கடற்கரையில் பிள்ளைகள் விளையாடிக்கொண்டிருந்தார்கள். மீன் பிடிக்கக் கிழவன் போய்க்கொண்டிருந்தான். ஹெமிங்வேக்கு வேறு எதைப் பற்றியும் தெரியாது.

மேலும் அவனுக்கு மற்ற உயிரினங்களைவிடவும் அதிக வயது ஆகித்தானிருந்தது.

ஹெமிங்வே வாழ்நாள் பற்றிச் சித்திரக் கதை ஒன்று எழுதவும் திட்டமிட்டிருந்தான். ஆனால் அது ஒருபோதும் சாத்தியமாகவே யில்லை.

அலகில் விருட்சம் முளைத்த செம்பறவை

ஆதிநாளில் தானியங்களுக்கும் பறவைகளுக்குமான விரோதம் தொடங்கியிருந்தது. பறவைகளைக் கண்டு பயந்த தானியங்கள் காற்றின் கூந்தல் வழி இறங்கி பாறைப் பிளவுகளுக்குள் பதுங்கின. எனினும் பறவைகள் அதைக் கண்டுவிடவே செய்கின்றன. அன்றும் செம்பாறைப் பிளவில் தலை புதைய ஒளிந்திருந்த தானியங்களைக் கண்டுவிட்டன. ஆறு பறவைகள். தனது அலகின் கூர்சுழிப்பில் தானியக் கோவையை வசமாக்கிக் கொண்டு பறந்தது ஒரு செம்பறவை. வெட்டவெளியில் மிதந்து வட்டமிட்டு நடுகல் ஒன்றின் மீது அமர்ந்து தானிய உடல் பிளந்து மணிகளைத் தின்றது பட்சி. ஒற்றைத் தானியமொன்று குத்தீட்டி போல மேல் அலகில் சொருகி உட்புகுந் திருந்ததைக் கண்ட செம்பறவை கல்லின் மீது அலகை உரசியும், தலையைச் சிலுப்பிக்கொண்டபோதும் தானியம் விழவில்லை.

நிமிஷ முயற்சிக்குப் பின் மீண்டும் வான் பரப்பில் தானியம் பறந்து மிதக்கத் தொடங்கியது. இரவில் வலி பெருகிய அலகோடு அது முகத்தைச் சிலுப்பிக் கொண்டே இருந்தது. நீர்நிலையில் தலையைச் சுழித்து தண்ணீரை விலக்கியபோது தானியம் தன் ரகசிய ஈரமும் கூடிய இரண்டு பகலுக்குப் பிறகு எறும்பின் காலென வேர்கள் நீலவெளியைக் கண்டது சிறு செடி. விருஷி இன்னதென அறியாமல் முண்டும் இலைகளைக் கண்டு கண் அசைந்தது. வேர் கிளை விட, விட அலகில் வலி பெருகிக்கொண்டே வந்தது. எனினும் உலகில் இப்போதே தோன்றியிருந்த அச்

செடி தன் உடலை அசைத்து, பிடிப்பற்று காற்று வெளியில் மிதந்து செல்வதன் பயம் பெருக இலைகளைப் படபடக்கச் செய்தது. பறவைக்கு வேடிக்கையாக இருந்தது. இலைகள் தனது நூற்றுக் கணக்கான சிறு மூக்கால் காற்றை வெளியிட்டபடி பறவையைப் பார்த்துக்கொண்டிருந்தன. ஒவ்வொரு நாளும் பறவை நீர்ப் பரப்பின் மேல் சுழன்று பறக்கும்போது அலகில் முளைத்த செடியினைப் பார்த்துக்கொள்ளும். மிகச் சிறிய செடியாக இருந்தபோதிலும் அதன் இலைகள் இதய வடிவில் நூற்றுக்கணக்கில் ஒரே தண்டில் அரும்பியிருந்தன. முணுமுணுப்பும் அலாதியும் கொண்டதாக இருந்தது அந்தச் செடியின் குரல். நீண்டகாலத் தனது தனிமையை விலக்கியது அக்குரல் என அறிந்தது பறவை. வெயிலும் சுழிக்காற்றும் பெருகிய கோடைக் காலம் பிறந்தது. செடி தன் உடலை வளைத்துத் திருக்கியபடி சப்தமாக முனங்கியது. “தாங்க முடியவில்லை வெக்கை, ஒரே தாகமாக இருக்கிறதே.” வேர்களின் முணுமுணுப்பு இலைகளையும் தொற்றிக்கொள்ள அவையும் முணுக்கம் கொண்டன. பறவை, தண்ணீர் தேடி அலைந்தது. நீண்ட கரிசல் வெடிப்புகளும், நீர் அற்ற மூளிக் கிணறுகளும், கானலை உறிஞ்சும் பூச்சிகளுமே தென் பட்டன. வீடுகளின் மீது பறந்து அலைந்தது பறவை. ஓட்டு வீடுகளின் மீது வெயில் நடமாடி அலைய, கிராமங்கள் பெருமூச்சு கொண்டிருந் தன. நாக்கு உலர்ந்த பசுக்கள் கிணற்றின் கல்லில் பதுங்கிய ஈரத்தை நாவால் அறிந்தன.

நீண்ட அலைவின் பின்பு சுனையின் உலர்ந்த கண்ணில் எப்போதா வது துளியிடும் நீரில் தன் அலகினை நனைத்தது பறவை. நீரின் ஸ்பரிசம் கண்ட வேர்கள் நாக்கைச் சுழற்றி உறிஞ்சின. அவசரமாக இலைகள் கீழே பார்த்தன. சுனையில் மறு துளி நீர் வரும் முன்பே விருட்சம் தெளிவு கண்டது. தனது ஈரக்குரலில் அது பறவையைப் பார்த்துச் சிரித்தது. தொல்காலம் முதல் தானியங்கள் பறவைகளோடு கொண்டிருந்த விரோதத்தை அந்தச் சிரிப்பு அறுத்து வீழ்த்தியது. பறவையின் இதயம் விம்மிக் கொண்டது.

கோடைப் பகல் சிறு செடியினை உலரச் செய்தபடி நாளெல்லாம் வதைத்தது. பறவையின் சிறகடிப்பு தண்ணீருக்காகத் தொடர்ந்து கொண்டேயிருந்தது. களைப்பும் வெக்கை குடித்த உடலும் கொண்ட பறவை ஒரு மதியத்தில் இடிந்த வீடொன்றின் தரை நிழலில் அமர்ந்து கால் நடுங்க நின்றது. சொரியும் வெயிலில் புறவெளி மங்கி நீண்டது. பறவையின் கண்கள் சொருகி மங்குவது போல இருந்தன. இலைகள் அதைக் கண்டிருக்க வேண்டும். தங்களுக்குள் அவை தலை கவிழ்ந்து பேசிக்கொண்டன. பின் அவை தங்கள் உடலைச் சுழற்றி அசைத்தன. இதய இலைகளின் வழி பிறந்தது ஈரக்காற்று. காற்று கண்களில் பட உயிர்ப்பும் நீர்மையும் கொண்டது பட்சி. இலைகள் விடாது உள் மடங்கி விரிந்து காற்றைப் பெருக்கிக் கொண்டிருந்தன. பறவையின் கண்களில் தெரியும் ப்ரியம் கண்டு வெட்கித் தலையை மடித்துக்கொண்டன சில இலைகள். சிறு

செடி வளர்ந்துகொண்டே வந்தது. வேர்கள் கீழ் அலகினைச் சுற்றிக் கொண்டு தொங்கின. எப்போதாவது அலகில் ஏற்படும் வலி தாளாது பறவை சப்தமிடும்போதெல்லாம் விருட்சத்தின் நாடி அதிரும். சமயங்களில் பறவைக் கூட்டத்தின் ஊடே விருஷி நிற்கும்போது மற்ற பறவைகள் இதை வேடிக்கையாகக் கண்டன. போந்து பறவையொன்று செடியினைக் கொத்திப் பார்க்கத் தன் செந்நிற அலகினைத் திருப்பியது. பிடியற்றவாளாக தன் மீது அலகு பாயப்போகிறதோ எனச் செடி பயந்து ஒடுங்கும் முன்பு பறந்தது செம்பறவை. விருட்சத்தைச் சுமந்து செல்லும் பறவையாக வானில் வட்டமிட்டது. பின்னே பறவை பார்த்தபடியிருந்த நாள் ஒன்றில் இலைகள் நிறம் மாறி மௌனமாகின. செடியும் அதன் முணுமுணுப்பை நிறுத்திக்கொண்டது.

ஒன்றிரண்டு நாள்களில் இலைகள் உதிரத் தொடங்கின. எல்லா இலைகளையும் உதிர்த்துவிட்டு நிசப்தத்தில் ஆழ்ந்த செடியின் மர்மம் அறியாது வானில் தலைகீழாகப் பாய்ந்து சுழன்றது பட்சி. இலைகள் அற்றுப் போன பின்பு தனிமை பெருகி உயர அது இரவிலும்கூட வானில் பறந்தது. பின்னொரு நாள் விழித்துக் கொண் டது போல செடி மீண்டும் இலைகளைத் துளிர்த்தது. சிவப்பும் பச்சையும் கலந்த பிஞ்சு இலைகள் வேகமாகப் பேசிக்கொண்டன. இலையின் குரல் பகல் இரவிலும் நீண்டது. இலைகள் ஒரு பகலில் திடீரெனத் தன்னைத் தாக்கிய நீர்த்திவலையைக் கண்டு விழிப்புறும் போது வெயிலின் ஊடாக வானில் இருந்து குதித்து தரைக்கு விரையும் குள்ளர்களான மழைத்துளிகள் கைகளை உயர்த்தி ஆர்ப் பரித்தபடி நிலம் நோக்கிப் பாய்ந்தன. அன்றுதான் விருட்சம் முதலாக மழையைக் கண்டது. மழையின் ஊடாகப் பறந்து சென்றது பறவை. உடலெங்கும் ஈரம் பூசி அர்த்தமற்றுப் புலம்பியது. அன்று' சிறகு ஒட்டிக்கொள்ளுமளவு பறந்தது பறவை. அந்த இரவில் விருட்சத்தின் உடலில் புதிய மினுமினுப்பும் வேட்கையும் பரவுவதைக் கண்டது செம்பட்சி.

மறுநாளில் மழைக்காலம் ஆரம்பமாகிவிட, விருட்சம் வெட்கத் துடன் பறவையிடம் எப்படிச் சொல்வது என அறியாமல் காற்றில் முணுமுணுப்பு இட்டபடி தன் முதல் பூவைப் பூக்கச் செய்தது. சங்கு வடிவம் கொண்ட அந்த வெண்ணிறப் பூவைக் கண்டு இலை கள் பெருமிதம் கொண்டன. பறவை அதிசயம் படர்ந்த கண்ணால் அதைப் பார்த்தது. அப்போதே இப்பிரபஞ்சத்தில் பூத்திருந்த பூ, பறவையின் கண்களையும் பூவாகவே கண்டு வெட்கித் தலையசைக்க இலைகள் பூவின் நளினம் கண்டு கேலி செய்தன. காற்று கடந்து செல்லும் வழியில் பூவின் உடலெங்கும் கள்ள முத்தமிட்டு ஓடியது. பூத்த அசதியால் உடல் நலிவு கொண்டது விருட்சம். பட்சி மறுநாளில் தான் எப்போதும் அறியாத வாசமொன்றை நுகர்ந்தது. அந்த வாசனை நட்சத்திரங்களின் வாசம்போல இருந்தது. பூவின் கண்களில் இருந்து வழிந்துகொண்டிருந்த அந்த வாசம் வானவெளி எங்கும் கிறுகிறுப்பை யும் வசீகரத்தையும் பரப்பியது. மிதந்த பறவைகளில் சில இந்த

வாசனை தாக்கி வீழ்ந்தன. இன்னும் சிறு பறவைகளோ செம்பட்சி பின்னே வாசனையைத் தொடர்ந்தபடி பறந்து வந்தன. விருட்சம் கிளைதோறும் பூக்களை அரும்பச் செய்தபடி இருந்ததால், பறவை அலகில் பூத்த மலர்கள் முடிவற்ற வான வெளியினைத் தமது நறுமணத்தால் நிறைத்துவிட முயல்வதைப் போல வாசனை பெருக்கின. கிராமங்களின் மீது பறவை மிதக்கும்போது வாசம் மழையென இறங்கியது. சிறுவர்கள் வானில் பறக்கும் பட்சியைக் கண்டபடி தலை உயர்த்தித் தெருவில் ஓடி வருவார்கள். பெண்களும் வயசாளி களும் அலகில் விருட்சம் கொண்ட பறவையின் வருகையை தெய்வாம் சமாகவே கண்டனர்.

பறவை கிராமவெளிகளிலும் அறியாத நிலப்பரப்பிலும் சுற்றியது. தன் மூதாதையர் எவரும் பார்த்து அறியாத கிராமங்களை, மணல் படுகைகளை, மலை பாறைகளைக் கண்டறிந்தது விருட்சம். பறக்கும் போது உதிரும் விருட்சத்தின் சிறு மலர் ஒன்றைக் கண்டெடுத்த காலியஸ்திரி ஒருத்தி வீட்டில் துர்மரணம் சம்பவித்துவிடவே, பெண்கள் தான் முதலில் விருட்சம் கொண்ட பறவையைத் தீவினையின் அடையாளமாக்கிப் பேசினர். காதுகளின் வழியே தாவித் தாவிப் பரவிய செய்தி எல்லா கிராமத் தெருக்களிலும் சேர்ந்துவிட்டது. பறவையினின்று காற்றில் பரவும் அந்த வாசம் மரணத்தினை நினைவுபடுத்திச் சுழல, வேட்டையாடிவிட எழுந்தது ஆண்களின் உக்கிரம். பறவை வாசனையின் மிதப்பில் தொடர்ந்து பறந்தது. திடீரென வான் வெளியில் பறந்து வரும் சுழிக் கல்லையோ, மரக் கட்டைகளையோ கண்டு பறவை கண் தாழ்த்தும்போது, மனிதர்களின் முறுக்கேறிய முகங்கள் தென்படும். அது முதல் இடைவிடாமல் அதி உயரத்தில் மிதக்க வேண்டியிருந்தது பறவை. களைப்பும் விருட்சத்தின் படர்வுச் சுமையும் தொற்ற பலவீனமான இதயத்துடன் அது சிறகடித்துக்கொண்டிருந்தது. விருட்சமோ இதைப் பற்றிய நினைவேதுமின்றி அலகில் அமர்ந்தபடி உலகம் கண்டது.

நாள் கடக்க, கடக்க வேர்கள் சிறகுகளிலும் ஊர்ந்து பற்றிக் கொண்டுவிட்டதால் சிறகை விரித்து அதிகமாக்கியது. எங்காவது அறுப்பில் தப்பிய ஒற்றைக் கதிர்களைக் கொத்திப் பசி தீர்த்தது பட்சி எனினும் அதன் கவனமெல்லாம் விருட்சத்தின் மீதே குவிய, இலைகளின் பசுமையான சங்கீதத்தையும், வேர்கள் காற்றில் விரல் அடித்து எழுப்பும் தாள ஒலியையும் கேட்டபடி மொட்டைக் கோபுரத் தின் மீது நின்றிருந்தது. பூக்களின் வாசனை தூண்டிய வண்ணத்துப் பூச்சிகள் இச்சை பெருகிய கொம்புகளுடன் விருட்சத்தை நாடி வந்தன. கறுப்பு மஞ்சளும், செந்நிறக் கலவையும் கொண்ட வண்ணத்துப் பூச்சிகளைக் கண்டு இலைகள் வெட்கம் கொள்ள, நிறங்களைத் தடவியபடி மலர்களோடு சல்லாபித்தது பூச்சி. பறவையின் சிறகுகளில் அமர்ந்தபடி வண்ணத்துப் பூச்சி காதல் வார்த்தைகளைப் பிதற்றியது.

நீண்ட பகல் கொண்ட நாள்கள் தொடங்கின. தெருக்களில் நிழல் அற்ற நாள்கள். வீட்டு உரல்களில் ஒளிந்த பூச்சிகளின் சப்தம்

அறிந்து, அதை நிசப்தமாகக் கவ்விவிட தெருவின் இடுப்பளவில் பறவை மிதந்து சென்றபோது தாக்கியது சிறுவனின் விரலிலிருந்து கிளம்பிய கல். ஒற்றை இறகு பிய்ந்து சிதற, சுருண்டு தரை வீழ்ந்து, சிறுவனின் கால் எட்டும் முன்பு மீண்டும் சுருண்டு பறந்தது பறவை. வான் பரப்பில் வெகு அப்பால் மறையும்போதும் விருட்சம் கொண்ட நடுக்கம் தீரவில்லை. சிறகைப் பற்றியிருந்த வேர்கள் அறுந்து போயிருந் தன. விருட்சம் இடைவிடாமல் புலம்பியது. மறுநாளில் பறவைக்குப் பறத்தலே இயலாததாகிப் போனது. அது ஒரு புதரடியில் நின்றபடி மேகம் பார்த்துக்கொண்டிருந்தது. பறக்க முயலும்போதெல்லாம் வீழ்வதும் இலைகள் அறுபடுவதுமாகத் தொடர, செம்பட்சி பின்நாளில் பறப்பதையே நிறுத்தியது. குட்டைப் புதரடி விட்டு அகலாது நின்ற இரவில் பெய்த மழை மரங்களில் ஊர்ந்து இறங்கியது. பறவையின் அலகில் மிதந்த வேர்கள் மண்வாசமும் ஆசையும் மேலேற, பூர்வ ஞாபகம் கொண்டது போல வெகு வேகமாகத் தரையிறங்கின. பறவையின் கண்கள் அறிந்தே அவை மண்ணில் புதைவு கொண்டன. தப்பவிட முயல்வது போல விருட்சம் தன் எல்லா வேர்களையும் தரையிறக்கி மண் கலக்கச் செய்தது. அவசரமாகத் தரையிறங்கிய வேர்கள் பறவையின் அலகையும் பிணைத்துத் தரையிறங்கின. வேர் ஈர்ப்பில் அலகும் நிலத்தில் இணைவுபட்டது. பறவையிடமிருந்து துயரமான முணுமுணுப்பு கேட்கத் தொடங்கியது. மண் கலந்த வேர்பிடிப்பு விருட்சத்தின் இதயத்தில் மகிழ்ச்சியின் பாடலைச் சுரக்கச் செய்தது. தானியமும் பறத்தலுமற்ற பறவையின் இறகுகள் உதிரத் தொடங்கின. எண்ணற்ற சிறு உயிர்கள் சிறகில் ஏறி அலைந்த போது அது அலகை அசைக்கவில்லை. சிறகு உதிரும் பறவையினைக் கண்ட பூனையொன்று வெறித்த பார்வையுடன் அலைந்தது.

விருட்சத்தினின்று அறுத்துக்கொண்டு பறத்தல் இயலாததாகி விட்டதை உணர்ந்த பறவை தொலைவில் சாவின் விரல்கள் காற்றில் தாளமிடுவதைக் கேட்டது. ஒரு மண்புழு போல சாவு இருதலை கொண்டபடி ஊர்ந்து பறவையின் முன் வந்தது. அதைக் கண்ட விருட்சம், இலைகளின் வழி குரலிட்டது அறியாமல். இமை மூடி இருந்தது செம்பறவை. விருட்சத்தின் துக்கக் குரல் பறவை இதயத்தில் சென்று ஒளிய அதன் நாடி ஒடுங்கியது. பூனையின் பல் துண்டித்த செம்பட்சியின் கபாலம் மட்டும் சில காலம் வெயிலில் உலர்ந்து கிடந்தது. சிறகுகள் ஒரு மழையில் மண் புதைந்தன. பின் எப்போதோ விருட்சத்தின் முதுகுத் தண்டில் இறகொன்று ஊர்வது போலப் பட நெளிவு கொண்டது. ஆகாசம் விட்டுத் தரையோடு வாழ்வைத் தொடர வேண்டியதாகியது விருட்சத்துக்கு. எனினும் அதன் வெண் ணிற மலர்கள் இப்போது பறவையின் கண்வளையம் போன்ற நிற வட்டம் கொண்டு வானைப் பார்த்தபடியிருப்பதும், ஏக்கத்துடன் பறவைகளைக் கண்டு முணுமுணுப்பு கொள்வதையும் அறிய அங்கு எவருமேயில்லை.

நட்சத்திரங்களோடு சூதாடுபவர்கள்

"ஜோசப் அவளை அவமானப்படுத்த மனதில்லாமல் ரகசியமாகத் தள்ளிவிட யோசனையாயிருந்தான்." மத்தேயு: அதிகாரம் 1:19

அவனும் அறிந்திருந்தான், தான் மணக்க இருக்கும் ஸ்திரியைப் பற்றிய சேதிகள் பல காதுகளின் வழி ரகசியமாகச் சுற்றி அலைவுறுவதை. என்றாலும் யாரிடமும் இதைப் பற்றி அவன் பேசிக் கொள்ளவோ, முணுமுணுக்கவோ, விருப்பமில்லாதவனாக இருந்தான். சில தினங்களே மணநாளுக்கு மீதமிருந்தன. தச்சுக்கூடத்தின் இழைப்புளியினின்று சுருண்டு விழும் மரச்சுருள் பெண்ணின் கேசத்தை நினைவு கொள்ளத் தூண்டிய போதிலும் அவன் இயல்பிலே உலர்ந்துபோனவனாகயிருந்தான். நாசரேத்தில் உள்ள இடையர்களில் எவனாவது மரவேலைகளுக்காக அவனிடம் வந்துபோவதைத் தவிர்த்தால் தச்சுக்கூடத்தில் அதிகம் வேலையில்லை. இடையர்களில் குள்ளமானவனாக இருந்தவனும் செம்பட்டை படிந்த தலைமயிர் கொண்டவனுமான ரவெல், காற்றின் அலைக்கழிப்பில் சிதறிய தன் ஆட்டுப் பட்டியின் கதவைச் செப்பனிட சில நாள்களின் முன்பு தச்சனைக் கூட்டிக்கொண்டு போனபோது, அந்த வீட்டின் பெண்களில் சிலர்கூட அவனைப் பற்றிக் கிசுகிசுப்பதை உணர முடிந்தது. அந்த அடிக்குரல்கள் தான் மணக்கப் போகின்றவள் கர்ப்ப ஸ்திரியாக இருக்கிறாள் என்பதைத்தான் சுற்றுகின்றன என்பதும் தெரிந்தது. காடி ஏறிய திராட்சை ரசக் குவளையை

அவனுக்குத் தந்துவிட்டு இடையன் புளிப்பு உதடுகளால், இது நிச்சயம் சாத்தானின் வேலைதான் என்றும் அதுதான் கன்னிப் பெண்ணின் மீது காற்றை ஏவி சூல் கொள்ளச் செய்துவிடும். காற்றால் கர்ப்பமானவள் குதிரைத்தலை கொண்ட குழந்தையையோ, கழுதையின் காதுகள் உள்ள சிசுவையோ பெறக் கூடும் என்றான். அப்படியும் நடக்கக்கூடுமோ, வீடு திரும்பும்போது தச்சன் ஜோசப் யோசித்தபடி நடந்தான். நகரின் வெளியே எங்கோ நூறு வயதுப் பெண் ஒருத்தி சில வாரம் முன் கர்ப்பமாகி உள்ளாள் என்ற சேதி பரவிய நாளில் பெண்களும் ஆண்களும் அந்த முதிர் கிழவியைத் தேடிக் காண அலைந்தனர். அவளோ மாட்டுத் தொழுவத்தில் ஒளிந்துகொண்டுவிட்டாள். அப்பெண்ணின் கணவன் தெருவில் பிறர் கண் படாமல் இருளில் பதுங்கியபடி நடுங்கிப் போவதை தச்சனும் பார்த்தான். தனக்கும் ஒருவேளை அதைப் போலத்தான் நேரிடுமோ, யோசிக்க யோசிக்க சாத்தியங்களின் பாதை விரிந்தது. மணவயது எப்போதோ கடந்து போயிருக்க அவன் நெடுங்காலம் தனியனாகத் தச்சுப்பட்டறையிலே உழன்று கொண்டிருந்தான். நாசரேத்தில் அவனுக்கு உறவுக்காரர்கள் எவருமில்லை. வெளி உலகின் நடமாட்டம் தீண்டாத தச்சுப்பட்டறையில் நாற்காலி களையோ, பறவைக் கூண்டுகளையோ செய்தபடி நாள்களைக் கடத்தியிருந்தான். எப்போதாவது அங்கு வரும் குருவி விற்பவள் மட்டுமே அவன் அறிந்த பெண். அவளுக்கு வயது நீண்டிருந்தது. அசதியும், மாயச் சுருள் கண்ணும் கொண்ட சேமாள் என்னும் அந்தப் பெண் யாவர் வீட்டு ரகசியமும் அறிந்தவள். அவள் உதடுகள் எப்போதும் மூடிக் கொள்வதே இல்லை. அவள்தான் ஜோசப் மணக்க இருப்பவள் கர்ப்ப ஸ்திரியென முதலில் சொன்னவள். அதைச் சொல்லும் குரலிலே கசப்பு கலந்திருந்தது.

“யார் வழியோ கர்ப்பமாகி இருக்கிறாளாம் மரியாள்.”

அவன் மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந்தான்.

“என்ன சொல்கிறார்கள் தெரியுமா? வான் நட்சத்திரத்தால் கர்ப்பம் கொண்டாளாம்.”

சேமாளின் கூண்டில் இருந்த குருவிகள் டுவிக் டுவிக் எனக் குரலிட்டன. அவள் காய்ந்த ரொட்டித் துண்டு ஒன்றைத் தனது பொதியினின்று எடுத்து தண்ணீரில் நனைத்துக்கொண்டு கடித்தாள்.

“நீ தகப்பனாகப் போகிறாயா?”

அவன் மறுத்துத் தலையாட்டினான். அவள் பகல் தீரும்வரை பேசிக்கொண்டிருந்தாள். அன்று அவன் இரவில் தனித்திருந்தான். மறுப்பின் ஊஞ்சல் அவன் முன் ஆடியபடியிருந்தது. பெண்களை மட்டும் ஏன் எப்போதும் ரகசியங்கள் கொடி போல சுற்றிப் படர் கின்றன என அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை. மரியாளை என்றோ இரு முறை தண்ணீர்க் கிணற்றின் மர உருளையின் முன் கண்டிருக்கிறான். நிசப்தத்தின் வலையைப் போர்த்திக்கொண்டு

நிற்பவள் போல இருந்திருக்கிறாள். அவன் எந்தப் பெண்ணின் உள்முகமும் அறிந்தவனில்லையே. அவனால் என்ன செய்வதென முடிவு கொள்ள முடியாமல் இருந்தது. பின்னிரவில் அவன் கனவு கண்டான்.

முடிவற்ற நீண்ட மணற் பாலையொன்று விரிந்தது கனவில். நிசப்தத்தின் பேராறு ஓடிய அப்பெருவெளியில் காற்றை எதிர்கொள்ள முடியாத அயர்ச்சியுடன் அவன் நடந்து கொண்டிருந்தான். யாரோ தொலைவில் அவன் பாதையில் வருவதாகக் கண்டான். அது ஒரு பெண் என அலைபடும் கூந்தலின் சப்தம் வழி அறிய முடிந்தது. அவள் தன்னைத் தேடித்தான் வருகிறாளோ எனக் காத்து நின்றான். தொலைவில் இருந்த அந்தப் பெண்ணும் அசையாமல் நின்றாள். இரண்டு தப்படி அவன் முன்னால் நகர்ந்தால் அவளும் இரு அடி முன் வைக்கிறாள். எனினும் அவனை நெருங்கி வரவேயில்லை. குரல் கேட்கும் தொலைவு இடைவெளியில் இருவரும் நடந்தனர். அவள் எதையோ முணுமுணுக்கிறாள் என்பது தெளிவற்று காற்றில் சிதைந்து கேட்டது. அருகாமையில் முகம் காண முடியா அப்பெண் நிழலைப் போல் பின்வந்துகொண்டே இருந்தாள். தன்னைப் பின்தொடரும் அவள் யாராம்? வேட்கை அவன் மனத்தில் சுழித்து உருக்கொண்டது. பின் திரும்பிப் பார்ப்பதும் நடப்பதுமாகக் கனவு நீண்டது. விழித்துக்கொண்டுவிட்டான். கனவின் விநோதம் புரியவே இல்லை. பின் அடுத்த நாள்களில் அதே கனவு திரும்பவும் அவனுள் தொடர விடியும்போது தன்னைத் துயரத்தின் சிறகுகள் மூடிக்கொள்வதையும் நாவில் துக்கத்தின் அரும்புகள் பூப்பதையும் உணர்ந்துவந்தான். பெண்ணின் மீதான ஈர்ப்பு மெல்ல அவனுள் சலனம் கொள்ளத் தொடங்கியது. ஒரு மதிய வேளையில் மரியாளின் தகப்பன் ஜோசப்பைக் காண வந்தபோது எங்கும் வெயில் விரிந்து கொண்டிருந்தது. எல்லோரின் பேச்சையும் போல மண உறவு முறிந்துவிடக் கூடுமோ என்ற அச்சம் மரியாள் தகப்பன் முகத்தில் நிழலாடியது. அவர் மரியாளைப் பற்றிப் பேசத் தொடங்கியதுமே தான் அறியாது ஜோசப் தன் தொடர் கனவின் பெருவெளியை நினைவுகொண்டான். எல்லாப் பெண்ணுக்கும் இடையில் இதே இடைவெளி உண்டுமா. அவனுக்கு ஒரே வார்த்தை மட்டும் மரியாள் தகப்பன் பேசியது மனத்தில் சுழன்றது.

“நீங்கள் அவளைப் புறந்தள்ளி விடாதீர்கள்.”

அவன் ஒப்புக்கொண்டுவிட்டான். கர்ப்பத்தில் நூறு இரவுகள் கடந்திருந்த சிசுவுடன் மரியாளைக் கல்யாணம் செய்த நாளில் தன் கனவில் தொடர்ந்தவள் அவள்தான் எனப் பார்த்ததுமே புரிந்தது.

கனவின் விசித்திரங்கள் வாழ்வையும் தொற்றிவிடுவது இயல்புதானே.

மரியாள் வார்த்தைகளற்ற பெண்ணாக இருந்தாள். தச்சுப்பட்டறைக் குள் எப்போதாவது அவள் நடமாடும்போது பலவீனமான அக்கர்ப் பிணியின் கால்கள் நடுங்கிக்கொண்டிருப்பதைப் பார்ப்பான். நாசரேத் தில் மழைக்காலம் தொடங்கியிருந்தது. பகலில்கூட மேகம் இருண்டு சரிகிறது. தெருக்களில் எப்போதும் ஈரவாடை. ஆடுகளின் பம்மிய குரலும் பிச்சைக்காரர்களின் பாடலும் கேட்கும் நாள்கள். ஜோசப் ஒரு கழுதையை விலைக்கு வாங்கிவிட்டான். கழுதை இல்லாமல் பயணம் செய்வது எப்படியாம். ரோம் தேசத்து அதிகாரிகள் ஜனத் தொகைக் கணக்கெடுப்புக்காக யாவரையும் பூர்வ கிராமம் திரும்ப ஆணையிட்டிருந்தனர். ஜோசப் இனி நாசரேத்தில் இருக்க முடியாது தான். அவன் மரியாளை அழைத்துக்கொண்டு பெத்லகேம் நோக்கிப் பயணம் தொடங்கினான். வழியெங்கும் அவனைப் போலவே பிற தேசங்களுக்கு நகரும் பயணிகள் பாதைகளில் எதிர்ப்பட்டனர். மூக்கு விரிந்த கழுதை மிக மெதுவாகவே நடந்தது. தங்கும் விடுதிகளில் கூட்டம் அதிகமாகி மலைப் புடைவுகளிலும், பாறை மீதும் மக்கள் தூங்கி விழித்தனர். உணவுக்கும் அலைபட நேர்ந்தது. எப்போதும் யோசனை கொண்டவள் போல தலைகுனிந்த மரியாள் மாறும் நிலக்காட்சிகளைக் கண்டபடி வந்தாள். செம்போர் மரத்தடியில் உறங்கும் அவளை மங்கிய நிலாவெளியில் கண்டபோது இவள் சூல் கொண்டது வானவருக்கா? இக்குழந்தை ஒரு நட்சத்திரம்தானா என யோசிப்பான் ஜோசப். ஆனாலும் அதை ஒருபோதும் அவளிடம் கேட்டுக்கொண்டவனில்லை. நீலம் படர்ந்த மாலையில் பறவைகளின் துணையில் அவளை விட்டு நீர்க்கிணறு தேடி அலைந்து திரும்பிய போது அவள் தன்வயிற்றில் விரலைப் படரவிட்டு சப்தமாக எதையோ பேசிக் கொண்டிருந்தாள். யாரோடு பேசுகிறாள்? அவன் அருகாமை கண்டதும் குரல் ஒடுங்கிவிட்டது. வழியில் அவர்களோடு இணைந்து கொண்டவர்களில் இருந்த ஆரூடக்காரன் ஒருவன் ஜோசப்புக்குத் தன் சித்திரக் கட்டில் இருந்து மூன்று சீட்டுகளை எடுக்கச் செய்தான். தன் சிறகைத் தானே அறுத்து கையில் ஏந்திய மனிதன் உருவமும், எட்டு மதுக்கோப்பைகளும், சிறகு முளைத்த குழந்தையொன்றும் வந்தது. ஆரூடச் சித்திரங்களை வாசித்து அவன் ஒரு சிறகு முளைத்த குழந்தையொன்றின் தகப்பனாவான் எனவும் அவன் வாழ்வில் புதிர்களின் குவளை நிறையும், தன்சிறகைத் தானே சுமக்கக் கூடிய துயர் கொண்டவன் ஜோசப் எனவும் கூறியபோது மரியாளும் கேட்டுக்கொண்டிருந்தாள். பெத்லகேம் வந்து சேர்வதற்குள் அவள் கால்கள் வீங்கியிருந்தன. மணலேறிய முகம் கொண்டிருந்தாள். ஜனனக் கணக்கெடுப்புக்காரர்களின் குரல் பெத்லகேமிலும் சுற்றியது. தச்சன் ஜோசப் வீதிகளில் சுற்றி அலைந்தான். பல வருடங்களுக்குப் பிறகு திரும்பிய தன் பூர்வீக ஊர், இன்று அடையாளமற்றதாக உருமாறியிருந்தது. பரிச்சயமான மனிதர்கள் எவரேனும் தென்படு வார்களா எனத் தேடி அலைந்தான்.

விடுதிகளில் நின்ற கழுதைக் கூட்டம் ஒன்றையொன்று வெறித்துக்

கொண்டிருந்தன. குடிநீர்க் கிணறுகளிலும் தெரு ஊடேயும் கூட்டம் அலைவுற்றது. இடம் கிடைப்பதற்காகக் காத்துக் கொண்டிருந்தான். மெல்லிய பனி மூட்டம் நிரம்பிய இரவு நிறைந்தது. பேசும் குரல்களும், மனித வேதனைகளும் ஒடுங்கின. தன் வயிற்றில் உள்ள சிசு உலகின் பெரும் வாசலுக்குள் வந்துவிடும் ஆவலுற்றதாக தன் கால் விரல்களால் கர்ப்பப் பாதையின் மூடிய கதவுகளைத் திறப்பதை உணர்ந்தாள் மரியாள். பகிர்ந்துகொள்ள முடியாத கனமும் வேதனையின் விம்மலும் கூடின. தோளை அழுத்திப் பகிர்ந்துகொள்ள ஒரு பெண் இல்லையே என மனம் துவண்டது. அவளுக்குத் திடீரென ஜோசப்பே ஒரு பெண் போலதான் இருந்தான். நடு வயதை எட்டியும் மணமாகாத ஸ்திரியின் பரிசுத்தமும், அர்ப்பணிப்பும் கொண்ட அந்த மனிதன் உறக்கமற்றவனாக அவள் அருகில் அமர்ந்திருந்தான். எதற்காக இத்தனை அர்ப்பணிப்பு கொண்டவனாகக் காத்திருக்கிறான். அவள் உதடுகள் முணுமுணுத்த படியிருந்தன. மரியாளால் எதையும் நினைவு கொள்ளக்கூட இயலவில்லை. ஜோசப் அவள் முகத்தில் தோன்றி ஊடாடுந் துயரைத் தெரிந்துகொண்டுவிட்டான். தருணம் வந்துவிட்டது. இரவில் மூடிய தெருக்களுள் அவன் வேகமாக அலைந்தபடி எங்காவது மறைவிடங்கள் தென்படுகின்றனவா எனப் பார்த்தபடி நடந்தான். சாணத்தின் வாடை பரவிய அந்த மாட்டுத் தொழுவத்துக்கு அவளைக் கூட்டி வந்தபோது இரவு நீண்டு கொண்டிருந்தது.

பிறக்கப்போகும் குழந்தை பெண்ணாகத்தான் இருக்கக் கூடும் என ஜோசப் மனதில் தோணியது. இடையர்களில் மூத்தவன் சொன்னது போல ஒருவேளை கழுதையின் காதுகளோடு பிறந்து விட்டால்? அவன் பனியில் அமர்ந்திருந்தான். உடைந்த குரலும் அழுகையொலியும் முயங்கிய தொழுவத்தில் குழந்தையின் சப்தம் கேட்டது. அவசரத்தோடும், கலக்கம் தெளியாதபடியும் ஜோசப் முன் சென்று பார்த்தபோது வைக்கோல் தாள் படர்ந்த குழந்தை யொன்று தெரிந்தது. அதைக் குனிந்து பார்த்தான். ஆண் குழந்தை. மரியாளின் பழுத்த இமைகள் தாழ்ந்திருந்தன. அசதியும் நோவும் கொண்ட அவளுக்காக ரொட்டித் துண்டுகளைத் தேடி நகர வீதி களை நோக்கிக் களைத்துப் போனான். முதல் பார்வையிலே அந்தக் குழந்தையின் முகம் அவனுள் புதைவு கொண்டது. வெறுப்பும் வசீகரமும் ஒரே அணையில் அவனிடம் சுரந்தது. விடுதியொன்றின் பாதி திறந்த கதவுகளுக்குள் நுழைந்து யாருமற்ற மரமேஜையின் முன் அமர்ந்தபடி அவன் குடித்தான். பனிக்காலத்தின் விடியற்பொழுது எப்போதும் வெண்ணிறம் ததும்ப மலர்கிறது. அவன் திரும்பியபோது இடையர்களில் சிலர் அந்தக் குழந்தையைப் பார்த்தபடி இருந்தனர். யாரோ சிலர் குழந்தையிடம் உப்பின் வாசனையைக் கண்டதாகப் பேசிக்கொண்டனர். கிராமப் பெண்களில் ஒருத்தி உறங்கும் குழந்தை யையும் மரியாளையும் கண்டபடி, அக்குழந்தையின் தகப்பனானவன் எங்கே எனக் கூட்டத்தில் கேட்டபோது, ஒருவன் ஜோசப்பைப் பார்க்க, அவன் தலையைக் குனிந்தபடியே சொன்னான்.

“குழந்தையின் தகப்பன் நானில்லை.”

ஒதுங்கிய வீதியொன்றில் மிகச் சிறிய வீட்டை அவர்களுக்காக அமர்த்தியிருந்தான். மரக் கதவுகளும், பலகை அடைப்பும் கொண்ட அந்த வீடு, புறாக் கூண்டை ஞாபகப்படுத்தியது. குழந்தை பிறந்த ஐந்தாம் நாளில் ஜோசப்புக்கு நீண்ட நாளின் பின்பு ஒரு கனவு வந்தது. அதே பாலையின் பெருவெளி. இப்போது மணற்பரப்பில் முன்னே போய்க்கொண்டிருப்பவள் பெண். அவளது பாதையைத் தொடர்ந்து போய்க்கொண்டிருந்தான் ஜோசப், மாறாத அதே இடைவெளி. மாற்றி வைக்கப்பட்ட காய்களைப் போலக் கனவு சுழன்று இடமாற்றம் கொண்டுவிட்டதா? இம்முறை முன்னால் போகின்றவளின் நடைக்கு ஏதுவாக அவன் தவிப்புடன் நடக்க வேண்டியிருந்தது. முன்னே செல்பவள் தனக்கு நிழல் போல வருபவன் பின் தொடருகிறானா எனக் கூடத் திரும்பிப் பார்க்கவில்லை. அவள் பாதையினின்று விலக முடியாத அரூப ஈர்ப்பு அவனை முன் நடத்திக்கொண்டிருந்தது. உலர்ந்த நாவும் எரியும் சூரியனுடன் வெம்மை தாங்காது மண்டியிட்டு தலை உயர்த்தும்போது விழித்துக் கொண்டான். மரியாளும் ஏதோ கனவில் விழிப்புற்றவள் போல் அமர்ந்திருந்தாள். குழந்தையின் கேசத்தைக் கலைத்தபடி அவனிடம் சொன்னாள்,

“குழந்தைக்கு இயேசு எனப் பெயரிட வேண்டும்.”

எட்டாம் நாளில் ஜெருசலேத்தின் ஆலயத்துக்குள் இரண்டு புறாக் குஞ்சுகளை பலியாகக் கொடுத்துப் பெயரிட மரியாளுடன் கல் படிகளில் நடந்தபோது வயதான ஸ்திரி ஒருத்தி குழந்தையைக் கண்டதும் ஆரவாரித்தபடி குரலிட்டாள்.

“இதோ வானவர், காற்றின் குழந்தை.”

ஜோசப் முகத்தில் வன்மமும் வேதனையும் குழைந்து நிரம்பின. அவன் ஆலயத்தினுள் அவசரமாகச் சென்றான். பிச்சைக்காரர்களின் சங்கீதம் வெளியே பெருகிக்கொண்டிருந்தது. வெளியே வரும்போது ஜோசப்பைப் பார்த்த துரோகி ஒருவன் கத்தினான்,

“கள்ளக் குழந்தைக்குத் தகப்பன் இவன்.”

வீடு திரும்பிய பின்பும் ஜோசப்புக்கு மரியாளின் மகனைப் பெயர் சொல்லி அழைக்க வேண்டும் என்று தோன்றவேயில்லை. அவன் கசப்பில் மூழ்கியிருந்தான்.

மூன்று வான சாஸ்திரிகள் குழந்தையைப் பார்த்துவிட்டுத் தந்ததாக மரியாள் சொன்ன அந்தப் பொருள்களைக் கண்டான் ஜோசப். வெள்ளிப் பேழையும் சாம்பிராணியும் பொன் துண்டுகளும் அங்கிருந்தன. யார் அவர்கள் எதற்காகக் குழந்தையைப் பார்க்க வர வேண்டும். மர்மத்தின் சுழிப்பு குழந்தையின் உடலில் ஓடுகின்றதோ? அவன்

அந்த வான சாஸ்திரிகளைப் பற்றித் தெரிய ஆர்வம் காட்டவில்லை. ஆனாலும் அந்த வான் அறிஞர்கள் வந்துபோனதன் பின்பு சேவகர்கள் அவன் செல்லும் பாதைகளில் ஒளிந்து பின் தொடர்வதும், ரகசியமான குரலில் அவனைப் பற்றிப் பேசிக்கொள்வதாக இருப்பதை உணர முடிந்தது. ஏரோது அரசனின் சிப்பாய்கள் தன்னைத் தொடரக் காரணம்தான் என்னவெனப் புரியவில்லை. மூத்த தச்சன் ஒருவனின் பட்டறையில் வேலையில் இருந்தான் ஜோசப். அங்கும் சிப்பாய்களின் கண்கள் ஒளிர்ந்துகொண்டிருந்தன. முதன்முறையாக பயம் அவனிடம் துளிர்விடத் தொடங்கியது. தன் பின்னே உளவாளிகளின் நடமாட்டம் எதற்காகவாம். அச்சம் தருவதாகவே இருந்தது. இரவில் தனியாக கல்தளம் பாவிய தெருவில் நடந்து திரும்பியபோது மஞ்சள் கலந்த கண்களுடன் எதிர்ப்பட்ட அரசாங்க வீரன் அவனிடம் இறுகிய குரலில் கேட்டான்.

“வான சாஸ்திரிகள் கண்ட குழந்தைக்குத் தகப்பன் நீதானே?”

“நானில்லை” என்றபடி அவன் வேறு தெருவில் நுழைந்து அலைந்தான். வீடு திரும்புவதே நெருக்கடியாகிப்போனது. சப்தம் ஓய்ந்த நள்ளிரவில் வீடு திரும்பியபோதும் படபடப்பு அடங்கவில்லை. வீட்டின் கதவுகள், ஜன்னல்கள் எல்லாவற்றையும் மூடி வைத்தபடி உள் அமர்ந்துகொண்டான். மரியாளும் வெளிறிப்போயிருந்தாள். வீட்டின் புறவெளியில் உளவாளிகளின் நடமாட்டம் தென்பட்டிருக்கக் கூடுமோ. எதற்காக சந்தேகிக்கப்படுகிறோம் என அறியாமலேயே பயம் அவனைக் கவ்விக்கொண்டது. பகல் நேரங்களில் தச்சகத்துக்குச் செல்லாமல் தெருவில் குறுக்கு ஊடாக நடந்து திரிந்தான். அவன் மனது விபரீதத்தின் வாசனையை நுகர்ந்துகொண்டிருந்தது. யோசனையின் பின்பு மரியாளைக் குழந்தையுடன் அழைத்துக் கொண்டு கிழ வேசியொருத்தியின் குறுகிய அறையொன்றுக்கு மாறினான். அவன் நினைத்தது போலவே அன்று வீரர்கள் அவனிருந்த வீட்டின் கதவுகளைச் சிதைத்திருந்தனர். அயல் வீடுகளிலும் அவர்களைத் தேடிக் கேட்கப்பட்டன. பயத்தின் மஞ்சள் பூக்கள் உடலெங்கும் பரவின. நகரை விட்டே வெளியேறிவிட வேண்டியதுதானா? பின் பனிக்கால இரவில் மரியாளை அழைத்துக்கொண்டு வேறிடம் தேடி மாறி அலைந்துகொண்டிருந்தான். பெருகிய நட்சத்திரங்களைக் கண்டபடி கடந்தன குழந்தையின் கண்கள். பகலும் இரவும் ஒளிந்து அலைய வேண்டியதாகியது. பிறந்து பால் குடி மறக்காத குழந்தைகளில் ஒன்றை அரசாணையின் பேரில் வீரன் ஒருவன் வாள் தாக்கி வெட்டிய பகலில் சாவின் விரல்கள் நகரில் தாளமிடத் தொடங்கின. பின் அந்த நகரெங்கும் சிசுக்களின் முடிவற்ற இறப்பும், பெண்களின் துக்க ஒலியும் தீவிரமாயின. சாவின் கால் பதியாத குழந்தைகளே இல்லை. ஜோசப் அறிந்துகொண்டு விட்டான். அவர்கள் புனிதரைத் தேடுகிறார்கள். தன் எதிரில் இருக்கும் இந்தக் குழந்தையின் பொருட்டு இத்தனை மரணமா? இடையர்கள் சொன்னது போல இது துரதிருஷ்டத்தின் குழந்தைதானோ. அவனுக்குப் புரியவில்லை. ஆனால்,

தான் அடையாளம் காணப்பட்டால் கொல்லப்படுவான் என்பது மட்டும் புரிந்தது. தங்கள் குழந்தை எதன் பொருட்டு இறந்தது என்பது கூட அறியாத தாயின் விம்மல் தெருவெங்கும் சுடரிட்டது. குதிரைகளின் குளம்பொலியும், ரத்தம் தோய்ந்த வீரர்களின் கத்திகளும் நகரமெங்கும் பயத்தின் விளைவுகளைத் தூவியபடி சென்றன. மரியாள் நடுங்கும் உதடுகளுடன் அவனிடம் கேட்டாள்,

"என் குழந்தையைக் கைவிட்டுவிடப் போகிறீரா?"

அவன் கோபம் கொண்டவனானான். என்றாலும் அவளது கேள்வியின் உள்புதைந்த பயம் அவனைப் பேசவிடாமல் செய்தது. அவன் ஒரே பதில் சொன்னான்,

"எகிப்தை நோக்கிப் போகப் போகிறோம்."

ரகசியமாக நகர் நீங்கிப் பயணித்த நாளில் அவர்கள் பேசிக் கொள்ளவும் இல்லை. மரணத்தின் சுவையறிந்த செம்பருந்துகளில் சில ஆகாசத்தின் உயர்வில் வட்டமடித்துச் சுழன்றன. உயிராசையில் மூவரும் கடந்து கொண்டிருந்தனர்.

படகுகள் கட்டப்படும் தச்சுப் பட்டறையில் வேலையில் இருந்தான் ஜோசப். முன் அறியாத தேசமாயிருந்தது எகிப்து. சொந்த ஊரினின்று வெகுதூரம் வந்தபோதும் ஏரோதின் வீரர்கள் பற்றிய பயம் கலைய வில்லை. எகிப்தில் பஞ்ச காலம் தொடங்கியிருந்தது. தானியங்களுக்காக மக்கள் அலைந்து திரிந்தனர். கூக்குரலும் கசப்பான சம்பவங்களுமே தினசரியாகிப் போயிருந்த நாள்கள் அவை. மரியாளின் மகனுக்கு ஆறு வயதாகியிருந்தது. பேசக் கற்றிருந்தபோதும் அச்சிறுவன் எப்போதும் மௌனமாகவே இருந்தான். அவனுக்கும் தாய்க்கும் ஊடே எப்போதாவது நடக்கும் பேச்சும்கூட அடுத்த காது அறியாதபடியே இருந்தது. கூர்மையான கண்களும், நீள்முக அமைப்பும் கொண்ட அச்சிறுவன் மிகவும் இறுக்கமானவனாக வளர்ந்து வந்தான். ஜோசப் வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருப்பதைப் பல சமயம் பார்த்துக் கொண்டே இருப்பான். அவனை நேசிக்கவோ, வெறுக்கவோ முடியாத ஊசல் ஜோசப்பிடமிருந்தது. ஆயினும் அச்சிறுவனின் ஈர்ப்பு அவனை உள்முகமாக அழைத்துக்கொண்டே இருந்தது.

மரியாளைவிடவும் தனக்குள்ளாகவே மூடிக்கொண்டிருந்த அந்தச் சிறுவன் ஜோசப்பை ஒருபோதும் தகப்பனாக அழைக்கவே இல்லை. தச்சனும் மரியாளின் மகனே என எப்போதாவது அழைப்பதோடு, பெயர் சொல்லி அழைக்கவும் கூச்சம் கொண்டிருந்தான். பஞ்சம் நீண்டுகொண்டிருந்ததால் தினமும் கள்வர்களும் நோயாளிகளும் நடைபாதை ரோகிகளும் அலைந்து திரிவதைக் காண முடிந்தது. கலைந்து கலைந்து உருமாறிக்கொண்டிருக்கும் தெருவில் எதிர்ப்படும் வேசிகளையும் மூடவாதக்காரர்களையும் மதவெறி ஏறிய கள்வர் களையும் கவனித்தபடியிருந்தான் மரியாளின் மகன். ஜோசப் அவனைச்

சில சமயம் பார்த்துக்கொண்டே இருப்பான். எதைத்தான் கவனித்துக் கொண்டிருக்கிறான். இக்கூச்சல் இவனுக்கு ஏன் இத்தனை வசீகரமாகத் தெரிகிறது. அச்சிறுவன் யாரோடும் ஒட்டாதவனாகவே வளர்ந்தான்.

ஒரே வீட்டில் வசித்தபோதும் மரியாளை ஜோசப் ஒருபோதும் அறியவேயில்லை. எப்போதாவது மிதமீறிய தனிமையில் அவளைப் பற்றி நினைப்பதுண்டு. எதற்காக அவள் இன்னமும் தன்னைச் சுற்றிய கன்னிமையின் வலையை விலக்காமல் இருக்கிறாள். தன்னோடு ஒரே அறையைப் பகிர்ந்துகொண்ட போதும் அவள் தன் மனைவி யில்லையா? நாள்களின் வேகத்தில் தான் ஒரு பெண்ணோடு வாழ்கிறோம் என்ற நினைவுகூட அவனிடமிருந்து பிரிந்துபோனது.

சிறுவன் இயேசு தனியே அலைந்து திரியத் தொடங்கினான். காற்றாலும் சிதைவுற்ற வீடுகளாலும் வசீகரிக்கப்பட்டவனாக வீதிகளில் சுற்றினான். அவனுக்குப் பாதைகளின் மீது பெரும் ஈர்ப்பு இருந்தது. எகிப்துக்கு வரும் பிற தேசவாதிகளின் பாதைகளை அவன் அறிந்து வந்தான். அவனுக்கு நண்பர்களே இல்லையோ எனும்படியானது. ஆனாலும் அவன் ஏலச் சந்தையில் அலைந்து திரியும் கானான் தேசப் பெண் துரோகி ஒருத்தியின் பார்வையற்ற மகனுடன் நட்பு கொண்டிருப்பதை தச்சன் ஜோசப் ஒரு முறை கண்டான். நோயுற்ற ஸ்திரி திடலின் பின்புறமிருந்த குதிரை லாயமொன்றில் தங்கியிருந்தாள். பார்வையற்றவனாகியிருந்த போதும் அச்சிறுவன் சப்தமிட்டோ, விரல் தடவியோ வழி கேட்பதேயில்லை. எதிரில் உள்ளதை உணர்ந்து கொள்பவனாக வளர்க்கப்பட்டிருந்தான். நெபு என்னும் அந்தச் சிறுவனுடன் நடந்து அலையும்போது மரியாள் மகனுக்குப் பொருள் களின் வேறு ரூபங்கள் தென்படத் தொடங்கின. நெபு பல தேசங்களை யும் கண்டிருக்கிறான். தொலைவில் பறக்கும் பறவைகளைக்கூடத் தன் உள் உணர்வின் வழி என்ன பறவையது என்றும் அறிபவனாக இருந்தான்.

ஆற்றின் கரையோரமாக நெபுவோடு நடந்துபோனபோது மரியாளின் மகன் கேட்டான்,

“எதிரில் இருப்பது என்னவெனத் தெரிகிறதா?”

நெபு உடனடியாக பதில் சொன்னான்.

“ஒளி ஓடிக்கொண்டிருக்கிறது.”

இயேசுவுக்குப் புரிந்தது போல இருந்ததென்றாலும் கேட்டான்.

“தண்ணீர் இல்லையா?”

நெபு தன் பதிலை உறுதியாகச் சொன்னான்.

“தண்ணீரை நாம் காண முடியாது. நாம் பார்ப்பது ஒளி.”

அறியப்படாத தண்ணீரின் முணுமுணுப்பைப் பேசியவாறு அன்று நடந்தனர். பின் ஒரு வேளை தினா குருவிகளை விற்கும் முதியவனின் முன்பாக, வானத்தின் பரிச்சயம் விடுபட்ட குருவிகளுக்குத் துயரம்

இருக்காதா எனப் பேசியபோது நெபுவின் பதில் விசித்திரமாக இருந்தது.

"குருவிகள் எதையும் ஆசைகொள்வதுமில்லை, ஞாபகம் வைத்திருப்பதுமில்லை."

நெபு தன் தாயைக் கூட்டிக்கொண்டு பகல் முழுவதும் அலைவான். இந்த நகரம் அவனுள் வரைபடம் போல விரிந்திருந்தது. ஸ்நேகத்தின் பிடி இறுகியபடி நீள, இயேசு அந்தச் சிறுவனோடு பேசக் காத்திருந்தான். குதிரை லாயத்துக்குத் தன் தாயின் உறவுக்காரப் பெண்ணைக் காட்டக் கூட்டிப் போனான் நெபு. முதிர் வயதாகிக் கிழப் பெண்ணான அவள் கண் இமைகள் தொங்கிக்கொண்டிருந்தன. அவள் சிறிய குவளையில் உலர்ந்த திராட்சைகள் சில வைத்திருந்தாள். வயது அவள் உடலெங்கும் வளையமிட்டிருந்தது. அவளுக்கு வான்கோழியைப் போல முகமிருந்தது. மரியாளின் மகனைத் தன் நீண்ட விரல்களால் தொட்டபோது சொன்னாள்,

"இவன் உப்பைப் போல இருக்கிறான்."

பிச்சைக்காரர்களின் அந்தரங்க உலகினுள், விளிம்பில் பதுங்கி வாழும் மனிதர்களின் இருண்ட தினசரி வாழ்வுக்குள் அந்தச் சிறுவர்கள் இருவரும் நடந்து அலைந்தனர். பசியின் பெருநாக்கு அங்கு சுழன்றபடியாக இருந்தது. ஆறுதல் வேண்டிய குரல்கள் எங்கும் வெடித்தன. உலகம் துயரத்தின் கூடாரம் போல இருந்தது. தான் தேடி வந்தபோதும் இரண்டு நாள்களாக நெபுவைக் காணாது அலைவு கொண்டான். நெபு நதியின் அருகாமையில் இருந்தான். நோயுள்ள அவனது தாய் இறந்திருந்தாள். சவ அடக்கத்துக்கும் வழியற்றவர்களாக அவளை நதியில் தூக்கி எறிந்து போயினர். நெபு மென்குரலில் சொன்னான்.

"மரணத்தின் நீண்ட வாள் எல்லோரின் தலை மீதும் தொங்கிக் கொண்டு இருக்கிறது."

தாயின் இறப்பு நெபுவை இறுக்கவில்லை. அவன் முகம் சந்தோஷம் கண்டவன் போலத்தானிருந்தது. நெபு தண்ணீரைக் காட்டினான். மீன் குஞ்சுகள் அலைந்தன.

"தண்ணீரில் தவழும் நூற்றுக்கணக்கான மீன்களாகிவிட்டாள் என் தாய். இனி நதியெங்கும் அவள் இருப்பாள்." அதன்பின்பு நெபு, யாரிடத்தும் சொல்லாது பயணிகள் கூட்டத்தோடு நகரை விலக்கிப் போய்விட்டான். பிரிவின் கொடி சுற்றிய மரியாளின் மகனும் மறுநாள் காணாமல் போயிருந்தான்.

தேடிக்கொண்டு போனார்கள் அந்தச் சிறுவனை. மாலையின் கூச்சல் நீண்ட தெருக்களில் அவனைத் தேடி அலைந்தான் தச்சன் ஜோசப். சந்தை வியாபாரிகளும் சூதாட்டக்காரர்களும் நிறைந்த

விடுதியில் தேடி அலைந்தபோதும் அவனைக் காண இயலவில்லை. அவன் காணாமல் போனதுமே மரியாளின் குரலில் அச்சம் கலந்தது.

"யாராவது அடிமையாகப் பிடித்து விற்றுவிடப் போகிறார்கள்."

அடிமைகளின் வியாபாரம் நடக்கும் பொது மேடைகளின் பின் பகுதியில் சிறுவர்கள் கூட்டமாக அமர்ந்திருந்தனர். மொட்டை அடிக்கப்பட்ட தலையும் பருத்த விழிகளும் கொண்ட அந்தக் கறுப்பு உருவங்களின் ஊடே மரியாளின் மகனும் இருக்கிறானா எனத் தேடினான். இருள் படிந்த மது விடுதிகளின் சுவர்களுக்குள் கூட அடிமைச் சிறுவர்கள் கைமாற்றப்படுவார்கள் எனக் கேள்வியுற்ற செய்தி வழி அவன் மது விடுதியின் ரகசியக் கதவுகளைத் திறந்து உள்ளே அலைந்தான். எங்கும் மதுவின் நெடி சுழன்றது. தச்சன் ஜோசப் அடிமை வியாபாரிகளில் ஒருவனோடு உள் அறைகளுக்குள் போனான். எங்கும் பெண்கள், நிர்வாணிகளாக, ஒரே அறையில் படுக்கக்கூட இடமற்றவர்களாகச் சுருண்டு ரயில் பூச்சிகள் போலக் கிடந்தனர். இரவெல்லாம் நகரின் விடுதி விடுதியாகத் தேடி அலைவுற் றான். அந்தச் சிறுவன் எவர் வழியாகவாவது கப்பலில் கடந்து போயிருக்கலாமோ, அல்லது எவர் படுக்கை அறையில் மதுக்கிண்ணம் நிரப்பும் ஊழியனாக நியமிக்கப்பட்டிருப்பானோ. குழப்பத்தின் வால் சுழன்றது. அன்றிரவு ஜோசப் தனியே வீடு திரும்ப மனமற்ற வனாகக் குடித்துக்கொண்டே இருந்தான். விசித்திரமான கதவுகளைத் தட்டித் தேடி, அலையும் அன்றைய நாள் முடிவுறும் வேளையில் அவன் வீடு திரும்பியபோது மரியாளும் அந்தச் சிறுவனும் உறங்கிக் கொண்டிருந்தனர். ஜோசப்பின் வருகையொலி அறிந்த அவள் மகன் உறக்கத்தினின்று விழித்து அவனைப் பார்த்து மெலிதாகப் புன்னகைத்தான்.

பெத்லகேம் வழியில் சந்தித்த ஆரூடக்காரனை நீண்ட நாள்களுக்குப் பிறகு எகிப்தில் சந்தித்தான் தச்சன் ஜோசப். ஆரூடக்காரன்தான் அதையும் அடையாளம் கண்டவன். யூதேயாவின் ஏரோது ராஜன் இறந்துவிட்டான் என்றான். அவனது வாழ்நாளின் முடிவில் துர் சொப்பனங்கள் அவன் மீது சுழன்றதாகவும், அதனினின்று மீளமுடியா மல் இறந்து போனதாகவும் சொன்னான். ஏரோது ராஜனின் உடலில் இறந்த குழந்தையின் வாசனையை முதலில் கண்டவன் அவனது பட்டத்தரசி. நாளுக்கு நாள் ஏரோதின் உடலில் அந்தப் பிணவாடை பெருகியபடி வந்ததென்றாள். தானே அந்த துர்வாசனையை நுகர்ந்தாள் என்பதால், மீளமுடியாத அந்த துர்வாசனைக்குப் பயந்தவளாக, தைலவாசனை கொண்ட நீர்க்குளியல்களும், நறுமணத் திரவியமும் பூசித் தன் உடலை ஒருமிக்கச் செய்தபோதும் சாவின் வாசனை அவள் தொலைவில் வரும்போதே வீசத் தொடங்கிவிட்டதையும், தன் உடலில் உள்ள மனக் குழப்பத்துக்கு தட்டிப் போக மரணத்தின் நிஜவாசனையை நுகர்ந்துவிட்டான். கால்வாய் வழியே வடியத்

தொடங்கியது. அந்த ஆரூடக்காரன் தன் குரலை மெதுவாக்கிக் கேட்டான்.

"வானவர் நலமாக இருக்கிறாரா?"

அவன் குறிப்பிடுவது மரியாளின் மகனை என அறிந்தபோதும் ஜோசப் இறுக்கமான குரலில் சொன்னான்,

"என்னோடு அப்படி யாருமில்லை."

நாசரேத்துக்குத் திரும்பி வந்தனர். எகிப்தினின்று முற்றாக மாறியிருந்தது ஊர். இயேசுவுக்குப் பன்னிரண்டு வயதாகிக் கொண்டிருந்தது. மரியாள் யாரிடமும் சொல்ல முடியாத மனத்தின் ரகசியங்களைத் தனியே பின்னிக் கொண்டபடி நாள்களைக் கடத்தி வந்தாள். தனது வேலைகளைத் தவிர வேறு எதிலும் ஆர்வமற்றவனாகிப் போயிருந்தான் தச்சன். அலைச்சலும் மூப்பும் அவனையும் கவ்விக் கொண்டு இருந்தன. வெயில் காலத்தில் அவனைத் தேடி வரும் இடையர்கள் சிலருடன் எப்போதாவது வெளியே போவதைத் தவிர்த்ததால் அவன் தச்சுக்கூடத்திலே கிடந்தான். கோடைக் காலத்தின் உக்கிரம் மழையாக மாறி உருக்கொண்ட நாளில் அவன் எவனையோ சந்திக்க நகரின் புறவெளிக்குச் சென்றான். உரத்த மழையும், காற்றும் பரவிய புறவெளியில் காற்றில் சிக்கிக் குரலிட்டன சேவல்கள். ஈரத்தின் ஊடே அலைந்தபோது வானின்று இறங்கி வரும் பெரும் மின்னலின் வடிவத்தைக் கண்டான். அது ஒரே பாய்ச்சலில் பூமியைக் கண்டது. மரங்களின் சதையைப் பிய்த்து நிலத்தை ஊடுருவிச் சென்ற அந்தப் பேரொளியில் வீழ்ந்து கிடந்தான் தச்சன். இடையர்களில் ஒருவன் அவனைத் தூக்கி வந்தான். முதலாக மரியாள் அவனைக் கண்டபோது பயம் கொண்டாள். இறந்து விட்டானா? ஒளியின் பெருவளையம் சுற்றிய அவன் உடல் நடுக்கம் கொண்டபடியிருந்தது புலப்படும். அச்சமும் மாறி மாறிச் சுழன்றன. விழிப்பதும் சில நிமிஷங்களில் மீண்டும் கண் மூடுவதுமாகத் தொடர்ந்து அவன் முன் அமர்ந்திருந்தாள் மரியாள். இரவில் அவனைக் கண்ட மரியாள், ஒரே வீட்டில் யாரோடும் உறவற்ற மூவர் வாழ்ந்து வருவதன் பொருள்தான் என்ன என யோசனை கொண்டாள். தனிமையின் சுவர் அவர்களின் ஊடே வளர்ந்து நின்றது. பிதற்றலான இரவில் அவன் மனத்தின் உள் ஒளிந்த வாசகங்கள் வெளிப்பட்டன. அவன் மரியாளின் மகனைப் பெயர் சொல்லி அழைத்தான். தான் அவனது தகப்பனென அழைக்கப்பட வேண்டுமெனப் பிதற்றினான். வெயில் பிரகாசித்த மறுநாளில் அவன் புத்துயிர் கொண்டவன் போல எழுந்து நடமாடத் தொடங்கினான். பால்ய வயது கடந்துவிட்ட மரியாளின் மகனுக்கு வாலிபத்தின் ரேகைகள் ஓடத் தொடங்கியிருந்தன.

திரும்பவும் வீட்டினின்று வெளியேறிக் காணாது போயிருந்தான் மரியாளின் மகன். மின்னலின் வளையங்கள் சுற்றிய அசதி கொண்ட ஜோசப் பலவீனமான மனிதனாக இருந்தான். மரியாளின் பிரியத்தின் முடிச்சுகளை அவிழ்த்துக்கொண்டு போயிருந்தார் இயேசு. இம்முறை அவனைத் தேடிக் காணச் செல்லவில்லை மரியாள். தனியே கண்ணீர் விடவும் இல்லை. நத்தையைப் போலத் தனக்குள் சுருண்டுகொண்டு விட்டாள். ஆனால் அவனது பிரிவு தச்சன் ஜோசப்பின் மனத்தில் நீண்ட விரிசலை உருவாக்கியது. அவன் யோசித்தபடி இருப்பான். ஒருவேளை பலரும் சொல்வது போல அவர் புனிதரா? அவன் தன்னோடு ஸ்நேகமற்றவனாகப் போயிருக்கக் கூடும். ஒரு புனிதராக ஸ்நேகிக்க இயலாதவனாகிவிட்டேனா. இல்லை புனிதர் தன்னைப் புறம் ஒதுக்குகிறாரா? நினைவு தப்பி இடம் மாறியது. பிறப்பு முதலே இயேசுவின் பொருட்டு அலையுற்றதின் பின் காட்சிகள் விரியத் தொடங்கின. தன்னைப் பிரிந்துபோன இயேசுவுக்காக ஏங் கினான் ஜோசப். ஒருவேளை அவன் தான் வாலிபத்தில் இருப்பதைப் போல இருக்கிறான் என்பதால் ஈர்ப்பு பெருகுகிறதா? இடையர்களிடம், பயணிகள் வழியிலும் இயேசுவைத் தேடி விசாரித்தான் ஜோசப்.

அடையாளமற்ற ஏதோ நிலவெளியில் அந்த வாலிபன் அலைந்து திரியக்கூடுமோ. நிசப்தம் கொட்டிய மரியாளின் வீட்டுக் கதவுகள் கூடத் துயரமேறி இருந்தன. நினைவின் ரகசிய அறைப்படிகளில் இறங்கி இறங்கி இயேசுவின் பிரியத்துக்காகக் காத்துக் கொண்டிருந்தான் தச்சன் ஜோசப். பனிக்காலம் நினைவுகளைப் பெருக்குகிறது. தான் புனைத்து வைத்து நேசம் கசிவதை உணர்ந்த தச்சன் வீட்டில் இல்லாதுபோன இயேசுவின் பெயரை மெதுவாகக் குரலிட்டபோது, அது மரியாளின் காதில் வீழ்ந்திருக்கக் கூடும். அவள் கண்கள் திரும்பின. உன் மகன் புனிதர்தானா? எனக் கேட்க விரும்பியவன் போல ஜோசப் உதடுகள் நடுங்கின. அவன் கேட்கவில்லை. நலிவுற்ற உடல் மிகுந்த அசதி கொண்டது. மீண்டும் ஒரு கனவு கண்டான். அதே மணல்பரப்பு. தன் முன்னே நடந்து செல்பவன் மரியாளின் மகன். அவனைப் பின்தொடர்ந்து போகிறான் ஜோசப். இருவருக்குமான இடைவெளி விரிவதும் நெருங்குவதுமாக இருக்கிறது. இயேசுவானவர் பின் திரும்பி ஜோசப்பை நோக்கி எதையோ சொல்வது கேட்டது. காற்று அக்குரலைச் சுழற்றிச் சிதறியது. அக்குரல் திரும்பவும் அருகில் வரும்போது கேட்டுவிட ஆவலுற்றவனாகத் தலையைச் சிலுப்பிக் கனவினின்று விழித்த தச்சன் ஜோசப் யாரிடமோ பேச முயன்றவன் போல உதடு திறந்து பேசாமலே இறந்துபோனான்.

பிரசங்கத்துக்காகத் தனது சீடர்களுடன் அந்த ஊருக்குள் பிரவேசித் திருந்தார் இயேசு. இடையர்கள் நிரம்பியிருந்தனர். பாறைகளின் மீதேறி அவர் பேசிய பின்பு கூட்டம் கலைவுற்றது. தன் சீடர்களுடன்

வழியில் நடந்த இயேசுவின் அருகில் வந்த இடையன் ஒருவன் கேட்டான்.

"நீ தச்சன் ஜோசப்பின் மகன்தானே."

அவர் இடையனுக்கு பதில் சொல்ல முயன்றவரைப் போலப் புன்னகைத்துவிட்டு நிற்க, சீடர்களில் பேதுரு சொன்னான்.

'இவர் தேவகுமாரன்.'

பதிலால் திருப்தியுறாத இடையன் கடந்து போய்விட்டான். இருப்பிடம் திரும்பிய இயேசுவின் காதில் இடையனின் குரல் திரும்பவும் கேட்டது. செம்பறையின் நிழலைப் போல ஜோசப் தன்னைத் தாங்கியிருந்ததின் நினைவு விரிந்தது.

அதிசயங்கள் நிகழ்த்திக் காட்டுகிறார் இயேசு எனச் செய்தி எங்கும் பரவியிருந்தது. அவரால் பார்வை தரப்பட்டவனும், முடவாதக் காரனும் கண்டவர்களாக மக்கள் பிரசங்கத்தினின்று திரண்டிருந்தனர். அவர் பறவைகளைப் பற்றிப் பேசத் தொடங்கினார். வந்திருந்த மக்கள் கூட்டத்துக்குள் உணவும் தண்ணீரும் தந்துபோன சீடர்களில் சீமோன் பிளவுற்ற பாறையடியில் நின்றிருந்த ஒருவன் முன் வந்தபோது, நின்றிருந்தவனின் முகத்தை எங்கோ கண்டவன் போல திகைப்புறும் முன்பு, அவ்விடத்தில் அந்த மனிதனில்லை. போயிருந்தான். அங்கு வந்து நின்றவன் தச்சன் ஜோசப்தானே. அவன் இறந்து போனவ னில்லையா? எப்படி திரும்பி வந்தான். மறு உயிர்ப்பு கொண்டுவிட் டானா? சீமோனுக்குப் புரியவில்லை. ஆனால் அதன் பின்பு பிரசங் கத்தினுள், தெருக்களிலும் தச்சன் ஜோசப்பைக் கண்ட பல சீடர்களும் அதை இயேசுவிடம் சொல்லவே இல்லை. தாங்கள் பார்த்த ஜோசப்பின் முகம் தவிப்பின் தீவிரம் கொண்டு இருந்தது ஏன் என மட்டும் அவர்களுக்குப் புரியவே இல்லை.

சிலுவையில் அறைந்துவிட பிலாத்துவின் சபை சொன்னதை அறிந்த மரியாள் உப்பைப் போலக் கரைந்துகொண்டிருந்தாள். முதல் முறையாக அவளுக்கு இயேசுவின் தண்டனை, ஜோசப்பை நினைவுகொள்ளச் செய்தது. அவள் ஜோசப்புக்காகக் கண்ணீர் விட்டாள். வாழ்வின் சுவையை ஒருபோதும் அறிந்திராத அந்தத் தச்சன் நினைவு இலை இலையாக உதிர்ந்தது. அன்றிரவு வசீகரமற்ற நட்சத்திரம் ஒன்று தனியே நடுங்கிக்கொண்டிருந்தது வானில். தன் வீட்டின் எதிரே ஒரு மனிதன் நின்று கொண்டிருப்பதைக் கண்டாள். அவனிடம் அசைவே இல்லை. அந்த உருவம் சட்டென அவள் நினைவில் சரிந்து புலப்பட்டது. தச்சன் ஜோசப்பேதான். எதற்காக வாசலில் காத்திருக்கிறான். இது நிஜம்தானா? யோசிக்காது மரியாள் வீட்டினின்று வெளியேறி அவன் இருக்குமிடம் நோக்கி நடந்தாள். அவள் வரும்போது தச்சன் தெருவின் கடைசியில் நின்றான். அவள் அவனை அழைக்க விரும்பினாள். ஆனால் என்றைக்கும் போலத் தீராத இடைவெளி அவர்கள் இருவர் இடையினுள் நீண்டுகொண் டிருந்தது.

கொல்கொதாவின் வழிகளில் கூட்டம் நிரம்பியிருந்தது. அவர் இரண்டு கள்வருக்கு நடுவே சிலுவையில் அறையப்பட இருந்தார். அந்தக் கள்வர்களின் மனைவியும் குழந்தைகளும் பிறர் அறியாதபடி தங்களை மறைத்துக்கொண்டு கூட்டத்தில் நின்றனர். இரண்டு கள்வர்களில் வயது மூத்தவன் காலின் விளிம்பில் நின்றபோதும் முகவாட்டம் கொள்ளாதவனாகவும், துஷ்டத்தின் மீது ருசி கொண்டவனாகவும் இருந்தான். மற்றவன் தன் மரணத்தை அறிந்துகொண்டவனின் சாந்தம் படர மௌனித்திருந்தான். கூட்டத்தில் அந்தத் திருடர்களின் பிள்ளைகள் தங்கள் தகப்பனின் சாவைக் காண நின்றிருந்தனர். துஷ்டத்தனம் கொண்ட கள்வன் என்றபோதும் அவன் மீதும் தீராத நேசம் கொண்ட பெண்ணாக இருந்த திருடனின் மனைவி குனிந்து விசும்பிக்கொண்டாள். இன்னொரு திருடனின் மனைவியின் கண்கள் மரச்சிலுவையைக் கண்டன. கூட்டத்தின் நடுவே இருந்த தனது தாயாகிய மரியாளைக் கண்டார் இயேசு. தன் சீடர்களில் ஒருவனை அழைத்து அவள் முன்னே 'இதோ உன் மகன்' எனக் கூறியபடி முன் நடந்தார். அவமதிப்பும் தூஷணைகளும் நிறைவேறின. சிலுவையில் அறையப்பட்டார். அவரது கடைசிக் குரல் ஏலீ! ஏலீ! என உயர்ந்தது. இமைகள்தானே கவியத் தொடங்கின. கடைசி முறையாக ஜனத்திரளைக் கண்டபோது அவர் பார்வையில் ஓர் உருவம் பட்டுக் கலைந்தது. அது ஜோசப்தானே? விழித்தும் பார்த்தார். வேட்கை ததும்பும் முகத்துடன் நிற்கும் ஜோசப்பின் கண்கள் எதையோ யாசித்தன. அவன் கண்களில் உள்ள அந்த உலர்ந்த ஆசையை அறிந்தார். நீ தச்சன் ஜோசப் மகன்தானே. மனது ஜோசப்பைத் தந்தையே என விளிக்க நினைத்து ஏலீ! என வெளியானது. இக்குரல் ஜோசப்புக்காகத்தான் எனச் சொல்லப்படுவதற்கு முன் அவரது இமைகள் தானே மூடிக்கொண்டுவிட்டன.

ராமசாமிகள் வம்ச சரித்திரம் மறைக்கப்பட்ட உண்மைகள்

முற்றிலும் எதிர்பாராத காலையைச் சந்திக்க நேர்ந்தது. வரிசை வரிசையாக நகரும் ஜனக்கூட்டம். எங்கிருந்து புறப்பட்டு வருகிறார்கள் என்பது தெளி வில்லை. ஜெமினி மேம்பாலத்தின் மீது உட்கார்ந்து காலைத் தொங்கவிட்டபடியே பலர் பேசிக்கொண்டி ருக்கிறார்கள். குதிரை வீரன் சிலை மீது இருவர் தொற்றியபடியே புகைப்படமெடுத்துக் கொண்டிருந் தனர். பீச் ரோட்டில் இதைவிடவும் ஜனத்திரள் அதிகமெனச் செய்தி வந்தபடியிருந்தது.

யாருடைய திட்டமெனத் தெரியவில்லை. முன் எப்போதும் இதுபோல நடந்திருக்கிறதா என்பதுகூட சந்தேகமே. ராமசாமி என்னும் பெயருள்ள எல்லோ ரும் ஒரே இடத்தில் கூடி மாநாடு நடத்துவது மனிதகுல சரித்திரத்தில் இதுவே முதல் தடவை எனச் செய்தித்தாள்களில் அச்சேறி இருந்தது. உல கெங்குமிருந்து ராமசாமிகள் புறப்பட்டு வந்தபடியே இருந்தனர். பெயரில் என்ன இருக்கிறது என விட்டு விட முடியாது. ராமசாமிகளும் மற்றப் பெயர்களும் ஒன்றா என்ன!

ராமசாமிகளே ஒன்று சேருங்கள், உங்கள் உலகம் சீரணி அரங்கில் உருவாக உள்ளது எனத் தமிழகமெங் கும் அறைகூவல் விடப்பட்டிருந்தது. நகரெங்கும் வால்போஸ்டர்கள், பேனர்கள். மூன்று நாள்கள் நடக்க இருந்த மாநாட்டுக்கு இலக்கிய, விவசாய,

மருத்துவ, மொழியியல், அரசியல், தத்துவ, போஸ்ட் மார்டனிச, சமூக, மத, யதார்த்த; அதார்த்த, ஸ்ட்ரக்சுரலிச, வித்தக, முத்தமிழ் ராமசாமிகள் பலர் கலந்து கொள்கிறார்கள் என்ற விவரம் உலக மெங்கும் பரவ, ராமசாமி அல்லாதவர்கள் பரபரப்பாகச் செய்திகளைக் கேட்டுக் கொண்டிருந்தனர்.

மாநாட்டின் சிறப்புப் பிரதிநிதிகளாக காங்கோ நாட்டின் உம்பர்ட்டோ ராமசாமியும், நுவா தேசத்தின் எட்வர்ட்டி ராமசாமியும், பிரபல சூப்பர் ஸ்டார் நடிகரும், ஹாலிவுட்டின் மொழியியல் அறிஞருமான ஆர்னால்ட் ராமசாமி ஸ்வாஸ் நெக்கர் அவர்களும், இன்னும் ராமசாமிஸ்கி, சூ என் ராமசாமி (ஐ.நா. சிறப்புத் தூதுவர்) எனப் பலரும் வருகை தர இருந்தனர்.

லட்சக்கணக்கான ராமசாமிகள் ஒன்றுதிரண்ட அந்த நாட்களைப் பற்றிய வரலாற்று உண்மைகள் எந்தச் சார்புமற்று ஆன்ம ஒளியில், சுயப்பிரகாசமாக உங்கள் முன் என்னால் முடிந்தவரை நான் விவரிக்க விரும்புகிறேன். என் புலன்களின் வழியே செய்தி நிறைந்து கொண்டிருப்பதால் நான் சில செய்திகளை விட்டுச் சிலவற்றைக் கற்பனை வழியின் நீட்சியில் உங்களிடம் விவரிக்கிறேன்.

ராமசாமிகள் நேற்றே ரயிலில், லாரிகளில் வந்து குவியத் தொடங்கி விட்டார்கள். தாம்பரம் ரயில் நிலையத்தில் எட்டாயிரம் ராமசாமிகள் டிக்கெட் வாங்காமல் பிடிபட்டு நிற்பதாகத் தகவல் வருகிறது. ராமசாமிகளின் மாநாட்டுக்காக எல்.ஐ.சியின் பதினான்கு மாடிகளும் காலி செய்யப்பட்டுவிட்டன. எல்லா மாடியிலும் ராமசாமிகள் நிறைந்துவிட்டார்கள். துவைத்துக் காயப்போட்ட ஈர வேஷ்டிகள் படபடக்க எல்லா ஜன்னல்களிலும் ராமசாமிகளின் தலை தெரிகின்றது. ஒரு வயதிலிருந்து வயதைப் பற்றிய பிரக்ஞை மறந்த நிலை வரை பல ராமசாமிகள் திரிகிறார்கள். முக இயல்பு மாற்றம் கொண்டு திரிகின்றனர். யாரோ ஒருவன் ராமசாமி எனக் கைதட்டிக் கூப்பிட அலை போல பல வயது முகங்கள் திரும்புகின்றன நான்கு கோடி ராமசாமிகள் ஒன்று சேர்ந்திருக்கிறார்கள் என பி.பி.ஸி. ரேடியோ அதிகார பூர்வமாக அறிவித்தது. சீரணி அரங்கில் சுழல் மெத்தை அமைக்க இருநூறு ராமசாமிகள் இரவு பகலாக வேலை செய்தனர்.

மாநாட்டுப் பந்தலின் வெளியே தியாகி ராமசாமிகளின் திருவுருவப் படங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. எல்லோர் முகமும் ஒன்றுபோல் இருந்த ராமசாமிகளின் உருவப்படங்களை ராமசாமிகளே கண்டனர். வணங்கினர். எல்லாத் திருவுருவப் படங்களின் அடியிலும் உப்புப் பொட்டலம் வைக்கப்பட்டிருந்தது. உப்புக் காய்ச்சிய ஞாபகம் மீண்டும் நினைவு வர ராமசாமிகள் உப்பைச் சுவைத்தபடியே தியாகிகளுக்காகக் கண்ணீர் வடித்தனர்.

மாநாட்டுக்காக ஜோதி கொண்டு வருவது அந்தமானிலிருந்து தியாகி ஆராவயல் ராமசாமியின் கடமையாக இருந்தது. ஆயிரம் ராமசாமிகள் ஒன்றுதிரண்டு அந்தமானிலிருந்து கப்பலில் புறப்பட்டனர்.

துறைமுகத்தில் பல ராமசாமிகள் கையசைத்து வழியனுப்பினர் கப்பலெங்கும் ராமசாமிகளின் முகங்கள். கப்பல் கூரை மீது அமர்ந்து தியாகி ஆராவயல் ராமசாமி சுதந்தர உரையாற்றினார். அதன் கருத்தாழமிக்க சில பகுதிகள்:

"ராமசாமிகளே! ராமசாமி என்பதும் மற்றப் பெயர்களும் ஒன்றல்ல என்பதை அன்றே நாம் ஆங்கிலேயருக்கு நிரூபித்தோம். ராமசாமி என்பது தமிழ் அடையாளம். உலகெங்கிருந்தாலும் ராமசாமி தன் இயல்பை விட மாட்டான். ராமசாமிகள்தான் தமிழ் வாழ்வை, அரசியலை, தத்துவத்தை, இலக்கியத்தை நூற்றாண்டுகளாகக் காத்து வருகிறார்கள். சந்திரனில் காலடி வைத்த முதல் நபர் ராமசாமியே. சரித்திரம் அதை மறைத்துவிட்டது. ஆனால் வரலாற்றின் பக்கங்கள் ராமசாமிகளால் நிறைந்துள்ளதை எவர் மறுக்க இயலும். (கைத்தட்டல்) நம் அபிமான தத்துவஞானி ஹெகல் ராமசாமி, சொல்லுவது போல 'ராமசாமி மாறாத பெயர்' ஆகும். ராமசாமிகளின் எதிர் காலத்தை இந்த மாநாடு தீர்மானிக்கும் ராமசாமிகளே!"

இந்த உரை முடிவதற்குள் கடலில் சீற்றம் அதிகமாகி அலைகள் கப்பலைவிட உயர்ந்து வீசத் தொடங்கிவிட்டன. அலையின் பிடியில் திசை தவறியது கப்பல். இரவெல்லாம் அலை சப்தம் கேட்டு உறங்கிக் கிடந்த ராமசாமிகளுக்கு கடலில் பிறந்த மஞ்சள் நோய் தாக்க அடுத்த நாளின் பிற்பகலில் 999 ராமசாமிகள் இயற்கை எய்திவிட்டனர். சரிந்து கிடக்கும் உடல்கள் உப்பு நீரில் மிதக்க கப்பலின் உயர்தளத்தில், நின்றபடி தன் பயத்தைப் போக்கிக்கொள்ள ஆராவயல் ராமசாமி "தாயின் மணிக்கொடி பாரீர்!" என்ற பாடலைப் பாடினார். 999 ராமசாமிகளின் உடலோடு கப்பல் திசை தப்பி அலைந்தபடி இருந்தது. தனி ஆளாகப் பிணங்களுடன் இருந்த ஆராவயல் கடலை வெறித்துக் கொண்டிருந்தார். பறவைகள் கப்பலைச் சுற்றி வட்டமிட்டன.

ராமசாமிகளின் வரலாற்றில் நடந்த துயரச் சம்பவம் அறியாது சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனில் கூட்டம் அலைமோதியபடி வந்து இறங்கிக்கொண்டிருந்தது. மாநாட்டுக்காகப் பிரபலக் கவிஞரான தெப்பக்குளம் ராமசாமி, நவீன விமர்சகரான சுண்டுவிரல் ராமசாமி, உலக நாவல்களை மட்டுமே எழுதும் நீர்வீழ்ச்சி ராமசாமி, இன்னும் ஆர்ப்பாட்டம் ராமசாமி, யதார்த்தம் ராமசாமி அவர்களின் அன்பர் கள், வாசகர்கள்,. ரசிகர்கள், நேசர்கள், பிரியர்கள், தற்கொலைப் படை எனப் பல ராமசாமிகள் இந்த ராமசாமிகளுடன் இணைந்து கன்னியாகுமரியிலிருந்து சென்னை வந்த இலக்கிய ஸ்பெஷல் ரயிலில் வந்துகொண்டிருந்தனர்.

ஒவ்வொரு ரயில் நிலையத்திலும் எழுத்தாள ராமசாமிகளைக் காண மற்ற ராமசாமிகள் முட்டி மோதிக்கொண்டு நின்றனர். ராமசாமிகளின் வாசகங்கள் அடங்கிய அட்டைகள் பிளாட்பாரமெங் கும் அடுக்கப்பட்டிருந்தன. பிளாட்பாரத்தில் ரயில் வந்து நின்றது.

“சூடான நாவல் சார், சூடான சிறுகதை சார், கவிதை... சார். நாவல் சார். கவிதை சார், கதை சார்...” எனப் புஸ்தகங்களைக் கூவிக்கொண்டு விற்றுக்கொண்டு போனார்கள் நீலநிற ஊழியர்கள். தனிக் குளிர்சாதனப் பெட்டியில் உட்கார்ந்திருந்த நீர்வீழ்ச்சி ராமசாமி தன் அன்பர்களிடையே சொன்னார்,

“இந்த ஊர் நாவல் ரொம்ப நல்லாயிருக்கும். வட்டாரத்து ருசி அப்படி” என்றார். அன்பர்கள் ஓடிப்போய் ஆளுக்கொரு நாவல் வாங்கி வந்து சுடச்சுடப் படித்தார்கள். ரயில் கொக்கலாஞ்சேரி ஸ்டேஷனுக்கு வந்தபோது அங்கே தனி ஆளாக உட்கார்ந்திருந்த சீனியர் ரைட்டர் பவளக்கொடி ராமசாமியை, சுண்டுவிரல் ராமசாமி கைதட்டிக் கூப்பிட்டார்.

“அவுகள உள்ள வரச் சொல்லுங்க. பழைய பவளக்கொடியில கதை எழுதுன சீனியர் ரைட்டர். உள்ள கூப்பிடுங்கோ.”

எண்பது வயதான பவளக்கொடி ராமசாமி விற்றுப்போகாத தனது பதினெட்டு நூல்களுடன் ரயிலில் ஏறினார். அவருக்கு சுண்டு விரல் ராமசாமி ஒதுங்கி இடம் கொடுத்தார். சீனியர் ரைட்டர் வெறும் தங்கபஸ்பம் புகையிலை மட்டும் போடக்கூடியவராதலால் அவர் ஜன்னல்புறமாக உட்கார்ந்துகொண்டார். ரயில் புறப்பட்டதுமே தனது பவளக்கொடி கால நினைவுகளைக் கொட்டத் தொடங்கினார். உடனே ராமசாமிகள் தூங்கத் தொடங்கினர்.

அடுத்த பெட்டியிலிருந்த ஆர்ப்பாட்டம் ராமசாமி தன் சிஷ்யர்களுக்கு ஆர்ப்பாட்ட நினைவுகளைச் சொல்லிக்கொண்டிருந்தார். அவரது சமீபத்திய ஆர்ப்பாட்டம் தாலுகா அலுவலகத்தின் முன்பு நடைபெற்றது. தமிழில் தற்போது பிரபலமாகி வரும் மேஜிக்கல் ரியலிசம், போஸ்ட் மார்டனிச எழுத்துகளை எதிர்த்து தாசில்தாரிடம் மனுக்கொடுத்து நூறு ராமசாமிகளுடன் போராடினார். எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் இந்தப் போராட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டம் ராமசாமியின் புகார் தகர சிலேட்டில் எழுதி தாசில்தாரிடம் கொடுக்க அவர் அதில் ‘O’ மார்க் போட்டு அவருக்கே திருப்பித் தந்துவிட ஆர்ப்பாட்டம் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

சீரணி அரங்கினை ராமசாமி அரங்கம் என அறிவித்து வேலைகள் நடந்தன. ராமகிரிசாமி தமிழின் முதல் பவுண்டன் பேனா எழுத்தாளர். அதற்கு முன்பெல்லாம் மயிலிறகு, தொட்டு எழுதும் பேனா புழங்கிய காலத்தில் முதன்முதலாக பவுண்டன் பேனாவில் கதை எழுதத் தொடங்கிய பெருமை ராமகிரிசாமிக்கே உண்டு. கன்னத்தில் ஒரு கையை ஊன்றியபடி பவுண்டன் பேனாவுடன் அவர் உருவப்படம் மாநாட்டுப் பந்தலில் தீட்டப்பட்டிருந்தது. மிகப் பெரிய மைக்கூடு ஒன்று அவர் ஞாபகமாக வீட்டு முன்பு திறக்கப்பட்டது. ராமகிரிசாமி அரங்கின் பின்புறத்தில் அமர்ந்து யதார்த்தம் ராமசாமி தனது புதிய யதார்த்த நாவலான கோ 17 17 17ஐ எழுதிக்கொண்டிருந்தார்.

அதை வேளாண்மை விவசாயக் கழகம் வெளியிட முன் வந்திருந்தது. கோடையில் பருத்திச் சாகுபடி செய்வது பற்றிய அந்த நாவலை எழும்போது துயரம் தாளாது அவரே விம்மி விம்மி மூன்று பேனா முனையை உடைத்துவிட்டார்.

வழிதவறிய கப்பல் தெலுங்கு தேசக் கரையில் முட்டி நின்றது. ஜோதியோடு உறங்கிக்கொண்டிருந்த ராமசாமி கிளம்பி நடைப் பயணமாக ஆந்திரக் கிராமங்களில் வந்தபோது நாய்கள் அவரை விரட்ட, ஓட்டமாகவே சென்னைக்கு வந்துகொண்டிருந்தார். எக்மோர் ஸ்டேஷனில் இலக்கிய ரயிலை வரவேற்க பல ராமசாமிகள் இரவெல்லாம் காத்திருந்தனர். மாநாட்டில் கௌரவிக்கப்பட உள்ள நூறு பிரபல ராமசாமிகள் லாட்ஜ்களுக்குக் கூட்டிப் போகப்பட்டனர். பொன். ராமசாமி தலைமையில் நூற்றியெட்டு பேர் கூடி அறிக்கை தயாரித்துக்கொண்டிருந்தனர்.

இந்த வேளையில் மானுடவியல் துறையின் லெவிஸ்ட்ரோ ராமசாமி மகாபலிபுரப் பாறைகளுக்குள் மெழுகுவர்த்தி ஒளியில் 'ராமசாமிகளின் வம்ச சரித்திரம்: மறைக்கப்பட்ட உண்மைகள்' என்ற வரலாற்று ஆவணத்தை எழுதிக்கொண்டிருந்தார். அதிலிருந்து...

"ஆதியில் எல்லாத் தமிழ் எழுத்துகளும் 'ரா' என்னும் முதல் எழுத்தில்தான் தொடங்கின. அதன் வழியே தமிழர்கள் 'ராமசாமி' எனப் பெயரிட்டனர். ராமசாமிகள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே நாகரிக முறையில் ஒப்பனை செய்து கொண்டு வாழ்ந்ததற்குச் சான்றாக மொகஞ்சதாரோவுக்கு அருகிலுள்ள குறுநிலப் பரப்பின் 'ராப்பா' என்னும் இடத்தில் சான்றுகள் கிடைத்துள்ளன. இங்கு தோண்டி எடுக்கப்பட்ட மண்பானைகளில் 'ரா' என செதுக்கப் பட்டுள்ளதை நீங்கள் அறிய இயலும் (புகைப்பட உதவி :ராப்பா அகழ்வாரய்ச்சி). அதை முதுபெரும் மானுடவியல் அறிஞர் த.நா. அல்டன் சிங்களோ ராமசாமி ஒப்புக்கொண்டிருக்கிறார். ஆக உலகில் தோன்றிய முதல் பெயர் ராமசாமியே (ரா.வ.ச.பக்.24).

ரயிலில் புகையிலையை மென்றபடி நவீனக் கதைகளைப் பற்றித் திரித்துப் பேசிய பவளக்கொடி ராமசாமியைத் தெப்பக்குளம் ராமசாமிக்குப் பிடிக்கவேயில்லை. இலக்கியச் சர்ச்சை முற்றி இருவருக்குள் வந்த சண்டையில் தெப்பக்குளம், புகையிலை மட்டையைப் பிடுங்கி வெளியே எறிய, சீனியர் ரைட்டர் சங்கிலியைப் பிடித்து இழுத்து ரயிலை நிறுத்த, சீனியர் ரைட்டரை அவமானப்படுத்தி விட்டதாக ராமசாமிகளுக்குள்ளே சண்டை தொடங்கியபோது ரயில் விருத்தாச்சலம் ஸ்டேஷனுக்கு அரை மைல் தூரத்தில் நின்றிருந்தது.

ராமசாமிகளின் மாநாட்டில் இலக்கிய விவாதங்கள் நடக்க ஜெமினி பாலத்தினை மேடையாக்கினர். கூட்டம் கீழே நின்று சொற்பொழிவு கேட்க வசதி செய்யப்பட்டது. இலக்கிய உரைகளின் பட்டியல்கள் அறிவிக்கப்பட்டதும் ராமசாமிகள் முண்டிக்கொண்டு

தலைப்புகளைப் படித்தனர்.

'பிரபஞ்ச வரலாறும் தேவராட்டக் கலையும்' என்னும் தலைப்பில் திகில் ராமசாமி. 'எனது சுண்டுவிரலும் தமிழ் இலக்கியமும்" என்றபடி சுண்டுவிரல் ராமசாமி. இன்னும் யதார்த்தம் ராமசாமி, "கதை சொல்லிகளைக் காயப் போடுங்கள்" எனவும் பலதரப்பட்ட உலகத் தலைப்புகள் இடம் பெற்றன. பவளக் கொடி ராமசாமிக்கு மட்டும் தலைப்பைத் தானே தேர்ந்தெடுக்கும் சிறப்புச் சுதந்தரம் கொடுக்கப் பட்டிருந்தது.

எக்மோர் ரயில் நிலையத்தில் இலக்கிய ரயில் வந்து நின்றதும் ராமசாமிகள் ஓடி ராமசாமிகளை வரவேற்றனர். ஆளுக்கொரு பவுண்டன் பேனாவும், ராமகிரிசாமி உருவப்பட பேட்ஜும் கொடுத்து கரகாட்டக் குழுவின் நடனத்துடன் அழைத்துப் போனார்கள். இலக்கிய ரயிலின் கூரைகளில் அமர்ந்து வந்த தமிழ் வாசக ராமசாமி கள் குளிக்கத் தண்ணீர் வேண்டி நகரமெங்கும் அலைந்தனர். தண்ணீரற்ற கார்ப்பரேஷன் குழாய் முசுமுசு என சப்தம் விட்டபடி யிருந்ததைக் கண்டு அருகில் அமர்ந்து புகார்க் கவிதை எழுதினர். பர்மா பஜார் சாலையில் சில ராமசாமிகள் உறங்கிக்கொண்டிருந்தனர். பக்த ராமசாமிகள் மயிலை கபாலி கோயில் பிரகாரத்தில் நெய் அப்பம் சாப்பிட்டபடி பக்தியைப் பெருக்கினர்.

இதுவுமன்றி, தமிழ்நாட்டின் தென்மூலையிலிருந்து எரிச்ச நத்தத்தி லிருந்து ராமசாமி ஒருவர் பால் கேனுடன் தனது மொழிபெயர்ப்பு ஒன்றை இணைத்து பதிமூன்றாம் நம்பர் டவுன் பஸ்ஸில் அனுப்பி வைத்தார். தன்னுடைய நீண்ட காலக் கனவான நாலாயிரம் பக்க நாவலை எழுதி முடித்து ஒட்டன்சத்திரம் ராமசாமி காவடியின் இரு பக்கத்திலும் நாவலை இரு பாகமாகப் பிரித்து நாவல் காவடி எடுத்து பழனியிலிருந்து சென்னை நோக்கி வர, உடன் எண்பது இளம் கவிஞர்கள் கவிதைக் காவடி எடுத்து வர ராமசாமிகளின் நாவல் யாத்திரையைக் காண கிராமந்தோறும் பெண்கள் ஆரவாரமாக வரவேற்று, அன்னதானமளித்து வந்ததும் தனிக்கதை.

ஆராவயல் ராமசாமி தீபத்துடன் வரும் முன்பே மாநாடு தொடங் கப்பட்டுவிட்டது. மாநாட்டு வரவேற்பு உரையை ஆந்திர முன்னாள் கவர்னரும் காந்தியவாதியுமான நுன்ன கொண்ட ரெட்டைக் கதவு ராமசாமி நிகழ்த்தினார்.

"இக்கடலு, ராமசாமிலு, மாநாடுலு, நஸ்சலு, நடக்கலு, அக்கடலு, ராசமாகலு, கவிதைலு, நாவலு, சிறுகதையிலு, விமர்சனமிலி ராசிலு நோபலு பரிசுலு பெற்றாருலு, ராமசாமிகலு, எதிர்காலமலு, நம்மலு, தேசத்தலு, முக்யமலு, உலகராமசாமிகலு, ஒற்றுமைலு, வளர்கலு."

பேசி முடிக்கும் முன்பு ஆராவயல் அணையா ஜோதியுடன் மேடைக்கு வர ஆட்கள் அவரைப் பிடித்துக்கொண்டு மாநாட்டின் ஜோதி தாமதமாக ஏற்றப்பட்டதும் ராமசாமிகளுக்கு ராமசாமிகளின் மரண முடிவை ராமசாமி சொன்னார். கண்ணீர் மல்க 999 ராமசாமி

களுக்காக மாநாடு அரை நாள் ஒத்தி வைக்கப்பட்டது. அத்தோடு தலைவர் 999 ராமசாமிகளின் உடலோடு கப்பலில் ஆறாவயல் ராமசாமி மிதந்து வருவது போன்ற தபால் தலையொன்றை வெளியிட வேண்டுமென மத்திய அரசைக் கேட்டுக்கொண்டார்.

மாநாடு ஒத்திவைக்கப்பட்டதால் எழுத்தாளர்கள் அவசரமாகத் தங்கள் குழுக்களுடன் பிரிந்துபோயினர். வந்திருந்த கூட்டத்திடையே சிறு பத்திரிகை ராமசாமி 'நீங்கள் என்னை ராமசாமி ஆக்கினீர்கள்.' 'ராமசாமி முதல் ராமசாமி வரை' போன்ற சிறு நூல்களை விற்றுக் கொண்டுவந்தார். ராமசாமிகளுக்குள் நடந்த விவரங்களை முழுமையாகச் சொல்ல முனைந்தால் அது கடற்கரை மணலை எண்ணத் தொடங்கிய அங்கத புத்திரனின் கதையாகிவிடும் என்பதால் எழுத்தாளர்களின் சுய அறிமுகத்தை மட்டும் சொல்லி வைக்கலாமென நினைக்கிறேன்.

சீனியர் ரைட்டர்களில் இதுவரை பரிசுகள் எதையும் பெறாத, பரிசுகளைத் தன் புறங்கையால் புறந்தள்ளிய வீரர் பழத்தோட்டம் ராமசாமிதான் தமிழ்க் கதை உலகின் பிதாமகர். இவரது நூல்களைத் தாண்டி எவரும் எழுதிவிட முடியாது என்பது திண்ணம். அன்னார் பன்றிமலை சுவாமியின் சிஷ்யராகவும் சில காலம் நீட்ஷே, சோபன்ஹீர எனத் தத்துவ விசாரத்திலும் பின்பு கலையிலும் மனம் கூடியவர். இவருடைய உள்ளார்ந்த மௌனம் கலாதெளிவுடையது என்கிறார்கள் பிரபல விமர்சகர்கள். அவர்கள் தொகுத்த நூல் ஒன்றில் 'பழத் தோட்டம் ராமசாமியின் வாழ்வில் சில தடவை' என்ற கட்டுரை உள்ளது. அதில் ஒரு பகுதியை நீங்களும் படிக்கலாமே.

"பழத்தோட்டம் ராமசாமியின் வீட்டினைச் சுற்றிப் பல வகையான பழமரங்கள் உண்டு. எப்போதும் அவரை நண்பர்கள் சுல்தான் என அழைப்பர். பழவாடையில்லாத காலத்தில் அவர் எழுதுவது இல்லை. தினமும் காலை கதை எழுதியவுடன் அவர் கலை கூடி வந்துவிட்டதே எனப் பரவசப்பட்டு பழங்களைப் பறித்துத் தின்னும் காட்சி அபாரமானது. 'முக்கனி' எனும் பிரசுராலயம் இவருக்கு உண்டு." (ப.ரா வாழ்வில் சில தடவை, பாரா—18)

அவர் காட்டிய வழியில் வந்த தமிழ் இலக்கிய நவீன விமர்சகர்களில் சுண்டுவிரல் ராமசாமி முக்கியமானவர். அவருடைய வீட்டுக்குத் தினமும் ரிவ்யூவுக்காக வரும் புத்தகங்களையும் கொண்டுவர தபால் இலாகாவிலிருந்து எட்டு ஊழியர்கள் தனியே நியமிக்கப்பட்டிருந்தனர். பகலும் இரவும் இவர்கள் தபால் நிலையத்துக்கும் வீட்டுக்குமாக ரிலே முறையில் விமர்சனப் புத்தகக் கட்டுகளுடன் இடைவிடாது ஓடிக்கொண்டிருந்தனர்.

சுண்டுவிரல் ராமசாமி எந்தப் புத்தகத்தையும் தன் கைகளால் புரட்டிப் படிப்பதில்லை. கால் சுண்டுவிரலால்தான் புரட்டுவார் நல்ல புத்தகமெனச் சுண்டுவிரல் அறிகுறி செய்தால் புரட்டிப் படிப்பார். மற்றவற்றைச் சுண்டுவிரலால் அழுத்தி வீட்டின் உள்ளே

புதையுண்டுபோகச் செய்துவிடுவார். இப்படிப் புதையுண்ட புத்தகத்தால் பெரிதானது வீடு. சுண்டுவிரல் அங்கீகரித்த இலக்கியப் பிரதிகள் வெகு சிலவே. இலக்கிய விமர்சனத் தகுதி கொண்டதால் சுண்டுவிரலினைச் சுற்றி மெல்லிய புத்தகக் காகிதத்தால் ஆன பழுப்புக் கிரீடம் ஒன்று உருவானது. கர்வம் கொண்ட சுண்டுவிரல் மற்ற விரல்களை ஏளனமாகவும், கர்வம் மிகுந்தும் பார்க்கத் தொடங்கியது. சுண்டுவிரலின் இலக்கிய மேன்மையைக் கண்ட மற்ற விரல்கள் பயந்தன. இருந்தும் சுண்டுவிரலுக்கும் மற்ற விரல்களுக்கு மிடையில் அவ்வப்போது இலக்கியச் சர்ச்சைகள் நடந்தபடியிருந்தன.

மற்ற விரல்கள் – புத்தக விமர்சனத்தால் கிரீடம் கொண்ட

சுண்டுவிரல் விமர்சகரே, சோளக்கொல்லை பொம்மைக்குக் கதை சொல்வது யார்?

சுண்டுவிரல் – வைக்கோல் மூதிகளே, கதை கிதை எனப் பிதற்றுகிறீர்கள். அகமும் புறமும் இணைவதே கதை.

மற்ற விரல்கள் – 'அபாந்தகன் எனும் நரி'யின் துரோகக் கதையை என்ன சொல்கிறாய்?

சுண்டுவிரல் – யாரென்ன சொன்னாலும் நானே விமரிசக ராஜா!

இப்படியாக, உரையாடல்கள் தொடர்ந்தன. பல ஊர்களிலும் சுண்டுவிரல் ராமசாமியின் விரலைப் பார்ப்பதற்கு ரசிகர்கள் அலை மோதுவார்கள். அவர் தனது வேஷ்டியால் சுண்டுவிரலை மூடியபடியே நடந்து செல்வார். இந்திய இலக்கியத்தில் இடம் பெற்ற தனிச் சுண்டுவிரல் என அவரைக் கௌரவித்தது தனி நிகழ்வு.

நாவலாசிரியர்களில் நீர்வீழ்ச்சி ராமசாமியின் திறமை அசாத்தியமானது. எழுதிய கதைகளைத் தினமும் அவர் அருவியில் காட்டி வருவார் வார்த்தைகளை அருவி அடித்துக்கொண்டு போனது போக மீதம் உள்ளவற்றை வைத்து நூல் வெளியிடுவார். அவரது பிரசித்தி பெற்ற நாவலான 'கள்ள நாணயக்காரர்களும் நூறு ஆட்டுக் குட்டிகளும்' மூன்று முறை நோபல் பரிசுக்கு சிபாரிசு செய்யப்பட்டு புரூப் தவறுகளால் புறக்கணிக்கப்பட்ட இருத்தலிய நாவலாகும். இந்த ஆட்டுக்குட்டியொன்று யாருமற்ற வீட்டுக்கு வந்து தினமும் தன்னைக் கண்ணாடியில் பார்த்துக்கொண்டு போகும் சம்பவத்தை முதன்மையாக்கி மானுட வாழ்வின் சாராம்சத்தைத் தத்துவச் சரடாக்கியிருந்தார். அவரது நாவல் 'பூனைகளுடன் பேசக் கூடாது' மாநாட்டில் வெளியிட இருந்தது.

இவர்கள் அன்றியும் தானே வீட்டில் காகிதங்கள் தயாரித்து, அதிலே மட்டுமே கதை எழுதிவந்த யதார்த்தம் ராமசாமி, எதைப் பார்த்தாலும் எழுதக் கூடியவர். இவரது கதைகள் ஐ.நா. சபையில் கையடக்கப் பிரதிகளாக உபயோகிக்கப்படுகின்றன. பொடி போடும் இவர், ஒவ்வொரு முறை தும்மும்போதும் யதார்த்தம், யதார்த்தம் என்றே தும்முவார்.

இவர்களன்றியும் நூறு ராமசாமிகள் மாநாட்டில் கௌரவிக்கப்பட்டிருந்தனர். நாயனம் கல்லிடைக்குறிச்சி ராமசாமி, போளி ஆம்பூர் ராமசாமி, நெல்லிவளை ராமசாமி, கோ.ராமசாமி, சொ.ப. ராமசாமி, வி.வி. ராமசாமி, திசையன்விளை ராமசாமி, மச்சு வீட்டு ராமசாமி, எக்ஸ்.ராமசாமியா பிள்ளை, புளிமூட்டை ராமசாமி, எட்டுவீட்டு ராமசாமி, மூப்பன் ராமசாமி, தமிழ் ராமசாமி, எஸ்தபான் ராமசாமி, பிரிட்டோ ராமசாமி, எஸ்.போ.ராமசாமி, ராமசாமி குமார், கவிக்கிழார் ராமசாமி, நடைவண்டி ராமசாமி என மாநாடு ராமசாமிகளின் திறமையைத் துல்லிமாக்கியது.

அடுத்த நாள் மாநாட்டுக்காக காலை கடற்கரையில் குளிக்க ஆயிரக்கணக்கான ராமசாமிகள் நீச்சல் உடையுடன் அலைந்தனர். சில ராமசாமிகள் புல்தரையில் படுத்து கவிதை பாடினர். ராமசாமிகளே படித்து, ராமசாமிகளே எழுதி, ராமசாமிகளே கைதட்டிக்கொண்டனர். ஒரு பக்கம் ராமசாமியல்லாதாவர்களுக்கு ஞானஸ்நானம் நடந்துகொண்டிருந்தது. எல்லோர் பெயரின் பின்பும் ராமசாமியிடப்பட்டு, பிரிட்டோ ராமசாமி, பரூக் ராமசாமி, அலெக்சாண்டர் ராமசாமி, முபாரக் ராமசாமி என மாநாட்டுப் பந்தலில் உட்புகுந்து கொண்டிருந்தனர்.

மாநாட்டு இரைச்சல் அதிகமாகிக்கொண்டே போனதால் ஜெமினி காம்ப்ளெக்ஸில் குடியிருந்த அல்லேலூயா ராமசாமிக்கு வார்த்தை ஜுரம் வந்தது. விடாமல் வார்த்தைகளை உளறியபடியே இருந்த அவரைச் சுற்றி இரவும் பகலும் அல்லேலூயா பாடினார்கள் ராமசாமிகள். அல்லேலூயா ராமசாமியின் வீட்டுச் சுவரில் "ராமசாமி நல்லவரா என்பது ருசித்துப் பாருங்கள்" "ராமசாமி என்றும் கைவிடமாட்டார்" என்ற வாசகங்கள் இருந்தன. மாநாடு உச்ச நிலையை அடைந்தபோது அல்லேலூயா ராமசாமியின் எகிறி எகிறி விழுந்தது.

ராமசாமியாயிருந்தபோதும் கருப்புச் சட்டை ராமசாமியை மாநாட்டுக்குள் அனுமதிக்கவில்லை. அவர் வெளியே சிக்னல் போஸ்டில் சாய்ந்தபடி ஆதங்கப்பட்டார்.

"எங்க ஈரோட்டு அய்யா ராமசாமி அன்னைக்கு எத்தனை நல்லது பண்ணி வச்சாரு. அவர் இல்லேன்னா... இந்நேரம் இப்பிடிப் பேச முடியுமா? இன்னைக்கு அவருக்கு மதிப்பில்லை. மத்த ராமசாமிகளுக்கு மதிப்பு வந்திருச்சு."

பந்தலின் வெளியே ஸ்பானிய உரைகள் கேட்டுக்கொண்டிருந்ததால் சிலர் கலைந்துபோயினர். பௌண்டன் பேனா ஒழுகி சட்டையை நனைத்தது பற்றி சிறப்பு அழைப்பாளர் ராமசாமி பேசிக்கொண்டிருந்தார். பந்தலின் வெளியே இருந்த கூட்டம் கலவரமானது. அதன் நடுவே கவுண்டர் கல்ச்சர் ராமசாமி நின்றுகொண்டிருந்தார். சுற்றிலும் ஆட்கள் அவரை வளைத்து நின்றனர். அவர் கைகளை வானுக்கு உயர்த்திச் சொன்னார்.

“நான் உம்பர்ட்டோ ராமசாமியின் ரசிகன். அவர் பேச்சு கேட்க வந்திருக்கேன். பேச்சு முடிஞ்சதும் கலைஞ்சுபோயிருவேன். போயிடுங்க.”

உம்பர்ட்டோ ராமசாமி தனது ‘காத்திருக்கும் ரோஜா’ தமிழில் வேறு யார் பெயரிலோ வந்திருப்பதாகச் சொன்னதும் கவுண்டர் கல்ச்சர் ராமசாமி அவசர அவசரமாக மாநாட்டுப் பந்தலை விட்டு வெளியேறிப் போனார். பந்தலுக்கு வெளியே நான்–லீனியர் பஞ்சுமிட்டாய் விற்றுக்கொண்டிருந்தார் ஒருவர்.

மாநாட்டு அறிக்கை வாசிக்கப்பட்டது. ராமசாமிகள் தங்களை மற்றவர்களிடமிருந்து விலக்கிக் காட்ட ஒரே நிற ஆடை அணிய வேண்டுமென, ராமசாமிகளுக்கு இலவச பஸ் பாஸ் வழங்க வேண்டு மென, நான்–லீனியர் ரைட்டிங்கை ராமசாமிகள் ஒதுக்க வேண்டுமென, ராமசாமிகள் வாழும் பகுதியை ராமசாமிஸ்தான் என மாற்றிப் பெயரிட வேண்டுமெனப் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அறிக்கையில் உடன்பாடில்லாத பல ராமசாமிகள் தனியே காந்திசிலை அருகில் உட்கார்ந்து விவாதித்தனர். பவளக்கொடி ராமசாமி ‘முட்டாள் உலகில் முருகேசன்’ என்னும் தனது முதல் புதுக்கவிதையைப் பற்றி விரிவாக நாலு மணி நேரம் பேசினார். கூட்டம் சிதறுண்டது. அறிக்கையின் மீதான விவாதம் தொடங்கியதுமே கூச்சலும் சப்தமும் கூடின. பலர் வெளிநடப்பு செய்ய மீண்டும் அரை நாள் மாநாடு ஒத்திவைக்கப்பட்டது. அன்று ராமசாமிகள் பலர் திருப்பதி சென்று மொட்டை போட்டுத் திரும்பினர். மாலையில் ராமசாமிகள் மாநாடு தத்துவார்த்தப் பிரச்சினையால் இரண்டாகப் பிரிவுற்றதாக அறிவிக்கப்பட்டது.

மிதவாத ராமசாமிகள், தீவிரவாத ராமசாமிகள் என இரு குழுக்களாகப் பிளவுண்டது. எழுத்தாளர்கள், அரசியல் பிரமுகர்கள், வியாபாரிகள், கவிஞர்கள், பிரசுரகர்த்தாக்கள், ஓவியர்கள், மருத்துவர் கள், நகலெடுப்பவர்கள், வரலாற்று ஆய்வாளர்கள், சுகாதார அதிகாரி கள் என எல்லாத் துறைகளையும் இந்தப் பிரிவு பற்றிக்கொண்டது.

வரலாற்று முக்கியமான இந்தப் பிரிவு தத்துவார்த்தப் பிரிவு என இரண்டு ராமசாமிகளும் கூச்சலிட்டனர். கடற்கரைச் சாலை யிலிருந்த சிலையொன்று போவோர் வருவோரைப் பார்த்து விரலை நீட்டி “நீ ராமசாமியா?” எனக் கேட்டபடியிருந்தது ஆம்! ஆம்! எனத் தலைகள் அசைந்து சென்றன. தமிழக வரலாற்றின் மிக முக்கியமான சரித்திர நிகழ்வு நடந்து முடிந்த அன்று சென்னை மாநகரை இயற்கையாக வரும் புயல் தாக்கியது. பந்தல்கள் சிதறின, காகிதங்கள் பறந்தன. மறுநாள் கடற்கரையில் ஆயிரக்கணக்கான புத்தகங்கள், ராமசாமிகளின் படங்கள் ஒதுங்கிக் கிடப்பதை ராமசாமி யல்லாத மற்றவர்கள் பார்த்துக் கலைந்தனர்.

பறவைகளின் சாலை

மிகுந்த அவசரத்தோடு எதையும் க்ஷண நேரம் கவனிக்கும் நிதானம் கூட இன்றி நடந்து செல்லும் ஒரு மனிதனைச் சில தினங்களாக எனது ஜன்னலின் வெளியே கண்டு கொண்டிருந்தேன். அந்த மனிதன் பறவைகள் மிதந்தலையும் வானத்தின் குறுக்கே நடந்து போகிறவனாயிருந்தான். காலை தொடங்கும் வேளைகளில் அவன் தனது கைகளை வீசியவனாக தெற்கு நோக்கி நகர்ந்து போவதைக் காண முடிகிறது. தோற்றத்தில் எவ்விதமான வியபுமற்ற அவன் மெலிந்த திரேகியாகவும் தலைமயிரைத் தோள் வரை சரிய விட்டவனாகவுமாக வயதைக் கணிக்க முடியாத உருவத்துடன் கடந்துகொண்டிருந்தான். ஆறாவது தளக் குடியிருப்பில் இருந்த எனது ஜன்னலின் வெளியே அந்த மனிதன் கடந்துபோகும் காட்சியை ஓர் இலை உதிர்வதைப் போலத் தற்செயலாகக் காண நேர்ந்தது. அவன் தனது அந்தர நடையால் எந்த ஆச்சரியத்தையும் உருவாக்காதது வியப்பாக இருந்தது. எதையோ தவற விட்டவனின் நிதான மின்மை கொண்ட அவன் வானின் பாதைகளற்ற பாதைகளில் நடந்து செல்லும்போது மெல்ல எனது பார்வை வெளிக்குள் பிரவேசித்துக் கடந்து புள்ளியாகி மறையும் வரை அவனோடு நெருங்காத ஒரு ஸ்நேகித மிக்க நெருக்கம் உண்டாகிக்கொண்டிருந்தது.

ஆரம்ப நாட்களில் அவன் யாரையோ கூப்பிட முயற்சிப்பவன் போலத் தனது கைகளைச் சொடுக்கிய படி நடந்து செல்வான். அவனது குறுக்கீடு பழகிய பறவைகள் சிறகற்ற மனிதனை அலட்சியம் செய்து கடந்தன. எப்போதாவது அவன் கீழே குனிந்து

பார்க்கக் கூடுமோ எனக் காத்திருப்பேன். அவன் அது போன்றதொரு செய்கையை அறிந்தவனாகவே தெரியவில்லை. ஜன்னலில் அந்த மனிதன் தோன்றும் முதல் நிமிஷம் என்னை அறியாமல் பரபரப்பு தொற்றிக்கொள்ளும். முந்தைய நாளின் சாயல் எதையும் கொண்டிராத வனாக அவன் வெவ்வேறு கிளைப் பாதைகளை வானமெங்கும் தொடர்ந்து உருவாக்குபவனாக இருந்தான். எல்லா நாள்களிலும் மிகச் சரியாக, துளிநேர மாற்றமின்றி ஜன்னலின் இடது முனையில் தோன்றத் தொடங்குவான். அவன் நடப்பது ஒரு பறவை நீந்திச் செல்வது போலவே இருக்கும். ஆர்வம் தாளாத நாளொன்றில் அவனை நான் கைதட்டி அழைத்துவிடலாம் என முடிவு செய்தவனாக அவன் வருகைக்காகக் காத்திருந்தேன். குருவிகளின் கூட்டமொன்று வளையமிட்டுக்கொண்டிருந்த பாதையில் அவன் தோன்றிக் கடக்க ஆரம்பித்தான். நான் ஜன்னலின் வெளியே தலையை நீட்டியவனாகக் கைதட்டிக் கத்தினேன்.

நண்பரே...

அந்தக் குரல் அவனைச் சென்று சேர்ந்திருக்குமா எனத் தெரியாத புள்ளியில் போய்க்கொண்டேயிருந்தான். எனது குரலின் உச்சத்தில் அவனைத் திரும்பவும் அழைத்தேன். அவன் பின் திரும்பிப் பார்ப்பதே யில்லை என அறிந்தவனாக ஏமாற்றத்துடன் பார்த்துக்கொண்டு இருந்தேன்.

அவனை எனது குரலால் தொடுவதற்கான எத்தனிப்புகளைப் பின் நான் நிறுத்திக்கொள்ளவே இல்லை. அவனோ எந்த சுபாவச் சலனமுமின்றி நடந்துகொண்டிருந்தான். அழைப்பின் சாத்தியம் கூடாத நான் அவன் தோன்றும் திசை எங்கிருக்கிறது எனப் பார்ப்பதற் காக ஆறாவது மாடியின் திறந்தவெளிக்கு வந்து அதிகாலை முதலே நின்றுகொண்டிருந்தேன். வானம் முழுவதும் பறவைகளுக்கு மட்டுமே யான பாதைகள் கிளைத்துக்கொண்டிருந்தன. அந்த மனிதன் எல்லை யற்ற இந்தப் பெரும் பரப்பில் எந்த மொக்கிலிருந்து வெடித்து வரப் போகிறான் என அவதானிக்க முடியவில்லை. கண்கள் சுழன்று கொண்டே இருந்தன. வெளிச்சம் தனது குஞ்சுகளோடு சிறகடித்துக் கொண்டு எல்லாப் பக்கமும் போய்க்கொண்டிருந்தது. அவன் தோன்றும் புள்ளியைக் காணச் சந்தர்ப்பம் கூடவேயில்லை. எனது ஜன்னலின் நுனிக்குள் அவன் பிரவேசிப்பது மட்டுமே நான் காண்பதற் கான சாத்திய வடிவங்களில் ஒன்றாகியிருந்தது. அவனை அழைக்கும் விருப்பங்கள் வடிந்த பிறகு எந்தச் சுயமுனைப்புமின்றி அவனைப் பார்த்துக்கொண்டிருக்க மட்டுமே விரும்புவனாக மாறினேன். அவன் மிகுந்த பரிச்சயமுள்ள மனிதனாகிக்கொண்டு இருந்தான்.

சில நாள்களுக்குப் பிறகு அவன் மாலை நேரங்களில் திரும்பி வருவதைக்கூடக் காண முடிவதாக இருந்தது. காலை நேரத்தின் அவசரத்தைத் துளியும் அவிழ்க்க இயலாதவனைப் போலவே மாலையி லும் அவன் நடந்து போவான். நாட்கள் நீண்டு கடந்ததும் எனது

ஜன்னல் ஒரு பெரிய கதவற்ற வாசலைப் போல விரிய அவன் எனது அறைக்குள் பிரவேசித்துப் போகிறவனைப் போலாகிவிட்டான். எந்த உரையாடலுமின்றி இருவரும் ஸ்நேகத்துக்குரிய இருவராகிக் கொண்டிருந்தோம். மிகச் சரியான ஒரு காலையின் சுழிப்பில் நடந்து முன்செல்பவன் எனது ஜன்னலில் தோன்றி மிக மெதுவாகச் சில தப்படிகள் நடந்து சற்றும் எதிர்பாராமல் திரும்பிப் பார்த்தான். அவனது பார்வையில் எண்ணிக்கையற்ற ஜன்னல்கள் திறந்திருந்தன. வியப்பு மீறியவனாக எனது தலையை ஜன்னலுக்கு வெளியே நீட்டினேன். அவன் எனது ஜன்னலையே நோக்கி வரத் தொடங்கினான் என்பது புரிந்ததும் கால்களில் மெல்லிய நடுக்கமும், மனப் படபடப்பும் எழத் தொடங்கின. அவன் நெருங்கி வர வரப் புன்னகைத்த மனிதனாகிக்கொண்டிருந்தான். நேற்று வரை தொலைவில் பார்த்த உருவத்தின் சாயல் தானே உதிர்ந்துகொண்டு இருந்தது. அவன் ஆழமான கண்களை உடையவனாக, சிரிப்பை விழுங்கிய முகத்தோடு கூடியவனாக இருந்தான். ஜன்னலிலிருந்து சில அடிகள் நடந்து செல்லும் இடைவெளியில் நின்றவனாக எனைப் பார்த்து இயல்பாகக் கேட்பான்,

'செய்தித் தாள்கள் ஏதேனும் கிடைக்குமா?'

அவனிடமிருந்து வார்த்தைகளின் சரடு நழுவிச் சுருள்வதைக் கண்ட ஆச்சரியம் மீறாமலே எனது காலைப் பேப்பரை எடுத்து வீசினேன். அவன் அந்தத் தினசரியைப் பிரித்துப் படித்தவனாக மெதுவாக தெற்கு நோக்கி வானில் நடந்துகொண்டிருந்தான். என்னைப் போலவே அவனும் காலை தினசரி படிப்பவனாக இருந்தது ஆறுதலாக இருந்தது. அவன் திரும்பி வரப்போகும் மாலைக்காகக் காத்துக் கொண்டிருந்தேன். வழக்கத்துக்கு மாறாக அவன் தாமதமாகவும், வழியெங்கும் அதே தினசரியைப் படித்துக்கொண்டே வந்தவனுமாக ஜன்னலின் அருகாமைக்கு வந்து சொன்னான்,

'இன்னமும் வாசித்து முடியவில்லை.'

நான் அந்தத் தினசரியை அவனே எடுத்துக்கொண்டு போக அனுமதித்தவனாக மௌனமானபோது அவனே சொன்னான், 'காகிதங்கள் பறவைகளைவிட எளிதாகப் பறந்துவிடுகின்றன. காப்பாற்றுவது மிகக் கடினமாக இருக்கிறது.'

திரும்பவும் வழக்கமான பாதையில் பிரவேசித்துவிட்டான். எங்களின் சந்திப்பின் முதல் நாட்களில் அவன் எவ்விதமான சுய பரிச்சயமும் செய்து கொள்ளவேயில்லை. நாள்கள் அவிழ அவிழ அவன் எனது ஜன்னலைத் திறக்கும் நேரத்துக்கு முன்பாகக்கூட வந்து காத்திருப்பவனைப் போல நிற்கத் தொடங்கினான். அவன் எனது தினசரிகளை மிகுந்த ஆர்வம் தாளாது வேகத்துடன் புரட்டிப் பார்ப்பவனாக நடந்து செல்லும்போது அந்தச் செய்திகளில் எதை அவன் படித்துப் போகிறான் எனப் பிடிபடாமலே இருக்கும். அவன் எல்லா நாளின் மாலையிலும் புரட்டியவனாக என்னைப் பார்த்துக்

கொண்டே இருப்பான். அவனது முகத்தில் நாளுக்கு நாள் பதற்றம் கூடிவருவதைக் கண்டவனாக ஏனெனக் கேட்க விரும்பினேன். அவன் நிசப்தமாக நடந்து போய்விடுவான். ஒரு நாளின் மாலையில் ஜன்னலுக்கு நெருங்கி வந்து சொன்னான்,

'மிகுந்த ஆறுதலாக இருக்கிறது. செய்தித் தாள்களுக்கு நன்றி.'

பின்பு வாசகசாலையின் வாசலில் நின்று தினசரியைப் புரட்டுபவன் போலப் பெருமுச்சு விடுவான். என்னால் அவனது செய்கைகளைத் தாங்கிக்கொள்வது விருப்பமில்லாமலிருந்தது. அவனிடம் நான் தினசரியைத் தந்து, சதா கலைந்து கொண்டிருக்கும் நிகழ்ச்சிகளின் உலகை அறிமுகம் செய்துவிட்டேனோ என ஒரு குற்ற உணர்ச்சி தோன்றத் தொடங்கியது. அவனுக்கானவை செய்தித்தாள்கள் அல்ல. புத்தகங்களே என முடிவு செய்தவனாக, அவனது வாசிப்புக்குகந்த புத்தகங்களைத் தேர்வு செய்யத் தொடங்கினேன். எல்லா நாள்களையும் போலவே மௌனமாக ஜன்னலின் வெளியே நின்று கொண்டிருந்தான். நான் அவனைப் பார்த்தபடியிருந்தேன். என்னிடமிருந்து பெறப்போகும் விலை உயர்ந்த சந்தோஷத்தை ஏந்திக்கொள்பவனைப் போலக் கைகளை முன் நீட்டினான். நான் தயக்கமின்றிச் சொன்னேன்,

'நீ முடிவற்ற நிகழ்ச்சியின் துண்டுகளை வாசித்துக் கொண்டிருக் கிறாய். செய்திகள் ஒருபோதும் அடங்கிவிடுவதில்லை' அவன் அதிர்ச்சியுற்றவனைப் போலக் கேட்டான்,

'தினசரி செய்திகள் தொடர்ச்சியானவையில்லையா? நான் அதைத் தொடர்ச்சியாகத்தான் வாசித்து வருகிறேன். அதனால் மட்டுமே எனக்கு ஆறுதல் தருவதாகயிருக்கிறது.'

இது அவனது அறியாமை எனப் பரிகசித்தவனாக, அவன் வாசிப்பதற்காக எடுத்து வைத்திருந்த சார்லஸ் டிக்கன்சின் 'இரு நகரங்களின் கதை'யைத் தந்து அனுப்பினேன்.

பிறகு முன்போல் அவன் எனது ஜன்னலின் அருகாமைக்கு வந்து நிற்பவனாக இல்லை. தூரத்தில் புத்தகத்தைப் பிரித்துப் படித்தவனாக வானில் நடந்து போய்க்கொண்டேயிருப்பான். வாசித்து முடிக்கும் நாள் வரை அவனைப் பார்த்துக்கொண்டே இருந்தேன். ஒரு காலையின் துளி ஒன்றில் நின்றவனாகச் சொன்னான்,

'வேடிக்கையாக இருக்கிறது.'

இரு நகரங்களின் கதையில் வேடிக்கைக்கான எந்தத் தடயமும் இல்லை என்பதை உணர்ந்தவனாக அவனிடம் லியோ டால்ஸ்டாயின் 'அன்னா கரீனினா' தந்து அனுப்பினேன். அன்று மாலையே அவன் எனைப் பார்க்க விரும்பி வந்து நின்றான். நிச்சயம் இது அவனுக்கு விருப்பமற்றதாகவே இருக்கும் என்ற சுய எள்ளலோடு அவனிடம் சொன்னேன்,

'எளிய வாசிப்புக்கு உகந்ததல்ல.' அவன் மறுத்தவனாகச் சொன் னான்,

'மிகைப்படுத்தப்பட்ட வேதனைகள். பரிகாசமாக இருக்கிறது.' எனக்குப் புரியவேயில்லை. அவனிடம் தாஸ்தாயெவ்ஸ்கியின் 'குற்றமும் தண்டனை' தொடங்கி நகுலனின் 'நாய்கள்' வரை படிக்கத் தந்துவிட்டேன். அவனைப் புத்தகங்கள் வசீகரிக்கவே இல்லை. செய்தித் தாள்களை மட்டுமே யாசிப்பவனாக இருந்தான். அதை என்னால் சகித்துக்கொள்ள இயலாத நாளில் சொன்னேன்,

'நாம் பேசிக்கொண்டிருப்பது மட்டுமே இனி சரியானதாக இருக்க முடியும்.'

அவன் எந்தத் தயக்கமும் இன்றிச் சொன்னான்,

'இறங்கி வாருங்கள். நாம் கொஞ்ச தூரம் பேசியபடி நடந்து திரும்பிவிடலாம்.'

ஜன்னலுக்குக் கீழே குனிந்தபோது எண்ணிக்கையற்ற வாகனங்களும், மனிதர்களும், மரங்களும் விரிந்திருந்தன. வானின் பாதை எல்லாப் பக்கமும் திறந்தே இருந்தது. அவன் எனது தயக்கத்தைக் கண்டவனைப் போலச் சொன்னான்,

'இறங்கி ஓர் அடி நடந்துவிடுங்கள். பிறகு இங்கு வந்துவிடலாம். இது நீந்துவதைப் போலச் சுலபமானதே.' நான் மறுத்தவனாக நின்றுகொண்டிருந்தேன். அவன் எனைக் கட்டாயப்படுத்த விருப்பமற்றவனைப் போல முன்நடக்கத் தொடங்கினான். நான் அவனிடம் உரக்கச் சொன்னேன்,

'போக வேண்டாம்.'

கொஞ்ச தூரமேனும் நடந்துவிட வேண்டுமென்ற வேட்கை மீறிக்கொண்டே வந்தது. அவன் திரும்பிச் சென்று சொன்னான்,

'உங்களைப் போலவே நானும் தயங்கியிருக்கிறேன்.' மிகுந்த மனத் துணிவைக் கொண்டவனாக, ஜன்னலின் மீதேறி நின்றவனாக அவனை நோக்கி எனது முதலடியை ஆகாச வெளியில் வைத்தேன். அவன் புன்னகைத்தபடி பார்த்துக் கொண்டிருந்தான். அடுத்த அடியை எடுத்து வைத்து முன் நடந்தபோது அவன் முகம் மாறிக் கொண்டே இருந்தது. வேகம் மீறிய காலடிகளில் நான் அவன் அருகே சென்று நின்ற வியப்பு தாங்க முடியாமல் சொன்னேன்,

'ஆகாசத்தில் நின்றுகொண்டிருக்கிறேன்.'

அவனிடமிருந்த சிரிப்பு மறைந்துபோனது. சட்டென நான் ஒருபோதும் யோசிக்க முடியாத காரியமொன்று நடந்தேறியது. அவன் எனது அறையை நோக்கி நடக்கத் தொடங்கி, ஜன்னலின் வழியே என் அறைக்குள் தாவி உட்கார்ந்துகொண்டான். எனக்கு எதுவும் புரியவே இல்லை. நின்ற இடத்திலிருந்தே கத்தினேன்,

'என்ன செய்கிறாய் என் அறையில்?'

அவன் ஜன்னலின் விளிம்புக்கு வந்து சொன்னான், 'நானும் உனைப் போலத்தான் மிகப் பிரயாசைப்பட்டு காற்றுவெளியில்

நடக்கத் தொடங்கினேன். அது மிகுந்த ஆயாசமூட்டுவது; களைப்படையச் செய்வது. இனி நீ ஒருபோதும் அறைக்குத் திரும்ப முடியாது. உனைப் போல மற்றொருவன் வரும்வரை.'

நான் இதைத் தாங்கிக்கொள்ள முடியாமல் எனது அறையை நோக்கி நடந்தபோது அது மிகத் தொலைவிலிருப்பது போலானது. அத்தோடு எனது சுயவிருப்பமின்றிக் கால்கள் திரும்ப தெற்கு நோக்கி நடப்பவனாக இருந்தேன். அவன் எனைக் காண விருப்ப மற்றவனைப் போல அவசரமாக ஜன்னலை மூடிக்கொண்டு விட்டான்.

ஏழு இறகுகள்

'ஹார்டி இந்திக மலபார்சி' எனப்படும் மேற்கு மலைத்தொடரைப் பற்றிய தாவரப் பெருநூல் 1678—ல் ஹாலந்து நாட்டின் தலைநகரான ஆம்ஸ்டர்டாமில் வெளியிடப்பட்டு, இயற்கையியல் கழகங்களின் கவனம் பெறாமல் விடுபட்டுப் போய், பின் அதன் மூலப்பிரதி லிஸ்பன் நகரில் உள்ள பெலம் மனித வியல் அருங்காட்சிச் சாலையில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது. ஏசுசபைப் பாதிரிகளான ஜோஸ் டிவாரியா மற்றும் ஜான் கான்ஸ்லாவ் என்னும் ஸ்பானியரும் இணைந்து மேற்கொண்ட மேற்கு மலைத்தொடரின் அரிய மலர்களைப் பற்றிய சித்திரத் தொகுப்பானது 1956—ல் கண்டுபிடிக்கப்பட்ட பின்பு அதன் மீது அதீதக் கவனம் குவியப்பட்டது. ஞாபகத்தினின்று என்றோ விடுபட்டுப் போயிருந்த போது, வேம்பர்கள் என்னும் மேற்கு மலை வாசிகள் இன்றும் ஜோஸ் டிவாரியாவையும் கான்ஸ்லாவையும் மறந்துவிடவில்லை. அதிலும் மூன்று கன்னியரை விலைக்குப் பெற்றுப்போன நிகழ்வு ஒரு புராணீகத்தின் கதைப் பாடலைப் போல இன்றும் பாடப்பட்டு வருகிறது. பாதிரிகள் பதினேழு ரூபாய்க்கு வாங்கிப் போன மூவரில் ஒருத்தி இன்றும் வேட்டைத் திரு நாளில் ருது எய்திய இளம்பெண் மீது கூடி, தானறி யாத ஆங்கிலத்தில் ரௌத்திரம் கொண்டு குதித்து, உரத்து ஏழுநிற இறகு பொருத்தப்பட்ட தொப்பியும், பச்சை நிற அங்கியும், மரச் சிலுவையும் கொண்ட ஓலைப்பெட்டி கொண்டு வரப்பட்டு முன் காட்டப் படும்போது, வேம்பர் இனப் பெண்கள் யாவரும் மாரடித்து உரத்து அழுவதும் அவர்கள் பின்பு

பாஷையற்ற இசையில் ஓங்காரமிட்டு இரவெல்லாம் நீள்வதாகத் தொடர்கிறது.

ஏசுசபையின் சேவைக்குத் தன்னை ஒப்புக்கொடுத்திருந்த ஜோஸ் டிவாரியா, மலையின் சரிந்த பாறைப் புடைவுகளில் வாழ்ந்து வரும் வேம்பர்களின் துயரத்தினைப் போக்கி, அவர்களை மீட்புப் பாதையில் பயணம் செய்து வைக்க விரும்பி மலையின் ஆழ்ந்த வனவிருட்சங்களைத் தாண்டி அலைந்துகொண்டிருந்தார். வேம்பர்களில் எவரும் ஜோஸ் டிவாரியாவுடன் பேசவும் தயாரில்லை. அவர்கள் நாணலை அறுத்து உலர வைத்து அதை முடையும் வேலை கொண்டிருந்தனர். அம்பலக்காட்டுக்கு வந்திருந்த ஜான் காஸ்லாவ் மதப் பிரசங்கங்களைவிடவும் இயற்கையியலில் மிகுந்த ஈடுபாடு காட்டவே அவருக்குப் புனிதரின் தேவாலயத்துக்கான மலர்த் தோட்டம் அமைக்கும் பணி தரப்பட்டபோதுதான் ஜோஸ் டிவாரியாவைச் சந்தித்தார். சரியாக கான்ஸ்லாவ் சந்திப்புக்கு இரு தினங்களுக்கு முன்பாக டிவாரியா ரோகம் கொண்டிருந்த வேம்பன் ஒருவரின் வீட்டுக்குள் போயிருந்தார். அது கற்களை அடுக்கிக் கட்டப்பட்டிருந்த வீடு. அவர் கண்களை இருளுக்குப் பழக்கியவராக உள்ளே பார்த்தபோது பாறையில் அடர்ந்து முறுக்கேறின பசிய கொடிகளும், பல வர்ணங்களில் காட்டுப் புஷ்பங்களும் பூத்திருந்தன. அதன் வாசனை அவரை ஈர்த்தது. அதன் அருகே போனபோது கொடிகளில் ஓணான்கள் ஒளிந்திருப்பதைக்கூடக் கண்டார். வனத்தின் வசீகரம் ததும்பும் வீட்டை வியந்தபடி அதன் அருகாமைக்குச் சென்றபோது அவை நிஜமான செடிகொடிகள் அல்ல என்றும், அவை பாறையில் வரையப்பட்ட சித்திரங்கள் என்றும் கண்டார். பூத்திருந்த பூக்களும் ஓணானும்கூடச் சித்திரங்கள் தான். ஆனால் அந்தச் சித்திரப் பூக்களில் வாசனை கசிந்து கொண்டிருந்ததன் மர்மம் மட்டும் பிடிபடவில்லை. டிவாரியா நோயாளிக்குரிய பிரார்த்தனை செய்துவிட்டுத் திரும்பும்போது மூன்று கன்னியர் உள்ளே நுழைந்தனர். அவர்கள் சகோதரிகள் என்பது முகச்சாயலிலே தெரிந்தது. என்றாலும் வயது வேறுபாடின்றி ஒரே தோற்றம் கொண்டிருந்தனர். டிவாரியா அந்தச் சுவரில் உள்ள பசுமைச் சித்திரங்களைச் சுட்டிக்காட்டிக் கேட்டதற்கு அவற்றைத் தாங்களே வரைந்ததாகச் சொன்னார்கள். வாசனையோடு சித்திரம் வரைவதைப் பற்றிய வியப்பு கலையாமல் தன் மடத்துக்குத் திரும்பி வந்தார் ஜோஸ் டிவாரியா.

இதை அவர் கான்ஸ்லாவிடம் சொன்னதும் அவர் மனத்தில் நெடு நாள்களாகப் புதையுண்டிருந்த தாவரப் பெருநூல் தொகுப்பின் ஆசை வெடித்துக் கிளைக்கத் தொடங்கியது. மறுநாளில் விடிவதற்கு முன் அவர்கள் புறப்பட்டு வேம்பரின் வீட்டை அடைந்தனர். பாதிரியாரின் வெளுத்த உருவங்களைக் கண்ட பெண்கள் பயந்து திகைத்திருந்தனர். கான்ஸ்லாவ் நெடுநேரம் அந்தப் பாறையில் வரையப்பட்ட மலர்களை நுகர்ந்தபடி இருந்தார் மயக்கமூட்டும்

வாசனை அவர்கள் இதை எவற்றால் வரைந்தனர் எனக் கேட்க, அவர்கள் ஏழுவர்ண இறகுகளைக் காட்டினர். அது ஏதோ ஒரு பறவையின் இறகிலிருந்து உதிர்ந்திருந்தது. அப்போதே அவர் மேற்கு மலைத் தொடரின் மலர்களுக்கான வகையமைப்பு செய்ய முடிவு செய்தார். சில வாரங்களுக்குப் பிறகு ஜான் கான்ஸ்லாவ் தனித்து மலைக்குச் சென்று அந்தக் கன்னியரின் தகப்பனோடு பேசி அவர் களைப் பதினேழு ரூபாய்க்கு மாற்றாகப் பெற்றுக் கொண்டபோது கல்படிவுகளைப் போல மூன்று கன்னியரும் ஒடுங்கிக் கொண்டனர். அவர்களது வர்ணச் சிறகுகளை எடுத்துக்கொண்டு, கூட்டிக்கொண்டு மலையின் அடிவாரத்தில் இருந்த விடுதி ஒன்றில் வந்து தங்கிய இரவில் டிவாரியா அவர்களைக் கண்டு திகைத்தவராக, ‘இந்தப் பெண்களை என்ன செய்யப் போகிறாய்?’ என்று கேட்க, ‘பயிற்றுவித்துக் காகிதங்களில் மலர்களைத் துல்லியமாகப் பிரித்துச் சித்திரமாக்கிப் பதிவு செய்வேன். மலர்களை அதன் வாசனையோடு சித்திரமாக்கி வெளியிட்டால் உலகின் கவனமே என் பக்கம் திரும்பிவிடும்’ என்றார். ஜோஸ் டிவாரியா சுயபயம் கலையாதவராக மௌனம் கொண்டார். கான்ஸ்லாவ் மூன்று பெண்களுக்கும் அங்கி போன்ற உடுப்பும் மரச்சிலுவையும் உணவும் தந்து ஒரு தடுப்பறையினுள் அடைத்திருந்தார். அந்தப் பெண்கள் தலை கவிழ்ந்தபடியே இருந்தனர். இருளைக் குடித்தவர்களைப் போல் அவர்களின் இறுக்கம் உக்கிர மடைந்தபோது உணவு கொண்டு போன பெண் உரத்த குரலில் அவர்களுக்கு உணவைத் தந்து மிரட்டியதும், இரு கைகள் அவள் வாயை மூடின. பின்பு அவளின் காது அறுபட்டுத் தனியே கிடந்தது. எங்கும் ரத்தம் துளிர்த்துப் பெருகியிருந்தது. அந்த மூவரில் ஒருத்தி தன் காதைத் துண்டித்து விட்டதாக வேலைக்காரி சொன்னதும் பாதிரி கான்ஸ்லாவ் மூவரையும் நிறுத்தி அவர்களின் பற்களைக் காட்டச் சொன்னார். அவர்கள் வாயைத் திறக்கவேயில்லை. தன் பலம் கொண்டு வாயைத் திறந்தபோது மூவர் பல்வரிசையிலும் ரத்தக் கறை இருந்தது. ஆத்திரம் மீறியவராக அவர்களை ஏசித் திரும்பினார்.

இருநாளின் பிறகு ஆணைப் போல காக்கி நிற உடையும் காகிதங் களையும் அவர்களுக்குத் தந்து இரு பாதிரிகளும் மேற்கு மலைக்குக் கூட்டிப்போயினர். அந்தப் பெண்கள் எதையும் மறுக்கவில்லை. கண்களில் படும் மலர்களை எல்லாம் அதன் வாசனையோடு காகிதங்களில் சித்திரமாக்கினர். கான்ஸ்லாவ் மிகுந்த சந்தோஷம் கொண்டார். நாள்களின் சுழற்சியில் பள்ளத் தாக்குகளிலும் மலைப் பிளவுகளிலும் இறங்கி மலர்களை வரைந்தனர். என்றாலும் அவர்கள் எவரோடும் பேசிக்கொள்ளவே இல்லை. இந்த மௌனம் சில நேரங்களில் ஒரு கத்தியைப் போல மினுங்கிக்கொண்டிருக்கும். கான்ஸ்லாவ் அவர்களை மழைக்காலத்தின் முன்பாகவே வேலையை முடித்துவிட அலைக் கழித்தார். ஒரு நாளில் அவர்கள் படுகை போல மஞ்சளும் நீலமும் கொண்ட மலர்களின் சரிவில் இறங்கி

வரைந்துகொண்டிருந்தனர். பாறைகள் வளைந்து கிடந்தன. ஒரு பாறையில் ஏறித் தொலைவு வரை பார்த்துக்கொண்டே இருந்தார் கான்ஸ்லாவ். சூரியன் தகித்துக்கொண்டிருந்தது. அவர் வெம்மையில் தனது கைகளை நீட்டி முறுக்கியபடி திரும்பிப் பார்த்தபோது அந்தச் சரிவில் மூன்று கன்னியருமில்லை. அவர் உரத்துப் பெயர் சொல்லி அழைத்தார். அவர்கள் தென்படவில்லை. தாள முடியாத கோபம் கொண்டவரைப் போல அவர் காட்டுச் செடிகளை மிதித்துக் கத்தியபடி ஓடினார். பூச்சிகள் திடுக்கிட்டுப் பறந்தன. அவர்கள் ஏதோ புள்ளிகளில் பதுங்கிப் போயிருந்தனர். சூரியன் மறையும்வரை தேடி ஓய்ந்தவராகத் தன் இருப்பிடம் திரும்பியதும் டிவாரியாவை அழைத்தார். வனத்தினுள் தேடுவது மிகச் சிரமம் என்பதால் வேட்டை நாய்களோடு கூடிய வேட்டையாள் ஒருவனை வனத்தினுள் அனுப்பினார்கள். மூன்று நாய்களோடு அவன் தேடி அலைந்தான். நாய்களால் அவர்களின் சுவடறிய முடியவில்லை. ஓடிக் களைத்தன. அதற்குள் சாரல் தொடங்கிவிட்டது. எனவே காட்டில் எப்போதும் காற்று விரிய மழை பரவி நீண்டது. அவர்களின் பிடிக்கு அப்பால் மூன்று பெண்களும் வனத்தினுள் ஒளிந்திருந்தனர். மழையோடும் கான்ஸ்லாவ் வேட்டை நாய்களை அழைத்துக்கொண்டு தேடினார். ரௌத்திரம், இயலாமை பற்ற அவர் முகம் கறுத்துக்கொண்டே வந்தது.

வானவில் தெரிந்த ஒரு காலையில் வேட்டைக்காரன் இரு பெண்களைப் பிடித்துக்கொண்டு வந்தான். ஒருத்தி முதிய விருட்ச மொன்றின் புதரினுள் பதுங்கியிருந்ததாகவும் மற்றவள் சருகுக் குவியலில் சுருண்டு படுத்திருந்தாள் எனவும் காட்டியதும் அவர்கள் முகத்தில் சரிந்த மயிர்களைப் பற்றித் தூக்கிப் பார்த்தார் கான்ஸ்லாவ். பற்கள் உடைந்திருந்தன. முகம் வீங்கியிருந்தது. வேட்டைக்காரனோடு சண்டையிட்டிருக்க வேண்டும். இருவரையும் பாதுகாப்பாக சங்கிலி யிட்டுக் கூட்டிப்போனார். மூன்றாமவளைப் பிடிக்க இயலவில்லை. இரு பெண்களும் காய்ச்சல் கண்டு பிதற்றிக் கொண்டிருந்தனர். அவர்களுக்குரிய மருந்து தந்து இரவெல்லாம் பாதிரி இருவரும் உடனிருந்தனர். அந்தப் பெண்கள் இருவரும் குணமான பின்பு மெலிந்து போயினர். ஆண் உடையில் அவர்களின் தோற்றம் பயம் கொள்ளச் செய்தது. அதன்பிறகு அவர்கள் எதிர்ப்பு கொள்ளவில்லை. சில நாள்களில் மீண்டும் மேற்கு மலைக்குப் போகத் தொடங்கினர். அவர்கள் வரைந்த சித்திரங்கள் தத்ரூபமாக இருந்தபோதும் அவற்றில் பூ வாசனை இல்லை. தனது வேலையை வேகமாக முடித்து ஆயத்தம் கொண்ட கான்ஸ்லாவ் தினமும் ஆயிரக்கணக்கான மலர்களை வரையச் செய்தார். உறக்கத்திலும் அவர்கள் விரல்கள் எதையோ வரைந்துகொண்டிருந்தன. ஒரு நாளின் காலை விழிப்பில் தனது தலையின் அருகே செந்நிறப் பறவை இறகு கிடப்பதைக் கண்டார் கான்ஸ்லாவ். டிவாரியாவின் படுக்கையிலும் அதே இறகு காணப் பட்டது. அதன் பின்னாள்களில் காணாமல் போன மூன்றாம்

கன்னி அவர்களின் தொலைவில் தென்படத் தொடங்கினாள் அவள் அவர்களைப் பார்த்துக்கொண்டே இருப்பாள். அது கான்ஸ் லாவை அதிகக் கோபம் கொள்ளச் செய்தது. பிடியில் தப்பி அலையும் சிறுத்தை போல அவள் பாறைகளில் நின்றாள். சில நாள்களுக்குப் பிறகு அவர்களுக்குத் தொலைவில் எப்போதும் அவள் இருப்பதைக் கண்டு தாங்க முடியவில்லை. வேட்டைக்காரனைத் திரும்ப அழைத்தனர். அவன் தனது மரத் துப்பாக்கியுடன் அவளைத் தேடிச் சுடப் பார்த்துக்கொண்டிருக்கும்போது மறைந்துவிடுவாள். முடிவாக ஒரு பகலில் அவளைச் சுட்டு, காட்டு விலங்கை இழுத்து வருவது போல் கொண்டுவந்தான். வனத்திலே அவளைப் புதைத்தனர். யாவையும் கண்டபோதும் மற்ற இரு பெண்களும் கண்ணீர் விட வில்லை.

தனது வேலையின் முடிவுப் பகுதிக்கு வந்த கான்ஸ்லாவ் லிஸ்பனில் அச்சிட முடிவு செய்து கடல் பயணத்துக்கு ஏற்பாடு செய்தார். தன்னுடன் இரு கன்னிகளையும் கூட்டிக்கொண்டு லிஸ்பன் சென்றார். சித்திர தாவரப் பிரதி தயாரித்து முடித்த ஒரு நாளில் லிஸ்பன் புறநகரில் உள்ள பண்ணை வழியாக நடந்து ஒரு தடாகத்தின் அருகில் வந்தபோது இரு வேம்பப் பெண்களும் மீன்களெனத் தாவி நீருக்குள் போயினர். பாசி அடர்ந்த குளத்தினுள் புதைவு கொண்டுவிட்டனர். அவர்களின் குதிப்பில் சலனமுற்ற தண்ணீர் மீண்டும் கூடிக்கொண்டது. அந்த நீர்ப்பரப்பினின்று விடுவிக்கவோ அவர்களைத் தேடவோ பின் எவராலும் முடியவில்லை.

தங்களது தாவரப் பெருநூலை லிஸ்பனில் இருவரும் தமிழ் அச்சுப் பதித்தே வெளியிட்டனர். பின் இருவரும் மலபார் பகுதிக்குத் தங்கள் வாழ்நாளில் வரவே இல்லை. தங்களது பெருநூல் எவராலும் கவனிக்கப்படாத துக்கமும் அலைக்கழிப்பு மிக்க கொடுங்கனவும் சூழ, வயோதிகத்தின் முன்பே மரணித்தனர். ஆனால் தென்மலையில் ஒரு சிலுவை நடப்பட்ட சமாதியொன்றில் கிளைத்த சிறு செடியொன்று கபில நிறத்தில் இரண்டு மலர்களை மட்டும் பூத்ததையோ, அது எப்போதும் பெண் வாசனையைச் சுரந்தபடி இருப்பதையோ காண அங்கு எவருமே இல்லை.

அந்தரம்

ஏழு மழையற்ற வருஷத்தின் தொடர்ச்சியால் பஞ்சம் பிழைக்க ஊரைக் காலி செய்து போகும் சம்சாரிகளோடு வடதிசை நோக்கிப் போக தச்சாசாரி தன் ருதுகழியாத மூன்று பெண்களோடும் வீட்டின் உள் அறையில் குடிகொண்ட தச்சாளம்மனின் பிடி மண்ணும் கொண்டு புறப்பட இருந்த இரவின் பின்பொழுதில், காற்று திரண்டு சுழன்று சப்தமிட, இருள் கூடி எங்கோ ஈரம் கசிந்து பரவ, காற்றின் குளிர்ச்சியறிந்த நாய்களும், பசுக்களும் குரலெடுத்துச் சப்தமிட, உறக்கமற்றுக் கிடந்த சம்சாரிகளில் சிலர் நாவைச் சுழற்றி, காற்றை ருசித்து, மழை மழையெனச் சப்திக்கும் முன்பாக வேகம் கூடின. மழையின் பிடியில் ஊர் வசமானது. அவர்கள் சப்தத்தினைக் கேட்டுக்கொண்டே இருந்தனர். வீட்டருகில் மழை பெய்தபோதும் கூட எங்கோ ஒலிக்கும் வெண்கல ஓசை போல அது அவர்களுக்குள் நீண்டு ஓடிப் பரவியது. ஆண்களும் பெண்களும் வீடு விலக்கி இருள் நிரம்பிய தெருவில் ஓடியலைந்தனர். நெடுநாள் களாகக் குளிர்ச்சி காணாத நாய்கள் கல் இடுக்குகளி லும் காலி உரல்களிலும் தேங்கிய தண்ணீரைக் கலைத்துத் தாவி ஓடின. மழை அவர்களைத் தீண்டி சந்தோஷித்தது. தச்சாசாரியின் பெண் பிள்ளைகள் தங்கள் வளர்ந்த கூந்தலை அவிழ்த்துவிட்டவர்களாகப் பெய்துகொண்டிருக்கும் மழையின் ஊடாகக் கல் உருக்களைப் போல மௌனம் கொண்டிருந்தனர். மழை அவர்கள் கூந்தல் வழி இறங்கி ஓடியது. பெய்துகொண்டிருக்கும் மழையின் சப்தம் குறைவதை தச்சாசாரி கேட்டுக்கொண்டேயிருந்தார்.

அதன் வேகமும், சீற்றமும் அடங்கிக்கொண்டே வந்தது தவிப்பாக இருந்தது. நின்றுவிடப் போகிறது மழை என்பதே வேதனை தருவதாக இருந்தது. உலர்ந்த வேம்புகள் விழித்துக்கொண்டு நீர் ருசி கொண்டு முறுக்கேறின. இனி சந்திக்க முடியாத மனிதரின் பிரிவைப் போன்ற தொரு துக்கம் அவர்களிடம் நிரம்பி உயர்ந்துகொண்டிருந்தது. நிலமெங்கும் ஓடி ஒளிந்துகொண்டது மழை நீர். அவர்கள் ஆசுவாசத் தோடு பெருமூச்சிட்டவாறு அந்த நிசப்தத்தினுள் அமர்ந்திருந்தனர். ஈரம்வடிந்த உடலாதலால் யாவரிடமும் ஒரு விதமான நளினம் சரிவு கொண்டிருந்தது. மழைக்குப் பிந்திய இருள் மிக்க கனம் கொண்டது. அவர்கள் அது போன்றதொரு மயக்கம் கலந்த இரவைக் கண்டவர்களில்லை. இமைகள் தானே கவிழ்ந்து தாழ்ந்துகொள்ள யாவரும் கனவின் முகத்துவாரத்தினுள் நுழைந்துகொண்டனர். மாடுகளின் ஒடுங்கிய மூச்சொலிகூட பிரமாண்டமாக எங்கும் கேட்டுக்கொண்டிருந்தது.

தச்சாசாரி தன் பெண் பிள்ளைகள் உறங்குவதைப் பார்த்துக் கொண்டேயிருந்தார். அறியாத வடதிசைக்குப் போக வேண்டிய தில்லை. இனி எப்படியும் மழை மறுமுறையும் ஊரைப் பற்றிக் கொள்ளும் என்ற சுய சமாதானம் கொண்டவராக விழித்துக் கிடந்தார். மழை பெய்த சப்தத்தின் சுவடே இல்லை. இருள் பூச்சிகள் கரைந்துகொண்டிருந்தன. அவர் எங்கும் ஈரம் பரவிக் கொண்டு இருப்பதை உணர்ந்தார். அன்றைய இரவின் நெடிய வெளி மிக மெதுவாக விரிவு கொண்டது. தச்சாசாரி வீட்டு முன் கிடந்த நாய் ஈரமண்ணைக் கிளப்பிக்கொண்டிருந்தது. புறப்பட்ட ஈரவாசனை உறக்கத்தினைத் தூண்டியபடி நீண்டது. சிறுவனைப் போல மழைக்குப் பிந்திய குளிர்ச்சி ததும்பும் கல் படியில் உட்கார்ந் திருக்க ஆசை கொண்டவராகக் கதவு திறந்து தெருவுக்கு வந்தபோது மரங்களில் அசைவே இல்லை. இலை தெரியா இருள்.

வீட்டின் எதிரில் கிடந்த கல்லில் உட்காரக் குனிந்தபோது ஒரு சப்தத்தைக் கேட்டார். வெள்ளி மணிகள் சுழலும் ஓசை போல சிலிர்ப்பு கூடின சப்தமது. கேட்டவுடனே அது உடலெங்கும் பரவி மின்னலைப் போலப் பெருவிரல் வரை துடிக்கச் செய்வதாக இருந்தது. என்ன ஓசையது என அறியாதவராக நிமிர்ந்து பார்த்தார். சிறிய வெளிச்சம் கசிந்துகொண்டிருந்தது. நீலமும் துளி சிவப்பும் கலந்த ஒரு நிறமது. சரியாக தச்சாசாரியின் வீட்டுக் கூரைக்குச் சில அடிகள் உயரத்தில் அந்த ஒளி துளிர்த்துக்கொண்டிருந்தது. என்ன ஒளியது எனப் புரியாத வசீகரத்தால் ஈர்க்கப்பட்டவராக அதைப் பார்த்துக்கொண்டிருந்த நிமிஷ இடைவெளியில் மீண்டும் அந்த வெள்ளியோசை சுழன்று மெல்லிய சிரிப்பொலி போலக் கேட்டது. அந்த ஓசையும் ஒளியும் ஒரே இடத்திலிருந்தே பிறக்கின்றது என அறிந்தவராக சில அடிகள் முன் நடந்து நின்று அந்தப் பொருளைக் கண்டபோது அது இருட்டில் ஒளிர்ந்துகொண்டிருந்தது. நட்சத்திரம் எதுவோ சிதறி வீழ்ந்துகொண்டிருக்கிறதோ என ஆகாசத்தைப்

பார்த்தார். தொலைவில் கூட நட்சத்திரங்களில்லை. தச்சாசாரிக்குப் பிடிபடவில்லை என்றாலும் அந்தச் சிரிப்பு அவரைப் பற்றிக் கொண்டது. அதைத் தொடர்ந்து கேட்டுக்கொண்டே இருக்க வேண்டுமென விருப்பம் கூடிக்கொண்டே வந்தது. தொலைவில் இருந்து அந்தச் சப்தம் பிறந்தபோதும் காதின் மிக அருகாமையில் அது கேட்டது. காற்றோடும் வீதியில் அமர்ந்தபடி பார்த்துக்கொண்டேயிருந்தார். வசீகரம் கூடிக்கொண்டே வந்தது. நீண்ட நாள்களுக்குப் பிறகு அவர் மனம் மிதந்து அலையும் சிறகினைப் போல எடையற்றுத் ததும்பிக்கொண்டிருந்தது.

அந்தச் சிரிப்பின் பிரேமை தொற்றியவராக உறங்கிப் போயிருந்தார். சாணக் கரைசலுடன் விடியலில் கதவு திறந்து வந்த மூத்தவள் தகப்பனின் முகத்தில் உறக்கம் மீறிய சந்தோஷம் கூடி அமைதியுறுவதைக் கண்டவளாகக் குனிந்து சாணம் தெளித்துக்கொண்டிருக்கும்போது அந்த ஓசை அவள் காதுக்கும் கேட்டது. அது சிரிப்பு தானா இல்லை ஏதேனும் சங்கீதத்தின் முடிவுறாச் சுருளா என்பது போலக் கேட்டு அடங்கியது. அவள் நிமிர்ந்து பார்த்தபோது காலை பிறந்துகொண்டிருந்தது. அவள் சப்தம் பிறந்த பொருளைக் கண்டபோது தன்னையே நம்பமுடியாதவளாகக் கண்ணை விரித்துப் பார்த்தாள். ஒரேயொரு துளி மழை. பூமிக்கு வந்துவிடாமலும் ஆகாசத்துக்குத் திரும்பி விடாமலும் அவர்கள் கூரையின் சில அடிகளுக்கு மேலாக நின்றுகொண்டிருந்தது. வெண்முத்து ஒன்றினை நினைவுபடுத்தும் தோற்றமும் அதைவிடத் துல்லியமும் கொண்டு திரண்டிருந்தது. தரைக்கு வராத மழைத்துளியை அவள் பார்த்துக்கொண்டிருக்கும் போது அது தன் சிறு நாவை அசைத்து சிரிப்பை வெளிப்படுத்தியது. அவர்கள் பரஸ்பரம் சந்தோஷித்தவர்களாக வீட்டில் உறங்கும் யாவரையும் பெயர் சொல்லி அழைத்தனர். அன்றைய பகலுக்குள் ஊரெங்கும் விநோதம் பரவிவிட்டது. தச்சாசாரியின் வீட்டுக் கூரையின் உயரத்தில் பூமிக்கு வராது அந்தரத்தில் நின்ற மழைத்துளியைக் கண்டபடி இருந்தனர். அதன் சிரிப்பு கேட்ட ஆண்களும், பெண்களும் மயக்கம் கொண்டு போயினர். யாவரும் அதை ஒப்புக்கொள்வது போலவே பேசிக் கலைந்தனர். அன்றைய பகலும் இரவும் ஆசாரி அந்த மழைத்துளியைப் பார்த்துக்கொண்டே இருந்தார்.

நேற்றுப் பெய்த மழையில் விடுபட்டுப் போய், வீடு திரும்பாத ஒரு சிறுமியைப் போலத் தனியே பகலின் நீண்ட ஒளியில் மிதந்துகொண்டிருந்தது. ஊரில் மிதந்து அலைந்த பறவைகளும் கூட துளி மழையின் அருகில் சென்று சுற்றி நெருங்க இயலாது சிறகடித்து உடன் மிதந்தன. அதிர்ஷ்டத்தின் காற்று வீசத் தொடங்கி விட்டதாகப் பெண்கள் உணரத் தொடங்கிய நாள்களின் தொடர்ச்சியால் தன் பூர்வீக வீட்டின் தூர்ந்து கிடந்த கிணற்றை வாரி மண் எடுக்க தச்சாசாரி வேலை செய்தபோது மண் கலயங்களிலிருந்து சொர்ணக் காசுகளும் வெள்ளிப் பாளமும் கிடைத்தன.

பெண்கள் இருவருக்கும் ஒரே நேரத்தில் திருமணம் செய்தார் பசுக்களும் தானியமும் பெருகியபோதும் தச்சாசாரி இரவு நேரங்களில் உறக்கமற்றவராக அந்த ஒற்றை மழைத்துளியைப் பார்த்துக்கொண்டே இருப்பார். அது அவர் மனத்தின் சங்கீதத்தைப் பாடுவதைப் போலவும் நிசப்தத்தினின்று மூழ்கி ஒரு மலரைப் பறித்து எறிவது போன்றும் சப்தமிட்டுக்கொண்டே இருந்தது. வீட்டோர் உடல்களில் மிளிர்வும், சாப்பாட்டுப் பாத்திரங்களில் உணவின் மீதமும் கூடிக்கொண்டே யிருந்தன. என்றாலும் அந்த ஊரில் பின் மழை பெய்யவே இல்லை. சம்சாரிகள் அன்று இரவு பெய்த மழை தங்களை மீண்டும் ஏமாற்றி விட்டதாகப் புலம்பி வடதிசை பார்த்துப் போகத் தொடங்கினார்கள். தச்சாசாரி மட்டும் ஒரு துளி மழை தன்னை வளமை கொள்ளச் செய்துவிட்டதாக நினைவு பெருக, தெருவோடிக் கிடந்த தனிமையில் உலவி அலைந்தார்.

மழையற்றுப் போன நாள்களின் பகல் மிகத் தீவிர வெக்கையின் பேரலைகளை வீசித் திரும்பின. வெக்கைக்கும் உரத்த காற்றுக்கும் அந்தத் துளி சலனமுறவேயில்லை. மாறாத சிரிப்பை விரித்தபடி தன்னிடத்திலே நின்றது. அந்த மழைத்துளியின் சப்தம் கேட்டுப் பழகிய கழுதைகளும் நாய்களும்கூட இரவில் அதனைத் திறந்த கண்களோடு பார்த்தபடியிருந்தன. மழையற்று உலர்ந்து கொண்டிருந்த மரம் மூர்க்கம்கொண்டது போலத் தன் கிளைகளை வீசி அந்தத் துளியைப் பற்றி ருசிக்க வளைந்து நிமிர்ந்து திமிறின. மழைத்துளியிடம் அசைவேயில்லை. எண்பத்தி ஒன்பது நாட்கள் கடந்த பிறகான இரவில் தன் குடும்பத்தின் தேவைகளை நிறைவேற்றம் செய்து விட்டவரைப் போலத் திருப்தியுற்று தச்சாசாரி எதிர்க்கல்லில் அமர்ந்தபடி அந்தச் சிரிப்பைக் கேட்டார். அது அவருக்கு வசீகரம் கொள்ளாதது போலப் பழகியிருந்தது. அவர் உடல் உறக்கத்தினுள் சரிந்துவிட முயன்றுகொண்டிருந்தன. தன் தெருவில் சுற்றியலையும் நாய்களையும் கழுதைகளையும் கண்டு கோபமுற்றவராக அவற்றை விரட்டியடித்தார். அன்றிரவில் வெகு சீக்கிரமாகவே உறங்கிப் போயிருந்தார். வீட்டில் இருந்த கடைசி மகள் மட்டும் விழித்துக் கொண்டிருந்தாள். நிசப்தம் மட்டுமே நிரம்பிக்கொண்டிருந்தது. சிரிப்பு விட்டு விட்டுக் கேட்டதால் அவளும் உறங்கிப் போனாள்.

பின்னிரவில் தச்சாசாரிக்கு விழிப்புத் தட்டியபோது ஆழமான மௌனம் எங்கும் மலர்ந்திருந்தது. அப்போது தொலைவில், வெகு அப்பால் ஏதோ ஒரு துயரமான குரலைப் போல விம்மலைக் கேட்டார். யாரோ வடதிசை நோக்கிப் போகும் சம்சாரியின் மனைவியாக இருக்கக்கூடும் என்று நினைத்தவராகக் கண்களை மூடிக்கொண்டு கேட்டார். மிகத் தொலைவில் அவ்வோசை கேட்டு அடங்கியது. நிமிஷ நேரத்துக்குள் விம்மலோசை திரும்பவும் கேட்டது. அதன் துயரம் தீவிரமாகத் தன் உடலில் சென்று சேகரமாவதை உணர்ந்தவராக வெளியே வந்தபோது திரும்பவும் கழுதைகளும் நாய்களும் அவர் வாசல்முன் கூடியிருந்தன. அவர் பார்த்துக்

கொண்டு இருக்கும் போதே அந்தத் துயரோசை திரும்பவும் கேட்டது. அது சலனமற்ற மழைத்துளியில் இருந்துதான் பிறக்கிறது என்பதை உணர்ந்து கொண்ட மறு கணம் அவர் முகம் வெளிறிப் போனவராக ஓடித் தன் வீட்டின் கதவுகளை மூடிக்கொண்டார். என்றாலும் அந்த இரவிலிருந்து அதன் சிரிப்பு ஒடுங்கி துயரோசை கேட்கத் தொடங்கியிருந்தது. தாள முடியாத எவரின் பிரிவுக்கான துக்கம் போல அந்த விம்மல் பரவி அதன் நெடிய துயர் பரவ ஊரே பயம் கொள்ளத் தொடங்கியது. துரதிருஷ்டத்தின் கை மழைத்துளியைப் பற்றிக் கொண்டதாக ஆத்திரம் கொண்டார் தச்சாசாரி. இரண்டு நாள்களுக்குள் உடல் வெளிறி ஏதோ புலப்பம் கொள்ளத் தொடங்கி நிமிர்ந்து எதையும் பார்க்க விரும்பாது அலைந்தார். துக்கத்தின் சப்தம் தாளாது ஊரார் பலரும் தச்சாசாரியே அந்த மழைத்துளியை வீழ்த்திச் சரித்துவிட வேண்டுமென்று வற்புறுத்தினர். அவர் அதற்கு மனதிடமற்றவராக இருந்தார். வீட்டிலிருந்த இளையவள் முகம் சுருங்கிப் போய்விட்டாள். துரதிருஷ்டத்தின் நடமாட்டம் அவர்கள் வீட்டைச் சுற்றி அலைவதாக உணர்ந்தாள். தொழுவில் நின்ற நிறைபசு கல்லில் கால் மாறி ஊன்றி வலது காலை ஒடித்துக் கொண்டு குரலிட்ட போது அவள் குரலெடுத்து அழுதாள். வீட்டின் முற்றத்தில் காய வைத்த தானியங்கள் யாவும் உலர்ந்து பொக்குகளாகின. வீட்டு உலக்கை முறித்து போனது. நோயுற்றவர்களாகத் தகப்பன் வீடு வந்து சேர்ந்தனர் மூத்த பெண்பிள்ளைகள். தச்சாசாரி எப்போதும் கோபமும் எரிச்சலும் கூடியவராக இரவில் துர்வசைகளையிட்டுக்கொண்டிருந்தார். பலரும் அவரை ஊரைவிட்டுப் போய்விடும்படி சொல்லினர். ஆனால் அவரிடம் இன்னமும் இரண்டு கோடைகளைத் தாங்கக்கூடிய தானியங்கள் இருப்பு இருந்தன.

தினமும் அவர் மழைத்துளியின் மீது தன் கசப்பை உமிழ்ந்தபடியிருந்தார். ஆயினும் அதன் துயரோசை கேட்கத் தொடங்கியதும் நகங்கள் வரை நடுக்கம் பரவ, உடல் தளர்ச்சியுற்று தானறியாமல் கைகளைப் புதைத்து அழுவதைத் தொடர்ந்து செய்து வந்தார். என்றும் போல கழுதைகளும் நாய்களும் அவர் வாசலில் இரவெல்லாம் அலைகின்றன. அவர் ஏதேனும் பறவையோ, தகிக்கும் சூரியனோ அந்த மழைத்துளியை விழுங்கிவிடாதா எனப் பார்த்துக்கொண்டேயிருப்பார். பறவைகள் தாழப்பறப்பதேயில்லை. ஓர் இரவில் அவர் யோசனையின் குழப்பத்தில் கதவு திறந்துகொண்டு வெளிவரும்போது படுத்துக் கிடந்த ஏதோ ஒரு விலங்கின் மீது கால் மிதித்து பயத்தில் வீழ்ந்தபோது கால் முறிவு கொண்டு உடல் ரணமானது. பெண்களும் ஆண்களும் மழைத்துளியின் மீது வெறுப்பைக் கசிந்தபடியிருந்தனர்.

இனியும் இந்த ஊரில் இருப்பதன் துயரம் தாளாதது என முடிவுற்றவராக அவர் தன் தானியங்களை, உடைமைகளை வண்டியில் ஏற்றிக்கொண்டு இரவோடு இரவாகப் புறப்பட இருந்தபோதும் அந்தத் துயரோசை நீண்டு கொண்டிருந்தது. மாடுகள் தெருவைக் கடந்து செல்ல முடியாமல் திணறி நின்றன. தச்சாசாரி வீடு திறந்து

கிடந்தது. பெண்கள் வண்டியில் அமர்ந்திருந்தனர். பிடிமண் எடுக்காது புறப்பட்ட நினைப்பில் வீடு திரும்ப எத்தனித்த போதும் அந்த விம்மல் நீண்டு கேட்டது. அவர் வீடு நோக்கி முன் நடந்தார் நிசப்தம் நீண்டது. அவரறியாமல் நிமிர்ந்து அந்த ஒற்றை மழைத் துளியைக் கண்டார். அவர் பார்த்துக்கொண்டிருக்கும்போதே சுழன்று சரிந்து ஒற்றைத் துளி வெடித்துப் பெருகி பெருமழையாக அவர் வீட்டைச் சுற்றி மட்டும் பெய்துகொண்டிருந்தது. அவர் வீட்டை நோக்கி ஓடியபோது மழையின் சப்தம் கேட்டுத் திரும்பிய பெண்கள் தெருவில் இறங்கி நின்றனர். வீட்டின் மழைச் சுற்றினுள் புகுந்து சப்தமிட்டபடி வீழ்ந்தார். அவர் முகத்தில் மழை வளையமிட்டுப் பெய்தது. ஒரு வீட்டுக்கு மட்டும் தனியே பெய்யும் மழையின் விநோதம் புரியாமல் புழுதியில் கிடந்த நாய்கள் நாவு துடித்து, மழை நோக்கி வந்துகொண்டிருந்தன. பின் தச்சாசாரியின் வீடு மெல்ல மழையால் இடியத் தொடங்கியது. உடலெங்கும் மழைத் துளிகள் நடமாட அனுமதித்தபடி மண்ணில் முகம் புதையக் கிடந்தார் தச்சாசாரி. பின் அவர் எழுந்துகொள்ளவே இல்லை.

வடு

வீட்டுக்குத் திரும்பிப் போகவே முடியாதோ என்ற பயம் அதிகமானபோது திரும்பவும் ஒரு பையன் பந்தை மைதானத்தை விட்டு வெளியே உதைத்திருந் தான். எல்லா நாளையும் போல அக்கா கூடவே வீட்டுக்குப் போகாமல் மைதானத்தில் விளையாடும் பையன்களை வேடிக்கை பார்த்தபடி நின்றிருந்தேன். நான்காம் வகுப்பில் என்னோடு படிக்கும் மாணவர் களில் சிலர் மைதானத்து மூலை மரத்தடியில் எதையோ மனம் செய்துகொண்டிருந்தார்கள். நான் முதலில் வேடிக்கை பார்த்துக்கொண்டு மட்டுமே இருந்தேன். அக்கா வகுப்புக்காரன் ஒருவன்தான் என்னைப் பந்து எடுத்துப் போடச் சொன்னான். மைதானத்துக்கு வெளியே அடர்ந்த புதர்ச்செடிகளுக் குள் பந்து போனால், தேடி எடுத்துப் போட வேண் டும். பெயர் தெரியாப் பூச்சிகளும், ஓணான்களும் பதுங்கிய புதரில் பந்தைத் தேடி எடுப்பது பயமாக இருக்கும். திரும்பத் திரும்பப் பந்தை எடுத்துப் போடுவது தாள முடியாத அழுகையை உண்டாக்கி விடுவதாக இருந்தது. வெயிலடங்கி இருட்டு பரவத் தொடங்கியதும் அவர்களிடம் மாட்டிக்கொண்டுவிட் டோமா என பயம் அதிகமானது. அவர்கள் கால்பந்து விளையாடிக்கொண்டே இருந்தார்கள். நான் வீட் டுக்குப் போக வேண்டுமென அழத் தொடங்கியதும் விளையாடும் மூன்று பையன்கள் என்னைச் சுற்றி நின்றுகொண்டு மிரட்டினார்கள். நான் அவர்கள் முகத்தைக் கூடப் பார்க்கப் பயந்தேன். ஒருவன் என் தோளை அழுத்திப் பிடித்துச் சொன்னான்,

"போடா. போ, வீட்டுக்குப் போயி தூங்கு;

காலையிலே பொம்பளைப் பிள்ளையாயிருவே.. போ.” மற்றப் பையன்கள் என்னை முறைத்தபடி அதையே திரும்பச் சொன்னார்கள்.

உதட்டைக் கடித்தபடி அழுதேன். அதே பையன் திரும்பவும் சொன்னான்,

“நாளைக்கு நீ பொம்பளைப் பிள்ளையாத்தான் ஸ்கூலுக்கு வருவே. அப்போ பார்த்துக்கறேன். போடா.”

நான் மைதானத்தின் பெரிய பரப்பில் தனியாக நடக்க நடக்க உடம்பு நடுங்கத் தொடங்கியது. தொண்டையெல்லாம் வலித்தது. உதடு விம்ம நான் அங்கிருந்து தப்பிவிட நினைத்துத் திரும்பாமல் ஓடினேன். வீட்டுக்கு வரும் தெருவில் இரவு நீண்டிருந்தது. நாளைக் காலையில் பெண்பிள்ளையாக மாறிவிடப் போகிறோம் என்ற வேதனை தாங்க முடியாததாக இருந்தது. வீட்டின் முன்னறையில் பெரிய அக்கா படித்துக்கொண்டிருந்தாள். அம்மாவின் அறைக்குள் போய் என்ன செய்வதென அறியாமல் கண்ணாடியில் என்னையே பார்த்துக்கொண்டிருந்தேன். அம்மா அறைக்குள் எட்டிப் பார்த்துவிட்டு சமையலறைக்குள் வரச் சொன்னாள். யாரிடமாவது சொல்லி அழ வேண்டும் போல் இருந்தது. வெட்கமாகவும் தாங்க முடியாத வேதனை தருவதாகவுமிருந்தது. அம்மா என் கண்களையே கவனித்தாள். பின் கேட்டாள்,

“மைதானத்தில் பசங்க திட்டுனாங்களா?”

பதில் பேச முடியவில்லை. இல்லையெனத் தலையாட்டினேன். முகத்தைக் கழுவி வரக் குளியல் அறைக்குள் போய்த் தண்ணீரைத் தொட்டதும், வலி இன்னமும் அதிகமானது. இன்றைக்குத் தூங்கவே கூடாது. விழித்துக்கொண்டே இருந்தால் பொம்பளைப் பிள்ளையாவதிலிருந்து தப்பிவிடலாமே என்ற யோசனை வந்தது. யாரோடும் பேச விருப்பமற்றவனாக சாமி ரூம் பக்கம் உட்கார்ந்து புத்தகத்தைக் கையில் வைத்துக்கொண்டு, காப்பாற்றும்படி மனத்திற்குள் ஏதேதோ கடவுள்களின் பெயரை முணுமுணுத்துக்கொண்டே இருந்தேன். அக்கா அப்போதுதான் முதன்முதலாகப் பார்ப்பது போல என்னைப் பார்த்துக்கொண்டிருந்தாள். என் உதடு அசையவேயில்லை. கல்சட்டியில் ஏதோ வறுபடும் மணம் வீடெங்கும் நிரம்பிக்கொண்டிருந்தது. சாப்பிட்டால் தூக்கம் வந்துவிடுமென்பதால் சாப்பிடாமலே எங்காவது ஓடிவிட வேண்டுமென நினைத்தேன். சி.கே. சுப்பு என்னும் பையன் வீட்டு ஞாபகம் வந்தது. நிழலைப் போல சப்தமின்றி வீட்டிலிருந்து இறங்கி, சுப்பு வீடுள்ள தெருவை நோக்கி நடந்தேன். தெருக்கள் மயக்கமூட்டுவதாக இருந்தன. தெருவில் சில சிறுமிகள் தண்ணீர்ப் பானைகளோடு கடந்து போனார்கள். சுப்புவின் வீட்டுக்குள் திடீரெனப் போக முடியாது. வீட்டைப் பார்த்தபடி நின்றபோது சுப்புவின் தம்பி என்னைப் பார்த்திருக்க வேண்டும். அவன் சுப்புவைக் கூட்டிவந்துவிட்டான்.

எல்லா நாளையும் போலவே சுப்பு என் தோள் மீது கையைப் போட்டுக்கொண்டு வீட்டுக்குள் கூட்டிப்போனான். சுப்புவின் வீட்டில் மாடி இருந்தது. மர ஏணி வழியாக மேலே ஏறிப்போன போது பஞ்சுப் பொதிகள் கிடந்தன. நார்க்கட்டிலில் அவன் என்னை உட்காரச் சொல்லிவிட்டு, வெல்லத் துண்டை சாப்பிடத் தந்தான். சுவையேயில்லை. நாவெல்லாம் பயத்தில் கசப்பு பீறிட்டுக்கொண்டிருந்தது. அவன் என் கழுத்தடியில் கை வைத்துச் சுடுகிறதா... எனக் கேட்டதற்கு மௌனமாகத் தலையாட்டினேன். சுப்பு சார்வாள் குறித்துத் தந்த பாடங்களை வரிசையாகப் படித்துக்கொண்டே வந்தான்.

எனக்கு அவன் குரல் தூரத்தில் கேட்டது. அவனிடம் சொல்லி விட வேண்டுமென்ற தவிப்பு கூடியது. சுப்புவை சாப்பிடக் கூப்பிட்டார்கள். நான் சாப்பிட்டு வந்ததாகப் பொய் சொன்ன பிறகு அவன் மட்டும் தனித்துக் கீழே சென்றான். சிம்னி விளக்கு பதற்றத்தோடு எரிவது போல இருந்தது. மிகுந்த வேதனையும் உடம்பெல்லாம் தோன்றித் தோன்றி மறையும் வலியும் கூடியது. நாய்கள் தெருவில் உலவத் தொடங்கின. ஊர் மெல்ல நிசப்தத்தில் மூழ்கத் தொடங்கியது. இங்கேயே படுத்துக்கொள்கிறாயா என்று சுப்பு கேட்டதற்குத் தலையாட்டியபோது அவன் திரும்பவும் சுடுகிறதா என உடம்பைத் தொட்டுப் பார்த்தான். இரவு மிக மெதுவாக நிரம்பிக்கொண்டிருந்தது. அப்பா என்னைத் தேடி வந்திருக்கக் கூடும் போல, குரல் கேட்டது. நான் கீழே போனபோது அப்பாவும் சின்ன அக்காவும் நின்றிருந்தார்கள். அக்கா கையில் அரிக்கேன் விளக்கு எரிந்துகொண்டிருந்தது. அப்பா, படித்து முடித்துவிட்டாயா என இறுகிய குரலில் கேட்டார். விளக்கின் வெளிச்சம் தெருவையே ஊசலாடச் செய்தது. பூத நிழல்களாக உருவெடுத்து நாங்கள் நடந்தோம். அம்மா வேலை செய்துகொண்டு தானிருந்தாள். யாவரும் படுக்கையை விரித்திருந்தார்கள் சுப்பு வீட்டில் சாப்பிட்டதாகச் சொல்லி, அக்காக்களுக்கு இடையே படுத்துக்கொண்டேன். அம்மா தனியே சாப்பிடும் மணம் கசிந்தது. எப்படி இந்த பயத்தை நிறுத்துவது? யாரால் நான் பெண்ணாக மாறுவதை நிறுத்திவிட முடியுமெனத் தெரியாமல் தலையணையில் முகத்தைப் புதைத்து சப்தம் வராமல் எனக்கு நானே பேசிக்கொண்டிருந்தேன். உறங்கக் கூடாது. கூடவே கூடாது என மந்திரம் போலவே புலம்பினேன். எல்லா விளக்குகளும் அணைக்கப்பட்டு விட்டன. அம்மா படுக்கைக்கு வந்திருந்தாள். அறையில் வெம்மை ஏறிக்கொண்டிருந்தது. தூக்கம் என் உடலின் மீதேறி சிகை வரை ஊர்ந்துகொண்டிருந்தது. கண்கள் திறக்க மறுத்து நடுங்கின. செய்வதறியாமல் பிதற்றினேன்.

எல்லோரும் உறங்கியிருந்தார்கள். இரவு ஒரு நதியைப் போல வீடெங்கும் ஓடிக்கொண்டிருந்தது.

'வேண்டாம். காப்பாற்ற முடியலையே. அய்யோ. என

அரற்றினேன். கனவில் பீறிடும் வார்த்தைகளைப் போல அவை வெடித்து வெளிப்பட்டிருக்கக்கூடும். அம்மாவின் குளிர்ந்த கைகள் என்னைத் தொட்டு எழுப்பின.

"என்னடா, பினாத்துறே... எதாவது சொப்பனம் கண்டாயா?" நான் விழித்து உட்கார்ந்துகொண்டேன். அம்மாவிடம் எதையும் மறைக்கக்கூடாதெனச் சொல்லிவிட முயன்றேன். விசும்பி விசும்பி அழுவது மட்டுமே நடந்தது. அம்மா செய்வதறியாது தேற்றியபடி என்னடா என்ன எனக் கேட்டுக்கொண்டே இருந்தாள். அழுகையும் உடைந்த குரலுமாக நான் பெண் பிள்ளையாக மாறிவிடுவேன் எனப் பையன்கள் மிரட்டியதைச் சொன்னதும், அம்மா என் தலையை வருடியவளாகச் சொன்னாள்,

"நல்லதுதானடா... மூணும் பொண்ணா போச்சுன்னு சந்தோஷமா இருப்பேன். அக்கா டிரஸ், நகை எல்லாம் நீயும் போட்டுக்கலாம். நிறைய வளையல் கொலுசுகூடப் போட்டுக்கலாம், ஜடை போட்டுக்க லாம். பிறகு என்னடா பயம்?"

அம்மா பேசப் பேச பயம் கலைந்து வசீகரம் தொடங்கியது. அம்மாவின் விரல்கள் தலையில் முன்பின்னாக ஊர்ந்து கொண்டே இருந்தன. தூங்கும் அக்காக்களைப் பார்த்துக் கொண்டே இருந்தேன். கனவின் மிருதுவைக் குடித்து மயங்கியிருந்தார்கள். அம்மா என்னைக் கட்டிக்கொண்டபடி 'வாடி என் செல்லக் கடைக்குட்டி' என இறுக அணைத்தாள். வேதனை வடிந்துகொண்டேயிருந்தது. அம்மா வின் கேசத்தை முகமெங்கும் பரப்பிக்கொண்டு தூங்கத் தொடங்கி யிருந்தேன். உறக்கம் கலைந்து எழுந்தபோது நான் மட்டும் பாயில் படுத்துக் கொண்டிருந்தேன். அம்மாவும் அக்காக்களும் சமையலறை வேலைகளில் இருந்தார்கள். அவசரமாகக் கண்ணாடியில் போய்ப் பார்த்தபோது நான் பையனாகவே இருந்தேன். பெண்ணாக மாறியிருக் கக் கூடாதா என ஏக்கமாக இருந்தது. உடம்பில் பதியாத அந்த வடுவோடு ஒருபோதும் வேறு உரு மாற முடியாத ஒரு பையன் நான் என, அன்றுதான் முதன்முதலாக என்னை அறிந்தேன். வெட்க மாகவும் சொல்ல முடியாத வேதனை தருவதாகவும் அது இருந்தது.

பத்ம விகாரை

ஷெவ்வால் மாதத்தின் காலையொன்றில் எங்கிருந்தோ புறப்பட்டு ஆறாயிரம் வீரர்களுடன் இபின்–அய்–அக்தர், எதிர்ப்படும் கிராமங் களைத் தீயிட்டும், ரத்ன வியாபாரிகளின் சுரங்க அறைகளைக் கொள்ளையிட்டும், கழுதைகள், பசுக்கள், நாய்களை விரட்டி நெருப்பு வைத்து அலறச் செய்தும், கரும் புகையும் ரத்தமும் படிந்த வாளோடு தங்கள் ஊரை நோக்கி வந்துகொண்டிருப்பதாக ஆடு மேய்க்கும் சிறுவனொருவன் குன்றின் மேல் ஏறிவந்து தனித்திருந்த புத்த விகாரையில் சொல்லியபோது என்றைக்கும் போலவே பிக்குகள் தங்கள் பிரதியெடுக்கும் வேலையினின்று கவனம் திரும்பாமல் கேட்டுக்கொண்டிருந்தனர்.

அந்த விகாரை ஊரை விலக்கிய பாதையின் உயர்ந்த குன்றின் உயரத்திலிருந்தது. அவர்களின் சலனமற்ற முகங்களைக் கண்ட சிறுவன் முப்பத்தி மூன்று தூண்கள் கொண்ட அறைக்குள் ஓடி, வயதாகியிருந்த பிக்கு அருகில் குனிந்து அதையே சொன்னான். அவர் புன்னகைத்துக்கொண்டு சிறுவனின் தலையைக் கோதிவிட்டார். விகாரை வெளிவாசலின் ஒரு கதவு மட்டுமே எப்போதும் மூடப்பட்டிருக்கும். உள்ளே எந்த அறைக்கும் கதவுகளில்லை. ஒரு பத்மம் போல விகாரை அமைந்திருந்தது. அதன் எல்லா அறைகளிலும் தரையில் அமர்ந்தபடி பிக்குகள் ஏதேதோ படியெடுக்கும் வேலையை, எழுதுதலைச் செய்துகொண்டிருந்தனர். விகாரையின் தென்மூலையில் ஒரு சிங்கம் வாய் திறந்து நிற்பது போன்ற நீர்த்தாரையொன்று அமைக்கப்பட்டிருந்தது. அதன் உள்ளே தண்ணீரின் சிறிய கிளையொன்று நீரூற்றாக உயர்ந்தும் தாழ்ந்தும் பொங்கிக்கொண்டிருந்தது. விகாரையின்

பின் வழியாகக் குன்றிலிருந்து அடுத்த ஊரை நோக்கி இறங்க முடிவதாக இருந்தது. பிக்கு தன் முகத்தினைப் பிரதியெடுப்பதினின்று விலக்கி சக துறவியிடம் சொன்னார்,

“வெளிவாசல் கதவைத் திறந்து வையுங்கள்.”

நெடிய கதவு திறக்கப்பட்டது. அன்றைய மாலைக்குள் தொலைவிலே குதிரைகளின் குளம்பொலியும் வீரர்களின் கூச்சலும் கேட்டன. பிக்குகள் எவரும் வெளியே வரவில்லை. அவர்கள் புன்னகை கலையாத உதட்டுடன் குனிந்து பிரதியெடுத்துக்கொண்டிருந்தனர். இடையச் சிறுவன் குதிரைகள் பொங்கி வருவதையும் ரத்த நெடியையும் அங்கிருந்தே உணர்ந்துகொண்டான். சில குதிரைகளின் பின்னால் இறந்துபோய்ச் சிதிலமான உடல் கயிற்றால் கட்டப்பட்டு இழுத்துவரப் பட்டிருந்தன. அவர்கள் மூர்க்கமாக வந்துகொண்டிருந்தனர். ஒளிவதற்கு இடமற்ற பெண்களும் குழந்தைகளும் வறண்ட கிணறுகளில் பதுங் கினர். வயோதிகர்கள் தங்களை மீறி, தெரு நீண்டு கிடப்பதன் துக்கம் தாளாது வெடித்துக் குரலிட்டனர். மரணத்தின் நூறு குதிரைகள் ஓசையெழுப்பி வந்து கொண்டிருந்தன. நாய்களின் அலைக்கழிப்பும் குரைப்புமாக அவர்கள் கிராமத் தெருவில் நுழைந்து எதிர்ப்பட்டவரை வாளால் வீழ்த்தியபடி முன்னேறினர். நெருப்பின் வளையம் எங்கும் சுழன்றது. புகை உயர்ந்துகொண்டே இருக்க, பார்வை மங்கிய நாயொன்று மிதிபடுவதும் கத்துவதுமாகக் குதிரையின் ஊடே ஓடியலைந்தது. இபின்–அய்–அக்தரின் வாள் எவர் உடலிலோ புகுந்து வெளிப்பட்டது.

சில மணி நேரங்களுக்குள் ஊர் அவர்கள் வசமானது. ஸ்திரிகளை யும் முதியவர்களின் நடுங்கும் கண்களையும் கண்டபடி குதிரையில் வந்த இபின் அவர்களை விட்டுவிடச் சொன்னான். கொள்ளையடிக்கும் அளவுக்குப் பொருள்கள் இல்லாத ஊராக இருந்தது. தானிய வாசனை மட்டும் பரவி தெருவில் நீண்டது. வேதனையின் கத்துதல் தொடரும் நாயைக் கண்ட வீரனொருவன் அதைத் துரத்திப் போய், தொலைவில் தெரியும் விகாரையைக் கண்டான். அவன் எழுப்பிய குரலால் யாவரும் குன்றினை நோக்கிப் பயணமாயினர். புகை தெருவெங்கும் சுழன்றுகொண்டிருந்தது. விகாரையின் வாசலுக்கு வந்து நின்ற இபின் அது திறந்து கிடப்பதைக் கண்டான். தனது படை வீரர்கள் சகிதமாக உள்ளே போனபோது தலை மழிக்கப்பட்டு மஞ்சளாடை உடுத்திய இருநூற்றுப் பதிமூன்று பேர் தரையில் அவர்களைக் கவனியாது படியெடுத்துக் கொண்டிருந்தனர். விகாரையில் குளிர்ச்சி ததும்பிக் கொண்டிருந்தது. இபின் அக்தரின் குரலுக்கு யாரும் செவி சாய்க்கவில்லை. படியெடுத்துக்கொண்டிருந்த வர்கள் சிரசை அறுத்தபடி முன்னேறி உள்ளே சென்றனர். எங்கும் நிசப்தம் ஓடிக்கொண்டிருந்தது. பிக்குகள் என்ன செய்கிறார்கள் என்பதற்குப் பதில் கிடைக்கவேயில்லை. வேதனையின் கீச்சிடலில் விகாரைக்குள் வந்து சேர்ந்திருந்த பார்வை மங்கிய நாயின் தலையைத்

தடவி அதைத் தண்ணீர் குடிக்கச் செய்தார் மூத்த பிக்கு.

அது தண்ணீர் குடிக்கும் ஓசை பிரமாண்டமாகக் கேட்டது. இபின் அக்தர் இது தன்னை அவமதிப்பதாகவே உணர்ந்தான். மூத்த பிக்குவைத் தவிர வேறு யாவரின் சிரமும் துண்டிக்கப்பட்டிருந் தன. பிரதியெடுக்கும் கையும் பிரதிகளும் சிதறிக் கிடந்தன. இவர்கள் எதை வாசிக்கிறார்கள் என பிக்குவைக் கேட்டான். பதில் இல்லை. பிரதியெடுத்துக்கொண்டிருக்கும் புத்தகங்களைக் குனிந்து எடுத்துப் பார்த்தான். ஒரு புத்தகத்தைத்தான் இருநூற்றுப் பதிமூன்று துறவிகளும் தினமும் பிரதியெடுத்துக் கொண்டிருந்தனர். இபின் அக்தருக்கு இது புரியவே இல்லை. மூத்த பிக்குவின் பிரதியைப் பிடுங்கிப் பார்த்தான். அதுவும் அவர்கள் பிரதியெடுத்ததைப் போன்ற புத்தகமே.

அந்த விகாரையின் எண்ணற்ற அறைகள் யாவிலும் அந்த ஒரேயொரு புத்தகம் மட்டுமே நிரம்பியிருப்பதாகவும், பல ஆயிரம் முறை அந்த ஒரு புத்தகம் திரும்பத் திரும்பப் படியெடுக்கப்பட்டிருப்ப தாகவும் வீரர்கள் சொன்னார்கள். அவை யாவற்றையும் வெளியே கொண்டு வந்து கொட்டச் சொன்னான் இபின் அக்தர். ஆயிரக்கணக் கான கட்டுகளாக அந்த ஒரே புத்தகம் நிரம்பியிருந்தது. ஒரேயொரு புத்தகம் மட்டுமே உள்ளே நூலகமாக இருக்கிறதே அது எதனால் என அவன் மூத்த பிக்குவைக் கேட்டான். அவர் பேசவில்லை. எழுதப்பட்டிருந்த பாஷை அவனுக்குப் புரியாததால் அதைப் படித்துக் காட்டச் சொன்னான். அவர் அதையும் மறுத்துவிட்டு நாயின் உடலில் துடிக்கும் நடுக்கத்தினை சாந்தி செய்து கொண்டிருந் தார் கோபத்தில் நாயை இரு துண்டாக வெட்டினான். உடல் இரண்டாக வீழ்ந்தது. இப்போதும் பிக்கு சலனமுறவில்லை. இபின் மிகுந்த கோபத்தோடு அது என்ன வகையான புத்தகம், அவர்கள் எதைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள் எனக் கேட்டான். அவர் கண்கள் தாழ்ந்துகொண்டன. அவன் தீராத ஆத்திரத்தில் மீதமிருந்த ஒரே பிக்குவையும் சிரம் துண்டித்தான். தன் கையில் வைத்திருந்த ஒரு பிரதியைத் தவிர்த்து மற்ற யாவற்றையும் தீயிட்டுக் கொளுத் தினான். அதன்பிறகு அவன் வடபகுதியில் பாதி வரை தன்வசமாக்கிக் கொண்டு தன் நாடு திரும்பினான்.

வழியில் பல முறை தன்னிடமுள்ள புத்தகம் எதைப் பற்றியது, இருநூற்றுப் பதிமூன்று பேர் எதைத் திரும்பப் படியெடுத்தார்கள் எனத் தேடுதல் கொண்டபோதும் அவனால் விளங்கிக்கொள்ள முடியவில்லை. தனது சாகசங்களை விலக்கிவிட்டு அந்தப் புத்தகத்தைப் புரிந்துகொள்ள முயன்றான். எங்கிருந்தோ பிடித்துக்கொண்டு வரப்பட்ட ஒரு துவராடை பிக்கு அவனுக்கு பாஷையைக் கற்பித்தார். திரும்பத் திரும்பப் படியெடுக்கப்பட்டபோதும் அது ஒரே புத்தக மில்லை என்றும், வேறு வேறு புத்தகங்களே என அவர் சொன்னதை இபின் அக்தர் புரிந்து கொள்ளவேயில்லை. அவன் தன் நாளின் பெரும்பகுதியை அந்தப் புத்தகத்தை அறிந்துகொள்வதில் செலவழித்

தான். அதை உணர ஒரே வழி அதைப் பிரதியெடுப்பது தானோ என்றபடி, அவனும் பின்நாளில் பிரதியெடுக்கத் தொடங்கினான். அதே வார்த்தைகள், வாசகங்கள், அடுக்குகள் யாவும் ஒன்றாக இருந்தபோதும் இரண்டும் வேறாகவே தென்பட்டன. அவன் குழப்ப முற்றான். தன்னைத் தேடிவரும் வீரர்களையும் அரசாங்க அதிகாரி களையும் விரட்டி அனுப்பினான். தனிமையில், எரியும் சுடரின் முன்பாக அவன் பிரதியெடுத்தபடியே இருந்தான். உறக்கமற்ற இரவுகள் நீண்டன. ஓர் இரவில் அவன் பார்த்துக்கொண்டிருக்கும் போது படுக்கையில் மூத்த பிக்குவும் உடல் துண்டான நாயும் படுத்திருந்தனர். துண்டிக்கப்பட்ட உடலோடு இருந்த நாயின் முகத்தில் கூட சாந்தம் நிரம்பியிருந்தது. அவன் 'இது எதனுடைய புத்தகம்' என உரக்கக் கேட்டான். அவர்கள் பார்த்தபடியே இருந்தனர். மறுநாள் இரவு அவன் பிரதியெடுக்கும் இடம் நோக்கிப் படுக்கையில் இருந்து ஓர் அடி முன்வந்து பிக்குவும் நாயும் அமர்ந்திருந்தனர்.

"இந்தப் புத்தகம் என்பது ஒரு வெற்று வெளியா" எனக் கேட்டான். அவர் பதில் பேசவில்லை. தினமும் ஓர் அடியாக அவனை நெருங்கிக் கொண்டே இருந்தார்கள். பசி மறந்தவனாக அவன் ஓர் இரவில் பிரதியெடுத்துத் திரும்பும்போது விரல்தொடும் எதிரில் பிக்கு இருந்தார். அவரின் முகம் சாந்தி ததும்பிக் கொண்டிருந்தது. அவன் "இந்தப் பிரபஞ்சம் என்பதுதான் இந்தப் புத்தகம், அப்படித்தானே" என்றான். அவர் சிரித்தார். பின்பு அவர் தணிவான குரலில்.

"இது ஒரு தியானம். தொடர்ந்துகொண்டே இருக்க வேண்டும்" என்றபடி மறைந்து போனார். அவன் அந்தப் புத்தகத்தை எண்ணற்ற பிரதிகளை எடுத்துக்கொண்டபடி தனியறையில் இருந்த நாள்களில் அவனைப் பலரும் மறந்துபோயினர். பின்பு ஒரு நாளில் அவன் ஒரு வாக்கியத்தை எழுதத் தொடங்க, அது காகிதத்தில் பதியாமலும் மறையாமலும் தண்ணீரின் மீது ததும்புவது போல மிதந்து கொண்டிருக்க அவன் பார்த்துக் கொண்டிருந்த காகித இடைவெளியில் ஒரு புன்னகை ஓடி மறைந்தது.

அரூப மிருகம்

தண்டஹாரண்யத்தில் பாதைகள் கிளைக்காத நாள்களில் மூர்க்க விலங்குகளும், நீரோட்டத்தின் சப்தம் அருந்தி நிற்கும் மரங்களும், ததும்பிக்கொண்டிருக்கும் இருளும் கூடிய வனவெளியில் ஒரு ரிஷியும் ரிஷிகுமாரனுமிருந்தார்கள். யாகநெருப்பின் முன் ரிஷி மந்திர உச்சாடனங்களைச் சொல்பவராக இருந்தார். வாலிபனாக இருந்தபோதும் ரிஷிகுமாரன் பழக்கப்படாத குதிரையைப் போல வனமெங்கும் அலைந்துகொண்டிருந்ததால் அவன் கண்கள் செம்மையேறியிருந்தன. மிருகங்களைப் போலவே தனது வேட்கையின் மீது மறைந்து தாக்கி ருசிக்கப் பழகியிருந்தவனைக் காட்டுப் பழங்களும் தண்ணீரும் வலிமையாக்கியிருந்தன. ஓய்வில்லாமல் அவன் சுற்றிக்கொண்டே இருந்த வழியில் அவன் காலடியோசையில் திடுக்கிட்ட குரங்குகள் மரம் தாவின. அவன் தன் முன் விரிந்திருக்கும் உலகினைத் தனது கண்களாலும் பற்களாலும் கவ்விக் கிழித்தபடி சென்றான்.

அந்த வனத்தின் மேற்குப் பகுதியில் ஓடிய நதிக் கரையில் ஒரு நகரமிருந்தது. அங்கிருந்து எப்போதாவது வன வேட்டைக்காக வரும் வீரர்கள் இலைகளின் நரம்பு வழியே ரிஷிபுத்திரன் பதுங்கி நிசப்தமாக விழித்துப் பார்த்துக்கொண்டிருப்பதைக் கண்டதும், குரல் துண்டிக்கப்பட்டவர்களாக மிரட்சி கொள்ளப் பின்னோடுவார்கள். தன்னை எதிர்கொள்ளும் யாவர் முகமும் விலகுவதேன் என அறிய அவன் தன் தகப்பனிடம் கேட்டதற்கு ரிஷி சொன்னார்,

"நீ யாவரையும் பயம் கொள்ளச் செய்கிறாய்." ரிஷிகுமாரனுக்குப் புரியவில்லை. அவன் தகப்பனிடம்

திரும்பவும் கேட்டான்,

"பயமென்றால் என்ன? நீ எனக்கு அதைக் கற்றுத் தரவில்லையே, பயத்தின் ருசியே எனக்குத் தெரியாதே."

மகனின் ஆழமான கண்களைக் கண்டவராக ரிஷி சொன்னார்,

"வேண்டாம், அதன் ருசி உன்னை உதிர்ந்து காய்ந்த இலைச்சுருளை விடப் பலஹீனமாக்கிவிடும்."

ரிஷிகுமாரன் சமாதானம் கொள்ளவில்லை. மறுபடியும் கேட்டான்,

"பயம் என்பதன் வாசனையை நான் நுகரக் கூடாதா? அது என் நாசியில் ஏறிச் செல்லவே நான் ஆசைப்படுகிறேன். பயத்தை எப்படி நான் அறிந்துகொள்வது என்பதை மட்டும் சொல்."

ரிஷி நிசப்தமானார். மகனை இரவு வரை காத்திருக்கச் சொன்னார். அன்றிரவில் ஓசையடங்கிய பெருவெளியில் எரியும் சிறு தழல் முன் இருவரும் அமர்ந்திருந்தனர். ரிஷி சொன்னார்,

"பயம் ஒரு மின்னல் போலத் தோன்றி மறையக் கூடியது. அதன் ஓசையும் வெடிப்பும் வலிமையானது. ஒரு துள்ளலில் எங்கும் பரவிப் பெருகக் கூடியது."

ரிஷிகுமாரன் ஆச்சரியத்தோடு சொன்னான்,

"மின்னல் எனக்கு உவப்பாகத்தானே இருக்கிறது. அதன் ஒளியைப் பல முறை கைகளில் ஏந்திக் குடித்திருக்கிறேன். பயம் அத்தனை வசீகரமானதா?"

ரிஷி நிசப்தம் கொண்டுவிட்டார். இருள் கூடிக்கொண்டே வந்தது. முகம் அறியாதபடி இருள் ஊர்ந்து நிரம்பியது. இருவரும் நெடுநேரம் உறக்கமற்றுக் கிடந்தனர். எதனெதன் ஓசைகளோ வெடிப்பதும் ஒடுங்குவதுமாக இருந்தன. ரிஷி சொன்னார்,

"உன்னையும் என்னையும் விழுங்கிக்கொண்டிருக்கும் இந்த இருளின் சுனையில்கூட பயம் மலர்ந்திருக்கிறது. குமாரா, பயம் தன் உடலெங்கும் கால்கள் கொண்டது. நடமாட்ட சப்தம்கூட இல்லாதது. இந்த இருள் பயத்தின் ஒரு மலர்தான்." மகன் பெருமுச்சிட்டபடியே பதில் தந்தான், "இருளின் அலைகள் என் மீது மோதிச் சரிவது சுகமாக இருக்கிறதே. இருள் துயிலின் வெதுவெதுப்பை அல்லவா கொண்டிருக் கிறது. இந்தக் கரிய மலரைப் போல சுகந்தமானதுதானா பயம்?"

ரிஷியின் குரல் ஒடுங்கிவிட்டது. அவர்கள் திரும்பவும் பேசிக் கொள்ளவே இல்லை. காற்று கடந்து சென்றபடியிருந்தது.

துயிலின் மென்தூவல்கள் நிரம்பின. சொப்பனங்களின் மெல்லிய படலம் எங்கும் விரிவுகொண்டது. ரிஷி துர்சொப்பனத்தில் வீழ்ந்து கொண்டிருந்தார். அரூப மிருகங்களின் பாய்ச்சலில் திடுக்கிட்டு அலறி எழுந்தபோது ரிஷி தொலைவில் எரியும் நட்சத்திரங்களைக் கண்டபடி தன் மகன் நிற்பதைக் கண்டார். அவனருகே வந்த ரிஷி சொன்னார்,

"சொப்பனத்தின் வீதியில் பயம் ஒளிந்து காத்திருக்கிறது. அது ஒரே நேரத்தில் நாலு திசையும் வளர்கிறது. அதன் தாடை மீறிய பற்கள் மினுங்கிக்கொண்டேயிருக்கின்றன."

ரிஷிகுமாரன் தானும் சொப்பனத்தில் விழித்தெழுந்ததாகவே சொன்னான்,

"சொப்பனம் புலன்களின் வேட்டை மைதானமாகத்தானிருக்கிறது. அங்கே பயமென்னும் மிருகத்தின் கால் தடத்தினைக்கூட நான் காண முடிந்ததில்லை தந்தையே."

ரிஷி, இனி தன்னால் குமாரனுக்குக் கற்றுத் தர எதுவுமில்லை என்றவராகக் கடந்து போனார். தனது பதிலற்ற கேள்வியைச் சுமந்து திரிபவனாக ரிஷிகுமாரன் அலைந்துகொண்டிருந்தான். ஒரு நாளில் ரிஷி அவனை அழைத்துச் சொன்னார்,

"மேற்கில் நதியைக் கடந்து காணும் நகரத்துக்குச் சென்றால் நீ பயத்தைக் கண்டுவரலாம்."

"நகரம் பயத்தின் வசிப்பிடமா?" என ரிஷிகுமாரன் கேட்டதற்கு, "பயம் ஒரு தப்பியலையும் விலங்கு, நகரின் ஏதாவது ஒரு பதுங்கு முனையில் கண்கள் ஒளிர அது ஒளிந்திருப்பதை நீ கண்டடைவாய்" எனப் புறப்படச் செய்தார்.

வேட்டுவனைப் போல ரிஷிகுமாரன் வனத்தினின்று வெளியேறினான். நதியில் தன்னை எதிர்கொள்வதைத் தவிர்த்த முகம் விலக்கி நகரம் வந்து சேர்ந்தான். இயக்கத்தின் துள்ளல் கூடிய நகரம் சப்தத்தால் நிரம்பியிருந்தது. குறுக்குச் சந்துகளிலும் கறுத்துப் பாசியேறிய சுவர் வரிசைகளிலும் தேடியலைந்தான். பயத்தின் மூச்சு சப்தம்கூடக் கேட்க முடியவில்லை. இரவு நகரின் மீது படர்ந்தது. இடிபாடுகள் கொண்ட கற்கோயிலின் வெளியே படுத்துக் கிடந்தான். நள்ளிரவுக்குப் பிறகு இருவரின் பேச்சுக் குரல் கேட்டது,

'பயந்துபோய் நீ கயிற்றை விட்டுவிட்டால், நம் காரியம் கெட்டு விடும்' என்றது ஒரு குரல். உடனே மறு குரல்,

'முதல் தடவை என்பதால் பயமாக உள்ளது. வீரர்கள் விழித்துக் கொண்டு நாம் அகப்பட்டுவிட்டால், சாவு நிச்சயம். அந்த பயம் நடுக்கமடையச் செய்கிறது' என்றது.

ரிஷிகுமாரன் பாய்ந்து அவர்களருகே சென்றான். கள்வர்களில் மூத்தவன் சட்டெனத் தன் குறுவாளை உருவி நின்றான். ரிஷி குமாரனின் குரல் எழுந்தது,

"நீ பயத்தைக் கண்டிருக்கிறாயா? அது எங்கே ஒளிந்திருக்கிறது? நான் அதைத் தேடியலைந்துகொண்டிருக்கிறேன்."

இளையவன் பலமாகச் சிரித்தான். வயதான கள்வன் சிரிக்கவில்லை. ரிஷிகுமாரனின் உருவத்தையும் வேகத்தையும் கண்டவனாகச் சொன்னான்,

“அது என்னைக் கண்டிருக்கிறது. வளர்ப்பு நாயைப் போல என் காலைச் சுற்றி நக்கிப் போகக்கூடியது பயம். நான் உன்னை அதன் வசிப்பிடத்துக்கே கூட்டிப்போக முடியும். உனக்குக் கயிற்றைப் பற்றி ஏறத் தெரியுமா?” என்றவனாக அவனையும் உடனழைத்துக் கொண்டு அரசனின் அந்தரங்க அறையை ஒட்டிய கோட்டைச் சுவரைப் பற்றி மேல் ஏறினார்கள். வயதானவன் தனது பையில் இருந்த பிடிசாம்பலை எடுத்துக் காற்றில் ஊதியபடி ஊரை உறக்கத்தின் பிடியில் அது வசமாக்கும் என்றான். இருவரும் அந்தப்புர அறைக்குள் புகுந்தனர். வயதான கள்வன் தனக்குத் தேவையானதைத் திருடிக் கொண்டான். ரிஷிகுமாரனின் கண்கள் ஒளிர்ந்து கொண்டேயிருந்தன. வயதானவன் அறையை விட்டு வெளியேறும் முன்பு,

“நீ தேடி வந்த மிருகம் அடுத்த அறையில் உறங்கிக்கொண்டிருக்கிறது. துயில் கலைத்து அதன் முகத்தை நேர்கொள்” என்றவனாக மதில் சுவர் தாவி நீங்கினான். அடுத்த அறைக்குள் ரிஷிகுமாரன் நுழைந்த போது இரண்டு சுடர்கள் எரிந்துகொண்டு இருந்தன. படுக்கையில் ஓர் இளம்பெண் கேசம் கலைய உறங்கிக்கொண்டிருந்தாள். அவளருகே குனிந்து தன் இரு கைகளாலும் முகம் பற்றித் தூக்கியபோது, விழித்த அவள் பதற்றம் மீறிக் குரலிட்டும், அவன் தன் பிடியை நழுவவிட்டு, ஏமாற்றமுற்றவனைப் போல அறையின் திரைச்சீலைகளின் பக்கம் திரும்பினான். அவள் தோள் வரை சரிந்த கேசம் கொண்டு, வனவேடனைப் போலிருந்த மனிதனைக் கண்டாள். அவன் கண்கள் எதையோ தேடுவதை உணர்ந்தவளாகக் கேட்டாள்,

“நீ எதைத்தான் தேடுகிறாய்?” அவன் தனக்குத் தானே சொல்வது போலப் பேசினான்,

“பயத்தைத் தேடியலைகிறேன். நீ எப்போதாவது அதைக் கண்டிருக் கிறாயா?”

அவள் வியப்போடு அவனைப் பார்த்துக்கொண்டிருக்கும்போது அபயக்குரல் கேட்டு வந்த காவலர்களின் வாள்நுனி அவன் தாடையை உராய்ந்தது. அவர்களை விலக்கித் திமிறி நடந்த போது வாள்நுனி முகத்தில் பாய்ந்தது. அவள் வீரர்களை விலக்கி அவனருகே வந்தவ ளாகக் கேட்டாள்,

“இந்த வாளின் நுனியில் என்ன பார்க்கிறாய்?”

அவன் தன் ரத்தத்தின் துளிர்ப்பை அறிந்தவனாக, “தாக்குதல் என்ற உதிர விளையாட்டினை நான் முன்னமே அறிந்திருக்கிறேன்” என்றபடி அவர்கள் பிடிதப்பி சரிந்து மதில் சாடி ஏறும்போது அரண்மனையன்றி வேறிடம் கண்டிராத இளவரசி அவனிடம் சொன்னாள்,

“‘என்னை நீ இங்கிருந்து தூக்கிக்கொண்டு இந்த தேச எல்லையைக் கடந்து தப்பிப்போக முடியுமானால் உனக்கு பயமென்பதை நான் அறிய வைப்பேன்.”

அவன் மூர்க்கம் மீறியவனாக வீரர்களைச் சுழற்றி வீசி அவளைத் தன் வசப்படுத்திக்கொண்டு தாவும்போது வாள்நுனி அவன் உடலை ரணப்படுத்தியது. முதுகில் அம்புகள் ஏறின. அவன் கவனம் பிசகாமல் தப்பினான். இரண்டு நாள்களின் தொலைவில் தேச எல்லையைத் தாண்டிய அவர்கள் களைப்புற்றிருந்தார்கள். அவன் ரணமேறிய உடலோடு நடந்தான். உடல் நோவும் அசதியுமாக மிக மெதுவாக நடந்தார்கள். செம்பாலை முடிவற்று இருந்தது. யாருமற்ற மணல் வெளியில் அவள் கேட்டாள்,

"உன்னைத் துரத்தியவர்களின் வாள்முனையில் பயத்தின் நாவு நீண்டு உன் உயிரைப் பற்ற முயன்றதை நீ காணவில்லையா? உன் உடலின் ரணம், வேதனை யாவும் பயத்தின் பற்கள் பதிந்தது தானே?"

அவனோ "உடல் வேதனை ஒரு பழகிய ருசி" என மறுதலித்தான். செம்புழுதிகளைப் பொங்கியபடியிருந்த மணல்வெளியில் அவர்கள் போய்க்கொண்டேயிருந்தனர். இனித் தன்னால் நடக்க முடியாதென அவள் வீழ்ச்சியுற்ற இடத்தில் அமர்ந்தனர். நாவுலர்ந்தவளாகப் பசியும் தாகமும் கொண்டிருந்தாள். அவன் கானலின் நெடிய சாலையில் தனியனாக அலைந்து எங்கிருந்தோ சில கூழாங்கற்களைக் கொண்டு வந்தான். அது ஈரமேறியிருந்தது. அந்தக் கற்களைச் சுவைத்துக்கொண்டிருந்தால் தாகம் சாந்தியாகுமென்றான். அவர்கள் பின் நிசப்தமாக வீழ்ந்தனர். காற்று இரவெல்லாம் ஓடியலைந்தது. அவள் காற்றின் படபடப்பில் தன் கேசம் சரியச் சொன்னாள்,

"நீ பசியால் வீழ்ந்துகொண்டிருக்கிறாய். பயம் உன் நிழலைப் போலக் காலடியில் வட்டமிட்டு அலைவதை நான் காண்கிறேன்."

அவன் விழித்துக்கொண்டவன் போலப் பதில் பேசினான்,

"பசியின் குரலுக்கு நான் செவி கொடுக்காதவன். எனைத் தொடரும் நிழலைப் போல எடையற்றதும் மெலிவானதும்தானா பயம்?"

அவள் பின் எதையும் பேசிக்கொள்ளவில்லை. பகலும் இரவும் அவர்களைக் கடந்து சென்றன. இரவில் கடந்து செல்லும் நட்சத்திரங் களைத் தவிர வேறு நடமாட்டமே இல்லை. அவள் சில நாள்களிலே மிகுந்த பலவீனமாகிப் போனாள். செம் புழுதியேறி அவள் மூச்சுக் காற்றுகூட உஷ்ணமாகியது. உலர்ந்த கண்களோடு தாகம் தாகமென வீழ்ந்து கிடந்தாள். அவன் புழுதியை முகர்ந்தபடி நெடுதூரம் சுற்றியலைந்தான். ஒவ்வொரு இரவிலும் அவளிடம் சொல்வான்,

"இன்றைக்கும் நான் அந்த மிருகத்தைத் தேடியலைந்து காணாமல் திரும்பிவிட்டேன். அதன் நிறம்தான் என்ன? அது எதைப் போல இருக்குமெனப் பிடிபடவேயில்லையே?"

அவள் பெருமுச்சிட்டுக் கொள்வாள். ஒரு பகலில் அவள் மயங்கிச் சரியும் கண்களுடன் நீர்வேட்கையில் தன்னை முத்தமிடச் சொன்னாள். அவன் கைகளால் முகம் பற்றி முத்தமிட்டான். இரு உதடுகளும்

கவ்விக்கொண்டன. ரத்தம் அரும்பிய வலியோடு உதடு பிரித்து அவள் சொன்னாள்,

"நான் நடுங்கிக்கொண்டேயிருக்கிறேன். சாவியின் ஈரமேறிய நாக்கு என் நெற்றியைத் தடவுகிறது."

அவள் கைகளைப் பற்றியபடி அமர்ந்திருந்தான். பிதற்றல் கொண்டவளைப் போல அவள் இரவில் ஏதேதோ பேசிக் கொண்டு இருந்தாள். பின் உதட்டோசை நின்றது. மறுநாளின் காலையில் அவள் நடுக்கம் கூடிவிட்டது. அவனைப் பற்றிக் கடைசியாக முத்தமிட விரும்பினாள். அவன் கேசம் கலைத்து, தாங்கி அவனை முத்தமிட முனைந்தாள். அவள் உதடுகள் பிரியவில்லை. பல் கட்டிக்கொண்டது. அவளைத் தரையில் கிடத்தினான். அவள் திரும்பவும் அவனைத் தலையைத் தூக்கச் சொன்னாள். உஷ்ணமேறிய மூச்சோடு அவள் உதடுகள் பிரிந்து வலிந்து அவன் உதட்டைக் கவ்வின. அதன் சுவை உடல் நரம்புகளில் எரியத் தொடங்கியது. தன்னைவிட்டு சுவை பிரிந்துவிடக் கூடாதென வலிய உதடால் சுவைத்துக்கொண்டேயிருந்தான். சுவை மெல்லத் திரிந்து துவர்ப்பேறிக் கொண்டிருந்தது. அவன் நிமிர்ந்து தன் கண்களால் அவளை நோக்கும்போது அவள் இமையோரங்களைக் கண்டான்.

சிற்றெறும்புகள் அவள் இமையினின்று ஊர்ந்து வெளியே சென்று கொண்டிருந்தன. அவன் அதன் ஊர்தலைக் கவனித்துக் கொண்டிருந்த போது ஒரு சாரை எறும்பு அவன் கண்களில் தொற்றி ஏறி கண்ணுக்குள் போவதை அறிந்தான். அவள் சரிந்து வீழ்ந்தாள். இமை விளிம்பில் ஓர் எறும்பு கடித்த வலி துளிர்க்க தன் கண்களைக் கசக்கிக்கொண்டு வீழ்ந்த உடலைக் கண்டான் ரிஷிகுமாரன்.

பலநூறு சாரைகளாக எறும்புகள் அவள் முகத்தினின்று ஊர்ந்து, பற்கள், நாசி உடலெங்கும் இறங்கின. பயம் ஊர்ந்து திரியும் சிற்றெறும்பு தானோ என ரிஷிகுமாரன் அறிதல் கொண்டபோது, அது கடித்த வேதனை தன் கடுப்பை வலியதாக்கியது. அவளிடம் சலனமில்லை. அவள் உடலில் ஏறிய எறும்புகளை விலக்கியவனின் கைகள் மெதுவாக நடுங்கத் தொடங்கியிருந்தன. சலனமற்ற வெண் உடலைப் பார்த்தபடியிருந்தான்.

எங்கிருந்தோ சிறு குருவிகள் கீச்சிட்டபடி வானில் பறந்தன. தொலைவில் ஒரு மின்னல் தோன்றிப் பீறிட்டது. எங்கோ பெய்யும் மழையின் காற்று சிதறிப்போன ஈரத்துளியின் வலி தாள முடியாது அவன் கூச்சலிட்டான். பெருவெளியின் தனிமையில் பயமெனும் சில்வண்டுகள் ரீங்காரமிடத் தொடங்கின. உதட்டில் அவள் புகட்டிய சாவின் சாறு சுரந்துகொண்டேயிருந்தது. அவள் செம்மண்ணேறிக் கிடந்தாள். மணலை வளையமிட்டபடி பூமி கீறிய செவ்வெலி ஒன்று தலையைத் தூக்கிப் பார்த்தபடி ஓடி அவள் பாதமருகே வந்து விரல்களைக் கருமிடத் தொடங்கியது. அதனை விரட்ட நினைத்து சப்தமிட முனைந்தபோது நடுக்கம் மீறிடக் குரலற்று

சோகை கொண்டு கிடந்தான். எங்கிருந்தோ வாசனையறிந்த செவ்வெலிகள் கூட்டமாகத் தாவி வந்து கொண்டிருந்தன. தன் இரு கைகளையும் தட்டி விரட்ட சப்தம் செய்ய, தன் பலம் அத்தனையும் சேர்த்துக் கைகளை அசைத்த போதும் ஓசை பிறக்கவில்லை. பிறகு நாவு மடங்க அவனும் புழுதியில் வீழ்ந்தான்.

வெயிலைக் கொண்டுவாருங்கள்

வெயில் வந்துகொண்டிருக்கிறது. ஜன்னலைத் திறவுங்கள் என அவள் சொன்னபோது பின்னிரவின் பாதியே கடந்திருந்தது. தன்னிடம்தான் அதைச் சொல்கிறாளா அல்லது கனவின் நெருக்கம் கொள்ளும் ஏதோ உருவங்களோடு உரையாடிக் கொண்டிருக்கிறாளா எனத் தெரியாதபடி கம்பளிக்குள் சுருண்டிருந்தாள். புனித சேவியர் மருத்துவமனையின் செங்கல் சுவர்கள்கூடத் தனது இருப்பைக் காப்பாற்றிக்கொள்ள முடியாமல் நடுங்கிக்கொண்டிருந்தன. அந்த வார்டில் இருந்த பெண்கள் பலரும் விழித்தபடியேதான் படுக்கையில் கிடந்தனர் போலும். கண்களைத் திறக்காமலே அவர்கள் பனியைக் கண்டுகொண்டிருந்தார்கள். குளிர்காலத்தில் இந்த நகரம் நோயாளிகளுக்கு மிகத் துயரமானது. கண்ணாடி ஜன்னல்களுக்கு வெளியே பனி தன்னிஷ்டம் போல நடமாடி அலைகிறது.

டிசம்பர் மாதத்தின் ஓய்வுநாளன்று விடிந்த பிறகும் நகரில் குளிரடங்கவில்லை. பாதி இருளும் வெளிச்சமும் கலந்த வீதிகள் கனவில் இருந்து வெளிப்பட்டு விட்டனவோ போலத் தோற்றமளித்தன. பகலும் இரவும் புணர்ச்சி பிரியாத நிலைபோல் ஒரு மயக்கம் எங்கும் நீண்டுகொண்டிருந்தது. பனி மரங்களை, இரும்பு வாகனங்களைக்கூட நடுங்கச் செய்துகொண்டிருந்தது. இரும்பின் வாசனை கலந்ததொரு குளிர்மை வீசிய அடுக்குக் குடியிருப்பில் விழித்தபடியே படுக்கையில் கிடந்த சுபத்ரா கண்களைத் திறக்கவே மிகச் சிரமப்பட்டவளாக சுவாசக் கோளங்களில் பனி நிரம்பி வேதனையும், உதட்டின் நரம்புகளில் ஊசி முறிவு ஏற்றும் குளிர்மையும் தாளாது வெயிலைக்

கொண்டுவாருங்கள், வெயிலைக் கொண்டு வாருங்கள் என முனங்கிக் கொண்டிருந்தாள். ஒரு தாவரத்தைப் போல அவள் உடல் முறுக் கவிழ்ந்து கிடந்தது.

அன்றைய நாள் நீண்ட தியான வெளியைப் போல நிசப்தமும் ஆழ்ந்த மயக்கமூட்டுவதுமாக இருந்தது. கம்பளியின் வெளியே தெரியும் அவளது பாதங்களைப் பார்த்தபடியே இருந்தான். மஞ்சள் படிந்த கால் வளைவுகளும் வெளிறிய பாதநிறமும் சிறுமியைப் போலவே தோன்றியது. நகரில் எங்காவது வெயில் வந்திருக்கக் கூடுமா என அவனாகவே கேட்டுக்கொண்டான்.

இருளின் நிறம் கலைந்திருக்கிறதேயன்றி அது விலகவில்லை. வீட்டின் ஜன்னல்கள், கதவுகள், மாடிப்படி இடுக்குகள் வரை யாவும் மூடப்பட்டுள்ளன. மனிதனைப் போலவே காற்று கதவைத் தட்டித் தட்டிச் செல்கிறது. சுபத்ராவின் சுவாசம் அறையில் தனியே சுடரென நடுங்கியபடி சீரற்று ஒலிக்கிறது. அவள் தனது கேசத்தால் முகத்தை மூடிக்கொண்டுவிட்டாள். உறக்கமற்ற இரவில் அழுது ஓய்ந்த கண்கள் அசதியில் ஒடுங்கியபடி இருந்தன. தனது உதட்டைத் தானே கடித்திருந்திருக்கிறாள். ரத்தம் அவளது நாடியில் ஒரு மருவென உறைந்திருக்கிறது. அவன் சுபத்ராவின் தாடையடியில் கைகளைக் கொடுத்து வெம்மை தெரிகிறதா எனப் பார்த்தான். கூழாங்கற்களெனக் குளிர்மை. அவள் தன் பற்களைக் கட்டிக்கொண் டாள். உறங்கிக்கொண்டிருக்கிறாளா அல்லது விழித்திருக்கிறாளா என அறிய முடியாத ஒரு நிலையிலிருந்தாள். அவன் கட்டிலை விட்டு இறங்கி வந்து திரைகளை விலக்கி வீதியைப் பார்த்தான். புகையைப் போல் கலைந்து சுழன்றுகொண்டிருந்தது ஈரக்காற்று. அவள் ஏதேதோ பிதற்றல் கொள்ளத் தொடங்கினாள். அவன் நீண்ட யோசனைக்குப் பிறகு சேவியர் மருத்துவமனையின் ஆம்புலன்ஸுக்கு போன் செய்தான். அவள் சுவாசம் சிதறிக் கொண்டிருந்தது.

யாவும் பழகிப்போய்விட்டது. நோய் ஒரு மனநிலையை முற்றச் செய்துவிடுகிறது. அது உடலை மட்டும் சார்பு கொள்வதில்லை. கடந்த இரு வருடங்களாக சுபத்ரா பனிக்காலத்தின் வருகைக்கு முன்பாகவே தன்னைக் குளிர் கவ்விக்கொண்டு வதைக்கப் போகிறதான தொரு பயத்தை நெருங்கத் தொடங்குகிறாள். அது அவள் உடலின் உதிரத்தோடு சேர்ந்து ஓடத் தொடங்கிவிடுகிறது. பகலிலும்கூட அவள் பனியின் நடமாட்டத்தைக் கண்டுவிட்டவள் போல திடுக்கிடு கிறாள். இருபது வயதைக்கூடத் தாண்டாத அவளை இது போன்ற தொரு குளிர்காலத்தின் முதல் வாரத்தில்தான் சில வருடங்களின் முன்பு சந்தித்தான். அப்போது அவன் காலை நேரங்களில் புகைமூட்டத் தின் நடுவே மைதானங்களைக் கடந்து சைக்கிளில் போய்வரும் ஆசிரியையாக இருந்தாள். அவள் பள்ளிக்கூடக் குழந்தைகளுக்கு மேஜிக் செய்து காட்டும் மாயக் கலைஞனாகச் சுற்றியலைந்துகொண்டி ருந்தான். சுபத்ராவை அவள் வேலை செய்த இளையோர் பள்ளியில்

முதலாகப் பார்த்தான். அப்போது அவனிடம் ஒற்றைச் சக்கர சைக்கிள் ஒன்று இருந்தது. அதில் ஏறிக்கொண்டு பள்ளிக்கூட வளாகங்களில் அவன் சுற்றிவரும்போது முகம் தெரியாத சிரிப்பு ஒன்று அவனைத் தொடர்ந்து வந்துகொண்டிருக்கும். தனது பிராயத்தில் இருந்து மாயாஜாலத்தில் ஈடுபாடு கொண்டவனாகி, ஊர் ஊராகச் சுற்றத் தொடங்கிய நாளில் முதலாக அந்த ஒற்றைச் சக்கர சைக்கிளை அவனே உருவாக்கிக்கொண்டான். எளிய மாய வித்தைகளையே குழந்தைகளுக்குக் கற்றுத் தரவும் நடத்திக் காட்டவும் விருப்பமுடையவனாக இருந்தான்.

சுபத்ராவின் பள்ளிக்கூடத்துக்கு அவன் ஒரு மதிய உணவுக்குப் பிறகே சென்றிருந்தான். வகுப்பை மீறிய பிள்ளைகள் தொலைவில் மேஜிக் செய்யும் அவனையே பயத்தோடும் ஆர்வத்தோடும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவன் மூன்று மணி வரை காத்துக் கொண்டு இருக்க வேண்டியதாக இருந்தது. மிருதுவான குழந்தைகளின் கண்கள் அவனையே ஒரு மாயப் பொருளைப் போலக் கண்டு கொண்டிருந்தன. தன்னோடு கொண்டு வந்திருந்த இரண்டு புறாக்களைத் தடவியபடி அவன் தங்கநிற இலையொன்றைத் தனது கறுப்பு நிறத் தொப்பியில் அணிந்துகொண்டான். ஒரு சிறுமி இதை வெட்கம் கனியப் பார்த்துச் சிரித்தாள்.

அகன்று இலைகள் விரிந்த வாதா மரத்தடியில் அவன் தனது ஒற்றை சைக்கிளில் சாய்ந்தபடி வகுப்பறையின் சப்தத்தினைக் கேட்டுக் கொண்டிருந்தான். சுபத்ராவும் அவளது சக ஊழியர்களும் கூட அவனை ஆச்சரியத்துடன் பார்த்துச் சிரித்தபடி போனார்கள்.

வகுப்பறைகளை ஒன்றிணைத்திருந்தார்கள். பள்ளிக்கூடம் தடுப்புகளற்று இருந்தபோது பிரமாண்டமானதாகத் தெரிந்தது. முன்வரிசையில் இடித்துக்கொண்டு அமர்ந்திருக்கும் சிறுமிகளையும் கண்களால் தன்னைச் சுற்றி வரும் மாணவர்களையும் கண்டு சிரித்தபடி மாணவர்களில் ஒருவனைத் தனது உதவியாளனாக அழைத்தான். நடுங்கும் விரல்களை டவுசர் பையில் விட்டு மறைத்தபடி மேடைக்கு வந்த சிறுவனின் கண்கள், மெலிதான பயத்தில் மின்னிக் கொண்டிருந்தன. மணலை இனிப்பாக மாற்றி யாவருக்கும் தந்தபடி தனது மாயக் குரலை உயர்த்தி யாவரையும் தன் மீது கவனம் கொள்ளச் செய்தான்.

கூட்டத்தில் இருந்த ஒரு சிறுமியை அழைத்து அவள் வயிற்றிலிருந்து கோழி முட்டையை எடுத்தபோது சிரிப்பலை எங்கும் பிரிந்தது. அந்தச் சிறுமி மிரட்சியுற்றவளாகத் தனது வயிற்றைத் தடவித் தடவிப் பார்த்தபடி தனது இருக்கைக்குத் திரும்பியிருந்தாள். யாரிடமிருந்தாவது ஒரு ரோஜாப்பூ வேண்டுமெனக் கேட்க, ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக்கொண்டபோது, சுபத்ரா தனது கூந்தலில் சொருகிய ஒற்றை ரோஜாவை எடுத்துத் தந்தாள். அந்த ரோஜாவை அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கும்போதே நிறத்தை மாற்றுவதாகச் சொல்லியவனாக, சிவப்பு நிற ரோஜாவை ஒரு சுழற்சியில் மஞ்சள் ரோஜாவாக்கி

னான். கைத்தட்டல் நிரம்பியது. அவன் திரும்பவும் ஒரு ரோஜாவை இரண்டு ரோஜாக்களாக்கி அவளிடமே திருப்பித் தந்தான். சுபத்ரா மிகுந்த வெட்கப்படுபவளாக இருந்தாள். நிகழ்ச்சி முடிந்து யாவரும் வெளிவந்த பிறகு சுபத்ரா அவன் அருகாமைக்கு வந்தவளாகச் சொன்னாள்,

“வெறும் கைகளால் உலகையே பறித்துவிடுவீர்கள் போலிருக்கிறதே, திரும்பவும் இங்கே வருவீர்களா?”

அவன் சிரித்துக்கொண்டான். சுபத்ராவின் பள்ளிக்கு அதன் பிறகு இன்று வரை நிகழ்ச்சி நடத்தத் திரும்ப அவன் போகவேயில்லை.

ஆம்புலன்ஸ் சப்தம் கேட்டபோது எதிர் வீட்டில் கதவைத் திறக்க முயற்சிக்கும் சப்தமும் யாரோ அதட்டும் குரலும் கேட்டன. மருத்துவ மனைப் பணியாளன் மிக மெதுவாக சுபத்ராவை அழைத்துக்கொண்டு போய்க்கொண்டிருந்தான். பனி இன்னமும் கலையவில்லை. அவளது மாற்று உடைகள் மற்றும் கம்பளிகள் யாவையும் எடுத்துக்கொண்டு கீழே வந்தபோது வாகனங்கள் எதுவுமற்ற சாலையின் தொலைவில் மங்கிய வெளிச்சம் தெரிந்தது. ஆம்புலன்ஸ் படிகள் வெடித்திருந்தன. அவள் தனது தூக்கத்துக்குத் திரும்பிவிட்டவள் போலப் படுத்துக் கொண்டாள். வாகனம் மிக மெதுவாக சாலையில் சென்றுகொண்டி ருந்தது. நகரமெங்கும் திரையிட்டது போலவொரு பனிப்படலம். விருட்சங்கள் தியானியைப் போலக் கிளைகளை ஒடுக்கி நின்றன. சாலையோரங்களில் இரு சிறுமிகள் பாலிதீன் பையினுள் சுருண்டு உறங்கிக்கொண்டிருந்தனர். வானம் தெளிவற்று இருந்தது. சுபத்ராவின் கனவில் பெரும் நெருப்புக் கோளமென சூரியன் வானை விட்டு இறங்கி தரை நோக்கி ஓடி வந்து கொண்டிருந்தது. அவள் தனது இரு கைகளாலும் அந்த அக்னிக் கோளத்தைப் பற்றி எடுத்து விழுங்கிவிட ஆசை கொண்டவளாக நாவை ருசிக்கத் தொடங்கினாள். மருத்துவமனையை நெருங்கும்போது கையில் இறந்துபோன குழந்தை யுடன் ஒரு பெண் அழுது கத்தியபடி மருத்துவமனைக்குள் ஓடிக் கொண்டிருந்தாள். அவன் காலையில் இருந்து ஒரு பறவையைக்கூடக் காணவில்லை. அதன் சிறு சப்தம்கூடக் கேட்கவில்லை. பறவைகள் யாவும் எங்கு சென்று ஒடுங்கிவிட்டதோ எனத் தெரியாத யோசனை யுடன் இருந்தான். சுபத்ரா ஒரு வார்த்தையை உரக்கச் சொன்னாள்,

வெயில்.

தனது காதலின் முதல் பயணமாக சுபத்ராவை அழைத்துக் கொண்டு அவன் அருகாமையிலிருந்த ஒரு கடற்கரை நகருக்குச் சென்றிருந்தான். ஆழமற்ற நீலக்கடல். நீண்ட மணல்வெளியில் பலரும் ஈர உடலோடு கிடந்தார்கள். சுபத்ரா வெகு நேரம் கடலைப் பார்த்தபடி இருந்தாள்.

பிறகு அவனிடம் கேட்டாள்,

"உங்கள் மாயத்தால் அந்த அலைகளைக் கரைக்கு வராமல் நிறுத்த முடியுமா?"

அவன் வேடிக்கையாகச் சொன்னான்,

"முடியும், அலையைக் கடலை விட்டுத் தனியே பிரிக்க முடிந்தால்."

அவள் தனது கேசத்தைச் சரியவிட்டபடி சொன்னாள்,

"சில நிமிஷமானாலும் மாயம்தான் எத்தனை அழகாக இருக்கிறது இல்லையா?"

அவன் பதில் பேசவில்லை. சில மாதங்களில் அவர்கள் இருவரும் திருமணம் செய்து கொண்டார்கள்.

புனித சேவியர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நான்காம் நாளில் அவள் சொஸ்தமடையத் தொடங்கினாள். நோயில் இருந்து எழுந்துவிட்டதும் அவள் பல நாள்கள் பேசாமலே இருப்பாள். அது நோய் அவளை விட்டு விலகியதற்கான அடையாளம். பகலில் அவள் மருத்துவமனையின் அகன்ற தூண்களை வெறித்தபடியிருப்பாள். எப்போதாவது வெந்நீரைப் பருகும் போது மட்டும் அவள் கண்கள் எதையோ நினைத்துக்கொண்டது போல் விசும்பும். இனி அவள் நலமடைந்துவிடுவாள். எனவே வீட்டுக்கு அழைத்துப் போகலாம் என்று மருத்துவர் சொல்லியிருந்தார். பனி குறையத் தொடங்கியிருந்த தோடு பகலில் மருத்துவமனையில் தங்குவதை அவள் மிகவும் வெறுப்பவளாக இருந்தாள் என்பதால் அவளை அழைத்துக்கொண்டு போய்விடலாம் என நினைத்தான். தேவையான மருத்துவச் செலவு களுக்கு அவன் செலுத்திய பணத்தைவிடவும் இன்னமும் சில நூறு ரூபாய்கள் தேவையானதாக இருந்தது. மாலைக்குள் தன்னிட மிருக்கும் மேஜிக் உடைகளையும் மாய உபகரணங்களையும் விற்று விடலாம் என முடிவு கொண்டவனாக மூசாவின் கடையைத் தேடிச் சென்றான்.

அந்தக் கடையினை அவன் கண்டுபிடித்த முதல் நாளில் அவனுக் குப் பன்னிரண்டு வயதே கடந்திருந்தது. அப்போது அக்கடை விந்தைகளின் காட்சியகமாக இருந்தது. மூசா சிறிய மர ஸ்டூலில் அமர்ந்தபடி எதையோ வாசித்துக்கொண்டிருப்பார். அவர் இருக்கை யின் பின்புறத்தில் சிறியதும் பெரியதுமாக நிறைய மர இழுப்பு அறைகள் கொண்ட அமைப்பிருந்தது. அவரிடம் பொய்க் கபாலங்கள், தந்திரச் சீட்டுக்கட்டுகள், இரட்டை நிழல் காட்டும் கண்ணாடி, விதவிதமான தொப்பிகள் என யாவும் இருந்தன. அந்த மனிதர் எவரெவரிடமிருந்தோ இதைச் சேகரம் செய்திருக்க வேண்டும். தன்னிடமிருந்த பணம் முழுமைக்கும் அவன் மாயப் பொருள்களை சிறு வயதில் வாங்குவான். அச்சிடப்படாத வெண்ணிறச் சீட்டுக்கட்டு

கள், தலைகீழ் உருவம் காட்டும் கண்ணாடி, இரண்டு பக்கமும் ஒரே உருவம் கொண்ட நாணயம், பாதரச மலர், ஒரு சிறிய மீன் வடிவக் கத்தி என எடுத்து வந்து தந்தார். அதை எப்படிப் பிரயோகிக்க வேண்டுமென அவர் அவனுக்குச் செய்து காட்டினார். மூசாவுக்கும் மாயவித்தையின் மீது ருசியிருந்தது. அவரும் ஒரு மாஜிக் நிபுணராக வேலை செய்திருக்கக்கூடும். அவன் தன்னிடமிருக்கும் மேஜிக் பொருள்கள் யாவையும் அவரிடமிருந்தே வாங்கியிருந்தான். அந்த வயதில் மேஜிக் காட்டுவது அவனுக்கு வானில் நடந்து திரிவது போன்றதொரு அனுபவமாகவே இருந்தது.

சுபத்ராவுக்கு எதுவும் மறந்திருக்கவில்லை. அவள் பார்த்துக்கொண்டிருந்த காலையில் வீட்டின் முன் நிறுத்தப்பட்ட சைக்கிளை மறையச் செய்து காட்டினான். சுபத்ராவால் நம்ப முடியவில்லை. சைக்கிளை அவள் பார்வையில் இருந்து புள்ளியாக மறைத்து, பின்பு மெல்ல சலனமாகி எதிரே தோன்றியதை ஒரு குழந்தையைப் போலக் குதூகலித்தாள். தன்னால் எதிரே நிற்கும் எதையும் மறைத்துவிட முடியுமென்றான். அவள் மிக ஆசையுடன் அவனைக் கட்டிக்கொண்டவளாகக் கேட்டாள்,

“மணிக்கூண்டைக்கூட மறைத்துவிட முடியுமோ.

அது ஆசையா அல்லது கேலியா எனப் புரியாமல் அதன் பிந்திய நாள்களில் அந்த மொகலாயர் கால மணிக்கூண்டுக்கு வருபவனாகிப் போனான். அந்த மணிக்கூண்டு இருபத்தெட்டு அடி உயரத்தில் சிவப்புக் கற்களால் கட்டப்பட்டிருந்தது. அதை மறையச் செய்வது எளிதானதல்ல. என்றாலும் அவனால் அதை மறையச் செய்து காட்ட முடியுமென்றவனாக அவன் அதன் அருகாமையில் இருக்கும் உயரங்களையும் அதன் இருப்பையும் பல்வேறு கால நேர நிலைகளில் அதன் தோற்றத்தையும் அவதானித்துக் கொண்டேயிருந்தான்.

ஒரு பொருளை மறையச் செய்ய எளிமையான வழி அதைவிடப் பொய்த் திரையை ஏற்படுத்துவதென அவன் திட்டமிட்டுக் கொண்டு இருந்தபோது அதிகாலைப் பனி மணிக்கூண்டை மெதுவாக மறையச் செய்ததைக் கண்டான். தன்னால் இதுபோலவொரு பனிப் படலத்தை மட்டும் சிருஷ்டிக்க முடிந்தால் மணிக்கூண்டு எளிதில் மறைந்துவிடுமே என ஒரு நாளின் அதிகாலையில் தனது சூட்சுமத்தால் ஒரு நிமிஷம் அந்த மணிக் கூண்டை மறையச் செய்தபோது அதைப் பார்த்துக்கொண்டிருந்த இரண்டு பிச்சைக்காரர்கள் மட்டும் ஆரவாரம் செய்தனர். தன்னால் அதை மறையச் செய்ய முடியுமென அவன் பகிரங்கமாக நாளிதழ்களில் அறிவித்தான்.

அந்த நாளில் ஜனத்திரளின் முன்பாக நின்று கொண்டிருந்தான். அவனும் சுபத்ராவும் அதிகாலையிலேயே மணிக்கூண்டுக்கு வந்து

சேர்ந்திருந்தார்கள். கர்ப்பஸ்திரியாக இருந்ததால் அவள் நடப்பதற்குச் சிரமப்பட்டாள். ஆனாலும் நடக்கப் பிரியமானவளாகவே இருந்தாள். அவளை ஒருபுறம் பற்றிக்கொண்டபடி இருவரும் மெதுவாக மணிக் கூண்டை நோக்கி நடந்து போகும் வழியில் அவனது சாகசம் பற்றிய விளம்பரங்கள் சுவரில் ஒட்டப்பட்டிருந்தன. மணிக்கூண்டை மறையச் செய்யப் போகும் அவனது உருவமும் சுவரில் வெளிறியிருந் தது. சுபத்ராவை மணிக்கூண்டின் அருகே இருந்த பூங்காவில் இருந்த பெஞ்சில் உட்கார வைத்தவனாக அவன் மணிக்கூண்டின் பின்பக்கமாக எதையோ செய்தபடி இருந்தான். பொருள்கள் மறைந்து போகும் மாயத்தில் ருசியுள்ள குழந்தைகளும் வயதானவர்களும் அதிகம் நிரம்பியிருந்தார்கள். அவன் மணிக்கூண்டின் எதிரே சிறிய மேடை போன்றதொரு அமைப்பில் நின்றவனாக, ஜனத்திரளை நோக்கி உற்சாகமாகப் பேசினான். சாகசத்துக்குப் பலரும் ஆரவாரம் செய்தார்கள். தொலைவில் சுபத்ரா ஒரு பெஞ்சில் கையில் உதிர்ந்த இலையொன்றை வைத்துக்கொண்டவளாக நிசப்தமாக அமர்ந்திருந் தாள்.

அவன் தனது கவனத்தை ஒருமுகப்படுத்தியவனாக மாயத்தின் மீதான தனது வலையை விரிக்கத் தொடங்கியிருந்தான். பலநூறு கண்கள் மணிக்கூண்டின் பிரமாண்டத்தைக் கண்டபடியிருந்தன. சுபத்ரா தொலைவைப் பார்த்தபடியிருந்தாள். அவன் தனது மாயத்தால் மணிக்கூண்டினை மறையச் செய்ய முயன்றவனாக இருந்தபோது பேரோசையுடன் மணி அடித்தது. யாவரும் கவனம் கூடியவர்களாக அண்ணாந்து பார்த்துக்கொண்டே இருந்தார்கள். மெல்லிய மயக்க மூட்டும் மனோகதி கூடியபோது அந்த மணிக்கூண்டு மறையவே யில்லை. வெயில் ஏறத் தொடங்கி பளீரென வெளிச்சம் நிரம்பிக்கொண் டிருந்தது. அவன் தனது தோல்வியின் கசப்பை அருந்தத் தொடங்கிய வனாக இருந்தான். பகலேறி யாவும் ஒளிர, அவன் கைகள் காற்றில் எதையோ வரைந்துகொண்டிருந்தன. மணிக்கூண்டு மறையவேயில்லை. ஏமாற்றமுற்ற வயதானவர்கள் கலைந்துபோகத் தொடங்கி இருந்தார்கள். அவமதிப்பும் பரிகாசமும் சிதறிப் போன இடத்தில் அவன் நின்று கொண்டிருந்தான். இனியும் கூட அவனால் மணிக்கூண்டை மறையச் செய்ய முடியுமென்று காத்திருந்த சிறுவர்களின் அருகாமைக்கு வந்த அவன் அவர்களின் கண்களில் ஒளிந்துள்ள ஆசையைக் கண்டு தயக்கமானவனாக சுபத்ராவை நோக்கி நடந்தான். அவன் பின்னாடி நடந்து வரும் சிறுவர்கள் அவனைப் போலவே மணிக் கூண்டை நோக்கிக் கைவிரல்களால் கோலமிட்டு மறையச் செய்து கொண்டிருந்தார்கள். சுபத்ரா எதையும் பேசிக்கொள்ளவில்லை. அவள் எழுந்துகொண்டாள். அவனாகவே கேட்டான்,

“வீட்டுக்குப் போகலாமா?”

சிறுவர்கள் அவர்கள் நடந்து போகும் பாதையிலே பின்தொடர்ந்து வந்தார்கள். அது மிகவும் அவனைத் துன்புறுத்துவது போலவே

இருந்தது. சுபத்ராவின் கைகளைப் பற்றிக் கொண்டான். சுபத்ரா ஏனோ பின்திரும்பி அந்தச் சிறுவர்களை அழைத்தாள். அவர்கள் வேகமாக ஓடிவந்தனர். தன்னிடமிருந்த மிட்டாய்கள் சிலவற்றை அவர்களிடம் தந்தவளாக வீடு திரும்பச் சொன்னாள். மிகவும் வருத்தம் தோய்ந்த குரலில் அவனாகவே சொன்னான்,

"எனது மனம் ஒருமை கூட மறுத்துச் சிதறிக்கொண்டேயிருக்கிறது."

அவர்கள் நடந்து வரும்போது தெருக் குழாயில் குளித்துக்கொண்டிருந்த பிச்சைக்காரர்களில் ஒருவன் அவர்களைப் பார்த்துச் சிரித்தபடி தண்ணீரைப் பல் இடுக்கு வழியாகக் காற்றில் உமிழ்ந்தான். துக்கத்தைத் தனக்குள் விழுங்கியபடியே அவன் வீடு திரும்பினான். சுபத்ரா மட்டும் மூன்று நாள்கள் அழுது கொண்டிருந்தாள். அது சமாதானத்தால் ஆறுதல் அடையக் கூடியதல்ல என்பதை அவனும் உணர்ந்திருந்தான்.

ஐந்து மாதங்களுக்குப் பிறகான ஒரு கோடையின் உக்கிர நாளில் சுபத்ராவுக்கு ஆண் குழந்தை பிறந்திருந்தது. அது அடர்த்தியான கேசத்தோடு, பளிங்கு நிறமான கண்களைக் கொண்டிருந்தது. அந்தக் குழந்தையின் கை கால்கள் காற்றில் எதையோ உதைத்தபடியிருந்தன. சிசு உலகினை ஆச்சரியம் தீராமல் கண்டபடியிருந்தது. சுபத்ரா குழந்தையை அணைத்துக்கொண்டு படுத்துக் கிடந்தாள். செவிலி அவளிடம் வந்து சொல்லிப் போனாள், "பிறந்ததிலிருந்து இந்தக் குழந்தை அழவேயில்லை. ஒரேயொரு முறை அழுதால் மட்டுமே குழந்தை பிழைக்கக்கூடும். அழுகிறதா எனப் பார்த்துக் கொண்டேயிருங்கள்."

பிறந்த குழந்தையை அழச் செய்வதற்கு உரிய வழியை எவரும் அறிந்திருக்கவேயில்லை. புத்த பிரதிமைகளை நினைவூட்டும் சாயல் கொண்ட அந்த முகத்தில் அழுகையின் ரேகை ஓடவேயில்லை. சுபத்ராவின் கண்களில் வேதனை ததும்பிக்கொண்டிருந்தது. அவள் குழந்தையின் கேசத்தை வருடியவளாகப் பார்த்துக்கொண்டே இருந்தாள். குழந்தையின் கைகள் எதையோ பற்றிட முனைந்தபடியிருந்தன. அவன் குழந்தையின் விரலைப் பற்றியவனாகத் தனது அடிக்குரலில் சொன்னான்,

"அழுகையை வரச்செய்வது எளிதானதல்ல." இதைக் கேட்டதும் அவள் விம்மினாள்.

"ஒரேயொரு முறை உதட்டைச் சுழித்துவிடக் கூடாதா..

சிசு தன் உடலை முறித்தபடி கனவில் எவரோடோ விளையாடிக் கொண்டிருந்தது. உறக்கம் யாவரையும் பற்றிக்கொள்ளத் தொடங்கிய நெடிய இரவில் அவர்கள் இருவரும் விழித்துக்கொண்டிருந்தார்கள். அவள் எதையோ உளறுபவளாகச் சொன்னாள்,

"உங்களாலும் அழுகையை வரச்செய்ய முடியாதா? எறும்பு ஊறுவதைப் போல அழுகை மிக மெதுவாக எங்கிருந்தாவது ஓடி வந்துவிடாதா?"

அவர்கள் இருவரும் உறங்கும் குழந்தையைப் பார்த்தபடி இருந் தார்கள். அது தன் முகபாவத்தைக் கலைப்பதும் கூட்டுவதுமாக இருந்தது.

தன் உடலின் வெம்மையை அதைச் சுற்றிப் படர விட்டவளாக அதன் முகத்தைப் பார்த்துக்கொண்டேயிருந்தாள். அசப்பில் தகப் பனையே கொண்டிருந்தது. உன்னிப்பாகப் பார்க்கப் பார்க்க அவனே தான் என்பது போல இருந்தது. அவன் சுபாவமே அந்தக் குழந்தையைப் பற்றிக்கொண்டு விட்டதோ. இரவில் அவள் மிகக் கோபமாகிக் கத்தினாள்,

"முடியுமானால் உங்கள் மாயத்தால் என்னை ஒரு பொம்மையாக்கி விடுங்கள். எதையும் காண வேண்டியது இருக்காது. இல்லையென்றால் வீட்டில் உள்ள மாயப் பொருள்களை நானே தீ வைத்து எரித்துவிடப் போகிறேன்."

அவன் அவளுக்குப் பதில் தராமல் குழந்தையைப் பார்த்தபடி இருந்தான். அவள் குழந்தையை அணைத்தவளாகச் சொன்னாள்,

"அழு... ஒரேயொரு முறை நீ அழுதுவிடு. பிறகு உன் சிரிப்பை நான் கலைக்கவே மாட்டேன்."

குழந்தை அவள் தொடுதலால் விழித்துக்கொண்டது. அதன் உடலை முறுக்கி அது புரண்டது. அவள் அதன் கண்களைப் பார்த்தாள். துல்லியமான சிரிப்பின் ரேகைகள் ஒளிந்த நீர்மை வெளி. அவள் தனது வலிய உதட்டால் முத்தமிட்டபடி சொன்னாள்,

"அழு. அழு.. உதட்டைச் சுழி.

எதையோ மறந்துபோய் நினைவு கொண்டதைப் போலக் குழந்தை திரும்பவும் உறக்கத்துக்குள் ஆழ்ந்துவிட்டது. அவள் தனது கைகளால் அந்தக் குழந்தையின் உடலை நெருக்கமாக அணைத்தபடி கத்தினாள்,

"உங்கள் மாயத்தால் இந்தக் குழந்தையை ஒரு முறை அழச் செய்துவிட முடியாதா?"

அவன் குழந்தையின் சிரிக்கும் கண்களைக் கண்டபோது ஏற்படும் வேதனை தாளாமல் வெளியே திரும்பிக்கொண்டான். ஒரு பகல் இரண்டு இரவு வரை அந்தச் சிரிப்பு நீண்டிருந்தது. மறு பகலில் சுபத்ரா படுக்கையில் கால்களைச் சுருட்டிக்கொண்டு கேசம் கலைய வீழ்ந்து கிடந்தாள். அவன் அருகாமையில் இருந்த நீள விரிப்பைக் கண்டான். அதில் குழந்தையில்லை. வெண்ணிறத் துணிகள் மட்டுமே அடுக்கப்பட்டிருந்தன. அவன் கேசத்தைத் தொட்டதும் அவள் பெருங்குரலில் கத்தியபடி அழத் தொடங்கினாள்.

"குழந்தை அழவேயில்லை. சிரித்துக்கொண்டேயிருந்தான்.

விடிகாலையில் அழுவதைப் போல முகத்தை ஒருமித்து வலிப்பு காட்டினான். அழுகை திரண்டுகொண்டு வந்தது. பின் அது கலைந்து மெல்லிய சிரிப்பாகி மறைந்துபோனது.”

அவனால் துக்கத்தைத் தாங்க முடியவில்லை. அவளது தோளைப் பற்றிக்கொண்டான். அவள் மிகவும் துவண்டுபோயிருந்தாள். தனது சிசு காற்றில் விரல்களால் எதையோ பற்றிட முனைந்த அந்தக் காட்சி இன்றும் தன் எதிரிலேயே உறைந்து போனதைப் போலவே இருந்தாள். சுபத்ராவின் நினைவுகளைக் குளிர்காலம் புகையச் செய்துவிடுகிறது.

மூசா கடையைத் திறந்த பெண்ணை அவன் இப்போதுதான் பார்க்கிறான். அந்தப் பெண் முப்பதுக்கும் மேற்பட்ட வயதுடையவளாக இருந்தாள். அகன்ற முகமிருந்தது. அவள் அவனை அறிந்தவளைப் போலச் சிரித்துக்கொண்டே கேட்டாள்,

“புதிதாக ஒரு ஹாலோ லைட் வந்திருக்கிறது. வாங்கிக் கொள் கிறீர்களா?”

உள்ளிருந்து ஒரு நபரின் குரல் கேட்டது,

“யார் வந்திருக்கிறது?”

“ஸ்கூலில் மேஜிக் செய்யும் ஆள்.

அவள் திரும்பவும் கேட்டாள்,

“உங்களுக்கு என்ன வேண்டும்?”

“மேஜிக் பொருள்களை விற்க வந்திருக்கிறேன்.”

தனது மேஜிக் உடையையும் நாலைந்து மரப்பெட்டிகளையும் எடுத்துக் காட்டினான். அந்தப் பெண் ஒவ்வொரு பொருளாக எடுத்துக்கொண்டு போய் அவரிடம் காட்டிவிட்டு, ஒரு காகிதத்தில் பணத்தைக் குறித்துக்கொண்டு வந்தாள். மேஜிக்காரனின் ஆடைகளையும் தொப்பிகளையும் எடுத்துப் பார்த்தாள். பழையதாகவும் மெலிவான மனிதனின் ஆடைகளாகவுமிருந்தன.

“இந்த டிரஸ் வேணாம். பாக்கிப் பொருளுக்கு 600 ரூபாய் வாங்கிக்கோ” என உள்ளிருந்து குரல் கேட்டது. அவள் கறுப்பு மேல் கோட்டை எடுத்து உதறிப் பார்த்தாள். அதனுள் ஏதோ நாணயம் குலுங்கும் ஓசை கேட்டது. அவள் அந்த உடையினுள் ஏதேனும் ரகசியப் பையிருக்கிறதா எனத் தேடியவளாக உதறினாள். வெள்ளி நாணயம் மோதிக் குலுங்கும் ஓசை மட்டும் கேட்டது. ஆனால் மேல் கோட்டினுள் நாணயம் தென்படவில்லை. அவள் உள்ளே இருந்த வயதானவரிடம் அதைக் காட்டினாள். அவரும் தனது பலமான கைகளால் விரித்து உதறினார். நூற்றுக்கணக்கான வெள்ளி நாணயங்கள் உருண்டோடும் ஓசை கேட்டது. நாணயம் எதுவும் தென்படவில்லை. குனிந்து இருவரும் பார்த்தனர். அந்தப்

பெண் கேட்டாள்,

“வெள்ளிக் காசு குலுங்குகிற சப்தம்... உள்ளே ரகசியமா ஏதாவது நாணயம் ஒளிச்சு வெச்சிருக்கியா?”

அவன் இல்லையெனச் சொல்லியவனாக, கோட்டைக் கைகளில் எடுத்துப் பார்த்தான். அவன் குலுக்கியபோதும் அதிலிருந்து வெள்ளி நாணயங்கள் உரசிக்கொள்ளும் ஓசை கேட்டது. அவன் அதைத் தலைகீழாகக் கவிழ்த்துப் பார்த்தான். அதில் எதுவுமேயில்லை. ஒவ்வொரு பையாகக் கையை நுழைத்துப் பார்த்தான். அதில் எதுவுமேயில்லை. ஆனால் உதறும்போது அதில் வெள்ளியோசை கேட்கிறது. அந்தப் பெண் சிரித்தபடியே சொன்னாள்,

“எங்க தாத்தாகூடக் கைதட்டினா கோயில் மணிச் சப்தம் வரும். அது ஒரு டிரிக். இது என்ன மேஜிக்...?”

அவன் எரிச்சலுற்றவனாகச் சொன்னான்,

“இது மேஜிக் இல்ல... பிரம்மை...

அந்தக் கறுப்புக் கோட்டை விலைக்கு வாங்கிக்கொள்ள பெண் மிக ஆசைப்பட்டாள். ஆனால் அவன் மறுத்தபடி அவள் எண்ணிக் கொடுத்த ரூபாய்களை வாங்கிக்கொண்டவனாக அந்த உடையைக் கையில் சுருட்டிக்கொண்டு தெருவில் இறங்கி நடக்க ஆரம்பித்தான். மருத்துவமனைக்குப் போகும் அவசரத்தில் குறுகலான சந்துகளின் வழியே நடந்து வந்தான். தொலைவில் மணிக்கூண்டில் காலை மணி 11 அடித்தது. அவன் தனது கையில் சுருட்டிய கறுப்பு கோட்டை உதறியபடி வேகமாக நடந்தபோது அதிலிருந்து நாணயங்கள் சிதறிப்போகும் சப்தம் கேட்டுப் பிச்சைக்காரர்கள் சிலர் ஓடி வந்தனர். நடைபாதையில் நாணயம் உருண்டு ஓடும் ஓசை கேட்டது. மணிக்கூண்டின் முன் உள்ள சிறிய நீரூற்று பொங்கிக்கொண்டிருந்தது. ஏதோ வெறி கொண்டவனைப் போல அந்த மேல் கோட்டை, காற்றில் அங்குமிங்குமாகச் சுழற்றி வீசினான். அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே நீரூற்று மெல்ல மறையத் தொடங்கி சில நிமிஷங்களில் மணிக்கூண்டும் அந்த வீதியிலிருந்த கட்டடங்களும் மறைந்து வெட்ட வெளியானதை நடைபாதை வாசிகள் பலரும் வியப்பு மீறிப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். நீண்ட நாள்களுக்குப் பிறகு கண்ணீல் நீர் துளிக்க அழுதபடி அவன் அவசரமாக மருத்துவ மனையை நோக்கி நடந்துகொண்டிருந்தான்.

ஆதாமின் பாஷை

கிழக்கே இருந்த தோட்டத்துக்குள் கிளைபிரிந்து ஓடும் நான்கு ஆறுகளுக்கும் பெயரிட வேண்டிய யோசனையில் இருந்தான் ஆதாம். தினசரி தான் காணும் பொருள்கள் ஒவ்வொன்றுக்குமாகப் பெயர் வைப்பது மட்டுமே அவனது அன்றாட வேலையாக இருந்தது. அவன் இருந்த அதே தோட்டத்தில் ஒரு ஸ்திரி இருந்தாள். அவளை எப்போதாவது விருட்சங்கள் அடர்ந்த பாதையில் உதிர்ந்த சருகுக்குள் சுற்றியலைவதையும், பனியின் திரள்களைச் சேகரித்த படி, அவிழ்ந்த கூந்தலும் குளிர்ச்சியோடிய கண்களு மாக குனிந்து நிற்பதையும் கண்டிருக்கிறான். அவள் என்ன செய்கிறாள் என்பதை அறிந்துகொள்ள முடிய வேயில்லை. சில நேரம் அவள் காட்டுப் பூனைக் குட்டிகளைச் சுமந்தபடி காட்டாற்றின் குறுக்கே நடந்துகொண்டு இருப்பதைப் பார்ப்பான். அவனைப் போலவே அவளும் தான் காணும் பொருள்கள் யாவற்றுக்கும் தினமும் பெயரிட்டுக்கொண்டிருந்தாள். தனக்கு இரண்டு பெயர்கள் இடப்பட்டிருந்ததை எந்தப் பொருளும் ஆட்சேபிக்கவில்லை. அதன்படியே அவன் அவளுக்கு ஏவாள் எனவும், அவள் அவனை ஆதாம் எனவும் பெயரிட்டிருந்தார்கள்.

ஆதாம் பெயரிடுவதற்காக தினமும் அந்தத் தோட் டத்தின் முடிவற்ற பாதைகளுக்குள் சுற்றிக்கொண்டி ருப்பான். ஒவ்வொரு நாளும் அவன் பொருள்களுக்கு வைத்த பெயர் எதுவும் நினைவில் தங்காது போகவே அன்றாடம் பொருள்களைக் கண்டு புதிது புதிதாகப் பெயர் வைக்க வேண்டியிருந்தது. அப்படியும் அவ னால் பெயரிடப்படாத எண்ணிக்கையற்ற உயிர்கள்

அவனது தோட்டத்தில் இருந்தன. மஞ்சள் கரைசல் போல ஓடிக் கொண்டிருந்த ஒரு ஆற்றின் கரைகளில் நின்றவனாகத் தனது கண்ணில் பட்ட பொருள்களுக்குப் பெயரிட்டுக்கொண்டிருந்தான் ஆதாம். காற்று மிக மெதுவாக வீசிக்கொண்டிருந்தது. அவன் அப்போது இடியோசை போன்றதொரு சப்தத்தைக் கேட்டவனாகத் தோட்டத்தின் உள்ளேயிருந்த ஜீவ விருட்சத்துக்கு அருகில் ஓடி வந்தான். அங்கு நிசப்தம் மட்டுமே துள்ளிக்கொண்டிருந்தது. வெயில் இறங்க முடியாத அடர்ந்த மரங்களுக்கு ஊடே அவன் நின்றுகொண்டிருந்தான். ஆற்றின் வேகம் மிக மெதுவானதாகவும் அது பாறைகளைப் போல உறைநிலைக்குப் போவது போலவும் தெரிந்தது. ஒரு காட்டு விலங்கின் கண்ணைப் போல ஆற்றின் கண்கள் அவனை வெறித்துப் பார்த்துக்கொண்டே இருந்தன. அவன் நின்றிருந்த இடத்தருகே மரங்கொத்தியொன்று மரத்தைத் தனது கூர்அலகால் கொத்திக் கொத்தி சப்தம் உண்டாக்கிக்கொண்டிருந்ததைக் கேட்டவனாக அதே இடத்தில் ஒரு பாறை மீது சாய்ந்து கொண்டான். அந்த ஸ்திரி தொலைவில் எதையோ தேடிக் கொண்டிருப்பது தெரிந்தது. மரங்கொத்தியின் வேகம் அதிகமானது. பழுத்த ஓர் இலை துண்டிக்கப் பட்டுக் கீழே விழும்போது ஒரு குழந்தையின் அழுகைக் குரல் கேட்டது. அது எங்கிருந்து வருகிறதெனத் தெரியாமல் ஓடினான். விசும்பல் ஓசை செடிகளை விலக்கிப் போய்க்கொண்டேயிருந்தது. கூடவே ஓடினான். இதற்கு முன்பாக அவன் இப்படியொரு குரலைக் கேட்டதேயில்லை. அவனது வேகம் கண்ட பறவைகள் அச்சம் மீறிச் சிறகடித்தன. புற்களின் படுக்கையில் அந்த ஸ்திரி ஒரு சிசுவை அணைத்துக்கொண்டபடி படுத்திருந்தாள். அது செம்பட்டை மயிரோடு உருண்டையான முக அமைப்பு கொண்டிருந்தது. குனிந்து அதன் இமையை, உதடுகளை கவனித்தான். ஆச்சரியமாகவே இருந்தன. ஆதாம் அதைப் பார்த்துப் பார்த்துச் சிரித்தான். அதற்கு ஒரு பெயரிட வேண்டும் என முடிவு செய்தவனாக காயீன் என அழைத்தான். அந்த ஸ்திரியும் அதே பெயரையே அனுமதித்தாள். அவன் ஸ்திரியின் ஆழ்ந்த கண்களைக் கண்டான். அவள் பரிகாசமூட்டும்படியான ஒரு சிமிட்டலைச் செய்தாள். பிறகு அக்குழந்தையை அவனது கையில் தந்தவளாக, தனது பின்னால் வரச்சொல்லியபடி நடந்து போனாள்.

எத்தனை நாள்கள் இருவரும் நடந்தார்கள் எனக் கணக்கிடப்படவே இல்லை. அவர்கள் வழியில் எதிர்ப்பட்ட ஆடுகளைத் தங்களுடன் ஓட்டிக்கொண்டு நடந்தனர். செம்பழுப்பு நிற பூமியில் அவள் காயீனைப் போலவே இன்னொரு பிள்ளையைப் பெற்றாள். அதற்கும் ஆபேல் என ஆதாமே பெயரிட்டான்.

சூரியன் தனியே வீசி அலையும் ஒரு மலையின் சரிவுக்கு வந்தபோது அங்கே யாருமில்லை. ஆதாம் சில நாள்கள் தங்க வேண்டுமென்றான். ஏவாள் தனது பிள்ளைகளை விளையாட அனுமதித்தாள். சிறுவர்கள் மலையின் அருகாமையில் போய்க் குரல் கொடுத்து அதன் பெருக்கத்

தைக் கண்டு மகிழ்ந்தார்கள். காயீன் வளர்ந்து இளைஞனாக மாறும் வரை ஆதாம் வேறிடம் போகவேயில்லை. ஒரு நாளில் ஆத்திரம் மீறிக் காயீன் தாய்க்குப் பிடித்தமானவனாக இருந்த ஆபேலைக் கற்களால் தாக்கிக் கொலை செய்வதைக் கண்ட ஆதாம் வீறிட்டு அலறினான். இதைக் கேட்ட காயீன் அவர்களை விட்டோடி, கிழக்கே நோத் என்னும் நகரை அடைந்த சில காலத்தில் ஒரு பெண்ணை அறிந்து தானும் ஏனுக்கைப் பெற்றான். மெய்குவேலோ லாமெக்கைப் பெற்றான். லாமெக்கோ இரு ஸ்திரிகள் வழியாக ஆதாள், சில்லாள் என இருவரைப் பெற்றான். இந்த நாள்களுக்குள் திரும்பவும் ஏவாள் ஒரு பிள்ளையைப் பெற்று சேத் எனப் பெயரிட்டாள். தாங்கள் தோட்டத்திலிருந்து வெகுதூரம் வந்துவிட்டதால் திரும்பப் போய்விடலாமென ஆதாம் விருப்பப்பட்டான்.

பிறப்பும் இறப்புமாகத் தனது காலைச் சுற்றியபடி நீளும் புதிரை அவிழ்க்க முடியாத ஆதாம் எப்போதும் யோசனையிலேயே இருந்தான். கற்கள் மலையிலிருந்து உருண்டுகொண்டிருப்பதைப் பார்த்துக்கொண்டிருப்பது மட்டுமே தினசரி வேலையாக இருந்தது. ஆட்டுக்குட்டிகள் பல்கிப் பெருகிவிட்டன. எங்கும் ஆட்டிரைச்சல். சப்தம் நிரம்பிக் கொந்தளிக்கிறது. தன் கண் முன்னே தனது மனிதர்கள் ஒருவரை ஒருவர் வன்கொலை செய்து கொள்வதையும், நெருப்பிட்டுத் தானிய வயல்களை எரிப்பதையும் ஆதாம் கண்டான். இருந்தும் யாரிடமும் ஒரு சொல் பேசவில்லை. நோவா பிறந்தபோது ஆதாமுக்கு நரையோடிப் போயிருந்தது. அப்படியொருவன் பிறந்திருக்க வேண்டும் என்பதைக்கூட அவன் அறியவேயில்லை.

ஒரு நாளில் மழை பெய்யத் தொடங்கியது. இடைவிடாது மழை மிக வேகத்துடன் கொட்டியது. தனது வாழ்நாளில் ஒருபோதும் ஆதாம் இத்தகைய பெருங்கோபத்தை மழையிடம் கண்டதேயில்லை. தான் பெயரிட்ட மழையைத் தானே பார்த்துக் கொண்டிருந்தான். உலகமெங்கும் ஜலம் நிரம்பிக்கொண்டு வந்தது. தனது ஆடுமாடுகளை, கூடாரங்களை மழை இழுத்துக் கொண்டு போனது. மலையின் ஒற்றைப் பாறையில் நின்றிருந்தான் ஆதாம். மழை ஏவாளையும் தன்னோடு இழுத்துப் போனது. இடைவிடாத மழையிலிருந்து தப்பிக்க ஒரு மரக்கலமொன்றைக் கட்டிய நோவா அதில் உலகில் சகல உயிரினங்களிலிருந்தும் ஒரு ஜோடியை எடுத்துக் கப்பலில் சேர்ந்தான். பிறகு தனது சகோதரிகளுடன் அவன் படகில் ஏறிக் கொண்டான். மழை அப்போதும் நிற்கவேயில்லை.

ஆதாமின் கண்கள் தண்ணீரின் நீள்வெளியை மட்டுமே கண்டன. ஒரு பெரிய கப்பல் மலையைக் கடந்து போவதைக் கண்டான். அக்கப்பலில் இருந்து பறவைகள் கீச்சிட்டதை மழையை மீறிக் கேட்க முடிந்தது. தன்னையும் அழைத்துப்போக அவன் பெருங்குரல் கொடுத்துக் கத்தினான். ஆனால் அது கப்பலைச் சென்று சேரவே யில்லை. மலை ஜலத்தினுள் மெல்ல அமிழ்ந்து கொண்டு இருந்தது.

சிறிய ஓசையொன்று விட்டுவிட்டுச் சொட்டிட மலை மூழ்கிக் கொண்டிருந்தது. தனது காலைத் தொட்ட தண்ணீரின் வேகம் கண்டு ஆதாம் கத்தியபோது மரங்கொத்தி தனது கொத்துதலை நிறுத்தித் திரும்பிப் பார்த்தது. ஆதாம் சிறிது நேரம் உறங்கியிருக்கக் கூடுமென்ற நினைப்பில் கைகளைத் தடவிப் பார்த்தான். தண்ணீரின் சுவடில்லை. மரங்கொத்தி திரும்பக் கொத்தத் தொடங்கியது. அவன் தான் கண்ட நிகழ்வுகளைப் பற்றிப் புரிந்துகொள்ள முடியாமல் படுத்துக்கொண்டிருந்தபோது அந்த ஸ்திரி அருகில் வந்து ஆதாமிடம் கேட்டாள்,

“புசிக்கப்படாத அந்த மரத்திலிருந்து ஒரு பழத்தை எனக்காகப் பறிந்துத் தர முடியுமா?”

புலனி

கடல் மட்டத்திலிருந்து 12,580 அடிகள் உயரத்திலிருந்த மலை நகரமான மனோராவுக்குப் போவதற்காக நான் பயணித்துக்கொண்டிருந்தேன். கறுத்த காதுள்ள குதிரை எனப்படும் இந்த மலைத்தொடரின் உயரங்களில் சிறு சிறு நகரங்கள் இருந்தன. இந்த மலை நகரங்களில் மிகக் குறைவான மனிதர்களே இருந்தனர். அதிலும் மனோராவில் போர்த்துக்கீசியர்களின் ஓய்விடமும் தேவாலயம் ஒன்றும், சர் பிரான்சிஸ் வில்லான் என்னும் லிஸ்பன் நகரச் சீமான் பெயரில் கட்டப்பட்ட முதியவர்களின் ஓய்விடமும் மட்டுமேயிருந்தன. நான் கல்விக் கூடங்களில் விற்பனை செய்வதற்கான பதனிடப்பட்ட சிறிய பாம்புகள், தேச, உலக வரைபடங்கள், பரிசோதனைச் சாலைக்கான வேதிப் பொருள்கள் விற்பதற்காக வந்திருந்த இடத்தில் இவைகளின் மீது விருப்பம் உள்ளவர்கள் மனோராவிலும் இருக்கக் கூடுமெனச் சொன்னதால் மேலே செல்லக் காத்திருந்தேன்.

எப்போதோ வரும் சிறிய வாகனத்தைத் தவிர வேறு கிடைக்காது என்பதால் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியிருந்தது. பழைய கறுப்பு வேனில் பயணிக்கும்போது காட்சிகளின் சுழற்சியில் மரங்களும் பாறைகளும் தனியே மேயும் குதிரைகளும் தென்பட்டன. மேலே பயணித்துச் செல்லச் செல்ல இரவு கூடியது. விளக்குகள் அதிகம் தென்படவில்லை. நகரம் மயக்கமான ஒரு மஞ்சள் ஒளியில் சோளக்கதிர் போலத் தென்பட்டது. நான் மனோராவில் இறங்கிய போது வீதிகள் வெறிச்சோடியிருந்தன. கோடைக் காலத்தில்தான் இங்கு நடமாட்டம் அதிகமிருக்கக்

கூடும் போல. நான் போய் இறங்கிய சதுக்கத்திலிருந்து நான்கு பக்கமும் சாலைகள் சென்றன. விடுதிகளில் மென் ஒளி பரவிக் கொண்டது. தேவாலய ஓசையும் வெதுமையும் பரவிய தெருக்களில் நடந்தபோது ஏதோ ஒரு விதமான நெகிழ்வுற்றது போலத் தென்பட்டது. நான் முன்னும் பின்னும் பார்த்தபடியே நடந்துகொண்டிருந்தேன்

பசியாக இருந்ததால் ஏதாவது உணவு விடுதிக்குச் சென்று சாப்பிட்டுவிட்டு அறை தேடித் தங்கிக்கொள்ளலாம் என நினைவு கொண்டபடியே நடந்துகொண்டிருந்தேன். என் கையில் இருந்த பெட்டியின் எடையோ இதுவரை தூக்கி வலித்த வேதனையோ இங்கு வந்திறங்கியதும் புலப்படவில்லை. பெரிய இரும்புச் சங்கிலிகள் தொங்கும் பழைய சுற்றுச்சுவர் அருகே நடந்துகொண்டிருந்தேன் தெரு மிக நீளமாகத் தெரிந்தது. சிறிது நேரத்துக்குள் அசதியும் களைப்புமாக உணவு விடுதியைத் தேடிப் பார்த்தேன் எதிரே ஒரு உணவு விடுதியிருந்தது. பையை அந்த இடத்தில் வைத்தவனாகத் திரும்பியபோது அந்த விடுதி நான் இறங்கிய இடத்தின் எதிரேதானிருந்தது. எப்படி இவ்வளவு நேரம் நடந்தோம் எனப் புரியவே இல்லை. சோர்வாகத்தானிருக்கக் கூடுமென மன சமாதானம் செய்தபடி உணவகத்தினுள் நடந்தேன். அங்கே எவருமிருக்கவில்லை. உணவு விடுதி விசித்திரமாக இருந்தது. தரையோடு மேஜைகள் பொருத்தப் பட்டிருந்தன. மேஜையின் மீது தட்டு பொருத்தப்பட்டிருந்தது. தண்ணீர் குடிக்கும் டம்ளர்கூட ஒரு வளையமிட்டுக் குவளையோடு பொருத்தப்பட்டிருந்தது. சுவர்களில் இருந்த மலர்க் கொத்துகள், காலண்டர்கள் யாவும் சுவரோடு உலோக வளையங்களால் பிணைக்கப் பட்டிருந்தன. விசித்திரமான செம்மை படிந்த ஒளி படர்ந்த உணவு விடுதியில் எனது குரல் கேட்டு வந்த பெண் வயதானவளாக இருந்தாள்.

சாப்பிடக் கேட்ட எதுவுமே இருக்கவில்லை. ரொட்டித் துண்டுகளையும், ஒரு பழத்தினையும் கொண்டுவரச் சென்ற பெண் மிக மிக மெதுவாகவே என் அருகாமைக்கு வந்துகொண்டிருந்தாள். நான் உணவின் அவசரத்தில் எதையும் கவனிக்கவில்லை. அவள் என் மேஜையில் குனிந்து வைப்பதற்கே சில நிமிஷங்கள் ஆனது. நான் அவசரமாக ஒரு பழத் துண்டை எடுத்து வாயில் போட்டேன். அது ஏனோ விசித்திரப் பொருள் போல இருந்தது. தண்ணீரை ருசிப்பது போலவே இருந்தது. ரொட்டித் துண்டும்கூட நாவில் படுவதை உணர முடியவில்லை. நறுக்கப்பட்ட பழத் துண்டிலிருந்து ஒரு பகுதி என் நாவினின்று நழுவி மேஜையில் விழப்போனது. நான் அவசரமாகக் கையைக் கீழே நீட்டினேன்.

பழம் இன்னமும் மேஜைக்குக் கீழே வரவில்லை. அது இப்போது தான் மிக மெதுவாகத் தரை நோக்கி இறங்கிக்கொண்டிருந்தது. காற்றில் அசைந்தாடும் பழத் துண்டை ருசிக்க ஆவலுற்றேன் அது போன்றதொரு காட்சி அப்போது வியப்பாக இருந்தது. முதியவள்

என் அருகாமைக்கு வந்து தண்ணீர்க் குவளையைக் கையில் எடுத்து அருந்த வேண்டாம், உறிஞ்சும் குழலால் குடிக்கச் சொன்னாள். நான் அவள் சொன்னபடியின்றி, தண்ணீர்க் குவளையை வளையத்திலிருந்து தூக்கி அண்ணாந்து வாயில் ஊற்றினேன். காத்துக்கொண்டே இருந்தேன். அது என் நாவுக்கு வரவேயில்லை. முதியவள் பரிகாசம் கலந்த முகத்துடன்,

"நாளைக் காலை வரை வாயைத் திறந்துகொண்டு காத்திரு.. அப்போதுதான் உன் நாவுக்கு இந்தத் தண்ணீர் வந்து சேரும்" என்றபடி எதுவும் நடக்காதது போலப் பார்த்து நின்றாள். தண்ணீர் என் நாவை நோக்கி அந்தரத்திலிருந்து மிக மிக மெதுவாக இறங்கிக் கொண்டிருந்தது. ஏனெனப் புரியவேயில்லை. சாப்பிட்டது போலவே இல்லை எனக் கவலையாகச் சொன்னேன். அவள் இயல்பாகத் தலையாட்டியவளாகச் சொன்னாள்,

"இந்த நகரில் தொடர்ந்து எல்லாப் பொருள்களும் தன் எடையை இழந்துகொண்டே வருகின்றன. நெகிழ்வும் எடை இழப்பும் மனிதர்களைவிடவும் மற்றப் பொருள்களுக்கு அதிகமாகிவிட்டது. இந்த இயக்கம் மிக மிக விசித்திரமானது. இங்கு எதோடும் இணைவு கொள்வது மிகச் சிரமமானது."

திகைப்போடு கேட்டேன்,

"பொருள்கள் யாவும் எடையிழந்துவிட்டனவா?"

"தெரியவில்லை. பல பொருள்கள் எடையிழந்து வருகின்றன. இந்த முழு நகரமே மெல்லத் தன் எடையை இழந்துகொண்டு வருகிறது. பின்னொரு நாள் இது மிதந்து அருகாமையில் ஏதாவது ஒரு சரிவில் போய் அமர்ந்துகொள்ளக் கூடும்."

எனக்கு எதுவும் பிடிபடவில்லை. நான் தங்குவதற்காக அறையைத் தேடிப் போனபோது அங்கும் இதுபோன்ற அமைப்புகளே இருந்தன. எல்லாப் பொருள்களும் வளையங்களால் செயற்கையாக இணைத்துக் கட்டப்பட்டிருந்தன. நான் தங்குவதற்காகச் சென்ற விடுதியில் ஒருவன் மட்டுமே இருந்தான். என்னைப் பற்றிய விவரங்களை எழுதிக் கையெழுத்திடவா எனக் கேட்டபடியே அங்கிருந்த மைக் கூட்டோடு இணைக்கப்பட்ட பேனாவை எடுத்தேன். அவனிடமிருந்து பலத்த சிரிப்பு வந்தது.

"நீ நகருக்குப் புதியவன், இங்கே காகிதத்தோடு பேனாவை இணைப்பது எளிதானதல்ல. முயன்று பார்."

எனது முயற்சி வியர்த்தமாகிக்கொண்டேயிருந்தது. முடிவில் கையெழுத்திடாமல் ஒதுக்கப்பட்ட அறைக்குப் போனேன். நான் தங்கிய இரவில் என் படுக்கை, உடல் யாவும் எடையிழந்து தூவல் போலாகியிருந்தன. ஒரு காகிதத்தைப் போல எனக்கு எடையற்ற தன்மையிருந்தது. நான் உறங்கிவிட்டேன்.

அதிகாலையில் பேராலயத்தின் மணிச் சப்தம் கேட்டு விழித்துக்

கொண்டபோது வெயில் படர்ந்திருந்தது. தெருவெங்கும் முதியவர்கள் கடந்துகொண்டிருந்தார்கள். நான் ஜன்னல் வழியாகத் தெருவைப் பார்த்தேன். சிறுவர்களே தென்படவில்லை. மிக மெதுவான கதியில் முதியவர்கள் சென்றுகொண்டிருந்தனர். அவர்களோடு தெருவில் இறங்கி நடக்கத் தொடங்கிய ஒரு பெண்ணைக் கண்டேன். நடப்பவர்கள் திடீரெனத் தரையை விட்டு இரண்டு அடி உயரத்தில் மிதந்து நடப்பதும் பின்பு இயல்புநிலை கொள்வதும் சாதாரணமாக நடந்தேறின. அந்தப் பெண் மிக மிக மெதுவாக நடந்து சென்றாள். ஒரு திருப்பத்தில் அவளது காலணி ஒன்று கழண்டு விழுந்தது. அதைக் கவனிக்காமல் நடந்து போனாள். உணர்ச்சி மீறிட இறங்கி அதைக் கையில் எடுத்தபடி அவளை நோக்கிச் சென்றபோது அவள் ஒரு மருத்துவமனைப் பக்கம் சென்றதைக் கண்டேன். அவளைப் பின்தொடர்ந்து சென்ற பாதையில் வாகனங்களும்கூடத் தரையோடு வளையமிடப்பட்டு இணைக்கப்பட்டு இருப்பதைக் கண்டேன். அது ஒரு முதியவர்களுக்கான மருத்துவ விடுதியென்பது நுழைந்ததுமே தெரிந்தது. அந்தப் பெண் பிரார்த்தனைக்காக முதியவர்களை அழைத்துப்போய்க் கொண்டிருந்தாள். அவசரமாக அவளருகே வந்து கூச்சத்துடன் அவளது காலணியைத் தந்தேன். அவள் வேடிக்கையாக அதைக் கண்டாள். 'தவறவிட்டு வந்தீர்கள்' என மெல்லிய குரலில் சொன்னேன். அவள் நிதானத்துடன் சொன்னாள்,

"நீங்கள் நகருக்குப் புதியவரெனத் தெரிகிறது. இங்கே பொருள்கள் காணாமல் போவதற்குப் பல ஆண்டுகளாகும். ஒரு வேளை தவறவிட்டாலும் அதை எப்போது வேண்டுமானாலும் போய்த் திரும்ப எடுத்துவிடலாம்."

அவள் பேசுவதை நம்ப வேண்டும் போலவே இருந்தது.

"ஏன் இப்படி விந்தையாக இருக்கிறது" என்றேன்.

இந்த நகரில் முதியவர்களும் பெண்களும் மட்டுமே வாழ்கிறோம். இவர்களுக்குத்தான் உலகில் பொருள்களின் எடை எப்போதும் பிரச்சினை தரக் கூடியதாக இருக்கிறது. இங்கே எதற்கும் எடையில்லை. யாவும் மிருதுவாக உள்ளன.

"நிகழ்ச்சிகளும் கூடவா" எனக் கேட்டேன்.

"நிஜம்தான், இங்கே கொந்தளிக்கும் நிகழ்ச்சிகள் எதுவும் கூடுவதில்லை. மனத் தடைகள் எதுவும் எவருக்கும் உருவாவதுமில்லை."

"நான் நகரைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்."

"இந்த நகர் உங்களையும் அதன் வசமாக்கிவிடும்."

"உன்னைப் பார்த்த உடனே மனத்தில் சில ரகசிய ஆசைகள் தோன்றுகின்றன. ஒளிக்க வேண்டிய அவசியமில்லையே. நான் உன்னைத் தனியே சந்திக்க விரும்புகிறேன்" என்றேன்

"இதோ இப்போதே நீங்களும் நகரின் சுபாவமேறிடத் தொடங்கிவிட்டீர்கள். நான் உங்களை இந்த நகரின் தென்சதுக்கத்தில் மாலை

சந்திக்கிறேன்" எனச் சிரிப்புடன் பிரார்த்தனைக்குரிய அறைக்குள் போய்விட்டாள்.

நான் எடையற்ற நகரின் தெருக்களில் அலைந்துகொண்டிருந்தேன். பகல் நகரில் மிக மெதுவாக இறங்கிக்கொண்டிருந்தது. கல்லறைத் தோட்டமொன்றைக் கண்டேன். அது தரையை விட்டுச் சில அடி தூரம் மேலே எழும்பி மிதந்துகொண்டிருந்தது. மிகப் பெரிய சுமை போலத் தெரியக்கூடிய மூட்டையொன்றைச் சுமந்தபடி ஒரு முதியவள் சாவகாசமாக நடந்து போனாள். நகரில் ஒரு காகமோ நாயோ கூடக் காண முடியவில்லை. எவர் வீட்டிலிருந்தோ தூக்கி எறியப்பட்ட ஒரு ஆப்பிள் வீதியின் மேல் காற்றில் அலைந்தாடி வந்துகொண்டிருந்தது. சொற்பமான கடைகளேயிருந்தன. மாலை நான் அந்தச் சதுக்கத்தின் உள்ளே சென்றேன். அது மிகப் பெரிய பூங்காவைப் போல இருந்தது. அவள் நான் நின்றிருக்கும் இடத்தை நோக்கி வருவதைக் கண்டு நீண்ட பொழுதின் பின்பே அருகாமைக்கு வந்தாள். சிரிப்புகூட எடையற்றதான ஒரு நீர்க்குமிழைப் போலச் சப்தமற்று உதிர்ந்தது.

இருவரும் ஒரு மரத்தடியில் உட்கார்ந்துகொண்டோம். அப்போது மரத்துக்கும் எங்கள் தலைக்குமிடையில் ஆயிரக்கணக்கான இலைகள் உதிர்ந்து வட்டமிட்டபடியிருந்தன. மரமெங்கும் இலைகள் அடர்ந்து மிருந்தன. அவள் இயல்பாக,

"எப்போதோ உதிர்காலத்தில் உதிர்ந்த இலைகள் இன்னமும் தரைவந்து சேரவில்லை" என்றாள்.

பட்டாம்பூச்சிகளைப் போல இலைகள் அலைந்துகொண்டிருந்த சுழல்வட்டத்தின் கீழே அமர்ந்திருந்தோம். எனக்கும் ஏனோ பேச்சு மிக சுருங்கியபடியிருந்தது. நான் அவள் கைகளை என் மீது எடுத்துக் கொண்டேன். அந்தக் கையில் எடையே இல்லை. அது ஒரு சோப்பு நுரையின் கனமேயிருந்தது. நான் அவளைக் காதலிப்பதாகச் சொன் னேன் அவள் அதைப் பற்றிய கவனமின்றிச் சொன்னாள்,

"அது இங்கே எவருக்கும் சாத்தியமாவதில்லை. காதல் பொருள்களை மிகுந்த கனமுள்ளதாக்கிவிடக் கூடியதெனக் கேள்வியுற்றிருக்கிறேன்."

அவள் முகத்தை அருகாமை திருப்பி முத்தமிட எத்தனித்தேன். அந்த உதடுகள் மிக மிருதுவாக ஒரு பனியைப் போல இருந்தது. முத்தமிடுவதற்காக உதட்டை அருகாமை கொள்வது சாத்தியமான தாகவேயில்லை. அவள் கேலியான குரலில் சொன்னாள்,

"பெண்கள் எப்போதும் உலகை கனமற்றதாகவே கண்டு கொண்டி ருக்கிறார்கள்" அவளது பெயரைத் தெரிந்துகொள்ளும் ஆவல் மீறிடக் கேட்டேன்,

'புலனி' எனச் சொன்ன அவளை இழுத்து அணைத்தபோது தண்ணீரைப் போல விரல் எங்கும் ஊடுருவிக் கடந்தாள். நாங்கள் பேசிக்கொண்டிருந்தபோது ஒரு சிறிய கனியொன்று எங்கிருந்தோ

உதிர்ந்து என் தலையில் விழுந்தது. அது ஓர் அத்திப் பழத்தைப் போலச் சிறியதாகவும் தேன் நிறத்திலுமிருந்தது.

அது இதே மரத்தில் ஏதோவொரு வருடத்தில் உதிர்ந்து வானில் தங்கிப்போன கனி. ருசியாக இருக்குமென்றாள். நான் அதை எனது சட்டைப் பையில் போட்டுக்கொண்டவனாக அவளுடைய கைகளைப் பற்றியபடி நகரின் குறுக்குவீதிகளின் வழியே சென்றோம். முதியவர்கள் கூட்டமாக ஓர் இறங்கும் படிகள் கொண்ட சரிவில் அமர்ந்திருந்தனர். எவரும் பேசிக்கொள்ளவில்லை. பெரும் நிசப்தம் ஆழ்ந்திருந்தது. அவரவர் தங்களுக்கு விருப்பமான பொருளைச் சரிவின் உயரத்தில் இருந்த பீடத்திலேறி கீழே போட்டுவிட்டு அது தரைக்கு வரும் நாள் வரை அமர்ந்து பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். பாக்கெட் கடிகாரங்கள், சிகரெட் லைட்டர்கள், மணிபர்ஸ், அலங்கார மலர்க் குவளைகள், சிறிய வெண்கல மணி, விசிறிகள், கண்ணாடிக் கோப்பைகள் காற்றின் அடுக்குகளில் மிதந்துகொண்டிருந்தன.

அவள், நானும் ஏதேனும் ஒரு பொருளை அங்கே கீழே போட விருப்பமிருக்கிறதா எனக் கேட்டாள். நான் எதை விட்டு விடுவதெனத் தெரியாமல் திகைத்தவனாக எனது பையிலிருந்த நாணயமொன்றை எடுத்து வீசினேன். அது மிக மெதுவாகத் தரை நோக்கி வரும் தனது பயணத்தைத் தொடங்கியது. அவள் பலமாகச் சிரித்தாள்.

"நீ உனது மகனை வாலிபத்தில் அழைத்து வந்து காட்டும்வரை இது தரையிறங்காது."

நான் ஆசை மீறிடத் திரும்பவும் சொன்னேன்,

"நான் உன்னைக் காதலிக்கிறேன்."

அவள் இப்போது எனது கண்களை ஆழமாக ஊடுருவியவளாகச் சொன்னாள்,

"உன் காதலை நான் அறிவதற்கு இங்கே ஒரேயொரு வழி தானிருக்கிறது. அது நீ என்னைப் பிரிந்துபோவது மட்டும்தான்."

"பிரிந்தால் எப்படிக் காதலை அறிவாய்?"

"இங்கே பிரிவு மட்டுமே கனமுள்ள ஒரு நிகழ்ச்சி. நீ பிரியும்போது நான் உன் காதலை முழுமையாக அறிந்துகொள்வேன்." அவளைக் காதலிப்பதற்காகப் பிரிந்துபோய்விடுவதாகச் சொன்னேன். அவளிடம் எவ்விதமான சலனமுமில்லை. மாலை ஓர் அலையைப் போல மெதுவாக நகரின் மீது வீசிக் கொண்டிருந்தது. நகரை விட்டுப் புறப்படக் காத்திருந்தேன். கறுப்புநிற வாகனத்தில் பயணித்து மலையினின்று கீழே வர வர நகரம் தொலைவில் மயங்கித் தெரிந்துகொண்டிருந்தது. ஒரு வளைவில் நான் இறங்க வேண்டிய இடம் வந்தபோது மனம் ததும்பிக்கொண்டிருந்தது.

அவள் இப்போது எனது காதலை உணர்ந்திருப்பாள் நான் ஒரு பெண்ணைக் காதலிக்கத் தொடங்கியிருக்கிறேன் என உரக்கச் சப்தமிட்டபடியே எனது கையிலிருந்த பையை எடுத்துக்கொண்டு

நடந்தேன். திடீரென எனது சட்டை மிக கனமுள்ளதாகத் தோன்றியது. அப்போது நினைவுக்கு வந்த உதிர்ந்த சிவப்புப் பழம் ஒன்றை சட்டைப் பையிலிருந்து கையில் எடுத்தேன். அதன் எடையை என் கைகளால் தாங்க முடியாததாக இருந்தது. கனம் தாளாமல் பழத்தை நழுவவிட்டேன். அது ஓர் எரிகல்லைப் போல மிகுந்த வேகத்துடன் பூமியைத் துளைத்துக்கொண்டு விழுந்து மறைந்தது.

சாக்கியனின் பல்

மூன்று மஞ்சளர்கள் எனும் சீன விவசாயிகளான லியூ சகோதர்கள் நதி அருகாமை கிராமமொன்றின் வயல் வெளிகளுக்குள் அமைந்த வீட்டில் வாழ்ந்து கொண்டிருந்தனர். அவர்களின் தகப்பன், தான் பிறந்த நாளில் இருந்து தன் சொந்த கிராமம் தவிர்த்து வேறு எங்கும் போனதேயில்லை. வயல்களுக்குள்ளா கவே மூன்று தலைமுறையாக மரவீடு அமைத்து வாழ்ந்து பிள்ளைகள் கண்டு பெருகி வசித்தனர் இறந்துபோன தனது மனைவியையும் சிசுக்களையும் தனது வயல் வீட்டின் பின்பே புதைத்திருந்த தகப் பனானவன் நதிக்கரையிலே அலைந்து கொண்டிருந் தான். அவனுக்கு விவசாய வேலைகள் இருந்து கொண்டேயிருந்தன. இளமையிலே தன் மனைவியை இழந்த அவன் மூன்று பிள்ளைகளை வளர்ப்பதிலே கவனமாக இருந்தான். மூவரும் தகப்பனோடு வயல் வேலைகளில் நாள்களைக் கழித்து வந்த கோடையில் தகப்பனோடு நெருக்கம் கொண்ட மருத்துவனொரு வன் யாத்ரீகன் சுவானின் கதையில் வரும் புனித சாக்கியனின் பல் ஒன்று எங்கோ தொலைவில் பாதுகாக்கப்படுவதாகவும் அது ஒரு விநோத விதை யென்றும் அதை எப்படியாவது திருடி வந்து நிலத்தில் புதைத்துவிட்டால் பின் எப்போதும் விதைக்காமலே தானியங்கள் வயலில் விளைந்துகொண்டேயிருக்கும் என்றும், அப்படி விளையும் தானியங்களின் மணி களை ருசித்த எவரும் மூப்படைவதில்லை என்பதை அறிவித்த நாளில் இருந்தே சகோதரர்கள் மூவரும் அந்தப் பல்லை எப்படியாவது திருடி வந்துவிட வேண்டுமென ஆசை கொண்டவர்களானார்கள்

தகப்பன் தனது வயோதிகக் காலத்திலும் நதியின் போக்கினை அறிந்துகொண்டவனாக நதி தனது மூர்க்கத்தைக் காட்டும் முன்பாகத் தனது விவசாயப் பணிகளை முடித்துக்கொள்ளத் தொடர்ந்து வேலை செய்துகொண்டிருந்தான். விதைப்புக் காலம் தொடங்குவதற்கு முன்பாக அவர்கள் ஒரு நாளில் வீட்டில் அடையும் கழுதைகளோடு தகப்பன் அறியாமல் அந்தப் பல்லைத் தேடிப் புறப்பட்டபோது மூவரும் இருபதுக்குள்ளான வயதே கொண்டிருந்தனர். பாதைகள் கிளைக்காத காலமென்பதால் அவர்கள் தூரதேசம் செல்லும் வணிகர்களின் பாதைகளில் பின்தொடர்ந்து நடந்தனர். மலையாடுகளும் தொலைவில் மறையும் சூரியனுமாகக் கண்டபடி நடந்தனர். சாக்கியனின் பல் இருக்குமிடத்தினை எப்படி அறிவதெனத் தெரியாமல் நீண்ட பனி மலையை அடுத்து மடாலயமொன்றில் வசிக்கும் துறவிகளைக் கேட்டு அறிவதென முடிவுற்றவர்களாக, பதினெட்டு நாள்கள் நடந்து தொலைவில் செம்மஞ்சள் கொடியசையும் ஒரு மடாலயத்தைக் கண்டனர்.

அது சுற்றுச்சுவர் கொண்டு அரைக் கோள வடிவில் இருந்தது. மடாலயத் துறவிகளைக் கண்டபோது அவர்களில் மூத்த துறவி மூவரும் தங்களது மடாலயத்தின் சமையல் அறையிலும் காய்கறித் தோட்டமிடுவதற்கு சம்மதிக்கிறார்களா எனக் கேட்க, ஒப்புக்கொண்டார்கள். அந்த நிலத்து மண் செழுமையோடிருந்தது. அதிகாலை முழுவதும் காய்கறித் தோட்டத்தினைச் சீரமைப்பதிலும் அதைப் பராமரிப்பதிலும் செலவாகிவிடும். பின்பு மூவரும் துறவிகளுக்கான ரொட்டிகளைத் தயார் படுத்துவதில் நேரம் சென்றபடி இருக்கும். நாட்கள் கடந்து போய்க்கொண்டிருந்ததேயன்றி ஒருவரும் தங்களது பயண நோக்கம் பற்றிப் பேசிக்கொள்ளவேயில்லை. எப்போதாவது ஓர் இரவில் மூவரும் பேச்சரவமற்றுப் பெருமூச்சிட்டுக் கொள்வார்கள். துறவிகளில் மூத்தவன் அவர்களின் கண்களில் ஒளிந்த ஆசையறிந்தவனாக இரண்டு கோடைகளுக்குப் பிறகான ஒரு நாளில் கேட்டான்,

“நீங்கள் எதைத் தேடி வந்தீர்கள்?”

“ஒரு பல்லை” எனத் தலை கவிழ்ந்தபடி ஒருவன் சொன்னான்.

துறவி அவர்கள் தங்களைப் போலவே சாக்கியனின் மீதான அன்பு கொண்டவர்கள் போலும் என அறிந்தவனாகச் சொன்னான்,

“அது தொலைவில் தெற்கு எங்கோ இருப்பதாகச் சொல்கிறார்கள். அது கனவைப் போல் எங்கோ விரிந்திருக்கிறது.”

“தெற்கே போவது எப்படி?” என மற்றவன் கேட்டான்.

இதைக் கேட்ட மூன்றாம் நாளின் இரவில் அவர்கள் மூவரையும் உணவும் தானியமும் தந்து துறவி வஸ்திர வணிகர்களோடு அனுப்பி வைத்தான். அவர்கள் நிழலைப் போலச் சப்தமின்றிக் கூடவே நடந்து போனார்கள்.

தெற்கு நோக்கி நடக்க நடக்க வெக்கையும் உடல் நோவும்

அதிகமாகிக்கொண்டே வந்தது. புகைந்துகொண்டிருக்கும் கிராமங்களையும் நீண்ட வயல் வெளிகளையும் பசித்த விருட்சங்களையும் கண்டவர்களாக அவர்கள் உஷ்ணம் மீறிய ஒரு கிராமத்துக்கு வந்து சேர்ந்தபோது மூவரில் ஒருவனுக்கு வைசூரி கண்டது. வணிகர்கள் அவனை அங்கேயே விட்டுவிட்டு மற்ற இருவரும் தங்களோடு வரச் சொன்னார்கள். மூவரில் நோயுற்றவனை விடுத்து இருவரும் வர மறுத்தனர். சகோதரர்கள் மூவரையும் கிராமத்தின் தனிமையில் விடுத்தவர்களாக வணிகக் கூட்டம் பயணம் சென்றது. வைசூரி கண்டவன் வேதனை மீறிடச் சப்தமிட்டுக்கொண்டிருந்தான். எங்கே அடைக்கலம் கொள்வதெனத் தெரியாத நேரத்தில் தண்ணீர் தூக்கி வர வந்த பெண்ணொருத்தி அவர்களைத் தனது தோட்டத்து வீட்டுக்குக் கூட்டிப்போனாள். வைசூரி கண்டவனை வாழை இலையில் ஆடைகளற்றுப் படுக்க வைத்து இருவரும் இரவெல்லாம் மயிலிறகால் தடவி, சாந்தம் கொள்ளச் செய்தனர். அந்தப் பெண் தனது மூன்று குழந்தைகளோடு விவசாயக் காரியங்கள் பார்த்துக் கொண்டிருந்தாள். வீட்டில் அவள் கணவனில்லை. வயதாகி நோயுற்ற ஒரு ஸ்திரி மட்டும் இருட்டறையில் படுத்திருந்தாள். மூன்று வாரமானது வெம்மை இறங்குவதற்கு. நோயுற்றவன் உடல் தேறத் தொடங்கிய நாளில் அவள் உடனே பயணம் செய்யக்கூடாதெனத் தடுத்தவளாக நிறுத்தி, தங்கிப் போகச் சொன்னாள். அங்கிருந்த நாள்களில் இரு சகோதரர்களும் அவளது வயல் வேலைகளில் பங்குகொண்டார்கள். சகோதரர்களில் மூத்தவன் அவளோடு நிலத்தை உழுவதற்கும் விதைப்பதற்கும் ஈடு கொடுத்தான். கடின உழைப்பாளிகளாக இருந்த அவர்கள் அந்தப் பெண்ணோடு நாட்களைக் கழித்தனர். ஒரு நாளின் இரவில் அவள் மூத்தவன் படுக்கைக்கு வந்து சொன்னாள்,

"நீண்ட நாட்களாக எனது படுக்கை தனிமையில் சுருட்டப்பட்டுக் கிடக்கிறது. நீ அதை அவிழ்த்து என்னோடு துயில் கொள்வாயா" அவன் மறுக்கவில்லை. பின்பான நாட்களில் மூவரும் அவளது வீட்டு மனிதர்களைப் போலானார்கள். நீண்ட நாள்களுக்குப் பிறகு அந்த ஸ்திரி கர்ப்பிணியானாள். அவளது கர்ப்ப சிசுவின் தகப்பனான மூத்தவன் தனது சிசு பிறக்கும் நாள் வரை இங்கே காத்திருக்கலாம் என்றான். மூர்க்கமான கோடைக்காலத்தில் அவள் பிரசவித்தாள்.

சிசு பிறந்த நாளில் இருந்தே குற்ற உணர்ச்சியால் பீடிக்கப்பட்ட மூத்தவன் சகோதரர்களிடம், அவளிடமிருந்து தன்னால் விடை பெற முடியாது. அவள் அறியாமல் விலகிப் போவோம் எனச் சொல்லி, நள்ளிரவில் அவ்வூரைப் பிரிந்தபோது மூவருக்கும் ஆறு வயது அதிகமாகியிருந்தது.

தெற்கில் நடந்து வந்தபோது தாங்கள் தேடிவந்த பல் கடல் தாண்டிய நிலப்பரப்பில் உள்ளதென அறிந்தவர்களாக அங்கே நடக்கவிருக்கும் பூர்ணிமை விழாவுக்குப் போவதற்காகக் கடற்சோதனை விடுதியில் வைசூரி கண்டு வடு கிளைத்த உடலோடு காத்திருந்தபோது,

சாக்கிய முனியின் உதிர்ந்த பல் ஒன்று காலம்தோறும் சித்திரை விழாவின் இறுதி நாளில் பார்வைக்கு வைக்கப்படுமென்றும் அந்த அதிசயமான, காலம் மீறிய பல்லைக் காணப் பல்லாயிரம் பேர் திரளக் கூடுமென்பதை அறிந்து தங்கள் வாழ்நாளில் எப்படியாவது அந்தப் பல்லைத் திருடிப் போய்விட வேண்டும் என முடிவு செய்தவர்களாகக் கடல் பயணம் கூடிடக் காத்திருந்தனர். பண்டிகை நடக்கும் ஊரில் எங்கும் மனிதர்கள் ஆரவாரமிட்டு நடந்தனர். புனிதப் பல் இருக்கும் மடாலயத்தின் முன்பாக நீண்ட வரிசை நின்றிருந்தது. எங்கும் சரணகோசமும் பாடல்களும் நிரம்பின. தாங்கள் ஆசையுற்ற பல்லைக் காணவேண்டி இரவெல்லாம் காத்திருந்தனர். ஒரு தங்கப் பேழையில் வைத்துக்கொண்டு வரப்பட்ட அந்தப் பல் துல்லியமான பாலோட்டம் கொண்டிருந்தது. அதைப் திருடு வதற்காக அவர்கள் மடாலயத்தில் பணியாள்களாகப் பல்லை நெருங்கிக் காத்திருந்தனர். விழா முடிந்து அந்தப் பல் திரும்பவும் பேழைக்குள் வைக்கப்படும் இறுதி நாள் இரவு அதைத் திருடுவதற்காக மூவரும் திட்டமிட்டுச் சென்று பேழையை எடுத்தனர். பல் அவர் கள் விரலில் பட்டபோது குளிர்ச்சியும் உயிரோட்டமும் இருந்தது. மிக உணர்ச்சியுற்றவர்களாக அவர்கள் பல்லை எடுத்த போது ஒருவனின் கை நடுங்கிப் பல் கீழே விழுந்தது. குனிந்து எடுப்பதற்குள் விழிப்புற்ற காவலர்கள் அவர்களைக் கையோடு பிடித்துக் கொண்டார் கள். குற்றம் உறுதி செய்யப்பட்டது. மடாலய முதன்மையாளர் தணிவான குரலில் கேட்டார்,

“தங்கப் பேழையைத் திருட முயன்றதை ஒப்புக்கொள்கிறீர்களா?”

மூவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கண்களைத் தாழ்த்திக் கொண்டு ஒப்புக்கொண்டதாகச் சம்மதித்தனர். வாழ்நாளெல்லாம் மடாலயத்தில் உள்ள மணியை அடிப்பவர்களாகவும் தண்ணீர் இறைத்து ஊற்றுபவர்களாகவும் வேலை செய்ய தண்டனை தரப்பட் டது. அவர்கள் எவ்விதமான மறுப்புமின்றித் தங்கள் தண்டனைப் பணிகளைச் செய்து கொண்டேயிருந்தனர். ஒவ்வொரு பூர்ணிமைக்கும் பல் மக்கள் பார்வைக்காக எடுத்து வரப்படும். அவர்கள் செய்வதறியாது பார்த்துக்கொண்டேயிருந்தார்கள். இதிலே அவர்களுக்கு வயோதிகம் வந்து சேர்ந்தது. அவர்கள் குற்றத்தின் பொருட்டான பணியாளர்கள் என்பதே யாவருக்கும் மறந்துபோனது.

ஒரு நாளில் அவர்கள் தங்களது தேசம் திரும்ப அனுமதி கேட்டனர். அசதியும் களைப்பும் மேலிட இரண்டு ஆண்டுகள் பயணம் செய்து தங்கள் தகப்பனின் ஊர் திரும்பினார்கள். அதற்குள் நதி திசை மாறி ஓடத் தொடங்கியிருந்தன. தகப்பனின் வீடும் நிலமும் அடித்துப் போகப்பட்டிருந்தது. ஒரு மரத்தை இறுகப் பற்றியவனான மனிதனின் சடலமொன்று கிடந்தது. வெள்ளத்தில் இறந்த தங்கள் தகப்பன் அவன் என அடையாளம் கண்டவர்கள் அந்த உடலை விடுவித்த போது கபாலம் சிதறியது. அதில் மிஞ்சிய பல்லில் ஒன்று தெறித்து

விழுந்தது. அதை எடுத்த மூத்தவன் கைகளிலே பார்த்துக் கொண்டிருந்தான் சகோதரர்களும் வாங்கிப் பார்த்தனர். அந்தப் பல்லிலும் பால் ஒளிர்வதையும் அதுவும் சாக்கியனின் பல்லைப் போலவே அசப்பில் இருப்பதாகவும் கண்டனர். மாறி மாறிக் கையில் வாங்கிப் பார்த்தபோது அதில் உயிரோட்டம் துளிர்ந்தது எப்படி எனப் புரியாதபோது வெயிலில் தகப்பனின் கபாலம் சூடேறிக் கொண்டிருந்தது.

சயன விடுதி

நான்கு மணற் குன்றுகளுக்கிடையே ஒரு செம் மஞ்சள் மலரென விரிந்த நகரமாகயிருந்தது உத்கலா. வீதிகளில் மணற்துகள்கள் படிந்து நிரம்ப, நடமாடும் மனிதர்களின் குரலில் கூட மணல் ஒட்டிய ஊராக விருந்தது. முடிவற்ற தனது வஸ்திரமாக உடுத்தியது போல நகரம் வீழ்ந்து கிடந்தது. நயோகான் வம்ச அரசர்களின் கல்லறைத் தோட்டமெனக் காணப்படும் அதன் பெருவெளியில் பறவைகள் பறப்பதுகூட அபூர்வமாகவே காணப்படுகிறது. இந்த நகரின் கதியைத் தீர்மானிக்கும் காற்றானது தொலைதூர மலை உயரத்தில் சாந்தி கொண்டிருந்தது. அது வருடத்தின் மூன்று மாதங்களில் மட்டுமே விழிப்புறு வதாக நம்பினார்கள். சிவப்புச் செங்கற்களாலும் மூங்கில் கழிகளாலும் வடிவமைக்கப்பட்ட வீடு களிருந்த பாலை நகரமானது முற்றாக மனிதர்கள் யாவரும் காலி செய்து போய்விட்ட வெறுமை யோடிருந்தது.

நயோகான் அரசர்களில் இளையவனான ஒருவன் தனது கனவில் விழித்தெழுபவன் போல இங்கிருந்த மக்களை அழைத்தபடி பாலை கடந்து போய்ப் புதிய நகரமொன்றை நிர்மாணித்துக் கொண்டான். பின்பு இந்நகரம் திறந்த புகலிடம் போலவேயிருந்தது. நடமாட்டமற்ற வீதிகளில் இடிபாடுகள் தொடங்கி யதும் இதைக் கடப்பதைக்கூடப் பயணிகள் விலக்கிக் கடந்தனர் எல்லா இடிபாடுகளையும் மீறி இந்த நகரத்தில் ஒரேயொரு விடுதி அழிக்கப்பட முடியாமல் விடுபட்டுப் போய் இருந்துகொண்டேயிருந்தது. இந்த விடுதியின் கதவுகள் மூடப்பட்டு வெகு காலமாகி

விட்டன. சாவித் துவாரத்தின் வழியே உள்ளே பார்க்கும் எவரும் குறைந்த ஒளியும் இருளும் நடனமாடுவதைக் காண்பார்கள். உத்கலா வின் சயனவிடுதி ஒரு திறக்கப்படாத விநோதமெனச் சொன்ன மேய்ப்பன் ஒருவன், திறவா இந்த விடுதி நான்கு வாசல் கொண்டதென் றும் அவை விசித்திர நிகழ்வுகளால் மூடப்பட்டதாகவும் நினைவு கூர்ந்தான்.

வடசயனம்

உத்கலாவின் தென்பகுதியின் தொலைவில் இருக்கும் அடர் காட்டில் மதிமானை வேட்டையாடுவதற்காக நதி கடந்து நான்கு யுவர்கள் வந்து சேர்ந்திருந்தார்கள். அவர்கள் வனவெளியில் ஊது குழலால் சப்தமிட்டபடியே மான்களை விரட்டி அலைந்தனர். பெரிய கொம்புகளையுடைய மான்கள் மருண்டு தாவின. தேடியலைந்து கொண்டிருந்த மதிமானை மட்டும் அவர்களால் அறிய முடியவே யில்லை. உத்கலா மணல்வனத்தில் யாரும் கண்டிராத மதிமான் ஒன்று அலைந்துகொண்டிருந்தது. அதன் உடலில் நிலவு வளர வளர வெண் திட்டுக்களாகப் புள்ளிகள் தோன்றத் தொடங்கும். நிலவு முழுமை கொள்ளும் நாளில் மானின் உடல் முழுவதும் புள்ளிகளாகிவிடும். நிலவு தேயத் தேய மதிமானின் உடற்புள்ளிகள் உதிரத் தொடங்கி அது அமாவாசை நாளில் புள்ளியற்ற தூய மானாகிவிடும் என்றார்கள். அது நிலாவின் திசையிலேயே சுற்றி யலையக் கூடியது என்றும் ஒளியை அருந்தி வாழ்வதாகவும் சொன் னதைக் கேட்டு வேட்டையாடுவதற்காக அலைந்த அவர்கள் இரவில் மணற்பாடுகள் உள்ள உத்கலாவைக் கண்டார்கள். அங்கே நிலா வரும்வரை தங்கிச் செல்லலாம் என மூடிக் கிடந்த விடுதியின் கதவைத் தனது வலிய பிரயோகத்தால் உடைத்துத் திறந்த வேட்டை யாளன், உள்ளே நடந்தபோது விடுதியில் சிறிய அறைகள் இரண்டு வரிசையாக இருந்தன. எப்போதும் சயனிப்பதற்குத் தயாராக இருப்பது போல அதில் படுக்கைகள் போடப்பட்டிருந்தன. நால்வரும் மதி மானைத் தேடிய களைப்பில் தனித்தனிப் படுக்கைகளில் அவர்கள் வில்லோடு உறங்கிப்போனார்கள். நிலா கிளைத்த இரவோடியது. யாவும் மறந்து நல்ல உறக்கத்தில் மூழ்கினார்கள்.

ஏதோ சப்தத் துணுக்கு ஒன்று மோதக் கேட்டு விழித்த வேட்டைக் காரர்களில் ஒருவன் தான் நதியின் வடபக்கமிருந்த பாறையொன்றில் படுத்துக் கிடப்பதை உணர்ந்தவனாக எழுந்து தனது சிநேகிதர்களைத் தேடினான். மற்ற மூவரும் கானகத்திலும் மலைச் சரிவிலும் மரத்தடி யிலும் என வேறு வேறு இடங்களில் விழித்தனர். அவர்களுக்கு நடந்த குழப்பம் புரிபடவில்லை. ஒன்றாகப் படுக்கைக்கு ஒரே இடத்தில் போன அவர்கள் எப்படி வேறு இடத்தில் விழிக்க முடியும் எனப் புரியாமல் மறுநாளும் அதே விடுதிக்கு வந்தனர். முந்திய நாளைப் போலன்றி ஒரே அறையில் நால்வரும் அருகாமையில்

படுத்துக்கொண்டனர். விழித்து எழுந்த போது கடந்த நாளைப் போலவே நதிக்கரை, மலை, மடுவென வேறு வேறு திசைகளில் வேறு வேறு இடங்களில் விழித்து எழுந்தனர். துயிலின் நீண்ட பற்கள் தங்களைக் கவ்வி இழுத்து வந்து எங்காவது போட்டுவிடுவதாகப் பயந்த நால்வரும் மதிமானை வேட்டையாட மறந்து ஓடினர். வடசயனத்தின் சூட்சுமம் அறியாத அவர்கள் கானகத்துக்கு வரவே யில்லை. பின் அந்த வடசயனம் மூடப்பட்டது.

கிழக்கு சயனம்

தனது 14—வது ரெஜிமெண்டோடு தெற்கில் கிளர்ந்து எழும் வீரர்களை அடக்குவதற்காக இரவில் பயணித்த மேஜர் காம்பெல் மயக்கமூட்டும் தொல்வாசனையை நுகர்ந்தபடி உத்கலாவுக்கு வந்த போது வளர்பிறை நாளாக இருந்தது. எங்கும் வெண்ணிற ஒளியில் சிதைந்த நகரம் ஒளிர்ந்துகொண்டிருந்தது. தைல ஓவியமொன்றைப் போல முழு நகரமும் ஒளிர்வதைக் கண்ட அவன் அந்த நகரத்துக்குள் பிரவேசித்துத் தன் வீரர்களைத் தங்குமிடம் தேடி வரச் சொன்னான். பூட்டிக்கிடந்த கிழக்கு சயன விடுதியைத் திறக்கச் செய்து தன் படை வீரர்களோடு தங்குவதற்காகப் போனபோது அங்கே சிறிய குகை போன்ற வடிவில் ஒற்றைப் படுக்கை மட்டுமே இருந்தது. வெளியில் பார்க்கும்போது பெரிய விடுதி போலத் தெரிந்தும், உள்ளே குகைப் படுகை போலக் குனிந்து அந்தக் குகைப் படுகையினுள் நடந்தான். ஒரே ஓர் ஆள் தூங்கக் கல்லால் ஆன ஒரு படுக்கையிருந்தது. அதில் குளிர்ச்சி கசிந்துகொண்டிருந்தது. காம்பெல் தனது உடை வாளைக் கழற்றி வைத்துவிட்டு அதில் அமர்ந்தான். உடன் வந்த வீரர்கள் தன் பின்னே ஊர்ந்து ஊர்ந்து வந்து அருகாமையில் நின்றபோது, ஒரு நபருக்கு மட்டுமே போதுமானதாக இருந்த வெளி இப்போது படையே தங்குவதற்குரிய இடம் போல விரிவு கொண்டி ருந்தது. காம்பெல் அதன் மர்மம் அறியாமல் கண்ணை மூடிக் கிடந்தான். தன் படுக்கையின் ஒருபுறத்தில் வீரர்கள் வரிசையாக அமர, கல் விரிந்துகொண்டேயிருந்தது. நூற்றுப் பதினோரு வீரர்கள் படுத்தும் அதில் மீதம் இடமிருந்தது. வீரர்கள் களைப்பில் தூங்கிப் போயினர். விடிந்து பார்த்தபோது யாவரும் வயதான உருக் கொண்டிருந்ததைப் புரிந்துகொள்ள முடியவேயில்லை. காம்பெல் செய்வதறியாது தன் வயோதிக உருவின் புதிர்மையோடு விலகிப்போன பிறகு கிழக்குச் சயன அறைக்கு எவரும் வரவேயில்லை.

தென்சயனம்

உத்கலாவின் தெற்கே நிற்கும் மணற்குன்றின் உயரத்திலிருந்து கணித்தால் நட்சத்திரங்களின் பாதைகளும் கிரகங்களின் நடமாட்டமும் துல்லியமாகக் கணக்கிடப்பட முடியுமென அறிந்த பன்னிரண்டு வானசாஸ்திரர்கள் வேறு வேறு தேசங்களிலிருந்து புறப்பட்டு

உத்கலாவிற்கு வந்து சேர்ந்திருந்தனர். அவர்கள் குன்றின் உச்சியில் ஏறி அமர்ந்தபோது வானம் வெகு துல்லியமாக இருந்தது. வான சாஸ்திரர்கள் தங்கள் கண்களைக் கிரகங்களின் வழியில் நீந்தவிட்டனர். நெருங்கிய மனிதனைப் போல அவர்கள் நட்சத்திர வழி அறிந்து விடிகாலையில் கீழே இறங்கி வந்தனர். தெற்குப் பகுதி நகரத்துக்குள் பிரவேசித்தபோது சாம்பல் நிற வெளிச்சம் எங்கும் பரவியிருந்தது. தெற்கு சயன அறைப் பூட்டினைக் கண்ட ஒரு வானசாஸ்திரி அதன் சாவித்துவாரமே அதன் அமைப்பின் நுட்பத்தைக் காட்டி விடுகிறதென்று அறிந்தவனாகத் தனது பையிலிருந்த இரு எழுத்தாணி கள் வழி அந்த சூட்சுமத்தைத் திறந்தான். உள்ளே அசப்பில் ஒன்றுபோல் இருந்த நான்கு அறைகள் மூன்று வரிசையில் இருந்தன. எதிலும் ஒரு துளிக்கூட மாற்றம் இல்லை. அதே நிறப்படுக்கை விரிப்பு, மலர்கள், மரக்கட்டில், பதுமைகள் என அவர்கள் ஆச்சரிய மடைந்து தங்கள் படுக்கைக்குப் போனார்கள். விடிகாலையில் விழித்த மனிதன் இரவில் தான் ஒரு சொப்பனம் கண்டதாகவும், அதில் ஒரு மணற்புலி தன்னைத் துரத்தியதாகவும் தப்பி ஓடிக் களைத்த துர்சொப்பனம் அது என்றான். அதற்கு இரண்டாமவன் அவன் சொன்னது தன்னுடைய கனவென்றும் மணற்புலி தன் கனவிலும் நடமாடியதாகச் சொன்னான். இல்லை அக்கனவு தன்னுடை யது என அருகிலிருந்த மற்றப் பத்து வானசாஸ்திரிகளும் சொன்னார் கள். பன்னிரண்டு வானசாஸ்திரிகளும் ஒரே கனவைக் கண்டிருந்ததைச் சொன்ன ஒருவன் இந்த விடுதி அசப்பில் மட்டுமல்ல, கனவிலும் ஒன்றையே யாவரிடமும் பிரதிபலிக்கின்றது. இங்கு தொடர்ந்து சயனிப்பவர்கள் பித்த மனிதர்களாகிவிடுவார்கள். வெளியேறிவிடுங்கள் என்றான். பின் தெற்கு சயனமும் திறக்கப்படவில்லை.

மேற்கு சயனம்

சதா பெண்சுகத்தில் மிதந்துகொண்டேயிருக்கும் நீலன் தனது ப்ரிய கன்னிகளுடன் களியாட்டத்துக்குப் பாலை வந்தபோது உத்கலா வின் இடிபாடுகளைக் கண்டவனாக அதன் மேற்கு சயன அறைக்கு வந்தான். அந்தப் பகுதியில் இரண்டே அறைகள்தான் இருந்தன அதில் ஓர் அறை சதா ஒளியோடும், ஓர் அறை சதா இருளோடுமிருந் தன. நீலன் தனது கன்னிகளோடு இருளின் அறையைத் தனதாக்கிக் கொண்டான். உறக்கம் ஒரு தாரையைப் போல அவர்களைச் சுற்றிக்கொண்டிருந்தது. சிரிப்பும் குடியுமாக உறக்கம் கொண்ட அவன் இரவில் தாகம் மிகுதி கொண்டு எழுந்தபோது அந்த அறையில் எந்தப் பொருட்கள் எங்கிருக்கின்றன எனத் தெரியவில்லை. தாகம் மீற அடுத்த அறைக்குப் போய்ப் படுத்துக்கொண்டான். காலையில் ஒரு பெண் கூச்சலிட்டபோது நீலன் எழுந்து வெளியே வந்தான். அந்தப் பெண்கள் வியப்புக் கலையாமல் அவனைப் பார்த்து நீ யார் எனக் கேட்டார்கள்

அவன், தான் நீலனென்றதும் சிரித்தார்கள். நீலனுக்கு இது புரியவே இல்லை. அப்போது நீரில் பிரதிபலிக்கும் தன் உருக் கண்டபோது தனது உரு மாறி தான் ஒரு சிறுவனாக இருப்பதைக் கண்டான். பெண்கள் தங்களோடு வந்த யுவனைக் காணாது தேடிய போது நீலனுக்கு மிகுந்த கோபம் வந்தது. ஓர் உறக்கம் கழிந்த விழிப்பில் தான் எப்படிப் பாலகனாக முடியுமெனப் புரியாமல் திகைப்பு கொண்டான். அவன் மனம் யுவனாக விழிப்புற்றே இருந்தது. அந்தப் பெண்கள் ப்ரிய காதலனைத் தேடியபடி காத்திருந்தனர் தான் பெண்களைத் துயில் கொள்ளச் செய்தான். அன்றும் அவன் படுத்த பிறகு தாகம் மிகுதியாகவே இருந்தது. மறுநாளில் விழித்துப் பார்த்தபோது பெண்கள் வயது கலைந்த சிறுமிகளாக இருந்தார்கள். நீலன் இப்போது உருமாறி யுவனாக விழித்தெழுந்தான். தங்கள் வயது கலைந்ததின் வியப்பில் விடுபட முடியாமல் வெட்கித்தவர்களாக ஒருவரையொருவர் பார்க்கக்கூட இயலாமல் போனபிறகு அந்தச் சயனமும் மூடப்பட்டது.

உத்கலாவின் சயன அறை என்னை வெகு நாள்களாகவே ஈர்த்தது. வரைபடங்களில் தேடி அலைந்து, துணை தேசாந்திரிகளிடம் கேட்டு அறிந்தவனாக ஓர் இரவில் நான் பிரவேசித்து நகரின் மைய வழியாக உள்ளே புகுந்து போனேன். சயன விடுதியில் நான்கு அறைகளும் சந்திக்கும் மைய அறையொன்று இருந்தது. சயன வாசம் கண்டவனாக நான் மையப் படுக்கையில் படுத்துக்கொண்டேன். விழித்தபோது நான் என் வீட்டின் படுக்கையில் படுத்துக்கொண்டேன். வியப்பு பிடிபடாமல் கேள்வியுற்றேன். உத்கலா என்னும் நகரம் வரைபடத்தில், நிலவெளியில் எங்கும் இல்லை என்றும், அது ஒரு சாயை எனவும் உங்கள், எங்கள் ஊரின் புறவெளியிலும், தொலைதூர மலையிலும் அறியாத பாதைகளின் நெருக்கத்திலும் அது தானே உருக்கொள்ளக் கூடியதென்றும், பார்ப்பவர்கள் கண்ணுக்குப் புலப்படக் கூடிய எந்த நிலத்திலும் கால் ஊன்றாத உத்கலா, ஒரு வண்ணத்துப் பூச்சியின் கால்களில் ஒட்டிக்கொண்டு பறந்தலைவதாகவும், எழுதப் படாத ஒரு வாக்கியத்தில் வந்தமரக் காத்திருப்பதாகவும் சொல் கிறார்கள்.

பகல் விளையாட்டு

கோடையின் நீண்ட பகலில் இந்திரபிரஸ்தத்தில் யுதிஷ்ட்ரனின் மாளிகையில் கிருஷ்ணை காத்துக் கொண்டிருந்தாள். புளிப்பேறாத கள்ளை அவள் குடிப்பதற்காகக் கொண்டுவந்த பெண் நின்று கொண்டேயிருந்தாள். கிருஷ்ணை குவளையை வாங்கி மிக மெதுவாக அருந்தினாள். யுதிஷ்ட்ரனின் குதிரைகள் வருகின்ற சப்தம் கேட்டது. அவள் தன் படுக்கையை விட்டு எழுந்து திரைச்சீலைகளை விலக்கி நடந்து குனிந்து கீழே பார்த்தாள். யுதிஷ்ட்ரன் எப்போதும் போல சலனமற்ற முகத்துடனும், ஸ்நேக பாவம் கொண்ட பேச்சுமாக வந்துகொண்டிருந்தான். தன் இருப்பில் சிறிதும் சலனமுறாத அந்த மனிதனின் செயல்கள் அவளை வசீகரிக்கவேயில்லை. மீதமிருந்த கள்ளைக் குடித்தபடி படுக்கையில் படுத்துக்கொண்டாள். அறையை நோக்கி யுதிஷ்ட்ரன் வரும் சப்தம் கேட்டது. அவள் மணமாகிஙச சில மாதங்களே ஆகியிருந்ததால் மதிய வேளையில் யுதிஷ்ட்ரன் அவளுக்கு அரச நியதிகளைச் சொல்லி வைப்பதற்காக வருவான். மற்றபடி இரவைத் தவிர எப்போதும் அவன் பெண்களின் அருகாமையைத் தவிர்த்துக் கொண்டேயிருந்தான். கிருஷ்ணை படுக்கையிலே இருந்தாள். புன்னகையும் மிருதுவான அந்தக் குரலும் அருகாமை வந்தது.

"கிருஷ்ணை நோவுகண்டிருக்கிறதா உன் கண்களில் செந்நிற ரேகைகள் ஓடுகின்றனவே?"

கிருஷ்ணை உஷ்ணமான தன் மூச்சுக் காற்றை அவன் மீது படரச் செய்தாள். அவன் பிரியத்தைக் கூடக் குலைவுறாமல் காட்டுபவனாக இருந்தான்

அவள் கைகள் யுதிஷ்ட்ரனின் விரல்களைப் பற்றிக்கொண்டே, வெயிலின் ததும்பலை அறிந்தவளாகச் சொன்னாள்,

"கோடையின் பகல் நீண்டது எனது தனிமையைப் போல." யுதிஷ்ட்ரன் மிக மெல்லிய புன்னகையிட்டான். நான்கு வகைக்கள், குடிக்கக் கொண்டு வரப்பட்டன. யுதிஷ்ட்ரன் வெளிர் துவர்ப்பு கொண்ட கள்ளைக் குடித்தான். அவள் இன்னொரு குவளை பருகினாள். பிறகு யுதிஷ்ட்ரன் தணிவான குரலில் கேட்டான்,

"இன்றைக்கு நியாய சாஸ்திரத்துக்குப் போகும் முன்பாக உனக்குப் பிடித்தமான எதையாவது விளையாடலாம்." அவள் இதைக் கேட்டதும் படுக்கையில் இருந்து எழுந்துகொண்டாள்.

யுதிஷ்ட்ரன் அவளிடம் சொன்னான், "பகடையாடலாமா?"

அவள் இதை யுதிஷ்ட்ரனிடமிருந்து எதிர்பார்க்கவில்லை. மிகுந்த ஆசை கொண்டவள் போலப் பலகையையும் பகடைகளையும் கொண்டு வரச் சொன்னாள்.

திரௌபதியும் யுதிஷ்ட்ரனும் பலகையை முன் வைத்துக் கொண்டனர். அவள் பகடையைத் தன் கைகளில் உருட்டும் முன்பாக, "என்ன பந்தயத் தொகை" என்றாள். அவன் சிரித்தபடி "தன்னிடமிருக்கும் மதுக்குவளைகள்" என்றான். அவள் கையிலிருந்த பகடை சுழன்றது. ஒரு குவளை கிருஷ்ணை வசமானது. யுதிஷ்ட்ரன் கைகளில் பகடை சுழன்றது. இந்த முறை அவன் "நூறு புரவிகள்" என்றான். யுதிஷ்ட்ரன் தோற்றான். கிருஷ்ணை மெதுவாகச் சிரித்தாள். யுதிஷ்ட்ரனும் சிரித்தான். பகடை உருண்டபடியிருக்க கிருஷ்ணைக்கு அடிமைகள், அஸ்வதங்கள், காலாட்படைகள், அரண்மனைகள், கிராமங்கள், நதிகள், படைக்கலன்கள், தானியக் குவியல்கள் என யாவும் வெற்றியாக வந்துகொண்டேயிருந்தன. முன்போல யுதிஷ்ட்ரன் சிரிப்பதை மறந்திருந்தான். அவன் கைகள் பகடைகளை இறுகப் பற்றியிருந்தன. கிருஷ்ணையின் சிரிப்பின் ஒலி அதிகமாகிக் கொண்டேயிருந்தது. அவன் தன் ராஜ்ஜியத்தை அவளிடம் முற்றாகத் தோற்றபோதும் வெளியே வெயில் குறையவில்லை. அவள் தன் குவளையில் இருந்த கள்ளைப் பருகினாள். பகடை அவள் கைகளில் உருண்டுகொண்டேயிருந்தது. இனித் தன்னிடம் பணயம் என்ன இருக்கிறது எனக் கேட்க, அவள் வேடிக்கையான குரலில் சொன்னாள்,

"உங்கள் சகோதரர்கள்."

அவன் கிருஷ்ணையின் கண்களைப் பார்த்தான். பரிகாசம் ததும்பிக்கொண்டிருந்தது. தனக்கு விருப்பமான வில்லாளியான பல்குணனை வைத்தாடினான். பகடை உருண்டு தரையிறங்கும் முன்பாகவே அவன் அவள் வசமானான். பீமனை, நகுலனை, சகாதேவனை எனக் கிருஷ்ணை தன் பகடையால் வசமாக்கினாள். இனி விளையாடும் தன்னைத் தவிர வேறு எதுவுமில்லை எனச் சொன்னான் யுதிஷ்ட்ரன். அவள் அளவற்ற போதையின் மீறுதலில்

இருந்தவளைப் போலச் சொன்னாள்,

"அது சரி... உங்களையும் என்னையும் பரஸ்பரம் வைத்தாடுவோம்"

யுதிஷ்ட்ரன் மறுக்கவில்லை. வெளியே வெயில் மறைந்து மாலை நீண்டுகொண்டிருந்தது. யுதிஷ்ட்ரன் தன் வஸ்திரத்தில் இருந்து ஒரு மஞ்சள் நிற நூலை உருவி எடுத்துத் தன்னையே பணயம் வைப்பதாகச் சொன்னான்.

கிருஷ்ணை தனது கூந்தலில் சூடிய மல்லிகைப் பூவில் ஒன்றைத் தனக்காக வைப்பதற்காகத் தலையில் விரலைச் சொருகியபோது ஒற்றைச் சுருள்முடி கைவசம் வந்தது. "அதையே பணயம் வை" என்றான் யுதிஷ்ட்ரன்.

இருவரும் சிரிப்பற்ற பேரமைதிக்குள் நின்றனர். பகடைகள் உருள் வதற்காகக் காத்திருந்தன. யுதிஷ்ட்ரன் பகடையை உருட்ட கிருஷ்ணை ஜெயித்துவிட்டாள். அப்போது அவள் சிரிப்பு மிகவும் வெறியோடியது போல இருந்தது. கோப்பையில் மீதமிருந்த கள்ளைக் குடித்து முடித் தான் யுதிஷ்ட்ரன். விளக்குகள் ஏந்திய அந்தப்புரப் பெண்கள் அறைக்குள் வந்தபோது யுதிஷ்ட்ரன் பகடையைச் சுழற்றி வெளியே எறிந்தான். மிகுந்த கோபத்தோடு எழுந்து வெளியேறப் போனவனின் முகம் கண்ட அவள் குரல் ஒடுங்கிற்று. நடுங்கும் குரலில் சொன்னாள்,

"எல்லாம் வேடிக்கை, வெறும் பகல் விளையாட்டு. ஒரு சொப்பனம். ஜெயித்த யாவும் உங்களுக்குத்தான். எனக்கு எதுவும் வேண்டாம்."

யுதிஷ்ட்ரன் அருகில் வந்து அவளை முத்தமிட்டான். ஆனால் அவன் கைகள் அணைத்துக்கொள்ளவில்லை. விசும்பும் அவளைத் தனியே விட்டுச் சென்ற யுதிஷ்ட்ரன் அந்தப் பகல் விளையாட்டினை ஒருபோதும் யாரிடமும் சொல்லவேயில்லை. மறக்கவுமில்லை.

சோர் பஜார்

நர்மதா நதியின் குறுக்கே அணை கட்டுவதற்கான தொடக்கப் பணிக்கு நான் நியமிக்கப்பட்டிருந்த நாள்களின் முதல் வாரங்களில் வீடு தேடியலைந்து நதி அருகாமை கிராமமொன்றின் தென்பகுதியில் இருந்த பழைய கல்முகப்புகள் கொண்ட காசிம் மன்சில் என்னும் வீட்டினைப் பிடித்து தனியே தங்கியிருந்த நாட்களில் எனது தனிமையைப் போக்கிக்கொள்வதற்காகவும், பால்யத்தினின்று தொடரும் கதை எழுதும் ஆசையைப் பூர்த்தி கொள்ள வும் வசதியாக ஒரு மேஜையை வாங்கிவந்தேன். அந்த மேஜை இரண்டு இழுப்பறைகள் கொண்டதாக இருந்தது. மிகக் குறைவான உயரமிருந்த அந்த மேஜை புதையுண்டு கிடந்த கல்லின் தோற்றம் கொண்டிருந்தது. நான் அதை வீட்டின் பின்பக்க அறையொன்றில், ஜன்னலைத் திறந்தால் நெல்லி மரம் தெரியும்படி அமைத்துக்கொண்டு எழுத விரும் பும் நாவலைத் தொடங்கியிருந்தேன்.

சில நாள்கள் அணைத்திட்ட வேலை மிக மெது வாக நடந்தது என்பதால் பகலில் எழுதிக்கொண்டிருப் பேன். எழுதாத நேரங்களிலும் அந்த அறையில் அமர்ந்தபடி என் வாலிப நாட்களில் எழுதிய காதல் கடிதங்களை வாசித்தபடியும் எனது பழைய டைரி களைப் பார்த்தபடியும் அமர்ந்திருப்பேன். தொலை வில் நெல்லிக் கிளையில் அரும்புகள் தெரிந்தன. அதன் மெல்லிய புளிப்பு நாவில் ஏறிக்கொண்டே இருந்தது. முதற் காதலின் வேகத்தை, அது தரும் கனவு சஞ்சாரங்களை நினைவு கொண்டபடியே இப்போது என் மனைவியாக இருக்கும் என் முதற்

காதலியைப் பற்றிய நினைவுகளில் அமிழ்ந்திருப்பேன். எப்போதாவது மனைவியிடமிருந்து வரும் கடிதங்களைத் தவிர எனக்கு இங்கு வேறு தகவல்கள் வந்து சேர்வதில்லை.

நதியோர கிராமங்களின் தொன்மையான தெருக்களில் எருமைகள் உலவி அலைகின்றன. அரபு தேச நகரங்களை நினைவுபடுத்தும் வீடுகளும் செம்பழுப்பு நிற சூரியனும் அடர்ந்த காற்றும் கொண்ட கிராமங்களில் நோயாளிகளும் வயோதிகர்களும் அதிகமிருந்தனர். காடியான மதுவின் கிறக்கம் போல ஒரு மஞ்சள் நிறவோட்டம் ஊரெங்கும் எப்போதும் பரவியிருந்தது. நான் என் காதல் கடிதங்களைப் பல காலமாகப் பாதுகாத்து வருகிறேன். பிள்ளைகள் வளர்ந்ததும் அவர்களுக்கு ஒரு சரியான நாளில் அதைக் கொடுத்து வாசிக்கத் தந்துவிட ஆசை கொண்டிருந்தேன். எந்த வயதில் கொடுப்பது என்று மட்டும் முடிவு செய்ய முடியவில்லை. அதே நேரம் நான் எழுதிக்கொண்டிருக்கும் நாவலில் எனது மூதாதையர் கிராமமொன்றில் வாசல் திறந்து கிடக்க அங்கே சர்ப்பம் உறவு கொண்ட ஒரு பெண்ணைப் பற்றிய கதையை எழுதிக்கொண்டிருந்தேன். எனது தலைமுறைதோறும் வீட்டின் மூத்தவன் சர்ப்பங்களால், எப்போதும் உயிர் துறந்தது நடந்து வந்தது. பால்யத்திலோ, வயோதிகத்திலோ என்றோ ஒரு நாள் சர்ப்பம் சீறி உயிரைக் குடிக்கும் நிகழ்வு தொடர்ந்தது. இது என் பின்னாலும் வருவதாக வீட்டோர் நம்பினார்கள். நான் இதை எனது எழுத்தின் வழி கடந்துவிட முடியுமென நம்பிக்கை கொண்டிருந்தேன்.

மேஜைக்கும் எனக்குமான ஓர் ஈர்ப்பு தொடர்ந்துகொண்டே இருந்தது. இழுப்பு அறை ஒன்றில் எழுதிய நாவலின் பிரதிகளையும் மற்றொரு பகுதியில் டைரி, காதல் கடிதங்களுமாக வைத்து மூடியவனாக நிலவியல் ஆய்வாளர்களோடு பல மைல் தூரம் சுற்றியலைந்துவிட்டு வருவேன். பின்னிரவுகளில்கூடத் தனியாக மேஜைக்கு வந்தமர்ந்து எழுதாமல் இருப்பதேயில்லை. வாரத்தின் சில நாள்கள் கேம்ப் போய்விடும் நான், ஒரு நான்கைந்து நாள்களுக்குப் பின்பாக ஓர் இரவு திரும்பியபோது ஊரில் கடுமையான மழை பெய்திருக்க வேண்டும் போல் இருந்தது. மழையில் வீடு ஒழுகி எங்கும் தண்ணீர் தேங்கியிருந்தது. தரை பெயர்ந்துவிட்டிருந்த அறையின் தளத்தில் ஒரே சொதிப்பு ஏற்பட்டிருந்தது. மேஜையைத் திறந்து நான் எழுதிய பக்கங்களைப் பார்த்தேன். அதில் எந்த நனைவுமில்லை. மேஜையை மூடிவிட்டுத் தரையில் தேங்கிய தண்ணீரை உலர்த்துவதற்காக, இரண்டு பணியாள்களை வரவழைக்கச் சென்றேன். சில நாள்கள் வரை வீட்டில் ஈரம் இருந்துகொண்டே இருந்தது. எந்த அறையிலும் நடமாட முடியவில்லை.

இதற்குள் அணைத்திட்ட அறிக்கையின் பொருட்டு தலை நகருக்குச் செல்ல வேண்டியிருந்ததால் மேலும் இரண்டு வாரங்கள் நான் வீடு தங்க முடியாமல் போய்விட நேர்ந்தது. திரும்பி வந்தபோது

மஞ்சள் வெயில் ஓடிய சாந்தமான தெருக்கள் அமிழ்ந்திருந்தன. நான் என் வீட்டின் கதவைத் திறந்து உள்ளே போனபோது நடையெங்கும் அகன்ற பாதச் சுவடுகள் உலர்ந்து தெரிந்தன. என் தனியறைக்குச் சென்று மேஜையின் முன் அமரும் ஆசையில் நடந்து சென்றேன். அறையின் கதவைத் திறந்தபோது நான் பார்த்தது, எனது மேஜையின் நான்கு கால்களும் பின்னிக்கொண்டு ஒன்றாகியிருந்தன. அவை ஒன்றுதிரண்டு தரையில் வேரோடிக் கிளைத்திருந்தன. மேஜையின் அடிப்பாகம் ஒரு விருட்சமாகியிருந்தது. ஆனால் மேஜையின் சதுரம் மட்டும் அப்படியே மாறாது இருந்தது. ஒரு விருட்சத்தின் மீது கையூன்றி எழுதிக்கொண்டிருக்கிறேனா என்ற வியப்புடன் நான் அவசரமாக எனது இழுப்பறையைத் திறந்தேன். அந்த மேஜையின் இழுப்பறைக்குள் பச்சையத்தின் வாசம் கிளர்ந்தது. நான் வியப்பும் தாள முடியாத ஈர்ப்பும் கொண்டவனாக அந்த மேஜையின் கால் பகுதியைத் தடவிப் பார்த்தேன். அதன் வேர்கள் தரையெங்கும் விரிவுகொண்டு ஓடியிருந்தன. சப்திக்கும் நீரோடை போல விருட்சத்தினுள் பச்சை ரசம் ஓடிக்கொண்டிருப்பதை உணர்ந்தேன்.

விருட்சமானபோதும் அது என் மேஜையாகவே இருக்கிறது என மன சமாதானம் கொண்டபடி அதன் முன் எனது நாற்காலியை நகர்த்திக்கொண்டேன். எழுத மனம் கூடவில்லை. சில நாள்களுக்குள் நான் விடுப்பு எடுத்தவனாக அந்த அறையிலேயே இருந்தேன். விருட்சம் வளர்தலில் இருந்தது. அதன் கண்ணுக்குப் புலனாகாத கரங்கள் வெளியைத் துண்டித்துக்கொண்டிருந்தன. தினமும் மேஜையை கவனித்து வருவதே முக்கிய வேலையாக இருந்தது. ஒரு நாளில் ஊரில் இருந்து மனைவியின் கடிதம் வந்திருந்தது. அவள் நெடுநாள்களாக நோயுற்று இருந்த அத்தையின் மரணச் செய்தியை அனுப்பியிருந்தாள். ஊருக்குப் புறப்பட்டுப் போய்வருவது மிகப் பெரிய வேலை. இருந்தும் இரண்டு நாள் பயணித்து ஊர் வந்து சேர்ந்தேன். இரண்டு வாரத்தில் பணிக்குத் திரும்பியபோது வீட்டில் எனது மேஜையை விழுங்கி ஒரு மரம் வளர்ந்திருந்தது. எனது மேஜை இருந்ததற்கான எந்தச் சுவடுமேயில்லை. சிறிய விருட்சமொன்று தலை கவிழ்ந்தபடி நின்றுகொண்டிருந்தது. இப்போது என் நாவலின் பிரதிகளும் காதல் வரிகளும் விருட்சத்தின் அடிவயிற்றில் சேகரமாகி விட்டனவா. விருட்சம் தன்னைத் தானே பின்னி வளர்ந்திருந்தது. அதன் கிளைகள் வேறு வேறு பக்கமாக விரிந்து கிளைத்திருந்தன. அதில் இப்போது அதிக இலைகளில்லை.

அறையினுள் வளர்ந்த விருட்சத்தின் அடியில் அமர்ந்து கொண்டபடி நான் எழுதி வைத்திருந்த காகிதங்களும் காதல் வாசகங்களும் இனிவரும் நாளில் என் மனத்தின் தொலைவில் புதைந்த நேசத்தினைச் சிற்றிலைகளாக உருமாற்றி, காற்றில் ஆடக் கூடுமோ என யோசித்துக் கொண்டிருந்தேன். இனி நான் செய்ய வேண்டியது என் பிள்ளைகளை இந்த மரத்தடிக்கு அழைத்து வந்து அமரச் செய்வதுதான். அவர்கள் வந்தமரும்போது மரம் எனது காதலை, கற்பனையை தனது ஆயிரம்

இலை கொண்டு விசிறிக் காட்டுமல்லவா. இனி காற்று என் எழுதி முடிக்கப்படாத வரிகளை மெல்ல வாசித்து அலையும் என்பதே சந்தோஷத்தின் உச்சமாக இருந்தது.

என் மேஜை விருட்சமானதை எவரிடமும் சொல்லவேயில்லை. எழுத்தின் அறியாத ரகசியம் போல அது என்னிடமே புதையுண்டது. சில வாரங்களில் அந்த விருட்சத்தில் புது இலைகள் அரும்பத் தொடங்கியிருந்தன. நீளமான இலைகள், செம்மையும் வெளிர் கறுப்பும் கலந்த இலைகள். அந்த இலைகள் கிளை தெரியாமல் அரும்பி தரைநோக்கிக் குவிந்திருந்தன. அந்த மரத்தின் அடியில் படுத்தபடி விரல் அசைத்து உயரே பார்த்துக் கொண்டிருப்பேன். என் நாவலின் முடிவுறாத வரிகளின் நிசப்தம் மட்டுமே விருட்சத்திடம் இருந்தது. அணைக்கட்டுத் திட்டத்தின் வேலைகள் அதிகமாகின. இரவின் வேறு வேறு விழிப்புகளில் வீடு வந்து கொண்டிருந்தேன்.

ஒரு நாள் பின்னிரவில் நான் வீடு வந்து சேர்ந்தபோது அறையின் திறந்த கதவு வழியாகக் குளிர்மை ததும்பி வெளியே வந்துகொண்டிருந்தது. கோடையில் அந்த விருட்சம் மலர்ச்சி கொண்டிருந்தது வியப்பாக இருந்தது. நான் களைப்பின் பிடியில் படுக்கையில் விழுந்தபோது எங்கிருந்தோ பறவைகளின் குரல் ஒலியும் இடைவிடாத சிட்டுக்களின் சப்தமும் கேட்கத் தொடங்கின பறவைகள் எண்ணிக்கையற்று வந்துவிட்டதோ எனப் பார்க்க, மரத்தில் பறவைகள் எதுவுமில்லை. ஆனால் பறவைகளின் குரல் மட்டும் ததும்பிக் கொண்டிருந்தது. இலைகளுக்குள் ஒளிந்த குரல்கள் போல எங்கெங்கிருந்தோ குரல்கள் வெளிப்பட்டன. நான் அந்த அறையிலேயே படுத்துக் கிடந்தேன்

ஊரிலிருந்து விடுமுறைக்கு என் மனைவியும் பிள்ளைகளும் வந்து சேர்ந்தனர். அவர்களிடம் வீட்டை ஒப்படைத்துவிட்டு அன்றைய மாலை வரை அலுவலகத்தில் இருந்துவிட்டு வீடு திரும்பினேன் அறைக்குள் பறவைகள் குரல்கள் அடங்கியிருந்தன. மனைவி ஒரு அறையில் மரம் முளைத்துத் தரையெங்கும் வேர்விட்டதன் இடிபாட்டைக் குறையாகச் சொல்லிக்கொண்டிருந்தாள். அது விருட்சமல்ல என்றும் சோர் பஜாரில் நான் வாங்கிய மேஜை என்றும் சொன்னதை எவரும் நம்பவில்லை. அவர்கள் என் தனிமையின் கற்பனையாக அதைக் கொண்டார்கள் அவர்கள் இருந்த நாள்களில்கூட நான் அந்த அறைக்குள் யாவரையும் அழைத்தேன். எவருக்கும் அதில் விருப்பமேயில்லை. தனியனாக அந்த நிழலற்ற மரத்தின் அடியில் நான் இருந்தேன். எழுதுவதை நிறுத்திய எனக்கு அந்த மேஜை விருட்சம் ஆறுதலைத் தருவதாக இருந்தது. மூன்று வாரங்களுக்குப் பிறகு ஒரு நாள் அலுவலகத்துக்கு எனக்கு வந்த தொலைபேசியில் மனைவி அவசரமாக வீடு வரச் சொல்லி, நான் சென்றபோது விருட்சத்தின் எல்லாக் கிளைகளிலும் இருந்து இலை முகப்பினின்று தண்ணீர் சொட்டிக்கொண்டிருந்தது.

மழைக்காலம் இல்லாத வேளையில் தொடர்ந்து பெய்யும் மழை

யால் நீர் சொட்டும் தாவரமாக அது உருமாறியிருந்தது. தண்ணீர் வீட்டுக்குள் ஓடுவதால் இதை வெட்டிவிட வேண்டுமென யாவரும் சொன்னபோது நான் மறுத்து அவர்களை ஊருக்கு அனுப்பிவிடத் திட்டமிட்டேன். என் பணியாள்களில் இருந்த ஒரு முதியவன், தான் இதுபோன்றதொரு மரத்தினைக் கண்டிருப்பதாகவும், இவை இங்கே இருப்பதில்லை என்றும் தொலைதூரத்துக்கப்பால் உள்ள தோதுவா மலையின் அடியில் இவை தென்படுகின்றன என்றும் அது ஆயிரம் மைல் தொலைவுக்கு அப்பால் இருப்பதாகவும் சொல்லி அந்த விருட்சம் இங்கே எப்படி முளைத்திருக்கிறது என வியப்போடு கேட்டான்.

தொலைவில் எங்கோ ஏற்படும் காலமாற்றம் இந்த விருட்சத்தை அதன் தொடர்ச்சியில் வைத்துச் சுழற்றுகிறதோ எனப் புரியாமலிருந்தேன். இலைகள் உதிரத் தொடங்கின. பின் அது வளரவேயில்லை. மரம் மகா மௌனத்தினுள் புதைவு கொண்டது. எனது வாசகங்கள் நிரம்பிய அதன் அடிவயிறு எதையும் வெளிப்படுத்தவேயில்லை. நான் ஒரே நேரத்தில் துயரமும் சாந்தியும் பெற்றேன்.

கட்டுமானப் பணிகளின் தொடக்கத்திலே ஏற்பட்ட எதிர்ப்புகளும், சூழலும் அணைத்திட்டத்தினைத் தள்ளிப் போட்டன. நாங்கள் ஊர் திரும்ப வேண்டிய காலம் வந்தது. யாவரும் ஊர் திரும்பினோம். நான் விருட்சத்திடம் இருந்து விடைபெற்றுக்கொண்டேன் பின் நான் நதித்திட்டப் பணிகளுக்குத் திரும்பிப் போகவேயில்லை. நீண்ட வருடத்தின் பின்பு அந்தத் திட்டம் கைவிடப்பட்டுப் போகவே, என் சொந்த வேலையின் காரணமாக அதே ஊருக்குப் போனபோது அந்த வீடும் கட்டடங்களும் இடிந்து கிடந்தன. பின்னறையில் நான் வாங்கிய மரம் மட்டும் அப்படியே இருந்தது. அது வளரவுமில்லை, துளிர்க்கவுமில்லை. அதன் அருகாமைக்குச் சென்றபோது துளையிட்டு வண்டுகள் மரத்தினுள் புகுந்து வெளிக் கடந்து சென்றன. சிறிய துளையின் வழியே என் கண்களைப் பதித்துப் பார்த்தேன். உலர்ந்திருந்தது. பின் அந்தத் துளையில் கையை விட்டுத் துழாவியபோது எதுவும் அகப்படவில்லை. வெம்மை மட்டுமே பெருமூச்சு போலக் கைகளில் படிந்தது. வெளியே இழுத்துக்கொண்டு புறப்பட விலகிய போது கைகளைத் திருப்பிப் பார்த்தேன். விரல்களிலும் கையின் நடுவிலும் உலராத மையின் கறை படிந்திருந்தது. விரலால் தொட்ட போது மையின் பிசுபிசுப்பு உலராமலிருந்தது.

நாளங்காடி பூதம்

நாளங்காடி பூதத்தினைப் பற்றி நான் சொற்பமே அறிந்திருந்தேன். நகரின் வணிக வீதிகளையும், தினசரி சந்தையையும் காவல் செய்வதற்கான பூதமாக அது நியமிக்கப்பட்டிருந்தது. மனிதர்களின் சராசரியான உருவத்தினைவிடவும் பெரியதாக பலசாலியாக இருந்த அதன் நாசி வாசனைகளின் துல்லியம் அறியுமென்றும் அதன் நாவு தராசின் நடுமுள்ளைப் போன்றதென்றும் அதன் கண்களின் நீள்பரப்பில் காட்சிகள் ததும்பிக் கரையேறுகின்றன என்றும் வணிகர்களில் சிலர் நினைவுகூர்ந்தபோது சமீபத்திய காலங்களில் அதனை வெளியே நடமாடக் கண்டவர் எவருமில்லை. ஒருவேளை மூப்புகூட அது இறந்து போயிருக்கலாம் என்றும் சொல்லிக் கலைந்தனர்.

இடையுறாது சப்தம் மிதந்து அலையும் சந்தையின் குறுகிய சந்துகளுக்குள் நாளங்காடி பூதத்தினைத் தேடிக்கொண்டிருந்தேன். நடைபாதை வியாபாரிகளின் வாசனை வீசும் பழங்களையும் திராட்சை ரசம் படிந்து கரையேறிய கல்படிகளையும் தாண்டி, பலரிடமும் விசாரித்து அலைந்தபோது நாளங்காடி பூதத்தின் வீடு சந்தையின் ஏதோ ஒரு இடிபாடுள்ள மணிக்கூண்டின் கீழ் அறையென நினைவுகூர்ந்த வயசாளிகள்கூட அது வெளியே நடமாடியே பல காலமாகிவிட்டது என்றார்கள். பசுக்கள் நிசப்தித்து நின்ற வளைசந்துகளுக்குள்ளாக மணிக்கூண்டு எங்கேயிருக்கிறது எனப் பார்த்தபடி வந்தேன்.

வணிக வீதிகள் காலையிலே இயக்கம் கொள்ளத் தொடங்கிவிடுகின்றன. வெவ்வேறு நகரங்களில் இருந்து வரும் மனிதர்களின் கூக்குரல்கள் பிறக்கத்

தொடங்கும்போது நாளங்காடி பூதத்தின் செவி அசைவு கொள்ளும். அதன் கண்களில் தப்பி எந்தக் கள்ள வியாபாரியும், ஒற்றைப் பதர் கொண்ட தானியம்கூட வணிக வீதிக்குள் விற்க முடிவதில்லை. நாளங்காடி பூதத்தின் குரல் தொலைதூரப் பறவையின் குரலைப் போல மயக்க மூட்டுவது. அது ஒரு சில சொற்களை மட்டுமே அறிந்திருந்தது. அதில் சிலதை தனக்கு ப்ரியமானதொரு உயர்குரலில் கத்திடும் போது சந்தையின் வியாபாரிகள் பலரும் தத்தமது வேலை மறந்து செவி கொடுப்பார்கள். நாளங்காடி பூதம் எதையும் உண்பதில்லை என்றும், தனக்குரிய உணவாகத் தண்ணீரை மட்டுமே குடித்து வாழக்கூடியதென்றார்கள். நாங்காடி பூதத்தின் காவல் நியமனம் பெற்றது முதல் நாளிலே அது சந்தையின் தெற்குப் பகுதியில் ஐந்து முகமுள்ள ஒரு சிம்மம் போன்றதொரு உருவத்தினைக் கொண்ட நீரூற்றினை உருவாக்கியது. அதன் ஐந்து நாவில் இருந்தும் பகல் இரவெனத் தண்ணீர் காற்றேறி சரிந்துகொண்டிருக்கும். தொலை தூரவாசிகளின் உலர்ந்த நாவு குளிர்ச்சி ததும்பும் நீரூற்றில் உதடுபட்டுக் குளிரும்போது ஏற்படும் முகவிரிச்சியைக் கண்டுகொண்டேயிருக்கும். தனக்கான தினசரிச் செயலாக அது வணிக வீதிகளின் நெடிய பாதைகளில் தன் அகன்ற பாதங்களுடன் நடந்து வரும். வணிகர்களில் பலரும் அதன் கண்களை நேர்கொண்டு பார்ப்பதையும்கூட முடியாமல் தலை கவிழ்கிறார்கள். நாளங்காடி பூதத்தின் நாவு துண்டிக்கப்பட்டே தராசின் நடுமுள்ளாகியிருக்கிறதென்றும் அதனால் அது குறையுடைய நாவுள்ளதென்றும் பின்பு அந்நாவு வளரவேயில்லை என்றார்கள்.

வணிக வீதிகளின் காப்பறைகள் எப்போதும் பிசுபிசுப்பேறிய இருட்டும் தானிய வாசனையும் கொண்டிருக்கும். அந்தக் காப்பறைகளின் பின்வழிகளில் திரி விளக்குகளின் முன் சூதாடுபவர்களும், கள்ள பேரம் பேசும் சிலரும் காத்துக்கொண்டேயிருப்பார்கள். அவர்கள் தங்களுக்குள்கூடப் பேசிக்கொள்வதில்லை. தங்கள் விரல்களைத் துணியால் மூடி பரஸ்பரம் ஸ்பரிச சமிக்ஞை கொள்வதன் வழியே கள்ள பேரம் பேசிக்கொண்டிருந்தார்கள்.

நாளங்காடி பூதத்தின் விழி கள்ள வணிகத்தில் ஒரு எள்கூட வெளியேற முடியாததாக இருந்தது. சந்தைக்கு வரும் பெண்களையும் கிராமியக் கூடைக்காரிகளையும், அது தன் பாதி நாவால் பரிகசித்தது. என்றாலும், குழந்தைகளும் வயசாளிகளும் சுமைகள் தூக்கிக்கொண்டு வருவதை, அது அனுமதிப்பதேயில்லை.

பூதம் வணிக வீதியின் அகன்ற முன் கதவைக் காலையில் திறந்து வைத்து, மிகப் பெரிய கூண்டின் படிகளில் ஏறி பலம் கொண்ட மட்டும் கயிற்றால் மணியைச் சப்தமாக எழுப்பச் செய்யும். சந்தை வீதிகளில் உறங்கும் கழுதைகளையும், நாய்களையும் எழுந்து போகச் செய்யும். வணிகச் சந்தைகள் உயிர்ப்பு கொள்ளத் தொடங்கிய பின் அது புலன்களைத் திறந்து வைத்திருக்கும்.

பீர்க்கங்காய்களையும் கொய்யாப் பழங்களையும் கொண்டுவரும் பெண்கள் பால்யம் கலையாத தங்கள் குழந்தைகளை நாளங்காடி பூதத்தின் முன் விட்டுப் போவார்கள் அது அவர்களின் கைகள் காற்றில் எதையோ பற்றிப் பறிப்பதைக் கண்டு குதூகலிக்கும்.

நாணயங்களின் சிதறல் ஓசை பகலில் பெருகியபோது நீரூற்று நோக்கி நடந்து வரும் அற்பத் திருடர்கள்கூட தங்கள் நாவால் தண்ணீரை ருசித்துவிட்டுக் காலடி ஓசை அறியாமல் நடந்து போவார் கள். இரவில் தனித்திருக்கும்போது நாளங்காடி பூதத்துக்காக மீத மிருக்கும் பொருள்களைத் தந்து போவார்கள் வணிகர்கள். மாலை ஒய்ந்த பிறகு வீடு திரும்பும் சிறார்களுக்குக் கறுத்த திராட்சைப் பழங்களையோ, இளம் தானியக் கதிரையோ, உலர்ந்த பழங்களையோ பூதம் அவர்களின் ஓலைக் கொட்டான்களில் போட்டு அனுப்பும். பின் அது சந்தையின் பெரிய கதவை இழுத்து மூடிக்கொண்டுவிடும். வியாபாரம் இரவில் அனுமதிக்கப்படுவதேயில்லை. இரவு கூடி வந்ததும், குழந்தைகளும், கிழட்டுப் பூனைகளும் சந்தையின் மைய வெளிக்கு வந்து சேர்கின்றன. நட்சத்திரங்களைப் போல அவை தனியே படுத்துக்கொள்ளும். விநோதம் கூடிய இரவில் எப்போதாவது நிலவு கூடி ஒளிரும்போது நாளங்காடி பூதம் மிகுந்த வெட்கமுற்றதாக ஒளியின் வசீகரம் தாளாது மணியின் நீண்ட கயிற்றை முத்தமிட்டுக் கொண்டோ ஐந்து நாவால் தண்ணீர் பீய்ச்சும் நீரூற்றில் உதடு சுவைத்தும் அது நடனமிடும். நாளங்காடி பூதத்தின் நடனத்தினைக் காண்பதற்கு ஓடிக்கொண்டிருக்கும் எலிகளையும், விழி மூடாத ஆந்தைகளையும் தவிர யார் இருக்கிறார்கள்?

நாளங்காடி பூதத்தின் காவல் நாள்களில் ஒன்றில் சமவயதுடைய ஒரே முகச்சாயலும் கூந்தலும் கொண்ட இரு பெண்கள் சந்தைக்கு வந்திருந்தார்கள். அங்கிருந்த பெண்களைப் போல தலைமயிர் கறுமை கொள்ளாமல் செம்பட்டை நிறமும் சுருள் முடிச்சு கொண்டது மாக இருந்தது. அந்தப் பெண்களின் கண்கள் உருகிய பனியைப் போன்றதொரு வெண்ணிறம் கொண்டிருந்தன. இரு பெண்களும் நெடும் தூரம் நடந்து வந்திருக்கக்கூடுமென பூதம் கண்டது. அவர் கள் நீரூற்றின் முன் தங்கள் முகத்தைக் காட்டியவாறு சில கணங்கள் அசைவற்று இருந்தபோது தண்ணீருடன் ஏதோ ரகசியம் பேசுபவர்கள் போல இருந்தது. பின் இரு பெண்களும் வணிக வீதியின் குறுக்குச் சந்துகளில் சுற்றி அலைந்தனர். எதையோ தொலைத்துவிட்டுத் தேடுபவர்கள் போல இருந்தனர். தங்கள் கைகளுக்கு சப்தமிடும் வளையல்கள் வாங்கிக்கொண்டனர்.

பின் அந்த இரட்டையர்களான பெண்கள் வணிக சதுக்கத்தில் நீரூற்றை ஒட்டிய மேடையில் ஏறி நின்றவர்களாகச் சந்தைக்கு வந்து போகின்றவர்களை நோக்கிக் குரல் கொடுத்தார்கள் பட்சிகளின் குரலைப் போல அவைதான் எத்தனை மிருது. நாளங்காடி பூதம் எழுந்துகொண்டது. அது சந்தையின் நீரூற்று இடத்துக்கு வந்தபோது

இரண்டு பெண்களில் ஒருத்தியின் குரல் கேட்டது.

அவள் உரக்கக் கூவி, தனது சிரிப்பை விற்றுக்கொண்டிருந்தாள். சிரிப்பின் விலை மிக சொற்பமென்றும், தனது சிரிப்புக்கு ஈடாக ஒரு சோளக் கதிரையோ, ஒரு பிடி முத்தோ, ஒரு பிடி நெல்லோ, ஒரு மரவை உப்போ எதையும் தரலாம் எனச் சப்தமிட்டாள். அவள் சிரிப்பை வாங்கிப் போவதற்காக வணிக வீதிகளில் இருந்து ஆண்களும் பெண்களும் நிரம்பியிருந்தனர். இரட்டையர்களில் மற்றவளின் குரல் கேட்டது. அவள் தனது அழுகையை விற்றுக்கொண்டிருந்தாள்.

'அழுகை உலகிலேயே மிக விலை கூடியது. அழுகையின் ஒரு துளியைப் பெறுவதற்கு நூறு முத்துகள், நூறு குதிரைகள், நூறு சொர்ண வில்லைகள், நூறு பை நாணயங்கள், நூறு நட்சத்திரங்கள் அல்லது ஒரு நதி, ஒரு மலை, ஒரு சமுத்திரம் இதில் எதையும் தந்து வாங்கிப் போகலாம்' என்றாள்.

அவள் இதைச் சொல்லும் குரலில் மிதமிஞ்சிய துயரின் வடு இருந்தது. அவள் கண்கள் வேதனையில் ததும்பிக்கொண்டிருந்தன. அவள் இமைகள் நீர்த்திருந்தன. கண்ணீரின் ஒரு துளி இமையில் உருண்டுகொண்டிருந்தது. அவள் முன்பாக அழுகையை வாங்குவதற்காக எவரும் வரவேயில்லை. அவள் தன் குரலை இடைவிடாது சொல்லிக்கொண்டே இருந்தாள். நாளங்காடி பூதத்துக்கு இவர்களின் செய்கை புரியவேயில்லை. பின்பு மாலையில் எழுப்பிய நீண்ட மணியோசையில் சந்தை அடங்கிப்போனது. சிரிப்பை விற்றுக்கொண்டிருந்த ஸ்திரியின் முன்பாக மாலைக்குள் கனிகளும் காய்களும் தானியங்களும் உப்பும் நெல்லும் குவிந்திருந்தன. அழுகையை விற்றுக் கொண்டிருக்கும் ஸ்திரியின் முன்பாக விரிக்கப்பட்ட வெண் நிறமான வஸ்திரம் காலியாக இருந்தது. அவர்கள் தங்கள் வேலை முடிந்து விட்டது போலக் கிடைத்த பொருள்களை சமமாகப் பங்கு போட்டுக் கொண்டு சந்தையை விட்டுஅகன்றனர். நாளங்காடி பூதம் தான் முன் ஒருபோதும் அறிந்திராத அந்தப் பெண்களின் வியாபாரத்தினைக் கண்டு திகைப்பு கலையாமல் அவர்கள் போகும் பாதையினைக் கண்டபடியிருந்தது. அவர்கள் இருவரும் அவசர நடை கொண்டவர்களைப் போல வெகுவாக சந்தையை விட்டு அகன்று கலைந்தனர்.

அன்றைய இரவில் நகரில் விநோதமான சப்தங்கள் எழும்பின. உறக்கம் கொள்ளாது எவரோ சிரிக்கும் சப்தம் கேட்டபடியிருந்தது. உரத்த சிரிப்பு விட்டு விட்டு கேட்டுக்கொண்டேயிருந்தது. இந்தச் சிரிபொலியின் வேகம் கண்ட முந்தைய நாள்களைவிடவும் அதிகமான கழுதைகளும் நாய்களும் சந்தை மைதானத்துக்குள் வந்து நிசப்தம் கொண்டன. பூனைகள் இருப்புக் கொள்ள முடியாது தட்டழிந்தன. எப்போது அந்தச் சிரிப்பு அரும்பி மலர்ந்து நிசப்தித்தது எனத் தெரியவில்லை. பின்னிரவில் நாளங்காடி பூதத்தின் மீது காற்று கவிந்தபோது மற்ற நாள்களைவிடவும் அதன் கடுமையும் கனமும்

கூடியிருப்பதைக் கண்டது. மறுநாள் அந்த ஸ்திரிகள் இருவரும் தாமதமாகவே வந்தனர். இருவரில் சிரிப்பை விற்பவள் ஈரம் உலராத கூந்தலினள். அப்போதுதான் நீர்நிலையினின்று வெளிப்பட்டவள் போல மினுப்பு கொண்டிருந்தாள். அழுகையை விற்பவளோ அசதி மிக்கவளாக இருந்தாள். அன்றைக்கு சந்தைக்குத் திரும்பிய வணிகர்கள், பொது ஜனங்கள் யாவரும் மிகுந்த ஆரவாரம் கொண்ட முகத்தோடிருந் தார்கள். இயல்பைவிடவும் அவர்கள் கண்கள் விரிந்திருந்தன. முகம் படர்ந்திருந்தது. அவர்களின் குரல்கள் கூட வேகம் கூடியிருந்தன.

ஒரே சமயத்தில் இரு பெண்களும் வியாபாரத்தினைத் தொடங்கு வதற்கான தங்களின் விரிப்பை விரித்தனர். சிரிப்பை விற்பவள் தன் மென்குரலில் சொல்லத் தொடங்கினாள். 'ஒரு சாமைக்கதிரோ, ஒரு கட்டு வெற்றிலையோ, ஒரு மாதுளம் பழமோ, ஒரு குவளைப் பாலோ, ஒரு மரவை மாவுக்கோ' தன் சிரிப்பை விற்பதாகச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

அவள் முன் ஜனத்திரளின் கூக்குரல் முண்டியது. அவள் சிரிப் பினை சோழிகளைப் போல எதிரே சிதறவிட்டாள். அதைத் தன் வசமாக்கிக்கொண்டவர்களாக வீடு போனார்கள்.

முந்திய நாளை விடவும் இன்று அழுகையினை விற்கும் ஸ்திரியின் குரல் கனம் கூடியிருந்தது. தனது அழுகையின் ஒரு எள்ளளவு பெற இன்று ஆயிரம் சொர்ணப் பூக்களும், ஒரு கடுகளவு பெற ஆயிரம் வெண் குதிரைகளும், ஒரு நெல் அளவு பெற ஓராயிரம் ரத்தினங்களும் ஈடு தருவார் இருந்தால் தரக்கூடுமென்றாள்.

அன்றைக்கும் அழுகையை விற்பவளுக்கு முன் எவரும் வரவில்லை. மாலை நெருங்கும் முன்பாகவே அந்தப் பெண்கள் வீடு கிளம்பத் தயாராக இருந்தனர். சிரிப்பை வாங்கிப்போக முடியாத பெண்களும் ஆண்களும் முகபாவம் மாறியவர்களாகக் கலைந்தனர்.

நாளங்காடி பூதம் அவர்கள் யாரென விசாரித்து அறியச் சென்ற போது, தொலைதூரவாசிகளான அவர்கள் இரட்டையர்கள் எனச் சொல்லிப்போயினர்.

அன்றிரவு, முதல் நாளைவிட மிகுதியான சிரிப்பொலி நகரமெங்கும் இடைவிடாது கேட்டுக்கொண்டேயிருந்தது. நாளங்காடி பூதத்தினால் உறங்க முடியவில்லை. சந்தை மைதானத்துக்குள்ளிருந்த விலங்குகள் கூட நடுக்கம் கொள்ளத் தொடங்கிவிட்டன. சில வாரங்களுக்குள்ளே அந்தப் பெண்கள் சந்தையின் பிரதானிகளாகிவிட்டனர். இரு பெண் களையும் கண்காணித்தபடியே இருந்த நாளங்காடி பூதம் இவர்களின் வியாபாரம் முறையாக நடக்கிறதா இல்லையா எனத் தீர்மானிக்க முடியாததாக இருந்தது. ஒவ்வொரு நாளும் சிரிப்பை வாங்கிப் போகின்றவர்கள் காலை திரும்பும்போது மிகச் சிடுசிடுப்புடன் அவசரமாகச் சிரிப்பை வாங்க வந்தனர். இரவு பெருஞ்சிரிப்பின் கூடாரமாகியது.

சில நாள்களுக்குப் பிறகு அந்தப் பெண்கள் இருவரும் ஒரு நாளின் காலையில் சந்தைக்கு வருவதை நிறுத்திவிட்டார்கள். அவர்கள் வராத நாளில் சிரிப்பை விற்பவளிடமிருந்து வாங்கிப் போக வந்தவர்கள் மிகுந்த ஏமாற்றத்துடன், கோபமுற்று பரஸ்பரம் அடித்துக்கொண்டனர். வணிகர்களில் பலர் ஆத்திரம் பெருக சப்தமிட்டனர். சந்தை வன்களமா யிற்று. நாளங்காடி பூதத்தின் சமாதானக் குரலைக் கேட்பதற்கும் எவருமில்லை. பலரும் அந்தப் பெண்களைத் தேடித் திரும்பக் கொண்டுவருவது பூதத்தின் வேலை என்றார்கள். நாளங்காடி பூதம் தான் சந்தையிலிருந்து விலகி நகரினுள் போக அனுமதியில்லை என்றது. நாள்கள் செல்லச் செல்ல யாவரும் அந்தப் பெண்கள் வராமல் போனபிறகு கனிகள் சுவையிழந்து போயிருப்பதையும், தானியங்களில் கசப்பு பீறிடுவதையும், தராசின் முட்கள் நிம்மதியற்று அலைக்கழிவதையும் கண்டு புலம்பினர்

இரட்டை ஸ்திரிகள் வராத இரவில் நாளங்காடி பூதம் ஊரில் ஊளையிடும் சப்தத்தினையும் கேட்டது. உறக்கமற்று மனிதர்கள் எழுப்பும் ஓசை நரியின் தொலைதூரச் சப்தம் போலவே இருந்தது. விகாரமான ஒலிகள் ஊரில் மிதந்து வந்தன. தெருவில் மனிதர்கள் இருளிலும்கூட நடந்து அலைந்தனர். நாளங்காடி பூதத்தினால் அவர்களின் கூக்குரலினைத் தாங்க முடியவில்லை. சவக்கூத்தைப் போன்றதொரு தாள முடியாத கூச்சல்.

விடிவதற்காகக் காத்திருந்த பூதம் முதன்முதலாகச் சந்தையை விட்டு நகரின் அகன்ற வீதிகளில் அந்தப் பெண்களைத் தேடிக்கொண்டு சென்றது. உறக்கமற்ற கண்கள் பீடித்தவர்கள் ஆங்காங்கே உயிர்ப்பற்று சப்தமிட்டுக்கொண்டிருந்தனர். அந்தப் பெண்களின் சிரிப்பில் இருந்த வாசம் அறிந்த பூதம் தேடியலைந்து நகரின் குறுகிய படியேறிச் செல்லும் வீடொன்றின் உள்ளே அந்த இரு பெண்களையும் கண்டது.

சிரிப்பை விற்ற பெண் மாட்டுத் தொழுவத்தில் சாணம் பீடித்த உடலோடு வேலையில் இருந்தாள். அழுகையை விற்றவள் மஞ்சள் நிற உடையில் தலையில் கொத்துமலர் சூடியவளாகப் படுக்கையில் படுத்திருந்தாள். அவள் நாளங்காடி பூதத்தின் வருகையைக்கூட லட்சியம் கொள்ளவில்லை. அவர்கள் இருவரும் யாரென நாளங்காடி பூதம் கேட்டது. இரட்டையர்களில் தான் மூத்தவள் என்ற அழுகையை விற்பவள், உலகில் எவராலும் அழுகையின் கனத்தையும் ஆழத்தையும் அறிந்துகொள்ள முடியாதென்றும், அழுகை ஒரு விநோதமென்றும், அது வெதுவெதுப்பான இதழ்களைக் கொண்டிருக்கிறது, அதன் கனம் கைகளில் ஏந்த முடியாதது என்றாள். சிரிப்பை விற்பவள் வெளிறிய முகத்தோடு வந்தாள். அவள் குரல் மிக மெதுவாக இருந்தது. 'சிரிப்பு ஓர் எடையற்ற சிறகு. அது உடலினின்று உதிர்ந்து கொண்டேயிருக்கிறது. அது பற்றிக்கொள்ளும் மனிதனோடு தன்னை ஒப்புக்கொடுப்பதில்லை. கடந்து போய்க்கொண்டேயிருக்கக் கூடியது. சிரிப்பின் நீண்ட சாலை முடியுமிடம் துயரமானது. அங்கே அழுகை

யின் வீட்டு முன்கதவு தெரிகிறது' என்றாள்.

பூதம் அவர்கள் சந்தைக்குத் திரும்பி வர வேண்டுமெனக் கேட்டுக் கொண்டது. அவள் அழுகை வாங்க யாருமில்லாத இடத்தில் வெறுமை சூடிக்கொள்ளட்டும். எனவே தாங்கள் ஊர் ஊராகச் சுற்றி வருவதாகவும், இதுவரை ஒரு மனிதன்கூட அழுகையை வாங்க முன் வரவில்லை எனக் கோபமாகச் சொன்னாள் அழுகையை விற்பவள். நாளங்காடி பூதம் தான் அழுகையை வாங்கிக்கொள்வதாகச் சொன்னது. அவள் வேடிக்கையாகக் கேட்டாள்,

'உன்னிடம் விலைமதிப்பற்று என்ன இருக்கிறது?' பூதம் மௌன மாகச் சொன்னது,

'புலன்கள்'

அவள் திடுக்கிட்டவளாகக் கேட்டாள், 'நீ புலனால் மட்டுமே வாழக்கூடியவன் என்பதை மறந்துவிட்டாயா?' பூதம் தயக்கமின்றிச் சொன்னது,

'நான் புலனை ஒரு துளி அழுகைக்கு விலையாகத் தருகிறேன்.' இதைக் கேட்டதும் சிரிப்பை விற்ற பெண் துக்கமேறி ஓடினாள். ஒரு துளி அழுகையை பூதத்திடம் விற்பதாக அழுகையை விற்பவள் சம்மதித்தாள் பூதம் அழுகையை வாங்கிக் கொண்டதும் நகரம் தன் இயல்புக்கு வந்துவிடும் எனச் சொன்னாள். பூதம் தனது புலனை ஒரு தானியமாக மாற்றி அவளிடம் தந்தது. அதை வாங்கிக் கொண்டவள் தனது இமையோரத்தில் பதுங்கிய ஒரு துளி அழுகை யைச் சிந்தினாள். அதைத் தன் கைகளில் வாங்கிக்கொண்ட பூதத்தால் அதன் கனத்தையும் வலியையும் தாங்க முடியவில்லை. அழுகையின் எடை தாள முடியாமல் பூதம் வீழ்ந்தது. பின் அது எழுந்து கொள்ளவேயில்லை. அன்றிரவே இரு பெண்களும் ஊரை விலக்கிப் போயினர். ஊர் இயல்பு திரும்பியது. புலன் அழிந்த பூதம் சருகைப் போலாகிவிட்ட பிறகும் ஈரம் உலராத அந்த ஒரு துளி அழுகை அதே இடத்தில் யாரும் தீண்டாமல் உறைந்து மின்னிக்கொண்டி ருந்தது. ஒரு காலை தற்செயலாக இடிபாடுள்ள வீட்டில் கொடி வளர்ந்த பூவைப் பறிக்க வந்த சிறுமி மின்னும் அந்த அழுகையைக் கையில் எடுத்துப் பார்த்து உற்சாகத்தில் வானை நோக்கி வீசினாள். அது வெடித்து பெரும் சிரிப்புச் சப்தம் கேட்டது. வானம் சிரிப்பதாகச் சொல்லியபடி சிறுமி சந்தோஷமாகத் தாவிச் சென்றாள்.

கடுகினை யாசிப்பவள்

அகாலத்தில் என் வீட்டுக் கதவு தட்டப்பட்டது. இருள் கலைந்துகொண்டிருந்த பின்பொழுதில் வாசலில் நின்றுகொண்டிருந்த பெண் காலத்தின் வெகு தொலைவிலிருந்து வந்தவளைப் போல இருந்தாள். செம்பட்டையேறிய தலைமயிரும், செதுக்கப்பட்ட கல் போன்ற சரிவு முகமும், அலைபாயாத கண்களும் கொண்டிருந்த ஸ்திரி நெடும் தொலைவு சுற்றியலைந்து வந்தவள் போல உடலெங்கும் செம்மையும், பழுப்புமான புழுதியேறியிருந்தது. அவள் குரல் மட்டும் அருகில் பேசியபோதும் மிகத் தொலைவினின்று கசிந்து வருவது போலப் பலஹீனமாக இருந்தது. அவள் கைவிரல்கள் நடுங்கிக்கொண்டேயிருப்பதைக் கண்டேன். அவள் மிக மெல்லிய குரலில் கேட்டாள்,

“ஒரு பிடிக் கடுகு வேண்டும்.”

அந்தக் குரல் என்னைச் சுருட்டி பின் இழுத்தது. தன் பேச்சை முடிக்காதவள் போல அவள் கேள்வியின் மறு பாதியைச் சொன்னாள்,

“உங்கள் வீட்டில் எவரேனும் எப்போதாவது இறந்து போயிருக்கிறார்களா?”

நான் நிசப்தமாயிருந்தேன். அவள் கண்கள் என்னை மிக ஆழமாக ஊடுருவின. அவள் தனக்குள்ளாகவே பேசிக்கொண்டிருந்தாள்.

‘எண்ணிக்கையற்ற கதவுகளைத் தட்டியும், வேதனை தீராது இதே மௌனத்தின் முன்தான் நிற்கிறேன்.’

நான் அவளுக்கு பதில் தருவதை விடவும், அவள்

யாரெனத் தெரிந்துகொண்ட வலி உடம்பெங்கும் பரவிட, "நீ பிள்ளையை சாவில் பறிகொடுத்த கோதமிதானே" என்றேன். அவள் சலனமற்று என்னைப் பார்த்துக்கொண்டேயிருந்தாள். எத்தனை நூற்றாண்டுகள், எத்தனை தெருக்கள், கதவுகள் அவள் கைகள் தட்டித் தட்டி சாவின் விரல் படாத வீட்டினைத் தேடிக் கொண்டிருக்கின்றன. அவள் சலிப்புற்றோ, சோர்ந்துபோயோ தன் வீடு திரும்பவேயில்லையா? அவளை கடுகு யாசித்து வரச் சொன்ன சாக்கிய முனிவரும் அவள் திரும்பி வரும் வரை காத்துக்கொண்டிருக்கிறாரா? அவள் கைகள் சாவற்ற வீட்டின் பிடிக் கடுகுக்காக நடுங்கிக்கொண்டேயிருக்கின்றன. அவள் தனது மகனைப் பிழைக்க வைத்துவிட முடியுமெனத் துயரின் நெடிய பாதைகளில் தனியே நடந்துகொண்டேயிருக்கிறாள். தொலைவிலும் கௌதம புத்தரின் வார்த்தைகளை ஏந்தியபடி அலைந்துகொண்டு இருக்கும் ஸ்திரியைக் காணவே உடல் நடுக்கம் கொள்கிறது. அவள் எத்தனையோ மனிதர்களைக் கடந்து வந்துவிட்டாள். துயரம் ஒரு நிழலைப் போல அவள் பின் அலைந்துகொண்டேயிருக்கின்றது. மிகுந்த தயக்கத்துடன் அவளை என் வீட்டின் உள்ளே அழைத்தேன். இதுவரை எந்த வீட்டின் படியேறியும் உள் நுழையாத கால்கள் வெளிறியிருந்தன. மிகச் சொற்பமான வார்த்தைகளை மட்டுமே தன் உலகில் கொண்ட அவள் திரும்பவும் கேட்டாள்,

"ஒரு பிடிக் கடுகு...

அவள் உதடுகள் தாகத்தின் நெடிய வறட்சியில் உலர்ந்து போயிருந்தன. எனது அறைக்குள் திரும்பிச் சென்று ஃப்ரிட்ஜைத் திறந்து ஒரு பாட்டில் குளிர்ந்த தண்ணீரை எடுத்து வந்தேன். அவள் தண்ணீரை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தாள். நான் அவளிடம் சொன்னேன்,

"நான் பிடிக் கடுகு தருகிறேன். நீ அதன்முன் இந்தக் குளிர்ந்த தண்ணீரை ருசி."

அவள் விழிகள் நீண்ட நாள்களின் பின் மலர்ச்சியுற்றன. மறுமுறையும் கேட்டாள்,

"உன் வீட்டில் சாவின் கறை படிந்ததேயில்லையா?"

நான் இல்லையெனத் தலையசைத்தேன். அவள் என் கையில் இருந்த குளிர்ந்த நீரைப் பருகினாள் குளிர்ச்சி அவள் உடலை உயிர்ப்புறச் செய்தது. திரும்பிச் செல்ல மிக வேகமாக ஆயத்தமானவள் போலக் கேட்டாள், "கடுகினைக் கொடுங்கள்."

நான் உள்ளிருந்து பிடிக் கடுகோடு வெளியே வந்தேன். அவள் உலகின் விலைமதிப்பற்ற ரத்தினங்களைப் பார்ப்பது போல அந்தக் கடுகினைக் கண்டாள். மர்மமான சிரிப்பைப் போல கைகளில் கடுகு உருண்டுகொண்டிருந்தது. அவள் முந்தானையில் கடுகினைப் போடும் முன்பு சொன்னேன்,

"ஒரு நிமிஷம், சாவைப் பற்றி எனக்குத் தெரியாது. என் வீட்டில்

நான் உள்ளிட்ட எவரும் பிறந்திருக்கிறார்களா என்பதை எப்படித் தெரிந்துகொள்வது? பிறக்காத வீட்டிலிருந்து கடுகு கொண்டு போகச் சம்மதமா எனச் சொல்.”

அவள் திகைப்புற்றாள். யாரிடம் இதைக் கேட்டுத் தெளிவு பெறுவது எனத் தெரியாத குழப்பத்தோடு இருந்தவளிடம் சொன்னேன்,

“நீ வரும்வரை காத்திருக்கிறேன். பிறப்பு என்பதை எப்படித் தெரிந்துகொள்வது, எதன் வழி கூடுகிறது பிறப்பு என அறிந்து வா.” அவள் தனது வேதனையைப் பகிரும் புத்தரை நோக்கி பதில் தேடித் திரும்பிப் போய்க்கொண்டிருந்தாள். அவள் சாவின் துயர் பொங்கும் குறுகிய பாதைகளில் இருந்து விலகி பிறப்பின் சந்தோஷமான சாலை வழியே தனியே செல்வது மிக ஆறுதலாக இருந்தது. பின் என் இறுதி நாள் வரை கோதமி என்னும் அந்த ஸ்திரி திரும்பி வரவேயில்லை.

சிக்கிமுக்கிக் கல்

வெம்மை சுரந்துகொண்டிருக்கும் மொகலாய புகைக்குழலைப் போலிருந்த இந்த மாநகரினை யாவரும் தன் உதடுகளால் புகைத்துக் கொண்டிருந்த டிசம்பர் மாத இரவொன்றில் 14 வருடங்களுக்குப் பிறகு இருளின் சிறு சந்தில் மறைவு கொண்டிருந்த பஞ்சாபியின் நாட்டுச் சாராயக் கடையில் டாக்சி டிரைவரான பப்ரூவனைக் கண்டேன். அவன் நிரம்ப குடித்திருந்தான். அவன் என்னை மறந்திருந்தான். ஒரேயொரு கோடைக்காலத்தின் மாலை நேரத்தில் அவனது டாக்சியில் பயணித்துத் திரும்பிய என்னை அவன் நினைவு கொள்வதற்கான அடையாளம் எதுவும் சாத்தியமானதல்ல. ஆனால் அவனோடு பயணித்த அந்த நாளின் நிகழ்வுகள் தொலைதூர நட்சத்திரம் ஒன்றைப் போல இப்போதும் ஒளிர்ந்து கொண்டேயிருக்கின்றன.

நான் அவனருகில் அமர்ந்தவனாக அவனுக்கு என்னிடமிருந்த சாராயக் குவளையைப் பகிர்ந்து கொண்டேன். அவன் இமைகள் வீங்கியிருந்தன. உறக்கமும், போதையும் கலந்ததொரு அரை விழிப்பில் அவனிருந்தான். என்னை ஞாபகப்படுத்தும் முயற்சிகள் யாவும் அவன் போதையில் சென்று சேகரமாகி விட்டன. அவன் நாவு மட்டும் வெக்கையைச் சுவைத்துக்கொண்டேயிருந்தது. சில சமயம் அவனது தோற்றம் தப்பியலையும் விலங்கினைப் போல இருந்தது. இந்த நகருக்கு நான் முதன் முறையாக வந்த நாளின் ஒரு மாலையில் அவனைச் சந்தித்தேன். இடிபாடுகள் மிக்க கோட்டையொன்றின் தெற்கு நோக்கியிருந்த வாசலின் முன்பாகத் தனது டாக்சியை நிறுத்திவிட்டு

காகிதப்பூ உதிரும் மரமொன்றின் கீழே படித்துக்கொண்டு இருந்தான். ஆளற்ற கோட்டையின் அகழிப் பாதைகளில் கழுதைகள் நடமாடிக் கொண்டிருப்பதைப் பார்ப்பது ஆறுதல் தருவதாகவிருந்தது. நகரம் தினமும் சுற்றுலாப் பயணிகளால் ததும்பிக்கொண்டே இருக்கிறது. இன்னமும் ஒரு மனிதன் கால் பட்டால்கூட மொத்த நகரமும் குலைவு கொண்டுவிடும் என்பது போன்றதொரு நெருக்கடி. நகரின் வயிறு ஆழ்ந்து பெருத்துக்கொண்டே போகிறது. ஆயிரக்கணக்கான மனிதர்கள் வந்து இறங்குகிறார்கள். மூத்திரம் பெய்கிறார்கள். நகரின் வேறு வேறு வீதிகளில், ஏதோ ஒரு நாளில் ஒரு சொட்டு மூத்திரம் சொட்டி நகரம் மூழ்கிவிடவும் கூடும். அடுக்குமாடிக் குடியிருப்புகளும், இரும்பை உமிழும் வாகனங்களும், பாஷையறியாத மனிதனின் திகைப்பில் மின்னும் பயமும் நகரில் படர்கின்றன.

மாநகரை இரண்டு பகுதியாக நதி பிரித்திருந்தது. கறுப்பு நகரம் எனும் காலா சிட்டியும் வெளுத்த நகருமாக அந்த ஊர் இரண்டு தலை கொண்டிருந்தது. கறுத்த நகரில்தான் மொகலாயர்களின் கோட்டையும் அகழிகளும் யுத்தத்தில் மிஞ்சிப்போன பீரங்கிகளின் இரும்புக் குண்டுகளும் கிழட்டுக் குதிரைகளுமிருந்தன. நதியின் கழிவுகள் நிரம்பிய கரையோரங்களில் எங்கிருந்தோ வந்து குடியேறியிருந் தனர். கள்ள வியாபாரிகளும், அரேபிய வாசனைத் திரவியங்களையும், வனப்பகுதிகளை நினைவு படுத்திக் குரலிடும் சாம்பல்நிறக் கூண்டுப் பறவைகளையும் விற்கும் மாலை நேரச் சந்தைக்காரர்களும் தங்கியிருந் தனர். அந்த நகரில் எப்போதும் கடந்த காலத்தின் வாசனை வீசிக்கொண்டேயிருந்தது. அந்த இடிபாடுகளுக்குள்ளிருந்து ஒரு சுல்தானின் படை வீரனோ, ஏன் கில்ஜி வம்சத்து இளவரசனோகூட நடந்து வந்தாலும் எவரும் ஆச்சரியப்படப் போவதேயில்லை. இடிபாடு களுக்குள் மதசம்பந்தமான ஏடுகளைப் பாதுகாக்கும் பழைய நூலகம் ஒன்றிருந்தது. அதில் பழைய ஏடுகள் நிரம்பியிருந்தன. ஓர் ஏட்டின் ஏதோவொன்றில் புனிதரின் ஒரு சொல் கலந்து இருப்பதாகவும் அதைத் தேடிக் காண வேண்டும் என்றும் சிலர் தினமும் வந்து ஏடுகளைப் படித்துக்கொண்டிருந்தார்கள். நான், பெய்சல் அகமது பெய்சல் என்னும் ஓர் இசைக்கலைஞரின் புதை மேட்டையும் அங்கு முளைத்துள்ள ஓர் எலுமிச்சை மரத்தையும் தேடிக்கொண்டிருந் தேன் அந்த மரத்தின் சில இலைகளைப் பறித்து ஒரு மனிதன் தின்றுவிட்டால் அவனது குரல் மிக இனிமையானதாகிவிடும் என்றும் அந்த மரத்தின் இலைகள் இசையின் நுண்மையை விம்ம வைத்துக் கொண்டிருப்பதாக ஒரு சேதியைக் கேட்டிருந்தேன். பாடுவதில் ஆவலற்றபோதும் அந்த இசைக் கலைஞனின் புதைவு மேட்டில் இருந்த எலுமிச்சைச் செடி மீது ஏனோ ஒரு வித ஆசையிருந்தது.

அதைத் தேடி புதைமேடுகளில் சுற்றியலைந்துகொண்டிருந்தேன். சுல்தானின் நூற்றுக்கணக்கான மனைவிகள், குழந்தைகள், சகோதரர் களின் புதைமேடுகள் எவரின் நினைவுமின்றி உறைந்து கிடந்தன திறந்து கிடந்த கபாலமொன்றின் சிரிப்பு துயருற்ற ஏதோ ஒரு

பெண்ணை நினைவுபடுத்தியது. எண்ணிக்கையற்ற புதைமேடுகள் நிரம்பியிருந்த இடிபாடு கொண்ட கோட்டையாக இருந்தது. அந்த இடிபாடுகளின் சுற்றுப்பகுதியில் கருங்கற்களினாலான பாதைகள் தெரிந்தன. நான் வெளிவரும்போது வரை பப்ரூவன் என்னைப் பார்த்துக்கொண்டிருந்திருக்க வேண்டும். பழுப்பு ஏறிய என் கண்களைக் கண்ட அவன் என்னை ஏதாவது புதையல் தேடும் மனிதர்களில் ஒருவனைக் கண்டது போல,

“யாருடைய கல்லறையைத் தேடிச் சுற்றிக்கொண்டிருக்கிறீர்கள்?” எனக் கேட்டான்.

“கல்லறையை அல்ல, ஓர் எலுமிச்சை மரத்தை” எனச் சொன்னேன். ஆச்சரியத்துடன் திரும்பவும் கேட்டான். பெய்சல் அகமதுவின் பெயரைச் சொன்னேன் பப்ரூவன் தனக்குத் தெரிந்த ஒரு புதைமேட்டில் அரச வம்சத்தின் புதைவு கொண்டிருப்பதாகவும், அங்கே புதையல், இருப்பதாகவும் சொன்னான். நான் அவனிடம் புதையல் விருப்ப மில்லை என்றேன். அவன் தனக்குத் தெரிந்த ஓர் இடத்தில் அந்த ஒற்றை எலுமிச்சை மரம் இருக்கக்கூடுமென்றும் நான் அவனோடு வந்தால் கூட்டிப் போய்க் காட்டுவதாகச் சொன்னான். அவனது டாக்சியில் ஏறிக்கொண்டேன்.

பப்ரூவன் ஏதோ மலைக் கிராமத்திலிருந்து வந்திருக்கக்கூடும் என்பது போன்ற உருவமிருந்தது. அகன்ற முகம் கொண்டிருந்தான். நாங்கள் இருவரும் போகும் வழியில் அவன் ஒரு நாட்டுச் சாராயக் கடையில் கொஞ்சம் குடித்துக்கொண்டான். வெளியே மாலை தன் வெளிர் நீலத்தில் விரிந்துகொண்டிருந்தது.

நாங்கள் ஏதேதோ அரேபியர்களின் புதைமேடுகளைக் கண்டோம். குதிரை வீரர்களின் உடைந்த கால் எலும்புகளில் சிறு செடிகள் கிளைத்திருந்தன. நாங்கள் தேடியலையும் மனிதனின் பெயரை அவன் சொல்வதற்கே சிரமப்பட்டான்.

“எதற்காக அந்த எலுமிச்சைச் செடியைத் தேடிப் போகிறீர்கள், நீங்கள் வைத்தியரா?” எனக் கேட்டான். கூச்சத்தால் பதில் பேசாமலிருந் தேன். பிறகு அவனிடம் அந்த மரம் குரலை இனிமையாக்கும் எனச் சொன்னேன். அவனுக்குச் சிரிப்பு வந்திருக்கக் கூடும். எனைப் பார்க்காமலே கேட்டான்.

“நீங்கள் பாடகரா?”

“இல்லை, வானசாஸ்திரம் பயின்றவன்” என்றேன்.

அவன் நட்சத்திரங்கள் யாவும் வானில் அலையும் மிருகத்தின் கண்கள் என்றும் அவை இரவில் வேட்டையாடுவதற்கு அலைந்து கொண்டிருப்பதாகவும் நான் கேட்காமலே சொன்னான். நாங்கள் மாலை முடியும்வரை தேடியும் எலுமிச்சை மரத்தைக் காண முடியவேயில்லை. இரவு தொடங்கி முழு நிலவு உதயமாகியிருந்தது. அவன் அந்த நிலவைக் கண்டதும் இன்று பூர்ணிமையா எனக்

கேட்டான். நான் தலையசைத்ததும் அவன் தான் கொஞ்சம் குடிக்க வேண்டும் என்று பணம் கேட்டான். நானும் அவனும் குடித்துக் கொண்டிருந்தபோதே அந்த நாட்டுச் சாராயக் கடையில் இருவர் பப்ரூவனைத் தேடி வந்திருந்தார்கள். பப்ரூவன் அவர்களிடம் தான் சிறிது நேரத்தில் வந்துவிடுவதாகப் பேசினான். நான் அவர்களைப் பார்த்தபோது கைகளில் பல்வேறு மிருகங்களைப் பச்சை குத்தியிருப் பதைக் கண்டேன். அவர்களில் ஒருவனின் காது இரண்டாக அறு பட்டிருந்தது.

பப்ரூவன் என்னிடம் "இரவிலும் நாம் தேடலாம். உங்களுக்கு ஏதேனும் பயமில்லையே" எனக் கேட்டான். புதைமேடுகளில் இரவில் தேடுவது வேண்டாம் எனச் சொல்ல விருப்பப்பட்டபோதும் சரி யென்றே சொன்னேன்.

இருவரும் கறுப்பு நகரின் முடிவற்ற இடிபாடுகளுக்குள் டாக்சியில் சுற்றிக்கொண்டேயிருந்தோம். இரவானதும் புராதனக் கட்டடங்களின் வாசனையே மாறிவிடுகிறது. அது ஒரு நிழல் வனம் போல அசைந்து கொண்டேயிருந்தது. இருவரும் காவல் கோபுரங்களில் ஏறிப் பார்த்தோம். மஞ்சள் வெளிச்சம் மட்டுமே மிதந்துகொண்டிருந்தது. பப்ரூவன் திரும்பவும் குடிக்க விரும்பினான். இருவரும் இன்னொரு வாசலில் போய்க் கொஞ்சம் மதுவருந்தி வெளியே வந்தபோது அங்கும் அதே மிருக உருவம் கொண்ட இருவர் வந்திருந்தனர். பப்ரூவனை அவர்கள், "நீ உடனே எங்களோடு வர வேண்டும்" என்றனர்.

அவன் என்னைக் காட்டி, தான் ஓர் இடத்தை அவருக்குக் காட்டித்தர வேண்டுமென்றான். அவர்கள் தாங்கள் நெடுநேரம் காத்திருப்பதாகச் சொன்னார்கள். பப்ரூவன் அவர்களையும் எங்கள் டாக்சியில் ஏற்றிக் கொண்டான். நாங்கள் நால்வரும் நள்ளிரவு வரை அலைந்தோம். புதைமேடுகளில் எலும்புகள் முறுக்கேறும் வாசனை தவிர எலுமிச்சை மணமே தென்படவில்லை. பிறகு நான் அசதியுற்றேன். பப்ரூவனிடம் அவர்கள்,

"யாவரும் உனக்காகக் காத்துக் கிடக்கிறார்கள். போகலாமா" என்றார்கள். பப்ரூவன் அங்கே போய்விட்டுத் திரும்பும்போது என்னை, தங்கியிருந்த லாட்ஜில் கொண்டுபோய் விடுவதாகச் சொன்னான்.

மின்சார விளக்குகளே இல்லாமலிருந்த பகுதிக்குள் டாக்சி போனது. எங்கும் இறைச்சியின் வாசனை. நான் அவர்களோடு சென்றேன். ஓரிடத்தில் குளிருக்காகப் பலரும் கூடி வெம்மையேற்றிக் கொண்டிருந் தனர் நாங்கள் பாதி இடிபட்ட குதிரை லாயம் போன்ற இடத்தில் இறங்கி நடக்கத் தொடங்கினோம். நாங்கள் நால்வரும் போய்ச் சேர்ந்தபோது இடிபாடுகளுக்குள் சிறிய குடியிருப்புகள் தெரிந்தன. ஆண்களும் பெண்களுமாகப் பலர் இருந்தனர். ஓர் உயர்ந்த கல் மேடையோடு கூடிய சூரிய வடிவிலான மண்டபமாக இருந்தது. அதன் படிகள் உயரமாயிருந்தன. நான் பார்த்த காட்சிகள் வியப்பாக

இருந்தன. அங்கே நாற்பது ஐம்பது மனிதர்கள் இருந்தார்கள். சில பெண்களும் உறக்கமேறிய கண்களுடன் நின்றிருந்தனர். முரட்டு எருமையொன்று தூணில் கட்டப்பட்டிருந்தது. அதன் நடுவில் வலிய மனிதன் ஒருவன் பருமனான உருவத்தோடிருந்தான். அவன் ஆடை, தலைரோமங்கள் பழைய வனவாசி போலவே இருக்க, அவனைச் சுற்றியிருந்த மனிதர்களும் வனவேடர்களைப் போல இருந்தனர். வந்தவர் யாவரும் பப்ரூவனை வணங்கினர். பப்ரூவன் பேசவேயில்லை.

அங்கே ஏதோ ஒரு சடங்கு நடக்கப் போவதைப் போலப் பல விதமான பூக்கள் அலங்கரிக்கப்பட்டிருந்தன. பீடமொன்றில் கனிகளும், குவியலாக கபாலங்களும் இருந்தன. விதவிதமான மண்கலயங்களில் சாறுகள் நிரம்பியிருந்தன.

பப்ரூவன் தனக்கு இன்னமும் குடிக்க மது வேண்டுமென்றான். ஒரு கற்குடம் நிரம்பிய மதுவை அவனிடம் தந்தார்கள். நான் பார்த்துக்கொண்டிருந்தபோது இரண்டு முயல்கள், காட்டுக் கோழிகள், பூனைகள் எனப் பதினாலு வித உயிரினங்கள் கொண்ட கூண்டினை ஒருவன் வைத்திருந்தான்.

உயரமான மனிதன் தன்னால் மண்ணில் உருவாக்கப்பட்டிருந்த நூறு குழிகளில் பூக்களை வரிசையாகப் போட்டுக்கொண்டே வந்தான். பிறகு தன் மந்திர உச்சாடனங்களை உரத்துச் சொன்னான். நான் அருகாமையில் இருந்தவனிடம் கேட்டேன்,

“என்ன சடங்கு இது?”

“பூமிதா பூஜை” என்றான்.

அவர்கள் யாரென்று புரியவேயில்லை. யாவரும் மந்திரச் சொல்லை உரத்துக் கத்தினார்கள். மந்திரம் சொல்பவன் தன்னிடமிருந்த முயலின் காதுகளை அறுத்து அதன் இரத்தத்தில் ஒரு பிடி மண் பிசைந்து உருக்கொடுத்து வைத்தான். அவன் குரலும், முழு நிலவும் உயர்ந்து கொண்டேயிருந்தன.

ஏதோ ஒரு வித பலி கொடுக்கப் போகிறார்களெனப் பார்த்துக் கொண்டிருந்தேன். எருதை அழைத்து வந்தார்கள். பலியால் துண்டான எருதின் கழுத்தினின்று பெருகிய குருதியை பூமியிலிருந்த குழிகளில் நிரப்பினார்கள் அதன் வெட்டுப்பட்ட தலையை பப்ரூவன் தன் கையில் ஏந்தியிருந்தான். இன்னும் துடிப்பு அடங்காத அந்தக் குருதியை பப்ரூவன் குடித்தான். அவன் முகத்தில் ரத்தம் வழிந்தது. வணங்கும் அந்த மந்திரச் சொற்களை பப்ரூவன் சொல்லவேயில்லை. மிருகங்கள் பலியிடப்பட்டன. என்னால் பயத்தைத் தாள முடிய வில்லை. புகை பெருகியது. ரத்தம் பீச்சிக்கொண்டேயிருந்தது. நூறு குழிகளிலும் வாசனைத் திரவியங்கள் கொட்டப்பட்டுக் கொண்டே யிருந்தன.

தனது உடைகளைக் களைந்தபடி பப்ரூவன் ரத்தம் பெருகிய

இடத்தில் குனிந்து நின்றான். அவன் கேசமெங்கும் ரத்தம் படிந்திருந்தது. அவனைத்தான் பலியிடப் போகிறார்கள் என்பதைத் தாங்க முடிய வில்லை. உச்சாடனம் செய்பவன் நெருப்பைப் பற்ற வைப்பதற்காகத் தனது கைகளில் இருந்த இரு கற்களை உரசிக் கொண்டே இருந்தான். நெருப்பு பிறக்கவேயில்லை. எவ்விதமான மறுப்புமின்றி பப்ரூவன் தலை குனிந்திருந்தான். ஒருவன் தனது நீண்ட பிடி கொண்ட வாளால் பப்ரூவனைப் பலிகொடுப்பதற்காகத் தனது கையால் அவன் தலையைப் பிடித்துக்கொண்டிருந்தான். பப்ரூவன் குனிந்து எண்ணெய்க் கிண்ணத்தில் மிதக்கும் நிலவைப் பார்த்துக்கொண்டே யிருந்தான். அருகில் இருந்த ஒருவனிடம் கேட்டேன்,

"யார் நீங்கள்?"

தாங்கள் இந்த நகரம் உண்டாகும் முன்பிருந்த கானகத்தின் தொல்குடியென்றும், கானகம் எரிக்கப்பட்டு நகரமான பிறகு வருடம் தோறும் நடக்கும் பூமிதா பூஜையில் தேர்வான ஒருவனைப் பலி கொடுப்பார்கள் என்றும், பப்ரூவன் இதற்காகத் தேர்ந்தெடுக்கப் பட்டவன் என்றும் சொல்லி, அவன் பூமியைத் தனது உதிரத்தால் குளிரச் செய்தால் இந்த நகரில் தானே விருட்சங்கள் பல்கிப் பெருகிவிடும். பின் இது மாபெரும் கானகமாகும். பிறகு பறவைகள் கூட்டமாக வந்து சேரும், கானகத்தில் மிருகங்கள் ஓடியலையும், நீரோடைகள் தோன்றும், தன் மூதாதையர்களைப் போலவே தாங்களும் குளிர்ச்சி கொண்ட மர இருளில் குகைகளில் வாழப்போகிறோம் என்றபடி பப்ரூவனைப் பார்த்தபடி நின்றான். தன் கையில் இருந்த சிக்கிமுக்கிக் கல்லால் உராய்ந்து நெருப்பைப் பற்ற வைக்க முயன்றான். வெட்டுப்பட்ட மனிதனின் குருதி நெருப்பினால்தான் பாய வேண்டும் என்பதற்காகக் காத்திருந்தான் தலை அறுப்பாளன்.

சிக்கிமுக்கிக் கல்லால் உராய்ந்தபோது நெருப்பின் சிறு பொறி பறந்தது. ஆனால் அது பற்றவில்லை. இரண்டாம், மூன்றாம் முறை அந்தக் கல்லை எடுத்து உரசிப் பற்ற வைக்க முயன்றான். கல்லில் நெருப்பு தோன்றவேயில்லை.

பப்ரூவனின் கண்கள் அந்த இரு கற்களைப் பார்த்துக்கொண்டே யிருந்தன. கல்லை உரசி உரசியும் நெருப்பு வராதபோது ஒருவன் தன்னிடமிருந்த தீப்பெட்டியைத் தந்தான். பூசாரி கோபமுற்றான்.

"இந்தக் கல்லின் நெருப்பில்தான் நாவைத் தீண்டுவாள் பூமிதா" என்றான்.

இரவு கூடிக்கொண்டே வந்தது. பெண்கள்கூட விழி சொருகி யிருந்தார்கள். பூசாரி தன் மந்திரங்களைச் சுழற்றிக் கொண்டேயிருந் தான். அந்த அக்னிக் கல்லில் இருந்து நெருப்புப் பற்றவேயில்லை. குருதிகள் உறைய, நட்சத்திரங்கள் மறையத் தொடங்கின. நீண்ட மௌனத்துக்குப் பின் மந்திரச் சொல்லாளன் சொன்னான்,

"இவனை விட்டுவிடுங்கள். தாய் இவனை ஏற்க மறுக்கிறாள்.

நெருப்பின் நாவு நீளவேயில்லை."

பப்ரூவன் எழுந்துகொண்டான். அவன் கன்னத்தில், தலை மயிரில் ரத்தம் உறைந்திருந்தது. யாவரும் கலைந்துபோகத் தொடங்கினர். பப்ரூவன் என் அருகில் வந்து, "குளிக்க வேண்டும். உங்கள் அறைக்கு வரலாமா" எனக் கேட்டான். நான் தலையசைத்தேன். டாக்சியில் ஏறிக்கொண்டபோதும் நான் பயம் கலையாதவனாகக் கேட்டேன்,

"நீங்கள் யார்?"

"சரபர்கள். வன குடிகள்... இந்தப் பூமியில் முதன்முதலாகப் பிறந்தவர்களின் பிள்ளைகள்" என்றான். பிறகு அவன் வழியில் தனக்குக் குடிப்பதற்குக் கொஞ்சம் அதிகம் பணம் வேண்டுமென்றான். பின்னிரவின் பால்வெளியில் டாக்சி போய்க்கொண்டிருந்தது. ஒரு மதுக்கடைக்கு அருகாமையில் போனபோது பப்ரூவன் என்னிடம் கேட்டான்,

"எனக்கு நேரமாகும், உங்களை எங்கே விட வேண்டும்?" நான் அங்கேயே இறங்கிக்கொண்டுவிட்டேன். நகரம் தன் துயிலில் மிதந்து கொண்டிருந்தது. பப்ரூவன் ஏதோ பாடலைப் பாடியபடி மதுக் கடையினுள் போய்க்கொண்டிருந்தான். குரல் மிக இனிமையாகத் தானிருந்தது.

அ-கதையாளன் சொன்ன கதைகள்

முதலாம் கதை

ஆறாம் வகுப்பின் கோடை விடுமுறை நாள்களில் ஊருக்கு வந்திருந்த செண்பகா அத்தை ஐந்து ரூபாயைச் செலவழித்துக் கொள்ளத் தந்ததுதான் எனக்கு முதன்முதலாகக் கிடைத்த அதிகப் பணம். நூலகத்தின் வெளியே உள்ள பிரேயர் ஹாலில் புத்தகங்கள் விற்கிறார்கள் என மதிய நேரமொன்றில் தன்னோடு என்னையும் கூட்டிக்கொண்டு போனான் கேசவன். பழங்களைப் போல ருசியோடு அவன் புத்தகங்களைப் பார்த்ததே வியப்பாக இருந்தது. கேசவன் தினமும் அங்கு வந்து போகிறவனாக இருக்கக்கூடும். சர்வ சுதந்தரமாக அவனால் கைகளில் சுமக்க முடியாத புத்தகங்களைக்கூட எகிறி எடுத்து எனக்குக் காட்ட முடிந்தது. மனிதர்களுக்கு எத்தனை எலும்புகள் இருக்கின்றன எனக் காட்டியபோது உடம்புக்குள் எலும்புருவம் ஒன்று தோன்றி, பீதி மனதில் சுருண்டு அடங்கும்.

என்னை அழைத்துக்கொண்டு போனது புத்தக விழாவின் கடைசி தினமாகவிருந்ததால், அவன் என் பையிலிருந்த காசைப் பிடுங்கி எடுத்து ஒரு மரப்பெட்டியில் குவிக்கப்பட்டிருந்த புத்தகங்களைக் கலைத்து, என்னையும் ஒரு புத்தகம் எடுத்துக் கொள்ளச் சொன்னான். சிவப்பு நிறக் குதிரைக் குட்டியொன்று பசியபுல் வெளியில் மேய்ந்து கொண்டிருந்த ஓவிய அட்டை கொண்ட புத்தகத்தினை வாங்கிக்கொண்டேன். ஆளுக்கொரு புத்தகத்தோடு நகரத்தின் புறவழிச் சாலை பிரியுமிடத்தில் உள்ள

நந்தவனத்தில் படுத்துக்கொண்டு புரட்டிப் புரட்டிப் பார்த்தோம். அது ஏதோ ஒரு அயல்தேசப் புத்தகம் என்பது மட்டும் புரிந்தது. பெயர்களை உச்சரிக்கவும் இயலவில்லை. படங்களோ, பரிச்சயமான வார்த்தைகளோ இல்லை. முப்பது பக்கங்களுக்கும் குறைவான அப்புத்தகத்தினை அன்றைக்குள் பல முறை புரட்டிவிட்டேன். அதன் ஷிமிலி என்னும் தலைப்பு மட்டும் படிக்க விருப்பமானதாக இருந்தது. ஷிமிலி, ஷிமிலி என நானாகவே சொல்லிச் சிரித்துக்கொண்டு வீடு திரும்பினேன். அப்பாவுக்கும் தங்கைகளுக்கும் தெரியாமல் அதை ஒளித்து வைப்பதற்காக மர பீரோவின் மேலிருந்த கடக மொன்றில் போட்டுவிட்டு அதன் மீது சில துணிகளைப் போட்டு மூடி ஒளித்தேன். சில நாள்கள் குளிக்கும்போது ஷிமிலி, ஷிமிலி என நானாக சொல்வதைக் கண்ட தங்கைகள், அது தங்களைக் கேலி செய்வதாகக் கோள் சொன்னார்கள்.

எப்படியோ அதை நான் மறந்தவனாகப் படிப்பிலும், அப்பாவின் தீராத கண்காணிப்பிலும், பள்ளிக்கூடத்தின் முதல் மாணவனாகி விட்டேன். இயந்திரவியல் புத்தகங்களுக்குள் ஊர்ந்தபடி அலைந்து தொலைதூர நகரமொன்றின் பொறியியல் கல்லூரி மாணவனாகி ஹாஸ்டல் அறைகளுக்குள்ளும் அப்பாவின் கவனம் கலையாதவனாக, ததும்பிய அச்சம் குறையாதவனாக இருந்தேன்.

நீண்ட மழை நாள் ஒன்றின் விடிகாலையில் கல்லூரி மைதானத்தில் தனியே நடக்க நடக்க ஏதோ யோசனை சரிந்து திடீரென அப்பாவின் பிடி என்னை விட்டு விலகி, கரையத் தொடங்கியது. நான் தனியாள், தனியாள் என அந்த ஒரு நிமிஷத்துக்குள் நான் அவரிடமிருந்து விடுபட்டவனாகி மிக சந்தோஷம் மீறி, நடமாடினேன். திடீரெனப் புறப்பட்டு வீட்டுக்குப் போய் நிற்க வேண்டுமென ஆவல் மீறி, பயணித்து விடிகாலையில் வீட்டின் கதவைத் தட்ட அப்பா கதவைத் திறந்தார் முதல் தடவையாக வயதான மனிதராகத் தெரிந்தார். நான் அவரை சட்டை செய்யாது விலக்கி என் அறைக்குச் சென்றேன். ஏனோ மிகுந்த விசாலமுடையதாகவிருந்தது அறை. மறுநாளில் கூட வீட்டில் யாரையும் பார்த்துப் பேசக்கூடத் தோணவில்லை. மிக நிசப்தமாக இருந்தேன். மாறி மாறி கேள்வி கேட்டுக்கொண்டே யிருந்தார்கள். அவை எதற்கும் பதில் பேசவில்லை. நான் பகலெல்லாம் எதை எதையோ தேடிக்கொண்டிருந்தேன். அப்போது மர பீரோவின் மீதிருந்த கடகத்தினைக் கீழே இறக்கி வைத்து, நான் புதைத்த புத்தக ஞாபகம் வர, தேடிக் காண முயன்றேன். அதற்குள் ஒரேயொரு சேம்பர்ஸ் டிக்ஷனரி சைஸில் ஒரு புத்தகம் மட்டும் தலைகீழாகக் கிடந்ததேயன்றி, நான் ஒளித்த புத்தகத்தினைக் காணோம். பெரிய புத்தகத்தினைத் தூசி தட்டிப் பார்த்தபோது அதில் ஷிமிலி என்னும் தலைப்பு தெரிந்தது. ஆனால் அதில் இருந்த குதிரைக் குட்டிக்குப் பதிலாக ஒரு வலுவும் திடமுமேறிய குதிரையின் சித்திரமிருந்தது. நான் வாங்கிய புத்தகம்தானா? ஆறாம் வகுப்பில் வாங்கிய புத்தகம் என்னோடு இத்தனை வருடத்தில் தானும் வளர்ந்து உடலமைப்பு

என்னைப் போலவே உருமாறிவிட்டதென்பதை நான் எளிதில் நம்பமுடியாத நிஜமாகியிருந்தது. 'ஷிமிலி' என்னும் பலநூறு பக்கம் கொண்ட அதைக் கைகளில் எடுத்துப் பார்த்தேன். அதே புத்தகம்தான் இது. புத்தகத்தினைப் படிக்க விரும்பி முன் அட்டையைத் திறந்தேன். கடைசி அட்டை வந்துவிட்டது. புரியாமல் திரும்பவும் முன் அட்டையைத் திறக்கப் பக்கங்கள் பிரிவடையாமல் கடைசி அட்டையே வந்தது. எத்தனையோ முறை முயற்சித்தும் பக்கங்கள் திறந்துகொள்ளவேயில்லை. திறக்கப்பட முடியாத ஒரு அபூர்வப் புத்தகம் அது என்பது வியப்பும் வசீகரமும் தருவதாக இருந்தது.

முதல் அட்டையும் கடைசி அட்டையும் தவிர, உள்பக்கங்கள் யாவும் வெறும் தோற்றம் மட்டும்தான் என்பது போலத் தெரிந்தது. நான் புத்தகத்தை எப்படியாவது திறந்துவிட ஆசை தீராது முயன்று கொண்டேயிருந்தேன். பகல் இரவு கடந்ததேயன்றி, புத்தகம் திறந்து கொள்ளவேயில்லை. கோபம் மீறி அதைத் தூக்கி எறிந்தேன். கீழே விழுந்து தரையில் புத்தகம் திறந்துகொள்ள, பக்கங்கள் காற்றில் புரண்டன. அவசரமாகப் பாய்ந்து கையில் எடுத்துத் திறக்க, புத்தகம் மீண்டும் திறவாப் புத்தகமாகியது. நான் வீட்டிலிருந்த அந்த வாரம் முழுமையும் திறவாப் புத்தகத்தினைப் படிக்கும் முயற்சியிலே கழிந்தது. வீட்டில் யாவரும் பயந்துபோயிருக்கக்கூடும். அம்மா என்னை மாலையில் கோவிலுக்குக் கூட்டிச் சென்றார். நான் ஷிமிலி, ஷிமிலி எனப் புரண்டுகொண்டேயிருந்தேன். யாவர் கண்களும் என் மீது கவிழ்ந்த நாளில் புத்தகத்தினின்று விடுபட விரும்பியவனாக அதை யாருக்காவது தந்துவிட முடிவு செய்து கல்லூரித் தோழிக்கு அதைப் பிறந்த நாள் பரிசாக அனுப்பிவிட்டேன்.

சில நாள்களின் பின் அவளிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. 'ஷிமிலி' என்னும் மிகச் சிறிய புத்தகத்தைப் பரிசாக அனுப்பியதற்கு நன்றியென்றும், சுவாரஸ்யமான அதைத் தான் முழுவதும் படித்து விட்டதாகவும், அந்தப் புத்தகத்தின் உள்ளே ஒரு கறுப்பு வெள்ளைப் புகைப்படம் இருந்ததென்றும், அதில் மூன்று நான்கு பள்ளி மாணவர் கள் நிற்கிறார்கள்; அதில் நீ எங்கே இருக்கிறாய் எனத் தெரியவில்லை. ஆனாலும் அதன் எளிய அழகுக்காக அதைத் தான் வைத்துக்கொள்வ தாக எழுதியிருந்தாள். நான் அப்படி எந்தப் புகைப்படமும் எடுத்துக் கொள்ளவேயில்லை என்றும், புத்தகம் உருமாறிக்கொண்டேயிருக்குமா எனவும் புரியாமல் உரத்துக் கத்தியபடி அவள் கடிதத்தைக் கிழித்தெறிய விரும்பினேன். அப்பாவின் பயம் தானே உடலெங்கும் நிறைந்து கொள்ள அதைச் செய்யத் துணிவு வராமலே போனது எப்போதும்.

இரண்டாம் கதை

பெர்சியாவெங்கும் ரகசியமாக வாசிக்கப்பட்டு வருவதாக அறியப் பட்ட பாலியலின் சூட்சும சேர்க்கைகள் பற்றிய புத்தகத்தினைத் தேடி, எட்வர்ட் பர்டன் பயணித்தபோது அவருக்கு நாற்பது வயதைக்

கடந்திருந்தது. பர்டன் கீழை தேச நாடுகளில் பாலியல் உறவின் மிக நுட்பமான புத்தகங்களும், போக முறையைப் பெருக்கும் இசையும், காமத்தின் வெவ்வேறு நிலைகளை உணரச் செய்யும் வாசனைக் குப்பிகளும் பற்றி லங்காஷயர் மது விடுதியின் உரையாடல் ஒன்றில் அறிந்தபோது, குடித்துக்கொண்டிருந்த காபூல்வாசியொருவன் கையடக்கமான பிரதியொன்றினைக் காட்டி, இது காமநூலின் ஒரு அத்தியாயம் என்றும் காமநூலை வாசிப்பதற்கே தனியான பயிற்சிகள் வேண்டியிருக்குமென்றான். பர்டன் காபூல்வாசியிடமிருந்த புத்தகத்தினைப் புரட்டினான். அதில் அந்தப் புத்தகத்தினை வரிசையாக அல்ல, வெவ்வேறு வரிகளில், வேறு முறையில் பகுதி பகுதியாக வாசித்துச் செல்ல வேண்டுமென்றும், வரிசைகளோடு வெற்றிடத்தினையும் சேர்த்து வாசிப்பதால் மட்டுமே அதைப் புரிந்துகொள்ள முடியுமெனக் குறிப்பிட்டிருந்தது. காபூல்வாசி அதைப் படிக்க அனுமதிக்க மறுத்ததால், காமநூலின் மீது வேட்கை கூடியது. காமப் பிரதிகளைத் தேடியலையத் தொடங்கினான்.

பெர்சியாவுக்கு அவன் வந்து சேர்ந்த சில மாதங்களில் நகரின் மிகப் பெரிய மதுவிடுதிகளையும், உல்லாச அறைகளையும் தேடிச் சலித்துவிட்டான். காமநூல் ஒரு பெரும் கற்பனையென்றும், அதை எவரும் வாசித்ததேயில்லை என மது விடுதியாளன் சொல்லிய போதும், பர்டன் அவற்றைப் பெண்கள் ரகசியமாக வாசிக்கக் கூடுமென்ற உள்ளுணர்வில் வேசைகள் நடனமிடும் விடுதிக்குச் சென்றான். நீண்டு மெலிந்த உடலும் வெளிறிய உதடும் கொண்ட ஒரு பெண் இரவில் அவன் காதருகே வந்து கிசுகிசுத்தாள்.

“நீ தேடிவந்திருக்கும் புத்தகம் தொடர்ந்து சிலரால் வாசிக்கப்படுகிறது. நீ அதனை வாசிப்பதற்கு அங்கேயே தங்கியிருக்க வேண்டும்” என்றாள்.

பர்டன் ஒத்துக்கொண்டு அவளோடு சென்றபோது பெரிய குளியல் அறைகளும், அதையொட்டிய செயற்கை நீரூற்றுகளும், தனியறைகளுமிருந்தன. பெண்கள் நிர்வாணிகளாக அலைந்து கொண்டிருந்தனர். பர்டனை ஒரு பெண்ணிடம் காட்டி எதையோ பேசி இனி அவன் அங்கேயே இருக்கலாம் என்றாள்.

அங்கு மிகுதியான பெண்களே தங்கியிருந்ததை வந்த சில நாள்களிலேயே தெரிந்துகொண்டுவிட்டான். அவர்கள் வெவ்வேறு அறைகளில் இருந்து வெளிப்பட்டு, பாதி மயக்க நிலையில் நீரூற்றுகளில் சாய்ந்து அமர்ந்தனர். குளியல் கூடம் மிகப் பெரியதாக இருந்தது. பர்டனைக் குளியல் கூடத்தின் பெரிய தூண் அருகே தினமும் அமர்த்திவிட்டு பெண்கள் தண்ணீரில் குளிப்பார்கள். எப்போதாவது வரும் ஆண், திறந்த உடலோடு தண்ணீரில் பாய்ந்து சுகிப்பதும், கூச்சலிடுவதும் தொடர்ந்தன. எட்வர்ட் பர்டன் தேடிவந்த புத்தகம் எதுவும் கிடைக்கவேயில்லை. அவன் நிழல்களைப் போல உடைகளற்ற பெண்நிலையைக் கண்டுகொண்டேயிருந்தான். குளியலறையின்

ஈரப்புகைக்குக் கண்கள் பழகியிருந்தன. வெதுமையும் குளிர்ச்சியும் மாறிய கூடத்தில் தண்ணீர் இரு வழிகளில் குளியல் குளத்துக்குள் வருவதும் வெளியேறுவதுமாக இருந்தது.

சில இரவுகளில் பர்டனும் ஏதாவதொரு பெண்ணோடு படுத்துக் கொள்வான். ஆனாலும் யாவும் மன அயர்ச்சி தருவதாகவே இருந்தன. இலைகள் உதிரத் தொடங்கிய காலமொன்றில் அவன் அந்த விடுதி யிலிருந்து வெளிப்பட்டு நகர வீதிகளில் அலைந்த போது இரண்டு கால நிலைகள் கடந்துபோயிருப்பதை உணர்ந்தான். தனது வேட்கை யின் தோல்வியால் வெளிறியவனாக அவன் ஸ்திரிக் கூடத்துக்குத் திரும்பிய நாளில், ஸ்நேக ஸ்திரியொருத்தி பர்டனிடம் காமப் பிரதிகளை வாசிக்கும் திருவிழா வரப்போகிறது; அன்று யாவரும் அதைப் படிப்பார்கள்; தான் அழைத்துப்போகிறேன் எனச் சொன்னாள். பர்டன் தனது இச்சை மீறியவனாக அந்த நாளை நோக்கிக் காத்திருந் தான். அந்த விழா ஒரு குகையில் நடைபெற்றது. கிளை கிளையாகப் பாதைகள் பிரியும் குகையின் மையத்தில் பெரிய குளமிருந்தது. வெவ்வேறு பக்கமிருந்து பெண்கள் வந்துகொண்டேயிருந்தார்கள். பர்டன் காத்துக்கொண்டேயிருந்தான். ஆண்களும் பெண்களும் மாறி மாறி உடல் உரசி அலைந்தனர். எங்கும் கலவியின் சிதறல்கள், சப்தங்கள், சிரிப்பொலிகள், பர்டன் தான் ஏமாற்றப்படுவதாகவே உணர்ந்தான். அவன் வெளியேறிப் போகும்போது நடன ஸ்திரி அவனைக் கட்டியணைத்துக் காதருகே சொன்னாள்,

“நீ ஒரு முட்டாள், எதையும் புரிந்துகொள்ளவேயில்லை. நீ தேடி வந்த காமநூலின் உள்ளேதான் நீயிருக்கிறாய். இது வெளியே இருந்து வாசிக்கக் கூடிய புத்தகமல்ல. வாசிப்பவன் புத்தகத்தின் பகுதியாகிவிடுவான். நீ தொடர்ந்து காமநூலின் பாத்திரமாகவே தானே இருந்து வந்திருக்கிறாய், அது தெரியவில்லையா? காமநூல் தொடர்ந்து வாசிக்கப்பட்டுக்கொண்டேயிருக்கிறது. சுகித்தலின் முடிவற்ற கிளை கொண்ட ஸ்திரிக் கூடம்தான் அந்தப் புத்தகம். இந்தக் குகை காமநூலின் பிறிதொரு புத்தகம். காகிதமற்ற புத்தகத்தினை நீ கண்டிருக்க முடியாது. காமநூல் ஒரு காகிதமற்ற புத்தகம்.”

எட்வர்ட் பர்டன் அவள் பதிலின் அதிர்ச்சி மீளாதவனாகி அவன் கண்கள் சரிந்துகொண்டிருந்தன.

“நீ காமம் எனும் புத்தகத்தினை ஒருபோதும் ஞாபகத்தில் வைத் திருக்க முடியாது. உலகில் எல்லாப் புத்தகங்களும் நினைவில் வைத்துக்கொள்வதற்கானவை. ஆனால் காமநூல் மறப்பதற்கான புத்தகம். அதன் ஒரு வாசகத்தைக்கூட நினைவில் கொள்ள முடியாது. உடல் தண்ணீரில் நுழையும் போது நீரின் பிரிகை அவிழ்ந்துகொள்ள நீ மூழ்கிக்கொண்டே இருப்பது போல, காமத்தினுள் எடையிழந்து மூழ்கிக்கொண்டேயிரு. தண்ணீர் பக்கங்களற்ற காமத்தின் ரகசிய புத்தகம் ரூபம்” என்றவளாக அவள் விலகிச் சென்றாள். எட்வர்ட் பர்டன் பிறகு தனது தேசதத்துக்குத் திரும்பவேயில்லை. தனது

நினைவுகளைத் தொகுக்க வேண்டுமெனப் பின்னாளில் எப்போதோ முயற்சித்தபோதுகூட அவனுக்கு ஞாபகமேயில்லை. யாவும் மறந் திருந்தன.

மூன்றாம் கதை

மூன்று வயதான நிவேதா எப்போதும் வீட்டினுள் இருக்கும் சிறிய இடைவெளியில்கூட ஒளிந்துகொண்டுவிடுவாள். நாற்காலியின் அடியிலோ, சமையல் அறையின் சிலிண்டர்களுக்குப் பின்போ, கதவோரமோ, படுக்கைக்குள்ளோ எனப் பேதமற்று வீட்டினை எண்ணிக்கையற்ற ஒளிவிடமாக மாற்றினாள். பாட்டியால் அவளைத் தேடிக் கண்டுபிடிக்க முடிவதேயில்லை. பெயரைச் சொல்லி எத்தனை தரம் கூப்பிட்டாலும் நிவேதா சப்தமிடுவதே இல்லை.

பகலில் வீட்டில் நிவேதாவும் பாட்டியும் மட்டுமேயிருந்தார்கள். நத்தையைப் போல ஏதாவது சுவர் மூலையில் ஒட்டிக்கொண்டு சப்தமின்றி நிற்பது நிவேதாவுக்குப் பிடித்திருந்தது. அவள் வீட்டினுள் பதுங்கிப் பதுங்கி மறைவாள். பாட்டியும் அவளும் மூன்றாவது மாடிக் குடியிருப்பில் இருந்தார்கள். வாசற் கதவுகள் எப்போதும் பூட்டப்பட்டு இருப்பதால், அவள் வெளியேறி நடப்பதேயில்லை. பாட்டி எப்போதும் தொலைக்காட்சியின் முன் அமர்ந்தவளாக இருந்தாள். நிவேதாவுக்கு வீட்டினுள் எலிக்குஞ்சுகள் பேசுவதும், எறும்புகளின் வசிப்பிடமும்கூடப் பரிச்சயமாகியிருந்தன. எப்படியாவது ஒரேயொரு முறை அவள் அந்தக் கட்டடத்திலிருந்து கீழே இறங்கிப் போய்வர விரும்பினாள். கதவு திறக்கப்படுவதேயில்லை. மாலை வீடு திரும்பும் அம்மாகூட உள்ளே வந்ததும் கதவை மூடிவிடுவாள். பழகி, பழகி வீட்டின் எல்லா நுழைவுகளும் தெரிந்த நிவேதா ஏதாவது ஒரு பொருளை எங்காவது எடுத்து ஒளித்துவிடுவதில் ருசி கண்டிருந்தாள். கடிகாரங்களை, மலர்க் குவளைகளை, மூக்குக் கண்ணாடியை, பேனாக்களை, சாவிகளையெனப் பொருள்களை இடம் மாற்றி ஒளித்தாள் பாட்டியால் எதையும் கண்டுபிடிக்க முடிந்ததேயில்லை.

நீண்ட மதியமொன்றில் யாரோ மணியை அழுத்தும் ஓசைக்குக் கதவைத் திறந்த பாட்டி, யாருமற்ற வெளியைக் கண்டவளாகக் கதவை மூடாமலே தன் அறைக்குத் திரும்பி வரவே நிவேதா சப்தமற்று வாசலுக்கு வந்து பார்த்தாள். கீழே சரிந்து செல்லும் படிகள் பகலிலும் இருள் கூடியிருந்தன. தயங்கி, பயந்து மெதுவாகக் கீழே இறங்கினாள். இரண்டாம் மாடியில் ஒரு மூன்று சக்கர சைக்கிளும், சில புத்தகங்களும் இறைந்து கிடந்தன. அதன் அருகாமைக்கு வந்து தொட்டுப் பார்த்தாள். யாரோ மேலே ஏறிவரும் சப்தம் கேட்டது. சைக்கிளில் கிடந்த புத்தகமொன்றை எடுத்துக் கொண்டு வேகமாக மேலே ஏறித் தன் வீட்டுக்குள் ஓடினாள். நிவேதாவின் சப்தம் கேட்ட பாட்டி எழுந்து வந்து கதவை மூடிவிட்டுப்

பெயரைச் சொல்லி அழைத்தாள். நிவேதாவிடம் பதில் வரவேயில்லை. அவள் ஒளிந்துகொண்டுவிட்டாள். சிறிய மறைவொன்றில் கால்களை ஒடுக்கி அமர்ந்துகொண்டு வேகமாகப் புத்தகத்தினைப் புரட்டினாள். புத்தகம் முழுவதும் சிறிய மஞ்சள் நிறப் பூக்கள் தெரிந்தன. அதனைத் தனது விரல்களால் தடவிக் கொடுத்தாள். மிருதுவாக இருந்தது. தனது நகத்தால் கிள்ளினாள். புத்தகத்திலிருந்து பூப் பிய்ந்து வெளியே வந்து விழுந்தது. முகர்ந்து பார்த்துவிட்டுத் தூக்கி எறிந்தாள். பூவைக் கிள்ளுவது வேடிக்கையாக இருந்தது. புத்தகத்தினைப் புரட்டிப் புரட்டிப் பூக்களைக் கிள்ளிக் கிள்ளி எறிந்தாள்.

பகல் முழுவதும் அந்த விளையாட்டால் நிரம்பியது. முன் நுகர்ந்திராத ஏதோ வாசனை வீடெங்கும் நிரம்புவதை உணர்ந்த பாட்டி, நிவேதா எதையோ கீழே கொட்டிவிட்டாள் என அடிக்கடி சப்தமிட்டபோதும் அவள் பேசவேயில்லை. அதன் பிந்திய தினங்களில் பூப்பறிப்பது அவளது தினசரி விளையாட்டாகிப் போனது. காலையி லேயே அவள் அந்த மூலைக்குப் போய் உட்கார்ந்துவிடுவாள். பூவைக் கிள்ளிக் கிள்ளி எறிவாள். நிவேதாவின் இயல்பு மாறிய ஒடுக்கம் கண்ட பாட்டி, அவளை ஒரு தரம் பிடித்துக் கேட்டதற்கு, அவள் தான் ஒரு இடத்தில் பூப்பறிப்பதாகச் சொன்னாள். பூச்செடி எங்கேயிருக்கிறது என்று கேட்டதற்கு, சொல்ல மாட்டேன் போ என ஓடிவிட்டாள்.

ஒரு இரவில் நிவேதாவின் அம்மாவிடம் பேச்சுவாக்கில் பாட்டி பூப்பறிப்பதாகச் சொன்னதும், அவள் நிவேதாவைப் பள்ளிக்கு அனுப்பி வைத்தால் சரியாகிவிடுமென்றாள். நிவேதா பள்ளிக்குப் போக மாட்டேன் என அடம்பிடித்து அழுதாள். ஏதேதோ சமாதானம் சொல்லி அனுப்பி வைத்தார்கள். அவள் பள்ளிக் கூடத்திலும் எங்காவது ஒளிந்துகொண்டுவிடத் தொடங்கினாள். நிவேதாவைப் பள்ளிக்கூடம் மெல்ல மாற்றத் தொடங்கியது. அவளும் சீருடைகளுடன் பள்ளி செல்லத் தொடங்கினாள். பின்னொரு நாளில் அவள் தனது புத்தகத்தினை எடுத்துப் பார்க்கும்போது அதில் பூத்திருந்த பூக்கள் எதுவும் கிள்ள வராததை உணர்ந்து கோபப்பட்டவளாக அதைப் பாட்டியிடம் எடுத்துப் போய் 'நீதானே இப்படிச் செஞ்சே' என்று திட்டி விசும்பினாள். பாட்டி 'புத்தகம் யாருதுடி' என விசாரிக்க நிவேதா முழித்தாள். 'திருடிட்டு வந்துட்டியா' என பாட்டி மிரட்டவே அவள் 'போடி' என்றபடி புத்தகத்தினை மாடி யிலிருந்து சாலையை நோக்கி வீசி எறிந்தாள். சுழன்று தரைக்கு வந்த புத்தகம் மீது ஏதோ வாகனம் ஏறிப் போகப் பலவிதமான வர்ணக் கலவை கசிந்து உருகி ரோடெங்கும் நிறமோடியது. சாலையி லிருந்து தான் முன்நுகர்ந்த வாசனை பெருகிக்கொண்டிருந்ததைப் பாட்டி புரியாமல் பார்த்துக்கொண்டிருந்தாள். நிவேதா யாவும் மறந்தவளாக அன்றைய வீட்டுப் பாடக் கணக்கினை எழுதிக் கொண்டிருந்தாள்.

நான்காம் கதை

திரஸ்வதி நதிக்கரையில் இருந்த அரசன் ஒருவனுக்கு விநோதமான தொரு ஆசை உண்டானது. அவன் அதனைத் தனது தேசமெங்கும் அறிவித்தான்.

"தனக்காக ஒரு புத்தகம் எழுதப்பட வேண்டும். ஆனால் அதை எழுதியவன் படித்திருக்கக் கூடாது. தான் படித்த பிறகு அந்தப் புத்தகம் மறைந்துவிட வேண்டும். அதைத் தான் ஒருவன் மட்டுமே படித்தவனாக இருக்க வேண்டும்."

இப்படியாக எழுதியவன் அறியாத புத்தகமொன்றை எவராவது பவுர்ணமிக்குள் எழுதிவராவிட்டால், பண்டிதர்கள், கவிகள், கலைஞர் கள் என தினமும் பலியாவது தவிர்க்க முடியாதென்றான். எழுதியவன் படித்திராத புத்தகத்தினை எப்படி எழுதுவது என அறியாமல் பலரும் அந்த தேசம் விட்டுத் தப்பிப் போகத் துணிந்தனர். அரசனின் திட்டப்படி தினமும் கவிகளும், பண்டிதர்களும் சிரச்சேதம் செய்யப் படுவதும், கைவிரல்கள் துண்டிக்கப்படுவதுமாக நாள்கள் கடந்தன. எவரும் அது போன்ற புத்தகத்தினை எழுதிட முடியாதே என அரசப் பிரதிநிதிகள்கூடத் தனிமையில் பிதற்றினர். திரஸ்வதி நகர அரசனோ காத்துக்கொண்டேயிருந்தான். நாடு விட்டுத் தப்பிப் போக முயன்றவர்களை மிகக் குரூரமான முறையில் ரணதண்டனை செய்து கொன்றான். அந்த நகரை நோக்கி தூர தேசங்களில் இருந்து வரும் கவிகள், அறிஞர்கள்கூட வேறு திசைகளில் போகத் தொடங்கினர்.

பவுர்ணமிக்கு இரு தினங்கள் முன்பாகக் கைகளில் ஊதுவத்தி புகைய தலையில் முண்டு கட்டி, மெலிந்த திரேகமும் ஆழ்ந்த கண்களும் கொண்ட தேசாந்திரியொருவன் அந்த நகரத்துக்கு வந்தான். அவன் பசிக்காக வீதிகளில் அன்னம் கேட்டுக் குரலிட்ட முறை கண்டு ஒருவன் அரசனின் விசித்திரமான ஆசையை எடுத்துச் சொல்லவே தேசாந்தரி சிரித்துக்கொண்டே தான் அப்படியொரு புத்தகத்தினை எழுதி, படிக்க யாரும் கிடைக்காமல் காத்திருப்பதாகச் சொன்னான். தேசாந்திரியை அரசனிடம் அழைத்துப் போனார்கள். அரசன் பிச்சைக்காரனைப் போல் இருந்தவனைக் கண்டு பரிகசித்து,

"நீ, நான் மட்டுமே படிக்கக் கூடிய புத்தகத்தினை எழுதி இருக் கிறாயா?" எனக் கேட்க, வந்தவன் ஆமெனத் தலையசைத்தான். தேசாந்திரியின் கைகளில் எரியும் ஊதுவத்திப் புகையைப் பற்றி அரசன் கேட்டதற்குத் தான் வாசனையின் பாதையில் அலைந்து திரிபவன் என்றும், இது அகில் புகை, கொஞ்சம் முகர்ந்து பாருங்கள் என்றான். அரசன் முகர்ந்துகொண்டிருக்கும்போதே தேசாந்திரி விரித்த புத்தகத்தின் வாசகங்கள் புலப்படத் தொடங்கின.

அரசனைப் போலவே தோற்றமுடைய ஒருவன் இருபுறமும் எரியும் தீயின் நடுவேயிருந்த மண்டபமொன்றில் இருந்து தப்பிக்க

முடியாதவனாக இருந்தான். தன் முழு பலமும் பிரயோகித்துத் தப்பி வெளியேறி வந்தால், மஞ்சள் விரிந்த புலிகள் கொடுவாய் திறந்து துரத்தின. அபாயத்தின் முடிவுறா வலையில் தப்பித் தப்பி அலைந்த அவன், தொலைவில் யாருமற்ற நதியில் ஓடும் படகினைக் கண்டு தன்னையும் ஏற்றிக்கொள்ளக் குரல் கொடுத்தான். படகு மெதுவாக அவனை நோக்கி வரத் தொடங்கியது. நெருங்கி வந்ததும் தாவிப் படகில் குதித்துவிட அவன் எம்பிக் குதித்தான். மறு நிமிஷம் எதுவுமில்லை. அரசன் முடிவுறா கதையினின்று விடுபட்டவனாக மீதிக் கதையெங்கே, எங்கே அந்தத் தேசாந்தரி எனக் கேட்க, தொலைவில் தேசாந்திரி நின்றுகொண்டிருந்தான். அரசன், முடியாத கதையின் மீதமெங்கே எனக் கேட்க, தேசாந்திரி அது தான் வாசித்தறியாதது எனச் சிரித்தான். அரசனுக்குப் புதிர் விடுபடவேயில்லை. நீ எழுதிய அந்தப் புத்தகத்தின் பெயரையாவது சொல்லேன் என உரத்துக் கேட்டான். தேசாந்திரி வெளியேறும் வாசல் வரை வந்து விட்டுத் திரும்பி அரசனைப் பார்த்துச் சொன்னான்,

“சொப்பனம்..

துன்பவியலின் மூன்று காட்சிகள்

நான்கு வயது முடிந்திராத பையனின் பள்ளிக் கூடத்துக்குப் பகல் நேரத்தில் போக வேண்டிய அவசியம் நேர்ந்தது. நகரை விட்டு வெளியே பிரியும் செம்மண் சாலையில் உள்ளே தனித்திருந்தது பள்ளி. காகங்களின் சிறு இரைச்சலும், குழந்தைகளின் பாடச் சப்தமும் விட்டு விட்டுக் கேட்கும் பள்ளி வளாகத்தினுள் நடந்தவனாக ஒரே வர்ணத்தில் உடையணிந்த பலநூறு சிறுவர்களில் எனது பையனைத் தேடுபவனாக இருந்தேன். பள்ளிக் குழந்தைகளுக்கு ஒரே முகஜாடைதானிருக்கிறது. வகுப்பறைகளின் தோற்றம் எப்போதும் இரும்பின் கடினத்தை நினைவுபடுத்துகின்றன. சிறார்களுக்கான வகுப்பின் காலி பெஞ்சில் நோட்டும், கிழிந்த புஸ்தகக் காகிதங்களாக இருந்தன. மைதானத்தில் விளையாடும் சிறுவர்களில் எவன் என் பையன் என அடையாளம் அறிய முடியாத நிறஜாலம் சுழன்றுகொண்டிருந்தது. அவன் என்னைக் கண்டிருக்க வேண்டும். ஒரு உரத்த சப்தமும் வீசிய கைகளுமாக மைதானத்திலிருந்து எனை நோக்கி வந்துகொண்டிருந்தான் விளையாடும் சிறுவர்கள் ஆதங்கத்துடன் எனைப் பார்த்தபடியிருந்தனர். நான் நிற்கும் இடத்துக்கு வருவதற்குள் படபடப்பும் வேகமும் தொற்றிக்கொள்ள அவன் எனை நோக்கி வந்துகொண்டிருந்தான். வகுப்புகள் தொடங்குவதற்கான மணியோசை கேட்டு சிதறி வந்தார்கள் மைதான சிறுவர்கள் திகைப்பும் செய்வதறியா ஆசையுமாக, பின் திரும்பி வகுப்பு மாணவர்களைக் கண்டதும், எனை நெருங்குவதுமாக இரட்டை நிலை கூட வந்து சேர்ந்தான்

பேசிக்கொள்ள எதுவுமில்லை. அவன் எனை எதிர்பார்த்திருக்க வில்லை. அழுத்தமாக விரலைப் பற்றிக்கொண்டவனாகப் பெருமூச் சிட்டு நின்றான். பேச்சற்ற நிசப்தத்தில் மைதானத்தில் இருவர் மட்டுமே இருந்தோம். தொலைவில் குடிநீர்க் குழாயில் நீர் சொட்டிக் கொண்டிருந்தது. வெயில் தனித்தேறிய மைதானத்தில் வெகு காலத்தின் பின் சந்திக்கும் இருவரைப் போல பரஸ்பரம் பார்த்தபடி நின்றோம். அவன் கேசத்தை சரிசெய்தவனாக வகுப்பறைக்குச் செல்லச் சொன் னேன். அவன் விரல்கள் மிக இறுக்கமாக எனைப் பற்றின. திரும்பவும் நான் வகுப்பை நினைவுபடுத்த, விரலில் இருந்து விடுபட்டவனாக மைதானத்தினுள் நடந்து செல்லத் தொடங்கினான். எதற்கெனத் தெரியாததொரு துக்கம் சட்டென முகத்தில் வீசியடிக்க, அவனைப் பார்த்தபடி நின்றேன். மிக மெதுவாக, உலகின் முடிவுறாத புலத்தை நோக்கி நடப்பவனைப் போல வேதனையை விழுங்கியபடி நடக்கிறான். பாதித் தொலைவில் அவன் வகுப்பறைக்கும் எனக்கும் இடையில் நின்றவனாக எனைப் பார்த்தபடியிருந்தான். குழாயில் சொட்டும் தண்ணீர் ஓசை பலமாகக் கேட்கிறது. ஒரு குற்ற மனப்பாங்கின் சாயல் படிவது போல நான் அவனை எதிர்கொள்ள மனமற்று வேறு எதையோ பார்க்கிறேன். அவன் சலனமற்று எனைப் பார்த்தபடி நிற்கிறான். அந்த இடத்திலிருந்து யார் முதலில் விடுபட்டுப் போவது என ஒரு தீவிரம் கூடி, நான் பின்வாங்கி நடக்கிறேன். தொலைவு விரிகிறது. அவன் ஓர் ஆரஞ்சு நிற வண்ண வெளியில் நிற்கிறான். அந்தக் கண்கள் எதையும் பேச இயலாத ஒரு துக்கிப்பு ஏறி மினுங்குகிறது. பின்பு அவன் வகுப்பறையை நோக்கி நடக்கிறான். சில நிமிஷங்கள் என் பார்வையில் இருந்து வகுப்புக்குள் நுழைந்து விட்டான். வெயில் தனியே நடமாடும் அந்த மைதானத்தின் காட்சி அலைந்தது. பகல் நேரத்தில் பள்ளிக்குச் சென்று குழந்தைகளைப் பார்ப்பது எளிதானதல்ல. தைரியமற்ற மனமும், நடுக்கமுமாக நிற்கும் நான் வயதைக் கலைந்திருந்தேன். மதிய உணவுக்கான உடைகளுடன் இப்போதே வந்து சேர்ந்திருந்த அம்மாக்களை, வயதானவர்களை நேர்கொள்ள முடியாமல் அவசரமாக அலுவலகம் திரும்பினேன். மாலை வீடு திரும்பிய பையன் பகலில் நான் வந்து போனதை மறந்தவனாக வாசலில் கூச்சலிட்டு விளையாடிக் கொண்டிருந்தான்.

2

மிகச் சிறிய சாக்பீஸ் பொம்மையது. எப்போதோ வீட்டுக்கு வந்து போன உறவுக்காரப் பெண் செய்து தந்திருந்ததைப் பள்ளிக்கூடம் விட்டு வரும் வழியில் தொலைத்துவிட்டிருந்தான். வீடு வந்து சேர்ந்த பிறகே அது தொலைந்துபோனதைத் தெரிந்திருக்க வேண்டும். நான் வீடு திரும்பும் மாலையில் சாலையின் புதர்கள் ஓரத்தில்

எதையோ தேடிக்கொண்டிருப்பவர்களாக மூன்று சிறுவர்கள் நின்றிருந்தார்கள். அவர்களில் அவனுமிருந்தான். என்ன தேடுகிறார்கள் எனக் கேட்பதற்குள் சக சிறுவர்கள் பதில் பேசினார்கள். அவன் கண்கள் சிவந்து இருந்தன. உலகின் வெகு விசேஷம் அந்த சாக்பீஸ் பொம்மை மட்டும்தான் என்பது போல எனைப் பார்க்கவும் விருப்பமற்று நின்றான். மஞ்சள் நிற சாக்பீஸ் பொம்மையது என்பது நினைவில் லேசாக நிழலாடியது. நானும் தேடுபவர்களில் ஒருவனாகி னேன். உலகில் அன்றாடம் காணாமல் போய்க்கொண்டேயிருக்கும் பொருள்கள் யாவும் எங்கு செல்கின்றன. எவர் கரங்கள் நாம் அறியாமல் பொருள்களைக் கவர்ந்து கொள்கின்றன.

பள்ளிக்கூடப் பாதையின் வழியில் புழுதி நிரம்பியிருந்தது. குத்துச் செடிகளையும் புழுதியையும் விலக்கி விலக்கித் தேடும் போது உதிர்ந்த இறகுகள், ஒளிந்துகொண்ட கோலிக் குண்டுகள், எவரது பாடப் புஸ்தகத்தில் இருந்தோ உதிர்ந்த பக்கங்கள் தென்பட்டன. கோழிக் குஞ்சுகள் போல நாங்கள் நிலைகொள்ளாமல் அலைந்தோம். பள்ளிக்கும் வீட்டுக்கும் இருந்த தூரம் அன்று மட்டும் மிகத் தொலைவுக்குச் சென்றுவிட்டது போல் இருந்தது. சிறுவர்கள் புதரடியில் கிடைத்த பொருள்களுடன் விளையாடத் திரும்பிவிட்டனர். தலை மட்டும் கழட்டி வீசப்பட்ட பொம்மையொன்று வெளிறிய கண்களும், மொட்டைத் தலையுமாக ஒரு வேலியடியில் கிடந்தது. உடலற்ற பொம்மையைக் காண்பதும் அச்சமூட்டுவதாகவே இருக்கிறது. இதுவரை எவரெவர் வசமிருந்தோ நழுவித் தொலைந்துபோன பொருள்கள் யாவும் பூமியின் அடித்தட்டில் ஒரு சல்லடையில் வீழ்ந்து கிடக்கு மென்றும், அந்தச் சல்லடையை உலுக்கி பொருள்களை எப்போதாவது மீட்டுக்கொள்வார்கள் என நான் கேள்வியுற்ற ஒரு கதையை வழியில் அவனிடம் சொன்னேன். அவன் செவி கொடுக்கவேயில்லை.

மாலை அடங்கி இரவு கரைந்துகொண்டிருந்தது. வேறு பொம்மை செய்துவிடலாம் என்றோ, இதை விடச் சிறந்த பொம்மையை வாங்கலாம் என்றோ சொல்லிய யோசனைகள் பலிக்கவேயில்லை. உலகம் ஆயிரக்கணக்கான நாவுகளைப் புதைவுற வைத்திருப்பது போலவும், அதில் ஒரு நாக்கு சுழன்று சாக்பீஸ் பொம்மையைக் கவ்விக்கொண்டதான மனநிலையை அவன் கொண்டிருந்தான். நமது கண்களின் உதவியால் தொலைந்துபோன பொருள்களைத் தேட முடியாது. உள்ளுணர்வில் அது தெரிந்தால் மட்டுமே கையில் அகப்படும் எனப் புரிந்தது. இரவு கூடியதால் வீடு திரும்பலாம் என்றேன். அவன் வீட்டுக்கு வருவதற்கு விருப்பமற்றவனாகப் புழுதி யிலே உட்கார்ந்துகொண்டான். பொருள்கள் மறைவு கொண்டுவிட்டன. இரவின் சப்தம் கசிகிறது. அவன் இன்னமும் தேட வேண்டுமென்பவ னைப் போல நிசப்தித்துவிட்டபின் எதையும் தேடாமலும், பேசிக் கொள்ளாமலும் அதே இடத்தில் எவ்வளவு நேரம் இருந்தோம் எனத் தெரியாது. வீடு திரும்பிய இரவில் அவன் சாப்பிடாமலே தூங்கிவிட்டான். ஒரு சிறிய சாக்பீஸ் பொம்மையை மீட்டுத் தர

வழியற்ற ஒருவனின் இருப்பைக் கேள்விக்குள்ளாகியபடி அவன் கைகள் தூக்கத்திலும் எதையோ தேடிக்கொண்டிருந்தன. நான் நீண்ட யோசனைகளுடன் வெகு நேரம் விழித்தபடியிருந்தேன். காலை அவன் மிகுந்த பரபரப்பாக நடுவே மஞ்சள் சாக்பீஸ் பொம்மையை வைத்து விளையாடிக் கொண்டிருந்தான்.

தொலைக்கவில்லையா, இல்லை அவனே மீட்டுக் கொண்டானா எப்படி எனக் கேட்டுக்கொள்ளவில்லை. உலகின் நாவு எப்போதும் துடித்துக்கொண்டு இருக்கிறதே என்ற நினைவு மட்டும் மனதை என்னவோ செய்தபடியே இருந்தது.

3

அவ்வளவு உயரத்திலிருந்து விழவில்லையாயினும் அந்த அருவி வசீகரமாகவே இருந்தது. அருவியை வாழ்வில் முதன்முதலாகப் பார்க்கும் ஐந்து வயதில் அவன் என் அருகிலே நின்று கொண்டிருக் கிறான். சிறிய பாறையொன்றில் நீர் சிதறி வீழ்கிறது. அவன் அருவி, அருவியென வழியெங்கும் சொல்லிவந்த சப்தம் நின்றுவிட்டது. கைகளை இறுக மூடியபடி அவன் கண்கள் நிலைகுத்த, பார்த்தபடி யிருக்கிறான். வெகு சிலரே குளித்துக்கொண்டிருந்த அருவியை நோக்கி நடக்கத் தொடங்கியதும், அவன் வேண்டாம்! வேண்டாம்! என அடிக்குரலில் சொன்னான். அவன் கால்கள் நகர மறுத்தன. அவன் என் பிடியிலிருந்து தப்பி சிமெண்ட் தளத்தின் படியிலேறிக் கொண்டான். திரும்பவும் அவனருகில் போய் நின்றபடி என் கைகளைப் பற்றிக்கொண்டு கூடவே வந்துவிடச் சொன்னேன் அவனது மறுப்பு இறுகியிருந்தது. அவன் மறுப்பை மீறியவனாக, தூக்கிக்கொண்டு நடந்தபோது அவன் கண்கள் நடுங்க, பல் கிட்டிக்க, வேண்டா 'மென்றான். அருவியின் அருகாமைக்கு வந்தபோது அவன் உடல் துள்ளியது. கூந்தலைப் போல விரிந்து கிளைத்த அருவியினுள் நடந்து நின்றபோது அந்தக் கண்கள் தண்ணீரை விட்டு விலகியோடிட நினைக்கும் மூர்க்கமேறியிருந்தன. அவன் அருவியை மிகக் கோபமாகத் திட்டியபடி என்னை விட்டுப் படி நோக்கி ஓடினான். ஈரமான தலையும் உடலுமாக அவன் அருவியைப் பார்க்கவும் மனமற்று எதிர்திரும்பி உட்கார்ந்துகொண்டான். நீண்ட சமாதானத்தின் பிறகும் அவனுக்கு அருவியைப் பார்க்கக்கூட மனமில்லை. அறைக்குத் திரும்பும் வழியெங்கும் அவனது இறுகிய கைகளில் கடினம் குறைய வில்லை. பின் எந்த இடத்தையும் பூங்காவையும் பார்க்க விருப்பமற்று, அறையிலேயிருந்தான். அருவி தப்பி சாடும் மிருகமென அவன் கண்களில் ஒளிந்திருந்தது. அவனது பேச்சற்ற இறுக்கத்தைக் கலைப்பதற் காக ராட்சச ராட்டினம் ஒன்றின் பெட்டியில் நானும் அவனோடு ஏறிக்கொண்டேன். ராட்டினம் சுழலும்வரை சிடுப்பாகவிருந்தவன், அது வானை நோக்கி உயர்ந்ததும் மிக மெதுவாகச் சிரிக்கத்

தொடங்கினான். நீண்ட நாள்களுக்குப் பிறகு ராட்டினம் ஏறிய எனது அடிவயிறு மேலேறியது போல கண்கள் ரத்தம் பொங்கி தலை கனத்தது. கம்பியை இறுகப் பற்றிக்கொண்டேன். வானமும் மண்ணும் இடம் மாறிச் சுழன்று விருட்சங்கள் வானில் தோன்றிக் கலைந்தன. அவன் முகம் இப்போது தாள முடியாத சிரிப்பில் இருந்தது. வேகம் கூடிக்கொண்டேயிருக்க பொருள்கள் சுழிந்து நிறம் மட்டுமே கரைந்தோடும் காட்சிரூபம் தெரிந்தது. பச்சை, நீலம், வெளிறிய அலுமினிய நிறமெனத் திட்டுகள் சிதறின. அவன் கண்கள் அந்தச் சுழற்சியினுள்ளும் எதையோ தேடிக் கொண்டிருப் பதைக் கண்டேன். வேகம் குறைய, ராட்டினப் பெட்டி குலுங்கி ஊஞ்சலைப் போல் ஆடியது. அவன் என் கைகளைப் பற்றியபடி தொலைவைக் காட்டியபடி சொன்னான்,

"அருவி."

பார்க்குமுன் அருவி தரையிறங்கியது. அடுத்த சுற்றினுள் அவன் அருவியைக் காட்டித் தந்தான். அருவி ஒரு வெண்ணிற வானவில்லைப் போலச் சரிந்து வீழ்ந்துகொண்டிருப்பதை இங்கிருந்து பார்க்க லேசாகப் பயமாகவே இருந்தது.

விருஷி

இரண்டாவது பிரிவு குற்றவியல் நீதிமன்றக் கட்டடச் சுற்றுச் சுவருக்குள் கிளைத்துப் படர்ந்திருந்தது வாதுமை மரம். கருஞ்சிவப்பு வெளிறிய இலைகளும் அணில்களுமாக நிழல் பூத்திருந்ததை எதிரில் உள்ள கட்டட வேலைக்கு வரும் தங்கம்மா பார்த்துக்கொண்டே இருந்தாள். வாதுமை எவரும் நெருங்க முடியாத இலந்தைச் செடிகளின் கிளைப்பு பெருகிய பாதையில் இருந்தது. இலைகளின் அடியில் மறைந்த வாதுமைக் காய்களின் பூசிய நிறத்தினின்று எளிதில் கண் அகற்ற முடியவேயில்லை. கட்டட வேலைக்கான சாந்துச் சட்டியுடன் ஏணியில் ஏறித் திரும்பும்போது பிஞ்சுகள் பெருகியிருப்பதைப் பார்ப்பாள். இரு பிளவு கொண்ட கிளையொன்றின் வாடிய இலையடுக்கில் செம்மை படர ஒரு வாதுமை கனிந்து கொண்டிருந்தது. அதன் சிவப்புத் திட்டுகள் தொலைவிலிருந்தே நாவில் ருசியைத் தூண்டியபடியிருந்தன. கனிவின் பாதையில் சென்று கொண்டிருந்த பழம் உதிரும்போது எடுத்துச் சுவைத்துவிட வேண்டும் என்ற ஆசை பெருகிட தங்கம்மாள் அதைப் பார்த்தபடியே இருப்பாள். வேலையதிகமான நாள்களின் காலையில் அவள் கொத்தனார்கள் வரும் முன்னதாக வந்துவிடும்போது அக்கனியைப் பார்த்தபடியே தனக்குள்ளாகவே அதன் ருசியைப் பேசிக் கொள்வாள். அது காற்றின் வெளியில் சலனமற்றிருக்கும். அணில்களின் பார்வை விலக்கி அந்தக் கனி ஒளிந்திருந்தது. செவ்வெறும்புகள் ஊர்ந்து கனியை நோக்கிப் போவதால் வாதுமை ருசியேறி வருவதை உணர்ந்தாள். தங்கம்மாளுக்குக் கல்யாணமாகி ஒரு

வருஷமே ஆகியிருந்தது. அதிலும் சில மாதங்களுக்குள்தான் சூல் கொண்டிருந்ததால் நாவில் எப்போதும் மென்புளிப்பு கசிந்துகொண்டிருந்தது. அவள் கவனிக்கும்போதெல்லாம் வாதுமைக் கனியிருந்த கிளை தாழ்வதும் உயர்வதுமாகவே இருந்தது. மரத்தினின்று பிரியப் போகும் கனிக்கான பிரிதல் மொழியற்று இலைகள் வெளிறி வெறித்தன. அவள் மாலையில் வீடு திரும்பும்போதெல்லாம் தான் மறுநாள் வருவதற்குள் அந்தக் கனி வீழ்ந்துவிடக் கூடாதே என ஒரு விதமான பதற்றம் கொள்வாள். கனிவின் கதி மிக மெதுவாகவும் அபூர்வமாகவும் கூடுகிறது போலும். கனியின் சாறு மின்னோட்டம் போலச் சுழன்று கொண்டிருந்தது. ஒரு மதியத்தின் உலர்ந்த வெயிலில் அவள் மரத்தைக் கவனித்துக்கொண்டிருக்கும்போது வாதுமைக் கனி திமிறி நிலம் நோக்கிச் சிறு சப்தமின்றி விழத் தொடங்கியிருப்பதைக் கண்டவளாக அது தரையை அடையும் முன்னதாகத் தன் கைவசமாக்கிட முள் வெடித்த இலந்தைப் புதருள் தாவி நடந்துபோகும் முன்னதாகக் கனி ஏதோ ஒரு புதரடியில் வீழ்ந்து அடங்கியது. தவிப்போடு இலந்தை முள் விலக்கி வாதுமைக் கனியைக் கண்டபோது அது கைதொடும் தொலைவில் கிடந்தது. ரத்தம் துளிர்க்கும் விரல்களோடு உடலைச் சரியச் செய்து கனியைக் கை நெருங்குகையில் வாதுமை முன் சென்றுகொண்டேயிருப்பது போல இருந்தது. தங்கம்மாவின் கைமீறிக் கனி செம்மண் பிளவுகளுக்குள் போய்க்கொண்டிருந்தது. அடைய முடியாது போய்விடுமோ என்ற மனத்துடன் அவளும் தன் கரம் நீட்டியபடி குனிந்துகொண்டேயிருந்தாள்.

செம்மண்ணுக்குள் கனி சர்ப்பமெனச் சீறி மண் சுழிப்பினுள் போய்க்கொண்டேயிருந்தது. பற்றி ருசித்திட வேண்டுமென ஆசை மீறி அவளும் பாய்ந்தாள். பூமியின் உள்ளேயும் குறுகிய பாதைகளில் மெதுவாக, கனி நிதானமாக உள் சென்றது. வாதுமைக் கனியும் பின்தொடரும் ஸ்திரியுமாக இருவர் பூமியின் இருள் ஆழத்தினுள் சென்றுகொண்டிருந்தனர். நிசப்தத்தின் சாலையில் மெல்ல விரையும் தண்ணீர், தன்னைக் கடந்து செல்லும் கனி, ஸ்திரி இருவரையும் கண்டதாக விலகிச் சென்றது. பார்த்தறியாத ஆழத்தின் இருள் அடுக்குகளில் விசையேறிய துரத்தலில் அவர்கள் சென்றனர். கைப்பற்றும் இடைவெளியில் முன்பின் தப்பி, கனி தானொரு மண் உயிரெனக் கொண்ட நகர்வு உள்ளோடிக்கொண்டேயிருந்தது. வாதுமைக் கனி தன் முடிவுறாத பயணத்தில் எவர் கையும் தன்னைப் பற்றி விடாதபடி உடலை உதிர்த்தபடி உருமாறி பாறையடுக்கு துளைத்து தண்ணீரின் குகை தேடிச் சென்றுகொண்டிருந்தது. தங்கம்மாள் கனியை முன் சென்று தடுத்து ருசித்துவிட முயன்றவளாகப் போய்க்கொண்டே இருந்தாள். திறக்காத தன் எண்ணிக்கையற்ற உதட்டுடன் நீரைக் குடித்து கனி வெம்மையை உண்டு கறுமையடுக்குகளினுள் ஒளிந்து அதைப் பற்ற முடியாத துயரம் ததும்ப தங்கம்மாவின் உடலும் மெலிவு கொண்டு நீர்த்துவாரங்களில் தேடியது. கனி தன் உருவம் கலைந்து மேல் நோக்கிய பயணத்தைத் தொடங்கியதைக்

கண்ட தங்கம்மா துரத்திக்கொண்டே வந்தாள். கனி மீண்டும் நிலம் பார்த்து மேல்நோக்கிப் போகவே அவள் சீறிப் பின் சென்றாள். பார்த்துக்கொண்டிருக்கும்போதே கனி தன் முகம் சிலுப்பி இரு மென் இலை மடிப்புகளாக நிலம் கீறி வெடித்து, பக்கவாட்டில் படர்ந்தது. கனியைப் பின் தொடர்ந்தவள் மேல் ஏறும் முன்பு கிளைகள் விரிந்து வான் நோக்கி உயர்ந்து வளர்ந்தன. காற்றில் நடனமிடும் இலைகளின் ஏதோ ஒரு சுழற்சியில் வாதுமை தப்பிச் செல்வதைக் கண்டவளாக தங்கம்மா நீந்தி முதல் கிளையினுள் அமர்ந்தபோது வாதுமை இரண்டாம் கிளையாயிருந்தது.

அவள் இரண்டாவது கிளை பற்ற அது இடப்பக்கமாகத் தாவி விரிந்து தப்பியது. தன் கை தப்பித் தப்பிக் கிளைத்த வாதுமை விருட்சமாகி எண்ணிக்கையற்ற இலை பெருகிப் பூத்து தன் உருப் போலவே எண்ணிக்கையற்ற காய்களைப் பெருக்கியது என்றாலும், தங்கம்மாவின் கண்களில் தான் தொடர்ந்த முதல் வாதுமைக் கனி எதுவெனத் தெரிந்துகொண்டே இருந்தது. அக்கனி ஒரு குருவியின் முன் அமர்ந்து எதையோ கேட்டுக்கொண்டிருந்தது. தன்னை ஒரு முறைகூடப் பின் திரும்பிப் பார்க்காத அக்கனி மீது ஆத்திரம் கொண்டவளாக அவள் தன் கை நீட்டிப் பறித்திட முயன்றாள். இலையில் உருண்டு கொண்டிருந்த ஒரு துளிப் பனியில் தன் உருக் கண்டாள். வெளிறிய தலையும் மூப்புமான தோற்றம் கண்டு புரியாமல் நேரமாகிவிட்டதோ என எட்டித் தாவியபோது வாதுமை மரத்தில் ஒரு சிறிய முறிவின் சப்தத் துணுக்கு ஒலித்து அக்கனி உதிர்ந்து, மீண்டும் தரைநோக்கிப் போகத் தொடங்கியது. துயரத்தின் கடுமையேறித் தலைகீழாக அவளும் புலம்பியபடி துரத்தி காற்றில் சுழன்று வீழ்ந்துகொண்டிருந்தாள். தரை மிக அருகாமை தெரியும் முன்னே கனி வீழ்ந்து தாவியது. தீராத ஆத்திரத்தில் நாவு கடித்து தங்கம்மாள் தரையில் வீழ்ந்த ஓசை எழுந்தது. தன் பின்னால் வீழ்ந்தவளைப் பார்க்க, கனி திரும்பியபோது தங்கம்மாவின் ஜாடையில் இளம் பெண்ணொருத்தி மரத்தடியில் நின்றிருந்தாள். கனியின் திகைப்பு கலைத்து நிதானமாகத் தன்னெதிரே கிடந்த வாதுமைப் பழத்தைக் குனிந்து எடுத்துக் கடித்தபடி நடந்து போனாள் தங்கம் மாளின் மகள்.

மூன்று வான சாஸ்திரிகள்

வேறு வேறு தேசங்களில் இருந்தபடி நட்சத்திரங்களின் பாதையைத் தொடர்ந்து கவனித்து வரும் அந்த மூன்று வானசாஸ்திரிகளும் முப்பது வருடங்களுக்குப் பிறகு திரும்பவும் பயணத்தைத் தொடங்கியிருந்தார்கள். மூவரில் வயதானவன் ஜெருசலேத்தின் புறவெளிக்குத் தனது கழுதையோடு வந்து சேர்ந்து ஈச்ச மரத்தினடியில் அமர்ந்து கொண்டான். வயோதிகம் அந்த மனிதனை வெகுவாக உருமாற்றியிருந்தது. தனது முகத்தினை அவன் குளிர்ந்த தண்ணீரால் கழுவிக்கொண்டவனாக கழுதையருகிலே படுத்துக் கொண்டு விட்டான். மற்ற இருவரும் வந்து சேரும் வரை காத்திருக்க வேண்டியதாக இருந்தது. அன்றைய இரவு அபூர்வமானதொரு இசையைப் போல விரிந்திருந்தது. வானம் கருநீலம் கூடிக்கொண்டே வந்தது. பின்னிரவில் இரண்டாவது பயணியின் கழுதைச் சப்தம் கேட்டு விழித்தபோது பார்வை தெரியாத இருள் படர்ந்திருந்தது. எந்தத் திசையிலிருந்து வருகிறான் என்று தெரியவில்லை. அவர்களுக்கு வலது பக்கம் நகரம் துயிலின் மெல்லிழைகளை நெய்து கொண்டிருந்தது. இரண்டாவது மனிதன் முகமெங்கும் புழுதி படரத் தனது கழுதையோடு எதையோ சம்பாஷித்தபடி இருளுக்குள்ளிருந்து வெளிப்பட்டான். அவன் கண்கள் இருளுக்குப் பழகியிருந்தன. அவனும் சில நாள்கள் பயணித்திருக்கக் கூடுமென்பது அவனது கழுதையின் மூச்சில் நடுங்கி வெளிப்பட்டுக் கொண்டேயிருந்தது. படுத்திருந்த முதியவனை அடையாளம் கண்டுகொண்டவனாக அவன் மரியாதை செய்தபடி அருகில் அமர்ந்துகொண்டான்.

முதியவன் வந்தவனைப் பார்த்துக்கொண்டேயிருந்தான்.

"நீயும் உருக்குலைந்திருக்கிறாய்... வயோதிகம் என்னை முற்றாகப் பீடித்துவிட்டது. இப்போதும் நட்சத்திரங்களின் குரலில் இருந்து மீள முடியவேயில்லை."

இரண்டாவது மனிதன் சொன்னான்,

"அந்தச் சிசு பிறந்த சில நாள்களில் நாம் சந்தித்துக்கொண்டது. எத்தனையோ கோடைக் காலங்கள், மழைக் காலங்கள் போய் விட்டன. நானும் வானின் கிளைப் பாதைகளிலே இரவைக் கழிக்கிறேன். தானியக் கதிர்களைப் போல் ஆகாசம் விளைச்சல் கண்டு கொண்டேயிருக்கிறது."

முதியவன் மரியாள் என்னும் மெலிந்த ஸ்திரியின் சிசுவை மாட்டுத் தொழுவத்தில் கண்ட காட்சியின் நினைவுக்குள் பிரவேசித்தவனாக நிசப்தத்தில் ஆழ்ந்தான். மூன்றாவது வானசாஸ்திரியின் வருகைக்காகக் காத்திருந்தார்கள்.

விடிகாலைக்கு முன்பாக இரண்டு கழுதைகள் வரும் ஓசை கேட்டுக் கண்விழித்து முதியவன் எழுந்துகொண்டான். நீல வெளிச்சம் எங்கும் விரிந்திருந்தது. குளிர்ச்சியான காற்றுடன் மூன்றாவது மனிதன் வந்து சேர்ந்தான். அவன் மிகவும் களைப்புற்றிருப்பதாக முக அடையாளம் தெரிந்தது. ஒரு கழுதையின் மீது இருந்த சுமைகளைக் கீழே இறக்கி வைத்துவிட்டு அருகாமையில் வந்து சிரித்தபடி சொன்னான்.

'வழியில் கழுதையின் கால் முறிவு கண்டுவிட்டது. வேறு கழுதை தேடிப் பயணித்து வருகிறேன். பாவம் அவையும் வெயிலில் வேதனை தாளாது அடியெடுக்கத் தயங்குகின்றன.

கால் முறிவு கொண்ட கழுதை ஒரு காலைத் தூக்கியபடியே இருளில் நின்றுகொண்டிருந்தது. அவனும் தன் பேழையை எடுத்து அணைத்தபடி களைப்பில் உட்கார்ந்தான். சப்தம் கேட்டு இரண்டாவது மனிதனும் விழித்துக்கொண்டுவிட்டான். மூவரும் ஒன்றாக அமர்ந்தபடி வானைக் கண்டார்கள். தொலைவில் நட்சத்திரம் மினுங்கிக் கொண்டிருந்தது.

"அந்த மனிதன் அற்புதங்கள் எதையும் செய்வதேயில்லை. அவன் அலைந்துகொண்டேயிருக்கிறான் என்கிறார்கள்" என்றான் மூன்றாம் மனிதன்.

"நீ அவனைக் கண்டாயா..? எப்படியிருக்கிறான்? சிசுவாக அவன் கண்களை நேர்கண்டபோது அதில் புன்னகை ஒளிர்ந்து கொண்டிருந்தது. பிறகு நான் காணவேயில்லை" என்ற முதியவனின் குரலை அறிந்தபடி மற்ற இருவரும் சொன்னார்கள்,

"நாங்கள் அவனைக் கண்டதேயில்லை. முப்பது வருசத்தில் அவனைப் பற்றிப் பல சேதிகளை மட்டுமே அறிந்து கொண்டிருக்கிறோம். அவன் அற்புதங்கள் செய்வது இல்லை. சாதாரண மானுடன்

என்கிறானாம்."

முதியவன் திரும்பவும் சொன்னான், "மிக வேதனையாகிவிட்டது. நமது அறிவிப்பின் தோல்வி, நாவைக் கசப்புறச் செய்கிறது."

இரண்டாவது மனிதன் சொன்னான், "அந்த மனிதனை நட்சத்திரங்கள் அடையாளம் காட்டின. நாம் அவன் பிறப்பை மட்டுமே அறிவித்தோம்."

மூன்றாவது மனிதன் உடனே சொன்னான், "நாம் வான்பிறப்புக்கான பரிசுப் பொருள்களை ஏந்தியபடிதானே அலைந்துகொண்டிருக்கிறோம். முப்பது வருடங்களுக்குப் பிறகு அதே நட்சத்திரம் திரும்பவும் தோன்றி ஒளிர்கிறதே. அது வியப்பாக இல்லையா?"

மூவரும் அதை ஒப்புக் கொண்டவர்களாகப் பார்த்துக்கொண்டே இருந்தனர். முதல் மனிதன் தனது பேழையில் வாசனைப் பொருள்களையும், இரண்டாம் மனிதன் நல்முத்துகளையும், மூன்றாம் மனிதன் மூலிகைகளையும் கொண்டுவந்திருந்தனர். அவர்கள் தங்கள் கழுதைகளை விடுத்து நட்சத்திரம் ஒளிர்ந்த நகரின் வீதியை நோக்கி நடந்துகொண்டிருந்தனர்.

ஜெருசலேம் நகரம் மலைகளுக்கு ஊடே மயக்கமூட்டுவதாக இருந்தது. உறக்கத்தின் நெடிய சாலைகளில் அவர்கள் நடந்தனர். மனிதர்களே எதிர்ப்படக் காணோம். யாரோ அழைக்கும் குரல் கேட்டு இரண்டாம் மனிதன் திரும்பினான்.

"மூன்று வானசாஸ்திரிகளே. நீங்கள் தேடி வந்த நட்சத்திரம் சிறைச்சாலையின் இடதுபக்க அறைக்கு நேராகச் சுழன்று நிற்கிறது. அங்கேதானே போக வழி தேடுகிறீர்கள். .?"

மூவரும் குரல் வந்த திசையைப் பார்த்தபோது ஒரு வீட்டின் இடிந்த கல்திண்ணையில் கிடந்த குருடன் ஒருவன் தனது கைத்தடியை எடுத்து ஊன்றியபடி தெருவின் காற்றில் விரல்கள் அலைபட அவர்களை நோக்கி வந்தான். மிக நெருக்கமாக வந்து முகர்ந்து பார்த்தான்.

"சாவின் கொச்சை வாடை. உங்கள் மீதிருந்து கசிகிறது." முதியவன் அவன் கைகளைப் பற்றியபடியே கேட்டான்,

"அந்தகரே.. உங்களுக்கு வானசாஸ்திரம் தெரிகிறதா என்ன...

"நீங்கள் மூவரும்தானே. மரியாவின் பிள்ளையை வானவராக அறிவித்தவர்கள்? உங்கள் அறிவிப்பின் பலியாகத் தேசமெங்கும் எத்தனையாயிரம் சிசுக்கள் பலியாகின. என் வீட்டிலும் மூன்று சிசுக்கள் உயிர்பலியானதை மறந்துவிட முடியுமா?"

"நாங்கள் பிறப்பையே கொண்டு வருகிறோம்."

"கூடவே நிழலாக சாவையும். இல்லையா?" எனக் குருடன் கேட்டபடி அவர்களைத் தடவிப் பார்த்தான். பிறகு கசப்புற்றவனாகச் சொன்னான்,

“மரியாவின் மகன் தன்னைக் காப்பாற்றிக்கொள்ளக்கூட இயலாத பலவீனன். அவன் பித்தேறியவனைப் போலப் பேசுகிறான். அவன் வேசிகளை ஸ்நேசிக்கச் சொல்கிறான். ரோகிகளை முத்தமிடுகிறான்.”

மூவரும் பேசாமல் கேட்டுக்கொண்டிருந்தனர். குருடன் அவர்களிடம் சொன்னான்,

“திரும்பிப் போய்விடுங்கள். உங்கள் வருகை சாவின் துர்வாசனையை ஊரெங்கும் பரப்பும் முன் போய்விடுங்கள். நான் உங்களை அனுமதிக்க மாட்டேன்.”

“சாந்தி கொள்க... நாங்களும் களைப்படைந்துவிட்டோம். இனி எவருக்காகவும் காத்திருக்க முடியாது.”

குருடன் புழுதி படிந்த தெருவில் உட்கார்ந்துகொண்டுவிட்டான். அவர்கள் நட்சத்திரம் ஒளிர்ந்த திசையைப் பார்த்து நடந்தனர். அது சிறைச்சாலையின் இடதுபக்கம் பிரிந்தது. காவல் வீரர்கள் நிழலைப் போல நடந்தலைந்தனர். அவர்களுக்கு அருகாமையிலே நடந்தபோதும்கூட அவர்கள் அதைக் கவனம் கொள்ளவேயில்லை. கைதிகளும்கூடக் கனவின் ருசியைப் பகிர்ந்தபடியே இருந்தனர்

சிறைச்சாலையில் ஒரேயொரு மனிதன் மட்டுமே விழித்துக் கொண்டிருந்தான். அந்த அறையில் விடிகாலையின் ஒளி இறங்கிக் கொண்டிருந்தது. அவர்கள் அறைமுன் வந்தபோது கதவுகள் திறந்து கொண்டன. கம்பளி ஆடையணிந்த அந்த மனிதன் இளைஞனாகவே யிருந்தான். சிகை தோளில் புரண்டு கொண்டிருந்தது. அவர்களைக் கண்களாலேயே வரவேற்று இருக்கச் சொன்னான். மூத்த வானசாஸ்திரி அவனைப் பெயர் சொல்லி அழைத்தார்,

“நசரேனே.. எங்களை நினைவிருக்கிறதா?”

“ஞாபகமிருக்கிறது. என் பிறப்பின் முதல் நாள்களில் வந்து போன வானசாஸ்திரிகள்.”

“நாங்கள் வந்தது நீ பிறந்த சில நாள்களில்”

அவன் புன்னகைத்தான். அவர்கள் முன்போலவே தங்கள் பேழை களை அவனிடம் தந்து வாழ்த்தைச் சொல்லினர். அவன் மௌனமாக ஏற்றுக்கொண்டபடி சொன்னான்,

“உங்கள் முகங்கள் கலக்கமடைந்துள்ளன.”

“மரியாளின் மகனே.. அதுதான் எங்களுக்குப் புரியவில்லை. இந்த இரவில் பிறப்பின் நட்சத்திரம் உன் அறைக்கு வெளியே ஏன் மினுங்குகிறது. என.”

“நட்சத்திரங்கள் பொய்ப்பதில்லையே..” என்றான் இரண்டாம் மனிதன். மூன்றாவது வானசாஸ்திரி கேட்டான்,

“நசரேனே, கள்வர்களைவிடவும் கீழாகத் தண்டிக்கப்பட்டு இருக்கிறீர்கள். இப்போதாவது நீங்கள் யாரென்பதை அறியச் செய்யக் கூடாதா?”

அந்த இளைஞன் புன்னகைத்தபடியே சொன்னான்,

"நான் மரியாளின் மகன். தச்சன்... வேறு எதை அறிவிப்பது... அப்போது இரண்டாவது மனிதன் தாகமிகுதியால் அறையில் இருந்த மண்குவளையை எடுத்துப் பார்த்தான். ஒரு சில துளி தண்ணீரே யிருந்தது. அதை நாக்கில் தடவியபடி அவன் கேட்டான்,

"தாகம் மிகுதியாகிவிட்டது. இதில் தண்ணீர் வரச் செய்யுங்கள்... நசரேனே. ."

"இங்கே தண்ணீர் கிடையாது. நீங்கள் நீரூற்றுக்குத்தான் செல்ல வேண்டும். என்னால் தண்ணீரை வரவழைக்க முடியாது..

"அற்புதங்கள் உங்களால் நிகழ்த்தப்படுவதில்லையா

"நான் அற்புதங்களுக்குக் காரணமானவன் அல்லன்.

அவர்கள் ஏமாற்றமுற்றார்கள். அந்த மனிதன் மீது நம்பிக்கையற்ற வர்களைப் போல அவனிடமிருந்து விடைபெற்றுக் கொண்டனர். அந்த இளைஞன் புன்னகைத்தபடியே காத்துக்கொண்டிருந்தான்.

அவர்கள் நகரத்தின் வழியில் திரும்பும்போது அதே குருடனைப் பார்த்தார்கள். அவன் அவர்களை மறித்துக் கேட்டான்,

"அந்த மனிதனைக் கண்டீர்களா...? அவன் என்ன சொல்கிறான்...

இரண்டாவது வானசாஸ்திரி சலிப்பாகச் சொன்னான்,

"ஒரு குவளைத் தண்ணீரை அற்புதத்தால் வரவழைக்க முடியாதவ னாகிவிட்டான். தாகம் மிகுதியாக உள்ளது. காலிக் குவளை ஏதாவது கொடுங்கள். நீரூற்றில் தண்ணீர் பிடித்து வருகிறேன்."

குருடன் தனது இடிந்த திண்ணையில் ஏறிச் சிறிய மண் குவளையை எடுத்து வந்து கையை அதனுள் விட்டுப் பார்த்துவிட்டுச் சொன்னான்,

"நீரூற்று அருகேயில்லை. வலப்புறம் போக வேண்டும்... கொண்டு போ..."

காலிப் பானையை இரண்டாவது மனிதன் வாங்கியபடி அதன் உள்ளே பார்த்தபோது ஈரம் கசிவு கொண்டது. விரல்களால் தொட்ட போது தண்ணீர் சுரந்துகொண்டிருந்தது. அவன் பார்த்துக்கொண்டி ருக்கும்போதே பானை நிறைந்துவிட்டது. அவன் தாகம் மீறிக் குடித்தான். மற்ற இருவரும்கூட அதனைக் குடித்துவிட்டு குருடனிடம் சொன்னார்கள்,

"உனது காலிப் பானையில் தண்ணீர் நிறைந்து சுரக்கின்றது. அதிசயம்."

குருடன் தனது உதடுகளைப் பானையில் வைத்தான். மண் ருசியோடு குளிர்ச்சியான நீர் உடலேறியது. அவனுக்குக் கோபமாகி விட்டது.

"மாய வேலைகள் வேண்டாம். போங்கள். போய்விடுங்கள்."

அவர்கள் ஈச்ச மரத்தடிக்கு வந்தபோது இரண்டு கழுதைகள்

தனியே அலைந்துகொண்டிருந்தன. மூன்றாவது மனிதன் தனது கால் ஒடிந்த கழுதையைத் தேடியபோது அது இருளில் எதையோ மேய்ந்தபடி நடந்து வந்தது. அதன் கால் சொஸ்தமாகியிருந்ததை வியப்புடன் அறிந்தபடி சொன்னான்,

"கால் முறிவு சரியாகிவிட்டது. நம்ப முடியவில்லை. அதிசயம்."

அவர்கள் தங்கள் தேசங்களை நோக்கிப் பிரிந்து பயணிக்கத் தொடங்கினர். வழியில் காலியான தங்கள் பேழைகளைத் திறந்து பார்த்தபோது அவர்கள் மரியாளின் மகனுக்குத் தந்த அதே பொருள் கள் அவர்கள் பெட்டியிலே திரும்பவும் இருந்தன. அதோடு ஒரேயொரு உப்புக்கல் மட்டும் அதிகமாகவிருந்தது. உப்பை எடுத்து ருசித்தபோது அது தித்தித்தது. வேறு வழிகளில் மூவரும் சொன்னார்கள்,

"ஒருபோதும் நடவாத அதிசயம்.

அப்போது வானில் ஒரு குரல் கேட்டது.

'நாளை மரியாளின் மகன் இரண்டாம் முறையாகப் பிறக்கப் போகிறான். முன்போல சிசுவாக அல்ல. வாலிபனாக... அவன் இனி, தன்னை அறிவித்துக்கொள்வான்.'

மூன்று வானசாஸ்திரிகளும் இளைஞனாகப் பிறப்பு கொள்ள இருந்த நசரேனாகிய இயேசுவைப் பற்றிப் பின் எதையும் அறிவிக்கவே யில்லை.

பவதாரம்

நில அளவையாளரான வெங்கோபராவ் கிழக்குக் கடற்கரை நிலப்பகுதியின் மாதிரிச் சாலையமைப்புப் பணிக்கான காலத்தில் இந்தச் சம்பவம் நடைபெற்ற தாக அவருடைய வருடாந்திரக் குறிப்பேட்டில் பதிவு செய்யப்பட்டிருந்தது. தன்னோடு அப்போது நான்கு செயின்மேன்கள் உடனிருந்ததாகவும், எரியும் கோடையில் தான் நாவுலரத் தாகம் மீறி அலைவுற்ற போது கீகாட்டின் ஒதுங்கிய கிராமமான தெக்கரை யின் வட கோடித் தெருவுக்குத் தன்னை அழைத்துப் போன ஒருவன் இடிந்த வீடொன்றின் வெளியே எப்போதும் நீர்க் கசிவு கொண்ட மண்வளையமிட்ட நிலத்தினின்று ஒரு பிடி மண் எடுத்து வந்து நாவில் சுவைக்கச் சொல்ல, அந்த மணல் தண்ணீராகக் கசிந்து ஓடியதைத் தனது ஏழாவது குறிப்பேட்டில் தனியே பதிவு செய்திருந்தார்

மே 24 தெக்கரை முகாம்

மேற்படி இடத்துக்கு நான் சர்வே சாதனங்களுடன் சென்றிருந்த போது கண்ட ஒரு நிகழ்ச்சியைப் பற்றி ஊரில் சொல்லப்பட்டு வரும் கர்ணபரம்பரையான தகவல்களை அவர்கள் சொன்ன விதத்தில் எழுத்தில் பதிவு செய்திருக்கிறேன். அதன்படியே பூப்பெய்தி சில மாதங்களே ஆகியிருந்த ரெங்கம்மாளை உறவு விட்டுப் போகக்கூடாதெனத் திருமா கல்யாணம் செய்து ஊருக்குக் கூட்டி வந்தபோது, அவளுக்கு மிகக் குறைவான வயதே ஆகியிருந்தது. தாயற்ற பெண்ணாக இருந்ததால் அவளுக்குத் தகப்பன்

தன் வீட்டிலிருந்த ஒரு ஜோடி ஆடுகளையும் தாராக்கோழி ஒன்றையும் சீர் கொடுத்தனுப்பி இருந்தான். ரெங்கம்மாள் வீட்டில் தாயார் வைத்திருந்த பண்டபாத்திரங்களோடு தகப்பன் எங்கிருந்தோ வாங்கி வந்த சிவப்பு மண்குடமொன்றையும் உடன் எடுத்து வந்தவளாகக் காடு வந்திருந்தாள்.

ஊரில் எப்போதும் உலர்ந்த காற்றின் இரைச்சல் அடங்கவேயில்லை. தனித்த பனைகளின் இருப்பு அதிகத் தனிமை கொண்டிருந்தது. வீடுகளின் மூடிய மௌனத்தினைக் கலைக்காது தெருக்களின் பகலில் நரிகள் வந்து அலைந்தன. கரிமூட்டம் போடுபவர்களின் சாம்பல் படிந்த முகங்களில் தீராத அலுப்பும் இறுக்கமும் சேர்ந்திருந்தன. வெக்கை கனன்றுகொண்டேயிருந்தது. பகலில் எல்லா சந்தினுள்ளும் விம்விம்மென சப்தம் மோதி உருண்டது.

ரெங்கம்மாள் வந்த நாளில் இருந்து வீட்டு வேலைகள் சரியாக இருந்தன. பசுக்களையும் கோழிகளையும் கவனிக்கவும் தானியங்களைப் புடைத்து இடிக்கவும், சொஸ்தமற்று இருக்கும் திருமாவின் தாய்க்கு மருந்து அரைப்பதிலுமாக பகல் ஓடி மறைந்தது என்றாலும் அவள் நீண்ட பகலை இங்குதான் சந்தித்தாள். மிகுந்த பிரயாசையுடனே பகல் நகர்ந்து மேற்கு நோக்கிச் சென்றுகொண்டிருந்தது. உறக்கம் எவருக்கும் முற்றாகத் தீரவேயில்லை. தோய்ந்த கண்களும் சுயபிதற்றலும் கொண்ட பெண்கள் செம்மை படிந்த தலையுடன் திருகைச் சுற்றியபடியே இருந்தார்கள்.

புருஷன் வீடு வந்த இரண்டாம் வாரத்தின் இரவில் அவள், வாய் குறுகிய சிவப்பு மண்குடத்தை எடுத்துக்கொண்டு நல்ல தண்ணீர்க் கிணற்றுக்குப் போனபோது இரவில் ஆந்தைகள் தரையிறங்கி படியெங்கும் நின்றன. இருட்டு ததும்பிக்கொண்டிருந்தது. கிணற்றுப் படிகளில் துளிர்த்த ஈரம் பற்றிய பாதத்துடன் அவள் கிணற்றின் நடுவில் நின்ற பட்டியக் கல்லில் நின்று வலப்பக்கம் வாளியை விட்டுத் தண்ணீரை இறைத்தாள். கயிறு போய்க் கொண்டேயிருந்தது. ஏதேதோ யோசனைகள் கலைந்து பெருக, தண்ணீர் இறைத்துப் பானையில் ஊற்றியபடியே இருந்தாள். ஏழெட்டு வாளித் தண்ணீர் ஊற்றிய பிறகு குடம் நிறைந்துவிட்டதா எனப் பார்க்கக் குடத்தினுள் கையை விட்டாள். அது வெறுமையாக இருந்தது. பானைக்குள் மீண்டும் கையை விட்டுத் துழாவினாள். அது காலியாகவே இருந்தது. வெளிச்சம் வரும் திசை பார்த்துக் குடத்தைத் தூக்கி முகத்துக்கு அருகாமைக்குக் காட்ட உயர்த்தியபோது தண்ணீர் ஓடும் சத்தம் போல நகர்வு கேட்டது. ஆனால் பானையில் தண்ணீர் இல்லை. குளிர்ச்சி மட்டும் நிரம்பிக்கொண்டிருந்தது. பானை ஒழுகுகிறதா, உடைந்துவிட்டதா எனப் பார்க்கத் திருப்பிக்கொண்டேயிருந்தாள். பானையில் விரிசல் இல்லை. எதுவும் புரியாத திகைப்பில் வாளியைக் கிணற்றில் விட்டு இறைத்துக் குடத்தினுள் ஊற்றினாள். தண்ணீர், சிறிய வாய் விளிம்பு வழி குடத்தினுள் போவதைக் கண்டாள்.

இப்போது கையை உள்ளே விட்டபோதும் பானையின் உள்ளே தண்ணீரே இல்லை. ஒருவேளை குடத்தில் சல்லடையாகப் பெருகியுள்ள ஆயிரம் கண்களும் திறந்துவிட்டனவா என்ற பயமும் திகைப்புமாகப் பானையைத் தூக்கிக்கொண்டு வீடு வரும்வரை குழப்பத்தினுள் அலைந்தபடி இருந்தாள். உறக்கம் யாவையும் மறக்கச் செய்தது. பகலில் இந்த நினைவுகள் எழவேயில்லை. மறுநாளின் இரவு சிவப்புக் குடத்தோடு வீட்டில் கிடந்த கறுத்த பானையொன்றையும் உடன் கொண்டு போனாள்.

வழியில் சூட வாசனை பெருகியது. சர்ப்ப நடமாட்டம் இருக்கிறது எனக் கண்டவளாகக் கிணற்றில் நின்று தண்ணீர் இறைத்து ஊற்றினாள். கறுத்த பானையில் தண்ணீர் நிரம்பி வழிந்தது. சிவப்புக் குடத்தில் ஊற்றிய தண்ணீர் குடத்தினுள் இல்லை. அவள் குனிந்து குடத்தினை முகர்ந்து பார்த்தாள். ஈரவாசனை பெருகியது. ஆனால் ஊற்றிய தண்ணீரைக் காணவேயில்லை. அன்று இரவு நெடுநேரம் அவளால் முடிந்தவரை தண்ணீரை இறைத்து இறைத்துச் சிவப்புக் குடத்தில் ஊற்றிக்கொண்டேயிருந்தாள். குடத்தில் ஒரு துளி நீரில்லை. நீருள்ள கறுத்த பானையையும், காலியாக இருந்த சிவப்புக் குடத்தையும் வீடு கொண்டுவந்து சேர்ந்தாள். அவளுக்கு எதுவும் புரியவில்லை. இனி சிவப்புக் குடம் பயன்படாது என்பது போலக் குடத்தினை மரப்படியின் அடியில் வைத்துத் திரும்பினாள். பின் அதைக் கிணற்றடிக்குக் கொண்டு போகவேயில்லை.

புருஷ சுகமும் வேலைகளும் அவளை வலிய ஸ்திரியாக்கியது. சூல் கொண்டவளாக ஆணும் பெண்ணுமாகக் குழந்தைகளைப் பெற்றாள். சில வருஷங்களிலே அவள் வீட்டில் பேச்சரவம் கூடிக் கொண்டே வந்தது. ஊரைப் பற்றிப் பரஸ்பரமிருந்த திகைப்பு யாவும் கழன்றிருந்தது. வெக்கையைக் குடித்து ருசித்த உதட்டுடன் அவள் பகல் வெயிலின் அத்துவான வெளியில் ஆடுகளுடன் அலைந்து வருவாள். குழந்தைகள் ஊரை அதிசயித்துச் சுற்றின. கோடை நாளுக்கு நாள் இறுகிக்கொண்டே வந்தது. மாடுகள் பெருமூச்சு விடத் தொடங்கியிருந்தன. எவரும் எதிர்பாராமல் ஊர்க்கிணறு வற்றித் தூர்ந்துபோனது. அதன் தீவிரம் தொற்றிய கண்களுடன் பெண்கள் தாங்களாகவே பேசியலைந்தனர்.

வெயிலுக்கு முன்பாகத் தண்ணீர் தேடி நெடும் தொலைவு போயினர். பனங்காடைகளின் குரலைக் கேட்டபடி சூரியன் உயர்ந்து கொண்டிருந்தது. ரெங்கம்மாள் தன் பிள்ளைகளையும் தண்ணீர் எடுக்கக் கூட்டிப்போனாள். இரவில் உறக்கத்தின் பிடிக்குள் எவரும் அடங்கவேயில்லை. காலிப் பானைகளைத் தேடி எடுத்துக்கொண்டு போயினர். இன்னமும் பானைகள் தேடி அவள் அறையின் மரப்படியைத் துழாவியபோது, அங்கே சிவப்புக் குடம் அப்படியே இருந்தது. நெடுநாள்களாகப் புழங்காத அந்தக் குடத்தினை எடுக்க விரும்பி அதனுள் கையை விட்டாள். எதுவோ அகப்பட்டது. வெளியே

எடுத்துப் பார்த்தாள். ஓர் உதிர்ந்த வேப்பிலை. கையில் எடுத்துப் பார்த்தபோது அதில் ஈரம் ததும்பிக்கொண்டிருந்தது. இப்போதுதான் உதிர்ந்தது போலப் பசுமை காயவில்லை. உள்ளே தண்ணீர் தென்படு கிறதா எனப் பார்த்தாள். காலியாக இருக்கும் பானையில் எப்படி இத்தனை நாள்களாக வேப்பிலை உலராமல் கிடந்தது எனப் புரியாமல் அதை நகட்டி எடுக்கும்போது நெளிந்து கிடந்த டம்ளரொன்று நழுவிக் குடத்தினுள் விழுந்தது. அவள் குடத்தைச் சமையல்கட்டுக்குத் தூக்கி வந்தாள். சாம்பல் போல் இருள் எங்கும் நிறம் மாறியிருந்தது. குடத்துக்குள் விழுந்த டம்ளரை எடுக்கக் கையை விட்டுத் துழாவி எடுத்துப் பார்த்தாள். அதில் தண்ணீர் இருந்தது. சுவைத்துப் பார்த்தாள். வெடித்த உதடெங்கும் நீர் ஓடி மறைந்தது. இன்னொரு முறை பானைக்குள் டம்ளரை விட்டுக் கோரினாள். டம்ளரில் தண்ணீர் நிரம்பி வந்தது. ஆச்சரியம் தீராமல் அவள் தண்ணீரை மோந்து மோந்து குடித்துக்கொண்டேயிருந்தாள். பானை காலியாக இருக்கிறது. ஆனால் டம்ளருக்குள் தண்ணீர் வருகிறது என்பது புரியாது, உறங்கிய யாவரையும் விழிக்கச் செய்து, தண்ணீரை எடுத்து எடுத்துக் கொடுத் தாள். தூங்குபவர்களை எழுப்பித் தண்ணீர் கொடுப்பது புரியாமல் திருமாவும் குடித்தான். நீண்ட நாள்களுக்குப் பிறகு நீரின் சுவை ஈர்ப்பு அவனைப் பற்றித் தலைக்கேறியது. அந்தச் சிவப்பு மண்குடத்தில் தண்ணீர் தேங்கி நிற்காமல் வாய் முதல் அடி வரை சுற்றி ஓடிக் கொண்டேயிருந்ததால் பானையின் உள்வெளி காலியாக இருந்ததை அவர்கள் அறியவேயில்லை. குடிக்கக் குடிக்க காலிப் பானையில் தண்ணீர் வந்துகொண்டேயிருந்தது. ஆசுவாசம் கொண்டவர்களாக ‘இனித் தண்ணீர் தேடி அலைய வேண்டியதில்லை’ என்றாள் ரெங்கம்மாள். நீரின் பிரிகள் சுற்றியலையும் குடம் பற்றி எவரிடமும் அவள் சொல்லிக் கொள்ளவேயில்லை.

குழந்தைகள் விருப்பம் மீறிட அந்தத் தண்ணீரைக் குடித்தபடி அலைந்தனர். திருமா யாவரிடமும் சொல்லி அலைந்தான். பயணி களும், இரவில் தாகம் அடங்காதவர்களும் அவள் வாசலில் வந்து நிற்கத் தொடங்கினர். எப்போதும் ஒரு குவளைத் தண்ணீர் மட்டும் காலிப் பானையில் இருந்துகொண்டேயிருந்தது. திருமா எங்கிருந்தோ ஆட்டு மந்தையிடும் கீதாரிகளைக்கூட தாகசாந்திக்குக் கூட்டி வந்தான். கோடை இரவில் உத்திரங்களில் பதுங்கிய தேள்கள் உதிரத் தொடங் கின. நள்ளிரவிலும் வீடு தேடி வருபவர்கள் அதிகரிக்கத் தொடங்கினர். ரெங்கம்மாள் ஓர் இரவில் கதவைத் திறந்துவிட்டபடியே உறங்கிப் போயிருந்தாள். எங்கிருந்தோ வந்த இரண்டு உவர்மண் எடுப்பவர்கள் தண்ணீரைக் குடித்துவிட்டு குடத்தையும் சேர்த்து தூக்கிக்கொண்டு வெளியேறும்போது குழந்தைகளில் ஒன்று விழித்துக்கொண்டு சப்தமிட, அவர்கள் தங்கள் கழுதைகளோடு இருளில் மறையும் முன்பு பிடிபட்டு விடக் கூடாதென்ற வேகத்தில் தூக்கி எறியப்பட்ட அந்தக் குடம் சிதறி உடைந்து, தண்ணீர்ச் சுழல் ஒன்று விரிந்து சுற்றி வட்டமிட்டுச் சுழித்து பூமியினுள் போய்ப் பதுங்கிக்கொண்டது. அதன் பிந்தைய

நாளிலிருந்து அந்த நீர்ச்சுழி கொண்ட இடத்தில் மணல் போலவே உருக்கொண்டு நீர்த்துகள்கள் நிறைந்துகொண்டு இருப்பதாகவும், அந்த நீர்த்துகள்கள் மணலைப் போலக் கையில் நெறுநெறுவென அள்ள முடிவதற்கும், அது நாவிலிட்டதும் நீர்மை கொள்வதற்கும் சுபாவமே காரணம் என்றார்கள். எதன் சுபாவம் என யாரும் திட்டமாகச் சொல்லவில்லை.

பச்சை நடனம்

குறுமலையின் சரிவில் வளர்ந்திருந்த ஒரு புல்லுக்கு நீண்ட நாள்களாகவே ஒரு ஆசை இருந்துவந்தது. அது வானில் குருவிகள் தாழ்வதும் உயர்வதுமாகப் பறப்பதைப் பார்த்துக்கொண்டே இருக்கும். குருவிகள் ஏனோ ஒரு இடத்தில் நிலை கொள்வதேயில்லை. அருகாமை வேம்பின் கிளைகளில் அமர்ந்துகொண்டு இலைகளுக்குள் பதுங்கிச் சப்தமிடுவதும் ஒன்றையொன்று சாடி விரட்டுவதும் வேடிக்கையாக இருந்தன. மேற்கிலிருந்து திடீரெனக் குருவிகளின் படையொன்று எங்கிருந்தோ வந்திறங்கி இலை தெரியாமல் பேசி ஓயும்போதெல்லாம் புல்லுக்கு வேதனை அதிகமாகும். அது தானும் வேம்பைப் போல குருவிகள் வந்து அமரக் கிளையைப் படரவிட்டபடி நிற்க முடியாதா என ஏங்கியது. ஒரு நாளில் தரையை வட்டமடித்துச் சாகசம் காட்டும் குருவியொன்று தன் வாலின் வசீகரம் காட்டி புல்லிடம் ஹே, ஹே எனக் குரலிட்டது. புல் தன் தலையை நிமிர்த்தி, குருவியிடம் சொன்னது.

"ஏன் இப்படி நிலைகொள்ளாமல் பறந்து அலைகிறாய். என் கிளையில் வந்து அமரேன் "

குருவிக்கு இதைக் கேட்டதும் சிரிப்பாக வந்தது. அது புல்லிடம் சொன்னது,

"நீ என்னைச் சுமக்க முடியாத பலவீனியாக இருக்கிறாய். அதனால் அலைகிறேன்."

புல் அருகாமை வேம்பைக் காட்டிச் சொன்னது,

"நான் அந்த வேம்பைவிடப் பலமானவள். காற்றைவிட மிருதுவான என் கிளையேறி உட்காரும் லாவகம் உனக்குத் தெரியாது. விழுந்துவிடப் போகிற

பயம் உனக்கு. அதை என்னிடம் மறைக்கிறாய்."

இதைக் கேட்டதும் குருவி மிகுந்த நேசத்துடன் கேட்டது,

"உன் கிளைகளில் அமர்ந்தால் என்ன தருவாய்?"

புல் உடனே சொன்னது,

"என் பச்சை நடனத்தைக் கற்றுத் தருவேன்."

அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போதே காற்று தன் வலிய ஓட்டத்தால் எங்கும் விசை கொண்டது. குருவி அம்பென விடுபட்டுத் தப்பியது. புல் வளைந்து நடுங்கி நின்றது. குருவியைக் காணவில்லை என்றதும் அது தன்னிடம் பயந்து ஓடிவிட்டதாகத் தனக்குத் தானே பேசிக்கொண்டபடி அசையத் தொடங்கியது. பின் அந்தக் குருவி எதிர்ப்படும்போதெல்லாம் புல் பரிகாசம் செய்யத் தொடங்கியது.

"ஹே பலவானே, கிளையேறத் தெரியாத ஊர்சுற்றியே."

குருவிக்குப் பரிகாசம் ரொம்பவும் விருப்பமானதாகிவிட்டது. காற்றோடு புல்லும் குருவியும் பேசிக் கலைந்துகொண்டே இருந்தன. ஒரு இரவில் காற்றோடு கூடிய மழை தென்திசை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. யாவும் நனைந்து ஒடுங்கின. இருள் நிரம்பி எங்கும் குளிரின் வெடவெடப்பானது. வேம்பில் பறவைகளின் கீச்சொலிகள் கேட்டபடியிருந்தன. தன் கதகதப்பில் நூறு பறவைகளை அடக்க முடியாத துக்கம் மீறிப் புல் வேம்பைக் கண்டபடியிருந்தது. விடிகாலையில் குருவி புல்லின் அருகாமைக்கு வந்தபோது அதன் இதழ்களில் ஒரு பனித் துளி உருள்வது தெரிந்தது. அருகாமை மரத்தில் நிற்கும் குருவியின் பிரதி பிம்பம்கூடப் பனித்துளியில் தெரிந்தது. உடனே குருவி சப்தமாகப் புல்லைக் கூப்பிட்டது.

"தூங்கும் புல்லே, கண்ணை விழித்துப் பாரேன், உன் கிளையில் அமர்ந்திருக்கிறேன்."

நடுக்கத்தோடு புல் கண்ணை விழித்தபோது பனித்துளியில் குருவியின் உருவம் தென்பட்டது. புல் தன் உடலை வளைத்து குருவியை நெருக்கமாகப் பார்க்க முயன்றது. பனித்துளி உருள உருள குருவியின் பிம்பம் அலைவு கொண்டது. புல் இந்த வேடிக்கையைக் கண்டபடி சொன்னது,

"ப்பூ இவ்வளவுதானா, என்னவோ என் கிளையேறினால் உடம்பே முறிந்துவிடுமென்றாயே. நீயோ என்னைவிட எடையற்ற பூஞ்சை, பலவீனி."

எடையற்ற குருவியைக் கண்டபடி புல் தன் கைகளை வீசி உற்சாகமாக நடனமிடத் தொடங்கியது. வெயிலின் முதல் கிரணங்கள் படர்ந்துவர, பனி சப்தமின்றி உருண்டு கீழே விழ, குருவியின் பிம்பம் கலைந்து சிதறியது. தான் சொல்லியபடியே குருவிக்குப் பச்சை நடனத்தைக் கற்றுத்தர புல் ஆடத் தொடங்கி, யாவும் மறந்து ஆடிக் கொண்டே இருந்தது. பின் அந்த நடனம் இன்று வரை நிற்கவேயில்லை.

சப்த தாரா

ஹைடல்பெர்க் பல்கலைக்கழகத்தின் ஆய்வு மாணவியான அனுநாயகா தனது வார்த்தைகளின் சமனநிலை பற்றிய கட்டுரையின் பின் இணைப்பாக்கியுள்ள இந்தக் கதைகளும், இவை நடந்ததாக அறியப்படும் சூழல், காலம் மற்றும் மனிதர்களின் சாயல்களும் திரும்பத் திரும்ப சில முன்பின் தொடர்பற்ற பல நிகழ்வுகளை நினைவூட்டுகின்றன என்பதோடு, இந்தக் கதைகளின் முகச் சாடைகள் கொண்ட சில குறுங்கதைகள் பறவைகளைப் போல இடம் விட்டு இடம் வெகு தூரம் பறந்து சென்றிருக்கின்றன என்பதும் விசித்திரமான நிஜம்.

அனுநாயகா இக்கதைகளை எந்த மொழியில் இருந்து எடுத்தாளுகிறார் என்றோ, இதன் இந்த வடிவத்தைத் தவிர வேறு வடிவங்களை அவர் அறிந்திருப்பாரென்றோ எவ்விதமான குறிப்புகளுமில்லை. ஒருவேளை தனது மிஞ்சிய ஆய்வு தரும் மனச்சோர்விலிருந்து எழுதியிருக்கக் கூடும். ஆனால் இக் கதைகள் அவரது வழியாக வெளிப்பட்டது என்பதைத் தற்செயல் எனக் கருதுவதை விடவும் திட்டமிட்ட, முன்முடிவு பெற்ற ஒரு நிகழ்ச்சி எனக் கொள்வதையே விரும்புகிறேன்.

சிவப்புக் கூழாங்கல்

ஒரே பெயருடைய இரண்டு ஸ்திரிகளில் ஒருத்திக்கு இது நடந்திருக்கக் கூடும். இருவரும் ஒரே நேரத்தில் வேறு வேறு நிலப்பகுதிகளில் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். இரண்டு ஸ்திரிகளுக்குள்ளும்

இருந்த பொது ஒற்றுமைகளை நீங்கள் அறிவது முக்கியம். இருவரும் எல்லா நாள்களிலும் ஒரே நிமிடத்தில் உறக்கத்திலிருந்து விழித்துக் கொள்வார்கள். நதியின் மேற்கில் இருந்தவள் நீராடப் பயணிப்பதும், நதியின் கிழக்கில் இருந்தவள் நதிக்கு அருகாமை கொள்வதும் சமநேர அளவிலே நடைபெறக் கூடியவை. இரு ஸ்திரிகளும் மெலிந்த உடலமைப்பும் கரிய நெளி கூந்தலும் கொண்டிருந்தார்கள். மிக மெதுவாக அடிமைகள் தூக்கிச் செல்லும் பல்லாக்கில் இருந்தபடி நீராடும் துறைக்கு வரும்போது அவர்கள் தற்செயலாக ஒரு மயிலைக் காண்பதென்பதுகூட ஒன்று போலவேதான் நடந்து வந்தது. அவர்கள் இருவரும் நீராடும் நதி வெகு தொலைவிலிருந்து ஓடியலைந்து செல்கின்றது. இரு ஸ்திரிகளும் நதியின் வேறு வேறு நீராடும் துறைகளில் நின்றவர்களாக ஸ்படிகமெனத் துல்லியம் கொண்ட நதியின் போக்கினைக் கண்டுகொண்டிருப்பார்கள். கால்கள் நதியினுள் பிரவேசிக்கும்போது இருவர் முகத்திலும் கூடும் சிரிப்பை நதி மட்டுமே பார்த்துச் செல்கின்றது. சிகையை நீரில் அவிழவிட்டவர்களாக அவர்களின் சிரம் நீரில் மெல்ல அமிழும் போது நதியின் வேகம் மாறிவிடும். ஒரே போல் இருந்தவை மட்டுமன்றி, இரு ஸ்திரிகளின் வேறுபாட்டை அறிந்துகொள்வதும் உங்களுக்கு அவசியம். இருவரில் ஒரு ஸ்திரி இடக்கைப் பழக்கம் கொண்டவள். அவளது நாசிக்கு இடதுபுறமாக மச்சமொன்று துளிர்த்திருக்கும். அவள் துயில்வதும் விளையாடுவதும் இடதுபுறச் சார்பில் அமைந்தவை. மற்றவள் இதே மச்சத்தையும், துயிலலையும் வலது பக்கம் கொண்டவள்.

தனித்தனியே நடைபெறும் இவர்களின் அன்றாடத்தைச் சேர்ந்து பார்க்க எவரும் இல்லாததால் இருவரும் மற்றவர் பற்றிய நினைவி னின்று தமது சுயலயிப்பிலே இருந்தனர்.

இரண்டு ஸ்திரிகளும் ஒரு அதிகாலையில் நதியின் முகப்புக்கு வந்து சேர்ந்தபோது, நதி துயில் கலையாமலிருந்தது. குஞ்சு மீன்களும் கூழாங்கற்களும் ஓடிக்கொண்டிருந்தன. வலது கரையைச் சேர்ந்தவள் தற்செயலாக ஓடிக்கொண்டிருக்கும் ஊசி மீன்களுக்கு நடுவே சிவப்பு நிறத்தில் ஒரு கூழாங்கல்லைக் கண்டாள். தனது வாழ்நாளில் அவள் இது போன்றதொரு வர்ணக் கூழாங்கல்லைக் கண்டதேயில்லை. தனது உள்ளங்கைகளுக்குள் பொதிந்து எடுத்தபோது இதே நிகழ்வு இடது கரையில் இருந்தவளுக்கும் நடந்தேறியது. இருவரும் தத்தமது உள்ளங்கைகளை விரித்தபோது கண் வடிவம் போலிருந்த சிவப்பு நிறக் கூழாங்கல் எடையற்றதாக, ஒரு மலரைப் பறித்துக் கையில் வைத்திருப்பதைப் போலவும் இருந்தது. இத்தனை அடர் சிவப்பு அதனுள் குருதியென உறைந்திருப்பதைக் கண்டு மனம் மீறி அதை இருவரும் முத்தமிட்டுக்கொண்டு தங்களது அறைகளுக்குள் திரும்பினர்.

ஒரு ஸ்திரி படுக்கையின் அருகாமையிலிருந்த பாவை விளக்கொன் றின் அடியில் தன் செந்நிறக் கல்லைப் போட்டிருந்தாள். இரவில் உறக்கம் கூடி அமிழ்ந்துகொண்டிருந்தபோது குதிரைகளின் குளம்

பொலிச் சப்தம் மிக நெடுக்கமாகக் கேட்க, எவரோ நகரைக் கைப்பற்றிவிட்டார்களோ என மனதில் உறைந்த பயம் பீறிட விழித்துக்கொண்டு அவசரமாகத் தடுப்புகளை விலக்கி வெளியே கண்டபோது வீதி தெளிவற்ற வெளிச்சத்தில் புதைந்திருந்தது.

ஆறுதலான பெருமூச்சுடன் அவள் படுக்கைக்குத் திரும்பியதும், இடைவிட்டு எப்போதாவது ஒரு குதிரையின் காலடிச் சப்தம் பீறிடுவதும் அடங்குவதுமாக இருந்தது. அவள் சப்தத்தின் நுனியைக் கண்டவளைப் போலப் பின்தொடர்ந்து வந்தபோது அது சிவப்பு நிறக் கூழாங்கல்லில் இருந்து கசிவதைக் கண்டாள். வேறு வேறு உயரங்களில், வர்ணங்களில் பெருமூச்சு நிரம்பிய குதிரைகள் இழுத்துக் கொண்டும், வாலசைத்தபடியும் ஆயிரக்கணக்கில் நதி நீரைப் பருகியபடி கனைத்துக்கொண்டுமிருந்தன. அந்தக் கூழாங்கல்லினுள் குதிரைகளின் முகங்கள் வட்டமிட்டன. அவள் வீறிட்டு அலறினாள். இதே நிகழ்வின் மறுபக்கமெனத் தனது வாசனாதிரவியங்கள் நடுவே போடப்பட்டிருந்த சிவப்பு நிறக் கூழாங்கல்லினுள் கறைபடிந்த பற்களும் கோரைத் தலை மயிரும் கொண்ட மாட்டுத் தோலையணிந்த வீரர்களில் பலரும் மிருகங்களென நீரில் வீழ்ந்து நிர்வாணமாகக் குளிப்பதும், இடைவிடாத கூக்குரலும், தண்ணீரை உறிஞ்சி வானில் கொப்பளிப்பதையும் ஆவேசம் நிரம்ப உதைப்பதுமாக அவர்கள் வெறி கொண்டிருப்பதைக் கண்டு, பயந்து தனது நாடி ஒடுங்க நின்றபோது, அந்த மனிதக் கூட்டத்தின் நடுவே உடலில் வெண்ணிறம் அவிழ ஒரு ஸ்திரி தலை கவிழ்ந்து நிற்பதைக் கண்டாள். அவர்கள் கூக்குரல் அதிகமாகி வேட்டையென அந்த ஸ்திரியின் அருகாமையில் துள்ளி ருசிக்க முற்பட்டபோது வேதனையும், மிதமிஞ்சிய பயமும் கொண்டவளாக சுருண்டு கிடந்த அந்த ஸ்திரியின் கேசம் விலகி, அவள் முகம் தெரிய வந்தபோது அது தனது உருவத்தினை ஒத்திருந் ததைக் கண்டு, படபடப்பேறி சத்தமிடவும் இயலாமல் கூழாங்கல்லைப் பார்த்துக்கொண்டிருந்தவள் வீழ்ந்தாள் இது நடந்த மறுநாளில் சூறையாடப்பட்ட ஒரு நகரத்தினின்று வெளிப்பட்டுச் செல்லும் ஆயிரக்கணக்கான குதிரை வீரர்கள் சிலரால் இழுத்து வரப்பட்டுச் சிதைக்கப்பட்டவளாக நதியில் வீசியெறியப்பட்ட பெண், இந்த இரு ஸ்திரிகளில் ஒருத்தி அல்லது இருவருமோ என அறிய முடியாமல் மிதந்து சென்றபோது ஒரு கருநிறக் கூழாங்கல் நழுவி நதிக்குள்ளே திரும்பவும் நீந்தத் தொடங்கியிருந்தது.

மஞ்சள் கூழாங்கல்

கிழக்கு வங்காளத்தின் ரதுவாதா கிராமத்துக்கு அருகாமையில் சாயத் தொழிலில் ஈடுபடும் நிறுவனங்களுக்கு ஆலோசகராக வந்த சித்தரஞ்சன் வசித்த தனிக் குடியிருப்பு ஒன்றில் எட்டு வயதான சாயமிடும் சிறுமி ஒருத்தியிருந்தாள். அவள் சாயத்தில் வேகவைத்த துணிகளை அலசுவதற்காக தினமும் சில மைல் தூரத்திலிருக்கும்

கிளைநதி ஒன்றுக்குச் செல்லக் கூடியவள். அவள் தனது முதுகில் துணி மூட்டைகளைச் சுமந்தபடி பிரம்புகள் கிளைத்து மலர்ந்திருக்கும் பாதைகளின் ஊடே நடந்து செல்வாள். ஏழெட்டு நாவுகளைப் போலப் பிரிந்தோடும் நதியில் அவள் தனது துணிகளை அவிழ்த்து விட்டு, கையில் கொண்டுபோகும் தடியால் அதை அடித்து அடித்து நிறங்களைக் கசிய விடுவாள். சித்தரஞ்சனுக்கு வயது அறுபதைத் தாண்டியிருக்கும். அவன் தனது ஓய்வு நேரங்களில் நரம்புகளை விழிக்கச் செய்யும் புகையைப் பிடித்தவனாக வீழ்ந்து கிடப்பான். சாயமிடும் சிறுமி ஒரு முயலைப் போலத் தனியே சுற்றி அலைந்து கொண்டிருந்தாள். சாயமிட்ட தண்ணீரில் எப்போதாவது நாணயங்கள் வருவதுண்டு. அதைக் கண்டெடுக்கச் சுற்றும் சிறுவர்களைப் போலவே, நெடுந்தூரம் நதி வழியே அலைந்த சிறுமி, தனது நாளின் ஒரு க்ஷணத்தில் ஒரு கூழாங்கல் படுகையில் நாணயத்தைப் போலப் புதையுண்டிருந்த சிறிய மஞ்சள் நிறக் கூழாங்கல்லை எடுத்தாள். அதை நுகர்ந்தபோது அடர்த்தியான வாசனை வந்தது.

எல்லா நாளையும் போல சித்தரஞ்சனின் வீட்டுக்குத் திரும்பி, போதையின் கிறக்கமேறி வீழ்ந்து கிடக்கும் மனிதரைக் கடந்து உள் அறையில் சுருண்டு சிறுமி படுத்துக்கொண்டபோது அறையில் ஒரு விளக்கு மட்டுமே எரிந்துகொண்டிருந்தது. அவள் வலியும் அயர்ச்சியும் கொண்டவளாகப் படுத்துக் கொண்டிருந்த போது, அவளருகில் இருந்த கூழாங்கல்லில் வாசனை மெல்ல சுழன்று பிரிந்து அறையை வளையமிட்டது. வாசனையிலிருந்து ஒரு இலை விரிய அது தன்னைக் கிளையென வளர்த்துக் கொண்டது. சலனமற்ற இலைகள் அசையத் தொடங்கியதும் காற்று தத்தியது. அதிக உயரமற்றுச் சரிந்த ஒரு மரம் அதில் தென்பட்டது. அதன் வளைந்த கிளை ஒன்றில் தொங்கும் ஊஞ்சலில் யாருமேயில்லை. அவள் மிக உற்சாகத்தோடு அந்த ஊஞ்சலைக் கண்டுகொண்டிருந்தாள். தானே எதையோ உளறியபடி வெளியில் கிடந்தார் சித்தரஞ்சன். தான் பார்த்துக் கொண்டிருந்த ஊஞ்சலில் சட்டெனத் தானும் ஆடுபவளாகயிருந்தாள் சிறுமி. ஊஞ்சல் மிக வேகமாக ஆடத் தொடங்கியது. அதன் வேகம் உச்சமாக அது நீண்ட தொலைவுக்குச் சென்று திரும்பியது. கடலும் மலையும் நகரங்களும் மிதந்து செல்ல ஊஞ்சலில் திகைப்பும் நடுக்கமுமாக நிற்கும் சிறுமி அங்குமிங்கும் போய்க்கொண்டேயிருந்தாள். சித்தரஞ்சன் விழித்துக்கொண்டவனாக விளக்கொளியினைத் தேடி வந்தபோது அங்கே சிறுமியில்லை. ஒரேயொரு கூழாங்கல் மட்டுமே இருந்தது. எங்கே போய்த் தொலைந்தாள் எனப் புரியாமல் மிகக் கொச்சையான வசையிட்டவனாக, அந்தக் கல்லைக் குனிந்து எடுத்து இருளில் வெளியே வீசியபோது ஊஞ்சல் வெகு தூரத்திலிருந்து திரும்பிக்கொண்டிருந்தது.

எல்லாப் பெண்களுக்கும் ஒரே பெயர் வைத்திருந்த துசார் வம்ச அரசர்களில் மிக இளையவனாகப் பதவிக்கு வந்தவனிடம் இருந்த நடனக்காரி ஒருத்தி எப்போதும் விளையாட்டில் மிக ஈடுபாடு கொண்டவளாக இருந்தாள். தன்னை விளையாட்டில் வெல்லும் மனிதனோடு மட்டுமே சம்போகத்தை அனுமதிக்கிறாள் என்பதை அறிந்த பிரதானிகள் பலரும் அவளோடு விளையாடித் தோற்றுத் திரும்பியிருந்தனர். அவள் விளையாட்டினைவிடவும் அதற்கு ஈடாக வைக்கும் பணயத் தொகையை மனதில் கொண்டே எந்த விளையாட்டையும் தேர்வு செய்பவளாக இருந்தாள். அவளிடம் ஒரு சதுரக் கல்லும், மாக் குழம்பும் இருந்தன. எதிரே இருப்பவனின் மனத்துக்கு ஏற்றதான ஒரு விளையாட்டை அவள் வரைந்துவிடுவாள். பணயத் தொகையை வைப்பவனே விளையாட்டைத் தொடங்குவான். விளையாட்டு முதலில் ஒரு சம்பிரதாயம் போலவே தொடங்கும். மிக எளிமையானது போலத் தோன்றும் ஒரு வடிவ அடுக்கில் நீங்கள் பின்வாங்கக் கூடாது என்பது மட்டுமே விதியாக இருந்தது.

அவள் விளையாடத் தொடங்கிய இரண்டாம், மூன்றாம் நகர்விலே பின்வாங்க மட்டுமே சாத்தியமான எல்லாப் பாதைகளையும் உருவாக்கி விடுவாள். அவளுடன் விளையாடும் மனிதன் மனதுக்குள் தீராத ஒரு வடுவை உண்டாக்குகிறது என்பதை உணர்ந்த பிறகு அவள் தோற்றவனை அனுப்பிவிடுவாள். நீண்ட நாள்களாக எவரும் தன்னை வெல்லாத வேதனையும், மிகக் காமமும் கூடியவளாக அவள் காத்துக்கொண்டேயிருந்தாள்.

நீண்ட நாள்களின் பின்பாக ஒரு தானிய வணிகன் தனது தங்குமிடத்தில் சக யாத்ரீகர்களுடன் பகலும் இரவும் விளையாடிக் கழிக்கிறான் எனவும், அவன் தனது பணயப் பொருளை ஒருபோதும் இழந்ததேயில்லை என்பதையும் கேள்வியுற்றவள் அவனை ரகசியமாக அழைத்துவர இரவில் ஆள் அனுப்பினாள். பிறை நிலவு கண்டிருந்த நாளில் அழைத்துவரப்பட்ட அவன் மத்திய வயதைத் தாண்டியவனாக இருந்தான். அவன் தான் வந்து சேர்ந்திருந்தபோது அறையில் துக்க ரேகையோடுவதைக் கண்டான். அந்த வசீகரியானவள் இருவரும் விளையாடுவதற்கான பலகையை எதிரே வைத்தவளாக அந்த மனிதனை அமரச் செய்தாள். அவன் தனது சிரிப்பை உதிர்த்தவனாக எதிரே அமர்ந்து அவளிடம் பணயத் தொகையைத் தீர்மானித்து விடலாமெனச் சொன்னான். அவள் அமைதியாகச் சொன்னாள்,

“பணயத் தொகை இனி வரப்போகும் எனது நாள்கள்.” அவன் திகைத்தவனாகப் பார்த்துக்கொண்டிருந்தான்.

“நான் எனக்கு எதிர்காலமென வந்து சேரப்போகும் நாள்களை இப்போதே செலவழித்துவிட முடிவு செய்துவிட்டேன்” எனச் சிரித்தாள். அவன் தனது இடையில் இருந்த ஒரு நீல நிறக் கூழாங் கல்லை வெளியே எடுத்து வைத்தான். அவள் ஆர்வம் பீறிட

அதைத் தனது கைகளில் எடுத்துப் பார்த்தாள். அவன் பரிகாசமாகச் சொன்னான்,

"கனவிலிருந்து பறித்து எடுக்கப்பட்டது."

விளையாட்டுப் பலகையை அவளே தேர்வு செய்தாள். இருவரும் விளையாட்டைத் தொடக்க முற்பட்டனர். அவள் உருவாக்கிய விளையாட்டு விசித்திரமாக இருந்தது. சிறிய வளையங்களை சம எண்ணிக்கையில் இருவரும் ஆடத் தொடங்க வேண்டும். விளை யாட்டில் மீதமிருக்காமல் வளையங்களை நீங்கள் பயன் படுத்தியாக வேண்டும். ஒன்று மீதமிருந்தாலும் அதன் இருப்பு உங்களைக் கவிழச் செய்துவிடும். அவன் தொடர்ந்து தோல்வியைப் பருகிக்கொண் டிருந்தான். முடிவாக அவன் தயக்கத்துடன் தான் வரையும் பலகையில் ஒரு முறை அவள் ஆட இயலுமா எனக் கேட்டான். சம்மதித்த பிறகு, ஒரு விளையாட்டை உருவாக்கினான். ஏழு உள் வளையம் கொண்ட ஒரு சித்திர வடிவமது. விளையாட்டு தொடங்கியது, ஒவ்வொரு உள்வளையத்தையும் கடந்து வெளியேறிட அவள் முயன்ற போது அவன் நிமிர்ந்து பார்ப்பான். அவள் மூன்றாவது, நான்காவது வளையத்தை அடைந்தபோது விளையாட்டினை இனித் தொடர முடியாது எனக் கண்டவளாக இருந்தபோது அவன் சொன்னான்,

"மீதமிருக்கும் மூன்று வளைவுகளில் நீ பிரவேசிக்கவே இயலாது."

அவள் மவுனமாக இருந்தாள். பிறகு மிகுந்த வெறி கொண்டவளைப் போல விளையாட்டின் விதிகளைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்ட வளாக முன்னேறினாள். முடிவில் அவள் வென்றிருந்தபோது அவன் தனது நீலநிறக் கூழாங்கல்லை இழந்தவனாக வெளியேறினான். அவள் மிகுந்த மனத்துயரத்தோடு அந்தக் கல்லைத் தனது கைகளில் உருட்டிக்கொண்டிருந்தாள். முன்பின்னாகக் கல் உருளும்போது அவன் வரைந்த பலகை ஒரு ஸ்திரியின் சூட்சும வடிவம் என்பதையும், தான் விளையாட விளையாட மனதில் தானே பூத்துக்கொண்டிருக் கும் சிறுமியாக, தனது அழகை வியக்கும் பருவப் பெண்ணாக, ஆள் உயர நாணல்களுடன் புணர்ச்சியில் கவிழ்ந்து கிடந்தவளாக, மூர்க்கமேறித் துரத்தப்பட்டவளாக, சுருக்கமேறிய முதியவளாக அவள் ஏழு முறை உருக் கலைந்து கலைந்து உருவானது நினைவில் இருந்தது.

அவன் தனது வாழ்வின் படிவை ஏழு வளைவுகளாக்கி விளையாடி இருக்கிறான் என்பது புரிய அவனை அழைத்து வரச் சொன்னாள். அவனைத் தேடி ஸ்திரிகள் காணாது திரும்பினர். கூழாங்கல்லின் இருப்பே தான் தோற்றுவிட்ட ஒரு நோய்மையென அவளைப் பற்றிக்கொண்டது. நோய்மை முற்றி வீழ்ந்த அவளைப் பரிசோதித்த மருத்துவன் அவள் உடலில் வேகமாகச் சுரத்தைப் போல ஏதோ ஊடுருவிக் கலந்திருப்பதாகச் சொன்னான். அவள் எப்போதும் நீலக்கல்லைத் தனது நாவடியிலே வைத்திருந்தாள். ஒரு இரவில் அவள் ஒரு மாபெரும் விளையாட்டுப் பலகையைக் கற்பனை

செய்தாள். அந்தப் பலகையின் ஒரு முனை பூமியின் கடைசி நுனியிலும் மறு முனை அதன் தொடக்கத்திலும் விரிந்திருந்தது. யாரோ பகடையை உருட்ட நகரங்கள், மனிதர்கள், நதிகள், மலைகள், புலிக் கூட்டங்கள் யாவும் இடம் மாறிக்கொண்டிருந்தன. விளையாடும் மனிதரின் உரு புலப்படவில்லை. நாளான நோய் முற்றி, பீடித்த அவளை சிட்சை செய்ய யாரும் வரவேயில்லை. அவளது நாவில் இருந்த கூழாங்கல்லை எவரும் அகற்றவேயில்லை. பின் அவள் மெல்ல இறந்துபோனாள் பாதி விளையாட்டிலே.

பச்சைக் கூழாங்கல்

புதுச்சேரிக்குப் பணிநிமித்தம் வந்திருந்த ரொமிரோ துய்பே சமஸ்கிருதம் கற்றுக்கொள்ளத் தொடங்கிய சில வருடங்களுக்குள் தான் வாசித்த கவிதைகளில், கவிதையின் பாடு பொருளை விடவும், அதில் இடம்பெற்றுள்ள பொருள்கள், அதைப் பற்றிய உருவகங்கள் குறித்த ஒரு அகராதியினைத் தயாரிக்கும் வேலையைத் தொடங்கியிருந் தார். கவிதை என்பது உலகில் உள்ள பொருள்கள் தங்கள் ரகசிய வடிவினை வெளிப்படுத்தும் ஒரு உருப்பளிங்கு என்பது போலப் புரிந்தது. பண்டார கவி என அழைக்கப்படும் ஈரடி வடிவத்தில் பிரசித்தி பெற்ற வரிகளை எழுதிய ஒரு கவிஞரைப் பற்றிய இந்தப் பொருள் பகுப்பில் அவருக்குச் சில விசித்திரமான பொருள்கள், மிருகங்களின் பட்டியல் கிடைத்தது. பண்டார கவி என்பவர் ஒருவரா அல்லது பலரா அல்லது பலர் தேர்வு செய்த ஒரு கவிதை வடிவமா? என்பது தெளிவாகவில்லை. பண்டார கவியின் கவிதையில் ஏழு விதமான பூனைகள் காணப்படுகின்றன. இதில் எந்த ஒன்றும் உலகில் நாம் காணும் பூனையோடு தொடர்புடையதாக, பரிச்சயமுடையதாக இல்லை. இந்தப் பூனைகள் உருவகங்களாகப் பயன்படுத்தப்படவுமில்லை. அவற்றை வெவ்வேறு நிலையிலான உணர்ச்சிகள் எனப் புரிந்துகொள்ளுங்கள் எனச் சமஸ்கிருதம் கற்பிக்கும் ராகவ அய்யங்கார் சொன்னது ஒப்புதலாக இருந்தது.

பண்டார கவியின் கவிதையில் இடம்பெறாதவை பற்றிய ஒரு தொகுப்பை அவரது மனம் தானே தொகுக்கத் தொடங்கியது. இதில் பறவைகள் எதுவும் அவரது கவிதைக்குள் பிரவேசிக்கவேயில்லை என்பது ஆச்சரியமாக இருந்தது. பண்டார கவியைப் பற்றிய தனது எண்ணங்களைத் தொடர்ந்து குறிப்புகளாக எழுதிக்கொண்டு வந்தார். அப்போது ஒரு நாளில் அவர் கவிதைகளைச் சொல் பிரித்துப் படிக்கும்போது ஒரு ஆச்சரியமான நிகழ்வு கூடியது. எந்த ஒரு சொல்லைப் பிரித்தபோதும் அது இரண்டாகி ஒரே பொருள் உடைய வார்த்தையாக உருக் கொண்டுள்ளது என்பது வியப்பாக இருந்தது. அந்தச் சொற்களின் பொருள் எதைக் குறிக்கின்றது எனக் கேட்டபோது, அது பச்சை நிறமுடைய ஒரு கூழாங்கல் என அறிந்துகொள்ளலாம் என ராகவ அய்யங்கார் விளக்கினார்.

இது உருவகமா எனக் கேட்டதற்கு, அப்படித் தெரியவில்லை எனச் சொன்ன அவர், சொல் அளவில் வேறு வேறாகவும், அதனைப் பிரிக்கும்போது ஒரே அர்த்தத்தைத்தரும் இரு கிளையாகவும் பிரியும் விநோதத்தைக் கண்டவராக துய்பேயிடம் தான் இதைப் பற்றி ஆராய்ந்து அறிந்து வருவதாகச் சொன்னார்.

துய்பேக்குப் பிறகு இது ஒரு விசித்திரமான பழக்கமாகப் படிந்தது. பச்சை நிறக் கூழாங்கல் என்பது எது என்பதைப் பற்றியே மனம் தேடிக்கொண்டிருந்தது. எண்ணிக்கையற்ற சொற்கள், சொற்களின் பிரிவுகள், சேர்மானம் உணர்ந்தும் இது எதைப் பற்றியது எனத் தெளிவாகத் தெரியவில்லை. துய்பே பல்வேறு சமஸ்கிருதவாதிகளுடன் தொடர்ந்து இந்தச் சொல் எதைக் குறிக்கிறது எனக் கேட்டபடி இருந்தார். அப்போதும் எவராலும் விளக்க முடியவேயில்லை. நீண்ட நாள்களின் கதியில் அவர் எண்ணிக்கையற்ற இந்தப் பொருளோடு நெருங்கிய தொடர்புடைய சொற்களைக் கண்டு பிடித்து விட்டார். ஒரு பொருளுக்குப் பல்லாயிரம் சொற்கள், அதுவும் தனியே ஒரு அகராதி தயாரிக்குமளவு இருப்பதை அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை. தனது பயணத்தின் நாள்களில்கூட விடை தெரியாத இந்தக் கேள்வியைத் தனது ஆசிரியரிடமே விட்டுச் சென்றார். 26 வருடங்களுக்குப் பிறகு ஒரு நாள் துய்பே எழுதிய கடிதமொன்று ராகவய்யங்காரின் வீட்டுக்கு வந்தபோது அவர் இறந்து பதினோரு ஆண்டுகளாகி இருந்தன. அவரது மைத்துனர் படித்த கடிதத்தில், தான் அந்தச் சொல் எதைக் குறிப்பதெனப் புரிந்துகொண்டதாகவும், ஒவ்வொரு சொல்லும் ஒரு குறிப்பிட்ட சப்தத்தினைக் கொண்டிருப்பதாகவும், இந்தச் சப்தம் மற்றொரு சப்தத்தோடு நெருங்கும்போது ஒரு லயம் கூடுகிறது என்றும், இது போன்ற சப்தங்களின் மூலத் தாதுதான் பச்சை நிறக் கூழாங்கல், அது கவிதையின் சப்த தாது எனப் புரிந்துகொள்ளலாமா எனவும் துய்பே கேட்டிருந்தார். ராகவய்யங்காரின் மைத்துனன் இதைப் புரிந்துகொள்ள இயலாது அவரிடம் தங்கள் குடும்பம் மிகவும் வறுமையில் இருப்பதாகவும், அவர் பண உதவி செய்ய வேண்டுமெனக் கேட்டும் கடிதம் எழுதியதற்குப் பதில் வராமற் போனபிறகு துய்பே பச்சை நிறக் கூழாங்கல்லைப் பற்றிய குறிப்புகள் சரியானதுதானோ என்ற விபரம் நம்மிடம் கிடைக்கப் பெறவேயில்லை.

கருநீலக் கூழாங்கல்

நீண்ட நாள்களாகத் தனது படகில் வந்துபோகும் அந்த ஸ்திரியைத் தனது கண்களாலே பருகிக்கொண்டிருந்தான் படகோட்டி. அவள் நதிக்குத் தொலைவில் இருந்த வணிகச் சந்தைக்குச் செல்பவளாக இருந்தாள். அங்கே சந்தை கூடும் நாளில் அவள் அதி காலையிலே வந்துவிடுவாள். அப்போது அவளிடம் மிகுந்த படபடப்பு இருக்கும். அவன் படகு புறப்படும் வரை அவள் பேசவே மாட்டாள். பிறகு

நதியினுள இருவரும் பிரவேசித்த பிறகு தலையைக் குனிந்தவளாக வருவாள். அவள் ஒரு வேசை எனப் பலரும் சொல்வதை அவன் கேட்டிருக்கிறான். அப்படியொன்றும் அழகியில்லை என்றாலும், முகவாகு ஒரு தனி ஈர்ப்பைத் தருவதாகவே இருந்தது. இரவில் அவள் வீடு திரும்பும் சமயத்தில் அவனைத் தவிர வேறு எந்தப் படகிலும் திரும்புவதில்லை. இருளில் படகு புறப்பட்டதும், தனது உள்ளங்கையில் உள்ள நாணயங்களை எண்ணிக்கொண்டவளாக வருவாள். அவளோடு உறவு கொள்வதற்கான இச்சை கொண்டிருந்த போதும் அவளிடம் கேட்க மிகத் தயக்கம் உள்ளவனாகவே இருந்தான். ஒவ்வொரு நாளும் அவளிடம் கேட்க வார்த்தைகள் முட்டும்போதும் கேட்கவிடாமல் மனம் தடுத்தது. இருவர் மட்டும் படகில் வரும்போது அவள் சில நேரம் அவனது முகத்தையே பார்த்து வருவாள். காலை மிகச் சிடுசிடுப்பாக செல்லும் அவள், இரவில் மிக சாந்தமுற்ற வளாக வருவாள். காற்று சுற்றிக்கொண்டலையும் நதிப் பரப்பில் அவள் கண்கள் எதையும் காணாதவை போலவே இருக்கும். வீடு திரும்பும்போது அவள் பழங்களையும் சில நேரம் பனையோலையால் செய்த விளையாட்டுப் பொருள்களையும் வாங்கிப் போவாள். அவளுக்கு மூன்று குழந்தைகள் இருப்பதாகவும் அவளது கணவன் ஒரு உப்பு வணிகன் என்றும் சொல்லக் கேட்டிருக்கிறான். அவள் வீடு திரும்பும்போது பசியேறிய கண்களை மறைத்துக் கொண்டவளாக இருப்பாள்.

இடைவிடாது மழை பிடித்த நாள்களில் ஒன்றில் அவள் காலை அவசரமாக வந்து தன்னைப் படகில் ஏற்றிச் செல்லச் சொன்ன போது கேட்டுவிடலாமாவென ஆசை கொண்டான். மழையின் ஊடாக இருவரும் நதியினுள் சென்றார்கள். அன்றைய பகலில் மிக வலுத்த மழை கூடியது. சந்தையில் எவருமே இல்லை. இரவு வரை காத்திருந்தும் மறு கரைக்குப் போகின்றவர் எவருமில்லை. அன்றிரவில் மழை மிகுதியாகக் கூடிக் கொண்டது. அவன் இனி படகோட்ட இயலாது எனக் கரையேற்றியவனாக ஒதுங்கி நின்றபோது, அவள் நதியை நோக்கி ஓடிவருவது தெரிந்தது. மிகக் கோபமாகக் கத்தினாள். தான் இனி ஒருபோதும் திரும்பி வரவே போவதில்லை. தன்னை மறு கரையில் விட்டுவிடுங்கள் என அவள் குரல் கடுமையாகக் கேட்டது. அவன் மழையோடு வந்து பார்த்தான். அவள் மிகக் கடுமையான கண்களுடன் இருந்தாள். நதியில் படகோட்டுவது கடினமென்றான். தான் இப்போதே போக வேண்டுமெனச் சொன்னதால், மழையின் நடுவே படகு புறப்பட்டது. அவள் கண் இமைகளின் முன் திரையிடும் மழைக்குள் அவளைக் கண்டவனாக இருந்தான். அவள் மிகப் படபடப்போடு அவனிடம் கேட்டாள்,

"சாப்பிடுவதற்கு ஏதேனும் வைத்திருக்கிறாயா?"

அவன் இல்லையெனத் தலையசைத்தான். அவள் கண்கள் ரௌத்திரமாகியிருந்தன. அப்போதும் மெலிந்த அவள் உடலில்

காமம் கசிவதாகவே உணர்ந்தான். மனதில் அவளிடம் கொண்ட விருப்பம் புரண்டுகொண்டிருந்தது. அவள் பெருமூச்சிட்டவளாகக் கேட்டாள்,

"நீ எதையோ என்னிடம் கேட்க விரும்புகிறாய் அல்லவா?" அவள் பதில் பேசுவதாயில்லை. அவள் அவனது கண்களைப் பார்த்தபடியிருந்தாள் பிறகு அவள் திரும்பவும் கேட்டாள்,

"உனது நாவின் நுனியில் ஒளிந்திருக்கும் ஆசையை என்னிடம் காட்டு."

அவன் பலவீனமானவன் போல இருந்தான். மழை இருவரையும் பற்றியது. அவள் மெல்லத் தனது உடைகளைக் களையத் தொடங்கினாள். இதை எதிர்பாராத அவன் மழையைக் கண்டவனாக இருந்தான். அவள் மெலிந்த மார்பும் ஒடுங்கிய வயிறும் கொண்டவளாக இருந்தாள். ஒரு நிமிஷம் அவளது உடலைக் கண்டபோது திடுக்கிட்டான். அவளது இதயத்திலிருந்து கருநீலக் கூழாங்கல் ஒன்று நழுவி உருண்டு வயிற்றினுள் புதைவுண்டது. ஒரு கண்ணாடிப் படலத்தினுள் பார்ப்பதைப் போல இதைக் கண்டான். தாள முடியாத துக்கத்துடன் சொன்னான்,

"உனது இதயத்திலிருந்து ஒரு கருநீலக் கல் நழுவி வயிற்றினுள் புதைந்ததைக் கண்டேன்."

அவள் பெருமூச்சிட்டபடி கேட்டாள்,

"நீ அதைக் கண்டாயா?"

தலையாட்டியபோது மழை வலுத்திருந்தது.

"அது நிஜமில்லை. ஆனாலும் அந்தக் கருநீலக் கல்லைக் கண்ட இரண்டாவது மனிதன் நீ."

அவன் அவளது முகத்தைக் காண முடியவில்லை. அவள் தானாகவே பேசினாள்.

"பதினேழாவது வயதில் ஒரு இளைஞன் முதன் முதலாக என்னை முத்தமிடக் குனிந்தபோது அதைக் கண்டதாகச் சொன்னான். பிறகு அவனை நான் காணவேயில்லை."

அவன் அந்தப் பெண்ணின் இதயத்தில் இருந்து நழுவிய கல்லைப் பற்றிய மயக்கம் தீராது படகைச் செலுத்தியபடியிருந்தான். பிறகு அவள் கேட்டாள்,

"பசியாக இருக்கிறது; என்னை முத்தமிட முடியுமா?"

அவன் தனது நடுங்கும் கைகளை விலக்கி மிகத் தயக்கத்துடன் அவளைப் பற்றி முத்தமிட முயன்றபோது அவள் கைகள் அவனது கழுத்தைக் கட்டிக்கொண்டு விசும்பின. மழையின் கூத்து பெருகியது. அவளிடமிருந்து அவன் சிரம் விடுபடவேயில்லை. கைகள் மிக உக்கிரமாகி அவனைத் தன்னுள் இழுத்துக் கொண்டன. மழையில் படகு கட்டுப்பாடு இழந்தது.

நீண்ட காலத்தின் பின்பாக சிலர், வேசை அந்தப் படகோட்டியைக் கொன்றுவிட்டாள் என்றும், இல்லை இருவரும் நதியில் தப்பி வேறு ஊர் ஓடிவிட்டதாகவும் செய்திகள் வந்தன. ஆனால் அந்த நதியில் படகோட்டுபவர்கள் மழை நாள்களில் மட்டும் ஒரு பெண்ணும் படகோட்டியும் நீரின் தொலைவில் இறுக்கமாகக் கட்டிக்கொண்டு அமர்ந்திருப்பதைக் காண்பதாகவும் அவர்கள் இருக்குமிடத்தில் கருநீலக் குமிழ் ஒன்று வெளிச்சமிடுவதாகவும் சொல்கிறார்கள்.

ஆரஞ்சு நிறக் கூழாங்கல்

யோகிகாம் சிறிய கிராமம். அங்கே ஒரு மடாலயமிருக்கிறது. அதன் அண்மையில் உள்ள ஏரி உருகத் தொடங்கும் நாளில் அந்த ஊரில் எந்த மனிதனும் இருக்க மாட்டான். ஏரி மாபெரும் சப்தம் எழுப்பிக்கொண்டு தடதடவெனப் பேரோசை கூடியதாக உருகத் தொடங்கி, சில மணி நேரங்களில் உருகிவிடும். மலையேறுவதற் காக வரும் வீரர்கள் இதனைக் கடக்கும்போது துணைக்கு இந்த ஊரின் மனிதர்களைத்தான் கூட்டிப் போவார்கள். தாமெந்திரி ஜப்பானியக் குழுவோடு அப்படியான ஒரு மலையேற்றத்தில் தான் அறிந்ததாகத் தனது வாழ்வியல் பற்றிய விவரணப் படத்தில் குறிப்பிடு கிறார்.

அது, சிமோங் என்னும், 14,500 அடி உயரத்தில் உள்ள மலையை நோக்கியதாக முதற் பயணம் நடந்தது. பயிற்சி தொடங்கியதும் மாணவர்களைக் கயிறு வாரியாகப் பிரித்தார்கள். ஒவ்வொரு கயிறும் நாலு பேர் பயிற்சியாளர் மானகோ கயிற்றில் ஏறும் எந்த மனிதன் நோய்வாய்ப்பட்டபோதும் மற்றவர் அங்கேயே நின்றுவிட வேண்டும் என ஒரு விதியை உருவாக்கினார் பனி வீழ்ச்சி தொடங்கிய மூன்றாம் நாளில் தெப்பப்பாறை எனப்படும் ஒரு பெரிய பனித் திட்டினை முகாமாகக் கொண்டார்கள். தன்னோடு வந்தவர்கள் பனியை மிரட்சி கூடிப் பார்த்தபோது அது நம்மைக் கடந்து செல்லும் ஒரு வெண்கழுகு எனச் சமாதானமாக்கினார் மானகோ.

ஜப்பானியக் குழுவுக்குத் துணையாளாக தாமெந்திரி மலையேற்றத் தில் ஈடுபட்டிருந்தார் அப்போது அவருக்கு வயது அறுபதைக் கடந்திருந்தது. நாற்பது முறைக்கும் மேலாக அதே மலையின் உயரங் களில் ஏறி இறங்கியிருக்கிறார். பனிமலையின் நிசப்தமான உடலில் அவர்கள் அங்குலம் அங்குலமாக முன்னேறினார்கள். மானகோவின் கயிற்றில் கியோட்ஸே என்னும் இளைஞன் பின்பற்றி வந்துகொண்டிருந் தான். அவன் கயிற்றின் கடைசி மனிதனாக ஊர்ந்து வந்தான். அவன் மனம் தொடர்ந்து தளர்ச்சியுற்றது. தான் ஏறிக்கொண்டிருக்கும் இதே மலையைப் போல அருகாமையில் ஒரு மலை தென்பட்டதை ஒரு நிமிஷம் அவன் கண்டான் மறு நிமிஷம் அது மறைந்தது. மேலேறிட்ட உயரத்தில் நோயுற்றவனாக, இனித் தான் மேலேறி வரப்போவதில்லை எனப் புலம்பிக்கொண்டு ஒரு திட்டில் தங்கி

விட்டான். மானகோ கீழே இறங்கியவராக,

"அவன் மனம் சரிந்து வருகிறது. அவனை ஒரு இரவு ஆழ்ந்த உறக்கத்தில் ஈடுபடச் செய்யுங்கள்" என்றார்.

பனிமலையில் உறக்கம் கூடுவதில்லை என்பதை அவர் அறிந்திருந் தார். அவர்கள் இருவரும் தங்களது உடைகளுடன் பனித் திட்டில் சரிந்து கிடந்தார்கள். இரவு பனியின் தீவிரம் வெகுவாக இருந்தது. கியோட்ஸே துர்சொப்பனத்தில் கத்தினான். மானகோ அப்போது ஒரு வெப்பமான மூச்சைக் கண்டார். தங்களின் அருகாமையில் அது கடந்துபோவதைப் பனியின் ஊடே கண்டவராகத் தனது விளக்கொளியைப் பாய்ச்சியபோது உடலில் எவ்வித உடையுமின்றி, சடை கிளைத்த சந்நியாசி ஒருவன் மலையின் கீழே போய்க்கொண்டிருந் தான். அவன் இருப்பை நம்ப முடியாத மானகோ நிசப்தமாகப் பார்த்தபடியிருந்தார். அவரைக் கண்ட கியோட்ஸே சப்தமிட்டுக் கூப்பிட்டான். துறவி திரும்பியவராக வெகு வேகமாக அருகில் வந்தார்.

மானகோ அவரைப் பார்த்தான். உடலில் மினுமினுப்பும் எலும்பு கள் வீங்கியும் தெரிந்த அந்த மனிதன் அருகில் நோய் பீடித்த கியோட்ஸேவைக் கண்டவனாகத் தனது சிரிப்பை வெளிப்படுத்தினார். நடுக்கமும் பீதியும் பற்றிய கியோட்ஸேவின் முகம் கிட்டியிருந்தது. அவன் தற்செயலாகத் துறவியின் முகத்தைப் பார்க்க அதில் கண்கள் சிற்பத்தின் கண்களைப் போல சலனமாகவேயில்லை. வாழ்வில் முதலாக அசைவற்ற கண்களைக் கொண்ட மனிதனைக் கண்ட அவன் ஏதேதோ பிதற்றினான். சிதைந்த வார்த்தைகள் வெளிப்பட்டன. கல்லில் செதுக்கிய கண்கள் போல அமைந்த துறவி கண் அசைவின் றியே எல்லாப் பொருள்களையும் பார்த்துக்கொண்டு இருந்தார் கியோட்ஸே பிதற்றினான்.

"ஒளிரும் கூழாங்கல்."

கிட்டித்துப்போய்க் கிடக்கும் கியோட்ஸேவின் பல்லைத் திறந்து அவன் வாயினுள் பனியை அள்ளிப் போட்டார் துறவி. சில நிமிஷத்தில் அவன் உடலில் வெம்மை ஏறி வர ஆழ்ந்த உறக்கத்துக்குப் போய்விட்டான். ஒரு பலத்த சிரிப்புடன் துறவி பனிக்குள் இறங்கிப் போயிருந்தார்.

முகாமுக்குத் திரும்பிய கியோட்ஸே தாமெந்திரியிடம் இதைச் சொன்னபோது தாமெந்திரி அவரை அழைத்துக்கொண்டு போய்க் காட்டினான். ஒரு உறை கிணற்றினுள் தண்ணீர் படிகமெனத் துல்லியம் கொண்டிருந்தது. அதனுள் ஒரு ஜோடிக் கற்கள் மினுங்கிக் கொண்டிருந்தன. தாமெந்திரி ரகசியம் போலச் சொன்னான்,

"தண்ணீரின் கண்கள்."

துறவியின் கண்கள்தான் அது எனத் திகைத்தவன் பேச்சற்றுப் போனான். இங்குள்ள தண்ணீர் யாவரையும் பார்த்தபடி இருக்கிறது

எனத் தாமெந்திரி சொன்னான். கியோட்ஸே அந்த அனுபவத்துக்குப் பிறகு மலையேற்றத்தில் பல சாதனைகள் செய்துவிட்டான். மானகோ வயதான தனது வாழ்வைத் தனிமையில் கழித்தார். தான் ஒருபோதும் நேரில் கண்டிராத, கேட்டு மட்டுமே அறிந்த அந்த சலனமற்ற கண்களின் மீதிருந்து விடுபட முடியாதுபோன தாமெந்திரி மட்டும் இனித் தான் மலையேறவே மாட்டேன் எனத் தற்போது சுமைகூலியாக அலைகிறான் எனக் கண்டவர்கள் சொல்கிறார்கள்.

வயலட் நிறக் கூழாங்கல்

செயின்ட் ஜார்ஜ் குடியிருப்பில் புதிதாக மணமாகி வந்து தங்கி யிருந்த எமிலி தாம்சனுக்கு வீட்டு வேலையாள்களோடு மிகச் சுமுகமான உறவிருந்தது. அவளது குடியிருப்பிலே வேலையாள்களுமிருந் தனர். 11வது ரெஜிமெண்டின் உயரதிகாரியான தாம்சன் வேட்டை யாடுவதில் மிக விருப்பமானவனாக இருந்ததால், நாய்களைப் பழக்கவும், வேட்டைக்கு அழைத்துப் போகவும் மூன்று குடும்பங்களைத் தனது குடியிருப்புக்குள்ளே கொண்டிருந்தான். எமிலி தாம்சனுக்கு நகரின் உப்புக் காற்றைத் தவிர மற்ற யாவும் பிடித்திருந்தன. மாமரங்கள் அடர்ந்து இலைகள் உதிர்ந்துபோன வீட்டின் பின் வெளிகளில் அவள் சுற்றிக்கொண்டிருப்பாள். அத்தையின் வீட்டிலே வளர்ந்த எமிலி திருமணமாகும் வரை தனது சசாக்சியப் பண்ணை வீட்டை விட்டு வெளியே பயணித்தவளேயில்லை. எமிலி தாம்சன் வந்து சேர்ந்த வாரத்திலே அவர்கள் விருந்துக்கு நகரத்தினுள் சென்றபோது மேல் சட்டையணியாத கறுப்பு மனிதர்களைக் கண்டாள். அவர்கள் ஓடி ஒளிந்தவர்களாக இருந்தார்கள். காஸ்மோ பாலிட்டன் கிளப்பில் உள்ள நீரூற்றுகள் அவளுக்குப் பிடித்தமானதாக இருந்தன.

எமிலி தாம்சன் மூன்று மாதத்துக்குள்ளாகவே கர்ப்பிணியாகி இருந்தாள். அப்போது தாம்சன் குற்ற விசாரணைக்காகப் பிடிபட்ட திருடர்கள் வசமிருந்த சில பொருள்களை அவளிடம் காட்ட எடுத்து வந்தார். அதில் பழைய நகைகள், சொர்ணவில்லைகளுடன் ஒரு வயலட் நிறக் கூழாங்கல் இருந்தது. அதை மட்டும் தான் எடுத்து வைத்துக்கொள்வதாக ஆசைப்பட்டாள். வேலையாள்களில் ஒருத்தி அதை வீட்டில் வைத்துக்கொள்ளக் கூடாதெனப் பிடிவாதம் கொண்டபோதும் எமிலி கேட்டுக் கொள்ளவில்லை. ஆனால் அந்தக் கல்லைத் தான் கைவசமாக்கிய பிறகு ஏனோ இரவில் காமம் பெருக அவள் உறவின் நிலைகளில் மிதமிஞ்சிய வேகம் கொண்டவ ளாக இருந்ததை அவளாலே புரிந்துகொள்ள முடியவில்லை. வேட்டை நாய்களைப் பழக்கப்படுத்துவதற்காக அங்கிருந்த இருவருள் ஒருவன் வயசாளியாகவும் மற்றவன் நடுத்தர வயதுடையவனாகவுமிருந்தான். அவர்கள் எப்போதும் தனியே ஏதோ ரகசியம் பேசிக்கொள்வதும், சந்தர்ப்பங்களில் எல்லா விளையாட்டுப் பறவைகளை அவளிடம் தந்துபோவதையும் எமிலி தாம்சன் கூச்சத்துடன் அனுமதித்திருந்தாள்.

தாம்சன் வேலூர் முகாமுக்குப் புறப்பட்ட நாளில் அவள் வெக்கையின் பயம்கொள்ளத் தனித்து வீடு தங்கியிருந்தாள். வேட்டையாளர்களில் மூத்தவன் அருகாமையில் உள்ள மதகுமேட்டில் சிறிய விழா இருப்பதாக அழைத்தபோது எமிலி வருவதற்கு ஒப்புக்கொண்டாள். அந்த இடம் சிறிய பாறையின் மீதிருந்தது. உதிரபலிகளும், வெறியேறிய கூச்சலும் இருந்தன. எமிலி தாள முடியாது வீடு புறப்படத் திரும்பும்போது இரண்டு வேட்டையாளர்களும் உடன் வந்தனர். அவள் வீட்டில் இறங்கி விட்டதும் களைப்பேறிக் குடிக்க உள்ளே போனார்கள். நள்ளிரவில் அவர்கள் இருவரும் அவசரமாக எமிலி அறையினுள் பிரவேசித்தார்கள். வீழ்த்தப்பட்ட பறவையைக் கவ்வி வரும் நாய்யென அவர்களில் ஒருவன் எமிலியை வலிய கைகளால் தூக்கிக்கொண்டு போனான். அப்போது மற்றவன் தனது நாய்களுக்குப் பயிற்சி தந்துகொண்டிருந்தான். மூர்க்கம் மீறிய புணர்ச்சியில் மாறி மாறி இருவரும் கழித்தபோது உதிரப் பெருக்கேறிக் கிடந்தாள் எமிலி. தனது ரத்தம் தோய்ந்த உடைகளுடன் நாய்களைத் தனியே விட்டுத் தப்பி ஓடிப் போனார்கள் இருவரும். நாய் மட்டும் அவளது அறையில் வீழ்ந்து கிடந்த வயலட் நிறக் கூழாங்கல்லைத் தனியே உருட்டிக் கவ்விட முயன்று தோற்றுக்கொண்டேயிருந்தது.

அடிக்குறிப்பு

1. அனுநாயகாவின் இதே கதையினைப் போல 11-ம் நூற்றாண்டில் வெளியான ஆயிரம் கதைகளின் பறவை என்னும் கதா சேரகத்திலும், அரேபியாவில் உள்ள அபுல் தூஷர் கதைகள் தொகுப்பில் உள்ள கதைகளும், 19-ம் நூற்றாண்டில் சமஸ்கிருதத்தில் இருந்து ஜே.எப். பெஸ்கியால் மொழியாக்கம் செய்யப்பட்ட நவதந்திரக் கதைகளிலும், 20-ம் நூற்றாண்டில் அர்ஜென்டினாவில் இருவர் எழுதிய புதிர்ப் பாதைகளின் தோட்டம் தொகுப்பிலும், 2120-ல் வெளிவரப் போகும் வார்த்தைகளின் சூத்திரப் பலகை என்னும் நவகதா வரிசையிலும் இதே கதைகள் இடம்பெற்றிருக்கின்றன.

2. சப்த தாரா என்னும் நதியில் வர்ணக் கற்கள் இருப்பதாகவும் அந்த நதி எந்தப் பிரதேசத்தினைக் கடந்து போகிறது எனத் தெரியாமல் பலரும் தேடியலைந்ததாகவும் மெகஸ்தனிஸ் குறிப்பில் காணப்படுகிறது.

நத்தைகளின் புன்னகை

உலகின் கடைசி நுனியைக் கண்டு வருவதற்காகப் புறப்பட்டுக்கொண்டிருந்தது ஒரு நத்தைக் குடும்பம். ஏழு சிறு நத்தைகளும் இரு முதிய நத்தைகளுமாக அந்தக் குடும்பம் புறப்பட்ட நாளில் உலகின் தொலைவு ஒளியைப் போல நீண்டு கிடந்தது. ஒற்றைப் பனையின் தூர் முடிச்சில் அப்பிக் கிடந்த அந்தக் குடும்பம் வழிப் பயணத்துக்காக எந்த உணவையும் கொண்டு செல்லவில்லை. மாற்று உடைகளோ பாதைகளின் வரைபடங்களோ அவர்களிடமில்லை. நத்தைச் சிறார்கள் ததும்பும் கண்களுடன் உலகினை உருண்டு செல்லும் ஒரு சிறு திரவத் துளி போலக் காண ஆசையுற்றனர். அவர்களில் எவருக்கு முதலில் இந்த யோசனை தோன்றியதெனத் தெரியவில்லை. புறப்படும் நாளில் முதிய நத்தை தனக்கு மட்டுமே கேட்குமாறு சொல்லிக்கொண்டது, உலகம் ஓசையின் சுருள் வளையம் போல எண்ணிக்கையற்ற பிரிகை களைக் கொண்டதென. அவர்களில் பலஹீனமான நத்தை மட்டும் எதையும் பேசிக்கொள்ளவில்லை. அது முதன்முதலாக அந்தப் பனையை விட்டு இறங்கி நடக்கத் தொடங்கியிருந்தது.

நத்தைகளின் குடும்பம் புறப்பட்ட நாளில் மஞ்சள் கரைந்த வெயில் தொடங்கியிருந்தது. காற்றும் அதிக மிருக்கவில்லை. யாரோடும் பேசிக்கொள்ள மனமற்ற வர்களைப் போல நடந்தனர். செம்மண் கட்டிகள் விரிந்து கிடந்த நீண்ட வெளியில் அவர்கள் தியானி களைப் போல நடந்து போய்க்கொண்டிருப்பதை விரிந்த சூரியன் கண்டது. செம்மண்ணும் மஞ்சள் நிறமும் விரிந்த தோற்றவெளியில் மாலை நேரம்

பிறந்துகொண்டிருப்பதைக் கண்ட யவன நத்தை அதை ஒரு மலரெனப் பறித்துச் சூடிக்கொள்ள ஆசைப்படுவதைப் போல வெட்கித்ததைக் கண்ட முதிய நத்தை. 'உலகம் விசித்திர மலர்கள் பூக்கும் ஒரு கொடியைப் போலச் சுற்றி வளைந்திருக்கிறது' என்றது.

நத்தைச் சிறுவர்கள் யாவற்றுக்கும் ஆர்ப்பரித்தார்கள். நத்தைகள் எவரிடமும் வழி கேட்டுக்கொள்ளவில்லை. உலகின் கடைசி நுனியை முன்னதாகவே கண்டு திரும்பி வந்துவிட்டதைப் போல மிகுந்த பரிச்சயம் கொண்டதாகவே நடந்துகொண்டிருந்தன. எங்கு சென்ற போதும் தங்கள் வசிப்பிடத்தை உடன் சுமந்து செல்லும் அவர்கள் எவ்விதச் சலிப்புமின்றி, ஆர்வம் தீராத வேட்டையோடு பாதைகளை விழுங்கியபடி ஒரு சர்ப்பமென இருள் வந்து கொண்டிருப்பதைக் கண்டார்கள். நீரின் சுழிகளைப் போல இருள் சுழித்து அவர்களைக் கடந்து மேலேறிச் சென்றுகொண்டிருந்தது. சிறார்கள் மிகுந்த துக்கத்துடன் அதைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். யவனி தனது இருப்பிடத்தினை உடைந்த மூங்கிலொன்றின் பிளவினுள் தேர்வு கொண்டாள். அவர்கள் யாவரும் மூங்கில் குகையினுள் புகுந்துகொண்டபோது எண்ணிக்கையற்ற சப்தங்களைப் பெருக்கும் வண்டுகளும், பூச்சிகளும் பிறந்து கூச்சலிட்டன. இடைவிடாத சப்தமும் ஆர்ப் பாட்டமும் கண்ட நத்தை சொன்னது,

'உலகின் கூச்சல் மிகுந்த வன்மமாயிருக்கிறது. நாமிருந்தஇடம் நிசப்தத்தின் அடிவாரமல்லவா'

அவர்கள் பரஸ்பரம் மவுனமாயிருந்தனர் எங்கிருந்தோ வரும் நாடோடியின் பிதற்றுதலைப் போல எதையோ பிதற்றியபடி பனி எங்கும் நடக்கத் தொடங்கியது. இதுவரை அவர்கள் கண்டிராத குளிர்ச்சியால் உடல் நீர்மை கொள்ள நத்தைகள் நடுக்கமுற்றன. முதிய நத்தை விழித்துக் கொண்டபடி சொன்னது,

'உலகின் கடைசி நுனிக்கு அருகாமையில் இருக்கிறோம் போலும். பனியின் கால் தடங்கள் நம்மை நெருங்குகின்றன'

யாரும் அதைக் கேட்டுக் கொள்ளவில்லை. அடர்ந்து அடர்ந்து நிரம்பிய பனி சிறிய நதியைப் போல எங்கும் வளைவு கொண்டிருந்தது. அவர்கள் ஞாபகத்தில் நீண்ட வெக்கையுள்ள ஒற்றைப் பாதையும் பனைமரமும் பிறந்து கொண்டிருந்தன. யவன நத்தை பனியை அறிந்தவுடன் தானறியாத புன்னகையுடன் சொன்னது.

'தித்திப்பாக இருக்கிறது'

மங்கிய வெளிச்சமும், நட்சத்திரங்களும் கொண்ட பயணத்தின் முதல்இரவில் அவர்கள் கனவில் மிதந்தலைவதைப் போன்ற படலம் ஒன்றினுள் சுருண்டு கிடந்தனர் எப்போது தொடங்கியதெனத் தெரியாத ஒரு ஊசி முனையில் நீண்ட ஒற்றைச் சரடைப் போல ஒளி நீந்திக்கொண்டு வந்து மூங்கிலின் வளைவினுள் எட்டிப் பார்த்த போது சிறார்கள் ஆரவாரம் செய்தார்கள். அவர்களில் ஒருவன்

கேட்டான்,

'உலகம் எத்தனைப் பெரியது?'

எவ்வித யோசனையுமின்றிச் சொன்ன முதியவன்,

'அது ஒரு புல்லைப் போல ஆறு மடங்கு பெரியது' என்றான்.

இதில் எவரும் வியப்படையவில்லை. தொடங்கிய பகலில் அவர்கள் தங்கள் பயணத்தின் சாலையில் நடந்து கொண்டிருந்தார்கள். நிழல்கள் ஒன்றையொன்று அணைத்தபடி வீழ்ந்து கிடக்கும் பாதைகளுக்குள் பிரவேசித்தார்கள். பறவைகளும் அணில்களும் ஓடித் திரிந்தன. உயர்ந்த விருட்சமொன்றின் அருகாமைக்கு வந்த போது சிவப்பும் மஞ்சளும் கலந்த மலரொன்று உதிர்ந்து தரைக்கு வந்த அவர்கள் முன் வீழ்ந்தது. யவன நத்தையானது அந்த மலரின் அருகாமைக்கு வந்ததாகச் சொன்னது,

'கண்களால் தின்ன முடியாத அளவு பெரிதாக இருக்கிறது'

மலர் புரண்டு திரும்பி,

எத்தனை உயரத்தில் இருந்தேன். நிமிர்ந்து பார்' என்றது –

நத்தையால் உயரத்தைப் பார்க்க முடியவில்லை. அது மிகுந்த கூச்சத்துடன் சொன்னது,

'நட்சத்திரங்களின் வால் நுனியிலா பூத்திருந்தாய்?'

மலர் இதைக் கேட்டதும் கொஞ்சம் கர்வமும் பெருமிதமும் கொண்டதாகச் சொன்னது,

'மேகங்களின் விரலைப் பற்றிவிட முனையும் உயரம்.'

நத்தை மலரிடம் தன் வேட்கையைக் கேட்டு விடுவதென முடிவு செய்தது.

'உலகின் கடைசி நுனியைப் பார்த்திருக்கிறாயா? அது எங்கிருக் கிறது?'

மலர் சட்டெனச் சொன்னது,

'மிகத் தொலைவில் நானே அங்குதான் போய்க்கொண்டு இருக் கிறேன்.'

நத்தை வியப்பு கலைந்து துக்கம் மேலிடக் கேட்டது.

'அதற்கான பாதைகள் கிளைத்தபடியிருக்கிறதா?'

மலர் சொன்னது,

'நான் கண்டதில்லை.'

காற்று மலரைச் சுழலச் செய்து கைவசமாக்கிப் போனது. நத்தைகள் நடந்து கொண்டே இருந்தன. சிறார்களில் ஒருவன் சொன்னான்,

'நாம் தவறான பாதையில் நடந்து கொண்டிருக்கிறோம். கடைசி நுனிக்கான பாதை மிகக்குறுகியதாக இருக்கும்.'

மற்றவன் கேட்டான்,

'உனக்கெப்படித் தெரியும்?'

'கனவில் அறிந்திருக்கிறேன்'

மற்றவர்கள் பரிகசித்தார்கள். அவன் தான் தனியே அதை நோக்கிப் போவதாகப் பிரிந்து போனான். அவன் தனித்துப் போன பாதையில் எவரும் பின்தொடரவில்லை. அவர்கள் பகலெங்கும் நடந்துகொண்டிருந்தார்கள். உலகின் காட்சிகள் மாறிக்கொண்டே இருந்தன. வயல்களின் செழுமையான பச்சையும், தானியங்களில் பால் வாசனையும் கசிவதைக் கண்ட நத்தைகள் மிகுந்த ஈர்ப்புடன் அதன் ஈர வழிகளில் கடந்து கடந்து போயினர் சிறார்களில் ஒருவன் வயல் நண்டு ஒன்றைப் பார்த்தான். அந்த நண்டு மிகுந்த லாவகத்துடன் நீரில் நடந்துகொண்டிருந்தது. அவன் அதன் நாட்டியத்தைக் கண்டவனாகச் சென்றான். நண்டு அவனிடம் கேட்டது,

'எங்கே போகிறீர்கள்?'

அவன் தயக்கத்தோடு சொன்னான்,

'உலகின் கடைசி நுனியை நோக்கி.'

நண்டு வெட்கமின்றிச் சிரித்தது. பிறகு அது சொன்னது,

'பாதையறியாது போகிறீர்கள். உலகின் கடைசி நுனிக்குப் போக மண்ணுக்குள்ளாகவே துளையிட்டல்லவா போக வேண்டும்.' அவர்கள் அதைக் கேட்டுக்கொள்ளவில்லை. ஒரு நத்தை மட்டும் தயங்கிக் கேட்டது.

'உனக்கு வழி தெரியுமா?'

நண்டு சொன்னது.

'நானும் கடைசி நுனி நோக்கித்தான் வளை தோண்டிக்கொண்டிருக்கிறேன்'

வயற்பரப்பிலேயே ஒரு நத்தை தங்கிவிட்டது. அவர்கள் பின் திரும்பிப் பார்க்க மனமற்றவர்களாக நடந்து கொண்டிருந்தார்கள். மேகங்கள் கூடுவதும், கலைவதும், பறவைகள் திசை மாற்றம் கொண்டு பறப்பதும் கண்டவர்களாகப் புறப்பட்டனர். எல்லா வழிகளும் உலகின் நுனிக்குத்தான் போகின்றன என அறிந்ததைப் போல அவர்கள் திகைப்பு கொண்டபடி நடந்தனர். மண்ணின் நிறமும் சாயல்களும் மாறியபடி இருந்தன. நீண்ட பகலொன்றில் அவர்கள் தங்கள் பயணத்தின் வழியே பாறைகளின் கூட்டமொன்றைக் கண்டார்கள். பாறைகளின் புடைவில் பிறந்து சயனித்த செந்நிறக் காளான் ஒன்று தனது துயில் கலைந்து அலுப்போடு கேட்டது.

'எங்கே போகிறீர்கள் துறவிகளைப் போல?'

பதில் சொல்ல விருப்பமற்று நடந்தார்கள். சிறார்களில் ஒருவன் சொன்னான்,

'உலகின் கடைசி நுனிக்கு.'

அது திரும்பத் தூங்கும்முன் சொன்னது,

'மலைக்குப் பின்புறம்தான் அது இருக்கிறதென்கிறார்கள்.'

இந்தப் பதிலின் குளிர்ச்சியால் அவர்கள் பரஸ்பரம் சந்தோஷம் கொண்டார்கள். உயர்ந்த கோரைகளும், பழுத்து உதிர்ந்த இலைகளும் கொண்ட மலையினுள் ஏறத் தொடங்கினார்கள். சூரியன் தனது ஓட்டத்தின் நடுநடுவே அவர்களைப் பார்த்தபடி இருந்தது. மலையின் ஸ்தனமென மலர்ந்த ஒரு பாறையின் மீதேறியவர்களாக அவர்கள் கவிழ்ந்தபடி நடந்தனர். சிறார்களில் ஒருவன் சொன்னான்.

'உலகம் வேதனை நிரம்பியது. உடல் எரிகிறது.'

அவன் சப்தம் பின் மெல்ல ஓய்ந்தது. மலையின் சுடும் இரவு ஒளி நிரம்பியது. பால் கசிவைப் போல வெளிச்சம் கசிகிறது. அவர்கள் பாறையின் உடலைப் பற்றி உறங்கினர் முதிய நத்தை சொன்னது,

'எதையாவது கூச்சலிடுங்கள் சிறார்களே.'

அவர்கள் மலையின் உச்சியைத் தொட்டபோது பிரமாண்டமான கோப்பையைப் போல அந்தப் பரப்பு குழிவு கொண்டது. சிறார்களில் இருவர் ஏதோ சரிவில் பின்தங்கிவிட்டதைக் கண்டதாக ஒரு நத்தை சொன்னது,

'உலகின் நாவு என் பிள்ளைகளின் காலைப் பற்றி இழுத்துக் கொண்டது'

எவருக்கும் துயரத்தை வெளிப்படுத்த முடியவில்லை. மேகங்கள் உதிர்ந்துகொண்டிருந்த மாலையில் அவர்கள் கீழே இறங்கிய போது மேய்ந்துகொண்டிருந்த ஆட்டுக் குட்டி கத்தியது,

'மழை வருகிறது'

அவர்களைக் கண்டுதான் ஆடு கூச்சலிடுவதாகக் கண்ட அவர்கள் வெட்கமுற்றனர் முதிய நத்தை கேட்டது,

'இது உலகின் கடைசி நுனிதானா?'

ஆடு புரியாமல் விழித்தது. பிறகு தலையைச் சிலுப்பி அது நதிக்கு அப்பால் இருக்கக்கூடுமென்றது. நத்தை இந்தப் பதிலால் அயர்ச்சியுற்றவனாக நின்றது. முதிய நத்தை மீதமிருக்கும் சிறுவர்களோடு நடந்து போனது. அவர்கள் புறப்பட்ட பனிக்காலம் உருமாறிக் கோடையாகி, அதுவும் கலைந்து வசந்தம் பிறந்திருந்தது. நதியின் சிறு பாதைகளில் அவர்கள் பிரவேசித்தார்கள் சிவப்பும் பச்சையும் கலந்த இலைகள் துளிர்த்துக்கொண்டிருந்தன ஈரத்தில் சாந்த முற்றிருந்தன நாணல்கள். அவர்கள் நீண்ட நதியைக் கண்டார்கள். சிறார்களில் ஒருவன் கேட்டான்,

'விசித்திரமாக இருக்கிறது. இத்தனை வேகமாக ஓடிக் கொண்டே இருக்கும் மாயப் பொருளாக இருக்கிறதே. இது என்ன விலங்கு?' ஒரு நத்தை நீரைக் கண்டதாகச் சொன்னது,

'இது நதி'

முதியவன் சொன்னான்,

'அதோ தொலைவில் புள்ளிகளாக வட்டமிடுகிறது உலகின் கடைசி நுனி.'

அவன் உற்சாகம் யாரையும் பற்றவில்லை. அவர்கள் கரையேறி நின்ற பரிசலொன்றில் இரவைத் துயில் கொண்டனர். விழித்தபோது அது நதியில் போய்க்கொண்டிருந்தது. பரிசல் ததும்பலில் நீர் பாய்ந்து எழுந்தது. நத்தைகளில் ஒன்றை உள்ளிழுத்துப்போனது. கரைக்கு வந்தபோது இரு நத்தைகள் மட்டுமேயிருந்தனர். சிறாராக ஒரேயொரு நத்தையிருந்தது. பசிய புல் விரிந்த தரையில் நடந்தபோது மீனவனின் பானையில் இருந்த மச்சமொன்று அவர்களைக் கண்டதும் துயர் மேலிட,

'நத்தைகளே எங்கே போகிறீர்கள்?' எனக் கேட்டது.

மிகப் பலவீனமான குரலில் நத்தை கேட்டது

'உலகின் கடைசி நுனி இதுதானா?'

அது அவர்களைக் காண மன இயல்பற்றுச் சொன்னது,

'அது சமுத்திரத்துக்கப்பால் அல்லவா இருக்கிறது'

அவர்கள் இதை எதிர்பார்த்தவர்கள் போலக் களைப்பும் அசதியும் மீறி நடந்தனர். பிதற்றலும் கனவும் பெருகின. எத்தனை காலம் அவர்கள் நடந்தார்கள் என்பதை அறிய அவர்களிடம் எந்தக் குறிப்புமில்லாமல் போன நாளில் மிகுந்த நிசப்தம் கொண்ட மணல் பரப்பில் நின்றனர். நீலம் பாரித்த கடல் தொலைவில் அலை வீசிக் கொண்டிருந்தது. மிகுந்த அசதியுற்றவனாகச் சொன்னது,

'உலகம் வலியது. நாம் வீடு திரும்பிவிடுவோம்.'

யவன நத்தை தன் இடுக்கிய கண்களால் சமுத்திரத்தைப் பார்த்தது. அது சுருள் சுருளாக வளைந்திருந்தது. அது சொன்னது,

'சமுத்திரத்தைக் கடப்பதைவிட வெகு தொலைவில் இருக்கிறது நம் வீடு. நாம் இனிப் பின்திரும்ப முடியாது' எனத் துக்கித்த அவர்கள் மெல்லச் சமுத்திரக் கரையை நோக்கி நடந்தனர். நீண்ட அலைச்சலும் ஏமாற்றமும் அவர்களை எடையற்றுச் செய்திருந்தன. உடைந்த மரத்துண்டு ஒன்றில் மூவரும் ஏறிக் கொண்டனர். ஒரு நத்தை சொன்னது, 'கண்கள் அழுத்தமாகின்றன. உறங்கிவிடுவோம்.'

உடலில் மிதக்கத் தொடங்கியது மரத்துண்டு. அவர்கள் விழித்துக் கொண்டபோது நீண்ட மணற்பரப்பில் ஒதுங்கிக் கிடந்தனர் தொலைவில் சமுத்திரம் சிறிய புள்ளியாக இருந்தது. யவன நத்தை எழுந்து நடந்தபோது தொலைவில் முதியவன் மிகுந்த சந்தோஷ முற்றவனாகச் சொன்னான்.

'உலகில் கடைசி நுனியிது. .வந்து சேர்ந்துவிட்டோம்.'

நத்தையிடம் சிறிய புன்னகை கசிந்தது. முன்பே பார்த்து அறிந்தது போலப்பரிச்சயமான அந்த வெளியினுள் நடக்க நடக்க யாவும் அவர்கள் அறிந்திருந்ததாகவேயிருந்தன. தொலைவைக் காட்டியது. அங்கே ஒரு பனைமரமிருந்தது. அதை அவர்கள் நெருங்கும்போது யவன நத்தை மிகுந்த அசதியுற்றவனாகச் சொன்னது,

'உலகின் கடைசி நுனி இதுதானா?'

தாங்கள் புறப்பட்ட இடத்துக்கே வந்து நிற்பதன் புதிர் அறிய முடியாமல் அவர்கள் சோர்ந்து வீழ்ந்தபோது காற்று சொன்னது,

'நத்தைகளே எங்கிருந்து முதலடி எடுத்து வைத்தீர்களோ அதுவே உலகின் கடைசி நுனி...' அதைக் கேட்க மனமற்று இரண்டு நத்தைகள் துயரமேறி விசும்பிக்கொண்டிருந்தன.

நுனிக் கதைகள்

ஓர் எறும்பு

பல முறை தனது பெயரைத் தானே மாற்றி வைத்துக்கொண்ட எறும்பு ஒன்று ஒரு முறை தனது பெயரை ராமகிருஷ்ணன் என வைத்துக்கொண்டது. பெயர் ஒற்றுமையில் அதற்கொன்றும் பெரிய மாற்றம் கூடவில்லை. ஆனாலும் அது தனது பெயர் மாற்றப் பட்டிருப்பதை சம்பந்தப்பட்டவரிடம் தெரிவிக்க விரும்பி வரும் வழியில் தனது பெயரை மறந்திருந்தது. பகலில் அது மிகச் சோர்வுற்றதாகத் தனது பெயரை நினைவுக்குக் கொண்டுவர முயன்றது. முதலில் அதற்கு யானை என்னும் பெயரும், புலி என்னும் பெயரும் வசீகரமாகயிருந்தன. அவை தனது பெயர் தானோ என்னும் சந்தேகம்கூட வந்தது. பிறகு அது ஒரு மேஜையில் அலைவுற்றபோது அருகாமை யில் இருந்த கண்ணாடியின் முன்நின்றதாகக் காட் டெருமை, மான், விலங்கு, மிலா, தவளை, நரி, கரடி, பூனை, ஆந்தை, குருவி, நட்சத்திரம், ஆகாசம், மலை, இடி, மின்னல், பகல், இரவு, கோடை, வெயில், பனி, அருவி, இருட்டு, பூசணிக்காய், திமிங்கலம் எனத் தனது பெயர்களைச் சூட்டிப் பார்த்துக்கொண் டது. எல்லாப் பெயர்களும் தனக்குப் பொருந்துவதைக் கண்ட உற்சாகத்தில் அது சுயபிரமை கொண்ட போது, உள்ளிருந்து ஒரு பெயரைச் சொல்லியழைக்கும் பெண் குரல் கேட்டு எழுதிக்கொண்டிருந்த மனிதன் நிமிர்ந்து திரும்பி கண்ணாடியை ஏறிட்டுக் கண்டவ னாக எறும்பு எனச் சொன்னான். சட்டென எறும்பு தனது பெயரை மீட்டுக்கொண்டது போலத் திரும்பிப் பார்த்தது. பழக்கதோஷம் என யாரோ சொன்னதை

எறும்பும் ராமகிருஷ்ணனும் ஒரே நேரத்தில் திரும்பிக் கேட்பதைக் கண்ணாடி மட்டும் பார்த்துக் கொண்டிருந்தது பாவம்.

ஒரு சிற்பம்

நீண்ட காலமாக ஆப்தநாதரின் தெற்கு கோபுரத்தில் உறைந்திருந்த யவனிகைச் சிற்பமொன்று தனது உறக்கம் கலைந்து நேற்று கீழே இறங்கிவந்தது. கையில் ஒரு ஐந்து முகவிசிறி கொண்டதாக நின்றிருந்த யவனிகைக்குக் கன்னிமை முற்றியிருந்தது. தனது சக தோழிகளாக நீர்க்குடமேந்தி நிற்கும் கல் ஸ்திரிகளைச் சொற்ப நேரம் ஏறிட்டுப் பார்த்தது. பிறகு அதில் கவனமற்று விடுவிடுவென நடந்து வீதிகளுக்குள் வரத் தொடங்கியது. ஒரு கல்லின் அவசரமும் திண்மையும் கொண்ட அது எதையோ தேடுவதைப் போல அங்கும் இங்கும் நடந்துகொண்டி ருந்தது. எதன் மீதும் விருப்பமற்ற அதன் கண்கள் எளிதில் அசதியுற்றன. அது பரபரப்பான தெருக்களைக் கண்டு பெருமூச்சிட்டது. சிற்பத்தின் மொழியை அறிந்தவர் எதிர்ப்படாத சாலையில் அதன் மவுனம் மட்டுமே உதிர்ந்துகொண்டிருந்தது. உயரமான கட்டடங்களும், இரவின் ஒளிரும் அறைகளைக் கண்டதாகத் தான் சாந்தியுறும் இடம் தேடி அது ஒரு பதினாறு மாடிக் கட்டட உயர வெளிக்கு வந்திருந்தது. எல்லையற்ற ஆகாசம் விரிந்து கிடக்க நட்சத்திரங்கள் ததும்பிக் கொண்டிருந்தன. யவனிகை முகம் மலர்ச்சி கொள்ளத் தொடங்கி மெல்ல அது நடனமிடத் தொடங்கியது. நடனம் உக்கிர மாகிக் கட்டடம் தாண்டிக் காற்று வெளியில் சுழன்றது. சிற்பமொன்று வானில் நடனமிடுவதைக் கவனம் கொள்ள எவருமே இல்லை. தனது நடன வேகத்தில் வீதிகளை, வீடுகளைப் புள்ளியாக்கி வளைய மிட்டது. பின் அது தனது உருவைக் கலைத்ததாகச் சிதறி வீழ்ந்தது. வேறு வேறு வடிவங்களில் தனது இருப்பை அவிழச் செய்ததாக சிற்பம் திரும்பவும் மோன நிலைக்குச் சென்றிருந்தது. சாலையில் உதிர்ந்த கற்களையோ கோபுரத்தில் இல்லாத சிற்பத்தையோ எவரும் கவனிக்கவில்லை.

ஒரு சாவி

எப்போதோ ஒரு பூட்டிலிருந்து தப்பிவந்த சாவியொன்று தனது பயத்தை மறைத்தபடி வீட்டுப் பரணின் மூலையில் வீழ்ந்து கிடந்தது. தனது வாழ்வின் வசந்தத்தில் ஒரு பூட்டோடு தனது உறவை சிருஷ்டித்த விநோதக் காரணியை வெறுத்தபடி, வெறுமையும் ஏமாற்றமுமாக அது தனது தனி வாழ்வை வேண்டியபடி விடுபடும் நாளுக்காகக் காத்துக்கொண்டிருந்தது. தனது விதியோடு பொருத்தப் பட்ட பூட்டானது ஒரு ரகசிய அறையின் வெளியில் தொங்கிக்கொண் டிருந்தது. எப்போதும் கடுமையும், இறுகிக் கிட்டித்த பற்களும் கொண்ட பூட்டைப் போல அகோரமெதையும் சாவி தனது வாழ் நாளில் கண்டதேயில்லை. சாவிகளின் உலகில் நளினம் மட்டுமே

மிஞ்சியிருக்கின்றது. சாவி தனது உடலை மெலிவாகவும் அலங்காரமாகவும் கொண்டிருக்கின்றது. பூட்டிடமிருந்து தப்புவதற்காகவே அது ஸ்திரிகளின் ஸ்நேகத்தை ஏற்படுத்திக் கொண்டது. சாவியை நேசிக்கும் ஸ்திரிகளுக்குப் பஞ்சமேயிருப்பதில்லை. ஸ்திரிகள் சாவிக்கு உலகின் விநோதக் களியாட்டத்தைக் காட்டிக் கொண்டே இருந்தார்கள். உலகில் பெரும்பான்மையான பொருள்களை எவராலும் பூட்டிவிட முடிந்ததில்லை என அவர்கள் கெக்கலிக்கும் போது சாவியும் அதைச் சொல்லி சந்தோஷித்தது.

ஒரு நாளில் அது தனது தனி இருப்பை வேண்டியதாக ஸ்திரியிடமிருந்து நழுவி மண்ணில் வீழ்ந்தது. அந்த இரவில் தன்னைத் தேடியபடி விளக்கொளியில் அலையும் நிழல் உருவங்களைக் கண்டு சாவி ஆழமாக தன்னைப் புதைத்துக் கொண்டது. பின் அதன் சுதந்தரப் பயணம் தொடங்கியது. அது மழையின் வாசனையைக் கண்டது. வெயிலைக் குடித்துக் குடித்து ஊர் சுற்றியது. சாவிகளின் சாலையில் நடந்தபோது எங்கும் இரும்பின் நறுமணம் பெருகிக் கொண்டிருந்தது. எந்த உறவும் தேவைப்படாத துறவு நிலையை அது அடைந்தபோதும் தான் அகப்பட்டுவிடுவோம் என்ற பயத்தைக் கலைக்க முடியவேயில்லை. பின் ஒரு நாள் அது விளையாடும் சிறுவன் ஒருவனின் கைகளில் கிடைத்தது. அவன் சாவியைக் கொண்டு பூமியைத் திறந்துவிட முயற்சித்தவனாக இருந்தான். வானத்தை, மாபெரும் சமுத்திரத்தை, மலர்களை, நதியை, கற்களை, சூரியனை, நட்சத்திரங்களை, காற்றை சாவியால் திறப்பதாக பாவனை செய்து விளையாடி முடித்து ஒரு நாளில் சந்தோஷம் மிகுதியாக அதைப் பரணியில் வீசி எறிந்தான். நடந்ததை நினைத்து சந்தோஷித்ததாக வீழ்ந்து கிடக்கிறது சாவி, யாரும் வராத இடமென்றபோதும் பயத்தைக் கலைக்க முடியாமல்.

ஒரு காகம்

தாகம் மீறிய ஒரு காகம் தொலைவில் ஒரு வெம்பாலையின் ஒற்றை மரத்தடியில் ஒரு மண் குடத்தைக் கண்டது. ஆழத்தில் நீர் இருப்பதைக் கண்டு, குடிக்க வழியென்ன செய்வதென யோசித்து ஒரு கல்லை எடுத்துக் குடத்தினுள் போட்டது. அப்போதும் தண்ணீர் உயரவில்லை. அடுத்த கல்லை எடுத்துப் போட்டதும் பெரிய அலையொன்று எழும்பி உயர்ந்து சரிந்தது. மூன்றாவது கல்லைப் போட்டதும் பார்த்துக்கொண்டிருக்கும்போதே தண்ணீர் பொங்கி வழிய எங்கும் ஓடி நிரம்பிற்று ஒரு கடல். எங்கேயிருக்கிறது பானை எனத் தெரியாத குழப்பமும், எதில் நின்று குடிப்பது என அறியாத படபடப்புமாக காகம் கடலில் வட்டமிட்டுப் பறந்தது. எல்லையற்ற பரப்பில் கடல் அலை வீசிக்கொண்டிருந்தபோதும் காகத்தின் தாகம் தீரவேயில்லை. அது கடலில் ஒளிந்த குடத்தைக் காண்பதெப்படி எனத் திரும்பவும் யோசித்தபடியே பறந்தலைந்தது. மற்றொரு கல்லை

எடுத்துப் போட்டால் கடலை வெளியேற்றிவிடலாம் என யோசித்த தாக இன்னொரு கல்லைத் தேடியபடி முடிவற்ற கடலின் விளிம்பை நோக்கிப் பறக்கத் தொடங்கியது. பின் அக்காகம் திரும்பி வரவேயில்லை.

ஒரு ரோமானிய நாணயம்

கடந்து போவோர் வருவோரிடமெல்லாம் நான் ஒருவன் மட்டுமே கடந்த காலத்தின் சாட்சியாக மிஞ்சியிருக்கிறேன் என உரத்து சப்தமிட்டுக்கொண்டிருக்கும் ரோமானிய நாணயம் ஒன்று மியூசியத்தின் இரண்டாவது தளத்தில் இருந்தது. நான் செங்கடலை, மாலுமிகளை, துறைமுகங்களை, சவுந்தர்ய நடனக் காரிகளை, மதுவிடுதியாளர்களைக் கண்டிருக்கிறேன், கடந்த காலம் என் வழியேதான் தனது இருப்பைக் காப்பாற்றி வைத்துக் கொண்டிருக்கிறது என அது சதா தனது பிரஸ்தாபத்தைக் கொட்டிக்கொண்டிருந்தது. அறையின் காரை உதிர்ந்த நீண்ட சுவர்களில் நிசப்தித்துவிட்ட கேடயங்களும் குறுவாள்களும் இதன் சலசலப்பைக் கேட்டும் பதில் கொடுக்கவில்லை. அவை தங்களது உதிரக் கறையினை மறைத்துக் கொண்ட குற்ற உணர்ச்சியில் மூழ்கியிருந்தன. கடந்த காலம் என்னும் தொல்விலங்கின் பல் வரிசையைப் போல நின்று கொண்டிருந்தது மியூசியம். இரவில் நாணயம் தனது புறக்கணிக்கப்பட்ட துயரத்தை நினைத்து வேதனையுற்றது. பகல் தொடங்கியதும் அது திரும்பவும் சப்தமிடும். அகஸ்டலை உனக்குத் தெரியுமா? ரோமானிய மூக்கைக் கண்டிருக்கிறாயா? ரோமானிய தேசத்து மதுக்குடுவைகளில் உதடு பட்டிருக்கிறாயா? துறைமுகக் கரையில் திரியும் அபிசீனியர்களின் கூச்சலைக் கேட்டிருக்கிறாயா? கடந்து போகும் எந்த மனிதனிடமும் இதற்கு பதில் இல்லை. ஒட்டுமொத்த ரோமானிய தேசமும் குதிரைகளும் கப்பல்களும் கிளியோபாட்ராவும் சீசர் வம்சமும் தனது சிறிய வடிவத்தில் ஒளிந்திருக்கிறார்கள். தான் கடந்த காலத்தின் தனியாள் எனப் பெருமிதமாகச் சொல்லியது. ஒரு இரவில் மியூசிய அறைக்குள் காலடியோசை பதியாமல் நடந்து வந்த மனிதன் கண்ணாடி உறைக்குள் உறக்கமற்ற நாணயத்தைக் கண்டு கையில் எடுத்தபோது அது அவனிடமும் சொன்னது,

"நான் ரோமானியன்."

அவன் அந்த நாணயத்தைத் தனது பல்லால் கடித்துப் பார்த்தான். பிறகு மிகுந்த சிரிப்போடு சொன்னான்,

"சொர்ண நாணயம்."

ரோமானிய நாணயம் தனது வேதனை தாளாமல் சொன்னது,

'நான் ரோமானியன்."

அவன் அவசரமாக வெளியேறினான். நாணயத்துக்குத் தான் எங்கே போகிறோம் என்றே பிடிபடவில்லை. அது தனது குரலை ஒடுக்கிக்கொண்டது. மிதக்கும் ஒளி நிரம்பிய பகலில் அவன்

வாகனங்கள் குறுக்கிட்டுக் கடந்த சாலைகளில் சந்தித்த மற்றொரு மனிதன் நாணயத்தைக் கையில் வாங்கிப் பார்த்து தங்கம் என கண்சிமிட்டியபடி பணத்தை எண்ணித் தந்தபோது எதிர்காலத்தின் சாலையில் தான் போய்க்கொண்டிருப்பதை அறியாமல் அது பரிதவித்தது. கையில் பணமும் சிரிப்புமாக அந்த மனிதன் போய்க் கொண்டிருந்தான் மிகப் பழங்காலத்தில் அடைக்கப்பட்ட மதுக்குப்பியை வாங்கும் கடையை நோக்கி. மியூசியத்தில் இருந்த குறுவாள்கள் இவை யாவையும் கண்டதாக நிசப்தத்தில் செயலற்று சுவரில் உறைந்திருந்தன.

ஒரு குடை

கைப்பிடியில் தந்தம் கொண்ட சிறிய கறுப்புக் குடையொன்றை மாடுகளை வாங்கி விற்கும் சந்தையில் கண்டு எடுத்து வந்ததாக அப்பா கொண்டு வந்திருக்கிறார். ஏதோ ஒரு மனிதனின் சுபாவத்தையே தானும் கொண்டிருந்தது போல இருந்த அக்குடை, எல்லாக் குடைகளையும் போலவே தலை கவிழ்ந்தபடியிருந்தது. வீட்டில் குடை பிடித்துப் போகக்கூடிய மனிதர்கள் யாருமில்லை. மழை நாள்களைத் தவிரவும், மற்றப் பொழுதுகளில் குடையை யாரும் நினைவு கொள்வதுகூட இல்லை. வீட்டுப் பெண்களில் எவராவது எப்போதாவது முற்றின கோடையில் கரிசலின் ஊடே நடந்து பக்கத்து நகரம் போக முற்பட்டபோது குடை பிடித்துப் போவார்கள். அப்பா கொண்டுவந்த குடையை மூத்த அக்காதான் முதலில் பிடித்துக்கொண்டு போனாள். அவள் குடையைப் பிடித்தபடி நடக்கத் தொடங்கியபோது குடைக்குள் மழை ஒளிந்திருந்தது. அவள் ஈரம் பிடிபடாமல் குடையைச் சிலிப்பிய போதும் மழை விட்டபாடில்லை. குடையினுள் மழை சொட்டிக் கொண்டேயிருந்தது. எரிச்சலாகி வைத்துவிட்டாள். எவரிடமும் சொல்லாமல் பின்னொரு நாள் அம்மா வெயில் தாளாமல் குடையைப் பிடித்துக்கொண்டு கண்மாய்க் கரையில் உட்கார்ந்திருந்தபோது, குடைக்குள் அவள் இருக்கும்போது இளவயதுத் தோற்றம் கூடியுள்ளதையும், குடை விலகினால் திரும்ப வயது ஏறிவிடுவதையும் கண்ட வண்ணாத்தி திகைப்பில் சொன்னபோது பரிகாசமென அம்மா விலக்கி வீடு வந்தாள். வீட்டுப் பசுக்களைக் குளியலுக்கு ஓட்டிச் சென்று திரும்பும் வழியில் மின்னல் வெட்டு கண்டு பசுக்கள் கலைய, தெறிக்கும் மழைக்குக் குடை விரித்தவராக அப்பா நின்றபோது, மாடுகளும் மேய்ச்சல் நிலமும் மொத்த கம்மங்காடும் அவரது குடை வளைவுக்குள் வந்து ஒண்டிக்கொண்டு நின்றதைக் கண்ட யாவருக்கும் வியப்பு கூடியபோதும் அக்குடையை எவர் சந்தையில் மறந்துபோய் விட்டவர் என ஒருபோதும் தெரிந்துகொள்ள முடியவேயில்லை.

தினசரி காலண்டரின் ஒரு தேதி

மே11 எனப் பெயரிடப்பட்டிருந்த அந்தத் தினசரி காலண்டரின் ஒரு காகிதம் பாதி விழிப்பு நிலையில் தனது இருப்பைப் பற்றிய துயரத்தை வெளிப்படுத்தியது. தான் யார்? எதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறோம்? தனக்கு முன்னும் பின்னும் உறைந்து போனவர் கள் மவுனமாக எதன் பொருட்டுக் காத்திருக்கிறார்கள்? தனது வாழ்க்கை ஒரு நாள் மட்டுமே என அது தெரிந்திருந்த போதும் தனது வாழ்வின் மர்மத்தை முன்னமே தெரிந்துகொள்ள மிக ஆவலாக இருந்தது. மே 11 என்றால் நிஜத்தில் என்ன? தானும் தனது 365 சகோதரர்களும் ஒரே கட்டிலில் உறங்கிக் கொண்டிருப்பதன் பிடிபடாத ரகசியமென்ன? அது ஆழ்ந்து யோசித்தது. தான் ஒருவன் மட்டும் இதில் தப்ப முடியுமென்றோ, தொடர்ந்து தான் மட்டும் இருந்துவிட முடியுமென்றோ கூடிய சாத்தியங்கள் அற்றுப்போய் விட்டன அதனால் கவலை கிளைவிரியத் தொடங்கியது. மே 11 என்பது ஒரு பிறந்த நாள், ஒரு அணுக்குண்டு வெடிப்புற்ற நாள், புரட்சி நடந்த நாள், ஒரு யுத்தம் தொடங்கிய நாள், ஒரு பூகம்பம் நடந்த நாள், ஒரு திருமண நாள், ஒரு இனக் கலவரம் தொடங்கிய நாள், ஒரு சுதந்திர தினம், ஒரு அற்புதம் கூடிய நாள், பெரு வெடிப்பு நடந்த நாள், ஒரு கால்பந்துப் போட்டியில் ஜெயித்த நாள், ஒரு மரண நாள், ஒரு கப்பல் மூழ்கிய நாள், ஒரு காதல் தொடங்கிய நாள், ஒரு டினோசர் அழிந்த தினம், ஒரு தற்கொலை தினம், ஒரு பிரளயம் ஏற்படும் நாள், விண்மனிதன் வருகை தரும் நாள், ஒரு பரீட்சை நாள், ஒரு விபத்து நாள், ஓர் ஓய்வு நாள் இன்னும் இன்னும் இதன் விஸ்தாரம் முடிவற்றுப் போகப் போக அசதியில் திரும்பவும் தூங்கத் தொடங்கிவிட்டது மே 11ஆம் நாள்.

கானகப் புலியின் மனைவி

பின்னொரு நாள் யாருமற்ற குளத்தில் குளித்துக் கரையேறிய அதிரூப சுந்தரியான இளம் பெண்ணைக் கண்ட கானகப் புலி அவளை அடைய ஆசை கொண்டு வேத உபநிஷத்து, நாலு சாஸ்திரம் அறிந்த பண்டிதர் போல உருமாறி, மந்திரங்களை முணு முணுத்துக் கொண்டு பெண்ணின் தகப்பனைத் தேடி வந்து பெண் கேட்க, அவர்களும் விருப்பத்துடன் பெண்ணைத் திருமணம் செய்து கொடுத்தனர்

தென்னாட்டுப் பழங்கதை

பகலில் அவள் வீட்டை விட்டு வெளியே வருவதே யில்லை. இரவு தொடங்கிய பிறகு அவள் சிறிய மண்குடத்தை எடுத்துக் கொண்டு நல்ல தண்ணீர்க் கிணற்றுக்கு வரும்போது தெருவில் எவராவது அவளைக் காட்டுப் புலியின் மனைவி எனப் பரிகசித்த போது அவள் தலைநிமிர்ந்து பார்ப்பதும் இல்லை.

அந்த ஊர் கானகம் தொடங்கும் சரிவிலிருந்தது. அங்கிருந்து சில மைல் தூரத்தில் பாறைகளும் சிற்றோடைகளும் புதர்ச் செடிகளும் இலைகளை உதிர்த்தபடியிருக்கும் விருட்சங்களுமிருந்த கானகம் விரிந்திருக்கிறது. ஒரு பகல் தூரமளவு விஸ்தாரணம் கொண்டிருந்த அக்கானகத்தின் நடுவே வெயில் தரையிறங்கிப் பார்த்ததே இல்லை.

இரண்டு வாரங்களுக்கு முன்புதான் அவள் தனது தாய் வீட்டுக்குத் திரும்பியிருந்தாள். அதுவும் அவளாக வந்து சேரவில்லை. சகோதரர்கள் இருவர் அவளை ரகசியமாகக் கானகத்திலிருந்து கூட்டி வந்திருந்தனர்.

வழியெல்லாம் அவர்கள் பயத்துடன் மூச்சுச் சப்தம்கூடக் கூடிவிடாமல் நடந்து, கானகப் பாதை கடந்து, ஊரின் முகத்துவாரத்துக்கு வந்தபோது மாலை வெயில் மினுங்கிக்கொண்டிருந்தது. அவள் தனது குழந்தையை மார்போடு அணைத்தபடி மெதுவாக நடந்து வந்துகொண்டிருந்தாள். சகோதரர்கள் இருவரும் வெறுப்பும் கசப்புமான வார்த்தைகளைத் தங்களுக்குள் பேசியபடி அவள் கைகளைப் பிடித்து இழுத்துக்கொண்டு வேகமாக நடந்தனர். சகோதரர்கள் அவளை வீட்டுக்குக் கொண்டு சேர்த்தபோது இரவு முற்றியிருந்தது.

அன்றிரவில் சகோதரர்களுக்கும் தகப்பனுமாக வாய்ச் சண்டை முற்றியது. இனி அவளைப் புருஷனின் வீட்டுக்கு அனுப்பப் போவதில்லை என்று சகோதரர்கள் கூச்சலிட்டனர். தகப்பனோ, அது சாஸ்திர விரோதம்; அவள் இந்த வீட்டில் தங்குவதைத் தான் ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்றான். சகோதரர்களில் ஒருவன் இதனால் ஆத்திரம் அதிகமாகிக் கத்தினான்.

"உன் மாப்பிள்ளை யார் தெரியுமில்லையா? கடைவாய்ப் பல்லில் ரத்தம் ஒழுகும் கானகப் புலி."

தகப்பன் பிடிவாதமாகச் சொன்னான்,

"ஜலத்திலும் நெருப்பிலும் சத்தியம் செய்து தாரை வார்த்து பெண் கொடுத்திருக்கிறோம். மறந்துவிடாதே."

இளையவன் தன் பற்களைக் கடித்துக் கொண்டு முறைத்தபடியே தகப்பனிடம் கேட்டான்,

"அப்போ உமக்கு முன்னமே புலி என்று தெரியுமோ?"

தகப்பனும் ஆத்திரத்துடன் சொன்னான்,

"நான் பண்டிதனுக்குத்தான் பெண் கொடுத்தேன். புலியாக இருந்தால் என்ன, புருஷனாகியிருக்கிறானா, இல்லையா, அதைப் பற்றி மட்டும் பேசு."

இரவு முழுவதும் அவர்களின் பேச்சொலி கேட்டுக்கொண்டே இருந்தது.

இரண்டு வருடத்தில் அவளது சுபாவமே மாறியிருந்தது. ருது வெய்தி ஆறு வருடம் காத்திருந்தபோது மணமாகாமல் இருந்த அவளுக்காகத் தகப்பன் பொருள் எதையும் சேர்த்து வைக்கவேயில்லை. புரோகிதம் செய்யும் தகப்பனின் வருமானத்தில் அவர்கள் இருவரின் தினப்பாடே இழுத்துக் கொண்டிருந்தது. வீடு தேடி வந்து ஒருவன் தன்னைக் கட்டிக்கொள்வான் என எதிர்பார்க்கவேயில்லை. தோளில் படியும் கேசமும் சாந்த முகமுமாக வந்து சேர்ந்த பண்டிதனின் விருப்பப்படி அவர்கள் வீட்டிலே திருமணம் நடந்தேறியது. கானகத்திலிருந்த புருஷன் வீட்டுக்கு அவள் புறப்பட்ட நாளில் தகப்பனானவன் தனது வீட்டில் கட்டியிருந்த குள்ளப் பசுவை சீராகக் கொடுத்தனுப்பினான் பசுவை அவள் புருஷன் கூட்டிச் செல்ல கயிற்றோடு இழுத்தபோது பசு மிரட்சியுடன் திமிறி அடிவயிற்றில் இருந்து

குரல் எழுப்பியது. பசுவின் கால்கள் நகர மறுத்துத் தரையைத் தேய்த்தன. அவள் புருஷனோ, சாந்தம் ததும்பும் கண்களுடன் தனது அகலமான கைகளால் பசுவின் நெற்றியைத் தடவிவிட்டபோது பசுவின் கண்கள் வெறிச்சிட, பயத்தில் தானே கண்ணீர் சுரந்தது. பசு திமிறி வாலைச் சுழற்றியது. பண்டிதனின் விரல்கள் பசுவின் வயிற்றைத் தடவின. பசு பயத்தில் தலையைச் சிலுப்பியது. கழுத்தில் கட்டியிருந்த ஒற்றை மணி அசைந்து சப்தம் எழுப்பியது. அவள் தான் கூட்டிக்கொண்டு வருவதாகப் பசுவின் கயிற்றைக் கைகளில் வாங்கிக் கொண்டாள்.

அவர்கள் கானகத்தினுள் நடந்து செல்லத் தொடங்கும்போது இருவரும் பேசிக்கொள்ளவே இல்லை. இலைகளுக்கு ஊடாகப் பதுங்கிச் சப்தமிட்டுக்கொண்டிருந்த பறவைகள்கூட எதையோ கண்டுவிட்டது போல சப்தம் ஒடுங்கின. கானகம், உலர்ந்த சருகுகளால் நிரம்பியிருந்தது. மரம் விட்டு மரம் சாடிச் செல்லும் அணிலின் சப்தத்துக்குக்கூட பசு பயந்து கலைந்தது.

பாதையில் பருத்த எலும்புகளையும் சிதறிக் கிடக்கும் கபாலத்தையும் மவுனமாகப் பார்த்தபடி நடந்து வந்து அவள், சிறிய பாறையொன்றின் அடியில் உதிரக்கறை படிந்த, கிழிந்த துணிகள் மக்கிக் கிடப்பதைக் கண்டாள். தொலைவில் விட்டு விட்டுப் பறவைகள் சப்தமிட்டன. நீரோடையின் கிளையில் இருவரும் இறங்கி நடந்தபோது நீரின் குளிர்ச்சி, தன் கால்களில் பற்றி ஏறுவதைக் கண்டு கூச்சத்துடன் அவள் சிரித்தபோது, பூசணிக்காய்களும் அரிசி பருப்புச் சாமான்களும் தலையில் தூக்கி வைத்திருந்த அவள் புருஷன் ஸ்நேகத்துடன் உதட்டை நாக்கால் தடவிக்கொண்டான். பாறைகள் உருண்டு கிடந்த ஒரு குகை வாசலுக்கு வந்தபோது அவள் வழியெல்லாம் ரோமங்கள் உதிர்ந்து கிடப்பதைக் கண்டாள். கற்குகையொன்றின் உள்ளே அவளைக் கூட்டிக்கொண்டு நடந்த பண்டிதன் இனிமேல் அதுதான் தங்களின் வீடென்றும், தான் ஒரு அபூர்வ சக்தியை அடைய இதனருகே தவம் ஏற்கப்போவதாகவும் சொன்னான். அவள் குகையைச் சுத்தம் செய்து, தான் கொண்டு வந்திருந்த நாணல் பாயை விரித்தாள். காட்டு ஓடையிலிருந்து குடத்தில் தண்ணீர் கொண்டு வந்தாள்.

அருகாமை மரத்தடியில் பசுவைக் கட்டி வைத்தாள். சமையலைத் தொடங்கியபோது மாலை நேரம் வடிந்துகொண்டிருந்தது. கொண்டு வந்திருந்த பூசணிக்காயைக் கூட்டாக்கி வாழைக்காயைப் பொறியல் செய்து சாதம் வடித்து அப்பளத்தை நெருப்பில் சுட்டு வைத்தபோது இரவாகியிருந்தது. அவள் தன் புருஷனுக்குக் காட்டிலையைப் பறித்து ஈர்க்கால் தைத்துப் பரிமாறிய போதும் சமைத்து வைத்திருந்த மொத்த உணவையும் ஒரேயாளாகச் சாப்பிட்டுவிட்டு சந்தோஷமும் சிரிப்புமாக அவளிடம் சொன்னான்,

"உன் வீட்டில் செய்ததுபோல அவியல் ஒரு நாள் செய்து

வையேன். நல்ல மோரும் வெண்ணையும் ருசிக்கிறது." பண்டிதன் எங்கோ வெளியே கிளம்பிச் சென்றதும் அவள் தான் கொண்டு வந்திருந்த அரிசி மாவை அள்ளித் தின்று பசியை ஆற்றிவிட்டு படுத்துக்கொண்டாள். வன ஓடையின் சப்தம் காதருகே கசிந்து ஓடிக்கொண்டிருந்தது. அவள் வண்டுகளின் விநோதச் சப்தத்தையும் இருளின் குளிர்மையையும் ருசித்தபடியே உறங்கிப்போனாள்.

நள்ளிரவில் அவள் ஸ்தனங்களைப் பற்றி ஒரு கை புரட்டும்போது திடுக்கிட்டு விழிப்பு கொண்டபோது, கண்களில் காமம் அடக்கிய சிரிப்புடன் பண்டிதன் அவள் முகத்தை முத்தமிட்டான். அவள் சுருண்டுகொண்டாள். பண்டிதனின் கைகள் அவளை இறுக்கிக் கொண்டன. இது அவளோடு கூடும் ஆறாவது இரவு. அவள் முதல் இரவிலே உணரத் தொடங்கிவிட்டாள். முதல் இரவு முழுவதும் பண்டிதன் தனது நாசியால் அவளை நுகர்ந்து கொண்டேயிருந்தான். என்ன ஒரு விசித்திரமான நறுமணம் என அவனாகச் சொல்லிக் கொண்டே அவள் தலையில் இருந்து விரல் நுனி வரை நுகர்ந்து கொண்டேயிருந்தான். அவளோடு கூடவில்லை. மறுநாளின் இரவில் அவன் வெகு அவசரமாக உடைகளைக் களைந்துவிட்டு மெதுவாகத் தன் நுனி நாவால் அவள் உடலைத் தொட்டுச் சிரிக்கத் தொடங்கி னான். அன்றும் அவன் அவளை அறியவில்லை. மூன்றாம் நாளில் மெதுவாக அவளைக் கட்டிக்கொண்டான். அவன் உடலின் வெது வெதுப்பு ரத்தச் சீற்றம் மிக்கதாகயிருந்தது. அவளுக்குக் கூச்சமாகவும் பயமாகவுமிருந்தது. ஆறாம் நாளான இன்று அவனது நெடிய மூச்சுக் காற்று தன் உடம்பில் இறங்கியோடுவதைத் தாங்க முடியாமல் கைகளால் அவனை உதறினாள். அவனோ எலும்புகள் முறியும் படியாக இறுக்கத் தொடங்கினான். அவனது அகன்ற கைகள் அவள் முகத்தை இறுக்க மூடிக்கொண்டன. அவள் தான் இதுவரை அறிந்திராத ஆழமானதொரு வாசனையை நுகரத் தொடங்கினாள். பின்பு சந்தோஷத்தில் கேசத்தைக் கடித்துக்கொண்டே உறங்கியிருந்தாள்.

சில நாள்களாகவே பண்டிதன் குகையை விட்டு வெளியே செல்வதேயில்லை. விடிகாலையில் எழுந்து குகை வாசலுக்கு வந்து நிற்பதும், பிறகு ஏதோ யோசனையுடன் திரும்பவும் வந்து படுத்துக் கொள்வதுமாக இருந்தான். வன்புணர்ச்சியும் ருசிமிக்க உணவும் அவன் முகத்தில் எப்போதும் ஒரு ரகசியச் சிரிப்பை உண்டாக்கியிருந் தது. அவளோ பகலில் வனத்தின் கரிய பாறைகளுக்குள் சுற்றியலைந்த படியும், காட்டுப் பூக்களைப் பறித்துச் சூடியும், உதிர்ந்த பழங்களை எடுத்துத் தின்றுகொண்டுமிருந்தாள். சிற்றோடையில் ஓடும் வெள்ளிக் கீற்று மீன்களை எண்ணிக்கொண்டிருப்பாள். கானகச் சப்தம் மெதுவா கப் பழகியிருந்தது. எப்போதாவது ஆகாசத்தில் பறவை பறப்பது போல வெயில் மிதந்து போய்க்கொண்டிருக்கும்.

அவள் தனக்காகத் தனியாகச் சமையல் செய்து எடுத்து வைத்து விடுவாள். பண்டிதன் தன் முன் வைத்த உணவைச் சாப்பிட்டு முடித்த பிறகு நாக்கை வெகு நேரம் துழாவிக்கொண்டேயிருப்பான். ஓர் இரவில் அவள் தன்னை அணைத்துக்கொண்டு உறங்கும் பண்டிதனின் முதுகைத் தடவிப் பார்த்தாள். முதுகில் ஏதோ தென்படுவது போலிருந்தது. கண்களை இடுக்கிக் கொண்டு இருளில் பார்த்தபோது உடலில் மஞ்சளும் கறுப்புமாகப் புள்ளிகள் தென்பட்டன. அவள் அந்தப் புள்ளிகளைத் தடவிப் பார்த்தாள். அவை மிருதுவாக இருந்தன. மறுநாள் அவள் தன் கணவனிடம் அவன் உடம்பில் மஞ்சள் புள்ளிகள் தென்பட்டதைத் தான் கண்டதாகச் சொன்னாள். அவன் சிரித்துக்கொண்டே, "மரவண்டுகள் கடித்திருக்கும். இன்றைக்கு நீ புளியிட்ட துவரையும் பருப்புக் குழம்பும் வையேன், நல்ல ருசியாக இருக்கும்" என்றான். அவள் மஞ்சள் வரிகள் பற்றி எதையும் பிறகு கேட்டுக்கொள்ளவேயில்லை.

சில வாரங்களுக்குப் பிறகான ஒரு பகலில் அவள் சமையல் பொருள்கள் கிடைக்காமல் காட்டுக் கீரையைப் பறித்துக் கடைந்து வைத்தாள். சாப்பிட அமர்ந்த பண்டிதன் இலையில் கீரையும் வெறும் சாதமும் கண்டு ஆத்திரம் மிகுதியாகித் தன் அடித் தொண்டையில் இருந்து கத்தினான்,

"நான் யார் தெரியுமா? என் சொரூபத்தைப் பார்க்க வேண்டுமா? ஒரு அப்பளம்கூடக் கிடையாதா?"

அவள் அமைதியாகக் கீரைச் சட்டியைத் தூக்கி அவன் முன்னால் போட்டு உடைத்து, "உறுமாதே. வெளியே போயி, பருப்பும் வெண்ணெய்யும் சமையல் சாமானும் வாங்கிக்கொண்டு வா" என்றாள் ஆத்திரத்துடன் தலை கவிழ்ந்து சென்ற பண்டிதன் வீடு திரும்பிய இரவில் அவன் உதட்டில், பற்களில் உதிரக் கறையிருந்தது. அவள் அதைக் கவனித்தபோதும் பண்டிதனிடம் கேட்டுக்கொள்ளவில்லை. ஆனால் அவள் மறுநாளிலிருந்து சமைப்பதை நிறுத்திவிட்டாள். குகையில் இருப்பதைவிடவும் காட்டுக்குள் சுற்றிக்கொண்டே இருப்பதே அவளுக்குப் பிடித்திருந்தது. எப்போதாவது குகைக்கு வருவதைத் தவிர, பாறைகளிலும் மரநிழலிலும் படுத்திருந்தபடி காட்டுப் பழங்களைத் தின்பதற்குப் பழகி வந்தாள். பண்டிதன் காட்டுக்குள் அவளைத் தேடி வந்து நிற்கும்போதெல்லாம் அவள் விலகிப் போய்க்கொண்டிருந்தாள். ஒரு மர நிழலில் அவள் படுத்திருந்தபோது பண்டிதன் அவள் அருகே வந்து மெதுவான குரலில் சொன்னான்,

"குகையில் தனியே இருக்க முடியவில்லை – வந்துவிடு."

அவள் எதையும் கேட்டுக்கொள்ளாதவள் போல இருந்தாள். பிறகு சொன்னாள்,

"நான் எனது ஊருக்குப் போகப் போகிறேன்."

பயத்துடன் பண்டிதன், "வேண்டாம். உனக்கு இஷ்டமில்லையானால் குகைக்கு வர வேண்டாம். கானகத்தை விட்டு மட்டும் போய்விடாதே."

சுற்றியலைந்துகொண்டிருந்த பாறையின் உச்சியிலிருந்து ஒரு நாளின் விடிகாலையில் அவள் பார்த்துக்கொண்டிருந்தாள். தொலைவில் பசிய புல்வெளியினுள் மேய்ந்துகொண்டிருந்தன மான்குட்டிகள். காற்று வளையமிடுவது போல இமைக்கும் நேரத்தில் புலியொன்று பாய்ந்து தாவியதும் மான்கள் மிரட்சியுடன் தாவி ஓடின. முன்னங்கால் தூக்கித் தாவிய புலி, தன் பற்களால் மான் குட்டியொன்றின் முதுகைக் கவ்வியது. கொப்பளித்து குருதி புல்லில் படிய, மான் சாவை நோக்கித் துள்ளிக் கொண்டிருந்தது. புலியின் நகங்கள் மானின் உடலைப் பற்றி இழுத்துக்கொண்டிருந்தன. நிமிஷ நேரத்தில் புலி அதைப் புசிக்கத் தொடங்கியது. எலும்புகளுடன் மானின் சதைகள் பிய்த்து வீசப்பட்டன. சாப்பிட்டு முடித்த புலி தன் தலையைச் சிலுப்பியபடி மெதுவாகப் பண்டிதனாக உருமாறுவதை அவள் பார்த்துக்கொண்டேயிருந்தாள். பண்டிதன் தன் சிகையைத் தடவிவிட்டபடியே புல்வெளியில் மெதுவாகத் திரும்பி நடந்து வரத் தொடங்கினான். அவளுக்குப் பயமாக இருந்தது. அவசர அவசரமாகக் குகைக்குத் திரும்பிப் படுத்துக்கொண்டாள். தான் கானகப் புலியின் மனைவி என்பது அவளுக்கு அழுகையையும் துக்கத்தையும் பெருக்கியது. பண்டிதன் குகைக்கு வந்து சுருண்டு படுத்திருந்த அவளருகே குனிந்து கழுத்தடியில் கை தொடும் வரை அமைதியாக இருந்துவிட்டு ஆத்திரத்துடன் கேட்டாள்,

"எப்படியிருந்தது மான் கறி? ருசிக்கிறதா?"

பண்டிதன் எந்தச் சலனமும் அற்றுச் சொன்னது.

"உப்பும் எண்ணெய்யும் சேர்த்து நீ வதக்கும் வழுதனங்காயை விட ருசி குறைவுதான்."

அவளுக்கு ஆத்திரமாக வந்தது. கானக வண்டுகளின் ஓசை திடீரெனத் தாங்க முடியாமலிருந்தது. ஏதேதோ பெயர் தெரியாத பூச்சிகளின் சப்தம் பெரும் கூச்சலாக இருந்தது. குகைக்குள் இருக்க முடியவேயில்லை. பண்டிதனின் பற்கள் தன்னையும் கவ்வி இழுத்துக் கொண்டு போய்விடுமோ என்ற பயத்துடன் அவள் எழுந்து வெளியே நடமாடத் தொடங்கினாள் தனது குள்ளப் பசு இத்தனை நாள் வெருட்சி கொண்டது இதனால்தானோ எனப் புரிந்துகொண்டவள் போல பசுவின் கயிறுகளை அவிழ்த்து வனத்தினுள் துரத்திவிட்டாள். நெடுநேரம் மணிச் சப்தம் காட்டுக்குள் கேட்டுக்கொண்டிருந்தது. அவள் வட்டப்பாறை ஒன்றின் மீதேறிப் படுத்துக்கொண்டாள். இலை இடுக்குகளில் நட்சத்திரங்கள் ஒளிந்திருப்பது தெரிந்தது. காற்றின் பெருங்கரம் ஒன்று யாவையும் பற்றித் தூக்கிச் சுழற்றிக்

கொண்டிருந்தது. அவள் விழித்துக்கொண்டேயிருந்தாள். பின்னிரவின் ரேகை வெளிச்சத்தில் புலி பாறைகளில் தாவி வருவதைக் கண்டாள். தன் அருகாமைக்கு வரும்போது புலி பண்டிதனாக உருமாறியது. அவளைக் கண்டதும் அதுவரை அடங்கியிருந்த கள்ளச் சிரிப்பு அடங்காத முகத்துடன் பண்டிதன் அருகே வந்து கேட்டான்,

"கோபம் அடங்கிவிட்டதா, மீதமிருக்கிறதா?"

அவன் கண்களில் ஏளனம் ததும்பிக்கொண்டிருந்தது. அவள் தன் கைகளால் துழாவி, கூரான கல்லொன்றை எடுத்தாள். தன்னை நோக்கிக் குனியும் பண்டிதனின் கண்களோடு சேர்த்துக் கல்லால் அடித்தாள். உதிரம் கொட்டத் தொடங்கி பண்டிதன் உருக்குலைந்து புலியாக மாறி அது தன் கண்ணில் இருந்து வடியும் குருதியுடன் அவள் மீது பாய்வதற்காக உக்கிரத்துடன் நின்றது. அவள் விடுவிடுவென குகையை நோக்கி நடக்கத் தொடங்கினாள். புலி பாறைகளிலிருந்து தாவி நீரோடையில் தன் முகத்தைச் சிலுப்பிக்கொண்டது. ஆத்திரம் அடங்கவேயில்லை. அது கிராமத்தை நோக்கிச் செல்லும் பாதையை நோக்கி நடக்கத் தொடங்கியது. மங்கிய பின்னிரவு வெளிச்சத்தில் பந்த ஒளியில் ஒரு மாட்டு வண்டி வந்துகொண்டிருந்தது. வண்டியோட்டி பாதி உறக்கத்திலிருந்தான். கானகத்தின் நுழைபாதையில் வண்டியை ஓட்டும்போது பாறை மீதிருந்த ஏதோ ஒரு நிழல் தன்னை நோக்கித் தாவுவதைக் கண்டான். சிதறி வீழ்ந்த பந்தம் காய்ந்த சருகுகளை எரித்துக்கொண்டிருந்தது. சுவாலை வெளிச்சத்தில் இரண்டு மாடுகளையும் வண்டியோட்டியையும் அடித்துக் குருதி படிந்த உடலோடு புலி கானகத்தை நோக்கித் திரும்பிக்கொண்டிருந்தது.

அவள் குகைக்குள்ளாகவே இரண்டு நாள்கள் படுத்திருந்தாள். பண்டிதனும் வெளியே செல்லவேயில்லை. அன்று நிலா முற்றிய நாள். கானகத்தில் வெண்ணொளி மெல்லக் கலந்து பரவி எங்கும் ஓடத் தொடங்கியது. சாரலைப் போல நிலா வெளிச்சம் தூறிக் கொண்டிருந்தது. மருண்டு படுத்திருந்த அவளது குதிங்கால்களில் வெண்ணிறம் பட்டு வரியோடுவதைக் கண்ட பண்டிதன் மெதுவாக அவள் உடலைத் தன் விரல்களால் காலில் தொடங்கி அடிவயிற்றை நோக்கித் தன் கைகளைக் கொண்டு சென்றதும் அவள் ஆத்திரம் தாங்க முடியாமல் எட்டி உதைத்தாள். உறுமலுடன் அது தன் புலி உருவை எடுத்து அவள் முன் நின்றபடி சொன்னது,

"உனக்குச் சுபாவம் மாறிவிட்டது. நான் யார் தெரியுமில்லையா?"

அவள் நரநரவெனப் பல்லைக் கடித்தபடியே சொன்னாள்,

"நான் கானகப் புலியின் மனைவி. உன் சிசுவை வயிற்றில் கருக் கொண்டவள். இதைக் கேட்டதும் புலி தன் உக்கிரம் அடங்கி சாதுவாகக் குகை வாசலில் போய்ப் படுத்துக்கொண்டது. ஆனாலும் அவள் மீது கொண்டிருந்த காமம் அடங்காமல் வாலைச் சுழற்றிய படியே இருளைப் பார்த்தபடியிருந்தது. பின் ஒருபோதும் அது பண்டிதன் உருவுக்கு மாறவேயில்லை. அவள் சில மாதங்களுக்குப்

பிறகு இரட்டைக் குழந்தைகளைப் பெற்றாள். ஒன்று புலிக்குட்டியாகவும் மற்றது ஆண் குழந்தையாகவுமிருந்தன. புலி மெதுவாக குழந்தைகளின் அருகாமைக்கு வந்தது. தன் நாக்கால் குழந்தைகளின் தலையைத் தடவிவிட்டது. அவள் வன்மத்துடன் புலியை ஏசி விரட்டியபடி இரண்டு குழந்தைகளுக்கும் இரண்டு ஸ்தனங்களைத் தந்தவளாகப் படுத்துக் கிடந்தாள்.

சில நாள்களுக்குப் பிறகு அவளைப் பார்த்து வருவதற்காகப் புறப்பட்டு வந்த சகோதரர்கள் இருவரும் வழியெல்லாம் மாட்டு எலும்புகள் சிதறிக் கிடப்பதைக் கண்டு அருவருப்படைந்தபடியே தங்கள் மைத்துனன் தவமிருப்பதாகச் சொல்லிய குகையை நோக்கி நடந்தார்கள். குகை வாசலுக்கு வந்தபோது உள்ளே அடுப்பிலிருந்து புகை வழிந்துகொண்டிருந்தது. உள்ளேயிருப்பவர் யாரெனப் புரிய வில்லை. கண்களைக் கசக்கியபடி அவர்கள் குகை வெளிச்சத்தில் யாரோ இருப்பதைக் கண்டனர். செம்பட்டையடித்த தலை மயிருடன் ஒரு ஸ்தனத்தில் புலிக்குட்டிக்கும் மறு ஸ்தனத்தில் ஆண் குழந்தைக்கும் பால் கொடுத்துக்கொண்டிருந்த தங்கையைக் கண்டு, வேதனை மேலிட, பெயர் சொல்லி அழைத்ததும் அவள் திடுக்கிட்டுக் குழந்தை களை நாணலில் போட்டுவிட்டு சகோதரர்களைப் பார்த்துப் பேச முடியாமல் விக்கி விக்கி அழுதாள். கானகப் புலியின் மனைவி அவள் என்பதை அறிந்துகொண்ட சகோதரர்கள் புலி குகை திரும்பும் முன்பாகத் தப்பிவிட வேண்டுமென அவளை அவசரமாகக் கூட்டிக் கொண்டு வனத்தை விட்டு வெளியேற முடிவு செய்தனர்.

சகோதரர்களில் இளையவன் அவளிடமிருந்த புலிக்குட்டியைப் பிடுங்கினான். என்ன செய்யப்போகிறான் என அவள் பதற்றத்துடன் கேட்க, அது அவள் வயிற்றில் பிறந்திருந்தாலும், புலிக்குட்டிதான் என அதன் குரல்வளையை அறுத்துக் கயிற்றில் தலைகீழாகப் பிணைத்து குகையினுள் கட்டித் தொங்கவிட்டான். புலி வந்து சேர்ந்தால்கூட குட்டி செத்துக் கிடப்பதைக் கண்டு துக்கம் தாள முடியாமல் குகைக்குள்ளேயே முடங்கிக் கிடக்கும்; அதற்குள் வனத்தைத் தாண்டிவிடலாம் என்றான். இரவுக்குள் அவர்கள் கானகம் தாண்டி ஊர் வந்து சேர்ந்தார்கள்.

சில நாள்களுக்குப் பிறகு ஒரு பகலில் அவள் தன் வீட்டு வாசலில் பண்டிதன் வந்து நிற்பதைக் கண்டாள் பண்டிதனின் கண்களில் ஆழமான துக்கமிருந்தது. குரல்கூட வேதனையை அடக்கிக் கொண்டது போலவேயிருந்தது. பண்டிதனைக் கண்டதும் அவள் தகப்பன் அடிப்பதற்காக வீட்டு உலக்கையைத் தூக்கிக்கொண்டு வந்தார்

"யாரை ஏமாற்ற வந்தாய் காட்டுப் புலியே, வெளியோ போ

பண்டிதன் அமைதியாகச் சொன்னான்,

"நீ உன் பெண்ணை எனக்குத் தாரை வார்த்திருக்கிறாய். என்

மனைவியை அழைத்துக்கொண்டு போக எனக்கு உரிமையுண்டு.”

இதைக் கேட்டதும் மறுத்துத் தலையாட்டியபடியே சொன்னார்,

“சாஸ்திரம் மிருகத்துக்குப் பொருந்தாது.”

பண்டிதன் தன் பையிலிருந்த இரண்டு தங்கக் காசுகளை எடுத்து அவர் முன்பாக வைத்துத் தலைவணங்கிச் சொன்னான்,

“தவறுக்குப் பரிகாரமாக இதை ஏற்றுக்கொண்டு என் மனைவியை அனுப்பி வையுங்கள்.”

தகப்பன் மகளை அனுப்பி வைக்கச் சம்மதித்துவிட்டான். சகோதரர்கள் இரவில் வேறு வேறு ஊர்களில் இருந்து வந்து சேர்ந்தார்கள். தாங்கள் அதை அனுமதிக்க முடியாதென்றார்கள். அன்றிரவும் தீராத சச்சரவானது. அவள் யாவற்றையும் கேட்டுக் கொண்டேயிருந்தாள். ஆனால் பதில் பேசவேயில்லை. வேண்டுமானால் குழந்தையை மட்டும் கொடுத்துவிடலாம். அவளை வீட்டு வேலைகளுக்காக இளைய சகோதரன் தன் வீட்டுக்குக் கூட்டிப் போய்விடலாம் என முடிவு செய்தார்கள்.

மறுநாள் பண்டிதன் அதிகாலையிலேயே வந்து சேர்ந்தான். இளைய சகோதரன் தங்கையை அவனோடு அனுப்பும் முன்பாக சிறிய சடங்குகள் இருக்கிறதெனச் சொல்லி பண்டிதனை வீட்டின் பின்புறத்தேயிருந்த சிறிய ஓலை விரிப்பில் உட்காரச் சொன்னான். பண்டிதன் மெதுவாக நடந்துபோய் ஓலை விரிப்பில் உட்கார்ந்து கொண்டான். அவன் மடியில் குழந்தையைக் கிடத்தினார்கள். சடங்குக்காகக் கண்ணை மூடிக்கொள்ளச் சொன்னார்கள். பண்டிதன் கண்களை மூடிக்கொண்டான். யாரோ ஓலையை இழுப்பது போலத் தெரிந்தது. அவள் பின்வாசல் கதவைப் பிடித்தபடி பார்த்துக் கொண்டிருந்தாள். ஓலை விலகித் தூர்ந்துபோயிருந்த கிணற்றினுள் பண்டிதன் குழந்தையோடு விழுந்தான். சகோதரர்கள் இருவரும் தகப்பனோடு சேர்ந்துகொண்டு அவசர அவசரமாக அதில் மண்ணை வாரிப்போட்டு மூடினார்கள். மண்ணுக்குள் புலி உறுமும் சப்தம் கேட்டது. அவள் அழவேயில்லை.

பிறகு தகப்பன் அந்த மண்மேட்டில் ஒரு துளசிச் செடியை வைத்தான். அவள் காலையிலும் மாலையிலும் துளசிச் செடியைச் சுற்றிவரத் தொடங்கினாள். ஒரு நாள் துளசி இலையைப் பறித்தபோது அதில் மஞ்சளும் கறுப்புமான வரிகள் மினுங்குவதைக் கண்டாள். அவளுக்குக் கானகம் நினைவுக்கு வந்தது. சில நாள்களுக்குப் பிறகு இளைய சகோதரன் தன் மனைவிக்கு ஒத்தாசையாக வீட்டு வேலைக்கு உபயோகமாக இருப்பாள் என அவளை அழைத்துக்கொண்டு தனது ஊருக்குப் புறப்பட்டான். அவள் தனது துணி மூட்டையைத் தூக்கிக்கொண்டு நடந்து சென்றாள். மதிய நேரத்தில் அவர்கள் சகோதரனின் ஊருக்குள் நுழையும் பாதையில் இருந்த ஆற்றினுள் இறங்கி நடக்கத் தொடங்கினார்கள். இடுப்பளவுக்கும் குறைவாகத்

தண்ணீர் ஓடிக்கொண்டிருந்தது. உச்சி வெயிலின் களைப்புடன் சகோதரன் ஓடுகின்ற ஆற்றுத் தண்ணீரை அள்ளி முகத்தில் அடித்துக் கொண்டான். அவளும் குனிந்து தண்ணீரைக் குடித்தாள். சட்டென பயத்தில் சகோதரன் திரும்பினான். அருகாமையில் மிருகமொன்று தண்ணீரை உறிஞ்சும் சப்தம் போலிருந்தது. அவன் திரும்பிப் பார்த்தபோது அவள் முகத்தில் ஈரம் வழிய நின்றிருந்தாள். ஆற்றில் இவர்கள் இருவர் மட்டுமே இருந்தார்கள். தொலைவு வரை யாருமே இல்லை.

முதன்முறையாகத் தனது சகோதரனைப் பார்த்து அவள் சிரித்தாள். அந்தச் சிரிப்பு கொஞ்சம் கொஞ்சமாக பலமாகியது. சிரிப்பு விரிய விரிய அவளது தாடையில் இரண்டு கொடும் பற்கள் நீண்டு வளர்ந்திருப்பதைக் கண்டான். அவன் பயத்துடன் அவள் கண்களைப் பார்த்தபோது அதில் வன்மம் நிரம்பியிருந்தது. மெதுவாக அவள் கைகள் சகோதரனின் கழுத்தைப் பற்றித் தன் அருகாமையில் இழுத்தன. மறுநாள் அவள் சகோதரனைப் புலி அடித்துப் போட்டிருப்பதை ஊர்க்காரர்கள் ஆற்றின் மேட்டில் கூடிநின்று பார்த்தபோது அவள் தன் தகப்பனின் வீட்டுக்கு நிழலைப் போலவே சுவடின்றித் திரும்பியிருந்தாள்.

ஒளியை வாசிக்கிறவன்

அந்த அறையில் அவனையும் திமிங்கலத்தையும் தவிர வேறு யாருமேயில்லை. கடலை விட்டு வெளியேறி நாற்பதாண்டுகளாகி, உரு அழிந்து எலும்புப் பொறியென நீண்டு நிசப்தித்திருக்கும் அந்தத் திமிங்கலத்தை எப்போது காணும்போதும் பிரமாண்டம் குறைவதேயில்லை. கோபாலராவ் திரும்பவும் அதன் வால் அருகே நின்றவனாக மொத்தத் திமிங்கலத்தையும் ஒரு முறை பார்த்தான். கண்களில் அடங்காத உருவம். மீனின் அடிவயிறு ஊஞ்சலென ஆடிக் கொண்டிருந்தது. இந்தத் திமிங்கலம் தன்னை விழுங்கியிருந்தால் இதே விலாவின் இரு எலும்புகளைப் பற்றியபடி ஊஞ்சலாடியிருக்கலாமல்லவா. அந்த ஒரு அறை முழுக்கத் திமிங்கலம் மட்டுமே இருந்தது. கோபாலராவ் அதன் எலும்புகளில் தனது உள்ளங்கையை உரசினான். உப்பும் பாசியும் கலந்ததொரு சொரப்பு. விரிந்த தாடை அசையாதபோதும் கடல் அலைவீசி உள் செல்வதும், செவுளின் துவாரங்களில் நீர் பீச்சுவது போலவும் புலப்பட்டது. இப்போது திமிங்கலம் திரும்பவும் கடலை நோக்கிப் புறப்பட்டு விட்டால் தான் அதன் வாலைப் பற்றிக்கொண்டு கூடவே கருமையின் அடியாழத்தில் குமிழ்விடும் சிப்பிகளின் முகத்துவாரத்துக்குப் போய் ஒடுங்கிக் கொள்ளலாம்.

திமிங்கலம் இந்தக் கட்டடம் விட்டு வெளியேறும்போது மாடிப்படிகள் அதிர்வுறும். வாசலின் மர மேஜையில் கைகளை ஊன்றி அமர்ந்திருக்கும் பெண் திடுக்கிட்டுக் கத்தக் கூடும். சுவரில் மாட்டப்பட்ட கடிகாரங்கள் உதிர்ந்து சிதறவும், உக்கிரப் பெருவழுதி

யின் யுத்தக் கேடயங்கள், நர்த்தன மூர்த்திகளின் பிரதிமைகள் புரளவும், கண்ணாடி உறையினுள் அடங்கிய முத்து மாலைகளில் சில தாடையில் சிக்கி ஒளிரவும், மரக் கதவுகள், பார்வையாளர் இருக்கைகள் மிதிபடவும் அறையை விட்டு நீந்தி திமிங்கலம் வெளியேறிப் போகும்போது சாலையில் செல்லும் வாகனங்கள், சைக்கிள்காரர்கள், ஒன்றிரண்டு மாட்டு வண்டிகள் யாவும் புரியாமையில் உறைந்துவிடக் கூடும். யோசிக்க யோசிக்க இவை யாவும் ஸ்டுவெர்ட் சினோராவின் படத்தில் வரும் காட்சிகள் போல முடிவற்று நீள்வதாக இருந்தன.

தாழ்ந்த வெயில் அசைந்த இந்த நாளில் அவன் காலையிலே மியூசியத்தின் இரண்டாம் தளத்துக்கு வந்திருந்தான். படிக்கட்டுகளில் யாரும் வராத நிசப்தம் மேலேறிக்கொண்டிருந்தது. குளுமையான காற்றும் மனதில் படியும் வெயிலும் சிரிப்புமாகச் சாவதற்கு இனிமையான நாள் இது என அவனாகவே சொல்லிக்கொண்டான். மியூசியத்தின் உள்ளே வளரும் மரங்கள்கூடக் காலத்தின் தொலைவுக் குச் சென்றுவிடுகின்றன. கோபாலராவ் பழுத்த இலையொன்று ஜன்னல் வழியே திமிங்கலத்தைப் பார்த்துக்கொண்டிருப்பதாகக் கண்டான். வெளிச்சம் தத்திக் கொண்டிருந்த மாடியின் செங்கல் சுவரில் இருந்த அணில் ஒன்று வேகமாக ஓடி, வால் சுழற்றி திமிங்கலத்தின் வயிற்று எலும்புகளில் தாவித் தாவிச் சென்றது. கோபாலராவ் அசையாமல் பார்த்துக்கொண்டிருந்தான்.

அணில் விலா எலும்பின் சரத்தில் தனது வாலைப் புரட்டியபடி தலைகீழாக நடனமாடுவது போலக் குதூகலமடைந்தது. திமிங்கலத்திட மிருந்து ஆழ்ந்த பெருமூச்சு வருவது போல காற்று சுழன்றது. அணில் திமிங்கலத்திடமிருந்து தாவி, இரும்புக் கம்பிகளில் நடந்து உயரத்தில் தாவி, மர உத்திரங்களில் ஏறி நின்று திமிங்கலத்தைக் கண்டது. உடலைப் புரட்டிப் படுப்பதுபோல காற்றில் எலும்புகள் அசைந்தன. ஒரு பாய்ச்சலில் அணில் திரும்பவும் உத்திரத் துளையினுள் பதுங்கி மறைந்தது. கோபாலராவ் மற்ற நாள்களைவிடவும் இன்று மிக அதிக சந்தோஷம் கொண்டான்.

மூன்று மாடியுள்ள அந்த மியூசியத்தின் படிகளில் மேலேறி நடக்கத் தொடங்கினான். அவனுக்கு நாற்பது வயதே முடிந்திருந்தது. கறுப்புக் கரை வேஷ்டியும் லாங்மில் சட்டையும் அணிந்திருந்தான். அவனது சட்டைப் பையில் நேற்று மிஞ்சிப் போன ஒரு வெற்றிலை மட்டும் காய்ந்துபோயிருந்தது. தலையைக் கோரையாக விட்டிருந்தான். படியேறும்போது பழுப்பு நிறச் சுவரில் வெயில் புரளும்போது நிற ஜாலம் துள்ளுவதைக் கண்டான் மிக மெதுவாக மூன்றாவது தளத்தை விட்டு மேலேறிக் கட்டடத்தின் மொட்டை மாடிக்கு வந்தான். கருப்பேறி, உலர்ந்த அந்தத் தளத்தில், மியூசியத்தின் சிதைந்த பொருள்கள் குவிக்கப்பட்டிருந்தன. மார்புக் கவசங்கள், தலையறுந்த பிரதிமைகள், நிறம் வெளிறிய ஓர் ஆலிலை கிருஷ்ணச்

சித்திரம். நகரம் தொலைவு வரை விரிந்து கிடந்தது. நீர்த்தொட்டி எஞ்ஜினையும் அதற்கு ஏறிச் செல்லும் இரும்புப் படிக்கட்டுகளையும் கோபாலராவ் பார்த்தான்.

காற்று ஆளை வளைத்து வீழ்த்திவிடுவது போல வேகம் கொண்டிருந் தது. வெயில் ஏறுவதால் நகரின் தொலைவு பச்சை நிறம் மாறி மஞ்சள் திட்டில் தெரிந்தது. குப்பையில் கிளறி ஒரு தலைக்கவசமும் துருவேறிய ஒரு எக்காளத்தையும் குனிந்து எடுத்தான். அதைக் கையில் ஏந்திக்கொண்டு நடக்கும்போது சுய எள்ளல் பீறிட்டது. நீர்த் தொட்டியிருக்கும் இரும்புப் படிகளில் ஏறி, தொட்டியின் ஒற்றைச் சுவரில் நின்று பார்த்தபோது நகரம் இரைச்சலற்று பேரமைதி யில் இருந்தது. குனிந்து நீர்த் தொட்டியினுள் கண்டான். பாதி மஞ்சள் வெயிலும், தப்பியலையும் ஒற்றைக் கொக்கு ஒன்றும் நீரினுள் கடந்தன. பின்பு கோபாலராவ் மிக மெதுவாக அந்தக் காட்சிகளில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டு, சுவரை விட்டு மெதுவாக வானை நோக்கி இரண்டு அடி முன்வைத்த போது, உடல் விசை கொண்டு கீழ் இறங்க, அந்தரத்தில் துருவேறிய எக்காளம் கையிலேந்திய படி தரையை நோக்கி வீழ்ந்துகொண்டிருந்தபோது அவனுக்குப் பிடித்தமான இத்தாலிய இயக்குநரான கிரேசியாவின் ‘மிலனில் ஒரு கோடைக்காலம்’ என்னும் படத்தில் வரும் தலைகீழாகச் சுழலும் கட்டடங்கள், உதிரும் மலர்கள், பாதசாரிகளின் காட்சி நினைவுக்கு வந்தது. அந்தப் படம் மூவிலேண்டில் திரையிடப்பட்ட போது கோபாலராவைத்தான் தேடிப் பிடித்திருந்தார்கள்.

அந்தப் படத்தின் முதல் காட்சி தொடங்கும்போது ஒரு குடை காற்றில் விடுபட்டுப் போகும். கவிதையின் சில வரிகள் ஒளிரத் தொடங்கும்.

‘கோடை ஞாபகத்தின் ஒப்பனைக்கூடம், விதவிதமான கட்டடங்கள், வாசனைகள், கேளிக்கை, சிரிப்பு, ஒரு கோப்பை மதுவைப் பகிர்ந்து கொள்ளும் சூரியன்.’

இந்தச் சொற்கள் காற்றில் குமிழ்விட்டன. கோபாலராவ் சாவை நோக்கி விரைந்துகொண்டிருந்தான்

தயங்கித் தயங்கி வந்துகொண்டிருந்த சிறுவன் குறுகலான அந்தச் சந்தில் ஒரு வாழை இலைக்காக நாயும் பசுவும் சண்டையிட்டுக் கொண்டிருப்பதைக் கண்டு ஒதுங்கி நின்றான். பசு இலையைத் தாடையால் பறித்து இழுத்தபடி சுவரில் முகத்தைத் தேய்த்துக் கொண்டு நகர்ந்தது. நாய் அவசரமாக இன்னொரு இலை தேடி ஓடியது. மலபார் கபேயின் பின்புறச் சந்து. சிறுவன் சிதறிக் கிடக்கும் எச்சில் உணவில் கால் பட்டுவிடாமல் தாவிச் சந்தின் முனைக்கு வந்தபோது எட்டு வயதுச் சிறுமியொருத்தி வாசலில் நின்று குளித்துக் கொண்டிருந்தாள். அந்தக் குடித்தனத்தினுள் நடந்தபோது புகை

மூட்டமும் தோசை சுடும் வாசமும் கற்பூர ஆராதனையும் கலந்து கொண்டிருந்த. சிறுவன் மரப்படிகள் வழியாக மேலேறி ஒற்றை மரக்கதவு கொண்ட அறையை 'டாக்கிராவ்' 'டாக்கிராவ்' எனத் தட்டியபோது உள்ளே கோபாலராவ் தூங்கிக்கொண்டிருந்தான். குரலை உயர்த்திச் சிறுவன் கதவைத் தட்டிய பிறகு கோபாலராவ் கதவைத் திறந்துவிட்டபடி திரும்பவும் படுக்கையில் வீழ்ந்துகொண் டான். அறையின் ஜன்னல் மூடப்பட்டிருந்தது. கிராமபோன் பெட்டி அருகே சென்று, கைப்பிடியைச் சுற்றி ஓர் இசைத்தட்டைச் சுழல விட்டான்.

"லோபதா. லோபதா. " எனப் புரியாத பாட்டாகவிருந்தது. கோபாலராவ் புரண்டு படுத்துக்கொண்டபடியே சிறுவனிடம் கிராமபோனை அணைக்கச் சொன்னான். அறையில் திரும்பவும் நிசப்தமேறியது. சிறுவன் சுவரோரமாகக் கிடந்த ஒரு பிலிம் கேனை உருட்டி விளையாடினான். கோபாலராவ் ஜன்னலைத் திறக்கச் சொன்னபோது சிறுவன் கட்டிலுக்குக் கீழே ஒரு பூனைக்குட்டி படுத்திருப்பதைப் பார்த்துச் சிரித்தான். அகலமான இரட்டை ஜன்னலைத் திறந்ததும் அறை வெளிச்சத்தில் நிரம்பியது. கோவிலின் வடக்கு ரத வீதியில் யானை அசைந்து வந்துகொண்டிருப்பது தெரிந்தது. சிறுவன் உற்சாகமாகச் சொன்னான்.

"யானை வருது."

பாயில் படுத்தபடியே கோபாலராவ் கேட்டான்

"வெள்ளைக்காரங்க படம்.. நாலு ரீல்.. உன்னை முதலியார் உடனே கூப்பிட்டு வரச் சொன்னார்."

கோபாலராவ் யானையைப் பார்க்க விருப்பமற்று புரண்டு படுத்துக் கொண்டான். வெள்ளிக்கிழமைதான் மூவிலேண்டில் பிக்சர் மாற்று வார்கள். கோபாலராவ் குளித்துவிட்டு வரும்வரை சிறுவன் பூனை யோடு விளையாடிக்கொண்டிருந்தான். பிறகு இருவரும் மூவிலேண்ட் கொட்டகைக்கு டிராமில் போய் இறங்கியபோது தாத்தையா முதலியார் வந்திருந்தார் கோபாலராவ் புக்கிங் அறைக்குள் போனபோது பூஜை நடந்துகொண்டிருந்தது. படப் பெட்டிக்குச் சூடம் காட்டிய ஆபரேட்டர் மனோன்மணி முதலியாரிடம் தீபாராதனை காட்டினான். கோபாலராவ் தானும் கண்ணில் ஒற்றிக்கொண்டான். முதலியார் எப்போதும் மாறாத சிடுசிடுப்போடு அவனைப் பார்த்துச் சொன்னார்,

"பிரிட்ஜ் ஆன் த ரிவர்னு வார் பிக்சர்.. நாலு ரீல்... பார்த்திடு... ஸ்பெஷல் ஷோ ரெண்டு இன்னிக்கு இருக்குது."

அவன் பதில் பேசவேயில்லை. மனோன்மணி பெட்டியை எடுத்துக் கொண்டு புரொஜெக்ஷன் அறைக்குப் போனான். அவனும் உடனே நடந்துபோனான். படப் பெட்டியைத் திறந்ததும் உள்ளே சில விளம்பரங்கள், கறுப்பு வெள்ளை ஸ்டில்கள் சில இருந்தன. கோபால ராவ் அதை எடுத்துக்கொண்டு கொட்டகையினுள் வந்து உட்கார்ந்

தான். மர இருக்கைகள் உறைந்திருந்தன. அவன் மட்டும் தனியே அமர்ந்திருப்பது பழகிவிட்டது. பெப்கோ பிலிம்ஸில் இருந்து பெட்டி கப்பலில் வந்திருக்கிறது. ஒளித்திரையில் சிதறிச் சிதறி சட்டெனப் படம் ஓடத் தொடங்கியது.

அவனுக்குப் பரிச்சயமான இயக்குநர் எல். மாத்யூ டெல்டன். திரையில் மௌனக் காட்சிகள் ஓடத் தொடங்கின. ராணுவ லாரிகள் காட்டினுள் சென்றுகொண்டிருந்தன. வீரர்களின் இறுகிய முகங்கள், மரத்தில் சாடும் குரங்குகள், வழியில் குறுக்கிடும் சிற்றோடைகள். காட்சிகள் மடிந்து மடிந்து போய்க் கொண்டேயிருந்தன. கோபால ராவின் மனம் வார்த்தைகளைப் பின்னத் தொடங்கியது.

மூந்நூறு பேர் நிரம்பியிருந்தார்கள். கோபாலராவ் மெலிதான ஜிப்பா அணிந்துகொண்டு, வெற்றிலை போட்டுக் கொண்டு இருந்தான். இருக்கைகளில் கூச்சல் அதிகமாகிக் கொண்டிருந்தது. மைக்கை எடுத்துக்கொண்டு நடந்து போனபோது விதவிதமான முகங்கள். அவன் திரையின் வலது பக்கம் போடப்பட்டிருந்த உயரமான ஸ்டூலின் மீது எறி நின்றுகொண்டான். மனோன்மணியிடமிருந்து வந்த சிறுவன் கூட்டத்தைக் கண்டு குதூகலம் அடைந்தவனாக கோபாலராவ் அருகில் வந்து சொன்னான்.

“ஒரு ஷோவில ரெண்டு படம் போடப்போறாங்களாம். இன்னொரு படம் பிரின்ஸ் ஆப் ராஜ்புட்.

சரியாகப் படப் பெயரைச் சொல்லிவிட்ட சந்தோஷத்தில் கோபாலராவைப் பார்த்தபோது அவன் ஏதோ யோசனையிலிருந்தான். விளக்குகள் அணைக்கப்பட்டன. நீண்ட சப்தம். திரையில் ஒளி காட்சிகளை வரையத் தொடங்கியது. ராணுவ வீரர்களின் வாகனங்கள் தரையில் ஊர்ந்து கொண்டிருந்தன. கோபாலராவின் குரல் உயர்ந்தது.

“ஜென்டில்மேன். உலக யுத்தத்தின்போது ராணுவ வீரர்கள் ஷரா ஆற்றுப் பாலத்தைக் கைப்பற்றச் செல்கிறார்கள். அதோ செதுக்கப்பட்ட மூக்கு, சிற்பம் போல நிமிர்ந்த உடல், ஊடுருவும் கண்கள், அவர்தான் கேப்டன் ப்யூபர்”

அக்குரல் நிமிஷத்துக்கு நிமிஷம் மாறிக்கொண்டேயிருக்கிறது. குரலின் வழி ராணுவ வீரர்களின் இரும்பு நடை, குரங்குகளின் சண்டை, காதலி ஞாபகம், பாலத்தின் பிரமாண்டம், ஆற்றின் வெள்ளப்பெருக்கு, குண்டடிபட்டு மரணிக்கும் மனிதனின் கடைசி வார்த்தைகள், இரவின் ஆழ்ந்த தனிமை என மயக்கமூட்டும் சொற்கள் பின்னிப் பின்னி மறைகின்றன. கடைசி இருக்கை வரை நாவின் துடிப்பு பரவுகிறது.

கோபாலராவ் திரையைக் கவனித்தபடியே இருக்கிறான். முகத்தில் சலனமேயில்லை. குரல் மட்டும் சிரிக்கிறது. துயரமடைகிறது. பரிதவித்து மெலிதாக விம்முகிறது. இருளில் யாவரும் தனது குரலின்

மென்நரம்புகளால் பிணைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது பெருமிதமாக இருக்கிறது. அவன் குரல் துக்கத்தின் குமிழைப் பரவவிட, யாரோ ஒரு பெண் அரங்கில் அழும் ஓசை. கண்ணீரை மீறிய பெருமூச்சு.

அடுத்த படத்துக்கான இடைவெளியில் கோபாலராவ் மேடையை விட்டு இறங்கிப் போகும்போது, அந்தப் பெண்ணைக் கண்டான். அவளது கண்கள் வீங்கியிருந்தன. கடந்து போய்விட்ட பின்பும் காட்சியின் துயரம் கலையாத முகம். அவளின் இளம் கணவன் கேலி செய்து கொண்டிருந்தான். எலுமிச்சை நிறத்தில் புடைவையும் சிவப்பு வெல்வெட் சட்டையும் போட்டிருந்தாள். அவள் திரையில் நிமிர்ந்து பார்க்கவேயில்லை. வெளியே வந்து நின்று, திரும்பவும் வெற்றிலை போட்டபடியே தான் பலமுறை டாக்கி கொடுத்திருந்த பிரின்ஸ் ஆப் ராஜ்புத் படத்தைப் பற்றிய நினைவிலிருந்தான் கோபால் ராவ்.

அந்தப் படத்தில் இடம்பெறும் புலிவேட்டைதான் சிறப்பான காட்சி. அது தொடங்கியதுமே அவனறியாமல் உடம்பினுள் முறுக்கேறி விடும். புலியைத் துரத்திச் செல்லும் மனிதனின் தோற்றம் வன்மமாக விருக்கும். தானே பட்டாளத்துடன் புலியை வேட்டையாடுவது போல அந்தக் காட்சியை கோபாலராவ் விவரிப்பான். சில நிமிஷமே திரையில் ஒளிரும் அப்புலியின் கண்கள் வனத்தின் உக்கிரத்தை உமிழ்வதாக இருக்கும். இலைகளின் இடைவெளியிலிருந்து அது வேட்டைக்காரனின் நிழலைக் கண்டபடியிருக்கும். வேட்டையாடுபவ னின் முக மூர்க்கம் மிக வன்மையாகி, இருளில் கண்களைத் துழாவிக் கொண்டிருக்க புலி இலைகளை அறுத்துக்கொண்டு பின்னங்கால் விசையேற, காற்றில் பாய்ந்து மேல் எழும்பும்போது துப்பாக்கி விசை விடுபட, ரத்தத் துளியொன்று சிதறிக் குமிழென வெடித்துத் தெறிக்கும்போது ஏற்படும் துயரம் கோபாலராவால் தாங்க முடியாதது. ஒரு கனவை விவரிப்பது போலவே திரையில் ஒளிரும் மௌனப் படக் காட்சிகளை விவரித்துக்கொண்டிருப்பான்.

மணி ஒலிக்கத் தொடங்கி திரும்பியபோது அந்தப் பெண்ணின் இருக்கை காலியாகவிருந்தது. எழுந்துபோயிருக்கக் கூடும். துயரான அந்தப் பெண் முகம் அவள் இல்லாதபோதும் மனதைக் கலக்கமடையச் செய்தது. தனது இருக்கையினுள் அமர்ந்து கொண்டபோது திரையில் குதிரைகள் அணிவகுத்து வரத் தொடங்கின.

இரவு அவன் வீடு திரும்பும்போது தெருவில் நடமாட்டமே இல்லை. கோவிலையொட்டிய வீதிகளில் மட்டும் ஏதோ உற்சவத்துக் காகப் பெண்கள் வேலை செய்து கொண்டிருந்தார்கள் யானை அலங்கரிக்கப்பட்டுத் திருக்குளத்தின் அருகே நின்று கொண்டிருந்தது. பெட்ரோமாக்ஸ் வெளிச்சத்தில் தனியே யானை நிற்பதைப் பார்க்கும் போது விநோதமாகப் புலப்பட்டது. அவன் அதன் அருகில் சென்று பார்த்துக்கொண்டே இருந்தான். யானை தான் வனத்தின் தாழியினுள்

காட்டாற்றின் நீரைப் பீச்சியடித்துக் கொண்டும், தென்னை ஓலைகள், காட்டுக் கரும்புகளைத் தின்று அலைந்த தனது பூர்வீகத்தினை நினைவில் கொண்டிருக்குமா? விளக்கைத் தூக்க வந்த பெண் தலைச்சுமை மீது பெட்ரோமாக்ஸ் ஏறியதும் யானையின் நிழல் குளத்து நீரில் அலைவுறத் தொடங்கியது. தேவியின் அலங்காரம் முடிந்திருக்கவில்லை போலும். சப்பரங்கள் சாத்தியிருந்தன. தம்பதி சமேதராகக் கடவுள் திருவீதி உலாவரப் போகிறார். குளத்துப் படிகளில் அமர்ந்துகொண்டான். வானில் இன்றைக்கும் எண்ண முடியாத நட்சத்திரங்கள். யானை தனது துதிக்கையை அசைக்கத் தொடங்கியது. பெட்ரோமாக்ஸ் தூக்கிய பெண் ஓரிடத்தில் நில்லாது முன்பின்னாக நடந்துகொண்டேயிருக்கிறாள். யானையின் நிசப்தம் மிகப் பிரமாண்டமானது. அது எப்போதாவது கத்தியிருக்கிறதா? நீரைப் பார்த்தபடி யோசித்தான். தனது குரலை மறந்துபோயிருக்கும் யானையது. பூச்சரம் சரிய நடந்து வந்த பெண்கள் யானையை வணங்கிப் போனார்கள். ஆலயத்ினுள் மணிகள் முழங்கின. வாத்தியக் கருவிகள் புறப்பட்டுவிட்டன. அவன் குளத்தின் இருள்படிகளுக்குள் இறங்கி உட்கார்ந்துகொண்டுவிட்டான். யானை புறப்படத் தொடங்கியது. தெருவின் நிழல் தள்ளாடி ஊர்கிறது. ஏனோ அவனுக்கு கிரிபித்தின் நினைவு வந்தது.

தோமையர் பள்ளியில் கணிதம் கற்பிக்கும் கிரிபித்துக்குப் பள்ளி நாள்கள் தவிர மற்ற நேரங்களில் காகங்களைப் பற்றிய புகைப்படம் எடுப்பதில் மிகவும் ஆசை அதிகம். அவர் தனது சிறிய புகைப்படக் கருவியோடு சாலையோரங்களில், வேப்ப மரத் தடியில் அலைந்துகொண்டிருப்பதை கோபாலராவ் கண்டிருக்கிறான். அவர் தன்னை எப்படி உதவிக்கு அடையாளம் கண்டு கொண்டார் என இப்போதும் அவனுக்குப் புரியவில்லை. கிரிபித் அவனைத் தான் செல்லுமிடங்களுக்கு எல்லாம் கூட்டிப் போகத் தொடங்கினார். காகங்களை ஏதோ உலகில் இதுவரை பார்த்ததேயறியாத பறவையைக் காண்பதைப் போல வியப்போடுதான் அவர் ஒவ்வொரு முறையும் புகைப்படம் எடுக்கிறார். விதவிதமான காகங்கள். கிரிபித் அவனுக்குக் காகங்களுடன் ஆங்கிலத்தையும் பரிச்சயப்படுத்தினார். கிரிபித்தின் மூன்று வயதுப் பையன் பேசுவதுபோலத் தன்னால் ஆங்கிலம் பேச முடியவில்லையே என கோபால்ராவ் அழுதிருக்கிறான். அவனிடம் கிரிபித் மணிக்கணக்கில் காகங்களைப் பற்றிப் பேசியிருக்கிறார். அவர்கள் இருவரும் ஓர் இரவில் ஆற்று மணல்திட்டில் படுத்துக் கொண்டபோது கிரிபித் அவனிடம் கேட்டார்,

"உனக்குச் சாவைப் பற்றி பயமாக இருக்கிறதா?"

அவன் பதில் பேசவேயில்லை. அவர் அதே கேள்வியைத் திரும்பவும் கேட்டார் அவன் தயக்கத்துடன் ஆமாம் என்றான். கிரிபித் அது தன்னைச் சதா நடுக்கமுறச் செய்வதாகவும், சாவின் துர்வாடை தனக்கு நெருக்கமாக வீசுவதாகவும் சொன்னார். கோபாலராவ்

மவுனமாகக் கேட்டுக்கொண்டான்.

"ஒவ்வொரு காகமும் தனியானது, ஒன்று போல ஒன்றிருப்பதில்லை, சாவைப் போல" எனச் சொன்னார்.

என்ன பதில் சொல்வதெனத் தெரியாமல் ஆழ்ந்திருந்தான். அவர் பெருமூச்சிட்டபடியே சொன்னார்,

"காகங்கள் பறவைகள்தானா என்றே சந்தேகமாக இருக்கின்றது. அவை இந்த உலகம் கடந்து எங்கோ சென்று வருகின்றன. காகம் எப்போதும் மனிதர்களை விட்டுப் போவதேயில்லை."

கிரிபித் வீட்டுக்கு அதன்பிறகு அவன் போவதற்கே பயமாக இருந்தது. காகங்களின் ஆயிரக்கணக்கான புகைப்படங்கள், கோட்டு ஓவியங்கள் வைத்திருந்த அவர் ஒரு நாள் கோபாலராவிடம் சொன்னார்.

"நேற்று எனது கனவில் மழைத்துளி போல காகங்கள் வானிலிருந்து எண்ணிக்கையற்று உதிர்ந்து பறந்தன. கனவில் அவை கரைச்சல் இடுவதில்லை."

கிரிபித்தின் ஸ்நேகம் கோபாலராவைப் படிப்பதிலிருந்து மெல்லத் துண்டித்துவிட்டது. அவனும் கிரிபித்தைப் போலவே மனதில் அடங் காத ஒரு பயமும் தோற்றமும் கூடியவனாகச் சுற்றத் தொடங்கினான். கிரிபித் அவனுக்குத் தனது ஜெர்மன் கேமிராவைத் தந்து காகங்களைப் படம் எடுக்கச் சொன்னபோது, அவன் ஒரு மாட்டு வண்டியைப் படம் பிடித்தான். கிரிபித் அந்தப் புகைப்படத்தினைப் பற்றி அவனிடம் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. மனத்துயரோடு அவன் வீட்டிலே அடங்கிக் கிடந்தான். பிறகு கிரிபித்தைச் சந்திக்க விருப்பம் கொள்ளவே யில்லை. ஆனாலும் காகங்கள் எப்போதாவது கூட்டமாகக் கத்திக் கரையும்போது அவனறியாமல் கிரிபித்தின் கனவும் சாவைப் பற்றிய பயமும் அவனுக்குள் எழுந்து பீடித்துக்கொள்ளும்.

மினர்வாவில் நாலு காட்சிகள், மூவிலேண்டில் ஆறு காட்சிகள் டாக்கி கொடுப்பதற்காக வாரந்தோறும் ஒப்புக்கொண்டிருந்தான் கோபாலராவ். யாவும் கறுப்பு–வெள்ளைத் துண்டுப் படங்கள். எப்போதாவது ஒரு மணி நேர சாகசப் படம் வரக்கூடும். விசேஷ நாள்களில் புராணப் படங்கள் வருவதுமுண்டு.

கோபாலராவ் பாட்டுக் கற்றிருந்தான். தஞ்சாவூரில் அக்கா வீட்டில் இருந்த நாள்களில் கற்றுக்கொண்ட பாடங்கள், மச்சாவதாரம் என்னும் படம் திரையிடப்பட்டபோது அவன் தினமும் பதினெட்டுப் பாடல்களையும் மூன்று ஷோவிலும் பாட வேண்டியதிருக்கும். அவனைப் போல டாக்கிகள் ஒன்றிரண்டு பேர்தானிருக்கிறார்கள். அதிலும் ஆங்கிலத்தில் டாக்கி தருவதற்கு அவனும் திருலோகமும்தான் இருந்தார்கள். அவனை முதலியார் டாக்கிராவ் என்றே கூப்பிடத் தொடங்கியிருந்தார்.

மாதத்தின் இரண்டாவது வெள்ளி தோறும் தவறாமல் கோபாலராவ் டிராமில் ஏறி பிராட்வேயில் இருக்கும் கல்கத்தா கார்னருக்குப் போய் இறங்குவான். அங்கேதான் ஓரியண்டல் கிராமபோன் கம்பெனியிருந்தது. அவனது வருமானத்தில் கால் பாதியை ரிக்கார்டுகள் வாங்கச் செலவழித்துவிடுவான். ஓரியண்டல் கிராமபோன் கம்பெனியில் அவனைப் பலருக்கும் நன்றாகத் தெரிந்திருந்தது. கங்குபாய், லட்சுமிபாய் சகோதரிகளின் இசைத்தட்டும், சிம்போனி 13–ம் வாங்கிக் கொண்டு, அவன் காத்திருந்தபோது மலேயாவிலிருந்து கப்பலில் வந்த இருவர் தனியே பேசிக்கொண்டிருந்தார்கள்.

மலேயா ஜூப்ளி ஹாலில் அவர்கள் பேசும் படம் பார்த்தார்கள் என்றும், அதற்கு டாக்கி தேவையேயில்லை, நடிகர்களே பேசுகிறார்கள், பாடுகிறார்கள் என வியப்பைத் தூண்டிக் கொண்டிருந்தார்கள். கடைச் சிப்பந்தி ஆர்வம் தாளாமல் கேட்டுக்கொண்டிருந்தான். இதுவரை ஆறு ஷோதான் நடந்திருக்கிறது எனச் சொன்னதைக் கேட்டு சிப்பந்தி ஆச்சரியமாகப் பார்த்தான்.

கோபாலராவ் எதையும் கேட்டுக்கொள்ளவில்லை. அவன் மனம் கங்குபாயின் குரலின் ஈரப்பாதைகளில் நகர்ந்து சென்று கொண்டிருந்தது.

கல்கத்தா மெயிலுக்கு தாத்தையா முதலியார் புறப்பட்ட அன்று மாலை கோபாலராவும் ரயில்வே ஸ்டேஷன் வந்திருந்தான். முதலியார் இந்த வாரமும் கொட்டகையில் படம் கிடையாது, ஏதோ கட்டட வேலை நடக்கப் போவதாகச் சொன்னார். இதையே மனோன்மணி ரெண்டு நாளின் முன்பாகவே தனியே அழைத்துப் போய்ச் சொன்னான்,

“முதலியார் ஏதோ புதுமையான கனவில் இருக்கார்... கொட்டகையில் புது மிஷின் வரப்போகுது.”

அவன் ஆர்வம் காட்டவேயில்லை. முதலியார் ரயில் வருவதற்கு ஒரு மணி நேரம் முன்னதாகவே ஸ்டேஷன் வந்துவிடுபவர். அவர் கோபாலராவை அருகில் உட்காரச் சொல்லியபடி கேட்டார்,

“மினர்வாவில் என்ன படம் போடுகிறான்?”

“டைம் பார் டைம்.”

முதலியார் ஏதோ யோசனைக்குப் பிறகு கேட்டார்,

“உனக்கு ஆபரேட்டர் வேலை தெரியுமா?”

இல்லையெனத் தலையாட்டினான்.

“மனோன்மணிகிட்டே கத்துக்கோ. பிரயோசனமா இருக்கும். கல்கத்தாவில் இருந்து பேசும் படம் கொண்டுவரப்போறேன். அதுக்கு டாக்கி வேண்டியிருக்காது. அது தானா பேசுற, பாடுற பிக்சர்”

அவன் கேட்டுக்கொண்டிருந்தான்.

"இத்தனை நாள் பழகின தோஷத்துக்கு ஆபரேட்டரா கூட இருந்துக்கோ. மாசச் சம்பளம் போட்டுத் தர்றேன்."

கோபாலராவ் அவரை விட்டு விலகி வந்து தண்டவாளத்தையே பார்த்துக்கொண்டிருந்தான். மரக்கிளையில் ஒரு காகம் மட்டும் கரைந்துகொண்டிருந்தது. ரயில் வருவதற்கு முன்பே அவன் வெளி யேறிப் போயிருந்தான்.

பேசும் படத்தைப் பார்ப்பதற்காகக் கூட்டம் நிரம்பிக் கொண்டிருந்தது. மூவிலேண்டைப் புதுசாக மாற்றியிருந்தார்கள். நடிகர்களின் முகமும் பாட்டும் திரையில் ஒன்றாகத் தோன்றி மறையும் போது அரங்க இருளில் மயக்கம் பீடித்தது போலவொரு மவுனம். பாடும் நிழல் உருவங்களைத் திரும்பத் திரும்பப் பார்ப்பதற்காக வந்துகொண்டேயிருந் தார்கள். கோபாலராவ் தனது அறையை விட்டு வெளியேறவேயில்லை. ஒரு அதிகாலை அவன் வீதியில் யானை நடந்து வந்தது. குளித்து விட்டுத் திரும்பி வரக்கூடும். கோபாலராவ் அதன் எதிரே, நேராக நின்றான். யானையின் துதிக்கை அவன் சிரசின் மேல் பட்டு அலையாடியது. யானையின் கண்களின் ஆழத்தினைப் பார்த்துக் கொண்டிருந்தான். சப்தமாகக் கத்தி அழ வேண்டும் போல் இருந்தது. குடம் ஏந்தியபடி வரும் பெண்கள் யானையைக் கடந்து போனார்கள். சப்தமற்ற யானை தெருவில் தனது மணியோசையைப் படரவிட்டபடி கோவிலை நோக்கிப் போனதும், அவன் தனது அறைக்கு ஓடிப் படுத்துக்கொண்டான். அன்றிரவில் அவனுக்குச் சொப்பனங்கள் அறை இடுக்குகளில் இருந்து அடர்ந்து ஊடுருவின. காகங்கள், வேட்டையாடும் புலி, யானை, பெட்ரோமாக்ஸ், சப்தமாகப் பெய்யும் மழை. அவன் பிதற்றத் தொடங்கிய மறுநாள் காய்ச்சல் பீடித்திருந்தது.

"நீங்கள் யாரென எனக்குத் தெரியாது. என்னிடம் அறிமுகம் செய்துகொள்ள வேண்டும் என ஒருபோதும் உங்களுக்குத் தோன்றவே யில்லை. ஒருவேளை உங்களுக்குத் தயக்கமாக இருந்திருக்கலாம். அல்லது விருப்பமற்றுப் போயிருக்கலாம். எனக்கு உங்களைப் பற்றிய அறிமுகம், நீங்கள் பார்வையாளர்கள். அதுவும் ஒரு சலனக் காட்சியைக் காண வந்தவர்கள். நீங்கள் வருவதற்கு முன்பாக இந்த இருக்கைகள் கொண்டிருந்த நிசப்தம் நீங்கள் அதில் அமர்ந்த பிறகு உங்களிடமும் நிரம்பிவிடுகிறது. உங்கள் கண்கள் எதிரேயிருக்கும் வெண்திரையைப் பார்த்துக்கொண்டிருக்கின்றன. கூச்சத்துடனோ ஆர்வம் மிகுந்தோ ஒன்றிரண்டு ஸ்திரிகள் உட்கார்ந்திருப்பதைப் பார்த்துக் கொள்கிறீர்கள்.

விளக்கு அணைக்கப்படுகிறது. மௌனக் காட்சிகள் திரையில் ஓடுகின்றன. உங்களுக்கு அறிமுகம் இல்லாத நான், உங்களுக்கு அதன் கதையைச் சொல்கிறேன். நீங்கள் எனது குரலை நம்புகிறீர்கள். என் குரலின் வழியே காட்சிகளைக் குடிக்கிறீர்கள். என் குரல்

ஒரு பாவனை. நான் குரலை என் விருப்பப்படி மாற்றி உங்களை ஈர்ப்புக் கொள்கிறேன். எனது உருவம் உங்களுக்கு முக்கியமில்லை. நான் இதோ ஒரு கடற்கொள்ளைக்காரனாக உங்கள் முன் குதிக்கிறேன். நீங்கள் அமைதியாக இருக்கிறீர்கள். உங்கள் இதயத்தின் முன் எனது வாளின் நுனி சுழிக்கிறேன். நீங்கள் பயப்படுகிறீர்கள். உங்கள் இதயம் படபடக்கிறது. மூச்சு நடுங்குகிறது. இதோ நான் இப்போது பிரின்ஸ் ஆப் ராஜ்புத். எனது தங்கக்கோப்பையை உங்களுக்கு எதிரில் உயர்த்திக் குடிக்கிறேன். உங்கள் உதடுகள் சுவைக்கின்றன வெறுமையை.

நான் சர்க்கஸின் கோமாளி, நான் ஸ்ரீகிருஷ்ணன், நானே கம்சன், நானே கௌசிக ரிஷி, நானே தப்பியலையும் புலி.

நீங்கள் காட்சிகளை இருக்கையிலிருந்து பறித்து உண்ணுங்கள். என் குரல் அதில் சுவையின் சாற்றைத் தடவட்டும். நீங்கள் களைப் படைந்துவிடுகிறீர்கள். உங்கள் இதயம் பயத்தாலும், சில வேளை மோகத்தாலும் மினுங்குகிறது. திரை அமைதி கொள்கிறது. அரங்க இருள் கலைய பெருமூச்சிட்டபடியே நீங்கள் வெளியேறுகிறீர்கள்.

திரையில் இதுவரை நடமாடிய ஒளியுருவங்களின் சிறு சுவடு கூட இல்லை. ஒரு சிறுவன் அரங்கைச் சுத்தம் செய்கிறான். சொற்கள் எங்கும் இறைந்து கிடக்கின்றன."

காய்ச்சல் மிதமிஞ்சிப்போக பிதற்றல் நிற்காத கோபாலராவ் அறைக்குக் கீழ்வீட்டுப் பெண் வந்தபோது அவன் தொடர்பற்று ஏதேதோ பேசிக்கொண்டிருந்தான்.

ஒரு மாத காலம் தஞ்சாவூருக்குப் போக வேண்டியதாகிறது. ஊரை விட்டு வந்து பல வருஷங்களுக்குப் பிறகு அக்கா வீட்டில் நோயாளியாகப் படுத்திருப்பது கோபாலராவுக்கு வேதனையாக இருந்தது.

கட்டிலில் வெளுத்த வேஷ்டியை அக்கா விரித்து அவனைத் தூக்கிப் படுக்க வைப்பதும், கஞ்சி டம்ளரை அவளே கைகளில் ஏந்திக்கொண்டு, ஒவ்வொரு மடக்காகக் குடிக்கச் செய்வதும் தாளாத துக்கமேற்றியது. அவன் படுத்திருந்த அறை ஜன்னலின் வெளியே சிறுவர்கள் விளையாடிக்கொண்டிருந்தார்கள் நகரின் தேவாலய மணிச் சப்தம் எப்போதாவது கேட்கும். இரவில் விநோதப் பூச்சிகளின் இரைச்சல். நோயுற்ற நாளில் அவன் "லோபதா, லோபதா" எனப் புரியாத பாட்டைப் புலம்பிக்கொண்டிருப்பதைக் கண்ட அக்கா அவனுக்கு சாந்தி வரும்படியாக அந்த அறையில் பகலினுள் இரண்டு விளக்குகளைச் சுடர்விட்டு எரியவிட்டிருந்தாள்.

திரும்பி நகரம் வந்தபோது பூக்கடைச் சந்தில் தற்செயலாக திருலோகத்தைக் கண்டான். திருலோகம் கையில் சிறிய தம்புராவை ஏந்தியபடி உடலெங்கும் அரிதாரம் பூசியவனாக நின்றுகொண்டிருந்தான். அவன் கோபாலராவைப் பார்த்ததும் அருகில் வந்து பேசினான். கோபாலராவ் பொய்க் கேசத்துடன் நிற்கும் திருலோகத்தைப் பார்த்துக்கொண்டேயிருந்தான். திருலோகம் சிரித்தபடியே சொன்னான்,

"ராவணன் தர்பார் படத்தில் நாரதரா நடிக்கிறேன்." ஆங்கிலத்தில் பிரமாதமாக டாக்கி கொடுக்கும் திருலோகம் சிவப்பு அரிதாரத்துடன் நிற்பதைக் கண்டவனாக எதையும் கேட்டுக் கொள்ள முடியாமல் கோபாலராவ் தலைகுனிந்து கொண்டான். திருலோகம் அவன் தோளைப் பிடித்தபடி சொன்னான்.

"பிழைக்கணுமில்லையா "

சக நடிகர்கள் காத்துக்கொண்டிருந்தார்கள். திருலோகம் அவசரமாக அவர்களோடு சேர்ந்துகொண்டான். மனக்கூச்சத்துடன் அறைக்குத் திரும்பிய கோபாலராவ் அன்றிரவு சுவரில் தெரியும் நிழல்களைப் பார்த்தபடி வெகு நேரமிருந்தான்.

தன்னிடமிருந்த கிராமபோன் ரிக்கார்டுகளை விற்பதற்காக ரிச்சி தெருவுக்குப் போய்த் திரும்பி வரும்போது தாத்தையா முதலியார் கோபாலராவைப் பார்த்துவிட்டார். புதிதாக வாங்கியிருந்த மோரிஸ் மைனரில் அவனை ஏற்றிக்கொண்டு தனது கொட்டகைக்குக் கூட்டிப் போனார். பேசும் படத்தை உள்ளே போய்ப் பார்க்கச் சொன்னார்

இருளில் அவன் நுழைந்தபோது தேவலோகம் மின்னிக்கொண்டிருந்தது. இந்திரன் சபையில் இரு பெண்கள் நடனமாடிக் கொண்டிருந்தார்கள். திடீரென இந்திரனே எழுந்து பாடத் தொடங்கினான். காட்சிகள் மாற மாற சப்தமும் மாறியது. அந்தக் குரலின் நடமாட்டம் அரங்கில் எதிரொலித்தது. ஒரு நிழல் மிருகம் தனது பொய்க் குரலால் யாவரையும் மயக்கித் தனது நாவால் ருசிப்பது போல அந்த இயந்திரக் குரலைக் கேட்டுக் கொண்டிருந்தான். இருளில் அவன் எப்போதும் நிற்குமிடம் காலியாகவிருந்தது. முதலியார் வெளியே வந்த அவனிடம் மிலிட்டரி கேம்பில் ஒரு ரீல் மவுனப் படம் ஒன்று காட்டப்படுவதாகவும், அதற்கு டாக்கி தர அவனைத் தேடிக்கொண்டிருப்பதாகவும் கையில் உடனே காசு வாங்கித் தந்துவிடுவதாகச் சொன்னார்.

யோசனையின்றி தன்னால் இனி டாக்கி கொடுக்க முடியாது எனச் சொல்லியவனாக அரங்கைவிட்டு வெளியேறினான் கோபாலராவ். சில வாரங்கள் வெளியே எங்கும் போகாமல் தனது அறையிலே கிடந்தான். யானையைப் பார்த்து வருவது மட்டுமே எப்போதாவது நடந்தேறியது. அவனைத் தேடிவருபவர்கள் எவருமேயில்லை. மாலையில் எதிர்வீட்டுத் துணி காயும் கம்பிக்கு வரும் குருவிகளைத்

தவிர வேறு ஸ்நேகமற்றுப்போனது.

அறையை மூடியபடியே உள்ளேயே இருந்தான். ஒரு பகலில் சிறுவர்கள் இருவர் அவன் அறை சாவித் துவாரம் வழியே பார்த்த போது அவன் விதவிதமான எக்ஸ்ரே படங்களை இரட்டை மெழுகு வர்த்தியின் ஒளியில் சுவரில் பிரதிபலிக்கச் செய்து, ஒளிரும் எக்ஸ்ரே படங்களுக்கு ஏற்ப தனது குரலை மாற்றி மாற்றி ஷோ நிகழ்த்திக் கொண்டிருந்தான்.

நாற்பதைம்பது எக்ஸ்ரே படங்கள் அவனருகே கிடந்தன. சிறுவர்கள் அவன் சிரிப்பையும் வேடிக்கையும் கண்டு பயந்தவர்களாகக் கீழே ஓடி, தங்களின் அம்மாவை அழைத்து வந்தார்கள். மூவரும் கதவைத் தள்ளித் திறந்தபோது அவன் தரையில் அவர்களை உட்காரச் சொல்லிவிட்டு 'பிரின்ஸ் ஆப் சிட்டி' என்னும் படத்தைத் தான் காட்டப்போவதாகச் சொல்லி நோயுற்றவர்களின் எக்ஸ்ரே படங்களை சுவரில் ஒளிரச் செய்தான். விலா எலும்பின் இருள் ஒளியைக் கண்டு அந்தப் பெண் பயந்தவளாக, குழந்தைகளைக் கூட்டிக்கொண்டு அவசரமாக மாடியை விட்டு இறங்கிய மறுநாள்தான் கோபாலராவ் திமிங்கலத்தைப் பார்ப்பதற்காக மியூசியம் சென்றான்.

பகலைச் சூடியவள்

சில நாள்களாகவே வீட்டின் ஓடுகள் முனங்கத் தொடங்கியிருந்ததையும், சதா அவை யாரோ நடந்து போகும் மனிதனின் காலடியோசை போலச் சப்தமிடு வதையும், வீதியில் மண் தீய்ந்து புரளும் வாசனை பெருகிக்கொண்டிருப்பதையும் தாமரை உணர்ந்து கொண்டிருந்தாள். சென்ற கோடையில் வெக்கை தாளாமல் வீட்டு ஓடுகள் வெடித்துச் சிதறியதன் ஞாபகம் வந்தது. கோடை பிறந்ததுமே தெருக்கள் விரிவடையத் தொடங்கிவிடுகின்றன. எங்கும் குருதியென வெயில் நீண்டு ஓடுகிறது. வெயில் காலச் சூரியன் மிக மெதுவாக நடப்பவன். ஊரின் மீது நின்றபடி தனது ஆயிரம் தலைமயிரை அவன் கோதிவிடுவதாகத் தோன்றும். வீட்டுப் பாத்திரங்கள் வெக்கையால் நெளிவு கொள்வதும் உப்பு மரவை கசிவு கொண்டு நீர் சொட்டுவதும் அங்கணக்குழியி னுள் ஈரத்துக்குப் பாம்பு வந்து படுத்திருப்பதையும் கண்டுகொண்டுதான் இருக்கிறாள்.

தாமரையின் தங்கைகள் புளியமுத்தை உரசித் தாயம் விளையாடியபடி பகலைக் கடந்துவிடுகிறார் கள். தாமரைக்கு வேலைகள் இருந்துகொண்டேயிருந் தன. சில நாள்களாகத் தரையிலிருந்து வெக்கை நீரூற்றுப் போலக் குமிழ்விடுவதைக் கேட்க முடிகிறது. செம்பில் வைத்த தண்ணீரைக் குடிக்கும் வெயிலின் மாய் உதடுகளின் சப்தம் ம், ம், ம் என முனங்குகிறது. எங்கிருந்தோ மாம்பழம் விற்பவன் வெயிலில் சைக் கிளில் ஊரின் முகத்துவாரத்தினுள் நுழைகிறான். சப்தம் ஒய்ந்த தெருக்கள். நாய்களும்கூட அற்றுப் போய்விட்ட நீண்ட பகல். மாம்பழம், மாம்பழம் எனச் சப்தமிடவும் மறந்து அவன் வீதியில் செல்

கிறான். நீண்ட நிழல் படிகளில் சரிந்து போகிறது. வாசற் கதவுகள் மூர்க்கமேறி நிற்கின்றன.

தாமரை சில நாள்கள் முன்னதாகவே வீட்டுக்கு விலக்காகி இருந்தாள். சமையலறையின் கதவையொட்டி உலக்கையை அருகே போட்டுக்கொண்டு மூன்று நாளாகவே பகலைப் பார்த்துக்கொண்டே யிருக்கிறாள். தொடைகளில் கசியும் குருதியின் பிசுபிசுப்போடு தரையில் கன்னம் பதியப் படுத்திருக்கிறாள். கண்கொள்ள முடியாத பகல். கேசத்தால் முகத்தை மூடியபடியே அவள் சப்தம் தொலைவில் எங்கிருந்தோ மிதந்து வருவதைக் கேட்கிறாள். எங்கிருந்தோ கசியும் சுனை போலக் காற்று வேம்பின் இலைகளிலிருந்து சொட்டிக்கொண்டி ருக்கிறது. இளம் கசப்பின் தோய்வு கொண்ட காற்றது. அவள் மூச்சை ஆழமாக இழுக்கிறாள். பகலைக் குடித்துக் குடித்து கண்கள் சிவப்பேறுகின்றன. கற்களைக் கரைத்தபடி வெக்கை எங்கும் நிரம்பிக் கொண்டிருந்தது. மரம் திரும்பும் பறவையைப் போல நீண்ட அசதியுடனும் தாமதமாகவுமே இரவு வந்து சேர்கிறது. தாமரை இருள் வந்த பிறகே ஆசுவாசம் கொள்கிறாள்.

உடலில் இருந்து துளிர்த்த ரத்தம் நின்றபாடில்லை. எல்லாக் கதவுகளையும் திறந்து வைத்துப் படிகளில் தலை வைத்துப் படுத்திருக் கிறார்கள் வீட்டோர். தெருவிலும்கூட வானைப் பார்த்தபடி பாயைப் போட்டு உறங்கிக் கிடப்பவர்கள் அதிகமாயினர். ஆனாலும் ஆழமான உறக்கம் எவருக்கும் கூடவில்லை. திட்டுத் திட்டாகத் தூக்கம் முகத்தில் பட்டுக் கலைகிறது. தாமரை சமையற்கட்டின் படியில் தலை வைத்துப் படுத்துக்கொண்டாள். துர்சொப்பனம் வரக் கூடுமென் பாள் அத்தை. ஆனாலும் குளிர்ச்சி எப்படியோ அங்கு கசிந்து வருகிறது.

தாமரை அன்றிரவு மிக வேகமாகவே உறங்கியிருந்தாள். தூங்கிக் கொண்டிருந்த வீட்டோரைத் தாண்டி தானியக் குலுக்கையிருந்த இருட்டறைக்குப் போன ஒரு மனிதன், அவசர அவசரமாகத் தானியத்தை வேஷ்டியில் அள்ளிக் கட்டிக்கொண்டபோது மற்றவன் சாமிப் படங்களுக்கடியில் கிடைத்த நாணத்தையும் பணத்தையும் திருடியவர்களாக வெளியேற முயற்சிக்கும்போது, வெட்டிவேரின் நறுமணம் கசிந்த நீர்வாடையால் தாகமேறி, மண்பானையில் இருந்த தண்ணீரை அள்ளிக் குடித்துவிட்டு, நெஞ்சில் ஓடி இறங்கும் குளிர்ச்சி யோடு தலையில் ஒரு டம்ளர் தண்ணீர் அள்ளித் தெளித்துக்கொண்டு சிரித்தான். மற்றவனின் கண்கள் மினுங்கிக் கொண்டிருந்தன. தண்ணீர் குடித்தவன் சமையற்கட்டைத் தாண்டும்போது தாமரையின் உள்ளங் கையை மிதித்துவிட்டான்.

பயத்துடன் எழுந்து அவள் கூச்சலிட்டபோது மூர்க்கமான கள்வன் அவள் தோளைப் பிடித்துத் தள்ளியபடி வெளியேறினான். மற்றவன் தலையைச் சிலுப்பியபடி அவளை முறைத்துப் பார்த்தபடி ஒரு நிமிஷம் நின்றான். அவள் வடுவேறிய அந்தக் கள்வனின் முகத்தைக்

கண்டாள். சற்றும் யோசிக்காமல் அவன் தனது கத்தியை எடுத்து வேகமாக அவளது இடுப்பில் ஆழமாகக் குத்திவிட்டு ஓடினான். தன்னை மறந்து கத்தியவளாக தாமரை வீதியில் ஓடினாள். உறக்கமற்ற வீதிவாசிகள் விரட்டித் துரத்தினர். ஆள் அடையாளம் தெரியவில்லை. நடுத் தெருவில் தாமரை கூச்சலிடும்போது, அவளது சகோதரன் பயத்துடன் அவளது இடுப்பைச் சுட்டிக்காட்டியபோது ரத்தம் பீறிட்டுக் கொண்டிருந்தது. சகோதரனை, அக்கத்தியைப் பிடுங்கி எடுக்கச் சொன்னாள். அவன் கை நடுக்கத்துடன் இடுப்பிலிருந்த கத்தியைப் பிடுங்கி எடுத்தான். மரக் கைப்பிடி கொண்ட, மகரக்குறி பொறித்த கத்தி. தாமரை தெருவில் தனது குருதி சொட்டிய வேதனை தாளாமல் மயங்கி விழுந்தபோது நாய் ஒன்று நாவால் குருதியை ருசித்துக்கொண்டிருந்தது.

சிறிய வடுவுடன் காயம் ஆறத் தொடங்கிவிட்டிருந்தது. தனது இடுப்பில் குத்தப்பட்ட கத்தியைக் கையில் வைத்துத் திரும்பத் திரும்பப் பார்த்தபடியே சமையலறையில் படுத்திருந்தாள். திருடர்களின் முகம் ஞாபகமில்லை. அவள் தனது இடுப்பைத் தொட்டுப் பார்த்துக் கொண்டாள். விலா எலும்பின் கீழே இடுப்புக்குச் சற்று மேலே குத்தியிருக்கிறான். கத்தி உடம்பினுள் ஒரு புழுவெனத் துளையிட்டு உள்ளே சென்றிருந்தது. மகர முத்திரை கொண்ட அக்கத்தி இதன் முன் எவரைக் குத்தியிருக்கும் எனத் தெரியவில்லை. பிடியில் அழுத்தமான விரல் ரேகையிருந்தது. கத்தியின் நுனியில் ரத்தக் கறை காய்ந்திருந்தது. நாக்குள்ள பூச்சிதான் கத்தியோ என அவள் பார்த்துக்கொண்டேயிருந்தாள். தன்னைக் குத்திய கத்தி இவ்வளவு சிறியதுதானா, இல்லை பாதி முறிந்து இடுப்பினுள்ளே தங்கிவிட்டதா எனச் சந்தேகமாக இருந்தது. இடுப்பை அசைத்துப் பார்த்தாள். விரலால் அழுத்திப் பார்த்தாள். மீன் நீந்துவது போல உடலினுள் கத்தி நகர்ந்துபோவது போல் இருந்தது. கண்களை இறுக்கமாக மூடிக்கொண்டே உடம்பினுள்ளே பார்த்துவிட முடியுமா என யோசித்தாள்: வீட்டு ஓடுகள் முணுமுணுத்தன வெயிலை. அவள் கண்களை இடுக்கிக்கொண்டு அண்ணாந்து பார்த்தாள். திருடர்கள் பத்துப் பேருக்கு மேலிருக்கும். ஓடுகளை ஒவ்வொன்றாகக் கழட்டியபடி குனிந்து முகத்தைக் காட்டிக்கொண்டு அவளைப் பார்த்துச் சிரித்தார்கள். அவள் தன் கைகளால் முகத்தை மூடிக்கொண்டு விட்டாள். கத்த வேண்டும் போல் இருந்தது. வார்த்தை வரவில்லை. க்ளக், க்ளக் எனப் பொருளற்ற சப்தமே வந்தது. ஓட்டிலிருந்த ஒருவன் அதட்டும் குரலில் கேட்டான்,

"உன் இடுப்பில் குத்திய கத்தியைத் திருப்பித் தராமல் என்ன செய்கிறாய்?"

அவள் பதில் பேசவில்லை. கத்தியைத் திருப்பிக் கொடு, திருப்பிக்

கொடு. பல திருடர்களும் கூச்சலிட்டனர். அவள் தன்னை மீறிக் கத்தியபோது ஓடுகள் யாவும் மூடிக்கொண்டுவிட்டன. கள்வர்களின் முகம் மறைந்துவிட்டது. வாசலில் படியேறி வந்து கொண்டிருந்தது வெயில். இரவு தாமரை உறங்குவதேயில்லை. அதிலும் இன்று லேசாக மழை தூறியிருந்ததால் வீதியில் படுப்பவர்களும் எழுந்து போய்விட்டதால் ஊரே அடங்கிவிட்டிருந்தது. தாமரை கதவுகளை மூடி, ஜன்னலை மூடித் தாழ்ப்பாள் போட்டு, கதவைத் தள்ளிவிடாமல் உரலை அண்டக் கொடுத்துப் படுத்திருந்தாள். தரையில் சிறிய புடவு இருந்ததைக்கூடக் கண்டு துணியால் அடைத்தாள். இடுப்பினுள் கத்தி அசைந்துகொண்டேயிருந்தது. அவள் தன் முனைப்பற்று உறங்க முயற்சிக்கும்போது ஜன்னல் இடுக்கு வழியாக ஈசல்கள் உள்ளே முட்டி முட்டி வந்தன. அதன் கண்ணாடிச் சிறகுகள் உதிர்ந்தன. அவள் சட்டென விழித்துக்கொண்டபோது அவளருகே உக்கிர முகங்களுடன் முப்பது நாற்பது திருடர்கள் உட்கார்ந்தபடியிருந் தனர். அவர்களில் ஒருவன் ‘கத்தியெங்கே’ எனக் கேட்டான். மற்றவன் அவளது பலகையடியில் கிடந்த கத்தியைக் காட்டினான். ‘பாதிதானே யிருக்கிறது மீதம் எங்கே’ எனக் கேட்க அவள் பேசாமலிருந்தாள். சட்டெனப் புடவையை விலக்கிவிட்டு இடுப்பைக் கையால் இறுக்கிய படி அவள் வயிற்றைக் கத்தியால் கீறினான். சிறிய கத்தியொன்றின் துண்டு ரத்தம் தோயக் கிடந்தது. அவள் கிழிந்து கிடந்த வயிற்றைக் கண்டு ச்சூபி, ச்சூபி என ஏதோ கத்தினாள். அவர்கள் கத்தியை ஒட்டவைக்கப் பார்த்து முடியாமல் அவள் அருகே தூக்கி எறிந்தபடி சொன்னார்கள்,

“கத்தியைத் திருப்பிக் கொடு.”

அவள் கால்கள் நடுங்க, கண் இமை துடிக்கப் பெருமூச்சிட்டபடி அழுதாள். தரையில் கதவை அண்ணன் தட்டித் திறந்தபோது அவள் தனது குருதி மழை போல உள்அறைக்குள் வடிந்து போவதைக் கண்டாள். சகோதரன் விளக்கு ஒளியில் பார்த்தபோது தாமரையின் கண்கள் மஞ்சளேறியிருந்தன. அவன் கேட்டதற்கும் அவள் பதில் பேசவில்லை. அவள் நடுங்கிக்கொண்டேயிருந்தாள்.

பாத்திரங்களைத் துலக்கி வைத்துவிட்டு யாருமறியாமல் உப்பு மரவை அடியில் கிடந்த கத்தியை எடுத்து வந்து முருங்கை மரத்தடியில் நின்றபடி எதற்கெனத் தெரியாமல் அதைத் தனது நாக்கில் வைத்து ருசித்துப் பார்த்தாள் பிறகு மண்ணுக்குள் புதைத்துவிட்டு வந்து சமையல் வேலைகள் செய்யத் தொடங்கினாள். பகலில் அன்றைக்கு ஆழ்ந்த உறக்கம் வந்தது. மாலை கண் விழித்தபோது வீட்டின் பின்புறத்தைத் தோண்டிக்கொண்டேயிருந்தார்கள் திருடர்கள். மண்ணை வாரித் தூற்றியபடி கோபமாகத் கத்தினார்கள். தாமரை பயத்தோடு வீட்டுக்குள் ஓடிவந்தாள்.

இரவு தலை கவிழ்ந்தபடி தெருவில் நடந்துபோய் ராட்டுக் கிணற்றில் தண்ணீர் இறைக்கும்போது அவள் வாளியை யாரோ பற்றி உள்ளே இழுப்பது போலத் தெரிந்தது. அவள் உள்ளே எட்டிப் பார்த்தபோது கிணற்றினுள் நூறு திருடர்கள் ஒளிந்து கிடந்தனர். அவர்கள் பற்களை இளித்தபடி 'கத்தியெங்கே, கத்தியெங்கே, என்றனர். குடத்தைப் போட்டுவிட்டு வீட்டை நோக்கி ஓடினாள். தண்ணீர் கசிந்து ஓடிக்கொண்டிருப்பது போலவே திருடர்கள் அங்குமிங்கும் ஓடியலைந்து கொண்டேயிருந்தனர். உடல் வற்றிக்கொண்டே வந்த தாமரை உத்திர இடுக்குகளின் வழியே எட்டிப் பார்த்து பல் இளிக்கும் கள்வர்களைக் கண்டு உரக்கக் கூச்சலிட்டு, 'உன் கத்தியைத் தர முடியாது போடா, போடா' எனக் கத்தியவளாக அவசர அவசரமாக மண்ணைத் தோண்டி, புதையுண்ட கத்தியை எடுத்தாள். கோழி ரோமங்களைப் போல திருடர்கள் அங்குமிங்கும் மிதந்து கொண்டிருந்தனர். அவள் முகம் இறுகியபடி கத்தியை வேகமாகத் தனது மார்பினுள் இறக்கினாள். அது மிகுந்த வேகத்துடன் உள்ளே சென்றது. கைகளால் கத்தி முழுமையாக உடலில் மறையும்படி குத்தினாள். இதயத்தின் வெகு ஆழம் வரை சென்ற கத்தி உள்ளேயே ஒடுங்கியது. அவள் ஸ்தனங்களை நனைத்தது குருதி. இனி கள்வர்கள் கத்தியைத் தேடிக் கண்டுபிடிக்க முடியாது என்ற சிரிப்புடன் அவள் சரிந்து வீழ்ந்தாள். பிறகு அவளிடம் கத்தியைக் கேட்டுத் திருடர்கள் எவரும் வரவேயில்லை. பகல் மட்டும் நீண்டிருந்தது.

பால்ய நதி

மழைக்காலத்தின் முன்பாக சுதவனம் திரும்ப வேண்டுமென அந்தப் பிக்குகள் பயணித்துக்கொண்டிருந்த இரண்டாம் நாளின் அதிகாலையில் சாரல் கூடிப் பெய்யத் தொடங்கியது. மழை தொடங்கி விட்டால் இருபத்தியொரு நாள்கள் அது நீடிக்கக் கூடியதாக இருக்கும். அதுவும் இந்தப் பருவத்தை ஸர்ப்ப மழைக் காலமென்கிறார்கள். சீற்றமும் மினுப்பும் கொண்ட மழை நில வெளியெங்கும் தன் நாவு துடித்து அலையும். பிக்குகளில் மூத்தவரான உபானந்தர் தன் வலக்கையில் சாரலை ஏந்தி ருசித்து விட்டுச் சொன்னார்,

"நாளை பிற்பகலுக்குள் மழை தீவிரம் கொண்டு விடும்."

மழை பெருகுவதற்குள் நதியைக் கடந்துவிட வேண்டுமென்று சாரலின் ஊடேயே பயணித்தார்கள். மழை தீவிரம் கொண்டு விட்டால் இருபத்தியொரு நாள்களும் நதியின் முகம் பார்த்து அமர்ந்திருக்க வேண்டியதுதான். இடிபாடுகளில் விருட்சம் கிளைத்த சுற்றுச் சுவர் கொண்ட கிராமங்களின் செங்காவி நிற வழிகளில் நடந்தனர். பறவைகளற்ற மரங்களில் மழை பெய்து கொண்டிருந்தது. மயக்கமான தூறலின் ஊடே நிசப்தித்திருந்தன வீடுகள். ஓலைக் குடையேந்திய சஞ்சாரிகள் மழை விலக்கி எதிர்போனார்கள். நடையோசைகூடக் கேட்காது தெரு கடந்து விரைந்த பிக்குகளைக் கண்ட இல்லத்து ஸ்திரிகள் கைகூப்பினர். திறந்த ஜன்னலொன்றின் ஊடே ஈரக்காற்றில் நடுங்கி நின்ற கூண்டுக்கிளிகள் பிக்குகளின் முகம் கண்டு

சரணம் சரணமென்றன. கிளிகளின் குரலுக்குச் செவி சாய்க்காமல் முன் போயினர். ஈரம் பழகிய கண்களுடன் பசுக்களை ஓட்டித் திரும்பும் இடையப் பெண்கள் பிக்குகளுக்காக வழி ஒதுங்கி நின்றபோது அவர்களின் நீர்சொட்டும் கூந்தலில் படர்ந்திருந்த பூக்கள் உதடு திறந்து மழைத் துளியை ருசித்துக்கொண்டிருந்தன. மழை யாவரையும் சாந்தம் கொள்ளச் செய்து விடுகிறது. திரிசடை வளர்ந்து கௌபீனத் துடன் வெறித்த கண்ணும் மெலிந்த உடலுமாக எதிர்ப்பட்ட மூர்க்க சந்நியாசிகூடக் கோபம் கலைந்து பிக்குகளின் முன் பரிகசித்துப் போனான்.

கிளையாடிக்கொண்டிருந்த பாதைகளில் நடந்துகொண்டே இருந்தனர் எல்லா பிக்குகளும். மழைக் காலத்துக்குள் அவரவர் சார்ந்த மடாலயத்துக்குள் வந்துவிட வேண்டுமென்ற ஆணையை நினைத்தபடியே யாவரும் நடந்தனர். முன் பார்த்தறியாத மலையோரக் கிராமங்களின் இடையக் குடியிருப்புகளையும் கண்டபடி போய்க் கொண்டிருந்த அந்த ஐவரில் யசன் மட்டுமே வயதில் மிகவும் இளையவனாக இருந்தான். தாழ்ந்த கண்களுடன் முண்டிதமும் துவராடைக் கோலமுமாக பிட்சா பாத்திரம் ஏந்தி அவன் சிறிய நட்சத்திரத்தின் நகர்வு போல் சென்றுகொண்டிருந்தான்.

பிக்குகளின் தனிமை மஞ்சளோடியது. அறியாத ஊர்களின் முகத்துவாரங்களில் நின்றபடி அவர்கள் ஊரைக் காணும்போது மிளிரும் வசீகரமும் வாசனையும் அலாதியாக இருக்கும். கிளைப் பாதைகளைப் போல அவர்களும் தனித்தனியாகப் பிரிந்து ஊரினுள் பிட்சா கோலம் கொண்டு நடப்பார்கள். பிக்குகளின் வருகையை ஏதோ வாசனை காட்டிவிடுகிறது போலும். உறக்கம் கொள்ளாது மூடிய இமைகளுடன் பகலின் மோனம் தாங்கிய வயசாளிகள் பிக்குகளின் பாதஒலி கேட்டவர்களாக, உலர்ந்த தங்கள் உதடு பிரித்து வீட்டுப் பெண்களிடம் பிட்சாமுது கொண்டுவரச் சொல் கிறார்கள். சாந்தமும் அலைபாயாத கண்களும் ஒளிரும் புன்னகையும் கொண்ட ஒரு பிக்கு நோயுற்ற வயசாளி முன் நிற்கும்போது வயோதிகம் ஏற்படுத்திய நோவின் வலி மறந்து பீலியின் தூவல் போல ஆறுதலின் ஈரம் கசியத் தொடங்கும். பிக்குகளில் இளையவனான யசன் துவராடை உடுத்தியபோதும் வசீகரம் கலையாதவனாக இருந்தான். அவன் ஒருபோதும் யாசகம் கேட்டுக் குரல் தருவதேயில்லை. ஆள் நடமாட்டம் இல்லாத வீட்டு வாசலில் கூட தன் வலக் கையில் கவிழ்த்தி வைக்கப்பட்ட கப்பரையைத் திருப்பி ஒரு மலரைப் போல முன் நீட்டி நின்றதும் வீட்டுப் பெண்களில் எவளோ ஒருத்திக்கு இமை துடிக்கத் தொடங்கி அவள் முன்வாசலில் நிற்கும் பிக்குவுக்கான தானியத்தைக் கொண்டுவந்து தயக்கத்துடன் குனிந்து விரல் பட்டு விடாமல் ஈர்க்கும் அரிசியைக் கப்பரையில் கவிழ்த்தபோது தானிய மணி கப்பரை ஓட்டில் பட்டதுமே அது உணவாகப் பூத்த அதிசயம் கலையாமல் தன்னிடம் மீந்த அரிசிகளையும் கப்பரைக்குள் கொட்டிய படி உணவின் வாசனை தீண்டிய முகமும் ஆச்சரியமும் கொண்ட

வளாக மூத்தோரை அழைத்துக் குரலிடும் முன்பாக யசன் தெருவை விட்டு விலகி போயிருப்பான். இயல்பில் பிறக்கும் இவ்வதிசயம் கண்டவர் கண் அன்றி, பிறர் அறியாது கலைய பிக்குகள் அன்றாடத்தின் கதியில் முன்போயினர்.

பிக்குகள் கடந்து செல்ல வேண்டிய நதி மிகச் சிறிய கிராமமொன்றின் பாதமென ஓடிக்கொண்டிருந்தது. பஞ்ச பிக்குகளும் அந்த கிராமத்தின் தலைப்பகுதிக்கு வந்து சேரும் முன்பாக மழை அவர்களை முற்றாக ருசித்திருந்தது. குதிரைகள் ஓடிய பாதைகளில் சாணவாசனை பெருகியது. வஸ்திர வணிகர்களின் பொதியேற்றிய கழுதைகள் சில நனைந்து சென்றுகொண்டிருந்தன. குறுகிய வீடுகளையும், கல்பாவிய தெருக்களையும் கடந்து வந்தபோது யசன் தன் தலை தூக்கி அந்தத் தெருவின் வரிசை மாறாத வீடுகளையும் செம்மஞ்சள் நிறமான முகப்பையும் கண்டபடி நடந்து கொண்டிருந்தான். பெண் குரலும் பால் கவிச்சியும் கொண்ட வீதிகளில் அவர்கள் நடந்தபோது பலரும் நதியைக் கடந்துவிட அவசரமாக முன் சென்றுகொண்டிருந்தனர். வானம் கரு வளையமிட்டு நீண்டது. தொலைவினின்று பறந்து திரும்பும் பறவை குளிர்ந்த இறக்கைகளுடன் தொடர்ச்சியாக முடிவற்றுப் பெய்யும் மழையைக் கண்டதாகத் தலை சிலுப்பி இறங்கிக் கல்சுவரில் நின்று, கால் நடுங்கி, உடலசைத்துப் பறந்ததைக் கண்ட ஒரு பிக்கு தூரத்தொலைவு வரை மழை பீடித்து நீள்வதை உணர்ந்தான். பகலில்கூட இருட்டுத் திட்டுகளாகப் பரவ வீட்டு அறைகளில் எண்ணெய் விளக்கேற்றிப் பெண்கள் நடந்தனர். உபானந்தர் பின் திரும்பிப் பார்க்காமலே நடந்தார். மணல் தெருவெங்கும் ஊர்ந்து பரவிக்கொண்டிருந்தது. காதுகளை முகத்தில் அடித்தபடி நாயொன்று அவர்கள் முன்பாக நதிநோக்கி ஓடிக்கொண்டிருந்தது.

நெடுநாள்களுக்குப் பிறகு யசன் அந்தப் பாதைக்குத் திரும்பியிருந்தான். இன்னமும் ஒரு தெரு தாண்டிவிட்டால் படிகள் கிளைத்து நதி நோக்கி மேலேறிச் செல்லும் என நினைவு முந்த நடை பின் சென்றபோது படிகளில் குரங்கோடு சாப்பிடும் மனிதன் இவர்களைக் கண்டதும் தானே சிரித்துக்கொண்டான். மழையின் தெறிப்புக் கொண்ட குரங்கு வெகு அழகாக இருந்தது. பிக்குகளில் ஒருவன் குரங்கின் முகத்தைச் சில கணங்கள் பார்த்துக் கலைந்தான். நதிக்கரையெங்கும் காத்துக்கொண்டிருந்த பயணிகளின் முகங்கள் தென்பட்டன. தொலைவு தெரியாமல் மழை நதியின் மீது பெய்து கொண்டிருந்தது. ஓடக்காரர்களையும் நதியோரத்தின் படிகளில் அமர்ந்திருக்கும் ரோகிகளையும் காணவில்லை. படகோட்டமற்ற நதியில் நீர் புரண்டு திமிற, பேரோசை இடித்து மேகம் கலைய மழை கனத்துப் பெய்யத் தொடங்கியது. நிமிர்ந்த தன் முகத்தில் நடனமிட்ட மழைத் துளியால் புன்னகை கொண்ட உபானந்தர் சக துறவிகளைக் காத்திருக்கச் சொன்னார். யசன் அந்த நதியைப் பார்த்தபடியே இருந்தான். நீண்ட உடலை அலைக்கழித்தபடி நதி முன் போய்க்கொண்டேயிருந்தது. முன்பு பலமுறை பார்த்தறிந்தபோதும் முன் கண்டிராதது

போல நதியைப் பார்த்துக்கொண்டேயிருந்தான். மற்ற பிக்குகள் கல் மண்டபங்களுக்குள் சென்ற பிறகும் யசன் மட்டும் நதிக்குள் மெல்ல மணல் விலக்கி நடந்தான். காலடி அருகே வந்து திரும்பவும் நதியில் சுருள் கண்களைப் போலக் குமிழ்கள் சுழித்துக்கொண்டிருந்தன. பின்னால் யாரோ அழைப்பதைக் கேட்க மனமற்றவனாக அவன் குனிந்து நதியின் செவியருகே தன் மென்குரலில் சொன்னான்,

"வாலீசா.. திரும்பவும் வந்திருக்கிறேன்."

நதி அவன் குரலோசைக்குச் செவி சாய்த்தது போல சரிந்து பின் சென்று புரண்டது. யசனின் விரல்கள் நதியைத் தீண்டின. பல வருஷங்களுக்குப் பின்பாக நெருக்கமான மனிதனின் விரலைப் பற்றியது போல ஏதோ உணர்வு உடம்பெங்கும் பற்றிக்கொள்ள நதிநீரில் தன் விரலை அலையவிட்டான். இறுக்கமாகப் பற்றி விட நதி துடித்ததுபோல விரலிடை கடந்தது. தானறியாமல் யசன் மெல்ல விம்முதலின் துடிப்பை உணர்ந்தான். மழை நீண்டு விட்டது. இனி இருபத்தியொரு நாள்கள் நதியின் முகம் பார்த்துக் காத்திருக்க வேண்டியதுதான் என்ற எண்ணமே யசனுக்கு பிரியம் தருவதாக இருந்தது. அன்றைக்குரிய பகல் கலைந்து இருளின் பிசுப்பு பற்றிக் கொண்டது. புலப்படாத வெளியில் எவரெவரோ நடந்து அலைந்து கொண்டிருந்தனர். நதியின் முன்பான கல் மண்டபத்தில் ஐந்து பிக்குகளும் காத்திருந்தனர்.

3

உலர்ந்த கோடையில், உள்ளங்கையின் ரேகை போல மெலிந்து ஓடிக்கொண்டிருந்த நதியைத்தான் முதலாக யசன் தன் தாயின் நிழலில் நடந்தபடி கண்டான். மட்டக்குதிரைகளும் பசுக்களும் கடந்து போய்க்கொண்டிருந்த மணல் திட்டுகளின் ஊடே சிறிய நீரோட்டமிருந்தது. சிறுவனான யசன் வாத்துகளின் சப்தத்தால் வசீகரிக்கப்பட்டவனாக நதியில் அலைந்து திரிவான். எப்போதும் பயணிகளின் பேச்சொலியும், விலங்கினங்களின் மணியோசையும் கேட்டுப் பழகிய நதி கோடையிலும் அழகாகவே இருக்கும். யசனின் ஊரில் குறைந்த வீடுகளே இருந்தன. ஊரைச் சுற்றி அரைவட்டமிட்டு ஓடிச் சுழித்தது நதி. ஊரில் எப்போதும் குறுமணல்கள் தெருவெங்கும் நிரம்பின. யசனின் தாய் ஒரு நாளில் அந்த நதியைக் காட்டி இது வாலீசனெனச் சொன்னாள்.

எப்போதோ முன்பு துஷ்டத்தின் ரூபமாக அலைந்த வாலீசன் என்பவனே இந்நதியென்றும், அந்நாள்களில் இந்தப் பகுதியெங்கும் நடமாட்டமற்றுப் போயிருந்தது எனக் கொண்ட நினைவில் வாலீசன் மிக உயரமாகவும் வெட்டுப் புருவமும் அகன்ற முகமும் கொண்டிருந் தான். தனித்துப் பயணிப்பவர்களையும் சௌந்தர்யம் கூடிய பெண் களையும் அடையும் வேட்கை தீராத அவன் எந்த ஆயுதமும் கை

வசம் கொள்ளாத சுத்த வீரனாக இருந்தான். அவன் விரல் பலத்தில் நெருக்குண்டு முறிந்த குரல்வளைகளில் குரல்கள் துண்டித்து ரத்தம் பூத்தன. அவன் குடிவெறியேறித் தனித்தலைவான்.

பயத்தின் விதைகளை எங்கும் தூவிச் சென்ற அவன் பாதைகளில் எவரும் கடக்கவும் பயந்தனர். வாலீசன் அலைந்துகொண்டேயிருந்தான். எங்கும் ரத்தவாசமும் சாவின் ஓசையும் பெருக்கியபடி அவன் சென்ற பக்கமெங்கும் துயரக் குரல் நீண்டது. ருது எய்திய பெண்கள் மூடிய அறைகளுக்குள் விளக்கின் சுடரைப் போலத் தனித்துப் பயந்து அலைவு கொண்டிருந்தனர். வாலீசன் எந்தத் தெருவிலும் தோன்றுவதும் கலைவதுமாக இருப்பான். பிடிப்பதற்காக அலைந்த காவல் வீரர் எவரும் அவன் கால் தடம்கூடக் காண முடிந்ததில்லை. வெயில் படர்ந்த நாளில் தன் பசுங்கன்றை ஓட்டியபடி வந்த ஆய கன்னியொருத்தி முன்பாக எதிர்நின்று அவன் கோபம் கொண்டபோது அவள் சிரிப்பை உதிர்த்துவிட்டு அவனைச் சட்டை செய்யாது கலைந்து போகவே, அந்த உதட்டுச் சுழிப்பின் வசீகரத்தில் அவளைப் போகவிட்டபடியே நின்ற வாலீசன் அன்றிரவில் குடித்துவிட்டு அவளைப் போலவே புன்னகைத்துப் பார்த்துப் பார்த்து இயலாது தோற்றுப்போனான். பின்நாளில் அவள் நடமாடும் பாதையில் நின்றபடி நாவை ருசித்துச் சுவைகாட்டி நிற்பான். அவன் செய்கை எதுவும் அவளைக் கோபம் கொள்ளச் செய்யவில்லை.

அவள் ஏதோ யோசனையில் யாவும் மறந்தவளாகப் போவதும் வருவதுமாக இருந்தாள். அவள் தன் மீது கோபப்பட வேண்டுமென வாலீசன் மிகவும் விரும்பினான். அவன் பாதையில் படுத்து கால் மீது கால் போட்டு அசைத்தபடியிருப்பதையோ, விருட்சமறைவில் இருந்து விகாரமாகி எதிர்ப்படுவதையோ கண்டு அவள் நடுக்கம் கொள்ளவில்லை. சில இரவில் அவளைக் கொன்றுவிடலாமா என மூர்க்கமாக நினைப்பான். அவளைப் பற்ற முடியாதபடி தன்னை விலக்குவது எது எனத் தன் மீதே கோபம் கொள்வான். அவன் வேட்கை ததும்பிக்கொண்டே வந்தது. ஒரு மாலையில் இரு ஆட்டுக் குட்டிகளோடு வந்த அவள் முன் நின்று வழியை மறித்தான். அவள் நிமிர்ந்து பார்க்காமலே சொன்னாள்,

"நான் திரும்பி வரும்வரை இங்கேயே நிற்க முடியுமானால், இப்போது வழியை விடு."

வழிவிட்டு விலகி நின்றான். ஆட்டுக்குட்டிகளின் துள்ளோட்டத்தோடு வீடு போனாள் இடையப் பெண். அதே பாதையில் வந்தவர்கள் அருகாமை வந்ததும் வாலீசனைக் கண்டு பயந்தவர்களாகக் குரலிட்டு ஓடியபோதும் அவன் நின்றுகொண்டே இருந்தான். எவரையும் நிமிர்ந்து பார்க்க மனமற்றவனாக இமைகளை இறுக்கியபடி அவள் திரும்புதலுக்காகக் காத்து நின்றான். எங்கிருந்தோ வந்த காவல் வீரர்கள் அவன் கைகளைப் பிணைத்துக் கூட்டிப்போகும் நாள் வரை அவள் வரவேயில்லை. அவன் நாவறட்சியும் தாகமும் கூடிய

வனாக எதையோ முணுமுணுத்தபடி கிராமத் தெருக்களில் அழைத்துச் செல்லப்பட்டான். தொலைவில் இருந்த பாறைகளின் புடவொன்றில் கைகால் பிணைக்கப்பட்டு அமர்ந்த கோலத்தில் பாறையால் மூடப் பட்ட அவனை மறு கோடையில் பாறை விலக்கிக் கண்டபோது சரீரம் அழிந்து எலும்புகளின் அமர்வு கண்டனர். அவன் எலும்புகளை அகற்றிய வீரர்கள் கால் பெருவிரலை அகற்ற முடியாது பற்றி இழுக்க, பெருவிரல் முனை குழியாகி அதன் குழிவினின்று பீறிட்ட நீர் பெருகி அடித்துப் போகத் தன்னிஷ்டம் போல ஓடி அலையும் நதியாகிப் போனான் வாலீசன் என்றார்கள். அம்மாவின் கண்கள் இந்த நினைவில் திரைத்துக் கசியும். அவள் பயந்த குரலில் சொல்வாள்,

"இது கள்வனின் நதி."

அந்த நதிதான் வாலீசனெனத் தெரிந்த நாளில் இருந்து யசன் ஏனோ பரவசமும் பயமும் கொண்டவனாக நதியின் ஊடே அலைந்து வருவான். வாலீசனின் ஏக்கம் அவனையும் பற்றிக் கொள்ளும். வாலீசன் மூர்க்கம் தணியாது இருப்பதை ஒரு மழைக் காலத்தில் கண்டான். பெருஞ்சீற்றமும் துடியுமாக நதி சுழித்தோடிக்கொண்டிருந் தது. எதிர்ப்பட்ட மனிதர்கள், பசுக்கள், பெண்கள் யாவரையும் தன் வன்மத்தில் சாய்த்து ஓடியது. குடிவெறியேறின மனிதனின் மன வேகம் பற்றிய நதியாக உருக்கொண்டிருந்தது. அவன் நதியோடும் போக்கின் இரவினுள் அமர்ந்திருப்பான். வெளிச்சம் கடக்க முடியாத இருள். அவனுக்குப் பன்னிரண்டு வயதானபோது நதியின் படி இருளில் இருவர் பேசிக்கொள்வதைக் கேட்டான்.

"வாலீசனின் உந்தி மேட்டில்தான் நம் ஊர் இருக்கிறது."

"உந்தி சுழித்து முடிச்சிட்டுக்கொள்ளும் எனப் பயப்படுகிறாயா?"

"வாலீசன் எதையும் மறக்கக்கூடியவனல்ல."

அந்தக் குரல்கள் காற்றில் புதைந்துபோன பிறகு வீடு திரும்பிய யசன் தாயிடம் நடந்ததைச் சொன்னான்.

"தனக்குரியவள் இதே ஊரில் பிறந்து ருது எய்துவாள் என வாலீசன் காத்திருக்கிறான். அப்பெண் ருதுவான நாளில் உந்தி சுழித்துவிடுமாம். சொல்கிறார்கள்."

அம்மாவின் இந்தக் குரலோசை அவனுக்குள் கற்பனையின் மீளாத சிற்குகளை விரியச் செய்தன. ஊரில் சுற்றிக்கொண்டிருக்கும் இடையப் பெண்களில் பலரையும் அவன் வாலீசனின் மணப்பெண் ணாக இருக்கக்கூடுமோ எனப் பார்த்துக் கடப்பான். நீடித்த ஒரு மழைக் காலத்தின் முன் இரவில் அம்மா பசுக்களின் குரலும், வீரியமான மழைத்துளியோசையும் கண்டவளாகச் சொன்னாள்,

"யசா... இன்று மழையின் கண்கள் ரௌத்திரம் கொண்டுள்ளது. எங்கோ வாலீசனுக்குரியவள் ருது எய்திவிட்டாள்."

இரவும் பகலும் தொடர்ந்த மழையில், நதியோட்டம் கூடியது. தங்கைகளும் வயதான மூத்தோர்களுமாக யசன் மழையோடு அந்த

ஊரைப் பிரிந்து தொலைதூர ஊர் நோக்கிச் சென்றான். அவன் போகும்போது தங்கைகளில் ஒருத்தி நதியில் பாலின் வாசனை பெருகுவதாகக் கிசுகிசுத்தாள். பெண்களாகச் சிரித்துக் கொண்டார்கள். ஆனால் கோபமுற்ற மனிதனின் மூச்சைப் போல உரத்த சுழிச்சப்தம் கேட்டுக்கொண்டேயிருப்பதாக யசன் உணர்ந்தான். அவர்களைப் போலவே இரவின் ஊடாகவே பலரும் ஊரைப் பிரிந்தனர். தீராத மழையின் மூன்றாம் நாளில் உந்தி சுழித்துக்கொண்டதாகி ஊரே நதியின் அடியில் சென்று சேகரமாகிவிட்டது. வாலீசனுக்குரியவளும் பசுக்களும் நடமாட்டம் ஓய்ந்த தெருக்களும் நீரினுள் சென்று அடங்கிவிட்டன. மீதமிருந்த தன் தாயின் வீடும் மனிதர்களும் ஊரைப் பிரியாத வயதானவர்களும் நதியினுள் சென்று மறைந்தனர். பின் ஒருபோதும் அந்த நதி அத்தனை பெருக்கு கொள்ளவேயில்லை. ஊர் இருந்ததின் அடையாளமற்று நதி ஓடிக்கொண்டிருந்தது. யசன் வளர்ந்து வாலிபனாகி, பல முறை இதே நதியைக் கடந்தபோதும் பால்யத்தில் மறைந்த காட்சிகளின் மயக்கம் தீரவேயில்லை. நதி ஒரு மோதிரம் போல, தன் விரலைச் சுற்றி மட்டுமே வளையமிட்டுச் சுழன்றுகொண்டிருப்பதாகவே யசனுக்கு இன்று வரை தெரிகிறது. புலப்படாத எத்தனையோ மனிதர்களும் நாய்களும் பசுக்கூட்டமும் அடங்கிய தன் சொரூபம் தெரியவிடாது நதி மழையின் ஊடாகவே கடந்து போய்க்கொண்டே இருந்தது.

3

மங்கிய பந்த வெளிச்சத்தோடு எவரோ நதியின் முகம் கண்டு வருகிறார்கள் பயணிகளின் குரல்கள் கேட்கின்றன. இருளில் தனித்துவிடப்பட்ட குதிரைகளின் மூச்சொலிகள் படர்கின்றன. யாவரையும் மயக்கம் கொள்ளச் செய்துவிடும் தொன்மையான இரவு விரிந்துகொண்டேயிருக்கிறது. அபூர்வமான வாசனை கொண்டதொரு இருளில் அமிழ்ந்தபடி யசன் கல்படியொன்றில் கைகளைக் காலில் கட்டியபடி அமர்ந்திருந்தான். தொலைவில் முனங்கும் ரோகியைப் போல ஏதோ சப்தம் பிறந்து கொண்டிருக்கிறது. பிக்குகளும் உறங்கியிருந்தனர். கனவின் நெடிய கிளைகள் விரிந்து எங்கும் பூக்கத் தொடங்கி இருந்தன. மழையின் சீற்றம் கூடிக்கொண்டே வந்தது. காற்றில்லாத பெருவெளியில் மழையின் நடமாட்டம் கூடி அலைந்தது. யசன் ஈரம் தெறித்த உடலோடிருந்தான். துவராடைகள் குளிர்ந்திருந்தன. அவன் கண்கள் இருளைக் கீறி நதியோட்டத்தினைக் கண்டுகொண்டிருந்தன. அவன் தியானத்தின் அடிமுகத்தில் சாய்வு கொண்டவன் போல லயித்துப்போயிருந்தான்.

தொலைதூர மரங்களின் பசுமைச் சாற்றின் வாசமும், கழுதைச் சாண நெடியும் பரவிய அந்த இருளில் யசன் கண்கள் எதையோ தேடிக்கொண்டிருந்தன. ஒரு பொறி போலப் பச்சையொளியொன்று

மினுக்கி மினுக்கி மறைந்தது. யசன் அந்த மேல்லொளியைக் கண்டதும் விழித்துக்கொண்டவனைப் போலத் தலையைத் தூக்கிப் பார்த்தான். அந்தப் பச்சை மினுக்கம் விட்டு விட்டு ஆங்காங்கே தெரியத் தொடங்கியது. மழைத்துளியின் ஊடாக அந்த வெளிச்சம் நகர்ந்து கொண்டே இருந்தது. யசன் பார்த்துக்கொண்டிருக்கும்போதே ஒரு பசுவின் முகமும் நாவும் பாதி நீரில் அமிழ்ந்து தெரிந்தன. வியப்படைந்த வன் போல எழுந்து நின்று பார்த்தான். நாவு புரளும் சப்தத்தோடு பசுவொன்று நதியின் எதிர்த் திசையில் நகர்ந்து சென்றுகொண்டிருந்தது. அதன் கயிற்றைப் பற்றியபடி சங்குப் புஷ்பம் சூடிய பெண்ணொருத்தி பாதி உடல் நீரில் அமிழ்ந்திருக்கப் போய்க் கொண்டிருந்தாள். அவள் பின்னால் அதைப் போலவே சில பெண்கள். எவர் தலையில் இருந்தோ சங்குப்பூ உதிரும் ஓசை. வாலீசனுக்குரியவள்தான் கடந்து போகிறாள் என மயக்கம் கொண்டவனாக அருகாமைக்குப் போனான்.

ஆங்காங்கே உருவங்கள் தோன்றி எதிர்த் திசையில் போய்க் கொண்டிருந்தன. திருமண ஊர்வலம் போன்றதொரு ஜனக் கூட்டமும் அவர்கள் தலையில் தானியம் நிரம்பிய நார்க் கூடைகளும் பூக்களும் மஞ்சளுமாகப் போய்க்கொண்டிருந்தனர். யாவர் ஊடாகவும் மழை பெய்துகொண்டிருந்தது. நதியினுள் போய்க்கொண்டிருக்கும் மனிதர் களை யசன் அறிந்திருந்தான். பின் திரும்பிப் பாராது போகும் அந்த மண ஊர்வலத்தின் ஊடே தன் தாயும் அத்தைகளும் சென்றனர். அவன் அவர்களைப் பெயர் சொல்லி அழைத்தபடி ஓடினான். எவரும் பின் திரும்பவில்லை. சிறுமிகளும், நோய் கண்டு மெலிந்த ஸ்திரி ஒருத்தியும்கூடச் சென்றுகொண்டிருந்தாள். வாலீ சனுக்கு உரியவளை அவனிடம் ஒப்படைக்கத்தான் போய்க்கொண்டு இருக்கிறார்களா? யசன் கைகளைத் தட்டி அழைத்தான். சிறு அகல்விளக்கு ஏந்திய பெண் கடைசியாகக் கடந்து போனாள். அவள் கையில் இருந்த விளக்கின் சுடர் அலைவு கொள்ளவேயில்லை. இருளில் திசை தெரியாது ஓடினான் யசன். பச்சையொளி தொலைவில் சென்று கலைந்தது.

அவன் கைவிடப்பட்ட சிறுவனைப் போலத் தன் தொண்டையில் துக்கம் பீறிட விசும்பினான். அவர்கள் போய்க்கொண்டிருக்கிறார்கள் என்ற நினைப்பே வேதனையை அதிகமாக்கியது. எதன் மீதோ மோதி வீழ்ந்தான். மழையின் தீவிரத்தில் எதுவும் புலப்படவில்லை. தொலைவில் பச்சை ஒளி விட்டு விட்டு அலைகிறது. எங்கோ கரையினின்று பிரிந்த பரிசலொன்று அவன் மீது மோதியிருந்தது. அவன் வாலீசனுக்குரியவளைக் கண்டுவிட ஆவல் கொண்டவனாக பரிசலை நதியின் எதிர்த் திசைக்கு ஓட்ட முயன்றான். மழை கண்களை மறைத்துப் பெய்துகொண்டிருந்தது. பரிசல் அலைந்து அலைந்து சென்றது. அவன் சென்றுகொண்டேயிருந்தான். விசித்திர மான ஏதோ பரப்பினுள் செல்வது போலிருந்தது. ஒரு சுருள் கொடி போல நதி வளைய வளையமாகச் சுற்றி ஒரே புள்ளியில் சுழன்றுகொண்டிருந்தது. யசன் தன் பரிசலில் அதன் அருகாமைக்கு

வந்தபோது பாதைகளைப் போல மிகச் சிறிய சாலையொன்றின் கிளை நீரின் மீதேறி விரிந்திருந்தது.

சாலையின் ஊடாகத் தன் பரிசலை ஓட்டினான். உள்வட்டமிட்டுச் சென்ற பாதையில் பரிசல் சென்றது. அதன் ஒரு வளைவில் சென்ற போது ஆச்சரியம் தாளாதவனாகக் கண்டான். மிகச் சிறிய ஊர் ஒன்று நதியின் மேலாக உருக்கொண்டு விரிந்திருந்தது. நீரின் மீது வரையப்பட்ட சித்திரம் போலிருந்த ஊரினூடே உயரமான வீடுகளும் திறந்த ஜன்னல்களும் வணிக வீதிகளும் விளக்குத் தூண்களுமாகவிருந் தன. எதிலும் சலனமேயில்லை. சால விருட்சங்கள் கிளைத்த பாதையொன்றில் கர்ப்பிணிப் பெண் தன் கையால் மரக்கிளை பற்றிக் கண்களை மூடியபடி உடல் நடுங்க நின்றிருந்தாள். சலனமற்ற நகரின் திறந்த ஜன்னல்களில் அமர்ந்த முகங்கள் அசைவு கொள்ளவே யில்லை. குதிரையின் வால் ஒன்று காற்றில் அலைவு கொண்டது போல உயர்ந்து நின்றது. இடப்பக்கம் திரும்பிய சுடரொன்று தலை திருப்பாமலே உறைந்திருந்தது. உறங்கிக்கொண்டிருந்த பெண்களின் முகத்தில் துயிலின் நிறம் ததும்புகிறது. உதிர்ந்த மலர்கள் தரைக்குத் திரும்பாமல் மிதந்தன. சலனமற்ற ஊரின் தெருக்களில் இயக்கத்தின் சுவடேயில்லை. யசன் கடந்து போய்க் கொண்டேயிருந்தான்.

யாவும் அசைவை மறந்த நிலையில் ஆழ்ந்திருந்தன. யாரோ குனிந்து அமர்ந்திருக்க, மழிக்கப்பட்ட சிகையின் சுருள்கேசம் சிதறிக் கிடந்தது. விசும்பும் பெண்ணின் கண்ணீர் ததும்பி இமையின் முடிவில் பூத்து நின்றது. யசன் கவனித்தபடி சென்றான். நீரின் பாதைகள் விரிவதும் சுருங்குவதுமாக இருந்து, ஒரு முனையில் மெல்லச் சுருங்கிச் சுருங்கி ஊசி முனை போன்ற இடைவெளியாகத் தெரிந்தது. அதனை நோக்கிப் போய்க் கொண்டிருந்த பரிசலில் இருந்து உரத்துப் பயத்தால் கத்தினான். மிகச் சிறிய ஊசிப் பிளவு இடைவெளி முன்பாக நீரினின்று எழுந்த முதலையொன்று தன் வாலாட்டியபடி பற்களைக் காட்டியபடி ஊசியின் முகத்துவாரத்தினுள் புகுந்து வெளியேறியது. யசன் பின்தொடரும்போது முதலை வால் அசைப்பில் தெறித்த நீர் முகத்தில் சிதறி வீசக் குரலிட்டான். சலனமற்ற நகரை விட்டு ஒரேயொரு முதலை மட்டும் வெளியேறிப் போனது. யசன் வீழ்ந்திருந்தான்.

பரிசலில் ஊசிமுனையருகே வந்தபோது அதன் பிரமாண்டம் பெரும் குகையென விரிந்து இடைவெளி கொண்டிருந்தது. அதைக் கடக்கும்போது எதிலோ மோதி சமன் குலைந்து சரிந்த போது அவன் குரல் கொடுக்கவும் முடியவில்லை. வார்த்தைகள் உடைந்து குரல் துண்டுபட்டது. கண்களைத் திறக்க முடியவில்லை. இமைகள் தாழ்ந்து கொண்டன. விழித்தபோது அவனை இரு பிக்குகள் நாணல் புதரோரமிருந்து தூக்கி வந்ததாகப் பேசிக்கொண்டிருந்தனர். அவன் முன்பாக மற்ற பிக்குகள் அமர்ந்திருந்தனர். கண்கள் செம்பழுப்பு நிறமாகி இருந்தன. அவன் உதடுகளைத் திறக்க முடியவில்லை.

உபானந்தர் அவன் விழிகளைப் பார்த்துவிட்டுச் சொன்னார்,

“கடந்த காலத்தின் மயக்கம் பீடித்த கண்கள்.”

பிக்குகளில் ஒருவன் குதிரைச் சாணத்தால் யசனின் நெற்றியில் பத்துப் போட்டுக்கொண்டேயிருந்தான். அப்போதும் மழை விட்டு விடவில்லை. புலரியின் காட்சிகள் எப்போதும் வசீகரம் ததும்பியே இருக்கின்றன. மறுகரை நோக்கிப் பயணிக்கும் யாத்ரீகர்கள் விடாத மழையில் காத்திருக்கின்றனர். திரிசடை கொண்ட கௌபீன சாதுக்களின் கூட்டமொன்று நதியின் ஓட்டத்தில் மூழ்கிக் குளித்துக் கொண்டிருந்தது. எங்கிருந்தோ வந்திருந்த பல்லக்குகளில் அமர்ந்த கணிகைகள் சிரிப்பொலி எழுப்பினர். மான்குட்டியோடு வந்த கணிகையொருத்தியின் பார்வை நதியைத் தன் கண்களால் பருகியது. இரு ரோகிகள் பெண்களின் மிருது கண்டவர்களாக நாக்கைச் சுழற்றிச் சப்புக் கொட்டினர். நதியின் நிறம் மாறிக்கொண்டே இருந்தது. மங்கிய வெளிச்சம் பிறந்த நாளாக இருந்ததில் உபானந்தர் மட்டும் தனியே ஒரு இடிபாடுள்ள கல்மண்டபத்தில் நின்று கொண்டிருந்தார். யசன் எழுந்துகொண்டு மயக்கம் குலைவு கொண்ட இரவைக் கடந்து போனவனாக உபானந்தரோடு பேசவிருப்பமுற்று அருகாமைக்குச் சென்றான். அவனைக் கண்டதும் உபானந்தர் கைகளை விரிந்து நெருங்கி வரச் சொன்னார். அவர் முகத்தில் சாந்தம் ததும்பியது. அவன் தோளைப் பற்றியபடி மெதுவான குரலில் கேட்டார்,

“நேற்றிலிருந்து இந்த நதியிடம் என்னதான் பார்த்துக் கொண்டிருக்கிறாய் யசா .?”

“கடக்க முடியாத இந்த நதியின் உள்ளே புதையுற்ற காட்சிகள் என் மீது பற்றி எரிகின்றன.”

“என்ன தெரிகிறது?”

“என் பால்யம் இந்த நதியின் அடியில் ஓடிக்கொண்டிருக்கிறது. நான் பால்யத்தைக் கடந்து போக முடியாதவனாகக் காத்திருக்கிறேன். இது என் பால்ய நதி.”

அவர் நிமிர்ந்து யசன் கண்களைப் பார்த்தபடி கேட்டார்,

“பால்யத்தின் கரைகளில் அமர்ந்து பார்ப்பதுதானென்ன?”

“வேதனை, துக்கம், மனம் துவளும் காட்சிகள்.”

யசன் முகத்தில் படர்ந்த வேதனையின் துல்லியம் கண்டவராக உபானந்தர் அவனை நோக்கிச் சொன்னார்,

“நினைவுகளின் நடனச்சாலையிலே சுழன்றுகொண்டிருக்கிறாய் யசா.”

யசன் அவரைப் பார்க்காமலேயே பதில் பேசினான்,

“விடாத மழையைப் போலவே பால்யத்தின் துளிகள் எப்போதும் பெய்தபடி இருக்கின்றன எனக்குள். கடந்த காலத்தின் காட்சிகள்

என்னைக் கைப்பற்றி இழுக்கின்றன. நான் சரிந்துகொண்டே இருக்கிறேன்.”

அவர்களின் பேச்சொலியை மீறி மழை பெய்யத் தொடங்கியது. இருவரும் மீண்டும் நிசப்தம் கொண்டனர். தொலைவில் எவரோ நடமாடி அலையும் காட்சிகள் தென்படத் தொடங்கின. உபானந்தர் தானும் மழையினைக் கவனிக்கத் தொடங்கினார். வாலீசனின் அடிவயிறு விம்மிக்கொண்டேயிருந்தது. யசன் மழையின் பாதையிலே இறங்கி நடக்கத் தொடங்கினான். படகோட்டிகளின் தனிமை விரிந்த பகுதிகளைக் கடந்து சென்றான். நதி தன் பாதை மாறித் திரும்பும் ஒரு மூலைக்கு வந்தபோது கரிய பாறைக் கூட்டங்கள் தொலைவில் தெரிந்தன. அவன் பாறைகளைக் கண்டவனாக நின்றுகொண்டிருந்த போது மறு கரையில் ஓர் ஓநாய் நதியின் அருகாமைக்கு வந்து நின்று தலையை உயர்த்தியது. அந்த ஓநாயைக் கண்டதுமே அவன் தெரிந்துகொண்டான். அதன் செம்மஞ்சள் கொண்ட உடலும் பயமற்ற கண்களும் அது ஓநாயல்ல; ஓநாய் வடிவம் கொண்டிருந்த போதும் அதுவும் ஒரு பிக்குவே என நினைவு பீறிட்டபோது அவனறியாமல் அதை நோக்கிச் சரணம் செய்தான். அது நிமிர்ந்து சப்த திசை நோக்கியது. அவன் ஓநாயைப் பார்த்துக் கூப்பிட்டான்,

“திரிதரே. . .

ஓநாய் அதைக் கேட்டதுபோலப் பாறையின் மீதேறி நின்றது. பின் அது ஓடி மறையத் தொடங்கியது. யசன் தொலைவைப் பார்த்து சப்தமிட்டான்.

“திரிதரே.

மழை எதையும் கடக்க அனுமதிக்காமல் வலுத்தது. யசன் நிசப்தத்தினுள் ஒடுங்கினான். வாலிபத்தின் துடிப்பேறிய நாள்களில் அவன் பெண்களை அறிந்துகொண்டேயிருந்தான். இடைவிடாத மதுவின் சுவையும் பெண்களின் உடல் நெருக்கமும் யசனைச் சுற்றிக்கொண்டேயிருந்தன. அவன் உறங்குவதைக்கூட வெறுப்பாகவே உணர்ந்தான். போகத்தின் சாறு எந்த நேரமும் தனக்குள் ஓடிக் கொண்டேயிருக்க வேண்டும் என ஆசைப்பட்டான். உடலின் எண்ணற்ற கண்கள் சதா இச்சையால் மூடித் திறக்கும் உணர்வு வேண்டியதாகவே இருந்தன. தன் படுக்கையினுள் கேசம் கலைய நிர்வாணித்த பெண்ணின் உடல் ஒரு நதியாகவே தென்பட்டது. அதன் வலிய நீரோட்டத்தில் மயிலிறகால் ஆன படகில் கடப்பது போன்றதாகக் காமம் பீறிட்டது. யசன் வேறு எதையும் அறியவே யில்லை. ஒரு பின்னிரவில் யசன் விழிப்படைந்தபோது உறங்கிக்கொண் டிருக்கும் யாவர் துயிலிலும் துக்கத்தின், வேதனையின் பேரலையை வெளியே வீசிக்கொண்டிருப்பதைக் கண்டான். காலத்தின் திறந்த வாய்களுக்குள் படுத்து எழுந்து கொள்கிறோமா என நடுக்கமுற்றான். மரணத்தின் நெருக்கமான விரலசைவு தென்பட்டது. ஒரு நிமிஷம் எல்லாமும் மீட்க முடியாத, திரும்ப முடியாத காட்சிகளாகவே

இருப்பதன் மர்மமும் வேதனையும் பற்றியது.

அவன் அறையின் தூண்டப்படாத விளக்கின் சிறுசுடர் முன் வந்து நின்றான். யாவும் கண்டதாக சுடர் அசைந்துகொண்டேயிருந்தது. யசன் தன் குதிரை லாயத்துக்கு வந்தான். மனம் இயல்பைவிட அதிகத் துக்கமேறியிருந்தது. குதிரை லாயத்தை விட்டு வெளியேறி நடந்தான். விடியற்காலை வரை அவன் நடந்தபோது பிக்குகளின் கூட்டமொன்றைக் கண்டான். அவர்கள் ஏதோ கிராமம் நோக்கிப் போய்க்கொண்டிருந்தனர். அவன் அவர்களை அழைத்தான். அவர்கள் போதையில் பீடித்த அவனைக் கண்டவர்களாக தங்கள் வழியிலே போயினர். அவன் காத்து நின்றபோது அவனைவிடவும் பருத்த இமை கொண்ட, முரட்டு முகபாவம் கொண்ட ஒரு பிக்கு தனியே வந்துகொண்டிருந்தார். அவரை யசன் அழைக்கவேயில்லை. ஆனால் அவர் யசன் அருகே வந்து சொன்னார், "என்னோடு வருவதற்காகத் தானே காத்திருக்கிறாய்? நட. நட.! என்றார். அவன் பதில் பேசாது உடன் நடந்தான்.

பருத்த உடலும் குள்ள உருவமுமான அவர் முரட்டு மனிதனாகவே இருந்தார். தலை மழிக்கப்பட்டிருந்ததால் உருவம் மிகுந்த மூர்க்க மாகவே தெரிந்தது. பிக்குகள் அதிகம் நடந்தலையாத காலமது. இருவரும் சுற்றியலைந்தனர். பூர்ணிமை நாள் ஒன்றில் அவனையும் பிக்குவாக்கினார் திரிதர். இருவரும் வனவெளியில் சுற்றியலைந்தனர். காற்று மட்டும் நடந்தலையும் பாதைகளில் அவர்கள் பயணித்தனர். திரிதர் எதையும் போதிக்காதபோதும் அவர் இருப்பே யசனுக்குப் போதுமானதாக இருந்தது. ஒரு கோடையில் உலர்ந்த மரங்கள் கொண்ட பெருவெளியின் ஊடாக அவர்கள் நடந்தபோது எங் கிருந்தோ ஓநாய்களின் கூட்டமொன்று இரைச்சலிட்டு வரும் சப்தம் கேட்டான் யசன். ஏதாவது மறைவில் ஒளிந்துவிடலாம் என யசன் எத்தனிக்கத் திரிதர் நகர்ந்து போகாமல் நின்று கொண்டேயிருந்தார்.

ஓநாய்கள் நெருங்கி வந்து பெருமூச்சிட்டு நின்றன. திரிதர் நடந்து முன் சென்றார். ஓநாய்கள் நெடும் தூரம் அலைந்து வந்திருக்க வேண்டும். ஓநாய்களின் மெலிந்த உடலும் பல்லும் துடித்துக் கொண்டிருந்தன. பசியின் வன்மம் நிரம்பிய ஓநாய்களின் கண்களைக் கண்டார். தன் ஆடைகளைக் களைந்து அவர் ஓர் ஓநாயின் முன்பாக நின்றுகொண்டு அதனைப் பார்த்து சாந்தமான குரலில் சொன்னார்: "நானே உன் பசிக்குரியதாகிறேன்." அவர் உடல் பருத்துச் சதைகள் தொங்கின. ஓநாய்க் கூட்டத்தினின்று மெலிந்த ஓநாய் ஒன்று தன் பசியின் தீவிரத்தில் அவர் மீது தாவியது. யசன் பார்த்துக் கொண்டிருக் கும்போதே அவரைத் தன் பற்களால் கிழித்துப் புசிக்கத் தொடங்கியது. சிதறிய ரத்தமும் கறிகளுமாக உடல் பிரிந்தது. யசன் கூக்குரலிட்டான். மற்ற ஓநாய்கள் நெருங்காது விலகி ஓடின. பிக்குவைப் புசித்த ஓநாய் மிக வேகமாக உண்டு நிமிர்ந்தது. அறுபட்ட காது மட்டும் தனித்துக் கிடக்க, ஓநாய் நாவைச் சுழற்றி யசனை எதிர்நின்று

பார்த்தது. திரிதரைப் புசித்த ஓநாய் உணவாசையை முடித்துக் கொண்டபின் அதன் கண்கள் மினுங்கின. அந்த ஓநாய் தன் கூட்டத்தின் பாதை விலக்கித் தனியே ஓடத் தொடங்கியது.

தன் முன் நடந்தேறிய காட்சியின் அடுக்குகள் கலைந்தும் சேர்ந்தும் அவனுக்குள் உருக்கொண்டபடியே இருந்தன. ஓநாய் போனபிறகு மிஞ்சிய நகங்களையும், உடல் துண்டுகளையும் கண்டு துக்கித்தவனாக அவனும் விலகி ஓடினான். அந்த இரவில் நிர்வாணித்த பருத்த உடல், ஓநாயின் முன் நின்று தன்னை ருசிக்கத் தந்ததின் ஞாபகம் விரிந்துகொண்டேயிருந்தது. தனக்கு வழிகாட்டியான திரிதரை இழந்ததின் துயரம் பீறிடக் கிடந்தான். செய்வதறியாது பின்னாளில் சுற்றியலைந்தபோது தனித்த பாதையில் திரும்பி வரும் அந்த ஓநாயைப் பார்த்தான். அது மிக மெதுவாக நடந்தது. அவன் ஓநாயைக் கண்டபோது புலன் சரிந்து ஏதோ காட்சிகள் தெரிந்தன. ஓநாயின் உடலில் கால் மடக்கி திரிதபிக்கு படுத்திருப்பதைக் கண்டான். அது ஓநாயல்ல, ஓநாய் உடலில் உள்ள பிக்கு எனக் கண்டு வணங்கினான். ஓநாயின் உடல் நிறம் மஞ்சளோடியிருந்தது. அதன் அருகாமைக்குச் சென்றபோது அது விலகி ஓடவில்லை. உஷ்ணமாக மூச்சைத் தன் கையில் படியவிட்டுச் சென்றது. அவன் தன்னையும் ஓநாயின் முன்பாக ஒப்புவித்தான். அது யசன் உடலை ருசிக்கவில்லை. பார்த்துக்கொண்டேயிருந்தது. பின் அவன் எதிர்த்திசையில் நடந்து செல்லத் தொடங்கியது. யசன் அந்த ஓநாயே தன் குருவெனப் பின் சென்றான்.

வனவிருட்சங்களின் ஊடாகவும் சரிவுகளிலும் அவர்கள் போய்க் கொண்டிருந்தார்கள். ஓநாய் தண்ணீர் குடிப்பதைத் தவிர வேறு எதையும் புசிக்கவில்லை. அதனால் அதன் உடல் நீண்டு கொண்டே வந்தது. அது சப்தமிடுவதையும் நிறுத்திக் கொண்டது. எங்காவது அடிமரத்தின் கீழே இரவில் தங்கும் திரித ஓநாயும் அவனும் தொலை தூர நட்சத்திரங்களைக் கண்டபடி மௌனித்திருப்பார்கள். ஓநாய் நாளுக்கு நாள் மெலிந்துகொண்டே வந்தது. அதன் மூச்சு பேரொலியாக இருந்தது. ஒரு நாளில் அவன் உறங்கி விழிக்கும் முன்பாக ஓநாய் அவனைப் பிரிந்து எங்கோ சென்றிருந்தது. அதன் சுவடு பதிந்த பாதைகளில் தேடியலைந்தபோதுதான் அவன் உபானந்தரையும் மற்ற பிக்குகளையும் கண்டான். நீண்ட நாள்களாகத் தன் ஞாபகத்தில் மறைந்த ஓநாயை இன்று கண்டபோது அது வயதற்ற நிலையில் இருப்பதன் மர்மம் புரியாது, தன் குரலினைக் கேட்டும் நெருங்கி வராது போனதன் வருத்தம் கவிய திரிதரே, திரிதரே எனச் சொல்லிக்கொண்டேயிருந்தான். அன்றிரவில் பெய்த மழை எவரையும் பேச அனுமதிக்காது நிசப்திக்கச் செய்தது. முதிய சர்ப்பம் போல நதி தன் உடலை வளைத்துச் சென்று கொண்டேயிருந்தது.

4

மெல்ல மழை வெறித்திருந்தது. நாள்களின் தொடர்ச்சியில் காத்திருந்த பயணிகள் பொறுமையிழந்திருந்தனர். கையில் மானோடு வந்திருந்த கணிகை பிக்குகளைச் சந்தித்து ஆசி பெற்றுக் கொண்டிருந்தாள். யசன் கணிகையிடமிருந்து பிறந்த தைல வாசனையை நுகர்ந்தான். மயக்கமூட்டும் நெடி. கணிகை யசன் முன்பாக வந்து வணங்கினாள். அவள் குரலில் இச்சையின் வண்டுகள் ஒளிந்து சப்தமிட்டன.

"மழை விடுவதாகவேயில்லை. யாராலும் நதியைக் கடக்க முடியாதா?"

யசன் பதில் பேசாது வானத்தைக் காட்டினான். தூறலின் ஊடே குருவிகளின் படையொன்று நதியைக் கடந்து பறந்து சென்றது. குருவிகளின் பறத்தலைக் காட்டியபடி நீண்ட யசனின் விரலைப் பார்த்தபடி சொன்னாள்,

"நாமும் குருவிகளைப் போல நதியைக் கடந்து பறக்க முடியாதா?"

அவன் தன் மௌனம் கலைத்தவனாகச் சொன்னான்,

"குருவிகளுக்கு மலை, நதி என்று எதுவுமில்லை.

அதைக் கேட்டதும் அவள் பரிகாசமாகச் சொன்னாள்,

"அவை படகுக்காகக் காத்திருப்பதுமில்லை, நம்மைப் போல."

அவள் சிரிப்பொலி படர பல்லக்கு நோக்கிக் கடந்து போனாள். வாழ்வின் வேட்கையும் ருசியும் தன்னைச் சுற்றியலைவதையும், குழப்பத்தின் வெடிப்பு உடலெங்கும் பீறிடுவதையும் ஒருங்கே உணர்ந்தான். மழை வெறித்தபோது படகோட்டமில்லை. காத்திருப்பவர்கள் அதிகமாகிக்கொண்டேயிருந்தார்கள்.

5

மறுநாளின் மாலையில் மழை விட்டுவிட்டது. காற்று லேசாக ஈரத்துடன் வீசியது. எங்கிருந்தோ ரோகிகள் பலர் வந்து சேர்ந்திருந்தனர். அவர்கள் உடல் முழுவதும் ரணம் கொண்டவர்களாக இருந்தார்கள். அவர்களில் சில பெண்களும் இருந்தனர். நதிக்குள் இறங்கித் தங்களை சுத்தப்படுத்திக் கொண்டு மண் பூசிக்கொண்டனர். யசன் அவர்களை நோக்கிக் கேட்டான்,

"எங்கே போய்க்கொண்டிருக்கிறீர்கள்?"

"சாக்கியமுனியின் நிழல் அகலாத மரத்தைக் காண்பதற்காகப் போகிறோம்"

"நிழல் அகன்றுபோகாத மரத்தை முன் எப்போதாவது கண்டிருக்கிறீர்களா?"

ஒரு ரோகி சொன்னாள்,

“கண்டதேயில்லை; சாக்கியமுனி அமர்ந்த நிழல் அல்லவா, அது எப்படி விலகிப்போகும்? அந்த நிழல் ஒன்றே எங்களை சொஸ்தப்படுத்தும். நீங்கள் கண்டிருக்கிறீர்களா...”

யசன் சொன்னான்,

“பால்யத்தின் நிழல் ஒருபோதும் விலகிப்போவதில்லை. நான் பால்யத்தின் அடியில்தான் அமர்ந்திருக்கிறேன்”

ரோகிகள் தங்கள் தோல் கருவிகளை இசைத்துப் பாடத் தொடங்கினர். யசன் திரிதரை நினைவு கொண்டான். உற்சாகமாக ரோகிகள் பாடிக்கொண்டிருந்தனர். யசன் அவர்களோடு சேர்ந்து பாட விரும்பினான். ஆனாலும் அது இயலாமலேயிருந்தது. சாக்கியமுனியின் ஞாபகம் கவிந்தது. தான் ஒருபோதும் காண முடியாத அந்த மனிதனின் முகமும், கேட்டிராத அவர் பேச்சும் தேடி ஏக்கமும் கவிந்தது. சாக்கியமுனியின் தொலைவு அவனுக்குத் துக்கமாகவே யிருந்தது. நினைவுகள் சரிந்து பெருகின. அவன் அன்றிரவு மீண்டும் ஓநாய்களின் கூட்டம் ஒன்றைக் கண்டான். அந்தக் கூட்டம் நடமாட்டமற்ற பகுதியில் சீராக வந்தது. ஓநாய்களின் நடுவில் திரிதர் மட்டுமல்ல, சாக்கியமுனியும் ஒரு ஓநாயாக இருப்பதைக் கண்டான். அவன் ஓநாய்களை அழைத்தான்,

“திரிதரே.

இரு ஓநாய்கள் திரும்பின. அதன் பார்வையின் வசீகரம் தொற்ற அவன் கேட்டான்,

“என் கேள்விகளுக்கு பதில் இல்லையா....

பதில் வரவில்லை. அவனாகவே மறுபடியும் கேட்டான்.

“எது கடக்க முடியாத நதி. நினைவுகள்தானா?”

யாரும் பதில் தரவில்லை.

“பால்யம் சந்தோஷத்தின் நதியா, துக்கத்தின் நதியா.

ஓநாய்கள் திரும்பிக்கொண்டன. யசன் தன் பதிலற்ற கேள்விகளைக் களைந்தவனாக நதியினுள் இறங்கினான். நதி இன்று பேரமைதி கொண்டிருந்தது. அவன் வாலீசனின் ஸ்நேகம் மிகுந்த ஊடுருவலுக்கு உட்பட்டவனாக உள்ளே போய்க் கொண்டிருந்தான். மழை வெளியே பெய்தபோதும் நதியின் ஆழத்தினுள் சலனமே இல்லை. ஒரு சுடரைப் போல நதி அசைந்துகொண்டிருந்தது. தன் பிறப்புக்கு முன்பாகவே ஓடிக்கொண்டிருக்கும் அந்த நதியின் உள்ளே எவரெவர் மூச்சொலிகளோ கேட்டுக்கொண்டிருந்தன. யசனுக்குக் கண்களைத் திறக்க முடியவில்லை. ஆனால் அவன் உடல் யாவற்றையும் பார்த்துக்கொண்டிருந்தது. நதிநீர் சுருளினுள் சென்று யசன் பதுங்கிய மறுநாளின் காலையில் தங்களோடு வந்த யசன் என்னும் பிக்குவை எங்கிருந்தோ வந்த ஓநாய்கள் அடித்து இழுத்துச் சென்றுவிட்டதாக மற்ற பிக்குகள் தேடிக்கொண்டிருந்தார்கள். அப்போதும் மழை பெய்துகொண்டுதானிருந்தது.

கழுவேற்றம்

பனகல் சாலையில் பஸ் வளைந்து திரும்பும்போது சட்டென இறங்கிவிட்டான். காலை நேரமாக இருந்த தால், அலுவலகங்களுக்குச் செல்லும் பயணிகளும் பள்ளி மாணவர்களும் திட்டுத் திட்டாகப் புழுதியேறி, இலையசைவற்றிருந்த மரத்தடியில் நின்றிருந்தார்கள்.

பஸ்ஸிலிருந்து இறங்கிய வேகத்தில், குறுக்குச் சந்துகள் வழியாக நடந்தான்.

மூடப்பட்டிருந்த இரும்பு கேட்டினுள் தலை குனிந்தபடி நுழைந்து ஓரமாகவே நடந்து, பாலத்தருகே இறங்கும் படிகள் வழியாகக் கீழிறங்கியபோது குப்பைமேடு விரிந்திருந்தது.

அவன் சுற்றிலும் யாராவது இருக்கிறார்களா எனத் திரும்பிப் பார்த்தபடி, தனது அடிவயிற்றுக்குள் ளிருந்து பர்ஸை வெளியே எடுத்துத் திறந்து பார்த் தான். சில்லறைகளும் நான்காக மடிக்கப் பட்டிருந்த காகிதம் ஒன்றும் இருந்தன. பர்ஸைத் தடவிப் பார்த் தான். உள்ளே ஏதோ ஒளிந்திருப்பது போலவே இருந்தது.

வாயில் சொருகியிருந்த பிளேடை வெளியே எடுத்து, பர்ஸைக் கிழித்துப் பார்த்தான். பச்சை நிறத்தில் பஞ்சு உலர்ந்து போயிருந்தது. மிகுந்த ஆத்திரமாக வந்தது. சில்லறைகளை எண்ணிப் பார்த் தான். இரண்டு ரூபாய்க்கும் குறைவாக இருந்தது. காகிதத்தைப் பிரித்துப் பார்த்தான்.

'ப்ரியத்துக்குரிய காதலன் ராஜுவுக்கு' எனப் பெரிய எழுத்தில் மூன்று பக்கங்கள் எழுதப்பட்டிருந்த காதல் கடிதம் அது. 'கிழித்துப் போட்டுவிடலாமா?'

என மடித்தபோது, கடிதத்தின் கடைசிப் பக்கத்தில் மஞ்சள் பூ ஒன்று ஒட்டப்பட்டுக் காய்ந்து போயிருந்தது. அதன் அடியில் 'முத்தங்களுடன் கிளாரா... தேவகிருபை ராஜு' என வளைந்து அழகாக எழுதப்பட்டிருந்தது!

பர்ஸைத் தூர எறிந்தபடி, காகிதத்தை மடித்துத் தனது பாண்ட் பாக்கெட்டுக்குள் வைத்துக்கொண்டு, படிகளின் வழியாக மேலேறி நடந்தான்.

விடியற்காலையிலே அவன் அயோத்தியா மண்டபத்தருகே வந்து சேர்ந்திருந்தான். முந்திய இரவில் குடித்திருந்த மதுவின் கனம் குறையவே இல்லை. சரியான உறக்கமில்லாததால், பருத்து வீங்கியிருந்த கண்களுடன் அவன் பயணிகளுக்கான நிழற்குடையில் நின்று கொண்டிருந்தான்.

தூக்கமில்லாததால் தலை கிறுகிறுப்பாக வந்தது. ஏதாவது குடிக்க வேண்டும் போல் இருந்தது. சட்டைப் பையைத் தடவிப் பார்த்துக் கொண்டான். காலியாக இருந்தது!

அருகாமையில் இருந்த புங்கை மரத்தடியில் மண்பானையில் குடிதண்ணீர் ஊற்றிவிட்டு ஒரு பெண் கடந்து போவதைக் கவனித்த வனாக நடந்து சென்று, நாலைந்து டம்ளர் தண்ணீரைக் குடித்தான். வெயில் காலையிலேயே உக்கிரம் கொள்ளத் தொடங்கியிருந்தது. மரத்தடியின் நிழலில் படுத்து உறங்கிவிடலாம் போல் இருந்தது.

அவன் வழக்கமாக ஏறும் பஸ்ஸில் தாவி ஏறிக்கொண்டபோது, கண்டக்டர் அவனை முறைத்துப் பார்த்தபடி இருந்தார். அவன் பற்களைத் திறந்து காட்டினான். பல்லிடுக்கில் சிறிதாக பிளேடின் நுனி தெரிந்தது. பயணிகள் இடித்து, முண்டிக் கொண்டிருந்தார்கள்.

செங்கல் சிவப்பில் சிறியதான கட்டங்கள் போட்ட பயணியின் பின்னால் நின்றுகொண்டான். பயணி கையில் இரண்டு பெரிய புத்தகங்களை வைத்துக்கொண்டு, தானே ஏதோ பேசிக் கொள்வது போல முணுமுணுத்தபடியே நிற்பதற்கு வசதியின்றித் தடுமாறிக் கொண்டிருந்தான்.

பஸ் பாலத்தருகே வளைந்து திரும்பும்போது, ஒரு முறை அவன் மீதே பயணி சாய்ந்து விழுந்தான். தாங்கிப் பிடிப்பது போலவே, பயணியிடமிருந்து பர்ஸை எடுத்துக்கொண்டு கூட்டத்தை விலக்கியபடி படியருகே வந்தான். கண்டக்டரின் கண்கள் அசைவற்று, யாவையும் கண்டுகொண்டிருந்தன. பஸ் பனகல் சாலைக்கு வந்தபோது, அவன் வெளியே குதித்தான்.

ராமேஸ்வரம் சாலையில் இடித்துவிடுவதற்காக மூடப்பட்டிருந்த அடுக்குமாடிக் கட்டடமொன்றின் படிகளில் ஏறிப் போனான். மொட்டை மாடியின் திறந்தவெளியில் மரச் சாமான்கள் குவித்து

வைக்கப்பட்டிருந்தன. ஒரு பக்கம் நிழல் நீண்டு சரிந்திருந்தது. படுத்துக்கொண்டபோது காகங்கள் வெயிலில் நின்றபடி கத்திக் கொண்டிருந்தன.

அவன் கண்களை மூடிக்கொண்டு உறங்குவதற்காக எத்தனித்தான். கண்களை மூடியபோதும் வெளிச்சம் அடங்கவே இல்லை. நகரத்துக்குக் கட்டட வேலைக்காகக் கூட்டி வரப்பட்ட அவன், ஆறேழு ஆண்டு களாகப் பசியோடு இருப்பிடமற்று, ஏதேதோ வேலைகள் செய்தபடி இலக்கற்றுத் திரிந்துகொண்டிருந்தான்.

வேலையற்ற நாள்களில் களவுக்குப் பழகி, அதுவே இப்போது தினசரியாகிப்போயிருந்தது. வெறும் வயிற்றோடு படுத்திருந்ததால், பசி தூக்கத்தைத் தடுத்துக்கொண்டிருந்தது. புரண்டு படுத்தான்.

பாண்ட் பாக்கெட்டில் இருந்த கடிதம் வெளியே வந்து விழுந்தது. கால் மீது கால் போட்டபடியே, கடிதத்தைப் படிக்கத் தொடங்கினான்.

ப்ரியத்துக்குரிய காதலன் ராஜுவுக்கு,

ஆயிரம் முத்தங்களுடன் சி. கிளாரா தேவகிருபை எழுதிக் கொண்டது.

ராஜு, நான் என்ன தப்பு செய்துவிட்டேன்? நீங்கள் எதற்காக விலகிப் போகிறீர்கள்? இரண்டு வாரங்களாக உங்களைப் பார்க்க முடியாமல், நான் வேதனையைச் சுமந்துகொண்டிருக்கிறேன். ராஜு, நீங்கள் கோபித்துக்கொள்ளும்படியாக நான் நடந்துவிட்டதற்காகச் செத்துப் போயிடலாம் என்று தோன்றுகிறது.

வீட்டில் உங்களுக்காக இரவெல்லாம் அழுதுகொண்டிருந்தேன். அழுகையைத் தவிர, என்னிடம் என்ன இருக்கிறது ராஜு? எதற்காக நீங்கள் என்னைக் காதலிக்கத் தொடங்கினீர்கள்? ராஜு, நான் உங்களைச் சந்தித்த இந்த நாற்பத்திரண்டு நாள்களுக்குள்தான் என்னை ஒரு மனுஷியாகவே நினைக்கத் தொடங்கினேன்.

ராஜு, உங்களுக்குத் தெரியாது. நான் வேலை செய்யும் பேக்கரியின் ஓனர் (இமானுவேலைச் சொல்லவில்லை. அவரது அண்ணன் செல்வின் ஞானதுரையைச் சொல்கிறேன்) இரண்டு மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் என்னைக் காதலிப்பதாகச் சொன்னார்.

இயேசுவின் மீது சத்தியமாகச் சொல்கிறேன். அவர், என் அப்பாவை விடவும் வயதானவர். ஆனால், நான் பிளம் கேக்கைப் பெட்டியில் அடுக்குவதற்காக உள்ளறைக்குப் போனபோது அவர் இடுப்போடு என்னைச் சேர்த்துக் கட்டிக்கொண்டு, கழுத்தில் முத்தமிட்டு என்னைக் காதலிப்பதாகச் சொன்னார். நான் அழுதுவிட்டேன்.

அவரது மனைவி ஜெசிந்தாவை எனக்குத் தெரியும். அவள் மிகுந்த அழகாக இருப்பாள். ஒரு முறை நான் ஜெபக்கூட்டத்தில் அவள் அருகே மண்டியிட்டு ஜெபம் செய்திருக்கிறேன். பிரார்த்தனை யின்போது அவளது கண்களில் நீர் கசிந்ததை நானே கண்டிருக்கிறேன். அத்தனை பரிசுத்தமானவளை விட்டுவிட்டு, என்னைக் காதலிப்பதாகச்

சொல்வதைக் கேட்டபோது, எனக்குத் தொடையெல்லாம் நடுங்கி விட்டது. அவருக்காக வீட்டில் நான் இரவில் பிரார்த்தனை செய்தேன்.

அப்போது ஏனோ என்னைப் போல மெலிந்த, கறுத்த முகமுள்ள, கூந்தல்கூட அதிகம் வளராத ஒரு பெண்ணை அவர் காதலிப்பதாகச் சொன்னது மனதுக்கு ஒரு நிமிஷம் சந்தோஷத்தைத்தான் தந்தது. நான் அப்படி நினைத்தது பாவம் என்பது தெரிந்து, கடைக்கு இரண்டு நாள்கள் லீவு போட்டுவிட்டு வீட்டிலேயே இருந்தேன்.

நிஜமாகவே காய்ச்சல் வந்தது போல, உடம்பில் உஷ்ணம் கொப்பளித்துக்கொண்டிருந்தது. என்னைக் கவனிப்பதற்கு என் வீட்டில் யாருமே இல்லை. என் பெரியக்கா சோபியா பாக்கிய முத்து கூட இப்போது அச்சக வேலைக்குப் போய்விடுவதால், வீட்டில் அவளது இரண்டு குழந்தைகளையும் எனது அம்மாவே கவனிக்க வேண்டிய நிலையுள்ளது.

(ராஜு. உங்களிடம் ஒரு போட்டோவைக் காட்டினேன், நினைவிருக்கிறதா? அதில், இரண்டாவது வரிசையில் சுருட்டை முடியோடு நின்றிருந்தவள்தான் பெரியக்கா சோபியா நீங்கள் கூட அவள் என்னைப் போலவே இருப்பதாகச் சொன்னீர்கள்!)

நான்கு நாள்களுக்குப் பிறகு பேக்கரிக்கு வேலைக்குப் போனபோது, செல்வின் ஞானதுறை இரண்டு நாள்களாகக் கடைக்கு வரவில்லை யென்றும், பதிலாக அவரது தம்பி வந்து போவதாகவும் புவனா சொன்னாள். நான் எதையும் கேட்டுக் கொள்ளவில்லை

ஆனால், நான் காதலிக்கத் தகுதியற்றவள் என்பதை எனக்கு நானே பல முறை சொல்லிக்கொண்டேன். இதற்காகவே நான் பேக்கரியின் உள்ளறையில் பிளாஸ்டிக் காகிதங்களில் கேக்கைச் சுருட்டும் வேலைக்கு மாறிக்கொண்டேன்.

ராஜு, நீங்கள்கூட ஒரு முறை என் கையை முகர்ந்து பார்த்து விட்டு, அதில் சாக்லெட் கேக்கின் வாசம் வருவதாகச் சொன்னீர்கள். அன்றைக்கு எல்லாம் என் கையை, நான் எத்தனை முறை முகர்ந்து பார்த்திருக்கிறேன், தெரியுமா? என் விரல்களை நானே சப்பிக் கொண்டு சிரித்தபடி படுத்துக் கிடந்தேன்.

ராஜு, நீங்கள் என்னைச் சந்தித்த பிறகுதான் முதன்முதலாக சுடிதார் அணியத் தொடங்கினேன். உங்களுக்குத் தெரியாது. அதற்கு முன்னால், வீட்டில் அக்காவின் பச்சை நிறத் தாவணியொன்றும் இரண்டு அரக்கு நிறப் பாவாடைகளும் மட்டுமே இருந்தன. அதைத் தான் உடுத்திக்கொண்டு வருவேன். நீங்கள் என்னை முதன் முதலாகப் பார்த்தபோதுகூட, நான் இதே பச்சை நிறத் தாவணிதான் கட்டியிருந் தேன், உங்களுக்கு நினைவிருக்கிறதா? *(நீங்கள் அன்றைக்குச் சந்தனக் கலர் சட்டை அணிந்திருந்தீர்கள். கையைச் சுருட்டி மடக்கிவிட்டபடி நின்று கொண்டிருந்தீர்கள். நெற்றியில் சிறியதாகத் திருநீறு இருந்தது!)*

ராஜு, என்னைத் தேடி எப்போது பேக்கரிக்கு வருவீர்கள்

என்று தெரியாமல், நான் சில நாள்களில் கடை திறப்பதற்கு முன்னால் ஏழு மணிக்குக்கூட வந்து காத்திருந்திருக்கிறேன். அது போலவே, நீங்கள் வந்து நிற்கும்போது சாப்பிட்டுக் கொண்டிருந்தால் பார்க்க முடியாமல் போய்விடுமே... என்று மதியச் சாப்பாட்டைக் கொண்டு வரவே மாட்டேன். நீங்கள் வருவதற்குச் சில நிமிஷங்களுக்கு முன்னாடியே என் மனதுக்குத் தெரிந்துவிடும். நீங்கள் சிரித்தபடி பேக்கரிக்கு வந்து, இரண்டு வெஜிடபிள் சாண்ட்விச் வாங்கிக்கொண்டு என்னைப் பார்த்துச் சிரிப்பீர்கள்.

ஒரு நாள் உங்களுக்காக சாண்ட்விச்சுக்குள் ஐந்து செர்ரிப் பழங்களை ஒளித்து வைத்துக் கொடுத்ததைக் கண்டுபிடித்து விட்டீர்கள். அதற்காக மறுநாளும் 'ஸ்பெஷல் சாண்ட்விச்' என்று சத்தமாகச் சொன்னதைக் கேட்டதும் எனக்குச் சிரிப்பாக வந்தது.

நீங்கள் என்னைக் காதலிக்கத் தொடங்குவதற்கு முன்பாக, நான் உங்களைக் காதலிக்கத் தொடங்கிவிட்டேன். நீங்கள் பன்னிரண்டு நாள்களுக்குப் பிறகு, ஒரு மதிய நேரத்தில்தான் என்னைக் காதலிப்ப தாகச் சொன்னீர்கள். நான் அதைக் கேட்டவுடனே ரொம்ப சந்தோஷ மாகி, கேக்கில் சுற்றும் க்ரீமில் உங்கள் பெயரை எழுதி, அதை அப்படியே சாப்பிட்டுவிட்டேன்.

அன்றைக்கு இரவில், ரயிலில் என் கூடவே வந்து உட்கார்ந்து கொண்டு, கைகளைப் பிடித்துக்கொண்டு 'நீ எங்கேயிருந்து வருகிறாய்?' எனக் கேட்டதற்கு, என்னால் பதில் பேசவே முடியவில்லை. தலை கவிழ்ந்தபடி இருந்தேன். என் வீட்டின் அருகாமை வரை நீங்கள் கூடவே நடந்து வந்தது மிகுந்த வெட்கமாக இருந்தது. இரவில் நான் பிரார்த்தனைகூடச் செய்யவில்லை. அப்படியே தூங்கிவிட்டேன்.

எனக்கு ரொம்பவும் பயமாக இருந்தது ராஜு. நீங்கள் என்னோடு பேசும்போது, நான் பேசாமல் இருந்ததற்குக் காரணம் எனது பயம்தான். 'எப்போதுமே உதட்டை ஏன் இறுக்கமாக மூடிக் கொண்டிருக்கிறாய்?' என நீங்கள் கேட்டபோதுகூட, எனக்கு அழுகைதான் வந்தது ராஜு.

எனது முன் பற்கள் மிக அசிங்கமாக இருக்கும். அதற்காக நான் கம்பி போட்டு இறுக்கிக் கட்டியிருக்கிறேன். இது தெரிந்துவிடக் கூடாது என்பதற்காக, நான் நாள் முழுவதும் பற்கள் தெரிந்து விடாமலிருக்க, உதட்டை இறுக்க மூடிக்கொண்டிருப்பேன். பேசும்போது கூடத் தலை கவிழ்ந்து கொள்வதற்குக் காரணம் – என் எத்துப் பற்கள்தான்!

நான் பயந்தபடியேதான் ராஜு நடந்தது. நீங்கள் என்னை கிருஷ்ணவேணி தியேட்டருக்கு அழைத்துக்கொண்டு போனபோது, நான் சந்தோஷமாகத்தான் இருந்தேன். பாதி இருட்டில் என் முகத்தை அருகே இழுத்து முத்தமிட நீங்கள் முயன்றபோது, பயத்தோடுதான் விலக்கினேன். நீங்கள் கோபத்தோடு என்னைக் கட்டிக்கொண்டு உதட்டைக் கவ்வினீர்கள்.

நானும் முத்தமிடும் ஆசையில் உங்கள் உதட்டைப் பற்றியபோது, உங்கள் கண்கள் என் பற்களில் கட்டியிருந்த இரும்புக் கம்பியைக் கண்டதை நடுக்கத்தோடு கவனித்துக்கொண்டிருந்தேன். சட்டென என்னை விலக்கிய நீங்கள், கோபத்தோடு 'இது என்ன கம்பி?' எனக் கேட்டதும் நான் பதில் பேச முடியாமல் அழத் தொடங்கினேன்.

என் அருகிலிருந்து வேகமாக எழுந்து, கதவைத் திறந்துகொண்டு நீங்கள் வெளியே போனபோது கத்தி அழவேண்டும் போல் இருந்தது. நான் இருட்டுக்குள்ளாகவே எழுந்து வெளியே வந்தேன். நீங்கள் வாசல் கதவைத் திறந்துகொண்டு, தியேட்டரை விட்டு வெளியே போய்விட்டீர்கள்.

எனக்கு பேக்கரிக்குப் போகவோ, வீட்டுக்குப் போகவோ மனசில்லை. டவுன் பஸ்ஸில் தலை கவிழ்த்தபடி அழுது கொண்டு வந்தேன்.

இரவில் என் பற்களை நானே உடைத்துப் போட்டு விடுவதற்காக ஸ்பேனரால் தட்டினேன். ஈறுகளில் ரத்தம் கசிந்து வலி உண்டாகியது. பற்கள் உடையவே இல்லை. நான் எதற்காக இப்படி எத்துப் பற்களுடன் காதலிக்கத் தொடங்கினேன்?

'ராஜு, இந்தப் பற்களையெல்லாம் பிடுங்கிப் போட்டுவிட்டு வந்தால் என்னை ஏற்றுக்கொள்வீர்களா?' என்று மனதுக்குள்ளாகவே வேண்டிக்கொண்டேன். 'வீட்டில் என் ஒருத்திக்கு மட்டும் எதற்காக இப்படிப் பற்கள் பெரிதாக வளர வேண்டும். நான் என்ன பாவம் செய்திருக்கிறேன்' என இயேசுவிடம் கண்ணீரால் பிரார்த்தனை செய்தேன்.

அதன்பிறகு நீங்கள் வரவேயில்லை ராஜு. இரண்டு நாள்களுக்குப் பிறகு நீங்கள் 11G பஸ்ஸில் போவதை பேக்கரியில் இருந்தபடி பார்த்தபோது அழுகை முட்டியது. என் பற்களை உடைத்து விடுவதற்காக, தராசின் இரும்புப் படிகளை எடுத்துக் கொண்டு உள்ளே போனேன்.

கண்களை மூடிக்கொண்டு ஓங்கி அடித்தபோது, ரத்தம் முகத்தில் பீறிட்டது. கண்கள் இருட்டிக்கொண்டு வந்தது. ராயப்பேட்டை பொது மருத்துவமனையில் எல்லோரும் என்னைத் திட்டினார்கள். ஒரு பல் உடைந்துபோய்விட்டிருந்தது. இன்னொரு பல்லில் பாதி உடைந்திருந்தது. முகம் வீங்கி, தாடையை விரிக்க முடியவில்லை.

இந்த வேதனையிலும் உங்களுக்காக நான் பல்லை உடைத்துக் கொண்டதற்காகச் சந்தோஷம்தான் அடைந்தேன். பதினொரு நாள்கள் மருத்துவமனையில் இருந்துவிட்டு வீடு திரும்பிய பிறகு உங்களைச் சந்திக்க வேண்டும் என்ற ஆசை அதிகமாகிக் கொண்டே வந்தது.

உங்கள் அறை எங்கே இருக்கிறது என்று தெரிந்துகொள்வதற்காக நான் ரொம்பவும் சிரமப்பட்டேன். நீங்கள் பேக்கரிக்கு வரும் போது எதிர்க் கடையில் சிகரெட் வாங்குவீர்கள் அல்லவா? அந்த சிராஜுதீன் அண்ணாதான் உங்கள் அறை இருக்குமிடத்தைச் சொன்னார்.

எனக்குத் தயக்கமாகத்தான் இருந்தது. ஆனாலும், அன்றைக்குக் காலையில் நான் உங்களுக்குப் பிடித்த ஆரஞ்சுக் கலர் சுடிதாரைப் போட்டுக்கொண்டு அறைக்கு வந்தேன். உங்கள் அறையிருந்த மாடிக்கு ஏறும்போது, என்னைக் கீழ்வீட்டிலிருந்த பெண் பார்த்துக்கொண்டே இருந்தாள். நீங்கள் துணி துவைத்துக் கொண்டிருந்தீர்கள்.

என்னைப் பார்த்ததும் கோபத்தோடு 'எதற்காக் இங்கே வந்தே' என்று கத்தினீர்கள். நான் பதில் பேசாமல், கதவைப் பிடித்தபடியே நின்றுகொண்டிருந்தேன். பிறகு யாராவது கவனிக்கிறார்களா என்று பார்த்துவிட்டு, என் அருகே வந்து அறைக்குள் வரும்படியாகக் கையைப் பிடித்தீர்கள்.

நான் மிகுந்த வேகத்தோடு உங்கள் தலையைக் கைகளால் வளைத்து முத்தம் கொடுத்தேன். நீங்கள் என்னை விலக்கவே இல்லை. பதிலுக்கு நீங்களும் என்னை முத்தமிட்டீர்கள். நான் சந்தோஷத்துடன் பேசியது எதையும் நீங்கள் கவனிக்கவே இல்லை.

என்னைக் கட்டிக்கொண்டு அறைக்குள் படுக்க வைத்தபோது, நான் பயத்தோடு விலகி எழுந்து வெளியே வந்ததும் கோபத்தில் நீங்கள் சமையல் பாத்திரத்தை என் மீது எறிந்து கத்தினீர்கள். நான் வாசலில் நின்றபடி தலை கவிழ்த்திருந்தேன்.

கைலியைச் சரியாகக் கட்டிக்கொண்டு, இறுகிய முகத்தோடு என் கைகளை வளைத்துத் திருகியபடி, கொச்சை கொச்சையாக நீங்கள் திட்டும்போதும் நான் அழவேயில்லை ராஜு. பற்களை நறநறவெனக் கடித்தபடி, என்னைப் படியில் தள்ளிவிட்ட போதுதான் உங்கள் பற்களை நான் பார்த்தேன்.

அது கோரமாக நீண்டு, உதட்டுக்கு வெளியே நீட்டிக்கொண்டிருப் பது போலிருந்தது. எனக்கு அழுகை பீறிட்டது. படிகளில் சுருண்டு படுத்துக்கொண்டு அழுதேன். உங்கள் அறை நண்பர்கள் இருவர் வருவது தெரிந்ததும் நீங்கள் சட்டையைப் போட்டுக் கொண்டு, அவசரமாக என்னைக் கீழே இழுத்துக்கொண்டு போனீர்கள்.

ராஜு, நான் உங்கள் அறையைத் தேடிவந்தது தப்பா? அது தப்பாயிருந்தால், உங்களைப் பார்ப்பதற்கு நான் என்னதான் செய்வது? நான் செத்துவிட்டால், இதுபோல உங்களைத் தேடி வர வேண்டிய அவசியம் இருக்காது ராஜு.

நான் என்ன செய்வது என்றே தெரியவில்லை. நீங்கள் கோபித்துக் கொண்ட பிறகு ஊரே மிகவும் சுருங்கிவிட்டது போலவும் தெருக்கள் கழுத்தைச் சுற்றிக்கொண்டு இறுக்குவது போலவும் இருக்கிறது. நான் சாந்தோம் சர்ச்சுக்குள் சென்று, கல்படியிலே மண்டியிட்டு அழுதேன். நீங்கள் ரொம்பவும் நல்லவர் ராஜு, கடவுளின் பெயரால் கேட்கிறேன்... என் காதலை வெறுத்துவிடாதீர்கள். நான் ஏராளமாகக் கண்ணீர் வடித்துவிட்டேன் இனி, நானே உங்களைத் தேடி வர மாட்டேன். நீங்களாகப் பார்க்கும்வரைக்கும் காத்துக்கொண்டே

இருப்பேன்.

ஒரு ரொட்டித் துண்டைப் போல, உங்கள் பசி ஆற்றுவதற்காகக் காத்துக்கொண்டே இருப்பேன். உங்கள் கோபம் தீருவதற்காக, நீங்கள் விரும்பினால் என் உடம்பை வேண்டுமானாலும் தருவேன்.

உங்கள் காதலி,

சி.கிளாரா தேவகிருபை ராஜு.

(எனக்காக இந்தக் கடிதத்தை புவனாதான் எழுதினாள். உங்களிடம் எதையும் மறைக்கக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். நான் எஸ்.எஸ்.எல்.சி.யில் கணக்கில் ஃபெயில்!) கடிதத்தைக் கையிலே வைத்துக்கொண்டிருந்தான். பஸ்ஸில் அவன் மீது சாய்ந்து விழுந்தவனின் முகம் நினைவில் இருக்கிறதா என்று யோசித்துப் பார்த்தான். மெலிந்தவனாக, சிவப்புக் கட்டமிட்ட சட்டையோடு இருந்தது நினைவுக்கு வந்தது. முகம் துல்லியமாக இல்லை. அவன் கடிதத்தில் ஒட்டப்பட்டிருந்த, உலர்ந்த மஞ்சள் மலரைத் தடவிப் பார்த்தான்.

ராஜு என்னும் முகம் தெரியாதவனின் மீது ஆத்திர ஆத்திரமாக வந்தது.

ஏனோ அவனுக்குக் கடிதத்தைத் திரும்பப் படிக்க வேண்டும் போலவும் இருந்தது. படிப்பதற்கு வேதனையாகவும் இருந்தது.

மாலை அடங்கும்வரை அவன் ராமேஸ்வரம் சாலையிலே படுத்துக் கிடந்தான்.

'கிளாரா இந்நேரம் என்ன செய்துகொண்டிருப்பாள்? வீட்டுக்குப் போயிருப்பாளா? சாப்பிட்டிருப்பாளா? இந்தக் கடிதத்தை ராஜு படித்துவிட்டு, அவளைச் சந்தித்திருப்பானா? ஒருவேளை, வேதனை தாங்க முடியாமல் சி.கிளாரா செத்துப்போயிருந்தால்?' – நினைக்க நினைக்க அவனுக்குக் குழப்பமாகவும் நடுக்கம் தருவதாகவும் இருந்தது.

தெருவில் இறங்கி நடந்தபோது அருகில் இருந்த டீக்கடையில், அன்றைய காலைப் பேப்பரைப் படிப்பதற்காகக் கேட்டான். கிழித்தது போக மீதமிருந்த பக்கங்களில் எந்தப் பெண்ணும் காதலுக்காகச் செத்துப் போனதாகத் தகவல் இல்லை.

'நகரில் எந்த அறையில் ராஜு தங்கியிருக்கிறான்? எந்த ரயிலைப் பிடித்து கிளாரா வீட்டுக்குப் போவாள்? எந்தத் தேவாலயத்தில் அவள் பிரார்த்தனை செய்வாள்? ஏன் காதலுக்காக இத்தனை வேதனைப்படுகிறாள்?' – அவன் ஒவ்வொன்றாக நினைத்தபடியே நடந்தான்.

திடீரெனத் தான் கிளாராவைச் சந்தித்துவிடக் கூடாது என்று தோன்றியது. 'அவள் எழுதியிருந்த ஒரே காதல் கடிதத்தைக்கூட ராஜு திருட்டுக் கொடுத்துவிட்டான்' என்று சி.கிளாராவுக்குத் தெரிந்தால் என்ன ஆவாள்? அதுவும் திருடியவன், அந்தக் கடிதத்தை

வாசித்துவிட்டதை அறிந்தால், அவள் எவ்வளவு வேதனைப்படுவாள்?

'கிளாராவை ஒருபோதும் சந்தித்துவிடக் கூடாது' என முணுமுணுத்தபடியே படபடப்போடு காகிதத்தைக் கிழித்துக் காற்றில் பறக்கவிட்டுவிட முயன்றான். நீண்ட நாள்களுக்குப் பிறகு, முதல் முறையாக அவன் கைகள் நடுங்கத் தொடங்கின. கிளாரா அவன் முன் மண்டியிட்டு பிரார்த்தனை செய்வது போல் இருந்தது.

அவன் காகிதத்தை மடித்துப் பையில் வைத்துக்கொண்டு, மூடியிருந்த கடையின் படியில் உட்கார்ந்துகொண்டு, எதற்கோ சத்தமாக அழத் தொடங்கினான்.

கடைசி பஸ் ஒன்று காலியாக, அவனைக் கடந்து போய்க் கொண்டிருந்தது.

நேற்றிரவு நிம்மதியான தூக்கமிருந்ததா?

மருத்துவரின் கேள்வியைப் புறக்கணித்தவர்களைப் போல அந்த இருவரும் தலை கவிழ்ந்திருந்தார்கள். மூப்பின் தளர்ச்சியேறிய அவர்களின் சுவாசம் சீரற்றிருந்தது. தங்கள் படபடப்பைக் காட்டிக் கொள்ளக் கூடாது என்ற முனைப்புடன் கைகளை இறுக்கிக் கொண்டனர். மருத்துவர் தனது கண்ணாடியைச் சரி செய்தபடி முதியவரிடம் கைகளை நீட்டச் சொன்னார் அவர் கைகளை ஒளித்துக்கொள்ள விரும்புபவர் போல சேரின் அடியில் கொண்டு சென்றார்.

"உணவில் உப்பைக் குறைத்துக்கொண்டீர்களா?"

இருவரும் அமைதியாக இருந்தார்கள். முதியவர் மேஜையிலிருந்த மருத்துவரின் கடிகாரத்தையே பார்த்துக்கொண்டிருந்தார். ஒரு மீனைப் போல நீந்திக்கொண்டிருந்தது மணித்துளி. தன் முன்னே சுகவீனமற்றவர்களைப் போல வெளிறிய முகத்துடனிருக்கும் இருவரையும் பார்த்துக்கொண்டிருப்பது இயலாமல் மருத்துவர், தொலைபேசியின் ஒயரை விரலால் சுற்றிக்கொண்டிருந்தார். அறையின் வெண்ணிற வெளிச்சத்திலும்கூட அவர்கள் இருளால் விழுங்கப்பட்டவர்கள் போல ஒடுங்கியிருந்தார்கள். மருத்துவர் முதியவரின் கைகளை எடுத்து, மேஜை மீது வைத்தார். பெண்ணின் கண்களில் தொலை தூரத்துக்கு அப்பால் பார்வை சென்றுவிட்டது போன்ற விலக்கமிருந்தது. உலர்ந்த வெற்றிலையை நினைவுபடுத்தும் அந்தக் கைகளின் மேல்புறத்தைத்

தனது விரல் நுனியால் கோடிட்டபடியே கேட்டார்.

"நேற்றிரவு நிம்மதியான தூக்கமிருந்ததா?"

முதியவரின் பார்வை சுவரில் தொங்கும் உடல் எலும்புகளின் சித்திரத்தில் நிலைகுத்தியிருந்தது. அவர் கண்கள் எதையோ எண்ணிக் கொண்டிருந்தன.

"படுக்கைக்கு எத்தனை மணிக்குச் செல்கிறீர்கள்?"

முதியவர் தன் கைகளை இழுத்துக்கொண்டுவிட்டார். மருத்துவரின் மேஜையிலிருந்த வாட்டர் பாட்டிலில் தண்ணீர் சலனமில்லாமல் பார்த்துக்கொண்டிருந்தது. காகிதத்தில் எழுதும் ஓசை அறையில் இருந்த நிசப்தத்தைச் சுண்டி விளையாடிக் கொண்டிருந்தது. முதியவர் தன் கைகளால் தனது கழுத்தடியில் தொட்டுப் பார்த்துக்கொண்டார். முதியவள் மேஜை விளிம்பில் உருண்டுகொண்டிருக்கும் குண்டூசி யொன்று தவறி விழுந்துவிடப் போகிறதோ எனப் படபடப்புடன் பார்த்துக்கொண்டிருந்தாள்.

மருந்துச் சீட்டைக் கிழித்துத் தந்துவிட்டு மருத்துவர் அழைப்பு மணியை அழுத்தியதும் இருவரும் நாற்காலியை விட்டு எழுந்து கொண்டனர். முதியவர் தயக்கத்துடன் கேட்டார்,

"உங்கள் போன நம்பரை மறந்துவிட்டேன். குறித்துக் கொள்ளட்டுமா?"

மருத்துவர் சிறிய காகிதத்தில் தொலைபேசி எண்ணை எழுதித் தந்துவிட்டுத் தானே சிரித்துக்கொண்டார்.

மிக அவசரமாக அந்த அறையை விட்டு வெளியேறி, தங்களது ரப்பர் காலணிகளைத் தேடிப் போட்டுக்கொண்டு, மருந்துச் சீட்டை கையில் மடித்தபடி மரப்படிகளில் சப்தமின்றி இறங்கி, அவர்கள் தெருவுக்கு வந்தபோது நகரின் முதல் விளக்குகள் எரியத் தொடங்கி யிருந்தன. வாகனங்களின் மிதமிஞ்சிய பரபரப்புக்கும் நடுவில் சாலையைக் கடந்து, சிமெண்ட் பிளாட்பாரத்தின் ஓரம் வழியாகவே நடந்து பார்மசி ஷாப்பின் முன் வந்து நின்று, அந்த முதியவர் மருந்துச் சீட்டைக் காட்டி, அதன் விலையை விசாரித்தார். பிறகு ஏதோ தனக்குத் தானே பேசிக்கொண்டவரைப் போல, மருந்தை வாங்காமல் நீண்ட பெருமூச்சிட்டபடி வீட்டை நோக்கி நடக்கத் தொடங்கினார். அவர் பின்னாலே முதியவள் நடந்து வந்தாள்.

வழியில் அவர்கள் எதையும் பேசிக்கொள்ளவில்லை. வீட்டின் இரும்பு கேட்டைத் தள்ளித் திறந்து, வாசற்படியில் உட்கார்ந்து கொண்ட முதியவர் மிகுந்த மனசாந்தியுடையவர் போல ஆறுதலாகச் சொல்லிக்கொண்டார்.

"இன்றைக்கும் உயிரோடுதான் இருக்கிறோம். பயமில்லை."

வேறு யாரிடமோ சொல்வது போல சொல்லிக்கொண்டார். முதியவள் வீட்டுக் கதவைத் திறந்து உள்ளே சென்றாள் எல்லா

அறையிலும் விளக்கு எரிந்துகொண்டிருந்தது. அவள் நாற்காலியை டி.வி.யின் முன்னால் நகர்த்திப் போட்டுக் கொண்டு, கால் வைப்பதற்கான பலகையை முன்னால் தள்ளி வைத்தவளாக உட்கார்ந்துகொண்டு, ஏதோவொரு நிகழ்ச்சியைப் பார்க்கத் தொடங்கினாள்.

முதியவர் தனது ஆடைகளைக் களைந்துவிட்டு, சிறிய நீலநிறக் கட்டமிட்ட துண்டைக் கட்டிக்கொண்டு, தனது சுத்தியல், மஞ்சள் பை சகிதமாகக் குளியலறை ஸ்டூலின் உடைந்த காலைச் சரி செய்வதற்காகத் தரையில் உட்கார்ந்துகொண்டார். தளர்ந்து ஒடுங்கியிருந்த அவரது ஆண்குறி தரையில் உராய்ந்துகொண்டிருந்தது. சிறிய டப்பாக்களில் இருந்த ஆணிகளைத் தேடி, அவர் மரப்பலகையில் அடிக்கத் தொடங்கினார்.

தொலைக்காட்சியில் இருந்து திடீரென முகம் திருப்பிய முதியவள் கேட்டாள்,

"ஒருவேளை இரவில் இறந்துபோய்விட்டால்....

முதியவர் பதில் பேசவில்லை. அந்த வயதானவள் மட்டும் எழுந்து, மருத்துவரின் தொலைபேசி நம்பர் எழுதிய காகிதத்தை முதியவரின் சட்டைப் பையிலிருந்து தேடி எடுத்துத் தன் கையில் சுருட்டி வைத்துக்கொண்டு, திரும்பவும் தனது நாற்காலிக்குத் திரும்பினாள். சுத்தியால் மரப்பலகையை அடிக்கும் ஓசை விட்டுவிட்டு கேட்டுக்கொண்டேயிருந்தது. கடந்த இரண்டு வருட காலமாக ஒவ்வொரு நாள் மாலையிலும் அந்த முதியவர் மருத்துவரிடம் தன்னைச் சோதித்துக்கொள்ளவும், அவரது தொலைபேசி எண்ணை வாங்கிக்கொள்ளவும் மறக்கவேயில்லை.

ஒட்டகச் சிவிங்கியொன்று கழுத்தை ஒடித்து ஒடித்து நடந்தபடி புல்வெளியில் நடந்து போய்க்கொண்டிருந்தது. முதியவள் அதன் கண்கள் தன்னையே பார்த்துக்கொண்டிருப்பது போலத் தோன்றியதால் தலைகவிழ்ந்துகொண்டாள். முதியவர் குளியல் அறையில் பலகையைப் போட்டுச் சோதித்துப் பார்த்துக் கொண்டிருந்தார் இன்னும் திருப்தியற்றவரைப் போல பலகையைத் திரும்ப எடுத்து வந்து அடிக்கப்பட்ட ஆணிகளை ஒவ்வொன்றாகப் பிடுங்கத் தொடங்கினார். மிருகத்தின் பற்களைப் பிடுங்குவது போல ரௌத்திரத்துடன் அவர் ஆணிகளைப் பிடுங்கினார்.

நாற்பது வருடங்களாகவே அவர்கள் இருவர் மட்டுமே அந்த வீட்டில் இருந்தார்கள். சொந்த ஊரைத் தவிர வெளியே அவர்கள் போவதுமில்லை. இப்போது அந்த வீட்டில் கடிகாரமேயில்லை. சில வருஷங்களுக்கு முன்பு ஒரு இரவில் கடிகாரச் சப்தம் மழைத் துளி சொட்டிக்கொண்டிருப்பதைப் போல இடைவிடாமல், முதியவர் காதருகே கேட்கத் தொடங்கியது. அது எதையோ தன்னிடம் சொல்வது போலவேயிருந்தது. கடிகார பெண்டுலத்தின் இடவல

ஆட்டம் தூங்கு, விழி என மாறி மாறிச் சொல்லிக் கொண்டேயிருப்பது போல் இருந்தது. அவர் கடிகாரத்தின் ஓட்டத்தை நிறுத்தியிருந்தார். ஆனால், சில நாள்களில் ஓடாத கடிகாரம், பெரும் பீதியையும், அந்தக் கடிகார எண்கள் முறைத்துக்கொண்டிருப்பது போலவும் உணர்ந்து அதைப் பரணில் தூக்கிப் போட்டுவிட்டார்.

இரவில் விளக்குகளை அணைக்கவே கூடாது என்பதில் முதியவர் உறுதியாக இருந்தார். முதியவள் மட்டுமே படுக்கும்போது, தரையில் சிறிய மணி மெத்தையை விரித்துப் படுத்துக்கொள்வாள். அவள் தலைமாட்டில் ஒரு அரிக்கேன் விளக்கு எரிந்துகொண்டிருக்கும். அவள் அந்தச் சுடர் படபடத்துக் கொண்டிருப்பதையும், வெம்மை கசிந்து உடலில் சூட்டினைப் படரச் செய்வதையும் மிகவும் விரும்பினாள்.

விளக்குகள் யாவும் எரிந்தபோதும், இரவு வருவது நிற்கவே இல்லை. நீண்ட பாதங்கள் உள்ள மனிதனைப் போல இருள் சட் சட்டென வீட்டைச் சுற்றிலும் நடந்து நிரம்பிவிடுகிறது. கண்களுக்குக் குறுக்காக விழும் தலைமயிரை விலக்காமல் அவள் விளக்கைப் பார்த்துக்கொண்டிருப்பாள். வெளியே எங்கிருந்தோ ஆழ்ந்த மணம் கசியத் தொடங்கும். அது மெல்ல எழும்பி, சிற்றலை போலப் பரவிப் பரவி வீடு மொத்தமும் நிரம்புகிறது. அந்த வாசம் தன்னைச் சூழ்ந்தபிறகு, அவள் கண்களை மூடிக் கொள்வாள், ஆனாலும் உறங்குவதில்லை.

வானில் நட்சத்திரங்கள் அலையும் சிறு சப்தம்கூடக் கேட்கத் தொடங்கிவிடும். அவள் மூடிய கண்கள் ஒளியின் செம்மஞ்சளை உள்வாங்கிக்கொண்டிருந்தன. வாசனை மெல்ல அவள் மூச்சினுள் கலந்து உடலெங்கும் நிரம்பத் தொடங்கியது. அவள் மூடிய கண்களுக்கு வெளியே வெளிச்சம் பொலிவுறத் தொடங்கியது.

ஒளியின் நடமாட்டம்கூட விசித்திரமான சப்தமாகக் கேட்டது. அதன் சரசரப்பு உடலை யாரோ கட்டிக்கொள்வது போன்ற கூச் சத்தையும், சில வேளை காமத்தின் நுனி தொடுவது போலவுமிருக்கும்.

மெதுவாகத் தான் படுத்திருந்த அறைக்குள் முதியவர் நடந்து வரும் ஓசை கேட்டது. அவர் அருகே வந்து குனிந்து அவள் நாசிக்கு எதிராகத் தன் விரலை நீட்டி சுவாசமிருப்பதை அறிந்து கொண்டுவிட்டு இருப்பிடத்துக்குத் திரும்பினார். அவளும் இதுபோல முதியவரின் மணிக்கட்டினைப் பிடித்துப் பார்ப்பாள். ரத்தம் துள்ளிக் கொண்டிருக்கும்.

அவர்கள் இருவரும் உறக்கத்தைக் கடந்துவிட்டார்கள். வயதேற்றத் தில் தூக்கம் அவர்கள் வீட்டை விட்டு வெளியேறியிருந்தது. பகலைப் போலவே இரவும் அவர்கள் மீது கவியும் ஒரு வலை, அவ்வளவே.

அவர் சில நாள்களாகவே இரவு தன் வீட்டுக்கு வந்து சேர்வதைக் கண்டபடியிருக்கிறார். செடியிடுக்குகளிலும், மரத்தின் இலையடியிலும்,

பரண்களிலும், கடலின் அடியாழத்திலும், ஒளிந்திருந்த இரவின் சிறு மணிகள் உருண்டோடி வீதி, வீடுகள், மரங்கள், கதவு, கூரை எங்கும் தொற்றிக்கொள்கிறது. விசித்திரமான நீரோட்டம் போல இரவு எல்லா இடங்களிலும் கூடிவிடுகிறது. பின் அதன் முணுமுணுப்பு சல்லடைத் துளைகள் போல ஆயிரம் கண்களை உண்டாக்கிவிடுகிறது.

சுவரில் ஏறும் ஒளியை நாவை நீட்டிச் சட்டென இருள் விழுங்கி விடுவதைப் பார்க்கும்போது, இரவு ஊர்ந்துகொண்டிருப்பது தெரியும். ஒளியும் அசைவற்ற நிமிஷத்தில் நீடிப்பதேயில்லை. தாயமாடுவதைப் போல, தத்தமது சோழிகளை உருட்டிக் கொண்டிருக்கின்றன ஒளியும் இருளும்.

ஒரு குத்தீட்டியைப் போல ஒளி நீண்ட சுவர் ஓரங்கள் வரை குத்திக் குத்தி நீள்கிறது. அவர் திறந்த கண்களுடன் படுத்திருக்கப் பழகிவிட்டார். குளிர் திட்டுத் திட்டாகக் கரைந்து வீட்டினுள் சிதறுகின்றது. அவள் எழுந்துகொண்டுவிட்டாள். சுவாசக் கோளங்கள் நடுங்குகின்றன. மூச்சுக் கிளைகளில் குளிர் ஏறி உலுக்குகிறது. அரிக்கேன் விளக்கை எடுத்துக்கொண்டு, மெல்ல நடந்து வந்து, அவரின் கால் அருகே உட்கார்ந்துகொண்டு அவரது பாதங்களைத் தொட்டுப் பார்க்கிறாள்.

அது ரத்தச் சூடு கொண்டதாக இருக்கிறது.

அவளுக்குள் காரணமற்ற வேதனை கசியத் தொடங்கியது. ஒரு சிறிய வலி தன் உதட்டில் விடாது கவ்விக்கொண்டிருந்தது.

அவள் எதையோ கேட்க விரும்பினாள். வார்த்தைகள் கூடி வரவில்லை. அரிக்கேன் விளக்கின் திரியைத் தூண்டிவிட்டு உள்ளங் கைகளைக் கண்ணாடியில் வைத்துக்கொண்டாள்.

முதியவரும் எழுந்து உட்கார்ந்துகொண்டார். விரலை ஒளியின் முன்னால் காட்டியபடி அவர் வாசலைப் பார்த்துக் கொண்டிருந்தார். எங்கிருந்தோ பறவையின் கேவல் ஒலி கேட்டது. இலைகள் சலசலத்துக் கொண்டன.

எழுந்து வாசலுக்கு வந்தவராக வீட்டின் ஓரமிருந்த தென்னையைக் கண்டார். அது இலையசைவுகூட இன்றித் தலை கவிழ்ந்திருந்தது. அவர் படியிலே உட்கார்ந்திருந்தார். இருள் அருகே சுருண்டு கிடக்கும் நாயென வளைந்திருந்தது. மங்கிய தெருவையே பார்த்துக்கொண்டி ருந்தார்

யாரோ சிரிக்கும் சப்தம் கேட்டது. எங்கிருந்து வருகிறது எனக் கேட்டார். தனது வீட்டுக்குள்ளிருந்துதான் வருகிறது. அவர் யோசனை யுடன் வீட்டினுள் நடந்தபோது, மூடியிருந்த படுக்கையறையில் இருந்து இரண்டு சிரிப்புச் சப்தம் வந்தது. மிகப் பரிச்சயமான சிரிப்பு. அவர் சாவித் துவாரத்தின் வழியே உள்ளே பார்த்தார்

படுக்கையில் ஒரு ஆணும் பெண்ணும் முயங்கிக் கிடந்தார்கள். அவள் திறந்த முதுகு வாழையிலையின் நரம்பு போலக் குழிந்திருந்தது.

கேசத்தால் முகத்தை மூடியபடி அவள் கொஞ்சும் குரலில் சொல் கிறாள்,

"பகலில் என்ன கூத்து."

"இரவை உண்டாக்கிவிடட்டுமா" என அந்த ஆண் எழுந்து நிர்வாணியாக ஜன்னலை நோக்கி நடக்கிறான். ஜன்னலுக்கு வெளியே பகல் ஒளிர்ந்துகொண்டிருக்கிறது. அவன் ஜன்னலை மூடுகிறான். அவள் தன் விரல்களைப் பல்லால் கடித்துக் கொண்டு சிரிக்கிறாள்.

அறையில் மங்கிய ஒளியிருக்கிறது. அவள் கேலியாகச் சொல்கிறாள்.

"பகலையும் இரவாக்கணுமாக்கும்" என விரல் நீட்ட, ஜன்னல் இடுக்கில் சிறிய ஒளிக் கசிவு. காகிதத்தால் அதை மூடுகிறான். சிரிப்பு வெடிக்கிறது.

காமம் தலைக்கேறப் படுக்கையில் வீழ்ந்த அவன், ஸ்தனங்களின் நடுவில் ஏதோ பேசுகிறான்.

அவள் சிரிப்பை விடவேயில்லை.

"உங்க கண்ணில பகல்தானேயிருக்கு."

அவனிடமிருந்து சிரிப்பு மறைகிறது. முகம் சிவக்க அவள் தலை யடியில் கைகளைக் கொடுத்துத் தூக்கியபடி சொல்கிறான்,

"நடிக்காதே."

அவள் சிரிப்பு வடிந்துவிடுகிறது. கேசத்தைப் புரட்டிக்கொண்டு கவிழ்கிறாள். அறையில் காமத்தின் விம்மல் கேட்கிறது. முதியவன் கண்களை விலக்காமல் படுக்கையறையின் உள்ளேயே பார்த்துக் கொண்டிருக்கிறான்.

ஜன்னலின் அடைத்து வைக்கப்பட்ட காகிதம் பிரிந்து விழ, ஒளி பீறிடுகிறது. அந்தப் பெண் கேசத்தைப் பற்களில் படியவிட்டு படுத்திருக்கிறாள்.

முதியவன் கதவைத் தட்டுகிறான். உள்ளிருந்தவன் மூடிய கதவை நோக்கி நடந்து வருகிறான். முதியவள் தனது அரிக்கேன் விளக்கை எடுத்துக்கொண்டு கதவருகே வந்து குனிந்த முதியவனின் தலையைத் தொட்டுக் கேட்கிறாள்.

"உள்ளே என்ன பகலாக இருக்கிறது."

அவன் நிமிர்ந்து அவளைப் பார்க்கும்போது படுக்கையில் கிடந்தவள் அவள்தான் என்பது தெரிகிறது. அவன் மௌனமாகத் தனது நாற்காலிக்குப் போய்விடுகிறான். அவள் அறையின் கதவைத் திறந்து உள்ளே நடந்துபோய் ஜன்னலை மூடுகிறாள் முதியவன் பகலை இரவாக மாற்றிய தன் இளவயது இன்னும் அதே அறையில் இருப்பதைத் திரும்பிப் பார்த்த படபடப்பில் தலைகவிழ்ந்திருக்கிறான்.

அவள் கதவைத் திரும்பவும் மூடிவிடுகிறாள். எழுந்து அவன் அருகே வந்து நின்று கேட்டாள்,

“இன்றைக்கும் அவர்களைப் பார்த்தாயா?”

முதியவன் மௌனமாக இருந்தான். அவள் வெறுப்போடு கேட்டாள்,

“அவள் முகத்தைப் பார்த்தாயா?”

முதியவன் தன் பற்களைக் கடித்துக்கொண்டான். அவள் அவனைக் கடந்துபோகும்போது சொன்னாள்,

“ஜன்னல் இடுக்கில் காகிதத்தை அமுக்கி வைத்திருக்கிறேன். இனி பகல் உள்ளே வராது. உன் கண்களில் உள்ள பகலை மட்டும் விலக்கிவிட்டு நீ உதிரக் கறை படிந்த படுக்கையில் உறங்கலாம்.”

முதியவன் பதில் சொல்லவில்லை. வீட்டின் இன்னொரு அறையில் யாரோ ஷூ போட்டுக்கொண்டிருக்கும் சப்தம் கேட்டது. யாரோ ஒருத்தி கிச்சனில் வியர்வை வழிய அழுது கொண்டிருந்தாள். சிறிய முகம் பார்க்கும் கண்ணாடியில் இளைஞன் ஷேவ் செய்து கொண்டிருந்தான். சிறு சிறு சப்தங்கள், கோபப் பேச்சுகள், எங்கிருந்தோ பிறந்து அடங்குகின்றன.

முதியவன் வீட்டில் தாங்கள் இருவர் மட்டுமேயில்லை என்பதைத் தெரிந்துகொண்டுவிட்டான். முதியவனுக்கு மிகப் பயமாகவும், ரத்தம் உயர் வேகம் கொண்டது போலவும் ஆனது. இது இரவு உண்டாக்கும் மயக்கமா, நிஜம்தானா? வியர்வை முகத்தில் கொப்பளிக்கிறது.

அவர் தனது மருந்துச் சீட்டுகளுடன் இருந்த டாக்டரின் தொலை பேசி எண்ணைத் தேடத் தொடங்கினார். அந்தப் பெண் மிக மெதுவாகத் தன் கையில் இருந்த சிறிய காகிதத்தை விளக்கில் காட்டி எரித்துக்கொண்டிருந்தாள். எண்களில் தீ ஒளிரும்போது முதியவனின் நடுங்கும் கண்கள் அதைக் கவனித்துக் கொண்டிருந்தன.

முதியவள் உள்ளங்கையில் எரிந்த காகிதத்துண்டை வைத்திருந்தாள். பிறகு ஒரு முறை மட்டும் சிரித்துக்கொண்டாள்.

பிட்சாடனரின் கேசம்

ஊரின் மையமாக இருந்தது பிட்சாடனரின் வீடு. கிளை பிரியும் பாதைகள் கூடுமிடமது. வீடென்றாலும் அதன் விஸ்தாரம் மிகப் பெரியது. அகன்ற கூடாரங்களும் சரவிளக்கு தொங்கும் தூண்களும் இதழுக்குள் இதழ் சொருகிய மலர் போல உள்ளறைகளும், சப்தம் தெறித்துத் திரும்பும் மூலைகளும் கொண்ட அந்த வீடு உயரமாகக் கட்டப்பட்டிருந்தது. விசித்திரமான அந்த வீட்டின் அறைகளில் சில எப்போதும் குளிர்ச்சியும் சிலவற்றில் வெம்மையும் கூடியிருந்தன. குனிந்து செல்லும் கதவுகள் கொண்ட உள் அறைகளில் எதிலோ பசுக்களின் நடமாட்ட சப்தமும், மகுடி இசைப்பவர்களின் மெல்லிய ஓசையும், தாழம்பூவின் வாசனையும் வெளிப்பட்டன. பிட்சாடனரின் வீட்டின் உள்ளே முப்பது படுக்கையறைகள் இருப்பதாகவும், நாளொன்றில் ஒரு அறையில் சயனம் கொள்ளும் அவருக்கு இரண்டு மனைவிகள் இருந்ததாகவும் ஊரில் அறிந்திருந்தனர். எனினும் அவர் மனைவியரை நேரில் கண்டவரில்லை. வீட்டினின்று வான்நோக்கி நீண்ட புகைபோக்கியுண்டு எனினும் அங்கு சமையலறையோ, சமைப்பதோ கிடையா. ஆயினும் தேடி வருபவர்களுக்கு அவ்வீட்டில் எந்நேரமும் இனிப்பு வடிசலும் உப்பில்லாத சாதமும் உணவாகக் கிடைப்பது தொடர்ந்தது. வீட்டின் முன் பரந்த வெளியில் இருந்த கிணற்றடி அருகே பருத்த வேம்பு கிளைத்து நின்றது. அதனடியில் வயதானவள் ஒருத்தி வீட்டுக்கு வந்து போகிறவர்களைக் கண்டபடியிருப்பாள். பிட்சாடனரை வெளியில் பார்ப்பது அரிது. என்றாவதுதான் வீட்டினின்று

வெளியே தென்படக்கூடும்.

கருத்த உருவமும் விரிவு ஓடிய கால்களும் வெடிப்பு கொண்ட உதடுகள் கொண்ட அவர் தோற்றமே ஈர்ப்புக் கொண்டது. எனினும் அவரை ஞாபகம் கொள்ளச் செய்வது சுருண்ட கேசமே. முதுகு வரை சுருள் விட்டுத் தொங்கும் கேசம் காற்றில் அலையாடி ரகசிய சப்தமிட்டு உரசும். எப்போதாவது அவர் தன் கேசச் சுருளில் இலையோடு கொய்த கொன்றை மலரைச் சூடியுமிருப்பார். அவரின் இடது தோளில் அமர்ந்தபடி வெண்கொண்டைக் கிளியொன்று உடன்பேசி வரும். பிட்சாடனரின் செய்கைகளும் குணமூர்க்கங்களும் எவராலும் புரிந்துகொள்ளப் பட்டதில்லை. என்றோ பகலில் அவர் வீதிகளின் சந்திப்பில் நின்றபடி மணலை வாரி வாரித் தன் மீது கொட்டிக் குளித்ததையும், தாளாத கோடையில் அவரது உடலை ஸ்பரிசம் கொண்ட நாவிதன் உறைபனியின் குளிர்ச்சி போல தீண்ட முடியாத உணர்ச்சி கொண்டு உளறியதையோ, சவத்துணியைப் போர்த்திக்கொண்டு பதினாறு நாள்கள் வெடித்த கரிசல் வெளியின் கூந்தல் பனையடியில் உறங்கிக் கிடந்தபோது அவர் உடலில் ஒளி கசிந்ததாகவும் அறிந்தவர்கள் இதை இயல்பென்று சொல்லிக் கலைந்தனர்.

பிட்சாடனருக்கு நண்பர்களேயில்லை. தேடி வருபவர்கள் பெரிதும் வாத்தியக்காரர்களாகவே இருந்தனர். எங்கிருந்தோ இசைக் கருவி களுடன் திறந்த மார்பும் விபூதியிட்ட நெற்றியுமாக சந்தன வாசனை வீச இளைஞர்கள் வந்து சேருவார்கள். அகன்ற இசைக் கூடத்தில் தாளக் கருவிகளின் சப்தமும் சுழலும். மறைவான அறைகளில் இருந்து எவரோ அதைக் கேட்டுக்கொண்டிருப்பார்கள். அவரின் இசைக்கூடத்தில் மயக்கமான நிசப்தம் கூடியிருந்தது. எவரும் வராத நாள்களில் தனித்துப் பரமபதம் ஆடிக்கொண்டு இருக்கவும் பழகியிருந் தார். நள்ளிரவில் என்றாவது இனம்புரியாத இருள் படர்ந்த ஊரின் புறவெளியில் பிட்சாடனர் நடமாடும்போது நாங்கள் அவர் காலைச் சுற்றிக் கொஞ்சி அலைவதை ஆந்தைகள் கண்டுகொண்டிருக்கும். அவரது முகத்தில் சலனமேயிருக்காது. ரகசியத்தின் உருப்போல அலைந்து திரிந்தார் பிட்சாடனர்.

பிட்சாடனரின் கிளிக்கு பாஷைகள், தத்துவ சாஸ்திரப் பழக்கம் உண்டென்பார்கள். அக்கிளி உதயத்தின் முன்பாக வீட்டின் தென்கோடி மூலையினின்று பாய்ந்து வானின் அதி உயரத்தில் பறந்து, பார்வை வெளியின் கடைசிப் புள்ளியில் சுழன்று நடனமாடுவதும் பின்பு ஒளியின் ரேகைகளுடன் வீடு திரும்புவதும் நாளாக நடந்தேறுகிறது. போகத்தில் மிதந்த ஏதோவொரு யவனனின் உயிர்தான் கிளியாக இருக்கிறதென்றும் அந்த யவனன் கல்தச்சனின் மனைவியை மோகித்து காமம் பீறிட்ட உடலும், குழறிய பாஷையுமாக கல்தச்சனின் மனை வியை புணர்ந்து மீள முடியாத இறுக்கத்தில் உடலில் பல் புதைந்து இருந்தபோது குறுக்கிட்டு கள்வன் கள்வனெனக் கத்திய கிளியின்

சிரசைத் துண்டித்துவிட மோகம் விலக்கிய ஸ்திரி தன் கையில் கிளியின் சிரசை ஏந்திக்கொண்டு கற்பூரம், காய்ந்த நாணல் கொண்டு ஊரை வலம் வந்து துயரம் பீறிட எதையோ முணுமுணுத்து அருகாமைக் குன்றின் உயரத்திலிருந்து காற்றில் மிதந்து குதிக்க, கிளியின் கபாலம் ஒரு எரிநட்சத்திரம் போல வானில் சுழன்று பதுங்கிய விசித்திரம் தொடர, போகித்த யவனனின் உடலில் உள்ள இறகோட்டம் போல நிற வரிசைகள் தோன்றத் தொடங்க, அவன் வேதனையில் சப்தமிட்டே தன் வாழ்நாளில் அரற்றி, ஓய்ந்து பின்பு மறுவாழ்க்கையில் கிளியாகியிருக்கிறான் என்றும், பிட்சாடனர் தான் கல்தச்சனின் மனைவியாக இருந்தவர் என்றும், சோழிகளை உருட்டிக் கணிக்கும் பண்டாரம் சொன்னதும் சிலர் நினைவுகளில் ஓடிக்கொண்டுதானிருந்தது. கிளியோடு பிட்சாடனர் தணிந்த குரலில் எதையாவது பேசிக்கொண்டே இருப்பதை இசைத்து முடித்து தூண் களின் ஊடே உறங்கும் வாத்தியக்காரர்கள் கனவில் கேட்பது போலச் செவியுறுவதும் மூடப்படாத வீட்டின் முன் வாசற்கதவு வழியே நிலா தயங்கித் தயங்கி உள்ளே வந்து எட்டிப் பார்த்துப் போவதையும் அறிந்திருந்தனர். விசித்திரம் நடமாடி அலையும் வீடாகவேயிருந்தது.

பிட்சாடனரின் செய்கைகள் யாவும் விபரீதமானவை என ஊரார் அறிந்தேயிருந்தனர். அவர் ஒரு நாள் பெருமழையின் ஊடாக நடந்து சென்றபோது அவரது கேசத்தில் ஒரு துளி மழைகூடப் பெய்யவில்லை. அவர் மழையின் ஊடாகவே மழை பெய்யாத வெளியைக் கண்டபடி நடந்து அலைந்தார், மழை அவரது நடமாட்டத்துக்கு வழி தந்து பெய்துகொண்டிருந்தது. காற்று மழையைக் கலைக்கும்வரை நடந்து திரிந்தார். இதற்கு மாறாகக் கோடையில் வெக்கை பீடித்த வீதிகளில் பெண்கள் ரணமேறிய முகத்துடன் உக்கிரம் கொண்ட தெருவில் எதிர்ப்பட்ட பிட்சாடனரின் கேசத்தின் ஒவ்வொரு கற்றைச் சுருளும் விடாது மழையைச் சொட்டியதையும் காற்று அவர் தலையைக் கடக்கும்போது சாரல் தெறிப்பதையும் கண்ட அவர் பெண்கள் வியந்து நின்றபோது குழந்தையைப் போல கேசத்தைத் தன் விரல்களால் சிலிப்பி அடித்தபோது அதனின்று ஒரு கற்றை மழை தெறித்துப் பெய்ததையும் விரல் சிடுக்கிய மயிரினின்று மின்னல் ஒன்று வெடித்து வானில் பாய்ந்து மறைந்ததையும் கண்டவர் இப்போதுமிருக்கிறார்கள்.

தனியனாக வந்து இசைத்துவிட்டு பிட்சாடனரின் வீட்டில் உறங்கும் ஒரு மனிதன் வீட்டில் உறங்காத படுக்கை அறைகளில் நரிகளின் சல்லாபம் நடக்கிறதென்றும் அதன் சிரிப்பொலியைக் கேட்பது நகங்களைக்கூட நடுக்கம் கொள்ளச் செய்வதாகவும் சொல்லிப் போனதின் பின் பலராலும் அவ்வீடு ரகசியங்களின் இழைகளால் புனைவுகொள்ளப்பட்டு ஊரினின்று தனியே மிதந்து கொண்டிருந்தது.

பிட்சாடனர் ஒரு நாள் வாசலில் நின்றபடி தெருவைப் பார்த்துக்

கொண்டிருந்தார். மங்கிய பகலில் ஒரு ஜோடி மாடுகள் தொலைவில் அசையாமல் நின்றன. இலை அசையாத மயக்கம். மரத்தடியில் இருந்த வயதானவள் கண்களைத் திறந்தபடி உறங்கிக்கொண்டிருந்தாள். அசதியும் மயக்கமும் கொண்டதான நாளில் தூரத்தில் இரண்டு முகவீணை வாசித்துப் பாடுபவர்கள் இசைத்தபடி வருவதைக் கேட்டார். அவர் தோளில் அமர்ந்த கிளி இசைஞர்களைக் கூட்டிவர முன் பறந்தது. இமைகளை மூடுவதும் பற்களைக் கடித்துக்கொள்வதுமாக இருந்த பிட்சாடனர் வாசலில் இறங்கி தன் வீட்டையே யாருடையதோ போலப் பார்த்துக்கொண்டிருந்தார். வாத்தியக்காரர்கள் மெலிந்த திரேகிகளாக இருந்தனர். அவர்கள் வீட்டுக்குள் வந்தபிறகு எதையோ நினைத்தவர் போல முணுமுணுத்துக்கொண்டார்,

"அடைத்துச் சாத்தப்பட்டது கதவு; இனித் திறக்காது."

தனியாளாக அந்த வீட்டின் முன் வாசல் கதவை மூட அவர் எத்தனித்தபோது பல காலமாக அடைக்கப்படாத அக்கதவின் பின்புறமிருந்த குருவிகளும் வண்டுகளும் பயந்து சிறகடித்துப் பறந்தன. இரட்டைப் பூட்டு கொண்ட அக்கதவு மூடிய சப்தம் கேட்டு கிழவி விழித்தபோது அடைக்கப்பட்டிருந்தது கதவு. வாத்தியக்காரர்களுடன் உள்ளே போன பிட்சாடனர் பின்பு கதவைத் திறக்கவேயில்லை. வேம்பு பூக்கும் காலம் வரை போனபோதும் பூட்டிய கதவு சலனமற்று மூடியிருந்தது. எங்கிருந்தோ தேடிவரும் வாத்தியக்காரர்களும், காண வந்தவர்களும் கதவின் முன் நின்றபடி உள்ளே ஏதேனும் சத்தம் கேட்கிறதா எனக் கேட்டனர். ஏதோ ஒரு அறையில் நதியொன்று ஓடுவது போல் சப்தம் வருவதாகச் சொன்னான் ஒருவன். இன்னமும் இசை முடியவில்லை எனச் சொல்லிக் கலைந்தனர் பெண்கள். ஆனால் வாசலடி வேம்பின் கீழ் இருந்த கிழவி சொன்னாள்,

"வீடு திறந்துதானேயிருக்கிறது. முன்பு வீட்டுக்கு ஒரேயொரு கதவு. இப்போதோ எல்லாப் பக்கமும் கதவாகிவிட்டது. உள்ளே நடப்பது தெரியவில்லையா" என்றாள். அவள் பேச்சுக்கு எவரும் செவி கொடுக்கவில்லை. வயதான மனிதன் கதவில் காதைக் கொடுத்துக் கேட்டுச் சொன்னான்,

"சம்போகத்தில் ஆர்வம் கொண்டவன் பிட்சாடனன். நிமிஷ இடைவெளியின்றி இரு மனைவியோடும் சுகித்திருக்கக் கூடும். இந்திரிய வாசம் முற்றி அடிக்கிறது. ரோகியாக என்றாவது வெளியே வருவான் பாருங்கள்."

மூடப்பட்டபின்பு அந்த வீட்டின் இருப்பு ஊரையே பயம் கொள்ளச் செய்தது. அங்கு இரவிலும் சுவரில் காதை வைத்துக் கேட்கும் மனிதர்கள் உலவினர் வீட்டின் சுவர்களில் நதியின் சுழல் போல நீரோட்டம் தெரிவதாகவும் அவர்கள் சொன்னார்கள்.

கிழவி இடைவிடாது உளறத் தொடங்கினாள். வீட்டின் நீண்ட புகைபோக்கியின் வழியே நட்சத்திரங்களும் மேகங்களும் உள் இறங்கி பிட்சாடனரின் மனைவியிருக்கும் அறைக்குச் செல்கின்றன என்றும்,

அங்கு சுவர்களில் மேகங்கள் திட்டுதிட்டாகப் படிவதையும், நட்சத்திரங்கள் அதில் பல்லிகள் போல ஓடித் திரிவதையும் தான் கண்டதாக முனங்கினாள். எவரோ பசுக்களின் நடமாட்டம் ஓய்ந்துவிட்டதென்றும் அசப்தம் நின்று போனதால்தான் வீடு இருந்த அளவுக்கு வானம் எப்போதும் வெளிறி நிசப்தித்து இருப்பதாகவும் சொன்னார்கள். இனி எவராவது அந்த வீட்டின் உட்புறங்களைக் காண வேண்டுமானால் குழி எலி போலத் துளைத்து மண்ணில் முண்டிப் பார்த்து வர வேண்டியதுதான் என்றார்கள்.

மழைக்காலம் தொடங்கியது. பகலில் ஊர் முழுவதும் சீரான மழை. பிட்சாடனரின் வீட்டையும் அதன் மூடிய கதவையும் தட்டியபடி பழுத்த இலைகளையும் நத்தைகளையும் கொண்டுவந்து சேர்த்தது மழை. அதிகாலையில் பெய்யும் வேகமழை தன் விரல்களால் பிட்சாடனரின் மூடிய கதவுகளைத் தட்டி ஓய்ந்தது. நிசப்தம் மட்டுமே நடமாடிக் கலையும் வீடாகியது. எவருமில்லை எவருமில்லை! என மழை தானே முணுமுணுத்துக்கொண்டு திரும்பியது. என்றோ முகவீணையுடன் புறப்பட்டுப் போன தங்கள் கணவனைக் காணாது அவர்களின் மனைவி, குழந்தைகள் ஈரம் சொட்டும் தலையும், மெலிந்த உடலுமாக பிட்சாடனரின் வீட்டின் முன் நின்று அழுதனர். சமாதானம் செய்து வைக்கவோ தேற்றவோ கூட எவரும் வரவில்லை. மழை மட்டுமே அவர்களோடு இருந்தது. ஈர விரலால் மழையைத் தடவியபடி விசும்பும் அவர்களின் துயரம் தாளாது மழை ஊரை விலக்கி வெற்றுவெளியில் ருத்ரமாகி வாத்தியக்காரர்களே எங்கிருக்கிறீர்கள் எனப் புலம்பி வீசிப் பெய்தது.

வெளிறிய கண்கள் கொண்ட சிறுமிகள் இருவர் அடைத்த கதவில் முகம் பதியக் கண்டபோது உள்ளே தங்கள் தகப்பன் இமைமூடிப் பாடிக்கொண்டிருப்பதையும், எதிரே தங்க நாணயங்கள் சிதறிக் கிடப்பதையும் கண்டு தங்களுக்குள் கிசுகிசுத்துக்கொண்டனர். வாத்தியக்காரர்களின் மனைவிகள் கதவில் காதை வைத்தபோது காகங்களின் கரைப்பு மட்டுமே அவர்களுக்குக் கேட்டது. செய்வதறியாது வேம்படியில் காத்துக் கிடந்தனர். கிழவி மழையால் வீட்டின் சுவர்கள் மெல்லிய படலம் போலாகி வருவதாகவும் உள்ளே எவருமே இல்லை என்பது பார்வையிலே தெரிகிறதாகவும் கூறினாள். வேம்பினடியில் உறக்கம் கொள்ளாது வைக்கோலில் முகம் புதைத்து விசும்பும் பெண்களுக்காக வேம்பின் வேர்கள் மண்ணடியிலே ஊர்ந்து வீட்டின் அடி ஆழங்களில் வாத்தியக்காரர்களைத் தேடின. மழை ஓய்ந்த மாலையில் பிட்சாடனரின் கிளி வீட்டின் புகைக்கூண்டில் தோன்றியதையும், அது வானில் பறக்க எத்தனிக்கும்போது உடன் அறுபத்தி நான்கு கிளிக்குஞ்சுகள் பறந்தது கண்டு மனச் சமாதானம் கொண்டவர்களாக அந்தப் பெண்கள் ஊர் திரும்பியபோது வேம்படிக் கிழவி சொன்னாள்,

"வீட்டிலிருந்த பசுக்கள் யாவும் கிளிகளாகப் பறந்துவிட்டன."

மூன்று கோடைக் காலங்கள் கடந்துபோயின. எவர் நடமாட்டமும் வெளிப்படவில்லை. ரகசியத்தின் மீது விருப்பமற்றவர்களாக ஊரார் அவ்வீட்டை ஞாபகத்தனின்று விலக்கினர். வீட்டின் இருப்பு ஊரினின்று துண்டிக்கப்பட்டது. ஒருவன் மட்டும் அதிகாலையொன்றில் துர் சொப்பன பயத்தில் வீட்டினின்று ஓடி பிட்சாடனர் வீட்டு வாசலைப் பார்த்துவிட்டு தெருவில் கத்தினான்,

"வீட்டின் படிகள் முன் நகர்ந்து வருகின்றன. வீடு வேறிடம் நோக்கி முன் செல்கிறது."

எவரும் அதனைப் பொருட்படுத்தவில்லை. துர்சொப்பனக்காரரின் பயமோ வீடு மெல்ல நகர்ந்து வேறு ஊரின் முகப்பில் சென்று நடக்கக் கூடுமென்றான். இப்பயம் தொற்றிய பண்டுவச்சி அவ்வீடு மெல்ல உயர்ந்து தரையை விட்டு மேலாக வானத்துக்கும் மண்ணுக்கும் நடுவே மிதந்துகொண்டிருப்பதாகச் சொன்னாள். நிலத்தில் கால் பதியாதது அவ்வீடு என வேம்படிக் கிழவியும் சொல்லிய மறு தினம் தன்னால் கதவைத் திறந்துவிட முடியுமென வந்த செஞ்சடை கொண்ட தலையும் கல்முகமும் கொண்ட சாமியாடி கதவுத் துவாரத்தில் தச்சுக்கருவியால் நுட்பமிட்டுத் திறந்து உள்ளே காலை வைத்தபோது, அவன் வீட்டின் உட்புறம் போகாமல் முன்வாசலில் நிற்பதே நடந்தது. அவன் மிரட்சியுற்று உட்பக்கம் எவருமில்லா வீடிது எனக் கத்திப் பிரிந்தான்.

துர்சொப்பனக்காரன் கனவில் யாவர் வீடுகளும் மூதாதையர்களின் கபாலங்களிலும், புதைத்த எருதுகளின் விரிந்த கொம்புகளின் நடுவிலும், ஓடிக்கொண்டிருக்கும் ஆற்றின் கற்படுகையிலும், எவரெவர் எலும்பு களின் நீள்வரிசையிலும் கட்டப்பட்டிருந்தன வேம்பு பூப்பதும் காய்ப்பதுமாக இருந்தது. மூடிய வீட்டின் கதவுகள் நாள்கணக்குகளை அழித்து நீண்டன. அடைத்த வாசற்கதவில் தவளைகள் அமர்ந்து உறங்கின. எங்கும் கருமை படியத் தொடங்கியது. பகலின் ஒளி வீட்டின் சுவர்களில் படவேயில்லை. முகப்பில் செடிகள் கிளைவிட்டன. சந்தையிலிருந்து வாங்கிய பசுவைத் தனித்த மலைப்பாதையில் ஓட்டிக்கொண்டு வந்த தரகன் பாறையொன்றின் மீது பிட்சாடனர் படுத்துக்கொண்டிருந்ததையும், உறக்கத்திலும் அவர் கால் பெருவிரல் அசைந்துகொண்டிருப்பதையும் கண்ட நாளில் அவர் கேசம் பாறையை விட்டு ஊர்ந்து தனியே பூக்களை முகர்ந்து கொண்டிருந்ததின் திகைப்பு மேலிட ஊர் திரும்பிச் சொல்லிப் போனான்.

பிறகொரு நாள் வணிக வீதியில் பிட்சாடனர் தனது அறுபத்தி நான்கு கிளிகள் தலைக்கு மேலாக வட்டமிட தனியே மத்தளம் வாசித்துக்கொண்டிருந்ததைக் கண்டதாகவும், ஒரு சமயம் அவர் மூன்று கணிகைகளின் வீட்டு வாசலைப் பற்றிக்கொண்டு மூன்று ஆளாக ஒரே நேரத்தில் நிற்பதாகச் சொன்னார்கள். அருஞ்சுனை சாமி கும்பிட காட்டுக் குன்றுகளின் மீதேறி நடந்துபோன மூன்று குடும்பங்கள் பாறைவெளியில் அமர்ந்திருந்தபோது வெவ்வேறு வயதில்

ஒரே நேரத்தில் பிட்சாடனர் உலவியதாகவும் அவர்கள் வீடு திரும்பும் போது ஓரிடத்தில் இரு துந்தனாக்காரர்கள் இசைத்து பாடக் கேட்டுக்கொண்டிருந்தார் எனவும், அவர்கள் பெயர் விளித்துக் கூப்பிடவே மூவரும் கலைந்து ஒன்றையொன்று பிணைந்து மூன்று மரங்களாகி நின்றதாகவும், அந்த மரத்தின் கிளைகள் பிட்சாடனரின் கேசத்தின் சுருள் போல இருந்ததாகவும் அதனுள் கிளிகள் ஒளிந்திருந் தன எனவும் ஊர் வந்து சொன்னார்கள். பின்பு இது போல ஒற்றைச்சுடர் போல அவர் தனியே மிதப்பதாகவும் இலை பறிக்கப் போகின்றவர் ஒரு வாழை இலையின் மடிப்பில் முகம் தோன்றி மறைந்ததாகவும், இறப்பிற்காகக் காத்துக்கொண்டிருந்த நெசவாளியொருவன் படுக்கை யில் வந்து, அமர்ந்து நெற்றி தடவி அவன் உடலில் சக்கரமிட்டு சுற்றியதாகவும் சொல்லினர். அவன் தன் கைகளை நீட்டி பிட்சாட னரைப் பற்றிக்கொள்ள எத்தனித்து மரணத்தின் தாழியில் வீழ்ந்தான் என்றார்கள்.

பிட்சாடனரின் வீடு ஆளற்று மயங்கியிருந்தது. வேம்படியிலிருந்த கிழவி பனிக்கால இரவில் உறக்கம் கொள்ளாமல் கிணற்றின் உள்ளே எட்டிப் பார்க்கத் தண்ணீரின் உள்ளே பரமபதம் ஆடும் மூவரையும், பரமபதப் பலகையே உயிருள்ளதாகி, சர்ப்பங்கள் நீண்டு அலைவதையும் கண்டு திக்கித்து ராட்டு உருளையை விடவே, வீழ்ந்த ஓசையால் உருவம் கலைந்து சிதறின. அன்றிரவெல்லாம் கிழவி தனியே நடுங்கிக் கொண்டிருந்தாள்.

காற்றுக் காலத்தில் பிட்சாடனரின் வீடு கடற்சங்கு போல அகன்று இருந்தது. காற்று வீட்டின் சுருள்களுக்குள் சென்று மோதி பூம் பூம் என்ற ஓசையைப் பெருக்கியது. எனினும் அந்த ஓசைக்குப் பழகிய எவரும் அதைக் கவனம் கொள்ளவேயில்லை. கோடை முடிந்ததும் வெக்கை குறையவில்லை என்பதால், காற்று உக்கிரமாக அலைந்தது. எங்கிருந்தோ கிங்கிணி வாத்தியத்துடன் வந்த வயசாளி யொருவன் தவளைகள் உறங்கும் அந்த வீட்டையும் அதன் பேரோசை யையும் கேட்டு வாசல் முன் நின்று மூடிய கதவைத் தள்ள, தானே திறந்துகொண்டது. உள்ளே நடந்து போனான். எல்லா அறைகளிலும் நிசப்தம். சுற்றிச் சுழலும் வழிகளின் வழியே உள்ளே போனபோது வெண்பட்டுத் துணி மூன்று தரையில் அமர்வதற்காக விரிக்கப்பட்டு கலையாது கிடந்தது. அறைகளில் எதுவுமே இல்லை. மூடிய படுக்கையறைகளைத் திறந்து பார்த்தபோது, நரியின் ரோமங்கள் உதிர்ந்து இருந்தன. பெண்கள் அந்த வீட்டில் வாழ்ந்ததற்கான அடையாளம் எதுவுமில்லை.

அறைகளுக்குள் சுற்றி மீள முடியாது திரும்பவும் அறையினின்று அறை என அலைந்த கிங்கிணிக்காரன் எப்படி வீட்டினின்று வெளியே வருவதற்கான வழியற்றுப்போனான். எல்லா வாசல்களும் இன்னொரு அறைக்கே கூட்டிப்போயின. ஒரு அறையின் வாசலைத் தள்ளித் திறந்தபோது ஓசையோடும் சீறிப்பாயும் கடல் விரிந்து கிடந்தது.

சுவர்களில்லை. நீலம் நுரைக்கும் நீர்வெளி எல்லையற்றுமிருந்தது. மூடவும் பயந்து எதிர்ப் பக்கம் கடந்து மற்றொரு அறைக் கதவைத் திறந்தபோது அறையின் கடைசிச் சுவர் உடைந்து அருகில் குன்றின் சரிவும் மேய்ந்து கொண்டிருக்கும் ஆடுகளும் தென்பட்டன. அவன் குழப்பத்துக்கு உட்பட்டவனாக இவையாவும் தோற்றங்கள்தானா எனக் கலக்கமுற்றான். அறைகளில் திறக்கத் திறக்க மாறிக்கொண்டே இருந்தன உருவங்கள். இந்த வீட்டின் சுற்றுப்புறம் எங்கே முடிகிறது எனத் தெரியாமலேயே நடந்து முன் சென்றான். அவன் கூப்பிடும் தொலைவில் மேய்ச்சல் மாடுகளை ஓட்டிக்கொண்டு சிலர் வந்து கொண்டிருந்தனர். அவர்களைக் கைத்தட்டிக் கூப்பிட்டபோது அவர்கள் திகைத்து ஓசை வந்த திசையை வணங்கிக் கடந்துபோயினர்.

அவன் கூப்பிட்டபடியே ஓடியபோது மேய்ச்சல்காரர்கள் நாணலில் மறைந்தனர். முன் நடந்து சென்று ஒரு கற்பாறை மீதேறி நின்று சரிவினைக் கண்டபோது அதில் மான்கள் துள்ளி விரைந்தன. மூன்று வில் வேட்டையாளர்கள் துரத்தினர். அதில் ஒருவனின் கேசம் சுருள்கொண்டு முதுகு வரை அலையாடியது. அவன் சப்தமாக பிட்சாடனா எனக் கூப்பிடவே வில்லில் தெறித்த அம்பு திசை மாறி நின்றிருந்த விருட்சங்களைத் துளைத்து ஏதோ விலங்கின் தாடையில் புகுந்து வீறிடல் கேட்டது. வில்லாளன் திரும்பவில்லை. கலையும் உருவங்களும் வெளிகளும் வசீகரித்து, விலக்கி, குழப்பமாக்கிக் கிங்கிணிக்காரனைத் திகைக்கச் செய்தன. அவன் ஊடாக நடந்து இரவின் நெடிய பாதைக்குள் வந்தான். வௌவால்களின் இரைச்சலும் மாமிச மணமும் நிரம்பிய இரவிது. உள்ளே நுழைந்தபோது இரு கற்களுக்கு ஊடாக நெருப்பு எரிந்துகொண்டிருந்தது. குனிந்த தலையோடு ஒருவன் கைகளை உயர்த்திக்கொண்டிருந்தான். கோரை மயிர் கொண்ட முகம். உக்கிரமான கண்கள். உடம்பெல்லாம் மயிர் வளர்ந்து இருந்தது. நெருப்பின் முன் கிங்கிணிக்காரன் அமர்ந்தவுடன் எதிரில் இருந்தவன் எதிர் முகமாகத் தெரிந்தான். அவன் அருகாமைக்கு வர நெருங்கி எத்தனிக்க, தானே எதிர்ப்பக்கம் மாறிக்கொண்டது. விசித்திரமாக இருந்தது. நடுவில் எரியும் நெருப்பின் இருபுறமும் இருவர். கூர்ந்து அக்கண்களைக் கண்ட கிங்கிணிக்காரன் திரும்பவும் குரல் கொடுத்தான். பிட்சாடனா ! பிட்சாடனா!

ஜுவாலை உயர்ந்து வளர்ந்து முகம் தெரியாமல் செய்தது. குரலற்று நெருப்பைக் காட்டியபடியிருந்த எதிர் மனிதன் சட்டென விலகிப் போனான். பின் நடந்தபோது கிங்கிணிக்காரன் பிட்சாடனர் வீட்டின் பின் அறையொன்றிலிருந்து வெளிப்பட்டான். புலனழிந்த நிலையில் அவன் கண்கள் நடந்தன. இரு தூண்களுக்குக் கீழே அமர்ந்துகொண்டான். அவ்வீடு எதில் கதவு கொண்டிருக்கிறது என அறிய முடியவேயில்லை. வெளியேறும் பாதைகளுமில்லை. இரவும் பகலும் சுழன்றன. ஒரு அறையில் பகலும் ஒரு அறையில் இரவும் ஒரே நேரத்திலிருந்தன. அவன் நடமாட மனமற்று தூண்களின் அடியிலே இருந்தான். அவனையறியாது இமைகள் மூடிப் பிரிந்தன.

ஒரு பகலில் தூண்களுக்கு ஊடாக இரு ஈரச் சுவடுகள் தெரிந்தன. குளித்துத் திரும்பிய மனிதனின் பாதமெனத் தோணியது. அப்போது தான் கடந்து போயிருக்க வேண்டும். எழுந்துகொண்ட எதிர் அறையில் சுகந்த வாசம் பரவியது. அறையை எட்டிப் பார்த்தபோது கண்ணாடி பார்த்துக்கொண்டு நிற்கும் பிட்சாடனரின் உருவம் தெரிந்தது. மவுனமாகப் பார்த்துக்கொண்டிருந்தபோது இமை தானே மூடி, ஒரு கணம் கடந்து திறக்க எதிரே பிட்சாடனரில்லை. பதிலாகக் கண்ணாடியுள் தாடை பருத்த குரங்கின் முகம் வெளியே பார்த்துக் கொண்டு இருந்தது. பின் அதுவும் அவனுக்கு முதுகு காட்டி ஓடத் தொடங்கிவிட்டது.

மினர்வா சலூன்

ரங்கூனிலிருந்து வடக்கே எண்பது மைல் தொலைவிலிருந்த பையாஜிக்கு இறந்துபோன ஒருவனை அடையாளம் காட்டுவதற்காக என்னை அழைத்துக்கொண்டு வந்தபோது இரவெல்லாம் மழை பெய்துகொண்டிருந்தது.

பையாஜி ஒரு சிறு நகரம். ரங்கூனிலிருந்து வடக்காகச் செல்லும் ரயில்பாதை வெள்ளைக்காரர்களால் இரண்டு லயன்களாகப் போடப்பட்டிருந்தது. யுத்தத்தில் ரங்கூனைக் கைப்பற்றிய ஜப்பானியர்கள் தண்டவாளத்தின் ஒரு வரிசையைப் பிரித்தெடுக்கும் வேலையை சில மாதங்களாகத் தொடங்கியிருந்தார்கள். இதற்காக நிறைய கூலிகளை வேலைக்கு அமர்த்தியிருந்தார்கள். தன்னா பீனிலிருந்தும் பெகுவிலிருந்தும் கையானிலிமிருந்த தமிழ் ஆட்கள்தான் கூலிகளாக வேலைக்கு அனுப்பப்பட்டிருந்தார்கள். அவர்களோடு ஒன்றிரண்டு சீனர்களும் பர்மியர்களும் கூட வேலையில் ஈடுபட்டிருந்தனர்.

மழைக்காலம் என்பதால் தண்டவாளத்தைப் பிரித்தெடுக்கும் பணி மிக மெதுவாகவே நடைபெற்றது. பணிக்காக வந்திருந்தவர்கள் தங்குவதற்கான முகாம்கள் அமைக்கப்படாததால் பர்மியர்களின் வீட்டுத் தாழ்வாரங்களில் கூலிகள் தங்கியிருந்தார்கள். இரவெல்லாம் பெய்த மழையில் நகரமே ஈரம் கோத்திருந்தது. என்னை அழைத்துக்கொண்டு வந்திருந்த ஜப்பானியன் ரயில்வே மேஸ்திரிகளில் ஒருவனை நம்மோடு அழைத்துக்கொண்டு போகலாம் என்று சொல்லியவனாக பர்மியர்களின் அஞ்சடியொன்றின் முன் நின்று குரல் கொடுத்தான். வயதான

பெண் ஒருத்தி தனது பாவாடையை முடிச்சிட்டபடியே வாசலுக்கு வந்து இருளில் நின்றிருந்த ஜப்பானியனிடம் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தாள். ஜப்பானியனுக்கு அவள் பேசும் பர்மீய பாஷை புரியவில்லை போலும். அவன் திரும்பத் திரும்பக் கேட்டுக்கொண்டே இருந்தான். நான் அவள் அருகே வந்தபடி ராமு மேஸ்திரியைத் தேடி வந்ததாகச் சொன்னேன். அவன் இரவு வீடு திரும்பவில்லை என்றும், ஒருவேளை ஜப்பானிய அதிகாரியின் குடியிருப்பில் இரவில் தங்கியிருக்கக் கூடுமென்றாள். ஜப்பானியர்கள் கோழிக்கறி மீது அதிகம் ஆசை கொண்டவர்கள். இதற்காகவே அவர்கள் மேஸ்திரிகளை இரவில் தங்கள் முகாமில் நிறுத்திக் கொண்டு இரவில் கோழியடித்துச் சமைக்கச் சொல்லி போத்தலுடன் ருசிப்பார்கள்.

என்னோடு வந்திருந்த ஜப்பானியன் கடுகடுத்த முகத்துடன் இப்போதே நாம் பையாஜி புகைவண்டி நிலையத்துக்குப் போகலாம் என்றான். நான் பதில் பேசாமல் மழையில் நனைந்த மரவீடுகளிலிருந்து கசிந்துவரும் வாசனையை நுகர்ந்தபடியே சீனர்களின் டீக்கடைக்குச் சென்று தேநீர் அருந்திவிட்டுப் போகலாம் என்றேன். நான் பதில் பேசாமல் மழையில் நனைந்த மரவீடுகளிலிருந்து கசிந்துவரும் வாசனையை நுகர்ந்தபடியே சீனர்களின் டீக்கடைக்குச் சென்று தேநீர் அருந்திவிட்டுப் போகலாம் என்றேன்.

யுத்தம் சில மாதமாகவே ஜப்பானியர்களுக்கு சாதகமாகவேயிருந்தது. நகரில் அவர்கள் யாரையும் தண்டிப்பதற்கான உரிமையைப் பெற்றிருந் தார்கள். இரண்டு நாள்களுக்கு முன்னால்கூட பெகுவில் கை ரிக்ஷாக்காரன் ஒருவன் சாலையில் தங்களைக் கடக்கும்போது எச்சில் உமிழ்ந்துவிட்டதாக இரண்டு ஜப்பானிய சிப்பாய்கள் அவனைச் சாலையிலே குனியவைத்து முதுகில் அடித்துக்கொண்டிருந்தார்கள். அடி வாங்கிக்கொண்டிருந்தவன் ஒரு முறைகூடக் கத்தவேயில்லை.

நாங்கள் பையாஜி ரயில் நிலையத்துக்குப் போனபோது புகை போலப் பனி மூடியிருந்தது. இந்த அதிகாலையிலும் கூலிகள் ரயில் நிலையத்தில் திரண்டிருந்தார்கள். பிளாட்பாரத்தை ஒட்டிய புல்வெளியில் குத்துக்காலிட்டு உட்கார்ந்திருந்ததைக் கவனித்தேன். பனியால் யாவரது முகமும் உலர்ந்துபோயிருந்தது. தண்டவாளங்களைப் பெயர்த்து எடுப்பதற்கான இரும்புக் கருவிகள் ஓரிடத்தில் குவிந்து கிடந்தன. பனியில் பரஸ்பரம் பேசிக்கொள்ளவும் முடியாமல் தலை கவிழ்ந்திருந்தார்கள்.

நீண்ட நேரத்துக்குப் பிறகு பணியிடத்துக்கு யாவரையும் அழைத்துப்போவதற்கான கூட்ஸ் ரயில் வந்து சேர்ந்தது. இரண்டு பெட்டிகள் மட்டுமேயிருந்த அந்த கூட்ஸ் ரயிலில் ஏறிக்கொண்ட போது ஜப்பானியன் என்னிடம் "முகத்தை வெளியே காட்டாதே. கரித்துகள் பட்டுவிடக் கூடும்" என்று சொன்னான். அது எவ்வளவு நிஜம் என்பது ரயில் புறப்பட்டபோது தெரிந்தது. நிலக்கரிக்குப் பதிலாக மரத்தைச் சிறு துண்டுகளாக வெட்டி எரித்த சக்தியில்

ரயில் போய்க் கொண்டிருந்தது. கரும்புகையும் சிறு நெருப்புத் துண்டுகளும் ரயிலிலிருந்து பறந்து வந்துகொண்டேயிருந்தன. என்னோடு பயணம் செய்த கூலிகளில் பலருக்கும் ரயில் தூசிகள் விழுந்து உடலில் காயம்பட்டுப் போன வடுக்கள் புள்ளி போலத் தெரிந்தன. ரயில் மிக மெதுவாகவே சென்றது. புல்வெளியில் மேய்ந்துகொண்டிருந்த எருமையைப் பார்த்தபடியே சென்று கொண்டிருந்தேன்.

வெயில் தென்படவேயில்லை. மழைக்காலம் ரங்கூனில் எளிதில் முடிந்துவிடுவதில்லை. நான் ரங்கூனுக்குச் சில காலம் தெங்காஞ்சூனில் தங்கியிருந்தேன். புறநகர் பகுதியான அங்கே தகரத்தில் கூரை வேயப்பட்டிருந்த மரவீடுகளிருந்தன. யுத்த காலம் என்பதால் அங்கே மிக அதிகமான கூட்டமிருந்தது. நான் தங்கியிருந்த அறையில் மழை பெய்யத் தொடங்கியதும் சணல் ஊறிப் போய் வீசுவது போல ஒரு வாசம் எழத் தொடங்கும். மழை அதிகமாக அதிகமாக அந்த வாசனை மிக அதிகமாகிக் கொண்டேயிருந்தது. நாள்பட்ட கூரையிலிருந்து அந்த வாசனை வருகிறதென்றும் அந்த பிராந்தியம் முழுவதுமே இதுபோலவொரு வாசனை மழை நாள்கள் முடியும்வரையிருக்கும் என்றார்கள். ஒரு மழைக்காலம் முழுவதும் நசித்த கந்தத்துடனே கழித்திருந்தேன்.

இறந்துபோனவனின் உடலை, பெயர்த்தெடுத்த தண்டவாளங்களைக் குவித்து வைத்திருக்கும் கொட்டகைக்குள் கிடத்தியிருந்தார்கள். அருகில் எவரும் காவலுக்கு இல்லை. தண்டவாளத்தினைப் பாதுகாப்ப தற்காக இருந்த இரண்டு ஜப்பானியர்களும்கூட வேலையாள்களுடன் சென்றிருந்தார்கள். நான் இரும்பின் மீது தன் கால்களைப் படர விட்டபடி ஆரஞ்சுநிற லுங்கியும் கைபனியனும் அணிந்தபடி இறந்து கிடந்த அந்த மனிதனின் உடலைக் குனிந்து பார்த்தேன். பார்த்த மாத்திரத்திலே தெரிந்துவிட்டது அது பெகுவிலிருந்த மினர்வா சலூனில் வேலை செய்த கருப்பையாதான் என்பது. என்னோடு வந்திருந்த ஜப்பானியன் அந்த உடல் யாருடையது என்று தெரிகிறதா எனக் கேட்டான். நான் ‘அவரை எனக்குப் பரிச்சயமிருக்கிறது. நான் அவரோடு சலூனில் வேலை செய்திருக்கிறேன்’ என்றேன். ஜப்பானியன் தனது முகத்தைத் துடைத்தபடியே வாசலில் நின்றபடி மற்ற இரு ஜப்பானியர்களையும் நோக்கிக் குரல் கொடுத்தான். அவர்கள் இருவரும் காட்டு மக்காச்சோளத்தை உப்பில் தடவித் தின்றபடி நடந்து வந்துகொண்டிருந்தார்கள். தண்டவாளக் காப்பாள னாக இருந்த ஜப்பானியன் என்னிடம் திரும்பவும் கேட்டான்,

“இந்த மனிதனை உனக்குத் தெரியுமா?”

தலையசைத்துக்கொண்டேன். மாலையில் வேலை முடிந்து ரயில் புறப்படும்வரை அந்த உடல் அங்கேயே இருக்கட்டும் என்ற படியாக மூவரும் பணியிடத்துக்கு என்னை அழைத்துக்கொண்டு போனார்கள்.

நான் தண்டவாளங்களைப் பெயர்த்தெடுத்தபடியிருக்கும் கூலியாட்களைப் பார்த்தபடியே நின்றுகொண்டிருந்தேன்.

எனது தங்கையை மணம் முடித்துக் கொடுத்த வகையில் கருப்பையா எனது உறவுக்காரன். நான் ரங்கூனுக்கு வருவதற்கு நான்கு வருடங்களுக்கு முன்னதாக வந்து சேர்ந்தவன். நான் கையானில் ஒரு சலூனில் வேலை செய்துகொண்டிருந்தபோது அவன் பெகுவிலிருந்தான்.

பெகுவில் மர வியாபாரம் செய்துகொண்டிருந்த வை. கோவிந்தனின் குடும்ப வகையறாவுக்கு மட்டும் சவரம் செய்வதற்காக நாட்டார் மங்கலத்திலிருந்து கருப்பையாவை அழைத்துக்கொண்டு வந்திருந்தார்கள். பெகுவில் பெரிய ஆறு ஓடிக்கொண்டிருந்தது. அருகாமையிலிருந்த காட்டிலிருந்து வெட்டப்பட்ட மரங்களை ஆற்றில் காட்டிலாகா முத்திரையிட்டு மிதக்கவிட்டுவிடுவார்கள். அந்த மரங்களைச் சேகரித்து கிட்டங்கியில் கொண்டு சேர்ப்பதற்காக உடல் வலுவுள்ளவர்களாக நாட்டார் மங்கலத்திலிருந்து பத்து பதினைந்து பேரை செட்டியார் வேலைக்கு அழைத்து வந்திருந்தார். அவர்கள் புறப்பட்டு வந்த கப்பலில்தான் கருப்பையாவும் வந்திருந்தான்.

வை.கோவிந்தன் ஆளைக் கண்ட மாத்திரத்தில் இடுப்பில் துண்டைக் கட்டிக்கொள்ள வேண்டும் என்று கட்டாயப்படுத்த மாட்டார். கருப்பையா அவரைப் பற்றி நிறைய சொல்லியிருக்கிறான். ஒரு முறை கருப்பையாவிடம் சவரம் செய்துவிடும் போது ரகசியமான குரலில் கேட்டார்,

“அரையில் கொஞ்சம் வேதனையாக இருக்குடா ஏதாவது வைத்தியம் சொல்லேன்.”

கருப்பையா சிரித்துக்கொண்டே, “இதுக்கு பர்மீய மருந்து வேணுமா தமிழ் மருந்து வேணுமா” என்று கேட்டான். அவர் முகத்தைக் கடுகடுப்பாக வைத்துக்கொண்டு, “என்ன எழவு மருந்தாவது கொடு” என்றார். ஊரெங்கும் காட்டு மூலிகைகள் மலிந்து கிடந்தன. மருந்தை அரைத்துக்கொண்டுபோய்த் தந்தபோது, அவர், “உங்கப்பனா போட்டுவிடுவான், தடவிவிடுடா மசிரு” என ஏசினார்.

வை. கோவிந்தனுக்கு சூயி என்னும் பர்மீயப் பெண் ஒருத்தியுடன் தொடர்பிருந்தது. அவள் வெண் களிமண் பொம்மை போலவே இருந்தாள். அவளது பற்கள் விலகிவிலகியிருந்தன. அவர் மிக ரகசியமாக அவளது இருப்பிடத்துக்குப் போய் வருவதுமாக இருந்தார். அந்தத் தொடர்பில் இரண்டு குழந்தைகள் ஏற்பட்டிருந்தன. எப்போதாவது அந்தக் குழந்தைகளுக்குத் தலைமயிர் வெட்டுவதற்காக கருப்பையாவை அனுப்பும்போது அவர் “மூணாம் பேருக்குத் தெரியாம போயிட்டு வரணும்” என்று எச்சரிக்கை செய்து அனுப்புவார்

பர்மீயப் பெண்ணின் வீடு சரிவிலிருந்தது. அவள் எப்போதும் ஒரே விதமான மஞ்சள் பூக்கள் வரைந்த உடையை அணிந்துகொண்டி

ருப்பாள். அவளது தாடையையும் பற்களையும் பார்த்த மாத்திரத்திலே அவளுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட திருமணம் ஆகியிருக்க வேண்டும் என்று கருப்பையாவுக்குத் தோணியது. அவள் தனது சிகையைப் படியவாரியிருப்பாள். அவளது குழந்தைகளுக்கு மரத்தடியில் தலை மயிர் வெட்டிக்கொண்டிருக்கும்போது அருகில் அமர்ந்து பார்த்துக் கொண்டேயிருப்பாள். சீவியெறிந்த வெள்ளரிக்காயின் வாசனையைப் போல ஒரு வாசனை அவள் உடல் முழுவதும் வந்துகொண்டிருக்கும். அவளுக்குச் செட்டியாரிடமிருந்துதான் வெற்றிலை போடும் பழக்கம் வந்திருக்க வேண்டும். பற்கள் காவியேறியிருந்தன.

குழந்தைகளின் தலைமயிரை வெட்டிவிட்டு, துண்டை உதறிக் கொண்டு எழுந்தபோது அவள் சற்றும் கூச்சமில்லாமல் தனது தொடையில் படர்தேமல் போல ஏதோ இருப்பதாகச் சொல்லியபடி, சட்டெனப் பாவாடையை நெகிழ்த்திக் காட்டினாள். தொடையிலிருந்து முழங்கால் வரை தேமல் கருப்பாகப் படர்ந்து கிடந்தது. அவள் ஊறலுடன் அந்தத் தேமல் தன் உடலில் கால் வரை இறங்கிக் கொண்டிருப்பதாகச் சொன்னாள். கருப்பையா மருந்தரைத்துக் கொண்டுவந்து தருவதாகச் சொல்லிச் சென்றான். அவள் தனது பாவாடையை ஏற்றிக்கொண்டு கட்டியபடியே “இது செட்டியாருக்குத் தெரிய வேண்டாம்” என்றாள்.

கருப்பையா இரண்டு மூன்று நாள்களுக்கு ஒரு முறை மதிய நேரங்களில் மருந்து போட்டுவிடுவதற்காக அவளது வீட்டுக்குப் போய் வருவான். செட்டியார் இரவில் வந்து போவதால் அவருக்கு மேற்படி வைத்தியம் பற்றி எதுவும் தெரியாமலே இருந்தது. கருப்பையா வந்து போகத் தொடங்கிய சில நாள்களில் அவளது தேமல் மெதுவாக நிறம் மாறத் தொடங்கியிருந்தது. பர்மியப் பெண் தாமரைத் தண்டைப் போலவே உடல்வாகு கொண்டவளாக இருந்தாள். சில நேரங்களில் மருந்தைப் பூசிக்கொண்டு திறந்த உடலோடு வெயில் படும்படியாக ஜன்னலின் அருகே மரக்கட்டிலை இழுத்துப் போட்டுக்கொண்டு படுத்திருப்பாள். கருப்பையாவுக்கு அப்போது ஒரு பெண் உடலைப் பார்ப்பது போலவே இருக்காது. உரித்த சோளத் தட்டைப் போல இருக்கும். புரண்டு படுக்கும்போது பெகுவிலிருந்த ஆற்றில் வெட்டித் தூக்கிப் போடப்பட்ட மரங்கள் இதுபோலத்தான் பட்டைகள் உரிந்து வழவழவென மிதந்து வருவதைப் பார்த்திருக்கிறான். அவனுக் காகப் பீங்கான் கிண்ணங்களில் அவள் கொண்டு வந்து தந்த இனிப்புக் கஞ்சியைக் குடித்தபடியே வெற்றிலை போட்டுக் கொள்வான். பின்மதிய நேரங்களில் அவளது வீட்டில் குழந்தைகள் உறங்கியிருப்பார் கள். சில வாரங்களிலே அவளது தொடையிலிருந்த கருமை மறைந்து போயிருந்தது. ஆனாலும் ஒரு பழக்கம் போல கருப்பையா பின்மதிய நேரங்களில் அவளது வீட்டுக்கு வந்து சேர்வான். அதே மரக்கட்டிலில் படுத்துக்கொண்டபடி அவள் தலைமயிரைத் தரையை நோக்கிக் கவிழ விட்டபடி கண்களை மூடிக்கொண்டு படுத்திருப்பாள். ஏதாவது ஒரு மூலிகைச் சாற்றை அவளது வயிற்றிலோ, கால்களிலோ

தடவிவிட்டபடி கருப்பையா அருகில் உட்கார்ந்திருப்பான்.

கணக்குப் பிள்ளைகளில் ஒருவராகவிருந்த சாமிக்கண்ணுதான் இதை முதலில் கண்டுபிடித்திருக்கக் கூடும். அவர் கோவிந்தனை அழைத்துக்கொண்டு வந்து காட்டிய நாளில் கருப்பையா அவளது கால் நகங்களை வெட்டிவிட்டுக்கொண்டிருந்தான். அவள் குளித்து விட்டு வந்து துவட்டியபிறகும் ஈரம் உலராத வெளிர்ந்த தனது உடலைக் காட்டிக்கொண்டபடி கால் மேல் கால் போட்டவளாக அமர்ந்திருந்தாள். வை. கோவிந்தன் கோபத்துடன் வீட்டினுள் வந்து நிற்பதையோ, அவளைப் பார்த்துக் கொண்டிருப்பதையோ பற்றி அவள் பொருட்படுத்தாமல் விரல் நகங்களை வெட்டிவிடுவதை நிறுத்த வேண்டாம் என்று சொல்லியவளாக தலையைக் கோதிக்கொண் டிருந்தாள். கருப்பையாவைப் பிடித்து இழுத்து செவுளோடு அறைந்த கோவிந்தன் ஏகத்துக்குக் கத்திக்கொண்டிருந்தார். அந்தப் பெண் பர்மிய மொழியில் ஆத்திரம் ஏதுமில்லாமல் அமைதியாகச் சொன் னாள்,

"நான் ஒன்றும் உன் பெண்டாட்டியில்லை. உன் இஷ்டம் போல மிரட்டுவதற்கு. நீ எனக்குக் கொடுத்தது இரண்டு பிள்ளைகளும் சீக்கும்தான். சீக்கை குணப்படுத்தியது இந்த ஆள்தான் புரியுதா? இங்கே நின்றுகொண்டு கத்தாமல் வெளியே போ."

கோவிந்தன் ஆத்திரத்துடன் வெளியே கிளம்பி வந்தபிறகு நெடு நேரம் கருப்பையா அவளது வீட்டிலிருந்தான். அவள் சாவகாசமாக அவனிடம் சொன்னாள்,

"உனக்கு விருப்பமிருந்தால் என் கூடவே தங்கிக்கொள்."

கருப்பையா அவளிடம் தான் ஊரிலிருந்து வந்த நாளிலே பெகு விலிருந்த மினர்வா சலூனுக்குத் தன்னை வேலை அழைப்பதாகச் சொல்லிக் கிளம்பிச் சென்றான்.

பெகு ஒரு மாவட்டத்தின் தலைநகரம். அந்நகரில் ஒரேயொரு சலூன் மட்டுமேயிருந்தது. புகைவண்டி நிலையத்துக்குச் செல்லும் வழியிலிருந்த சீனனின் சாயாக்கடையின் மாடியிலிருந்தது மினர்வா சலூன். அந்த நாள்களில் ஜப்பானிய ராணுவத்தினருக்கு நெருக்கமாக இருந்த மம்மதுதான் சலூனின் உரிமையாளர். மம்மது எப்போதாவது இரவில் ஒரு ஜப்பானிய ராணுவ அதிகாரியுடன் சலூனுக்கு வருவார். மிகக் கொச்சையாக எவளையாவது பற்றி இருவரும் நெடுநேரம் பேசிச் சிரித்துக்கொண்டிருப்பார்கள். மற்ற நேரங்களில் திருப்பாலை ரத்னம் கையிலிருந்தது சலூன். அவன் பர்மா பெண் ஒருத்தியைச் சேர்த்து வைத்துக்கொண்டு வாழ்ந்துகொண்டிருந்தான். அவள் எப்போதும் சிவப்பு நிறக் குடையை விரித்துப் பிடித்துக்கொண்டு மட்ட ரகமானதொரு வாசனைத் திரவியத்தைப் பூசியவளாக மாலை நேரங்களில் சலூனுக்கு வந்து உட்கார்ந்துகொள்வாள். பையாஜியில்

சலூனுக்கு வரும் ஒரே பெண் அவளாகத்தான் இருக்கக் கூடும்.

அவளுடன் பேசுவதற்காகவே சில பர்மீயர்கள் சலூனுக்கு வருவார்கள். அவள் சுழல் நாற்காலியில் ஏறி உட்கார்ந்து கொண்டு சுற்றியபடி இடைவிடாமல் பேசிக்கொண்டிருப்பாள். பேச்சின் நடுவிலே கண்ணாடியில் தனது கண்களின் அடியில் கறுப்புப் படிந்து வருவதைக் கண்டவளைப் போல சிறிய ஊதா நிறக் கைக்குட்டையால் அழுத்தித் துடைத்துக்கொள்வதும் ஆலிவ் எண்ணெயை உள்ளங்கையில் ஊற்றிக் கண்களின் அடியில் தேய்ப்பதுமுண்டு. இரவில் சலூன் மூடும்வரை இருந்து அன்றைக்குச் சேர்ந்த பணத்தை எண்ணி வாங்கிக்கொண்டு ரிக்ஷாவில் வீடு திரும்பிப் போவாள்.

கருப்பையா மினர்வாவுக்கு வந்து சேர்ந்த பிறகு சவரம் செய்வதை விடவும் புத்தகங்கள் வாசிப்பதற்கு விருப்பமுள்ளவனாகிப் போனான். செட்டி வீட்டில் இருந்தபோதே அவன் எழுத்துக் கூட்டி வாசிக்குமளவு படித்திருந்தான். அதுவும் மினர்வா சலூனுக்கு வந்த பிறகு, வந்து போகும் ஆட்கள் ரகசியமாக எதையோ பேசிக்கொண்டும் படித்துக் கொண்டுமிருப்பதைக் கண்டதும் அவனுக்கும் படிக்க வேண்டும் போல் இருந்தது. ஒரு இரவில் சலூனை மூடிவைத்துவிட்டு ரத்னம் ரகசியக் கூட்டமொன்றிற்காகக் கிளம்பிப் போவதாகச் சொன்னான். கருப்பையா தானும் அவனுடன் வருவதாகக் கிளம்பிச் சென்றான். இருவரும் ஒரு பர்மீயப் பள்ளிக்கு வந்து சேர்ந்திருந்தபோது முன்னதாகவே சிலர் பள்ளியின் மரபெஞ்சில் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களில் டாக்டர் பருவாவும் இருந்தது ஆச்சரியமாக இருந்தது.

தன்னாபீனிலிருந்த பெரிய மருத்துவராயிற்றே என்று ஆச்சரியத்துடன் ரத்னம் அவரைப் பார்த்து வணக்கம் தெரிவித்தான். பத்துக்கும் மேற்பட்டவர்களே அதில் கலந்துகொண்டிருந்தார்கள். அவர்களில் வட்டிக்கடை லட்சுமணன், கண்டமனூர் ஆறுமுகம், சாத்தையா எனத் தெரிந்த முகங்கள் அதிகமிருந்தன. பருவா மெதுவான குரலில் லீக்குக்குப் புதுக் கிளைகள் ஆரம்பிக்க வேண்டும் என்றும், அதற்காக ஒவ்வொருவரும் ஒவ்வொரு இடத்துக்குப் புதிய கிளையை அமைப்பதற்காகப் போக வேண்டும் என்றும் சொன்னார். அவர்கள் எந்த இடத்துக்கு யார் போவது, யாரைத் தொடர்புகொள்வது என்பதைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். வரும் நாள்களில் ரகசியச் சந்திப்பு முழுவதும் மினர்வா சலூனில் நடப்பது உசிதமானது என்று முடிவானது. அப்போது சாத்தையா தன்னாபீனில் நிறைய தமிழ்க் குடும்பங்கள் இருக்கின்றன. அவர்களை சுதந்திர லீக்கில் தன்னால் இணைத்துவிட முடியும். ஆனால் அதற்கு யாராவது ஓர் ஆள் உதவிக்குத் தேவைப்படுவதாகச் சொன்னார். கருப்பையாவை அனுப்பி வைப்பதாக ரத்னம் தெரிவித்தபோது, கருப்பையாவுக்கு சந்தோஷமாகவே இருந்தது.

இரவில் சலூன் திரும்பிய பிறகு ரத்னம் தங்கள் அமைப்பைப் பற்றிய விவரங்கள் யாவையும் எடுத்துச் சொன்னான் இந்திய சுதந்தர லீக்குக்கு ரகசியமாகக் கிளைகள் பர்மா முழுவதும் உருவாகிக்

கொண்டிருக்கின்றன. ஜப்பானியர்கள் இதற்கு ஆதரவு தருகிறார்கள். பெரியதொரு படையை அமைத்து இந்தியாவிலிருந்து வெள்ளைக்காரர்களை விரட்டிவிட முடியும் என்றும் இதற்காக ஆயிரக்கணக்கான சிப்பாய்கள் தயாராகிக் கொண்டுவருவதாகவும் சொன்னான். கருப்பையாவுக்கு ஆச்சரியமாக இருந்தது.

மினர்வா சலூனிலிருந்து சாத்தையாவுடன் கருப்பையா புறப்பட்ட அன்று இத்தாலியில் யுத்தநிலை மாறிக்கொண்டிருப்பதாகத் தகவல் வந்துகொண்டிருந்தது. தன்னாபீனில் இருந்த தமிழ்க் குடும்பங்கள் பாதிப் பேர் கூலிவேலை செய்து கொண்டிருந்தார்கள். ஒன்றிரண்டு பேர் சாராயம் காய்ச்சுவதிலும், சிற்றுண்டிக் கடைகள் நடத்திக் கொண்டும் இருந்தார்கள். செட்டிக் குடும்பங்களும் நாலைந்து இருந்தன. தன்னாபீன் சிறிய டவுன்ஷிப் நகரம். ரயில் நிலையம் ஒன்றிருந்தது. பெகுவுக்கும் கையானுக்கும் செல்லும் ரயில்கள் ஒன்றோ இரண்டோ சென்று கொண்டிருந்தன. கருப்பையா லீக்குக்கு ஆதரவாக ஊரிலிருந்த மரவியாபாரிகள், காண்டிராக்டர்களைத் திரட்டுவதற்கு உதவி செய்துகொண்டிருந்தான். அவன் தங்குவதற்காக செந்நெல் குடியைச் சேர்ந்த ரத்னவேலு வீட்டில் ஒழுங்கு செய்திருந்தார்கள். லீக்கில் ஆட்கள் சேரத் தொடங்கியிருந்தார்கள். ஒரு நாளில் கவ்சாலாக் கேம்பிலிருந்து அதிகாரி ஒருவர் கூட்டத்துக்கு வந்திருந்தார். தாங்கள் ஒரு ரகசிய யுத்தம் ஒன்றிற்காகத் தயாராகி வருவதாகவும், தங்களது படைக்கு இந்தியத் தேசியப் படை எனப் பெயர் என்றும், இதற்காக மூன்று கேம்ப் இயங்கி வருவதாகவும் தெரிவித்தார். பன்னிரண்டு பேர் தாங்கள் கேம்புக்கு வருவதாக ஒத்துக்கொண்டார்கள். மறுநாளே அவர்கள் புறப்படுவதற்கான வழிகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

கருப்பையாவுக்கு இரவில் குடிக்காமலிருக்க முடியாது. பர்மீயப் பள்ளியை ஒட்டிய ஒரு இடத்தில் அவன் நாட்டுச் சாராயம் குடிப்பதற்காகப் போய்விடுவான். ஒரு இரவில் தன்னாபீனில் சாராயம் குடிக்குமிடத்தில் இருவருக்கும் இடையில் ஏற்பட்ட சச்சரவைத் தடுத்துப் பிரித்துவிட்டான் கருப்பையா. ஆனால் அன்றிரவில் சண்டையிட்டவனை யாரோ கொலை செய்திருந்தார்கள்.

காலையில் ஜப்பானிய வீரர்கள் ஒரு டிரக் நிறைய குவிந்து விட்டார்கள். ஊரில் ரகசியமாகச் சாராயம் விற்கும் விஷயம் தெரிந்துவிடக் கூடாதென்பதற்காக லீக்குக்கு ஆள் சேர்ப்பதில் ஏற்பட்ட தகராறு காரணமாகக் கொல்லப்பட்டுவிட்டதாகத் தகவல் தெரிவிக்கப்பட்டது. கருப்பையாவை ஜப்பானிய சிப்பாய்கள் பேனட்டால் தலையோடு சேர்த்து அடித்து இழுத்துக்கொண்டு போனார்கள். அவனை ரங்கூனுக்குத்தான் கொண்டு போகிறார்கள் என்பதை அறிந்த சாத்தையா உடனே பெகுவுக்குப் புறப்பட்டு மினர்வா சலூனுக்குச் சென்றான் தன்னாபீனிலிருந்து ரங்கூன் வருவதற்கு இரண்டு நாள்களாக ரயில் போக்குவரத்து இல்லாமல் இருந்தது. இதனால் அவனை லாஞ்சியில் அழைத்துக்கொண்டு

சென்றார்கள்.

டாபீனில் இருந்த ஜப்பானியர்களின் பாதுகாப்பு அலுவலகம் ஒன்றுக்கு அழைத்துக்கொண்டு வரப்பட்ட அவனை, தங்குவதற்காக ஒரு பழைய கட்டடத்தின் உள்ளே அழைத்துக்கொண்டு வந்தார்கள். அங்கே யுத்தத்தில் கைப்பற்றப்பட்டிருந்த இரும்புப்பொருள்கள், உடைந்த துப்பாக்கிகள், தலைக் கவசங்கள் இருந்தன. இரவு அவன் ஒரு தலைக்கவசத்தைத் தலைக்கு வைத்தபடி படுத்துறங்கினான். காலையில் வந்த ஜப்பானிய அதிகாரி அவனை எந்த ஊர் என்று கேட்டபோது, கருப்பையா "பெகு" என்று மெதுவாகச் சொன்னான். ஜப்பானியன் லீக்கில் யார் யாரெல்லாம் சேர்ந்திருக்கிறார்கள் என்னும் விவரங்களைக் கேட்டுக் கொண்டிருந்தான். கருப்பையா பதில் சொல்லவேயில்லை.

அவனை விசாரணைக்காக பசுமந்தானிலிருந்த கோர்ட்டுக்கு அழைத்துக்கொண்டு வந்தபோது வழியில் ரத்னமும் ஒரு ஜப்பானிய அதிகாரி ஒருவனும் நின்று பேசிக் கொண்டிருப்பதைக் கவனித்தான். ரத்னம் கண்சாடையிலே அவனை வெளியே கூட்டி வந்துவிடுவதாகச் சாடை காட்டினான். கோர்ட் தொடங்கிய சில நிமிஷங்களுக்குப் பிறகு மூன்று நட்சத்திரங்கள் பொறித்த ஜப்பானியப் படையதிகாரி யொருவன் கோர்ட்டுக்குள் பிரவேசித்து கருப்பையாவின் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு விடுவிடுவென வெளியே வந்தபோது கோர்ட்டில் சிறிய முணுமுணுப்புகூட எழவில்லை. பர்மீய வக்கீல் ஒருவன் மட்டும் வாசல் வரை வந்து எங்கே அழைத்துக்கொண்டு போகிறார்கள் என்று பார்த்துக் கொண்டிருந்தான். கருப்பையாவையும் ரத்னத்தையும் தன்னோடு காரில் அழைத்துக்கொண்டு வந்த ஜப்பானி யன் காரில் ஏறியது முதல் சிரிக்கத் தொடங்கினான். ரத்னம் தானும் சேர்ந்து சிரித்துக்கொண்டான். ஜப்பானியன் ரத்னம் முதுகில் அடித்தபடி பர்மீயப் பெண் ஒருத்தியின் பெயரைச் சொல்லி அவளை மட்டும் எப்படியாவது கேம்புக்கு வரச் சொல்லிவிடு என்று சொல்லிச் சிரித்துக்கொண்டான்.

அதன் பிறகு கருப்பையா மினர்வா சலூனை விட்டு வெளியேறிப் போகவேயில்லை. ஆனால் அவனுக்கு ரத்னத்தின் துணையாக இருந்த பெண்ணின் மீது எரிச்சலும் ஆத்திரமுமாக வந்தது. அவள் எப்போதும் ஒரு கள்ளப்பார்வையிலே யாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தாள். சில வேளைகளில் சலூனுக்கு வரும் பர்மீயன் எவனது தோளையாவது கட்டிக்கொண்டு முகத்தைத் தடவி விட்டுக் கொண்டிருப்பாள். இதைப் பார்க்கும்போது கருப்பையாவுக்கு ஆத்திரமாக இருக்கும். அதிலும் பால்யம் மறையாத சிறுவனைப் போல இருந்த ஒரு பர்மீயனுக்கு அவள் ரகசியமாகப் பணம் தருவதைப் பார்த்துவிட்ட பிறகு அவளுக்குக் கருப்பையாவைப் பிடிக்காமல் போயிருந்தது. கம்பேயிலிருந்த கேம்புக்காக ரத்னம் திடீரென ஒரு நாள் புறப்பட்டுப் போனபோது, கருப்பையாவுக்கும்

அந்த பர்மீயப் பெண்ணுக்கும் சச்சரவு உண்டானது. அவள் தனது தோளில் போட்டுவந்த மெலிதான நீலநிறத் துப்பட்டாவைக் கருப்பையா தலைமயிர்களுடன் சேர்த்துப் போட்டுவிட்டதாகக் கூச்சலிட்டாள். கருப்பையா ஆத்திரத்தில் அவள் மீது தைலப் புட்டியிலிருந்த தைலம் முழுவதையும் கொட்டினான். அவள் கைகால் கள் நடுங்க தெருவில் நின்றபடி கூச்சலிட்டாள். இரவில் சலூனில் கருப்பையா தங்கியிருந்தபோது அவளது சகோதரர்கள் என்று சொல்லிக்கொண்ட இருவர் வெளியே நின்று குடிவெறியில் கத்திக் கொண்டிருந்தார்கள். ரத்னம் வீட்டுக்குத் திரும்பியதும் பர்மீயப் பெண் நடந்ததைச் சொல்லியிருக்க வேண்டும். அவன் கடைக்கு வந்ததும் கருப்பையாவின் கையைப் பிடித்து முறுக்கிச் செவுளோடு அறைந்தபடி சலூன் அவளுடையதுதான், அவள் சொல்வது போல வேலை செய்யப் பிரியமில்லாவிட்டால் வெளியேறிப் போய்விடு என்று கழுத்தைப் பிடித்துத் தள்ளினான். கருப்பையாவுக்கு ஆத்திரமாக வந்தது. அப்படியே கப்பலேறி ஊருக்கு வந்துவிடலாமே என்று யோசித்தான். அப்போதுதான் தன்னாபீனிலிருந்த செல்வம் அவனைப் பார்த்துத் தன்னோடு லீக்கின் புரோபகேண்டா யூனிட்டுக்கு வந்து விடும்படியாகச் சொன்னார்.

கருப்பையா அந்த யூனிட்டுக்குச் சேரும் நாளில் என்னைச் சந்தித்தான். ஊரில் எனது சகோதரி வீட்டுக்கும் அவனுக்கும் இணக்கமில்லாமல் போயிருந்ததால் அவன் ரங்கூனில் என்னைச் சந்திப்பதையும் விலக்கிக்கொண்டு வந்தான். ஆனாலும் அன்றிரவு அவன் பெகுவிலிருந்த பாக்சிங் கிளப்பின் கீழே என்னைச் சந்தித்தான். இருவரும் ஆளுக்கொரு போத்தல் மதுவருந்தினோம். பிறகு கருப்பையா மரக்கடை செட்டி வீட்டில் இப்போதும் சவரம் செய்வதற்குச் சரியான ஆள் இல்லை என்பதால் அங்கே வேண்டுமானால் போய் இருக்கலாம், நல்ல சம்பளம் கொடுப்பார்கள் என்றான். நான் அப்போது டாபீனிலிருந்த அஜந்தா சலூனில் வேலை பார்ப்பதால் அதை விட்டுவிட முடியாது என்று சொன்னேன். இருவரும் சில நிமிஷங்கள்தான் பேசியிருக்கக்கூடும். அவன் லீக்கின் பிரசார யூனிட் டில் தான் சேர்ந்துவிட்டதாகவும் இதற்காக கம்பேயில் உள்ள பயிற்சி முகாமுக்குச் செல்வதாகச் சொன்னான்.

அவன் சில நாள்களுக்குப் பிறகு கருப்பையா கம்பையிலிருந்த நகரத்தார் உயர்நிலைப் பள்ளியிலிருந்த எஸ்.ஒய்.டி.ஐ. கேம்புக்குச் சென்றிருந்தான். பிரச்சார முகாமுக்குச் செல்பவர்கள். தற்காலிகமாக சில நாள்கள் இங்கே பயிற்சி பெறுவார்கள். பிறகு அவர்கள் பவுட் டோவிலிருந்த முகாமுக்கு மாற்றப்படுவார்கள். முகாம் விரிவான இடத்தில் அமைக்கப்பட்டிருந்தது. பெரிய விளையாட்டுத் திடல், அத்தோடு தங்குவதற்கான இடம் வலதுபுறமொரு மருத்துவச்சாலை, அங்கேதான் எஸ்.ஒய்.டி.ஐ.யின் தலைமையகம் இருந்தது. கருப்பையா அங்கிருந்த சில நாள்கள் முழுவதும் காய்ச்சல் வந்தவனாகப் படுத்திருந் தான். அவனை பவுட்டோ கேம்புக்கு அனுப்புவதா வேண்டாமா

என்று யோசனையாக இருந்தார்கள். அவனால் நிற்பதற்கே முடியாத நிலையிலிருந்தது. ஆனாலும் கருப்பையாதான் பவுட்டோவுக்குப் போவதாகப் பிடிவாதமாக இருந்தான். இரண்டு வாரங்களுக்குப் பிறகு பவுட்டோ கேம்புக்கு மாற்றப்பட்டான். அவன் முகமே மாறியிருந்தது. கண்களில் எப்போதும் இல்லாத ஓர் ஆத்திரம் நெளிந்துகொண்டிருந்தது.

பவுட்டோ முகாம் தேக்சானுக்கு அருகாமையிலிருந்தது. இதுவும் ரங்கூனின் புறநகர்ப் பகுதிதான் என்பதால் ஆள் நடமாட்டம் குறைவாகவே இருந்தது. கேம்புக்குப் பொறுப்பாளராக ஒரு பஞ்சாபி இருந்தார். அவர் இரவில் எவருக்கும் தெரியாமல் கேம்பை விட்டு வெளியேறி குடித்துவிட்டு வருவார். கருப்பையா பயிற்சிகளில் அதிகம் ஈடுபாடு காட்டவில்லை. அவன் தன்னை பிரசாரக் குழு விலிருந்து மருத்துவக் குழுவுக்கு மாற்றிவிடும்படியாகச் சொல்லிக் கொண்டிருந்தான்.

ஆறு ஏழு மாதங்கள் பிரசாரக் குழுக்கள் செல்லும் இடங்களுக்கெல் லாம் அவன் சென்றுகொண்டிருந்தான். மாண்டலேக்கு பிரசாரக் குழு சென்றபோது கருப்பையா, வை.கோவிந்தனுடனிருந்த பர்மீயப் பெண்ணான சூயியைத் திரும்பவும் சந்தித்தான். அவள் ஒரு சிப்பாய் உடன் டிரக்கில் சென்றுகொண்டிருந்தபோது கருப்பையாவைக் கண்ட மாத்திரத்தில் ஜப்பானியச் சிப்பாயிடம் தனக்கு உதிரப்போக்கு இருப்பதாகச் சொல்லியபடி இறங்கி வந்தாள். அன்றிரவு அவள் கருப்பையாவைத் தனது இருப்பிடத்துக்குக் கூட்டிப் போனாள் கருப்பையா தான் பிரசாரக் குழுவோடு வந்திருப்பதால் அவளுடன் இரவில் தங்கியிருக்க முடியாது என்று சொன்னான். அவள் தன்னிட மிருந்த வெள்ளி முழுவதையும் படுக்கையில் கொட்டியவளாக மோல்மீனில் தனக்குத் தெரிந்த ஒரு நபரின் இடமிருக்கிறது, அவன் விரும்பினால் அங்கேயே ஒரு சலூனை அமைத்துக் கொண்டு வாழ்ந்துகொண்டிருக்கலாம். அவனுக்கு லீக்கின் சவகாசம் தேவை யில்லை என்றாள். கருப்பையா அன்றிரவு அவளோடு தங்கியிருக்க வில்லை. ஆனால் சில நாள்களில் அவன் பிரசார குழுவிலிருந்து காணாமல் போயிருந்தான் அவன் மோல்மீனில் அதே மினர்வா சலூன் என்னும் பெயரில் சலூனை அமைத்துக் கொண்டதை எவரிடமும் தெரிவிக்கவில்லை. பர்மீயப் பெண் சூயி அவனுக்காக ஒரு மர வீட்டை வாடகைக்குப் பிடித்திருந்தாள் அவளோடு வாழத் தொடங்கிய சில நாள்களிலே அவனது மினர்வா சலூன் பிரசித்தி பெறத் தொடங்கியது. கருப்பையாவைப் போலவே அவளும் சலூனுக்கு வருபவர்களுக்கு முகச்சவரம் செய்துவிடுவதும் குழந்தை களுக்குத் தலை மயிரை வெட்டிவிடுவதையும் செய்து கொண்டிருந் தாள். பிரசாரக் குழுவினர்கள் அவனைத் தேடிக்கொண்டிருப்பார்கள் என்ற பயம் அவனுக்கு எப்போதும் இருந்துகொண்டேயிருந்தது.

அதன் காரணமாகவே அவன் என்னைக் கடிதம் எழுதி மீல்

மோனுக்கு வரும்படியாக அழைத்தான். மீல்மோனில் இருந்த சலூனில் நான் அவர்களுடன் வேலை செய்து கொண்டிருந்தேன். எல்லா பர்மீயப் பெண்களைப் போலவே அவளும் ஆண்களுடன் பேசுவதற்கும் சிரிப்பதற்கும் மனத்தடையற்றவளாக இருந்தாள். இது கருப்பையாவுக்கும் அவளுக்கும் தினமும் சச்சரவை உண்டாக்கிக் கொண்டிருந்தது. அவளைக் கண்காணிக்கும்படி என்னிடம் ரகசியமாகக் கருப்பையா சொல்லியிருந்தான். ஒவ்வொரு இரவிலும் அவள் யாரோடு பேசினாள் என்பது பற்றி ரகசியமாக விசாரிப்பான். சில வேளைகளில் இதற்காக நான் அவள் பின்னாலே அலைந்து திரிந்திருக்கிறேன். கருப்பையாவுக்கு அவள் தன்னை விட்டுப் போய்விடுவாளோ என்ற பயமிருந்திருக்க வேண்டும். அதுபோலவே அவள் சில நாள்களின் அதிகாலையில் எழுந்து வெளியே போய் விடுவதையும் திரும்பி வரும்போது கையில் பிரம்புக் கூடையொன்றைக் கொண்டு வருவதையும் கண்டிருக்கிறேன். அவள் வழிபாட்டுக்காகச் செல்கிறாள் என்று சொல்லிய போதும் கருப்பையா அதை நம்பவில்லை.

ஓர் இரவில் அவன் குடிவெறியில் அவளைப் போட்டு அடித்திருக்க வேண்டும். சலூனிலிருந்த கண்ணாடியில் தனது முதுகிலிருந்த காயங்களைப் பார்த்துக்கொண்டிருந்தாள். கடைக்குள் வந்த வேகத்தில் கருப்பையா அவளது முதுகில் அறைந்தபடி கத்தினான். இருவரும் சண்டையிட்டார்கள். அவள் ஆத்திரம் அதிகமாகி “நான் உன் பெண்டாட்டியில்லை அதிகாரம் செய்வதற்கு” என்று வெளியேறிப் போனாள். அவள் பின்னாடியே போன கருப்பையா அன்று முழுவதும் அவளைச் சமாதானம் செய்திருக்க வேண்டும்.

யாரோடும் அவள் பேசக் கூடாது என்று சத்தியம் வாங்கிக் கொண்டான். ஆனாலும் பகலும் இரவும் அவள் கருப்பையாவின் கண்காணிப்பிலே இருக்க வேண்டிய அவசியமிருந்தது. அவள் ஒரு முறை ஐராவதி ஆற்றில் வெள்ளப்பெருக்கு வந்திருப்பதைப் பார்ப்பதற்காகப் போக வேண்டும் என்றாள். கருப்பையாவுக்கு ஆத்திரத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. வெள்ளத்தை எதற்காக இவள் போய்ப் பார்க்க வேண்டும் என்று கத்தினான். அவள் எவரிடமும் சொல்லிக்கொள்ளாமல் வீட்டிலிருந்து கிளம்பிப் போயிருந்தாள். மறுநாள் காலையில் சலூனுக்கு வந்து என்னையும் அழைத்துக்கொண்டு கருப்பையா மாண்டலேக்குப் புறப்பட்டான். இருவரும் ஐராவதி ஆற்றுப் பாலத்தினருகே போனபோது வெள்ளம் கரைபுரண்டு ஓடிக்கொண்டிருந்தது. கடல் ஒன்று திசைமாறி ஓடுவது போல சீற்றத்துடன் போய்க் கொண்டிருந்தது. அவள் மரப் பாலத்திலிருந்து சூயி சூயி என்று கத்தினான் கருப்பையா. இரவில் கையைப் பிடித்து இழுத்த போதும் அவன் ஆற்றுப் பாலத்தை விட்டு வரவேயில்லை. சில நாள்களுக்குப் பிறகு கருப்பையா மனச்சோர்வுடன் சலூனை என்னிடம் ஒப்படைத்துவிட்டு அவளைத் தேடிச் செல்லத் தொடங்கினான்.

அதன் பிறகு நான் கருப்பையாவைப் பார்க்கவில்லை. ஆனால் சில நாள்களுக்கு முன்னதாக பையாஜிக்கு வந்து சேர்ந்ததாகவும் நோயாளியைப் போல் இருந்த அவன் ஒரு ஜப்பானிய சிப்பாயின் மூலமாகவேதான் வேலைக்குச் சேர்ந்ததாகவும் சொன்னார்கள். எதற்காக அவன் கொல்லப்பட்டான் என்பதைப் பற்றி எவரும் தெரிந்து வைத்திருக்கவில்லை. ஆனால் யாரோ ஒரு பர்மீயன் அவனைப் பார்க்க வந்ததாகவும் இருவரும் மரங்களுக்கிடையில் நடந்தபடி பேசிக் கொண்டிருந்ததைப் பார்த்ததாகவும் ஒரு வேலையாள் சொன்னான். அன்று மாலைதான் கருப்பையா கொல்லப்பட்டிருக்க வேண்டும். தண்டவாளம் பெயர்த்து எடுத்துவிட்டு யாவரும் ரயிலுக்காகத் திரும்பிய வேளையில் ஒருவன் கருப்பையா இறந்து கிடப்பதாகக் கத்தினான். சிப்பாய்கள் அவன் உடலைப் புரட்டிப் பார்த்தபோது உதட்டிலிருந்து ரத்தம் கசிந்து வந்துகொண்டிருந்தது. மண் முகத்தில் அப்பியவனாக விழுந்து கிடந்தான் கருப்பையா. அவனது பெயரும் ஊரும் தெரியாதவர்களாக விசாரித்தபோது பெகுவிலிருந்த எவரோ சொல்லி என்னைத் தேடி வந்திருந்தார்கள்.

மாலை நேரம் வடியத் தொடங்கியிருந்தது. கூட்ஸ் ரயிலில் அவன் உடலை ஏற்றிக்கொண்டுபோய் யாரிடம் ஒப்படைப்பது என்று ஜப்பானியர்கள் கேட்டுக்கொண்டிருந்தார்கள். நான் அவனது உடலை வாங்கிக்கொள்வதற்கு யாரும் கிடையாது, இங்கேயே புதைத்து விடுங்கள் என்று சொன்னேன். அவர்கள் மிகுந்த தயக்கத்துடன் இங்கே வேண்டாம் பையாஜிக்கு எடுத்துச் சென்று புதைத்துவிடுவோம் என்றார்கள். அதன்படியே பையாஜியிலிருந்த கல்லறைத் தோட்டமொன்றில் நாங்களே புதைகுழியொன்றைத் தோண்டி அவன் உடலைப் போட்டு மூடினோம். இரவில் ஜப்பானிய அதிகாரி, நான் அவனது உறவினன்தானா என்று திரும்பவும் சோதித்துவிட்டு அவனது குடும்பத்தவருக்காக ஐம்பது ரூபாய் பணம் கொடுத்தான். நான் மறுநாள் பெகு திரும்பும்வரை கருப்பையாவைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தேன். வீடு திரும்பிய பிறகு எல்லோரையும் போலவே என்னோடும் வாழ்ந்துகொண்டிருந்த பர்மீயப் பெண் கேட்டாள்,

“ஆள் அடையாளம் தெரிந்ததா?”

“தெரியவில்லை. எங்கோ மாண்டலே பக்கமுள்ள ஆள்” என்றேன். அவள் எப்போதும் போல நறுமணமிக்க தைலப் புட்டியை என் கையில் கொடுத்தபடி வெயிலைப் பார்த்தபடி பெஞ்சை போட்டுக் கொண்டு படுத்துக்கொண்டாள் வெயில் அவள் மீது ஊர்ந்து கொண்டிருந்தது. நான் உடலில் தைலம் தடவியபடியே மெதுவாக சூயி சூயி என்று அழைத்துக் கொண்டிருந்தேன். அவளது சிரிப்புச் சப்தம் மெதுவாகச் சொட்டிக்கொண்டிருந்தது. பிறகு அவள் எழுந்து குளிப்பதற்காக நடந்து சென்றுவிட்டாள். அவள் நிழல் மறையும்வரை பார்த்துக்கொண்டேயிருந்தேன்.

சற்றே கூச்சத்துடன் அவள் குளித்துவிட்டு வெளியே வருவதற்கு

முன்பாக ரகசியமாக உங்களிடம் மட்டும் இதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பர்மீயப் பெண்கள் பேரழகிகள். அதிலும் இந்த சூயியின் மயக்கம் உங்களால் சொல்லித் தெரிந்து கொள்ள முடியாதது. கருப்பையாவிடமிருந்து அவளைப் பிரித்து என் வசமாக்கிக் கொள்வதற்காக நான் எத்தனை காரியங்கள் செய்தேன் என்பது இப்போது அவசியமற்றது. சூயி ஒரு நறுமணம். அது என் கைகளுக்கு அடித்துக் கொண்டேயிருக்க ஆசைப்பட்டது தவறா என்ன ?

என்னோடுதான் சூயி சேர்ந்திருக்கக் கூடும் என்று கருப்பையா சந்தேகத்துடன் இங்கே சில நாள்களுக்கு முன்பாக வந்து போயிருக்கிறான். அதிலும் சூயியோடு ரகசியமாக நெடுநேரம் தனியே பேசிக் கொண்டிருந்துவிட்டுப் போயிருக்கிறான். என்னிடம் இவள் சொல்லவேயில்லை. ஆத்திரத்தில் பையாஜிக்குச் சென்று அவனை நான்தான் கொலை செய்தேன்.

சூயி குளித்துவிட்டுத் திரும்பிவிட்டாள். பாருங்கள், அவள் உடலில் சிறு கோடுகள்கூட இல்லாமல் தவளையின் அடிவயிற்றைப் போல அவளுடல் மிருதுவாக இருப்பதை விட்டு எப்படி விலக முடியும். சூயியை நீங்கள் எப்போதாவது தொட்டு உணரும்போது ஒருவேளை எனது குற்றத்தின் அவசியத்தை நீங்களும் உணரக் கூடும்.

காட்சிப் பிழை

ஆத்தியம்மாளுக்குத் திருமணம் நடந்தபோது பன்னிரண்டு வயதே முடிந்திருந்தது. ரத்த உறவு விட்டுப்போகக் கூடாதென்பதற்காகவே அவளைத் தாய்மாமன் கம்மையாவுக்கே மணம் முடிந்திருந்தார்கள். அதனால் பிறந்த ஊரை விட்டு ஒருபோதும் வெளியேறிப் போனதேயில்லை. ஆத்தியம்மாள் திருமணமாகி வந்த வீட்டில் விசாய வேலைகள் வருடம் முழுவதும் இருந்துகொண்டிருந்தன. அதிலும் எட்டுக் கோட்டை விதைப்பாடுள்ள நிலமும் உழவு மாடுகளும் பசுக்களுமிருந்தன. வீட்டில் வேறு பெண்கள் இல்லாததால் வீட்டு வேலைகளை அவள் தனியொரு ஆளாகச் செய்தாக வேண்டிய அவசியமிருந்தது. கம்பையாவின் தாயார் வாய் பேச முடியாதவள் என்பதால் ஒவ்வொரு வேலைக்கும் ஆத்தியம்மாளின் பெயரையே சொல்லி ஆளாளுக்குக் கூப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். கம்பையாவின் தம்பிகள் நால்வரும், நெடுநெடுவென வளர்ந்துவிட்டபோதும், சமையற்கட்டில் வந்து எதையும் சாப்பிடக் கேட்பதில்லை. தயங்கித் தயங்கி திண்ணையிலே உட்கார்ந்திருப்பார்கள். பசியறிந்து ஆத்தியம்மாள்தான் சாப்பாடு போட வேண்டும். வீட்டு நாயிலிருந்து பிச்சைக்காரர்கள் வரை அவளைத் தேடாதவர்கள் கிடையாது. வீட்டு வேலைகளை முடித்துவிட்டுக் காட்டு வேலைகளுக்கு வேறு அவள் போக வேண்டும். அதிலும் மிளகாய்ப் பழம் பொறுக்கும் வேலை நடந்துகொண்டிருந்த நாள் என்பதால், அவளும் தானும் ஒரு முறை வைத்துக்கொண்டு காலையிலே மிளகாய்ப் பழம் பிடுங்கப் போய்விடுவாள். அன்று பழம் பிடுங்கு

வதற்காகப் போனபோது மற்றப் பெண்கள் பாதி பறித்துப் போயிருந் தார்கள். அவசர அவசரமாக பழம் பறிக்கத் தொடங்கினாள் ஆத்தியம்மாள்.

மடி நிறைய பழம் சேர்ந்துவிட்டதாக நிமிர்ந்தபோது அவளோடு சேர்ந்து குனிந்திருந்த ஆகாசமும் சட்டென நிமிர்ந்து மேலே போய் விட்டிருந்தது. மடியை அவிழ்த்துச் சாக்கில் தட்டிவிட்டு வரும்போது பார்த்தாள். கிழக்கு மூலையில் ஒரு மிளகாய்ச் செடியில் ஒரு பழம் தப்பிப் போயிருந்தது. அருகில் சென்று விரலால் பழத்தைக் கிள்ளினாள். விரல் காம்பில் படுவது தெரிந்தது. ஆனால் பிடுங்க முயற்சித்தால் கையில் பழம் வரவில்லை. நாள்பட்ட பழமாகவிருக்குமா என்று பழத்தின் மீது நகத்தால் கீறிப் பார்த்தாள். நீர்க்கசிவிருந்தது. இப்போதுதான் பழுத்துச் சிவந்திருக்கிறது, பின் ஏன் பறிக்க முடிய வில்லை, தனக்குத்தான் விரல்கள் நோவுகின்றதா என்று நினைத்துக் கொண்டு நன்றாக விரலால் கிள்ளி எடுக்க முயன்றாள். பழம் காம்பிலிருந்து உதிரவேயில்லை. அவளுக்கு ஆத்திரமாக வந்தது. இத்துனியூண்டு செடியாக இருந்துகொண்டு ஏன் இத்தனை வீம்பு காட்டுகிறது எனத் தானே ஏசிக்கொண்டு முழு பலத்தையும் காட்டிப் பறிக்க முயன்றாள். மிளகாய்ப் பழம் கைக்கு வரவேயில்லை. அவளுக்குப் புரியவேயில்லை.

வேகவேகமாகக் கிணற்றடிக்குச் சென்று பன்னறுவாளைக் கையில் எடுத்துக்கொண்டு வந்தாள். காம்போடு பழத்தை அறுத்தாள். கத்தி காம்பில் பட்டு வெளியேறியது. ஆனால் பழம் உதிரவில்லை. காம்பில் தொங்கிக்கொண்டேயிருந்தது. அவளுக்குக் குழப்பமாக இருந்தது. என்ன எழவு இது? ஆத்திரமாக வந்தது. பழத்தைப் பிடுங்கி எடுப்பதற்காகத் தனக்குத் தெரிந்த வழிகள் ஒவ்வொன்றாகச் செய்யத் தொடங்கினாள். மற்றவர்கள் தெற்கு மூலை வரை பறித்துப் போட்டுத் திரும்பியபோதும் அவளால் அந்த ஒரு மிளகாய்ப் பழத்தைப் பிடுங்க முடியவேயில்லை. தனது தோல்வியை ஒத்துக் கொண்டு மற்றவர்களைக் கூப்பிட்டுச் சொல்லவும் மனசில்லாமல் அவள் அந்த இடத்திலே நின்று கொண்டிருந்தாள். இருட்டு வரை அவள் மிளகாயைப் பிடுங்கப் பார்த்தும் முடியவில்லை. இரவு வீடு திரும்பிய பிறகு சோளத்தை இடித்துப் போட்டுக் கஞ்சி காய்ச்சிக்கொண்டிருந்தபோதும் அவள் மனதில் அந்த ஒரேயொரு மிளகாய் தனியே தொங்கிக் கொண்டேயிருந்தது. மறுநாள் விடிகாலை யில் அவள் விடுவிடுவெனத் தோட்டத்துக்கு நடந்து போனாள். அங்கே ஈரக்காற்றில் தனியே ஆடிக்கொண்டிருந்தது மிளகாய்ப் பழம். உக்கிரமாக அதைப் பிடுங்கி எடுக்க முயன்றாள். அந்தப் பகலும் அவளால் பிடுங்கி எடுக்க முடியவில்லை. அதன் பிறகு இரவு பகல் எனப் பேதமின்றி அவள் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் அந்த மிளகாயைப் பறிப்பதற்காக முயற்சித்துக் கொண்டே இருந்தாள். ஒருவேளை தான் ஏதாவது சுத்தமில்லாத காரியம் செய்திருக்கக்கூடும், அதனால்தான் பழம் தன்னிடமிருந்து

தப்புகிறதோ என யாருக்கும் தெரியாமல் அவள் குலநாச்சியாருக்குப் படையல் செய்து பூஜையும் வைத்துப் பார்த்துவிட்டாள். எதற்காக இத்தனை வீறாப்புடன் காற்றில் ஆடிக்கொண்டிருக்கிறது அந்த மிளகாய்ப் பழம் எனத் தெரியவேயில்லை. நாலு மாசம் விட்டு வைத்தால் தானே காய்ந்து சண்டாகி உதிர்ந்துவிடும் என மனச் சமாதானம் செய்தபடி அவள் மிளகாயைச் செடியிலே விட்டு வைத்தாள்.

ஆனால் வீட்டிலிருந்த கம்பையாவும் அவன் தம்பிகளும் நாளுக்கு நாள் ஆத்தியம்மாளின் குணம் மாறிக்கொண்டே வருவதையும் காரணமில்லாமல் தங்கள் மீது எரிச்சலாகி வருவதையும் கவனித்துக் கொண்டு வந்தார்கள். அவள் தோட்டத்துப் பக்கம் போகும்போது தனது சினத்தைக் காட்டிக்கொள்ளாமல் அவசர அவசரமாகக் கடந்து போனாள். நாள் கடக்கக் கடக்கக் கூலிவேலை செய்யும் பெண்களை வாய் ஓயாமல் ஏசிக்கொண்டிருக்கத் தொடங்கினாள். எப்போதாவது ஒரு முறை அவள் கண்கள் தானறியாமலே மிளகாய் தொங்கிக்கொண்டிருக்கிறதா வாடிவிட்டதா என்று பார்க்கும். எந்தச் சலனமுமில்லாமல் மிளகாய்ப் பழம் இந்த நாளின் காலையில் பழுத்தது போலத் தொங்கிக்கொண்டிருந்தது. காலத்தாலும் மிளகாயைப் பறிக்க முடியவேயில்லை. வருடங்களும் மாதங்களும் உதிர்ந்து போயின. ஆத்தியம்மாளுக்கு ஏழு பிள்ளைகள் பிறந்து அவர்களும் வளரத் தொடங்கினார்கள். எப்படியோ எல்லா வேளாண்மையும் தாண்டி தப்பிய ஒற்றைச் செடியாக அந்த மிளகாய்ச் செடி இருந்து கொண்டேயிருந்தது. தனது சுபாவம் மாறிய ஆத்தியம்மாள், அது சாதாரணச் செடியல்ல, ஏதோவொரு காட்டுத் தெய்வம் மிளகாயைத் தன் கைகளில் வைத்துக் காப்பாற்றிக்கொண்டு வருகிறதென முடிவு செய்தவளாக அதைக் கடந்து போகும்போது ஒவ்வொரு முறையும் கும்பிட்டுக் கொள்வாள்.

ஆனால் ஒரு நாளும் இதைப் பற்றி யாரிடமும் சொன்னது கிடையாது. காலம் அவள் கூந்தலின் நிறத்தை மாற்றியது. உடல் நரம்புகளைத் தளரச் செய்தது. ஆனாலும் அவள் காட்டு வேலைகளில் இருந்து விடுபடவேயில்லை. மண்ணும் அங்கிருந்த சிறு செடிகளும் கூட அவளுக்கு வியப்பாகத் தோன்றத் தொடங்கின. ஆத்தியம்மாள் ஒரு நாளில் கூலிவேலை செய்பவர்களிடம் சொன்னாள். "இந்த மண்ணும் தண்ணியும்தாண்டி மிளகாய்ப் பழமாக, வெங்காயமா, வெள்ளரிப் பிஞ்சா மாறுது. பாக்க வேறு வேறு மாதிரி ரூபம் காட்டுதே தவிர, எல்லாம் மண்ணும் தண்ணியும்தான்." வேலைக்காரப் பெண்கள் பெரியவ்வா ரொம்பவும் ஞானமுள்ளவள் எனத் தனியாகப் பேசிக்கொண்டார்கள்.

பின்னொரு நாள் அதிகாலையில் மிளகாயைக் கடந்து போகும் போது ஒரு முறை பறித்துப் பார்க்கலாமே என்று ஆத்தியம்மாளுக்குத் தோணியது. யாரும் தன்னைக் கவனிக்கிறார்களா என்று பார்த்தபடியே

பழத்தைத் தன் முரட்டு நகத்தால் பற்றியிழுத்தாள். ஆச்சரியமாக அவள் உள்ளங்கையில் துண்டிக்கப்பட்டு இருந்தது மிளகாய்ப் பழம். சந்தோஷம். அதே நிறத்தில் அப்படியே தொங்கிக் கொண்டிருந்தது மிளகாய்ப் பழம். திகைப்புடன் அவள் தன் கையிலிருந்த பழத்தைப் பார்த்தாள். அதும் காம்பிலிருந்த பழம் போலவேயிருந்தது. எப்படி எனத் தெரியாத குழப்பத்துடன் செடியைப் பார்த்துக்கொண்டிருந் தாள். எப்போதும் போலக் காற்றில் ஆடிக்கொண்டிருந்தது மிளகாய்ப் பழம். சின்னஞ்சிறு மிளகாய்ச் செடியைப் புரிந்துகொள்ள முடியாமல் அவள் படபடப்புடன் வீடு திரும்பினாள். பின் சாவு வரை அவள் காட்டு வேலைக்குப் போகவேயில்லை.

ஒரு தலைகீழ்க் கதை

சீசா சீசா கதை சொல்லு

என்ன கதை

தவளைக் கதை

என்ன தவளை

மரத் தவளை

என்ன மரம்

தண்ணிமரம்

என்ன தண்ணி

உப்புத் தண்ணி

யாரு உப்பு

சோணன் உப்பு

யாரு சோணன்

சோணன் உப்பு விற்பவன். ஊர் ஊராக உப்புச் சாக்கை தூக்கிக்கொண்டு அலைந்துகொண்டிருப் பான். அவனுக்கு எங்காவது மரநிழலைப் பார்த்து விட்டால் போதும், கடந்து போக மனதின்றி உப்பு மூட்டையை இறக்கி வைத்துவிட்டுத் தூங்கிவிடுவான். உறக்கத்தில் கனவுகள் ஊறத் தொடங்கிவிடும். கனவில் முதலையை விரட்டியபடியோ, காளையின் கொம்பு களில் தொங்கியபடியோ, அண்டரண்டாபட்சியின் காலைப் பிடித்துக் கொண்டு ரத்தினங்களைத் தேடிப் பறந்துகொண்டோ இருப்பான். விழித்து எழுந்து பார்க்கும்போது, உப்பு உருகிப் பிசுபிசுப்பேறிவிடும். வழியில் எதிர்ப்படும் ஒரு குளத்தில் உப்பைக் கரைத்து விட்டு வெறும் கையோடு வீடு திரும்பிவிடுவான்

சோணனின் அம்மா மகனைத் திட்டுவாள். சோணன் வேறு திசையில் வேறு வியாபாரத்துக்குப் போவதாகச் சொல்வான். இரண்டு நாள்களுக்குப் பிறகு மேற்கே வியாபாரத்துக்குப் போனான். அங்கே பெரிய ஆலமரத்து நிழல் இருளைப் போல அடர்ந்திருந்தது. தொலை விலே அதன் குளிர்மை தெரிந்தது. அவன் ஆசையோடு மரத்தடியில் தனது புளிச் சாக்கை இறக்கி வைத்துவிட்டுத் தூங்கத் தொடங்கினான். கனவில் அன்று நீலக்கண்கள் உள்ள மீன் ஒன்றைத் துரத்திக் கொண்டிருந்தான். வெயில் மூடி மின்னல் வெட்டத் தொடங்கியது. ஆனாலும் அவன் உறக்கம் கலையவில்லை. மழை கொட்டியது. அவன் ஈரத்துக்குள்ளாக உறங்கிக் கிடந்தான். கண்விழித்தபோது புளிமூட்டையைத் தூக்க முடியவில்லை. புளியை ஓர் ஓடையில் கரைத்துவிட்டு வெறும் கையோடு வீடு திரும்பினான்.

இப்படியே வடக்கிலும் வியாபாரத்துக்குப் போய்த் தூங்கிப் போனான். கடைசியாக ஒரு முறை உப்பு விற்கத் தெற்கே போனான். இரண்டு வேப்ப மரங்கள் இரட்டைப் பிள்ளைகளைப் போல ஒன்றாக நின்றன. நிழலின் குளிர்ச்சி வாசனையடித்தது. தானறியாமல் தூங்கிப் போனான். உறக்க தேவதை அவனை ஆசையாகப் பார்த்த படியே அவனது உப்புச் சாக்கை முத்துகளாக மாற்றிவிட்டாள். கண்விழித்துப் பார்த்தபோது சாக்கில் முத்துகள் நிரம்பியிருந்தன. அவன் முத்துகளையும் ஒரு படி எட்டணா என்று விற்றான். அத்தனை ஜொலிப்புள்ள முத்துகளை யாரும் பார்த்ததே கிடையாது. காவலர்கள் அவனைச் சந்தேகப்பட்டுப் பிடித்தபோது அது உப்புதான் என்று சோணன் உறுதியாகச் சொன்னான்.

எங்கேயோ திருடிவந்துவிட்டான் என்று அவனுக்குத் தூக்குத் தண்டனை கொடுத்து, தூக்குப் போடுவதற்காக ஒரு மருத மரத்துக்கு அழைத்துப்போனார்கள். மருத மரத்தின் நிழல் தரையில் கோலமிட்டுக் கொண்டிருந்தது. ஆசையோடு தான் ஒரு முறை அதில் உறங்க வேண்டும் என்றான். காவலர்கள் அவனை உறங்குவதற்கு அனுமதித் தார்கள். கனவில் அன்றைக்கும் களிப்பாகவே இருந்தான். விழித்து எழுந்தபோது மருத மரம் அவன் மீது பிரியம் கொண்டது. தூக்கிலிடு பவன் மரத்தில் கயிற்றை வீசினால் அது மரத்திலிருந்து நழுவிவிடத் தொடங்கியது. என்ன முயன்றும் அவனைத் தூக்கிலிட முடியவில்லை. ஆச்சரியமும் பயமுமாக அவனைத் தண்டனையில் இருந்து விடுவித்து வீட்டுக்கு அனுப்பி வைத்தார்கள். வீடு திரும்பும் வழியில் அவனைச் சந்தித்த உறக்க தேவதை உனக்கு ஏதாவது கேளு, தருகிறேன் என்றாள். அவன் மரங்களின் நிழலிலுள்ள குளிர்ச்சி எங்கேயும் கிடைப்பதேயில்லை, அதனால் தனக்கு நிழல் அகன்றுபோகாத ஒரு மரம் உறங்குவதற்கு வேண்டும் என்றான். தேவதை சம்மதித்தாள். அன்றிலிருந்து உலகில் ஒரேயொரு மரத்தில் மட்டும் எப்போதும் நிழல் இருந்துகொண்டேயிருக்கிறது. அதனடியில் சோணன் உறங்கிக் கொண்டே இருக்கிறான்.

அல்லது சோணா ஒரு சாப்ட்வேர் என்ஜினியர். செப்டம்பர் 11க்குப் பிறகு வேலை போனதால் அமெரிக்காவிலிருந்து பயத்தோடு சொந்த ஊர் திரும்பினான். அவனுக்கு மனதில் எப்போதும் கவலையும் பதற்றமும் இருந்துகொண்டிருந்தது. கம்பெனி கம்பெனியாக வேலை கேட்டு அலைந்துகொண்டிருந்தான். சென்னையில் அவனுக்குத் தருவதாகச் சொன்ன சம்பளப் பணம் இரண்டு பேமிலி பிட்சா வாங்கும் அளவு மட்டுமேயிருந்ததால், எப்படியாவது ஆஸ்திரேலியா போய்விட முயற்சி செய்துகொண்டிருந்தான்.

இதற்காகத் தினம் ஒரு கம்பெனிக்கு சிவியுடன் போய் வருவான். எங்கே போனாலும் அவனுக்கு ஒரு விசித்திரமான பழக்கமிருந்தது. சிக்னலில் பைக் நிற்கும்போதோ, லிப்ட் உயரும் ஒன்றிரண்டு நிமிடங் களுக்குள்ளாகவோ குட்டித் தூக்கம் போட்டுவிடுவான், இது பழகிப் பழகி, ஒரு தும்மல் போட்டு அடுத்த தும்மலுக்குள், ஒரு வரியை எழுதிவிட்டு அடுத்த வரியை எழுதுவதற்குள், ஒரு குவளைத் தண்ணீ ரைத் தலைக்கு ஊற்றிக்கொண்டுவிட்டு அடுத்த குவளை மோந்து குளிப்பதற்குள், ஒரு பிரட்டைப் பிய்த்து வாயில் வைத்துவிட்டு அதை மெல்லுவதற்குள் உறங்கப் பழகியிருந்தான். சிறிய பழக்கம்தான் என்றாலும், இது வளர வளர அவனுக்கு மனக் கஷ்டம் தருவதாகவே இருந்தது. இரண்டு நாள்களுக்கு முன்பாக சிகரெட்டை உதட்டில் பொருத்திவிட்டுப் பற்றவைப்பதற்குள் உறங்கிவிட்டதைப் பார்த்துக் கொண்டிருந்த மனைவி அதிர்ச்சியில் தோளைப் பிடித்து உலுக்கியதும், எடை இயந்திரத்தில் ஏறிக் காசு போட்டுவிட்டு அது சுழல்வதற்குள் உறங்கிவிட்டதைக் கண்டு பயணிகளில் ஒருவர் தட்டி எழுப்பிவிட்ட தும் அவமானமாகியது. குட்டித் தூக்கம் தரும் கேடுகள் மன அழுத்தத்தைத் தந்துவிடுவதாக மனநல ஆலோசகரைப் பார்க்கச் சென்றான். இதுபோன்ற மனநிலை முற்றினால் தற்கொலைக்குத் தூண்டிவிடும் என்று ஆலோசகர், அவனை விடவும் அதிகமாகக் கவலைப்பட்டார்.

வீட்டுக்கு வந்த பிறகு முதன்முதலாகத் தற்கொலையைப் பற்றி யோசித்தான். தேவையான அளவு மாத்திரைகளை வாங்கி வந்துவிட்டு தண்ணீரை வாயில் ஊற்றிக்கொண்டு மாத்திரையைப் போடலாம் என முடிவு செய்தவன் தண்ணீர் வாயில் நிரம்பியதுமே தூங்கிவிட் டான். விழித்தபோது மனைவியும் மாமனாரும் சகலையும் எக்கச் சக்கமாகத் திட்டிக்கொண்டிருந்தார்கள். சாவிலிருந்து பிழைத்துக்கொண் டான். உறக்க தேவதை அவனிடம் வந்து உனக்கு ஏதாவது பரிசு தருகிறேன் கேள் என்றாள். அவன் தயக்கத்துடன் தூங்கியபடியே வேலை செய்வதற்கு முடிய வேண்டும் என்று கேட்டான். அப்படியே செய்வதாகச் சொன்னாள் சில நாள்களில் சோணா மைக்ரோ சாப்ட் நிறுவனத்தின் ஆசியப் பகுதியில் வேலைக்குச் சேர்ந்தான். சோணனுக்கு இப்போது பகலுமில்லை இரவுமில்லை. அவன் கண்கள் திறந்திருக்கிறதா மூடியிருக்கிறதா என்று இதுவரை தெரியவில்லை.

ஒருவேளை அவன் மீன்களைப் போல இமைகளைத் திறந்தபடியே உறங்கிக் கிடக்கக்கூடும்.

கதை முடிந்தது
கத்தரிக்காய் பூத்தது
கத்தரி பூத்தது எதனாலே
கறுத்த பசு வந்ததாலே
பசு வந்தது எதனாலே
மேய்ப்பவன் விரட்டிவிட்டதாலே
யாரை விட்டு விரட்டுகிறான்
நாயை விட்டு விரட்டுகிறான்
எந்த நாயை அனுப்புகிறான்
கறுப்பு நாயை அனுப்புகிறான்.
பசுவைப் பிடிச்சு கயிற்றிலே கட்டு
கத்தரியைப் பறிச்சு குழம்பு வச்சு
தின்பமா வேண்டாமா?
தின்னு உன் வாயிலே மண்ணு
சோணான் கதை என்ன ஆச்சு
சிந்திச் சிதறிப் போச்சு.

பாடினி

ஒரு மழைக்காலத்தின் முடிவில் பாடினி, தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியனைப் பார்ப்பதற்காகப் போய்க்கொண்டிருந்தாள். வழியில் வேங்கை மரத்தின் அருகில் நின்றபடி சிறுமிகள் புலி புலி என்று கத்திக் கொண்டிருப்பதைப் பார்த்தாள். வேங்கை மரத்தடியில் நின்றுகொண்டு அப்படி சப்தமிட்டால் மரம் தன் கிளைகளைத் தாழ்த்தி சிறுமிகளுக்குப் பூக்களைத் தரும் என்று ஒரு நம்பிக்கையிருந்தது. அவளுக்குத் தனது பால்ய நாள்கள் நினைவுக்கு வந்தன. பாலைப் பறத்தலையில் பிறந்த பாடினியின் தகப்பன் மற்ற ஆறலைக் கள்வர்களைப் போலன்றி பாடல் புனைவதில் ஆர்வம் கொண்டவனாகயிருந்தான். கவி பாடுவதற்காக அவன் மகளை அழைத்துக்கொண்டு நெடுந்தூரம் நடந்து செல்வான். அவர்கள் நடந்து செல்லும் வழிகள் வியப்பூட்டுபவையாக இருந்தன. அவர்கள் வழியில் ஒருவரோடு ஒருவர் பேசிக் கொள்ளக்கூட மாட்டார்கள். தகப்பன் பாடல் புனைவது அவளுக்கு ஆச்சரியமாக இருக்கும்.

ஒவ்வொரு முறையும் என்ன பாடலை அவன் மனம் புனைந்துகொண்டிருக்கிறது என்பதை முகக் குறிப்பிலிருந்து காண்பதற்கு ஆசை கொள்வாள். தகப்பனின் முகத்தில் சலனமேயிருக்காது. ஒரு விடிகாலையில் அவர்கள் வழியில் ஒரு வேங்கை மரத்தைக் கடந்து போனார்கள். வேங்கை மரத்தின் மஞ்சள் பூக்கள் கரும்பாறை மீது உதிர்ந்து கிடந்தன. தொலைவிலிருந்து பார்க்கும்போது அது புலி சயனித்துக் கிடப்பது போலவே இருந்தது. பாடினி மெதுவாக நடந்து பாறையருகே போய்ப் பார்த்தாள். புலியின் சாயல் அப்படியே கவிழ்ந்திருந்தது. அவள் குனிந்து அச்சத்துடன் பூக்களைத் தொடுவதா, வேண்டாமா

என்று பார்த்துக்கொண்டிருந்தாள், பிறகு பூக்களைக் கையில் எடுத்தபோது பாறை அசைந்து அவளைத் திரும்பிப் பார்ப்பது போல் இருந்தது. அவள் தன்னிடமிருந்த துடியை இசைத்துப் பாடிய படியே வழியில் புளிப்பேறிய களாப்பழத்தையும் துடரிப் பழத்தையும் பறித்துத் தின்றாள். அந்தச் சுவை நாவைச் சப்புக் கொட்டச் செய்தது, அவர்கள் துடியிசைத்தபடியே நடந்தார்கள். நார்முடிக் கிழாரைப் பார்த்துப் பாடிப் பரிசில் பெறுவதற்காக அவரது ஊரை நெருங்கியபோது வயலின் நடுவேயிருந்த மரம் ஒன்றைக் கடந்தார்கள்.

இரவு பெய்த மழையைப் பதுக்கி வைத்திருந்த மரக்கிளைகள் அவர்கள் அருகே போனபோது சடசடவெனப் பொழியத் தொடங்கின. தகப்பனும் மகளும் பெருமழை பெய்கிறதோ என்று திரும்பிப் பார்த்தபோது தாங்கள் மட்டுமே நனைந்திருப்பதைக் கண்டு சிரித்த படியே கிழாரைக் காணச் சென்றார்கள். கிழாரின் வீடு வயல்களுக்கு நடுவிலே இருந்தது. அவரிடம் நாற்பது எருமைகளிருந்தன. முற்றத்தில் கிடந்த உரலில் பெண்கள் அரிசி இடித்துக் கொண்டிருந்தனர். கிழார் உடும்பு நிணமும் குறுமுயலின் சூட்டிறைச்சியும் செவ்வரிசி அடிசிலும் உணவாகத் தந்தார். பாடினியின் தகப்பன் தனது பாடலைக் கிழாரின் முன் பாடினான்.

இரவில் பெய்த மழையைப் பதுக்கிவைத்து பாணன் தலையில் பொழியுமளவு கவிதையின் மேல் விருப்பம் கொண்ட மரங்களிருக்கின்ற உன் நாட்டில், விரலில் ஒட்டாத அடிசிலைப் போல மனம் நழுவு கின்றது. உதிர்ந்த வேங்கைப் பூக்களைப் புலியென நினைத்து பயந்து போய் நிற்பது போல, அதோ உன் தோற்றத்தைத் தொலைவில் பார்த்துப் பயந்த பலரும், அருகாமை வந்து நெருங்கியதும் உன் மிருதுவை உணர்கிறார்கள்.

கவிதையின் வியப்பைப் பருகியபடி கிழார் மகிழ்ந்திருந்தார் பாடினிக்கு ஏதோ புரிந்தது போல் இருந்தது. தானியங்களைப் பரிசாகப் பெற்று அவர்கள் திரும்பும்போது வீட்டின் வாசலில் கட்டியிருந்த மான்குட்டியை அவிழ்த்து பாடினிக்குப் பரிசாகத் தந்தார் கிழார். அவர்கள் திரும்பிவரும் வழியை மான்குட்டி பயத்தோடு மூக்கை உரசியபடி பார்த்துக்கொண்டு வந்தது. வீடு வந்து சேர்ந்தபோது மான்குட்டி துவண்டுபோயிருந்தது. பாலைக் கிராமங்களின் வெயில் மானின் கண்களுக்கு வெறிச்சி தந்தது. மான் எதையும் தின்னாமல் தளர்ந்துகொண்டு வந்தது.

தகப்பன் என்றைக்கும் போல பன்றிவேட்டையாடப் போகத் தொடங்கினான். பாடினி மட்டும் ஒரு பாடலைப் புனைவதற்காக எத்தனித்துக்கொண்டேயிருந்தாள். சொற்கள் உலர்ந்து போயிருந்தன.

நாள்களின் தொடர்ச்சியில் மான் பாலையின் வெளிச்சத்தைத் தாங்க முடியாமல் தலையைக் கவிழ்ந்தபடியே எப்போதும் இருளைத் தேடிக்கொண்டிருந்தது. அவள் மானை வனத்தில் கொண்டு விட்டுவிட முடிவு செய்தவளாகத் தனியே அதைக் கூட்டிக்கொண்டு சென்றாள்.

கானகம் மிகத் தொலைவாக இருந்தது. அவள் கடந்த பாதையில் புல்லரிசி பொறுக்கிக்கொண்டிருந்த சிறுமிகள் மானை வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

உப்பிட்ட மான் இறைச்சியின் ருசி அவர்கள் நாவில் தானே துளிர்த்தது. பாடினி மானை வனவிருட்சங்களுக்கு இடையே தனியே ஓடவிட்டாள். மான் வனத்தை வியப்போடு பார்த்தபடி, இலைகளை முகர்ந்துவிட்டு அவளருகே வந்து நின்று கொண்டது. அவளுக்கு என்ன செய்வதெனத் தெரியாமல் மானை ஒரு கழியால் துரத்தி விட்டாள். மான் உதிர்ந்த இலைகளின் சலசலப்பைக்கூட மிரட்சியோடு பார்த்தபடி மரக்கிளைகளின் அருகே நின்றுகொண்டது. அவள் மானைப் பார்த்துக்கொண்டே இருந்தாள். அவளறியாமல் மனதில் கவிதையின் முதல் வரி பிறக்கத் தொடங்கியது. அவள் மனம் வார்த்தைகளைக் கட்டத் தொடங்கியது. 'வீட்டுக்கும் வனத்துக்கும் இடையில் மான் திகைத்து நிற்பது போல' எனத் தொடங்கும் அவளது கவிதையை மனதில் புனைந்து முடித்தவளாகத் தானே திரும்பச் சொல்லிப் பார்த்துக்கொண்டாள். மான் மெதுவாகக் குளம்பொலி எழுப்பிக்கொண்டு மரங்களுக்கிடையில் மறைந்தது. அன்றுதான் அவள் பாடினியாவதென முடிவு செய்தாள்.

இரு குரல்

கடலின் அலைச் சப்தம் கேட்காத தூரத்துக்கு வந்துவிட்டிருந்தார்கள் இருவரும். அவளுக்கு ஆச்சரி யமாக இருந்தது. இதுவரை அவள் வீட்டிலிருந்து வெளியேறி வந்ததேயில்லை. விழா நாள்களில்கூடப் பல்லக்கில்தான் செல்வாள். அதுவும் மூடு பல்லக்காக இருப்பதால் தெருவில் கடந்துபோவதே தெரியாது. ஆனால் கடந்த இரண்டு நாள்களாக அவர்கள் ஏதேதோ ஊர்களைக் கடந்து ஆற்றின் கரைகளைத் தாண்டி நடந்துகொண்டிருந்தார்கள். எங்கே போகி றோம் என்பதைப் பற்றிக்கூட அவள் கேட்டுக் கொள்ளவே இல்லை. நெடும்பாதையை விலக்கி, கிளைப் பாதைகளில்தான் அவர்கள் நடக்கிறார்கள். முதல்நாள் அவர்கள் நடக்க நடக்கக் கடற்சப்தம் கூடவே வந்து கொண்டிருந்தது. பிறந்ததிலிருந்து அவள் கடலின் சப்தத்தைக் கேட்டுக்கொண்டிருக் கிறாள். வீட்டின் சுவர்களும் படுக்கைகளும்கூட அதே சப்தத்தைக் குடித்துக் கிறங்கித் தானே அதைப் போல முனங்கிக்கொண்டிருந்தன. நகரமே கடலின் சப்தத்தால் நிரம்பியிருந்தது. சில இரவுகளில் அந்தச் சப்தம் தனது கேசத்தை நனைப்பது போல அருகாமை யில் கேட்கும். தண்ணீர் சிதறிச் செல்லும் மெல்லோ சையது. கடல் மூர்க்கமான நாள்களில் நகரில் குடி வெறி கொண்ட மனிதனைப் போலப் பிதற்றல் அதிகமாயிருக்கும்.

அவள் சிறுமியாக இருந்தபோது நாவாய்களைப் பார்ப்பதற்காகக் கடற்கரைக்குப் போகும்போது தொலைவில் அலைகளின் எழுச்சியைப் பார்த்துக் கொண்டிருப்பாள். காப்ரிகள் சுமைகளைச் சிறிய

படகுகளில் ஏற்றிக்கொண்டு கரைக்கு வந்துகொண்டிருப்பார்கள். யவனர்களில் சிலர் சிவப்பு நிற மேலாடையுடன் சுங்க முத்திரையைக் கையில் ஏந்தியபடி அலைந்துகொண்டிருப்பார்கள். அவளுக்கு யவனர்களின் சுருள் கூந்தல் மிகவும் பிடிக்கும். யவனன் அழகாயிருப்பதை அறிந்தவன். தன் அழகை வெளிப்படுத்திக்கொள்வதில் யவனர்களுக்கு எப்போதும் ஆசையதிகமிருந்தது. நாவாய்கள் தொலைவில் காற்றில் அலைந்தாடியபடி நின்றிருக்கும். கூட்டமாக மணலைக் கொத்தியலையும் கடற்காகங்களின் இரைச்சலைக் கேட்டுக் கொண்டிருப்பாள். இந்திரக் கோட்டத்தை ஒட்டிய கடற்கரையில் தான் நாவாய்கள் வந்து நிற்கின்றன. இடிந்து நிற்கும் வச்சிரக் கோட்டத்தை ஒட்டிய பகுதிகளுக்கு யாரும் வருவதேயில்லை. அங்கே நீண்ட கோட்டைச் சுவரும் பாதியிடிந்த நிலையில் நிற்கும் ஆடல் அரங்கமும் இருந்தன. அதன் வாசலில் ஆள் உயர வித்யாபூதமொன்று நின்றிருக்கும். அதன் கண்கள் மூடியே இருந்தன.

ஒன்பது கிரகங்கள் ஒரே கோட்டில் வந்து நிற்கும் நாளில் மட்டும் அதன் கண்கள் தாமாகத் திரும்பிக்கொள்ளும் என்றும் அப்போது கடல் சப்தமற்றுப் போய் விடுமென்றும் நம்பினார்கள். அவளது பதினோராம் வயதில் அந்தப் பதுமையின் கண்கள் தாமே திறந்து கொண்டன வச்சிரக் கோட்டத்துப் பாதை முழுவதும் ஜனத்திரள். அவள் பல்லக்கில் சென்று அருகாமையில் பார்த்தாள். அந்தக் கண்கள் தாழ்ந்திருந்தன. பரிச்சயமான ஒரு மனிதனைப் போலவே அந்தப் பதுமையிருந்தது. கடலில் அலைகள் எழவேயில்லை, எங்கோ அலைகள் யாவும் சென்று ஒடுங்கிக்கொண்டுவிட்டதைப் போல் இருந்தது. வித்யா பூதத்தின் காலடியில் மஞ்சள் பூக்களும் வஸ்திரங்களும் குவிந்து கிடந்தன. அதன் பார்வை மெல்ல உயர்ந்து கொண்டிருந்தது. அவள் கடலைப் பார்த்துக் கொண்டேயிருந்தாள். கடல் தலைகவிழ்ந்திருப்பது போல் இருந்தது. சில நாள்களுக்குப் பின்பு பதுமையின் கண்கள் தாமே மூடிக்கொண்டுவிட்டன. கடலின் அலைகள் சீற்றத்துடன் கரையை விட்டு வெளியேறி நடக்க முயற்சிப்பது போல எழுந்தன. நகரில் யாவரும் பயங்கொண்டிருந்தார்கள். இரண்டு இரவு பகல் அலைகள் வீசி ஓய்ந்தன. பின், வீதிகள் அமைதியாயின. சிப்பிகளும் கடற்சங்கும் தெருக்களில் குவிந்திருந்தன.

இவையெல்லாம் அவனிடம் சொல்ல வேண்டும் போல் இருந்தது. ஆனால் அவனிடம் ஒருமுறைகூட அவள் தயக்கமின்றிப் பேசியதேயில்லை. சில சமயங்களில் அவன் உறங்கும் போது அருகாமையில் நின்று பார்த்துக்கொண்டேயிருப்பாள்.

அவனைச் சொப்பனங்கள் அலைக்கழிக்க முகத்தில் உணர்ச்சிகள் உருமாறிக் கலைந்துகொண்டே இருக்கும். கனவில்கூட அவன் நிலைகொள்வதேயில்லை போலும். அவர்களுக்குத் திருமணம் நடந்த பிறகு அவள் தன் வீட்டிலிருந்து இடம் மாறி அவனது வீட்டுக்குச் சென்றாள். அவனது வீடு கடல்நோக்கிச் செல்லும் கிழக்கு வீதி

யிலிருந்தது. அகன்ற அவர்களது வீதி கடற்கரையில் முடிகிறது. வீட்டு ஜன்னல்களின் வழியே உப்புக்காற்றின் பிசுபிசுப்பு கசிந்து கொண்டேயிருக்கும். அருகாமையிலே வணிக வீதிகள் இரண்டு மூன்றிருந்தன. அவள் கணவனின் தகப்பன் யவனர்களுடனும் கிரேக்கர்களுடனும் வணிகத்திலிருந்தான். கொற்கையிலிருந்து முத்துகளும் தென்னாட்டுக் கிளிகளும் வெண்கலக் குவளைகளும் கிரேக்கத்துக்கு அனுப்பிக்கொண்டிருந்தான். வீட்டில் எண்ணற்ற அறைகளிருந்தன. அந்த அறைகளில் தங்குவதற்கு ஆட்களில்லை. எப்போதாவது இந்திர விழா காண வருபவர்களைத் தவிர வீட்டில் தங்குபவர்கள் எவருமேயில்லை.

அவள் அறையிலிருந்த கூண்டில் ஒரு நீலப்பட்சி இருந்தது. அதைக் கிரேக்கத்திலிருந்து கொண்டுவந்திருந்தார்கள். வெளிர் நீலத்தில் இறகுகள் கொண்ட அந்தப் பட்சி சாம்பல்குருவியைப் போல் இருந்தது. அதன் குரல் நாணயங்கள் உரசிக்கொள்வது போன்றிருக்கும். அந்தப் பறவை பேசக் கற்றுக்கொள்ள விரும்பாததாக இருந்தது. அவள் ஒவ்வொரு நாளும் அதற்கு ஏதேனும் ஒரு சொல்லைக் கற்றுக்கொடுக்க முயற்சிப்பாள். பட்சி அவள் முகத்தைப் பார்த்தபடியிருந்துவிட்டு மெதுவாகச் சீட்டியடிக்கும். பேசுவதை விடவும் பட்சி சீட்டியடிப்பது அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது – அவள் தானும் உதட்டைச் சுழித்து மெதுவாகச் சீட்டியடிப்பாள். பட்சி உற்சாகமாகிச் சப்தமிடும். வீட்டில் வேலைக்காக இருந்த பெண்களில் சிலர் மீன்களைப் பின்வாசலில் உலர வைத்துக்கொண்டிருந்தபடி இந்தச் சீட்டிச் சப்தத்தைக் கேட்டுச் சிரித்துக் கொள்வார்கள். அவள் பிறந்த தினத்தின் காலையில் கடல் செஞ்சிவப்பு நிறத்திலிருந்ததாக தாதி சொல்லக் கேட்டிருக்கிறாள். மழைக்குப் பிந்தி சில நாள்களில் இதுபோலக் கடலின் நிறம் மாறிவிடுவதை அவளே பார்த்திருக்கிறாள்.

அவளுடைய தகப்பனும் வணிகனாகவிருந்தான். புகாரில் தான் வாழ்ந்த வீட்டைத் தவிர வேறு நகரங்கள் எதையும் அவள் கண்டவளில்லை. எப்போதாவது கொற்றவைக் கோயிலைக் காணச் செல்லும்போது வழியில் குடியர்களும் பேடிகளும் சச்சரவிட்டபடியிருப்பதையும், கொற்றவை பரிச்சயமானதொரு நகரப் பெண்ணின் சாயலில் இருப்பதையும் கண்டிருக்கிறாள். அவளுக்கு நான்கு வயதாக இருந்தபோது யவனத்திலிருந்து கொண்டு வந்த முகம் காட்டும் உருப்பளிங்கு ஒன்றைத் தந்தார் அவளது தகப்பன். அது அவளது முழு உருவையும் காட்டுவதாக இருந்தது. படுக்கையை ஒட்டி அந்த உருப்பளிங்கைப் பதித்தார்கள். நாள் முழுவதும் தன்னையே பார்த்துக்கொண்டிருப்பாள். கேசம் இடைவரை தொங்கிக்கொண்டிருக்க, வட்ட முகத்துடன், சிற்பங்களின் வாளிமையோடு அவளிருந்தாள். தன்னைப் பார்த்துக்கொண்டிருக்க இருக்க ஆச்சரியமாக இருக்கும். அறையில் தன்னைப் போலவே இன்னொரு யுவதியும் இருப்பதாகவே எண்ணிக்கொள்வாள் ஒரேயொரு நாள் கடலின் அடியில் ஒரு

நகரம் உறங்கிக்கொண்டிருப்பதாகக் கனவு கண்டாள்.

தெருக்களில், வீடுகளில் தண்ணீர் நிரம்பியிருந்தது. யாருமில்லாத தெருக்கள். இடிந்துபோன கட்டடங்கள். நாவாய்கள்கூடச் சிதறிக் கிடக்கின்றன. யாருமில்லை, யாருமில்லை என்று அலைகள் சொல் கின்றன. அவள் தண்ணீருக்குள்ளாக நடந்து போனபோது பெரு மூச்சுடன் ஒரு சிப்பி தன்னைத் திறந்துகொண்டு முத்தைக் காட்டி விட்டு ஒளிந்தது. தண்ணீரின் சுழி அவளைச் சுழற்றி ஒரு நுரையைப் போல வெளியே மிதக்கச் செய்தது. அந்த வீதிகள், வீடுகள் யாவும் பரிச்சயமாக இருந்தன. ஆனாலும் அது எந்த நகரம் என்பதை அவள் அறிந்துகொள்ள முடியவேயில்லை. திருமணத்துக்குப் பிறகு அவளுக்குக் கனவுகள் வருவதேயில்லை. அவள் பாதி நாள் உறக்கத் திலும் கடலின் சப்தத்தைக் கேட்டுக்கொண்டேயிருப்பாள். அது அடி மனதில் ஒலித்துக்கொண்டே இருக்கும். கைவிளக்கு எரியும் படுக்கையில் அவள் தனித்திருந்த இரவுகள் எத்தனையோ கடந்து போய்விட்டன. அவள் தனிமையின் ருசியைப் பழகியிருந்தாள்.

அவன் புறக்காட்சிகள் எதையும் கவனிக்கவேயில்லை. யோசனை களுடன் நடந்துகொண்டிருந்தான். நாவாய் வந்து சேர்ந்திருக்குமா? கடலில் காற்று திசை மாறிவிட்டிருந்தது எனக் கரைக்கு வந்த வணிகர்கள் சொல்லியது நினைவுக்கு வந்தது. கிரேக்கத் துறை முகத்திலிருந்து புறப்பட்டு மூன்று மாதங்களுக்கு மேலாகியும் அவர் களது நாவாய் நகரம் வந்து சேரவேயில்லை. அவன் சில நாள்களாகவே நாளங்காடித் தெருவுக்குப் போவதை நிறுத்தியிருந்தான். பொற்காசு களும் ஆபரணங்களும் யாவும் கைவிட்டுப் போய்விட்டன. யவனன் ஒருவன் அவனுடன் ஸ்நேகமாயிருந்தான். அவனது இருப்பிடத்தில் கிடைக்கும் தேறல்களைக் குடித்துவிட்டுப் பகலின் நீண்ட பொழுதில் இருவரும் தூக்கத்திலே கிடந்தனர் எப்போதாவது காதலித்துப் பிரிந்தவளின் நினைவு வரும். அவள் நூல் இழையைப் போல மென்மையாக இருந்தாள். கடந்த காலத்தின் காட்சிகள் கடற் பறவைகளைப் போலத் தொலைவில் மிதந்து கொண்டிருந்தன. நகரில் அவனைப் போன்ற வாலிபர்கள் அதிகமிருந்தார்கள்.

புகார் நகரமே கேளிக்கையால் நிரம்பிக் கிடந்தது. உலகின் உன்னதமான திராட்சை ரசமும் காடியேறிய யவனத் தேறல்களும் சிற்பக்கூடங்களும் பொன்னும் மணியும் புரளும் வணிகவீதியும் ஆடல் அரங்கமும் ஒப்பனைப் பெண்களிருக்கும் வீதிகளும் அடிமை களின் உரத்த கூச்சலும் நகரைக் கேளிக்கையிலிருந்து விடுபட முடியாமல் வைத்திருந்தன. புகார்வாசிகள் குடிப்பதையும் போகத்தை யும் அறிந்தவர்கள். அதுவும் கிரேக்கத்திலிருந்து நாவாய் வந்து சேர்ந்த சில தினங்களுக்கு நகரில் வேறு செயல்களுக்கு இடமேயில்லை. சென்றமுறை நாவாயிலிருந்து யவனப் பெண்கள் இருபதுக்கு மேலாக

வந்திருந்தார்கள். வெண்கலத்தை உருக்கி வைத்திருந்தது போன்ற உருவமைப்பு. கிரேக்க சிற்பங்களில் பார்த்திருந்த அதே மூக்கு, சிறிய கண்கள். அவர்களின் சிரிப்பில் காமம் சிதறிக் கொண்டிருந்தது. ஒரு யவனப் பெண்ணோடு பகலிரவு தெரியாமல் படுத்திருந்தான்.

அவள் கைகள் மிகச் சிறியதாக இருந்தன. அவள் முதலை நீந்துவது போல அவன் மீது ஊர்ந்து கூடுபவளாகவிருந்தாள். அறையில் பகல் வரவேயில்லை. நாள் முழுவதும் பகல் கதவின் வெளியே காத்திருந்தது. இரவு வந்து அறையை எட்டிப் பார்த்தபோது உள்ளே இருந்த இருள் இரவைப் பரிகசித்து வெளியே நிற்கச் சொன்னது. பகலும் இரவுமற்ற ஒரு பொழுது அறைக்குள்ளாக இருந்தது. அவள் எதையோ சொல்லிப் பரிகசித்துக் கொண்டிருந்தாள். பாஷை புரியாமல் அவன் தானும் சிரித்துக் கொண்டான். இருவரும் அல்லங்காடிக்குச் சென்றார்கள்.

அல்லங்காடியில் பந்தங்கள் எரிந்து கொண்டிருந்தன. அவர்களது பல்லக்கைக் கண்ட காப்ரிகள் விலகி வழிவிட்டார்கள். அவன் இரட்டை விளக்கு எரிந்த வணிகரின் கடை வாசலில் இறங்கிக் கொண்டான். அவள் அழகாகத் தைக்கப்பட்ட கிளியின் இறகாலான கச்சாடையை வாங்கிக்கொண்டாள்.

இருவரும் கடற்கரைக்குப் போனபோது தொலைவில் சிறிய மஞ்சள் வெளிச்சத்தில் ஆட்களின் சப்தம் கேட்டுக்கொண்டிருந்தது. அவன் நாவு உலர்வது போல் இருந்தது. அவள் மவுனமாகக் கடலின் அலைகளைப் பார்த்தபடியிருந்தாள். அவன் நட்சத்திரங்களைப் பார்த்துக்கொண்டிருந்தான். புகார் நட்சத்திரங்களற்று இருப்பதே யில்லை. யவனப் பெண் சில நாள்களிலே பரிச்சயமானவளாகி விட்டாள். ஒரு பெண்ணிடம் ரகசியம் அதிகமிருப்பதில்லை என்று அவனாகவே சொல்லிக் கொண்டான். திரும்பவும் ஆடல் அரங்கத் துக்குப் போக வேண்டும் போல் இருந்தது. அங்கே மீட்டப்படும் யாழின் இசை உண்மையில் இசையல்ல, அது இச்சையைத் தூண்டு வதற்காகவே மீட்டப்படுகின்றது.

அவன் ஆடல் அரங்கினுள் நுழையும்போதே கச்சு அவிழ்ந்த பெண்ணொருத்தியைக் கண்டான். அவனுக்கு உலகமே தன் ஆடை களை நழுவவிட்டுக் கொண்டிருப்பதாகத் தோன்றியது. தானாகச் சிரித்துக்கொண்டு அரங்கினுள் நுழைந்தபோது, ஏதோவொரு கூத்து நடந்துகொண்டிருந்தது. கூத்தில் நடனமாடிய பெண்களில் ஒருத்தி கண்களால் அவனுடன் பேசத் தொடங்கினாள். விடிவதற்கு இன்னமும் நேரமிருந்தது. அவன் கூத்திலிருந்த பெண்ணைப் பார்ப்பதற்காகக் காத்துக் கிடந்தான். போதையும் தூக்கமற்ற கண்களும் அழுத்திக் கொண்டிருந்தன. கூத்தின் மகளிர் உயர்ந்த குரலில் பாடிக் கொண்டி ருந்தார்கள்.

அவனைப் பல்லக்கில் வீடு கொண்டு வந்து சேர்த்த அடிமைகள் வீட்டுக் கதவைத் தட்டும் சப்தத்தைக் கேட்டுக்கொண்டு அவள்

படுத்திருந்தாள். யாரோ கதவைத் திறந்தார்கள். ஊஞ்சல் சங்கிலிகள் ஆடும் சப்தம் கேட்டது. அவன் ஊஞ்சலிலே படுத்து உறங்கியிருந்தான். பாதித் தூக்கத்தில் வீட்டிலிருந்த தன் மனைவியின் நினைவு வந்தது. எழுந்து அவளது அறைக்குப் போகலாமா என யோசித்தான். அறையின் கதவைத் திறந்தபோது கடல் இரைச்சலிட்டுக் கொண்டிருந் தது. அவள் கால்கள் மெதுவாக அசைந்து கொண்டிருந்தன. விழித்துக் கொண்டிருக்கிறாள் போலும். அவள் கதவை மூடும்போது அவள் புரண்டு படுத்துக்கொண்டாள். அவளைப் பார்க்கும்போதே மனத் திலிருந்த காமம் வடிந்து போய்விடுவதையும் ஏதோவொரு அறியாத குற்றவுணர்வு மனத்தில் ஏற்படுவதையும் அவன் உணரத் தொடங்கி யிருந்தான்.

ஆற்றில் தண்ணீர் அதிகம் ஓடிக்கொண்டிருந்தது. கரையில் பூத்திருந்த நாணலைப் பூக்களோடு பறித்துக் கையில் வைத்தபடி நிற்கும் அவளைப் பார்த்துக்கொண்டிருந்தான். முற்றிய தானியக் கதிர் போல வசீகரமாயிருந்தாள். பார்வையை விலக்கியபடியே ஆற்றுக்குள் இறங்கி நின்றுகொண்டான். தண்ணீரின் விசை அதிகமாக இருந்தது. அவன் நீரினுள் மூழ்கும்போது அவள் நாணல் புதரை விட்டு விலகிச் சூரியனைப் பார்த்தபடியே நின்று கொண்டிருந்தாள். அதிகாலைச் சூரியன் மிகுந்த அழகோடு வயல்களுக்கு நடுவே வீழ்ந்து கிடந்தது. இத்தனை அழகான சூரியனை அவள் பார்த்ததே யில்லை, வயல்வெளிப் பச்சையின் நடுவே சூரியன் அசைவற்று வீழ்ந்திருந்தது. பறவைகளை விரட்டுவது போலக் கையிலிருந்த நாணலால் சூரியனை விரட்டினாள். சூரியன் நீரில் மூழ்கியிருந்த எருது வெளிப்படுவது போல மிக மெதுவாக நகர்ந்து வானில் அசையத் தொடங்கியது. தண்ணீரினுள் இருந்த நாணல்கள் சப்த மிட்டுக்கொண்டேயிருந்தன.

அவள் வயல்களையும் அருகாமையில் ஏற்றம் இறைப்பவர்களையும் பார்த்துக்கொண்டிருந்தாள். அவன் தண்ணீரிலிருந்து எழுந்து கரையில் வந்து நின்றபடி தனது சிகையைக் கோதிவிட்டுக்கொண்டிருந்தான். துடுப்பைப் போல் இருந்தது அவனது உடல். இருவரும் ஒருவரையொரு வர் பார்த்துச் சிரித்துக்கொண்டார்கள். திருமணத்துக்குப் பிறகு இருவரும் முதன்முறையாக ஒன்றாகப் பயணம் செய்வது இதுதானோ? அவள் காலில் கிடந்த சிலம்பு சலசலக்க வயல் வரப்பில் நடந்து கொண்டிருந்தாள். இதுபோல ஏதேனும் ஒரு வயல்வெளியின் நடுவே தானும் ஏற்றமிறைப்பவனைப் போல வாழ்ந்துவிட முடியாதா என்று அவனுக்கு ஒரு நிமிஷம் தோன்றியது. ஆனாலும் ஏன் வாழ வேண்டும், வாழ்வில் இன்னமும் மீதமிருக்கும் போகமும் களிப்பும் நிறைவேறாமல் எதற்காக வாழ்வை ஒடுக்கிக்கொள்ள வேண்டும்? கைப்பொருளை இழந்ததால் வாழ்வின் ருசிகள் கசந்து விடுமா என்ன? அவள் நாணலைக் காற்றில் வீசியபடி நடந்து

வந்தாள்.

கூந்தலில் ஒரு தாமரைப் பூவைச் சூடியிருக்கிறாள். பார்க்கப் பார்க்க சவுந்தர்யம் பளிச்சிடுகிறது. இத்தனை அழகையும் எங்கே ஒளித்திருந்தாள் இவள்? தாமரை சூடி நிற்பதைக் காணும் போது சிற்பங்களில் இருக்கும் நளினமல்லவா வெளிப்படுகிறது. இவள் யார் நளினதாராவா? அவள் உதட்டில் குறுஞ்சிரிப்பொன்று எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தது. விரிந்த ஈரக்கூந்தல் பகலை மூடிக் கொண்டிருந்தது. அவள் ஓடும் ஆற்றில் சிறுமியைப் போலச் சிறு கற்களை வீசி எறிந்துகொண்டிருந்தாள். பகல் எழுந்து கொண்டிருந்தது. நீண்ட தூரம் பயணம் செய்ய வேண்டும் என்பதே அவனுக்கு வேதனை தருவதாக இருந்தது. அவள் மெதுவாக நடந்து வந்து கொண்டிருந்தாள். இருவரும் யாத்திரிகர்களுக்கான அன்னசாலைக்குப் போனபோது அங்கே வடிசல்கள் தயாராகிக்கொண்டிருந்தன.

புலிச் சின்னம் பொறித்த அன்னசாலையின் முகப்பில் ஒன்றிரண்டு சந்நியாசிகள் அமர்ந்திருந்தார்கள். அவர்கள் அசோக மரமொன்றின் அடியில் உட்கார்ந்துகொண்டார்கள். அவள் கூந்தல் காற்றில் அலைந்து கொண்டிருந்தது. அவர்கள் பேசிக்கொள்ளவேயில்லை. வீட்டிலிருந்து வெளியேறிய நாள் முதல் அவளது சுபாவம் மாறிக்கொண்டிருப்பதை அவன் கவனித்துக்கொண்டே இருந்தான். அவர்கள் அன்னசாலையில் காத்திருந்தபோது வணிகர்களின் பொதியேற்றிய வண்டியொன்று பிரதான சாலையில் போய்க்கொண்டிருந்தது. அவன் மிகுந்த அவசரத்தில் வண்டியோட்டிகளை நோக்கி ஓடி, யாருடைய நாவாய் கரை வந்து சேர்ந்திருக்கிறது என்று விசாரித்தான். இவை புகாருக்குக் கொண்டு போகப்படும் அகில் பொதிகள் என்றபடி வண்டிக்காரர்கள் நடந்து போனார்கள்.

நாவாய் வந்து சேர்ந்துவிட்டால் திரும்பவும் புகாருக்கே போய் விடலாம். கிரேக்க யாத்ரீகர்களுடன் தானும் கடலோடியாகப் போகலாம். உலகின் அதியற்புதங்களை ரசித்தபடியே வாழ்வை நுகரலாம் என யோசித்தபடியே திரும்பி வந்தான். கையில் பிச்சைப் பாத்திரம் ஒன்றுடன் மஞ்சளாடை அணிந்த பௌத்தத் துறவியொருவன் மணிமந்திரங்க்ளைச் சொல்லிக்கொண்டு நடந்து போய்க் கொண்டிருந்தான். அன்னசாலையின் வெளியே இரண்டு குதிரை வீரர்கள் நின்றிருந்தார்கள். அவர்கள் கானகப் பாதையில் போகும் வரை காத்திருந்துவிட்டு அன்னசாலைக்குள் சென்றான். சந்நியாசிகள் பசியாறிக்கொண்டிருந்தார்கள். இருவரும் சாப்பிடத் தொடங்கியபோது காற்று ஏகமாக வீசி அசோக மரத்திலிருந்து இலைகள் உதிரத் தொடங்கின.

சந்நியாசிகளில் ஒருவன் வைத்திருந்த மயிலிறகுகள் காற்றில் பறந்துபோயின. ஒரு சிறுமியைப் போல அவள் குதூகலத்துடன் மயிலிறகு பறப்பதைப் பார்த்துக்கொண்டிருந்தாள். மழை பெய்வதற்கான ஈரக்காற்று வீசத் தொடங்கியது. வெயிலும் மழையும் சேர்ந்திருந்

தன. அவர்கள் மழையைப் பார்த்தபடியிருந்தார்கள். வெயில் மழையால் நனைந்துவிடாதா என்று அவள் ரகசியமான குரலில் கேட்டாள். அவன் பதில் சொல்லவேயில்லை. அவள் சூடியிருந்த தாமரைப்பூ அவன் கண்களில் படும் போதெல்லாம் அவனறியாமல் காமம் விம்மிக்கொண்டிருந்தது. அவர்கள் மழை வெறித்த பகலில் நடந்து சென்றார்கள். உமணத்தி ஒருத்தி தன் உப்புப் பொதி மழையில் கரைந்து ஊறிப் போனதால் அதைச் சுமக்க முடியாமல் வழியவிட்ட படி வந்துகொண்டிருந்தாள். அவர்கள் கானகத்தின் பாதையில் மெதுவாக நடந்தார்கள். அந்தப் பாதையில் மழை பெய்திருக்கவில்லை. அவள் ஒடிந்து கிடந்த சிறிய சுள்ளி ஒன்றைக் கையில் எடுத்துக் கொண்டு சருகுகளைக் கலைத்தபடி நடந்து வந்துகொண்டிருந்தாள். அவன் மனம் தன்னைப் பிரிந்து போன பெண்ணைப் பற்றிய நினைவுகளில் சரிந்துகொண்டிருந்தது.

கானகப் பாதையில் வெயில் இலைகளைப் போலச் சிதறி வீழ்ந் திருந்தது. அவள் பாறைகளில் பூத்திருந்த சிறு செடிகளைப் பார்த்தபடி நடந்துகொண்டிருந்தாள். பயணிகளின் கூட்டம் ஒன்று அவர்களைக் கடந்து போய்க்கொண்டிருந்தது. அடர்ந்த நிழலின் வழியில் அவர்கள் நடந்துபோகும்போது எங்கிருந்தோ மறைந்து பறவை கத்தும் சப்தம் கேட்டது. அவள் புகார் நகரின் காகங்களை நினைவுகொண்டாள். கடற்காகமொன்று அவளது வீட்டின் சுவர் அருகே நின்றபடி வறட்டுக் குரலில் கத்திக்கொண்டிருந்தது. இந்திர விழாவுக்காக நகரமெங்கும் கொண்டாட்டம் நிறைந்திருந்தது. அவள் மஞ்சள் மலர்களைச் சூடிய கணிகைகளின் பல்லக்குகள் தெருவில் போவதைப் பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் கேட்டிராத வாத்தியக் கருவி யொன்றை வாசித்தபடி போகிறான் ஒரு பாணன். அந்த இசை உப்பைப் போல வெண்மையாக விரிந்திருந்தது. இந்திர விழாவுக்காக வந்திருந்த பாடினிகள் பகல் இரவெல்லாம் யாழ் மீட்டிக்கொண்டிருந் தார்கள். கூத்தாடுபவர்களின் சப்தம் வீதிகளில் கேட்டுக்கொண்டி ருந்தது.

மணல் கடிகையிலிருந்து ஒழுகும் மணலைப் போலத் தனிமை வீடெங்கும் சொட்டிக் கொண்டிருந்தது. அவள் கணவன் வேறு ஒருத்தியின் வீட்டில் தங்கியிருந்தான். அவன் செவ்வரி படர்ந்த பெண்ணொருத்தியோடு கடலில் கிடந்த சிப்பிகளை எண்ணிக் கொண்டிருப்பதாகத் தாதி சொன்னாள். அவளுக்குக் கலக்கமேயில்லை. இத்தனை இசைக் கருவிகளாலும் கடலின் ஓசையை அடக்க முடிய வில்லையே எனச் சந்தோஷம் கொண்டாள் தானும் கடலைப் போல சதா புரண்டுகொண்டேதான் இருக்கிறோமா? முரசு அறையும் சப்தம் கேட்டுக்கொண்டிருந்தது. கடலின் நிறம் மாறிக் கொண்டிருந்தது. அவள் தன் வீட்டின் கதவுகளைத் திறந்து வைத்தபடி இரவெல்லாம் காத்துக்கொண்டிருந்தாள். நாவாய்களில் கடல் வாணிபத்துக்குப் போன வணிகர்கள் வீடு திரும்பி வராமல் காத்திருந்த பெண்களைப் பற்றி சிறுவயதில் தாதி சொன்ன கதைகள் நினைவுக்கு வந்தன

தன் கணவனும் அதுபோல கடலின் ஏதோ ஒரு புள்ளியில் கரையேற முடியாமல் அலைந்துகொண்டிருக்கிறான் எனப் புனைவு கொண்டாள். கடல் அவனைக் கரை சேர அனுமதிக்காமல் புரட்டிப் போடுகிறது. எங்கோ கரையில்லாத தொலைவில் அலைகள் ஒரு நாவாயைக் கொண்டு செல்கின்றன.

அவள் மனம் புனைவை நீட்டிப் பின்னிக்கொண்டிருந்தது. யானை யொன்று பிளிறும் சப்தம் கேட்டுப் புனைவைத் துண்டித்துத் திரும்பும் போது பல்லக்கு ஒன்று வீதியில் போய்க்கொண்டிருந்தது. அவள் யோசனை கலைந்தவளாக எட்டிப் பார்த்தாள். சிவப்பில் பட்டு உடுத்திக் கூந்தலில் முல்லை சூடிய ஓர் இளம்பெண் பல்லக்கை விட்டு இறங்கிக்கொண்டிருந்தாள். கணிகையாகத் தானிருக்கக் கூடும். அவளுடைய கால்களில் செம்பூச்சு படர்ந்திருந்தது. அவள் தனது கேசத்தை மூடியிருந்த துணியை விலக்கியபடி நடக்கத் தொடங்கினாள். கொம்பு வாத்தியக்காரன் அவள் முன்னால் வாசித்துக்கொண்டு சென்றான். யாவும் வேடிக்கையாக இருந்தன. அன்றிரவில் அவள் தன் அறையில் சிறிய அகல் விளக்குகளை வைத்தாள். வெளிச்சம் துளிர்த்து மஞ்சள் நிறம் தரையெல்லாம் ஓடிக்கொண்டிருந்தது.

காற்று ஒடுங்கி விளக்கை எரிய அனுமதித்தது. பெருங்கூச்சலுடன் தொலைவில் கொண்டாட்டம் நிரம்பி வழிந்துகொண்டிருந்தது. அவள் பின்னிரவு வரை விளக்குகள் அணைந்துவிடாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். வீட்டுக்கு யாருமே தேடி வரவில்லை. நீலப்பட்சி மட்டும் பிரகாசத்தைத் தாங்க முடியாமல் குரல் ஒடுங்கிப்போயிருந்தது. அவள் தன் அலங்காரத்தைத் தானே உருப்பளிங்கில் பார்த்துக் கொண்டாள். வெண்பட்டு, ரத்தச் சிவப்பில் கரை, நெற்றிச்சுட்டி, கைவளை, இடுப்புவளை, சிகையில் சூடிய பூச்சரங்கள். காற்று தன்னைத் தொட்டுச் செல்லட்டும் என்று அவள் கதவுகளைத் திறந்துவிட்டாள். நீண்ட நேரத்துக்குப் பிறகு கடற்காற்று இரைச்சலுடன் வீட்டுக்குள் நுழைந்தது. சுடர்கள் நடுங்கத் தொடங்கின. அவள் உடலைக் காற்றின் நுண்கரம் மெல்லத் தொடுவதும் செல்வதுமாக இருந்தது. அவள் இருளை வெறித்தபடியே நின்றிருந்தாள். புகார் நகரம் களிப்பில் மயங்கிக் கிடந்தது.

கானத்துக்குள் பகலிலும் இருள் நடமாடிக்கொண்டிருந்தது. பொழுது தெரியாத பாதையில் அவன் நடந்து போய்க்கொண்டிருந்தான். அவமதிப்பைப் போல வேதனைமிக்க நிகழ்வு வேறிருக்கிறதா என்ன? அவன் தன் கைப்பொருளை எல்லாம் இழந்த பிறகு அவமதிப்பை உணரத் தொடங்கினான். ஆடல் மகளின் வீட்டில் யவனத் தேறல்களுக்குப் பதிலாக நாட்டுச் சாராயமும், உணவாகப் பாலில் இட்ட வடிசலுக்குப் பதிலாக வேகவைத்த கடற்பாசியும் தரப்பட்டன. ஆனாலும் ஆடல் மகளின் உடலில் எங்கோ நதி சுழித்தோடுவது

போல ஒரு ரகசியச் சுழிப்பிருப்பதைத் தேடிக்கொண்டேயிருந்தான். அவள் தந்த முத்தங்கள்கூட உலர்ந்து போனவையாக இருந்தன. அவன் படுக்கையிலிருந்தபடியே வணிக வீதிக்கு முத்திரைச் சீட்டு அனுப்பியிருந்தான். நாவாய் வரும் வரைக்கும் அவனுக்குப் பொற் காசுகள் தேவைப்பட்டன.

முத்திரைச் சீட்டைக் கொண்டு சென்றவன் இனி நாளங்காடியில் அவன் வணிகம் செய்ய இயலாது என்றபடி, அவன் முத்திரை மதிப்பிழந்துவிட்டதென்றான். வீட்டில் ஏதேனும் சொர்ண ஆபரணங்கள் இருக்கக்கூடுமா? அவன் யாவற்றையும் இழந்திருந்தான். உத்திரமும் ஊஞ்சலும் தவிர வீட்டில் வேறு என்ன இருக்கப் போகிறது? ஓர் இரவு கடந்துவிட்டால் கடலில் நாவாய் வந்துவிடாதா? அவன் மவுனமாகப் படுக்கையை விட்டு எழுந்து சென்றான். எப்போதும் அகில் புகை நிரம்பியிருக்கும். அந்த அறையில் இன்று கண்ணுக்குத் தெரியாத வெறுப்பு படர்ந்துகொண்டிருந்தது. கடற்கரைக்குப் போய்வர வேண்டும் போல் இருந்தது. அவன் இரவில் கடற்கரைக்குச் சென்று நீண்ட நாள்களாகியிருந்தன. நடந்து கடலில் கால் நனையுமளவு நின்றுகொண்டான். காலடியிலிருந்த மணலை அலைகள் இழுத்துக் கொண்டேயிருந்தன. அவனுக்கு ஆடல் மகளின் நினைவு வந்தது.

காலடி மணல் போலத்தான் கைப் பொருள்கள் போயினவா? இரவில் நட்சத்திரங்கள் கடலில் இறங்கிக் கொண்டிருந்தன. அவன் பின்னிரவில் திரும்பி வரும்போது தனது வீட்டைக் கடந்துதான் வந்தான். வீட்டில் சிறிய அகல் விளக்கு எரிவது போல் இருந்தது. அவன் தலை கவிழ்ந்தவனாகக் கணிகைகளின் வீதியில் நடந்தான். பாதி திறந்து கிடந்த கதவின் வழியாக அவன் உள் அறைக்குப் போனபோது அவள் இல்லாத படுக்கையிருந்தது. வேதனையுடன் அவன் படுத்துக்கொண்டான். ஏனோ உடனே வீட்டுக்குப் போய்விட வேண்டும் போல் இருந்தது. ஆனாலும் அவன் கண்களை இறுக்கிக் கொண்டு படுத்துக் கிடந்தான். விளையாடிவிட்டு வைத்திருந்த சோழிகள் நிசப்தத்தில் உறைந்திருந்தன. அவன் நடுங்கும் கைகளுடன் சோழிகளைக் கைக்குள்ளாகவே உருட்டிக் கொண்டிருந்தான். இந்திர விழா தொடங்குவதற்குச் சில நாள்களே அப்போது மீதமிருந்தன.

அவர்கள் சிதைமேடு ஒன்றைக் கடந்து போனார்கள். சிதறிக் கிடந்த பூக்களும் செத்தாரை அழைக்கும் பேராந்தைகளின் ஓசையும் ஆண்டலைப் பறவைகளும் தென்பட்டன. தான்றி, உமிஞ்சில், காரை, சூரை போன்ற விருட்சங்கள் புதைமேடிருந்த பகுதியிலிருந்தன. மயானத் தெய்வத்துக்குப் பலி கொடுக்கப்பட்ட எருதுகளின் கொம்பு களும் விரிந்த தலை எலும்புகளும் உடைந்து சிதறிக் கிடந்தன. பேய்கள் வாழ்வதாகச் சொல்லும் வாகை மரமும், நிணத்தோடு இறைச்சிகளைத் தின்னும் இராப் பட்சிகள் நிற்கும் விளாமரமும்

இருந்தன. சிதைநெருப்பு கொண்டுவரப்பட்டு, உடைக்கப்பட்ட மண்பாண்டங்கள் சிதறியிருந்தன. நெல்லும் பொறியும் சிறுபலியாக இடப்பட்ட அரிசியும் எங்கும் இறைந்து கிடந்தன. அவர்கள் புதை மேடுகளைக் கடந்து போகும்போது நீரால் கழுவி எடுக்கப்பட்டது போன்றதொரு கை எலும்பு அவனது காலில் மோதியது. அவன் குனிந்து அந்த எலும்பைத் தன் கைகளில் எடுத்துத் தடவிப் பார்த்தான். பிறகு அருகிலிருந்த சிதைக் குவியலில் அதைப் போட்டுவிட்டு நடந்தான்.

அவர்கள் இருவரும் அங்கிருந்த விருட்சங்களும்கூடச் சாவின் துர்நாற்றமேறியிருப்பதை உணர்ந்தார்கள். கடுத்த குரலில் அவளை யாரோ அழைப்பதுபோல் இருந்தது. அவர்கள் கவனம் கொள்ளாது நடந்தபோது ஒடுவை மரமொன்றிலிருந்து வௌவாலைப் போல மெலிந்திருந்த ஒருவன் கைகளை அசைத்து அவர்களைக் கூப்பிடுவது தெரிந்தது. அவன் விருட்சத்தின் அருகில் சென்று நிமிர்ந்து பார்த்தான். மரத்திலிருந்த கபாலிகர்களில் ஒருவன் உடல் மெலிந்து தலை மட்டும் பெரிதாகயிருக்கக் கபாலங்களை மாலையாகக் கோத்து அணிந்திருந்தான். கண்கள் பிதுங்கி வெளியே விழுந்து விடும்படி யிருந்தன. கபாலிகன் உரத்த குரலுடன் அவர்கள் எதற்காகப் புதை மேட்டின் வழியாக அலைகிறார்கள் என்று கேட்டான். வழிப்போக்கர் கள் எனச் சொன்னதும் வெளிறிய மஞ்சள் பற்கள் தெரிய, எங்கே சாவூருக்குப் போகிறீர்களா எனக் கெக்கலித்தபடி தனது கபாலம் ஒன்றைப் பிடுங்கி அவர்களின் மீது எறிந்தான். அவள் சாந்தம் கலையாமல் கபாலிகனைப் பார்த்துப் புன்னகைத்தபடியே தலைமாலை சூடினால் மட்டும் எவரும் ருத்ரனாகி விட முடியாது எனச் சொன்னாள். கபாலிகன் தன்னை மீறிச் சிரிக்கத் தொடங்கினான். அச்சிரிப்பு மயானத்தையே அதிர வைத்துக் கொண்டிருந்தது. அவன் கபாலங்களை வீசி எறிந்தபடி ஓங்காரமாகச் சிரித்துக் கொண்டிருந்தான்.

அவளுக்குப் புகார் நகரின் நன்காடு நினைவுக்கு வந்தது. நாற்புறமும் வாயிலையுடைய அந்த இடுகாட்டில் இதுபோன்ற கபாலிகர்கள் அதிகமிருந்தார்கள். அவர்கள் இரவில்தான் நகரத்துக்குள் நடமாடு வார்கள். எப்போதாவது பின்னிரவில் எருதின் ரத்தம் குடித்துச் சிவந்த உதடுகளும் காட்டுக் கோரை போன்ற தலைமயிரும் கொண்ட கபாலிகர்கள் உச்சாடனத்துடன் தெருவில் கடந்து போவதைப் பார்த்திருக்கிறாள். அவர்கள் பாதையைவிட்டு விலகிப்போகும் வரையில் தொலைவில் கேட்கும் கபாலிகனின் மயானச் சிரிப்பு அடங்கவேயில்லை.

இந்திர விழா முடிந்துபோன பிறகு ஓர் இரவில் அவன் வீடு வந்து சேர்ந்திருந்தான். மிகுந்த கூச்சத்துடன் படுக்கையின் ஓரத்தில் சுருண்டு கிடந்தாள். முதுகில் வழியும் அவளது கேசத்தைத் துடைத்த

படியே எதையோ முதுகில் எழுதிக்கொண்டிருந்தான் அவன். பிறகு தன் கைகளால் அவளைப் புரட்டி முகத்தையே பார்த்துக்கொண்டிருந் தான். அவன் கண்கள் உறக்கமற்றுச் சிவந்திருந்தன. விரலால் அவளது முகத்தைத் தடவியபடி எதையோ தனக்குள்ளாகச் சொல்லிக் கொண்டிருந்தான். தொலைவில் அலையின் சப்தம் கேட்டுக்கொண்டி ருந்தது. அவன் எழுந்துகொண்டவனாகத் திரைச்சீலைகளை விலக்கிவிட்டு இருளைப் பார்த்துக்கொண்டிருந்தான். புகார் நகரம் லேசான பந்த வெளிச்சத்தில் தெரிந்தது. நாழிகை அறிவிப்பவனின் சப்தம் துல்லியமாகக் கேட்டுக்கொண்டிருந்தது. அவன் ஆழ்ந்து பெருமூச்சிட்டபடியே தனக்குத்தானே சொல்லிக்கொண்டான். போதும். அவள் எழுந்து விளக்கைத் தூண்டினாள். அவன் செம்மஞ்சள் ஒளியில் அவளைப் பார்த்தபடியே சொன்னான்,

“நாமிருவரும் புகாரிலிருந்து காலை புறப்படப் போகிறோம்.”

அவள் மௌனமாகத் தலையசைத்துக்கொண்டாள். அவன் தயக்கத் துடன் சொன்னான்,

“இனி ஒருபோதும் இங்கே திரும்பி வர மாட்டோம்.”

இதைச் சொல்லும்போது அவன் குரல் நடுங்குவது போல் இருந்தது. அவள் கைகள்கூடத் தாமே நடுங்கின. இந்தக் கடலும் அலைச் சப்தமும் திரும்பக் கேட்க முடியாத தூரம் போய்விடப் போகிறோமா? அவளுக்குத் தன் வீட்டுக்குப் போய்வர வேண்டும் போல் இருந்தது. அவர்களுக்குத் தெரிந்தால் தன்னை நகர் நீங்கிச் செல்ல அனுமதிப்பார்களா? அவனோடு செல்வதில் விருப்பமாகவே இருந்தது. அவன் நகரையே பார்த்துக்கொண்டிருந்தான். கடல் கரையேறுவதும் திரும்பிச் செல்வதுமாக இருந்தது.

கானகப் பாதையில் இருவரும் நெல்லி மரத்தடியில் அமர்ந்து கொண்டார்கள். உதிர்ந்து கிடந்த நெல்லிக் கனிகளை அவள் சுவைத்துக்கொண்டிருந்தாள். அவர்கள் கடந்து செல்ல வேண்டிய பாதையில் மாலை நேர வெயில் நீண்டுகொண்டிருந்தது. அருகாமையில் நெருப்பு எரிவது போன்ற அடர் சிவப்பில் கொன்றைப் பூக்களை மலரச் செய்திருந்தது. புளிப்பைச் சுவைத்துச் சுழிக்கும் அவள் உதடுகளைப் பார்த்த போது முத்தமிட வேண்டும் போல் இருந்தது. அவள் வெட்கத்துடன் நாவைச் சுவைத்துக்கொண்டிருந்தாள். இருவரும் மாலை வெயிலில் நடக்கத் தொடங்கினார்கள். இரவு நெருங்குவதற்குள் கானகத்திலிருந்து வெளியேற முடியவில்லை. படைவீரர்களுக்கான கானகச் சத்திரம் ஒன்றில் இரவு தங்கிக் கொண்டார்கள்.

இருள் மசியைப் போலத் தொட்டதும் கையில் ஒட்டிக்கொள்வதாக இருந்தது. அவன் கல்லில் அமர்ந்தபடியே பந்தத்தை எரியவிட்டபடி அவளையே பார்த்துக்கொண்டிருந்தான். இவ்வளவு தூரம் நடந்தும் அவள் சோர்ந்துவிடவில்லை. இத்தனை நாள்களாக இல்லாத புன்னகை

அவள் முகத்தில் நிரம்பியிருந்தது. பெயர் தெரியாத பூச்சிகள் விளக்கொளிக்கு வந்து சப்தமிட்டுக் கொண்டிருந்தன. அவன் நீண்ட நாள்களுக்குப் பிறகு அவளை அணைத்தபடியே முத்தமிடத் தொடங்கினான். அவள் மிகுந்த கூச்சத்துடன் அவனை விலக்கியவளாக எழுந்துகொள்ள முயன்றாள். அவனோ தன் கைகளால் பலமாக இழுத்துக் கட்டிக் கொண்டபோது அவளுடைய கைகள் மெதுவாக அவன் முதுகைத் தொட்டுக்கொண்டன. அவள் கடல் நுரைப்பது போலக் காமத்தால் நுரைக்கத் தொடங்கினாள். அவனுக்கு நாவாய் கடலில் செல்வது போலிருந்தது. காற்று ஒடுங்கியிருந்த இரவில் அவர்கள் ஒருவரையொருவர் அறியத் தொடங்கியிருந்தார்கள்.

அவளின் உடல் உறைந்துபோன கடல் போல் இருந்தது. கடல் தன்னை அலைகளாக வெளிப்படுத்திக் கொள்வது போலத்தான் காமமுமா? கடலில் கலந்திருந்த உப்பைப் போலத்தான் காமம் உடலெங்கும் கலந்திருக்கிறதா? அவன் எதையோ நினைத்தபடி முத்திக்கொண்டிருந்தான். அவள் காற்சிலம்புகள் இரவெல்லாம் சப்தமிட்டுக்கொண்டே இருந்தன. அவன் கேலியுடன் உனக்குப் பதிலாகப் பேசுகின்றனவா உன் சிலம்புகள் என்றபடி சிலம்பை முத்தமிட்டான். அவள் கால்களை உதறிக்கொண்டாள். இரவெல்லாம் அவளோடு வாழ்வது மட்டும் இனித் தனது இருப்பிற்கான காரணம் எனப் பிதற்றிக்கொண்டிருந்தான். அவள் உடலில் கடலின் அலைகள் இடையறாது வீசிக்கொண்டே இருப்பது போல் இருந்தது. அவள் கண்களைத் திறந்துகொள்ளவேயில்லை.

விடிகாலையில் எழுந்தபோது கானகமெங்கும் புகை நிரம்பியிருந்தது. அவள் சிற்றோடை ஒன்றில் குளித்தவளாக நின்று கொண்டிருந்தாள். அவன் மனம் ஈரமேறிய இலைகளைப் போல நெகிழ்வுற்றிருந்தது. காற்றில் இறகு பறப்பது போல லகுவாக ஈரப்புகையினுள் நடந்தான். அவள் கூந்தலில் காட்டுப் பூக்களைச் சூடியவளாக நடந்து கொண்டிருந் தாள். அவள் கடந்து செல்ல வேண்டிய நதியின் கரையில் நின்றபோது யாரோ ஒரு முதியவளைக் கண்டார்கள். முதியவள் சிகையை மழித்திருந்தாள். அவளது கையில் ஒரு தண்டமிருந்தது; தான் ஒரு பெண் துறவி என்றாள். அவர்கள் தொலைதூரம் நடந்து வந்திருப்பதாக முகக்குறி தெரிவதாகச் சொன்னாள். அவன் தலையசைத்தான். அவனும் பெண் துறவியுமாகப் பேசிக்கொள்ளத் தொடங்கினார்கள். நதியைக் கடந்து செல்லப் பரிசலில் ஏறிக்கொண்ட போதும் துறவி பேசிக்கொண்டே வந்தாள். அவள் கேசம் காற்றில் அலைந்து கொண்டிருந்தது. காட்டுச் செவ்வந்தி சூடிய இளம் பெண்ணை ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டிருந்த முதியவள் கேட்டாள்,

“நீ புகார் நகரத்துப் பெண்ணா?”

அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

"எப்படித் தெரிந்துகொண்டீர்கள்?"

"உன் கூந்தல்கூட கடல் நுரையைப் போல மிருதுவாக இருக்கிறதே." இருவரும் சிரித்துக்கொண்டார்கள். முதியவள் ஆற்றின் கரையை நெருங்கும்போது அவளிடம் கேட்டாள்,

"உன் பெயரைச் சொல்லவில்லையே."

அவள் தணிவான குரலில் சொன்னாள்,

"கண்ணகி."

ஆற்றைக் கடந்தபோது சூரியன் தலைக்கேறிக்கொண்டிருந்தது. எங்கோ மந்தையின் சப்தம் கேட்டுக்கொண்டிருந்தது. அவர்கள் தொலைவில் தெரியும் புறஞ்சேரியைக் கண்டவர்களாக ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள். ஆய்ச்சியர்களின் புறஞ்சேரியில் யாரோ உக்கிரமேறிக் கத்திக்கொண்டிருப்பது கேட்டது. கோவலனின் கைகளைப் பற்றிக்கொண்டு நடந்து கொண்டிருந்தாள் கண்ணகி. தொலைவில் மதுரை நகரம் மாலை வெயிலில் மினுங்கிக்கொண்டிருந்தது.

வயதின் படித்துறை

இடுப்பில் நிற்காத அரக்கு நிற டவுசரைத் தூக்கி அரைஞாண் கயிற்றில் மாட்டிக் கொண்டபடி நான் வீட்டுக்குள் நுழைந்தபோது அதுவரையில்லாத நிசப்தம் வாசல் தாண்டி வழிந்தோடிக் கொண்டிருந் தது. தங்கைகளும் அம்மாவும் வீட்டிலிருந்த மணி சித்தியும் எங்கே போய்விட்டார்கள் என்று யோசனை யாக இருந்தது. புழுதி படிந்த காலை, கழுவிக் கொள்ளாமலே பயத்தோடு வீட்டுக்குள் மெதுவாக நடந்தேன். மழைக்காலம் தொடங்கிவிட்டாலே அம்மாவின் மூச்சிரைப்பு தொடங்கிவிடும். ஒரு நத்தையைப் போலத் திடீர் என வீடு சுருங்கிக் கொண்டுவிடும். நேற்று இரவு நாங்கள் உறங்கிய பிறகு ஆலங்கட்டி மழை பெய்தது என்று காலையில் அம்மா சொன்னபோது நாங்கள் யாவரும் பார்க்கா மல் போய்விட்டோமே என்று வருத்தப்பட்டுக் கொண்டோம். அம்மா, 'பின்னிரவில் நல்ல மழை பெய்தது' என்றாள். பின்னிரவில் அல்ல, பத்து மணி இருட்டில் கூட நான் பின்வாசல் கதவைத் திறந்து செல்ல பயந்து போய் படியில் நின்றபடியே மூத்திரம் பெய்துவிடுவேன். அவ்வளவு பயமாக இருக்கும். அம்மாவை நினைக்கையில் ஆச்சரியமாக இருந்தது. நள்ளிரவைத் தாண்டியதும் இருட்டுக்குள் நின்றபடி மழையைப் பார்த்திருக்கிறாள்.

“இடி இடிச்சதா?” என்று நான் கேட்டபோது அவள் “சரியான இடி... கிழக்கே இடி விழுந்து ஒரு மரம் எரிந்தது தெரிந்தது” என்றபடி மழைத் தண்ணீரில் நிறைந்திருந்த பானைகளைக் காட்டினாள்.

தூம்புவாயில் தண்ணீர் பிடித்து வைத்திருக்கிறாள். அம்மாவுக்கு தனது நோவைவிடவும் மழையைக் காண்பதில் அலாதி விருப்பமிருந்தது. இதுபோல சில நாள்கள் அவள் மழையின் ஊடாக நனைந்தபடியே தூம்புவாயில் கொட்டும் தண்ணீரை, பாத்திரங்களில் பிடித்துக்கொண்டிருப்பாள். அவள் பிடித்து முடியும் நேரம் மட்டும் காத்துக்கொண்டிருந்தது போல நான் நின்றுகொண்டே இருப்பேன். பிறகு அதே தூம்புவாயில் விழும் தண்ணீரில் கத்திக்கொண்டு குளிக்கத் தொடங்குவேன்.

அம்மா, சிரித்தபடியே வாசல்படியைப் பிடித்துக்கொண்டு நின்றிருப்பாள். ஈரம் படிந்த கேசத்தோடு கைகளைக் குறுக்காகக் கட்டிக்கொண்டு கண்களில் புன்னகை கொப்பளிக்க, அவள் மழையைப் பார்த்துக்கொண்டிருப்பதைப் பார்க்கும்போது அம்மா மிக அழகானவள் என்று தோன்றும்.

ஆனால், மழை பெய்த மறுநாளில் அவளுக்கு மூச்சிரைப்பு வந்துவிடும். வீட்டின் ஜன்னல்கள் யாவும் சாத்தப்பட்டுவிடும். தரை முழுவதும் சாக்கை விரித்திருப்பார்கள். சமையல் அறையில் பூண்டைச் சுடும் வாசம் கசியும். அம்மா ஒரு கம்பளியைப் போர்த்திக்கொண்டு மரவட்டையைப் போலச் சுருண்டு கிடப்பாள். சீரற்ற அவளது மூச்சொலி, பயத்தை உண்டாக்குவதாக இருக்கும். அதுபோன்ற இரவுகளில் யாரும் தூங்குவதேயில்லை. அம்மாவின் முனங்கல் ஒலி விட்டு விட்டுக் கேட்டுக்கொண்டே இருக்கும். அவள் எதற்கெனச் சொல்லாமல் விம்மிக்கொண்டேயிருப்பாள். கண்ணீர் கசிந்தோடி கன்னத்தில் படிந்து போயிருக்கும். ஆனால், அவளது அழுகையொலி கேட்காது. வெதுவெதுப்பை உண்டுபண்ணுவதற்காக அரிக்கேன் விளக்கு ஒன்றை ஏற்றி அந்த அறையில் வைத்திருப்பார்கள். அதன் வெளிச்சம் தரையில் ஓரிடத்தில் நில்லாது அலைபாய்ந்தபடியே இருக்கும். வெதுவெதுப்பு ஒரு திரவத்தைப் போலக் கசிந்தோடி படுக்கை முழுவதும் நிரம்பிவிடும்.

அந்த அறையில் அம்மாவைத் தவிர யாருமே இருக்க மாட்டார்கள். சில நாள்களில் அப்பா ஒரு நாற்காலியில் சாய்ந்தபடியே உறங்கிக்கொண்டிருப்பார். அம்மாவின் குரல் கேட்டதும் யாராவது ஒருவர் எழுந்து அந்த அறைக்குள் செல்வார்கள். மூச்சு விட நடுங்கும் குரல் கேட்கும். அம்மா வேதனை தாள முடியாமல், “நான் செத்துப் போயிருறேன். மூச்சு முட்டுதே. தாங்க முடியலையே” என்று கத்துவாள். மழைக்குப் பிந்திய இரவு என்பதால் வீட்டைச் சுற்றிலும் பீடித்திருந்த இருளில் அக்குரலைக் கேட்பது, உடலை நடுங்கச் செய்யும். மருத்துவர் கசப்புதான் அந்நோய்க்கு மருந்து என்று சொல்லியிருந்ததால் கசப்புக்காக அம்மியில் வைத்து வேப்பங்

கொழுந்தை அரைத்து உருட்டி விழுங்குவதற்குக் கொண்டு வந்து தருவாள் சித்தி. அம்மாவின் உடல் மட்டுமல்ல, அந்த அறையே கசப்பில் நிரம்பியிருந்தது.

இன்றைக்கும் வீட்டுக்குள் நுழைந்ததும் எதிர்ப்பட்ட அமைதி நிமிஷத்தில் கலக்கத்தை உருவாக்கியது. நினைத்தது போலவே தரையில் சாக்கு விரித்திருந்தார்கள். ஜன்னல்கள் மூடப்பட்டிருந்தன. வாய் அகன்ற பாத்திரமொன்றில் வெந்நீர் வைத்துத் தூக்கிக்கொண்டு அம்மாவின் அறைக்குள் சித்தி நடந்து போய்க் கொண்டிருந்தாள்.

டவுசர் பையில் இருந்த பம்பரத்தை எங்கு வைப்பது என்று யோசனையாக இருந்தது. பம்பரத்தை ஏதாவது ஓர் இடத்தில் ஒளித்து வைக்காவிட்டால் யாராவது தூக்கிக்கொண்டுவிடுவார்கள். பூனைகளைவிடவும் மிருதுவாக நடந்து சமையற் கட்டிலிருந்து ஆட்டு உரலின் பின்னால் பம்பரத்தை ஒளித்து வைத்துவிட்டுத் திரும்பும்போது அம்மாவின் அறையில் வேறு யாரோ நிற்பது போலிருந்தது. மெதுவாக நடந்து போய் அந்த அறையின் கதவைப் பிடித்துக்கொண்டு நின்றிருந்தேன்.

மருத்துவர் வந்திருந்தார். இளமஞ்சள் வெளிச்சத்தில் அவரது நரைத்துப் போயிருந்த தலை ஒரு செடியைப் போல விநோதமாகத் தெரிந்தது. அவர் கையில் வைத்திருந்த தெர்மாமீட்டரை உதறிக் கொண்டே ஏதோ விசாரித்துக் கொண்டிருந்தார். பிறகு அம்மாவின் கைகளைப் பற்றிக்கொண்டு ஊசி போடுவதற்காக மருந்தைத் தன் விரலால் சுண்டி உடைத்தார். கண்களை மூடிக் கொண்டேன். அவர் ஊசியைப் போட்டுவிட்டு பஞ்சை சித்தியிடம் தந்து தேய்த்து விடும்படி சொல்லிவிட்டு சற்றே கலக்கத்துடன், “படுத்துக்கோங்க” என்று அம்மாவிடம் சொல்லிவிட்டு எழுந்துகொண்டார்.

தற்செயலாக அவரது கண்ணில் நான் பட்டிருக்கக்கூடும். என்னைப் பார்த்துச் சிரித்தபடி, “சாப்பிட்டாயா?” என்று கேட்டார். நான் பதிலே பேசவில்லை. அம்மாவின் மூச்சு சிதறிக்கொண்டிருந்தது. உலகில் இருந்த மொத்தக் காற்றையும் உறிஞ்சிவிட முயற்சிப்பவளைப் போலப் பெருமூச்சிட்டுக் கொண்டிருந்தாள். அறைக்குள்ளாக நிற்க முடியவில்லை. தங்கைகள் யாரும் சொல்லாமலே அவரவர் படுக்கைக் குப் போயிருந்தார்கள். நான் சித்தியின் சேலையைப் பிடித்துக்கொண்ட படி ரகசியமான குரலில் “பசிக்கிறது” என்றேன். மணி சித்தி பதிலே சொல்லவில்லை. அவள் அம்மாவின் நெற்றியை வருடிக் கொண்டேயிருந்தாள்.

அம்மாவின் மூடிய கண்கள் அசைந்துகொண்டேயிருந்தன. உடல் ஒடிந்த கிளையைப் போலத் துவண்டு கிடந்தது. அவள் உதடுகளைக் கடிந்திருக்கக்கூடும். ரத்தம் கசிந்து உறைந்திருந்தது. சித்தி தன் கையிலிருந்த பஞ்சை என்னிடம் தந்தபடியே “தேய்த்துவிடு” என்று சொல்லிவிட்டு சமையற்கட்டுக்குள் நடந்து சென்றாள். மெதுவாக அம்மாவின் படுக்கை அருகே உட்கார்ந்தேன். அவளது சரிந்து

கிடந்த கேசம் கட்டிலை விட்டு தரையிறங்கிக் கிடந்தது. வெளுத்த உடலில் சூடேயில்லை. அம்மாவின் முகத்தில் துயரம் கூடுகட்டி இருந்தது. அவளிடமிருந்து பாத்திரங்களை நாரால் தேய்க்கும்போது எழுவது போன்றதொரு கீச்சுக் குரல் எழுந்துகொண்டே இருந்தது. அவள் கைகளை அழுத்திப் பிடித்துக்கொண்டு தேய்ப்பது பயமாக இருந்தது. நடுக்கத்துடன் அவள் விரல்களைப் பற்றிக்கொண்டேன். உள்ளங்கை மட்டும் சில்லென இருந்தது.

சித்தி சமையலறையிலிருந்து என்னைக் கூப்பிட்டாள். தட்டில் தோசையும் சட்னியுமிருந்தன. வேப்பங்கொழுந்து அரைத்த அதே அம்மிக் கல்லில் சட்னியும் அரைத்திருக்கக்கூடும். கசப்பு வழிந்தது. நான் இஷ்டமில்லாமல் சாப்பிட்டுக்கொண்டிருந்தேன். சித்தி தானாக எதையோ முணுமுணுத்தபடியே இருந்தாள். சாப்பிட்டு எழுந்து கொள்ளும்போது "ரெண்டு நாளைக்கு வீட்டை விட்டு வெளியே எங்கேயும் போகக் கூடாது தெரியுமா?" என்று சித்தி சொன்னாள். தலையாட்டிக்கொண்டேன்.

எனக்கும் படுக்கையில் காலிச் சாக்கை விரித்திருந்தார்கள். சித்தி வழக்கம்போலச் சிறிய மரப்பலகையைத் தலைக்கு வைத்தபடி படுத்துக்கொண்டாள். வீட்டுக் கடிகாரத்தில் மணி பத்தைத் தாண்டி யிருந்தது. தெருவில் நடமாட்டம் ஓய்ந்திருந்தது. ஆனாலும் விளை யாடும் ஒன்றிரண்டு சிறுவர்கள் வீடு திரும்பவில்லை என்பது அவர்களின் அரவத்திலிருந்து தெரிந்தது.

அம்மா உறங்கியிருக்கக்கூடும். அறையில் சப்தமேயில்லை. தங்கைகள் கூட உறங்கியிருந்தார்கள். எனக்கு வீட்டின் ஜன்னல்கள் கதவுகள் யாவையும் மூடியிருந்தது பயமாக இருந்தது. படுக்கையை விட்டு லேசாகத் தலையைத் தூக்கிப் பார்த்தேன். அம்மா அறையிலிருந்த வெளிச்சம் அந்த அறையை விட்டு வெளியேறி எங்கள் படுக்கை வரை ஊர்ந்து வந்துகொண்டிருந்தது. ஒரு பல்லி நாக்கை நீட்டுவதும் உள் இழுத்துக்கொள்வதும் போல அந்த வெளிச்சம் முன் வருவதும் பின்னால் போய்விடுவதுமாக இருந்தது. வெளியில் இருட்டிலிருந்த சில்வண்டுகள் சப்தமிட்டுக்கொண்டிருந்தன.

சித்தி கால் மேல் கால் போட்டு ஆட்டியபடி ஏதோ யோசனையிலி ருந்தாள். அவள் அருகாமையில் உள்ள ஊரில் கதர் சொசைட்டியில் வேலை செய்வதற்காக வந்து அவர்களோடு தங்கியிருந்தாள். அவன் பள்ளிக்குக் கிளம்பும் நேரம் புறப்படும் அவள் வீடு திரும்பும்போது இரவாகிவிடும். அவளது சொசைட்டியில் தேனீ வளர்க்கிறார்கள் விதவிதமான வர்ணங்களில் மெழுகுவர்த்திகள் கூடச் செய்வார்கள். மணி சித்திதான் அதைச் செய்யக்கூடியவள். பார்த்துக்கொண்டிருந்த போதே அவள் தன் கால்களை மடக்கிக்கொண்டு குப்புறப் படுத்துக் கொண்டாள்.

அம்மாவிடமிருந்து முரட்டுக் குரல் ஒன்று வெளிப்பட்டது. சித்தி நடுக்கத்தோடு எழுந்து உள்ளே போனாள். அவள் எதையோ

கண்டுவிட்டதைப் போல பயத்தில் கத்தினாள். அப்பா தனது மேஜையை விட்டு எழுந்தோடி வந்தார். நான் அறைக்குள் போவதா இல்லையா எனத் தெரியாமல் நின்றுகொண்டிருந்தேன். அம்மாவின் நெஞ்சு புடைத்துக்கொண்டது போலாகி வாய்கட்டிக்கொண்டிருந்தது. சித்தி, "தாடை பூட்டிக்கொண்டுவிட்டது" என்று கத்தினாள். அப்பா தன் பலம் கொண்ட கையால் அம்மாவின் மார்பில் ஓங்கி அடித்தார். சட்டென ஏதோ முறிந்தது போலாகி அவளது வாய் திறந்துகொண்டு விட்டது. அம்மா நீர் கோத்த கண்களுடன் பெருமூச்சிரைத்தாள்.

சித்தி சிறிய துணியால் அவள் வாயிலிருந்து வழியும் கோழையைத் துடைத்து விட்டபடியே, "சரியாயிருச்சுக்கா. நீ படுத்துக்கோ" என்றாள். அம்மாவின் கேசத்தில் கோழை படிந்துபோயிருந்தது. சித்தி அதைக் கண்டுகொள்ளவில்லையோ என்பது போல அதைத் துடைப்பதற்காக அருகில் நடந்து சென்றேன். அம்மாவின் கைகள் என்னை இறுக்கமாகப் பிடித்துக்கொண்டன அந்தக் கைகளின் இறுக்கத்தில் அவளது உடல் அதிர்ந்துகொண்டிருப்பதை உணர முடிந்தது.

சித்தி அம்மாவைப் படுக்க வைத்தாள். பிறகு விளக்கைத் தூண்டி விட்டுவிட்டு வெந்நீரைப் புகட்டுவதற்கு முயற்சித்தாள். அம்மாவின் உதடுகள் அதைப் பருகவே இல்லை. கண்கள் சொருகிக்கொண்டிருந் தன. சித்தி அந்த முகத்தைத் துடைத்த போது, அவள் வாய் கோணியது போலாகிக்கொண்டிருந்தது. மணி சித்தி பயத்தோடு தன்னையறியாமல் அழுதாள். அப்பாவுக்கு அவளது அழுகுரல் கேட்டிருக்கக்கூடும். அறைக்குள் திரும்பி வந்து சற்றே கோபத்துடன் "என்னடி என்ன செய்ற?" என்றார். "எனக்குப் பயமாயிருக்கு. எதுக்கும் டாக்டரை வரச் சொல்லுங்க" என்று அரற்றினாள் சித்தி.

அப்பா டாக்டரை அழைத்துக்கொண்டு வருவதற்காக வெளியே புறப்பட்டபோது, வாசலில் படுத்துக் கிடந்த நாய் அவரோடு கூடவே நடந்து போகத் தொடங்கியது. வாசலுக்கு வந்து நின்று இருளையே பார்த்துக்கொண்டிருந்தேன். தெருவில் ஆட்கள் யாருமே இல்லை. சித்தி அருகாமை வீட்டின் கதவைத் தட்டிக் கூப்பிட்டுக் கொண்டிருந்தாள். சிறிது நேரத்தில் அருகாமையிலிருந்த டீச்சரும் அவளது பெண்ணும் பின்வாசல் வழியாகவே அம்மாவைப் பார்ப்பதற் காக வந்திருந்தார்கள்.

டீச்சர் அம்மாவின் முகவாட்டத்தைக் கண்டவள் போல டாக்டர் என்ன சொன்னார் என்று விசாரித்துக்கொண்டிருந்தாள். சித்தி பதில் சொல்லாமல், "வசம்பைச் சுட்டு முகர்ந்து பார்க்கச் சொல்ல லாமா?" என்று கேட்டாள் டீச்சர், "அதற்கு பதிலா ஓமத்தை முகர்ந்து பார்க்கச் சொல்லு" என்றபடி என்னை முறைத்துப் பார்த்துக் கொண்டபடியே "தூங்கலையா?" என்று கேட்டாள். நான் உதட்டைக் கடித்தபடியே, "தூங்கிட்டேன் டீச்சர். இப்போதான் எழுந்திருச்சேன்" என்றேன். டீச்சரின் மகள், சுவரில் இருந்த கண்ணாடியைச் சுற்றிலும் சித்தி பின்னியிருந்த வலையைப் பார்த்துவிட்டு, "இந்த லேஸ்

எங்கே கிடைத்தது?" என்று கேட்டுக் கொண்டிருந்தாள். டீச்சருக்குப் பயந்துபோய்ப் படுக்கையில் படுத்துக்கொண்டேன்.

மருத்துவர் வந்தபோது டீச்சர் ஓரமாக நின்றுகொண்டாள் மருத்துவரின் கைகள் அம்மாவைப் புரட்டிக்கொண்டிருப்பது தெரிந்தது. பிறகு மெதுவான குரலில் அவர் சொன்னார்,

"நீங்க டவுன் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோயிட்டா நல்லது."

அப்பா அவரிடம், "காலையில் சேர்ந்தால் பரவாயில்லையா?" என்று விசாரித்துக்கொண்டு இருந்தார். மருத்துவர் எதற்கும் ஒரு ஊசி போட்டு விடுவதாகச் சொல்லியபடி மருந்தைத் தேடிக் கொண்டிருந்தார். அப்போது அம்மாவின் பெருமூச்சு, ஒரு விக்கலைப் போல இடைவிடாமல் எழுந்து நீண்டுகொண்டிருந்தது. மருத்துவர் கையிலிருந்த ஊசியை அவசரமாகச் செலுத்திவிட்டு, அப்பாவிடம், "இப்போதே அழைத்துக்கொண்டு போய்விடுங்கள். இல்லாவிட்டால் உயிருக்கு ஆபத்தாகிவிடும்" என்றார்.

சித்தி கலங்கியிருக்கக் கூடும். அவள் அவசரமாகக் கூடையில் அம்மாவின் புடைவைகளையும் பிளாஸ்கையும் கிழிந்த துணிகளையும் திணித்துக்கொண்டிருந்தாள். அருகிலிருந்த நகரத்துக்குப் போக வேண்டும் என்றால்கூடப் பதினைந்து மைல் போக வேண்டும். மாட்டு வண்டியைக் கேட்பதற்காக அப்பா வெளியே போன பிறகு சித்தி என் அருகில் வந்து படுத்துக்கொண்டு என்னைக் கட்டிக்கொண்டு அழுதாள். முதுகில் அவளது கண்ணீரின் உஷ்ணம் வடிந்தது. அவள் என் தலையைக் கோதிவிட்டபடியே, "வீட்டைப் பார்த்துக்கோடா. காலையிலே அப்பா உங்களைக் கூட்டிட்டு வந்திருவார்" என்றாள். இருட்டைவிடவும் இது மிகப் பயமாக இருந்தது.

அம்மாவின் மூச்சிரைப்பு மிக அதிகமாகி அவள் படுக்கையை விட்டுக் கீழே விழுந்திருந்தாள். சித்தி ஓடிச்சென்று அவளைத் தூக்கியபோது அம்மா சாடையிலே குடிப்பதற்குத் தண்ணீர் வேண்டுமென்று கேட்டாள். சித்தி என்னைக் கூப்பிட்டு, அவளது தலையைப் பிடித்துக்கொள்ளச் சொன்னாள். நான் தலையைத் தாங்கிப் பிடிக்க முடியவில்லை. நழுவிக்கொண்டிருந்தது. முழு பலத்தையும் சேர்த்துப் பிடித்துக்கொண்டேன். சித்தி அவசரமாக அடுப்பைப் பற்ற வைத்து, கடுங்காபியை வைத்துக்கொண்டு வந்திருந்தாள். சூட்டோடு காபியை அம்மாவுக்குப் புகட்டி விட்டாள். அம்மாவின் உதடுகள் தண்ணீரை உறிஞ்சிக்கொண்டிருந்தன. பிறகு மெதுவாக அவள் படுக்கையில் சாய்ந்துகொண்டாள்.

சித்தி மாட்டுவண்டி வருவதற்குள் ஒரு டம்ளரும் போர்வையும் விரிப்பதற்குக் காலிச் சாக்கும் சுருட்டிக்கொண்டிருந்தாள். மணி இப்போது பன்னிரண்டைத் தாண்டியிருந்தது. வாசலில் வந்து நின்ற மாட்டின் மணிச்சத்தம் கேட்டது. அப்பா உள்ளே வந்தபோது அம்மா அறையில் தன்னை மறந்து உறங்கிக்கொண்டிருந்தாள்

அப்பா செய்வது அறியாமல் பார்த்துக்கொண்டிருந்தார்.

சித்தி உறங்குபவளை எழுப்ப வேண்டாம் என்று சொன்னதால் வண்டிக்காரனை வீட்டின் முன்னாலே மாட்டை அவிழ்த்து விட்டுப் படுத்துக்கொள்ளும்படியாக அப்பா சொல்லிவிட்டு வந்தார்.

சித்தி, அம்மா படுத்திருந்த அறையின் கதவைக் குளிர் வராமல் சாத்தி வைத்துவிட்டு அருகிலே படுத்துக்கொண்டாள். நாங்கள் படுத்திருந்த அறையில் துளி வெளிச்சமில்லை. கண்கள் இருட்டுக்குள் ளாகவும் எதையோ தேடிக்கொண்டிருந்தன. உறக்கம் கூடிவராமல் மனநடுக்கம் அதிகமாகி இருந்தது. அருகில் படுத்திருந்த தங்கைகளை இடித்துக்கொண்டு படுத்துக்கொண்டேன். வீட்டின் கூரைகள் மெது வாகத் தரையிறங்குவது போலிருந்தது. கண்களை இறுக்கமாக மூடிக் கொண்டேன். இதுவரையிருந்த வீட்டுக்குள் ஒளிந்திருந்த இன்னொரு வீடு வெளிப்பட்டுவிட்டது போல வீட்டின் உருவமே மாறியிருந்தது. எங்கோ மலைக் குகைக்குள்ளிருப்பது போலிருந்தது.

மழை ஏன் பெய்கிறது என்று ஆத்திரமாக வந்தது. தங்கைகளில் ஒருத்தி உறக்கத்திலும் பாடம் சொல்லிக்கொண்டிருந்தாள். நான் இருட்டுக்குள்ளாகப் புதைந்துகொண்டேன். எப்போது உறங்கினேன் என்று தெரியவில்லை. அம்மாவின் குரலைப் போலவே இருந்த முணுமுணுப்பைக் கண்டு எழுந்தபோது, சமையலறையின் கதவு சாத்தியிருந்தது. நான் எழுந்து சமையலறைக் கதவைத் தள்ள முயன்றபோது சித்தி திமிறிக்கொண்டிருந்தாள். அவளது சேலை உருவப்பட்டு ஓரமாகக் கிடந்தது. அவள் தன் கால்கள் விரித்தபடி ஆடைகள் விலகிப் படுத்திருந்தாள். அப்பா அவளை இறுக்கமாகக் கட்டிக்கொண்டு, “சும்மா இரு... இல்லாட்டா நானும் செத்துப்போயிரு வேன். எனக்கு என்ன செய்றதுன்னே தெரியலை. பயமாக இருக்கு” என்று சொல்லியபடி அவள் மீது இயங்கிக்கொண்டிருந்தார். அவரிட மிருந்து விலகி வர முயற்சிப்பவளைப் போல, அவள் கைகள் அப்பாவைத் தள்ளிக்கொண்டிருந்தன. அப்பா கெஞ்சும் தொனியில், “என்னால இருக்க முடியாது. தயவு செய்து புரிஞ்சுக்கோ... இல்லை. நானும் செத்துருவேன்” என்று ஏதோ புலம்பிக்கொண்டிருந்தார்.

நான் சமையலறையின் கதவைத் தள்ளினேன். அந்தச் சத்தம் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்த சித்தி, அப்படியே உருண்டு சமையலறை யின் இருட்டுக்குள் பாம்பைப் போல நழுவினாள். மெல்லிய இருளில் தலை கவிழ்ந்தபடி நான் நின்று கொண்டு இருந்தேன். அப்பா எழுந்து தனது வேஷ்டியைக் கட்டிக்கொண்டபடி என்னை முறைத்துப் பார்த்தபடி, “என்னடா?” என்றார். நான் பதில் சொல்லவில்லை. ஓங்கி முகத்தோடு ஒரு அறை கொடுத்தார்.

“பிள்ளையா லட்சணமா தூங்கறதை விட்டுட்டு இன்னும் என்னடா எழவு எடுக்க வந்திருக்கே?” என்றார்

எனக்கு அழுகை வரவில்லை. நான் இருளைப் பார்த்தபடி நின்றுகொண்டே இருந்தேன். அவர் என் கைகளைப் பிடித்து

இழுத்தபடி படுக்கையில் கொண்டு வந்து போட்டுவிட்டுத் தன் நெற்றியில் தானே இரண்டு மூன்று முறை அடித்துக்கொண்டார். நான் உதட்டைக் கடித்துக்கொண்டபடியே படுத்துக் கிடந்தேன். இருளுக்கு உள்ளிருந்து சித்தி வெளியே வந்தாள். அவள் என் அருகில் படுத்துக்கொண்டபடி என் தலையைத் தடவிவிட முயன்றாள். நான் அவள் கைகளை விலக்கிக்கொண்டு எனது தலையணையை எடுத்துக்கொண்டு அம்மாவின் அறைக்குள் சென்று படுத்துக்கொண்டேன்.

அம்மா ஆழ்ந்து உறங்கிக்கொண்டிருந்தாள். அரிக்கேன் வெளிச்சத்தில் அவளது கேசம் மினுமினுத்துக்கொண்டிருந்தது. அவள் முகம் இப்போது சாந்தம் கொண்டிருந்தது. அரிக்கேன் விளக்கின் வெளிச்சத்தைத் தூண்டிவிட்டபடி அறையில் அதிக வெளிச்சம் உண்டாக்கினேன். பிறகு கட்டிலின் அருகில் ஒட்டிக்கொண்டு படுத்துக்கொண்டேன். நெடுநேரம் விளக்கில் எனது விரல்களைக் காட்டி உருவாகும் பூதாகரமான நிழல்களைப் பார்த்தபடியே படுத்துக் கிடந்தேன்.

காலை வெளிச்சம் அறைக்குள் வந்தபோது ஜன்னல் திறந்துவிட்டிருப்பது தெரிந்தது. வெயில் வேப்பமரத்தை விட்டுத் தரையிறங்கிக்கொண்டிருந்தது. நான் கண்களைக் கசக்கிக் கொண்டு சமையற்கட்டுக்குப் போனபோது அம்மா குளித்து, கூந்தலில் ஈரத்துண்டைச் சுருட்டியபடி பின்வாசலில் நின்றபடி அருகாமையில் உள்ள டீச்சரிடம் பேசிக்கொண்டிருந்தாள், “அப்படியா... பயந்துட்டீங்களா டீச்சர்” என்று சிரித்துக்கொண்டிருந்தாள்.

சித்தி அடுத்த வீட்டு மண் சுவரைப் பிடித்தபடி, நேற்றிரவு நடந்தவற்றை விளக்கிக்கொண்டிருந்தாள். அம்மா என்னைக் கண்டதும் கைகளால் இழுத்துக்கொண்டு, “நீயும் பயந்துட்டியா?” என்று கேட்டாள். என்ன சொல்வதெனத் தெரியவில்லை. நான் சித்தியை நிமிர்ந்து பார்த்தேன். அவள், “சின்னப் பையன்தானே... பயந்துதான் போயிருக்கான்க்கா” என்று மிக வேடிக்கையாகச் சொல்லிக் கொண்டிருந்தாள். நான் ஒரு சிறுவன் என்பது அப்போதுதான் எனக்கு நினைவு வந்தது போல் இருந்தது. இல்லை என்று மறுத்துத் தலையசைக்க வேண்டும் போலிருந்தது. பிறகு நானாகச் சொன்னேன்,

“நான் ஒண்ணும் சின்னப் பிள்ளை இல்லை.

இதைக் கேட்டு டீச்சர் உள்ளிட்ட யாவரும் சிரித்தார்கள். அம்மாவின் பாதங்கள் வெயிலில் உலர்ந்துகொண்டிருந்தன. சித்தி ஒருத்தி மட்டும் சிரிக்கவேயில்லை. மௌனமாக நின்று கொண்டே இருந்தாள்.

உலகம் ஒரு பெரிய எழுத்துக் கதை

பிரபவ வருடம்

சித்திரை இரண்டாம் நாள்

முகாம். திருவாவடுதுறை,

தேவரீர் பண்டிதமணி துரைச்சாமி முதலியார் சமூகத்திற்கு,

தங்கள் அடிப்பொடியான் வலசை ஏகாம்பரநாதன் எழுதும் மடல்.

திருப்புல்லணி பால்வண்ணசாமி எழுதிய பசுபதி விளக்கம் நூலில் அடிக்குறிப்பாக இடம்பெற்றிருந்த ஆற்காடு ரத்னசாமி முதலியாரால் எழுதப்பட்டதாகச் சொல்லப்படும் (ஒருவேளை தழுவி எழுதப்பட்டதாகக்கூட இருக்கலாம்). உலகம் : ஒரு பெரிய எழுத்துக் கதை என்னும் நூலைப் பற்றிய விபரங்களைத் தெரிந்துகொள்ளவேண்டி நான் கடந்த சில மாதங்களாக திருவாவடுதுறை சந்நிதானத்தில் உள்ள சரஸ்வதி நூலகத்தில் காலம் கழித்து வருகிறேன். இந்த நூலைப் பற்றி மெய்ஞான விளக்கவுரையில் குமரேச அடிகள் குறிப்பிடுவதைத் தவிர வேறு எந்தத் தகவலையும் என்னால் அறிந்துகொள்ள முடியவில்லை. மேலசிவபுரித் தமிழ்ப் பாடசாலையில் தாங்கள் தமிழ்ப் பணியாற்றியபோது தங்களிடம் சிவஞான போதத்திற்குப் பொருள் விளக்கம் கேட்டு நான் வந்திருந்ததை தாங்கள் மறந்திருக்கமாட்டீர்கள். சிவஞானபோதத்திற்குத் தாங்கள் காட்டிய வழிதான் இன்று என்னைத் திருவாவடுதுறை வரை கொண்டு வந்து சேர்த்திருக்கிறது. கொளத்தூர் தேசிகரின் சைவ சித்தாந்த வழிகாட்டியில் இது குறித்து

சங்கேதமாகச் சில வாசகங்கள் இடம் பெற்றிருந்த போதும் மூலநூலைப் பற்றிய விபரங்கள் தெளிவாக இல்லை.

சூளைமேட்டிலிருந்த நவஜோதி அச்சகத்தில் 1906–ல் வருடம் அச்சிடப்பட்டு வெளியாகியுள்ள இந்தப் புத்தகம் வெளியாகியுள்ளது என்ற குறிப்பை சாமிநாத சர்மா பட்டியல் ஒன்றில்கூடப் பார்வையிட நேர்ந்தது, இதைப் பற்றி விசாரிக்க அவரது வீட்டிற்குச் சென்றபோது வித்வான் சாமிநாத சர்மாவைச் சந்திக்கும் பேறு கிடைக்கவில்லை. ஆனால் அவரது நேர்வழி மாணாக்கர் கனகசபாபதியின் வீட்டைக் கண்டுபிடித்தறிந்து உசாவியபோது அவர், தான் பல வருட காலம் சாமிநாத சர்மாவுக்குப் படியெடுத்துத் தரும் பணியில் இருந்ததால் இப்புத்தகம் குறித்துக் கேள்வியுற்றிருப்பதாகவும் சர்மாவும் மேற்படி நூலை வாசிக்க வேண்டும் என்ற பேராவல் கொண்டிருந்ததாகவும் தெரிவித்தார். சூளைமேட்டில் உள்ள சிவன்கோவில் தெருவில்தான் நவஜோதி அச்சகம் இருந்ததாக அவர் தெரிவித்தபடி நான் அச்சக விலாசத்தைப் பெற்றுக்கொண்டு நேரில் விசாரித்து வரலாமென்று சென்றிருந்தேன்.

சூளைமேட்டில் அதே இடத்தில் நவஜோதி அச்சகம் இயங்கிக் கொண்டிருந்தது. ஆனால் அவர்களிடம் இந்த நூலைப் பற்றி விசாரித்தபோது அதன் உரிமையாளர் தாங்கள் பன்னிரண்டு வருடமாகவே இந்த அச்சகத்தை வாங்கி நடத்திவருவதாகவும் அதற்கு முன்பாக அச்சக உரிமையாளராக இருந்த சிவனொளி குடும்பத்தில் சில விபரீத சம்பவங்கள் நடந்துபோனதால் அவர்கள் சென்னையை விட்டுத் திரும்பவும் தங்களது பூர்வீக ஊரான வந்தவாசிக்குப் போய்விட்டதாகவும் ஒருவேளை அங்கே சென்று விசாரித்தால் இந்த நூலைப் பற்றிய விபரம் தெரியக்கூடும் என்றார். நான் வந்தவாசியில் அவர்களது விலாசம் கிடைக்குமா எனக் கேட்டதற்கு சரியான விலாசமாகவில்லை. ஆனால் அவர்கள் வீட்டின் அருகே ஒரு தேவாரப் பாடசாலையிருந்ததாகச் சொல்லியிருக்கிறார்கள் என்றார். நான் நவஜோதி அச்சகத்தில் அச்சேறிய வேறு ஏதாவது தமிழ் நூல்கள் இருக்கக்கூடுமா என்று கேட்டதற்கு அச்சகத்தில் இருந்த புத்தகங்கள் யாவற்றிற்கும் வீட்டிலிருந்த பெண்மணி தீவைத்துக் கொளுத்தியதில் யாவும் எரிந்துபோய்விட்டதாகவும் இதுதான் அந்த வீட்டில் முதலாக நடந்த துர்சம்பவம் என்று சொல்லியதோடு ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனிக்கு அவசரமாக ரசீதுகள் அடித்துக் கொண்டிருப்பதால் இரவு திரும்பி வருவதாக இருந்தால் தனக்குத் தெரிந்த விபரங்களைச் சொல்வதாக உரிமையாளர் கோலப்பன் சொல்லியிருந்தார். நான் வந்தவாசிக்குச் சென்று விசாரித்துவிட்டுத் திரும்பிவரும்போது அவரைப் பார்ப்பதாகச் சொல்லியபடி ரயில் கெடிக்குச் சென்றேன்.

வந்தவாசி மிகச்சிறிய ஊராக இருந்தது. சமண சமயத்தைச் சார்ந்த குடும்பங்கள் அதிகமிருப்பதாக வாசித்திருக்கிறேன். தேவாரப் பாடசாலையைக் கண்டுபிடிப்பது எளிதாகவேயிருந்தது. ஆனால்

அதை ஒட்டிய வீட்டில் யாருமேயில்லை. வீடு இடிந்து நிலைக் கதவுகூடப் பிடுங்கிப் போடப்பட்டிருந்தது. தூர்ந்து போயிருந்த ஒரு கிணற்றைத் தவிர வேறு எதுவும் அங்கேயில்லை. ஒருவேளை அருகில் இருக்கக்கூடுமோ என்று தேடியபோது இரண்டு வீடுகள் தள்ளி முதுகுன்றத்தில் தபால்துறையில் வேலை செய்யும் குமாஸ்தா சேதுப்பிள்ளையின் வீடு இருந்தது. அவர்கள் சிவனொளியின் குடும்பம் சூளைமேட்டில் குடியிருப்பதாகவும் அவரது வீட்டில் சில துர்சம்பவங் கள் நடந்து போய்விட்டதால் வேறு இடத்துக்கு மாறிப் போயிருக்கக் கூடுமென்றார்கள்.

சேதுப்பிள்ளையின் தாயார் மிகுந்த அன்போடு எனக்கு உப்பிட்ட கூழும் வெங்காயமும் தந்து சாப்பிடச் சொன்னார். சேதுப் பிள்ளையின் தாயாருக்கு சிவனொளியின் மனைவி ஒன்றுவிட்ட தங்கை முறை வரக்கூடியவள்தான் என்றும் சிவனொளி ஒன்றும் சொல்லிக்கொள்கிற மாதிரி பண்டிதர் இல்லை என்றும் அவருக்குக் கொஞ்சம் சித்தக் கலக்கம் இருந்ததாகவும் சில வேளைகளில் அதைப் பற்றி வீட்டுப் பெண்கள் பேசிக்கொண்டதாகவும் சொன்னார். நம்ப முடியாமல் நான் சிவனொளிக்கு சித்தம் பேதலித்திருந்திருந்ததா என்று கேட்டேன். சில நேரம் அச்சாகி வந்த சில புத்தகங்களைப் படித்து சிவனொளி அழுதுகொண்டிருப்பதைப் பார்த்திருப்பதாக பெண்கள் சொல்லியிருக் கிறார்கள் என்றும் சேதுப்பிள்ளையின் தாயார் சொன்னாள்.

நான் கூழைக் குடித்துவிட்டு சிவனொளியின் மனைவிதான் அச்சகத்தில் தீவைத்துவிட்டதாகப் பேசிக்கொள்கிறார்களே என்று கேட்டேன். சேதுவின் தாயார் குழப்பத்துடன் அப்படியெல்லாமிருக்காது, அந்த மனுசன் அபாண்டமாகப் பழியைப் போட்டிருக்கிறான். அவனே கொளுத்திவிட்டிருப்பான். அச்சகத்தில் வேலை செய்பவர்களுக்குச் சம்பளம் போட வேண்டுமென்றபோது சீராகக் கொண்டுவந்திருந்த அட்டிகையை கழட்டிக் கொடுத்தவள் பூரணவல்லி, அவள் தீ வைத்திருக்க மாட்டாள். இத்தனைக்கும் அவளது தகப்பனார் சப்–ஜட்ஜாக இருந்தவர், கல்விமான் என்று சொல்லிக்கொண்டே போனாள். சிவனொளியின் வீட்டார் சூளை மேட்டில் குடியிருக்க வில்லை என்றும் நான் ஒரு புத்தகத்திற்காக அவர்களைத் தேடியலைவ தாகவும் சொன்னேன்.

புறப்படும் சமயத்தில் சேதுவின் தாயார் ஒரேயொரு சம்பவத்தைக் கேள்விப்பட்டதாகவும் அது நிஜம்தானா என்று தனக்குத் தெரியாது என்றும் சொன்னார். இச்சம்பவமாவது:

சிவனொளிக்கு ஆறு பெண்பிள்ளைகளும் இரண்டு பையன்களு மிருந்தார்கள். ஒன்பதாவதாக ஒரு பெண்சிசுவைப் பிரசவித்து குருதிப்போக்கு அதிகமாகி இத்துப்போன உடலோடு படுக்கையில் கிடந்தாள் பூரணவல்லி. குழந்தையும் ஈர்க்கைப் போல் இருந்தது. முன்கட்டில் அச்சகமும் பின்கட்டில் வீடுமிருந்தன. அநேகமாக பிரசவமாகி ஆறாம் நாளோ என்னவோ, அச்சகத்திற்கு வெண்பாப்புலி பிச்சையாபிள்ளை தனது பரிவாரங்களுடன் வந்திருந்தார் திருக்

குறளுக்குத் தான் புதிதாக எழுதிய உரையை சீடர்களுக்கு வாசித்துக் காட்டுவதற்காக அழைத்து வந்திருந்தார் அச்சகத்தில் இருந்த சிவனொளிக்கு பிச்சையா பிள்ளையை விசேசமாக உபசரிக்க முடியாத படிக்கு வீட்டில் சுகக் கேடாகியிருக்கிறாளே என்று ஆத்திரமாகவிருந்தது. வெற்றிலைச் சீவலும் அதிரசமும் தேங்குழலும் தட்டில் கொண்டு வந்து வைத்தபடி சிவனொளியின் மூத்த பெண் அடுப்படிக்கும் அச்சகத்தின் முகப்பறைக்கும் அலைந்து கொண்டிருந்தாள்.

காலையிலிருந்தே குழந்தையின் அழுகைச் சப்தம் கேட்டபடியிருந்தது. பிச்சையாபிள்ளை அதிசரத்தினைப் பற்றிய சிலேடைப் பாடல் ஒன்றைக் கட்டிக்கொண்டிருந்தார். குழந்தையின் அழுகை சிவனொளியின் காதுகளைத் துளையிடுவதைப் போலக் கேட்டுக்கொண்டேயிருந்திருக்க வேண்டும். கோபத்துடன் எழுந்து உள்ளே போய் அவள் படுத்திருந்த அறையைச் சாவியால் பூட்டி சாவியைத் தூக்கிப் பரணில் எறிந்துவிட்டு, திரும்பவும் வந்து உட்கார்ந்து கொண்டார். மதியம் வீட்டிலே விருந்துக்கும் ஏற்பாடாகியிருந்தது. கறிவேப்பிலைப் பொடியை வெண்பாப்புலி சாதத்தில் போட்டபடியே வெந்த சோற்றிற்கும், மூடனுக்குமான ஒப்புமையைப் பற்றிய ஒரு பாடலைப் புனைந்தார். இரவு வரை பேசிக்கொண்டிருந்துவிட்டு யாவரும் திருப்பருத்திக் குன்றம் செல்வதாக வண்டியை அமர்த்திக் கொண்டு புறப்பட்டார்கள். சிவனொளியின் கடைசி மகன் பரணில் ஏறி, சாவியைத் தேடியெடுத்து அறையின் கதவைத் திறந்துவிட்டான். மூத்த மகள் நற்பின்னை பூண்டுக் கஞ்சி கொண்டுபோய் தாயாரிடம் கொடுத்தபோது அம்மா கட்டிலில் இருந்து அவளைத் திரும்பிப் பார்க்கவேயில்லை. பிள்ளையை யாவரும் தூக்கவும் விட மறுத்துவிட்டாள். அதன்பிறகு பூரணவல்லி குளிப்பதற்கு, சாப்பிடுவதற்கு என எதற்கும் மறுக்கத் தொடங்கினாள். பிள்ளைகள் அவளை இழுத்துவந்து சாப்பிடச் செய்தார்கள். குழந்தை அழுவதாக ஒலியெழுப்பினால் உடனே அவள் தன் விரலை, குழந்தையின் வாயில் கொடுத்து அழுகையை அடக்கிவிடுவாள்.

சிவனொளியிடம் பேச்சே அற்றுப்போனது. அவர் சில சமயம் அந்த அறைக்குள் நுழைந்தபோது அவள் தன் பற்களை நரநரவெனக் கடிப்பதைக் கேட்டிருக்கிறார். அதைக் கேட்டதும் அவருக்கு மிகுந்த ஆத்திரமாக வரும், அறையிலிருந்த இருளைப் போலவே அவளும் உருமாறிக்கொண்டு வருவதாக நினைத்தபடி அவசரமாக வெளியே வந்துவிடுவார். ஓர் இரவு அவர் அச்சக வேலையாள்களை அனுப்பி விட்டு சாப்பிட உட்கார்ந்திருந்தபோது அவசர அவசரமாக வெளியே எழுந்து போன பூரணவல்லி புத்தகக் கட்டுகளின் மீது சூடவில்லைகளைக் கொளுத்திப் போட்டுவிட்டு அவை தீப்பற்றி எரிவதைப் பார்த்துக்கொண்டிருந்தாள். கண் இமைக்கும் நேரத்தில் காகிதங்கள் எரியத் தொடங்கி புகை வீடெங்கும் நிரம்பியது. சிவனொளி ஓடி வருவதற்குள் நெருப்பு அச்சுக் காகிதங்களில் பற்றி எரியத் தொடங்கியது. இரவு முழுவதும் நெருப்பை அணைக்க முடியவேயில்லை. சிவனொளி தன் மனைவியை ஓங்கி ஓங்கியறைந்தார். பிள்ளைகள்

தகப்பனுக்கும் தாயாருக்குமான மூர்க்கமான சண்டையை பயத்துடன் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அது நடந்த சில நாள்களுக்குப் பிறகு பூரணவல்லிக்குப் பித்தம் தலைக்கேறிவிட்டதாக காளஹஸ்திக்கு சிட்சைக்கு அனுப்பிவிட்டார்கள். அதுவரைக்கும்தான் தனக்குத் தெரியும் என்றாள் சேதுவின் தாயார்.

வேதனையாகவிருந்தது. திரும்பவும் அந்த அச்சகத்துக்குப் போய் விசாரிக்க மனம் ஒப்பவில்லை. அதனால் நான் ஊர் திரும்பிவிட்டேன். அதன் பிறகுதான் மேலகரத்திலிருந்த சிவசுப்ரமணிய ஓதுவாரைப் பற்றிக் கேள்விப்பட்டேன். அவர் கரதலபாடமாக தேவாரத்தை அறிந்து வைத்திருந்தவர். ஒரு வேளை அவருக்கு மேற்படி நூலைப் பற்றிய விபரங்கள் தெரிந்திருக்கக்கூடும் என்று அவரைச் சந்திப்பதற் காகச் சென்றேன்.

நான் நினைத்திருந்த உருவத்திற்கும் அவருக்கும் சம்பந்தமேயில்லை. காய்ந்த வாழையிலை போன்று மெலிந்து போன உடலுடன் ஒற்றைத் தட்டு வேஷ்டி கட்டியபடி காடுடையார் கோவிலில் தான் ஓதுவாராக இருப்பதாகத் தெரிவித்தார். எனது பெயரை மறந்துவிட்டவரைப் போல அடிக்கொரு தரம் கேட்டுக்கொண்டார். நான் ஏகாம்பரநாதன் என்று சொன்னதும் ஏகாம்பரத்தின் விளக்கமென்ன என்று தெரியுமா என்று கேட்டார். நான் அவர் சொல்லிக் கேட்க சித்தமாக இருப்பதாகத் தெரிவித்தேன்.

ஆமிரம் என்னும் வடசொல் மாமரத்தைக் குறிக்கும். ஏக ஆமிரம் என்பது ஏகாமிரமாகி பின்னர் ஏகாம்பரம் எனத் திரிந்திருக்கின்றது. கச்சிஏகம்பம் என்று தேவாரத்தில் பாடப்பெற்ற திருக்கோவிலில் பழமையான மாமரம் இருப்பதைப் பார்த்திருக்கிறீர்களா? கம்பை என்னும் வேகவதியாற்றை அடுத்துள்ளமையால் ஏகம்பம் என்னும் பெயர் பெற்றிருக்கவும் கூடும் என்றார். நான் ஆச்சரியத்துடன் அவரைப் பார்த்துக்கொண்டிருந்தேன். அவர் பத்தொன்பதாவது தலைமுறையாக தான் ஓதுவாராக இருப்பதாகச் சொல்லியபடி எதற்காக இந்த நூலைத் தேடிக்கொண்டிருக்கிறேன் என்று கேட்டார். நான் மிகுந்த சங்கோஜத்துடன் மனத்தில் ஒரு சந்தேகம், அதைத் தெளிவு பெறுவதற்காக அலைந்துகொண்டிருப்பதாகச் சொன்னேன். ஆச்சரியத்துடன் அவர் சந்தேகத்தில் ஒன்று இரண்டு என்று பேதமிருக் கிறதா என்ன? சந்தேகம் ஒரு காட்டைப் போன்றது. ஒன்றுக்குள் ஒன்று விரிந்துகொண்டே போய்க்கொண்டிருக்கும். சந்தேகத்தைத் தீர்த்துவிடக்கூடாது. இத்தனை வருடமாக தேவாரம் பாடும் எனக்கு இருக்கும் சந்தேகங்களை நீங்கள் கேட்டால் பயந்து போய்விடுவீர்கள். சில நேரங்களில் எனக்கு தேவாரப் பாடல்கள் யாவும் நானே புனைந்தது போலத்தானிருக்கிறது. ஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், மாணிக்கவாசகர் எல்லாம் வெறும் பெயர்கள் தானே? ஈசனுக்கு ஆயிரம் பெயர் இருப்பது போல இதுவும் ஒரு மயக்கம்தானோ என்னவோ? நான் அவரது நிழலைப் போல ஒடுக்கத்துடன் கூடவே நடந்து வந்தேன்.

இருவரும் வீடு வந்து சேர்ந்தபோது அவர் தன்னிடம் ஒன்றிரண்டு ஏடுகளைத் தவிர வேறு எதுவும் கிடையாது என்றும் தனக்கு அச்சடிக்கப்பட்ட புத்தகங்களைப் பிடிக்கவில்லை, காகிதங்களை வெள்ளைக்காரர்கள் மலம் துடைக்கப் பயன்படுத்துகிறார்கள் என்று தனக்குத் தெரியும் என்றார். நான் அது வேறு வகையான காகிதம் என்றேன். ஓதுவார் அதைக் கேட்டுக்கொண்டதாகத் தெரியவில்லை. புன்சிரிப்போடு நான் தேடிவந்த புத்தகத்தின் பெயரைத் திரும்பவும் கேட்டார். உலகம்: ஒரு பெரிய எழுத்துக் கதை என்று சொன்னேன். அவர் திண்ணையில் சாய்ந்தபடியே பனையோலை விசிறியால் வீசிக்கொண்டு விரலால் ஏதோ கணக்குப் போட்டார். பிறகு வெற்றிலைச் சாற்றைத் துப்பிவிட்டு என் நினைவில் அப்படியொரு புத்தகம் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் இது புத்தகமல்ல, ஒரு சங்கேதம் என்றே தெரிகிறது. எதற்கும் தேவார ஏட்டில் கயிறுசாத்திப் பார்த்துச் சொல்வதாகச் சொல்லியபடி தன் வீட்டிலிருந்த தேவார ஏடுகளை எடுத்துவந்து கண்ணை மூடிக்கொண்டு கயிற்றை ஊடே இழுத்து ஓர் ஏட்டைத் தனியே பிரித்து வாசித்தார். ஞான சம்பந்தரின் பாடல் ஒன்று வந்தது. அவர் பாடலைப் பண்ணோடு பாடியபடி நீங்கள் தேடிவந்த நூல் திருவெண்காட்டில் இருக்கக் கூடும் என்றார். நான் எனது சந்தேகத்தின் சுமையை உடல் முழுவதும் ஏந்திக்கொண்டபடி அவரிடமிருந்து வீடு திரும்பினேன்.

இரண்டு மாதக்காலம் அந்த நூலை மறந்துவிட்டு நித்ய காரியங் களில் ஈடுபட வேண்டும் என்று மனதைக் கட்டுப்படுத்திக்கொண்டேன். இந்த நூல் ஒரு சங்கேதம் என்று ஓதுவார் சொன்னது மிகவும் சரியானதாகவேயிருந்தது. நானாக மனதில் அந்த நூலினைப் பற்றிச் சில கற்பனைகளை உருவாக்க ஆரம்பித்தேன். சில வேளைகளில் அந்தக் கற்பனையில் உருவான பாடல்களைத் தொகுத்து எழுதத் துவங்கினேன். சில நாள்கள் தொடர்ந்தாற்போல இந்த நூலைப் பற்றிய எண்ணங்கள் உருவாகும். அப்போது சில காட்சி ரூபத்திலும் சில தெளிவற்றும் மனத்தில் தோன்றும். நான் ரகசியமாக அந்தக் காட்சிகளையும் கருத்துகளையும் காகிதத்தில் எழுதிவரத் தொடங் கினேன். ஆறேழு மாதங்களுக்குப் பிறகு நான் எழுதியிருந்த காகிதங் களை ஒன்று சேர்த்துப் பார்க்கும்போது அது சிறிய நூல் வடிவிலிருந்தது. அந்த நூலுக்கும் உலகம்: ஒரு பெரிய எழுத்துக் கதை என்று தலைப்பிட்டு நல்லூரில் உள்ள அச்சகம் ஒன்றில் அச்சுக்கும் கொடுத்து வந்தேன். அச்சுக் கோக்கும்போது அருகிலே இருந்து பார்க்க வேண்டும் என்று ஆசையாக இருக்கும். ஆனாலும் தினமும் மாலையில் நல்லூ ருக்குப் போய் அச்சகத்தில் வேலை நடைபெறுகிறதா என்று பார்த்துக் கொண்டு மட்டும் வருவேன். ஓர் இரவில் உறக்கத்தில் யாரோ சொல்வது போலக் கேட்டது.

தேவாரப் பாடல்கள் எல்லாம் நான் எழுதியது போலத்தானிருக் கிறது. எல்லாம் வெறும் பெயர்கள்தானே ?

பயத்துடன் கண் விழித்து எழுந்துகொண்டேன். ஓதுவார் சொன்

னதைத்தான் நான் செய்திருக்கிறேனா? இப்போதே போய் அச்சடிக்கக் கொடுத்த புத்தகத்தை நிறுத்திவிட வேண்டும் என்று நினைத்துக் கொண்டு விடியும்வரைக்கும் பொறுமையில்லாமல் நல்லூருக்குப் புறப்பட்டேன். நான் போய்ச் சேர்ந்தபோது விடிகாலையாகியிருந்தது. நல்லூரிலிருந்த அருமருந்துடையார் கோவில் திறந்திருந்தது. கோவிலினுள் நுழையும்போது தேவாரப் பாடல் கேட்டுக் கொண்டிருந்தது. பிரகாரத்தில் நின்றபடி கேட்டுக் கொண்டிருந்தேன். காலை வெளிச்சம் படர்ந்து வருவது போல அப்பாடல் கோவிலின் பிரகாரத்தில் மெதுவாக ஒளியை உண்டாக்கிக் கொண்டிருந்தது. தேவாரம் ஒரு பாடல் அல்ல, ஒரு ஜோதி அல்லது ஒளிப்பிரவாகம் என்று மனதில் தோன்றியது. நெடுநேரம் பிரகாரத்திலே நின்றிருந்தேன். தேவாரத்தைப் பாடிய மனிதன் போய்விட்டிருக்கக் கூடும். ஆனால் கோவிலின் கற்தூண்களில் அப்பாடலின் ரீங்காரம் ஒளிந்திருந்தது. ஓதுவாரின் குரல் கேட்டுக்கேட்டு சாந்தம் கொண்டிருந்த கோவில் கற்களைப் பார்க்கும்போது மனதில் இதுவரையில்லாத ஒரு பேரமைதி உண்டானது. கல்யானை ஒன்றின் காதை நெடுநேரம் பார்த்துக் கொண்டிருந்தேன். மனது அதை விட்டு அகலவேயில்லை. யானையின் சிரிப்பு எப்படியிருக்கும் என்று அப்போதுதான் தெரிந்துகொண்டேன். மடைப்பள்ளிக்காரர்களில் ஒருவன் எனக்குத் திருவமுது தந்தபோதுதான் தன்னுணர்வு பெற்றேன். தையல் இலையைப் பிரகாரத்திலே வைத்துவிட்டு அச்சகத்துக்கு விரைந்து சென்றேன்.

அன்று மாலையோடு அச்சுக்கோப்பு முடிவதாக இருந்தது. நான் அதுவரை செய்த வேலைக்குரிய கூலியைத் தருவதாகச் சொல்லியபடி எனது கைப்பிரதியை வாங்கிக்கொண்டு வீடு திரும்பினேன். எனக்குச் சந்தேகமாக இருந்தது. ஒருவேளை நான் எழுதியதுதான் அந்தப் புத்தகமா? சில நாள்களில் அதை வீட்டில் வைத்திருக்கவே அச்சமுண்டாகியது. அதை வேண்டுமென்றே கோவிலின் தலவிருட்சத்தினடியில் சுருட்டி வைத்துவிட்டு வந்தேன். யாரோ ஒருவன் அதை எடுத்துப் போய்ப் படிக்கக் கூடுமல்லவா? அவன் இதுதான் உலகம்: ஒரு பெரிய எழுத்துப் புத்தகம் என்று படிக்கக் கூடுமானால் அதன் மூலப்புத்தகத்தைவிடவும் எனது நூல் முக்கியமானதாகிவிடுமல்லவா? மனத்தில் சந்தோஷமும் ஏமாற்றிவிட்டோமோ என்ற குற்றஉணர்ச்சியும் ஒன்றாகத் தோன்றின. நான் சில நாள்கள் இதற்காகவே வெளியூர்ப் பயணத்திற்கு ஆயுத்தமானேன்.

தற்செயலாகவா அல்லது திட்டமிட்டுதான் வந்தேனா என்று தெரியாமல் திருவெண்காட்டிற்கு வந்திருந்தேன். திருவெண் காட்டுப் பதிகம் எனக்கு விருப்பமானது. பாடல்பெற்ற ஸ்தலத்தில் அமர்ந்து கொண்டு மனத்தை வேறு காரியங்களுக்குப் பழக்கப்படுத்த முயற்சித்தேன். அப்போது என் அருகில் அமர்ந்தபடி வில்வக்காய் ஒன்றைக் கையில் வைத்தபடியிருந்தவர் என்னைப் பார்த்துச் சிரித்தபடி உலகம்: ஒரு பெரிய எழுத்துக் கதைதானா? என்று கேட்டார். நான் பயத்துடன் உங்களுக்கு அதைப் பற்றித் தெரியுமா என்று

கேட்டேன். மனது உடலின் உள்ளேயிருப்பதில்லை. அது உடலுக்கு வெளியே இருக்கிறது தெரியுமா என்றார். நம்ப முடியாமல் நிஜமாகவா? என்றேன். காற்று உடலுக்குள் சென்று வெளியேறி வருவதை நம்பு கிறாயா? அப்படியானால் மனமும் அது போல உள்ளும் வெளியும் சென்றுவரக் கூடியது, ஓரிடத்தில் நிரந்தரமாகத் தங்காதது என்றால் நம்ப மாட்டாயா என்று கேட்டார்.

எனது குழப்பம் உலகத்தால் பெரிதாக்கப்பட்டுக்கொண்டேயிருந்தது. நான் என்ன செய்வது என்று அவரிடம் கேட்டேன். அவர் வில்வக் காயை என்னிடம் கொடுத்துவிட்டுச் சிரித்தபடியே கோவிலை விட்டு வெளியேறி நடந்தார். நான் வில்வக்காயுடன் கோவிலை விட்டு வெளியே வந்தபோது மாலையாகியிருந்தது. இரண்டு மூன்று நாள்கள் திருவெண்காட்டிலே இருந்தேன். மனது மெதுவாக அடங்கத் தொடங்கியது. பிறகு ஊர் திரும்பினேன்.

வழியெல்லாம் நான் எதற்காக ஒரு நூலைத்தேடி அலைக் கழிக்கப்படுபவனாக உருமாறினேன் என்பதைப் பற்றியே நினைத்துக் கொண்டு வந்தேன். எனது ஊரில் சரவணக்குளம் என்று ஒரு குளமிருக்கிறது. அதில் எப்போதும் கலங்கிய நிலையில் தண்ணீர் இருக்கும். அதன் கரையில் ஒரு வாகை மரமிருந்தது. ஒரு காலத்தில் பெரிய குளமாகயிருந்திருக்கக் கூடும். நான் சிறுவனாக இருந்தபோது அது இடிந்து தூர்ந்து கிடந்தது. குளத்தைச் சுற்றி அடர்ந்திருந்த செடிகொடிகளில் எதையாவது பறிப்பதற்காக நான் செல்வேன். ஒரு நாள் அரளிப் பூவைப் பறித்துக் கையில் வைத்துக்கொண்டு வரும்போது ஓர் ஆள் என்னைப் பெயர் சொல்லிக் கூப்பிட்டான்.

அவனை நான் முன்னதாக அறிந்திருக்கவில்லை. அவன் அருகில் போனதும் சிரித்தபடியே உனக்கு நெல்லிக்காய் பிடிக்குமா என்று கேட்டான். பிடிக்கும் என்று சொன்னேன். அவன் எதற்காகப் பிடிக்கும் என்று கேட்டான். நான் நெல்லிக்காயைத் தின்றபிறகு தண்ணீர் குடித்தால் இனிப்பாக இருக்கும் என்றேன். அவன் சிரித்துக் கொண்டே நாக்கில் இனித்துக்கொண்டேயிருக்கும் இன்னொரு பொருளைக் கொடுத்தால் தின்று பார்ப்பாயா என்று கேட்டான். நான் சரியென்று சொன்னேன். அவன் என்னை அருகில் இழுத்து காதில் ஒரு பாடலைச் சொன்னார். அப்பாடலை எப்படிப் பிரித்துப் பொருள் கொள்ள வேண்டும் என்றும் சொல்லித் தந்தார். ஆச்சரியமாக இருந்தது. அப்பாடலை ஒவ்வொரு விதத்தில் பிரிக்கும்போதும் ஓர் அர்த்தம் தந்ததோடு நாவில் அறியாத ஒரு சுவை நிறைவது போலவேயிருந்தது. வீட்டுக்குத் திரும்பி பல முறை அப்பாடலைப் பிரித்துப் பிரித்து மனத்துக்குள்ளாகப் பாடினேன். அன்றைக்குக் காரணமில்லாமலே எனக்குச் சிரிப்பு வந்துகொண்டிருந்தது. பிறகு எப்போது தனிமையிலிருந்தாலும் அப்பாடலை நாவு உருட்டத் துவங்கிவிடும். மனத்தில் சந்தோஷம் நிரம்பும். அதன் பிறகு பித்தேறியது போல நான் யார் யாரோ எழுதிய பாடல்களை, நூல்களை வாசிக்கத் தொடங்கினேன். மனத்தில் ஆசை அடங்கவேயில்லை.

என் கதையை நான் விஸ்தாரமாகத் தங்களிடம் முன்னதாகவே சொல்லியிருக்கிறேன். இப்போது நினைவுபடுத்த வேண்டிய காரணம். நான் திருவெண்காட்டிலிருந்து ஊர் திரும்பி நில நாள்களுக்குப் பிறகு எனது கனவில் நான் சிறு வயதில் சந்தித்த மனிதன் வந்தார். என்னிடம் நீ அடுத்த வெள்ளிக்கிழமை திருச்சுழிக்குச் சென்றால் அங்கே சிவப்புப் பை கொண்டுவரும் ஒருவன் உன்னைச் சந்திப்பான். அதை வாங்கிக்கொண்டு வந்துவிடு, உனக்குத் தெளிவு கிடைக்கும் என்றார். நான் அவர் சொன்ன நாளில் திருச்சுழிக்குச் சென்றேன். கனவில் சொன்னது போலவே ஒருவன் என் எதிரில் வந்து சிவப்புப் பையை என்னிடம் தந்துவிட்டுச் சென்றார். வீடு திரும்பும்வரை அதில் என்ன இருக்கிறது என்றே பார்க்கவில்லை. இரவில் பிரித்துப் பார்த்தபோது அதனுள் தலைப்பிடப்படாத ஒரு நூல் இருந்தது. ஆனால் அது என்ன மொழியில் எழுதப்பட்டிருக்கிறது என்று தெரியவில்லை. தமிழ் போலவும் சில நேரங்களில் வெறும் குறிகளாலும் நிரம்பியிருந்தது. அதை எப்படி வாசிப்பது என்று தெரியவில்லை. முன்னும் பின்னும் புரட்டியபடியிருந்தேன். சில நாள்களுக்குப் பிறகு இன்னொரு கனவு வந்தது. அக்கனவில் அதே ஆள் திரும்பவும் என்னிடம் தோன்றி நீ அழகர் கோவிலுக்குப் போ, உன்னை யார் கூப்பிட்டு இந்தப் புத்தகம் பற்றிக் கேட்கிறார்களோ அவர்களிடம் கொடுத்துப் படிக்கச் சொல், நீ தேடும் நூலைக் கண்டடைவாய் என்றார். நான் அதன்பிறகு பல முறை அழகர்கோவிலுக்குப் போய் வந்தேன். யாரும் என்னிடம் பேசவேயில்லை.

ஒரு நாளில் சுனையருகேயிருக்கும் மண்டபத்தில் உட்கார்ந்திருந்த போது ஓர் ஆள் என் முதுகைத் தட்டி, எத்தனை நாள்களாக இங்கேயே சுற்றிக்கொண்டிருக்கிறாய், என்னிடம் ஒரு வார்த்தை கூடப் பேச மாட்டேன் என்கிறாயே? எங்கே அந்தப் புத்தகம் என்றார். எனக்கு வியப்பாகவிருந்தது. பல முறை இதே ஆளைப் பார்த்திருக்கிறேன். என்னிடம் ஒரு வார்த்தைகூடப் பேசியதேயில்லை. பதற்றத்துடன் பையிலிருந்த புத்தகத்தை அவர் கையில் கொடுத்தேன். அவர் தனக்கு எழுதப்படிக்கத் தெரியாது, நான் இதை என்ன செய்வது என்றார். நான் குழப்பத்துடன் உங்களுக்குப் படிக்கத் தெரியும் என்றார்களே என்றேன். அவர் அப்படியா சொன்னார், அப்போ கொடு, படித்துப் பார்க்கலாம் என வாங்கி ஒரு பாடலைப் பாடினார். அதன் அர்த்தத்தைச் சொல்லாமலே சபாஷ் என்றபடி புத்தகத்தை என்னிடம் கொடுத்துவிட்டு எனக்கு ஒரு உதவி செய்வாயா என்று கேட்டார். நான் என்ன செய்ய வேண்டும் என்றேன். ஒரேயொரு வாசனை சோப் வேண்டும், வாங்கித் தர முடியுமா என்றார். நான் மதுரையிலிருந்து வாங்கிவந்து தருவதாகச் சொன்னேன். அவர் தான் ஒரு ஹோட்டலில் வேலை செய்வதாகச் சொல்லியபடி கடந்து போய்விட்டார்.

ஒரு முறையல்ல இருபத்திநான்கு முறை வெவ்வேறு வாசனை சோப்புகள் வாங்கித் தந்துவிட்டேன். ஆறேழு மாதமாகியும் அவர்

எனக்குப் புத்தகத்தை வாசித்துக் காட்டவேயில்லை. ஒரு நாள் நான் கோபமடைந்து கத்தியதும் அவர் ஆத்திரத்துடன் அந்தப் புத்தகத்தை வாங்கி என் கண் எதிரிலே கழிவுநீர்க் குட்டையில் தூக்கி எறிந்தார். நான் சப்தமாக அழுதேவிட்டேன். அவர் என்னைப் பற்றிய கவனமேயின்றித் திரும்பவும் தன் வேலையைக் கவனிக்கச் சென்றுவிட்டார். நான் அவரை மறுமுறை பார்த்த போது அவர் நான் வைத்திருந்தது உண்மையான புத்தகமல்ல என்றதோடு புத்தகத்தில் இருப்பது எதுவும் உண்மையுமல்ல என்றார். அவரை நான் என்ன செய்வது என்று தெரியாமல் வீடு திரும்பினேன்.

இதுவரை தங்களிடம் சொல்லாத ஒரு சேதியை இங்கே குறிப்பிட வேண்டியதிருக்கிறது. எனக்குப் பதினான்கு வயதிலே திருமணம் நடந்துவிட்டது. நான் மாமனாரின் வீட்டில்தான் இருந்து வருகிறேன். எனது சமீபத்திய செயல்கள் அவர்களை வெகுவாக பாதித்திருக்க வேண்டும். எனது வீட்டுக்கு நான் திரும்பிவந்த நாளில் எனது மாமனார் மிகுந்த ரௌத்திரம் கொண்டவராக என்னைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளிவிட்டார். நான் அவமானத்தாலும், இனி என்ன செய்வது என்று தெரியாமலும் வெளியேறினேன். சில நாள்கள் அதே ஊரில் திரிந்தேன். பிறகு எப்படியாவது அந்தப் பெரிய எழுத்துக் கதையைத் திரும்பவும் அடைந்தே தீர்வது என்று தேடித் திரிய ஆரம்பித்தேன்.

எனக்கு இந்த உலகத்தைப் புலன்களால் மட்டும் அறிவது போதுமானதாக இல்லை. உலகம்: பெரிய எழுத்துக் கதை என்னும் நூல் உலகைப் புலனுக்கு அப்பால் அறிந்துகொள்வதைப் பற்றியதாக இருக்கக்கூடும் என்று எனக்கு ஓர் ஐயமிருக்கிறது.

இப்போது எனது வயது நாற்பதைக் கடந்துவிட்டிருக்கிறது. இந்த நூலகத்தில் உள்ள ஒரு லட்சத்துப் பதினாயிரம் பிரதிகளில் அந்த நூல் இருக்கக்கூடுமா என்று ஐயமாகவேயிருக்கிறது. உண்மையில் அப்படியொரு நூல் வெளியாகி இருக்கிறதா அல்லது என்னை போலவே பலரும் அடைந்த ஓர் அனுபவம்தான் அப்படியொரு கற்பனைப் புத்தகமாகக் குறிப்பிடப்படுகிறதா? என்னால் இதைப் பற்றி எவ்விதத்திலும் முடிவு செய்ய முடியவில்லை. தாங்கள் பல்கலை நூல்களைக் கற்றறிந்த மேதை. தாங்கள்தான் இதற்கு விடை தர வேண்டும். தாங்கள் பதில் அனுப்பும் நாள்வரை நான் ஆதீன நூலகத்தில்தான் தங்கியிருப்பேன்.

தாங்கள் தங்களது மாணாக்கனுக்கு வழிகாட்டி உதவி செய்ய வேண்டும் என்று தாள் பணிந்து கேட்டுக்கொள்கிறேன். உங்கள் பதிலில்தான் எனது எதிர்காலம் அடங்கியுள்ளது.

என்றும் தங்கள் பாதம்பணிந்த
ஏகாம்பரநாதன்

நாபி

நான் உங்களிடம் ஒரு யோசனை கேட்க விரும்புகிறேன். என் பெயர் கொண்டையா ராஜு. பிச்சுப் பிள்ளைத் தெருவிலிருக்கும் இலக்கம் 33–ல் வைத்திய சாலை வைத்திருக்கிறேன். தெருவில் காலையிலும் இரவிலும் நான் ஜட்காவில் வந்து போவதை நீங்கள் கவனித்திருக்கக்கூடும். எனது ஜாகை பிளாக் டவுனிலிருக்கிறது. அங்கிருந்து இங்கே வந்து வைத்தியம் செய்து போவதற்குப் பதிலாக ஏழு கிணற்றுப் பகுதியிலோ அல்லது பீப்பிள் பார்க் அருகாமையிலோ மாற்றிக்கொள்வதுதானே என்று எனது தாயாரும் பல முறை சொல்லிப் பார்த்துவிட்டார். எனக்கு அதில் எல்லாம் விருப்பமில்லை. எனது வைத்தியசாலை தொடங்கி இந்த 1931–னோடு ஏழு ஆண்டுகள் முடிந்துவிட்டன. எனக்குச் சில விஷயங்களில் ஆழ்ந்த நம்பிக்கையிருக்கிறது. உங்களுக்கு அதைப் பற்றி விரிவாகச் சொல்வதற்குக் கூச்சமாகத் தானிருக்கிறது. ஒருவேளை இதை அல்பமான பழக்கங்கள் என்று எளிதில் நீங்கள் புறக்கணித்துவிடக் கூடும். ஆனாலும் நான் இதை விருப்பத்துடன்தான் செய்கிறேன்.

தெருவில் நுழைந்தவுடன் முதலில் உள்ளதே அது வீணை கற்றுக்கொடுக்கும் சௌந்தரவல்லியின் வீடு. அதைக் கடக்கும்போது நான் என்னையும் அறியாமல் தலை கவிழ்ந்துகொள்வேன். எத்தனையோ வருடங்களாக இது நடக்கிறது என்றாலும், மாற்றிக் கொள்ள முடியவில்லை. இதுவாவது பரவாயில்லை. ஜட்காவில் வீட்டுக்குத் திரும்பிப் போகும்போது வடபத்ரன் கோவிலைத் தாண்டும்போது மறக்காமல்

இரண்டு காலணாவைத் தூக்கி இருளில் வீசியெறிவேன் அந்த இடத்தில் யாரோ ஒளிந்திருந்து அதை எடுத்துக்கொண்டு போய்விடு வார்கள் என்று தோன்றும். ஆனால் ஒரு நாள்கூட அதை நின்று கவனித்துப் பார்த்தது கிடையாது. வீட்டில்கூட இப்படித்தான் எனது சாப்பாட்டில் தலைமயிர் ஏதாவது கிடந்துவிட்டால் என்னால் தொடர்ந்து சாப்பிட முடியாது. ஆனால் எப்படியோ வாரத்துக்கு ஒன்றிரண்டு முறை மிக நீளமான தலைமயிர் ஒன்று எனது தட்டில் பருக்கைகளுடன் ஒட்டிக்கொண்டிருக்கும்.

வீட்டில் அத்தனை நீளமான கூந்தலுடைய பெண் யாருமில்லை. நான் என் தாயாருடன்தான் வசிக்கிறேன். அவர் தலையை மழித்தவர். மாதம் ஒரு முறை இதற்காக வீட்டுக்கு கொல்லப்புடியிலிருந்து ஒரு நாவிதர் வந்து போவார். அவர் வருவதும் போவதும் மிக ரகசியமாகவே நடக்கும். பின்வாசல் கதவு வழியாக விடிகாலையில் வந்து சேரும் நாவிதர் சிகிச்சை செய்வது போல என் தாயாரின் தலையை மழித்து விட்டுப் போவார். பின் எப்படி சாப்பாட்டில் கேசம் கிடக்கிறது என்பதைப் பற்றி நான் விசாரிக்கக்கூடக் கூச்சமாக இருக்கும்.

எனக்குத் திருமணத்தில் விருப்பமில்லை. இதற்கான காரணங்களாக நானே சொல்லிக்கொள்வது திருமண வயதில் இருந்த விருப்பம் இப்போது விலகிப் போய்விட்டது என்பதுதான். உண்மையில் திருமண வயது என்று ஒன்று தீர்மானமாக இருக்கிறதா என்ன? நாமே உண்டாக்கிக்கொள்வதுதானே என்று எனது உள்மனம் சொல்வதையும் சில வேளைகளில் கேட்டிருக்கிறேன். ஆனால் என் குடும்பத்தில் பன்னிரண்டு வயதைத் தாண்டியதுமே திருமணப் பேச்சு தொடங்கி விடும். எனக்கும் அந்த வயதில் ஒரு சிறுமியைப் பேசி முடிவு செய்திருந்தார்கள்.

எனது தகப்பனார் என்னை வைத்தியம் கற்றுக்கொள்வதற்காக அலிப்பூர் அனுப்பி வைப்பதாகவிருந்ததால், திருமணத்தைத் திரும்பி வந்து செய்துகொள்வதாக நழுவிச் சென்றுவிட்டேன். அலிப்பூரில் ஆறு வருடங்கள் காலிமியான் என்னும் மருத்துவரிடம் சிகிச்சை முறைகளை அறிந்துகொண்டிருந்தபோதுதான் காமத்தின் அரூபமான கால்கள் என்னைக் கவ்விப் பிடித்துக்கொண்டு இறுக்குவதை உணர்ந் தேன்.

அலிப்பூரில் பெண்கள் முக்காடு இன்றிப் பார்ப்பது மிக அபூர்வம். மேலும் நான் தங்கியிருந்த வீட்டினுள் நாற்பதுக்கும் மேற்பட்ட மனிதர்கள் இருந்தார்கள். அதில் பாதிக்கும் அதிகமாகப் பெண்கள் அவர்கள் பெண்கள் என்பதை அவர்களின் குரலை வைத்துத்தான் கண்டுபிடிக்க முடிந்தது. நான் தங்கியிருந்த காலங்களில் அங்கிருந்த எந்தப் பெண்ணோடும் முகம் கொடுத்துப் பேசியதேயில்லை. சில வேளைகளில் கழிப்பறையை உபயோகித்துவிட்டு வரும் பெண் துப்பட்டாவை மறந்து நிற்பதைக் கவனித்திருக்கிறேன். ஆனால் அதற்குள் இன்னொரு பெண் இரும்பு வாளியுடன் வரும் சப்தம்

கேட்டதும், நின்றிருந்த பெண்ணின் கைகள் அவசரமாகத் துப்பட்டாவைத் தேடி முக்காடிட்டுக் கொண்டுவிடும். மிகவும் ஆச்சரியமானது பெண்கள் தனியாக இருக்கும்போதும் முக்காடிட்டுக் கொண்டே இருப்பதுதான்.

ஒரு முறை இரவில் அந்த வீட்டில் இருந்த பெண்களில் ஒருத்தியின் காதில் வண்டு புகுந்துவிட்டதென எனது அறைக் கதவைத் தட்டிக் கூப்பிட்டார்கள். அந்தக் குடியிருப்பில் மின்சார வசதிகள் கிடையாது. பந்தம் போலக் கொழுந்துவிட்டு எரியும் எண்ணெய் விளக்குகள்தானிருந்தன. என்னிடம் சீமையிலிருந்து வந்த மெழுகுவர்த்திகள் இருந்தன. நான் மெழுகுவர்த்தியைக் கொளுத்திக்கொண்டு அந்தப் பெண்ணின் அறைக்குள் போனபோது வழியில் படுத்து உறங்கிக் கொண்டிருந்த குழந்தைகளின் முகத்தில் ஒளியின் திட்டுகள் விழுந்து உண்டான சோபை எங்கோ கனவில் நடந்துபோவது போல் இருந்தது.

மிகச் சிறிய அறை. அந்தப் பெண் எங்கேயிருக்கிறாள் என்றே தெரியவில்லை. உள்ளே உலர வைக்கப்படாத ஈரத் துணிகளின் வாடைபோல இறுக்கமான நெடி அடர்ந்திருந்தது. அவளுடன் நாலைந்து பெண்கள் பாதி உறக்கத்தில் எழுந்து உட்கார்ந்திருந்தார்கள். மெழுகுவர்த்தியின் வெளிச்சத்தை அணைத்துவிடும் படியாகக் கடுமையாக ஒரு பெண்ணின் குரல் சொன்னது. பரிசோதிப்பதற்காக வெளிச்சம் தேவைப்படும் என நான் தணிவான குரலில் சொன்னேன். எனது பதிலைப் பற்றிய அக்கறையே இன்றி யாரோ என் கையிலிருந்த மெழுகுவர்த்தியை ஊதியணைத்துவிட்டார்கள்.

அடுத்த அறையொன்றிலிருந்து கசிந்து வந்த மெல்லிய வெளிச்சத்தில் அறை எங்கோ நதிக்குள் புதைந்து கிடப்பது போல மயக்கமான தோற்றத்தில் இருந்தது. நான் பரிசோதிப்பதற்காகக் காதில் வண்டு புகுந்திருந்த பெண் கையை நீட்டிக்கொண்டிருந்தாள். அந்தக் கைகள் மிகவும் மெலிந்திருந்தன. அவள் நாடித் துடிப்பைக் கவனித்தபோது அவள் வலியில் துடித்துக்கொண்டிருப்பது தெரிந்தது. ஆனால் அவளிடமிருந்து சிறிய முனங்கல் ஒலிகூட இல்லை. நான் அவள் காதைப் பரிசோதிக்க வேண்டும் என்று சொன்னேன் அந்தப் பெண்ணின் கணவன் தனது பைஜாமாவை அவிழ்த்துக் கட்டிக் கொண்டே அதெல்லாம் தேவைப்படாது, அவளுக்கு ஏதாவது மருந்தைக் கொடுத்தால் பெண்களே கொடுத்துவிடுவார்கள் என்றான். நான் காதுக்குள் வண்டு இருந்தால் அதை வெளியேற்றிவிட வேண்டும். இல்லாவிட்டால் வலி அதிகமாகிக்கொண்டே இருக்கும் என்றேன்.

இதற்கு வீட்டின் இன்னொரு அறையிலிருந்து ஒரு பருத்த பெண் வெளிப்பட்டு கையில் லாந்தர் வெளிச்சத்துடன் நாங்களிருந்த அறையை நோக்கி வந்தாள். அவள் ஆண்கள் பலரும் சுற்றி நிற்பதைக் கண்டதும் ஆத்திரத்துடன் ஏதோ கொச்சையாகக் கத்தியபடி யாவரையும் வெளியே போகச் சொன்னாள். நான் தயக்கத்துடன் எழுந்து கொண்டபோது அவள் மற்றவர்களைவிடவும் என்னைப் பார்த்துத்

தான் கேட்கக் கூசும் கொச்சையொன்றைச் சொல்லியபடி வீட்டில் இருந்த பெண்கள் எல்லோரும் செத்தா போய்விட்டார்கள், எதற்காக இந்த ஆள் உள்ளே வந்தான், பெண்ணின் கையை மோந்து பார்ப்பதற் காகத்தானே இதுபோல வைத்தியர்கள் அலைகிறார்கள் என்று ஏதேதோ பேசியபடி கடுகு எண்ணெய்யைச் சூடாகக் காய்ச்சிக் கொண்டுவரச் சொன்னாள்.

நான் படியில் வந்து நின்றபடி, எனது அணைக்கப்பட்ட மெழுகு வர்த்தி அறைக்குள் இருப்பதாகச் சொன்னேன். சிறிய குழிக்கரண்டி ஒன்றில் காய்ச்சி எடுத்து வரப்பட்ட எண்ணெய்யை அந்தப் பெண் ணின் காதில் ஊற்றியிருக்கவேண்டும். அந்தப் பெண்ணின் வேதனைக் குரல் முதன்முறையாக வெளிப்பட்டு அடங்கியது. பிறகு ஒரு ஆண் கையில் உருண்டையான கருவண்டைக் கொண்டுவந்து மற்ற ஆண்களிடம் காட்டிக்கொண்டிருந்தான். நான் அறைக்குத் திரும்பிய பிறகு உறக்கம் வரவேயில்லை. ஆனால் அந்த இரவில் காமம் மிக உச்சத்தை அடைந்தது. அறையின் சுவரை முத்தமிட்டுக் கொண்டிருந் தேன். அந்த சப்தம் மற்றவர்களுக்குக் கேட்டிருக்குமா என்று தெரியாது. ஆனால் விடிவதற்கு முன்பாக நான் எழுந்துகொண்டு அலிப்பூரின் வீதிகளில் நடந்து சென்றபோது காமம் ஒரு நிழலைப் போல என் கூடவே வந்துகொண்டிருந்தது.

வெறிச்சோடிக் கிடந்த வீதிகளில் காற்று ஏகாந்தமாக அலைந்து கொண்டிருந்தது. நான் எவ்வளவு தூரம் நடந்து சென்றேன் என்று தெரியவில்லை. வெளிச்சம் நீண்டு சாலைகளில் பகல் நிரம்பியதை உணர்ந்தபோதும் நடையை நிறுத்தவில்லை. இளவெயில் நீண்ட காலையில் நான், பழைய மோட்டார் கார் ஒன்று என்னைக் கடந்து சென்றபோதுதான் தன் உணர்வு பெற்றதைப் போல அருகாமை யிலிருந்த சிற்றூரில் நான் அலிப்பூரிலிருந்து எவ்வளவு தூரம் வந்திருக்கிறேன் என்பதைத் தெரிந்துகொண்டேன் வெட்கமாகவும் அவமானமாகவுமிருந்தது. மிக அவசரமாக எங்காவது ஜட்கா கிடைக்குமா என்று விசாரித்தேன். அந்தப் பாதையில் ஒன்றிரண்டு கிராமங்களே இருந்ததால் வாகன வசதி கிடையாது. நான் வைத்திய சாலைக்கு வந்து சேர்ந்தபோது மதியமாகியிருந்தது. காலிமியான் என்னைப் பார்த்தவுடன் கண்டுபிடித்துவிட்டதைப் போலத் தாது மோசம் சரீர நஷ்டம் எனச் சொன்னார். நான் அவமதிப்பை ஏற்றுக்கொண்டது போல அமைதியாக இருந்தேன்

ஆனால் அலிப்பூரில் இருந்த நாள்கள் வரை காமம் ஒரு காண்டா விளக்கு புகையோடு எரிவது போல நாளெல்லாம் எரிந்து கொண்டிருந் தது. பகல் நேரத்தில் அறையை மூடிப் படுத்திருக்கும்போது கூட ஏதாவது ஒரு பெண் நடந்து அறைக்கு அருகாமையில் வந்து நிற்பது போலவே இருக்கும். சில வேளைகளில் பகலில்கூட சொப்பனங் கள் உருவாகி உடல் கரைந்துபோக உறங்கிக் கிடக்க நேரிடும். சிறு சப்தம்கூட உடல் இச்சையை உயர்த்திவிடுமளவு பீடிக்கப்பட்டிருந்தேன்.

ஊருக்குச் சென்று யாராவது ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு திரும்பி வந்துவிடலாமா என்று யோசனையாக இருந்தது. சூசகமாக இதைப் பற்றி எனது தகப்பனாருக்குக்கூடக் கடிதம் எழுதினேன். ஆனால் ஊரிலிருந்து பதில் கடிதம் எதுவும் வரவில்லை. ஆனால் எதிர்பாராமல் ஒன்று நடந்தது. எங்களுக்குத்க் கற்றுத்தந்த வைத்தியமுறை யாவும் பாரம்பரியமான சாஸ்திரப் பிரயோகமாக இருந்ததால், காலிமியான் நாங்கள் சீமை வைத்தியத்தின் சிகிச்சை முறைகளை அறிந்துகொள்வதும் அவசியம் என்று சில்காவில் மருந்துவ ராக இருந்த தாமஸ் வுட்கிரப்பிடம் சில மாதக் காலம் தனிப் பயிற்சிக்காக அனுப்பி வைத்தார்.

தாமஸ் வுட்கிரப் தனது வீட்டிலே வைத்தியச்சாலையை வைத்திருந் தார். அவருக்கு வயது நாற்பதைக் கடந்திருக்கும். புறாக்கள் வளர்ப்பதில் மிகவும் ஆர்வம் கொண்டிருந்த அவருக்கு மியானிடமிருந்து திறமை யான பந்தயப் புறாக்கள் கிடைத்திருக்கின்றன. அதனால்தானோ என்னவோ, என்னைக் கண்டதும் மிகுந்த இணக்கத்துடன் பகல் நேரங்களில் தான் அதிகம் உறங்கிவிடுவதால் மாலையில் மட்டும் பயிற்சிக்கு வந்தால் போதும் என்றார். நான் மியானிடம் காலையிலி ருந்து மாலை வரை சரீர வைத்திய முறைகளை அறிந்துகொண்டு மாலையில் நடந்தே சில்காவிலிருந்த தாமஸ் வுட்கிரப் வீடு வரை செல்வேன். அவரிடம் நோயாளிகள் அதிகம் வந்துகொண்டிருந்தார்கள். பெரும்பாலும் ராணுவக் குடியிருப்பில் இருப்பவர்கள். ஒன்றிரண்டு வணிகர்களின் குடும்பத்து நபர்கள். தாமஸ் வுட்கிரப் நோயாளிகளின் கண்களை மட்டும்தான் விரித்துப் பார்ப்பார். பிறகு நாக்கை நீட்டச் சொல்லிச் சில நிமிஷங்கள் பார்த்துக்கொண்டிருப்பார். பிறகு மஞ்சள் நிற மருந்தை ஊசியில் நிரப்பிக்கொண்டு நோயாளிக்குச் செலுத்திவிடு வார். வேறு பரிசோதனைகளே கிடையாது. ஒன்றிரண்டு நோயாளிகளு டன் மட்டும் வேடிக்கையாக ஏதாவது பேசிக்கொண்டிருப்பதும் உண்டு.

நான் அவரது அறையின் ஒரு மூலையில் மர ஸ்டூலில் அமர்ந்த படியே இதைக் கவனித்துக்கொண்டிருப்பேன். ஒவ்வொரு நோயாளியின் பெயரையும் அவருக்கு அளிக்கப்பட்ட மருந்தையும் எனது குறிப்பேட் டில் பதிவு செய்துகொள்வேன். இடையில் வுட்கிரப் என்னிடம் ஒரு வார்த்தைகூடப் பேசுவது கிடையாது. சில வேளைகளில் தனக்குத் தானே அவர் எதையாவது சொல்லிக்கொள்வதைத் தவிர என் பக்கம் திரும்புவதுகூடக் கிடையாது. ஆனால் ஒரு நாள் தாமஸ் வுட்கிரப் என்னிடம் ஒரு நோயாளியைப் பரிசோதிக்கச் சொல்லிவிட்டு அருகாமையிலிருந்த தனது அறைக்குள் சென்றுவிட் டார். நான் நோயாளியின் நாடியைக் கையில் பிடித்துப் பார்த்துக் கொண்டிருந்தேன். எனக்கு ஊசியைப் பிரயோகித்துப் பழக்கமில்லை. என்ன வைத்தியம் செய்வது என்று தெரியாத நிலையில் நான் அந்த நோயாளியின் கைகளைப் பற்றியபடியிருந்தேன். அவர் வயதான வர் அவர் கண்கள் பழுப்பேறிப் போயிருந்தன. உடல் மிகவும்

பலவீனமடைந்திருந்தது. நான் தயக்கத்துடன் எழுந்து வுட்கிரப்பிடம் இவருக்குக் காசம் பீடித்திருப்பது போல் இருக்கிறது என்றேன்.

வுட்கிரப் என்னை ஆச்சரியத்துடன் பார்த்துவிட்டு, அதை அந்த ஆளிடம் சொல்ல வேண்டாம் என்றுதான் உன்னைப் பரிசோதிக்கச் சொன்னேன் அநேகமாக இன்னும் சில மாதங்கள் தாங்க மாட்டான் என்றபடியே வழக்கம்போல தனது ஊசியைப் பிரயோகித்துவிட்டு வெளியே அனுப்பி வைத்தார். அன்று நான் புறப்படும்போது வுட்கிரப் தன்னோடு கொஞ்சம் பிராந்தி அருந்திச் செல்ல வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். நான் மறுத்தபடியே எனக்குப் பழக்க மில்லை என்றேன். வுட்கிரப் இதுவும் சிகிச்சைதான் என்றபடியே தனது மர அலமாரியிலிருந்த புட்டியைத் திறந்து எனக்குமொரு கிளாசில் ஊற்றித் தந்தார். பிராந்தி குடிப்பதற்கு முன்பாக இருந்த வுட்கிரப், குடிக்கக் குடிக்க உருமாறிக் கொண்டே வருவது போல் இருந்தது. அவர் தனது உடைகளைக் களைந்துவிட்டு அரைக்கால் டிராயருடன் நின்றபடி என் தோளைக் தட்டிக்கொண்டு கேட்டார்,

“இரவில் தூக்கம் வருவதற்கு என்ன செய்கிறாய்?”

நான் சில துளிகள் மட்டுமே பிராந்தியை அருந்தியிருந்தேன். ஆனால் அதுவே என் உடலைக் கொதிக்கச் செய்து கொண்டிருந்தது. அவர் கேட்ட கேள்வியில் இருந்த பரிகாசத்தை அப்போது நான் கவனிக்கவில்லை. வெதுவெதுப்பான பாலில் தேன் கலந்து சாப்பிட்டு உறங்கிவிடுவேன் என்றேன். அவர் தன் கையில் வைத்திருந்த குவளை யைக் கீழே வைத்துவிட்டுத் தாங்கமுடியாத கூச்சலுடன் கத்தியபடி சிரித்தார். பிறகு என்னிடம் தாது நஷ்டம் சரீர பலவீனம் என்றார். நான் சட்டென இறுக்கமான முகத்துடன் சொன்னேன்,

“நான் திருமணம் செய்துகொள்ளத் திட்டமிட்டிருக்கிறேன்.”

அவர் இதைக் கேட்டதும் அதிகம் சிரித்தார். பிறகு சொன்னார்,

“நீச்சல் அடிப்பதற்கு யாராவது கடலை விலைக்கு வாங்குவார்களா என்ன? உனக்கு நிஜமாகவே நீந்தத் தெரியுமா என்று பரிசோதித்திருக் கிறாயா?”

நான் அவர் என்னை அவமானப்படுத்துவதாகவே நினைத்தேன். எனது கையிலிருந்த கோப்பையைக் கீழே வைத்துவிட்டு அந்த அறையில் எரிந்து கொண்டிருந்த மெழுகுவர்த்தியின் அருகாமையில் போய் நின்றுகொண்டேன். வுட்கிரப் எனது கோபத்தைப் புரிந்து கொண்டது போலச் சொன்னார்,

“வைத்தியத்துக்கு அப்பாற்பட்டது சரீர இச்சை. அது மிருக வேட்டை போன்றது. பயமும் சாகசமும் ஒன்றாக உண்டாகக் கூடியது.”

நான் அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்தேன். பிறகு அவர் என் தோளில் தனது கைகளைப் போட்டுக்கொண்டபடியே கேட்டார்,

“எனக்கு எத்தனை பெண்களைத் தெரியும் என்று நினைக்கிறாய்?”

நான் பதில் சொல்லவில்லை. அவருக்குத் திருமணமாகியிருக்கிறதா என்றே நான் கேட்டுக்கொள்ளவில்லை. ஆனால் சீமையிலிருந்து வந்தவர்களுக்குப் பெண்கள் ஆற்றுத் தண்ணீரைப் போல எளிதாகக் கிடைக்கக்கூடியவர்கள் என்று மட்டும் தோன்றியது. வுட்கிரப் என் கண்களைப் பார்த்தபடியே சொன்னார்,

"ராஜு, நம் உடல் மிகவும் மர்மமானது அந்த மர்மத்தை நாம் கொஞ்சம்கூடத் தெரிந்துகொள்ள முற்படுவதில்லை. உனது சரீர சிகிச்சை முறையில் தொடு உணர்ச்சிக்கு முக்கியத்துவமிருக்கிறது இல்லையா? ஏன் தொடுமுறைகளுக்கு இத்தனை முக்கியத்துவம் என்று யோசித்திருக்கிறாயா? உனது சிகிச்சை முறையில் ஒருவரது நோய்க்கும் காமத்துக்கும் தொடர்பிருக்கக் கூடுமா?" நான் அவரிடம் விவாதம் செய்ய விரும்பவில்லை. வுட்கிரப்பை முதன்முறையாகப் பெயர் சொல்லி அழைத்தபடியே சொன்னேன்,

"எனக்குப் பெண்களைத் தெரியாது. காமம் பெண்களால் மட்டும் தீர்ந்துவிடக் கூடியதில்லை. காமத்தை அவர்கள் கடந்து விடுவதற்குத் தான் உதவி செய்கிறார்கள், அறிந்துகொள்வதற்கு அல்ல" என்றேன்.

அவர் திரும்பவும் சிரித்தபடியே சொன்னார்,

"நீ வைத்தியனாவதற்குப் பதிலாக கவியாக ஆகியிருக்க வேண்டும். கற்பனை அதிகமாக இருக்கிறது" என்றார்.

நான் தலை கவிழ்ந்துகொண்டேயிருந்தேன். பிறகு அவர் என் அருகில் வந்து என் நாக்கை நீட்டச் சொன்னார். நான் மறுத்தபடி பற்களை இறுக்கமாக்கிக் கொண்டேன். அவர் வலுக்கட்டாயமாக என் வாயைத் திறந்து என் நாக்கைப் பார்ப்பதற்கு முயற்சி செய்தார். எனது எதிர்ப்பைக் காட்டும் வகையில் அவரிடமிருந்து திமிறிக் கொண்டிருந்தேன். அவர் முகம் சிவந்திருந்தது. அவர் தனது நாற்காலி யில் உட்கார்ந்துகொண்டபடியே என்னிடம் சொன்னார், "உன் உடலில் காமம் கொப்பளித்துக்கொண்டிருக்கிறது. நீ பெண்களை நேர்கொள்வதற்குப் பயப்படுகிறாய். ஆட்டுக் குட்டிகள் கீரைகளைத் தின்பதைவிடவும் எளிதானது ஒரு பெண்ணோடு கூடுவது. நீ வீணாக பயம் கொண்டிருக்கிறாய்?"

நான் எனது அறைக்குத் திரும்பிச் செல்வதாகச் சொன்னேன். வுட்கிரப் தனது நீண்ட அங்கியை அணிந்தபடி தன்னோடு வரும்படி யாக என்னை அழைத்துக்கொண்டு வெளியில் நடக்கத் தொடங்கினார். பின்னிரவு நேரமென்பதால் வீதிகளில் வெளிச்சம் முற்றாக அடங்கி யிருந்தது. பாராக்காரனின் குரல்கூட எங்கோ தூரத்தில் ஒலித்துக் கொண்டிருந்தது. நாங்கள் இருவரும் இரும்புச் சாமான்கள் விற்கும் அங்காடிகள் இருந்த தெருவுக்குள் நுழைந்து நடந்துகொண்டிருந்தோம். வுட்கிரப் ஒரு வீட்டின் பின் கதவைத் திறந்துகொண்டு என்னை உள்ளே அழைத்துச் சென்றார்.

நாங்களே உள்ளே நடந்துவரும் சப்தம் கேட்டு இருட்டுக்குள்ளிருந்து

ஒரு கிழட்டுக் குரல் வெளிப்பட்டது.

“வழியில் நாய் படுத்துக் கிடக்கிறது. கவனமாக வாருங்கள்.”

வுட்கிரப் மாடிப்படிகளில் முரட்டுச் சப்தத்துடன் ஏறிக்கொண்டிருந் தார். யாருடைய வீடு என்றே தெரியவில்லை. நான் தயக்கத்துடனும் சற்றே கனத்த தலைவலியுடனும் மாடிப் படிகளில் ஏறிக்கொண்டிருந் தேன். சப்தம் கேட்டு விழித்த யாரோ கையில் ஒரு விளக்குடன் மாடியில் நடந்து வந்துகொண்டிருந்தார்கள். தாமஸ் உரத்த குரலில் துவிஜாவின் அறையில் யார் தங்கியிருக்கிறார்கள் என்றார். அந்தப் பெண் பதில் சொல்லவில்லை. ஆனால் சில நிமிஷங்களுக்குப் பிறகு ஒரு ஆள் தூக்கம் கலையாதபடியே வெளியே வந்து வுட்கிரப்பைப் பார்த்து சலாம் வைத்துவிட்டுப் படிகளில் கீழே இறங்கிப் போனான். வுட்கிரப் என்னிடம் சொன்னார்,

“நோயாளிகளில் முதன்முறையாக உனக்கு மட்டும்தான் இந்தச் சிகிச்சையை நான் சிபாரிசு செய்திருக்கிறேன். அறைக்குள் உனக்குத் தேன் கலந்த பால் தேவைப்படாமலே தூக்கம் வரும். போ” என்றவாறே அவர் இன்னொரு பெண்ணிடம் ஏதோ பேசிக் கொண்டிருந்தார். அறைக்குள் நான் நுழைந்தபோது அத்தரின் வாசம் அடர்ந்திருந்தது. உறக்கம் கலைந்த நிலையில் ஒரு பெண் நிர்வாணியாக கால் மீது கால் போட்டபடி சாய்ந்து அமர்ந்திருந்தாள். நான் படுக்கையின் அருகிலே நின்றுகொண்டிருந்தேன். அவள் படுக்கையை ஒட்டிய பெரிய ஜன்னல் திறந்து கிடந்தது. பின்னிரவின் வானமும் நட்சத்திரங் களும் துல்லியமாகத் தெரிந்தன. அவள் என் தயக்கத்தைப் பற்றிய கவலையே இல்லாதவளைப் போலப் படுக்கையை விட்டு எழுந்து வந்து வெற்றிலைப் பெட்டியைத் திறந்து வெற்றிலையை எடுத்துக் கொண்டு சுவைக்க ஆரம்பித்தாள். என் அருகில் கடந்து போகும்போது கவனித்தேன். அவளது தொடையில் நீளமான வடுவிருந்தது. நான் கண்களை விலக்கிக்கொண்டு ஜன்னலைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அவள் மிகுந்த அலுப்புடன் கேட்டாள், “உனக்குத் தூக்கம் வர வில்லையா?”

நான் வுட்கிரப்பின் அவமானச் சொற்களை நினைத்தபடி இருந் தேன். பிறகு சட்டெனப் படுக்கையில் ஏறிப் படுத்துக்கொண்டேன். அவளது நீண்ட கைகள் என்னைத் தழுவத் தொடங்கின. எனது காமம் உலர்ந்த பனையோலையைப் போல சப்தமிடத் தொடங்கியது. அவளது நகங்கள் என் முதுகில் கீறிக்கொண்டிருந்தன. நான் இலவம் பஞ்சு வெடிப்பது போல உடலை எடையற்று மிதக்க வைக்க முயன்றுகொண்டிருந்தேன். கிறக்கத்தின் ஊடாகத் தொலைவிலிருந்த வானம் மெதுவாக ஜன்னலை நோக்கி நெருங்கி வந்துவிட்டது போலவும் நட்சத்திரங்கள் மங்கிய மேகங்கள் யாவும் கைவிரல் தொடும் தூரத்தில் இருப்பது போலவுமிருந்தது. அவள் மயிலிறகின் மிருதுவிலிருந்தாள். விடிகாலையை நோக்கி உலகம் உருண்டுகொண்டி ருப்பது தெரிந்தது.

வுட்கிரப் சொன்னது எவ்வளவு சத்தியமான வார்த்தை. நம் உடல் மிக மர்மமானதுதான். உடலுக்குள் ஊடுருவிச் செல்வதற்கு இத்தனை வழிகள் இருக்கிறதா என்ன? உடல் ஒரு கடற்கரையைப் போல இத்தனை கோடி மணல் நிரம்பியதும் நீளமானதுமா? இல்லை ஆரஞ்சுப் பழத்தைப் போலச் சுளை சுளையாக விரியக்கூடியதா? ஏதேதோ குழப்பமான யோசனைகள் உருவாவதும் அழிவதுமாக இருந்தன. வெளிச்சம் அறையில் கசிந்து நிரம்பிக் கொண்டிருந்தது. படுக்கையில் இருந்து அவள் புரண்டு படுத்துக்கொண்டு கேசத்தால் வயிற்றை மூடியிருந்தாள். மிகவும் தற்செயலாக நான் கேசத்தை விரலால் விலக்கிவிட்டுத் தடவியபோது கவனித்தேன். அவளுக்கு இரண்டு நாபிகள் இருந்தன. அடி வயிற்றிலிருந்து சற்றே மேலாக அருகருகே இரண்டு நாபிகளிருந்தன. என் விரல்கள் இன்னொரு நாபியை ஆச்சரியத்துடன் தொடுவதற்கு முயன்றபோது அவள் கைகள் இறுக்கமாகப் பற்றிக்கொண்டபடி என்ன செய்கிறாய் என்றாள். நான் வியப்புடன் உனக்கு இரண்டு நாபிகள் இருக்கின்றதே என்றேன். அவள் ஆச்சரியம் அடையாமல் அப்படியா நான் என் உடலைப் பார்த்துக்கொள்வதே கிடையாது என்றாள். நான் வியப்புடன் உன் உடலை நீ பார்ப்பதேயில்லையா என்றேன். அவள் மிகவும் தயக்கத்துடன் பெண்கள் தங்கள் உடலைத் தாங்கள் பார்த்துக்கொள்வது அவசியமில்லை என்றாள்.

நான் எழுந்து உட்கார்ந்துகொண்டபடி ஆனாலும் இரண்டு நாபியிருப்பது ஆச்சரியமாக இருக்கிறதே என்றேன். அவள் கால்களைச் சுருட்டிக்கொண்டபடி இதில் என்ன ஆச்சரியமிருக்கிறது என்றாள். நான் அவளது இன்னொரு நாபியைப் பார்க்க விரும்பியவனைப் போல வயிற்றுக்கு நெருக்கமாகச் சென்றேன். அவள் உடலை நான் ஆராய்வதை விரும்பாதவள் போல விருட்டென இழுத்துக் கொண்டவளாக "வேண்டாம், எனக்கு என்னவோ போல் இருக்கிறது" என்றாள்.

நான் மூர்க்கத்துடன் அவள் உடலை அமுக்கிக்கொண்டு அடி வயிற்றிலிருந்த இன்னொரு நாபியைப் பார்த்தேன். அது முன்பு பார்த்த இடத்தில் இப்போது இல்லை. சற்றே மேலேறியிருந்தது. அது நிஜம்தானா என்று சந்தேகமாக இருந்தது. அவள் என்னை விடுவிடுத்துக்கொண்டு எழுந்து செல்ல முற்பட்டாள். நான் வியப்படங்காமல் உனது இன்னொரு நாபி இடம்மாறிக் கொண்டும் இருக்கிறது என்றேன். அவள் விடுவிடுவெனத் தனது ஆடைகளை அள்ளியெடுத்துக்கொண்டு கீழே சென்றாள். நான் விடியும்வரை அந்தப் படுக்கையில் விழித்துக்கொண்டுதான் படுத்திருந்தேன். அவள் திரும்பவும் வரவேயில்லை. நான் என் அறைக்குப் புறப்பட்டபோது கீழே வுட்கிரப் ஆழ்ந்து உறங்கிக்கொண்டிருந்தார். என் அறைக்கு வந்தபோது உறக்கம் கண்ணைக் கட்டிக்கொண்டு வந்தது. அன்று பகல் முழுவதும் நான் உறங்கிக் கிடந்தேன்

மாலையில் நான் கண்விழித்தபோது கண்கள் எரிச்சலாகி இருந்தன.

உடல் நோவும் நாவு உலர்ந்த தன்மையுமிருந்தது. மங்கிய மாலை வெயில் ஜன்னல் வழியாக அறையினுள் நிரம்பிக் கொண்டிருந்தது. சோம்பல் முறித்தபடியே புரண்டு படுத்துக் கொண்டபோது அறையின் வாசலில் யாரோ ஒரு பெண் குரல் கேட்டது. சட்டென உடலில் காமம் ஒரு சிற்றலை போல அடித்து கால் வரை ஓடியது. கதவு மூடியிருக்கிறதா என்று பார்த்துக் கொண்டேன்.

நேற்றிரவு நடந்தவை யாவும் கற்பனையானதுதானா? நிஜமாகவே நான் ஒரு பெண்ணை அறிந்துவிட்டேனா? அந்தப் பெண்ணுக்கு இரண்டு நாபிகள் ஏன் இருந்தன? பிறக்கும்போது இரண்டு தொப்பூழ் கொடிகள் ஒருவருக்கு இருக்கக் கூடுமா என்ன? மருத்துவ நூல்கள் எதிலும் அப்படியொரு சாத்தியத்தைக்கூட வாசித்ததில்லையே, பின் எப்படி? மனம் சாய்வதும் புரள்வதுமாக இருந்தது. ஒரு சிறுமி எனது அறையின் கதவைத் தட்டிக்கொண்டிருந்தாள். அரையிலிருந்து நழுவிக்கொண்டிருந்த வேஷ்டியை இறுக்கிக் கொண்டு கதவைத் திறந்துவிட்டேன். என்னைப் பார்ப்பதற்காக ஒருவர் வாசலில் காத்துக் கொண்டிருப்பதாகச் சொன்னாள். நான் தண்ணீர்த் தொட்டியிலிருந்த நீரை முகத்திலடித்துக்கொண்டு கீழே இறங்கிச் சென்றேன்.

ரோல்ஸ் காரில் தாமஸ் வுட்கிரப் உட்கார்ந்திருந்தார். அவரோடு யாரோ ஒரு ராணுவச் சிப்பந்தி ஒருவரும் அமர்ந்திருந்தார். வுட்கிரப் எனது கலைந்த கேசத்தையும் வீங்கியிருந்த முகத்தையும் கண்டதும் பரிகாசமாக "அதிகமாகத் தூக்க மருந்து தந்துவிட்டேனா" என்று கேட்டார். நான் முகத்தைக் கையால் துடைத்தபடியே வுட்கிரப்புக்கு எனது இருப்பிடம் எப்படித் தெரிந்தது என்று கேட்டேன். அவர், தான் இந்த நகரில் பதினாறு வருடங்கள் வசித்த மனிதர் என்றும் தன்னால் வீட்டை மட்டுமல்ல, எந்தெந்த வீட்டின் பின் கதவுகள் சாத்தப்படுவதில்லை என்பதுகூடத் தெரியும் என்றார். நான் மெல்லிய சிரிப்போடு நின்றிருந்தேன். அவர் ராணுவச் சிப்பந்தி ஒருவரின் குழந்தைக்கு வலிப்பு வந்துவிட்டதாகத் தன்னை அழைத்திருந்தார்கள் என்று சொல்லியபடி நான் வருவதாக இருந்தால், கூடவே அவரது மருத்துவமனைக்கு அழைத்துப் போவதாகச் சொன்னார்.

நான் அவசர அவசரமாக என் அறைக்குச் சென்று உடைகளை மாற்றிக்கொண்டு கீழே வந்துகொண்டிருந்தபோது வுட்கிரப் நான் குடியிருந்த வீடொன்றில் நோய்வாய்ப்பட்டுப் படுக்கையிலே கிடந்த ஒரு வயதான பெண்ணுக்கு வைத்தியம் செய்து கொண்டிருந்தார். கதவுக்குப் பின்னே நாலைந்து பெண்கள் மறைவாக நின்றபடி அதைக் கவனித்துக்கொண்டிருந்தார்கள்.

வுட்கிரப் மறைவாக நின்ற பெண்களிடம் ஏதோ கேலியாகச் சொல்லிக்கொண்டிருந்தார். ஒரு பெண் சிரிக்கும் சப்தம் கேட்டது. அந்த வீட்டு ஆண்கள் அத்தனை பேரும் எங்கே போய்த் தொலைந்தார் கள் என்று ஆத்திரமாக வந்தது. வுட்கிரப் என்னை அந்த அறைக்குள் அழைத்து தோளைத் தட்டியபடி சொன்னார், "இவர் என்னை

விடவும் பெரிய வைத்தியர். ஆனால் பிரம்மச்சாரி. கவனமாக இருங்கள்."

ஒரு பெண் மறைவிலிருந்தபடியே சொன்னாள், "எப்போதும் கதவை மூடிக் கொண்டு என்னதான் செய்துகொண்டிருக்கிறாரோ? வைத்தியம் செய்கிறவரைப் போலத் தெரியவேயில்லை. ஏதோ மாந்திரீகம் செய்கிறவர் போலத்தான் நடந்து கொள்கிறார்"

வுட்கிரப் இதைக் கேட்டதும் கைதட்டிச் சிரித்தபடியே அந்தப் பெண்களிடம், "கவனமாக இருந்துகொள்ளுங்கள். ஏதாவது மந்திரம் செய்து உங்களை மயக்கிவிடப் போகிறார்" என்றார்.

"முயற்சி செய்து பார்க்கச் சொல்லுங்கள். மந்திரம் பலித்து வீட்டிலிருந்த பெண்களில் எவருக்காவது அதிர்ஷ்டம் இருக்கிறதா என்று பார்க்கலாம். இஸ்மத் கிழவிகூட அதற்குத் தயாராகத் தானிருக்கிறாள்" என யாரோ சொன்னதும் அறை முழுவதும் சிரிப்புப் பொங்கியது. யார் இப்படியெல்லாம் பேசுகிறார்கள். இத்தனை நாள்கள் என்னைக் கவனித்துக்கொண்டுதானிருக்கிறார்களா? பின் ஏன் என்னோடு பேசுவதேயில்லை. வுட்கிரப் மட்டும் எப்படி ஒரு நிமிஷத்தில் இப்படிப் பெண்களுக்கு விருப்பமானவனைப் போல சர்வ சுதந்தரமாகப் பேசிக்கொண்டிருக்கிறார். இன்னொரு அறையிலிருந்து ஒரு வயதானவள் இரண்டு தம்ளர்களில் ஆரஞ்சு சர்பத் கொண்டுவந்து தந்தாள். ஆரஞ்சுப் பழச் சாற்றில் லேசாக எலுமிச்சைச் சாற்றைப் பிழிந்திருக்கிறார்கள். விசித்திரமான ருசி. நான் நாவைச் சுவைத்துக்கொண்டே பேசிக்கொண்டிருப்பது போல உள் அறையைப் பார்த்துக்கொண்டிருந்தேன்.

வுட்கிரப் படுக்கையிலிருந்த வயதான பெண்ணுக்குத் தனது கோட் பாக்கெட்டிலிருந்து சில மாத்திரைகளை எடுத்துத் தந்து விட்டு, "ஊசி அவசியமில்லை, இன்னொரு முறை வந்து பார்க்கிறேன்" என்றபடி எழுந்துகொண்டார். இருவரும் வாசலுக்கு வந்தபோது தெருவில் வெயில் வடிந்து லேசான இருட்டு மினுங்கிக்கொண்டிருந்தது. காரில் இருவரும் போய்க்கொண்டிருந்தோம். நான் தயக்கத்துடன் அந்த வீட்டுக்கு முன்னதாகவே வுட்கிரப் வந்திருக்கிறாரா என்று கேட்டேன். அவர் சிரித்தபடியே அந்த வீட்டுப் பெண்களில் ஒருத்திக்குத் தான் சிறிய அறுவை சிகிச்சை செய்திருப்பதாகச் சொன்னார். என்னால் நம்ப முடியவில்லை. கையைத் தொட்டு நாடி பார்ப்பதற்கே அனுமதிக்காத வீட்டில் ஒரு பெண்ணுக்கு அறுவை சிகிச்சை செய்திருக்கிறார் என்றால். வியப்பாக இருந்தது. வுட்கிரப் அந்த வீட்டிலிருந்த பெண்களின் பெயர்களை வரிசையாகச் சொல்லிக் கொண்டுவந்தார். பிறகு முகத்தை இறுக்கமாக வைத்தபடி என்னிடம் நேற்றிரவு என்ன கற்றுக்கொண்டாய் என்று கேட்டார். நான் பதில் சொல்லவில்லை. அவரே கேலியான குரலில் சொன்னார்,

"உன்னைப் பற்றி துவிஜா மிக மோசமாகச் சொல்கிறாள். அவள் உடலில் எதையோ தேடிக்கொண்டிருந்தாயாமே, அதைவிடவும்

தூக்கத்திலே உளறிக்கொண்டு வேறு இருந்திருக்கிறாய். பிராந்தி உனக்கு ஒப்புக்கொள்ளவில்லையா?”

நான் பற்களைக் கடிக்கத் தொடங்கினேன். வைத்தியச் சாலைக்கு அருகாமை வந்தபோது நான் அவரிடம் நடந்த விஷயங்களைச் சொல்லிவிடலாம் என்று நினைத்தேன். ஆனால் அவரது பரிகாசக் குரல் சொல்ல விடாமல் தடுத்துக் கொண்டிருந்தது. அன்று வைத்தியச் சாலையில் நிறைய நோயாளிகள் வந்திருந்தார்கள். நான் எனது ஸ்டூலில் அமர்ந்தபடி நோயாளிகளைப் பார்த்துக்கொண்டிருந்தேன். மனம் தொடர்ந்து முந்திய இரவின் மீது சாய்மானம் கொண்டிருந்தது. ஒவ்வொரு துளியாக நினைவு படுத்திப் பார்த்துக்கொண்டிருந்தேன்.

துவிஜா என்பது அவள் பெயர். அவளது வீட்டின் பின்வாசல் எப்போதும் திறந்து கிடக்கிறது. வீட்டு வராந்தாவில் ஒரு வயதானவன் படுத்திருக்கிறான். ஒரு நாய் உயங்கிக்கொண்டிருக்கிறது. அது குலைக்க வில்லை. ஏன் இருப்பதாகத் தன்னைக் காட்டிக்கொள்ளவில்லை. இன்னொரு பெண்ணுமிருக்கிறாள். அவள் பெயர் ஏதோ சொன்னாள். துவிஜாவின் படுக்கைக்கு அருகில் பெரிய ஜன்னல் இருக்கிறது. அவளுக்கு இரண்டு நாபியிருக்கிறது. அதில் ஒன்று இடம் மாறிக் கொண்டே இருக்கிறது. நோயாளிகள் பற்றிய எனது குறிப்பேட்டில் எதையோ கிறுக்கிக்கொண்டிருந்தேன்.

என் மனது நிலைகொள்ள மறுக்கிறது. நேற்றிரவு அடைந்தது காம சுகம்தானா? இல்லை. அது வலி முறிவு போலச் சற்றே வலியை மறக்கச் செய்திருக்கிறது. அவ்வளவுதான். உடலின் ஆழத்தில் பாசி பிடித்துப்போனது போல ஒரு கருமை உருக் கொண்டிருக்கிறதே. அதிலிருந்து எப்படி மீள்வது. நேற்றிரவைவிடவும் இன்றைய மாலையில் அந்த வீட்டுப் பெண்களில் ஒருத்தி மந்திரத்தால் மயக்கி வசப்படுத்திக் கொள்ளச் சொல்லிக் கேலி செய்தபோது உடலில் விருட்டெனப் பாம்பு நழுவுவது போலக் காமம் நழுவிப் போனதே அது எதனால்? என்னைக் கவனித்தபடியிருக்கும் பெண்களில் ஒருத்தியாவது என் கண்களில் இருந்த இச்சையைக் கவனித்திருப்பாள் இல்லையா? நான் குறிப்பேட்டில் எதையோ கிறுக்கிக்கொண்டிருந்தேன்.

மிகுந்த அலுப்புடன் வுட்கிரப் எழுந்து வாசலில் எரிந்துகொண்டிருந்த மின்சார விளக்கை அணைத்துவிட்டு உள்ளே வந்தார். அப்போது தான் தன் உணர்வு பெற்றவனைப் போல நான் குறிப்பேட்டை மூடி வைத்துவிட்டு எழுந்துகொண்டேன். வுட்கிரப் தனக்கு மட்டும் பிராந்தி ஊற்றிக்கொண்டு சாப்பிட்டபடியே நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு சுழன்றபடியே ‘துவிஜாவின் வீடு எங்கேயிருக்கிறது என்று தெரிந்து வைத்துக்கொள்ள ஆசைப்படுகிறாயா’ என்று கேட்டார் நான் மவுனமாக இருந்தேன். அவர் என்னையே பார்த்துக்கொண்டிருந்தார். நான் வேண்டாம் என்று மறைத்திருந்த விஷயத்தை என்னையும் அறியாமல் சொல்லத் தொடங்கினேன்,

“துவிஜாவுக்கு இரண்டு தொப்பூழ் இருக்கின்றன.”

அவர் வாயில் வைத்திருந்த பிராந்தி தெறிக்கும்படியாக ஒரு முரட்டுச் சிரிப்புச் சிரித்தார். நான் சொன்னது உண்மை என்பது போல இன்னொரு முறை அதையே சொன்னேன். வுட்கிரப் இப்போது சாந்தமாகிவிட்டது போலச் சொன்னார்,

“இதைத்தான் அவளும் சொன்னாள். உனக்கு இருக்கும் கற்பனை மிக அபாரமானது கொண்டையா ராஜு. எனக்கு துவிஜாவைப் பத்து வருடமாகத் தெரியும். அநேகமாக நூறு தடவைகளுக்கும் மேலாகச் சேர்ந்து உறங்கியிருக்கிறோம். ஒரு முறைகூட அந்த விநோதத்தைக் கண்டதில்லை. இவளிடம் மட்டுமல்ல வேறு எவளிடமும் நீ சொல்லும் அதிசயம் நான் கேள்விப்பட்டதுகூடக் கிடையாது.” நான் பிதற்றவில்லை என்பதை நிரூபிப்பது போலச் சொன்னேன்,

“ஒருவேளை காமம் முற்றியபோது இன்னொரு நாபி உருவாகி இருக்கலாமில்லையா?”

அவர் இப்போது சிரிப்பை அடக்க முடியாமல், “நீ கவியேதான். ஏதோவொரு கடவுளுக்கு உடல் முழுவதும் யோனி தோன்றியதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். நீ அந்த ரகத்து ஆள்தான்” என்றார். நான் புறப்படுவதாக வெளியே வந்தேன். வுட்கிரப் வாசலுக்கு நான் போகும்போது சொன்னார்,

“இன்றிரவு நீ சொன்னதைச் சோதிப்பதற்காகவே துவிஜாவின் வீட்டுக்குப் போகப் போகிறேன். இஷ்டமிருந்தால் நீயும் வரலாம். ஆனால் இன்றைக்கு நீ வேறு பெண்ணோடுதான் இருக்க வேண்டும்.”

நான் வர மறுத்தபடி வெளியேறி நடக்கத் தொடங்கினேன். வீட்டுக்குப் போவதற்கும் மனமில்லை. இந்த நகரமே முக்காடிட்டுக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு தெருவும் வீடுகளும் தன்னை வெளிக் காட்டிக்கொள்ளாத கறுப்பு முக்காடு அணிந்திருக்கின்றன. திரைகளை விலக்கி ஒரு முகத்தை வெளிப்படையாகக் காண்பது அரிதாகி வருகிறது. என்ன நோய் இது. ஆண்களும் பெண்களும் ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டிருந்தால்கூடப் போதுமே, அதில் என்ன தவறு நேர்ந்துவிடப் போகிறது. நீண்ட நேரம் நான் நடந்து என்னை அறியாமலே காலிமியானின் இடத்துக்கு வந்து சேர்ந்தேன். அவர் ஏதோ எண்ணெய்யைக் காய்ச்சிக் கொண்டிருந்தார். இரவில் நான் எதற்காக வந்து சேர்ந்தேன் என்று அவர் கேட்கவில்லை. மாறாக அவர் என்னிடம் எண்ணெய் காய்ச்சுவதை நன்றாகக் கவனித்துப் பார்க்கும்படி சொன்னார். நான் கொதிகலனிலிருந்து பீறிடும் வாசத்தை நுகர்ந்தபடியே பார்த்துக்கொண்டிருந்தேன். கரும்பச்சை நிறத்தில் கொதித்துக்கொண்டிருந்தது தைலம். காலிமியான் தனது தொடைகள் தெரியும்படியாக வழித்துக் கட்டியிருந்த வேட்டியில் கைகளைத் துடைத்தபடியே என்னிடம் சொன்னார்,

“இந்தத் தைலம் கபூர்தலாவுக்குப் போகிறது. யுவராஜாவுக்காகத் தயாரிக்கிறேன். அவர் வேட்டைப் பிரியர் என்று தெரியும்தானே?

கடந்த ஒரு மாதமாக அவருக்குத் தலையில் உஷ்ணம். அதற்குத் தான் இந்த மருந்து” என்றார்.

நான் கொதிகலனைப் பார்த்துக்கொண்டேயிருந்தேன். நெருப்பு அணைந்த பிறகும் கொதிகலனிலிருந்த தைலத்தின் குமிழ் பொங்கிக் கொண்டிருந்தது. நான் அந்த மணத்தை உடல் முழுவதும் நிரப்பிக் கொண்டிருந்தேன். உள்ளிருந்து பொடித்து வைத்திருந்த இலைகளைக் கொண்டுவந்து இன்னொரு அடுப்பில் ஏற்றிக்கொண்டிருந்தார் மியான். தைலம் இப்போது தங்க நிறத்தில் உருமாறியிருப்பதைப் பார்த்துக்கொண்டேயிருந்தேன்.

துவிஜாவின் வீட்டுக்குப் போயிருந்தால் இந்நேரம் நேற்றிரவு கண்ட நிஜத்தை மெய்ப்பித்திருக்கலாம். வுட்கிரப் அதைக் கண்டு பிடித்திருப்பானா? ஏன் இத்தனை கூச்சம் மனத்தில் நெளிகிறது. மியான் நெய்யை உருக்கத் தொடங்கியிருந்தார். விடியும்வரை அடுப்பின் முன்னாலே உட்கார்ந்திருந்தேன். ஆனால் மனத்தில் கொதிப்பு அடங்கவேயில்லை. மியான் எனக்கு மறுநாள் விடுப்பு தருவதாகச் சொல்லி காலையில் குடிப்பதற்குக் கொஞ்சம் புதினா இலையிட்ட தேநீர் கொடுத்தார்.

நான் எனது அறைக்குப் போவதற்குப் பதிலாக வுட்கிரப்பின் வீட்டுக்குச் சென்றேன். முன் கதவு மூடியிருந்தது. அவர் உள்ளே உறங்கிக்கொண்டிருந்தார். வெளியே நோயாளிகளுக்கான பெஞ்சில் நான் சாய்ந்து உட்கார்ந்துகொண்டேன். உடலிச்சை ஒரு இரண்டு தலை கொண்ட புழு. ஒரே நேரத்தில் இரு பக்கமும் ஊர்ந்து கொண்டிருக்கிறது. பெண்கள் மீது விருப்பமாகவும் பெண்களுக்கு எதிராகவும் ஒரே நேரத்தில் எண்ணங்கள் உருவாகிச் சிதைந்து கொண்டிருந்தன. எதையோ முடிவு செய்துவிட வேண்டும் என்பது போல ஒரு எண்ணம் தோன்றிக்கொண்டே இருந்தது.

காமம் பெண்களால் வடிந்துவிடக் கூடியதென்றால், இனி எதற்காக யோசித்துக்கொண்டிருக்க வேண்டும். பெண்ணைத் தேடி நுகர வேண்டியதுதான் என எனக்கு நானே சொல்லிக்கொண்டேன் துவிஜாவின் உடலில் இருந்த நாபி தோன்றியதா? இல்லை எப்போதும் இருக்கக்கூடியதா? ஒருவேளை துவிஜாவைப் போலவே எல்லாப் பெண்களுக்கும் இப்படியொரு நாபி உருவாகி கவனிக்காமல் கடந்து போயிருக்கக்கூடுமா?

நான் அறிந்த ஒரே பெண் துவிஜா மட்டும்தானே. தைலம் கொதித்தபோது ஏற்படும் நிற மாற்றம் போல என் உடலில் ஏதேதோ நிறங்கள் கசிந்து என்னை மாற்றிக்கொண்டிருந்தன. நான் உறங்கியிருந் தேன் என்பதையே வுட்கிரப் எழுப்பும் போதுதான் தெரிந்துகொண் டேன். அவர் மதிய வேளையில் வெளியே வந்தபோது நான் உறங்கிக்கொண்டிருப்பதைக் கவனித்ததாகவும் உறக்கத்தில் கூட எனது முகம் சிவந்தே காணப்பட்டதாகவும் சொல்லியபடி மாலை தொடங்கியதால் எழுப்பும்படி நேர்ந்தது என்றார். நான் அவரது

கழிப்பறையிலே முகம் கழுவிக்கொண்டு எனது வழக்கமான இருக்கை யான மர ஸ்டூலில் உட்கார்ந்துகொண்டேன். அன்றிரவு நோயாளிகள் அனைவரும் வெளியேறும் வரை பொறுமையற்றவனைப் போல நான் சிடுசிடுப்பும் எரிச்சலுமாக அமர்ந்திருந்தேன். நோயாளிகளைப் பார்ப்பதோ, சிகிச்சைக் குறிப்புகளைக் கவனிப்பதோ கூட விருப்பமற்றே இருந்தது. மாறாக, காமம் புழுதி படிந்திருப்பது போல உடல் முழுவதும் திட்டுத் திட்டாக அப்பிக்கொண்டிருந்தது.

இரவு பத்து மணி கடந்த பிறகு வுட்கிரப் வெளிக் கதவைத் திறந்துகொண்டு இன்னமும் நோயாளிகள் எவராவது காத்திருக்கிறார் களா என்று பார்ப்பதற்காகச் சென்றார். நான் அவசரமாக வாசலுக்கு வந்தேன். அவர் எல்லா நாளையும் போலவே தனது அலமாரியைத் திறந்து கொஞ்சம் பிராந்தியை ஊற்றிக்கொண்டு தனது இருக்கைக்கு வந்து சேர்ந்தார். நான் சிடுசிடுப்போடு இருப்பதைத் தெரிந்து கொண்டதைப் போல எனது வீட்டில் இருந்த பெண்களில் எவராவது இப்போது என்னுடன் பேசுகிறார்களா என்று கேட்டார். நான் அவரை வெறித்துப் பார்த்தபடியிருந்தேன்.

அவர் உதட்டில் பிராந்தியைத் தடவியபடியே, "துவிஜாவிடம் இரவெல்லாம் தேடிப் பார்த்தாகிவிட்டது. அவளுக்கு இரண்டல்ல ஒரு நாபிகூடக் கிடையாது. அவள் தேவதை. எவர் கர்ப்பத்திலிருந்தும் பிறக்கவில்லை. உருவாக்கப்பட்டிருக்கிறாள். அவளது சிறகுகள்தான் ஸ்தனங்களாக இருக்கின்றன. அந்த உடலை நீ சொன்ன பிறகுதான் மிக நெருக்கமாகப் பார்த்தேன். எங்கள் தேசத்தில் உறைபனியில் மீன் வேட்டையாடுவதைப் பார்த்திருக்கிறேன். அதுபோலத்தான் அவள் உடல் முழுவதும் உறைந்திருக்கிறது. மீன்கள் எங்கோ ஆழத் தில் புதைந்திருக்கின்றன. பனியைப் போல அவள் வாசமற்றவள். நீ சொன்னதில் பாதிதான் நிஜம் கொண்டையா ராஜு."

நான் நம்ப மறுத்தவன் போலச் சொன்னேன், "அவளிடம் நீங்கள் கேட்டீர்களா?"

அவர் மறுத்துத் தலையசைத்தபடியே, "படுக்கையில் நான் பெண் களிடம் பேசும் பழக்கமற்றவன்" என்றார். நான் துவிஜாவின் வீடு எங்கேயிருக்கிறது என்று கேட்க விரும்பினேன். ஆனால் அக்கேள்வி என் தொண்டை வரை வந்து அடங்கிப் போயிற்று. அவர் என் கைகளைப் பிடித்துக்கொண்டு, "உனக்கு ஏதோ பிரச்சினையிருக்கிறது. நீ சொல்லத் தயங்குகிறாய். ஒரு நண்பனைப் போலக் கேட்கிறேன், சொல். உனக்குப் பெண்கள் வேண்டுமா?"

நான் அமைதியாக மறுத்தவன் போலச் சொன்னேன்,

"காமம் ஒரு விசித்திரமான நோய். இதைத் தீர்ப்பதற்குப் பதிலாக நாம் அதை அடக்கி வைப்பதற்கு மட்டுமே பயிற்சி பெறுகிறோம். உலகில் மனிதர்களைத் தவிர வேறு எந்த ஜீவராசியும் காமத்தை ஒரு பொருட்டாகக் கருதுவதே இல்லை. நாம் மிகவும் சிரமப்படு கிறோம். பெண்கள் கிடைப்பது அல்ல பிரச்சினை. காமத்தை

நாம் தெரிந்து வைத்திருக்கிறோமா இல்லையா என்பதுதான்."

தாமஸ், மிக ஆர்வமாக இதைக் கேட்டபடியே,

"நீ சொல்வது சரியாகத்தானிருக்கிறது. ஆனால் காமம் என்பது ஒரு தூண்டுதல்தானே. மிளகாய்ப் பழத்தில் காரமிருப்பது அதன் இயல்பு என்று சொல்வாயா? இல்லை காரம்தான் மிளகாய்ப் பழ வடிவம் எடுத்திருக்கிறது என்பாயா?" என்றார்.

எனக்கு ஆத்திரமாக வந்தது.

"தாமஸ்... உடல் இச்சை இயல்பானது என்று அத்தனை சுலபமாகக் கடந்துபோய்விட முடியாது. உனக்கு அதன் வலியைப் பற்றித் தெரியாது. அது ஒரு தீராத நோய்தான். ஒருவேளை ஆதியில் மனிதன் காமத்தைத் தன் உடலால் மட்டுமே அறிந்து கடந்திருக்கக் கூடும். நமக்குக் காமம் உடலில் பிறக்கவில்லை; மனதில் பிறக்கிறது. நமது காமம் உடலால் பெரிதும் வெளிப்படுத்தப் படுவதேயில்லை. இந்த மூன்று நாள்களில் எனக்குத் தூக்கமற்றதால் ஏற்பட்ட சோர்வைத் தவிர வேறு உடல் ரீதியாகப் பாதிக்கப்படவில்லை. ஆனால் மனது இருண்டுவிட்டது. ஈரமான சவக்குழியைப் பார்த்திருக்கிறாயா? அதில் எலும்புகள் களிமண் அப்பிக்கொண்டு பிசுபிசுப்பேறியிருக்கும். அதைப் போலத்தான் என்னை நான் உணர்கிறேன்" என்றேன்.

தாமஸ் வுட்கிரப் குடிப்பதை நிறுத்திவிட்டு மவுனமாக என்னைப் பார்த்துக் கொண்டிருந்தார். பிறகு அவசரமாகத் தனது கோட்டை யணிந்துகொண்டு என்னை துவிஜாவின் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போனார். அவள் அதே அறையின் வாசலில் சாய்வு நாற்காலி ஒன்றில் படுத்துக்கொண்டு ஆகாசத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

வுட்கிரப் அவள் அருகில் என்னை நிறுத்தியபடி சற்றே ஆத்திரமான குரலில் கேட்டார்,

"இவன் உன்னைப் பரிசோதிக்க விரும்புகிறான். இன்றிரவு மட்டும் அனுமதிப்பாயா?"

அவள் வெறுப்பான குரலில் சொன்னாள், "இவனுக்கு விபரீதமான எண்ணங்கள் அதிகமிருக்கின்றன. அதை நான் அனுமதிக்க முடியாது. உடலின்பம் என்பது வாசனை திரவியத்தைப் போன்றது. அதை உடலின் மீது ஒன்றிரண்டு துளிகள் பூசிக் கொள்ளத்தான் வேண்டும். வாசனை திரவியம்தானே என்று குடிக்கக் கூடாது. இவன் உடலின் மீது எதையோ தேடுகிறான். குழிவண்டுகள் மணலில் துளையிடுவது போல இவன் கண்கள் என்னைக் கவனித்துக் கொண்டிருக்கின்றன."

நான் அமைதியாக நின்றுகொண்டிருந்தேன். தாமஸ் அவளைச் சமாதானப்படுத்தியிருக்க வேண்டும். நீண்ட நேரத்துக்குப் பிறகு படுக்கைக்கு வந்த அவள் வேண்டுமென்றே அறையிலிருந்த பெரிய ஜன்னலை மூடி வைத்தாள். இருட்டில் சுவர்கள் எங்கிருக்கின்றன என்று கூடத் தெரியவில்லை.

அவள் படுக்கையில் சயனித்தபடியே நான் என்ன தெரிந்துகொள்ள வேண்டும் என்றாள். நான் அவளிடம் எதுவும் பேசவேயில்லை. ஆனால் இருவரும் சுகித்திருந்தோம். பின்னிரவில் அவளாகவே ஜன்னலைத் திறந்து வைத்தாள். அன்றைக்குவிடவும் பிரகாசமான வெளிச்சத்தில் இருந்தது ஆகாசம். நிலா துல்லியமாக ஒளிர்ந்து கொண்டிருந்தது. அவள் என் கேசத்தைத் தடவிவிட்டபடியே சொன்னாள்,

"உன் பரிசோதனைகள் எல்லாம் தீர்ந்துவிட்டனவா ?"

நான் தலையைத் தூக்கியபடி அவளது நாபியைக் கவனித்தேன். எல்லாப் பெண்களையும் போலவே ஒரேயொரு நாபி மட்டுமேயிருந்தது. இன்னொரு நாபி எங்கிருந்தது என்று மனத்துக்குள்ளாகத்தான் தேட வேண்டியிருந்தது. அவள் எழுந்து நின்றுகொண்டு ஆகாசத்தைப் பார்த்துக்கொண்டிருந்தாள். நான் அவள் அருகில் வந்து நின்றபடி கேட்டேன்,

"காமம் எங்கேயிருந்து தொடங்குகிறது."

அவள் பதில் சொல்லாமல் வெளியே பார்த்துக்கொண்டிருந்தாள். பிறகு ஆகாசத்தைக் கைநீட்டிக் காட்டினாள்.

"காமம் ஒரு வானவில்லைப் போலப் பாதி முறிந்த வளையமாகவே தான் தெரிகிறது. அதன் மறுபாதி எங்கேயிருக்கிறது என்று தெரிவதே யில்லை, வானவில் ஆகாசத்தில் தெரிகிறது. ஆனால், அங்கே எந்தப் புள்ளியில் தோன்றியது என்று தெரிவதில்லை. அது போலவே மழை நாள்கள் அன்றி மற்ற நேரங்களில் வானவில் வருவதுமில்லை. ஒருவேளை உடல் இச்சையும் ஏதோவொரு உருமாற்றத்தால் ஏற்படு கிறது, அப்படித்தானே ?"

அவள் பேசுவது ஏன் இப்படிக் கவித்துவமாக உருமாறியது என்று தெரியவில்லை. நான் அவள் தோள்மீது என் கைகளை வைத்தபடியே மிக நெருக்கமாக அவளது உடலை உரசிக்கொண்டபடி சொன்னேன்,

"நீ சொல்வதுதான் நிஜம். காமம் ஒரு வானவில்தான். ஆனால் ஏழு நிறம் மட்டும் கொண்டதல்ல. அதன் நிற ஜாலம் நாம் கண்டறிய முடியாதது. இது பகல் இரவு எல்லா நேரங்களிலும் நம் உடலில் தோன்றுகிறது. நாம் அந்த வானவில்லைப் பார்ப்பதற்குப் பதிலாக மறைப்பதற்குத்தான் கவனம் எடுக்கிறோம்."

அவள் பதில் பேசவில்லை. தலையைத் திருப்பி ஒரு முத்தம் தந்தாள். இருவரும் நெடுநேரம் ஆகாசத்தைப் பார்த்தபடியிருந்தோம்.

காலையில் வுட்கிரப்பும் நானும் தெருவில் நடந்து வந்துகொண்டி ருந்தபோது அவன் சொன்னான்,

"நேற்று துவிஜாவின் தோழி ருதிஷனா உன்னைப் பற்றி விசாரித்தாள். நடந்த விஷயங்களைச் சொன்னேன். அதைக் கேட்டுச் சிரித்தபடியே எவனோ ஒரு குடிகாரன் ஒரு நாள் அவளது அடிவயிற்றிலும்

இன்னொரு தொப்பூழ் இருப்பதாகச் சொல்லியிருக்கிறான். அவள் அப்படியானால் அதற்கும் சேர்த்துப் பணம் கொடு என்று வாங்கிக் கொண்டாளாம்” என்று சொல்லியபடி, “நீ அலிப்பூரில் வைத்தியம் கற்றுக்கொள்ள வந்திருக்கிறாய் என்பதையே சில நாள்களாக மறந்து கொண்டு வருகிறாய்” என்றார்.

இருவரும் இரும்பு வியாபாரிகள் கடைகளைக் கடந்தபோது தாமஸ் புட்கிரப்பிடம் எனக்கு மியானின் வீட்டில் வேலை இருப்ப தாகக் கிளம்பிச் சென்றேன். அதன் பிறகு வுட்கிரப்பை நான் தேடிப் பார்க்கவில்லை. ஆனால் உடலில் முறிந்த வானவில்லொன்று தோன்றி ஒளிர்ந்துகொண்டேயிருந்தது. அநேகமாக அலிப்பூரின் முட்டுச் சந்துகளிலும், இருண்ட ராணுவக் குடியிருப்பின் வேலையாள் கள் தங்குமிடங்களிலும் ஏதேதோ பெண்களைக் கண்டறிந்தேன் அந்த வானவில் உடலில் இருந்து மறையவேயில்லை. ஒரு வருட காலத்துக்குள் எனது செயல்கள் உருமாறிவிட்டிருந்தன. மியான் ஒரு நாளில் என்னை அழைத்துச் சொன்னார்,

“உனது கண்கள் எப்போதும் மஞ்சள் படிந்துபோயிருக்கின்றன. அலிப்பூரின் இருட்டு உன்னைப் பிடித்துக்கொண்டுவிட்டது” என்றார்.

நான் தலையசைத்தபடியே சொன்னேன்,

“ஊருக்குப் போகலாம் என்று நினைத்திருக்கிறேன்.”

அவர் வைத்தியக் குறிப்புகள் மற்றும் சுவடிகளிலிருந்து பிரதி யெடுத்திருந்த மருத்துவ சூட்சுமங்கள் யாவையும் மறக்காமல் எடுத்துக் கொள்ளும்படியாகச் சொன்னார். கடைசி முறையாக நான் அலிப்பூரில் ஒரே இரவை ஏதாவது ஒரு பெண்ணோடு கழிப்பதென முடிவு செய்தேன். ராணுவக் குடியிருப்பில் வேலை செய்பவர்கள் பலரும் ஒரு இடத்தில் தங்கியிருந்தார்கள். அங்கே இதுபோன்ற பெண்கள் கிடைப்பது எளிதானது என்பதால் நான் ராணுவக் குடியிருப்புக்குள் சென்றேன். மிகத் தற்செயலாக தாமஸ் வுட்கிரப் அப்போது மிதமிஞ்சிய போதையில் அங்கே ஒரு பெண்ணை அழைத்துக்கொண்டு வந்திருந் தார். அவளும் குடித்திருந்தாள். செம்பட்டை படிந்த கேசத்துடன் தடுமாறியபடி அவள் தனது துப்பட்டாவை அவர் தோள் மீது போட்டு இழுத்துக்கொண்டு வந்தாள்.

ஏனோ அவரை வீட்டுக்கு அழைத்துப்போய் உறங்க வைக்க வேண்டும் போல் இருந்தது. நான் வுட்கிரப்பின் கைகளைப் பற்றியபடி, “அதிகம் குடித்துவிட்டீர்களா” என்று கேட்டேன். அவர் என்னைப் பார்த்த திகைப்பில் என் தோள்களின் மீது கையைப் போட்டபடியே பேசத் தொடங்கினார்,

“கொண்டையா நீ சரியாகக் கண்டுபிடித்திருக்கிறாய். காமம் முற்றும்போது பெண்கள் உடலில் இதுபோன்று ஒரு சுழல் வட்டம் உருவாகிறது. அது நாபியல்ல. அது ஒரு மர்மமான சுழி. நான் ஒரு நாளில் பார்த்தேன். அது நிஜமானது. எல்லாப் பெண்களிடமும்

இருக்கிறது. அதைக் கண்டுபிடிப்பது எளிதானதில்லை.ஸ" நான் மறுத்தபடியே சொன்னேன்.

"இல்லை வுட்கிரப். அது வெறும் கற்பனை. காமம் கற்பனையால் மட்டுமே நிரம்பியிருக்கிறது. கலவி என்பது வெறும் செயல். கற்பனைகள் தான் இந்தச் செயலுக்கு நறுமணமூட்டுகின்றன. உலகில் மனிதர்களைத் தவிர இத்தனை கற்பனை வளம் மிக்கவர்கள் யார் இருக்கிறார்கள். கற்பனையால்தான் நம் மனம் கிளர்வடைகிறது. நான் பார்த்தது நாபியல்ல. ஒரு கற்பனை, மன மயக்கம் கொள்ளும் ஒரு போகம்."

தாமஸ் ஒத்துக்கொள்ளாதவரைப் போலத் தலையாட்டியபடியே சொன்னார்,

"கொண்டையா நீ வெறுப்பினால் பேசுகிறாய். நான் சில காலம் பாட்டியாலாவில் இருந்த அரச குடும்பத்துக்கு வைத்தியராக இருந் தேன். அங்கே எனது சிகிச்சை முழுவதும் உடலை எப்படி இச்சைக்குத் தூண்டுவது என்பதுதான். ராஜ சுகத்தில் கலவிதான் பிரதான போகம். அவர்கள் காமத்தை எப்படிக் கரைப்பது என்று தெரியாமல் சலித்திருந்தார்கள். இன்னொரு உடலின் வழியாகத் தான் காமத்தைக் கடந்து செல்ல முடியும் என்பது அவர்களுக்கு ஏற்புடையதாக இல்லை. நறுமணத்தைக் கமழவிடும் புகை வத்திபோல தங்கள் உடலில் இருந்து இச்சை சிறு புகையாகத் தானே வெளியேறிவிடாதா என்றுகூடக் கேட்டிருக்கிறார்கள். இதில் ஆண் பெண் பிரச்சினையே இல்லை. உறக்கத்தில் உடலின் வசமிருந்து நாம் நழுவிப்போய்விடுவது போலத்தான் காமமும். தூக்கம் போலவே காமமும் அறியா நிலைதான். அங்கே ஒரு சிறப்பு விருந்து இருக்கிறது, அன்றிரவு முழுவதும் யானைகள் கலவி கொள்வதை விருந்தினர்கள் யாவரும் கண்டு களிப்பார்கள்.

அதை நான் பார்த்திருக்கிறேன். மற்போரைவிடவும் வலியதாக இருக்கும். காமம் முற்றும்போது உடல் நூறு கண்கள் கொண்ட மீன் வலை போலாகிவிடுகிறது. உடல் ஒரு மலையடிவாரத்தை விடவும் மயக்கமூட்டக்கூடியது.

நான் அவரை வியப்போடு பார்த்தபடியிருந்தேன். என் முன் பேசிக் கொண்டிருப்பவன் யார்க்ஷயரிலிருந்து வந்திருப்பவரா இல்லை இமயமலையில் இருந்து இறங்கி வந்திருந்த யோகியா என்பதுபோல் இருந்தது. வுட்கிரப் எனது கலக்கம் நிரம்பிய முகத்தில் தனது விரல்களை வைத்தபடி சொன்னார்,

"கொண்டையா உனது சந்தேகங்கள் யாவும் முக்கியமானவை. நீ செல்லும் பாதையைத்தான் நான் தெரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் விரக்தியடைந்துவிடாதே. எல்லா உடலும் நாபியை மைய மாகக் கொண்டதுதான். நீ கண்டடைந்த நாபி பிறப்பின் துவாரமல்ல. அது வேறு, இச்சையின் சுழியது."

இருவரும் திரும்பவும் குடிப்பதென முடிவு செய்தோம். தாமஸ்

வுட்கிரப்பின் வைத்தியச்சாலை இப்போது தூசியடைந்து போயிருந்தது. கதவுகூட சாத்தப்படவேயில்லை. அவர் கதவைத் தள்ளி மின்சார விளக்கைப் போட்டதும் உள்ளே புறாவின் சிறகுகள் நிரம்பிக் கிடந்தன. பின்கட்டில் எப்போதும் கேட்டுக் கொண்டிருக்கும் புறாக்களின் ஒலி கூட அடங்கியிருந்தது. கழட்டியெறியப்பட்டிருந்த உடைகள், சுத்தம் செய்யப்படாத குவளைகள். நான் வழக்கமாக அமரும் ஸ்டூலைத் தேடினேன். வுட்கிரப் தனது நாற்காலியில் சாய்ந்து கொண்டபடி சொன்னார்,

"இப்போது வாரத்துக்கு ஒரு நாள் மட்டும்தான் வைத்தியச் சாலையைத் திறக்கிறேன். மற்ற நாள்களில் பகல்வேளைகளில்கூடக் குடியும் கலவியும் மட்டுமே மிஞ்சியிருக்கின்றன."

நான் அவரது பிராந்திப் புட்டியிலிருந்து கொஞ்சம் அவருக்கு ஊற்றிக் கொடுத்தேன். வுட்கிரப் தான் இன்னொரு பெண்ணை அழைத்து வருவதற்காகத்தான் ராணுவக் குடியிருப்புக்கு வந்ததாகவும் காலையிலிருந்து தன்னோடு இருந்தவளின் உடல் அப்போதுதான் உருவான களிமண் பானையைப் போலப் பிசுபிசுப்பேறி இருந்தது. தான் விரும்புவது, அலைகள் அடித்தும் சலனமில்லாமலிருக்கும் கடற்கரைப் பாறையைப் போல உறுதியான ஒருத்தியை, அது லேசில் கிடைப்பதில்லை என்றபடியே சோம்பல் முறித்துக்கொண்டு மெதுவாகச் சொன்னார்,

"காமம் அடிவானத்தைப் போல எப்போதும் தொலைவில் இருந்து நம்மை கவனித்துக்கொண்டே இருக்கிறது" என்றார்.

நான் முதன்முறையாக அவரது அறையில் சப்தமாகச் சிரித்தேன்.

"தாமஸ் நீங்கள் பைரன், வோர்ட்ஸ்வொர்த்துக்குப் போட்டியான கவியாக உருவாகிக்கொண்டிருக்கிறீர்கள். காமம் உங்கள் சொற்களைப் பதப்படுத்திவிட்டது. ஆனால் சிரிப்பை உங்களிடமிருந்து உருவி எடுத்துவிட்டது. கற்பனை உங்கள் தலை முழுவதும் கொந்தளித்துக் கொண்டிருக்கிறது. இவை வெறும் புகை மூட்டம். கொதிக்கின்ற தண்ணீர்தான் சப்தமிடும். மற்ற நேரங்களில் தண்ணீர் சலனமற்றது. நீங்கள் கொதிக்கத் தொடங்கியிருக்கிறீர்கள்."

அவர் என் சிரிப்பை வெறுப்பவரைப் போலச் சொன்னார்,

"இருக்கலாம். ஆனால் நான் நண்டுகள் கடல் மணலில் குழி பறித்துப் பதுங்கிக்கொண்டிருப்பது போலக் காமத்துக்குள்ளாகவே பதுங்கியிருக்க விரும்புகிறேன் "

பின் இருவரும் பேசிக்கொள்ளவே இல்லை. வுட்கிரப் நீண்ட பெருமூச்சிட்டபடியே சொன்னார்,

"நீ சொன்னது உண்மையாக இருக்கக் கூடுமென்ற சந்தேகம் துவிஜாவுக்கும் வந்திருக்கிறது. அவள் மிகவும் பயந்திருக்கிறாள். நீ அவளிடமிருந்த வசீகரத்தை ஒடுக்கிவிட்டாய். இப்போது போய்ப் பார் அவளை. விளக்கின் எரிந்த திரியைப் போல. விரல் தொட

முடியாத பிசுக்கேறியிருக்கிறாள்."

இருவரும் பெருமூச்சிட்டுக்கொண்டோம். அந்த அறையில் இருப்பது மன நெருக்கடியை அதிகப்படுத்துவதாக இருந்தது. எழுந்து வாசலுக்கு வந்து கதவைத் திறந்துகொண்டு நின்று கொண்டேன். வுட்கிரப் மெதுவாகக் கண்களை மூடியபடி சுழல் நாற்காலியில் சுற்றிக் கொண்டிருந்தார். நான் அவரிடம் சொல்லிக் கொள்ளாமலே அலிப்பூரின் தெருக்களில் நடக்கத் தொடங்கினேன்.

இந்த இரவில், இந்த நகரில் எத்தனையாயிரம் கலவி முடிந்திருக்கும்? ஆணும் பெண்ணும் ஒரு உடலை மற்றவர் தொடுகின்றனர், ருசிக்கின்றனர். ஆனால் ஒருவரும் மற்றவரின் உடலோடு கரைந்துபோக முடிவதில்லை. உப்பு தண்ணீரில் கரைந்துவிடுவது போல ஒரு காமம் எதிலோ கரைந்துவிடுகிறது. எத்தனையாயிரம் வருடங்கள் எத்தனையாயிரம் மனிதர்கள் இச்சையால் பீடிக்கப்பட்டிருக்கிறார்கள். ஏன் ஒருவன்கூட அதன் முகத்திரையை விலக்கி முகத்தை நேராகக் காண முடிந்ததே இல்லை. தாகத்தால் உந்தப்பட்டவன் தண்ணீர் குடித்ததும் தாகம் அடங்கிவிடுவது போலத்தான் காமத்தையும் அறிந்து வைத்திருக்கிறோம். உண்மையில் தாகம் தண்ணீரால் அடங்கிவிடுகிறது. ஆனால் அது உருவானது தண்ணீரை வேண்டித் தானா? காமம் இருட்டுக்குள் ஆழமாகப் புதையுண்டிருக்கிறது. அது தன் உடலை முற்றாக வெளியே காட்டியதேயில்லை. மினுங்கும் கண்களையோ, பற்களையோ, விரல் நகரங்களையோ மட்டும்தான் நாம் பார்த்திருக்கிறோம். இப்படியாக எதையோ யோசித்துக்கொண்டே நான் எனது இருப்பிடத்துக்குத் திரும்பி வந்தேன். அதிகாலையில் பெண்கள் விழித்துக்கொண்டு வீட்டில் அங்குமிங்கும் நடந்துகொண்டி ருந்தார்கள். எனக்கு அவர்கள் யாவரும் வெறு நிழல்கள் போலத்தானி ருந்தார்கள் அறைக்குள் பிரவேசித்த பிறகு அவர்கள் எப்போதோ சொன்ன கேலிச் சொற்கள் சிரிப்பைத் தூண்டின. நான் படுக்கையை விரித்துப் போட்டபடியே சிரித்துக்கொண்டிருந்தேன். மறு நாளின் பகல் முழுவதும் உறங்கினேன். பின் மதிய நேரத்தில் குளிக்கும்போது முடிவு செய்துகொண்டேன்.

நான் காமத்தைக் கடந்துபோக விரும்புகிறேன். பெண்களைத் தவிர்ப்பதால் மட்டுமல்ல. காமத்தின் குகைக்குள் பிரவேசித்து வெளியேறிவிட விரும்புகிறேன் என்றபடியே அறையிலிருந்த எனது பொருள்களைப் பயணத்துக்காகக் கட்டி ஆயத்தமானேன். இரவில் மியானின் வீட்டிலிருந்த குழந்தைகளுக்குக் கொஞ்சம் பாலில் செய்த இனிப்பும் விளையாட்டுப் பொருள்களும் வாங்கிக்கொண்டு சென்று கொடுத்துவிட்டு அவரது காலில் விழுந்து ஆசி வாங்கிக்கொண்டேன். குடியிருப்பில் இருந்த பெண்கள் ஒவ்வொருவராகத் தேடிப் போய் இனிப்பும், சிறிய மண் பொம்மை ஒன்றையும் பரிசாகக் கொடுத்துப் பேசினேன். அநேகமாக எல்லாப் பெண்களும் என்னோடு இணக்க மாகப் பேசினார்கள். காதில் வண்டு நுழைந்து சிகிச்சை செய்த

பெண் மட்டும் நான் திருமணம் செய்துகொள்வேனா மாட்டேனா என்று கேட்டாள். தசரதனைப் போல தினமும் ஒரு திருமணம் செய்துகொள்ள ஆசையாக இருக்கிறது என்றேன். அவள், அப்படி நடக்கும்போது மணப்பெண்கள் குறைவாக இருந்தால் சொல்லி யனுப்பும்படியாகவும், தங்கள் வீட்டிலிருந்து ஒன்றிரண்டு பெண்களை அனுப்பி வைப்பதாகவும் சொன்னாள். அலிப்பூரில் இருந்து ஊருக்குத் திரும்பி வருவதற்காக ரயிலில் புறப்பட்டேன். வழி முழுவதும் இத்தனை வருடமாகக் கற்றிருந்த மருத்துவம் நினைவிலிருக்கிறதா என்று சந்தேகமாக வந்தது. வைத்திய முறைகளையும் நோயாளிகளிடம் அவதானிக்க வேண்டிய முகக் குறிகளையும் மனதில் புரட்டிக் கொண்டே வந்தேன். ஊர் வந்து சேர்ந்த இரண்டு நாள்களில் எனது தாயார் எனது திருமணப் பேச்சைத் திரும்பவும் தொடங்கியிருந் தார்கள். நான் வைத்தியச் சாலையைத் தொடங்கப் போவதாகவும், அதில் வெற்றி கிடைக்கும் வரைக்கும் கல்யாணக் காரியங்களில் இஷ்டமில்லை என்றேன். என் தாயாருக்கு இந்தப் பதில் கவலையை உண்டாக்கியிருக்கக்கூடும். அவர்கள் என்னிடம் இதைப் பற்றித் திரும்பப் பேசவேயில்லை.

ஆனால் இது ஒரு நாடகம். உண்மையில் நான் திருமணம் செய்துகொண்டால் மற்றவர்களைப் போலவே காமம் என்னை வீழ்த்திவிடும். பிறகு நானும் வம்ச விருத்தியைத்தான் இச்சை என்று முடிவு செய்துவிடுவேன் என்று தோன்றிக் கொண்டிருந்தது. வைத்தியச் சாலையை எங்கே தொடங்குவது என்று திட்டமிடுவதற்காக நகரில் சுற்றிக்கொண்டிருந்தேன். டிராமில் தற்செயலாக ஒரு ஆளைக் கவனித்தேன். அவருக்கு அறுபது வயதைக் கடந்திருக்கும். கழுத்தில் மாலை மாலையாக ருத்ராட்சங்கள் போட்டிருந்தார். ஆனால் அதற்குச் சற்றும் பொருந்தாதபடி கையில் ஒரு பெண்ணின் படத்தைப் பச்சை குத்தியிருந்தார். அழுக்கடைந்து போன வேஷ்டியும், கையில் நாய்களை விரட்டும் குச்சியும் வைத்திருந்தார். ஆனால் முகத்தில் சந்தோஷம் பீறிட்டுக்கொண்டிருந்தது. அவர் என்னைக் கவனித்தபடியே வந்தார். திடீரென அவர் தன் கைகளை என்னிடம் நீட்டி நாடி பிடித்துப் பாருங்கள் என்றார்.

நான் மருத்துவர் என்று எப்படித் தெரிந்துகொண்டார் என்ற வியப்போடு அவரது கையைப் பிடித்துப் பார்த்தேன். நாடி மிக வேகமாகத் துள்ளிக்கொண்டிருந்தது. உடலில் உஷ்ணம் பொங்கிக் கொண்டிருந்தது. அவர் தன் கையை உதறிக்கொண்டு மறுமுறை நாடி பார்க்கச் சொன்னார். இப்போது கையில் நாடி மிக மெதுவாக ஊர்ந்துகொண்டிருந்தது. உடலின் குளிர்ந்த நீரைப் போல ஒரு ஜில்லிப்பு இருந்தது. அவர் சப்தமாகச் சிரித்தபடியே சொன்னார், “எல்லாம் தாது பலம்.” நான் முகத்தில் அறைபட்டது போல அவரை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

அவர் பிராட்வேயில் இறங்கிக்கொண்டபோது நானும் அவசரமாக

இறங்கிக் கொண்டேன். அவர் மிக மெதுவாகச் சாலையில் நடந்து போய்க்கொண்டிருந்தார். நான் பின்தொடர்ந்தபடி வேகமாக அருகில் போய் அவரிடம் கேட்டேன்,

"நீங்கள் பிரம்மச்சாரியா?"

அவர் இதைக் கேட்டதும் பெருஞ்சிரிப்புடன், "இப்போது எங்கே போகிறேன் என்று நீ தெரிந்துகொண்டவுடன் இந்த நித்ய பிரம்மச் சாரியைப் புரிந்துகொள்வாய்" என்றார். பிறகு பழக்கமான மனிதரைப் போலக் கைகளைப் பிடித்துக்கொண்டார். இருவரும் குறுகிய தெருக் களைக் கடந்து தாழ்வான கூரையிடப்பட்ட ஒரு வீட்டின் முன் நின்றோம். அவர் சப்தமாகக் கதவைத் தட்டினார். வீட்டுக்குள்ளிருந்து ஒரு பெண் வெளிப்பட்டாள். அவளுக்கு நாற்பது வயதைக் கடந்திருக் கும். முகம் நிறைய மஞ்சள் பூசியிருந்தாள். சிறிய கைகளில் வளையல்கள் நிறைய அடுக்கியிருந்தன.

அவள் என்னோடு வந்தவரைப் பார்த்துச் சிரித்தபடியே "இப்போ போயி வந்திருக்கீங்க" என்றாள். அவர் கையை வீசி அவள் முதுகில் செல்லமாக ஒரு அடி கொடுத்தபடியே "நான் எங்க வந்தேன், வர வைக்குது" என்றபடியே தனது வேஷ்டியைக் கழட்டி அருகில் இருந்த கொடியில் போட்டுவிட்டுச் சிறிய அரை டிராயருடன் உட்கார்ந்துகொண்டார். நான் குழப்பத்துடன் அவரிடம் நான் புறப்படுவதாகச் சொன்னேன். அவர் சாவகாசமாகச் சொன்னார்,

"உன் உடம்பில் இச்சை கனன்றுகொண்டிருக்கிறது. காமத்தை நீ அவமதித்துக்கொண்டிருக்கிறாய்."

"அப்படியெல்லாமில்லை. நான் ஒரு வைத்தியர்" என்றேன்.

அவரோ "காமாலை கண்டவனை, கண்ணைப் பார்த்தே தெரிந்து கொண்டுவிடலாம். போ போய்க் கல்யாணம் செய்துகொள்" என்றார்.

"எனக்கு இன்னொரு உடலோடு இணைந்து என் காமம் தீர்ந்து போவது விருப்பமாக இல்லை" என்றேன். அவர் சபாஷ் என்று இரண்டு கைகளையும் தட்டிக்கொண்டு உள்ளிருந்த பெண்ணைக் கூப்பிட்டார். அவள் இருவருக்கும் வெந்தயமிட்ட மோரைக் கொண்டு வந்தாள்.

"அப்பாரு என்ன சொல்றானு கேட்டயா, பொம்பளை இல்லாமலே சுகத்தைப் பறிச்சிப்போடப் போறாராம்."

அந்தப் பெண் சிரித்தபடியே சொன்னாள்,

"ஏன் நீங்க ஒரு ஆளு இப்படிப் பித்துப் புடிச்சி திரியுறது போதாது, இன்னொரு ஆளை எங்கே பிடிச்சீங்க."

அவர் மோரை ஒரே வாயில் ஊற்றிக் குடித்தபடியே வாயைத் துடைத்துக்கொண்டு சொன்னார்,

"தானா வர்றாரு. நான் எங்கே கூப்பிட்டேன். ஒரு நாயி

ஒண்ணுக்குப் போனா உடனே மத்த நாய்களும் காலைத் தூக்கிரும் கவனிச்சிருக்கியா, அப்படித்தான்."

அவள் சிரித்தபடியே உள்ளே போய்விட்டாள். நான் அவரை விட்டு உடனே வெளியேறிப் போய்விட வேண்டும் என்று நினைத்தேன். அப்போது அவர் குரல் சற்றே மாற்றமடைந்தது போல் இருந்தது. முகத்தை இறுக்கமாக்கிக்கொண்டு சொன்னார்,

"அந்தா உள்ளே இருக்காளே அவ கூட பொறந்த மேனியா படுத்துக்கிட்டு இந்தப் புத்தகத்தைப் படிச்சி முடிக்கணும்... செய்வியா."

நான் தயங்கினேன். அவர் கேலியான குரலில் "பொஸ்தகம் படிக்கத் தெரியுமில்லையா" என்றார். எனக்கென்னவோ அவரது பாதையில் நான் போவது சரியானதாக இருக்கும் என்றே தோணியது. மறுநாள் வருவதாகச் சொல்லியபடி வீட்டுக்குச் சென்றேன். வீட்டில் இரவில் நிர்வாணமாகக் கையில் ஒரு புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு வாசிக்க முயன்றேன். உடலில் இருந்து மனம் புத்தகத்துக்கு நகர மறுத்தது. எவ்வளவோ முயன்றும் மனம் புத்தகத்தில் கூடவே யில்லை. ஆத்திரமாக வந்தது. நான் அவரைச் சந்திக்கக் கூடாது என்பதற்காகவே சில நாள்கள் டிராமில் பயணம் செய்யாமல் சைக்கிளில் நகரைச் சுற்றிக்கொண்டிருந்தேன்.

பிச்சுப்பிள்ளைத் தெருவில் ஒரு இடம் கிடைப்பதாகவும் அந்தப் பகுதியில் வைத்தியர்களே இல்லை என்றும் டப்பா செட்டிக் கடையில் சொன்னார்கள். நான் இடத்தைப் பார்த்தபோது தெருவி லிருந்து ஒதுங்கியிருப்பதாக இருந்தது. எல்லாவற்றையும் மறந்துவிட்டு நோயாளிகள், வைத்திய முறைகள் என்று மாறிவிட வேண்டியதுதான் என்று சில மாதங்களைக் கடத்திக்கொண்டிருந்தேன். ஒரு நாள் மாலையில் எனது நோயாளிகளின் வரிசையில் அந்த ருத்ராட்சமணிந்த வர் உட்கார்ந்திருந்தார். அவர் என்னைப் பார்ப்பதற்காகத்தான் காத்திருக்கிறார் என்று தெரிந்ததும், மனத்துக்குள் கொஞ்சம் நடுக்க முண்டானது. ஆனால் அவர் வரிசையில் காத்திருந்து என்னைப் பார்க்க வந்தபோது தெரிந்தவரைப் போல ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை.

தனது காலில் சிவப்பாக ஒரு மினுமினுப்பு தெரிவதாகச் சொல்லிய படி என்னை அறியாத மனிதரைப் போலவே பேசினார் நான் அவருக்கு வைத்தியம் செய்தபடியே அன்று அவரது வீட்டுக்கு வருவதாகச் சொல்லிவிட்டு வராமல் போனதற்கு வருத்தப்படுவதாகச் சொன்னேன். அவர் சிரித்தபடியே, "பரவாயில்லை திருமணம் செய்துகொண்டுவிட்டீர்கள் இல்லையா" என்று கேட்டார். நான் அதில் விருப்பமில்லை என்றேன். அவர், அப்படியானால் எதுக்கும் ஒரு நாள் அந்த வீட்டுக்கு வாருங்கள். அங்கே நான் இல்லாவிட்டால் கூட அந்தப் பெண் இருப்பாள். உங்களுக்கு அவளைத் தெரியும்தானே... நீங்கள் பொஸ்தகம்தானே படிக்கப்போகிறீர்கள். அவசியம் வந்து போங்கள் என்றபடி சிகிச்சைக்கான பணத்தைத் தந்தபடி வெளியேறிப்

போனார்.

அன்றிரவு நான் மிகு காமத்தால் உந்தப்பட்டேன். கீரைப் பாத்திகளில் ஒரே இரவில் கீரைகள் முளைவிட்டு நிரம்பியிருப்பதைப் போல ஒற்றை இரவில் காமம் உச்சியைப் பற்றிக்கொண்டுவிட்டது. மறுநாள் முழுவதும் ரத்தம் தலைகீழாக ஓடிக்கொண்டிருப்பது போன்ற உணர்ச்சி உண்டானது. மாலை, வைத்தியச் சாலைக்குப் போவதற்குப் பதிலாக அந்தப் பெண்ணின் வீட்டுக்குப் போனேன். அவள் அன்றைக்குப் பார்த்ததைவிடவும், இப்போது அதிகப் பொலிவோடு இருந்தாள்.

மெல்லிய உமியால் ஆன படுக்கையை விரித்திருந்தாள். நான் உடைகளைக் களைந்தபடி அருகில் படுத்துக்கொண்டு கையில் கொண்டுபோயிருந்த பிரபந்த மாலையை வாசிக்கத் தொடங்கினேன். அவள் உடல் அருகாமையிலிருப்பதையே என்னால் தாள முடியவில்லை. நான் கண்களைப் புத்தக வரிகளில் மிதக்க விடுவது சிரமமாயிருந்தது. புத்தகத்தை மூடி வைத்துவிட்டுக் கண்களை இறுக்கமாக மூடிக் கொண்டேன். அவள் இதைக் கண்டு சிரித்திருக்கக் கூடும். நான் துவிஜாவின் இரண்டாவது நாபியைப் பற்றி இவளிடம் பேசலாம் என்று முடிவு செய்தபடியே அதைப் பற்றி விவரிக்கத் தொடங்கினேன். அவள் ஒரு கதையைக் கேட்பது போல ஆர்வமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள். பிறகு அவள் சொன்னாள்,

"இதில் நீங்கள் ஆச்சரியப்பட்டதில் எதுவுமில்லை. நான் பலமுறை என் உடலில் இப்படித் தோன்றி மறைவதைக் கண்டிருக்கிறேன். தண்ணீரில் உதிர்ந்துபோகும் பூப் போல அது உடலில் எங்கு வேண்டுமானாலும் சுற்றிக்கொண்டிருக்கும். நீங்கள் சொல்வது சாத்தியம்தானே" என்றாள்.

திரும்பவும் குழப்பமாக இருந்தது. அப்படியானால் காமம், அலைகள் தண்ணீரின் மீது தோன்றுவது போல உடலின் மீது தோன்றி அடங்கிவிடுவதுதானா? மூலஸ்தானம் கிடையாதா? நான் அவளது உடலைத் தொட்டுப் பார்க்கலாமா என்று கேட்டேன். அவள் சிரித்தபடியே கேட்டாள், "பொஸ்தகம் படிக்க முடியலையா?"

சற்றே கோபத்துடன் எழுந்து எனது ஆடைகளை அணிந்து கொண்டு வேகவேகமாக வைத்தியச் சாலைக்குத் திரும்பினேன். ஜட்கா தெருவின் முனையில் நுழையும்போது தெருவில் வீணை வாசிப்பது கேட்டது. அது என் இச்சையைப் பல மடங்கு அதிகப் படுத்திவிட்டது போல் இருந்தது. இரவு அன்று வீட்டுக்குப் போகவே யில்லை. வைத்தியச் சாலையிலேயே படுத்திருந்தேன். நிலைகொள்ள முடியாதபடி உடல் துவண்டிருந்தது.

உடல் என்னதான் வேண்டுகிறது. ஏன் இப்படி இச்சை அலைக் கழிக்கிறது குழப்பமாக இருந்தது. வீட்டுக்குக் காலையில் திரும்பிப் போனபோது அம்மா பயந்துபோயிருந்தாள். என் இரு கைகளையும் பிடித்துக்கொண்டு எப்படியாவது திருமணத்துக்கு சம்மதித்துவிடும்படி

கேட்டுக்கொண்டாள். அந்த நிமிடத்தில் ஒப்புக் கொண்டுவிட்டேன். ஆனால் இரண்டு நாள்களில் மனம் பழைய கதிக்கே சென்றுவிட்டது. அம்மாவிடம் கடுமையாகச் சண்டையிட்டு கல்யாணத்தை நிறுத்தி விட்டேன்.

திரும்பவும் அலிப்பூருக்கே சென்றுவிடலாம் என்று கூடத்தோணி யது. பிறகு நானாகத் தேடி பிராட்வேயிலிருந்த பெண்ணின் வீட்டுக்குப் போகத் தொடங்கினேன். என்னை அழைத்துக்கொண்டுபோன மனிதர் எங்கே போய்விட்டார் என்று அந்தப் பெண்ணிடம் ஒரு முறை கேட்டேன். அவள் சிரித்தபடியே அவருக்குப் பிள்ளை குட்டிகள் இருக்கின்றன, எங்காவது அச்சகத்தில் வேலை செய்துகொண்டிருப்பார் என்றாள்.

ஒவ்வொரு நாளும் இச்சையின் பிளந்த நாவுகள் என்னைத் தீண்டி விஷமேற்றிக்கொண்டிருந்தன. காமம் பயமாகவும் ருசியாகவும் ஒரே நேரத்தில் வளரத் தொடங்கியது. பின் இரவில் நான் நகரின் வீதிகளில் முற்றிய காமத்துடன் அலைந்துகொண்டிருக்கிறேன். ஏதோ வொரு பயத்தால் இருளில் காசை விட்டெறிகிறேன். உடலில் நிழல் ஒளிந்திருப்பது போல காமம் என் கூடவே ஒளிந்திருக்கிறது. நான் அதை முழுமையாகப் பார்க்க முடியாது. இருளில் நிழல் மறைத்துவிடுவது போல காமமும் ஒடுங்கிவிடுகிறது.

எனது எண்ணங்கள் யாவும் இச்சையால் பீடிக்கப்பட்டுவிட்டன. எனக்கு இப்போதும் ஒரு சந்தேகமிருக்கிறது. என் உடலில்கூட இன்னொரு நாபியிருக்கக்கூடுமா? காமம் ஒரு இருளில் ஒளிந்த மான், அதைக் குளம்படிச் சப்தத்தை வைத்து மட்டும்தான் வேட்டை யாட முடியும். ஒருவேளை அதன் பச்சை ஒளிரும் கண்கள் தெரியக் கூடும். நான் சோர்வும் வெறியுமாகக் காத்திருக்கிறேன். இரவு என்னை நோக்கி ஒவ்வொரு நாளும் தன் திரையை மூடுகிறது. நான் என் உடலைக் கிளை கிளையாக விரித்துக் கொண்டுவிட விரும்புகிறேன். அதற்கு என்னதான் வழியிருக்கிறது. மிகுந்த குழப்ப மாகவும் ஆசையாகவும் இருக்கிறது. உங்களால் யோசனை சொல்ல முடியுமா?

நூறு கழிப்பறைகள்

கழிப்பறை: ஒரு சுய குறிப்பு

நூறு கழிப்பறைகளுக்கு ஒப்பந்தக்காரராக இருந்த கரிக்கோல் ராஜனைப் பற்றி உங்களுக்குத் தெரியாது. நீங்கள் எப்போதாவது மதியம் மூன்று மணிக்கு சைதாப்பேட்டை மொபசல் பேருந்து நிறுத்தம் அருகில் உள்ள கட்டணக் கழிப்பறையில் மூத்திரம் பெய்துவிட்டு வெளியே வந்து தலை சீவிக்கொண்டபடி வலப்பக்கம் பார்த்திருப்பீர்களேயானால், வாசலில் உள்ள மரமேஜையில் அமர்ந்தபடி சில்லறைக் காசுகளை எண்ணிக் கொண்டிருப்பாரே அவர்தான் நான் சொல்லும் கரிக்கோல் ராஜன்.

கழிப்பறைக்கு வரும் நீங்கள் அதன் வாசலில் உட்கார்ந்திருப்பவரை உள்ளே நுழையும்போது கவனிக்காமல் இருக்கலாம். ஆனால் வெளியே வரும்போது நீங்கள் அனைவரும் கண்ணாடி பார்க்க எப்படித் தவறுவதில்லையோ அப்படி பெண்கள் கழிப்பறைப் பக்கம் கண்ணைத் திருப்புவதும் தவறுவதில்லை தானே.

அப்படி நீங்கள் பெண்கள் கழிப்பறையைப் பார்வையிடும்போது கரிக்கோல் ராஜனைப் பார்த்திருப்பீர்கள். அவர் உங்கள் நினைவில் தங்குமளவு வசீகரமானவர் இல்லை. அவருக்கு வயது நாற்பத்தைந்தாகிறது. ஏறின நெற்றி. பாதித் தலைமயிர் கொட்டி விட்டது. ஒரு ஹீரோ ஹோண்டா வைத்திருக்கிறார். சில்லறைக் காசுகளை அள்ளிப் போட்டுக்கொண்டு போவதற்காக ஒரு காக்கிப் பையை மடித்துக்கொண்டு வந்திருப்பார். அவரது முகத்தில் வலது தாடையை ஒட்டி ஒரு உலர்ந்த திராட்சைப் பழத்தைப் போல சுருங்கிய

ஒரு பால்பரு இருக்கிறது. ஒவ்வொரு முறை கழிப்பறைக்குள் நுழையும் போது அந்தப் பருவை பிளேடால் வெட்டி எடுத்துவிடலாம் என்பது போல அவர் பாதி உடைந்த பிளேடைக் கையில் எடுத்து வைத்துக்கொண்டு கண்ணாடியில் சில நிமிஷம் நின்று பார்ப்பதும் பிறகு தயக்கத்தோடு பிளேடைத் தூக்கி எறிந்துவிடுவதும் உங்களுக்குத் தெரியாது. அந்தப் பரு உண்மையில் அவருக்கு எதையோ நினைவு படுத்திக்கொண்டிருக்கிறது.

அதைப் பற்றிய ரகசியங்களைப் பகிர்ந்துகொள்வதற்கு நான் கொஞ்சம் குடிக்க வேண்டும். இரண்டு நாள்களுக்கு முன்பாகக் காலையில் ஒருவன் பத்து ரூபாயைக் கொடுத்து மூத்திரம் போய்விட்டு வெளியே வந்து சில்லறை வாங்கிக் கொள்ளாமல் போய்விடவே நாங்கள் (நானும் பெண்கள் கழிப்பறையின் கட்டண வசூலிப்பு செய்யும் நெட்டை கிட்ணாவும்) ஒரு பாக்கெட் சாராயத்தை வாங்கி பிளாஸ்டிக் டம்ளரில் விட்டு வெள்ளைப் பூண்டு ஊறுகாய் சகிதமாக அடித்துவிட்டு கரிக்கோலைப் பற்றிப் பேசி, பகல் முழுவதும் சிரித்துக்கொண்டிருந்தோம். அதனால் அது போன்ற சந்தர்ப்பங்களில் நீங்கள் எங்களது கழிப்பறைக்குள் நுழையும்போது இந்த ரகசியம் பற்றிய கேலிப் பேச்சுகளைக் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள்.

கரிக்கோல் ராஜன் எங்களின் எஜமான். நூறு கழிப்பறைகளுக்குச் சொந்தக்காரர். ஒவ்வொரு நாளும் அவர் இரவு வீடு திரும்பும்போது ஒரு ரூபாய் நாணயம் இரண்டு பையும் இரண்டு ரூபாய் ஐந்து ரூபாய் நாணயங்கள் சேர்ந்து ஒரு பையுமாகக் கொண்டுபோய் வீட்டில் உள்ள தரையில் கொட்டி எண்ணுவார். அவருக்கு இரண்டு மனைவிகள் என்று கேள்வி. இருவரும் ஒரே வீட்டில்தான் வசிக்கிறார் கள். அந்தப் பெண்களும் அவருமாகச் சில்லறைகளை எண்ணிச் சரிபார்ப்பார்கள். எண்ணி முடித்தபிறகு களைப்பு தீர ஆளுக்கொரு பீர் குடித்துக் கொள்வார்களாம்.

இந்தத் தகவலை என்னிடம் சொன்னவள் நெட்டை கிட்ணா. அவள் ஒரு நாள் பகல் நேரத்தில் கரிக்கோல் அண்ணனைப் பார்க்கப் போனபோது அவர் தன் வீட்டில் வைத்திருந்த இரண்டு சாக்கு காலி பீர்புட்டிகளையும் கடையில் போட்டுவிட்டு அந்தக் காசுக்கு ஜில்லென்று பீர் வாங்கிக்கொண்டு வரச் சொன்னதாகவும் அப்போது அவரது மூத்த மனைவி தனக்கு புல்லட் பீர் வேண்டும் என்று வலியுறுத்தியதாகவும் சொன்னாள். அதைச் சொல்லிவிட்டு கிட்ணாவே, பீர் குடிப்பதில் ஒன்றும் பிரயோசனமேயில்லை, மூத்திரம் தான் அதிகமாகப் போகும் என்றபடி என்னைப் பார்த்துச் சிரித்தபடி ரெண்டு லிட்டர் மூத்திரம் பெய்வார்கள் என்று கையால் ஜாடை காட்டிச் சிரித்தாள்.

கரிக்கோல் நூறு கழிப்பறைகளுக்கும் வண்டியில் சுற்றி வசூல் செய்துவர வேண்டும். அதனால் மதியம் சாப்பிட்டு முடித்த கையோடு தனது பைக்கை எடுத்துக்கொண்டு சைதாப்பேட்டையில் உள்ள

எங்களது கழிப்பறைக்கு வந்து வசூலைத் தொடங்குவார். விடுவிடு வெனக் கழிப்பறைக்குள் நுழைந்து உள்ளே மலம் கழிக்கும் ஆண்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்று கதவைத் தள்ளிப் பார்வையிடு வார். இதனால் விதவிதமான ஆண் உறுப்புகளைப் பார்த்த பெருமை அவருக்குண்டு. நூறு கழிப்பறையிலும் கதவுகளுக்குத் தாழ்ப்பாள் கிடையாது. அதை நாங்கள் சரிசெய்யமாட்டோம். சரியான தாழ்ப்பாள் இருந்தால் சிலர் மணிக்கணக்காக உள்ளேயே உட்கார்ந்துகொண்டு விடுவார்கள் என்றும் அதற்காகத் தாழ்ப்பாள்களை உருவி எடுத்து விடும்படியாகவும் மேலான யோசனையைச் சொன்னது கரிக்கோல் ராஜன்தான்.

இதைப் போலவே கழிப்பறைக்கு இரும்பு வாளிகள் புதிதாக வாங்கி வரும்போது நாங்கள் அதில் இரும்பு ஆணியால் ஓட்டை போட்டுவிடுவோம். அப்போதுதான் அதில் நிறைய தண்ணீர் பிடிக்க முடியாது. மேலும் தண்ணீர் ஒழுகி ஓடுவதற்குள் கால் கழுவிவிட வேண்டும் என்ற பயம் உண்டாகும் அல்லவா. ஆகவே அண்ணன் அவ்வப்போது இதுபோலச் சில யோசனைகளை நடைமுறைப்படுத்துவார். அவருக்குக் கழிப்பறையை நவீனப்படுத்த வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை உண்டு. ஜப்பானில் குழாயே தண்ணீரைப் பீய்ச்சியடித்து பிரெஷ்ஷால் துடைத்துக் கால் கழுவிவிடும் என்று மாலை பேப்பர் ஒன்றில் படித்ததில் இருந்து அதைத் தனது கழிப்பறைகளில் வாங்கிப் பொருத்திவிட வேண்டும் என்று மிகுந்த ஆசைப்பட்டுக்கொண்டிருந் தார். ஆனால் ஒப்பந்தக்காரர்கள் கழிப்பறைகளை நவீனப்படுத்த அரசு அனுமதியில்லை என்பதால் திட்டம் நடைமுறைப்படுத்தப் படாமல் போய்விட்டது.

கழிப்பறைக் கணக்கு வழக்குகளுக்கு என்று தனியே பற்றுவரவு சிட்டை இருந்தது. அதை ஒரு காலி சிகரெட் அட்டையில் எழுதி வைக்க வேண்டும். தினமும் காலையில் ஒரு பாக்கெட் கோபால் பல்பொடியும் ஒரு சாம்பிள் சோப்பும் ஒரு தேங்காய் எண்ணெய் பாக்கெட்டும் ஒரு பிளேடும் கழிப்பறையை உபயோகிப்பவர்களின் வசதிக்காக வாங்கிக்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தோம். வாரத்தில் ஒரு நாள் மட்டும்தான் இந்தப் பொருள்களை வாங்குவோம். மற்ற நாள்களில் கணக்கு மட்டும் எழுதித் தந்துவிடுவோம். இது ஒரு நடைமுறைத் தந்திரம்தான். வாரம் ஒரு முறை அவரே ஒரு திருநீறு பாக்கெட் மட்டும் வாங்கிக்கொண்டு வந்து தந்துவிடுவார். இத்தோடு தினமும் மூன்று டீக்குடித்துக் கொள்வதற்கும் ஒரு பாக்கெட் பீடி வாங்கிக் கொள்வதற்கும்கூட சலுகை வழங்கியிருக்கிறார்.

மூத்திரம் பெய்வதற்கு ஒரு ரூபாய் கட்டணம், மலம் கழிப்பதற்கு இரண்டு ரூபாய் கட்டணம். இந்தக் கட்டணங்களுக்கு நாங்கள் தருவது வெறும் ஐம்பது பைசா ரசீது மட்டுமே. எப்போதாவது ரசீது தராமல் போய்விட்டால் கூச்சல் போடுவதற்கு எத்தனையோ பயணிகள் இருக்கிறார்கள். அவர்கள் வங்கியில் அடமானம் வைத்த

நகைச்சீட்டைப் பாதுகாப்பது போல அத்தனை கவனமாக இந்தக் கழிப்பறைக் கட்டண ரசீதை வாங்கிப் படித்துப் பார்த்து சட்டைப் பைக்குள் மடித்து வைத்துக்கொண்டு போவார்கள் கழிப்பறை உலகம் எங்களுக்கு மிக வேடிக்கையாகவும் கலகலப்பூட்டும் நாடகம் போலவும் இருந்து கொண்டிருக்கிறது.

ஒரு சம்பவம்

நேற்று அதிகாலை இரண்டு பெரிய சூட்கேஸ்களோடு ஆட்டோவில் வந்து இறங்கிய ஒரு நபரும் அவரது மனைவியும் ஒன்றாகக் கழிப்பறைக்கு வந்திருந்தார்கள். கிட்ணா அப்போது டீ குடிப்பதற்காக மூன்லைட் போயிருந்ததால் நான் உட்கார்ந்து காசை வசூல் செய்து கொண்டிருந்தேன். அந்தப் பெண் குண்டாகவும் நெளி நெளியான சேலை கட்டியவளாகவும் இருந்தாள். கையில் ஒரு செல்போனை வைத்துக்கொண்டு உரத்த சப்தத்தில் பேசிக் கொண்டிருந்தாள். இரண்டு பேரும் வீட்டிலிருந்து வெகு சீக்கிரமாகக் கிளம்பி வந்திருக்க வேண்டும். அந்த நபர் பெரிய தொந்தியும் கறுப்புப் பேண்டும் அணிந்தவராக இருந்தார். டீ சர்ட்டை மீறித் தொந்தி வெளியே சரிந்துகொண்டிருந்தது. அவர் பாக்கெட்டில் இருந்த சில்லறைகளைத் தேடிக் கொடுத்து மூத்திரம் பெய்யச் செல்வதற்கு நுழையும்போது அந்தப் பெண் தனது செல்போனைத் தந்து தாமோதரன் பேசுறார், பேசுங்க என்று சொன்னாள்.

அந்த நபருக்கு மூத்திரத்தை அடக்க முடியவில்லை. அவர் கஷ்டப்பட்டுக் கொண்டு போனில் ஏதோ ஒரு நிலத்தினை விலைபேசி விற்பது தொடர்பாக செண்ட் என்ன விலை என்று பேசிக்கொண்டிருந் தார். மூத்திரம் அடங்காமல் வெளியேறிக் கசிந்து பேண்டை நனைத்து விட்டது. போனை அவளிடம் கொடுத்துவிட்டு உள்ளே ஓடி ஜிப்பை அவிழ்ப்பதற்குள் மூத்திரம் பீச்சியடித்து சுவர் முழுவதையும் ஈரமாக்கி விட்டார்.

அந்தப் பெண்ணோ என்னிடம் காசு தர மறுத்ததோடு பெண்களை ஏன் கழிப்பறை வசூலுக்கு உட்கார வைப்பதில்லை என்று கோபித்துக் கொண்டவளாக போனில் பேசியபடியே உள்ளே போனாள். உள்ளே எல்லாக் கழிப்பறைகளிலும் ஆள் இருப்பதாகக் கோபித்துக்கொண்டு நிலைக்கண்ணாடியைப் பார்த்தபடி போன் பேசிக்கொண்டிருந்தாள். மூத்திரத்தில் பேண்ட் நனைந்து போன மனிதர் அதைத் துடைப்பதாக மொத்த பேண்டையும் ஈரமாக்கிவிட்டிருந்தார்.

யாரோ ஒரு பெண் வாளியில் தண்ணீரை மோந்து ஊற்றும் சப்தம் கேட்டதுமே அவள் வேகமாக அந்தக் கழிப்பறை முன் போய் நின்றுகொண்டுவிட்டாள் சில நிமிஷங்களுக்குப் பிறகு உள்ளிருந்து தனது கணவரின் பெயரைச் சொல்லி, “தனபாலு. தனபாலு” என்று கூப்பிட்டாள். அந்த ஆள் எந்த யோசனையும் இன்றி, பெண்கள் கழிப்பறைக்குள் நுழைந்து எட்டிப் பார்த்தபோது

சேலையைத் தூக்கிப் பிடித்தபடி அவள் தனது செல்போன் கழிப்பறைக் குள் விழுந்துவிட்டதாகக் கத்திக்கொண்டிருந்தாள்.

தனபால் எப்படி செல்போன் உள்ளே விழுந்தது என்பதைப் பற்றிய குழப்பத்துடன் நிறைய கேள்விகள் கேட்டுக்கொண்டிருந்தார். மேஜையில் உட்கார்ந்திருந்த என்னிடம் செல்போன் கழிப்பறைக் குழிக்குள் விழுந்துவிட்டது என்றும் அதை வெளியே எடுத்துத் தர வேண்டும் என்றும் கத்தினாள். நான் விசில் அடித்தபடியே உள்ளே நடந்தபோது நாலைந்து பெண்கள் கழிப்பறையை உபயோகப் படுத்திக்கொண்டிருந்தார்கள். நான் அந்தப் பெண் காட்டிய கதவைத் திறந்து பார்த்தபடி நின்றேன். அவள் அந்த செல்போனின் விலை ஏழாயிரம் ரூபாய் என்று கத்திக்கொண்டிருந்தாள்.

நான் என்னையறியாமல், "வாழ்க்கை என்பது வியாபாரம். அதில் ஜனனம் என்பது வரவாகும், மரணம் என்பது செலவாகும். போனால் போகட்டும் போடா..." என்ற பாடலை விசில் அடிக்கத் தொடங் கினேன். அவள் இந்த செல்போனுக்கு உரிய தொகை தராவிட்டால் எங்கள் மீது வழக்கு தொடுக்கப் போவதாகச் சொன்னாள்.

இதற்குள் கிட்ணா வந்துவிட்டாள். அவள் அந்தப் பெண்ணிடம், "என்னம்மா" என்று அக்கறையாக விசாரிக்கத் தொடங்கினாள். குண்டான பெண்ணோ, ஆத்திரத்தில் "ச்சீ.. நாயே. போடி... பெரிசா கேட்க வந்துட்டே" என்று கோபப்பட்டதும் கிட்ணா ஆத்திரமாகி, "என்னடி கஸ்மாலம், எங்கே மேஞ்சுட்டு வந்து இங்கே க்ளீன் பண்ணிகினு போக வந்திருக்கே" என்றாள். எனக்கு கிட்ணா வைப் போல இங்கிலீஸைக் கலந்து பேசுவதற்குத் தெரியாது. ஆனால் அவள் பேசும்போது கேட்க மிக சுகமாக இருக்கும்.

அந்தப் பெண்ணும் கிட்ணாவும் மாறி மாறி வசைகளால் சண்டை போட்டார்கள். கிட்ணா கடைசியில் ஒரு வலுவான பிடியைப் பிடித்தாள்.

"உள்ளே போயி ஒரு கூடை கழிஞ்சுட்டு வந்துட்டு காசு குடுக்காமப் போனா இதை உன் மாமனாரா கட்டி வச்சிருக்கான். கவுர்மெண்ட்ல டிண்டர் வுட்டு லட்ச ரூபாய்க்கு எடுத்த கக்கூஸ் இது தெரியுமா?"

அந்தப் பெண் காசு தர முடியாது என்று மறுத்துச் சண்டையிடவே கிட்ணா அவளது சூட்கேஸைப் பிடுங்கி வைத்துக்கொண்டுவிட்டாள். அந்த நபர் மூத்திரத்தில் நனைந்துபோன பேண்டை வெயிலில் காயவைத்தபடி சூரியனைப் பார்த்து நின்றுகொண்டிருந்தான். அந்தப் பெண் சாலையில் போக்குவரத்தை சரிசெய்து கொண்டிருந்த போலீஸ்காரரைக் கூட்டிக் கொண்டு வந்துவிட்டாள். போலீஸ்காரன் மிடுக்காகப் பெண்கள் கழிப்பறைக்குள் நுழைந்து அதனை நோட்டம் விட்டான்.

கழிப்பறைச் சுவரில் கரியால் எழுதப்பட்டிருந்த 'வின்சென்ட், நீ ஒம்போது' என்ற வாசகத்தை சுவரின் அருகில் நெருங்கிப் போய்ப்

பார்த்தபடி, செல்போன் விழுந்துவிட்ட இடத்தைப் பார்வையிட்டு முடித்துவிட்டு, "இதைப் பற்றிப் புகார் கொடுக்க விரும்பினால் தடாண்டா நகர் ஸ்டேஷனில்தான் கொடுக்க வேண்டும்" என்று சொல்லிவிட்டு வெளியே வந்து கண்ணாடியில் தலை சீவியபடி கிட்ணாவிடம் கஸ்டமர்கிட்டே வீணா தகராறு பண்ணாதே என்று எச்சரித்துவிட்டு அந்தப் பெண்ணையும் கணவரையும் உடனே கிளம்பிப் போகச் செய்தார்.

கிட்ணா அவர் தலைமறைவதற்கு முன்பாகவே, "கஸ்டமராம் கஸ்டமர். நாறக் கழுதே" என்று திட்டினாள். அன்றைக்கு நானும் கிட்ணாவும் பகல் முழுவதும் நடந்த சம்பவத்தைச் சொல்லிச் சிரித்துக்கொண்டிருந்தோம். கிட்ணா அந்தப் பெண் எப்படி அந்த செல்போனை எடுக்க முயற்சி செய்திருப்பாள் என்று ஜாடை காட்டி நடித்துக்கொண்டிருந்தாள். எனக்குச் சிரித்து சிரித்து வயிறு வலித்துவிட்டது.

அன்று மதியம் வசூலுக்கு வந்த கரிக்கோல் அண்ணன்கூட அந்தக் கழிப்பறையைப் பார்வையிட்டு ஒரு கம்பியை விட்டு செல்போனை வெளியே எடுத்துவிடலாம் என்றும் இரவில் இரண்டு ஆளைக் கூட்டிக்கொண்டு வருவதாகவும் சொன்னார். வழக்கம் போல வசூல் ஆன காசில் முப்பது ரூபாய் எங்கள் இருவருக்கும் சேர்த்துத் தருவதற்குப் பதிலாக, அன்று ஐம்பது ரூபாய் தந்துவிட்டுப் போனார் கரிக்கோல். கிட்ணா அதைப் பிடுங்கி வைத்துக்கொண்டு தான் ஒரு சீட்டு கட்டி அதில் ஒரு கலர் டி.வி. வாங்கப்போவதாகச் சொன்னாள்.

சம்பவத்துக்குச் சற்று முன்னால்..

கழிப்பறைக்கு தினமும் பதினோரு மணிக்கு வரும் சம்பத் சொன்ன ஒரு கணக்கு இது.

சராசரியாக ஒரு நாளைக்கு சென்னைக்குள் ஆறரை லட்சம் பேர் வந்து சேர்கிறார்கள். இவர்கள் ஆளுக்கு அரை லிட்டர் மூத்திரம் பெய்தால்கூட அதன் மொத்த அளவு மூணரை லட்சம் லிட்டர். கிட்டத்தட்ட ஒரு குளம் நிரம்பிவிடும். இவர்கள் ஆளுக்கு ஒரு திசையில் இருந்து சென்னை வருகிறார்கள். இதனால் நகரில் இடைவிடாமல் எல்லா திசையிலும் மூத்திரம் பெய்து கொண்டேயிருக் கிறது. விமானத்தில் போகின்றவர்கள், நம் தலைக்கு மேலாக மூத்திரம் பெய்கிறார்கள். ரயில் ஓடிக்கொண்டே மூத்திரம் பெய்கிறது. இப்படி ஊரை மூத்திரத்தால் நாறடிக்கிறார்கள். இதிலிருந்து நாம் தப்பவே முடியாது. நகரமே ஒரு மாபெரும் மூத்திரச் சந்துதான்.

சம்பத் பதினோரு மணிக்குத்தான் பல் தேய்க்கிறான். அதுவும் இந்தக் கழிப்பறைக்கு வந்துதான். அவன் பற்கள் மிக மஞ்சளாக இருக்கின்றன. அவன் கண்ணாடியைப் பார்த்துக்கொண்டு தன்னைத்

தானே கெட்ட வார்த்தைகளால் திட்டிக்கொண்டிருப்பான். சில நேரங்களில் திருநீற்றை அள்ளி நெற்றி நிறைய பூசிக்கொண்டு என்னிடம், “படிச்சு ஒரு பிரயோசனமும் கிடையாது. என்கிட்டே ஒரு யோசனை இருக்கு. நடமாடும் கழிப்பறை ஒண்ணு ஆரம்பிக்க லாம்னு நினைக்கிறேன். நீயும் நானும் சேர்ந்து செய்வமா?” என்பான். நான் பதில் சொல்லாமல் சிரித்துக் கொண்டிருப்பேன். கொஞ்ச நேரம் அவன் “கரிக்கோல் ராஜன் ஒரு களவாணிப் பயல். பஸ் ஸ்டாண்டில் இறங்குபவர்களின் மூத்திரத்தை உறிஞ்சி காசு சம்பாதிக் கிறான்” என்று திட்டுவான். பிறகு அவனாக ஒரு பீடியைப் பற்ற வைத்துக்கொண்டு “அம்மம்மா தம்பி என்று நம்பி அவள் உன்னை வளர்த்தாள்” என்று ராஜபார்ட் ரங்கதுரை படப் பாடலைப் பாடுவான்.

அதுபோன்ற தத்துவப் பாடலைப் பாடி முடித்துவிட்டு வெளியே வந்து உச்சியில் இருக்கும் சூரியனைக் கும்பிட்டுக்கொள்வான். பிறகு அமைதியாக கிட்ணாவிடம் “ஒச்சக்கையோடு ஒருத்தி சால்னா கடை வைத்திருக்கிறாளே. அவள் உன் சகோதரியா” என்று கேட்பான். (இதைத் தினமும் எதற்குக் கேட்கிறான் என்று தெரியாது. கிட்ணாவும் சலிக்காமல் தினமும் அவள் தன்னுடைய தங்கை இல்லை என்று சொல்லுவாள்) பிறகு மெதுவாகத் தனது டிராயர் பாக்கெட்டில் இருந்து தூளை எடுத்துக் கையில் வைத்து விரல் ரேகைகள் அழிந்து போகுமளவு நசுக்கிப் பூ ப்பூ என்று ஊதுவான். மெதுவாக அதை ஒரு சிகரெட்டில் அடைத்துப் புகைக்கத் தொடங்கு வான்.

இனி அடுத்த நாள் காலையில்தான் அவன் பேசுவான். இடையில் எப்போதாவது அடக்க முடியாமல் சிரிப்பான். சம்பத் ஒரு நாள் கூட இந்தக் கழிப்பறையை உபயோகப்படுத்தியதே இல்லை என்பது தான் எனக்கு அவனிடம் பிடித்த விஷயம். அவனைப் பற்றி கிட்ணா ஒரு நாள் சொன்னாள். அவனது அம்மா ஒரு டீச்சராம். அப்பா, விவசாய ஆபிஸில் வேலை செய்கிறாராம். இவன் பத்தாம் வகுப்பு பெயிலானதும் அவனது அப்பா ஒரு வெல்டிங் கடையில் சேர்த்துவிட்டாராம். அந்த ஆத்திரத்தில்தான் தூளுக்குப் பழகி விட்டானாம். முன்பெல்லாம் தூளைப் புகைத்துவிட்டு சப்தமாக அழுதுகொண்டிருப்பானாம். பிறகு எப்படியோ... அது மாறி இப்போது சிரிக்கிறான் என்றாள்.

கிட்ணா எதற்காக இதையெல்லாம் விசாரித்து வைத்திருக்கிறாள் என்று தெரியவில்லை. ஆனால் அவள் எதையும் பார்த்தவுடனே சொல்லிவிடக்கூடியவள். நேற்றுகூட ஒரு பஸ்ஸில் உட்கார்ந்திருந்த ஆளின் முகத்தைப் பார்த்தே இவனுக்கு வயிற்றுக் கடுப்பு இருக்கு. இப்போ வருவான் பாரு என்று சிரித்தாள். பேருந்து புறப்படும் சமயம் அந்த ஆள் இறங்கி ஓடி, கழிப்பறைக்கு ஓடி வந்தான். கிட்ணா அதைக் கண்டு நமுட்டுச் சிரிப்பு சிரித்துக்கொண்டாள்.

கிட்ணாவைப் பற்றி ஒரேயொரு ரகசியம் உங்களுக்கு மட்டும் சொல்லிக் கொள்கிறேன். அவளை மூன்று பேர் காதலிக்கிறார்கள். அவளும் அந்த மூன்று பேரையும் காதலிக்கிறாள்.

சம்பவம் நடந்த இரவு

எம்.80—ல் வந்த இருவரும் ஆளுக்கொரு குறடு போல ஒன்று வைத்திருந்தார்கள். பதினோரு மணிக்கு நாங்கள் கழிப்பறையை மூடிவிடுவது வழக்கம். அன்றைக்குப் பத்தரை மணிக்கே அவர்கள் இருவரும் வந்துவிட்டார்கள். நானும் கிட்ணாவும் அவர்களோடு சேர்ந்துகொண்டு பெண்கள் பகுதிக்குள் நுழைந்தோம். அவர்கள் தங்கள் கையில் வைத்திருந்த குறடைப் பயன்படுத்தி, செல்போனைத் தேடத் தொடங்கினார்கள். அது இந்நேரம் ஆழத்துக்குள் போயிருக்கும் என்றாள் கிட்ணா. போன வருடம் ஒரு பெண்ணின் மோதிரம் விழுந்ததையே தாங்கள் எடுத்துவிட்டதாகவும் இதைக் கட்டாயம் எடுத்துவிடலாம் என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். இதற்காக அவர்கள் ஒரு நீண்ட ஒயரை எடுத்து வந்து அதில் ஒரு நாற்பது வாட்ஸ் பல்பை மாட்டிக்கொண்டு வேலை செய்யத் தொடங்கினார்கள்.

கரிக்கோல் ராஜன் தனது பைக்கில் வந்து வெளியே நிறுத்திவிட்டு, “உள்ளே செல்போனு கிடைச்சிருச்சா” என்று கேட்டபடி வந்தார். அவர்கள் வேலை செய்து கொண்டிருந்தார்கள். வேஷ்டியை தூக்கி விட்டுக்கொண்டு ஈரமான கழிப்பறையின் தரையில் உட்கார்ந்துகொண்டார் கரிக்கோல் ராஜன். கிட்ணா வேடிக்கையாக, “இலை போட்டுச் சாப்பிடுகிற மாதிரி உட்கார்ந்துட்டீங்க” என்றாள். அவர் சிரித்துக் கொண்டே, “நானே ஒரு செல்லு வாங்கணும்னு நினைச்சுகிட்டு இருந்தேன். அது இன்னைக்கு நம்ம கையில வந்து தானா விழுந்துருச்சு. எப்படி எடுக்கிறோம் பாரு” என்றார்

நான் வாசலில் உட்கார்ந்தபடியே வெளிச்சோடிய சாலையைப் பார்த்துக்கொண்டிருந்தேன். கிட்ணாவும் அருகில் வந்து உட்கார்ந்து கொண்டவளாக என்னிடம் ரகசியமான குரலில் கேட்டாள்,

“நீ ஆரையாச்சும் லவ் பண்றயா?”

நான் இல்லை என்று தலையாட்டினேன். அவள் மக்காச் சோளம் விற்கும் மேகலாவை வேண்டுமானால் அவன் லவ் பண்ணிக் கொள்ளலாம் என்றும் அந்தப் பகுதியில் அவள் கொஞ்சம் டீசண்டு என்றாள். நான் அந்த மக்காச்சோளம் விற்பவளைப் பார்த்திருக்கிறேன். ஆள் ஒடிசலாக இருப்பாள். வெளிறிப்போன நீலநிறச் சுடிதாரை அணிந்திருப்பாள். சில நேரம் அவள் மூத்திரம் பெய்வதற்கு வரும்போது கிட்டத்தில் பார்த்திருக்கிறேன். தோல் எண்ணெய்ப் பசையில்லாமல் உலர்ந்துபோயிருக்கும்.

கிட்ணாவிடம், அவள் பேரு மேகலாவா என்று கேட்டேன்.

கிட்ணா அவளைப் பழக்கடைக்கார சிவராமன் லவ் பண்ணியதாகவும் ரெண்டு பேரும் நேஷனல் தியேட்டரில் படம் பார்க்கப் போனபோது சிவராமன் மப்பு ஓவராகி அவள் சுடிதார் முழுவதும் வாந்தியெடுத்து விட்டான். அதனால் அவள் சிவராமனை அப்படியே நாற்காலியில் இருந்து கீழே தள்ளிவிட்டு விட்டு வந்துவிட்டதாகவும் இது நடந்ததில் இருந்து அவள் லவ் பெயிலியர் ஆனவளாகக் கவலையோடு இருக் கிறாள்.

பிறகு ஏதோ யோசனை செய்தவளைப் போல உன்னை மாதிரி நல்ல ஆளு லவ் பண்ணினா அவள் சந்தோஷமாக இருப்பாள் என்றாள். எனக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. பிறகு கிட்ணாவே சொன்னாள்,

“நீ வேணாம்னு சொல்லிட்டா நம்ம சம்பத்தைக் கேட்கலாம்னு நினைச்சேன். தூளு போடுறதைத் தவிர ஆளு தங்கம்.”

நாங்கள் பேசிக்கொண்டிருந்தபோது கரிக்கோல் அண்ணன் தனது வேஷ்டியைக் கழற்றித் தண்ணீர்க் குழாயின் மீது போட்டுவிட்டு பனியனுடன் அவர்களோடு சேர்ந்து வேலை செய்துகொண்டிருந்தார். கிட்ணா எழுந்துபோய் எல்லோரும் சாப்பிடுவதற்கு பன்பட்டர் ஜாம் வாங்கிக்கொண்டு வந்தாள். செல்போன் தேடிக் கொண்டிருந்த வர்கள் தங்கள் குறடுகளை அப்படியே விட்டுவிட்டு வந்து பன்பட்டர் ஜாமைச் சாப்பிட்டார்கள். பருத்த தொப்பையும் கழுத்தில் கிடந்த புலிநகச் செயினும் இடுப்பில் இருந்த பெரிய பெல்ட்டுமாக கரிக்கோல் ராஜன் பன்னை மென்றுகொண்டிருந்தார்.

கிட்ணா கேலியாக, “வீட்ல உள்ள பொம்பளைகளுக்கு மட்டும் தான் பீரு வாங்கித் தருவீங்களாக்கும் எங்களுக்குக் கிடையாதா” என்று கேட்டாள். அவர் ஜாமை நக்கியபடி, “செல்போனு மட்டும் கிடைச்சிரட்டும். உனக்கு பீரு என்ன புல்பாட்டில் வாங்கித் தர்றேன்” என்றார்.

நானும் கிட்ணாவும் டீக்கடைக்குச் சில்லறை கொடுப்பதற்காக நடந்து சென்றோம். கடைக்காரன் “என்ன வேலை நடக்குது” என்று கேட்டுக்கொண்டிருந்தான். கிட்ணா சிரிக்காமல் “கக்கூசுக்கு ஈயம் பூசிகிட்டு இருக்கோம்” என்றாள். டீ மாஸ்டர் எங்களைப் பார்த்து ஆதங்கத்துடன் சொன்னான்,

“உட்கார்ந்த இடத்திலே உங்களுக்குக் காசு வந்து விழுது. இங்கே பாரு. அடுப்பிலே வெந்து சாகுறேன். நாள் சம்பளம் அறுபது ரூபா உங்கக் குடுப்பினை யாருக்கு இருக்கு.”

நாங்கள் இருவரும் கழிப்பறைக்குத் திரும்பியபோது செல்போனை வெளியே எடுத்திருந்தார்கள். பைப்பைத் திறந்துவிட்டு கரிக்கோல் கழுவிக்கொண்டிருந்தார். பாதி தேய்ந்துபோயிருந்த சோப்பால் செல்போனை நன்றாகக் கழுவி சுத்தப்படுத்தினார். பிறகு அந்த போனை தனது வேஷ்டியில் துடைத்துக்கொண்டு திருநீற்றைக்

கையில் எடுத்துப் பளபளப்பாக உருவேற்றிக்கொண்டிருந்தார். பிறகு முகர்ந்து பார்த்துவிட்டு போனில் ஏதோ ஒரு எண்ணை அமுக்கினார். விளக்கு எரியத் தொடங்கி டெலிபோன் போன்ற சித்திரம் வந்தது. அவர் உற்சாகமாகி ஹலோ ஹலோ என்று சப்தமிட்டுக்கொண்டிருந்தார்.

செல்போனை கிட்ணா ஆசையாக வாங்கிப் பார்த்துக் கொண்டாள். குறடுகளைக் கொண்டு வந்தவர்கள் நூறு ரூபாய் பணம் வாங்கிக் கொண்டு போய்விட்டார்கள். கரிக்கோல் மிகுந்த சந்தோஷத்துடன் போனைத் தனது சட்டைப் பையில் போட்டபடி என்னிடம் சொன்னார், "லைட் எல்லாவற்றையும் அணைத்துவிட்டுப் படுத்துக்கோ. காலையிலே நாலு மணிக்கெல்லாம் திறந்திரணும், தூங்கிராதே."

நான் தலையாட்டிக்கொண்டேன். அவர் தனது பைக்கில் புறப்பட்டுப் போன பிறகு கிட்ணா வீட்டுக்குப் போகாமல் படிக்கட்டில் உட்கார்ந்துகொண்டு கேட்டாள்,

"ஊருக்குப் போக மாட்டயா... உங்க வீட்ல உன்னைத் தேட மாட்டாங்களா."

நான் பதில் பேசாமல் சிரித்துக்கொண்டேன். சில நிமிஷங்களுக்குப் பிறகு சோன்பப்டி விற்கும் ஒருவன் தனது பெட்ரோமாக்ஸ் லைட் பொருத்திய வண்டியோடு அவர்களை நோக்கி வந்து தனது மணியை ஆட்டிச் சப்தமிட்டான். கிட்ணா எழுந்துகொண்டு அவனோடு தான் வீட்டுக்குக் கிளம்புவதாகச் சொன்னாள். இருவரும் சாலையில் தனியே போவதைப் பார்த்துக்கொண்டிருந்தேன். இவன் கிட்ணாவின் புதிய காதலன் என்று அப்போதுதான் எனக்குத் தெரிய வந்திருந்தது. கழிப்பறையின் வாசற்கதவின் குறுக்கே மேஜையை இழுத்துப் போட்டு விட்டு நான் பேப்பரை விரித்துப் போட்டுப் படுத்துக் கொண்டேன்.

சாலையில் செல்லும் ஒன்றிரண்டு பேருந்துகளைத் தவிர ஆள் நடமாட்டமேயில்லை. நான் ஒரு பீடியைப் பற்ற வைத்துக்கொண்டு காலை ஆட்டியபடி யோசித்துக்கொண்டிருந்தேன். கிட்ணாவின் கேள்வி நினைவுக்கு வந்தது. என்னை வீட்டில் தேடுவார்களா என்ன? நான் சென்னைக்கு வந்து பதினோரு வருடங்களாகிறது. இது நான் பார்க்கும் எட்டாவது வேலை. எதற்காக சென்னைக்கு வந்தேன். என்னைப் பற்றி நானே கதை சொல்லிக்கொள்வதற்கு எனக்குப் பிடிக்காது. ஆகவே அதை நான் உங்களுக்குச் சொல்லவே மாட்டேன்.

கிட்ணாவின் சில காதல் கதைகள்

கிட்ணாவுக்கு வயது முப்பது இருக்கும். அவள் பெயர் கிருஷ்ண வேணி. உயரமாக இருப்பதால் நெட்டைக் கிட்ணா என்று தோழிகள் கூப்பிட்டு அதுவே பேராகிவிட்டது. மிக உயரமாகவும் கட்டையான தலைமயிர் கொண்டவளாக இருந்தாள். அவளுக்கு இடது கையில்

ஆறு விரல்களிருந்தன. கைகால்களில் நரம்புகள் வெளித் தெரியும்படியாக புடைத்துக்கொண்டிருக்கும். தலை மயிரை அப்படியே சுருட்டி ஒரு ரப்பர் பேண்ட் போட்டிருப்பாள். கழுத்தில் சிறிய சிலுவை டாலர் தொங்கிக்கொண்டிருக்கும். அவளது இரண்டாவது காதலன் பெனி அவளுக்காக வேளாங்கன்னியிலிருந்து வாங்கி வந்தது என்று ஒரு முறை நான் கேட்காமலே அவள் சொன்னாள். எப்போதும் பச்சை நிறத்திலே பூக்கள் போட்ட சேலைதான் கட்டிக்கொண்டு வருவாள்.

கிட்ணா இதற்கு முன்பாக மாம்பலம் மருத்துவமனையில் துப்புரவுப் பணியாளராக வேலை செய்திருக்கிறாள். அங்கே ஒரு நாள் இருமல் மருந்தை பீர்பாட்டில் நிறைய ஊற்றி வீட்டுக்கு எடுத்துக்கொண்டு வந்தபோது டியூட்டி டாக்டரால் பிடிபட்டு வேலை போய்விட்டது. டாக்டருக்கு எதற்காக கிட்ணா ஒரு லிட்டர் அளவுள்ள பாட்டிலில் இருமல் மருந்து கொண்டு போனாள் என்பது மட்டும் புரியவேயில்லை.

அதற்குப் பிறகு அவள் பிளாசா சென்டரில் உள்ள கடைகளைத் துடைக்கும் பெண்ணாக வேலை செய்துகொண்டிருந்தாள். மார்பிள் தரையையும் துடைத்து எடுக்க வேண்டும். மூன்றாவது மாடியில் உள்ள சிட்பண்ட்ஸ் ஒன்றில் இருந்த இருபது வயது பையன் சடகோபன் அவளைக் காதலிக்கத் தொடங்கியிருந்தான். காதலின் அடையாளமாக தினமும் இரண்டு சமோசா வாங்கி வைத்திருப்பான். கிட்ணா அதைத் தின்றபடியே அவனைப் பார்த்துச் சிரித்துக்கொள்வாள். சடகோபன் நடுக்கத்துடன் ஒரு நாள் அவள் கையைப் பிடித்தபோது அவள் உறை வச்சிருக்கியா இல்லையா என்று கேட்டாள். அவன் என்ன உறை என்று புரியாமல் கேட்டதும் அவள் சப்தமாகச் சிரித்தபடி குழந்தைப் பையனா இருக்கியே என்று தலையைக் கோதிவிட்டுப் போய்விட்டாள்.

அவன் தன் காதலை அவமானப்படுத்திவிட்டதாக நினைத்துக் கொண்டு, அடுத்த நாள் காலை சடகோபன் தனது விலை உயர்ந்த பிரிண்டரைத் தண்ணீர் ஊற்றிக் கெடுத்துவிட்டாள் என்று கத்திக் கூப்பாடு போட்டு ஒரு நாடகமாடி அவளை வேலையில் இருந்து தூக்கிவிட்டான். இப்படி நாலைந்து வருடம் சுற்றியபிறகு அவள் வின்சென்ட் என்ற வீட்டுத் தரகனின் வழியாகத்தான் கரிக்கோலுக்கு அறிமுகம் ஆனாள்.

அன்றிலிருந்து இரண்டு வருடங்களாக இதே சைதாப்பேட்டை மொபசல் பஸ் நிறுத்தத்தின் முன் உள்ளே கழிப்பறையில்தான் வேலை செய்கிறாள். இங்கே வந்த பிறகுதான் அவளுக்கு நிறைய காதலிப்பதற்கு சந்தர்ப்பங்கள் கிடைத்தன. அநேகமாக வேலைக்கு வந்த சில நாள்களிலே ஒரு ஆள் டை எல்லாம் கட்டிக்கொண்டு நின்றுகொண்டிருந்தவன் கிட்ணாவைப் பார்த்துக் கொண்டே இருந்தான். கிட்ணாவும் அதைப் பார்த்துக்கொண்டுதான் இருந்தாள். ஆனால் அவள் அதைக் காட்டிக்கொள்ளவில்லை. அவன் ஒவ்வொரு

பஸ்ஸாகத் தவற விட்டுவிட்டு மெதுவாக அவள் அருகில் வந்து தீப்பெட்டி இருக்குமா என்று கேட்டான். அவள் தான் சிகரெட் பிடிப்பதை விட்டு ஒரு வருடமாகிவிட்டது என்று சொன்னாள்.

அவன் ஒரு ஐம்பது பைசாவைச் சுண்டிவிட்டபடி உள்ளே போய் கண்ணாடியில் தலை சீவினான். பிறகு வெளியே வந்து அவளிடம் கண்ணாடி மங்கலாக இருக்கிறது. அதைத் துடைப்பதற்கு ஒரு காகிதம் வேண்டும் என்று கேட்டான். அவள் மேஜை டிராயரைத் திறந்து கிழிந்து கிடந்த காகிதத்தை எடுத்துத் தந்தாள். அவன் அதை வாங்கிக்கொண்டு துடைப்பதற்காக உள்ளே போனவன் உயரம் எட்டவில்லை என்று அவளைக் கூப்பிட்டான். கிட்ணா எக்கிக் கண்ணாடியைத் துடைக்கும்போது புட்டத்தில் கை வைத்துத் தடவியபடி சினிமாவுக்குப் போகலாமா என்று கேட்டான். அவள் என்ன படத்துக்கு என்றாள். அவன் படம் பேரைச் சொல்லவில்லை.

இருவரும் விஜயா தியேட்டருக்குப் போனார்கள். பாதிப் படம் நடந்து கொண்டிருக்கும்போது அவளை தியேட்டரின் கழிப்பறைக்கு வரச்சொல்லிவிட்டு முன்னால் நடந்தான். தயங்கித் தயங்கி அவள் கழிப்பறைக்குள் போனாள். அன்று இரவு இருவரும் ஒன்றாக ரஹ்மத் பிரியாணி சாப்பிட பேமிலி ரூமுக்குள் நுழைந்தார்கள். அவன் ஊர் ஊராகச் சென்று வரும் மருந்து விற்பனைப் பிரதிநிதி என்று சொல்லியபடி ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக்கொண்டான். அவள் பிரியாணி சாப்பிட்ட கையை முகர்ந்து பார்த்தபடி, “நீ என்னய்ய லவ் பண்றயா” என்று கேட்டாள். அவன் தான் பிடித்துக் கொண்டிருந்த சிகரெட்டைத் தூக்கி எறிந்துவிட்டு வாய்விட்டுச் சிரித்தான்.

கிட்ணாவுக்கு ஆத்திரமாக வந்தது. “எதுக்குடா கஸ்மாலம் சிரிக்கிறே?” என்றாள். அவன் “போடி, எட்டணா கிராக்கி” என்று சொன்னான். அவளுக்கு வந்த ஆத்திரத்தில் அதற்கு முன்பு யாரையும் அப்படிக் கொச்சையாகத் திட்டியதேயில்லை. அத்தனை வசைகளையும் ஒன்று திரட்டி அவனைத் திட்டிக் கொண்டிருந்தாள். சர்வர் பயந்து போனவனாக கிட்ணாவை வெளியே தள்ளிக்கொண்டு போய்விட் டான். அவள் தியேட்டர் கழிப்பறையில் நடந்த விஷயங்களைப் பகிரங்கமாக வாசலில் நின்று கத்திக் கொண்டிருந்தாள்.

அதன் பிறகு சில காலம் அவள் படித்த எவனையும் தான் காதலிக்கக் கூடாது என்று நினைத்துக்கொண்டிருந்தாள். ஆனால் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் படிப்பதற்காக வந்திருந்த குட்டி என்னும் கணேசன் அவளைக் காதலிக்கத் தொடங்கினான். இதற் காகவே அவன் ஒரு நாளைக்கு ஆறு முறை அந்தக் கழிப்பறைக்கு வருவான். ஒரு நாள் அவன் கிட்ணாவிடம் தான் அவளைக் காதலிப்பதாகச் சொன்னான். கிட்ணா அதைத் தான் நம்பமாட்டேன் என்றாள். அதற்கு ஆதாரமாக ஒரு கிரீட்டிங்ஸ் கார்டை வாங்கிக் கொண்டுவந்திருந்தான். அதில் இரண்டு பெரிய உதடுகளும் ஒட்டிக்

கொண்டிருந்தன. உள்ளே ஒரேயொரு ரோஜாப்பூவின் போட்டோ இருந்தது. அவள் அந்த உதடுகளைக் கவனித்தபடியே உனக்கு வெள்ளைக்காரிகளைப் பிடிக்குமா என்று கேட்டாள். அவன் இங்கிலீஷ் படத்தில் நடிக்கும் வெள்ளைக்காரிகளைப் பிடிக்கும் என்றான். அவள் வாழ்த்து அட்டையை வாங்கிக்கொண்டதும் அவன் சிரித்துக் கொண்டே போய்விட்டான். மறுநாள் கிட்ணா தானே ஒரு காகிதத்தில் ஊதா நிறப் பேனாவில் நாலைந்து ரோஜாப்பூவைப் படம் வரைந்து அவனிடம் தந்துவிட்டு தானும் அவனைக் காதலிப்பதாகச் சொன்னாள்.

பிறகு ஒரு நாள் கணேசன் மதியத்தில் பூனை வருவது போல வந்து அவளுக்கு ஒரு சுடிதார் வாங்கி வந்திருப்பதாகச் சொல்லித் தந்தான். அப்போதே அதை, கழிப்பறைக்குள் போய் உடை மாற்றிக் கொண்டு வந்தாள். அவளது உயரத்துக்குப் பொருந்தாமல் முழங்கால் அளவே இருந்தது. ஆனாலும் அதை ஆசையாகப் போட்டுக்கொண்டு கண்ணாடி பார்த்துக்கொண்டிருந்தாள். அவளைவிட உயரம் குறை வாக இருந்ததால் அவளைக் கட்டிப் பிடித்து முத்தமிடுவது அவனுக்குச் சிரமமாக இருந்தது. முதுகை வளைத்துக்கொண்டு கிட்ணா அவனை முத்தமிட்டாள். அவன் வேண்டாவெறுப்போடு உதட்டை விலக்கி விட்டு கைகளால் அவள் உடலைத் தடவி ஏமாற்றம் அடைந்தவனைப் போல "உனக்கு எய்ட்ஸ் இருக்கா" என்று கேட்டான்.

கிட்ணா, "ஆமாம்" என்று கேலியாகச் சொன்னாள். அவன் தன் இறுக்கத்தைக் குறைத்து அவளை விட்டு விலகி நின்றான். பிறகு வேகமாக எதிர்க்கடைக்குப் போய் ஒரு பபிள் கம்மை வாங்கிமென்று வாயைச் சுத்தம் செய்வது போல வேகவேகமாக சூயிங்கத்தை மென்றுகொண்டிருந்தான். கிட்ணா அதைப் பார்த்துச் சிரித்துக்கொண்டிருந்தாள். இது நடந்த இரண்டு நாள்களுக்குப் பிறகு ஒரு நண்பனை அனுப்பி தான் வாங்கிக் கொடுத்த சுடிதாரைத் திரும்பி வேண்டும் என்று கேட்டு அனுப்பினான். அவள் அதைத் தரையைத் துடைப்பதற்குப் போட்டு விட்டோம் என்று சொல்லித் திட்டி அனுப்பினாள்.

இந்தக் காதல் தோல்விகளுக்குப் பிறகு அவளுக்கு தாளமுத்து, பெனி, நல்லுசாமி என்று மூன்று காதலர்கள் உருவானார்கள். மூவரும் திருணமாகி, குடும்பம் நடத்திக்கொண்டிருக்கும் நாற்பது வயதைக் கடந்தவர்கள். அவர்கள் சிறுவர்களைப் போல அவளை ஏமாற்றுவதில்லை. கழிப்பறைக்குள் அழைத்துப் போவதில்லை. பெனி எப்போதும் பீச்சுக்குக் கூட்டிப்போய்விடுவான். நல்லுசாமி நடேசன் பார்க்குக்கு அழைத்துக்கொண்டு போய் வாட்டர் டேங்க் பின்னால் உட்கார வைத்துக்கொண்டு பேசுவான். தாளமுத்து மட்டும் தன் பைக்கில் எங்காவது கேளம்பாக்கம் பக்கம் கூட்டிப் போய்விடுவான்.

தாங்கள் மூன்று பேரும் கிட்ணாவோடு பழகுகிறோம் என்று

மூவருக்குமே தெரியும். சில நேரம் அவள் பெனிக்காக தாளமுத்து விடமிருந்து ஆயிரம் ரெண்டாயிரம் கடன்கூட வாங்கித் தந்திருக் கிறாள்.

இப்போது இரண்டு நாள்களுக்கு முன்புதான் இந்த சோன்பப்டி விற்பவனின் பழக்கம் உருவானது. இரவு வீட்டுக்குத் திரும்பிப் போகும்போது அவன் சோன்பப்டியை விற்று முடித்துவிட்டு வெறும் ஆளாகத் தனது மூன்று சக்கர சைக்கிளில் திரும்பி வந்து கொண்டிருந் தான். கிட்ணா வேண்டும் என்றே அவனை நிறுத்தி சோன்பப்டி வேண்டும் என்று கேட்டாள். அவன் காலியாகி விட்டது என்று உதட்டைப் பிதுக்கினான். அவள் அப்படியானால் தன்னை அந்த வண்டியில் வைத்து ஒரு ரவுண்ட் அடிப்பானா என்று கேட்டாள். அதற்கு ஒப்புக்கொண்டான்.

சுற்றிவந்து இறக்கிவிடும்போது அவன், “உனக்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லையா?” என்று கேட்டான். கிட்ணா சிரித்துக்கொண்டே “ஏன் கட்டிக்கிடப் போறயா?” என்றாள். அவ்வளவுதான், மறுநாள் அவளது கழிப்பறைக்குக் கால் கிலோ அளவு சோன்பப்டி கொண்டு வந்து கொடுத்துவிட்டுப் போனான். கிட்ணா தனியாக ஆசை தீர அதைத் தின்றாள். மூன்றாவது நாளில் அவனையும் சேர்த்துக் காதலிக்கத் தொடங்கியிருக்கிறாள்.

கழிப்பறைகளின் கதாநாயகன்

கரிக்கோல் ராஜனுக்கு வீட்டில் வைத்த பெயர் செண்பக கரிக்கோல் ராஜன். மதுரை பைக்காரா பகுதியில் அவனது அப்பா முப்பது வருஷமாக ஒரு வெற்றிலைப் பாக்குக் கடை வைத்திருந்தார். வீட்டில் ஏழு பிள்ளைகள் அவன் ஒரு நாள் கடையில் சாமான் வாங்க வைத்திருந்த இருபது ரூபாயைத் தூக்கிக்கொண்டு மாநகரத்துக்குத் திருட்டு ரயில் ஏறி வந்தபோது அவனுக்குப் பதினாறு வயது நடந்துகொண்டிருந்தது. தாம்பரத்தில் வந்து இறங்கியதும் ஒரு பலசரக்குக் கடையில் வேலைக்குச் சேர்ந்துகொண்டான். அப்போது கிரெசின் தட்டுப்பாடான நேரம். அதைப் புரிந்துகொண்டவனைப் போல ரகசியமாகக் கடைக் கல்லாவில் இருந்து கொஞ்சம் காசை ஒதுக்கி ரேஷன் கடையில் பில் போடுபவனைப் பிடித்து தினம் பத்து லிட்டர் மண்ணெண்ணெய் வாங்கி விற்கத் தொடங்கினான். ஆனால் ஒரு நாள் ரேஷன் கடைக்காரன் மாட்டிக்கொண்டபோது இவனும் சேர்ந்து மாட்டிக்கொண்டான். போலீஸ் அடி உதையைச் சமாளித்து வெளியே வந்தபிறகு ஒரு நாள் தற்செயலாக கார்பரேஷன் கமிஷனரின் டிரைவரின் பழக்கம் கிடைத்தது. அப்போது கரிக்கோலுக்கு ஒரு யோசனை தோன்றியது. எப்போதெல்லாம் நேரம் கிடைக்கிறதோ, அப்போது கமிஷனர் காரில் தன்னை ஏற்றிக்கொண்டு தாம்பரம் பகுதியில் ஆங்காங்கே சுற்றிவர வேண்டும் என்றான். கரிக்கோல் நினைத்தது போலவே மெயின் பஜாரில் அவன் கமிஷனர் காரில்

இருந்து இறங்குவதைப் பலரும் பார்த்தார்கள். காருக்குள் கமிஷனர் இருப்பது போல வணக்கம் வைத்து பவ்வியமாகக் கதவைச் சாத்துவான் கரிக்கோல். அவனுக்கு செல்வாக்கு உருவாகத் தொடங்கியது.

காப்பரேஷனில் முடிய வேண்டிய வேலைகளைத் தான் செய்து தருவதாகக் காசு வசூல் செய்யத் தொடங்கினான். அப்படி கார்ப்ப ரேஷனில் உள்ள கீழ்மட்ட ஆள்களுடன் பழக்கமானது. ரிப்பன் பில்டிங்கைக் காட்டியே அவன் பணம் சம்பாதிக்கத் தொடங்கினான். அதிலும் அவனது துரதிருஷ்டம் போலீஸில் மாட்டிக்கொண்டு சம்பாதித்த அத்தனையும் வக்கீலுக்குக் கொடுக்க வேண்டியதாகியது. அதன்பிறகு தாம்பரத்தில் இருந்து இடம் மாறி சூளைமேட்டுக்கு வந்து சேர்ந்தான்.

ஒரு நம்பர் லாட்டரி கொஞ்ச நாள் தொழிலாக ஓடிக்கொண்டிருந் தது. அப்போது ஒரு நாள் பெரம்பூர் ரயில் நிலையம் டிராக்கில் மூத்திரம் பெய்துகொண்டிருந்த ஒரு வயசானவரை ரயில்வே போலீஸ் பிடித்து இழுத்துக்கொண்டு போவதைக் கண்டான். ரயில்வே டிராக்கில் மூத்திரம் பெய்தால் அபராதம் கட்ட வேண்டும் என்ற விஷயம் கேள்விப்பட்டதும் ஆச்சரியமாக இருந்தது. ரயிலில் பெய்யும் மூத்திரம் முழுவதும் ரயில்வே டிராக்கில்தான் ஓடுகிறது. அது தப்பில்லை. ஆனால் டிராக்கில் யாராவது நின்று மூத்திரம் பெய்தால் மட்டும் தவறு என்பது அவனுக்கு ஒரு வழியைக் காட்டியது.

இரண்டு மாதங்கள் அலைந்து திரிந்து முதலில் இரண்டு கழிப்பறை களை காண்டிராக்ட் எடுத்துக்கொண்டான். இரண்டும் பேருந்து நிலையங்களிலே இருந்தன. அதிலிருந்து தொடங்கி இன்று நகரில் கரிக்கோலிடம் நூறு கழிப்பறைகள் இருக்கின்றன. கரிக்கோல் நாளுக்கு அறுபத்தி ரெண்டாயிரத்து நானூற்றுப் பதினெட்டு ரூபாய் சம்பாதிக் கிறான். அவனது தொழிலை விருத்தி செய்வதற்காகத் தனியார் திரையரங்குகளிலும் அரசு அலுவலகங்களிலும் உள்ள கழிப்பறை களைத் தனக்கு காண்டிராக்ட் தந்தால் நிறைய பணம் கிடைக்கும் என்று முயற்சி செய்து அதில் வெற்றியும் பெற்றிருக்கிறான். நகரில் முக்கிய திரையரங்கு ஒன்று அவனது கைவசமாகியிருக்கிறது. அவன் ஒரு நாள் குடிவெறியில் ஒவ்வொரு சொட்டு மூத்திரத்தையும் காசாக்கிவிடுவேன் என்று உளறியதைக் கேட்டு அவன் இரண்டு மனைவிகளும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

நான் எனும் பச்சையப்பன்

மாநகரக் கழிப்பறைகளுக்கும் எனக்கும் பத்து வருடப் பகைமை இருந்ததால்தானோ என்னவோ இன்று இந்தக் கட்டணக் கழிப்பறையில் காசு வசூல் செய்பவனாக வேலை செய்துகொண்டிருக்கிறேன். நகரத்துக்கு நான் வந்த நாள் முதல் எனக்கு ஏற்பட்ட நெருக்கடி மூத்திரம் பெய்வதுதான். இதற்காக சில நாள்கள் டிக்கெட் எடுக்காமல் மின்சார ரயிலில் பயணம் செய்து மறைமலை நகர் ரயில் நிலையத்தில்

இறங்கிக் காலார நடந்து மூத்திரம் பெய்துவிட்டுத் திரும்புவேன். மூத்திரப்பை காலியானபோது மனத்தில் இதுவரை இருந்த சுமை குறைந்தது போல எடையற்றுப் போவதாக உணர்வேன். சில வேளை களில் மூத்திரம் பெய்வதைக் காற்றடித்து சிதறடிக்கும்போது வேடிக்கை யாக இருக்கும். இதற்காகவே உயரமான இடங்களில் நின்றுகொண்டு மூத்திரம் பெய்வேன்.

இந்தப் பழக்கம் எனக்கு நகரத்துக்கு வந்தது முதல் ஒரு நெருக்கடியை உருவாக்கிக்கொண்டிருந்தது. நான் ஊரில் இருப்பதற்குப் பிடிக்காமல் சென்னை வந்து சேர்ந்தவன். இங்கே என்ன பிடித்திருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் வந்த நாள் முதல் நான் சந்திக்கும் அதீத நெருக்கடி கழிப்பறைதான். குறிப்பாக நான் தங்கியிருந்த நண்பர்களின் அறையில் காலை ஆறு மணிக்குப் பிறகு கழிப்பாறையை உபயோகிக்கத் தண்ணீர் இருக்காது. இதற்காகப் பின்னிரவில் எழுந்து மலம் கழித்துவிட்டு உறங்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தார்கள் நண்பர்கள். நான் இதனால் குடலை இறுக்கிக்கொண்டு படுத்துக் கிடப்பேன். சில நாள்கள் இப்படியிருந்து வயிறு வீங்கிப் போயிருக்கிறது. இதற்காக சம்பந்தம் இல்லாத பஸ்ஸில் ஏறி ஏதாவது இடிந்த கட்டடங்களின் பின்புறத்தில் நாய் மலம் கழிப்பது போல நின்ற நிலையில் கழித்துவிட்டுத் திரும்பும் கதி நேர்ந்திருக்கிறது.

ஒரு நாள் மாமண்டூர் அருகே உள்ள ஒரு சாலையோர உணவகம் ஒன்றில் ஓர் இரவு பேருந்தில் இருந்து இறங்கி நின்றுகொண்டிருந்தேன். பின்னிரவு நேரமது. தூக்கம் கலையாத ஒருவர் இருட்டுக்குள் நின்றபடி மூத்திரம் பெய்துகொண்டிருந்தார். அறுபது வயதை மதிக்கத்தக்க ஒரு பெண் அந்த ஆளின் பின்னால் வந்து குச்சியால் புட்டத்தோடு ஓர் அடி கொடுத்து சட்டையைப் பிடித்து இழுத்து வந்து ஆபாசமாகத் திட்டினாள். அவர் பாதி மூத்திரத்தில் நின்றபடி, பதற்றத்துடன் எங்கே போவது என்று தெரியாமல் நின்றார். அந்தப் பெண் காட்டிய திசையில் போவதற்குள் மூத்திரம் முட்டிக்கொண்டு வரவே, வேக வேகமாக நடந்து ஒரு கல்லில் எகிறி கழிவுநீர் போலக் கட்டிக்கிடக்கும் மூத்திரக் குளத்துக்குள் விழுந்தார். அவரது உடல் முழுவதும் நாற்றமும் கழிவும் அப்பிக் கொண்டது. அந்த நபரை இரண்டு ஹோட்டல் ஊழியர்கள் தூக்கி வந்து உட்கார வைத்தார்கள். நாற்றம் தாங்க முடியவில்லை. அவர் பயமும் நடுக்கமு மாகத் தன் கைகளைத் தானே நுகர்ந்து கொண்டிருந்தார்.

என்னால் அந்த இடத்தில் நிற்கவே முடியவில்லை. இரவு உணவகங் கள் யாவும் பெரிய மூத்திரக் கிடங்குகளாகத் தோன்றின. பேருந்தில் ஏறிப் பயணம் செய்யாமல், சாலையில் எதையோ புலம்பியபடி நடந்து போனேன். ஆனால் அதன் பிறகு இரவில் பயணம் செய்வதற்கே எனக்கு பயமாகிவிட்டிருந்தது.

கரிக்கோலிடம் இந்த வேலைக்காக என்னை சிபாரிசு செய்த வீட்டுத் தரகர் வின்சென்ட் சொன்ன ஒரே விஷயம்...

"தம்பி, காசு கொடுக்காமல் தங்குற இடம் கிடைச்சிருது. குளிக்கற துக்கு ஒண்ணுக்கு ரெண்டுக்குப் போறதுக்கு இடமாவும் ஆச்சு. தினம் முப்பது ரூபாய் சம்பளமும் கிடைக்கும். என்ன சொல்கிறீர்கள்?"

அன்றிலிருந்துதான் இந்த வேலைக்குச் சேர்ந்துகொண்டேன். எனக்கு ஆரம்ப நாள்களில் என்ன இது மனிதர்கள் காலையில் இருந்து மூத்திரம் பெய்துகொண்டேயிருக்கிறார்களே என்று ஆத்திரமாக வந்தது. கிட்ணாதான் இந்த வாழ்க்கையை ருசிப்பதற்குக் கற்றுத்தரத் தொடங்கினாள். ஒரு நாள் நான், சம்பத், கிட்ணா மூவரும் ஒன்றாக நாகேஷ் தியேட்டருக்குப் போய்ப் படம் பார்த்துக்கொண்டிருந்தபோது சம்பத் சொன்னான்,

"படத்தில் வர்ற எந்த நடிகை நடிகருக்கும் மூத்திரமே வராது. இவங்களெல்லாம் கடவுள் மாதிரி. ஒண்ணுக்கு இருக்க வேண்டிய வேலையே கிடையாது."

கிட்ணா வாய்விட்டுச் சிரித்தாள். அவன் சொன்ன விதம் எனக்கு ரொம்பவும் பிடித்திருந்தது. அன்றிலிருந்து நானும் கிட்ணாவும் இதே கழிப்பறையின் காசு வசூல் செய்பவர்களாக சந்தோஷமாக வேலை செய்துகொண்டிருக்கிறோம்.

சம்பவம் மறந்த பிறகு...

அன்று கிட்ணா சொன்னதைப் பற்றி நானும்கூடச் சில நாள்களா கவே யோசித்துப் பார்த்தேன். சும்மா இருப்பதைவிடவும் காதலிக் கலாம்தானே. கிட்ணாவிடம் சொல்லி அந்த மக்காச் சோளக்காரியிடம் பேசச் சொல்ல வேண்டியதுதான். சந்திப்பதற்கும் முத்தமிடுவதற்கும் புணர்வதற்கும்தான் கழிப்பறையிருக்கிறதே. எதற்கும் அவளைக் காதலிக்கத் தொடங்கும் முன்பு இந்த ரசம் போன கண்ணாடியை மாற்றிவிட வேண்டும். ஒருவேளை அந்த மக்காச்சோளக்காரி முகம் பார்ப்பதாக இருந்தால் இதில் அசிங்கமாக இருக்கும். செல்போன் கிடைத்த இந்த சந்தோஷத் தருணத்தை விட்டால் வேறு நேரங்களில் புதுக் கண்ணாடி வாங்கி மாட்டும் வாய்ப்பு கிடைக்காமல் போய்விடும்.

அதே... பைக் சப்தம் கேட்கிறது. டிராயரில் கிடந்த சில்லறைகளை வரிசையாக எண்ணி மேஜையில் அடுக்கி வைத்திருக்கிறேன். கிட்ணா வைக் காணவில்லை. ஒருவேளை அவள் மக்காச்சோளக்காரியிடம் பேசிக்கொண்டிருக்கக்கூடும்.

நகரில் உள்ள நூறு கழிப்பறைகளிலும் மூத்திரம் வழிந்தோடிக் கொண்டிருக்கிறது. கரிக்கோல் பைக்கை நிறுத்திவிட்டு, உற்சாகமாக யாருடனோ செல்போனில் பேசியபடி நடந்து வந்துகொண்டிருந்தார். என் மேஜையில் கிடந்த சில்லறைகளை உருட்டி விளையாடிக் கொண்டிருக்கிறது வெயில்.

கற்குகை

1989-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தின் இரண்டாவது ஞாயிற்றுக் கிழமை காலையில் நடாசுமி சுசூகி என்னும் இயற்கையியலாளர் எடுத்த. என்னும் புகைப்படக் கண்காட்சியைக் காண்பதற்காக அலியான்சே பிரான்சேக்குச் சென்றபோது என் வாழ்வு வெகுதூரம் அலைக்கழிக்கப்படப் போகிறது என்பது அப்போது தெரியவேயில்லை. நடாசுமி நம் பாதையோரங்களில் காணும் புழுதி படிந்த கற்களை, நம் காலில் இடறி மிதிபடும் சிறு கற்களைத்தான் புகைப்படமெடுத்திருக்கிறார். அப்புகைப் படத்தில் சிறியதும் பெரியதுமான கற்கள் வாய்விட்டுச் சிரித்துக் கொண்டிருந்தன.

அந்தப் புகைப்படக் கண்காட்சியைப் பார்த்த போது நான் இதுவரை பாத்திராத ஓர் அதிசயமான பொருளைக் காண்பது போலக் கற்களைப் பார்த்துக் கொண்டிருந்தேன். கல் என்பது இந்த நிமிஷம் கனிந்து மரத்திலிருந்து உதிர்ந்து கிடக்கும் பழம் என்றே தோணியது. சுவரில் இரண்டு வரிசையாக மாட்டப்பட்டிருந்த முப்பத்திரெண்டு புகைப்படங்களையும் எவ்வளவு நேரம் பார்த்துக்கொண்டிருந்தேன் என்று எனக்கே தெரியவில்லை. சாலையில் கிடந்த ரோமானிய நாணயத்தை எதிர்பாராமல் கண்டெடுத்ததைப் போலப் புகைப்படங்களை வியப்போடும் மிகுந்த சந்தோஷத்துடனும் பார்த்துக் கொண்டிருந்தேன்.

பார்க்கப் பார்க்க விந்தையாக இருந்தது. ஒரு கல்லாக இருப்பது எத்தனை மர்மமானது. வசீகர

மானது. கல்லுக்கு உள்புறமும் வெளிப்புறமும் ஒன்றாக இருக்கிறதே. எந்தக் கல்லைப் பார்த்தாலும் அது எங்கிருந்தோ பிரிந்து வந்திருப்ப தாகத்தான் தோன்றுகிறதேயன்றி அது தனியானது என்று தோன்றவே இல்லையே. அந்தப் புகைப்படக் கண்காட்சி நடைபெற்ற ஏழு நாளும் அலுவலகத்திலிருந்து மாலை திரும்பி வரும்போது புகைப் படங்களைப் பார்த்துக் கொண்டிருப்பேன். அநேகமாக ஒரு நாளைக்கு ஒன்றிருவர்கூட அந்தக் கண்காட்சியைப் பார்வையிடுவதில்லை என்பதைப் பார்வையாளர்கள் குறிப்புப் புத்தகத்தில் கையெழுத்திடும் போது தெரிந்துகொள்ள முடிந்தது.

கருப்பு வெள்ளையில் எடுக்கப்பட்டிருந்த ஒன்றிரண்டு புகைப் படங்களின் முன் நிற்கும்போதுதான் உலகம் எத்தனை பழைமையானது என்பதை உணர்ந்துகொள்ள முடிந்தது. புகைப்படங்கள் தரும் மனவெழுச்சி பற்றிப் பதிவேட்டில் எழுதுவதற்கு மனம் துடிக்கும். ஆனால் எழுதுவதற்குப் பதிவேட்டின் அருகில் சென்றதும் நத்தை போல வார்த்தைகளும் சுருங்கிக்கொண்டுவிடும். நத்தையைக் கைதட்டி வெளியே வரச் செய்ய முடியுமா என்ன?

நான் எழுதும் மேஜையின் முன்பாக நின்றபடி காகிதத்தையும் கயிற்றில் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்த பேனாவையும் பார்த்துக் கொண்டே இருப்பேன். பேனாவும் காகிதங்களும்கூடப் பழங்காலத்துப் பொருள்கள்தானில்லையா? காகிதம் சீனாவிலிருந்து வந்ததாகச் சொல்கிறார்கள். இந்த மரமேஜை, அதன் மீதிருக்கும் பொருள்கள், அகன்ற ஜன்னல்கள், மரப்படிகள் யாவும் உலகின் மிகப் பழமையானது தானே. ஏன் மொத்த உலகமே துருவேறிய தலைக்கவசத்தைப் போலப் பழைமையடைந்துதான் போயிருக்கிறது.

உலகம் தனக்கு வயதாவதை மறந்துகொண்டே வருகிறது. அநேகமாக இன்று நாம் காணும் காட்சிகள் யாவும் யாரோ பார்த்து முடிந்த காட்சிகள்தானில்லையா. உலகம் சல்லடையைப் போல எண்ணிக்கை யற்ற துளைகள் கொண்டதாகவே இருக்கிறது. அதில் எதுவுமே தங்குவதில்லை.

என்னைச் சுற்றிய கடிகாரமும் காலண்டரும் மட்டும்தான் இன்றைய நாளைக் காட்டிக்கொண்டிருக்கின்றன. அதை என் இஷ்டப்படி மாற்றிக்கொண்டுவிட்டால் நான் எந்த காலத்திலும் வாழலாம்தானே. யோசிக்கையில் வேடிக்கையாக இருக்கிறது. நான் ஒரு பதினாலாம் நூற்றாண்டு மனிதனாக இருப்பதால் யாருக்கு என்ன நஷ்டம் வந்துவிடப் போகிறது? உலகத்துக்கு வயதாவதை எனக்கு வயதாகிறது என்று தவறுதலாக மொழி பெயர்த்துக் கொண்டிருக்கிறேன்தானா?

உலகம் இத்தனை பழசாகவும் அதே நேரம் புதுசு போலப் பாவனை பண்ணிக் கொண்டுமிருப்பதை எப்படி சகித்துக் கொள்வது? நடாசுமியின் புகைப்படங்கள் ஒரு வாரத்தில் என்னை உருமாற்றத் தொடங்கியதை நான் உணரத் தொடங்கினேன். சரியாகச் சொன்னால்

கண்காட்சியின் கடைசி நாள் முடிந்து வீடு திரும்பி வரும்போது ரயில்வே தண்டவாளங்களின் இடையில் கிடக்கும் கருங்கற்களைப் பார்த்தவுடன் அருகில் குனிந்து உட்கார்ந்து அந்தக் கற்களை வியப் போடு பார்த்துக்கொண்டிருந்தேன். நான் தற்கொலை செய்துகொள் வதற்கு முயற்சிக்கிறேனோ என்று யாரோ உரத்துச் சப்தமிட்டார்கள். நான் பரிகாசத்துடன் தற்கொலைகூட உலகில் எத்தனை பழமையான செயல் என்பதை நினைத்துக் கொண்டேன். எதற்கோ தொடர்பில்லா மல் கடவுள் எவரும் தற்கொலை செய்து கொள்வதில்லை என்றும் தோன்றியது. உலகில் களிம்பேறிய பழைமையதும் அர்த்தமற்றதும் சாவுதானில்லையா?

ரயில்வே தண்டவாளங்களுக்கிடையில் உள்ள கற்களைக் காணும் போது அவை துறவிகளைவிடவும் அதிக மௌனமாக எந்த எதிர்ப்புணர்வுமின்றி உலகைச் சந்தித்துக்கொண்டிருக்கின்றன. தண்ட வாளத்தில் கிடந்த ஒரு கல்லை எடுத்துப் பையில் போட்டுக்கொண்டு வீட்டுக்கு வந்து எனது மேஜையின் மேல் வைத்தபடி பார்த்துக் கொண்டேயிருந்தேன்.

கல் ஒரு சலிப்பற்ற பயணி. ஒவ்வொரு கல்லும் எவ்வளவு தூரம் பயணம் செய்திருக்கிறது என்று எப்படித் தெரிந்துகொள்வது. என் மேஜையில் இருக்கும் இந்தக் கல் எங்கிருந்து தனது பயணத்தைத் தொடங்கியிருக்கும். அல்லது எவ்வளவு நாள்கள் பயணம் செய்து இங்கே வந்திருக்கும். ஒரு கல் என்றால் உண்மையில் என்ன?

மறுநாளும் இதேபோல் நான் வேலை செய்யும் வங்கியிலிருந்து வீடு திரும்பி வரும்போது சாலையோரங்களில் கிடந்த சில கற்களை வீட்டுக்கு எடுத்துக்கொண்டு வந்தேன். கற்கள் என் பால்யத்தோடு தொடர்பு கொண்டவை. கற்களை டவுசர் பையில் போட்டுக் கொண்டே திரிந்திருக்கிறேன். கற்கள் எல்லாத் தெருவிலும் இறைந்து கிடந்திருக்கின்றன. கற்களால் எனது மண்டை உடைக்கப்பட்டிருக்கிறது. ரகசியமாக எனது மேஜையின் இழுப்பறையில் கொண்டு வந்த கற்களை ஒளித்து வைத்துக்கொண்டேன். படுக்கையில் படுத்தபடி நானாகச் சிரித்துக் கொண்டிருந்தேன். கற்களைச் சேமிப்பது ஒரு சிறந்த விஷயமில்லையா?

2

மேஜையின் இழுப்பறை நிறைந்துபோய் புத்தக அலமாரியிலும் துணிகள் வைக்கும் பீரோவிலும் ஜன்னலிலும் கற்களை நிரப்பி வைக்கத் தொடங்கியிருந்தேன். சில நாள்கள் இதற்காக அலுவலகத்தில் இருந்து மதியமே கிளம்பிவிடுவேன். பேருந்தில் சென்றால் கற்கள் கண்ணில் படாது என்று நகரமெங்கும் நடந்து திரியத் தொடங்கினேன். கற்கள் ஆங்காங்கே ஒளிந்துகொண்டும் புறக்கணிக்கப்பட்டும் கிடந்தன.

ஒவ்வொரு கல்லும் ஒரு விதமான வடிவத்திலும் நேர்த்தியிலும் இருந்தது ஆச்சரியமாக இருந்தது. கற்களை காலியான சாப்பாட்டுக் கேரியரில் நிரப்பிக்கூட வீட்டுக்கு எடுத்துக்கொண்டு வருவேன். இந்தக் கற்களைச் சேமிக்கும் பழக்கத்தைப் பற்றி என் மனைவி மிகுந்த சந்தேகமும் கோபமுமாக ஒரு நாள் கேட்டாள்,

“கற்களை எல்லாம் எதற்காக வீட்டுக்குக் கொண்டு வருகிறீர்கள்?”

நான் என்ன பதில் சொல்வது என்று புரியாமல் கற்கள் மிகவும் புராதனமானதில்லையா என்று சொன்னேன். அவள் புரியாமல் திகைத்தபடி எதையோ முணுமுணுத்துக்கொண்டு போனாள். ஆனால் சில மாதங்களிலே எனது அறையில் படுக்கையடியிலும் மேஜை மீதும் பரண் முழுவதும் ஏன் கழிப்பறையின் ஜன்னல் அலமாரி முழுவதும்கூட விதவிதமான கற்கள் நிரம்பியிருக்கத் தொடங்கியதை அடுத்து அவளும் பெரிய பையனும் சண்டையிடத் தொடங்கினார்கள். கற்களை எல்லாம் வெளியே எடுத்து வீசிவிடப் போவதாக பயமுறுத்தி னார்கள். நான் அமைதியாக, “நீங்கள் கல்லை எளிதில் புரிந்துகொள்ள முடியாது” என்று சொன்னேன்.

அவர்கள் ஆத்திரத்தில் கத்திக் கூப்பாடு போட்டபோது நான் ஒரு கண்ணாடித் தொட்டியில் நீந்தும் மீனைப் பார்த்துக் கொண்டிருப் பதைப் போலக் கையில் ஒரு கூழாங்கல்லை வைத்து உருட்டிப்பார்த்துக் கொண்டேயிருந்தேன். சில வாரங்களில் இந்தப் பழக்கம் பற்றி அலுவலகத்திலும் தெரிந்துபோனது. என் முதுகுக்குப் பின்னால் சிலரும் நேரடியாகச் சிலரும் அறிவுரை சொல்லவோ, கேலி செய்யவோ தொடங்கினார்கள். அப்போது வாரத்துக்கு இரண்டு மூன்று நாள்கள் விடுமுறை எடுத்துக்கொண்டு பேருந்தில் பயணம் செய்து எங்காவது பெயர் தெரியாத இடத்தில் இறங்கி, எனக்கு விருப்பமான கற்களைச் சேகரித்து எடுத்துக்கொண்டு வரத் தொடங்கினேன்.

சில நாள்களுக்குப் பிறகு துணி துவைக்கும்போது எனது சட்டைப் பையிலிருந்ததாகச் சில கூழாங்கற்களை எடுத்து எனது மனைவி ஜன்னல் ஓரமாக வைத்திருந்தாள். குளித்துவிட்டுத் திரும்பிய நான் “கற்கள் நீர்க்குமிழியைப் போல வீடெங்கும் பறக்கின்றன” என்று சிரித்தபடியே சொன்னேன். அவள் ஆத்திரமானவளாகி இந்தக் கற்களைக் கவனிக்கும் நேரம்கூட பிள்ளைகளைக் கவனிக்க முடியாதா என்று கத்தினாள்.

நான் குழந்தைகள் நம் வழியாக உருவாகிறார்களே அன்றி நாமே அவர்களை உருவாக்கவில்லை என்று கலீல் கிப்ரான் என்னும் கவிஞன் சொல்வதாகக் கூறினேன். என் மனைவி ஆத்திரத்துடன் கிப்ரானை ஒரேயொரு நாள் குழந்தைகளைப் பள்ளிக்குத் தயார் பண்ணி அனுப்பிவிடச் சொல்ல வேண்டும். அப்போது இதைச் சொல் வானா என்று பார்க்கலாம் என்றாள். ஆச்சரியமாக இருந்தது. எத்தனை சுலபமாகக் காலத்தின் பின் சென்றுவிடுகிறாள். கிப்ரான் எந்த நூற்றாண்டைச் சேர்ந்தவன் அவனது காலத்தில் பள்ளியில்

யூனிபார்ம் இருந்ததா? குழந்தைகளை அழைத்துச் செல்ல ஆட்டோ வருமா? பெண்கள் காலத்தின் பின்வாசல் வழியாக அன்றாடம் வேண்டிய தூரம் வரை போய்வந்தபடிதான் இருக்கிறார்கள் இல்லையா?

நான் கிப்ரானைப் பற்றி அவளது கோபத்தை ரசித்துக்கொண்டிருந்த போது வீட்டிலிருந்த கற்கள் யாவையும் ஜன்னலுக்கு வெளியே வீசி எறிந்துகொண்டிருந்தாள். எங்கோ குகையில் வாழும் ஒருத்தி மிருகங்களைக் கல்லெறிந்து கொல்லுவதைப் போல அத்தனை மூர்க்கமாக இருந்தது அவளது முகம். அவள் கற்களை வீசி எறிந்தபிறகு நான் சொன்னேன்,

"கண்ணுக்குத் தெரியாமல் இன்னும் நிறைய கற்கள் நம் சுவருக்குள் இருக்கின்றன."

அவளது கோபம் மிக அதிகமாகியது. உரத்த குரலில் கத்திக் கொண்டிருந்தாள். அன்றிரவு எனது பெரிய பையன் இதைச் சகிக்க முடியாமல் போலீஸ்காரன் ஒருவனை வீட்டுக்கு அழைத்துக்கொண்டு வந்திருந்தான். போலீஸ்காரனுக்கு ஐம்பது வயதைக் கடந்திருக்கும். மீசை மயிர்களுக்கு மட்டும் கருப்பு அடித்திருந்தான். அவன் கற்கள் உலகிலே பழைமையான ஆயுதம் என்றும், ஆயுதத்தைச் சேகரித்து வைத்திருப்பதற்காக என்னை ஸ்டேஷனில் கூட்டிப்போய் விசாரிக்க லாம் என்றும் சொன்னான்.

மழை நாள்களில் செலவில்லாமல் நெருப்பை உண்டாக்கிக் கொள்வதற்காகவே நான் கற்களைச் சேகரித்து வைத்துக் கொள்வதாகச் சொன்னேன். போலீஸ்காரன் நெடுநேரம் ஒரு நல்ல குடும்பத்தை வளர்த்து எடுப்பதற்கு என்னவெல்லாம் செய்ய வேண்டியிருக்கிறது என்று சொற்பொழிவு ஆற்றிவிட்டு வெளியேறினான். ஆனால் மனைவியும் குழந்தைகளும் கோபத்தை வளர்த்துக்கொண்டே இருந்தார் கள். சில சமயம் தங்களை அறியாமல் பயந்தார்கள். வீடெங்கும் உள்ள கற்களைக் காணும்போது எங்கோ காட்டுக்குள் வாழ்வது போல இருப்பதாகப் பிதற்றினார்கள். நூற்றாண்டுகளாக வளர்ந்த நாகரிகத்தைக் கற்கள் நினைத்தாலே அழித்துவிட முடியுமா என்று சந்தோஷமாகத்தானிருந்தது. ஆனால் இந்த பயம் அவளை ஒரு நாள் கோபித்துக்கொண்டு பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு அவளது அம்மாவின் வீட்டுக்குப் போய்விடச் செய்தது.

அன்று எனக்கு நானே சொல்லிக்கொள்ள முடிந்ததெல்லாம் இத்தனை நாள்களாக ஒரே வீட்டில் ஒவ்வொருவரும் ஒரு நூற்றாண் டில் வாழ்ந்துகொண்டிருந்தோம் என்பது மட்டும்தான்.

3

சட்டைப் பையிலும் பேண்ட் பாக்கெட்டிலும் எப்போதும் கற்களை நிரப்பிக்கொண்டு திரியத் தொடங்கி ஒரு வருடத்துக்கும் மேலாக ஆகிவிட்டது. அலுவலகத்தில்கூட எனது மேஜையின் உள்ளே கற்களை நிரப்பி வைத்திருந்தேன். வேலையின் நடுவே கற்களைக் கொஞ்சிக் கொள்ளவும் ரகசியமாக கழிப்பறைக்கு எடுத்துச் சென்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கவும் ஆசை மிகுந்து வரத் தொடங்கியது. சக ஊழியர்கள் அதை சகித்துக்கொள்ள முடியாமல் மருத்துவ விடுப்பு கொடுத்து என்னை வீட்டுக்கு அனுப்பி வைத்தார்கள். உலகின் மிகப் புராதனமானதும் வலிமையானதுமான கற்கள் எதற்காக இப்படிப் புறக்கணிக்கப்படுகின்றன என்று எனக்கு ஆதங்கமாகத் தானிருந்தது.

கற்களைத் தேடத் தொடங்கிய எனது பயணம் மெல்ல விரிந்து கற்களை எப்படியெல்லாம் பயன்படுத்த முடியும் என்ற கற்பனை விளையாட்டைத் தொடங்கியது. இதுவரையிலிருந்த சமையல் அறையை முற்றிலும் மாற்றி, கற்களாலே ஒரு சமையல் அறையை உருவாக்கினேன். அதிலும் கல் அடுப்பில் உண்டான நெருப்பில் கல்லைப் போட்டுவிட்டு நன்றாகச் சூடேறவிட்டு அதைத் தண்ணீரில் போட்டு சில நிமிடங்களில் வெந்நீரை உருவாக்கும் முறையை சாத்தியப்படுத்தினேன். கற்களைக் கொண்டே காய்கறிகள் நறுக்கவும் கீரையை மசிக்கவும் பழகிக்கொண்டேன். கற்களிலே படுக்கை உருவானது.

வீடு முழுவதும் கற்கள் நிரம்பியிருந்ததால் வழக்கமான எனது வீட்டின் தோற்றம் மறைந்து அது ஒரு வனக்குகையைப் போல மாறியிருந்தது. சில நேரங்களில் வேடிக்கையாக இருக்கும். என்னை நானே ஒரு குகை மனிதனைப் போலக் கற்பனை செய்து கொண்டு விட்டு, ஆடைகளைக் களைந்துவிட்டு கற்களைக் கையில் எடுத்துக் கொண்டு அங்குமிங்கும் ஓடியபடி அர்த்தமற்ற சப்தங்களை எழுப்பு வேன். காகத்தைப் போலத் தண்ணீர்த் தொட்டியில் கல்லைப் போட்டுத் தண்ணீரை மேலே வரவழைத்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பேன். ஆனாலும் நான் சேகரித்தது உலகின் புறக்கணிக்கப் பட்ட கற்களில் லட்சத்தில் ஒரு பங்குதானே இருக்கும் என்று கவலையாக இருக்கும். ஆகவே தீவிரமாகக் கற்களைப் பாதுகாப்பது என்று முடிவு செய்து கொண்டபடி பகல்—இரவு எனப் பேதமில்லாமல் அலைந்து திரிந்து கற்களைத் தேடி எடுத்து வரத் தொடங்கினேன்.

சில மாதங்களிலே எனது வீட்டின் கதவை முழுமையாகத் திறப்பதற்குக்கூட இடமில்லாமல் கற்கள் நிரம்பி வழிந்தன. கற்களுக்கு ஊடாகத்தான் படுத்துக் கிடந்தேன். நான் இப்போது இந்த நூற்றாண் டில் வாழவில்லை. என் உலகம் காலத்திலிருந்து நழுவி, பின்னால் போய்விட்டது. இனி நான் வேற்றுவுலகின் மனிதன் என்று மனம்

களிப்பு கொண்டிருந்தது. மழைத்துளிகள் விழுந்து கொண்டிருப்பதைப் போல உலகில் இடையறாது கற்கள் விழுந்து கொண்டேயிருக்கின்றன என்று எனக்கு நானே சொல்லிக்கொண்டேன். ஒரு மழைத்துளி எதில் போய் விழுகிறது என்று யாருக்குத் தெரியும்? கூட்டமாகப் பெய்யும்போதுகூட மழைத்துளி தனிமையானது தானில்லையா. கற்களும் அப்படித் தீராத தனிமையைக் கொண்டிருப்பதாகவே தோன்றியது.

4

ஆறு மாதங்களுக்குப் பிறகு ஒரு நாள் என்னைப் பார்ப்பதற்காக வந்திருந்த நண்பன் விநாயகமூர்த்தி அறையை வியப்போடு பார்த்து விட்டு எப்படி இத்தனை கற்களுக்குள் வாழ்ந்துகொண்டிருக்கிறாய்? இவை எல்லாம் எதற்காகச் சேகரித்து வைக்கிறாய் என்று கேட்டான். நான் பதில் பேசாமல் ஒவ்வொரு கல்லும் ஒரு குறிப்பிட்ட இடத்தை யும் நேரத்தையும் வடிவத்தையும் கொண்டிருக்கிறதில்லையா என்று சொன்னேன். அவன் அதைப் புரிந்துகொள்ளாமல் இதே கற்களை யாராவது மாயத்தால் தங்கமாக மாற்றிவிட்டால் எவ்வளவு பணம் கிடைக்கும் தெரியுமா என்று ஆசையாகப் பார்த்துக்கொண்டிருந்தான். பிறகு என்னிடம் விவாதிக்க வந்த வங்கி விஷயங்களைப் பற்றிப் பேசாமல் மௌனமாக எழுந்துகொண்டான். நான் அவனுக்கு ஒரேயொரு கல்லைப் பரிசாகத் தந்தபோது அவன் அதைக் கையில் வாங்காமல் நீ ஏன் நல்ல மருத்துவரைப் போய்ப் பார்க்கக் கூடாது என்று கவலையோடு கேட்டான். நான் சிரித்தபடி ஏற்கெனவே பார்த்துக்கொண்டு தானிருக்கிறேன் என்றேன். அவன் சற்றே பயம் கலந்த குரலில் விடைபெற்றுக்கொண்டு வெளியேறிவிட்டான். அநேகமாக அவன்தான் என் வீட்டுக்கு வந்த கடைசி விருந்தினன். அதன்பிறகு யாரும் வருவதே இல்லை.

5

இரண்டு வருடங்களும் நான்கு மாதங்களும் முடிந்துவிட்டன. நான் இப்போது வீட்டை விட்டு வெளியே போவதேயில்லை. நானும் எனது கற்களும் மட்டுமே இருந்தோம். கற்களோடு பேசுவதற்குப் பழக்கமாகி இருந்தது. கற்கள் மௌனமாக இருப்பதில்லை என்பது புரியத் தொடங்கியிருந்தது. கற்கள் ஒரு விதமான பாதுகாப்பு உணர்வைத் தந்துகொண்டிருந்தன நான் அச்சமற்றவன் என்று உணரத் தொடங்கினேன். அதே நேரம் கற்களைச் சுவர்களாகவும், கட்டடங்களாகவும் மாற்றி மறைத்து வைப்பதற்குப் பெயர்தான் நாகரிகம் போல என்று நானாக யோசித்துக்கொண்டுமிருந்தேன்.

அந்த யோசனை எனக்குச் சரியென்றுதான் தோன்றியது. உலகில் உள்ள எல்லா மலைகளும் கற்கள்தானே. கற்களின் மீது மரங்களும் செடிகளும் வளர்ந்து கொண்டு கற்களை மறைத்துக்கொண்டுதானே இருக்கின்றன. இப்போது எனக்கு உலகம் ஒரு சிறிய கூழாங்கல்லைப் போலக் கையடக்கமானதாகவும் எளிதாகவும் இருந்தது. நான் மின்சார இயந்திரப் பொருள்களை விட்டு விலகியதும் உலகம் தன் எளிமைக்குத் திரும்பிவிட்டது போலிருந்தது. இருட்டு என் அறையைக் குளுமை செய்யத் தொடங்கியது. நான் என் குகையை நேசிக்கத் தொடங்கினேன். என் குகை கல்லின் ருசி நிரம்பியதாக வளர்ந்துகொண்டிருந்தது. உலகம் கற்களின் நீண்ட படுக்கையாக இருந்தது. நான் கற்களை ஆராதனை செய்துகொள்பவனாக மட்டுமே வாழத் தொடங்கியிருந்தேன்.

6

மேற்கண்ட ஐந்து பகுதிகளை வாசித்து வரும் நீங்கள் அந்தக் கற்களைச் சேமிக்கும் பழக்கம் கொண்ட நபரான எனது அப்பா சிவசேகரத்தை நம்ப வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். அத்தோடு அவரைப் பற்றிய சில உண்மைகளை உங்களிடம் சொல்லிக் கொள்ளவும் ஆசைப்படுகிறேன். நான் அவரது மூத்த பையன். எனது பெயர் ரமேஷ். நான் கல்லூரியில் பி.காம். முதலாண்டு படித்துக்கொண்டிருக்கிறேன் எனது அப்பா வழக்கமான வங்கி வேலையில் இருந்த நாள்களிலே இது போன்ற மனக் குழப்பங்களுக்கு ஆட்பட்டிருந்தார். என்னைச் சிறு வயதில் ஒரு நாள் கடை வீதிக்கு அழைத்துச் சென்றுவிட்டு சாலையில் கிடந்த ஒரு கோழி ரோமம் ஒன்றைக் கையில் எடுத்தபடி சிரித்துக்கொண்டே இருந்தார். நான் அர்த்தம் புரியாமல் பார்த்துக்கொண்டிருந்தபோது அவர் தன் கையிலிருந்த ரோமத்தை ஊதி, காற்றில் பறக்கவிட்டார் பிறகு என்னைப் பார்த்தபடி கோழியால் பறக்க முடியாது. ஆனால் அதன் ரோமத்தால் பறக்க முடியும் இல்லையா என்று சொல்லிவிட்டு சப்தமாகச் சிரித்தார். இது போலவே அம்மாவிடம் ஓர் இரவு தான் எங்கிருந்தோ கண்டு எடுத்து வந்ததாக ஒரு குதிரையின் கால் எலும்பு ஒன்றைக் கொண்டு வந்து தந்து எவ்வளவு அழகாக இருக்கிறது என்று தடவிப் பார்க்கச் செய்திருக்கிறார். நாங்கள் அவரை இருபது வருடமாக சகித்துக்கொண்டு வந்துவிட்டோம். ஆனால் இந்த முறை அவர் செய்யும் அபத்தங்களை ஏற்றுக்கொள்ள முடியாமல் நான் அவரைப் பற்றி போலீஸில் புகார் செய்து அவரை வலுக்கட்டாயமாக வீட்டை விட்டு அப்புறப்படுத்த ஏற்பாடு செய்தேன். அவரைக் காவல்துறையினர் தங்களது வாகனத்தில் ஏற்றிக்கொண்டு சென்றுவிட்டார்கள்.

ஓர் இரவு முழுவதும் நானும் அம்மாவும் தம்பியும் வீட்டில் இருந்த கற்கள் ஒவ்வொன்றாக எடுத்து வெளியே எறிந்துகொண்டிருந்தோம். என் அம்மா கற்களை எடுத்து ஆவேசமாக வெளியே வீசுவதைப் பார்க்கும்போது எனக்கு பயமாக இருக்கிறது. என் அம்மா ஒரு குகை மனுஷியைப் போல ஆவேசமாக இருக்கிறாள். வீட்டில் இருந்த கற்களை எடுத்துப் போட வந்துகொண்டே இருந்தன. இந்தச் சம்பவத்துக்குப் பிறகு கல்லூரிக்குச் செல்லும் சாலையில் என்னை அறியாமலே கண்கள் கீழே கிடக்கும் கற்களைக் கவனிக்கத் தொடங்கின. வர வர எனக்கும் மெதுவாக ஒரு சந்தேகம் வந்து கொண்டே இருக்கிறது. உண்மையில் கற்கள் என்றால் என்ன? அப்பா சொன்னது எல்லாம் உண்மைதானா? என்னை அறியாமல் நான் கற்களைப் பார்த்துக் கொண்டிருக்கத் தொடங்குகிறேன். கற்கள் மிகுந்த வியப்போடு கூடிய அழகுடையதாகவே இருக்கின்றன. என்னைக் கட்டுப்படுத்திக்கொள்ள முடியாமல் அம்மாவுக்கும் தெரியாமல் ஒரேயொரு கல்லை எடுத்து பையில் கொண்டு செல்கிறேன். எனக்கு பயமாகவே இருக்கிறது. வகுப்பறையில் பாடத்தைக் கவனிக்காமல் எங்கிருந்து உதிர்ந்திருக்கும் இந்தக் கல் என்று யோசனை தானே உருவாகிறது. அப்பா சொன்னதைப் போல நீர்க்குமிழிகளைப் போல கற்கள் உலகமெங்கும் பறந்துகொண்டு தான் இருக்கின்றன. தயங்கித் தயங்கி சில வாரங்களில் தனிமையின் பள்ளத்தாக்கில் நானும் இறங்கி நடக்கத் தொடங்கினேன். உலகம் மிகுந்த மர்மத்தோடும் வசீகரத்தோடும் பாதரசத்தைப் போல உருண்டோடிக்கொண்டே இருக்கிறது.

என் கதைகள், உலகோடு
நான் ஆடிய பகடையாட்டம்.
தோற்பதும் ஜெயிப்பதும் பற்றிய
கவலையின்றி திரும்பத் திரும்ப
எதிர்பாராமையைச் சந்திக்கும்
ஒரு தீரா விளையாட்டு. எறும்புகள்
இழுத்துக் கொண்டு போகும்
வெல்லக்கட்டியைப் போல
வெறியோடும் பேராசையோடும்
உலகை எனது இருப்பிடத்துக்குள்
இழுத்துக் கொண்டு வந்துவிட
முயன்றதன் விளைவுதான் எனது
எழுத்துகள்.

எஸ்.ராமகிருஷ்ணன்

உயிர்மை
பதிப்பகம்

₹ 630

ISBN - 978-93-85104-01-5

9 789385 104015

www.uyirmmai.com